அகவல்

[illegible] 1515

JL
Q23M 211N15J1.
N15.1.1.
220655

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

OFFICE OF THE REGISTRAR ... 9 - FEB 1915 MADRAS

மலர் 1.] ஆனந்தஹு தைமீ 1915ஹு ஜனவரிமீ [இதழ் 1.

## சைவம்.

### விநாயகர் துதி.

'உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பெனுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைக டீர்ப்பாம்."

சிவசம்பந்த முடையது சைவம் எனப்படும். சிவமாவது அகண்
மாய், அருள் வெளியாய், ஆதியந்த மற்றதாய், ஆனந்த மயமாய்,
..யர் வொப்பில்லாததாய், உரையுணர் விறந்ததாய், எங்கும் நிறைந்
..ாய், என்றும் உள்ளதாய், எல்லாம் அறிவதாய், எல்லாம் வல்லதா
..லரகிதமாய், குணங்குறியற்றதாய், நாமரூபமில்லாததாய், பேரொ
..ாய், கற்பனைகடந்ததாய், போக்கு வரவு, சமீபம் தூரம், சுகம் து
..ம், தூலம் சூக்குமம், சுத்தம் அசுத்தம், பேதம் அபேதம், குணநி
..ற்றம், குறைவு நிறைவு, உயர்வு தாழ்வு முதலிய விகற்பங்களற்
..ய், எவ்வகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய், தன்
..மெய்யன்போடு வணங்கும் அன்பர்களின் அன்பே தனக்குரிய வடி
..ய் விளங்கும் தனிப்பரம்பொருளாம். சிவம் என்னுஞ் சொல்லுக்கு
..ங்கலம் என்பதுபொருள். மேலே கூறிய மங்கல குணங்களியாவு
..வுளிடத்தில் பொருந்தியிருப்பதனால் அவருக்குச் சிவன் என்
..ம் திருநாமம் உண்டாயிற்று. இத்தகைய தனிமுதற் பொருளை
..ழிபடுவோர் சைவரெனவும், அப்பரம்பொருளை வழிபடும் மார்க்கம்
..சவநெறியெனவும் சைவசமயம் எனவும் சொல்லப்படும்.

'சிவநாமம் வேதங்களின் ஆத்மநாயகமாய் அவற்றின் இருதயத்
..ல் இருந்துகொண்டு, அவற்றைப் பிரகாசப்படுத்திக்கொண்ட

கிறது. எவ்வாறெனில், வேதங்கள் நான்கெனினும், அதர்வணத்தை
மற்ற மூன்றினுள் அடக்கி அவைமூன்றே எனக்கூறுவர்: அதனு
வேதம் " த்ரயீ " என்னப்பட்டது. அம்மூன்றனுள் நடுவிலிருப்ப
யசுர் வேதம். இது ஏழுகாண்டங்களையுடையது. இவற்றுள் நடு
காண்டத்திலிருப்பது ஸ்ரீ ருத்திரம். ஸ்ரீ ருத்திரத்தின் மத்தியில் ஸ்ரீ
பஞ்சாக்கர மகாமந்திரம் இருக்கின்றது. இம்மகாமந்திர மத்தியி
சிவநாமம் இருக்கிறது. இதனால் வேதத்தின் மெய்ப்பொருள் சிவ
என்பதும், சிவநாமத்தால் வேதம் விளக்கமுற்றிருக்கிறதென்பது
விளங்கும். இதனையே தமிழ்வேதம் " காதலாகிக் கசிந்து கண்ணீர்
மல்கி, யோதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது, வேத நான்கினு மெய்ப்
பொரு ளாவது, நாத னும நமச்சி வாயவே " என்றருளிச்செய்தது

இத்தகைய சிவபெருமானே முழுமுதற் கடவுளென்பதும்
வேதசிவாகமங்கள் அவரருளிச்செய்த முதனூல்களென்பதும், இவ
றுள் வேதம் பொதுநூலும் சிவாகமம் சிறப்பு நூலுமாம் என்பதும்
தேவாரத்திருமுறைகள் பன்னிரண்டும் அவற்றின் சாரமாகிய தமி
வேதமென்பதும், பூதி ருத்திராக்கங்களே பசுபோதங் களையவல்
வைதிக சைவசின்னங்களென்பதும், ஸ்ரீபஞ்சாக்கரமே வீடுபேற
ளும் மகாமந்திரம் என்பதும், குருலிங்க சங்கமவழிபாடே சிவ
பெருமானுர்க்குச் செய்யப்படும் உத்தமோத்தம வழிபாடென்பதும்
பதிபசுபாசம் என்னும் மூன்று பொருள்களும் அநாதிநித்திய
பொருள்களென்பதும், சரியை கிரியை யோகம் என்னும் மார்க்க
களை முறைப்படி அநுட்டித்து ஞானத்தாற் சிவனடியைச் சேர்ந்து
சிவமாந்தன்மையடைதலே முத்தி யென்பதும் சைவசமயத்தின்
கோட்பாடுகளாம்.

இவற்றைத் தமிழில் விளக்கும் ஞான நூல்கள் சிவஞானபோதம்
முதலிய சாத்திரங்கள் பதினன்கும், தேவாரத்திருமுறைகள் பன்னி
ரண்டுமாம். இவற்றுள் சிவஞானபோத முதலிய பதினன்கு நூ
களும் சாத்திர ரூபமாகவும், தேவார முதலிய முதற் பதினொருதி
முறைகளும் தோத்திர ரூபமாகவும், பன்னிரண்டாந்திருமுறையாகி
பெரிய புராணம் சைவசித்தாந்த நெறியில் ஒழுகி முத்தியடைந்
பெரியோர்களின் சரித்திர ரூபமாகவும் சைவசித்தாந்தத்தின் உண்
மைகளை விளக்கும்.

சிவஞான போதமுதலிய நூல்கள் பதினன்கும் மெய்கண்ட சாத்
திரம் எனவும், சுத்தாத்துவித சாத்திரமெனவும், சித்தாந்தசாத்திர
எனவும் சொல்லப்படும். இதனை ஸ்ரீமத் தாயுமான சுவாமி

220685



" பொய்கண்டார் காணுப் புனிதமெனு மத்துவித, மெய்கண்ட நாத
னருள் மேவுநா ளெந்நாளோ " என்று தமிழ்ச் சிவஞானபோதம்
செய்தருளிய மெய்கண்டதேவநாயனுரைத் தோத்திரஞ்செய்ததனு
லுணர்க. சித்தாந்தம் என்பதற்கு முடிபு என்பது பொருள். வேதத்
தின் முடிபாகிய வேதாந்தத்தின் சாரமாயிருப்பது சைவம் ஆகலின்
சைவம் சித்தாந்தமெனப்பட்டது. இதனை ஸ்ரீமத் - குமரகுருபர
சுவாமிகள் " ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த - ஆராவின்ப
வருங்கனி பிழிந்து - சாரங்கொண்ட சைவசித்தாந்தத் - தேனமு
தருந்தினர் சிலரே " என்றதனுல் உணர்க.

**சிவஞானப் பிரகாசவெண்பா.**

சிவஞான போதத்தாற் சென்மவிடாய் தீர்ந்து
சிவஞான சித்தியாற் றேறிச்—சிவஞான
போதத்தை மெய்கண்டான் போதித்தான் சித்தியினைச்
சாதித்தான் ருனரு ணந்தி.

மற்றிரண்டு மாய்ந்து மறுவி லுமாபதியார்
சொற்றசிவப் பிரகாசத் தொன்னு—லற்றநிலை
யாங்கதுவே சீவன்முத்த னுக்குவிக்கு மந்நூலே
யோங்குகதீ டேழியும் பின்னும்.

அம்மை திருவந்தாதி நக்கீர ரந்தாதி
பொய்ம்மையிலாப் பொன்வண்ணத் தந்தாதி—செம்மைத்
திருமூலர் மாலையிவை சித்தாந்த மாகும்
வருமூவர் வாக்கியமு மாம்.

சித்தாந்த மென்னுந் திருவிளக்கைக் கொண்டறிந்தேன்
முத்தாந்த வாவி முதற்பொருளை—சித்தாந்தத்
தேனைப் பருகிச் செகந மரணமெனுங்
கானைக் கடந்தொழிந்தேன் காண்.

சித்தாந்த சாத்திரங்கள் மிகுந்த கல்வியறிவுடையார்க்கே யன்றி
யேனையோர்க்கு நன்குவிளங்குவன வல்ல. கல்விமான்களுள்ளும்
சமயவிசேட தீக்கைகள்பெற்று நன்னெறியில் ஒழுகுவார்க்கே அவை
ஆன்றோர்களால் போதிக்கப்பட்டன. சைவாகமத்தின்படி கடவுளை
வழிபடும் மார்க்கம் அவரவர்கள் பக்குவத்திற்கேற்ப சரியை, கிரியை,
யோகம், ஞானம் என நான்குவகைப்படும். இவற்றுள் சரியையின்
முதிர்ச்சியில் கிரியையும், கிரியையின் முதிர்ச்சியில் யோகமும்,
யோகத்தின் முதிர்ச்சியில் ஞானமும் உண்டாகும். இதனை ஸ்ரீமத் -
தாயுமான சுவாமிகள் " விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்

கும், அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே" என்று விளங்க உரைத்தனர். ஆதலால் ஆன்றோர்கள் ஞான நூல்களாகிய சித்தாந்த சாத்திரங்களைப் பக்குவமுடையார்க்கேயன்றி யேனையோர்க்குப் போதிக்கிறதில்லை. அவற்றை அபக்குவர்க்குப் போதித்தால் அவர்கள் விபரீத வுணர்ச்சியடைந்து சரியை கிரியைகளையுங் கைவிட்டுக் கெடுவரென்பது ஆன்றோர் கருத்து. இவ்வுண்மையை யறியாதார் பலர் ஆலயவழிபாடு, புராணபடனம், சிவதலயாத்திரை முதலியனவே சைவசமய நெறிகளெனவும், இவை அறிவீனர்களுக்கே யுரியன எனவும், சைவர்களுக்கு ஞானசாத்திரங்களே யில்லையெனவும் விபரீத உணர்ச்சி யுடையாராய்ச் சைவாநுட்டானங்களைக் கைவிட்டிருக்கிறார்கள். இதனால் உலகில் சைவாநுட்டானங்கள் மிகவுங் குன்றிவிட்டன. அன்றியும், முற்காலத்தில் சைவசமயிகளுக்குச் சிறுபோதிலேயே தமிழ் முதலிய தாய் பாஷைகளோடு சைவாநுட்டானங்களும் கற்பிக்கப்பட்டன. இவர்களுக்கு அக்காலத்தில் பிறசமயத்தினரின் கூட்டுறவு அதிகமாயில்லை. இக்காலத்திலோ வெனில் தமிழ் முதலிய தாய் பாஷைகள் அன்னிய பாஷைகளாய் வருகின்றன. சைவாநுட்டானங்கள் எந்தப்பாடசாலையிலும் போதிக்கப்படுகிறதில்லை. பிறசமயத்தவர் கூட்டுறவு எங்கும் நிரம்பி இருக்கின்றது. ஆதலால் இவர்களுக்குச் சைவ உண்மைகளைக் காலதேச வர்த்தமானங்களுக் கிசையப் போதித்தாலன்றி இவர்கள் சைவாநுட்டானங்களை யநுட்டிக்கமாட்டார்கள். இதனை யுணர்ந்த சைவாபிமானிகள் சிலர் இப்போது சித்தாந்த சாத்திரங்களை யச்சிட்டும், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும், பகிரங்கமாகப் பிரசங்கித்தும், பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டும் சைவசமயாபிவிருத்திசெய்யத் தலைப்பட்டார்கள். ஆயினும், மிகவுங் கற்றவர் சிலருக்கேயன்றி மற்றவர்கள் பலருக்கும் பயன்படுமாறு மிகவும் எளிய வசன நடையில் வெளிவரும் பத்திரிகைகள் இல்லாமையால் இக்குறைவை ஒருவாறு நீக்கக்கருதி, சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் இப்பத்திரிகை வாயிலாகச் சைவசித்தாந்த உண்மைகளையும், புராணேதிகாச முதலியவற்றையும் மிகவும் எளிய நடையில் எழுதி வெளியிடத்துணிந்து முன்வந்துள்ளார்கள். இப்பத்திரிகை முதலில் மாதம் ஒருமுறைக்குக் குறையாமல் வெளிவரும். இச்சபையில் இப்போது எழுபது அங்கத்தினர் இருக்கிறார்கள். இவர்களுள் சிலர் மாதந்தோறும் இரண்டு ரூபாவும், சிலர் ஒரு ரூபாவும், சிலர் எட்டு அணாவும், மற்றவர்கள் நான்கு அணாவுமாகச்



சந்தா உபகரித்து வருகிறார்கள். இவ்வருமானத்தைக்கொண்டும், மற்றுஞ்சில சைவாபிமான சீலர்கள் அவ்வக்காலத்திற் கொடுக்கும் நன்கொடைகளைக்கொண்டும் இச்சபையார் சென்ற பதினேழுவருடங்களாகச் சிவதலயாத்திரைகள், பாடசாலைப்பரிபாலன முதலியன செய்து வந்தார்கள். இவர்கள் இதுவரையில் செய்துவந்தவைகள் வருடந்தோறும் வெளியிடப்பட்ட சபாக்கிரந்தம் என்னும் அறிக்கைப்புத்தகங்களில் விளக்கப்பட்டன. இச்சபையின் அங்கத்தவர்களும் நன்கொடையாளர்களும் அதிகப்படுந்தோறும் இப்பத்திரிகை மாதமிருமுறையாகவும், வாரமொருமுறையாகவும் வெளிவரும். இப்பத்திரிகையைப் பலர்க்கும் இலவசமாய்க் கொடுக்கவேண்டுமென்பதே இச்சபையின் உத்தேசம். ஆனால், இலவசமாய்க்கொடுத்தால் நாடக முதலியவற்றின் விளம்பரப் பத்திரிகைகளைப்போல் பலர் கையில் அகப்பட்டு அவலமாய்விடும். ஆதலால் இப்பத்திரிகை இச்சபையின் அங்கத்தவர்களுக்குத் தண்டற்காரர் மூலமாக அனுப்பப்படும். மற்றவர்கள் தபால்செலவு முதலிய சில்லரை செலவுகளின் பொருட்டு வருடம் ஒன்றுக்குப் பன்னிரண்டணா வீதம் கொடுத்து, தபால் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டும். பொருள் வருவாயை எதிர்பாராமல் யாவரும் சைவசமய உண்மைகளை எளிதில் உணர வேண்டி இப்பத்திரிகை வெளியிடப்பட்டாலும், இதை வாசிப்பவர்கள் அடையும் பயன் மிகப் பெரிதாகவும் இதன்பொருட்டு அவர்கள் கொடுக்குந்தொகை தபால் செலவு உட்பட மாதம் ஒன்றுக்கு ஒரு அணாவேயாகவும் இருப்பதனாலும், சைவசமயிகள் பலரும் இப்பத்திரிகையை வாங்கிப் படித்தும், பிறரை வாங்கிப் படிக்கச்செய்தும், வறுமையினாலேனும் உலோப குணத்தாலேனும், அசட்டையாலேனும் வாங்கிப்படிக்காதவர்களுக்கு வாங்கிக்கொடுத்தும், கூடுமானவர்கள் இச்சபையின் அங்கத்தவர்களாக இருந்து இயன்ற உதவிகளைச்செய்தும் சைவசமயபரிபாலனஞ் செய்யும்வண்ணம் இச்சபையார் பிரார்த்திக்கிறார்கள்.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்.

இச்சபை 1898ஸு தாபிக்கப்பெற்று, அரசாங்கத்தினரால் 1860-வது வருடத்து 21-ஆவது சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றுள்ளது. இச்சபையார் 1898, 1899, 1900-ஆம் வருடங்களில், பெருங்கூட்டமான சிவனடியார்களுடன் கூடி, தொண்டை

நாட்டில் தேவாரம்பெற்ற முப்பத்திரண்டு தலங்கட்கும் யாத்திரை செய்து, ஆங்காங்கு எண்ணிறந்த சிவனடியார்களுடன் அளவளாவி திருக்கோயில்வழிபாடு, தேவாரபாராயணம் சைவப்பிரசங்கமுதலியன செய்து, 1901௵ பிப்ரவரீ 3௳ திருவொற்றியூரில் ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்குக் கும்பாபிஷேக மகோற்சவஞ் செய்வித்து, தொண்டைநாட்டுத் தேவாரத்தல யாத்திரையைப் பூர்த்தி செய்தார்கள். அதன் பிறகு, தொண்டைநாட்டில் ஏனையசிவதலங்கட்கும், சோழநாடு, கொங்குநாடு, நடுநாடு முதலியவற்றிலுள்ள சிவதலங்கள் பலவற்றிற்கும் முன்போலவே யாத்திரை செய்யத்தொடங்கி ஏறக்குறைய இருநூறு சிவதலயாத்திரைகள் செய்தார்கள். 1905-ஆம் வருடம் 3000-ரூபாவரையில் செலவிட்டு "சென்னைச்சிவனடியார் திருக்கூட்டச் சபாமண்டபம்" கட்டினார்கள். இதில் அது முதல் சைவப்பிரசங்கங்களும், தமிழ்வேதபாராயணங்களும், இச்சபையின் சகல நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. இதில் சிவஞானமுனிவர் திருநாமத்தால் புத்தகசாலைதாபித்து சுமார் 600-தமிழ்ப்புத்தகங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இச்சபையார் சென்னையில் The Saivaite Elementary School என்னும் பாடசாலை வைத்து அதில் சிறுவர்களுக்குத் தினந்தோறும் பகல் 10-மணி முதல் 5-மணிவரையில் ஆங்கிலம் தமிழ் தெலுங்கு ஆகிய இவற்றோடு தேவாரமுதலிய சைவநூல்களும் ஒழுக்கங்களும் கற்பிக்கிறார்கள். இதற்கென நேர்த்தியான கட்டிடமுங் கட்டப்பெற்றிருக்கிறது. இதில் இப்போது நான்கு வகுப்புகள் இருக்கின்றன. 70-சிறுவர்கள் இருக்கிறார்கள். இப்பாடசாலை அரசாங்கத்தின் கிராண்டினேயிட் என்னும் உதவியைப் பெற்றிருக்கிறது. இவ்விதமான சைவ ஆங்கில பாடசாலை வேறெங்கும் இல்லாதிருப்பதனால் சைவாபிமானிகள் பலர் அடிக்கடி இப்பாடசாலைக்குவந்து சிறுபிள்ளைகள் இனியகுரலோடு தேவாரம் பாடுவதையும், சிவசரித்திரங்கள் சொல்வதையும் கேட்டு ஆனந்திக்கிறார்கள். சைவத்திருமுறைகள் பன்னிரண்டுள்ளன வென்பதையறியாதார் பலரும் அறிந்து ஓதவேண்டி, இச்சபையார் பன்னிருதிருமுறைகளைத் திரட்டி அச்சிட்டார்கள். இதன் பிறகே பலதிருமுறைத் திரட்டுகள் வெளியாயின. அகத்தியமாமுனிவர் திரட்டியருளிய தேவாரத்திரட்டை அச்சிட்டு மிகவும் சிறிய விலைக்கும் இலவசமாகவும் பலர்க்கும் கொடுத்தார்கள். ஸ்ரீமத்-சுவாமிநாதபண்டிதரவர்கள் அடங்கன் முறையோடு சேர்த்து அச்சிட்ட "திருமுறைப் பெருமையைத் தனிப்புத்தகமாக அச்சிட்டு மிக

வுஞ் சிறியவிலைக்கு விற்கிறார்கள். திருமுறைகளுக்கு மகோற்சவங்கள் செய்துகாட்டி, பலவிடங்களிலும் அம்மகோற்சவம் நடைபெறச் செய்தனர். சைவசமயத்தின் தற்கால நிலைமையையும் அதைப் பரிபாலிக்கும் வழிகளையும் விளக்கி "சைவசமயிகளின் கடமை" என்னும் நூலையும், "சைவசமயிகளுக்கு எச்சரிப்பு," "சைவசமய பரிபாலனம்" முதலிய மகுடங்களுடைய துண்டுப் பத்திரிகைகளையும் ஏராளமாக வெளியிட்டு எங்குஞ் சைவாபிமானக்கிளர்ச்சியை யுண்டாக்கினார்கள். இச்சபையின் வரவுசெலவுகணக்குகள் இச்சபையின் ஆரம்பமுதல் இதுவரையில், மிகவும் ஒழுங்காக எழுதிவைக்கப் பெற்றும், கணிதபரிசோதகர்களால் பரிசோதிக்கப்பெற்றும், மகாஜனசபையாரால் அங்கீகரிக்கப்பெற்றும் வருடந்தோறும் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இவ்விதமாகவும், இவ்வளவு நெடுங்காலமாகவுஞ் சைவசமயபரிபாலனஞ் செய்யும் சபைகள் சைவசமயிகளுக்குள் மிகவும் அருமையிலும் அருமை. இதில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து சைவசமயத்தைப் பரிபாலிப்பது சைவசமயிகளுக்கு மிகப் பெருமையினும் பெருமை.

---

## பதி பசு பாசம்.

பதி பசு பாசம் என்னும் மூன்று பொருள்களும் அனாதியாகவும் நித்தியமாகவும் உள்ள பொருள்கள். இவற்றுள் பதியாவது உயர்வொப்பில்லாததும் மலரகிதமானதுமான தனிப்பரம்பொருள். இப்பரம்பொருளே சிவமெனப்படும். பசு, ஆன்மா, உயிர் என்பன ஒருபொருட்சொற்கள். ஆன்மாக்கள் எண்ணிறந்தன. இவை அனாதியாகவே மலமாகிய பாசத்தாற் கட்டுப்பட்டிருத்தலினால் பசுக்கள் எனப்படும். பாசம் எனினும் மலம் எனினும் ஒன்றே. பாசமானது ஆணவம் மாயை கன்மம் என மூவகையாக இருக்கும். இவை மும்மலங்களெனப்படும். இவற்றுள் ஆணவம், செம்புள்ளபோதே அதில் களிம்பும் இருப்பதுபோல், ஆன்மாவுள்ளபோதே அதனுடன் இருந்துகொண்டு ஆன்மாவின் அறிவும் செயலும் நிகழவொட்டாமல் மறைத்துக்கொண்டிருக்கும்.

**பதி பசு பாச விளக்கம் - ஆணவமல இலக்கணம்.**

நெல்லினுக் குமியும் செம்பி னீடுகா ளிதமும் போலத்
தொல்லைதொட் டின்று காறு முயிரிடைத் தொக்கி நிற்கும்
வல்லியோர் பங்க னாசான் வடிவெடுத் தருளுங் காலம்
புல்லுறு பனிபோற் பொன்றும் போதவா தவனெ ழுங்கால்.

மாயையென்பது தனுகரண புவன போகங்களாக விரிந்து கிடக்கும் அசித்துப் பொருள்களாம். இவை சடப்பொருள்கள் எனவும் சொல்லப்படும். இவற்றுள் தனு என்பது ஓரறி வுயிர்களாகிய புல் பூண்டு முதல் தேவர் ஈறுக உள்ள உயிர்கள் எடுக்கும் சரீரங்கள். கரணம் என்பது மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அகக்கரணங்கள் நான்கும் புறக்கரணங்களும். புவனம் என்பது ஆன்மாக்கள் சரீரம் எடுக்கும் பலவகைப்பட்ட உலகங்கள். போகம் என்பது ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைக் கீடாக அனுபவிக்கும் இன்பதுன்பங்கள்.

### பதி பசு பாச விளக்கம்.

*மாயையே யுடல மாகு மாயையே கரண மாகும்*
*மாயையே புவன மாகு மாயையே போக மாகும்*
*மாயையே பொறிக ளாகு மாயையே புலன்க ளாகும்*
*மாயையே யண்ட பிண்டம் யாவையு மாயை யாமே.*

செம்பு உள்ளபோதே அதில் களிம்பு இருத்தல் போலவும், களிம்பு நீங்கினுல் அது பொன்னுவதுபோலவும், ஆன்மாக்களிடத்தில் அனுதியாகவே பாசம் இருத்தலால் அவை பசுக்களாகி, பிறப்பிறப்புக்களாகிய துன்பக்கடலில் அமிழ்ந்து கிடக்கின்றன. பாசம் நீங்கப்பெற்றுல் ஆன்மாக்கள் சிவமேயாய் பேரின்பமயமாயிருக்கும். ஆதலால் பாசத்தால் கட்டுண்டு துன்பப்படும் ஆன்மாக்களின்மீது பாசமில்லாதவராகிய கடவுள் பெருங்கருணை கூர்ந்து ஆன்மாக்களைப் பாசத்தினின்றும் விடுவித்துத் தம்முடைய திருவடி யின்பத்தைக் கொடுத்தருளவேண்டி, அழுக்கைக்கொண்டு அழுக்கைப்போக்குவதுபோல் பாசத்தைக்கொண்டே பலபிறவிகளெடுக்கச்செய்து, இருவினையொப்பும் மலபரிபாகமும் வருவித்து, தமது திருவடி யின்பத்தைக் கொடுத்தருளுவர்.

(இன்னும் வரும்.)

---

## சைவ சந்தான குரவருள் ஒருவராகிய மெய்கண்டதேவர் பிரபாவம்.

தேவார திருவாசகங்களைத் திருவாய்மலர்ந்தருளிய திருஞான சம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வரும் சைவசமய குரவரெனவும், சிவஞானபோதமுதலிய தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்



கள் பதினன்கையும் செய்தருளிய மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார் ஆகிய நால்வரும் சைவசந்தான குரவர் எனவும் பூசிக்கப் படுகின்றார்கள். இவர்களுள் சமயாசாரியர்களுடைய சரித்திரங்கள் பலர்க்கும் தெரியும். சந்தானசாரியர்களுடைய சரித்திரங்களை யறிந்தவர்கள் மிகச் சிலரே. ஆதலால் சந்தான குரவர்களுள் முதல்வராகிய மெய்கண்டதேவர் சரித்திரத்தை ஈண்டு வெளியிடத் தொடங்குகிறோம்.

சோழநாட்டில் திருப்பெண்ணாகடம் என்னுந் திருப்பதியில் அச்சுதன் என்னும் வேளாள குலதிலகர் ஒருவர் சிவபூசாதுரந்தரராய், அருந்ததிபோலுங் கற்பிற் சிறந்த மனைவியோடு அறத்தாற்றின் இல்லறம் புரிந்துவந்தனர். அவர் தமக்குப் புத்திரப் பேறுவேண்டி, தமக்கு ஆன்மார்த்தமாயுள்ள சுவேதவனம் என்னும் திருவெண்காட்டில் முக்குள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சிவபெருமானைத் தியானித்துத் தவஞ்செய்வாராயினர்.

திருவெண்காட்டுத் தேவாரப்பதிகத்தில் திருஞான சம்பந்த சுவாமிகள் "பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை, வாயினவே வரம்பெறுவ ரையுற வேண்டா வொன்றும், வேயன தோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர், தோய்வினையா ரவர் தம்மைத் தோயாவாந் தீவினையே" எனத் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம், வேண்டுவார் வேண்டுவதே ஈபவராகிய சிவபெருமான் அச்சுதர் தவத்திற்கிரங்கி மோன நிலையையுடைய ஒரு புத்திரனை அத் திருக்குளத்தின் படிக்கரையில் அவர்முன் தோற்றுவித்து, இதனை உன் குழந்தையாக வளர்ப்பாயாக என்று அசரீரி வாக்களித்தனர். அவ்வாக்கினைக்கேட்டு, குழந்தையிருக்கக்கண்ட அச்சைவதபோதனர் அதை அளவற்ற காதலோடு இருகரங்களாலும் ஏந்தி எடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து தமது மனைவியார்பால் கொடுத்தனர். பின்பு அவ்விருவரும் தங்களுக்குப் புத்திரப்பேற்றைத் தந்தருளிய திருவெண்காட்டீசர் திருநாமமாகிய "சுவேதவனப் பெருமான்" என்னும் திருநாமத்தையே அக்குழந்தைக்குஞ் சூட்டி மிகுகாதலோடு வளர்த்து வருவாராயினர். இதனைக்கண்ட ஊரவர்கள் இக்குழந்தையை யாரோ பழுதுடையாள் பெற்றுக் குளக்கரையிலெறிந்துவிட்டாள்போலும். இவ்வச்சுதர் பிள்ளை பைத்தியம் பிடித்துக்கொண்டு சிவபெருமான் தமக்கு அருளிச்செய்ததெனை எடுத்துவளர்க்கின்றனர் என்று பரிகசித்தனர். அச்சுதர் ஊரவர் கூறும் நிந்தனைகளால் மனம்வருந்தி நிற்கையில் திருவருட்செயலால் சுந்தர மூர்த்தி

சுவாமிகளைத் தடுத்தாண்ட தலமாகிய திருவெண்ணெய் நல்லூரிலிருந்து அவர் பத்தினியாரின் [illegible] காங்கேய பூபதியென்பவர் அவரிடம் வந்து விருந்துண்டு அங்குநடந்தன யாவையும் கண்டு, அக்குழந்தையைத் தாம் சிலநாள் வளர்ப்பதாகச்சொல்லி அவரிடம் விடைபெற்றுத் தம்மிடத்திற்குக் கொண்டுபோய் வளர்த்து வந்தனர். இக்குழந்தை திருவவதாரஞ் செய்தபோதே சிவஞானத்தோடு அவதரித்தமையால் உலகத்தவரோடுபேசாமலும் விளையாடாமலும் மௌனமாயிருந்தது. அதனால் இக்குழந்தையை [illegible] ஊமையெனக்கூறினார்கள். இக்குழந்தை இரண்டு வயதில் மணலில் இலிங்கந்தாபித்துச் சிவபிரானையர்ச்சித்துத் தியானித்துக் கொண்டிருந்தது. அச்சமயத்தில் அவ்வழியில் கிருபாமூர்த்தியாய் கைலையினின்றும் தென்றிசையைநோக்கி எழுந்தருளிய பரஞ்சோதிமாமுனிவர் இக்குழந்தையின் பரிபக்குவத்தையும், குழந்தையின் மாட்டுத் தம் மனம் கவர்ந்திழுக்குந் தன்மையையும், சிவபிரான் திருவுள்ளக் குறிப்பையும் ஞானதிருஷ்டியால் அறிந்து, அக்குழந்தைக்குஉடனே சைவதீக்ஷைசெய்து, மெய்கண்டதேவர் என்னுந் தீக்ஷாநாமங்கொடுத்தருளி, சிவஞானபோதத்தினைத் தந்தருளி, அதின் பொருள்களையுபதேசித்து, உலகமுய்யுமாறு அதைத்தமிழில் இயற்றக்கட்டளையிட்டுச் சென்றனர். மெய்கண்டதேவர் ஐந்து பிராயத்திற்குள் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியுள்ள பொல்லாப்பிள்ளையார் என்னும் காரணத்திருநாமமுடைய விநாயகக்கடவுளிடம் வேதசிவாகமங்களையும் சிவஞானபோதத்தின் பொருள்களையும் தெளிவுபெறவுணர்ந்து, சிவஞானபோதத்திற்குப் பொல்லாப்பிள்ளையார் செய்துதந்த சூர்ணிகையைக்கொண்டு தமிழில் சிவஞானபோதமும் அதற்கு வார்த்திக உரையும் செய்தனர். இவ்வாறு பயின்றுவருவது வேறொருவருக்கும் தெரியாமலிருந்தது. மெய்கண்டதேவர் தமக்குப் பொல்லாப்பிள்ளையார் அந்தரங்கமாகப் போதித்த பொருள்களைச் சிந்தித்தும் தெளிந்தும் நிட்டைகூடியும் இருந்தனரேயன்றி வேறொருசிந்தனையும் செயலுமில்லாது மௌனமாயிருந்ததனால் திருவெண்ணெய் நல்லூரிலுள்ளவர்களும் அவரை ஊமையென்றே சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதனால் காங்கேயபூபதிக்கு அச்சுதினும் அதிக மனத்துயரமுண்டாயிருந்தது.

(இன்னும் வரும்)

---



## ஞான விசாரணை.

இக்காலத்தில் உலகெங்கும் ஞான வாராய்ச்சியதிகரித்து வருகிறது. அச்சுக்கூடங்கள் மலிந்து கிடப்பதனால் பலர் கையிலும் ஞானநூல்கள் காணப்படுகின்றன. மதுபானம் செய்வோர் பிறர்மனை நயப்போர், உயிர்க்கொலை செய்வோர் முதலிய பஞ்சமாபாதகர்களும் ஞான ஆராய்ச்சிசெய்கிறார்கள். சிலர் பிறர்க்குரைத்து வயிறுவளர்க்கவும், புகழடையவுமே ஞான சாத்திரங்களைக்கற்கிறார்கள். சிலர் ஞானவாராய்ச்சி செய்வதற்குப் போதியகல்வி யில்லாவிடினும் கௌரவத்திற்கேனும் ஞான நூல்களைக்கையாளுகிறார்கள். இவற்றுள் உண்மை ஞான நூல்கள் மிகச்சிலவேயாகவும் போலி ஞான நூல்கள் பலவாகவும் இருக்கும். இவற்றின் தாரதரங்களையறியாமலேபலர் தங்கள் கையில்கிடைத்த புத்தகங்களையெல்லாம் ஞான நூல்களென்று மதித்துப்படித்து, தங்களுக்கு ஞானம்வந்துவிட்டதாக எண்ணி, சரியை கிரியைகளை யசட்டைசெய்து ஆலயவழிபாட்டைக் கைவிட்டிருக்கிறார்கள். ஞானம் இவ்வளவு எளிதில் கிடைக்கும் கடைச்சரக்கன்று. உலகவாழ்க்கையைத் துரும்பென மதித்து மனைவிமக்களை விட்டு நீங்கி உடை உணவுமுதலியவற்றை வெறுத்துத் தவஞ்செய்யும் பெரியோர்களுக்கும் ஞானம் உண்டாவது கடினமானால், இரவும்பகலும் ஓய்வின்றிக் குடும்பப்படுகுழியில் விழுந்து புரண்டு, அவ்வாறு புரள்வதனாலுண்டாகுந் துன்பத்தையே இன்பமாகக்காணும் அறிவின் மாக்கள் ஞான நூல்களைப் படித்ததினாலேயே ஞானிகளாய் விடுவரோ! "திரிவிதலோகத் தரிதொரு ஞானி" எனவும், "பிரமாதி தேவர்களும் ஞானிகளுக்குக் குற்றேவல் செய்வர்" எனவும் நூல்கள் கூறுகின்றன.

**திருமூலர் திருமந்திரம்.**

எண்ணாயிர மாண்டு யோக மிருக்கினுங்
கண்ணா ரமுதினைக் கண்டறிவா ரில்லை
உண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கிற்
கண்ணாடி போலே கலந்திருந் தானே.

ஞானத்தின் அருமை இவ்வாறிருக்க, சாமானிய மனிதர்கள் தங்களை ஞானிகளென மதித்து ஆலயவழிபாடாதிகளை விட்டிருத்தல் அந்தோ! பாவம்!! பாவம்!!!

கடவுள் "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி" யாயிருத்தலால் மனிதர்களுக்கு ஞானவாராய்ச்சி இன்றியமையாததே. ஆனால், உண்மை ஞான நூல்களை உணர்ந்தபெரியோரிடம் கேட்டுச் சிந்தித்துத்தெளிந்து நிட்டைகூடினாலன்றி முத்திசித்தியாது.

### தாயுமான சுவாமிகள் பாடல்.

கேட்டலொடு சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு வுற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றேதான்
பொய்யாம் பிறப்பிறப்பும் போம்.

**ஞான நிட்டையிலக்கணம்—பதி பசு பாச விளக்கம்.**

மக்களு மனையு நீத்து மாதரா ராசை நீத்துச்
சொர்க்கமே லாசை நீத்துச் சுத்தனாய்ப் பற்றொன் றின்றிக்
கற்கவேண் டியது நீத்துக் கருதிரு வினையு நீத்து
நிற்குண சிவந்தா னாகி நிற்பது ஞான நிட்டை.

இவ்வாறு தன்னைத்தானறிந்த தத்துவ ஞானியிடம் ஞானநூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடியிருத்தல் பலகோடி மனிதர்களுள் ஒருவருக்கு உண்டாகக்கூடும். ஆதலால் வெறும் ஞானவாராய்ச்சியோடு நின்றுவிடலாகாது. எவ்வளவு பாடுபட்டாயினும் நல்வினைகளையே செய்து புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். உயிர் துறக்கவரினும் தீவினைகளைச் செய்யலாகாது. சரியை கிரியைகளைக் கிரமமாய் அநுட்டித்துக் கடவுளை வழிபடவேண்டும். இப்படிச் செய்பவர்கள் கடவுளோடு ஒத்துச்சென்று அவர் திருவருளைக் கூடுவார்கள்.

### திருவாசகம்.

பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர் காரண மிதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் றிருவருட் கூடிடு முபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை
யத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசய மறியேனே.

எத்தனைச் சமய நூல்களை யாராயினும் அவற்றினிடம் அறிவனவெல்லாம், புண்ணியம் செய்யவேண்டும், பாவத்தைச் செய்யாதொழியவேண்டும், கடவுளிடத்தில் உண்மையாகப் பத்தி செய்யவேண்டும் என்பனவே. புண்ணியமுடையார்க்கே கடவுளிடத்தில் பத்தியுண்டாகும். கடவுளிடத்தில் பத்திசெய்பவர்களுக்குப் புண்ணியம் மேலிட்டுப் பாவம் தேயும்.

### தேவாரம்.

கற்றுங் கெரி யோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

(இன்னும் வரும்.)

---



## ஆலய வழிபாடு.

ஆலயங்கள் கடவுள் வழிபாட்டிற்கென்றே அமைக்கப்பட்டமிகவும் பரிசுத்தமான இடங்களாம். மனைவி மக்கள் செல்வம் முதலியவற்றால் மயங்கி, பலவிவகாரங்களிற் சிந்தனையைச் செல்லவிட்டிருக்கும் மனிதர்கள், அம்மயக்கப் பொருள்களும் விவகாரங்களும் மலிந்துகிடக்கும் வீடுகளிலிருந்து கடவுளைவழிபடுவதினும் ஆலயங்களுக்குச்சென்று கடவுளைவழிபடுதலே அதிகபலனைத்தரும். வீடுகளில் கண்களுக்குத்தோன்றுவனவும், காதுகளால் கேட்கப்படுவனவும், பிறவும் மனதைத்தம்வசப்படுத்திக் கடவுள்வழிபாட்டைக்கெடுக்கும். ஆலயங்களில் அவ்வித இடையூறுகளிரா. ஆலயங்களில் நாம் காண்பன கேட்பன யாவும் நம்மனதையுருக்கி அன்பைப்பெருக்கும். அங்குவரும் மெய்யன்பர்களின் தரிசனவிசேடத்தாலும், அவர்கள் செய்துகாட்டும் வழிபாட்டின் விசேடத்தாலும் "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றா மாந்தர்க், கினத்தியல்ப தாகு மறிவு" என்னுந் திருக்குறளுக்கிணங்க, எத்தகையோரும் புனிதமெய்துவர். அங்கு எங்கும் தெய்வத்திருவுருவங்கள் மந்திரபூர்வமாகப் பிரதிட்டித்திருத்தலால் பார்த்தவிடமெல்லாம் பராபரன் சந்நிதியாகத்தோன்றும். ஆலயங்களில் தெய்வத்திருவுருவங்களைத் தலையாரவணங்குவதனால் தலையாலாயபயனையும், கண்களாரக்காண்பதனால் கண்களாலாயபயனையும், கைகளாரக் கூப்பித்தொழுவதினால் கைகளாலாயபயனையும், கால்களாரவலம் வருவதனால் கால்களாலாயபயனையும், தரையில் வீழ்ந்து நமஸ்கரித்தலால் சகல உருப்புகளாலாயபயனையும், வாயாரப்பாடுவதனால் வாயினாலாயபயனையும், அருச்சனைதோத்திரங்கள் முதலியவற்றைக் காதாரக் கேட்டலினால் காதுகளாலாயபயனையும் பெறலாம். பலகாலங்களிலும் பலபெரியோர்கள் செய்யும் வழிபாட்டின் விசேட முதலியவற்றால் பலமகிமாதிசயங்களைப் பொருந்தியிருப்பன ஆலயங்களே. இதுபற்றியே "ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்று சொல்லப்பட்டது.

ஆலயவழிபாடு செய்வோர் அவ்வவ்வாலய வழிபாட்டிற்கு விதிகளை அசட்டை செய்யாமல் அத்தியாவசியமாய் அநுட்டித் வேண்டும். அரசனைக் காணச்செல்லும் ஒருசேவகன், அதற்கு விதிகளின்படி உடைகளையும் சின்னங்களையுந்தரித்து, காலம்ப துச் சென்று, அவன்முன் பயபத்தியுடனின்று, குறையிரந்து, வீ காலம் போக்காமலும், வேறுகாரியஞ் செய்யாமலும், உடனே சன் மாளிகையைவிட்டு நீங்குவதுபோல், ஆலயவழிபாடு செய்வே

அவ்வக்கோயில் வழிபாட்டின் விதிகளையநுசரித்து அதற்குரிய உடையையும் சின்னங்களையுந்தரித்து, காலத்திற்சென்று, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக் கடவுளை வணங்கி, வீண்காலம் போக்காமலும் வேறு காரியஞ் செய்யாமலும் உடனே ஆலயத்தைவிட்டு நீங்குதல் வேண்டும்.

ஆலயவழிபாடு செய்யப்போகும்போது கடவுளுடைய பெருமையையும் அவர் நம்மிடத்தில் வைத்திருக்கும் அளவுபடாதகருணையையும், அவரை வணங்கி நாம் அடையப்போகும் ஒப்பற்றசுகத்தையும் சிந்தித்துக்கொண்டு ஆசைப் பெருக்கோடு போதல்வேண்டும். ஆலயத்தை யடைந்தபிறகு விதிப்படி பிரதட்சிண நமஸ்காரங்கள் செய்து கும்பிட்டுக்கொண்டே உள்ளே பிரவேசித்து, மனதைக்கடவுளுடைய திருவடியில் பதியவைத்து, மனங்கசிந்துருகத் தோத்திரஞ் செய்தல்வேண்டும். திருக்கோயிலைவிட்டு நீங்கும்போது கடவுளைவிட்டுப் பிரியமாட்டாத சிந்தையோடு நீங்கவேண்டும்.

இவ்விதமாக ஆலயவழிபாடுசெய்தே இதுவரையில் எத்தனையோ பெரியோர்கள் முத்தியடைந்தார்கள். இன்னும் பலபெரியோர்கள் இவ்வாறாக வழிபாடு செய்கிறார்கள். ஆலயவழிபாட்டின் மேம்பாடு இவ்வாறிருக்க இக்காலத்தில் பலர் ஆலயவழிபாட்டை முற்றிலும் கைவிட்டிருக்கிறார்கள். இதற்குக்காரணங்கள் பலவிருப்பினும் அவையனைத்தும் சமயபோதனை இல்லாமையும், ஆலயங்களில் இக்காலத்திற்காணப்படும் குற்றங்களும் என்னும் இவ்விரண்டினுள் அடங்கும். இவையிரண்டுமே சைவசமயத்தின் ஜீரணத்திற்குங் காரணமெனவுந்தரும். இவற்றின் விஷயமாக இனிவரும் பத்திரிகைகளில் பலவியாசங்கள் வெளியிடப்படும்.

**திருத்தாண்டகம்.**

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதி யென்று
மாரூரா வென்றென்றே யலறா நில்லே.

---



## சீவகாருணியம்.

தன்னுயிர்போல் பிறவுயிர்களையும் நேசித்தல் சீவகாருணியவொழுக்கமாம். இவ்வொழுக்கம் ஒன்றே மற்றெல்லா நல்லொழுக்கங்களையுந்தரும். இவ்வொழுக்கமொன்றே இம்மைமறுமைப் பயன்களோடு முத்தியின்பத்தையுந் தரும். கருணையைக் கொண்டே கருணையைப் பெறவேண்டுமாதலால், கடவுளின் அருளைப் பெறவேண்டுவோர் அவர் மக்களாகிய எல்லாவுயிர்களின்மேலும் கருணையுடையவர்களா யிருத்தல்வேண்டும். கருணையே கடவுளின் வடிவமாதலால் எல்லாவுயிர்களையும் தம்முடன் ஒக்கப்பார்க்கும் கருணையுடையவர்கள் முடிவில் இவ்வொழுக்க முதிர்ச்சியால் கடவுளின் வடிவத்தை யடைகிறார்கள். சீவகாருணிய வொழுக்கமே சைவசமய வொழுக்கமெனவும், இவ்வொழுக்கத்தால் ஆன்மாக்கள் சிவமாந்தன்மை யடைதலையே சிவசாயுச்சியம் எனவும் சொல்லப்படும்.

சீவகாருணியமுடையவர்கள் அக்காருணியமுதிர்ச்சியால் பிறவுயிர்களின் பொருட்டுத் தம்முயிரையுங்கொடுப்பர். “அன்பிலாரெல்லாந் தமக்குரியர் அன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு” என்றனர் பொய்யாமொழியார். இது ததீசிமுனிவர், சிபிச்சக்கிரவர்த்தி முதலிய பெரியோர்களின் திவ்விய சரித்திரங்களால் விளங்கும்.

### சிபிச்சக்கிரவர்த்தியின் சரித்திரம்.

சிபிச்சக்கிரவர்த்தியென்பவர் அயோத்தியில் அரசாண்டசக்கிரவர்த்திகளில் ஒருவர். இவர் சீவகாருணிய ஒழுக்கத்தைமேற்கொண்டு மநுநீதிதவறாமல் அரசுபுரிந்து வருகையில், மறுமைப் பயனை விரும்பி உலகவாழ்க்கையைவெறுத்துக் காட்டையடைந்து சிவபெருமானைநோக்கி அரியதவஞ்செய்து கொண்டிருந்தனர். இவரது மனவன்மையைச் சோதிக்கவேண்டி பிரமதேவர் வேடுவவுருக்கொண்டு, அக்கினிதேவரைப் புறாவடிவங்கொளச்செய்து, இருவருமாகச் சிபிச்சக்கிரவர்த்தி தவமாற்றும் காட்டையடைந்து, கிராத வேடம் பூண்ட பிரமதேவர் அம்பினால் புறாவையெய்ய, அதுதுடித்து அலறி தவஞ்செய்துகொண்டிருந்த சிபிச்சக்கிரவர்த்தியின் பாதங்களில் வீழ்ந்து “அபயம் அபயம் என்னை இரட்சித்தருளவேண்டும்” என்று ஓலமிட்டது. இதனைக்கண்ட சக்கிரவர்த்தி அப்புறாவைத் தன் இருகையாலெடுத்து அதுபடும் துயரத்தைக்கண்டு சகிக்கமாட்டாதவராய் மிகவருந்தி அப்புறாவைக் காப்பதே தாம் மேற்கொண்ட

தவமென வெண்ணி அதற்கு அபயமளித்தனர். வேடன் சக்கிரவர்த்தியை யணுகி "யான் எய்த புறாவைக்கொடும். யானும் என் மனைவிமக்களும் பசியால் வருந்துகின்றோம்" என்றனன். சக்கிரவர்த்தி வேடனைநோக்கி "அடாவேடா, இச்சிறிய பறவையைக் கொன்றுதின்றால் உனக்கும் உன் மனைவிமக்களுக்கும் பசியாறிவிடுமோ? மேலும், இப்புறா என்னைச்சரணடைந்தமையால் இதற்குப் பதிலாக என் சரீரத்திலுள்ள மாமிசமனைத்தையும் அறுத்துக் கொடுத்தாலுங் கொடுப்பேன். இதை உன்னிடம் என்உயிர் துறக்கவரினுங் கொடேன்" என்றனர். இதைக் கேட்ட வேடன் "அப்படியானால் நீர் உமது சரீரத்திலிருக்கும் மாமிசத்தில் இப்புறாவின் எடையளவுகொடும்" என்றான். அதைக்கேட்ட சக்கிரவர்த்தி மிகவும் மனமகிழ்ந்து, தன்சரீரத்தினின்றும் கொய்தெடுத்த மாமிசத்தையும் ஒருஎலும்பையுங்கொண்டு தராசாக்கி, அதை இடதுகையிற் பிடித்து, ஒருதட்டில் புறாவைவைத்து மற்றொருதட்டில் அப்புறாவினளவிற்குத் தன்சரீரத்திலுள்ள மாமிசத்தைக் கொய்துவைத்தனர். அவ்வாறுவைத்தது புறாவின் எடைக்கும் குறைந்திருந்ததனால் மறுபடியும் கொய்துவைத்தனர். அதுவுங் குறைவதைக்கண்டு பலமுறை யறுத்துவைத்தனர். அப்போதும் குறைவாகவே யிருக்கக்கண்டு சிறிதும் மனந் தளராமல் வேடனைப்பார்த்து "நீ இத்தராசைப்பிடித்துக்கொள்; குறைவாயிருக்கும் மாமிசத்திற்குப் பதிலாக நான் இவ்வெலும்புக் கூட்டோடு தராசிலேறுகிறேன்" என்று சொல்லி அத்தராசிலேறி நின்றார். இவ்வாறு அவர்ஏறின மாத்திரத்தில் தராசின் இரண்டுதட்டுகளும் சம எடையாயிருந்தன. இதனைக் கண்டதும் சக்கிரவர்த்தி மிகவும் மனமகிழ்ந்து, வேடனை நோக்கி "என்னைத்தின்று நீயும் உன்மனைவிமக்களும் பசியாறுங்கள்" என்றனர். இவ்வாறு ஒரு அற்பபறவைக்காகத் தன்உடலையறுத்துக் கொடுத்ததுமன்றி, தன்னைப் புசிக்கும்படியாகவும் கொடுத்த இப்பெரியோரது ஜீவகாருணியத்தை யளவிடயாவரால் கூடும். இவரது ஜீவகாருணிய வொழுக்கத்தைக் கண்ட பிரமதேவரும் அக்கினிதேவரும் மிகவும் அற்புதமெய்தி தங்கள் தேவஉருவத்தோடு காட்சி தந்து, அவர்க்குவேண்டிய பலவரங்களை உதவி ஆசிகூறி மறைந்தனர்.

---

OFFICE OF THE REGISTRAR
9-FEB 1915
MADRAS.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 1.] | ஆனந்தஸு மாசிமீ 1915ஸு பிப்பிரவரிமீ | [இதழ் 2.

## சைவம்.

"சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமு
முய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே."

உலகத்தில் எண்ணிறந்த மதங்களிருக்கின்றன. இவற்றுள் மிகவும் பிரசித்திபெற்றிருப்பன கிறிஸ்து மதம், மகம்மதியமதம், புத்தமதம், இந்துமதம் என்னும் இவைகளே. இவற்றுள், கிறிஸ்து மதம் உலகத்தில் எல்லாக் கண்டங்களிலும் பல அரசர்களாலும் மிஷன் என்னும் சபைகளாலும் பரிபாலிக்கப்பட்டு உலகெங்கும் பரவியிருக்கிறது. மகம்மதியமதம், துருக்கி, ஆப்கானிஸ்தானம், பெலூகிஸ்தானம், பாரசீகம், அராபியா, எகிப்து முதலான தேசங்களில் அத்தேசங்களின் அரசர்களால் பரிபாலிக்கப்பட்டு அத்தேசங்களிலும் நமது இந்தியாதேசத்திலும் பரவியிருக்கிறது. புத்தமதமும் சைனா, டிபெட், மங்கோலியா, மஞ்சூரியா, கொரியா, ஜப்பான் முதலான தேசத்தரசர்களாற் பரிபாலிக்கப்பட்டு அத்தேசங்களிலும், நமது இந்தியாதேசத்திலும் பரவியிருக்கிறது. இந்துமதமோவெனில் பரிபாலிப்பவரொருவருமின்றி முற்கூறிய மூன்று மதங்களினிடையில் இத்தேசத்தில் நசுங்குண்டு கிடக்கின்றது. இந்த இந்து மதமும் ஒருமதமல்ல. வேதத்தை யங்கீகரித்த நூற்றுக்கணக்கான மதங்கள் பொதுவாக இந்து மதமென்று சொல்லப்படும். இத்தேசத்திற்குப் பரதகண்டம், ஆரியாவர்த்தம் என்பன பூர்வீகப் பெயர்கள். சாதிப்பிரஷ்டமடைபவர்களுக்கு முன்னுள்ள பெயர்

மாறி வேறுபெயர் வழங்குவதுபோல் வேற்றரசர்களின் அரசாட்சியால் இத்தேசத்திற்கு முன்னிருந்த பெயர்கள் நீங்கி இந்தியா என்னும் பெயர் வழங்கலாயிற்று. இதனால் இத்தேசத்தினர் இந்துக்களென்னப்பட்டனர். இவர்கள் மதத்திற்கும் இந்து மதம் என்று பெயர் வழங்குகின்றது. இந்த இந்து மதத்தின் ஒருபகுதியாயிருப்பது நமது சைவசமயமாகும். இச்சைவசமயம் இவ்வளவு சுருங்கிய வியாபகத்தை யுடையதாயிருப்பதுடன் எந்த அரசராலேனும் ஜனத்தலைவராலேனும் பரிபாலிக்கப்படாமல் மாலுமியில்லா மரக்கலம்போல் நிலைகுலைந்திருக்கிறது. இதனால் சைவசமயத்திற் பிறந்தோர் தங்கள் சமய உண்மைகளை யறியாமல் சமயக்குருடராய் சைவ ஒழுக்கங்களைக் கைவிட்டிருப்பதோடு தூஷித்தலுஞ் செய்கிறார்கள். முற்காலத்தில் சமணர்கள் சைவரைக்கண்டால் கண்டுமுட்டு (தீட்டு) வந்ததென்றும், அதைக்கேட்டால் கேட்டுமுட்டு வந்ததென்றுஞ் சொன்னார்களாம். இக்காலத்தில் சைவசமயத்திற் பிறந்தவர்களுக்கே சைவரைக்கண்டால் கண்டுமுட்டும் சைவம் என்னுஞ் சொல்லைக்கேட்டால் கேட்டுமுட்டும் உண்டாகின்றன. இதற்குக் காரணம் இவர்களுக்குச் சைவ உண்மைகள் தெரியாமையேயன்றி வேறில்லை.

சைவசமயமானது உலகில் மிகவும் சுருங்கிய வியாபக முடையதாயிருத்தல் அதின் சிறப்பினாலேயேயன்றி பிறிதொரு காரணத்தாலன்று. உலகமுழுதும் நிலமயமாயிருப்பினும் அதில் ஒரு பாகம் ஒன்றும் விளையாத பாலைநிலமா யிருக்கும். மற்றொரு பாகம் காடடர்ந்த முல்லை நிலமாயிருக்கும். வேறொரு பாகம் சமுத்திரத்தையடுத்த நெய்தல் நிலமாயிருக்கும். பிறிதொருபாகம் மலைகள் நெருங்கிய குறிஞ்சிநிலமாயிருக்கும். இன்னொருபாகம் நாடு நகரங்களடங்கிய மருதநிலமாயிருக்கும். மருதநிலத்திலும் நன்செய் புன்செய் நிலங்களும், கரம்புநிலங்களும், மேட்டு நிலங்களும், மயானபூமி முதலியனவும் இருக்கும். இவற்றுள், நன்செய்நிலத்தில் மாத்திரம் சிறந்த செந்நெற்பயிர் விளையுமேயன்றி, மருதநிலத்தின் வேறிடங்களிலாவது, பாலைமுதலிய நிலங்களிலாவது விளையாது. அவ்வாறு விளையாமையால் நெற்பயிரை இகழ்வாரில்லை. அதுபோல் சைவசமயம் இப்பரதகண்டத்தில் மாத்திரம் வியாபித்திருப்பதுபற்றி அதன் உண்மைகளை யுணர்ந்தமேலோர் அதனை இகழார். உலகத்திலுள்ள ஆசியாமுதலிய ஐந்துகண்டங்களும் மருதமுதலியஐவகை நிலங்களுக் கொப்பாகும். எல்லா மதங்களுக்கும் பிறப்பிடமாகிய ஆசியாகண்டம் பலபயிர்கள் விளையும் மருதநிலத்தை யொக்கும். ஆசி



யாவிலுள்ள பரதகண்டம் மருதநிலத்திலுள்ள நன்செய்நிலத்தை நிகர்க்கும். சைவசமயம் பரதகண்டமாகிய நன்செய் நிலத்தில் விளையும் செந்நெற்பயிரை மானும். சைவமாகிய செஞ்சாலிப்பயிர் சீவகாருண்ணியம், கொல்லாமை, புலாலுண்ணாமை, கற்பு முதலிய உத்தமோத்தம குண நதிகள்பாயும் பரதகண்டமாகிய நன்செய் நிலத்திலன்றி வேறு புலத்தில் விளையாது. ஆதலாற்றான் இப்பரதகண்டம் புண்ணியபூமியென்னப்பெற்றது.

இதுவரையிற்கூறியவாற்றால் சைவம் உலகமெங்கணும் வியாபித்திராததுபற்றி அதனை இகழ்ந்து கைவிடலாகாதென்பது விளக்கமுறும். சைவசமயமானது மற்றெல்லாச்சமயங்களையுந் தனக்குச் சோபானமாகக்கொண்டு அவற்றிற்கெல்லாம் நாயகமும் தாயகமுமாய் இராஜாங்கத்திலமர்ந்த சமயமாகும். இது பலகோடிஜன்மங்களிற் பெற்ற புண்ணிய பரிபாகமுடையார்க்கே அநுட்டிக்கநேரிடும். மனமொழி மெய்களாற் சிவநெறியொழுகி, சித்தாந்தசாத்திரங்களையோதியுணர்வார்க்கே இவ்வுண்மை விளங்கும்.

### தாயுமானசுவாமிகள் பாடல்.

இயல்பென்றுந் திரியாம லியம மாதி
யெண்குணமுங் காட்டி யன்பா லின்பமாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
யயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தி
லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ.

அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின்
றறிஞரெல்லா நடுவறிய வணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்று
மிந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கு
மிதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை
சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம்.

### சிவஞானசித்தியார்.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்

சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியிற் சேர்வர்.

முற்காலத்தில் நம்முன்னோர்களாகிய சைவ உழவர்கள் பாடசாலைகள் கோயில்கள் முதலிய பாத்திகளைக்கோலி, வேதாகமபுராணங்களாகிய களஞ்சியங்களிலிருந்து சமயபோதனை யென்னும் விதையை வாரியிறைத்து, பரதகண்டமாகிய நன்செய் நிலமெங்கும் இமசேதுபரியந்தம் சைவப் பயிரை விளைவித்து உலகத்தாருக்குச் சிவபோகத்தை யுண்பித்தார்கள். பிற்காலச் சைவ உழவர்கள் அவ்வாறு செய்யாமல் வாளாவிருந்து விட்டதனால், பரதகண்டமாகிய நன்செய்நிலம் புன்செய்நிலமாகமாறி, புறச்சமயக் காடுமூடி, கொலை புலை மதுபானம் வியபிசாரம் முதலியதுர்க்குணங்களாகிய தீயவிலங்குகள் வசிக்கும் இடமாய்விட்டது. இனி இக்காட்டைவெட்டிச்சுட்டு, பண்டுபோலாகத்திருத்தி, சைவப்பயிர் செய்தல் எளிதன்று. நம்முன்னோர்கள் உடையைத்துறந்தும் உண்ணாதொழிந்தும் மிகவும் பாடுபட்டு நமக்கெனத்தேடிச் சேமித்துவைத்த நூல்களாகிய நெற்போர்கள் பல வேற்றரசர்களால் எரிக்கு இரையாக்கப்பட்டன. பல பாதுகாப்பின்றி அசாக்கிரதையாகிய அந்துப்பூச்சிக்கிரையாயின. எஞ்சிநின்றனவெல்லாம் அவைதிக நூல்களாகிய பதர்களோடு கலந்து பழைமைபால் உருமாறிவிட்டன. சேரசோழபாண்டியர்களாகிய நதிகள் வறண்டுதிடராயின. மடங்களாகிய ஏரிகள் பெரும்பாலும் விழலுக்குப்பாய்கின்றன. உழவர்களாகியநமக்குத் தரித்திரம் என்னும் நோய் அதிகரித்திருக்கிறது. நம்முடையபங்காளிச் சைவஉழவர்களோ நமக்கு விரோதிகள். இவர்கள் தாங்களும் உழுது பயிர்செய்யமாட்டார்கள், நம்மையும் பயிர்செய்யவிடார்கள். நம்முடைய மாமன் மைத்துன்மாரெல்லாம் அண்ணாத்தைமாராயிருக்கிறார்கள். மற்றுமுள்ள நம்முடைய உறவினரோ, சிலர் பரமலோபிகளாய், பணப்பெட்டியின்மேல் ஓரேபடுக்கையாய்ப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் முழுக்குருடராய் நம்முடைய நிலைமையை எவ்வளவு எடுத்துக்காட்டினாலும் பார்க்கமாட்டாதவர்களாயிருக்கிறார்கள். சிலர் பிணச்செவிடராய் நாம் எவ்வளவு உரத்துக்கூவினாலும் கேளாமலிருக்கிறார்கள்; சிலர் சைவப்பயிர்செய்வதாக நடித்துப் புறப்பட்டு, பிறகு நம்பினவர்க்கு நாமஞ்சாத்துகிறார்கள். சிலர் சுயநலப்பிரியராய் "எது எக்கேடு கெட்டாலும் நமக்



கென்ன" வென்று தங்கள்வரையில் உண்பதும் உடுப்பதுமாய் எட்டிபழுத்தாற்போல் இருக்கிறார்கள். சிலர் தாசிவேசிகளையும், கள்ளுசாராயங்களையும், அர்பத்னட்போன்ற பாங்கிகளையும் நம்பி எவ்வளவானாலும் கொடுப்பார்கள். நம்மை நம்பி ஒருகாசும் கொடார்.

நம்முடைய உறவினர் இவ்விதமாயிருத்தலால் நம்முடைய பண்ணையாட்கள் கூட்டங்கூட்டமாகவும் கிராமங் கிராமமாகவும், அயலாருக்கு அடிமையாகிறார்கள். (கல்வி) அறிவற்றகுண்டைகளோவெனில், அவற்றைச் சரியாய் ஓட்டுவாரின்றி வழியென்றும் வாய்க்காலென்றும் பாராமல் கண்டவிடமெங்கும் ஓடுகின்றன. பழைய எழுத்தாணிக் கலப்பைகள் மிகவும் துருப்பிடித்துக் கூர்மழுங்கிப் பயனில்வாயின. இவ்வளவு சீர்கேடும் ஆபத்துமான நிலைமையில் நாம் சைவப்பயிர்செய்யமுயல்வது பகீரதப் பிரயத்தினமாகும். ஆயினும், நாம் சும்மாவிருக்கமுடியாது. ஆதலால், அங்கும் இங்கும் காதத்திற்கொருவராகச் சிதறுண்டு இலை மறை காய்போல் மறைந்திருக்கும் உண்மைச் சைவாபிமான சீலர்களாகிய நமது சகோதரச் சைவ உழவர்களே, வெளிப்பட்டுவாருங்கள். யாவரும் விரைந்து சென்னைச் சிவனடியார் திருக்கூட்டமாகிய செந்நெற்களத்தில் வந்து கூடுங்கள். கூடிச்சுகிக்கும் வழியை நாடுங்கள். நம்முன்னோர்கள் சேமித்து வைத்த நூல்களாகிய நெற்போர்கள் பெரும்பாலும் அழிந்துபோனாலும், எஞ்சிநின்றவற்றுள் அவைதிக நூல்களாகிய பதர்களோடுகலந்து உருமாறியிருந்தனவற்றை, நமது சந்தான குரவர்களும் சமயகுரவர்களுமாகிய தெய்விக உழவர்கள் திருவருளாகி[illegible]காற்றில் தூற்றி, அப்பதர்களை யகற்றிச் சுத்தப்படுத்தி வேதாகமசாரமாய்விளங்குஞ் சைவசித்தாந்த உண்மைகளாகிய நெல்மணிகளைச் சித்தாந்த சாத்திரங்களும் தேவாரத்திருமுறைகளுமாகிய நெற்கூடுகளிலிட்டு, திருச்சிற்றம்பல முத்திரையிட்டுவைத்திருக்கிறார்கள். இவைகள் "எரியினிடைவேவாது; ஆற்றெதிரேயோடும்; என்புக்கும் உயிர்கொடுக்கும்; இடுநஞ்சாற்றும்; கரியைவளைவிக்கும்; கல்மிதக்கப்பண்ணும்; கராமதலைகரையிலுறக்காற்றும்; முள்ளிச்செடிக்கும் முத்திகொடுக்கும்." இந்நெற்கூடுகள் நம்மிடத்திலிருக்கின்றன. இவற்றுள் சிவஞானபோதமென்னும் விதைநெற்கூடு, குபேரனைத் தோழனாகக்கொண்டு, பொன்மலையைக்கரத்திலேந்தி, வெள்ளிமலையில் வீற்றிருந்து, கனகசபையில் நடனமிடும் நமது முதலாளி (தட்சிணாமூர்த்தி) கையிலேயே இருக்கிறது. அவர் இலேசானவரன்று; வித்தின்றியே விளைவு செய்பவர். ஆனாலும், அவர் தமது தாசர்க்கும்,

நேசர்க்கும், புத்திரர்க்கும், தம்முடன் வேற்றுமையின்றி உறவாடும் உறவோர்க்குமே எதையும் இல்லையென்னாது கொடுப்பவர். மற்றவர்களின் கண்ணுக்குமாத்திரமன்றி மனதுக்கும் அகப்படாமல் எங்கும் ஒளித்திருக்கும் நெஞ்சங் கறுத்தகள்ளர். ஆயினும், அவர் தோத்திரப் பிரியராதலால், அவரைக் கண்ணீருங் கம்பலையுமாகத் தோத்திரஞ்செய்தால் எங்கிருந்தேனும் உடனே வெளிப்பட்டு அருள் செய்வர். அவர் மனைவியாரோ, இன்னுங்கன்னியாகவேயிருந்தாலும், இடைவிடாமல் அளவற்றகுழந்தைகளைப் பெற்றுச் சலியாது வளர்ப்பவள் இருநாழிநெல்லைக்கொண்டு முப்பத்திரண்டறங்களையும் வளர்த்த அறப்பெருஞ்செல்வி. நமது முதலாளி இந்த அம்மாள் ஆட்டுகிறபடியே ஆடுகிறவர். அவருக்கு மனமிரங்காவிட்டாலும் இந்த அம்மாளைக்கொண்டு அவரை மனமிரங்கப்பண்ணலாம். அன்றியும், அவர் மூத்தபிள்ளை மெத்த நல்லவர். இவர் நமக்குக் கொடாவிட்டாலும் அவர் இருக்குமிடத்தைக் காட்டிவிடுவர். இதற்கு நமது நாரையூர் நம்பியண்ணவேசாட்சி. இவர்களெல்லோரும் நமக்குத்தெரியாமல் ஒளித்திருந்தாலும், இளையபிள்ளை (ஆளுடையபிள்ளையார்) இவர்களைத் தனது ஒருசிறு விரலாற் சுட்டி அங்க அடையாளங்களுடன் காட்டிவிடும். சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளாகிய மேகம் எங்கும் பிரசங்கமழை பொழிகின்றது. போஷகர்களாகிய துறவுகளும் ஏழைபுடியார்களாகிய கிணறுகளும் இருக்கின்றன. ஆதலால், நமது சகோதரச் சைவ உழவர்களே, நாம் அஞ்சுவதியாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை. நம்மிடத்திலிருந்த பழைய எழுத்தாணிக் கலப்பைகளால் இப்போது பயனில்லாவிட்டாலும், புதுமாதிரியான பேனக் கலப்பைகளும் அச்சுக்கலப்பைகளும் நமக்கு எங்குங்கிடைக்கும். இவைகளைக்கொண்டு நாம் எதற்குஞ் சலியாமற் பாடுபட்டு, சைவப்பயிர்செய்து, நினைக்குந்தோறும் காணுந்தோறும் கேட்குந்தோறும் எப்போதும் என்புருகப் பரமானந்தத் தேன் சொரியும் சிவபோகாமுதமுண்டு சுகித்து இறுமாந்து வாழலாம். வாருங்கள்! வாருங்கள்!! இன்புற்றிட நாம் எடுத்ததேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருங்கள்!!!

---

## பதி பசு பாசம்.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சிவபெருமானாரின் வடிவம் அருவெனவாவது உருவெனவாவது அருவுருவெனவாவது சொல்லப்படாதது. ஆயினும், அவர்



ஆன்மாக்களின்மீது வைத்தகாருணியத்தால் அருவெனவும் உருவெனவும் அருவுருவெனவும் சொல்லப்படும் மூவகை வடிவங்களையுங் கொண்டுளார். இவை வடமொழியில் நிஷ்களம் சகளம் சகளநிஷ்களம் என்னப்படும். இம் மூன்று வடிவங்களும் அவருக்கு எக்காலத்திலும் உண்டு. இவற்றுள் அருவம் என்பது அருள் ஞானம் என்பவைபோல் உருவமில்லாத வடிவம். உருவென்பது நிலம் நீர் என்பவற்றைப்போற் காணப்படுவது. அருவுருவம் என்பது அருவத்தன்மையையும் உருவத்தன்மையையும் ஏககாலத்திற் பொருந்தியிருப்பது. உருவப்பொருள்கள் அக்கினியிலிடப்பட்டால் அவைமுற்றிலும் அருவமாக மாறுதற்குமுன் பெறும் நிலையை அருவுருவ நிலைக்கு ஒருவாறு ஒப்பிடலாம். சிவபெருமான் இம் மூவகை வடிவங்களையுங் கொள்ளாவிட்டால் சிருட்டி முதலிய தொழில்கள் நடைபெறா. பிரபஞ்சம் காரியப்படாமல் அளவுபடாத ஆன்மாக்களெல்லாம் அறிவுஞ் செயலுமற்று ஆணவமலத்திலழுந்தி துயர்கூர்ந்திருக்கும். ஆதலினால், பரங்கருணைத்தடங்கடலாகிய நம்மிறைவர், அளவு படாத ஆன்மாக்களின் அளவுபடாத பக்குவங்களுக்கிணங்க, அளவு படாத கருணை வடிவங்களைக் கொண்டிருக்கிறார். ஆன்மாக்கள் பாசவசப்பட்டு மாயாமயமாகிய சரீரமெடுப்பதுபோல், சிவபெருமான் தம்மிச்சையால் அருளுருவங்களைக் கொள்ளுகிறார். அவர் கொள்ளும் வடிவங்கள் எண்ணிறந்தன வாயினும், அவற்றை ஒன்பது வகையாகச் சித்தாந்த ஞான நூல்கள் கூறும். அவை சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் என்பனவாம். இவற்றுள் சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் இந்நான்கும் நிர்க்குண சிவத்தின் அருவத்திருமேனிகளெனவும், சதாசிவன் அருவுருவத் திருமேனியெனவும், மகேசுரன், உருத்திரன், மால் அயன் இந்நான்கும் உருவத்திருமேனிகளெனவுஞ் சொல்லப்படும். இவற்றுள் அருவுருவத் திருமேனியாகிய சதாசிவ வடிவமே சிவலிங்கவடிவமாம்.

சிவபரம் பொருளின் பேரருள், பேரறிவு, பேராற்றல், பேரின்பம் முதலிய இறைமைக் குணங்களுக்குச் சத்தியென்று பெயர். நீரினின்று குளிர்ச்சியும் நெருப்பினின்று வெப்பமும் பிரிக்கப்படாதது போல், சிவத்தினின்றும் சத்தியும் சத்தியினின்றும் சிவமும் வேறுகாமல் இரண்டும் ஒரேபொருளாய், தாதான்மியமாயிருக்கும். சிவபரம்பொருள் சத்தியொடு கூடியிருத்தலினால் எத்தொழிலையும் செய்யவல்லதாயிருக்கிறது. இல்லாவிடில் சிவம் எத்தொழிலையுஞ்

செய்யாது. "சிவமெனும் பொருளுமாதி சத்தியொடு சேரினெத் தொழிலும்வல்லதாம், இவள் பிரிந்திடினியங்குதற்குமரிதரி தெனு மறை யிரைக்குமால்" என்றனர் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளும்.

சிவபரம் பொருள் தன்னுடைய இறைமைக் குணங்களாகிய பேரருளையும் பேராற்றலையும் பேரறிவையும் பிரபஞ்சம் காரியப்படுவது கருதி வெளிப்படுத்திய தன்மையைச் சிவத்தினின்றுஞ் சத்தி தோன்றியதாக ஞானநூல்கள் கூறுநிற்கும். சிவம் சத்தியுடன் கூடிப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தலால், சிவம் உயிர்களுக்கெல்லாம் தந்தையாகவும், சத்தி தாயாகவும் துணியப்படும். சிவம் ஆண் எனவாவது பெண் எனவாவது சொல்லப்படாத பொருளாயிருந்தும் ஆன்மாக்களின்மீது வைத்த காருணியத்தால் சிவமும் சத்தியும் ஆணும்பெண்ணுமாகிய திருமேனிகளைத்தாங்கி, படைத்தல் முதலிய தொழில்களைச்செய்யும். இதனால் இவர்களாற் படைக்கப்படும் உலகுயிர்களும் இவர்களைப்போலவே குணகுணிகளாகவும் ஆணும் பெண்ணுமாகவுமிருக்கின்றன. என்று சிவம் உண்டோ, அன்றே சத்தியும்உண்டு. சத்தியின்றிச்சிவமில்லை. சிவமின்றிச் சத்தியில்லை. அதுபோல் உலகில் என்று ஆண் உண்டோ அன்றே பெண்ணும் உண்டு. ஆணின்றிப் பெண்ணில்லை. பெண்ணின்றி யாணில்லை.

### திருவிளையாடற் புராணம் - திருமணப்படலம்.

பண்ணுமின் னிசையு நீருந் தண்மையும் பாலும் பாலி
னண்ணுமின் சுவையும் பூவு நாற்றமு மணியு மங்கேழ்
வண்ணமும் வேறு வேறு வடிவுகொண் டிருந்தா லொத்த
தண்ணலு முலக மீன்ற வம்மையு மிருந்த தம்மா.

சத்தி ஒன்றே உயிர்களின் பலவாறான பக்குவங்களுக்கிணங்கப் பலவாறான பேதங்களையுடையதாயிருக்கும். அச்சத்தியைத் தன் குணமாகக்கொண்ட சிவமும் அச்சத்தியையே தன் வடிவமாகவுங் கொண்டு பலவகையான பேதங்களைப் பெற்றுவிளங்கும். பளிங்கானது தன்னையடுத்த பொன்நிறம் நீலநிறம் முதலியவற்றைத் தான் பெற்றுத்தோன்றினாலும் தன் இயற்கை நிலைமை மாறாதிருப்பது போல், சத்தியின் பேதமெல்லாம் சிவபேதமாக விளங்கினும், சிவம் தன்னிலைமை மாறாமல் நிர்விகாரியாயிருக்கும். சத்தியின் பேதங்கள் எண்ணிறந்தனவாயினும், அவ்வ சிவபரம் பொருளின் சந்நிதியில் நடைபெறும் (சிருட்டி) படைத்தல், (திதி) அளித்தல், (சங்காரம்) அழித்தல், (திரோபவம்) மறைத்தல், (அநுக்கிரகம்) அருளல் என்னும் ஐந்தொழில்களை நோக்கி பராசத்தி, ஆதிசத்தி, இச்சா



சத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என்னும் ஐவகைச் சத்திகளாகத் தொகுத்துரைக்கப்படும். இவற்றுள் பராசத்தியே ஆதிசத்தி அல்லது திரோதசத்தியாகியும், இச்சாஞானக் கிரியாசத்திகளாயும், சிவபெருமானுக்குத் திருமேனியாயும், சுத்தமாயையும் அசுத்தமாயையுமாகிய விந்து மோகினி மான் என்னும் உபாதானங்களைக்கூடிநின்று காரியப்படுத்தி, சிவபெருமான் செய்யும் பஞ்சகிருத்தியங்களுக்கும் காரணமாகியுமிருக்கும். திரோத சத்தியானது ஆன்மாக்களைப் போகத்தில் அமிழ்த்தி கன்மநாசஞ்செய்து ஆணவமலத்தைப் பரிபாகப்படுத்தும். இச்சாசத்தியென்பது சர்வான்மாக்களையும் மோட்சத்திற் சேர்க்கவேண்டு மென்னும் பேரருளாகும். ஞானசத்தியென்பது ஆன்மாக்கள் செய்த இருவினைகளின்படி அவைகள் வினைப்பயன்களைப் புசித்துத் தொலைக்கச்செய்யும் பேரறிவாகும். கிரியாசத்தியாவது ஆன்மாக்களின் பொருட்டுப் படைத்தல் முதலிய தொழில்களைச்செய்யும் பேராற்றலாகும். சிவபெருமான் இச்சாஞானக்கிரியா சொரூபனாயிருத்தலினால் அவருக்கு இலயசிவன் என்றும் போகசிவன்என்றும் அதிகார சிவன் என்றும் திருநாமங்கள் உண்டாயின.

### சிவப்பிரகாசம்.

பரந்தபரா பரையாதி பான இச்சை
பாஞானங் கிரியைபரா போக ரூபந்
தருங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்க ளாங்க
விரிந்தவுபா தானங்கண் மேவி யொன்றாய்
விமலமா யைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தைகெட மணிமன்று ளாடல் காணு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.

### சிவஞான சித்தியார்.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் விளைவு காணே.

சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன் றிகழுமீச
னுவந்தரு ளுருத்திரன்றான் மாலய னென்றினொன்றாய்ப்
பவந்தரு மருவநாலிங் குருவநா லுபயமொன்றாய்
நவந்தரு பேதமேக நாதனே நடிப்பனன்றே.

## கடவுளுக்கும் ஒரு மனைவி உண்டா ?

சிலர், கடவுளைத் தாயும் தந்தையுமாக வழிபடுவாரைப் பார்த்து, "கடவுளுக்கும் ஒரு மனைவி உண்டா" என்று கேட்டுப் பரிகாசஞ் செய்கிறார்கள். இவர்கள் மேலே கூறிய சிவசத்திகளின் இலக்கணங்களை உணர்வார்களாயின், இவர்களுக்குச் சிவபெருமானும் அவரருட்சத்தியுங்கூடி உயிர்களுக்குத் தந்தையுந் தாயுமா யெழுந்தருளி உபகரித்துவரும் அருட்டிறம் விளங்கும். உலகத்தின் இருப்பையும் இலக்கணங்களையுங்கொண்டு கடவுளின் இருப்பையும் இலக்கணங்களையும் அறியவேண்டும். இதனை "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடுங் கோலமே" என்ற திருவாசகத்தானுணர்க. உலகம் சித்து, அசித்து என்னும் இருவகைப்படும் பிரபஞ்சமாகும். சித்துப்பொருள்கள் என்பன அறிவுடைப்பொருள்களாகிய ஆன்மாக்கள். அசித்துப்பொருள்கள் என்பன அறிவில் பொருள்களாகிய தனுகரணபுவனபோகங்கள். இவற்றுள், சித்துப்பொருள்களாகிய ஆன்மாக்கள் இயற்கையில் பூதங்களல்ல, இந்திரியங்களல்ல, கரணங்களல்ல, ஆணல்ல, பெண்ணுமல்ல. அறிவே ஆன்ம சொரூபமாகும். இவ்வாறிருந்தும், ஆன்மாக்கள் புல்லாகவும் பூடாகவும் மரமாகவும் பறவைகளாகவும் விலங்குகளாகவும் மனிதராகவும் ஆணாகவும் பெண்ணாகவும் இருக்கக்காண்கிறோம். இவ்வாறே, கடவுளும் ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத ஞானசொரூபராயினும், அவர் பல திருநாமங்களையும் பல திருமேனிகளையும் பெற்று ஆணாகவும் பெண்ணாகவுமிருக்கிறார் என்று உணர்தல்வேண்டும். ஆனால், ஆன்மாக்கள் பாசவசப்பட்டு, சுதந்திரமிழந்து, அறிவும் ஆற்றலும் மழுங்கி, மாயையைக்கொண்டு கடவுளால் தமக்குக்கொடுக்கப்படும் சரீரங்களைப்பெற்று ஆணும் பெண்ணுமாகப்பிறந்து உழல்கின்றன. கடவுளோ, ஆன்மாக்களைப்போலன்றி, மலரகிதராய் சுதந்திரமும் பேரறிவும் உடையவராய், ஆன்மாக்களுக்கு அருள்செய்யவேண்டி, தன் இச்சையின்படி, ஆன்மாக்களின் பக்குவங்களுக்கிணங்க, அவைகளைப்போலவே ஆணும் பெண்ணுமாகவும் அவைகளுக்கெல்லாம் தாயுந்தந்தையுமாகவும் இருந்து அருள்செய்கிறார். இதனை "குவளைக் கண்ணி கூறன் காண்க, அவளுந் தானு முடனே காண்க" எனத் திருவாசகமும் "தாயுந்தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய தலைவனார்" என்று தேவாரமும் முழக்கும். ஆன்மாக்களுக்கென வசிக்க ஓர் இடமில்லாதிருந்தும் அவைகளுக்கு வினைப்பயனை ஊட்டவேண்டி நம்மிறைவர் அவைகளின் வினைக்கீடாகப் பலவகைப்பட்ட



புவனங்களாகிய இடங்களைக்கொடுப்பதுபோல், நம்மிறைவரும் ஆன்மாக்கள் உச்சீவிப்பதுகருதி, காருணியத்தால் சிவலோகம் ஸ்ரீகைலாயம் முதலிய இடங்களையும், குருலிங்க சங்கமங்களாகிய தானங்களையும் தம்மிருப்பிடமாகக் கொண்டிருக்கிறார். சிலர் " தாயுந் தந்தையுமாயிருப்பவர் கடவுள் ஒருவரேயாயிருக்க, அவரைத் தந்தையாக மாத்திரமேனும் தாயாக மாத்திரமேனும் வழிபட்டாற் போதாதோ" என்பார்கள். தாயின்றித்தந்தையும் தந்தையின்றித்தாயும் இல்லையாகையாலும், கடவுள் தாயுந்தந்தையுமா யெழுந்தருளி உயிர்களுக்கு அருள்செய்வது சுருதி யுத்தி யனுபவங்களாற் பெறப்படுதலாலும் அவரைத் தாயுந்தந்தையுமாக வழிபடுவதே சிறந்தவழிபாடாகும்.

**திருவாசகம்.**

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

(இன்னும்வரும்.)

---

## கற்பு.

பெண்கள் கணவன் கற்பித்தவண்ணம் நடத்தல் கற்பு என்னப்படும். இதனை ஔவையார் " கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என விளங்கவுரைத்தனர்.

திலதவதியார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இயற்பகை நாயனார், சிறுத்தொண்ட நாயனார், இளையான் குடிமாற நாயனார், அப்பூதியடிகளாயனார் முதலிய நாயன்மார்களின் பத்தினிமார்கள், அருந்ததி, வண்டோதரி, அகலிகை, திரௌபதி, மேனை, சுநீதி, சாவித்திரி, அநசூயை, சந்திரமதி, தமயந்தி, நளாயினி, வாசுகி முதலிய பதிவிரதாசிகாமணிகளின் சரித்திரங்களை வாசிப்பவர்களுக்குக் கற்பிலக்கணங்கள் எளிதாய் விளங்கும்.

மனிதர்கள் தங்கள் மனம் வாக்குக் காயங்களுக் கெட்டாத கடவுளை வழிபட்டுய்வதற்கு நூல்களில் பற்பல மார்க்கங்கள் கூறப்பட்டன. அம்மார்க்கங்களெல்லாம் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் இந்நான்கினுள் அடங்கும். இவற்றுள் சரியை கிரியைகள் (உருவமில்லாத) நிஷ்களப் பொருளாகிய கடவுளை (உருவமாகி) சகளமாக வழிபடுதலாம். இச்சகளவழிபாடு குருலிங்க சங்கம வழிபாடு

என்னப்படும். இவற்றுள் குருவழிபாடு ஆசாரியனை மனிதனாக மதியாமல் சிவமாக மதித்து வழிபடுதலாம். லிங்கவழிபாடு சிவலிங்க முதலிய சொரூபங்களைக் கல் முதலியனவாக எண்ணாமல் சிவமாக எண்ணி வழிபடுதலாம். சங்கமவழிபாடு சிவவேடந் தரித்தவர்களைச் சிவமாகக்கருதி வழிபடுதலாம்.

சிவபெருமான் தம்மை ஞானத்தால் இரண்டறக்கூடி யனுபவிக்கமாட்டாத மனிதர்களுக்குக் குருலிங்க சங்கமங்களாயிருந்து, அவர்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அனுக்கிரகம் செய்வர் என்பது வேதாகமங்களின் துணிபும் உலகானுபவமுமாம். அவ்வாறே, ஞானத்தாற் கடவுளையடையப் பெறாத பெண்கள், தங்கள் கணவனை மனிதனாக எண்ணாமல் தெய்வமாக எண்ணிச் செய்யும் பூசையைக் கடவுள் ஏற்று அவர்களுக்கு அருள் செய்வர் என்பது வைதிக நூல்களின் துணிபும் உலகானுபவமுமாம். இவ்வுண்மையை யறியாமலே பலர், இந்துக்கள் பெண்களை அடிமைகளைப்போல் நடத்துகிறார்கள் என்றும், இவர்கள் ஆடவர்களின் சுயநலம் பாராட்டி, பெண்கள் புருஷனைத் தெய்வமாக வழிபடச் செய்வது மதியீனம் என்றும், புருஷரைப்போலவே பெண்களும் சுயாதீனம் பெற்று வெளிவந்துலவி விவகரியாமையால் தேசாபிவிருத்தி குன்றிவிடுகிற தென்றும் எண்ணுகிறார்கள். மனிதர்கள் ஆசாரியனையும் விக்கிரகங்களையும் சிவனடியார்களையும் தெய்வமாகவழிபடுதல், ஆசாரியர் முதலியவர்களின் பிரயோஜனங் கருதியன்று. வழிபடுவாருடைய பிரயோஜனத்தைக் கருதியேயாம். அதுபோல் பெண்கள் கணவனைத் தெய்வமாக வழிபடுவது கணவன் நலத்தைக் கருதியன்று. தாங்கள் நற்கதியடையக் கருதிச் செய்யும் கடவுள் வழிபாடாகும்.

ஆசாரியனும் சீடனும் மனிதரேயாயினும், தீக்கையென்னுங் கிரியையால் ஒருவன் ஆசாரியனாய் மற்றொருவனால் வழிபடற் குரியனாகிறான். விக்கிரகங்கள் சிலைகளேயாயினும் பிரதிட்டையென்னுங் கிரியையால் கடவுளாக வழிபடற் பாலனவாகின்றன. அடியார்கள் மனிதர்களேயாயினும் வேடம் அன்பு ஒழுக்கம் முதலிய வற்றால் கடவுளாகவே வழிபடற்குரியராகின்றனர். அவ்வாறே, கணவனும் மனிதனேயாயினும் விவாகச் சடங்குகளாகிய கிரியையால் அவன் மனைவியால் தெய்வமாக வழிபடற்குரியனாகின்றான். மெய்யன்பர்களின் அன்பின் விசேடத்தால் மரக்கால் கட்டுத்தறி முதலியவைகளும் சிவலிங்கமாயின. கள்ளவேடம் பூண்டவர்களும் மெய்யடியாரானார்கள். அவ்வாறே, பதிவிரதைகளின் கற்பின் மேம்பாட்டி



னால் அவர்கள் கணவரும் தெய்வத்தன்மைபெற்று அவர்களால் வழிபடற்குரியராவர்.

மனிதர்கள் எல்லோருமே குருலிங்க சங்கமவழிபாடு செய்தாலும், அறுபத்து மூன்று நாயன்மார் முதலியவர்களைப்போல் சிறந்த பத்திசெய்வோர் மிகச்சிலரே. அதுபோல், கணவனிடத்தில் மேலே கூறிய பதிவிரதா சிரோமணிகளைப்போல் சிறந்த பத்தி செய்வோரும் மிகச் சிலரேயாவர்.

பெண்கள் புருஷனிடத்திற் செய்யும் அன்பு, தலையன்பு எனவும், இடையன்பு எனவும், கடையன்பு எனவும் மூவகைப்படும். தலையன்பாவது இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் எதிர்பாராமல் வெறும் அன்பு காரணமாகச் செய்யும் அன்பாகும். (இம்மைப் பயன் என்பது இப்பிறவியில் அனுபவிக்கும் இன்பமும், மறுமைப் பயனென்பது மறுபிறப்பில் அனுபவிக்கும் இன்பமுமாம்.) இடையன்பாவது மறுமைப் பயனைக் கருதிச் செய்யும் அன்பாகும். கடையன்பாவது கணவனால் இப்பிறவியிலடையும் சுகத்தைக் கருதிச் செய்யும் அன்பாகும்.

தலையன்புடையவர்களுக்குக் கணவன் இறந்தான் என்று கேட்ட மாத்திரத்திலேயே உயிர் நீங்கிவிடும். இடையன்புடையவர்கள் கணவன் இறந்தால் தாங்களும் கணவனுடன் உடன் கட்டையேறுதல் முதலியவற்றால் தங்கள் உயிரை மாய்ப்பர். (இவ்வாறு செய்தல் இக்காலத்தில் இராஜநீதிக்கு விரோதமாகும்.) கடையன்புடையவர்கள் கணவன் இறந்தால் தங்களுக்கு அழகு அனாவசியமென்று மொட்டையடித்துக் கொள்வார்கள். ஆபரணமணியார்; வெற்றிலைப்பாக்கு உண்ணார்; வெள்ளைப் புடைவையன்றி வேறு ஆடைகளைத் தரிக்கார் ; ஒரேபொழுது உண்பார்கள்; பாயில் படுக்காமல் தரையிற்படுப்பார்கள் ; உபவாசங்களால் ஐம்புலன்களை யடக்குவார்கள்; செபம் தியானம் பூசை திருக்கோயிலிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூக்கள் கொய்துதிருமாலை தொடுத்தல் முதலிய பணிகளைச் செய்வார்கள்.

பெண்கள், விவாகத்துக்குமுன் தந்தையினாலும், விவாகத்திற்குப் பிறகு கணவனாலும், கணவனுக்குப்பின் புத்திரர்களாலும் காக்கப்படவேண்டும் எனவும், அவர்களுக்கு எக்காலத்திலும் சுதந்திரமில்லையெனவும் நீதிநூல்கள் கூறுகின்றன. பெண்களுக்குப் புறக்காவலினும் அவர்கள் மனக்காவலேசிறந்ததாம். இதனை "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்—நிறைகாக்குங் காப்பே தலை" என்னுந்

திருக்குறளாலறிக. பெண்களுக்கு மனக்காவலிருந்தாலும் அவர்களுக்குப் புறக்காவலும் அவசியமாதலால் அவர்கள் எக்காலத்திலும் தனித்திருக்கலாகாதென நீதிநூல்கள் கூறும். ஸ்ரீராமர் கானகத்தில் மானைப்பிடிக்கச் சென்றபோது இலக்குமணரைச் சீதாதேவிக்குக் காவலாகவைத்துச் சென்றனர். இலக்குமணரும் சீதாதேவியை விட்டு நீங்கினமையால் அத்தேவியாரை இராவணன் கொண்டுபோக நேர்ந்தது. இதனால் பெண்களுக்குப் புறக்காவலும் அவசியமாமென்பது விளங்கும். இதுபற்றியே ஒளவையார் "காவ றானே பாவையர்க்கழகு" என்று பொதுப்படக் கூறினார்.

"அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும் - வன்னவுடல்
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்"

என்னும் இச்செய்யுளின்படி, கற்புடையமனைவி தன்கணவனைத் தன்குழந்தையைப்போல் நேசித்துப் பாதுகாக்கிறாள். அவன் அறிவாலும், செல்வத்தாலும், உருவத்தாலும் வேறு மற்றெதனாலும் மிகவும் இழிந்தவனாயிருப்பினும் அவனை யாவரினும் உயர்வாகமதித்து அவனுக்கு அடிமைத்தொழில் செய்கிறாள். பெருந்தூக்கம் பேருண்டி முதலிய மூதேவி குணங்களின்றி, உண்டிசுருங்குதல், கணவனுக்குப் பின்னுண்ணல், பின்னுறங்கி முன்னெழுதல், மஞ்சளையும் மங்கலநாணையும் பிரியாமை, சுத்தமாயிருத்தல், இன்சொற்கூறல், முகமலர்ந்திருத்தல், ஈகை, கருணை, விருந்தோம்பல், பெரியோரைப்பேணல்முதலிய நற்குணங்களால் இலக்குமியையொத்து இல்லறத்தை யழகுபெறச் செய்கிறாள். தன்கணவன் தன்னை எவ்வளவு கோபித்துத் தண்டித்தாலும் முகமலர்ந்து பொறுமையை வகிக்கிறாள். தனக்கென இன்பம் வேண்டாமலும் கணவனுடன் மாறுபடாமலும் காமநூலின்படி கலந்து அவனுக்குக் கலவியின்பத்தைக் கொடுக்கிறாள். கணவனுக்குச் சமயோசிதமான யுத்திகள்கூறி அவனுக்குத் தீங்குவாராவண்ணம் காத்து இல்லறத்தை நடத்துவிக்கிறாள். அன்றியும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் தனக்கு அணிகலமாகக்கொண்டு, தன்கணவனன்றி வேறொருவன் தன்னைக்காண நாணுகிறாள். தான் அறிவினால் எவ்வளவு சிறந்திருப்பினும் அதனால் கர்வமடையாமல், ஆசாரியன்முன் சீடன் அடங்கி நிற்றல்போல், கணவன்முன் அறியாதவள்போல்



அடங்கி நிற்கிறாள். தன்கணவனன்றி வேறொருவன் சமீபத்தில் வரின் அச்சமும் அருவருப்பும் அடைகிறாள்.

இவ்விதமான நல்லொழுக்கங்களையுடைய கற்புடை மகளிரோடு கூடி வாழப்பெற்றால் இல்லறமே நல்லறமாகும். இவ்வித மங்கையர் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படுவர். இவர்கள் "பெய்யெனப் பெய்யுமழை." இத்தகைய கற்பிலக்கணங்கள் பரதகண்டத்தில் மாத்திரம் இருப்பதனாலும், பரதகண்டம் புண்ணியபூமி யெனப்படும்.

கற்புடைமகளிர் கணவனைத்தெய்வமாக வழிபடுவதும், அவனைத் தாய்போல்நேசிப்பதும் அவன் மீதுவைத்த அன்பு காரணத்தாலன்றி பிறிதொரு காரணத்தாலன்று. ஆதலால், கணவன், தன்மனைவி தன்னைத் தெய்வமாக வழிபடுவதனால் தான் தன்னை அவளுக்குதெய்வமாக எண்ணிச் செருக்கலாகாது. அவள் அவனுக்கு அடிமையைப்போல் ஊழியஞ்செய்தலால், அவன் அவளைத் தன்னடிமையைப்போல் எண்ணிநடத்தலாகாது. அவன் அவளை யெவ்வளவு வருத்தினாலும் அவள் அடங்கியும் அவனைவிட்டு நீங்காமலும் இருப்பதனால் அவளைத் தன்மனம் போனபடி நடத்தி மனம் நோவப் பண்ணலாகாது. அவள் அவனுக் குண்டாகுங் குறைவுகளைத் தனக்கு வந்தனவாக எண்ணி வருந்துதலால், அவன் அவளுக்கு நேருங்குறைகளைத் தனக்கு நேர்ந்தனவாக எண்ணி நடத்தல் வேண்டும். அவள் அவனைத் தாய்போல் நேசிப்பதனால், அவன் அவளைத்தந்தைபோல் நேசிக்கவேண்டும். இவ்வாறு கணவனும் மனைவியும் பாலும் நீரும்போல் கலந்து ஒருவரையொருவர் நேசித்து வாழும் வாழ்க்கையே வாழ்க்கையாம். இவ்வாறு வாழ்வதனாலுண்டாகும் உலக இன்பமே உலக இன்பமாம். இவ்வித வாழ்க்கையால் இம்மையில் மாத்திரமன்றி மறுமையிலும் இன்பமுண்டாகும். இவ்வாறு இருவரும் ஒருவரையொருவர் நேசித்து வாழ்வதைவிட்டு, தன்னலம் மாத்திரம் கருதி, கணவனுக்கு இடையூறு செய்யும் மாதர்களும், மனைவிக்கு இடையூறு செய்யும் ஆடவர்களும் இம்மைப்பயனோடு மறுமைப்பயனையும் இழந்து நரகில் வீழ்ந்து வருந்துவர்.

# ஞானவிசாரணை

12-வது பக்கத் தொடர்ச்சி.

### திருமந்திரம்.

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ண லதுகண் டருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவுகின் றாரே.

புண்ணியம், பசு புண்ணியம் எனவும் பதி புண்ணியம் எனவும் இருவகைப்படும். பதி புண்ணியமாவது சரியை கிரியை முதலியனவாம். பசு புண்ணியமாவது உயிர்களுக் கிரங்கி அன்னமிடுதல், மருந்து கொடுத்தல், சத்திரம் வைத்தல், குளம் வெட்டுதல் முதலிய தருமங்களாம். பசு புண்ணியத்தால் சொர்க்காதி போகங்கள் கிடைக்கும். பதி புண்ணியத்தால் சாலோக சாமீப முதலிய பதவிகள் கிடைக்கும். ஆதலால், பதி புண்ணியமாகிய சரியை கிரியைகளை யநுட்டித்தால் சாலோக சாமீப பதவிகளையடைந்து, அப்பதவிகளிலிருந்தே சாரூப்பிய பதவியையும், கடைசியாக சாயுச்சியமாகிய முத்தியையும் அடையலாம். சரியை கிரியைகளைக் கிரமமாக அனுட்டியாமல் ஞானமடைய விரும்பி வெறும் ஞான நூலாராய்ச்சியிலேயே காலங்கழிப்போர், பாடுபட்டுப் பணத்தைச் சம்பாதித்துச் சீவனஞ் செய்யாமல் பேராசைகொண்டு இரசவாதஞ் செய்யவிரும்பித் தம் கையிலிருந்த திரவியத்தையுமிழந்து வருந்துவார்போல், யாதொரு பயனையுமடையாமல் மேலுமேலும் பிறப்பிறப்புகளிற் பட்டுழல்வர்.

கடவுள் ஆன்மாக்களுக்கு ஞானத்தை வருவித்து, தமது திருவடி நீழலாகிய சிவானந்தப்பேற்றைத் தருதலையே தமது தொழிலாகக்கொண்டிருக்கிறார். இத்தொழிலே அவரது பஞ்சகிருத்தியமாம். எவ்வாறெனில்,—

பாராதி பூதநீயல்லை - உன்னிப்
    பாரிந்திரியங் கரண நீயல்லை
யாராயுணர்வு நீயென்றான் - ஐய
    னன்பாயுரைத்தசொல் லானந்தந்தோழி
சங்கர சங்கர சம்பு - சிவ

* * *

எனத் தாயுமானசுவாமிகள் திருவாய்மலர்ந் தருளியவாறு, ஆன்மாக்களின் உருவம் அறிவு என்னப்படும். ஆனால், ஆன்மாக்கள் அனாதியாகவே ஆணவமலத்தால் மறைப்புண்டு தம் அறிவும்



செயலும் குன்றி வருந்தா நிற்கும். இதனையுணர்ந்த பெருங்கருணையும் பேராற்றலும் பேரறிவும் உடைய கடவுள் அவற்றை ஆணவ மலத்தினின்றும் விடுவித்துத் தமது திருவடியின்பத்தைக் கொடுத்தருளவேண்டி அவற்றின் அறிவைச் சிறிது சிறிதாக விளக்கத் தொடங்கி, ஆரம்பத்தில் புல் பூடு மரம் முதலாகிய பிறவிகளைக் கொடுத்து பரிசம் என்னும் ஒரு அறிவு விளங்கச்செய்கிறார். பரிசவுணர்ச்சி நிரம்பியதும் இப்பி சங்கு முதலிய பிறவிகளையெடுக்கச் செய்து பரிச உணர்ச்சியோடு இரதத்தையும் அறியச்செய்கிறார். இவ்வீரறிவும் நிரம்பியபின் கறையான் எறும்பு முதலிய பிறவிகளைக் கொடுத்து பரிசம் இரதம் இவற்றோடு கந்தத்தையும் அறியச்செய்கிறார். கந்தவுணர்ச்சி நிரம்புதலும், தும்பி வண்டு முதலிய பிறவிகளைக்கொடுத்து உருவத்தையும் அறியச்செய்கிறார். அதன்பின் பறவைகளாகவும் விலங்குகளாகவும் பிறக்கச்செய்து பரிசம், இரதம், கந்தம், உருவம் ஆகிய இந்நான்கினோடு சத்தத்தையும் அறிவிக்கிறார். இவ்வைவகை யறிவும் நிரம்பியபின் மனிதப்பிறவியைக் கொடுத்து இவ்வைந்தினோடு சித்தத்தாலறியும் அறிவை விளக்கி நல்வினை தீவினைகளைப் பகுத்தறியச் செய்கிறார்.

### திருவாசகம்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்.

மானிட சரீரமெடுத்த பின்னும் தீவினை செய்பவர்களை மீண்டு மீண்டும் கீழான பிறவிகளெடுக்கச் செய்தும் நரகங்களிற் செலுத்தியும் அவை செய்த தீவினைகளை அனுபவிக்கச் செய்து பரிசுத்தப்படுத்தி மறுபடியும் மானிடப் பிறவி கொடுக்கிறார். மானிடப் பிறவியில் நல்வினை செய்தவர்களுக்குத் தன்னிடம் அன்புண்டாகும்படிச்செய்து பலசன்மங்களில் சரியை கிரியை யோகம் என்னும் இம்மார்க்கங்களில் விட்டு அறிவை மேலும் மேலும் விளக்கிச் சிவஞானம் வருவித்து ஆணவமலத்தைப் பரிபாகப்படுத்தி, தமது திருவடியின்பமாகிய சாயுச்சிய முத்தியைத் தந்தருளுகின்றார்.

இவ்வாறு ஆன்மாக்களுக்குச் சரீரங்களைக் கொடுத்தல் சிருட்டியெனவும், சரீரத்துடன் கூடி இன்ப துன்பங்களை யனுபவிக்கச் செய்

தல் திதியெனவும், இறப்பைக் கொடுத்து இளைப்பாறச் செய்தல் சங்காரம் எனவும், ஆன்மாக்களுக்கு வினைப்போகங்களை மறைத்து நின்றூட்டுதல் திரோபவம் எனவும், ஞானத்தை விளக்கித் திருவடியின்பத்தைக் கொடுத்தல் அனுக்கிரகம் எனவும், இவ்வைந்து தொழிலுமே சிவபிரானாரது பஞ்சகிருத்தியங்களெனவும் சொல்லப்படும்.

ஆதலால், மனிதர்களுக்கு ஞானத்தை வருவித்தலே சிவபரம்பொருளின் தொழிலாயிருத்தலினால் மனிதர்கள் செய்யவேண்டுவனவெல்லாம் அவர் செய்யும் கைம்மாறில்லாத பேருபகாரத்தை மறவாமல் அவரை அகங்குழைந்து மெய்யரும்பி வணங்கி அவர் பணியில் நிற்றலும், அவருக்கு விருப்பமான நல்வினைகளைச் செய்தலும், அவர் வெறுக்கும் தீவினைகளைச் செய்யா தொழிதலுமேயாம்.

### தேவாரம்.

தன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

சிலர் தாங்கள் முற்போந்த ஜனனங்களில் சரியை கிரியை யோகம் என்னும் மார்க்கங்களில் இருந்து அவை சித்திக்கப் பெற்றதனால் இச்சன்மத்தில் ஞான நூல்களையாராயும் புண்ணியம் வந்து விட்டதெனவும், இப்புண்ணிய வசத்தால் ஆலயவழிபாடாதிகள் தங்களுக்கு அனாவசியமாகக் காணப்படுகின்றன வெனவும் நினைத்துக் கொள்ளுகிறார்கள். ஐயோ, பாவம்! இது மிகவும் விபரீத உணர்ச்சியேயாம். ஞானிகளின் இருதயத்தில் சிவசூரியன் இடைவிடாது பிரகாசித்துக் கொண்டிருத்தலினால் அவர்கள் அகமுகமாயிருக்குங் காலமெல்லாம் இரவு பகல் தோன்றாமல் இருக்கும். அதனால் அவர்களுக்குப் புறப்பூசைகள் அனாவசியம். நித்திரைசெய்வோன் கையிலிருந்த பொருள் அவனுக்குத் தெரியாமலே அவன் கையினின்றும் நழுவிப்போவதுபோல் ஞானிகளுக்குப் புறப்பூசையுடன் உலக விவகாரங்களும் தாமே நீங்கி விடும். ஞானிகளும் பகிர்முகப்படும்போது ஆலயவழிபாடு முதலிய புறப்பூசைகளை இடைவிடாது செய்வர். இது நமது சமயாசாரியர் முதலான மகா ஞானிகளின் சரித்திரங்களால் இனிது விளங்கும்.

### பட்டணத்துச் சுவாமிகள்.

காணீர் கதியொன்றுங் கல்லீ ரெழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீ ரவன்புக ழாசைப்பட்டுப்



பூணீ ருருத்திர சாதன நீறெங்கும் பூசுகிலீர்
வீணீ ரெளிதோ மருதப் பிரான்கழல் மேவுதற்கே.

### திருவாசகம்.

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

ஞானிகளுக்கு ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் நால்வகை வழிபாடுகளுமுரியன. யோகிகளுக்கு யோகம் கிரியை சரியை என்னும் மூன்றுவித வழிபாடுகள் உரியன. கிரியாவான்களுக்குக் கிரியையும் சரியையும் உரியன. சரியாவான்களுக்குச் சரியையே உரியது. ஆதலினால் உண்மை ஞானிகள் எக்காலத்தும் சரியை கிரியைகளைக் கைவிடார்.

### சிவஞான சித்தியார்.

ஞானயோ கக்கிரியை சரியை நாலு
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரிய
ஊனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்
யோகிகிரி யாவான்றா னெண்கிரியை யாதி
யானவிரண் டினுக்குரியன் சரியையினி னின்றோ
னாச்சரியைக் கேயுரிய னாதலினா லியார்க்கு
மீனமிலா ஞானகுருவே குருவு மிவனே
யீசனிவன் றானென்று மிறைஞ்சி யேத்தே.

ஆதலால், சகோதரர்களே, நமது சமயகுரவர் சந்தான குரவர் முதலியபெரியோர்கள் அநுட்டித்த வழிகளைக் கைப்பற்றுங்கள். கற்பனை கடந்த நம்பெருமான் நாம் உய்யும்வண்ணம் கருணையே உருவமாகி, சகளீகரித் தெழுந்தருளியிருக்குந் திருக்கோயில்களையடைந்து திருவலகிடுங்கள், திருமெழுக்குச் சாத்துங்கள்; திருநந்தனவனம் வைத்துப் பத்திரபுஷ்பமெடுத்துத் திருமாலைகட்டுங்கள்; சுகந்ததூபமிடுங்கள்; திருவிளக்கேற்றுங்கள்; தேவாரமுதலிய மறைகளை மனங்கசித்துருக, கண்ணீர்வார, உரோமஞ் சிலிர்ப்ப, பண்ணோடு பாடி, தோத்திரஞ்செய்யுங்கள்; கைகளைக்கொட்டித் தோத்திரங்களைப்பாடி ஆனந்தக் கூத்தாடுங்கள்; விதிப்படி சிவலிங்கார்ச்சனை செய்யுங்கள். சிவலிங்கமுதலிய திருமேனிகளையும், சிவனடியார்களையும் சிவனாகவே வழிபடுங்கள்.

(இன்னும் வரும்.)

## சைவசித்தாந்த மகாசமாஜம்.

இச்சமாஜம் தோன்றி ஒன்பது வருடங்கள் கழிந்தன. சைவ சமய பரிபாலனத்திற்கென யாவருக்கும் பொதுவானதொரு மகா சபையில்லாமையை யெண்ணி நெடுங்காலமாக வருந்திநின்ற சைவாபிமானிகள் பலர் இச்சமாஜம் தோன்றியபோது இதனால் சைவஉலகத்திற்குப் பல நன்மைகள் உண்டாகுமென எதிர்பார்த்துச் சந்தோஷித்தார்கள். பலர் இதின் அங்கத்தினரானார்கள். பலர் இச்சமாஜத்தைத் தங்கள் ஊர்களுக்கு வருவித்துப் பெருஞ்செலவிட்டுக் கூட்டங்கள் கூட்டுவித்துப் பல உதவிகளைச் செய்வாராயினர். சைவசமயவொழுக்கங்கள் மிகவுங் குன்றிக் கிடக்கும் இக்காலத்திலும் பலர் முன்வந்து இச்சமாஜத்தை ஆதரிப்பது மிகவும் கொண்டாடத்தக்கதாம். பொது ஜனங்கள் செய்யும் உதவிகளுக்கேற்றவாறு இச்சமாஜத்தின் காரியதரிசி முதலிய முக்கிய காரியஸ்தர்கள் தங்கள்கடமைகளைச் செய்துவருவரேல் இச்சமாஜத்திற்குப் பலரும் மேலுமேலும் உதவி செய்யப் பின்னிடார்கள். ஆனால், சென்ற 1914ஆம் சமாஜ ரிபோர்ட்டை வாசித்தால் இவர்கள் சென்ற வருடத்தில் தங்கள் கடமைகளைத் திருப்தியாய்ச் செய்யவில்லையென்று புலப்படுகிறது.

இந்த ரிப்போர்ட்டு பார்வைக்கு 10-பாரங்கொண்ட பெரிய புத்தகமாக இருப்பினும், நிர்வாக சபையார் எந்தக் காரியத்தையும் சரியாய்ச் செய்யவில்லையென்பதை விளக்குகின்றது. இதை யச்சிட்டதற்கு ஏறக்குறைய 120 ரூபா செலவாயிருக்கலாம். இதைச் சுருக்கி இரண்டொரு பாரத்தில் அச்சிட்டிருந்தால் பெருந்தொகை மீதியாயிருக்கும். இதின் முற்பகுதியாகிய இரண்டு பாரங்களில் நிர்வாக சபையார் ஏதேதோ செய்ததாகக் காட்டப்பட்டது. பிற்பாகமாகிய எட்டு பாரங்களில் ஏறக்குறைய 1600 அங்கத்தினரின் பெயர்களும் விலாசங்களும் காட்டப்பட்டன. இவர்களுள் 514 பேர் சந்தா கொடாமல் சமாஜத்தார் வி. பி. தபாலில் அனுப்பிய பத்திரிகைகளைத் திருப்பிவிட்டவர்கள். இவர்களுள்பலர் சாதாரண தபாலில் அனுப்பிய பத்திரிகைகளைத் தம்மிடம் வைத்துக்கொண்டு வி. பி. தபாலில் அனுப்பிய பத்திரிகைகளை வாங்காமல் திருப்பிவிட்டார்கள். இதனால் சமாஜத்தார் மாதமாதம் வெளியிட்ட 1500 பிரதிகளுள் ஏறக்குறைய 500 பிரதிகள் பயனிலவாய்ப் பாழாயின. இவ்வாறு இவர்களால் சமாஜத்திற்கு நேரிட்ட நஷ்டமே பெரிதாயிருக்க, போதாக்குறைக்கு, குதிரை செத்തதுடன் குழிதோண்டவும் பணஞ்செலவிட்டது போல், இத்தனைபேர்களின் விலாசமுதலியவற்றையும் ரிப்போர்ட்டில் வெளியிட்டமை அனாவசியமும் வீண்பணச் செலவும் பிரயாசையுமாகும். இவர்கள் இதனை அச்சிட்ட வரையிலாவது பிழையின்றி அச்சிட்டதாகக் காணப்படவில்லை. ஸ்ரீமான் - S. இரத்தினவேல் செட்டியாரவர்கள் சமாஜத்தின் உப அக்கிராசனராயிருந்தபோது, பெருஞ்செலவிட்டு சமாஜத்தைச் சென்னை டவுன் ஹாலில்



கூட்டியுபகரித்த வள்ளற்றன்மையைப் பலரும் அறிவார்கள். இவர் பெயரை "சமாஜத்தால் வெளியிடும் பத்திரிகையாகிய சித்தாந்தத்தினை சந்தாவைக்கொடுத்துப் பெறாது கைவிட்டவர்கள்" பெயர்களுள் முதற்பெயராகக் காட்டியிருக்கிறார்கள். ஒரு சந்தாவுங் கொடாதவர் பெயர் ஆயுள் சாமாசிகர் பெயர்களினிடையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. திவான்பஹதூர் ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் T. சதாசிவ ஐயரவர்கள் ஆயுள் சாமாசிகரென முன் இரண்டு ரிபோர்ட்டுகளில் வெளியாயிருக்க இவர்பெயர் இதில்சேர்க்கப்படவில்லை. இதில் இவ்விதமான பிழைகள் இன்னும் எவ்வளவிருக்குமோ!

இனி ரிப்போர்ட்டின் முற்பகுதியைச் சிறிது ஆராய்வோம். இப்பகுதியில் "அங்கத்தினர்" என்னும்தலைப்பின் கீழ் "இம்மகாசமாஜத்தில் நவம்பர்மீ கடைசிவரையில் சேர்ந்துள்ள அங்கத்தினர் தொகை 1360 ஆகும். ஆனால் சமாஜத்தால் வெளியிடும்பத்திரிகையாகிய "சித்தாந்தத்தினை" சந்தாவைக்கொடுத்துப் பெறாது கைவிட்டவர்கள்தொகை 514 ஆகும். கடந்தவருடத்தில் தம் சந்தாவை செலுத்தி அங்கத்தவராய் நின்றதொகை 818 ஆகும். இவ்வருடம் 542 பெயர்கள் சமாஜத்துச்சேர்ந்துள்ளது மிகுதியும் நற்குறியேயாகும்" என்று வெளியிடப்பட்டுள்ளது. இதனை இன்னுந் தெளிவாய் விளக்கினால்,

கடந்த வருடமுடிவில் இருந்தவர்கள் 818 ; இவ்வருடம் சேர்ந்தவர்கள் 542 ; மொத்தம் 1360 ; இவ்வருடம் நீங்கினவர்கள் 514 ; இவ்வருட முடிவில் நின்றவர்கள் 846.

என்று விளக்கப்பட்டு சென்ற வருடத்தைக் காட்டிலும் இவ்வருடத்தில் அதிகமாகச் சேர்ந்துள்ளவர்கள் (846—818) 28 பேர்களே என்று தெரியவரும்.

அன்றியும், 1913ஆம் ரிப்போர்ட்டின்படி அவ்வருடத்தில் சேர்ந்தவர்கள் 592 பேர். நீங்கினவர்கள் 330 பேர். 1914ஆம் ரிப்போர்ட்டின்படி இவ்வருடத்திற் சேர்ந்தவர்கள் 542பேர். நீங்கினவர்கள் 514 பேர். இதனால் இதற்குமுன் வருடத்தைக்காட்டிலும் இவ்வருடத்தில் சேர்ந்தவர்கள் கொஞ்சமெனவும் நீங்கினவர்கள் அதிகமெனவும் விளங்கும். 1913 வருடத்தில் நீங்கினவர்கள் 330 பேரேயாயிருக்க, 1914 வருடத்தில் நீங்கினவர்கள் தொகை 514 என அதிகரித்துவிட்டதை தீக்குறி என்று வருந்தாமல் "மிகுதியும் நற்குறியேயாகும்" என்று மிகுதிச் சொல்லோடு உம்மையையும் ஏகாரத்தையுங் கூட்டிச் சந்தோஷித்துக் கூறற்கிடமில்லை.

"சித்தாந்தம்" என்னுந்தலைப்பின்கீழ் "இம்மகா சமாஜத்தால் நடத்தும் வேலைகளில் மிகச்சிறந்தது "சித்தாந்தம் என்னும் பத்திரிகையைப் பன்னிரண்டு மாதங்களுக்கும் வெளிப்படுத்தி அங்கத்தவர்க்கு அனுப்பமுயற்சிப்பதே யாகும்" என்று வெளியிடப்பட்டுள்ளது. இதற்குமுன் வருடத்து ரிப்போர்ட்டிலும் "இம்மகாசமாஜத்தார் செய்துவரும் வேலைகளில் மிகமுக்கியமானது சித்தாந்தம் என்

னும் பத்திரிகையைப் பன்னிரண்டுமாதங்களிலும் வெளிப்படுத்தி அங்கத்தவர்களுக்கு அனுப்ப முயற்சிசெய்ததே யாகும்" என்று வெளியிடப்பட்டது. இதனால் கடந்த இரண்டு வருடங்களிலும் நிர்வாகசபையார் மாதம்மாதம் தவறாமல் பத்திரிகையை வெளியிடவில்லையென்பதும் சமாஜத்திற்கு இவ்வருடத்தில் நேர்ந்த நஷ்டங்களுக்கு இதுவொருமுக்கிய காரணமாமென்பதும் விளங்கும்.

அன்றியும், சித்தாந்தப் பத்திரிகை முதலில் நான்கு பாரங்கொண்ட சஞ்சிகைகளாக வெளிவந்தது. கடந்த வருடத்தில் அது மூன்று பாரங்களாகக் குறைந்தது. இதில் வெளியிடப்பட்ட விஷயங்களும் இதைவாங்குவோர் பெரும் பாலார்க்கு எளிதில் விளங்கிப் பயன்படக் கூடியனவாகக் காணப்படவில்லை. இதில் அச்சுப்பிழைகளும் எழுத்துப் பிழைகளும் அதிகமாகக் காணப்படுகின்றன.

"பிரசங்கங்கள்" என்னுந்தலைப்பின் கீழ் "இவ்வருடத்தில் சமாஜ சம்பந்தமாக நடத்திய பிரசங்கங்கள் இவ்வறிக்கையின் இறுதியில் காட்டப்பட்டுள்ளன" என்று வெளியிடப்பட்டது. இதிற்குறித்த பிரசங்கங்களின் தொகை சரியாய் ஐம்பது. இவற்றுள் 35 பிரசங்கங்கள் திருவாவடுதுறை யாதீனக் கட்டளையின் படி, அவ்வாதீனத்திலிருந்து ஊதியம் பெற்றுவரும் தூத்துக்குடிவாசியாகிய ஸ்ரீ. பொ. முத்தையாபிள்ளை யவர்களாற் செய்யப்பட்டன. எஞ்சிய 15 பிரசங்கங்களும் சமாஜத்தின் நிர்வாகசபையினரால் நடத்தப்பெறாமல் பெரும்பாலும் இச்சமாஜத்தின் அத்தியட்சர்களைக் கொண்டு அயலவர்களால் செய்விக்கப்பட்டன. இவ்வாறு அயலவர் செய்வித்த பிரசங்கங்களை இச்சமாஜ சம்பந்தமாக நடத்திய பிரசங்கங்களென ரிப்போர்ட்டில் காட்டப்பட்டிருக்க இச்சமாஜத்தின் தலைவராகிய ஸ்ரீமத் சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் கடந்த வருடத்தில் நெடுங்காலம் நெடுந்தூரம் யாத்திரைகள் செய்து அவ்வத்தலங்கள் தோறும் செய்த மிக அரியபெரிய இனிய பிரசங்கங்களுள் ஒன்றும் இந்தப்பெரிய ரிப்போர்ட்டிலாவது மாதாந்தப் பத்திரிகைகளிலாவது குறிக்கப்படாமைக்குக் காரணம் விளங்கவில்லை.

"நிர் வாகசபையின் கூட்டம்" என்னுந் தலைப்பின் கீழ் "இவ்வருடம் நிர்வாகசபையினர் சமாஜ உத்தியோக சாலையில் 7 முறை கூடி சமாஜசம்பந்தமான விஷயங்களைப் பேசிச் செய்யவேண்டியவற்றைச் செய்தனர்" என்று வெளியிடப்பட்டது. சமாஜ ஒழுங்குகளின்படி இவர்கள் மாதமாதம் கூடாமல் ஒருவருடத்திற்கு ஏழுமுறைமாத்திரம் கூடினதற்குக் காரணம் விளங்கவில்லை. சமாஜத்தின் பொக்கிஷதாரர் 1914௵ ஜனவரி௴ 3-ம் தேதியன்று "இவ்வருடத்தில் சமாஜசம்பந்தமாகச் செய்யவேண்டியன பல இருத்தலினால் அவற்றைப்பற்றி யாலோசிக்குமாறு உடனே நிர்வாகசபை கூட்டும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று காரியதரிசியாருக்குக் கடிதம் எழுதிக் கேட்டுக்கொண்டனர். இக்கடிதத்திற்குப் பதில் கிடைக்காமையால் மறுபடியும் 1914௵ பிப்ரவரி௴ 18௳



காரியதரிசியாருக்குஎழுதிய கடிதத்தில் "சென்ற ஜனவரி௴ 3-௳ தங்களுக்குக் கடிதம் எழுதி உடனே நிர்வாகசபை கூட்டும்படியாகக் கேட்டேன். தாங்கள் நாளதுவரையில் கூட்டாமைக்குக் காரணம் தெரியவில்லை" என்று எழுதினர். இக்கடிதத்திற்குப் பதிலாக காரியதரிசியார், பொக்கிஷதாரரைப்பார்த்து அடாதவார்த்தை கூறினர் இதனை பொக்கிஷதாரர் உடனே சில அத்தியக்ஷர்களுக்குக் கடிதவாயிலாக அறிவித்ததுடன் "அடுத்த டைரெக்டர் மீட்டிங் வைக்கும்வரையில் நான் இனி செக்குகளில் கையெழுத் திடவாவது தொகைகொடுக்கவாவது சம்மதியேன்" என்று காரியதரிசியாருக்கு எழுதிதெரிவித்தனர். இதனால் பொக்கிஷதாரர் தாம் வகித்த உத்தியோகம் நீங்கலாக, சமாஜசம்பந்தமான மற்ற விஷயங்களைக் கவனிக்கவாய்க்காமல் கடந்த நவம்பர்௴ 3௳ வரையில் தமது உத்தியோகத்தை நடத்தி இராஜிநாமா கொடுத்துவிட்டனர்.

"கணிதபரிசோதகர்" என்னுந் தலைப்பின்கீழ் "மாதந்தோறும் சமாஜக்கணக்கினை வெகு ஊக்கத்துடன் பரிசோதித்துவந்த ஸ்ரீமான் A. சோமசுந்தரம்பிள்ளையவர்களுக்கும் வருடக்கணக்கைப் பரிசோதித்துவந்த ஸ்ரீமான் கிருஷ்ணசாமி முதலியாரவர்களுக்கும் நிர்வாக சபையினர் நன்றிபாராட்டுகின்றனர்" என்று வெளியிடப்பட்டுள்ளது. சமாஜக்கணக்கு மாதந்தோறும் பரிசோதிக்கப்படவேயில்லை. இவ்விஷயமாகக் காரியதரிசியாருக்குப் பொக்கிஷதாரர் 1914௵ அக்டோபர்௴ 11௳ எழுதியகடிதம்:—"ஐயா, நமது சமாஜ மாதாந்தரக் கணிதபரிசோதகர் சமாஜக்கணக்கை மாதந்தோறும் கிரமமாய்ப் பரிசோதிப்பதாகக் காணப்படவில்லை. சென்ற ஒன்பதுமாதங்களில் மாதமாதம் பரிசோதிக்காமல் ஒருமுறை கணக்குப் புத்தகத்தைப் பத்துநாள் வரையிலும், மற்றொருமுறை 22 நாள் வரையிலும் தன்னிடம் வைத்திருந்தார். இவர் இதுவரையில் எம்மட்டில் பரிசோதித்தன ரென்பதும் இவர் கண்ட குறைவுபாடுகளும் எனக்கு நாளதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. இக்கணக்கில் ஏதேனும் ஆட்சேபனைகளிருந்தால் அவற்றை உடனுக்குடனாக எனக்குத் தெரிவிக்காமல் நெடுங்காலஞ் சென்று தெரிவித்து இடர்ப்படுத்துவதில் பிரயோஜனமிராதென்பதைத் தாங்கள் அறியவிரும்புகிறேன்"

அன்றியும் காரியதரிசியார் சித்தாந்தப்பத்திரிகைகளின் வரவு செலவு கணக்கு வைக்கவே இல்லை. அல்லாமலும், சந்தாதாரர்கள் பேரேட்டுப் புத்தகமும் முன்வருடத்தில் கணிதபரிசோதகராற் குறிப்பிக்கப்பட்டு மகாஜன சபையாரால் அங்கீகரிக்கப் பட்டவாறு வைக்கப்படாதிருந்ததுடன், நெடுங்காலம் சரியான கணக்கு வைக்காமல் பிறகு முன்வருடத்திலிருந்த புத்தகத்திலேயே கணக்கு எழுதிவரப்பட்டது. இவை கூடலூரில் கூடிய மகாஜனக் கூட்டத்தில் ருசுப்படுத்தப்பட்டன. இவ்வாறு ஒழுங்காகக் கணக்கு வைக்காமையால் அக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுள் சிலர், தாங்கள் கிரமமாகச் சந்தாசெலுத்தியும் கடிதங்களெழுதியும் சித்தாந்தப்பத்

திரிகைகள் கிரமமாக அனுப்பப்படவில்லையென்று முறையிட்டார்கள். இக்குறைவுபாடுகள் கணிதபரிசோதகர் ரிப்போர்ட்டில் காட்டப்படவேயில்லை.

1914௵ ரிப்போர்ட்டைக்கொண்டு எடுத்துக் காட்டக்கூடிய குறைவுபாடுகள் இன்னும் பலவுள. அவற்றை விரிக்கிற் பெருகும்.

1913௵ ரிப்போர்ட்டில் "துண்டுபத்திரிகைகள் (Tracts)" என்னுந் தலைப்பின்கீழ் "நாடுகள்தோறும் துண்டுபத்திரிகைகளை அச்சிட்டு அனுப்பிச்சைவசித்தாந்த உணர்ச்சியைப் பலர்க்கும் புகட்ட இச்சமாஜத்தார்க்கு மிகுதியும் ஆவலிருப்பினும் பொருட்குறைவால் 'கடவுளின் சொரூபம்" என்னும் பத்திரிகை ஒன்றே இவ்வருடம் அச்சிட்டுப் பலர்க்கும் உதவ நேர்ந்தது" என்று வெளியிடப்பட்டது. 1911௵ முடிவில் இருந்த இருப்பு ரூபா 13. அவ்வருடம் ஏழுதுண்டு பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. 1912௵ முடிவிலிருந்த இருப்பு ரூபா 86. அவ்வருடத்தில் ஐந்து துண்டு பத்திரிகைகள் வெளியாயின. 1913௵ முடிவிலிருந்த இருப்பு ரூபா 80. அவ்வருடத்தில் ஒரே துண்டு பத்திரிகை வெளியிடப்பட்டது. கடந்த 1914௵ முடிவில் இருந்த இருப்பு ரூபா 604. இவ்வருடத்தில் ஒரு துண்டு பத்திரிகையேனுந் தலைகாட்டவில்லை.

1911, 1912-ம் வருடங்களில் பல வீதிப்பிரசங்கங்கள் நடைபெற்றன. 1912௵ ரிப்போர்ட்டில் வீதிப்பிரசங்கங்களால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி இரண்டு பக்கங்கள் நிரம்ப மிக நீளமாய் எழுதப்பட்டது. 1913, 1914-ம் வருடங்களில் வீதிப்பிரசங்கம் ஒன்றேனும் நடைபெற்றதாகக் காணப்படவில்லை.

மாதமாதம் சமாஜ ஆபீசுக்குக் குடிக்கூலி ரூபா நாலும், (ரைட்டர்) லிகிதருக்கு 15 ரூபா சம்பளமும் (கடைசியில் 12 ரூபா) கொடுக்கப்பட்டன. இவையும் காகிதம், வண்டி, கடிதத்தபால் முதலியவையும் சேர்ந்து ஆபீசு செலவுக்குமாத்திரம் சென்ற வருடம் சுமார் 250 ரூபா செலவாயிருக்கலாம். இவ்வளவு செலவிட்டும் சமாஜக் காரியங்கள் ஒன்றேனும் ஒழுங்காய் நடத்தப்படவில்லை. நிர்வாக சபையார் இன்னும் நீடித்து இவ்வாறே சமாஜக்காரியங்களை நடத்துவார்களாயின் சமாஜம் தலையெடுக்காது. ஆதலால், அவர்கள் இவ்வருட முதலாவது தங்கள் கடமைகளைச் சரியாய்ச் செலுத்தி சமாஜத்தை முன்னுக்குக்கொண்டுவருதல் வேண்டுமென்னுமாசைமீதூர "நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண் - மேற்சென்றிடித்தற் பொருட்டு" என்னும் வேதவாக்கைக் கடைப்பிடித்து மேற்கூறிய குறைவுபாடுகள் எடுத்துக் காட்டப்பட்டனவாகலின் பெரியோர் இதனைக் குற்றமாக எண்ணாமலிருப்பதுடன், இதனால் மனஞ்சோராமல் இச்சமாஜம் அபிவிருத்தியெய்துவதற்குரிய உதவிகளைச்செய்யப் பின்னிடாதிருப்பதும் கடனாம். 'சுபம்.

சைவசித்தாந்த மகாசமாஜ அங்கத்தவரில் ஒருவனாகிய
சைவாபிமானி.

THE REGISTRAR OF ... 13 MAR 1915 ... MADRAS.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 1.] ‖ ஆனந்த௵ பங்குனி௴ 1915௵ மார்ச்௴ ‖ [இதழ் 3.

## ஞானப்பிரகாச சம்பாஷணை.

"பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர் - நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
றன்மாலை ஞானத் தமிழ்."

சிவபுரி என்னும் ஓர் கிராமத்தில் ஞானப்பிரகாசர் என்னும் சைவப்பிரசாரகரொருவர் பரமசாம்பவராய் தமது மாணாக்கர்களுக்குச் சித்தாந்த சாத்திரோபதேசம் செய்துகொண்டிருந்தனர். அவர் நாடோறும் அக்கிராமத்திலுள்ள சிவாலயத்திற்குப்போய் சிவதரிசனஞ் செய்வது வழக்கமாயிருந்தது. அவர் ஆலயத்திற்குப் போம்போதும் போய்த்திரும்பி வரும்போதும் அவரைப் பலர் கைகூப்பித் தொழுவார்கள். பலர் தரையில் வீழ்ந்து நமஸ்கரிப்பார்கள். அவ்வாறு வணங்குவார்க்கெல்லாம் அவர் திருநீறு கொடுத்து ஆசிகூறுவார். அவர் ஒருநாள் அவ்வாலயத் திருவிழாவைத்தரிசித்துத் தமது திருமடத்தை நோக்கித் திரும்பிச்செல்லுகையில், ஒருவன் தலையில் தொப்பியும், மூக்கில் கண்ணாடியும், கழுத்தில் காலர் என்னும் பட்டையும், காலில் மேற்சோடும் பூட்சு என்னும் பாதரட்சையும், உடம்பில் ஓபன்கோட் என்னும் மேற்சட்டையும், காலில் ட்ரௌஸர்ஸ் என்னும் காற்சட்டையுந் தரித்து, முகத்தைக் கைகுட்டையால் அடிக்கடி துடைத்துக்கொண்டு, வாயிலொரு சிகரெட் வைத்துக்கொண்டு, பைசிகில் என்னும் இருசக்கர வண்டியிலேறி வேகமாய் அவ்வழியாக வந்தான். அச்சமயத்தில் ஞானப்பிரகாசரைப் பலரும் வழியெங்கும் தரையில் வீழ்ந்து நமஸ்கரித்துக்கொண்டிருந்தமையால் அவன் தன் பைசிகில் வண்டியை நேராய் நடத்திச்செல்ல இயலா

மல் அதினின்றும் இறங்கி அங்கு நிகழ்ந்தனவற்றை நோக்குவானாயினான். நோக்குகையில், ஒருவர் சரீரமெங்குந் திருநீறுபூசி, திரிபுண்டரந் தரித்து, உருத்திராக்க மணிபூண்டு, அன்புருவாய் விளங்குவதையும், அவரைப் பலரும் பேரன்போடு வணங்குவதையும் கண்டு, அருகிலிருந்த ஒருவரைப்பார்த்து, அப்பெரியாரைச் சுட்டி "ஐயா, அதோ உடம்பெல்லாம் துறுணூறுபூசி ஏதோ கொட்டைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறாரே, அவர் யார்? அவரையேன் இவர்களெல்லாம் வணங்குகிறார்கள்?" என்றுகேட்டான். அதற்கு, அருகிலிருந்தவர் "ஐயா, அவர் மிகவும் கற்றவர், பரமஞானி. அவர் தமது திருமேனியில் தரித்திருப்பது திருவெண்ணீறு, அணிந்திருப்பது உருத்திராக்கமணி. இவ்விரண்டும் தம்மைத் தரித்தோர் தரிசித்தோர் பூசித்தோர் இவர்களுடைய பாவங்களைப்போக்கிப் புனிதப்படுத்துவன. அவர் இருபக்கத்திலும் கைகட்டி வாய்பொத்தி நிற்பவர்கள் அவர் மாணாக்கர்கள். அவரைப் பூசித்தால் நாம் செய்த பாவமெல்லாம் நம்மைவிட்டு நீங்கி நற்கதி யடைவோம்" என்றனர். அவன் அதைக் கேட்டு "நான் சென்ஸ் (Nonsense) சாம்பலாவது, கொட்டையாவது, பரிசுத்தப்படுத்துகிறதாவது, (Fools) மூடர்கள்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு, "இன்னும் இவர்களை யாராய்வோம்" என்று நிதானித்துக் கூர்ந்து ஆராய்வானாயினான். ஆராய்ந்தபோது, அப்பெரியாரை வணங்கி நின்றவர்களுள் சிலர் மிகவும் ஆங்கிலத்தேர்ச்சிபெற்று (B. A.) பி. ஏ. முதலிய பட்டங்க ளடைந்தவர்களா யிருப்பதையும், சிலர் அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் வகிப்பவராயிருப்பதையும், சிலர் பெரிய பணக்காரர்களாயிருப்பதையும் கண்டான். காணவே, "இத்தனை பெரியமனுஷர்களும் இவரை வணங்குவதனால் இவரிடத்தில் ஏதோ உண்மையிருக்கவேண்டும். இவர் அணிந்திருக்கும் திருநீற்றிலும் உருத்திராக்கத்திலும் ஏதோ மகிமை இருக்கவேண்டும்" என்று அவனுக்குத் தோன்றிற்று. தோன்றவே, அவன் மெதுவாய் தன் பைசிகில் வண்டியைத் திருப்பி அருகிலிருந்த சுவரண்டை நிறுத்தி வாயிலிருந்த சிகரெட்டை விட்டெறிந்து, தன் பாதரட்சையைக் கழற்றிவிட்டு, தொப்பியை யெடுத்து அக்குளில் வைத்துக்கொண்டு, அப்பெரியாரிடஞ் சென்று நமஸ்கரித்து நின்றான். அவர் அவனுக்குத் திருநீறு கொடுத்தருளினார். அவன் அதுவரையில் திருநீறிட்டறியாதவனாகையால், அதை ஒரு கைநீட்டிவாங்கி, அதில் எள்ளத்தனை யெடுத்துக் தன்புருவமத்தியில் வட்டமாக இட்டுக்



கொண்டு, மீதியை வாயால் ஊதிவிட்டு, கையைத் தன் குட்டையால் துடைத்துக்கொண்டு, அவரைவிட்டுப்போகாமல் அவரைப் பார்த்துக்கொண்டே எதிரில் நின்றான். அவன் அவ்வாறு நிற்பதைப் பார்த்த பெரியார் அவன் அறியாமைக்கு இரங்கி, அவனை நோக்கி "அப்பா, நீயார்" என்றனர். அவன் "நான்தான் ராமசாமி. எங்களண்ணாபெயரைச் சொன்னால் எல்லாருக்குந் தெரியும்" என்றான். பெரியார் "உன்னிருப்பிடம் எங்கே" என்றனர். அவன் "இதையடுத்த கோலாகல நகரம்" என்றனன். அவர் "இங்கே உனக்கென்ன வேண்டும்" என்றனர். அவன் "சாமீ, எனக்கு நீங்கள் கடவுளைக் காட்டவேண்டும்" என்றனன். ஞானப்பிரகாசர் புன்னகை செய்து, "அப்படியே காட்டுவோம், நீ நாளையதினம் பகல் 3-மணிக்குமேல் நமது மடத்துக்குவா" என்றனர். அதற்கு அவன் "சாமீ, நான் செய்யும் வர்த்தகத்தில் எனக்கு அதிக ஓய்வில்லை. தினந்தோறும் பகல் 3-மணிக்குமேல் சிறிதும் ஓய்விராது" என்றான். ஞானப்பிரகாசர் பின்னும் புன்முறுவல்செய்து "ஆனால் உனக்கு ஓய்வுள்ளபோதுவா" என்று சொல்ல, அவன் "சாமி அப்படியே வருகிறேன்" என்றுசொல்லி அவரைவிட்டகன்றான். அவன் அவரைவிட்டு நீங்கினானாயினும், அப்பெரியார் தரிசன விசேடத்தாலும், பூர்வபுண்ணியப்பலனாலும் அவன்மனம் அவரைவிட்டு நீங்கவில்லை. அதனால் அன்றெல்லாம் அவன் தன் வர்த்தகத்தொழிலை அதற்கு முன்செய்ததுபோல் செய்யஇயலவில்லை. இரவெல்லாம் நித்திரைவாராமல் எப்போது பொழுதுவிடியும் என்று எதிர்பார்த்தவண்ணமாயிருந்தான். பொழுது விடிந்ததும், அவர் திருமடத்திற்குப் போகப் புறப்பட்டான். புறப்பட்டபோது, அவர் தன்னைப் பகல் 3-மணிக்கு வரச்சொன்னதனால் அவருக்குக் காலையில் போதுமான நேரம் இராதுபோலும், 3-மணிக்குப்போவதுதான் உத்தமம் என்று எண்ணினான். இவ்வாறு எண்ணின எண்ணமும் அப்பெரியாரது வடிவமுமே அவன் மனதிற்குடிகொண்டமையால் அவன் அதுவரையில் ஓய்வின்றிச்செய்துவந்த வர்த்தகத்தொழிலைமறந்தான். பகல் 3-மணிக்கெல்லாம் ஞானப்பிரகாசர் மடத்தையடைந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்தான். ஞானப்பிரகாசர் அன்று அவனைப் பார்க்கையில் அவன் முன்னாளி லிருந்ததுபோலிராமல் சற்சீடர்களுக்குள்ள நல்லிலக்கணங்கள் சில அவனிடம் தோன்றக்கண்டு, ஆச்சரிய மடைந்து, ஆசி கூறி, அவன் நெற்றியில் விபூதி தரித்துத் தன் அருகில் உட்காரவைத்து, அவனை நோக்கி "அப்பா, உன்னைப் பார்

த்தால் மிகவும் நல்லவனாகக் காணப்படுகிறாய்; உனக்கு இப்போது வயது முப்பதுக்கு மேலாயிருக்கலாம் என்று தோன்றுகிறது, நீ இதுவரையில் ஏதேனுஞ் சாஸ்திரப் பயிற்சி செய்ததுண்டா?; உண்டேல், யாரிடத்தில் என்னென்ன சாஸ்திரங்களைப் படித்தாய்?" என்று வினவினார். அவன் அவர் வினவிய வினவுக்குப் பதில் சொல்லமாட்டாமல் என்ன சொல்லலாம் என்று சற்றுயோசித்து "சுவாமி இதற்குப்பதில் சொல்ல எனக்கு வெட்கமும் வருத்தமுமாயிருக்கிறது" என்று சொல்லி, தலைகுனிந்து மௌனமாயிருந்தான். ஞானப்பிரகாசர், அவன் சாஸ்திர ஆராய்ச்சி செய்ததேயில்லை யென்பதையும், அதற்காக அவன் உண்மையாய் வருத்தப்படுவதையும் அறிந்து, "அப்பா, தீயோர் தாங்கள்செய்யும் தீவினைகளுக்கு வருத்தப்படமாட்டார்கள்; வெட்கப்படவு மாட்டார்கள். நீ உன் நடவடிக்கைகளை யெண்ணி வருத்தப்படுவதும் வெட்கப்படுவதும் உன் நற்குணத்தையும் நற்காலத்தையும் காட்டுகின்றன. உன் பிறப்பு வளர்ப்பு முதலிய வரலாற்றைப் பயப்படாமல் யானறியச் சொல்" என்று அவனிடம் மிகுந்த கருணையோடு பேசினார். அதனால், அவன் அவரைத்தன் பிதாவைப்போல் எண்ணி, தன் வரலாற்றைப்பின் வருமாறு சொல்லத்தொடங்கினான். "சுவாமி, அடியேன் செகண்ட் ஜூன் எய்ட்டியில் (2nd June 1880) பிறந்தேன். எனக்கு இப்போது முப்பத்திரண்டு வயதாகிறது. என் பாதர் (Father) டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜி (District Judge) யாயிருந்தார். அவருக்கு நான் ஒரே ஒருபிள்ளை. என் பேரெண்ட்ஸ் (Parents) என்னை மிகவும் செல்வமாக வளர்த்தார்கள். நான் சிறுபோதில் எவ்வளவு துஷ்டவேலைகளைச் செய்தாலும் அவையெல்லாம் அவர்களுக்கு இன்பமாகவே யிருந்தன. அவர்கள் எக்காலத்தும் என்மனம் நோவ நடந்ததேயில்லை. அவர்களுக்குப் பயந்து என் உபாத்தியாயர்கூட என்மனம் நோவ நடந்ததில்லை. அவர்கள் எனக்கு மேலுமேலும் பிதுரார்ஜிதம் சேகரித்து வைப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார்கள். எவருக்கேனும் ஏதேனுங் கொடுத்தால் எனக்கு வைக்கும் ஆஸ்தியில் குறைந்து போமென்று பயந்து யாருக்குங் கொடாமல் எனக்காகப் பரமலோபிகள் என்று பேரெடுத்தார்கள். என் பொருட்டுச் சிலசமயங்களில் லஞ்சங்களும் வாங்கி பாபிகளென்றும் பேரெடுத்தார்கள். இவ்வாறாக என்னை வளர்ப்பதும் எனக்கு ஆஸ்தி சேர்த்து வைப்பதுமே இம்மானிடப் பிறவியாலாய பயனென்று எண்ணி நடந்தார்கள்.



என் தகப்பனாருக்கு ஆங்கில பாஷையிலிருந்த மதிப்பும் பயிற்சியும் தமிழ்ப் பாஷையிலில்லை. அவர் புத்தகசாலையில் வண்ணான் கணக்குப் புத்தகமுதல் எல்லாப் புத்தகங்களும் ஆங்கிலமாகவே இருந்தன. என்னுடன் பாடசாலையில் படித்த மாணாக்கர்களும் தமிழ்கற்பதில் சிறிதும் சிரத்தையில்லாதவர்களாய் தமிழ்ப்பாடம் படிக்கும் காலத்தை விளையாடுங்காலமாகக் கழித்தார்கள். இவர்களுடன் பழகிய எனக்கும் தமிழ் என்றால் அருவருப்பாயிருந்தது. நான் என் பிதாமாதாக்களைக் குழந்தைப் பருவத்திலுங்கூட அப்பா அம்மா வென்று கூப்பிட்டறியேன். பப்பா மம்மா என்று ஆங்கிலச் சொற்களால் அழைப்பேன். என் தந்தையினிடம் வந்து கொண்டிருந்த சினேகிதர்களும் தமிழர்களாயிருந்தாலும் அவர்கள் தமிழில் சம்பாஷணை செய்ததை நான் கேட்டதேயில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் எழுதிய கடிதங்களும் ஆங்கிலமாகவேயிருந்தன. இதனால் எனக்குத் தாய் பாஷை அன்னிய பாஷையாய் விட்டது. நான் படித்த பாடசாலையோ கிறிஸ்துவ பாடசாலை. அதிலிருந்த உபாத்தியாயர்கள் கிறிஸ்துமார்க்கமே உண்மையான மார்க்கமென்று போதித்தார்கள். அவர்கள் கடவுள் ஒருவர் உண்டு என்று போதித்தாலும், அவர்கள் கூறும் கடவுளின் இலக்கணங்களும், உலகத்தின் தோற்றக்கேடுகளின் காரணங்களும், உயிர்களின் இலக்கணங்களும், முத்தியிலக்கணமும், தருக்க நூலுக்கு ஒத்தனவாயில்லை. யாரேனும் அவர்கள் சொல்வதை யாட்சேபித்தால் அவர்களுக்குத் தகுந்த சமாதானம் சொல்லாமல், "நாங்கள் சொல்வதை நம்பி ஏசுவை விசுவாசியுங்கள், மனந்திரும்புங்கள், தடுத்துப் பேசாதீர்கள்" என்பார்கள். இதனால் அவர்கள் கடவுள் உண்டு என்று சொல்வதில் எனக்கு நம்பிக்கை வரவில்லை. எனக்கு வீட்டில் கல்விகற்பித்த உபாத்தியாயரோ நாஸ்திகக் கொள்கையுடையவர். எவர்களேனும் இவரிடம் கடவுள் உண்டு என்று வாதித்தால் அவர்கள் தலைக்குப் போடுவதைக் காலுக்கும் காலுக்குப் போடுவதைத் தலைக்குமாகப் போட்டுக் கேள்விகளைக்கேட்டு அவர்கள் வாயையடக்கிப் பரிகாசஞ் செய்வார். என் தகப்பனார் முகத்தில் ஏதேனும் இட்டதையாவது கோயிலுக்குப் போனதையாவது நான் கண்டதேயில்லை. அவர் சினேகிதர்கள் அவரையும் என்னையும் தாசிக் கச்சேரிகளுக்கும் விருந்துகளுக்கும் நாடகங்கள் முதலியவற்றிற்கும் அழைத்துச் சென்றார்களேயன்றி எந்தக் கோயிலுக்காவது சைவக் கூட்டங்களுக்காவது அழைத்துச் சென்றதேயில்லை. அவர்கள் ஈவரைச்

சில சமயங்களில் தாசிவீடுகளுக்கும் அழைத்துச் சென்றதுண்டு. சிலசமயங்களில் அவர்களே விலையுயர்ந்த (Wine) சாராயங்களை விலைகொடுத்து வாங்கி "(Brother) பிரதர் இதைச் சாப்பிட்டுப் பாருங்கள்" என்று கொடுப்பார்கள். இதனால், இதுவரையில் நான் தங்களைப் போன்ற பெரியோர்களைத் தரிசிக்க நேரிடவேயில்லை. ஆனால், என்னுடைய தாயாரைப்பெற்ற பாட்டனார் மாத்திரம் உண்மையான சிவபத்தரென்று என் தாயார் சொல்வதுண்டு. அவர் குமாரரான என் அம்மான் என் தாயாரைப்பார்க்க அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். அவர் வரும்போதெல்லாம் விபூதி பூசிக்கொண்டு உருத்திராக்க மணிந்திருப்பார். எந்நேரமும் சிவ சிவ சிவ சிவ சிவ என்றுசொல்வார். எங்களைப் பார்த்துப் பாபிகளென்று வைவார். ஆனால், அவர் எந்நேரமும் தன்வைப்பாட்டி வீட்டிலேயே இருந்துகொண்டு பெண்டாட்டியைத் திண்டாட்டஞ்செய்தனர். அதனால் அவரிடத்தில் எனக்குச் சிறிதேனும் மதிப்பில்லை. அவரை என் உபாத்தியாயரிடம் இழுத்துக்கொண்டுபோய் விட்டு நாத்திகம் பேசச்செய்து கேலிசெய்வேன். என் அண்டை வீட்டுக்காரரொருவர் இருந்தார். இவர் "நானே எங்கும் நிறைந்தபிரமம், என்னைவிட வேறொரு பொருளில்லை. என்னைத் தவிர மற்றவையெல்லாம் மித்தை (முயற்கொம்புபோல் இல்லாதபொருள்கள்). நான், நீ, அவன், அவள், அது என்பனயாவும் மித்தை" என்று சொல்லுவார். இவரே துட்டுக்காசைப்பட்டு என் அம்மானைக்கெடுத்தவர். இவர் இப்படிச் சொல்லிக்கொண்டே பலகுடிகளைக் கெடுத்தார். இதனால் நான் இவரைச் சட்டைசெய்வதேயில்லை.

இவர் என் உபாத்தியாயரைப் பார்த்து "பொருளல்லவற்றைப் பொருளென் றுணரு - மருளானா மாணாப் பிறப்பு" என்று திருவள்ளுவநாயனார் கூறியவாறு, கடவுளில்லை, புண்ணியபாவங்களில்லை, சொர்க்கநரகங்களில்லையென்றும், மித்தையாகிய இவ்வுலகமும் உலக இன்பமுமே உள்பொருள்களென்றும் கூறும் உலோகாயதராகிய உங்களுக்கு(க்கதி) மோட்சமேயில்லை, நரகமே காணியாட்சியாகும்" என்பார். என் உபாத்தியாயர் "ஐயா, அந்த நாயனாரே "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத் - தலகையா வைக்கப் படும்" என்று கூறி, உள்பொருளாகிய உலகத்தை முயற்கொம்புபோல் இல்லாதபொருளென்றுகூறும் உம்மைப் பேய் என்று நிந்தித்திருப்பதை நீர் அறியீரோ" என்றுசொல்லி எனக்குக் கண்ணைக்காட்டுவார். அப்போது நான் இவர்கைத்தடி தலைப்பாகை முதலியவற்றை எடுத்து



ஒளித்துவைத்துவிடுவேன். இவர் மிகவும் வருத்தப்பட்டுத் தேடித் தேடியலைவார். அப்போது நான் "ஐயா, உமது தடியும் மித்தை தலைப்பாகையும் மித்தை, நீரும் மித்தை நீர் தேடுவதும் மித்தை" என்று கேலிசெய்வேன். இவ்வாறு நடந்துவரும் நாளில் என் தகப்பனாருக்குத் திடீரென்று பாரிசவாயு வந்து ஒரு கையுங்காலும் விழுந்துவிட்டன. (இன்னும் வரும்.)

---

## பதி பசு பாசம்.

(27-வது பக்கத் தொடர்ச்சி)

"பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபா சந் தெரித்தல்" என்னும் சிவப்பிரகாசச் செய்யுளின்படி, வேதம் ஆகமம் என்னும் முதனூல்களும் இவற்றினின்றும் விரிந்த பலவகைப்பட்ட ஞானநூல்களும் பதிபசுபாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை விளக்க வந்த நூல்களாம். இவற்றுள், வேதம் பசுவைப் போலவும், சைவாகமம் அதின் பாலைப் போலவும், தேவாரத் திருமுறைகள் அப்பாலின் நெய்யைப் போலவும், சிவஞானபோதம் என்னும் ஞானநூல் அந்நெய்யின் சுவையைப் போலவும் இருக்கும்.

"வேதம்பசு வதன்பால் மெய்யாகம நால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யினுறு சுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்."

சிவஞான போதம் சகல வேதாகமசாரமாயுள்ள உண்மை ஞானநூலென்பதையும், இந்நூலே ஆன்மாக்களைப் பிறவிப்பெருங் கடலினின்றுங் கரையேற்றி முத்தியங்கரையிற் சேர்க்கும் தெப்பமாம் என்பதையும் விளக்க வேண்டியே, திருமால் முதலியவர்களுக்கு ஆசிரியத்தன்மை கொடுத்து எல்லோர்க்கும் முதற் குருவாய், கல்லாலின் புடையமர்ந்த கண்ணுதலார் இதனைத் தமது திருக்கரத்தில் பிரியாது வைத்துக் கொண்டிருக்கிறார். சிவாலயங்களில் தட்சிணாமூர்த்தியைத் தரிசனஞ் செய்வோர் இதனைக் காண்பார்கள்.

### சிவதத்துவ விவேக விருத்தி.

#### தட்சிணாமூர்த்தி வணக்கம்.

திருமாலிற் றிசைப்பிரம னுபமனியன் றபனனந்தி செவ்வே ளாதித்
தருமமுதற் குரவருக்குந் தனதருளா லாசிரியத் தன்மை நல்கி
வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரைக்கைம் மலரும் வாய்ந்த
வுருவழகுங் குறுநகையுங் காட்டியரு டருஞ்சிவனை யுளத்தில் வைப்பாம்.

இந்நூலில் பதிபசுபாச இலக்கணங்கள் பன்னிரண்டு சூத்திரங்களில் அடக்கிச் சொல்லப்பட்டன. இதனை நமது மெய்கண்டதேவர் தமிழில் பன்னிரண்டு சூத்திரங்களாக அருளிச் செய்தனர். இதுவே தமிழ்ச் சிவஞானபோதமாம். இதனை விரித்துச் சிவஞானசித்தி முதலிய பதின்மூன்று சித்தாந்த நூல்களும், சிவஞானபோதமாபாடிய முதலியனவும் செய்யப்பட்டன. இவை இலக்கிய இலக்கண நூல்களையும் தருக்க நூலையும் கற்று வரன்முறையாக குருமுகமாகப் பாடங்கேட்டவர்களுக்கே விளங்கும். ஆதலால், இந்நூல்களிற் கூறிய முறைப்படி பதிபசுபாச இலக்கணங்களை இப்பத்திரிகையில் கூறப்புகின் கற்றவர் சிலர்க்கு மாத்திரம் விளங்கும்; மற்றவர்களுக்குப் பயன்படாது. ஆதலால், இயன்றவரையில் அவ்விலக்கணங்களைப் பலரும் அறியுமாறு, எளிய நடையில், தொகுத்தும், விரித்தும், முன்னதைப் பின்னும் பின்னதை முன்னுமாகவும், ஒருமுறைக்கு இருமுறை மும்முறையாகக் கூறியதைக் கூறியும் விளக்குவாம்.

## சிருட்டி.

பலர் இந்நிலவுலகத்தையும் இதிலுள்ள உயிர்களையும் பார்த்து. கடவுள் உலகத்தையும் உயிர்களையும் உண்டாக்கினார் என்றும், கடவுளாற் படைக்கப்பட்ட உலகமும் உயிர்களும் இந்த நிலவுலகம் ஒன்றேயெனவும், இவ்வுலகத்திலுள்ள உயிர்களே யெனவும் எண்ணுகிறார்கள். கடவுள் முன்னில்லாத உலகத்தை யாவது உயிர்களை யாவது உண்டாக்கினதேயில்லை. உள்ளது போகாது இல்லது வாராது என்னும் சித்தாந்தத்தின்படி கடவுள் முன்னில்லாத உலகுயிர்களை உண்டாக்கினதுமில்லை அழிப்பதுமில்லை. உலகமும் உயிர்களும் கடவுளைப்போலவே என்றும் உள்ளன. கடவுள் என்று உண்டோ அன்றே உலகமும் உண்டு, உயிர்களும் உண்டு. ஆனால், சிவபெருமான் உலகுயிர்களைப் படைத்துக்காத்து அழிக்கிறார் என்கிறார்களே அதற்கென்ன பொருள் எனில், சொல்லுவாம். கடவுள் உலகத்தைப் படைத்தார் என்பது குயவன் பாண்டத்தைச் செய்தான் என்பது போலாம். குயவன் பாண்டத்தை யெப்படிச் செய்தான் எனில், மண்ணையும் சக்கரத்தையுங்கொண்டு செய்தான் என்போம். அவன் மண்ணை உண்டாக்கவில்லை. மண் முன்னமே யிருந்தது. அந்த மண்ணைப் பாண்டமாக்கினான். பாண்டம் உண்டானதற்குக் குயவன் ஒரு காரணமும், சக்கரம் ஒரு காரணமும், மண் ஒரு காரணமுமாம். இவற்றுள் மண் முதற்காரணமெனவும் சக்கரம் துணைக்காரண மெனவும் குயவன் நிமித்த காரணமெனவும் சொல்லப்படும். இம்மூன்று காரணங்களினால் உண்டான காரியம் பாண்டமாகும். இதுபோல் உலகத்திற்கு மாயை முதற்காரணமும், சத்தி துணைக்காரணமும், சிவம் நிமித்த காரணமுமாம். இம்மூன்று காரணங்களால் உலகமாகிய காரியம் உண்டாயிற்று. மண் பாண்டமாகிய உருவத்தை யடைந்தது. அடைந்தும் அது மண்ணேயாயிருக்கிறது. அது உடைந்த பின்னும் மண்ணேயாயிருக்கும். அதுபோல் மாயை பிரபஞ்சமாகக் காரியப்பட்டது. காரியப்பட்ட பிரபஞ்சமும் மாயாரூபமே யன்றி வேறல்ல. (8-வது பக்கம் "மாயையே" என்னுஞ் செய்யுளைக்காண்க). பிரபஞ்சமழிந்த பின்னும் மாயையாகவே அழியாமல் நிலைத்திருக்கும். (இவ்விடத்தில் பிரபஞ்சம் என்றது தனுகரணபுவனபோகங்களாம்). இவ்வாறு கடவுள் நிமித்த காரணமாயிருந்து தம்மைப்போலவே தோற்றமும் ஈறுமில்லாத ஆன்மாக்களுக்குத் தோற்றமும் ஈறுமில்லாத மாயையைக்கொண்டு சரீரங்களைக் கொடுத்தலும், அவைகள் வசிக்கும் இடங்களான புவனங்களை யுண்டாக்குவதுமே சிருட்டி (படைத்தல்) என்று சொல்லப்படும். கடவுள் மாயையினின்றும் விரித்த தனுகரணபுவன போகங்களை மறுபடியும் பழமைபோல் மாயையில் ஒடுக்குவது சங்காரம் என்னப்படும். அவர் தனுகரணபுவன போகங்களை ஆன்மாக்கள் அனுபவிக்கச் செய்தல் திதி (காத்தல்) என்னப்படும்.



மாயை தானே பிரபஞ்சமாக விரிந்தது என்னலாகாதோ, கடவுள் ஒருவரைப் பிரபஞ்சத்திற்கு நிமித்த காரணராகச் சொல்லவும் வேண்டுமோ வெனில், மண் தானே பாண்டமாகாது. குயவனே மண்ணைப் பாண்டமாக்குவான். அதுபோல் மாயை சடம் (அறிவில்பொருள்) ஆதலால் அது தானே பிரபஞ்சமாகக் காரியப்படாது. ஆன்மாக்கள் அறிவுடைப்பொருள்களாகையால் அவைகளே மாயையைக் காரியப்படுத்தும் என்னலாகாதோ வெனில், கூறுவாம். ஆன்மாக்கள் அறிவுடைப் பொருள்களாயினும் அவை பாசவசப்பட்டு அறிவும் ஆற்றலும் குன்றிக்கிடக்கின்றன. ஆதலால் ஆன்மாக்கள் தாமே மாயையைக் காரியப்படுத்தமாட்டா. மலரகிதராய் பேரறிவும் பேராற்றலும் உள்ள முழுமுதற்கடவுளே மாயையைக் காரியப்படுத்த வல்லவர். ஆனால் கடவுள் வேறு, ஆன்மா வேறு, மாயை வேறு என்று ஏன்சொல்லவேண்டும், கடவுளே உயிர்களாகவும் உலகமாகவும் இருக்கிறார் என்று சொல்லலாகாதோ வெனில், அப்படியுஞ் சொல்லலாகாது. கடவுள் அறிவுமயமானவர், உயிர்களும் அறிவுடை-

பொருள்களாயினும் ஆணவமலத்தால் அறிவு மழுங்கி தாம்பெற்ற சரீரங்களுக்கேற்ப அறிவு விளங்கப்பெறுகின்றன. கடவுள் சர்வ வியாபகர். உயிர்கள் தாம்பெற்ற சரீரத்தினளவாக வியாபித்திருக்கும். கடவுள் உயர்வொப்பில்லாதவர். உயிர்கள் ஒன்றினொன்று உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கின்றன. கடவுள் சுதந்திரர். உயிர்கள் பரதந்திரப்பட்டிருப்பன. கடவுள் இன்பமயமாயிருப்பவர். உயிர்கள் துக்கமயமாயிருக்கின்றன. இவற்றாலும் இவைபோன்ற பல காரணங்களாலும் கடவுளே உயிர்களாயிருக்கிறார் என்று சொல்ல இடமில்லை. உலகம் சடமாயிருத்தலினால் சித்துப்பொருளாகிய கடவுளே சடப்பொருளாகிய உலகமாயினார் என்று சொல்லவும் இடமில்லை. ஆனால் வேதங்கள் கடவுளே எல்லாமாயிருக்கிறார் என்கின்றனவே, இதற்கென்ன பொருள்? எனில், அதற்கும் சமாதானம் கூறுவாம். தமிழ்வேதமாகிய திருவாசகமும்,

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ." ◆

என்று கடவுள் எல்லாமாயிருக்கிறார் எனக்கூறிற்று. வேதம் இவ்வாறு கூறுவது கடவுளே உலகும் கடவுளே உயிருமாம், கடவுளைத் தவிர இரண்டாவது பொருளில்லை என்று கூறியதன்று. கடவுள் உலகுயிர்களோடு அவைவேறு தாம்வேறு என்னாதபடி அத்துவிதமாய் உடலும் உயிரும்போல் கலந்திருக்கிறார் என்று கூறியதாகும். (இதனைக் கடவுளின் வியாபகம் என்னும் இன்னொரு வியாசத்தில் விளக்குவோம்). கடவுள் எல்லாமாயிருக்கிறார் என்று சொன்ன வேதமே அவரை "அல்லையீ தல்லை யீதென" அன்மைச் சொல்லினால் துதித்தது.

### தேவாரம்.

மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை
யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை பிறிதல்லை யானாயும் பெரியாய்நீயே
யுண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை யுணர்வரிய வொற்றியூருடையகோவே.

சிலர் "கடவுளுக்கு ஏன் இந்தவேலை? அவர் சும்மாவிருக்கலாகாதா?" என்பார்கள். கடவுளுக்கென யாதொரு செயலுமில்லை. அவர் விருப்புவெறுப்பில்லாதவர்; அவர் குணங்குறியில்லாதவர்; அவர் கற்பனைகடந்த தற்பரம்பொருள். அவருடைய சந்நிதி



மாத்திரத்திலேயே பிரபஞ்சம் காரியப்படும். எப்படியெனில், சூரியன் சந்நிதியில் தாமரை அரும்புவதும் மலர்வதும் வாடுவதும்போலாம். சூரியன் தன் கிரணங்களினால் தாமரையை அரும்பவும் மலரவும் வாடவும் செய்வதுபோல், சிவபெருமான் தமது அருட்சத்தியைக் கொண்டு பிரபஞ்சத்தைத் தோற்றிக் காத்து அழிப்பார். இந்தத் தொழிலுக்கு அவர் ஆன்மாக்களின் மீதுவைத்த பேரருளே காரணமாகும்.

### தாயுமானசுவாமிகள் பாடல்.

ஆக்கி யளித்துத் துடைக்குந் - தொழி
லத்தனை வைத்துமெள் ளத்தனை யேனுந்
தாக்கற நிற்குஞ் சமர்த்தன் - உள்ள
சாக்ஷியைச் சிந்திக்கத் தக்கது தோழி,
சங்கர சங்கர சம்பு.

(இன்னும் வரும்.)

---

## வருணாச்சிரமச் சண்டை.

இப்போது எவ்விடத்தும் வருணாச்சிரமவொழுக்கங்கள் விஷயமாக வாதங்கள் நடக்கின்றன. இவ்வாதத்தில் சைவசமயிகளுள்ளும் சிலர் தலையிட்டுக்கொள்ளுகிறார்கள். இவர்களுள் ஒருசாரார் சமய ஒழுக்கங்களும் வருணாச்சிரம ஒழுக்கங்களும் ஒன்றோடொன்றுபிரிக்கப்படாமல் பின்னிக்கிடத்தலால் சைவர்கள் கட்டாயமாய் வருணாச்சிரம ஒழுக்கங்களை அநுட்டித்தல்வேண்டும் என்கிறார்கள். மற்றொரு சாரார் வருணாச்சிரம வித்தியாசங்களைப் பாராட்டுவதனால் சைவசமயம் குன்றிவிடுகின்றது; ஆதலினால், சைவசமயம்குன்றாமல் அபிவிருத்தியடையவேண்டுமாயின் வருணாச்சிரம வித்தியாசங்களைப் பாராட்டலாகாது என்கிறார்கள். அதனால் இவ்விருதிறத்தாருக்கும் அடிக்கடி விரோதம் உண்டாகிறது. வருணாச்சிரம ஒழுக்கங்களைக் கூறிய நூல்களே கலியுகத்தில் வருணாச்சிரம ஒழுக்கங்கள் கிரமமாய் நடைபெறாவெனக் கூறுகின்றன. அல்லாமலும், "மன்னவனெப்படி மன்னுயிரப்படி" என்னும் பழமொழியின்படியாகவும், "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்-நின்றது மன்னவன் கோல்" என்னும் திருக்குறளின்படியாகவும், சென்ற ஆயிரம்வருடங்களாக மகமதியர் முதலியவர்களின் அரசாட்சியின்கீழ் இத்தேசத்தவர்களுடைய வருணாச்சிரம ஒழுக்கங்கள் தாமே குன்றிவிட்டன. இன்னும் குன்றிவருகின்றன. அல்லா

மலும், இப்போது எங்கும் தேசாபிமானிகள் கிளம்பி வருணாச்சிரம வொழுக்கங்களோடு சமய ஒழுக்கங்களையும் அடியோடே தொலைத்து விட முயற்சிசெய்கிறார்கள். இவர்கள் செய்யும் முயற்சிகள் வெகு தீவிரமாய்ப் பயன்பட்டுவருகின்றன. இச்சமயத்தில், சைவசமயாபி விருத்திசெய்வதாக முன்வரும் சைவர்களும் தாங்கள் செய்யவேண்டுவன எவ்வளவோ இருக்க அவைகளைச்செய்யாமல், வருணாச்சிரமச் சண்டையில் தலையிட்டுக்கொண்டு, ஒருவரையொருவர் நிந்தித்துக் கொண்டும், வியாச்சியங்களைச் செய்துகொண்டும் இருப்பது மிகவும் விசனிக்கற்பாலதாகும்.

---

## மெய்கண்டதேவர் பிரபாவம்.

(10 - வது பக்கத் தொடர்ச்சி).

இவ்வாறு பித்தவுலகம் பிதற்ற, ஞானவரம்பாகிய மோனநிலையைத் தாங்கி சித்தந்தெளிந்து சிவமாயிருந்த மெய்கண்டதேவர், ஒருநாள் வழக்கப்படி பொல்லாப்பிள்ளையார் திருக்கோயிலையடைந்து, அவரிடம் ஞானவிசாரணை செய்திருந்தனர். அன்று அவர் அத்திருக்கோயிலுக்குப் போகுமுன்னமே, விநாயகக் கடவுளுக்குப் பூசை செய்து விட்டுப்போன சிவவேதியர் திருவருட்செயலால் மீண்டும் அக்கோயிலுக்கு வர நேர்ந்தது. அப்போது அவ்வேதியர் அவ்வாலயத்தைச் சமீபித்தலும், அதிலிருந்து ஒருசந்தடி வருவதைக் கேட்டுச் சந்தேகங்கொண்டு, மெல்லமெல்லச் சென்று பார்த்தவளவில் மெய்கண்டதேவரும் விநாயகக் கடவுளும், குருசீடபாவமாக ஒருவரை யொருவர் கேள்விகள் கேட்டலும், பதில் சொல்லுதலும், ஆட்சேபனைகள் செய்வதும், சமாதானங்கள் சொல்லுவதுமா யிருந்ததையறிந்து, அளவிலா வற்புதமும் ஆனந்தமுங்கொண்டு, உடனே விரைந்து சென்று, காங்கேய பூபதியைக்கண்டு "ஐயா, காங்கேய பூபதியாரே, உம்முடைய தவப்பயனே பயன். உம்முடைய குழந்தையை நாம் இதுவரையில் ஊமையென்றெண்ணிப் பாவத்திற்காளானோம். அவர் உலகத்திலுள்ள அஞ்ஞானவிருளைப்போக்கி உயிர்களையுச்சீவிக்கச்செய்யத் திருவவதாரஞ்செய்த ஞானசூரியனாயிருக்கிறார்" என்றுகூறி, தாம் நேரிற்கண்டதை விளம்பினர். அவ்வேதியர் விளம்பியதை யவ்வேளாளர் கேட்டு, ஒருபால் சந்தேகமும் மற்றொருபால் சந்தோஷமுங்கொண்டு அவ்வாதி சைவருடன் அத்திருக்கோயிலைச் சமீபித்து ஆராய்தலும், ஆதிசைவர் கூறியன



வெல்லாம் உண்மையா யிருக்கக்கண்டு, அடங்காத பெருமகிழ்ச்சி
யால் மெய்ம்மறந்து, அகங்குழைந்து ஆனந்தக்கண்ணீர் பொழிய
வாலயத்துட்சென்று, பொல்லாப்பிள்ளையாரையும் மெய்கண்டதேவ
ரையும் வணங்கி, உலகம் உச்சீவிக்குமாறு யாவருங்காணத் திருவாய்
மலர்ந்தருளி வரல் வேண்டுமென்று மெய்கண்டதேவரைப் பிரார்த்
திக்க, மெய்கண்டதேவரும் அதற்குத் திருவுளமிசைந்து, அன்று
முதல் அவசியமான காரியங்களுக்கு உரையாடி வருவாராயினார்.
இவ்வற்புதச் செய்தி எங்கும் பரவி யாவரும் மெய்கண்டதேவ
ரைத் தெய்வமாகக் கொண்டாடுவாராயினர். இவர் இவ்வாறிருக்க,
திருத்துறையூரில் அருணந்தி சிவாசாரியர் சகலாகமபண்டிதரென்
னுங் காரணத்திருநாமம் பூண்டு, சைவாசார துல்லியராய், நித்
திய நித்தியவஸ்து விவேகமுணர்ந்து, இம்மையாசையும் மறுமையி
லாசையும் விட்டு, சிவபெருமானுருடைய திவ்வியசரண புண்டரீக
நிழலடையும் ஆசைமீதூர, தாம் பெற்றவின்பம் இவ்வையகமும் பெற
வேண்டி, சீடர்கள் பலருக்கு வேதாகமங்களைப் பாடமோதிக்கொண்
டிருந்தனர். அவர், தமதுசீடர்களின் வேண்டுகோளுக்கிரங்கி, திரு
வெண்ணெய்நல்லூருக் கெழுந்தருளி, அவர்களுக்குப் பாடமோதி
வருகையில், அவர்கள் மெய்கண்டதேவருடைய பிரபாவத்தையறிந்து
ஒவ்வொருவராக அவரிடம் போவதைவிட்டு மெய்கண்டதேவரிடம்
போகத் தொடங்கினார்கள். அதனையுணர்ந்த அருணந்திசிவாசாரியர்,
அதிதீவிரப் பக்குவமுடையவராயிருந்தும், ஞானாசிரியரிடம் ஞானதீக்
கைபெற்று ஆணவமலம் நீங்கப்பெறாதவராயிருந்தமையால், சிறிது
பொறாமைகொண்டு, மெய்கண்டதேவரைப் பரிசோதிக்கவேண்டி,
ஒருநாள் அவரிடம்சென்று, அவர் சீடர்களுக்கு ஆணவமல இலக்
கணத்தைப் போதித்து வருவதைக்கண்டு அவரைநோக்கி "ஆணவ
மலமென்பது யாது, அதனையெவ்வண்ணம் தரிசிப்பது" என்று கேட்
டனர். மெய்கண்டதேவர் அருணந்தி சிவாசாரியருடைய அதிதீவரப்
பக்குவத்தையும், திருவருட்குறிப்பையும் உணர்ந்து, அவர்பால் கிரு
பாநோக்கஞ் செய்து, அவர் கேட்டவினாவுக்கு உத்தரமாக அவரைத்
தமது திருவிரலாற் சுட்டிக்காட்டினர். உடனே அருணந்தி சிவா
சாரியர் தாம் அவ்வாறு செருக்கி வினாவியது ஆணவமலத்தின்
செய்தி யென்று அறிந்து, சந்தேகந்தெளிந்து, மெய்கண்டதேவரு
டைய பாதபத்மங்களில் அடியற்றபனைபோல் வீழ்ந்து வணங்கி
"அடியேனை யாட்கொள்ள வெழுந்தருளிய கிருபாசமுத்திரமே,
ஞானவாரிதியே, அடியேனைப் பொறுத்தருளி அடிமைகொண்டரு

ளல் வேண்டும்" என்று கண்ணீர்சோர அழுது தொழுது வேண்டினர். மெய்கண்டதேவர் அருணந்தி சிவாசாரியருக்கு விதிப்படி ஞானதீக்கை செய்து, தமக்குப் பரஞ்சோதி முனிவர் அநுக்கிரகித்துக் கட்டளையிட்டருளியபடி, தாம் இயற்றியருளிய தமிழ்ச் சிவஞான போதத்தையும், அதற்குப் பொல்லாப்பிள்ளையார் அநுக்கிரகித்த சூர்ணிகையையும், தாம் செய்த வார்த்திகப் பொழிப்புரையையும் அவரிடம் கொடுத்து, உலகம் சைவசித்தாந்த உண்மைகளை ஐயந்திரிபற உணர்ந்து உச்சீவிக்கும் வண்ணம், ஏது திருஷ்டாந்த பூர்வகமாயும் ஆக்ஷேப சமாதானங்களுடனும், பரபக்ஷ சுபக்ஷங்களாக ஒரு நூல் செய்யும்படி கட்டளையிட்டுச் சிலகாலஞ் சென்று திருவெண்ணெய் நல்லூரில் ஐப்பசிமாதம் சுவாதிநட்சத்திரத்தில் சிவசாயுச்சியம் பெற்றனர்.

---

## சிவஞானபோதச்சிறப்பு.

(இதனை 47 - வது பக்கத்திலுங் காண்க.)

சிவஞானபோதம் தமிழ்மொழி வடமொழி என்னும் இரண்டு பாஷைகளிலும் உள்ள வேதாகமசாரமான தெய்விகநூலாகும். வடமொழிச் சிவஞானபோதம் சிருட்டிகாலத்தில் பரமசிவம் சதாசிவமூர்த்தியை யதிட்டித்துத் திருவாய்மலர்ந்தருளிய காமிகமுதலிய இருபத்தெட்டு திவ்வியாகமங்களுள், ருரு என்பவருக்கு உபதேசித்த காரணத்தால் இரௌரவம் எனப்பெற்ற ஆகமத்தில் பாசவிமோசனப்படலத்தில், பன்னிரண்டு சூத்திரரூபமாயிருப்பது. தமிழ்ச் சிவஞானபோதம். பசுகரணம் நீங்கிப் பதிகரணம்பெற்றுச் சிவமாய் விளங்கிய மெய்கண்டதேவரால் பன்னிரண்டுசூத்திரங்களாகத் திருவாய்மலர்ந்தருளப்பெற்றது. சிறுமீன் சினையினும் நுண்ணிய விதையில் மிகப்பெரிய ஆலமரம் அடங்கியிருத்தல்போல் இந்நூலில் உலகத்திலுள்ள பற்பலமதங்களின் கோட்பாடுகளும், அவற்றின் பூர்வபட்சங்களும், திரிபதார்த்த இலக்கணங்களும் அடங்கி யிருக்கின்றன. இவ்விதமாகச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஞானநூல்கள் தமிழிலும் வடமொழியிலுமே யன்றி வேறு பாஷைகளில் இல்லாமையால் தமிழ்மொழி வடமொழிகளின் விசேடம் இனைத்தென உணரலாகும். இந்நூலைவிரித்து அருணந்திசிவாசாரியர் சிவஞான சித்தியார் என்னும் வழிநூல் செய்தருளினர். மெய்கண்டதேவர் சந்நிதியில் தாம்கேட்ட கேள்விகளுக்கு அவர் திருநோக்கால் தம



க்கு விளங்கிய பொருள்களை "இருபாவிருபது" என்னும் நூலாகக் கூறியருளினர். மெய்கண்டதேவருடைய மற்றொரு மாணாக்கராகிய திருவதிகை மனவாசகங் கடந்தார் "உண்மைவிளக்கம்" என்னும் நூலை யருளிச்செய்தனர். அருணந்தி சிவாசாரியருடைய மாணாக்கராகிய மறைஞானசம்பந்த சிவாசாரியருடைய அநுக்கிரகம்பெற்ற தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியர் சிவஞானபோதத்தின் புடைநூல்களாகிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் எட்டுச் சைவசித்தாந்த சாத்திரங்களைச் செய்தருளினர். இவ்வெட்டும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண்மைவிளக்கம், உய்யவந்ததேவர் அருளிய திருவுந்தியார், திருக்கடவூர் உய்யவந்ததேவரருளிய திருக்களிற்றுப்படியார் என்னும் ஆறும் கூடிச் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்காகும்.

### சித்தாந்தநூல்களின் திருநாமங்கள்.

உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மைப் பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

வடநூற்கடலும் தமிழ்நூற்கடலுங் கரைகண்டுணர்ந்த மாதவச் சிவஞானமுனிவர், சிவஞானபோதத்திற்குத் திராவிட மகாபாஷியம் என்னும் விருத்தியுரை செய்தருளினர்.

---

## பற்று.

பற்று, பாசம், பந்தம், அவா, ஆசை என்பன ஒருபொருட் சொற்கள். பற்று, அகப்பற்று புறப்பற்று என இருவகைப்படும். இவை முறையே நான் எனது எனவும், அகங்காரம் மமகாரம் எனவுஞ் சொல்லப்படும். தன்னிடத்தில்வைத்த ஆசை அகப்பற்றும், தன்னைச்சார்ந்த பொருள்களாகிய மனைவி மக்கள் முதலியவர்களிடத்தும், மாதரிடத்தும், பொன் பூமி முதலியவற்றினிடத்தும் வைத்த ஆசை புறப்பற்றுமாம்.

ஆன்மா என்றுஉண்டோ அன்றே அதனிடத்தில் பாசமாகிய பற்றும் உண்டு. ஆன்மா என்றும் தனித்திராது. அது பாசத்தோடாவது கூடியிருக்கும் சிவத்தோடாவது கூடியிருக்கும். அது

அசத்தாகிய பாசத்தோடுகூடி இருக்கும்போது அசத்தாகவும், சத்தாகிய சிவத்தோடு கூடி யிருக்கும்போது சத்தாகவும் இருக்கும். அதனால் அது சதசத்து என்று சொல்லப்படும். அது அசத்தாகிய பாசத்தோடு கூடியபோது பசு என்னப்படும். பாசமாகிய ஆணவ மலத்தால் விழுங்கப்பட்டிருத்தலால் அணு என்றுஞ் சொல்லப்படும். அது ஆணவமலத்தோடு கூடியபோது ஆன்மா வேறு ஆணவமலம் வேறு என்னாதபடி ஆணவமலமேயாயிருக்கும். ஆணவமலத்தினின்றும் நீங்கிச் சிவத்தோடு கூடியபோது சிவம் வேறு தான் வேறு என்னாதபடி சிவமேயாயிருக்கும். இவ்வாறு சிவமும் ஆன்மாவும் பாசமும் ஒற்றுமைப்பட்டு நின்றநிலை அத்துவித நிலையென்று சொல்லப்படும். ஆன்மா பாசத்தோடு அத்துவிதமாக (இரண்டறக்கலந்து) நிற்கும்நிலை பெத்தநிலையெனவும், சிவத்தோடு இரண்டறக்கலந்திருக்கும் நிலை முத்திநிலை யெனவுஞ் சொல்லப்படும்.

**தாயுமானசுவாமிகள்.**

*ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்*
*தாணுவினோ டத்துவிதஞ் சாரநா ளெந்நாளோ.*

ஆன்மா பெத்தநிலையிலே அஞ்ஞானத்தினாலே பொருளல்லாதனவாகிய தேகாதிப்பிரபஞ்சங்களைப் பொருளென மதித்து அவற்றினிடத்தில் மேலும்மேலும் பற்றுவைத்தலினால் ஓயாமல் பிறந்து பிறந் துழல்கின்றன.

**திருக்குறள்.**

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானா மாணாப் பிறப்பு.

ஆதலால் மோட்சாபேட்சை யுடையவர்கள் தேகாதிப் பிரபஞ்சங்களிடத்தில் பற்று ஒழிந்திருத்தல்வேண்டும். மோட்சம், முத்தி, வீடு என்பன ஒருபொருட்சொற்கள். இவையாவும் (பற்று) விட்டிருத்தல் என்னும் பொருளையே தருதலால் பற்றுவிட்டிருத்தலே முத்தி யென்னப்படும். (வீடு என்பது விடுதல் என்னும் சொல்லின் திரிபாகிய முதனிலைத்திரிந்த தொழிற்பெயர்.)

மனிதர்கள் பற்றையொழிப்பதற்குப் பற்பல உபாயங்களை யநுசரிப்பர். சிலர் துறவறத்தால் பற்றையொழிக்க முயலுவர். சிலர் தவம் யோகம் முதலியவற்றால் அதை யொழிக்கப் பார்ப்பர். சிலர் ஞான நூலாராய்ச்சியால் அதனை நீக்க வழிதேடுவர்.

(இன்னும் வரும்.)

OFFICE OF THE REGISTRAR OF ... 23 JUL 1915 MADRAS.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் 1.] | ராக்ஷசஹு சித்திரைமீ 1915ஹு ஏப்ரல்மீ | [இதழ் 4. |
|---|---|---|

## ஞானப்பிரகாச சம்பாஷணை.

(47 - வது பக்கத்தொடர்ச்சி.)

"கடலன்ன பொய்மைகள் செய்யினும் வெய்ய கடுநரகத்
திடநம னேபுதற் கெவ்விடத் தானிருஞ் செந்தமிழாற்
றிடமன்னு மாமதிற் சண்பைத் தலைவன்செங் தாமரையின்
வடமன்னு நீண்முடி யானடிப் போதவை வாழ்த்தினமே."

என்பிதா சுமார் ஆறுமாதம் வரையில் படுக்கையிலேயே இருந்து மெத்தவும் துன்பப்பட்டுக்கொண்டிருந்தார். முதலில் இரண்டொருமாதம் அவர் சிநேகிதர்கள் அவரை அடிக்கடிவந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிறகு ஒருவர்பின் ஒருவராக எல்லோருமே வராமல் நின்றுவிட்டார்கள். அதுமுதல் என்னையாருங் கேட்பாரில்லாமல் என்வீட்டிற்கு நானே பெரியமனுஷனாய் விட்டேன். பலரும் என்சிநேகிதர்களாய் என்தகப்பனார் இறக்குமுன் எனக்கு ஒன்றுங்குறையாமல் எல்லாத் தீயபழக்கங்களையும் பழக்கிவிட்டார்கள். நான் என்னைக் குபேரனாகவெண்ணிக்கொண்டு எல்லாத் தீய வழிகளிலும் பணத்தை வாரி வாரி யிறைக்கத் தொடங்கிவிட்டேன். என் தீயஒழுக்கங்களை இந்தச் சன்னிதானத்திற்சொல்ல என்மனங் கூசுகின்றது. இவைகளையெல்லாம் என்தகப்பனார் பார்த்துக்கொண்டிருந்து வேறெதுவுஞ் செய்யமாட்டாமல் அழுதவண்ணமாயிருந்து இறந்துபோனார். அவர் இறந்ததனால் எனக்குச் சிறிதும் வருத்தம் உண்டாகவில்லை. என்னைப்பிடித்திருந்த சனி அன்றோடே தொலைந்துவிட்டதென்று எண்ணினேன். என் சிநேகிதர்கள் நிரப்பயமாய் என்வீட்டுக்குவந்து ஆடல்பாடல்களைச் செய்வாராயினர். அவர் இறந்தபோது சுமார் இருபது லட்சம் ரூபா பெறும்சொத்துகள்

இருந்தன. அவைகள் நான் கஷ்டப்படாமல் கிடைத்தபொருளாகையால் அருமைதெரியாமல் ஆயிரம்வராகனை அரைகாசாக மதித்து அவைகளை யெல்லாம் பத்து வருஷத்திற்குள் என்மனம் போனபடியெல்லாஞ் செலவிட்டுப் பாழாக்கினதுமன்றி என்தாயாருடைய புடைவைகள்முதல் சீதன சொத்துகளைக்கூட ஒன்றில்லாமல்விற்று அழித்துவிட்டு என் தாயாரை நடுத்தெருவில் விட்டுவிட்டேன். கடைசியாக, என் அம்மான் என்தாயார்மீது வைத்த இரக்கத்தால் தான் செய்யும் வர்த்தகத்தில் எனக்கு ஒருபங்கு கொடுத்து எங்களிருவரையும் காப்பாற்றினார். முன் என்னிடம் கும்பல் கும்பலாய் வந்திருந்த சினேகிதர்கள் எவர்களும் இப்போது என்னைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. இப்போது எனக்கு அரைகாசு ஆயிரம் வராகனாக இருக்கிறது. நான் கெட்டதற்கு என்பிதா வைத்துப் போன ஆஸ்தியே காரணமாக இருந்தது. அது நீங்கினதே நான் இப்போது தங்களைத் தரிசித்தற் கிடங்கொடுத்தது. இதுவரையில் தங்களுடைய அருமையான காலத்தைப் பாவியாகிய என் வரலாற்றைச் சொல்லிப் போக்கினதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். என்னை மன்னித்துத் தங்களுக்குத் தொண்டனாக்கிக்கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். ஞானப்பிரகாசர் அப்பா "பொருட்செல்வத்தை நிந்திப்பதனால் என்னபயன்? மனிதர்கள் அடையவேண்டிய புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள் பொருளும் ஒன்றல்லவா? நெருப்பு மனிதர் கையிலிருக்கும்போது பல நற்காரியங்களுக்கு உபயோகப்படுகிறது. அது சேற்றில் புரளும் எருமைக் கடாவிடம் இருந்தால் என்னபயனைத்தரும்? அதுவே குரங்கின் கையிலிருந்தால், குரங்கைமாத்திரமன்றி ஊரையுங் கொளுத்தி நாசஞ்செய்துவிடும். அதுபோல், செல்வப்பொருளும் உயர்ந்தோரிடமிருந்தால் அவர்களுக்கு மாத்திரமன்றி உலகினர் பலர்க்கும் பயன்படும்.

**திருக்குறள்.**

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.

பலபுண்ணியவான்கள் "காவினை யிட்டுங் குளம்பல தொட்டும் கனிமனத்தால்" ஆலயங்கள்கட்டி, பூசை திருவிழா முதலியன செய்விக்கிறார்கள். பாடசாலைகள் வைக்கிறார்கள். வைத்தியசாலைகள் கட்டுகிறார்கள். சத்திரங்கள் கட்டியும், தண்ணீர்ப்பந்தர்கள் வைத்தும், அன்னதானங்கள் செய்தும் உபகரிக்கிறார்கள். சென்னைச் சிவனடி



யார் திருக்கூட்டத்தார் சுமார் 17வருடங்களாகப் பலசிவதலங்களுக்கு யாத்திரைசெய்து பலசிவனடியார்களுக்குச் சிவதரிசனஞ் செய்வித்ததுமன்றி, பாடசாலைவைத்துச் சிறுவர்களுக்குக் கல்விகற்பித்துச் சமயபோதனை செய்வித்தும், "சைவம்" என்னும் பத்திரிகை வெளியிட்டும், சைவசமய பரிபாலனஞ் செய்துவருகிறார்கள். இவைகளெல்லாம் பொருளில்லாமற் செய்யலாகுமோ? உத்தமரிடம் பொருளிருந்தால் அது புண்ணிய வழியிலேயே செலவாகும். மத்திமரிடம் பொருளிருந்தால் அவர்கள் தங்களுக்கு உலகவாழ்க்கைக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மாத்திரம் வைத்துக்கொண்டு எஞ்சிய பொருளைக்கொண்டு தானதருமங்கள் செய்வார்கள். அதமர்கள் எவ்வளவிருந்தாலும் பரோபகாரம் செய்யாமல் தாங்களே யனுபவிப்பார்கள். அதமாதமர்கள் எவ்வளவிருந்தாலும் திருப்தியடையாமலும் தாங்களும் அனுபவியாமலும், தானதருமஞ் செய்யாமலும் மேலுமேலுஞ் சேர்த்துவைத்து யாதொரு பயனுமடையாமல் சாவார்கள்.

**திருக்குறள்.**

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

இவர்களுடைய செல்வம் கடைசியாகத் தீயவைகளுக்கே பயன்படும்.

**ஔவையார்.**

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காங்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்.

அதமாதமரிடம் இருக்கும்பொருள் அவர்களுக்கு இன்பம் தருவதாகக் காணப்பட்டாலும், முடிவில் குரங்கின்கையில் கிடைத்த கொள்ளியைப்போல் அவர்களுக்கு மாத்திரமன்றி பிறர்க்கும் துன்பந்தரும். ஆதலால் செல்வப்பொருளை நிந்திப்பதனால் பயனில்லை பொருளை நல்லவழியில் சம்பாதித்து நல்லவழியில் செலவிடவேண்டும். நல்லவழியில் சம்பாதித்த பொருள்களைக்கொண்டு புகழைக் கருதாமல் தானதருமங்கள் செய்தால் புண்ணியம் வளரும். புண்ணியம் வளர வளர ஞானமுண்டாகும்.

தானந் தவந்தருமஞ் சந்ததமுஞ் செய்வர்சிவ
ஞானந் தனையணைய நல்லோர் பராபரமே.

என்று தாயுமான சுவாமிகளும்,

விளக்கினார் பெற்ற வின்ப மெழுகினாற் பதிற்றி யாகும்
துளக்கினன் மலர்தொ டுத்தாற் றூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்
அளப்பில்கீ தஞ்சொன் னாருக் கடிகடா மருளு மாறே.

எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளினார்கள். இதனால் சிவஞானம் உண்டாதற்குச் சிவ புண்ணியஞ் செய்யவேண்டுமென்பது விளங்கும். மேலோர்கள் நீரில் தோன்றும் அலைகளைப்போல் நிலையில்லாத பொருளைப் பெற்றால் அதைக் கொண்டு என்றும் நிலைத்திருப்பதாகிய சிவபுண்ணியங்களைச்செய்து கடைசியில் சிவஞானம்பெற்று இறைவரது திருவடி நீழலாகிய பேரின்பத்தைப் பெறுவர். இது பற்றியே பொய்யா மொழியாரும் "அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா - லற்குப வாங்கே செயல்" என்று அருளிச் செய்தனர். அறிவிலிகளோ செல்வத்தால் மயங்கி பாபஞ்செய்து பிறப்பிறப்புகளிற் பட்டுழல்வர்" என்று கூறி இராமசாமியும் தாமுமாகப் பின்னும் பின்வருமாறு சம்பாஷணை செய்யத் தொடங்கினார்கள்.

ஞானப்பிரகாசர்—அப்பா, உன் வரலாறு இருக்கட்டும். உனக்கு நான் கடவுளைக் காட்டவேண்டுமா ?

ராமசாமி—ஆம் ஆம் சுவாமி.

ஞா—நீ கடவுளைக்காணவிரும்புவது எனக்கு மெத்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஆனால், நான் உனக்கு வேறாகிய கடவுளைக் காட்டுவதற்குமுன் நீ உன்னைக் கண்டாயா ? என்று கேட்கிறேன். இதற்கென்ன பதில் சொல்லுகிறாய் ?

ரா—சிலர் நானே எங்கும் நிறைந்த பிரமம் என்கிறார்கள். சிலர் நான் இந்தத்தேகத்திற்கு வேறாகிய ஆன்மா வென்கிறார்கள். இன்னும் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். இவைகளிலெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை. பிரிதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு பூதங்களும் ஒன்று கூடியபோது தேகம் உண்டாகிறதென்பதும் அத்தேகத்தில், பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு இம்மூன்றுங் கூடியபோது செந்நிறம் உண்டாவதுபோல், அறிவு உண்டாகிறதென்பதும்; ஆகையால் அறிவு என்பது தேகத்தின் குணமேயன்றி அதற்கு வேறாயதோர் பொருளல்ல வென்பதும் என் அபிப்பிராயம்.

ஞா—"இல்லது வாராது உள்ளது போகாது" என்றபடி, பாக்கும் வெற்றிலையும் சுண்ணமுங் கூடியபோது அவைகளில் முன்



இல்லாத செந்நிறம் உண்டாய்விடவில்லை. பாலில் முன்காணாத நெய்யும், விறகில் முன்காணாத நெருப்பும் கடைந்தபோது வெளிப்பட்டுத் தோன்றுவதுபோல் பாக்கு முதலியவற்றில் முன் கண்ணுக்குத் தெரியாதிருந்த செந்நிறம் அவை கூடியபோது வெளிப்பட்டுத் தோன்றியது. அன்றியும், அவைகளிலிருந்து தோன்றிய செந்நிறமும் அவைகளைப்போலவே சடப்பொருளன்றி சித்துப்பொருளன்று. பிரிதிவி முதலிய பொருள்களின் காரியம் தேகம் என்பது எனக்கும் உடன்பாடே; ஆனால், தேகத்தில் பிரிதிவியின் குணம் அப்புவின் குணம் தேயுவின்குணம் வாயுவின்குணம் ஆகிய நான்கும் இருக்கின்றன. அக்குணங்களோ, கடினம், சீதளம், வெம்மை, சலநம் என்னும் ஜடகுணங்களாம். அவைகளுக்கு அறிவில்லை. அவைகளுக்கு மாறாகிய அறிவு அத்தேகத்திலிருக்கிறது. இவ்வறிவு தேகத்தின் குணமாகுமா ?

ரா—தேகம் குழந்தைப்பருவத்தில் அறிவு குறைந்திருக்கிறது. அது வளரவளர அறிவும் வளர்ந்து வருகிறது. தேகம் தளர்கிறபோது அறிவும் தளர்கிறது. இந்த அறிவு மூளையில் உற்பத்தியாகிறது. தேகம் வளரவளர மூளை வளர்கிறது. அதனுடன் அறிவு வளர்கிறது. மூளைக்குக் கெடுதிவரும்போது அறிவுங் கெடுகிறது. மனிதர் நல்ல நிலைமையிலிருக்கும்போது அறிவும் நல்ல நிலைமையிலிருக்கிறது. மதுபானம் செய்தாலும் "குளோரபாரம்" என்னும் விஷத்தை மோர்ந்தாலும் இரத்தம் கெட்டு மூளையிற் சேர்ந்தவுடன், அறிவு மயக்கம் உண்டாகிறது. இதனால் மூளையில்லாவிட்டால் அறிவுமிராதென்பது விளங்கவில்லையா ?

ஞா—ஒரு நெருப்புக்குச்சியைக் கீழேதேய்த்தால் கொஞ்சம் நெருப்பு உண்டாகிறது, அதன்மேல் கொஞ்சம் விறகை யொடித்து வைத்தால் அவ்வளவு நெருப்பு அதிகரிக்கிறது. கொஞ்சங் கொஞ்சமாக மலையளவு விறகுபோட்டால் அவ்வளவுக்கு நெருப்பு ஓங்குகிறது. அது தணிந்து வரவர நெருப்பு குறைகிறது. இதனால் நெருப்பை விறகின் குணமென்னலாமோ ? அக்கினியானது விறகு முதலியவற்றைப் பற்றி வர்த்திப்பதுபோல், ஆன்மாவானது இந்திரியங்கள் கரணங்கள் முதலிய வற்றோடுகூடிய தேகத்தைப்பற்றி வர்த்திக்கும் இயல்புடையதாம். அக்கினி விறகின் குணமாகாததுபோல் அறிவு அல்லது ஆன்மா தேகத்தின் குணமாகாது. ஆதலால் ஆன்மா தேகத்தின் வேறாயதோர் அறிவுப் பொருளென் றுணரக்கடவாய்.

ரா—சுவாமி, எனக்கு இதுவரையில் யாரும் இந்த உபமானத்தைச்சொல்லி விளக்கினதில்லை. ஐரோப்பியர்களுள் பல கல்வியாளர்கள் கடவுள் இல்லை யென்றே தீர்மானஞ் செய்திருக்கிறார்கள்.

அவர்கள் வெளியிட்ட புத்தகங்களைப் படித்தே நான் இதுவரையில் கடவுளில்லை யென்றும் ஆன்மா இல்லையென்றும் நம்பினேன்.

ஞா—ஐரோப்பியருள்ளும் பெரும்பாலார் கடவுள் உண்டு என்றும் தேகத்திற்கு வேறாக ஆன்மாவுண்டு எனவும் நம்பி கடவுள் வழிபாடு செய்யவில்லையா ?

ரா—ஆம், செய்தாலும் அவர்களெல்லாம் நுண்ணிய ஆராய்ச்சியின்றி, புத்தகங்களில் கடவுள் உண்டு என்று எழுதியிருப்பதை நம்பி அவ்வாறு செய்கிறார்களேயன்றி, ஒருவராவது கடவுளைக்கண்டதாகக் காணப்படவில்லை.

ஞா—அப்படியா! ஐரோப்பியருள்ளும் மிகுந்த கல்வியாளர்கள் நுண்ணிய ஆராய்ச்சிசெய்து தேகத்திற்குவேறாக அறிவுரூபமாகிய பொருள் ஒன்று இருக்கிறதென்று தீர்மானஞ்செய்து சமீபத்தில் வெளியிட்ட நூல்களை நீ வாசித்ததில்லையா ?

ரா—நான் என்பிதா இறந்தபிறகு புத்தகத்தைத் தொட்டதேயில்லை. ஆதலால் மேல் நாட்டார் நவீனமாகக் கண்டுபிடித்திருப்பது எனக்குத் தெரியாது. இந்தத் தேகத்திற்கு வேறாக அறிவுரூபமாகிய ஆன்மாவொன்றிருந்தால் நமக்குக் கடவுள் ஏன் காணப்படவில்லை. இச்சந்தேகத்தைத் தாங்களே அன்புகூர்ந்து தெளிவித்தல் வேண்டும்.

ஞா—நீ கடவுள் காணப்படவில்லை யென்பது கண்ணுக்கேயன்றோ.

ரா—ஆம்.

ஞா—கண்ணுக்குப் புலப்படாமையால், கடவுள் இல்லையென்று சொல்லிவிடலாகாது. கண்ணுக்குக் காணப்படாத பொருள்கள் இன்னும் பலவுள. அவற்றுள் மனமும் ஒன்று. இந்தமனம் அந்தக்கரணங்களுள் ஒன்றாம். இது கண்ணுக்குக் காணப்படாமையால் மனம் இல்லையென்று சொல்லலாகாது. தேகமானது ஒன்றினையுங் காணாது. அத்தேகத்தைக் கண்காணும். அக்கண்ணைக் கரணங்கள் காணும். அக்கரணங்களை ஆன்மாகாணும். அவ்வான்மாவைக் கடவுள் காண்பார். கடவுளை ஆன்மாகாணாது. ஆன்மாவைக் கரணங்கள் காணா, கரணங்களைக் கண்காணாது. கண்ணைத் தேகங்காணாது. இவற்றுள் கண் தேகத்தைமாத்திரம் காணும். கரணங்கள் தேகத்தையுங் கண்ணையுங் காணும். ஆன்மா தேகத்தையும் கண்ணையும் கரணங்களையுங் காணும். கடவுள் தேகத்தையும் கண்ணையும் கரணங்களையும் ஆன்மாவையும் காண்பார். ஆதலால் ஆன்மா கடவுளைக் காணாமையால் கடவுளில்லையென்று சொல்லிவிடலாகாது.

(இன்னும் வரும்)

---

## பரிமேலழகருரைச் சந்தேகவினா.

கற்ற பெரியோர்களே!

திருக்குறளிற் பரிமேலழகர் புதல்வரைப் பெறுதல் கூறிய அதிகாரத்தை எல்லார்க்கு மொப்ப வுரையாது முதன் மூன்று வருணத்தார்க்கே யுரைத்தும், முதற்செய்யுளில் மக்கள் என்னும் பொதுப்பெயரை (அறிவறிந்த) என்றதினால் பெண்ணொழித்து நின்றதெனப் பொதுநீக்கி ஆண்பாற் பன்மைப் பொருள்கொண்டுரைத்தும் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் எல்லார்க்கும் ஒப்பப் பொது வேதமாக முற்றத் தொகுத்துக் கூறிய தமிழ் வேதமாகிய திருக்குறளில் மேற்படி அதிகாரத்தையும் செய்யுளையும் உலகியலிற்கும் ஆசிரியர் கருத்திற்கும் மாறுகொள வுரைத்தார் போலக் காணப்படுகின்றது. எங்ஙனமெனில்:—

அவர் உரையே ஆசிரியர் கருத்தாயின், "புதல்வனைப் பெறுதல்" என்று அதிகாரித்தல் அமையுமன்றிக் கவிக் கூற்றாய் அதிகாரத்துப் பன்மைப்பெயர் கொண்டதிகாரித்தல் கவிக்கமையாதென்க. அஃதமையுமெனின், "மைந்தரைப்பெறுதல்" என்று ஆண்பாற் பன்மைப் பெயர் கொண்டதிகாரித்தலமையு மன்றிப் பொதுப்பெயர் கொண்டதிகாரித்தல் அமையாதென்க. ஆகவே ஆசிரியர் ஆணும் பெண்ணுமாகிய மக்களையே தொகுத்துக்கூறுவார், "புதல்வரைப் பெறுதல்" எனப் பொதுப்பெயர் கொண்டதிகாரித்தாரென்பது பெறப்படும். அங்ஙனம் பெறப்படுதற்கு முன் ஆறு செய்யுளில் மக்கள் என்னும் பொதுப்பெயராற் கூறியும் பின் மூன்று செய்யுளில் ஆண்மகனைச் சிறப்புநோக்கி "மகன்" எனப் பிரித்துச் சிறப்பித்து ஆண்பாலொருமையிற் கூறியதுமே சான்றாமென்க. அன்றியும், அவருரை இருபிறப்பாளர் மூவரும் தென்புலத்தார் கடனிறுத்தற் பொருட்டு மாத்திரம் புதல்வரைப் பெறுதல் அமையுமன்றி அவராற் பிறபயன்களின்றென்பதூஉம் சூத்திரர்க்கு அத்துணைதானுமோர் காரணமின்மையாற் புதல்வரைப்பெறுதல்இன்றியமையாச் சிறப்பினதன்றென்பதூஉம் அருத்தாபத்தியாய்த் தொனித்துக் கிடத்தலானும், உரைப்பாயிரத்திலே வருணந்தோறு முள்ள சிறப்பியல்புகளையெல்லாம் ஒழித்து எல்லார்க்கு மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொது வியல்புபற்றி இல்லறம் துறவறமென்னும் இருவகை நிலையாற் கூறப்பட்டதென்னும் கூற்றிற்கும் அதற்குப் பின்னும் முன்னுமாயுள்ள பிறவதிகாரச் செய்யுள்கட்கும் உரைத்த

கருத்திற்கு முரணுவதானும், பெண்ணின்றி உலகியலாகிய இல்லறம் கடைபோகாமையானும், பெண்பெறுதலும் உலகினுக்கு இன்றியமையாச்சிறப்புடைமை யாதலானும், அதனை உரைக்கவேண்டு மதிகாரம் வேறின்மையானும், அஃதுரையன்மை யெனவிடுதல் அமையுமாங்கொலென்றென் மனத்தி னிகழும் சந்தேகத்தை அழுக்காறுமையாகிய செம்மனத்தோடாய்ந்து இப்பத்திரிகை வாயிலாகச் சாந்தி செய்ய வேண்டுகின்றேன்.

"புதல்வரைப்பெறுதல்" என்னு மதிகாரத்தை வாழ்க்கைத் துணையோடு பொருந்திச்செய்யும் இல்லறங்களையெல்லாம் தாம் தளர்ந்துழியும் தவறுதோம்பி வழியெஞ்சாமல் இருமையும் பயத்தற் சிறப்புடையராய நன்மக்களைப் பெறுதல் எனவுரைத்தல் சிறப்புரையாங்கொல் என்றும் என்மனத்தின் ஆசங்கை நிகழ்கின்றது.

இவ்வாறு ஒரு வித்துவான் என்னிடம் வினவினர்; எனக்கும் ஐயம் உண்டாயிருத்தலால் இப்பத்திரிகை மூலமாக உங்களிடம் வினவியறிந்துகொள்ள ஆவலுடையனாயினேன்.

இங்ஙனம்,
சுவாமிநாத பண்டிதர்.

[இதற்கு விடை யெழுதுவோர் இப்பத்திரிகை கற்றவர் சிலர்க்கேயன்றி மற்றவர் பலர்க்கும் பயன்படுமாறு சைவ உண்மைகள் மிகவும் எளியநடையில் எழுதி வெளியிடப்படும் சிறு பத்திரிகையாமென்பதனை அன்புகூர்ந்து சிந்தித்து, எளியநடையில் இரண்டொரு பக்கங்களுக்கு அதிகப்படாதபடி எழுதுக.—**பத்திரிகாசிரியர்.**]

---

## இளையான்குடி மாறநாயனார் புராணம்.

"இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலா ரிளையான் குடியுடை மாறனெங் கற்பகமே."

தமிழ்வேதச் சாகைகளுள் ஒன்றாகிய திருத்தொண்டத்தொகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் தோத்திரஞ்செய்யப்பெற்ற தனிநாயன்மார்கள் அறுபத்துமூவருள், மாறனார் என்னும் பெரியார் ஒருவர் இருந்தனர். அவர் வேளாளகுலத்தில் உதித்து, இளையான்குடி என்னும் ஊரில்வசித்து, குபேரனையொத்து சகலைசுவரிய சம்பன்னராய் கற்பிற்சிறந்த காதலியாரோடுங்கூடி இல்லறம் புரிந்து, தாம் அருமையாகப்பெற்ற மானிடசரீரத்தாலும் செல்வத்தாலும்



அடையவேண்டிய பயனெல்லாம் சிவனடியார்களுக்குத் தொண்டு பூண்டொழுகுதலேயாம் என்பதையுணர்ந்து, அவ்வொழுக்கிற் சிறிதும் தவறாது நிற்பாராயினார். அவர் சிவவேடந்தரித்தவர்கள் எக்குலத்தினராயினும் எத்தகையினராயினும் அவர்களுடைய குலநலங்களைப் பாராட்டாமல், அவர்களைக்கண்ட மாத்திரத்தில் சிவபெருமானே தம்மை யாட்கொள்ளச் சகளீகரித் தெழுந்தருளினா ரென்றெண்ணி, அகமகிழ்ந்து முகமலர்ந்து எதிர்கொண்டணைந்து, அவர்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, உபசாரமொழிகளைக் கூறி, தமது வீட்டுக் கழைத்துச்சென்று, அவர்களுடைய திருவடிகளைப் பரிசுத்தமாகிய நீரினால் விளக்கி, அந்நீரைக் கங்காசலத்தினும் சிறந்ததாக எண்ணித் தமது சிரத்தின்மேல் தெளித்துக்கொள்வார். அதனைத் தேவாமுதத்தினும் இனியதாக எண்ணி உள்ளும் பருகி யுள்ளங் குளிர்வார். பலவிதமான பலகார பட்சணங்களுடன் அவர்கள் விரும்பியவாறெல்லாம் திருவமுது செய்விப்பார். அவர்களுடைய பரிகல சேஷத்தையுண்டு விண்ணவரமுதைவெம்பென வெறுப்பார். அவர் இவ்வாறு வெறும் அன்பு காரணமாகச்செய்து வந்த சிவனடியார் பூசையால், நாளடைவில் அகப்பற்றும் புறப்பற்றுமாகிய இருவகைப் பற்றுகளும் அவரை விட்டு நீங்கி, அன்புருவமாய் விளங்கினார். மெய்யன்பர்களின் அன்பே தமது வடிவமாகக் கொண்ட சிவபெருமானார் அவருக்கு அருள் சுரக்கும் பருவம் சமீபித்தது. சமீபித்ததும், சிவபிரானார் அவரையாட்கொண்டு அவர் பெருமையை உலகத்தார்க்கு அறிவிக்கவேண்டியும், உண்மைச் சிவனடியார்கள் செல்வம்வந்த காலத்தில் மாத்திரமன்றி கொடிய தரித்திர முதலிய இடையூறுகள் வந்த காலத்திலும் அணுவளவாயினும் அன்பு நீங்கப்பெறார் என்பதை உலகத்தினர் அறிந்து உச்சீவிக்கவேண்டியும், அவருக்கு வறுமை நேரிடும்படிச் செய்தருளினார். அதனால், அவருடைய அளவிறந்த செல்வமெல்லாம் அவருடைய வினையைப்போல் குறைந்துகொண்டே வந்தது. அவர் ஒவ்வொன்றாகத் தமது விளை நிலங்களையெல்லாம் விற்றனர். வீடுகளையெல்லாம் விற்றனர். கன்று காலிகளையெல்லாம் விற்றனர். ஆடையாபரணங்களையெல்லாம் விற்றனர். உண்கலம் முதலாக எல்லாப் பாத்திரங்களையும் விற்றனர். கடைசியாகக் கடன்வாங்கியும், பிறரிடம் அடிமைத் தொழில் செய்தும் பட்டினிகிடந்தும் சிவனடியார்களைப் பூசித்து வந்தனர். அவருடன் பன்னெடுநாட் பழகிய சினேகிதர்களும் சுற்றத்தவர்களும் "அற்ற குளத்தினறு நீர்ப்பறவைபோல்," அவ்வை

விட்டு நீங்கினார்கள். ஆனாலும், அவர் சிவனடியார்களிடம் வைத்திருந்த அன்புமாத்திரம் அணுத்துணையேனும் அவரைவிட்டு நீங்கவில்லை. அன்பர்பணி செய்தலையே அரும்பெருஞ் செல்வமெனக் கொண்டு இந்திரச்செல்வமும் எட்டுச் சித்தியும் துரும்பென மதித்து வாழும் பெரியோர்களைத்தரித்திரம் என்ன செய்யக்கூடும் ?

### பட்டணத்தடிகள் திருப்பாடல்.

*கொண்டல் வண்ணத்தவ னான்முக னிந்திரன் கோமகுடத்*
*தண்டர் மிண்டித்தொழு மம்பலக் கூத்தனுக் கன்புசெய்யா*
*மிண்டர் மிண்டித் திரிவாரெனக் கென்னினி நாணவன் றன்*
*றொண்டர் தொண்டர்க்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கினனே.*

அவரிடத்திற் செல்வமிருந்தபோது திரண்டு திரண்டுவந்து அவரைப் புகழ்ந்து விருந்துண்ட அவருடைய சுற்றத்தாரும் மற்றவர்களும் அவரை இகழத்தலைப்பட்டார்கள். அவர்கள் அவரை நோக்கி "ஐயா, மாறனாரே, நீர் தரித்திரம்பிடித்து இரந்துண்ணும் சிவனடியார்களைப் பூசித்துப் பூசித்து இந்தத் துர்ப்பாக்கியமான நிலைமைக்கு வந்தும் இன்னும் உமக்குச் சிவனடியார் பைத்தியம் நீங்கவில்லையே" என்பார்கள். "இரந்துண்ணும் சிவனைப் பூசிப்பவர்கள் அச்சிவனைப்போலவே இரந்துண்பவர்களாவார்கள் என்று நாங்கள் பலகாலுஞ் சொல்லியும் உமக்குத் தெரியவில்லையே" என்பார்கள். அவர் அவ்வாறு கூறுவோர்களுடைய அறிவீனத்திற் கிரங்கி அவர்களைப்பார்த்து "மிகவும் அற்பமும் நீரிற் குமிழிபோல் நிலையில்லாததுமான சரீரத்தையும் செல்வத்தையும் உயிரினுஞ் சிறந்ததாகவும் நீடித்திருப்பதாகவும் எண்ணி மதிமயங்கிக் கிடக்கும் ஏழை மாந்தர்களே, யான் பெற்ற செல்வம் வேறுயார் பெற்றனர். நீங்கள் பெற்ற பொருட் செல்வமெல்லாம் ஒரு சிவனடியாரை ஒரு நாளில் பூசித்துப்பெறும் அருட்செல்வத்திற்கு ஈடாகுமோ ?.

### திருமந்திரம்.

*வித்தக மாகிய வேடத்த ருண்டவூண்*
*அத்த னயன்மா லருந்திய வண்ணமாஞ்*
*சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்*
*முத்திய மென்றுகம் மூலன் மொழிந்ததே.*

நீங்கள் சேகரித்து வைத்திருக்குஞ் செல்வத்தில் ஒரு காசாவது நீங்கள் இறந்தபிறகு உங்களுக்குப் பயன்படுமா ?. நீங்கள் இறந்தபிறகு உங்களுக்குப் பயன்படாவிட்டாலும், நீங்கள் உயிரோடிருக்கு மளவிலாவது உங்கள் செல்வம் நிலைத்திருக்குமென்பது



நிச்சயமா. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவ ரென்பதை யறிகிலீரோ ? சிவனடியார்களைத் தரித்திரம் பிடித்துப் பிச்சையெடுத் துண்பவர்களென்று அறியாமையால் இகழ்கின்றீர்கள். அவர்கள் உலகமனைத்தையும் ஒரு குடைக்கீழ்வைத்து அரசாளும் மன்னர் செல்வத்தையும் வாந்தி பண்ணின சோறென அருவருத்து ஒதுக்கிய அருட்பெருஞ் செல்வர்களென்றுணரக் கடவீர்."

### க்ஷேத்திரத்திருவெண்பா.

*தஞ்சாக மூவுலகு மாண்டு தலையளித்திட்*
*டெஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்—நஞ்சங்*
*கரந்துண்ட கண்டர்தம் மொற்றியூர் பற்றி*
*யிரந்துண் டிருக்கப் பெறின்.*

"சர்வான்மாக்களுக்கும் போக மோட்சங்களைக்கொடுக்கும் பரம கருணாநிதியாகிய நம்மிறைவரை இரந்துண்பவர் என்று இகழ்ந்து கூறுகிறீர்கள். அவர் இந்திரஜாலம்போன்ற சொர்க்காதி போகங்களை விரும்பித் தவஞ்செய்வார்க்கு அப்போகங்களையும், அவற்றைத் தூசாகமதித்து வெறுத்துத் தமது திருவடிப்பற்றையே பெரும்பற்றாகப்பற்றி வழிபடும் அடியவர்க்கு இரந்துண்ணுதலாகிய அரும்பெருஞ்செல்வத்தையும் கொடுத்தருளுவர். இதை எம்போல்வாரும் தெளிந்து உச்சீவிக்கவேண்டியே அவர் போகரூபியாயிருப்பதோடு, கபாலபாணியராய் இரந்துண்ணுங்கோலமுங் கொண்டருளினர்" என்பார்.

### திருமந்திரம்.

*பரந்துல கேழும் படைத்த பிரானை*
*இரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கும்*
*நிரந்தர மாக நினையு மடியார்*
*இரந்துண்டு தன்கழ லெட்டச் செய்தானே.*

அவர் இவ்வாறு ஒழுகுநாளில், மழைக்காலமாகிய ஓர் நாளில் இடைவிடாமல் இரவும் பகலுமாகப் பெருமழை பெய்துகொண்டிருந்தது. அதனால் அவர் வெளியே போதற்குங் கூடாமலும் வீட்டில் ஒருபிடியரிசியும் இல்லாமலும் இருந்தமையால் அன்று முழுவதும் அவரும் அவர்பத்தினியாரும் பட்டினிகிடந்து, சிவத்தியானமே உணவாகக்கொண்டு இரவில் பள்ளிகொண்டார்கள். அன்று நடுராத்திரியில் சிவபெருமானார் அவர்களுக்கு அருள்செய்யவேண்டி, சிவனடியார் திருமேனிகொண்டெழுந்தருளி வீட்டிற் கத

வைத்தட்டினார். அரிபிரமாதிதேவர்களுக்கும் வேதங்களுக்கும் மனோ வாக்குக்காயங்களுக்கும் எட்டாத சிவபெருமானார் நாயனாருடைய அன்பின் வசப்பட்டு மானிட சரீரங்கொண்டு அவர் வீட்டுக்கதவைத் தட்டுதலும், நாயனார் விழித்தெழுந்து, கதவைத் திறந்தனர். திறந்தமாத்திரத்தில் தமது அன்பின் வலைப்பட்டு வெளிப்பட்ட சிவனடியாரைத் தரிசித்து அவருடைய அருள் வலைப்பட்டு, அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி "சுவாமி, தேவரீர் அடியேன் உய்யும் வண்ணம் பெரு மழையில் நனைந்துகொண்டு இந்த நடுராத்திரியிலும் வரப்பெற்ற என் பாக்கியமே பாக்கியம்" என்று கூறி உள்ளே அழைத்துச் சென்று, சச்சிதானந்தமயமாகிய அவருடைய திருமேனியைத் தாம் உடுத்திருந்த கந்தையால் துடைத்து ஈரம் துவட்டி, ஆசனமிட்டு எழுந்தருளச்செய்து மனைவியாரைப்பார்த்து "பெண்ணே, இச்சிவனடியார் பசித்திருக்கிறார். நம்மிடத்தில் ஒரு பிடியன்னமும் இல்லை. அரிசி அல்லது வேறெந்த பதார்த்தமாவதுமில்லை. நாம் இவருக்கு எப்படித் திருவமுது செய்விக்கலாம்" என்றனர். அதற்கு அவர் மனைவியார் "என் நாதரே, தேவரீர் அஞ்சவேண்டாம். நாம் வயலில் விதைத்திருக்கும் நெல்லைவாரிக்கொண்டு வந்தால் இவருக்கு அமுது படைக்கலாம்" என்றனர். இதைக்கேட்டு நாயனார் மிகவும் சந்தோஷித்து, "பெண்ணே, எனக்கு மந்திரியைப்போல் சமயோசிதமான உபாயத்தைக்கூறும் உன்னை வாழ்க்கைத்துணையாகப்பெற்ற என்பாக்கியமே பாக்கியம். இதோ அப்படியே கொண்டுவருகிறேன்" என்று சொல்லி, கண்ணைமாத்திரமன்றி மனதையும் மறைக்கும்படியாயிருந்த பேரந்தகாரமாகிய நடுராத்திரியில், ஒரு பெரிய இறைகூடையைத் தலையிலே கவிழ்த்துக்கொண்டு, வழியென்றும் வாய்க்காலென்றும் தெரியாமையால், காலினாலே தடவித் தடவிக் குறிப்பாக நடந்து சென்று, தாம் விதைவிதைத்திருந்த நெல்வயலையடைந்து, அதிக மழையினால் நீரின்மேல் மிதந்துகொண்டிருந்த நெல்முளைகளைவாரி, கூடைநிறைய எடுத்துக்கொண்டு ஓடிவந்தனர். அவரை எதிர்பார்த்துக்கொண்டு வாயிலிலே நின்ற அவர் மனைவியார் அதனை மனமகிழ்ந்துவாங்கி அதிலிருந்த சேறுநீங்கும்படி நன்றாய்க்கழுவி சுத்தஞ்செய்துகொண்டிருந்தனர். அச்சமயத்தில் திருவமுது சமைக்க விறகில்லாமையால், நாயனார், முன்னமே மிகவுங் கிலமாய் மழையினால் நனைந்து இடிந்து விழும்போலிருந்த வீட்டின் (மேற்), கூரையின் வலிச்சல் முதலியவற்றை யொடித்துக்கொடுத்தனர். அவற்றைக்கொண்டு தேவியார் தீமூட்டி, நெல் முளைகளை யீரம்போய் பதமுண்டாகும்படி வறுத்து அரிசியாக்கி உலையிலிட்டுச் சமைக்கத் தொடங்கினார். நாயனார் கறியமுது இல்லாமையால் புறக்கடைத் தோட்டத்திற்குப்போய், அப்போதுதான் முளைத்து இன்னுங் குழிநிரம் பாதிருந்த கீரைப்பயிர்களைத் தமது பாசத்தைப் பறிப்பார்போல் பறித்துக்கொண்டு வந்தனர். அதைத் தேவியார் வாங்கி, சுத்தப்படுத்தி, தமது சாமர்த்தியத்தால் வெவ்வேறு கறியமுதுகள் செய்து நாயனாருக்குத் தெரிவித்தனர். அதுவரையில் கல்லினுள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும் விருப்புற்ற முதளிக்கும் நம் இறைவனார், நாயனாரின் அன்பின் வலைப்பட்டு மிகுந்த பசியோடு நித்திரை செய்வார்போல் இருந்தனர். நாயனார் சிவனடியாருக்கு உடனே திருவமுது செய்யப்பெறாமல் தாமதஞ் செய்ய நேரிட்டமைக்கு மிகவும் நொந்து அவர்பாற்சென்று "சுவாமி, அமுதுசெய்ய எழுந்தருளும்" என்று சொல்லி அழைத்தனர். அழைத்தலும், இறைவனார் மறைந்து சோதிவடிவாகத் தோன்றி யருளினார். அதைக்கண்டு நாயனாரும் அவர் மனைவியாரும் ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நிற்க, இறைவனார் உமாதேவியாரோடு இடபாரூடராய் காட்சி கொடுத்தருளி, நாயனாரும் அவர் பத்தினியாரும் சிவலோகத்தையடைந்து, இந்திரன் குபோன் முதலிய தேவர்களெல்லாம் குறையிரந்து ஏவல்செய்ய, இன்பமார்ந்திருக்குமாறு அநுக்கிரகஞ்செய்து மறைந்தருளினார்.

[இச்சரிதத்தில் 66 - வது பக்கம் 11 - வது வரி முதல், 67 - வது பக்கம் 22 - வது வரி வரையில் பத்திரிகாசிரியர் வருவித் துரைத்தன.]

---

## பிரமஸ்ரீ R. S. கங்கா ஜடேச சர்மா அவர்களின் பத்திரிகாபிமானமும் வியாசமும்.

நமது பிப்ரவரிமீ பத்திரிகையில் "இப்பத்திரிகை இப்போது இரண்டே பாரமாக வெளிவருவதனால் விஷயங்களை விரிவாக எழுதி வெளியிட இயலவில்லை, சைவாபிமான சீலர்கள் அன்பு கூர்ந்து பாரம் ஒன்றுக்கு 7 ரூபா உதவி செய்யின் அவர்கள் பேரால் ஒரு பாரம் அதிகமாக அவர்கள் உதவிபுரியும் மாதங்களில் வெளிவரும்" என்று விளம்பரப்படுத்தினோம். இதனைக் கண்ணுற்ற தஞ்சை ஜில்லா ரெண்டான் கட்டளை வாசியாகிய (Essayist) பிரமஸ்ரீ R. S. கங்கா

ஜடேச சர்மா அவர்கள் அன்பு கூர்ந்து சில சந்தாதாரர்களைச் சேர்த்துச் சந்தாத் தொகைகளை யனுப்பினதுமன்றி இம்மாதம் ஒரு பாரம் அதிகமாய் அச்சிடுவித்து உபகரிக்கவேண்டி 7 ரூபா நன்கொடையு மளித்து, இதனடியில் வெளியிட்டுள்ள வியாசத்தையும் எழுதியனுப்பினார்கள். அன்றியும், இனி அடிக்கடி விஷய தானம் புரிந்து இப்பத்திரிகையைச் சிறப்பித்துவர முன் வந்திருக்கிறார்கள். இத்தகைய உண்மைச் சைவாபிமான சீலர்களுக்குச் சைவ உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இவர்கள் எழுதியனுப்பிய வியாசம்:—

அன்பும் அருளும் நிறைந்து அமைதிபெற்ற அறிஞர்காள்! தங்களிடத்து யான் ஓர் சிறு செய்தியை மிகச் சுருக்கமாய் விண்ணப்பித்துக்கொள்ள விரும்புகிறே னாதலின் இதைச் சிறிது செவி சாய்த்துக் கேட்பீர்களாக.

நண்பர்களே!

யானறிந்த மட்டிற் றமிழ் நாட்டி லிவ்வளவு குறைந்த சந்தாவுடன் வெளிவரும் பத்ரிகை சைவஸமயிகள் தவப்பயனாகத்தோன்றியிருக்கும் நமதருமைச் "சைவ" மும், "க்ருஷிகன்" என்னும் பத்திரிகையுமேயாம்.

சந்தா மிகக் குறைந்ததாயிருப்பினும், ஆதரிப்பவர் அதிகப்படின், இப்பத்திரிகை "பலதுளி பெருவெள்ளம்" என்ற பழமொழிக் கேற்ப எவ்வளவோ சீர்திருத்தங்களுடன் மேலாக விளங்குமென்பதற் கையமின்று.

நந்தமிழ் நாட்டிற் "றமிழ்ப் பத்திரிகை" களோ மிகக் குறைவு எனினும், அவற்றை ஆதரிப்பவர் அதனிலுங் குறைவு! என்றால் இந்நிலையில் அவைகள் தலைகிளப்புவ தெங்ஙனம்? இதனாலேயே சில பத்திரிகைகள் ஆரம்ப சூரத்துவமாய் முதலில் இரண்டொரு பிரதிகள் வெளிவந்து பிறகு ஆழ்ந்த நித்திரைக்குச் சென்று விடுகின்றன.

இவ்வித "பாலாரிஷ்டங்கள்" ஒன்றும் நம தருமைச் "சைவ"த்தினிடம் அணுகாவண்ணம் ஆதரிக்கத் தமிழ (றிந்தவ) ர்களாகிய ஒவ்வொருவரும் அதிலும் சைவ சமயிகளனைவரும் மிகவும் கடமைப் பட்டுள்ளோ மென்பதைச் சிறிது மனதிற் பதிய வைத்துக்கொண்டு ஒவ்வொருவரும் உம்மாலியன்ற உதவிகளையெல்லாம் புரிவீர்களென்று உறுதியாய் நம்புகிறேன்.

சிலர் இதே சந்தாவைக்கொண்டு இப்பத்ரிகை என்ன சீர்திருத்



தத்தை யடையப்போகிறதென்று ஸந்தேஹிக்கலாம். அதனையகற்றும் பொருட்டு இங்கு ஓர் சிறு உதாரணம் காட்டுகின்றேன்.

நம்மிலுங் குறைந்த ஜனஸங்கியையினையுடைய "மலையாளிகள்" தங்கள் பாஷையின் முன்னேற்றத்தில் மிகவும் முயன்றிருக்கிறார்கள். மலையாள நாட்டிற்பத்திரிகைகளும் அதிகமென்று கூறலாம். அதிலும் பத்ரிகாபிமானிகள் அதிகமென் றையமறக் கூறலாம். அங்கு (மங்களூரில்) Basel Mission Book & Tract Depository யாரால் நடத்தப்பட்டுவருகிற "கோளோபகாரி" என்னும் ஓர் பக்ஷாந்த (மாதமிருமுறைப்) பத்திரிகையின் சந்தாவும் இக்குறைந்த பன்னிரண்டணாவே! இது முதலில் இரண்டுபாரம் அதாவது பதினாறு பக்கங்களுடன் தொடங்கப்பெற்று உயர்ந்தகடிதம், பிழையற்ற முத்துப்போன்ற எழுத்துக்கள், குறித்தகாலந் தவறாது வெளிவருதல் (ஒருபத்திரிகை குறித்த காலந்தவறாது வெளிவருதலே அதன் அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் குறிக்கும்) ஆதிய பத்ரிகைக்குரிய லக்ஷணங்களியாவும் பொருந்தப்பெற்றுப் பிரதி மாதமும் சித்ரங்களுடனும் நடந்தேறிவருகின்றது. இப்பத்திரிகை வருஷமொன்றுக்கு 384 பக்கங்களுக்குக் குறையாமலும் வெளியாகின்றது.

ஆதலால் நமது சைவத்தையும் ஆதரிப்பவர் அதிகமானால் யாதொரு ஸ்ரமமுமின்றி மாதம் நான்குபாரத்திலும் (ஒருக்கால் சித்ர ஸஹிதமாகவும்கூட) வெளியாகிக் கண்டுகளிக்கும் படியான பாக்யம் நமக்குக் கிடைக்குமென்பதை யானிங்கெடுத்து இயம்பவும் வேண்டுமோ?

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்"—(குறள்.)

(வறுமையிலுங்கூட அறிஞர்கள்உதவி செய்வார்களென்பதாம்)

பண்பில்லாரிடத்துப் பொருளிருந்து யாதுபயன்? சிலரிடத்து ஏராளமான பொருளிருந்தும் அஃது எவ்வாற்றானும் நல்வழியிற் பயன்படாது. அந்தோ! "குரங்கு கைப்பட்ட பூமாலை" போன்று தீயவழிக்கே யிரையாயழிகின்றது. பெரும்பாலார் சூதுக்கும் வாதுக்கும் வம்புக்கும் வழக்கிற்கும் குடிக்கும் கூத்திக்கும் பதருக்கும் பாழுக்குமாகப் பையையாய்ப் பாழாக்குகிறார்கள். நன்முறையில் ஒருபை (இங்குபை என்றது அரைக்காசு) கூடச் செலவிட மனந்துணிவதில்லை.

பத்ரிகை புஸ்தகம் என்றால் ஏய்ப்பையும் நகைப்பையும் (ஏமாற்

றம் ஏளனம்) எதிர்பார்க்கலாமேயன்றி பணப்பையை எதிர்பார்த்தல் அவலமாய் முடியும். பரம நாஸ்திகர்களான இவர்கட்கு நல்வழியிற் றம்பிடி (அரைக்காசு) செலவு செய்வதென்றாற் கண்ணுலிரத்தம் வந்துவிடுகிறது. இக்கடும் பற்றினர்க்கு (உலோபிகட்கு) ப்பணமொன்றே தெய்வம். அதனைப் போற்றுவதே கர்மம். பிறகு அதனைப் புதைத்து வைத்துச்சாவதே மோக்ஷம்.

> " ஈயாத லோப ரிருந்தென், இறந்தென் "
> " இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர் "

என்பதை யறியாத இவர்கள் நல்வழிப் பட்டுய்வதெப்பொழுதோ!

> "பொருளானு மெல்லா மென்றீ யாதிவறு
> மருளானு மாணாப் பிறப்பு"

(பொருளை நல்வழியிற் றேடி நல்வழியிற் செலவு செய்யாததாலேயே பிறப் புண்டாகிறது.)

மிகுந்த தனமுள்ளவனென்று பெயரெடுப்பதைவிட நல்ல மனமுள்ளவனென்றும், மிகுந்த பணமுள்ளவரென்பதைவிட நல்லகுணமுள்ளவரென்றும் பெயரெடுக்க ஒவ்வொருவரும் முயல்வார்களாக.

தூயவுளம் தூயமொழி, தூயசெய்கை முதலியவற்றால் ஒவ்வொருவரும் தூயவராக முயன்றின்புறுவார்களாக.

இப்படிக்குத் தங்கள் உண்மையுள்ள அன்பன்,
கங்கா ஜடேச சர்மா.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 16 ஆவது வருட மகா ஜனக்கூட்டம்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 16 ஆவது வருட மகா ஜனக்கூட்டம், நிகழும் 1915௵ மார்ச்மீ 7உ இதின் சபா மண்டபத்தில், ம-า-า-ஸ்ரீ கனகசுந்தரம்பிள்ளையவர்கள், B. A. அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று.

தேவார பாராயணம் நடைபெற்றபின்னர் சபையின் காரியதரிசியவர்களால் இதின் 1914௵ சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் வாசிக்கப்பெற்று மகாஜன சபையினரால் அங்கீகரிக்கப் பெற்றன.

இதின் கீழ்குறித்த கனவான்கள் நிகழும் 1915 வருடத்தின் நிர்வாக சபையினராக நியமிக்கப்பெற்றார்கள்.



**சபைத்தலைவர்.**

ம-า-า-ஸ்ரீ, ச. இராஜாகண்ணுமுதலியாரவர்கள் B. A.,
*Supdt. Accountant Genl's. Office, Madras*

**உதவிசபைத்தலைவர்**

,, தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் B. A.,
*Supdt. of Vernacular Studies, The Madras Christian College.*

**காரியதரிசி**

,, இ. ஆதிமூல முதலியாரவர்கள்,
*Retired Accountant, Mily. Accts. Dept., Madras.*

**பொக்கிஷதாரர்**

,, V. மீனாட்சிசுந்தர முதலியாரவர்கள்,
*Surveyor and Draftsman, Corporation of Madras.*

**அத்தியட்சர்கள்**

,, விநாயக முதலியாரவர்கள் B. A.,
*Supdt., Acct. General's Office, Madras*

,, C. M. சரவண முதலியாரவர்கள் B. A.,
*Assistant Govt. Tamil Translator.*

,, P. C. சமரபுரி முதலியாரவர்கள்,
*Clerk, M. & S. M. Ry. Engineer's Office, Madras.*

,, W. T. கோவிந்தராஜ முதலியாரவர்கள்,
*Clerk, Office of the Registrar of Co-operative Credit Societies*

,, தண்டலம் - அப்பாகண்ணு முதலியாரவர்கள்,
*Clerk, Paper Currency Office.*

,, C. K. பழனிவேல் முதலியாரவர்கள்,
*Clerk, Paper Currency Office.*

,, R. துரைசாமி முதலியாரவர்கள்,
*Clerk, M. & S. M. Ry., Co-operative Stores.*

**கணிதபரிசோதகர்**

,, சு. சபாபதி முதலியாரவர்கள்,
*Clearing Agent, Custom Office.*

இச்சபையார்வைத்து நடத்தும் பாடசாலையானது தற்காலத்தில் இதின் சாமாஜிகரும் பிறரும் கொடுத்துவரும் சந்தாத்தொகைகளைக் கொண்டும் நன்கொடைகளைக்கொண்டும் நடைபெற்று வருவதனால் இப்பாடசாலையின்பொருட்டு யாரேனும் மாதம் ஒன்றுக்கு 15 ரூபாவுக்குக் குறையாத வருமானம் தரக்கூடிய சொத்துகளாவது மொத்

தமாக 2000 ரூபாவாவது நன்கொடையாகக் கொடுப்பார்களாயின் அவர்கள் பேரால் இப்பாடசாலையை வைத்து நடத்தலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அக்கிராசனருக்கும் சபைத்தலைவருக்கும் வந்திருந்த கனவான்களுக்கும் காரியதரிசியவர்கள் வந்தனமளிக்கக் கூட்டம் கலைந்தது.

**இ. ஆதிமூல முதலியார்,**
**காரியதரிசி.**

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் (1914௵) 16 ஆவது வருடச் சபாக்கிரந்தம்.

இச்சபையின் 15ஆவது வருட மகாஜனக்கூட்டம், 1914௵ பிப்ரவரி௴ 22௳, இதின் சபா மண்டபத்தில் கூடியது. அப்போது ம-ா-ா-ஸ்ரீ சதுரை. இராஜாகண்ணு முதலியார், B.A., அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். (1913௵) 15ஆவது வருடச் சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் வாசித்து அங்கீகரிக்கப் பெற்றன. அத்தியட்சர்கள் நியமனஞ் செய்யப்பெற்றார்கள்.

சைவபாடசாலை (The Saivate Elementary School)— பாடசாலை வைத்துக் கல்விகற்பித்துச் சமயபோதனை செய்தலே மற்றெல்லாத் தருமங்களினும் மேலான தருமமெனவும், சமயபரிபாலனத்திற்கு இன்றியமையாத சாதனமெனவும், சமயாபிமானிகள் செய்யவேண்டிய கடமையெனவும் தீர்மானித்து, நாகரிகமுள்ள ஒவ்வொரு சமயத்தாரும் அதை யநுசரித்துச் செய்து வருகிறார்கள். சைவசமயிகள் அவ்வாறு செய்யாமையால் சைவச் சிறுவர்கள் கிறிஸ்தவர்முதலிய புறச்சமயத்தினர் பாடசாலைகளிற் படிக்க நேரிட்டு, சைவசமய ஒழுக்கங்கள் மிகவும் குன்றிவிட்டன. இதனைச் சிந்தித்து, இச்சபையார் சென்ற 1912௵ ஏப்ரல்௴ முதல் பாடசாலைவைத்து, சிறுவர்களுக்குத் தினந்தோறும் காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரையில் தமிழ் தெலுங்கு ஆங்கிலம் இவற்றோடு சைவ சமய பாடங்களும் ஒழுக்கங்களும் கற்பிக்கிறார்கள். இப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதிலேயே இச்சபையார் சென்ற வருடத்தில் தங்கள் கவனத்தை அதிகமாகச் செலுத்தி சபையின் வருவாயிற் பெரும்பாகத்தைச் செலவிட்டார்கள்.

இப்பாடசாலையில் சென்ற வருடாரம்பத்திலிருந்த சிறுவர்களின் தொகை 44; சென்றவருட முடிவிலிருந்தவர்கள் தொகை



54; இதில் நான்குவகுப்புகளிருக்கின்றன. இரண்டு உபாத்தியாயர்கள் இருக்கின்றார்கள். இவர்களுள் ஒருவர் உபாத்தியாயர் பரீட்சையில் தேறினவர். இவருக்கு மாதம் ஒன்றுக்கு 14 ரூபா வீதமாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. மற்றொருவர் (3rd Form) மூன்றாவது வகுப்பு வரையில் வாசித்தவர். இவருக்கு மாதச்சம்பளம் ரூபா 6. இப்பாடசாலை, 1914௵ ஜூன்௴ 5௳ முதல் சென்னை டெல்லிகிராப் அப்பாயி நாயுடு வீதியில் இதற்கெனக் கட்டப்பெற்ற கட்டிடத்தில் நடைபெறுகிறது. இக்கட்டிடத்திற்கு மாதம் ஒன்றுக்கு பத்து ரூபா வீதம் குடிக்கூலி கொடுக்கப்படுகிறது.

### பாடசாலையின் பொருட்டுக் கிடைத்த உதவிகள்.

திருநாகேச்சரச் சிவனடியார் திருக்கூட்டத்தினருள் ஒருவராகிய ம-ா-ா-ஸ்ரீ, மே. தா. மாணிக்க முதலியாரவர்கள் தமதுமனைவியார் (புனிதவதியம்மாள் என்னும்) ஸ்ரீமதி, கண்ணம்மாள் அவர்கள் பேரால் சமய குரவர் திருவுருவப்படம் வைத்துப் பூசிப்பதற்கென 15 ரூபா நன்கொடையளித்தார்கள். இப்படம் இப்போது எழுதிச் சித்தமாயிருக்கிறது; இது அடுத்த சித்திரை மாதத்தில் பாடசாலையில் பிரதிட்டை செய்யப்படும்.

சென்னை இலக்குமிதாஸ் வீதியிலுள்ள பட்டு ஜவளி வர்த்தகர் ம-ா-ா-ஸ்ரீ, ரா. பழனியாண்டிப் பிள்ளையவர்கள் சுமார் 25 ரூபா மதிப்புள்ள 5 நீளபெஞ்சுகள் (Bench) செய்து கொடுத்தார்கள்.

சென்னை திருப்பளி வீதியிலுள்ள ம-ா-ா-ஸ்ரீ, தொட்டிகலை ஞானசம்பந்த முதலியாரவர்களும், சிந்தாதிரிப்பேட்டை எண்ணெய் மண்டி ம-ா-ா-ஸ்ரீ, சு. முருகேசச் செட்டியாரவர்களும், சென்னை நாராயண முதலிவீதி ம-ா-ா-ஸ்ரீ, R. விசுவநாதம் செட்டியாரவர்களும் ஆகிய இவர்கள் ஒவ்வொருவரும் 25 ரூபாவும், ம-ா-ா-ஸ்ரீ, V. சண்முக முதலியாரவர்கள் (Dubash, South Indian Export Co.,) 10 ரூபாவும் நன்கொடை யளித்தார்கள்.

இராஜாங்கத்தார் 108 ரூபா (Grant-in-aid.) உதவி செய்தார்கள்.

### பாடசாலைப் பரிசோதனை.

இப்பாடசாலை 1914௵ அக்டோபர்௴ 22௳ இராஜாங்கப் பாடசாலைப் பரிசோதகரால் பரீட்சிக்கப் பெற்றது. அப்பரிசோதகர் இப்பாடசாலையைப் பற்றி வெளியிட்ட அபிப்பிராயம்:—

* * * * * *

"During the year since last inspection, the school had developed so vastly that one could not so easily identify it. The premisis

were new and very suitable, the staff distinctly better and the appliance since provided remarkably good. Results of the work were good so far as they went, and suggestions were offered at inspection as to how to improve the work in the classes. I am confident that the school will steadily improve in all ways and I wish it all usefulness."

### சிவதலயாத்திரை.

இச்சபையார் சென்ற வருடத்தில் திருவொற்றியூர், திருநாகேச்சரம், திருமுல்லைவாயில் என்னும் மூன்று தலங்களுக்கு யாத்திரை செய்தார்கள்.

### திருவொற்றியூர் யாத்திரை.

இது 1914ஆு பிப்ரவரிமீ 8உ நடைபெற்றது. இதற்கு இச்சபையாரும் இதின் சகோதரச் சபையார்களுமாக சுமார் 150 சிவநேயர்கள் வந்திருந்து உழவாரத் திருப்பணி, திருக்கோயில் வழிபாடு தமிழ் வேதபாராயணம் பிரதோஷ மகோற்சவ தரிசன முதலியன செய்தார்கள். ஸ்ரீமத் யாழ்ப்பாணம் வண்ணை நகர்ச் சுவாமிநாதபண்டிதரவர்கள் சைவப் பிரசங்கஞ் செய்தார்கள். ம-ா-ா-ஸ்ரீ, எக்களூர் சுப்பிரமணியம் செட்டியாரவர்கள், இவர்கள் அனைவரும் இருந்து மாகேசுர பூசைமுதலியன செய்தற்கு, பலவசதிகளமைந்த தமது சிறந்த சத்திரத்தைக் கொடுத்தும், 7 ரூபா நன்கொடையளித்துச் சித்திரான்ன முண்பித்தும் உபசரித்தார்கள். இச்சபையில் இதற்குமுன் இருந்த உழவாரப்படைகள் பழையனவாய்ப் பயனிலவாயிருந்தமையால் சென்னை ஸ்ரீ கந்தசாமி கோவிலை யடுத்த இரும்பு வர்த்தகர்கள் 80 உழவாரப்படைகள் செய்து கொடுத்தார்கள்.

### வடதிருநாகேச்சர யாத்திரை.

இது 1914ஆு மேமீ 30உ நடைபெற்றது. இதற்குச் சுமார் 60 பேரளவில் வந்திருந்தார்கள். இதின் சகோதர சபையினராகிய ஸ்ரீ வடதிரு நாகேச்சரச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டு பேரன்போடு விசேடபொருள் செலவு செய்து மாகேசுர பூசை முதலியன நடத்தி திருநாகேச்சரப் பெருமானுர் அதிகாரநந்தி மகோற்சவ தரிசனஞ்செய்வித்து, அடுத்துள்ள குன்றத்தூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சேக்கிழார் பெருமானரைத் தரிசிப் பித்தார்கள்.

### திருமுல்லைவாயில் யாத்திரை.

இது 1914ஆு ஜூலைமீ 5உ நடைபெற்றது. இதற்குச் சுமார் 80 சிவநேயர்கள் வந்திருந்தார்கள். இச்சபையினருள் ஒருவராகிய



ம-ா-ா-ஸ்ரீ, ஐயப்பந்தாங்கல் த. சபாபதி முதலியாரவர்கள் பேரன்போடு தமது சொந்த செலவில் சிறப்பாக மாகேசுரபூசை செய்வித்து ஸ்ரீ கொடியிடை நாயகியார் சமேத மாசிலாமணி ஈசுவாருடைய வசந்தமகோற்சவ தரிசனஞ் செய்வித்தார்கள்.

### ரிஷபக்கொடி.

இச்சபையார் பதினைந்து வருடங்களாக உபயோகித்துவந்த ரிஷபக்கொடி மிகவும் பழையதாய் விட்டமையால் இச்சபையினருள் ஒருவராகிய ம-ா-ா-ஸ்ரீ, பிடாரியார் கோவில்வீதி இரத்தினசாமி தேவரவர்கள் சுமார் 10 ரூபாவரையில் செலவிட்டு இச்சபையின் பெயர் முதலியன வெழுதிய புதிய ரிஷபக்கொடி செய்து கொடுத்தார்கள்.

### சிவஞான முனிவர் புத்தகசாலை.

இதின் சபாமண்டபத்திலிருக்கும் இப்புத்தகசாலையில் இரண்டு பெரிய நிலைப்பெட்டிகளும் சுமார் 600 புத்தகங்களும் இருக்கின்றன. இவற்றுள் சுமார் 50 ரூபா பெறும் நிலைப்பெட்டி யொன்றும், 150 புத்தகங்களும் 1913ஆு அக்டோபர்மீ திருமயிலை வாசியாகிய ம-ா-ா-ஸ்ரீ, க. மு. அரங்கசாமி நாயகரவர்களால் உபகரிக்கப்பட்டன. மற்றொரு கண்ணாடி நிலைப்பெட்டியும், ஏனைய புத்தகங்களும் மெய்கண்ட சந்தான சபையினராற் சேர்க்கப்பெற்று, அச்சபை முதல்முறை கலைந்துவிட்டபோது அச்சபையின் அக்கிராசனராயிருந்த ம-ா-ா-ஸ்ரீ, அஷ்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியாரவர்களால் இச்சபைக்கு உபகரிக்கப்பட்டன.

### கூட்டங்கள்.

சென்ற வருடத்தில் நிர்வாக சபையினர் ஏழுமுறையும் மகாஜனசபையார் ஒருமுறையும் கூட்டம் கூடினார்கள்.

### அங்கத்தினர்.

| | |
|---|---|
| சென்ற வருடாரம்பத்திலிருந்த அங்கத்தினர் தொகை ... | 64 |
| இடையில் சேர்ந்தவர்கள் தொகை ... ... ... ... | 17 |
| மொத்தம் ... | 81 |
| * இடையில் நீங்கினவர்கள் தொகை ... ... ... | 15 |
| சென்ற வருட முடிவிலிருந்தவர்கள் தொகை ... ... | 66 |

* இவர்களுள் ம-ா-ா-ஸ்ரீ, பாண்டேச்சரம் கங்காதர தேவரவர்களும், ம-ா-ா-ஸ்ரீ, ஆதிபுரி - இராஜேசுவர முதலியாரவர்களும் சிவபத மடைந்தமைக்கு நிர்வாகசபையார் மிகவும் வருத்தப்படுகிறார்கள். இச்சபையினருள் வெளியூர் வாசிகள் ம-ா-ா-ஸ்ரீ, நீல

கிரி C. சங்கிலிமேஸ்திரியவர்களும், இவர் சகோதரர் ம-ள-ள-ஸ்ரீ, C. ஆறுமுக மேஸ்திரியவர்களுமே. மற்றவர்கள் பெயர் முதலிய விவரங்கள் தண்டற் புத்தகத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.

சைவப்பிரசங்கம்.

இதின் சபாமண்டபத்தில் ம-ள-ள-ஸ்ரீ, இருக்கம்-ஆதிமூல முதலியாரவர்கள் கந்தபுராணப் பிரசங்கம் செய்து வந்தார்கள்.

திருவண்ணாமலை ஞானதீபக்குடையாராதனை.

இது 15 வருடங்களாக நடைபெற்றுவருகிறது. வழக்கப்படி சென்ற 1914௵ நவம்பர்௴ 22௳ காலை இச்சபையாரும் இதின் சகோதரசபையினருமாகிய சென்னை முத்தியாலுபேட்டை ஸ்ரீ உமாமகேசுவரர் தமிழ் வேதபாராயண பக்தஜனசபையாரும் சேர்ந்து ௸ பேட்டை மல்லீசுரர் திருக்கோயிலிலிருந்து, தேவாரத் திருமுறைகளை மகோற்சவங்கொண்டெழுந்தருளப்பண்ணி தமிழ்வேத பாராயணஞ் செய்தவண்ணமாகச் சென்று வழியெங்கும் மண்டபடி செய்விக்கப்பெற்று ஆனைகெவனி வீதியில் திருவண்ணாமலை ஞானதீபக்குடை ஆராதனை செய்து சூளை சாமிபிள்ளை வீதியில் இச்சபையின் அங்கத்தினருள் ஒருவராகிய, கவுணியன் அச்சுக்கூடத் தலைவர் ம-ள-ள-ஸ்ரீ கா. முருகேசச்செட்டியாரவர்களால் மாகேசுர பூசை செய்விக்கப்பெற்றனர். இச்சமயத்தில் நமது முத்தியாலுபேட்டை சகோதரசபையினர் எடுத்துக்கொண்ட பிரயாசைக்குச் சபையார் மிகவும் நன்றிபாராட்டக் கடமைபூண்டிருக்கின்றார்கள்.

“சைவம்”

சமயபரிபாலனத்திற்குப் பாடசாலைகளைப்போல் பத்திரிகைகளும் இன்றியமையாதனவாயிருத்தலையும், சைவசமய உண்மைகளைப் பலரும் எளிதில் உணருமாறு, எளியநடையில் எழுதப்பெற்று, மிகவும் குறைந்தசந்தாவுக்குக் கொடுக்கப்படும் பத்திரிகைகள் இல்லாமையையும் சிந்தித்து, நிர்வாகசபையார் சென்ற 1914௵ நவம்பர்௴ 15௳ “சைவம்” என்னும் ஓர் பத்திரிகையை வெளியிட்டு வரல் வேண்டுமெனத் தீர்மானஞ் செய்தார்கள். இத்தீர்மானத்தை யனுசரித்து, நிகழும் 1915௵ ஜனவரி௴ முதல் மாதமாதம் இப்பத்திரிகை வெளியிடப்பட்டு மிகவும் குறைந்தசந்தாவுக்கு (தபாற்செலவு உட்பட வருடசந்தா 12 அணா) கொடுக்கப்படுகிறது. இப்பத்திரிகையில் மிகவும் அரியபெரியவிஷயங்கள் மிகவும் எளியநடையில் எழுதப்பெறுவதைப் பலரும் சிலாகித்து எழுதுங் கடிதங்களால் இப்பத்திரிகையைப் பலரும் நன்கு மதிக்கிறார்களென்பது அறியக்கிடக்கின்றது. சென்ற இரண்டுமாதங்களில் இப்பத்திரிகைக்கு 450 சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். இப்பத்திரிகை யெங்கும் பரவுமாறு செய்துவரும் இத



னடியிற் குறித்த சைவாபிமான சீலர்களுக்கு நிர்வாக சபையினர் மிகவும் நன்றி பாராட்டுகின்றனர்.

தேவகோட்டை வைசிய சிவானந்த சபையார், இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபையார், முத்தியாலுபேட்டை உமாமகேசுவரத் தமிழ்வேதபாராயண பக்தஜனசபையார், கூடலூர் புதுப்பாளையம் ம-ள-ள-ஸ்ரீ S. சித்தேச முதலியாரவர்கள், நீலகிரி ம-ள-ள-ஸ்ரீ M. T. ஆறுமுகம் (Clerk Bank of Madras.) தொண்டமாநத்தம் - ம-ள-ள-ஸ்ரீ, பு. ர. நடனசபாபதிப் பிள்ளையவர்கள், சைதாப்பேட்டை ம-ள-ள ஸ்ரீ, மாகறல் - கார்த்திகேய முதலியரவர்கள்.

**Guardian Press.**

இச்சபையார் வெளியிடும் விளம்பரப் பத்திரிகைகள், இரசீது புத்தகங்கள், முதலியவற்றை ௸ அச்சுக்கூடத் தலைவர்கள் Messrs. G. C. Loganatham Brothers அன்போடு இலவசமாய் நெடுங்காலமாக அச்சிட்டுக்கொடுக்கிறார்கள்.

வரவுசெலவு கணக்கு.

இச்சபையின் 1914௵ வரவு செலவு கணக்கு அவ்வப்போது கணித பரிசோதகரால் பரிசோதிக்கப்பெற்று, நிர்வாகசபையினரால் அங்கீகரிக்கப்பெற்று, இதினீற்றில் வெளியிடப் பட்டிருக்கிறது.

பொருள் நிலைமை.

சைவசமயத்தைக் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்துப் பரிபாலிப்பார் மிகவும் குறைந்திருத்தலினால், இச்சபையார் கடன்பட்டும் சைவசமய பரிபாலனம் செய்துவருகிறார்கள். இதனால் சென்ற டிசம்பர்௴ வரையில் இச்சபைக்கு 537 ரூபா கடனாயிருக்கிறது. இதற்கு மாதம் ஒன்றுக்கு ரூபா ஒன்றுக்கு ஒருதம்பிடி வீதமாக வட்டி கொடுக்கப்படுகிறது. இச்சபை ஆரம்பமுதல் இதுவரையில் செய்துவந்திருக்கும் பற்பல அரியகாரியங்களை நடுநிலைமையோடுச் சிந்திப்பவர்களுக்கு இதைப்போல் இதுவரையில் வேறொருசபை நடைபெற்றதில்லையென்று தெரியவரும். ஆதலால், சைவசமயிகள் ஒவ்வொருவரும் இதின் அங்கத்தவர்களாகவும் அபிமானிகளாகவுமிருந்து ௸ கடனையடைத்து, உலகமுச்சீவிக்குமாறு சைவசமய பரிபாலனம் செய்விக்கும்படி நிர்வாக சபையார் பிரார்த்திக்கிறார்கள்.

வந்தனம்.

இச்சபைக்கு அங்கத்தினராகவும் அபிமானிகளாகவும் போஷகர்களாகவுமிருந்து உபகரித்துவரும் அன்பர்கள் அனைவருக்கும் நிர்வாகசபையார் நன்றி பாராட்டி வந்தனமளிக்கிறார்கள். சுபம். சைவம் ஓங்குக. வெண்ணீறு பரவுக. சிவனடியார் வாழ்க.

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 1914ஹு வரவு செலவு கணக்கு.

| வரவு. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1914ஹு ஜனவரிமீ 1வ இருப்பு .. | 11 | 9 | 0 |
| சாமாஜிகர் மாதாந்தரச் சந்தா ... | 265 | 10 | 0 |
| நன்கொடை ... | 55 | 7 | 6 |
| பாடசாலை கிராண்டு (Grant) ... | 108 | 0 | 0 |
| பாடசாலைப் பிள்ளைகள் சம்பளம் ... | 72 | 4 | 0 |
| பாடசாலைக் கட்டிட சம்பந்தமான வரவு | 54 | 8 | 0 |
| சைவப்பத்திரிகை சந்தா ... | 2 | 3 | 0 |
| மொத்த வரவு ... | 569 | 9 | 6 |
| மொத்த செலவு ... | 566 | 13 | 10 |
| 1914ஹு டிசம்பர்மீ 31வ இருப்பு... | 2 | 11 | 8 |

Checked and found correct
M. Appadorai Mudaliar,
*Auditor.*

| செலவு. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| பாடசாலை உபாத்தியாயர்கள் சம்பளம் | 208 | 0 | 2 |
| பாடசாலை குடிக்கூலி ... | 81 | 2 | 11 |
| பாடசாலைக்கு பெஞ்சு, போர்டு பலகை ரிஜிஸ்டர்கள் நோட்டுப் புத்தகங்கள் வேலையாட்கள் முதலியன. ... | 87 | 4 | 10 |
| சிவதல யாத்திரை ஆலய வழிபாடு முதலியன ... | 64 | 5 | 7 |
| தண்டல்காரர் சம்பளம் ... | 45 | 2 | 0 |
| ஸ்ரீ கற்பக விநாயகருக்குக் குடிக்கூலி | 7 | 8 | 0 |
| கடன் ... | 21 | 8 | 2 |
| வட்டி ... | 32 | 2 | 2 |
| காகிதம் தபால் முதலியன .. | 4 | 3 | 3 |
| இதரமான சில்லரை செலவுகள் ... | 4 | 8 | 9 |
| சைவப் பத்திரிகை ... | 11 | 0 | 0 |
| மொத்த செலவு ... | 566 | 13 | 10 |

இ. ஆதிமூல முதலியார்,
காரியதரிசி.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் 1.] | ராக்ஷசஹு வைகாசிமீ 1915ஹு மேமீ | [இதழ் 5. |
|---|---|---|

OFFICE OF THE REGISTRAR OF ... 23 JUN 1915 MADRAS.

## ஞானப்பிரகாச சம்பாஷணை

(62 - ஆவது பக்கத் தொடர்ச்சி.)

### திருப்பாசுரம்.

ஏதுக்களாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள்சோதி
மாதுக்கந் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே.

ரா.—கடவுள் சித்துப் பொருளாகிய ஆன்மாவினாலுங் காணப் படாத பொருளானால் அவர் இருப்பை நாம் எவ்வாறு நிச்சயிக்கலாம்?

ஞா.—"ஞாலமேகரியாக நானுனை நச்சிநச்சிட வந்திடுங்காலமே" என்று தமிழ்வேதம் கூறுமாறு உலகத்தைக் கொண்டு நிச்சயித்தல் வேண்டும்.

ரா.—உலகம் ஒருவரால் படைக்கப்படாமலும், தோற்றமும் இறுதியுமில்லாமலும் எப்போதும் நிலைபெற்றிருக்கும் என்று சொல்லலாகாதோ ?

ஞா.—குயவனின்றிப் பாண்டமுண்டாய் விடுமா ?

ரா.—குயவன் பாண்டத்தைச் செய்தலையும், அப்பாண்டம் அழி வதையும் நாம் பார்க்கிறோம். கடவுள் உலகத்தைப் படைத்ததை யும் அது அழிந்துபோவதையும் பார்த்தவர் யார்? ஒருவரும் இலர். ஆதலால், பிரத்தியட்சப் பிரமாணத்தால் இவ்வுலகம் கடவுளால் தோன்றிநின்று அழிதலை விளக்கவேண்டும்.

ஞா.—உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் தோன்றி, சில காலமிருந்து, பின் அழிதலைப் பார்க்கிறோம். இப்படியே இவ்வுலக மும் ஒருகாலத்தில் தோன்றினதெனவும், ஒருகாலத்தில் அழிய

மெனவும் நிச்சயித்தல்வேண்டும். அன்றியும், இவ்வுலகம் அவன் அவள் அது என மூவகைப்பட்டு, தோன்றுங்கிரமத்திலே தோன்றி, நிற்குங்கிரமத்திலே நின்று, அழியுங்கிரமத்திலே யழிகின்றது. உலகத்திலுள்ள ஒவ்வொருபொருளின் தோற்றம் இருப்பு இறுதிகளைக் கூர்ந்து ஆராய்வோமானால் இதை யுணரலாகும். பேரறிவும் பேராற்றலும் படைத்த ஒரு கடவுளின்றி அவ்வளவு கிரமமாய் அவைகள் நடைபெறா. இதற்கொரு உதாரணங் காட்டுவோம். உயிர்கள் ஆண் பெண் என்னும் இருவகையாக இருக்கின்றன. இவற்றுள் ஆண் இன்றிப் பெண் உண்டாகாது. பெண்ணின்றி ஆணுண்டாகாது. ஆணும் பெண்ணுங் கலந்தே சிருட்டி நடைபெறும். இவ்விரண்டையும் நான்கு பூதங்களுங்கூடி உண்டாக்கினவெனில், முதலுண்டாக்கினது ஆணா அல்லது பெண்ணா என்னும் கேள்விகள் உண்டாகும். ஆண் என்னில், பெண் எப்போது உண்டாயிற்று? பெண் எனில் ஆண் எப்போது உண்டாயிற்று? ஆணையும் பெண்ணையும் ஒன்றுக்கொன்று காரணகாரியமாக நான்கு பூதங்களுஞ்சேர்ந்து உண்டாக்கினவா? அல்லது, அவ்விரண்டையுந் தனித்தனிக்காரியங்களாகவே யுண்டாக்கினவா? ஆணும் பெண்ணு மிருந்தாலல்லது சிருட்டி நடவாதென்று அறிந்தே அப்படியவைகளை யுண்டாக்கினவா? என்னுங் கேள்விகள் உண்டாகும். ஆதலால் சடமாகிய பூதங்கள் தாமே இவ்வளவு கிரமமாகக் காரியப்பட்டு வருகிறதென்று எண்ண இடமில்லை. ஆதலால் கடவுள் ஒருவரிருந்தே பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துகிறார் என்று உணர்தல் வேண்டும். அன்றியும், பூதங்களின் காரியமாகிய சரீரமானது எப்படி அதிலுள்ள அறிவு ரூபமாகிய ஆன்மா இயக்க இயங்குகின்றதோ, அப்படியே, பூதகாரியமாகிய இவ்வுலகமும் இதைச்சரீரமாகக்கொண்ட பேரறிவு ரூபமாகிய கடவுளியக்க இயங்குகின்றதென உணரலாகும்.

ரா.—உலகம் இவ்வாறு இயங்குதலை அதின் இயற்கையென்னலாகாதோ?

ஞா.—பூதங்கள் சடமாகையால் அவை சித்து அசித்து என்னும் இருவகைப்பட்ட பிரபஞ்சமாக விரிந்து இயங்குதல் இயற்கையென்பது அறிவீனமாகும். அன்றியும், சடப்பொருள்கள் தாமே அசைவதில்லை. ஒருவர் அசைக்க அசையும். ஆதலால் இவ்வுலகமும் கடவுள் இயக்க இயங்குமேயன்றி தானே இயங்காது. மேலும், இவ்வுலகமாத்திரமன்றி பல உலகங்கள் ஆகாயத்தில் அந்தரமாக இருக்கின்றன. ஐரோப்பிய வானசாஸ்திரிகளும் இப்பூமண்டலமும்,



சூரியன், சனி, புதன், வியாழன் முதலிய மண்டலங்களும் ஆகாயப் பெருவெளியில் ஒன்றையொன்று ஆதாரமாகக்கொண்டு தத்தம் பரிமாணங்களைக் கடவாது தினகதி வருஷகதிகளுக்கேற்றவாறு சுழன்றும் இயங்கிக்கொண்டுமிருக்கின்றன வென்று சொல்லுகிறார்கள். இவைகளெல்லாம் சர்வசத்தியும் அளவிலாவாற்றலும் உள்ள ஒரு பரம்பொருளின் சங்கற்பமில்லாமல் தாமே இயற்கையாக நடைபெறுமா? ஒருக்காலும் நடைபெறாது. அவனன்றி யோரணுவு மசையாது.

ரா.—மரத்திலிருக்கும் மாங்காய் பழுத்துக் கீழே விழுவது இயற்கைதானே? இது கடவுள் செயலா? கடவுளில்லாவிட்டால் மாங்காய் பழுக்காதோ? பழுத்தபிறகு கீழேவிழாமல் மரத்திலேயே ஒட்டிக்கொண்டிருக்குமோ? அல்லது ஆகாயத்தில் பறந்து போய் விடுமோ?

ஞா.—மாங்கனி ஏன் கீழே விழுகிறது?

ரா.—பூமியினிடத்தில் (Gravity என்னும் ஆகர்ஷண) சத்தியொன்றிருக்கிறது. அதனால் பூமி எல்லாப்பொருள்களையும் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளுகிறது. இப்படியே, காந்தக்கல்லினிடத்தில் ஒரு சத்தியிருக்கிறது. அந்தச் சத்தியினால் அது இரும்பைத் தன்னிடம் இழுத்துக்கொள்ளுகிறது. இவ்வாறே பலவித சத்திகளால் முற் கூறிய பல உலகங்கள் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டு ஆகாயப்பெருவெளியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஞா.—இச்சத்திகளுள் ஏதேனும் ஒன்று இல்லாவிட்டால் இத்தனை உலகங்களும் நடைபெறுமா? ஒரு நொடிப்போதும் நடைபெறாது. ஆதலால் உயிர்களின்மீது வைத்த கருணையால் கடவுள் அவை நடைபெறவேண்டி இச்சத்திகளைப் படைத்திருப்பதோடு தாமும் அவைகளுக்கெல்லாம் காரணச் சத்தியாயிருக்கிறார் என்று நிச்சயித்தல் வேண்டும்.

ரா.—ஆனால், ஆத்திகர் கடவுள் என்று கூறுவது (Force என்னும்) இச்சத்தியைத்தானே?

ஞா.—ஆத்திகர் அறிவில் பொருளாகிய சத்தியைக் கடவுள் என்று கூறுவதில்லை; அவர்கள் கூறுஞ் சத்தி அறிவோடுங் கூடிய சத்தியாகும். இது கிரியாசத்தியென்று சொல்லப்படும். கிரியையின்றி ஞானமும் ஞானமின்றி கிரியையும் இராதாகையால் ஆத்திகர் கூறுஞ்சத்தி ஞானக்கிரியா சத்தி யென்றுஞ் சொல்லப்படும். இச்சத்தியே அவர்கள் கூறும் கடவுளின் சொரூபமாகும்.

ரா.—கடவுள் ஒருவரிருந்து உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கிறார் என்றால் அவரைப்படைத்துக்காத்து அழிப்பவர்யாவர்?

ஞா.—தோற்றக் கேடுகள் சடபதார்த்தங்களுக்கேயன்றி சித்துப்பொருள்களாகிய கடவுளுக்காவது ஆன்மாக்களுக்காவது இல்லை.

ரா.—ஆன்மாக்கள் பிறப்பதும் இறப்பதுமாக இருக்கின்றனவே; இதனை யெப்படி இல்லையென்று சொல்லுகிறீர்கள் ?

ஞா.—ஆன்மாக்கள் சரீரத்தை யெடுப்பது பிறப்பு என்றும், சரீரத்தைவிட்டு நீங்குவது இறப்பு என்றும் சொல்லப்படும். அவ்வளவேயன்றி ஆன்மாக்கள் உண்டாவதுமில்லை, அழிவதுமில்லை.

ரா.—ஆன்மாக்கள் தாமே பிறக்கின்றன, தாமே இறக்கின்றன என்றாலோ ?

ஞா.—ஆன்மாக்கள் அறிவுடைய பொருள்களாயினும் அவற்றின் அறிவு சிற்றறிவாயிருத்தலால் அவைகள் தாமே சரீரங்களை யெடுக்கா. உன்னையே நீ யோசித்துப்பார். நீயே உன்சரீரத்தைப் படைத்துக்கொண்டாயா ? இல்லையே.

ரா.—அறிவுப்பொருள்களாகிய ஆன்மாக்களுக்குக் கடவுள் சரீரத்தைக் கொடுப்பதுபோல் அறிவு ரூபமாகிய கடவுளுக்கும் அவரினும் உயர்ந்த வேறொரு கடவுள் சரீரத்தைக்கொடுத்து அவரையும் பிறக்கச்செய்யலாமே ?

ஞா.—ஆன்மாக்கள் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாயிருத்தலால், கடவுள் அவைகளின் அறிவையும் கிரியையும் மேலு மேலும் விளக்கவேண்டி அவைகளுக்குச் சரீரத்தைக் கொடுக்கிறார். அவர் பேரறிவும் பேராற்றலும் உடையவராயிருத்தலினால் அவருக்குச் சரீரமே வேண்டுவதில்லை. அவர் உயர் வொப்பில்லாத பேரறிவும் பேராற்றலுமுடையவராயிருக்க அவரினும் உயர்ந்தபேரறிவும் பேராற்றலும் உள்ளபொருள் ஒன்று இருக்கும் என்று எண்ணுவது மதியீனமாகும்.

ரா.—சுவாமி, அடியேன் அறியாமையால் கேட்கும் கேள்விகளால் தேவரீர் ஆயாசப்படாதிருக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஞா.—உனக்கு எவ்வளவு சந்தேகமிருந்தாலும் தாராளமாய்க் கேட்கலாம். அதனால் எனக்கு ஒரு சிறிதும் வருத்தமிராது.

ரா.—கடவுளுக்கும் உருவம் உண்டு என்றுசொல்லி அவரை உருவமாகப் பூசிக்கிறார்களே, அவ்வுருவம் அவருக்கு எப்படி வந்தது.

ஞா.—அவருக்கென ஒரு உருவமுமில்லை. அவர் ஆன்மாக்களால் சுட்டி யறியப்படாதவர். முதல் நடு இறுதியில்லாதவர்



ஞானமே வடிவமாயிருப்பவர். இன்னதன்மையரென்று பிறரால் நினைத்தற்கும் உரைத்தற்கும் இயலாதவர். உயிர்களைப்போல் விருப்பு வெறுப்பு உடையவரல்லர். உயிர்களுக் குயிராயிருப்பவர். சித்து அசித்து என்னும் இருவகைப் பொருள்களோடும் இரண்டறக் கலந்திருந்து அவைகளை யியக்கிக்கொண்டிருப்பவர்.

**சிவப்பிரகாசம்.**

ஈங்கிதுவென் றதுகடந்த வியல்பி னானு
மீறுமுத னடுவொன்று மிலாமை யானு
மோங்கிவளர் ஞானமய னாத லானு
முண்மைபிறர்க் கறிவரிய வொருமை யானுந்
தாங்கரிய வெறுப்பினொடு விருப்புமெல்லாஞ்
சார்வரிய தனிமுதல்வ னாத லானு
நீங்கலரு முயிர்க்குயிராய் நிற்ற லானு
நிறுத்திடுவ னினைந்தவுரு நிமலன் றானே.

அவர் சிற்றறிவுடைய ஆன்மாக்களின் மனோவாக்குக் காயங்களால் உணரப்படாதவரா யிருத்தலால் அவர் அவைகளுக்கு அருள் செய்யவேண்டி பற்பல திருமேனிகளைக் கொள்ளுகிறார்.

ரா.—அவர் கொள்ளும் திருமேனியும் நம்முடைய சரீரத்தைப் போலவே பிரிதிவிமுதலிய பஞ்சபூதங்களாலாகிய திருமேனிதானோ?

ஞா.—அன்று. அவர் தமது அருட்சத்தியையே திருமேனியாகக்கொள்வர். அவர்கொள்ளும் பற்பல திருமேனிகளின் இலக்கணங்கள் சைவாகமங்களிலும் சித்தாந்த ஞானசாத்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவைகளை வரன்முறையாகநல்லாசிரியரை யடைந்து அவர் பணியில்நின்று அறிந்துகொள்ளவேண்டும்.

ரா.—சுவாமி, தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவானே தேவேந்திரனுக்குக் கடவுளில்லை, ஆன்மாவில்லை, புண்ணியபாவங்களில்லை, சொர்க்கநரகங்களில்லை யென்று ஏன்போதித்தார் ?

ஞா.—முன்னொருகாலத்தில் தேவேந்திரன் சூரபத்மன் முதலிய அசுரர்களால் மிகவும் துன்பமடைந்தமையால், அத்துன்பத்திற்குக் காரணமாயிருந்தது தேவேந்திர பதவியே என்றுணர்ந்து அப்பதவியை வெறுத்துக் காட்டையடைந்து தவம்செய்யப் புறப்பட்டான். அப்போது அத்தேவகுரு அவன் அவ்வாறு செய்யாதிருக்கவேண்டி அவனுக்கு உலகாயதமதத்தைப் போதித்தார்.

ரா.—இதென்ன அக்கிரமம்! ஒருவனுக்குக் கடவுள் நிச்சயம் உண்டாவதே அரிது. உண்டாயினும் உலகவாழ்க்கையில் வெறுப்

புண்டாவது அதனினும் அரிது. போகியென்று பெயரெடுத்து, அர ம்பைமாதர்கள் சாமரையிரட்டவும், மந்தாரமுங்கற்பகமும் புஷ்பவரு ஷம் சொரியவும், பலதேவர்கள் வந்து தன்னடிமிசை வீழ்ந்து வணங்கவும், சப்தரிஷிகளும் தம் சிவிகையைத் தாங்கிச்செல்லவும், தேவலோகத்தை அரசாண்டு, இந்திராணியின் ஈர்க்கிடைபோகா இளமுலைப்போகத்தில் அழுந்திக் கிடப்பவன் அவ்வாழ்க்கையை வெறுத்துத் தவஞ்செய்யப் புறப்படுவது அரியவற்றுளெல்லாம் அரி யது. இவ்வாறிருக்க, அவனைத் தவஞ்செய்யாதபடி தடுத்து மீள வும் அப்போகத்தில் அழுத்துவது தருமமா ?

ஞா.—உலகத்தில் மனிதர்களிடத்தில் மயானவைராக்கியம், புராணவைராக்கியம், பிரசவவைராக்கியம் என்னும் மூன்றுவைராக் கியங்களைக்காண்கிறோம். புராண வைராக்கியக்காரர்கள் புராண படனஞ்செய்யுமிடத்தில் அன்பும் விரத்தியும் பெற்றவர்கள்போற் காணப்படுவார்கள். அவ்விடத்தை விட்டு நீங்கினவுடன் அன்பும் விரத்தியும் அவர்களைவிட்டு நீங்கிவிடும். மயான வைராக்கியக்காரர் கள் பிணத்துடன் மயானத்திற்குப்போகும்வரையில் விரத்தி வந்தவர் கள்போற் காணப்படுவார்கள், மயானத்தைவிட்டுத் திரும்பினால் பழையபடியே உலகப்பற்றில் அழுந்திவிடுவார்கள். பிரசவவேதனைப் படும்போது மாத்திரம் பெண்கள்புருஷனை வெறுப்பார்கள். அவ் வேதனை நீங்கினவுடன் புருஷனை விரும்புவார்கள். அவ்வாறே, இந் திரனும் அவுணர்களாலடைந்த பெருந்துன்பத்தினால், அச்சமயம் உலகவாழ்க்கையைவெறுத்தவனாகக் காணப்பட்டாலும், அவன் உண் மையாக நித்தியாநித்திய வத்துவிவேகம் பிறந்து துறவை விரும்ப வில்லை. ஆதலால் அவனுக்குத் துறவறம் பயன்படா தென்பதை யுணர்ந்தே, "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்னுந் திருக்குறளுக்கிணங்க, பிரகஸ்பதி பக வான் அவனுக்கு உலகாயதமதத்தைப் போதித்தனர்.

ரா.—சுவாமி, தாங்கள் இவ்விதமான சமாதானங்களைச்சொல் வது எனக்குப் பொருத்தமாகக் காணப்படவில்லை. சீடனை அஞ்ஞா னத்தினின்றும் நீக்குகின்றவனல்லவோ குரு என்று சொல்லப்படு வான். கடவுளில்லை என்றுசொல்லி முன்னிருந்த ஞானத்தையுங் கெடுத்து உலகமயக்கமாகிய அஞ்ஞானத்தில் மேலுமேலும் அழுத்து பவனா குரு !

ஞா.—அப்பா, அஞ்ஞானத்தினின்றும் நீக்குபவனை "குரு" என்று சொல்லப்படுவான். ஆனால், தேவ குரு இந்திரனை அஞ்



ஞானத்தினின்றும் நீக்குவதற்குப் பதிலாக அதில் அழுத்து தல் முறையோ, என்று நீ நன்றாய் வினவினாய். நீ சாஸ்திர விசா ரணை செய்யாதவனாகையால் உனக்கு எம்மட்டில் சமாதானஞ் சொல்லவேண்டுமோ அம்மட்டில் மாத்திரம் சொல்லவேண்டி யுத்தி அனுபவவாயிலாகச் சமாதானம் கூறினேன். அதனாலும் நீ திருப்தி யடையாமையால் இனிச்சுருதிவாயிலாக அதனை விளக்குகின்றேன். இதைக் கேட்டு உன் சந்தேகத்தை ஒழித்துவிடு. கடவுள் செய்யும் தொழில் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என ஐந்து வகைப்படும். இவற்றுள் அநுக்கிரகம் என்பதுதான் ஆன் மாக்கள் கடைசியாக அடையவேண்டிய பெரும்பயன். இதுவே பேரின்பம் என்றும் பரமுத்தி என்றும் சொல்லப்படும். ஆன்மாக் களுக்கு இப்பரமுத்தியைக் கொடுத்தற் பொருட்டே கடவுள் மற்ற நான்கு தொழில்களையுஞ் செய்வர். இந்நான்கு தொழில்களையும் அவர் செய்யாவிட்டால் ஆன்மாக்களுக்கு முத்தி சித்திக்காது. இந்நான்கினுள் திரோபவம் என்பதும் ஒன்று. இது ஆன்மாக் களுக்கு கன்ம நாசம் உண்டாக வேண்டி அவைகளைப் போகத்தில் அழுத்துதலாம். இதனை "ஊட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்து நின் றூட்டுவதாகும்" என மேலோர் விளங்க உரைத்தனர். இதனை இன்னும்விரிக்கிற்பெருகும். அன்றியும், இந்திர போகத்தை விரும்பி நூறு அசுவமேதஞ் செய்தவர்கள் இந்திரராவார்கள். பிரகஸ்பதியால் உலகாயதம் போதிக்கப்பெற்ற இந்திரனும், அதற்கு முன்னே நூறு அசுவமேதஞ் செய்து அவ்விந்திரபதவியை யடைந்தான். தீவினை செய்பவர்கள் தாம் செய்யும் தீவினைப்பயனை யனுபவித்தல் எப்படி அவசியமோ, அப்படியே, பயனை விரும்பி நல்வினை செய்பவர்களும் தாம் செய்த நல்வினைப் பயனை யனுபவித்தலும் அவசியமாம். ஆத லால் அவ்விந்திரனும் முன் செய்த அசுவமேதப்பலனை யனுபவித்தல் அவசியமாக முடிந்தது. அவன் அதை யனுபவித்தாலன்றி அவனுக் குத் துறவறம் கைகூடாது. இதனை யுணர்ந்தே தேவ குரு அவ னுக்கு அச்சமயத்தில் அவ்வாறு உபதேசித்தனர். இவரைப்போல வே கிருஷ்ணபகவானும் ஒரு காலத்தில் மாயாவாதம் என்னும் ஒரு மதத்தை அருச்சுனனுக்குப் போதித்தார்.

(இன்னும் வரும்.)

## சைவ சமயிகளுக்கு எச்சரிப்பு.

சைவசமயிகளாகிய நம்மவர்களுள் கல்விமான்கள் பலர் இல்லாமற் போகவில்லை. ஆயிரம் பதினாயிரம் இலட்சக் கணக்காகச் செலவிட்டுக் கோயிற்றிருப்பணிகளும் திருவிழாக்களும் நடத்தும் புண்ணியவான்களும் தருமகர்த்தர்களும் இல்லாமற் போகவில்லை. சத்திரங்கள் கட்டித் தக்கார் தகவிலரென்றும் பாராது ஓயாமல் பிராமண சந்தர்ப்பணை அன்னதான முதலியன செய்யுந் தருமவான்கள் பலர் இல்லாமற் போகவில்லை. வாதுக்குஞ் சண்டைக்கும் வாழ்வுக்குஞ் சாவுக்குங் குடிக்குங் கூத்திக்கும் எவ்வளவானாலும் பின்னிடாமல் மார்பைத் தட்டிக்கொண்டு செலவு செய்யுந் தனவான்கள் பலர் இல்லாமற் போகவில்லை. ஆனால், அந்தோ! அந்தோ!! சபைகளை வைத்து ஒழுங்காக நடத்தியும், ஒழுங்காக நடைபெறுஞ் சபைகளை யாதரித்தும், காலதேசவர்த்தமானங்களை யுணர்ந்து நமது சிறுவர்களுக்குச் சமயபோதனை செய்தும் சைவசமயபரிபாலனஞ் செய்யுஞ் சைவப்பிரபுக்களை மாத்திரம் காணேம்! காணேம்!! இதனாலேயே நமக்கு ஆலயங்கள் சாத்திரங்கள் முதலிய எல்லா நலங்களும் இருந்தும் அவற்றினாலடையவேண்டிய பெரும்பிரயோஜனங்களை நாம் இழந்து வருகிறோம். சமயங்களுக்கெல்லாம் நாயகமும் தாயகமுமாகிய நம்முடைய சைவசமயம் குன்றி விடுகின்றது. நம்மவர்கள் தங்கள் சமய உண்மைகளை யறியாமல் சமயக் குருடராயிருக்கிறார்கள். சைவ சமயானுட்டானங்கள் தலைகீழாய் மாறிவிட்டன. ஆலயவழிபாடு அறிவிலிக்கென வெண்ணும் அறியாமை மேலிட்டு ஜனங்கள் கோவிலுக்குப்போகவுங் கூசுகிறார்கள். சிவ சின்னங்களைத் தரிக்க லச்சைப்படுகிறார்கள். நமது சிறுவர்கள் யார் யாருடன் பழகுகின்றார்களோ அவரவர்களின் நடையுடைபாவனைகளை யநுசரிக்கிறார்கள். மாயாவாதிகளோடு பழகி மாயாவாதிகளாகவும், நாத்திகரோடு பழகி நாத்திகராகவும், புத்தரோடு பழகி புத்தராகவும், கிறிஸ்தவர்களோடு பழகி கிறிஸ்தவர்களாகவும், மகமதியர்களோடு பழகி மகமதியர்களாகவும் மாறுகிறார்கள். இவர்கள் கிறிஸ்தவர்களின் மாதாகோவில்களிலும் மகமதியரின் மசூதிகளிலும் பிரார்த்தனை செலுத்தி வணங்குகிறார்கள். விநாயக சதுர்த்தியில் தாங்கள் பூசை செய்யும் விநாயக விக்கிரகங்களைச் சிறு பிள்ளைகளிடங்கொடுத்து வீதியிலெறியவிட்டு, அல்லா பண்டிகையில் மகமதியர்களைக் குருவாகவைத்துக்கொண்டு அல்லாவைக் குதிரைமேலேற்றிச் சர்வோபசாரத்துடன்



ஊர்கோலம் வருவித்து மகோற்சவங்கொண்டாடி வணங்குகிறார்கள். இவர்களுக்குச் சிவாலயத் திருவிழாக்களும் பிறசமயத்தவர் விழாக்களும் ஒரே திருவிழாவாக இருக்கின்றன. இவ்விதமாக நமது சைவசமயமானது நிலைகுலைந்து மீகாமனில்லாமரக்கலம்போலத் தலை தடுமாறித் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் கல்விமான்களும், தனவான்களும், சைவசமயத்தினர்க்கு ஆசாரியர்களாகிய ஆதி சைவப்பிராமணர்களும் தில்லைவாழ்ந்தணர் முதலிய சைவப்பிராமணர்களும், சைவமடாதிபதிகளும் முன் வந்து சைவசமயத்தை நிலை நிறுத்துவது கடமையாயிருந்தும் இதை இவர்கள் சிறிதும் கவனியாமல் கடவுளின் மீதும் கலிகாலத்தின் மீதும் பழிபோட்டுவிட்டு, தங்கள் தங்கள் சுயலாபத்தையே பார்த்துக்கொண்டு கவலையற்றிருக்கின்றார்கள். இவர்களுள் ஆதி சைவப்பிராமணர்கள் பெரும்பாலார் கல்வியறிவின்றி தங்கள் அருமை பெருமைகளை உணராமல், தங்களை மற்றப் பிராமணர்களினும் தாழ்ந்தவர்களாகவும் கல்லைக்கழுவி சீவனஞ் செய்பவர்களாகவும் எண்ணிக்கொண்டும், தங்களை விட்டாற் கோயில்களிற் பூசை செய்வார் வேறு யாரும் இல்லையாகையால் தாங்கள் எப்படியிருந்தாலும் தங்களுக்குச் சீவனம் நடந்துவிடுகிறதென்று தீர்மானித்துக்கொண்டு கல்வியில் தேர்ச்சி பெறாமலும், அதனால் சிவாலயபூசை முதலியவற்றை வேதாகமவிதிப்படிச் செய்யச் சத்தியற்றும் இருக்கிறார்கள். இவர்கள் பூசை செய்யுங் கோயில்கள் பலவித அக்கிரமங்களுக்கு வாசஸ்தானமாய் மூர்த்திகரமில்லாதழிகின்றன. திருத்தொண்டத்தொகையில் முதலிலே எடுத்துவணங்கப்படும் தில்லைவாழந்தணர்களும் சைவசமயாபிவிருத்தியில் கவலையற்று பலவிதத்திலும் ஏறக்குறைய ஆதிசைவர்களையொத்திருக்கிறார்கள். இவர்களியாவரும் ஓரேயிடத்திலும் ஓரேமரபினராகவும் ஒருகட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடக்கக்கூடியவர்களாகவும், பெருங்கூட்டத்தினராகவும் இருத்தலினால் இவர்கள் முயற்சி செய்தால் எளிதில் கல்வி கேள்விகளால் மேம்பட்டு உலக பூஜியராய் மற்றவர்களையுந் திருத்தலாம். இப்படிச்செய்து கொள்ள இவர்களுக்கும் முயற்சியில்லை. இவ்வாறாக நமது சமயத்தின்கதி எங்கு பார்த்தாலும் அதோகதியாயிருக்கிறது. இதைக்கண்ணுற்ற மிகமேதாவிகளாகிய ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் இத்தேசத்தைக் கிறிஸ்தவ தேசமாக்கிவிடக் கங்கணங் கட்டிக்கொண்டு நாடு நகரம் மூலை முடுக்கு காடு மேடு எங்கும் பாடசாலைகள் வைத்து அதில் நம்முடைய சிறுவர்களுக்குத் தங்கள் சமய நூல்களையும் ஒழுக்கங்களையுங் கற்பித்தும்

இன்னும் பற்பல முயற்சிகளைச் செய்தும் நம்மவர்களைக் கூட்டங் கூட்டங்களாகவும் கிராமங்கிராமங்களாகவும் கிறிஸ்தவர்களாக்கிஇது வரையில் கோடிக்கணக்கான நம்மவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி விட்டார்கள். இன்னும் (சென்ஸஸ் கணக்கின்படி) வருடம் ஒன்றுக்கு முப்பதினாயிரம் நாற்பதினாயிரம் ஜனங்கள் வீதமாக நம்மவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி வருகிறார்கள். இவர்களால் முற்றிலுங் கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் போக எஞ்சி நின்றவர்களையும் நடையுடை பாவனைகளில் கிறிஸ்தவர்களாக்கிப் பதப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதனால் நாளுக்கு நாள் நம்மவர்களின் தொகை குறைந்து வருகிறது. இவ்வாறு குறைந்துகொண்டே வருமானால் கடைசியாகச் சைவசமயம் இருந்த விடம் தெரியாமலே மறைந்துவிடக் கூடிய காலமும் வரக்கூடும். சைவசமயிகளே, இதை நீங்கள் எப்படிச் சகித்திருக்கிறீர்கள்? உங்களுக்குச் சமயாபிமான மில்லையா? இதைப்பார்க்க உங்கள் கண் கூசவில்லையா? மனம்பதைக்க வில்லையா? இதைத்தடுக்க உங்களாலாகாதா? கிறிஸ்தவர்கள் உங்கள் சிறுவர்களுக்குப் பாடசாலைகள் வைத்து அதன் மூலமாகத் தங்கள் சமய நூல்களையும் ஒழுக்கங்களையும் உங்கள் சிறுவர்களுக்குப் போதித்து வருவதற்கு நீங்களும் உடன்பட்டிருத்தல் எவ்வளவு அக்கிரமம்! நீங்களேன் அவர்களைப்போல் பாடசாலைகள் வைத்து அதில் உங்கள் பிள்ளைகளுக்கு உங்கள் சமய நூல்களைப் போதிக்கலாகாது? இவ்விஷயத்தில் கிறிஸ்தவர்கள் செயல் கடவுளுக்குப்பிரீதியோ? உம்மவர்கள் செய்கை கடவுளுக்குப் பிரீதியோ? இதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்; சிந்திப்பீர்களாயின் உம்மவர்களின் செய்கை மிக அக்கிரமமும், சிவாபராதமும், சமயத்துரோகமுமாம் என்று உங்களுக்கே தெரியவரும். நமது சிறுவர்களுக்கு நமது சமய நூல்களைப் போதிக்காதபோது நமக்கு எத்தனை கோயில்களிருந்துமென்ன? மடங்களிருந்துமென்ன? சாத்திரங்களிருந்துமென்ன? சபைகளிருந்துமென்ன? சமயாபிமானிகளிருந்துமென்ன? கடவுள் "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி" எனவும், "கல்லா நெஞ்சில் நில்லானீசன்" எனவும் தமிழ்மறை முறையிடுவதை நீங்கள் அறியீர்களா? சைவசமயிகாள், மோசம் வந்து விட்டது. இன்னும்பழைய படியே குருட்டுத் தனமாய் தூங்காதீர்கள். விழித்துப் பாருங்கள். எங்கும் கிறிஸ்து பாடசாலைகள். எங்கும் கிறிஸ்து கோயில்கள். எங்கும் கிறிஸ்து மடங்கள். எங்கும் கிறிஸ்துசபைகள். எங்கும் கிறிஸ்து போதனைகள். எங்கும் கிறிஸ்து சமயிகள். எங்கும் கிறிஸ்து மயமாயி



ருக்கின்றது. இனி ஒரு கணமும் சும்மாவிராதீர்கள். உங்கள் சிறுவர்கள் கிறிஸ்து பாடசாலைகளில் வாசியாதவண்ணம் நீங்களே எங்கும் பாடசாலைகள் வைத்து அதில் வருணாச்சிரமங்களுக்கும் கல்விக்கும் இசைய ஆங்கிலத்தோடு வேதாகமங்களும் சிவஞானபோத முதலிய நூல்களும் சைவாநுட்டானங்களுங் கற்பியுங்கள். இக்காலத்தில் வெறுந்தமிழ் படிப்போர் இல்லை. ஆதலால், ஆங்கில பாடசாலை வைத்து அதில் தமிழும் சைவ நூல்களும் கற்பித்தால் சைவசமய மாத்திரமன்றி தமிழ்ப் பாஷையும் விருத்தியாகும். தேசமும் க்ஷேமமடையும். நமதுசமயமும் தமிழ்முதலிய சுதேச பாஷைகளும் தேசமும் க்ஷேமமாயிருத்தற்கு இதைக் காட்டிலுஞ் சிறந்த உபாயம் வேறில்லை. இக்காலத்தில் வெறும் ஆங்கிலங் கற்றிருப்போர் சைவாநுட்டானங்களைக் கைவிட்டிருப்பதனால் ஆங்கிலத்தை யசட்டை செய்யாதீர்கள். சமயபோதனை யில்லாமையால் இவர்கள் சமய ஒழுக்கங்களைக் கைவிடுகிறார்களேயன்றி ஆங்கிலப் படிப்பாலன்று. ஆங்கிலப்படிப்போடு தமிழ் முதலிய சுதேசபாஷைகளும் சைவ நூல்களும் கற்பிக்கப்பட்டால் ஆங்கிலப்படிப்பே தமிழ் முதலிய சுதேசபாஷாபி விருத்திக்கும் சைவ சமயாபிவிருத்திக்கும் பெருந்துணையாகு மென்று உணருங்கள். சைவாபிமானிகாள், இதை நீங்கள் ஒவ்வொருவரும் அன்புகூர்ந்து சிந்தித்து இயன்ற அளவில் ஆங்கில பாடசாலைகள் வைத்து அதில் உங்கள் சிறுவர்களுக்கு ஆங்கிலமும் தமிழ் முதலிய சுதேச பாஷைகளும் வேதாகமமுதலிய நூல்களும் அநுட்டானங்களும் கற்பித்து, சைவசமயத்தைக் காப்பாற்றி உங்கள் சமயத்திற்கும் கடவுளுக்கும் பிரீதியாக நடந்து கொள்ளுங்கள்.

(இன்னும் வரும்.)

---

## பதி பசு பாசம்.

### சிருட்டி வரலாறு (51-வது பக்கத்தொடர்ச்சி.)

சில மதஸ்தர்கள் உலகமாவது இந்தநிலவுலகமொன்றேயெனவும், உயிர்களாவன இந்த நிலவுலகத்திலுள்ள உயிர்களே எனவும் எண்ணுகிறபடியால் இவர்கள் செய்யுஞ் சமயவாராய்ச்சியும் மிகவும் குறுகினதாய் இந்நிலவுலகத்தோடு மாத்திரம் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. நெடுங்காலமாக ஐரோப்பியர் முதலானவர்களுக்கு இவ்வுலகம் உருண்டைவடிவாயிருப்பதும், இது ஆகாயவெளியில் அந்தரமா யியங்

க்கொண்டிருப்பதும் தெரியாமலேயிருந்தது. இதை நம்முன்னோர்கள் பண்டைக்காலந்தொடங்கி அறிந்திருப்பது மன்றி, இவ்வுலகம் முற்றிலும் உருண்டைவடிவாயிராமல் முட்டையைப்போல் உருண்டும் சற்றுநீண்டும் இருப்பதையும் அறிந்து இதற்கு அண்டம் என்று பேரிட்டார்கள். அன்றியும், இவ்வுலகமாத்திரமன்றி பலவகைப்பட்டவுலகங்கள் ஆகாயப்பெருவெளியில் அந்தரமாக இயங்கிக்கொண்டிருத்தலையும் மற்றவர்களெல்லாருக்கு முன்னமே நம்மவர்கள் அறிந்துள்ளார்கள். இதனை "அந்தரத்தகிலகோடி தாழாம னிலைநிற்க வில்லையோ" என்னும் ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் திருவாக்கால் உணரலாகும். கடவுளின் அருளாட்சிக்குட்பட்ட உலகங்கள் அளவிடற்கரியதோர் மகாசமுத்திரத்தையும், அவற்றுள் ஒன்றாகிய இப்பூவுலகமும் இதிலுள்ள உயிர்களும் அம்மகாசமுத்திரத்தின் ஓர் அலையையும் அவ்வலையிலுள்ள உயிர்களையும் ஒக்கும். ஆதலால், நம்முடைய வைதிகசைவசமய நூல்களிற் கூறப்பட்ட விஷயங்கள் முற்றிலும் பிரகிருதி தத்துவத்தின் காரியமாகிய இந்நிலவுலகத்தோடு மாத்திரம் சம்பந்தப்பட்டனவாயிராமல், நாதமுதல் பிரிதிவி ஈறாக உள்ள தத்துவங்கள் பலவற்றின் காரியங்களாக விரிந்துகிடக்கும் பலவகைப்பட்ட புவனங்களோடும் சம்பந்தப்பட்டனவா யிருக்கின்றன. வேத சிவாகமங்களையோதிச் சித்தாந்த ஞானசாத்திரங்கள் வாயிலாகப் பதிபசுபாசங்களாகிய பதார்த்தத்திரயங்களின் இலக்கணங்களையுணர்வார்க்கே இது விளங்கும். இவ்வுணர்ச்சியில்லாதார் பலவகைப்பட்ட புவனங்களிலுள்ள பலவகைப்பட்ட ஆன்மவர்க்கங்களின் பொருட்டு, பலபலவகையாகச் சிவபெருமானார் செய்தருளிய திருவிளையாடல்கள் தங்கள் மனத்திற்கு விஷயமாகாமல் அத்திருவிளையாடல்களைக் கூறும் புராணங்களைப் பொய்யெனக்கூறி யிடர்ப்படுவர்.

ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் எனவும் பிரளயாகலர் எனவும் சகலர் எனவும் முத்திறப்படுவர். இவர்களுள் விஞ்ஞானகலர் ஆணவம் என்னும் ஒருமலம் மாத்திரம் உடையவர்கள். பிரளயாகலர் ஆணவம் மாயை என்னும் இருமலங்களையுடையவர்கள். சகலர் ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்களையுடையவர்கள். சகலருடைய தனுவாதிகள் தூலமாகவும் அசுத்தமாகவும் இருக்கும். இவர்களைக்காட்டிலும் பிரளயாகலர் பலமடங்கு அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்திருப்பார்கள். இவர்களுடைய தனுவாதிகள் சூக்குமமாகவும் சகலருடைய தனுவாதிகளைவிட சுத்தமாகவும் இருக்கும். இவர்களைக்காட்டிலும் விஞ்ஞானகலர் பலமடங்கு அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்தவர்களாயிருப்பார்கள். இவர்களுடைய தனுவாதிகள், பரம் அல்லது அதி சூக்குமமாகவும், சிவமேயெனும்படி அதி பரிசுத்தமாகவும் இருக்கும்.



சகலர் எனப்படுவார் அண்டசம், (முட்டையில் தோன்றுவன), சுவேதசம் (வேர்வையில் தோன்றுவன), உற்பிச்சம் (வித்து வேர் கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன), சராயுசம் (கருப்பையில் தோன்றுவன) என்னும் நால்வகைத் தோற்றத்தில், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்என்னும்எழுவகைப் பிறவிகளையெடுத்து, இருநூற்றிருபத்துநாலு புவனங்களில் வசிக்கும் உயிர்கள். பிரளயாகலராவார் மண்டலர் எண்மர், குரோதனர் எண்மர், வீரரொருவர், ஸ்ரீகண்டர் ஒருவர், உருத்திரர் நூற்றுவர் ஆக நூற்றுப்பதினெட்டுப் பேர்களாவர். இவர்களன்றி இன்னும் பல உருத்திரர் உண்டு. விஞ்ஞானகலர் அணுசதாசிவரென்றும், அட்டவித்தேசுரரென்றும், சத்தகோடி மகாமந்திரேசுரரென்றும் மூவகைப்பட்டிருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவருள்ளும் பலபேதங்களுண்டு.

இம்மூவகை ஆன்மாக்களுக்கும் தனுகரணபுவனபோகங்களாகக் காரியப்படும் மாயையும் இவர்களுக்கேற்றவாறு சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றுவகைப்படும்.

## சுத்தமாயை.

சுத்தமாயையானது குண்டலி, குடிலை, மகாமாயை, ஊர்த்துவமாயை, விந்து முதலியபேர்களைப் பெறும். இதிலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்னும் நான்குவாக்குகளும், சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தையென்னும் தத்துவங்களும் உண்டாகும்.

இது சிவபெருமானுக்கு வைப்புச்சத்தியென்றும், பரிக்கிரகசத்தியென்றுஞ் சொல்லப்படும். (சிவத்தோடு அக்கினிக்கு உஷ்ணம் போலக்கலந்திருக்கும் சத்திக்குத்தாதான்மியச் சத்தியென்று பெயர். தாதான்மியமாவது உடலின் பாகமாகிய கை உடலினின்றும் வேறாகப் பிரிக்கப்படாததுபோல் கூடியிருக்கை. பரிக்கிரகமாவது கையிலுள்ள தடியைப்போல் பிரிந்தும்பிரியாமலும் இருக்கை). சுத்தமாயையின் காரியமாகிய சிவம் சத்தி முதலிய ஐந்துதத்துவங்களும் சிவதத்துவமென்றும், சுத்ததத்துவமென்றும், சுத்தாத்துவாவென்றும், பிரேரககாண்டம் என்றும் சொல்லப்படும்.

சுத்ததத்துவங்கள் ஐந்தினுள் சிவதத்துவமாவது சிவபரம்பொருள் வெறும் ஞானமாத்திரமாய் நின்ற அவசரம். இந்த அவசரத்தில் இவர் இலயசிவன் என்றும், சத்தர் என்றும் பேர்களைப் பெறுவர். இவருடைய திருமேனி நிட்களத்திருமேனியாம். சத்திதத்துவமாவது அவர் கிரியைமாத்திரமாய் நின்ற அவசரம். சாதாக்கியதத்துவமாவது அவர் ஞானமும் கிரியையும் சரியாயொத்து ஞானக்கிரியாசொரூபராய் நின்ற அவசரம். இந்த அவசரத்தில் அவர் சதாசிவரென்றும் யுத்தியுத்தர் என்றும் போகசிவன் என்றும் பேர்களைப்பெற்று சகளநிஷ்களத் திருமேனியுடையவரா யிருப்பர். ஈசுரதத்துவமாவது கிரியையேறியும் ஞானம் குறைந்தும் காரியங்களைப் பண்ணத்தொடங்கிய சத்தியுடன் கூடிநின்ற அவசரம். இந்த அவசரத்தில் அவர் மகேசுரர் என்றும், பிரவிருத்தர் என்றும் அதிகாரசிவன் என்றும் சொல்லப்பட்டுச் சகளத்திருமேனியுடையவராயிருப்பர். சுத்தவித்தை யென்பது ஞானமேறிக் கிரியை குறைந்துநின்ற அவசரம். இவ்வவசரத்தில் அவர் உருத்திரர் எனப்படுவர். இவ்வைந்தும் சிவபெருமானார்க்குச்சுதந்திரவடிவங்களென்னப்படும்.

மேலே கூறிய சத்திதத்துவத்திலிருந்து நாததத்துவமும் நாததத்துவத்திலிருந்து விந்துதத்துவமும் தோன்றும். சிவபரம்பொருள் ஆணவமலத்தால் அறிவும் செயலும் நிகழப்பெறாமல் இருக்கும் ஆன்மாக்களுக்கு அறிவை விளக்கவந்த அவசரம் நாததத்துவம் என்னப்படும். அவைகளுக்குக் கிரியையை விளக்கவந்த அவசரம் விந்துதத்துவமென்னப்படும். இவை முறையே சிவதத்துவமென்றும் சத்திதத்துவமென்றும், நாதவிந்துக்கள் கூடின அவசரம் சதாசிவதத்துவமென்றுஞ் சொல்லப்படும்.

மேலே கூறியவாறு சிவபெருமான் ஒருவரே முறையே சத்தர், யுத்தியுத்தர், பிரவிருத்தர் எனவும், இலயசிவன், போகசிவன், அதிகாரசிவன் எனவும் சிவன், சதாசிவன், மகேசுரன் எனவும் சொல்லப்பட்டு, அருவம், அருவுருவம், உருவம் என்னும் திருமேனிகளைக் கொண்டிருப்பர்.

முற்கூறிய சுத்ததத்துவங்களைந்தும், அசுத்தமாயையின் காரியமாகிய காலதத்துவத்திற்கு முந்தினதாய் (காலாதீதமாய்) இருத்தலினால், அவற்றுள் முன்னேதோன்றியது இது, பின்னேதோன்றியது இது என்று கூறுவதற்கிடமில்லாமல் சிவபெருமானார்க்கு நித்திய அதிட்டானமாயிருக்கும். ஆனால் இவைகளை ஒன்றினொன்று தோன்றியதாக ஏன் சொல்லவேண்டுமெனில், முன்பின்னாக நிகழும்ஞானசத்தி



கிரியாசத்திகளின் வியாபாரபேதம்பற்றி அவ்வாறு சொல்லப்பட்டதென்க.

சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுவரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் என்னும் இவ்விருபத்தைந்து வடிவங்களும் மகேசுரர் வடிவங்களாம்.

(இன்னும் வரும்.)

---

## பற்று.

(56 - வது பக்கத் தொடர்ச்சி.)

இவ்வுபாயங்களால் பற்றை யொழிப்பது கடினமாகும். பற்றை யொழிப்பதற்குப் பத்திமார்க்கமே எல்லாவற்றுள்ளும் எளியதும் மேலானதுமான மார்க்கம்.

**திருமந்திரம்.**

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்பொன் மணியினை யெய்தவொண் ணாதே.

ஓர் பச்சிலையைப் பற்றி நின்றதோர் புழு அப்பச்சிலையை விட்டு நீங்குவதற்கு வேறொரு பச்சிலையைப் பற்றுவதுபோல், எப்போதும் ஒன்றைப்பற்றி வர்த்தித்தலையே இயற்கையாகவுடைய ஆன்மாக்கள் தாங்கள் பற்றிநின்ற பிரபஞ்சப்பற்றை விட்டு நீங்குவதற்குப் பற்றற்ற கடவுளைப் பெரும் பற்றாகப் பற்றவேண்டும். கடவுளிடத்தில் பற்று உயர உயர பிரபஞ்சப் பற்று தானே நீங்கிவிடும்.

**திருக்குறள்.**

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

அன்றியும், "பெற்ற சிறுகப்பெறாத பெரிதுள்ளுஞ் சிற்றுயிர்" எனக் குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்தவாறு, தாம்பெற்ற பொருள்களைச் சிறியனவாகவும் பெறாத பொருள்களைப் பெரியனவாகவும் எண்ணுதல் உயிர்களின் இயற்கை. உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஒன்றினொன்று உயர்ந்தனவும் தாழ்ந்தனவுமாக இருக்கும். ஆதலால், முன்னே ஒரு பொருளின்கண் பற்று

வைத்து அதைவருந்தித்தேடி யடைந்தபிறகு அதனினும் பெரிதாகிய வேறொரு பொருளை நோக்க இதற்குமுன் வருந்தித்தேடி யரிதிற் கிடைத்தபொருள் சிறிதாகத் தோன்றும். அது சிறிதாகத் தோன்றுதலும், அதனினும் பெரிதாகிய வேறொரு பொருளிடத்தில் ஆசை யுண்டாகிறது.

**தாயுமான சுவாமிகள்.**

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
　　யாளினுங் கடன்மீதிலே
யாணைசெல வேநினைவ ரளகேச னிகராக
　　வம்பொன்மிக வைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
　　நெடுநா ளிருந்தபேரு
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
　　நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
　　முறங்குவது மாகமுடியு
முள்ளதே போதுநா னெனக் குளறியே
　　யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
　　பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
　　பரிபூர ணானந்தமே.

இவ்வாறே, உலகத்திலுள்ள ஒவ்வொருபொருளும் சொர்க்காதி பதவிகளும் அவைகளினும் மேம்பட்டபொருள்களையும் பதவிகளையும் நோக்க, அற்பமாகத்தோன்றிக்கொண்டே போய் மேம்பட்டபொருள்களிலே ஆசை உண்டாதலினால் உயிர்களை எக்காலத்தும்பற்றுவிடாமல் தொடர்ந்துகொண்டே போகிறது. ஆதலினால் உயர்வொப்பில்லாத பரமானந்தப் பரம்பொருளாகிய பரசிவனிடத்தில் பற்றுவைத்தால் வேறொரு பொருளிடத்தில் பற்றுவைத்தற்கிடமில்லாமல் பற்றுமுற்றிலும் நீங்கிவிடும்.

**திருவாசகம்.**

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போது
மனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இன்னும் வரும்.)

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

OFFICE OF THE REGISTRAR
23 JUN 1915
MADRAS

# சைவம்

மலர் 1.] இராக்ஷச௵ ஆனி௴ 1915௵ ஜூன்௴ [இதழ் 6.

## ஞானப்பிரகாச சம்பாஷணை

(87 - ஆவது பக்கத் தொடர்ச்சி.)

"வயலார் மருகற் பதிதன்னில் வாளர வாற்கடியுண்
டயலா விழுந்த வவனுக் கிரங்கி யறிவழிந்த
கயலார் கருங்கண்ணி தன்றுயர் தீர்த்த கருணைவெள்ளப்
புயலார் தருகையி னானென்னத் தோன்றிடும் புண்ணியமே."

ரா.—கடவுள் இருப்பது உண்மையானால் உலகத்தில் ஏன் அளவற்றசமயங்கள் இருந்துகொண்டு, மனிதர்கள் ஒருவரோடொருவர் தங்கள் தங்கள் சமயமே மெய்ச்சமயமென வாதுசெய்கிறார்கள்?

ஞா.—உலகத்தில் மனிதரியாவரும் ஒரேவிதமாயில்லை. இவர்கள், அவரவர்கள் ஊழுக்கேற்றவாறு, அறிவிலும் ஆற்றலிலும் தொழிலிலும் உருவத்திலும் நிறத்திலும் பாஷையிலும் உணவிலும் நடையிலும் குணத்திலும் பலவேறு வகைப்பட் டிருக்கிறார்கள். இதைப்போலவே இவர்கள் மதானுட்டானத்திலும் பலவகைப்பட்டவர்களாகவே யிருப்பார்கள். இப்படி இருப்பது உலகஇயற்கை. அன்றியும், கடவுள் ஞானமே சொரூபமாயிருப்பவர். அவரை ஞானக்கண்ணினாலன்றி வேறு வழியால் அறியலாகாது. ஆதலால், அவரை ஞானக்கண்ணினால் அறியமாட்டாதவர்கள், யானையின் ஒவ்வொரு அவயவத்தை மாத்திரம் ஒவ்வொருவனாகத் தடவிப்பார்த்து யானையின் உருவம் அவனவன் தடவிப்பார்த்த அவயவத்தைப்போலவே யிருக்குமென்று நிச்சயித்துக்கொண்டு சண்டைசெய்த பிறவிக்குருடர்களைப்போல், கடவுளின் மனோவாக்குக் காயங்களுக் கெட்டாத அளவுபடாத இலக்கணங்களுள் சிற்சிலவற்றை மாத்திரம் தங்கள்

தங்கள் பரிபாகத்திற்கேற்றவாறு நிச்சயித்துக்கொண்டு, தங்கள் தங்கள் சமயமே மெய்ச்சமயமெனவும் மற்றச்சமயங்களெல்லாம் பொய்ச்சமயங்களெனவும் வாது செய்வார்கள். கடவுளை ஞானக்கண்ணினாற் காண்பவர்களுக்கு எம்மதமும் சம்மதமாகவே யிருக்கும்.

ரா.—ஆனால், மகாஞானியென்று சொல்லப்படும் தாயுமானசுவாமிகள் "சைவசமயமே சமயம்" என்றும் "பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம்" என்றும் ஏன் கூறினார்?

ஞா.—பெரியோர்களுக்கு எல்லாமதமுஞ் சம்மதமேயானாலும், மதங்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் இல்லாமற்போகவில்லை. அவையெல்லாம் முத்தியாகிய மேல்நிலையை யடைவதற்குப் படிகளாய் (சோபானங்களாய்) இருக்கின்றன. ஒரு வீட்டின் மேனிலையையடைவதற்குப் பலபடிகளையேறிச் செல்வது எப்படி அவசியமோ, அப்படியே, முத்தியாகிய மேனிலையை யடைவதற்குப் பலமதங்களை யனுட்டித்தலும் அவசியமாம். இதுபற்றியே சமயங்கள் பலவும் புறப்புறச் சமயங்களெனவும், புறச்சமயங்களெனவும், அகப்புறச்சமயங்களெனவும், அகச்சமயங்களெனவும் வகுக்கப்பட்டன. உலோகாயதம், சமணம், பௌத்தமதப் பிரிவுகளாகிய சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்திமீகம், வைபாடிகம் ஆகிய ஆறுசமயங்களும் புறப்புறச்சமயங்களாம். மாயாவாதம், பாஞ்சராத்திரம், சாங்கியம், மீமாம்ஸம், தார்க்கிகம், யோகம் ஆகிய ஆறுசமயங்களும் புறச்சமயங்களாம். சைவம், பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம், மஹாவிரதம் ஆகிய ஆறுசமயங்களும் அகப்புறச்சமயங்களாம். சிவாத்வைதம் அல்லது சிவைக்கியவாதம், சிவஸங்கிராந்தவாதம், சிவசமவாதம், பாஷாணமோக்ஷவாதம், அவிகாரவாதம், பேதவாதம் ஆகிய அறுசமயங்களும் அகச்சமயங்களாம். இவ்விருபத்துநாலு சமயங்களுக்கும் அதீதப்பட்டது சைவசித்தாந்தமாகும். பலஜன்மங்களில் புறப்புறச்சமயங்களை யனுட்டித்தபிறகே புறச்சமயங்களை யனுட்டிக்க நேரிடும். பலஜன்மங்களிற் புறச்சமயங்களை யனுட்டித்தவர்களுக்கே அகப்புறச்சமயங்களை யனுட்டிக்கும் பாக்கியம் உண்டாம். பலஜன்மங்களில் அகப்புறச்சமயங்களை யனுட்டித்துப்பெற்ற புண்ணியமேலீட்டினால் அகச்சமயங்களை யனுட்டிக்கும் புண்ணியம் உண்டாகும். பலஜன்மங்களில் அகச்சமயங்களை யனுட்டித்துப்பெற்ற புண்ணிய பரிபாகத்தால் சமய நாயகமாகிய சகல சமயாதீத சுத்தாத்வைத சித்தாந்த சைவத்தை யனுட்டிக்கும் புண்ணியமுண்டாகும். சித்தாந்த சைவராய்ப் பிறந்தபின் பல ஜன்மங்களில் கிரமமாகச் சரியை கிரியை



யோகம் என்னும் மார்க்கங்களையனுட்டித்துப்பெற்றபரிபாக முதிர்ச்சியால் சிவஞானமுண்டாகும். இச்சிவஞானத்தால் முத்தியுண்டாகும்.

**சிவஞான சித்தியார்.**

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

இதுபற்றியே தாயுமானசுவாமிகள் அவ்வாறு கூறினார். அவரே மற்றோரிடத்திலும்,

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனு ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்து மறையாதி நூலையும் வகுத்துச்
சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற் சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ யுன்னைநா னணுகவுந் தண்ணருள் வகுக்க விலையோ

என்று, சிவபெருமானே பலவகைப்பட்ட ஆன்மாக்களின் பலவகைப்பட்ட பக்குவங்களுக்கிணங்க, அகச்சமயமாகிய சைவமுதலாகவும் புறப்புறச் சமயமாகிய உலகாயதமீறாகவுமுள்ள, அறுவகைச் சமயங்களையன்றி அளவில்லாத சமயங்களையும் வகுத்து "சமயங் கடந்த மோன சமரசம்" ஆகிய சுத்தாத்துவித சித்தாந்த சைவத்தையும் வகுத்ததாகக் கூறியருளினார். இதனை "அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறாங் குறியது வுடைத்தாய்" என்னுஞ் சிவப்பிரகாசச் செய்யுளானும் உணரலாகும். இதனால் சித்தாந்த சைவத்திற்கு மற்ற மதங்களெல்லாம் சோபானங்களாயிருக்கின்றனவென்பதும், ஆதலினால், சித்தாந்த சைவர்களுக்கு எல்லாச் சமயங்களும் அங்கீகாரமே என்பதும் விளங்கும்.

**திருநேரிசை.**

விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்து
யெரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்ற தாகும்
பரிவினாற் பெரியோ ரேத்தும் பெருவேளூர் பற்றி னானை
மருவிநான் வாழ்த்தி யுய்யும் வகையது நினைக்கின் றேனே.

ரா.—ஆனால், சைவசமயிகளுக்கு மாத்திரந்தானா மோட்சம் கிடைக்கும்? மற்றவர்களுக்கு மோட்சமில்லையோ? இப்படியே ஒவ்

வொரு சமயத்தாரும் "எங்கள் சமயமே மெய்ச்சமயம், எங்களுக்குத்தான் மோட்சம்கிடைக்கும்" என்கின்றார்கள். கிறிஸ்தவர்களும் தாங்களே ஞானிகளெனவும் தங்களுக்கே மோட்சம் கிடைக்குமென்றும், மற்றவர்களெல்லாம் அஞ்ஞானிகளென்றும் நரகத்தையடைவார்களென்றும் சொல்லுகிறார்கள். ஆதலால், யார்சொல்வதை நம்பலாம்? யார்சொல்வதை நம்பாமல் தள்ளிவிடலாம்?

ஞா.—நீ இதுவரையில் கடவுளில்லையென்றும் ஆன்மாஇல்லையென்றும் நம்பிஇருந்தாய். இப்போது எம்மிடம் செய்தவிசாரணையால் கடவுள் உண்டு என்றும் ஆன்மா உண்டு என்றும் அறிந்துகொண்டாய். இவ்வாறே நீ சித்தாந்தசாஸ்திரங்களை யாராய்ச்சிசெய்வாயானால், உலகத்திலுள்ள பலமதங்களின் கோட்பாடுகளையும், அவைகளெல்லாம் சைவசமயத்திற்குச் சோபானங்களாயிருத்தலையும், மற்றச்சமயங்களெல்லாம் பதமுத்திகளையும் சைவசமயம் பரமுத்தியையும் கொடுக்குமென்பதையும் அறிவாய்.

ரா.—அப்படியானால், இதுவரையில் நாத்திகப்படுகுழியில் விழுந்துகிடந்த எனக்குக் கடவுள் ஞானத்தைப் புகட்டிய தேவரீரே சித்தாந்த சாத்திரங்களையும் போதித்தருளல்வேண்டும்.

ஞா.—சித்தாந்த சாஸ்திரங்கள் அவ்வளவு எளிதாகக் கற்றுக்கொள்ளும் நூல்கள்அல்ல. அவற்றைக் கற்பதற்குமுன் இலக்கியம், இலக்கணம், தருக்கம், முதலிய நூல்களைப் பயின்றிருத்தல்வேண்டும். எவ்வுயிரையும் கொல்லாமை, புலாலுண்ணாமை, பிறர்பொருள் பிறர்தாரம் என்பனவற்றை யமனைப்போற்காண்டல், வாய்மை, சாந்தம், சிவபத்தி, குருபத்தி, அடியார்பத்தி முதலிய உத்தமகுணங்களிருத்தல்வேண்டும். சமயம் விசேடம் என்னும் தீக்கைகள் பெற்றிருத்தல்வேண்டும். இவைகளெல்லாம் இல்லாதவர்களுக்குச் சித்தாந்த சாத்திரங்கள் போதிக்கலாகாது. போதித்தாலும் யாதொருபயனுமுண்டாகாது.

ரா.—சுவாமி, இவ்வளவு நிர்ப்பந்தம் வைத்துக்கொண்டிருந்தால் யார்தாம் அவற்றைக்கற்பார்கள். சைவசமயம் எப்படி நிலைத்திருக்கும்.

ஞா.—அப்பா, சைவம் என்பதற்கு மங்கலத்தன்மையுடையது என்பதுபொருள். மங்கலத்தன்மையாவது கொல்லாமை புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனைநயவாமை, வரைவின் மகளிரை விரும்பாமை, பிறர்பொருள் இச்சியாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம் கொடை, முதலிய ஒழுக்கமுடைமையாகும். ஆத



லால் இவ்வொழுக்கமில்லாதவர்கள் அசைவர்களாவர். இவர்களுக்கு
ஞான நூல்களைப் போதித்தால் ஞானம் வந்துவிடுமா?

ரா.—உலகத்தில் சைவர்கள் நீங்கலாக மற்றவர்களெல்லாம் தங்
கள் சமய நூல்களை யெல்லோருக்கும் தாராளமாகப் போதிக்கிறார்கள்.
அதனால் அச்சமயங்களெல்லாம் நாளுக்குநாள் ஓங்கிவளர்கின்றன.
சைவசமயிகள் அவ்வாறு போதிக்காமல் அதிகநிர்ப்பந்தங்களை வைத்
துக்கொண்டு கூடையில் மூடிவைத்திருக்கும் விளக்கைப்போல் ஒப்
பற்ற தங்கள் மதத்தை மறைத்துவைத்துக்கொண் டிருப்பதுமன்றி,
சமயபரிபாலனஞ் செய்வதுமில்லை. இதனால், சைவர்களுக்கே தங்கள்
சமயஉண்மை தெரியாது. சிலர்க்குத்தாங்கள் இன்ன சமயத்தாரென்
பதும்தெரியாது. சைவபரம் பரையில் பிறந்தும் பலர் பழக்கத்தால்
விபூதிமாத்திரம் இட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பார்த்து
"நீவிர்சைவரா" என்றுகேட்டால் இவர்களுள்சிலர் "நாம்சைவரல்ல,
எதையுஞ் சாப்பிடுவோம்" என்கிறார்கள். சிலர் "எங்களுக்கு எல்
லாம்ஒன்றுதான். சிவன்என்றும் விஷ்ணுவென்றும் பேதமேஇல்லை"
யென்கிறார்கள். சிலர் "நாங்கள் வேதாந்திகள்" என்கிறார்கள்.
சிலர் மதுரைவீரன், காடன், மாடன், காட்டேரி முனியன் முதலிய
வர்களை வணங்குகிறார்கள். சிலர் கிறிஸ்துவர்கள் கோயில்களிலும்,
மகமதியர்மசூதிகளிலும் பிரார்த்தனை செய்துவணங்குகிறார்கள். இவ்
வாறாக நான்பார்த்தவளவில் சைவசமயம் என்பது கலவைச்சமய
மாக இருக்கிறதேயன்றி ஒரு தனிச்சமயமாக ஜீவித்திருப்பதாகக்
காணப்படவில்லை. சைவசமயத்தைச் சமரசமார்க்கம் என்பது இது
பற்றித்தான்போலும். நான்இதுவரையில் நாத்திகனாயழிந்ததற்கும்
இதுவேகாரணம் என்றும் சொல்லலாம். கல்வியும் ஒழுக்கமும்நிரம்
பினவர்களுக்கே சித்தாந்தசாத்திரங்களைப் போதிக்கவேண்டுமா
னால், அவைகளை யோதுவதற்குவேண்டிய கல்வியையும் ஒழுக்கங்
களையும் பிரதமத்தில் கற்பிக்கவேண்டாமா? அவரவர்கள் வயதுக்
கும் கல்விக்கும் இசைந்தவாறு படிப்படியாகச் சமய நூல்களையும்
ஒழுக்கங்களையும் கற்பிக்காவிட்டால் சித்தாந்தசாத்திரங்களை யோதி
ஞானிகளாதற்குரிய கல்வியும் ஒழுக்கமும் எங்கிருந்துண்டாய்விடும்?
ஆதலால் சித்தாந்தசாத்திரங்களையோதுதற்குரியகல்வியும் ஒழுக்க
மும் என்னிடத்தில் இல்லாமைக்கு என்னைநிந்திப்பதனால் பயனில்லை.
சைவசமயத்தின் நிலைமையையும் அருமைபெருமைகளையும் உணர்ந்
திருந்தும் காலதேசவர்த்தமானங்களையறிந்து அதைப்பரிபாலிக்கா
மல் கைவிட்டிருக்கும்சைவர்களே நிந்தனைக்குரியராவர்.

220655

ஞா.—நீ சொல்வது முற்றிலும் உண்மையே. ஆனாலும், சைவ சமயத்தையனுட்டிக்கும் புண்ணியம் எல்லாருக்கும் உண்டாகாது. பலகோடி ஜனனங்களிற் செய்த புண்ணியமுடைய சிலர்க்கேயுண்டாகும். இதுபற்றியே குமாரகுருபரசுவாமிகளும் "சைவசித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலரே" எனத் திருவாய்மலர்ந்தருளினார்.

ரா.—சுவாமி, நான் கேட்கும் கேள்விகளால் தங்களுக்கு வருத்தம் உண்டாகலாகாது என்று முன்னமே கேட்டுக்கொண்டேன். அதை மறுபடியும் தங்களுக்கு வணக்கமாய் ஞாபகப்படுத்துகிறேன். இப்போது தங்களைச் சைவர்கள் என்றுசொல்லிக்கொண்டு சித்தாந்த சாத்திரங்களை ஓதுபவர்களும் ஓதுவிப்பவர்களுமாகிய இவர்களெல்லோருமே மகாபுண்ணியவான்களோ? இவர்களிடத்தில் மற்றவர்களிடத்திலில்லாத துர்க்குணங்கள் பலவும் மலிந்துகிடக்கின்றனவே. இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

ஞா.—இது கலிகாலம். இக்காலத்தில் வஞ்சவொழுக்கமே யதிகமாயிருக்கும். ஆனாலும், உத்தமச்சைவர்களும் இல்லாமற்போகவில்லை. கூடாவொழுக்கமுடையாரே தங்களைப் பறைசாற்றித் திரிவர். நல்லொழுக்கமுடையார் இருக்குமிட மறிதலும் அரிது.

ரா.—சைவசித்தாந்தத் தேனமுதருந்துவோர் சிலராயிருந்தாலும் இருக்கட்டும். சிலரிற் சிலரிற் சிலரிற் சிலராயிருந்தாலும் இருக்கட்டும். இவ்வாறு அதுதன் பெருமையைப் பேசிக்கொண்டிருந்தால் வரும் பயன்யாது?. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?. இதுவரையில் நான் சைவநூல்களைக் கல்லாமைக்கும் சைவ ஒழுக்கங்களைப் பின்பற்றாமைக்கும் தேவரீர் கூறியவாறு எனக்குப் புண்ணியமில்லாமை காரணமாகவிருந்தாலும் இருக்கட்டும். என்னைப்போலவே நாடோறும் அளவிறந்த சைவர்கள் கெடுவதற்கும் யாருக்குமே புண்ணியமில்லாமை காரணமென்று சொல்லிக்கொண்டிருப்பது நீதியாகக் காணப்படவில்லை. பலபலவழிகளில் பணத்தை வாரியிறைக்கும் சைவர்கள், ஐரோப்பியர் வழிகளைப் பின்பற்றி, அவர்களைப்போல் நாங்கள் படிக்கும் பாடசாலைகளிலேயே எங்களுக்குச் சைவ சமயபோதனை செய்வார்களானால் நாங்கள் இவ்வாறு கெட்டுப்போவோமா! நாங்கள் கெட்டதற்கு எங்கள் புண்ணியக்குறைவுமாத்திரம் அன்றி, சைவசமயிகளின் அறிவுக்குறைவும் அபிமானக்குறைவும் காரணமெனத்தகும். ஆதலால், தேவரீர் என்னைப் புறக்கணிக்காமல் எவ்விதத்திலாவது ஆட்கொண்டருளல் வேண்டும்.

(இன்னும் வரும்.)



# பதி பசு பாசம்.

(95 - வதுபக்கத் தொடர்ச்சி.)

## *ஆன்மவிலக்கணம்.

### சிவப்பிரகாசம்.

எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி னழுந்தி
யிருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
யண்ணலரு ளானண்ணி யவயவரா யதனு
லலகினிகழ் போகங்க ளருந்து மாற்றாற்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணருமிருண் மலபாகம் பொருந்தியக்கா லருளா
லுண்ணிலவு மொளி யதனா லிருளகற்றிப் பாத
முற்றிடுநற் பசுவர்க்க மெனவுரைப்ப ருணர்ந்தே.

ஆன்மாக்கள் அளவற்றன. இதுவரையில் இறந்தகாலத்தையும் இனிவருங்காலத்தையும் அளவிடலாகாததுபோல், இதுவரையில் முத்தியடைந்த ஆன்மாக்களையும் இன்னும் முத்தியடையாமலிருக்கும் ஆன்மாக்களையும் அளவிடலாகாது. சிவம்என்று உண்டோ அன்றுமுதல் எண்ணிறந்த ஆன்மாக்கள் முத்தியடைந்துகொண்டிருந்தும் அவையெக்காலத்தும் ஒழியாமலும் அளவிடப்படாமலும் இருத்தலால், பிரபஞ்சம் எக்காலத்தும் காரியப்பட்டுக்கொண்டேயிருக்கும். இதுபற்றியே உமாபதி சிவாசாரிய சுவாமிகளும் "கற்பங்கடோறு நடஞ்செய் கழலடைந்தோர் கணிப்பிலர்" என்றருளிச்செய்தனர்.

ஆன்மாக்கள் தோன்றுவதும் அழிவதுமின்றிச் சிவத்தைப்போலவே அனாதி நித்தியமாயிருக்கும். இதுபற்றியே தாயுமானசுவாமிகளும் "அருளுடைய பரமென்றோ வன்றுதானே யானுளன்" என்றருளிச்செய்தனர். ஆன்மாக்கள் பெத்தநிலையில் மாத்திரமன்றி முத்திநிலையிலும் அழியாமலிருக்கும். அவைபெத்தத்தில் தனுகரணாதிகளோடு இரண்டறக்கலந்தும் வேறாகவும் இருந்து துன்பத்தையனுபவித்தல்போல், முத்தியில் சிவத்தோடு இரண்டறக்கலந்தும் வேறாகவும் இருந்து இன்பமார்ந்திருக்கும். இவ்வாறு சிவமும் ஆன்மாவும் ஒற்றுமைப்பட்டிருக்கும்நிலையை வேதாகமங்கள் அத்துவித நிலையெனவும் அனன்னிய நிலையெனவும்கூறும். இதுபற்றியே சைவசமயம் சுத்தாத்துவித சமயமென்னப்படும். ஆன்மா முத்தியிலும்

---

* ஆன்மா, பசு, உயிர், சேதனன், புற்கலன், சீவன், அணு என்பன ஒருபொருட்சொற்கள்.

வேறாகயிருத்தலினால் சிவத்தோடுகூடி யின்பத்தையனுபவிக்கும். அது வேறாயிராமல் சிவமேயாய்விடுமானால் ஆன்மா இன்பம் அனுபவித்தற்கிடமில்லாமற்போம். ஆனால், ஆன்மாக்கள் முத்தியில் சிவமேயாய்விடும் என்கிறார்களே இதற்கென்னபொருள் எனில், கூறுவாம். ஸ்ரீமாணிக்கவாசகப் பெருமானாரும் "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்" என்றருளிச் செய்தனர். இவ்வாறு கூறியருளியது ஆன்மாக்கள் முத்தியில் சிவத்திற்குரிய முற்றறிவு முதலிய குணங்களைப்பெற்று விளங்கும் என்று கூறியதாகக் கொள்ளப்படவேண்டும்.

**திருமந்திரம்.**

பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாச நிலாவே.

**உண்மை விளக்கம்.**

முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்புடனே கண்டுகொ ளப்பா.

ஆன்மாக்கள், செம்பு உள்ளபோதே அதனிடத்தில் களிம்பு இருப்பதுபோலவும், நெல்உள்ளபோதே அதனிடத்தில் உமியும் தவிடும் இருத்தல் போலவும், இயற்கையாகவே ஆணவமலத்தொடக்குண்டு மைக்குண்மணிபோல் மறைப்புண்டு, அறிவும் செயலுமிழந்து தம்மையும் தலைவரையும் அறியமாட்டாமல் இருக்கும். இவ்வாறு ஆன்மாக்களிருக்கும் அவசரம் கேவலாவத்தையென்று சொல்லப்படும். இவ்வாறு கேவலநிலைமையில் கிடக்கும் ஆன்மாக்களுக்கிரங்கி, சிவபெருமானார் அவ்வாணவமலத்தைப் பரிபாகப்படுத்தும்பொருட்டு அவைகளின் நல்வினை தீவினைகளுக்கீடாக, நால்வகையோனி எழுவகைத் தோற்றத்துள் எண்பத்துநான்கு லட்சபேதமாகவிரிந்து கிடக்கும் பலவகைப்பட்ட பிறவிகளைக்கொடுத்தருளுவர். இவைகளுள் ஆன்மாக்கள் எடுக்குஞ் சரீரம் தூலசரீரம் எனவும் சூக்கும சரீரமெனவும் இருவகைப்படும். தூலசரீரமாவது பஞ்சபூதங்களாலாகிய உருஉடம்பு. சூக்கும சரீரமாவது சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் காரண தன்மாத்திரையைந்தும், மனம்



புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றுமாகிய எட்டினாலும் உண்டாக்கப்பட்டு, ஆன்மாக்கள் போகம் அனுபவித்தற்குக் கருவியாய் ஆயுள் முடிவில் முன்னுடம்புவிட்டு மற்றொருடம்பு எடுத்தற்கு எதுவாயிருக்கும் அருஉடம்பு. நல்வினை செய்த ஆன்மாக்கள் தூலசரீரத்தைவிட்டவுடனே சூக்குமசரீரத்தோடு பூதசாரசரீரமாகிய தேவசரீரத்தை யெடுத்துக்கொண்டு சுவர்க்கமுதலிய போக பூமிகளிற்போய், இன்பங்களை யனுபவித்து, மீண்டும் மனிதப் பிறவியை யெடுக்கும். தீவினைசெய்த ஆன்மாக்கள் தூலசரீரத்தை விட்டவுடனே சூக்குமசரீரத்தோடு பூதசரீரமாகிய யாதனாசரீரத்தை யெடுத்துக்கொண்டு நரகத்திலேபோய் துன்பத்தையனுபவித்து மீண்டும் பூமியில்வந்து தாவரங்களாகவும், நீர் வாழ்வனவாகவும், ஊர்வனவாகவும், பறவைகளாகவும், விலங்குகளாகவும் பிறந்து முன்செய்த நல்வினைப்பயன்வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும். இவ்வாறு பிறவிகடோறும் தாம் எடுக்கும் சரீரமே தாமாக எண்ணி, அவ்வச் சரீரத்தைக்கொண்டு அனுபவிக்கும் போகத்தில் அழுந்தி, மீண்டுமீண்டும் புண்ணியபாவங்களைச்செய்து மீண்டுமீண்டும் அளவில் காலமாகப் பிறவிகளெடுத்துழலும். இவ்வாறு ஆன்மாக்கள் பிறவிகளெடுத்துழலும் அவசரம் சகலாவத்தை யென்னப்படும். இவ்வவசரத்தில் ஆன்மாக்களுக்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாகும்போது சிவபெருமானார் ஆசாரிய கோலங்கொண்டெழுந்தருளி அனுக்கிரகஞ் செய்வர். இவ்வாறு ஞானாசிரியர் கடாட்சத்தால் மும்மலங்களும் நீங்கிச் சச்சிதானந்த சிவமாக விளங்கும் அவசரம் சுத்தாவத்தை யென்னப்படும்.

இவ்வாறு கேவலாவத்தையிற்கிடந்த ஆன்மாக்களைச் சிவபெருமான் சுத்தாவத்தையிற் செலுத்துங் கருணைத்திறத்தை ஸ்ரீமத், தாயுமான சுவாமிகள்,

காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவி யைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்ட மைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற வுறுக்கி யிடர்தீர்த்

இரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
விசைந்துதுயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

என விளங்கவுரைத் தருளினர்.

இதன்பொருள் :—

சர்வலோக மாதாவாகிய அருட்சத்தியைத் திருமேனியாகக் கொண்டுள்ள என்பரமபிதாவே, சைவசித்தாந்தநெறியில் ஒழுகும் அடியார்கள் இறவாநிலைமைபெற் றின்பமார்ந்திருக்கும் பிறவாநன்னெறிபெற வருள்புரியும் முதல்வனே, சிரகிரியில் வேதநெறி தழைத்தோங்கி சைவத்துறைவிளங்க எழுந்தருளிய தட்சிணாமூர்த்தியே, சச்சிதானந்த வடிவமாயுள்ள என்குருமணியே, அடியேன், முன்னாளில், மாதாவின் கருப்பாசயத்தில் கண்முதலிய அவயவங்கள் இன்னுந் தோன்றப்பெறாமல் அறிவுஞ் செயலுமின்றி இருக்கும் மகவைப்போல், பூதவிருளினும் மிகக்கொடியதாய், தன்னைமாத்திரமன்றி என்னையுங் காட்டாமல் மறைத்ததும் என்பிறவிக்குக் கருவாயிருந்ததுமான ஆணவ மலமென்னும் மிகஇருண்ட கருப்பாசயத்திலே, அறிவுஞ் செயலுமின்றிக் கட்டுண்டிருந்தேன். நான் அவ்வாறு கட்டுண்டும் அக்கட்டினின்றும் என்னை நானே விடுவித்துக் கொள்ளமாட்டாமலும் இருக்கும் என்கேவல நிலைமைக்கிரங்கி தேவரீர், மூலையிருந்தாரை முற்றத்தேவிட்டதுபோல், (ஆணவமலமாகிய கருப்பையுள் முடங்கிக்கிடந்த வெனக்கு) தனுகரணாதிகளைக் கொடுத்து வெளியில் விட்டு அறிவையுஞ்செயலையும் விளக்கியருளினீர். எனக்கு அறிவுஞ்செயலும் உண்டான பிறகு நான் தீவினைக் காளாகாதபடி துன்பம் என்னும் காவலைவைத்தருளினீர். நால்வகை யோனி எழுவகைத் தோற்றத்துள் நான் எடுத்த எண்ணிறந்த சரீரங்களுக்கேற்ற பலவகையான பேர்களையும் வைத்தருளினீர். பொய்ப்பொருளாயிருந்தும் மங்கலவழக்கால் மெய்யென்று சொல்லப்படுவதும் இந்திரஜாலம் போன்றதும் எல்லாத்துன்பங்களுக்கும் இருப்பிடமானதுமான உடலானது வலுத்து வளரும்வண்ணம் பலவகையாக விளையும் போகங்களைப் புசிப்பித்தருளினீர். நான் போகங்களைப் புசிக்குந்தோறும் தேடிக்கொண்ட வினைகளுக்கீடாகப் பலவகையான பெரியபுவனங்கள் தோறும் பலமுறைபோய் பிறப்பதும் இறப்பதுமாகிய பெரிய விளையாடலை யமைத்தருளினீர். நான் இதாகிதங்களையறிந்து நல்வினைகளைச் செய்யவும் தீவினைகளைச் செய்யாதிருக்கவும் வேண்டி வேதசிவாகமங்களை யருளிச்செய்தீர். நான் வேதாகமங்களுக்கு மாறாக நடந்தபோதெல்லாம் என்னை இவன் துட்டன் என்று தள்ளிவிடாமல், குழந்தைக்குவரும் இரணநோயைத் தாயானவள் வைத்தியனைக்கொண்டு கத்தியால் அறுத்துக்குணப்படுத்துவதுபோல், யமனைக்கொண்டு தண்டிப்பித்து ஆட்கொண்டருளினீர். இவ்வாறெல்லாம் அருள்புரிந்து என்னைப்பெரும் பிறவித்துன்பத்தினின்றும் நீக்கி, கேவல சகலங்களாகிய இரவுபகலில்லாத சுத்தமாகிய பேரின்பவீட்டிலிருந்து தூங்காமற்றூங்கிச் சுகம்பெறச் செய்தருளினீர். இவ்வாறு என்னைப் பெற்றுப்பேரிட்டு அமுதூட்டி வளர்த்து அறிவைவிளக்கிச் சுகம்பெறவைத்த அன்னையாகிய தேவரீருடைய அளப்பருங் கருணைக்கு அடியேன் செய்யுங் கைம்மாறும் உள்தோ! (எ - று).

**திருவாசகம்.**

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுர்த்த
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா
யானிதற் கிலனோர்கைம் மாறே.

---

## சைவசமயிகளுக்கு எச்சரிப்பு.

(91 - ஆவது பக்கத் தொடர்ச்சி.)

கிறிஸ்தவர்களிடம் ஏராளமான திரவிய மிருப்பதனால் அவர்கள் பாடசாலைகள் வைத்துச் சமயாபிவிருத்தி செய்கிறார்களென்றும், நம்மவர்களிடத்தில் அவ்வளவு திரவியமில்லாமையால் நாம் அவ்வாறு செய்வது அசாத்தியம் என்றும் நம்மவர்கள் பலர் எண்ணுகிறார்கள். இவர்களை இவ்வாறு எண்ணச்செய்வது இவர்களின் அறியாமையேயாம். கிறிஸ்தவர்கள் பாடசாலைகளுக்காகச் செலவிடுந் தொகைகள் முற்றிலுமே அவர்கள்சொந்த பொருளல்ல. அரசாங்கத்தார் இத்தேசத்தில் கல்வியபிவிருத்தி செய்தற்கென ஏராளமான பொருளைச் செலவிடுகிறார்கள். இதிலிருந்து பாடசாலைகள்

வைத்து நடத்துவோர்க்கு (அவர்கள் எக்குலத்தினராகுனும் எச்
சமயத்தினராகுனும் வித்தியாசம் பாராட்டாமல்) பலவகையான
உதவிகளைச் செய்கிறார்கள். பாடசாலைகளுக்கென நிலம்வாங்கிக்
கொடுக்கிறார்கள். கட்டிடங்கள் கட்டிக்கொள்ள பொருளுதவிசெய்
கிறார்கள். சாமான்கள் வாங்க உதவிசெய்கிறார்கள். உபாத்தியா
யர்களுக்குச் சம்பளங்கொடுக்க உதவிசெய்கிறார்கள். புத்தகங்கள்
வாங்கிக்கொள்ள உதவிசெய்கிறார்கள். இன்னும் பாடசாலைச் சம்பந்த
மான எவ்வகை உதவிகளையுஞ்செய்கிறார்கள். இவ்வுதவிகளைப் பெரும்
பாலுங் கிறிஸ்தவர்களே பெற்றுக்கொண்டு இத்தேசமுழுவதும்
பாடசாலைகள் புத்தகசாலைகள் முதலியனவைத்து சனங்களுக்குக்
கல்விகற்பித்துச் சமயவிருத்தியுஞ் செய்துகொள்ளுகிறார்கள். இவ்
வாறு நம்மவர்களும் ஏன் செய்துகொள்ளலாகாது? நம்மவர்
களும் இவ்வாறு செய்துகொள்ளாமல் கண்களை மூடிக்கொண்டு,
நம்மிடத்தில் பணமில்லையென்று சொல்லிக்கொண்டு கிறிஸ்தவர்க
ளைப் பார்த்து பிரமைகொள்வது அறியாமையன்றோ? நம்மவர்கள்
நூறு வருடங்களுக்கதிகமாக எல்லாச்சமயத்தாரையும் ஒக்கநோக்
கும் ஆங்கில அரசாட்சியின் கீழிருந்துகொண்டு, எல்லாத் துறை
களிலும் எளிதில் முன்னுக்குவரக்கூடிய எல்லா வசதிகளையும் உடைய
வர்களாயிருந்தும், கிறிஸ்தவர்கள் இத்தேசத்தைக் கிறிஸ்தவதேச
மாக்கிவிடப் பலவருடங்களாகச் செய்துவரும் முயற்சிகளையும், அவர்
கள் செய்யும் முயற்சிகளால் இத்தேசத்தில் எங்கும் அதிதீவிரமாகக்
கிறிஸ்துசமயம் பரவி நம்மவர்கள் கோடிக்கணக்காகக் கிறிஸ்தவர்
களாய் விட்டதையும், கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் போக மற்ற
வர்கள் சமயக்குருடர்களாயிருத்தலையும் பார்த்துக்கொண்டு உணர்ச்சி
யும் முயற்சியுமின்றி வாளாவிருப்பது, அந்தோ, என்ன பாவம்!
என்ன கொடுமை!! நாம் இனியாவது,

> "கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
> குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகு—மண்டெரி
> தான்வாய் மடுப்பினும் மாசுணங் கண்டுயில்வ
> போா பெருமூச் செறிந்து."

என்னும் குமரகுருபரசுவாமிகளின் திருவாக்கைச் சிந்தித்து, கிறி
ஸ்து பாடசாலைகள் பின்னிடும்படி எங்கும் சைவ பாடசாலைகள்
வைத்தல் வேண்டும்.

நம்மவர்கள் கிறிஸ்தவர்களைப்போல் பாடசாலைகள் வைத்துச்
சமயாபிவிருத்தி செய்ய முன்வராமைக்கு இன்னொரு முக்கியமான



காரணமிருக்கிறது. அதுயாதெனில், நம்மவர்கள் இலௌகிகரும்
வைதிகரும் என இருபிரிவினராகப் பிரிந்திருத்தலேயாம். நம்மவர்
களுள் இலௌகிகர்களே பெரும்பாலும் ஆங்கில விற்பத்தியும் அர
சாங்கமுறைமை யறியுமறிவும் செல்வாக்கும் உடையவர்களாயிருக்கி
றார்கள். இவர்களே பெரும்பாலும் ஆங்கில பாடசாலைகளால் உண்
டாகும் அளவற்ற நன்மைகளை யறிந்தவர்களாகவும், அவற்றை
வைத்து நடத்துந்திறமை யுடையவர்களாகவுமிருக்கிறார்கள். ஆனால்,
இவர்கள் படித்த பாடசாலைகளில் இவர்களுக்குச் சைவ நூல்களும்
ஒழுக்கங்களுங் கற்பிக்கப்படாமையால் இவர்களுக்குச் சைவ நூல்க
ளும் ஒழுக்கங்களும் பெரும்பாலும் வேம்பாயிருக்கும். ஆதலால்,
இவர்கள் கனவிலும் சைவ பாடசாலைகள் வைக்கமாட்டார்கள்.
இலௌகிகர் இவ்வாறிருக்க, வைதிகரோவெனில், இவர்கள் வெறும்
வைதிகக் காரியங்களுக்கு எவ்வளவானுலும் பணச்செலவு செய்வார்
கள். எவ்வளவானுலுஞ் செலவிட்டுக் கோயில்கள் கட்டுவார்கள்.
குளங்கள் வெட்டுவார்கள். சத்திரங்கள் கட்டுவார்கள். ஆடம்பர
மானமகோற்சவங்கள் செய்வார்கள். அன்னதானம் செய்வார்கள்.
வெறும் வைதிக பாடசாலைகள் வைப்பார்கள். அனேக ஆயிரம்
வருடங்களுக்குமுன் சேரசோழபாண்டியர் அரசாட்சியின் கீழ்ச்
செய்த தருமங்களையே இன்றைக்கும் செய்வார்கள். ஆனால் இவர்
கள் காலதேச வர்த்தமானங்களை யறிந்து சமயபரிபாலனஞ் செய்வ
தில்லை. இவர்களுக்குச் சபைகளும் பத்திரிகைகளும் பயனிலவெ
னத்தோன்றும். இவர்களுக்கு ஆங்கில பாடசாலை வைத்துச் சமயா
பிவிருத்திசெய்வது அவைதிகமெனவும், அசம்பிரதாயமெனவும்
அசாத்தியமெனவும் தோன்றும். இவ்வாறு நம்மவர்கள் இருபிரி
வாகப் பிரிந்திருத்தலால் இத்தேசத்தில் இதுவரையில் சைவ பாட
சாலையுண்டாகவில்லை. சைவ பரிபாலனஞ்செய்யும் சபைகள் ஏற்பட
வில்லை. சைவப் பத்திரிகைகள் மிகவும் அருமையாக விருக்கின்றன.
இவர்கள் இவ்வாறு இருபிரிவினராயிருப்பதற்கும் ஆங்கில பாடசாலை
கள் மூலமாக நம்மவர்கள் சமயாபிவிருத்தி செய்யாமையே காரண
மாகும்.

சிலர்முன்பின் யோசியாமலே எல்லாமறிந்தவர்கள்போல், ஆங்
கில பாடசாலைகள்வைத்து அதில் சைவசமயபோதனை செய்வதைப்
பற்றி பலபல ஆட்சேபனைகள் சொல்லுவார்கள். சிலர் அப்படிச்
செய்தற்கு அரசாங்கத்தார் சம்மதியார் என்பார்கள். சிலர் வைண
வர்கள் முதலியவர்களும் கலந்து படிக்கும் பாடசாலைகளில் சைவம்

மாத்திரம் போதிப்பது தகுதியன்று என்பார்கள். சிலர் பாடசாலையில் சைவசமயபாடங்களைக் கற்பித்தால் அதில் யாருமே போய் படிக்க மாட்டார்கள் என்பார்கள். சிலர் சைவசமய நூல்களை யெல்லாருக்கும் போதிக்கலாகாது என்பார்கள். சிலர் தினந்தோறும் சற்றுநேரம் சமயபோதனை செய்வதற்கு நாள்முழுவதும் ஆங்கிலங்கற்பிக்கிறதா? என்பார்கள். சிலர் பாடசாலைகளில் சைவபோதனை செய்தற்குத் தகுந்த பாடபுத்தகங்களில்லை யென்பார்கள். சிலர் சைவசமய நூல்கள் அவ்வளவு எளிதாகப்பாடசாலைகளில் கற்பிக்கப்படக்கூடியனவல்ல வென்பார்கள். சிலர் நாம் சொல்லிக்கொடுத்தால் பத்தியுண்டாய் விடுமா? புண்ணியமிருந்தால் பத்திதானே யுண்டாய்விடும் என்பார்கள். சிலர் நம்முன்னோர்களெல்லாம் ஆங்கில பாடசாலை வைத்தா சமய விருத்தி செய்தார்கள்? என்பார்கள். நம்மவர்கள் இவ்வாறு சொல்லிக்கொண்டே சமயபரிபாலனத்தைக் கைவிட்டிருக்கிறார்கள். நம் முன்னோர்கள் கோயில்களைக்கட்டி வைத்திராவிட்டால் இதுவரையில் சைவசமயம் மறைந்துபோயிருக்கக்கூடும். சைவாபிமான சீலர்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் முயற்சியில்லாவிட்டால் இதுவரையில் எத்தனையோ கோயில்களும் அழிந்துபோயிருக்கும். ஆதலால், இக்காலத்தில் சைவத்தை ஆலயங்கள் மூலமாக நிலைபெறச்செய்யும் புண்ணியவான்கள் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களே. ஆதலால், இவர்களே முற்பட்டுவந்து ஆங்கில பாடசாலைகள் மூலமாகச் சைவசமயாபிவிருத்தி செய்தல்வேண்டும். இவர்களுள் தற்கால ஐரோப்பிய நாகரீகமாகிய தொற்றுவியாதி பரவாமலிருக்கத் திருவருளை யிறைஞ்சுகின்றோம். இது விஷபேதி முதலிய வியாதிகளைக் காட்டிலும் கொடியவியாதி. மற்றவியாதிகள் வந்தால் சிவநாமஸ்மரணை செய்யலாம். இந்த வியாதி கண்டவர்களுக்குச் சிவநாமஸ்மரணையென்றால் வாய்குளறும். அவற்றால் நடையும் உடையும் உணவும் மாறுவதில்லை. இதனால் இவையெல்லாம் மாறிவிடும். அவைகளுக்குத்தலைமயிர்எப்படியிருந்தாலும் இருக்கலாம்; இதற்கு உடனே தலைமயிரைக் கத்திரித்து அடிக்கடி சீப்பினால் வாரிக்கொண்டே யிருக்கவேண்டும். அவைகளுக்கு ஆறுமுழவஸ்திரமே போதும். இதற்கு உயர்ந்த உடுப்புகள் வேண்டும். அவைகளுக்குச் சுத்த நீரும் அற்ப ஆகாரமும் போதும். இதற்கு உயர்ந்த சாராயங்களும் இறைச்சிமுதலிய வலுவான ஆகாரமும் வேண்டும். அவைகளுக்கு வாழையிலையாகும். இதற்கு வாழையிலையாகாது. எதையும் பீங்கான் கிண்ணங்கள் கரண்டிகள் கொண்டே சாப்பிடவேண்டும். அவைகளுக்குச் சரீர-



மெங்குங் காற்றுப்பட்டாலும் படலாம். இதற்குப்பாதங்களில்கூட காற்றுப்படாமல் (Boots என்னும்) பாதரட்சையும், (Socks என்னும்) மேற்சோடும் போட்டுமூடிவைத்தல் வேண்டும். அவை சிகிச்சையால் நீங்கிவிடும். இதற்குச் சிகிச்சையேயில்லை. அவைகளால் கண்பார்வை கெடாது. இதனால் இளமையிலேயே பார்வைகெட்டு எந்நேரமும் மூக்குக்கண்ணாடிபோட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். அந்நோயாளிகள் தரையிலும் இருப்பார்கள். இந்த நோயாளர்கள் பெரியார் சிறியாரென்று பாராமல் உயர்ந்த ஆசனத்திலேயே யிருக்கவேண்டும். இவர்களுக்கு விபூதியென்றால் வேதனையுண்டாகும். உருத்திராக்கம் என்றால் ஒக்காளமுண்டாம். தமிழ் என்றால் தலைநோயுண்டாம். இந்த நோய் ஓரிடத்தில் பிரவேசித்து விடுமானால் அதைவிட்டு ஒருபோதும் நீங்காமல் அதிதீவிரமாகப்பரவும். இந்த மகாகொடிய வியாதி நெடுங்காலமாக நாம்செய்தபாக்கியமாக நாட்டுக்கோட்டையில் பிரவேசியாதபடியால் பலசிவாலயங்கள் சீரணமாய்விடாமல் உயிர்பெற்று நிலைத்தன. இது பணக்காரரிடத்திலேயே அதிவேகமாகப்பரவும் வியாதியாகையால் அவ்விடத்திலும் பரவிவிடக்கூடும். அவ்வாறு பரவுதற்குமுன் அச்சைவாபிமான சீலர்கள் பாடசாலைகள் வைத்துச் சைவாபிவிருத்தி செய்யத்தொடங்குவரேல் இந்நோயின் மும்முரம் அடங்கும்; சைவம் நிலைக்கும்.

நம்மவர்கள் பாடசாலைகளை வைத்து நடத்துதல் அசாத்தியமென்று நினைப்பதனால், அதுமிகவும் எளிதென்பதை உதாரணவாயிலாக விளக்குவாம். நூறுசிறுவர்கள் படிக்கக்கூடிய ஒரு கீழ்தரப்பாடசாலைவைத்து நடத்துவதற்கு எவ்வளவு செலவாகுமென்று பார்க்கலாம். இப்பாடசாலைக்கு மூன்று உபாத்தியாயர்கள்போதும். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35 ரூபா சம்பளங்கொடுத்தால் போதும். பாடசாலைவாடகை, வேலைக்காரர் சம்பளம், ரிஜிஸ்டர் முதலியவைகளின்பொருட்டு 15 ரூபாவுக்கு அதிகமாகச் செலவாகாது. இவையெல்லாஞ்சேர்ந்து மாதம் ஒன்றுக்கு 50 ரூபாவுக்குமேல் செலவாகாது. இதற்கு வருமானமாக, மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாவுக்குக் குறையாமல் பிள்ளைகளிடம் சம்பளம் வசூல்செய்யக்கூடும். அரசாங்கத்தார் வருடந்தோறும் கொடுக்கும் கிராண்டுஎன்னும் உதவி மாதம் ஒன்றுக்குச் சராசரி 20 ரூபா வாகலாம். இவ்விரண்டும் சேர்ந்து மாதம் ஒன்றுக்கு 40 ரூபாவரையில் கிடைக்கும். ஆதலால் இப்பாடசாலைவைத்து நடத்துவோர் தங்கள் கையிலிருந்து கொடுத்துச் செலவிடவேண்டிவரும் தொகை 10 ரூபாவுக்கு அதிகமாகாது.

அதிகமானுலும், நூறு, ஆயிரம் அதிகமாகாமல் நாலு, ஐந்து ரூபா அதிகமாகலாம். இது நம்மவர்கள் ஆலயமகோற்சவகாலங்களில் வாணவேடிக்கைக்காகச்செலவிடும் தொகைகளில் சிந்திப்போவதற்குஞ் சமமாகாது. இப்படியே உயர்தரப் பாடசாலைகளையும் வைத்துப் பிரயாசையின்றி நடத்தலாம். பலபாடசாலைகள் முதலாளிகளுக்குப் பணச்செலவில்லாமலே மாணுக்கர்கள் கொடுக்கும் சம்பளங்களைக் கொண்டும் அரசாங்கத்தின் உதவியைக்கொண்டுமே நடைபெறுகின்றன. ஆனுல், ஆரம்பத்தில் மாத்திரம் எந்தக்காரியத்திற்கும் பணச்செலவிடுவதுபோல் பாடசாலைவைத்தற்கும் கொஞ்சம் பணச்செலவு செய்யவேண்டும். பதிபுண்ணியங்களின் பொருட்டு எவ்வளவானுலும் செலவிடும் நம்மவர்களுக்கு இது ஒரு பொருளல்ல. பாடசாலைகள் வைத்துச் சமயபரிபாலனஞ்செய்வது இவ்வளவு எளிதாயிருக்க இவ்வுபாயத்தை நம்மவர்கள் தங்களால் ஆகாதகாரியமென்று எண்ணிக்கொண்டு இதுவரையில் கைவிட்டிருந்தமையை யெண்ணுந்தோறும் உண்மைச் சைவாபிமானிகள் மனம் வருந்தும்.

உயர்தரப் பாடசாலைவைத்து நடத்தச் சத்தியில்லாதவர்கள் கீழ்தரப் பாடசாலையேனும் வைத்து நடத்தலாம். கீழ்தரப்பாடசாலைகள் வைத்துச் சிறுபிள்ளைகளுக்குச் சமயபோதனை செய்வதனுல் யாதொரு பயனுமுண்டாகாதெனச் சிலர் நினைக்கிருர்கள். இவர்கள் "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமொழியையும், "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல், சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்" என்னும் அம்மையார் திருவந்தாதியையும் சிந்திக்கக்கடவர். சிறுவயதிலேயே மதபோதனைசெய்வதனுலுண்டாகும் பலனை இரண்டு உதாரணங்களால் விளக்குவோம். சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தார் வைத்து நடத்தும் பாடசாலையில் ஒருநாள் ஒரு தேளிருக்கக்கண்டு அவ்விடத்திற்சென்ற ஒருவர் அதையடிக்கச்சென்ருர். அதைப்பார்த்த சிறுவர்கள் அவரைநோக்கி "ஐயா, பாவம், பாவம், அடிக்கவேண்டாம்" என்றுகூவினுர்கள். அவர் அதைக் கேட்டு அத்தேளையடிக்கமனம் வராமல் தூரத்தே கொண்டுபோயெறிந்துவிட்டார். சிறு செந்துக்களை வருத்துவதை விளையாட்டாகவுடைய சிறுபிள்ளைகளுக்கு விஷசெந்துவாகிய தேளிடத்திலும் கருணை உண்டானமைக்கும், இவர்களைப்பார்த்து அம்முதியவருக்கும் இரக்கம் வந்தமைக்கும் காரணமாயிருந்தது இச்சபையார் வைத்திருக்கும் பாடசாலையல்லவா? மற்றொருதினத்தில் இப்பாடசாலையில் வாசிக்கும் சுமார் ஏழுவயதுடைய சிறுவனொருவன், தன் அண்ணன், தாய், தந்தையோடு ஓர் சிவாலயத்திற்குப்போய் ஆலயத்தைப் பிரதட்சிணஞ்செய்யும்போது சண்டேசுரரண்டை வந்ததும், அவன் அண்ணன் சண்டேசுரரைச் சுட்டிக்காட்டி "இதோ செவிட்டுப் பிள்ளையார்" என்று சொல்லி, பலமுறை உரத்துத் தன்கைகளைத் தட்டினுன். அவனோடு அவன் தாய் தந்தையரும் கைகொட்டினுர்கள். அப்போது அச்சிறுவன் அவர்களைப்பார்த்து நகைத்து, அவர் சண்டேசுரர் என்பதையும், அவர் சரித்திரத்தையும், அவரிடம் கைதட்டுவதின் கருத்தையும், மழலைச்சொற்களால் விளக்கினுன். அதைக்கேட்டு அவன் அண்ணன் வெட்கமடைந்தான். அவன் தாய் தந்தையர் நாணமும் மகிழ்ச்சியுமடைந்தார்கள். அயலவர் அதிசயமடைந்து அச்சிறுவன் படிக்கும் பாடசாலையைப் புகழ்ந்தார்கள். இன்னும் இவைபோன்ற உதாரணங்கள் பலவுள. இச்சபையார் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னே வைத்திருந்த ஆதிவாரப் பாடசாலைக்கு வந்திருந்த சிறுவர்கள் பலர் இப்போதும் சிவபத்தியும் சைவவொழுக்கங்களு முடையவர்களா யிருத்தலைக் காணலாம். இவற்ருல் சிறுவர்களுக்குப் பாடசாலையிலேயே சமயக்கல்வி கற்பிப்பதனுலுண்டாகும் நன்மைகள் அளவிடப்படாதன வென்பதை விவேகிகள் உணர்வார்கள். கிறிஸ்தவர்கள் இதனை நன்குணர்ந்தே ஆண் குழந்தைகளுக்கு மாத்திரமன்றி, பெண் குழந்தைகளுக்கும் சமயபோதனை செய்கிருர்கள். பெண்கல்வியும் அபிவிருத்தியடைந்து வருகிறது. இதனுல், இதற்குமுன் கல்வியில்லா விட்டாலும் குருட்டுத்தனமாகவேனும் வழக்கப்படி சமயாநுட்டானங்களை யநுட்டித்து வந்த நமது ஸ்திரீகளுக்கும் இப்போது நமது சமய வொழுக்கங்கள் அனுவசியமாகக் காணப்படுகின்றன. இப்போது ஸ்திரீகளுக்கென உயர்தரப்பாடசாலைகளும் ஆரம்பமாய் விட்டபடியால், இனி ஸ்திரீகளிடத்திலும் நமது சமயவொழுக்கங்களைக் காண்பது அரிதாய் விடும். ஆதலால் நமதருமைச் சைவாபிமானிகளே, இன்னும் வாளாவிராதீர்கள். காலதேச வர்த்தமானங்களையனுசரித்து ஆண் பிள்ளைகளுக்கேயன்றி பெண் பிள்ளைகளுக்கும் சமயபோதனை செய்யுங்கள். வெறும் சமய பாடங்கள் மாத்திரம் கற்பித்தால் கற்பவரில்லை. வெறும் சமய நூல்களை மாத்திரம் கற்றுக்கொள்பவர்களை இக்காலத்தில் ஆதரிப்பாரில்லை; மதிப்பாருமில்லை. ஆதலால், ஆங்கில பாடசாலை வைத்து அதில் சைவசமய பாடங்களைக் கற்பியுங்கள். நன்ருய்க்கற்பிக்கும் பாடசாலையா யிருந்தால் அதில் எவர்களும் மேல் விழுந்து வந்து படிப்பார்கள். இப்படிப் பல

விடங்களிலும் செய்வீர்களானால் சைவம் உலகெலாம் தழைத்தோங்கும்.

**திருப்பாசுரம்.**

*வாழ்க வந்தணர் வானவ ரானினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக*
*ஆழ்க தீயதெல் லாமர னாமமே*
*சூழ்க வையக முந்துயர் தீர்கவே.*

---

## ஓர் நன்கொடை.

சென்னைத் திருவல்லிக்கேணி பைக்கிராப்டு ரோட்டில் மளிகை வர்த்தகம் செய்பவரும், சுமார் 16 வருடங்களாகச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் அங்கத்தினராயிருந்து தவறாது சந்தா உபகரித்துவருபவரும், இச்சபையோடு யாத்திரைகள் செய்து பல சிவதலங்களைத் தரிசிக்கப்பெற்றவரும், இயற்கையாகவே சிவபத் தியிற் சிறந்தவருமாகிய, ம-௱-௱-ஸ்ரீ, குமாரசாமிச் செட்டியாரவர் கள், இச்சைவமலரின் மேமீ இதனைப் படித்துக்கொண்டிருக்கை யில், இளையான் குடிமாற நாயனார் சரித்திரத்தைப் படித்தபோது, அது அவர் மனதையுருக்கி அன்பைப் பெருக்கி இன்பம் விளைவித் தமையால், அதற்கு அறிகுறியாக இச்சபைக்கு 7 ரூபா நன்கொடை யளித்தார்கள்.

*" அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்*
*புன்கணீர் பூச றரும்."*

---

## திருமுறைகண்ட புராணம்
என்னும்
## நம்பியாண்டார் நம்பி புராணம்.

*பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக*
*மன்ன னருபத்து மூவர் பதிதே மரபுசெயல்*
*பன்னவத் தொண்டத் தொகைவகை பல்குமந் தாதிதன்னைச்*
*சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே.*

சோழநாட்டிலே, திருவாரூரிலே, கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவராகிய அபயகுலசேகர சோழமகாராஜாவானவர், வைதிக மார்க்கமுஞ் சைவமார்க்கமுந் தழைத்தோங்க அரசுபுரிந்துவரும் நாளில், அவர் சமுகத்திற்கெழுந்தருளுஞ் சிவனடியார்கள் தேவா



ரத்திருமுறைகளுள் ஒவ்வொரு பதிகமோதக் கேட்டுத் தம்மை மறந்து, கைகளைச் சிரசின்மேற்குவித்து, ஆனந்தவருவி சொரிய, மெய்ம்மயிர் சிலிர்த்து, நெஞ்சம் நெக்குருகிநிற்பார். அவர் தேவா ரத் திருமுறைகளெல்லாம் எங்கேயிருக்கின்றன வென்று தேடித் தேடி, அகப்படாமையால் மிகவும் மனத்துயரங் கொண்டிருந்த னர். இப்படியிருக்கும்நாளில், திருநாரையூர்என்னுந்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் *பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசைசெய்யும் ஆதிசைவப் பிராமணரொருவருக்குச் சைவசமயம் தழைத்தோங்கி உலகம் உய்யுமாறு, ஒருசற்புத்திரர் திருவவதாரஞ் செய்தருளினர். இவர் உரியபருவத்தில் உபநயனஞ்செய்யப்பெற்று வேதமுதலியகலை களை ஓதுநாளில், ஒருநாள் இவர் தந்தையார் அயலூருக்குப் போய் விட, அவருடையகட்டளையின்படியே அவருக்குப்பதிலாக இவரே பொல்லாப்பிள்ளையாருக்கு நித்தியபூசை செய்யத்தொடங்கி, திரு மஞ்சனமுதலியனவெல்லாஞ்செய்து, நைவேத்தியத்தைப் பிள்ளையார் முன்வைத்து " எம்பெருமானே திருவமுது செய்தருளும்" என்று பிரார்த்தித்தார். பிள்ளையார் திருவமுது செய்யாமையால் இவர் மிகவும் மனம்வருந்தி " எம்பெருமானே, அடியேன் யாதுபிழை செய்தேன் ? அடியேன் நிவேதித்ததைத்திருவமுது செய்யாமைக் குக் காரணம்யாது ?" என்றுசொல்லிக்கொண்டு தமது தலையைக்கல் லிலே மோதப்புகுந்தார். உடனே பொல்லாப்பிள்ளையார், " நம்பி, பொறு, பொறு," என்றுதடுத்து அந்தநைவேத்தியம் முழுவதை யும் திருவமுதுசெய்தருளினர். அதைக்கண்ட நம்பியாண்டார்நம்பி என்னும் அச்சிறிய பெரியார் மிகவும் மகிழ்ந்து விநாயகரை யடிபணி ந்து, " எம்பெருமானே, இனிமேல் பள்ளிக்கூடத்திற்குப் போனால் என்னை உபாத்தியாயர் அடிப்பார். ஆதலால், தேவரீரே எனக்குப் பாடம் ஓதுவித்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அதற்கும் விநாயகக்கடவுள் திருவுளமிசைந்து அன்று முதலாகத்தினந்தோறும் ஓதுவிக்க, நம்பியாண்டார் நம்பி வேதமுதலிய கலைகளெல்லாவற்றை யும் ஓதி, அப்பிள்ளையார்மேல்,

*என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்*
*தன்னை நினையத் தருகின்றான்—புன்னை*
*விரசு மகிழ்சோலை வியனாரை யூர்முக்க*
*ணரசுமகி ழத்திமுகத் தான்,*

---

* " பொள்ளாப்பிள்ளையார்" என்பது " பொல்லாப்பிள்ளையார்" என மருவியது. பொள்ளாப்பிள்ளையார் என்பதற்கு உளியினால் செதுக்கிச் செய் யப்படாதவர் (சுயம்புமூர்த்தி) என்பதுபொருள்.

என்னும் வெண்பாவை முதலாகவுடைய திருவிரட்டை மணிமாலை பாடியருளினார்.

இவ்வற்புதத்தை அபயகுலசேகர சோழமகாராஜா கேட்டு மனமகிழ்ந்து, பொல்லாப் பிள்ளையாருக்கு நிவேதிப்பிக்கும் பொருட்டுப் பழவர்க்கங்களும் பலவகைப்பட்ட பலகாரங்களும் ஏராளமாக வெடுப்பித்துக்கொண்டு, நால்வகைச் சேனைகளுஞ் சூழச்சென்று, திருநாரையூரையடைந்து, நம்பியாண்டார் நம்பியின் திருவடித்தாமரைகளை வணங்கி "சுவாமி, இவைகளெல்லாவற்றையும் பொல்லாப் பிள்ளையாருக்கு இப்போதே நிவேதிப்பித்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். நம்பியாண்டார் நம்பி பொல்லாப்பிள்ளையாரை வணங்கி, அவைகளெல்லாவற்றையும் விதிப்படி சுத்திசெய்து படைக்க, பொல்லாப்பிள்ளையார் தமது துதிக்கையை நீட்டி எடுத்து அவைகளெல்லாவற்றையும் உண்டருளினார். அது கண்ட சோழமகாராஜா எல்லையற்றகளிப்படைந்து, நம்பியாண்டார் நம்பியை வணங்கி, சமயகுரவர்மூவர் அருளிச்செய்த தேவாரத்திருமுறைகளும், திருத்தொண்டர்களுடைய சரித்திரங்களும் உலகமெங்கும் விளங்கச் செய்தருளல் வேண்டும் எனப் பிரார்த்தித்தார். அதற்கும் நம்பியாண்டார் நம்பி திருவுளமிசைந்து விநாயகக் கடவுளுடைய சந்நிதியையடைந்து பிரார்த்திக்க, விநாயகக்கடவுள் "தேவாரத்திருமுறைகள் சிதம்பரத்திலே, கனகசபைக்குப் புறக்கடையின்பக்கத்திலே, சமயகுரவர்மூவருடைய கைகளின் அடையாளத்தையுடைய அறையினுள்ளே இருக்கின்றன" என்று அருளிச்செய்து, பின்பு திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் திருவாய்மலர்ந்தருளினார். நம்பியாண்டார் நம்பி சோழமகாராஜாவிடம் வந்து தமக்குப் பொல்லாப்பிள்ளையாரருளிச்செய்ததைத் தெரிவித்து தேவாரத்திருமுறைகளின் பெருமைகளைப் பின்வருமாறு கூறுவாராயினார்.

(இன்னும்வரும்.)

---

## பற்று.

(96 - ஆவது பக்கத் தொடர்ச்சி.)

நாம் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவர்களாயிருத்தலினால், நம்மை யநாதியாகவே பந்தித்து எண்ணிறந்த பிறவிகடோறும் விடாது தொடர்ந்து துன்பஞ் செய்து கொண்டிருக்கும் பாசப் பற்றை நாமே நீக்கிக்கொள்ள வல்லோமல்லோம். அல்லாமலும், நாம் இன்பத்தைவிரும்பி துன்பத்தை வெறுப்பவர்களாயிருந்தும், அஞ்ஞானத்தால் துன்பந் தருவனவற்றை இன்பந்தருவனவாக வெண்ணி விரும்புகிறோம். இன்பந்தருவனவற்றைத் துன்பந் தருவனவாக வெண்ணி வெறுக்கிறோம். ஆதலால் நம்முடைய அஞ்ஞானத்தை யுணர்ந்த பரமகருணாநிதியாகிய கடவுள் நம்முடைய நிலைமைக்கிரங்கி, நம்மை அப்பற்றினின்றும் விடுவித்து முத்தியின்பத்தைத் தர வேண்டி, நம்முடன் வேறறக்கலந்து உயிர்த்துணையாயிருந்து ஓயாது உபகரித்து வருகிறார். ஆதலால் நாமும் அவரருள்வழியில் நின்று அவருடன் ஒத்துச்சென்று அவர் திருவடியை யிறுகப்பிடித்து நிற்போமாயின் பாசப்பற்று பறந்தோடிப்போம். அப்படிச் செய்யாமல் அதற்கு மாறாக மனைவி மக்களையும் செல்வத்தையும் நம்க்குத் துணையாகவும், நம்மை அவர்களுக்குத் துணையாகவும் எண்ணி நம்மிறைவரை மறந்திருந்தால் எங்ஙனம் உய்யலாம்?



### திருவாசகம்.

செழுகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற வென்னைவிட் டிடுதிகண் டாய்வெறி வாயறுகா
லுழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே.

நம்முடைய சரீரமோ, நீரிற்குமிழிபோல் நிலையில்லாதது. அடுத்த கணம்வரையில் இச்சரீரம் இருக்கும் என்று எண்ணவிடமில்லை. இதனால் பெரியோர்கள் யமன்வருவான்என்று எதிர்காலத்தாற் சொல்லாமல் "வந்தது வந்தது கூற்று," யமன் வந்துவிட்டான், வந்துவிட்டான் என்று இறந்த காலத்தாற் சொன்னார்கள். யமன் வந்துவிட்டால் நாம் துணையாக மதித்திருக்கும் மனைவிமக்கள் நமக்குத் துணையாக வந்து யமனை விலக்குவரோ? நாம் மிகவும் பாடுபட்டுத் தேடிவைத்த செல்வம் அவன் வராதபடி தடுக்குமோ? அக்காலத்திலும் நம்மைவிடாதுதொடர்ந்து பெருந்துணையாயிருந்து உபகரிப்பவர் நம்மிறைவரே யன்றோ? இதனையறிவதற்கு நூல்கள் வேண்டுமா? இல்லையே! இது ஒவ்வொருவரும் தினந்தோறும் அநுபவமாகக் காணும் பிரத்தியட்சப்பிரமாணமேயன்றோ? அற்பமாகியஓர் புழுவுக்கும் இறப்பது திண்ணமென்று தெரியுமே? இவ்வாறிருக்கவும் அறிவிற் சிறந்த மனிதர்கள் இதனை மறந்திருப்பது எவ்வளவு அறிவீனம்!

### வைராக்கியசதகம்

கவிலி னிம்மனை மக்களுக் கொருதுணை நாமல தில்லையென்றே
கவலை யுற்றனன் றுண்மறந் தனையுனைக் காலனார் கொடுபோயிற்
குவலயத்தடைந் திவரை நாடொறும் புரந்திடுவையோ குறிக்குங்கா
சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர் தானுமோர் துணையாமே.

### சிதம்பரச்செய்யுட்கோவை

வெஞ்சம னஞ்ச வேலொ டெதிர்ந்தா னமரங்கா
ளஞ்ச லெனுஞ்சொல் லார்சொலவல்லார் நமரங்காண்
மஞ்சிவ ரிஞ்சி மன்ற மிறைஞ்சீர் நமரங்கா
ளஞ்ச மயின்றார் நல்குவர் மாதோ நமரங்காள்.

### தாயுமானவர்

கட்டுங் கனமுமந்தக் காலர் வரும்போ தெதிர்த்து
வெட்டுந் தளமோ விளம்பாய் பராபரமே.

மின்னனைய பொய்யுடலை மெய்யென்று நம்பியையோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.

கடவுட் பற்றைப் பற்றுவதற்கு உலகப்பற்றை விட்டிருப்பதும், உலகப்பற்றை விடுவதற்குக் கடவுட் பற்றைப்பற்றுவதும் ஆகிய இவ்விரண்டும் ஒன்றற்கொன்று காரண காரியங்களாக விருக்கின்றன. (உலகப்பற்றென்பது தனுகரணபுவன போகங்களில் வைத்தபற்று). ஆதலால் உலகப்பற்றில் அழுந்திக்கிடப்போர் நாங்கள் கடவுளிடத்தில் பற்று வைத்திருக்கிறோம் என்று சொல்வது வெறும் வாய்ச்சொல்லேயாம். ஒருவன் தனக்குள்ள கடவுட்பற்றையளவிட வேண்டுமாயின் அவன்தன்னிடத்திலுள்ள உலகப்பற்றைக்கொண்டு அதை அளவிட்டு விடலாம். கடவுள் ஆருயிர்க் கெல்லாம் அருந்துணையாயிருந்து சுகங் கொடுக்கவல்ல பேரின்ப வாரிதியேயாயினும் உலகப்பற்றைவிட்டு அவரையே பெரும்பற்றாகப் பற்றினவர்களுக்கே அவர் பெருந்துணையாயிருந்து பேரின்பம் கொடுப்பர். அவரைப்பற்றாமல் உலகப்பற்றையே பெரும்பற்றாகப் பற்றியிருப்பவர்களுக்கு அவர் அருள் உண்டாவதில்லை. எந்நாளும் துன்பமே உண்டாகும்.

### திருவருட்பயன்.

நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்.

### திருத்தாண்டகம்.

அருந்துணையை யடியார்த மல்ல றீர்க்கு
 மருமருந்தை யகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
 வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
 பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
 பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

பேரின்பவடிவினராகிய கடவுளைத் தவிர மற்றப் பொருள்களெல்லாம் மாயாமயமாய் துக்க ரூபமாயிருத்தலினால், பெரியோர்கள் பிரமாதி தேவர்களின் பதவிகளையும் துக்கமெனக்கழித்து கடவுட் பற்று ஒன்றையே வேண்டுவர். சிறியோர் எவ்வளவு துன்பத்திலழுந்திக் கிடந்தாலும் கடவுளை மறந்து உலகப் பற்றையே விடாது பற்றிக் கொண்டிருப்பர்.

### கந்த புராணம்.

கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை யிந்திர னாசினைக் கனவிலும் வெஃகேன்
மால யன்பெறு பதந்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் றமியேன்.



### நீதிநெறி விளக்கம்.

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்தயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
களியார் சுமைபோடு தற்கு.

கடவுளிடத்தில் திடமான பற்றில்லாதவர்கள் துறவு பூண்டாலும் யாதொரு பயனையும் அடையமாட்டார்கள். இல்லறத்திலிருந்தாலும் கடவுளிடத்தில் திடமான பத்திசெய்வோர் உலகப்பற்றில் அழுந்தாதிருப்பர். இது நமது நாயன்மார்களின் சரித்திரங்களால் விளங்கும். நமது நாயன்மார்களுள் ஒருவர் தமது அருஞ் செல்வக்குழந்தையை அறுத்துக் கறியாக்கிச் சிவனடியார்க்குண்பித்தார். ஒருவர் தனதுகட்டளைகடவாத கற்பிற்சிறந்த காதலியாரைச் சிவனடியவருக்குக் கொடுத்துவிட்டார். இவர்களெல்லாரும் இல்லறத்திலிருந்துகொண்டே கடவுளிடத்தில் உண்மையான பத்திசெலுத்தியபடியால் இவர்களை உலகப்பற்று அணுத்துணையேனும் பாதிக்க விடம்பெற்றிலது. ஆதலால் பற்றையொழித்தற்குப் பத்திமார்க்கமே சிறந்தமார்க்கமாகும்.

### தேவாரம்.

மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்ற மென்னும்
வினையுளே விழுந்த ழுந்தி வேதனைக் கிடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகி லுய்யலாம் நெஞ்சி னீரே.

---

## கணபதி மான்மியம்.

கஜமுகாசுரன் என்னும் அரக்கனொருவன் இருந்தான். அவன் சிவபெருமானை நோக்கி மிகவும் அரிய தவஞ்செய்து இறவாவரம் பெற்று, மூவுலகத்திலும் தன் ஆணை செல்லவும், தேவர்களெல்லாம் தன் ஏவல் செய்யவும் அரசு செலுத்திக்கொண்டிருந்தான். அவன் தேவர்களை மிகவும் இழிவாக நடத்தி வருத்திக்கொண்டிருந்ததுமன்றி அவர்கள் தன்னிடத்திற்கு வரும்போதெல்லாம் மூன்று முறை தங்கள் தலையில் குட்டிக்கொண்டு, இரண்டுகைகளாலும் இரண்டு செவிகளையும்மாறிப் பிடித்துக்கொண்டு, மூன்றுமுறை குந்தி யெழுந்திருத்தல்வேண்டுமெனக் கட்டளை யிட்டிருந்தான். இந்திரன் முதலாகிய தேவர்களெல்லாம் அவன் ஆணையை மீறி நடக்கமாட்டாதவர்களாய், அவன் முன்சென்றபோதெல்லாம் அவ்வந்தனத்தைச்செய்து வருவாராயினர். இவ்வாறு கஜமுகாசுரனால் தாங்கள் படுந்துயரத்தைச்சகியாதவர்களாய், தேவர்களியாவரும் திருக்கைலாய மடைந்து தேவதேவராகிய சிவபெருமானிடம் முறையிட்டுக்கொண்டார்கள். சிவபெருமான் அவர்களுக்கிரங்கி, அக்கயமுகனைச் சங்கரித்துத் தேவர்களைக் காப்பதாகக்கூறி யருளி, அவர்களையனுப்பியபின், ஓர் நாள்

உமாதேவியாரோடு அக்கைலைமலையின் சாரலிலிருக்கும் ஓர் உய்யானத்தின் மத்தியிலிருந்த ஓர் மண்டபத்தில் திருவோலக்கமாயெழுந்தருளியிருந்தனர். அம்மண்டபத்தில் மந்திரவடிவமான பலசித்திரங்கள் எழுதப்பெற்றிருந்தன. அவற்றுள் ஒன்று பிரணவசொரூபமாகிய ஆண்யானையும் பெண்யானையும் இருவேறு சித்திரங்களென்னுதபடி ஒன்றோடொன்று கூடியிருக்கும்பாவனையாக எழுதப்பெற்றிருந்தது. அதனை உமாதேவியாரும் சிவபெருமானும் பார்த்தருளியபோது அதினின்றும் சிவசத்திகளின் சொரூபமாக யானைமுகத்தோடு விநாயகக்கடவுள் திருவவதாரஞ் செய்தருளினர். அவ்வாறு தங்கள் சங்கற்பத்தால் தங்களில் வேறாகாமல் தங்கள் சொரூபமாகத் தோன்றிய குமரனை அம்மையப்பரிருவரும் எடுத்து மடிமீதிருத்தி, சிவகணங்களுக்கெல்லாம் தலைமைபெற்றுக் கிருபை வழங்கிவருமாறு கணபதியெனப் பெயரிட்டு, யாவர் எந்தக்காரியத்தைச் செய்யத்தொடங்கினாலும் அவரை முன்னதாக வணங்கிச் செய்தல்வேண்டுமெனவும், அப்படிச் செய்வார் தொடங்குங் காரியம் இடையூறின்றி நிறைவேறுமெனவும் திருவாய்மலர்ந்தருளி கஜமுகா சுரனைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்தருளவேண்டுமெனக் கட்டளையிட்டருளித் திருக்கைலாய மடைந்தனர். விநாயகக்கடவுள் கணங்களுக்கெல்லாம் தலைவராய் திருக்கைலாயத்தில் முகவாய்தலில் எழுந்தருளியிருக்கையில், தேவர்கள் வந்து வணங்கி, தங்கள்துயரத்தை நீக்கியருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். விநாயகக்கடவுள் அவர்களுக்கிரங்கி, சிவபெருமான் கட்டளையின்படி அசலன் என்னும் ஓர் பூதசேனாதிபதி தோளின்மீது ஆரோகணித்து, பலபூத கணங்கள் தம்மைப் புடைசூழ்ந்துவரச் சென்று, கஜமுகாசுரன் அரசுபுரிந்திருந்த மதங்கநகரஞ்சென்று, தம்மை வந்தெதிர்த்த கஜமுகாசுரனுடைய வில்லைத் தமது கதாயுதத்தால் துண்டித்து, அவன் சேனைகளையெல்லாம் மழுவாயுதத்தால் சாம்பலாக்கினர். அவன் எந்த ஆயுதங்களாலும் சாவாவரம்பெற்றிருந்தானாதலினால் கடைசியாகத் தமது வலதுபக்கத்துக் கொம்பையொடித்து அவன்மீது பிரயோகித்தனர். அதனால் அவன்மார்பு பிளக்கப்பட்டு மலைபோல் நிலத்தில் வீழ்ந்து, மீண்டும் மலைபோன்ற பெருச்சாளிவடிவத்தோடு யுத்தத்திற்குவந்தனன். விநாயகக்கடவுள் ஒடித்தகொம்பினை ஓர் ஆயுதமாகத் தமது திருக்கரத்திலேந்தி, அம்மூஷிகத்தின் மீது ஆரோகணித்தலும் மூஷிகம் சீவபோதம்நீங்கிச் சிவபோதம்பெற்று அதுமுதல் விநாயகக்கடவுளுக்கு உயர்ந்த வாகனமாயது. இதனைக் கண்டதேவர்கள் இன்பவெள்ளத்தாழ்ந்தனர். அதுமுதல் கஜமுகாசுரனுக்குச் செய்துவந்த குட்டிக்கொள்ளுதலும், தோப்புக்கரணமுமாகிய வந்தனத்தை, நன்றிமறவாமைக் கறிகுறியாகத் தேவர்கள் மாத்திரமன்றி இப்பூவுலகத்தினரும் செய்து வருவாராயினர்.

---

OFFICE OF THE REGISTRAR OF JOINT STOCK COMPANIES 27 JUL 1915 MADRAS.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்


# சைவம்

மலர் 1.] | இராக்ஷச௵ ஆடிமீ 1915௵ ஜூலைமீ | [இதழ் 7.


## ஞானப்பிரகாச சம்பாஷணை

(102 - வது பக்கத் தொடர்ச்சி.)

" முத்தனை வெண்ணகை யார்மயன் மாற்றி முறைவழுவா
தெத்தனை காலநின் றேத்து மவரினு மென்பணிந்த
பித்தனை யெங்கள் பிரானை யணைவ தெளிதுகண்டீர்
அத்தனை ஞானசம் பந்தனைப் பாத மடைந்தவர்க்கே."

ஞா.—அப்பா, நீ இப்போது சொன்னதெல்லாம் உண்மையே. சைவசமயம் குன்றிவிட்டதற்குச் சைவசமயிகளின் உணர்ச்சியின்மையும் முயற்சியின்மையுமே காரணமென்பதை யாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். பணத்தைப் பல வழிகளிலும் ஏராளமாகச் செலவிடும் சைவப்பிரபுக்களும் சைவமடாதிபதிகளும் இனிமேலாவது தகுந்த முயற்சிகள் செய்வார்களானால் நாளைக்கே நமது சிறந்த சைவம் வையமெங்கும் பொலிந்தோங்கும். இதற்குச் சந்தேகமில்லை. ஆனால், இப்போது உனக்காக என்ன செய்யலாம் என்பதைப்பற்றித் தான் அதிகமாக யோசிக்கிறேன். உனக்கோ இப்போது வயது முப்பத்திரண்டாய் விட்டது.

முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறானயின்—செப்பும்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு.

என்று ஔவையார் அருளிச்செய்தனர். நீ இதுவரையில் முகத்தில் திருநீறிடவில்லை. உருத்திராக்கத்தைத் தொட்டே யிருக்க மாட்டாய். மறந்தும் சிவநாமஸ்ம[illegible]செய்தறியாய். கனவிலும்

சிவபூசை செய்தறியாய். சைவ நூல்களைக் கையிலும் எடுத்தறியாய். பெரியோர்களோடு ஒருபோதும் இணங்கி யறியாய். இவைகள் ஒன்றுமில்லாத உன்னை நாம் எப்படி ஆட்கொள்ளலாம். புருஷனைக் கொன்றவளுக்குப் பிள்ளைவரங் கொடுப்ப தெப்படி ?

### பதி பசு பாச விளக்கம்.

*மூர்த்துறு லுழைப்பு மின்றி முத்தர்பா லிணக்கு மின்றிச்*
*சுந்தரக் குரவன் பாதத் தொழும்புகள் சிறிது மின்றி*
*யந்தமில் ஞானம் வேண்டு மவர்வெலாங் கொழுநற் கொன்று*
*சந்ததி வேண்டி நோற்குந் தன்மையோ டொக்கு மன்றே.*

### திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

*காணீர் கதியொன் றுங் கல்லீ ரெழுத்தஞ்சும் வல்லவண்ணம்*
*பேணீர் திருப்பணி பேசீ ரவன்புக ழாசைப்பட்டுப்*
*பூணீ ருருத்திர சாதன நீறெங்கும் பூசுகிலீர்*
*வீணீ ரெளிதோ மருதப் பிரான்கழன் மேவுதற்கே.*

ரா.—சுவாமி, தாங்கள் சொல்வதை மறுத்துப்பேச என்னு லாகுமோ ! ஆகாது. ஆனாலும், தாங்கள் எவ்வளவுதான் சொல்லி என்னைப் புறக்கணித்தாலும் நான் தங்களை விடமாட்டேன். "புனர் ந்தபாவமெலாம் பரிபூரணம் உணர்ந்த ஞானிவிழிபடவோடும்" என்று கூறுகிறார்கள். பெரியோர்களுடைய பார்வைமாத்திரத்தா லேயே ஒருவன் செய்த பாவமெல்லாம் தொலைந்துபோகுமானால் தங்களுடைய திருவடிகளையடைந்து, தங்கள் அருமைத் திருக்கரத் தால் திருநீறிடப்பெற்று, இதுவரையில் தேவரீருடைய அமுதமய மாகிய உபதேசமொழிகளைக்கேட்ட என்னிடத்தில் பாவம் எப்படி நிலைத்திருக்கும் ?. திருநாவுக்கரசு சுவாமிகளின் ஸ்பரிசம் பெற்ற கல்லும் கடலில் தெப்பமாக மிதக்கவில்லையா ? மகாபாபிகளாகிய சமணர்களோ டொருசமணனாக விருந்த கூன்பாண்டியன் திருஞான சம்பந்த சுவாமிகள் திருக்கரத்தாற் பூசிய திருநீற்றினால் கூனும் நீங் கிச் சிவஞானமும் பெற்று வாழவில்லையா ? ஓர் அறிவும் இல்லாத எலும்பும் அவர் வாக்கு விசேடத்தால் ஆறறிவுள்ள பெண்ணாகவில் லையா ? தேவரீருடைய திருவடித்தாமரைகளை யடைந்த நான் மாத் திரம் ஏன் புனிதனாகமாட்டேன் ?"

### ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி.

*அரும்பின வன்பில்லை யர்ச்சனை யில்லை யரனெறியே*
*விரும்பின மாந்தர்க்கு மெய்ப்பணி செய்கிலம் பொயக்கமைந்த*



*விரும்பன வுள்ளத்தினேற் கெங்ஙனே வந்து நேர்பட்டதாற்*
*கரும்பன நெல்வயல்சூழ் காழிநாதன் கழலடியே.*

### திருவாசகம்.

*யானேபொய் யென்னெஞ்சம்பொய் யென்னன் பும்பொய்*
*யானால் வினையே னழுதாலுன்னைப் பெறலாமே*
*தேனே யமுதே கரும்பின்றெளிவே தித்திக்கு*
*மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே.*

இராமசாமி இவ்வாறு கூறி ஞானப்பிரகாசருடைய திருவடி களை இறுகப்பிடித்துக்கொண்டு அழுது கண்ணீரினால் திருமஞ்சன மாட்டினான். ஞானப்பிரகாசர், அவன் அப்பிறவியில் சிவபுண்ணியஞ் செய்யாதவனாயிருந்தாலும், பூர்வசன்மங்களிற் செய்த சிவபுண்ணிய மேலீட்டினால் அவனிடத்தில் அன்பும் பக்குவமும் உண்டாயிருப் பதைத் திருவருட்குறிப்பால் உணர்ந்து, இரக்கங்கொண்டு, அவனை யாட்கொள்ளத்திருவுள மிசைந்து, அவனைப்பார்த்து, "அப்பா, பயப் படாதே, உன் இட்டப்படியே உனக்குச் சித்தாந்தசாத்திரங்களைப் போதித்து ஞானோபதேசம் செய்வோம். நீ அதுவரையில் தினந் தோறும் வந்து இவ்விடத்தில் நடைபெறும் பெரியபுராணப் பிரசங் கத்தையும் தேவாரபாராயணத்தையும் சிரவணஞ் செய்துகொண் டிரு. இவ்விரண்டின் சிரவணமே மேலான ஞானநெறியிற் செலுத் தும். இவைகளுக்குச்சமமான நூல்கள் உலகத்திலில்லை. ஆதலால், பெரியபுராணத்தை மற்றச்சரித்திரங்களோடொருசரித்திரமாகவும், தேவாரத்திருமுறைகளை மற்றத்தோத்திரங்களோடொரு தோத்திர மாகவும் எண்ணிவிடாதே. பாரத விராமாயணங்களும் பெரிய புரா ணத்திற்கீடல்ல. பெரியபுராணம் செய்தருளிய ஸ்ரீசேக்கிழார் பெரு மானுக்குப் பாரதவிராமாயணங்களைச் செய்த வேதவியாசரும் வான் மிகமுனிவரும் ஒப்பல்லவென்று, சிவபெருமானுடைய திருமுகப் பாசுரம்பெற்று, பெற்றான் சாம்பான் என்னும் ஒரு விறகுதலையற்கும் முள்ளிச்செடிக்கும் முத்தி கொடுத்தருளிய தில்லைவாழந்தணரும் சைவசந்தான குரவருமாகிய உமாபதிசிவாசாரிய சுவாமிகளே திரு வாய்மலர்ந்தருளினாரெனில், அப்பெருமான் செய்தருளிய பெரிய புராணத்தின் பெருமையை விரித்துரைக்க யாவராலாகும் !

### சேக்கிழார் சுவாமிகள் புராணம்.

*மதுர விராமா யணகதை யுரைசெய்த வான்மிக பகவனு மொப்பல்ல*
*விதிவழி பாரத முரைசெய்து கரைசெய்த வேத வியாதனு மொப்பல்ல*

சிதைவற வாயிர நாவுட னறிவுள சேட விசேடனு மொப்பல்ல
பொதிய மலைக்குறு முனிவனு மொப்பல புகழ்புனை குன்றை முனிக்கென்பார்.

இப்புராணத்தை நியமமாகப்படனஞ்செய்வோர்க்கு இலக்கியவிலக்கணப் பொருள்கள் நன்குவிளங்கும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் உணரலாகும். சித்தாந்த உண்மைகளும் குருலிங்கசங்கம வழிபாடுகளின் மகிமைகளும் பிரகாசமாகும். சிவஞானம் கைகூடும். தேவாரதிருவாசகங்களின் பெருமை அளப்பரியது. அவைகளை நியமமாக அன்போடு பாராயணஞ்செய்வோர்க்குக் கருங்கல் மனமும் கரைந்துநைந்துருகும். எண்ணியவெல்லாம் கைகூடும். சிவஞானமும் சிவசாயுச்சியமும் உண்டாம்.

### வைராக்கிய சதகம்.

ஒழித்தி டும்பவப் பகைவிரைந் துள்ளமே யோதமூ துணர்வோர்முற்
பழிச்சு பாடலை யாற்கவை விடர்க்கிளம் பாவைய ருரைபோலுங்
கழித்தி டேலுப சாரமென் றிதனைக் கட்டுரை யெனக்கொள்வாய்
விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும் விருப்பினர் விருப்பீதே.

நீ விபூதிருத்திராக்கங்களை இடைவிடா தணிந்திருத்தல் வேண்டும். தினந்தோறும் சிவாலய வழிபாடுசெய்தல்வேண்டும். இவைகளெல்லாம் செய்ய நீ அருகனாதற்கு முதலில் சமயதீட்சைசெய்துகொள்ளவேண்டும்,'' என்றுசொல்லி ஓர் நன்னாள் குறித்து அந்நாளில் அவனுக்குச் சமயதீட்சை செய்தருளி அவனை நோக்கி, "அப்பா, நீ இதுவரையில் சிவாலயவழிபாடு செய்பாதவனாகையால், நீ ஆலயத்திற்குப்போய் அவ்விடத்திற் செய்பத்தகாத குற்றங்களைச் செய்து பாபத்திற்காளாகாதபடியாகவும், விதிப்படி வழிபாடு செய்யும்படியாகவும் உனக்குச் சிவாலய தரிசனவிதிகளைச் சொல்லுகிறேன். கவனமாய்க்கேள்'' என்று சிவாலய தரிசன விதிகளைக் கூறினார். இராமசுவாமி அதுமுதல் ஞானப்பிரகாசரைத் தனது ஞானாசிரியராக மதித்து தேவாரபாராயணம், சிவாலயசேவை, சிவனடியார்வழிபாடு, குருவழிபாடு, என்னுமிவைகளை நியமமாகச் செய்துகொண்டிருந்து, கடைசியாக சித்தாந்தசாத்திரோபதேசமும் ஞானோபதேசமும் செய்யப்பெற்று, சீவன்முத்தனாய் விளங்கினன்.

---

OFFICE OF THE REGISTRAR OF ... 27 JUL 1915 MADRAS.

## திருமுறைகண்ட புராணம்
என்னும்
# நம்பியாண்டார் நம்பிபுராணம்.

(116-வது பக்கத்தொடர்ச்சி.)

"ஆரிய வேதம் தமிழ் வேதம் என்னும் இவ்விரண்டினுள் ஓதுவோர்க்கு இம்மை மறுமைப்பயன்களையும் முத்தியின்பத்தையுங் கொடுப்பதில் கைகண்டதாயிருப்பது தமிழ்வேதமே. உலகம் உச்சீவிக்குமாறு இதன்பெருமையைச் சொல்லுகிறேன். இது திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த பதினாறுயிரம்திருப்பதிகங்களையும், திருநாவுக்கரசு சுவாமிகளருளிச்செய்த நாற்பத்தொன்பதினாயிரம்திருப்பதிகங்களையும், சுந்தரமூர்த்திசுவாமிகளருளிச்செய்த முப்பத்தெண்ணாயிரம் திருப்பதிகங்களையும் உடையது. இது சிதம்பரத்திலே கனகசபைக்குப் புறக்கடையின் பக்கத்திலே சமயகுரவர் மூவருடைய கைகளின் அடையாளத்தையுடைய அறையினுள்ளே யிருக்கின்றது. இதனையாராய்ந்து தருவித்துக்கொள். இது ஆரியவேதம்போல் அவுணர்முதலியோரால் அபகரிக்கப்படாமல் எக்காலத்தும் அழியாமல் நிலைபெற்றிருக்கும். ஆரியவேதம்போல் பலதேவர்க்கும் பரத்துவம்கூறாது. பிரமாதிதேவர்களை யெல்லாம் பசுக்களெனவொதுக்கிச்சிவபெருமானை சர்வான்மாக்களுக்கும் போகமோட்சங்களைக்கொடுக்கும் பதிப் பொருளென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கும். நெருப்பில் வேவாது. ஆற்றுவெள்ளத்தில்விட்டால் வெள்ளத்தின்வழியே செல்லாமல் அதின்எதிரே யோடும். எலும்பைப் பெண்ணுருவாகச் செய்யும். நஞ்சையமுதாக்கும். கொலைசெய் யானை குனிந்து பணியச்செய்யும். கருங்கல்லைக் கடலைக்கடக்குந் தெப்பமாக்கும். முதலை நெடுநாளைக்கு முன்னே உண்டபிள்ளையைத் தரச்செய்யும். இன்னும் இவைபோன்ற அளவுபடாத மகிமைகளையுடையது தமிழ்வேதமே'' என்று கூறி சமயகுரவர்களுடைய சரித்திரங்களையும் திருவாய் மலர்ந்தருளினார். இவைகளை மகாராஜா கேட்டு, சந்தோஷங்கொண்டு, நம்பியாண்டார் நம்பியோடு சிதம்பரத்தையடைந்து, சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து, சந்தியாவந்தனமும் சிவபூசையும் முடித்துக்கொண்டு, கனகசபையை யடைந்து, சபாநாயகரைத் தரிசித்து வணங்கினார். நம்பியாண்டார் நம்பி சபாநாயகர் மீது கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் பாடியருளினார்.

பின்பு சோழமகாராஜா தில்லைவாழந்தணர்களை நோக்கி "பொல்

லாப்பிள்ளையார் கனகசபைக்கு மேற்றிசையிலுள்ள அறையிலே
தேவாரத் திருமுறைகளிருக்கின்றன என்று அருளிச்செய்தனர்.
அவைகளை யெடுத்தல் வேண்டும்" என்றார். தில்லைவாழந்தணர்கள்
"மகாராஜாவே, திருமுறைகளை வைத்தருளிய சைவத்திருநெறித்
தலைவர்கள் மூவரும் எழுந்தருளி வரின் அறைதிறக்கும்" என்றார்
கள். சோழமகாராஜா நடராஜப்பெருமானுக்கு விசேட பூசை
செய்வித்துத் திருவிழாக்கொண்டாடி, சமய குரவர் மூவரைத்திரு
வீதியிலே திருவுலாவருவித்துக் கனகசபையை வலஞ்செய்வித்துத்
திருமுறைகளிருக்கும் அறையினெதிரே எழுந்தருளப் பண்ணி,
தில்லைவாழந்தணர்களைப் பார்த்து "சமயகுரவர் மூவரும் எழுந்
தருளினார்கள். இனி அறைதிறக்காலமே" என்றனர். தில்லைவா
ழந்தணர்கள் சோழமகாராஜாவின் நுட்பமான அறிவைவியந்து
அறைதிறக்க அநுமதி யளித்தார்கள். சோழமகாராஜா, கதவைத்
திறந்து பார்க்கையில் அஞ்ஞானிகளின் அறிவை ஐம்புலன்கள் மறை
ப்பதுபோல், திருமுறைகளைப் புற்றுமூடிக்கொண்டிருந்தது கண்டு,
மனம்நொந்து, அவைகளை வெளியே கொணர்வித்து, மேலேபடிந்
திருந்த மண்ணைத் தள்ளிவிட்டு, செல்லு நனையும்படி எண்ணெ
யைச் சொரிந்து, திருவேடுக ளெல்லாவற்றையும் எடுத்துப்பார்க்க,
அளவில்லாத திருவேடுகள் பழுதாகக்கண்டு, "கங்காதரா, கைலா
சவாசா, காலகாலா, காமதகனா, சங்கரா, சரணியா, சந்திரசே
கரா, பார்வதிமணவாளா, என்னம்மையப்பா, ஏகநாயகா, திரி
புராரீ, சூலபாணீ, சம்போ, சிவா, மகாதேவா, பரம்பரனே, பரனே,
என்று சொல்லிக்கண்ணீர் விட்டழுது சோகித்துநின்றார். இவ்வா
றாக அளவு கடந்த அன்புமேலீட்டினால் மகாராஜா துன்பக்கடலில்
ஆழ்ந்துவருந்துகையில், உமாசகாயராகிய இறைவனாது திருவரு
ளால் யாவருங் கேட்கும்படி "தேவாரப்பதிகங்களிலே இக்காலத்
திற்கு வேண்டுவனவற்றை மாத்திரம் வைத்துவிட்டு மற்றவைகளைச்
செல்லுமண் மூடச்செய்தோம்," என்று ஓர் அசரீரி வாக்கு ஆகா
யத்தில் உண்டாயிற்று. அது கேட்டு சோழமகாராஜா கவலை தீர்ந்து,
திருவருளை வியந்து ஆடினார், பாடினார், ஆனந்தவெள்ளத்தில் மூழ்
கினார். நம்பியாண்டார் நம்பியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்
கினார். சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுக்கும்படித்
தமது பொக்கிஷசாலையைத்திறந்து விட்டார்.

பிறகு, மகாராஜா தேவாரமுதலிய அருட்பாக்களெல்லாவற்றை
யும் திருமுறைகளாக வகுத்தருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்



தனும், நம்பியாண்டார் நம்பி அதற்கு உடன்பட்டருளி, திருஞான
சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்
களை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு நாயனார் அரு
ளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாக
வும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதி
கங்களை ஒரு திருமுறையாகவும் வகுத்தருளினார். மந்திரங்கள்
ஏழு கோடியாயிருப்பதனால் தேவாரத்தை ஏழு திருமுறைகளாக
வகுத்த பின்பு, மாணிக்கவாசக சுவாமிகளருளிச்செய்த திருவா
சகம் திருக்கோவையார் என்னும் இரண்டையும் எட்டாந் திரு
முறையாகவும், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தே
வர், நம்பிகாடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திரு
வாலியமுதர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் நாயன்
மார் ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பாப்பதிகங்கள் இரு
பத்தெட்டும், அவர்களுள்ளே சேந்தனார் அருளிச்செய்த திருப்
பல்லாண்டுப் பதிகம் ஒன்றுமாகிய இருபத்தொன்பது திருப்பதி
கங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூல நாயனார்
அருளிச்செய்த திருமந்திரத்தைப் பத்தாந்திருமுறையாகவும், திரு
வாலவாயுடையார் அருளிச்செய்த திருமுகப்பாசுரம் ஒன்று, காரைக்
காலம்மையார் அருளிச்செய்த பிரபந்தங்கள் மூன்று, ஐயடிகள் காட
வர் கோனாயனார் அருளிச்செய்தக்ஷேத்திரத் திருவெண்பாவொன்று,
சேரமான் பெருமாணாயனார் அருளிச்செய்த பிரபந்தங்கள் மூன்று,
நக்கீர தேவர் அருளிச்செய்த பிரபந்தங்கள் பத்து, கல்லாடனார் அரு
ளிச்செய்த திருக்கண்ணப்ப தேவர் திருமறம் ஒன்று, கபில தேவர்
அருளிச்செய்த பிரபந்தங்கள் மூன்று, பரணதேவர் அருளிச்செய்த
சிவபெருமான் திருவந்தாதியொன்று, இளம்பெருமானடிகளருளிச்
செய்த சிவபெருமான் திருமும்மணிக்கோவையொன்று, அதிராவடி
களருளிச்செய்த மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையொன்று,
பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த பிரபந்தங்கள் ஐந்து ஆகிய
முப்பது பிரபந்தங்களையும் பதினொராந் திருமுறையாக வகுத்தருளி
னார். இவ்வாறு வகுத்தருளியபின், நம்பியாண்டார் நம்பி தமக்குப்
பொல்லாப்பிள்ளையார் உபதேசித்தருளியபடியே திருத்தொண்டத்
தொகையை முதனூலாகக்கொண்டு, அறுபத்துமூன்று தனியடியா
ரும், ஒன்பது திருக்கூட்டத்தாருமாகிய திருத்தொண்டர்களுடைய
திருத்தொண்டையும் அதனால் அவர்கள் பெற்றபேற்றையும் கலித்
துறைத் திருவந்தாதியாக வருளிச்செய்தார். பின்பு திருஞானசம்

பந்தமூர்த்தி நாயனார்மீது திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னும் ஆறு பிரபந்தங்களும் திருநாவுக்கரசு நாயனார் மீது திருவேகாதச மாலையும்பாடி யருளினார். தாம் அருளிச்செய்த பத்துத் திவ்வியப் பிரபந்தங்களையும் சோழமகாராஜாவின் வேண்டுகோளின்படி பதினொராந் திருமுறையிலே சேர்த்தருளினார்.

அதன்பின் நம்பியாண்டார் நம்பியும் சோழமகாராஜாவும் தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவுபெறவேண்டி, தில்லைவாழந்தணர்கள் மாகேசுரர்கள் முதலாயினாரோடும், திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் வசித்திருந்த தலமாகிய திருஎருக்கத்தம்புலியூரையடைந்து திருக்கோயிலுட்சென்று சிவபெருமானை வணங்கிப் பண்ணடைவு அருளிச்செய்தல் வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். அப்பொழுது யாவருங்கேட்க ஆகாயத்தில் "திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் மரபில் பிறந்தவொரு பெண்ணுக்குப்பண்களையருளிச்செய்தோம்" என்று ஓரசரீரிவாக்கு உண்டாயிற்று. உடனே நம்பியாண்டார் நம்பியும் சோழமகாராஜாவும் அப்பெண்ணரசியையழைத்து, பண்களைக்கேட்டு மகிழ்ந்தார்கள். பிறகு மறுபடியும் "இவளைக் கனகசபைமுன் கொண்டுபோய்த் தேவாரப்பதிகங்களுக்குப்பண்ணடைவு வகுக்கக்கடவீர்கள்" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. அதைக்கேட்டு, அவ்விருவரும் அப்பெண்ணரசியை அழைத்துக்கொண்டு சிதம்பரத்தையடைந்து, கனகசபையின் முன்சென்று, தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுத்தார்கள். அதன்பின் அவ்விருவரும், சபாநாயகரை வணங்கிப் பிரியாவிடைபெற்று, நம்பியாண்டார் நம்பி திருநாரையூரையும் சோழமகாராஜா திருவாரூரையும் அடைந்தார்கள். நம்பியாண்டார்நம்பி சிவாநுபூதிப் பெருஞ்செல்வராய் சிலகாலம் எழுந்தருளியிருந்து சிவசாயுச்சியம் பெற்றனர். அபயகுல சேகரசோழமகாராஜா பதினொருதிருமுறைகளையும் செப்பேடுசெய்து தியாகேசர்சந்நிதியில் ஏற்றுவித்து, சைவசமயநெறிதழைத் தோங்கும்படி அரசியற்றிக்கொண்டிருந்து சிவசாயுச்சியம் பெற்றனர்.

---

# பதி பசு பாசம்.

(107-வது பக்கத்தொடர்ச்சி)

## பாசவிலக்கணம்.

பாசமானது, ஆணவம், மாயை, கன்மம் என மூவகைப்படும். இம்மூன்றும் மும்மலங்களெனப்படும். இம்மூன்றினோடு திரோதாயி, மாயேயம் என்னும் இரண்டையுங்கூட்டி மலம் ஐந்தெனவும் கூறுவர். இவையன்றியும், ஆணவம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை, கன்மம் என ஐந்துவகைப்படும் எனவும் கூறுவர்.

இவற்றுள் ஆணவம் திரோதாயி அசுத்தமாயை இவைகளின் இலக்கணங்களை இவ்விடத்திற் சுருக்கிக்கூறுவாம்.

(சுத்தமாயையின் இலக்கணம் இதற்கு முன்னே கூறப்பட்டது)

### ஆணவமும் திரோதமும்

**சிவப்பிரகாசம்**

ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளு
மெண்ணரிய சத்தியதா யிருளொளிர விருண்ட
மோகமாய்ச் செம்பினுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுதினையு மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வாது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிக
ணணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே.

ஆணவமலமானது, இருள் பலகண்களை மறைத்தும் தான்ஒன்றுயிருப்பதுபோல், எண்ணிறந்த ஆன்மாக்களோடு கூடிநின்று அவற்றின் அறிவு இச்சைசெயல்களை மறைத்துக்கொண்டிருந்தும் தான் ஒன்றுயிருப்பதாய், ஆன்மாக்களின் பக்குவா பக்குவங்களுக்கேற்ப அவர்களிடத்தில் மறைந்துநின்று ஆன்மபோதம் கெட்டபோது நீங்கும் அளவுபடாத சத்திகளையுடையதாய், தன்னைநோக்க இருளும் ஒளியென்று சொல்லும்படி ஆன்மாக்களுக்கு மிகுந்தமறைப்பு உண்டாக்குவதாய், செம்பினுடன்கூடி யிருக்கும் களிம்பானது அந்தச்செம்புள்ளபோதே அதை மறைத்து அதன் உள்ளும் புறம்பும் கலந்து நின்றாற்போல் ஆன்மபோதத்தோடுங் கலந்து மறைந்து நிற்பதாய், என்றும் அழியாததாய், மூலமலமாய், ஆன்மாக்களின் அறிவு இச்சை செயல்கள் சற்றும் சீவியாதபடி மறைத்துக்கொண்டிருக்கும்.

திரோதாயி என்பது அந்த ஆணவமலம் நீங்கும்பொருட்டு, அதனோடுதானும் ஒருமலமாக இருந்துகொண்டு, ஆன்மாக்களுக்கு வினைப்போகங்களை மறைத்து நின்று அனுபவிக்கச்செய்து (திரோபவித்து) ஆணவமலத்தைப் பக்குவப்படுத்தி, ஆன்மாக்களைச் சிவபெருமானுடைய திருவடி நீழலிற்சேர்க்கும். இதனால், ஆணவமலமானது ஆன்மாக்களின் அறிவு இச்சை செயல்களைச் சீவியாதபடி செய்துகொண்டிருக்கும் மலமெனவும், திரோதாயிஎன்பது அவ்வாணவமலத்தைப் பரிபாகப்படுத்தி ஆன்மாக்களைச் சிவபெருமான்திருவடியிற் சேர்க்கும் அருட்சத்தி எனவும் விளக்கப்பட்டமை காண்க.

### அசுத்தமாயையின் இலக்கணம்.

#### சிவப்பிரகாசம்.

உருவாதி சதுவிதமா யொன்றொன் றொவ்வா
வுண்மையதாய் நித்தமா யொன்றா யென்று
மருவாகிக் கன்மமா ரணுக்க ளியார்க்கு
மாவார மாயசித்தா யசல மாகி
விரிவாய தன்செயலின் வியாபியா யெல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க
வருகால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய்
மன்னியிடு மானருளான் மாயை தானே.

அசுத்தமாயை, தனுகரணம் புவனம் போகம் என நால்வகைப்படும். இவை ஒன்றைப்போலொன்றிராமல் ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாய் விரிந்திருக்கும். மாயை, தன்காரியமாயுள்ள பிரபஞ்சமெல்லாமழியினும் தான் அழியாமல் நித்தமாயிருக்கும். அதுபலவாறாக விரிந்துகிடந்தும் ஒன்றேயாயும், அரூபமாயும், ஆன்மாக்கள் தாங்கள் செய்த கன்மங்களைப் புசித்தற்கு ஏதுவாயும், தனக்கென்னவோரறிவில்லாததாயும், சலனமில்லாததாயும், தனது விரிந்த செயலால் வியாபகமுடையதாயும், தன்காரியமாகிய தத்துவங்களியாவுந்தோன்றும் முறையிலே தானும் ஒக்கத்தோன்றிநின்று அக்காரியங்களெல்லாம் ஒடுங்கும் சங்காரகாலத்தில் ஆன்மாக்கள் தன்னிடத்திலே வந்து பொருந்துகைக்கிடமாயும், ஐந்து வகையாக எண்ணப்படும் மலங்களுள் ஒருமலமாயும், சிருட்டிகாலத்தும் சங்காரகாலத்தும் தனக்கொரு போக்குவரவின்றி நிலைபெற்றதாயும் இருக்கும்.

---

## வேணிவருணனை.

சிவபெருமான் திருமேனியிலுள்ள அவயவங்கள் ஒவ்வொன்றையும் பெரியோர்கள் பலவாறாக உருவகப்படுத்தித் தோத்திரஞ்செய்திருக்கிறார்கள். அவைகள் வாசிப்போர்க்கு மிகுந்த இன்பம் பயப்பதோடு அவ்வெம்பெருமானுடைய திருவுருவத்தைத் தியானிப்போர் மனதிற் பதியவைப்பனவாகவு மிருக்கின்றன. ஆதலால், அவைகளுள் சிலவற்றை இப்பத்திரிகையில் வெளியிடவேண்டி முதலில் அவரது திருச்சடைமுடித் தோத்திரங்களை யெடுத்துக் கூறுவாம்.

#### திருவாரூர் நான்மணிமாலை.

தன்னொக்குஞ் செல்வக் கமலைப் பிரான்செஞ் சடாடவிமற்
றென்னொக்கு மென்னி லெரியொக்குங் கொன்றை யெரியிலிட்ட
பொன்னொக்கும் வண்டு கரியொக்குங் கங்கையப் பொன்செய்விக்கு
மின்னொக்கும் பொன்செய் கிழக்கொல்ல னொக்குமவ் வெண்பிறையே.

இச்செய்யுளில் குமரகுருபரசுவாமிகள் சிவபிரானுடைய சடைமுடி தட்டான் கடையைப் போலிருக்கிறதென்றார். அவருடைய வேணி செவந்திருத்தலால் அது தட்டான் உலைக்களத்துநெருப்பை யொத்துளதெனவும், அவர் சடைமுடியில் தரித்திருக்குங் கொன்றைப்பூ அந்த நெருப்பிலிட்டபொன்னை யொத்துளதெனவும், கொன்றைப் பூவிலுள்ள தேனையுண்ண விரும்பிச் சூழும் வண்டுகள் உலைக்களத்து நெருப்பைச் சூழவிருக்கும் கரியை யொத்துளதெனவும், கங்கை தட்டானிடம்வந்து ஆபரணம் செய்யும் பெண்ணை யொத்துளதெனவும், வளைந்த இளம்பிறை அவ்வாபரணத்தைச் செய்யும் முதுகுவளைந்த கிழத்தட்டானையொத்துளதெனவுங் கூறியருளினார்.

#### பொன்வண்ணத் தந்தாதி.

எரிகின்ற தீயொத் துளசடை யீசற்கத் தீக்கிமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது சூழ்புன லப்புனலிற்
சரிகின்ற திங்களோர் தோணியொக் கின்றதத் தோணியுய்ப்பான்
றெரிகின்ற திண்கழை போன்றுள தாலத் திறலரவே.

இச்செய்யுளில், சேரமான் பெருமாணாயனார், சிவபெருமானுடைய சடைமுடி வேள்வித்தீயை யொத்துளதெனவும், ஆகாயகங்கை அவ்வேள்வித்தீயில் தேவர்கள் சொரியும் பாற்கடல் போன்றுளதெனவும், இளம்பிறை அக்கங்கையில் விடும் தோணியை யொத்திருக்கின்றதெனவும், அரவம் அத்தோணியைச் செலுத்தும் மூங்கிற்கோலை யொத்துளதெனவுங் கூறியருளினார்.

### அற்புதத் திருவந்தாதி.

*கலங்கு புனற்கங்கை யூடால லாலு*
*மிலங்கு மதியியங்க லாலு—நலங்கொள்*
*பரிசுடையா னீண்முடிமேற் பாம்பியங்க லாலும்*
*விரிசடையாங் காணில் விசும்பு.*

*இச்செய்யுளில், காரைக்காலம்மையார், சடைமுடியிலிருப்பது போல் ஆகாயத்திலும் (தேவலோகத்தில்) கங்கையும், திங்களும், ராகுகேதுக்களாகிய பாம்புகளும் இருத்தலால் விசும்பைச் சடைமுடிக்கு உபமானமாகக் கூறியருளினார்.*

### தேவாரம்.

*அங்கட் கடுக்கைக்கு முல்லைப் புறவ முறுவல்செய்யும்*
*பைங்கட் டலைக்குச் சுடலைக் களரிப் பருமணிசேர்*
*கங்கைக்கு வேலை யரவுக்குப் புற்றுக் கலைநிரம்பாத்*
*திங்கட்கு வானந் திருவொற்றி யூரர் திருமுடியே.*

*இத்திருவிருத்தத்தில், திருநாவுக்கரசு சுவாமிகள், சிவபெருமானுடைய சடைமுடி கொன்றைக்கு முல்லை நிலமாகவும், நகுவெண்டலைக்குச் சுடுகாடாகவும், கங்கைக்குச் சமுத்திரமாகவும், பாம்புக்குப் புற்றாகவும், சந்திரனுக்கு ஆகாயமாகவும் இருக்கிறதென் றருளிச் செய்தனர்.*

---

## பத்திரிகாபிமானிகள்.

*கற்றுணர்ந்த அறிஞர்சிலர் "சைவம்" என்னும் இப்பத்திரிகையைப்பற்றிச் சிறந்த அபிப்பிராயங்கள் வெளியிடுவதுமன்றி, நன்கொடையளித்தும், மிகுந்த ஊக்கத்தோடு சந்தாதாரர்களைச் சேர்த்தும் எம்முடன் ஒத்து உழைத்துச் சைவசமயபரிபாலனஞ் செய்கிறார்கள். இச்சிவநேயர்களிடம் மிகவும் நன்றிபாராட்டி இவர்கள் வெளியிட்டுள்ள அபிப்பிராயங்களையும், செய்துவரும் உதவிகளையும் இதனடியில் சூசித்தெழுதப் பெற்றேன். இப்பத்திரிகையைப் பெறும் ஏனைய ஆப்தர்களும், உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜனசமூகத்தாரின் நாகரிகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாத சாதனமாயுள்ளது பத்திரிகை என்பதைச் சிந்தித்து, இப்பத்திரிகையையாதரித்துப் புண்ணியமும் புகழும் பெறுவார்களாக.*



### பண்டிதர்களும் அவர்கள் அபிப்பிராயங்களும்.

*ஸ்ரீமான் - மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,* Tamil Pandit, *மகிபாலன்பட்டி :—*

*"பத்திரிகை முழுதுஞ் சைவ மணங்கமழ்கின்றது. தன்னோக்கத்தையே கடைப்பிடித்துச் செல்லும் இத்தகைய பத்திரிகை நந்நாட்டிலரிது."*

*பிரமஸ்ரீ -* V. M. *இரத்தினேசுவர ஐயரவர்கள்,* Tamil Pandit, *காரைக்குடி :—*

*"சைவம் என்னும் மகுடநாமமுடைய மாசிகப் பத்திரிகை வாசிக்கும் பெற்றித்து. அறிவுடையவர்க்கு அமிர்தமாயிலங்குகின்றது."*

*ஸ்ரீமான் - பு. ர. நடன சபாபதிப் பிள்ளையவர்கள்,* School Master, *தொண்டமாநத்தம் :—*

*"ஒப்புவமையில்லாச் சைவம் உருவில் சிறிதேயாயினும் மகிழமலர்போல் மணமரு திருக்கின்றது."*

*ஸ்ரீமான் - குமாரசூரியரவர்கள்,* Teacher, Eng. School, Jaffna :—

*"விஷயங்கள் சர்க்கரைப் பந்தலிற் றேன்மாரி பொழிந்தாற்போலக் கனிவாய்ச் செந்தமிழில் எழுதப் பெற்றிருக்கின்றன."*

*பிரமஸ்ரீ -* R. S. *கங்கா ஜடேசசர்மா அவர்கள்,* Essayist, Rendankattalai :—

*"சைவ சமயிகளின் தவப்பயனாகத் தோன்றிய நமதருமைச் சைவம்"*

*"தத்புருஷ சிவன்" என்னும் ஸ்ரீலஸ்ரீ - ம. தி. பாநுகவி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் மடாதிபர், திருவோத்தூர் :—*

*"சைவம் என்னும் பத்திரிகையைக் கண்ணுற்றுக் களிகூர்ந்த வென்மனம் இதன் ஆசிரியரது பொது நோக்கத்தைக் கருதிச் சால மகிழ்வுற்றதென்பதை இங்கு சொல்லாமலிருக்க முடியவில்லை"*

*ஸ்ரீமான் - க. சி. சபாபதிச் செட்டியாரவர்கள், பூவாளூர் சைவசித்தாந்த சங்கம் :—*

*"தற்காலம் நின்றுலவும் பத்திரிகைகளில் சிரபூஷணமாகும் இப்பத்திரிகை."*

*ஸ்ரீமான் -* K. *சண்முகவேலு பிள்ளையவர்கள் உடுமலைபேட்டை :—*

"சைவ சமயம் தழைத்தோங்க இத்தகைய பத்திரிகைகள் இன்றியமையாதன. இதில் விஷயங்கள் தெளிவாகவும் எளியநடையிலும் எழுதப்பெறுகின்றன. சைவம் என்பதை இன்னதென்றறியாத பல்லோரும் இதனைப் படித்துப்பார்த்துவரின் அது இத்தன்மையதென எளிதிலறிவார்கள்"

ஸ்ரீமான் - கோ. வடிவேலு செட்டியாரவர்கள், "லோகோபகாரி" பத்திராதிபர் :—

"இப்பத்திரிகை ஒவ்வொரு சைவரிடத்திலும் அவசியமாக இருத்தற்குரியதாம்"

Revd. தேவசகாயம் அவர்கள், B. A.:— "சைவம் என்னும் பத்திரிகை பாஷாநயம், தெளிவுடைமை, சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல், ஆழமுடைமை, இவைமுதலிய இலட்சணங்களையுடையதே. தவிர, பூர்வ சமயாசாரிகள் செய்துள்ள நூல்களுள் அமைந்த பொருளினை யாவரும் எளிதின் நுகர எடுத்துத்தரும் ஆற்றலுடையது."

ஸ்ரீமான் - வைதிகசைவசித்தாந்தசரபம் கோ. சிவஅருணகிரி முதலியாரவர்கள் :—

"சைவம் என்னும் பத்திரிகை உலகத்துக்குப் பேருபகாரமாயுள்ளது. நம்சைவர்கள் அதனைப்பெறவேண்டுவது அவசியம்"

இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்து உபகரிப்பவர்கள்.

தேவகோட்டை வைசிய சிவானந்த சபையின் உதவி காரியதரிசி ஸ்ரீமான் - பள. வெ. சு. இலட்சுமணன் செட்டியாரவர்கள். இவர் தேவகோட்டைமுதலான பலவிடங்களிலுள்ள பலசைவப்பிரப்புக்களைச் சேர்த்தனர்.

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை ஸ்ரீமான் - திரு. வி. உலகநாத முதலியாரவர்கள்.

முத்தியாலுபேட்டை உமாமகேசுரர் தமிழ் வேதபாராயண பக்தஜனசபை காரியதரிசி ஸ்ரீமான் - முருகப்ப செட்டியாரவர்கள்.

கூடலூர் புதுப்பாளையம் ஸ்ரீமான் - S. சித்தேச முதலியாரவர்கள்.

உதகமண்டலம், ஸ்ரீமான், M. T. ஆறுமுகம் அவர்கள், Clerk, Bank of Madras, Ooty.



கூடலூர் தொண்டமாநத்தம் ஸ்ரீமான் - பு. ர. நடனசபாபதிப் பிள்ளையவர்கள். இவர் தமது மூப்பையும் சிரமத்தையும்பாராமல் தமது வேலையெல்லாம் நிறுத்தி, தம்மைச் சுற்றியுள்ள 100 கிராமங்களுக்குப்போய் இப்பத்திரிகை பரவுமாறு செய்ய ஆவல்கொண்டுளார்.

ஸ்ரீமான் - மாகறல் - கார்த்திகேய முதலியாரவர்கள், Tamil Pandit.

தஞ்சை, ரெண்டான் கட்டளை, பிரமஸ்ரீ - கங்கா. ஜடேசசர்மா அவர்கள், Essayist. இவருடைய பத்திரிகாபிமானத்தை மேமீ பத்திரிகையிற் காணலாம். இவர் பலவிடங்களுக்கும்போய் இப்பத்திரிகை விஷயமாக உபந்நியாசங்கள் செய்கிறார்.

ஸ்ரீமான் - W. T. மாசிலாமணி முதலியாரவர்கள், Head Master, Mahomedan School, வாலாஜாபாத்.

ஸ்ரீலஸ்ரீ - ம. தி. பாநுகவிசுவாமிகள்.

பிரமஸ்ரீ - K. கிருஷ்ண ஐயரவர்கள் B. A., Sub - Inspector of Police, Adamankota.

பிரமஸ்ரீ - V. C. இரத்தினேசுவர ஐயர் அவர்கள், Tamil Pandit, காரைக்குடி.

ஸ்ரீமான் - வைதிக சைவ சித்தாந்த சரபம் - சோ. சிவஅருணகிரிமுதலியாரவர்கள், Rangoon.

பூவாளூர் சைவ சித்தாந்த சங்கம்:—

ஸ்ரீமான் - அ. ரா. அமிர்தஞ் செட்டியாரவர்கள்.

ஸ்ரீமான் - நா. சு. மு. செல்வக்கணபதி செட்டியாரவர்கள்.

ஸ்ரீமான் - கா. சி. சபாபதி செட்டியாரவர்கள்.

ஸ்ரீமான் - கு. குமாரசூரியர், வட்டுக்கோட்டை, Jaffna.

ஸ்ரீமான் - பொ. மாணிக்கச் செட்டியாரவர்கள் தாதம்பேட்டை, பழூர்.

ஸ்ரீமான் - B. வெங்கடாசல ஆச்சாரியவர்கள், திருவல்லிக்கேணி.

ஸ்ரீமான் - கூடலூர் - சிவவாசுதேவ முதலியாரவர்கள் M. & S. M. Ry. Audit office.

ஸ்ரீமான் - வல்லை - சண்முகசுந்தர முதலியாரவர்கள், தமிழ்ப் பண்டிதர்.

ஸ்ரீமான் - பொ. பழநியாண்டிச் செட்டியாரவர்கள், நாகூர்.

---

## அகத்தியர் திரட்டியருளிய தேவாரத்திரட்டின் உண்மைச்சிறப்பு.

*குருவுருவம் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயில்*
*அரனுருவம் என்றலைமேல் ஆக்குந் - திருவடியுஞ்*
*சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கென்*
*றிட்டார் அகத்தியனார் எட்டு.*

ஆசிரியர் திருவுருவத்தைக் காணப்பெறாதவன் ஞானநோக்கத்தைப் பெறானாகலான் அதுகாணுமாறு குருவுருவத்தை முன்னரும், திருநீற்றைச்சரீரத்தினிடத்தில் அணியப்பெறாதவன் சைவதருமத்துக்குரியனென்றழைக்கப்படானாகலான் சைவகவசமாகிய திருநீற்றை அதன் பின்னரும், ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்கப்பெறாதவன் சிவசொரூபத்தைக் காணப்பெறானாகலான் அச்சொரூபத்தையுணர்த்தவல்ல எழுத்தஞ்சை அதன்பின்னரும், ஆலயவழிபாடாகிய சரியையைக்காலத்தால் செய்யப்பெறாதவன் சிவசொரூபவுணர்ச்சியால் அடையப்பெறும் மலவாசனாநீக்கத்தை அடையப்பெறானாகலான் அதனைப்பெறுவிக்கவல்ல கோயிலை அதன் பின்னரும், காயத்தோடு கரணத்தால் வழிபடும் வழிபாட்டிற்குரிய கிரியையைச் செய்யப்பெறாதவன் திருவருளைக்கூடானாகலின் அவ்வருளைக்கூட்டவல்ல சிவசொரூபமாகிய அரனுருவத்தை அதன்பின்னரும், திருவருட்பேறு பெற்ற பின்னர் அருள் நிலையாகிய திருவடியின்கண்ணே நிலைபெறுவித்தலாகிய சிவயோகத்தைச் செய்யப்பெறாதவன் அருட்போதவழியேதற்போதம் அடங்கிச்செல்லும் நிலையைக்காணாதொழிவனாகலின் அந்நிலைகூடும் வண்ணம் தலைமேல் ஆக்குந்திருவடியை அதன் பின்னரும், தற்போதம் அருட்போதத்தில் அடங்கிநிற்கும் யோகநிலைகூடப் பெற்றபின்னர் எல்லாவுருவும் சிவனுருவமாகத் தோன்றி எல்லாநாமங்களும் அவனது நாமங்களாகவே எண்ணி உச்சரித்தலாகிய ஞானசித்தியைப் பெறாதவன் இறைவனது கருணையை நினைந்து நினைந்து உருகுதலாகிய பேற்றையொழிவனாகலின் அப்பெரும்பேறு பெறும்வண்ணம் சிட்டான அர்ச்சனையை அதன் பின்னரும், இங்ஙனமான சரியை கிரியை யோகஞானங்களை முறையானே பெற்றபின்னர் அயரா அன்பின் கண்ணே நிறுத்தவல்ல அருளாளரது வழிபாட்டை எய்தப்பெறாதவன் சிவானந்தத்தை இழப்பனாகலின் அதை இழந்து போகாவண்ணம் தொண்டை அதன் பின்னரும் அமைத்தருளினரென்க. (இன்னும் வரும்.)

வைதிக சைவ சித்தாந்தப் பிரசங்க ரத்நாகரம்,
கா - ஏ. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள்.

OFFICE OF THE REGIS... 13 SEP 1915 MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 1.] | இராக்ஷசஞு ஆவணிமீ 1915ஞு ஆகஸ்டுமீ | [இதழ் 8.

## திருநீலகண்ட நாயனார் புராணம். *

*சொல்லச் சிவன்றிரு வாணைதன் றூமொழி தோணசையை*
*யொல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்*
*வில்லைப் புரைநுத லாளொடி ளமைபெற் றின்பமிக்கான்*
*றில்லைத் திருநீல கண்டக் குயவனுஞ் செய்தவனே.*

சிதம்பரத்திலே, குயவர் குலத்திலே, சிவபத்தியிலும் அடியார் பத்தியிலும் சிறந்து விளங்கிய பெரியார் ஒருவர் இருந்தனர். அவர் தமது குலத்துக்கேற்ப மட்கலங்கள் செய்து விற்றுச் சீவனஞ்செய்து கொண்டிருந்தனர். சிவனடியார்களைக் கண்டமாத்திரத்தில் ஒரு புதையலைக் கண்டெடுத்தவர்போல் தம்மை மறந்துமகிழ்ச்சிகொண்டு எதிர்சென்று வணங்கி, தமது வீட்டுக்கழைத்துச் சென்று பூசித்து, அவர்களுக்கு வேண்டும் மட்கலங்களும் திருவோடுகளும் கொடுத்துக்கொண்டிருந்தனர். அவர் கனகசபையின் கண்ணே, வாணாசுரன் இரண்டாயிரங்கரங்களாலும் ஒருபால் குடமுழாமுழக்கவும், திருமால் ஒருபால் மத்தளமுழக்கஞ் செய்யவும், பிரமதேவன் ஒருபால் தாளம் போடவும், தும்புரு நாரதர் ஒருபால் இனிய கீதம்பாடவும், பதஞ்சலிமுனிவரும் வியாக்கிரபாதரும் ஒருபால் தோத்திரஞ்செய்யவும், சிவகாமியம்மையார் கண்டு களிக்கவும், சகலான்மகோடிகளையும் பிறவிப்பெருங்கடலினின்றுங் கரையேற்றும் பஞ்சகிருத்தியப் பரமானந்தத் தாண்டவஞ்செய்தருளும் ஸ்ரீநடராஜப்பெருமானாருடைய குஞ்சிதபாதத்தை அல்லும் பகலும் இடையறாதபேரன்போடு

* இதில் பெரியபுராணத்திற் காணப்படாதன இருப்பின் அவற்றைப் பத்திரிகாசிரியர் வருவித்துரைத்தனவாகக் கொள்க.

வழிபட்டு வருவாராயினர். அவர், தேவர்களும் அசுரர்களுங்கூடித் திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து தோன்றிய ஆலகால விஷத்தின் கொடுமையைச் சகிக்கமாட்டாதவர்களாய் பிரமன் முதலிய தேவர்களெல்லாம் நடுக்கமெய்திச் சிவபிரானைச்சரணடைந்ததும், சிவபிரான் அவர்களுக்கிரங்கி அவ்விஷத்தை யமுதமாகவுண்டு அவர்களைக் காத்தருளியதையும், அவ்விறைவனார் தாமே சர்வலோக நாயகராகிய முழுமுதற்கடவுள் என்பதையும் தம்மையடைந்த ஆன்மாக்களின் சகல துன்பங்களையும் போக்குபவர் தாமே யென்பதையும் யாவரும் அறிந்து தம்மை வழிபட்டு உய்யவேண்டு மென்னும் பரமகாருணியத்தினால் அவ்விஷத்தைத் தமது ஸ்ரீகண்டத்திலேயே அடையாளமாக நிறுத்தியருளியதையும், எந்நேரமுஞ் சிந்தித்துச் சிந்தித்து மனமுருகுவர். அத்திருவிளையாடலைப் பலகாலும் பல்லோரிடத்தும் வாயாரச்சொல்லிச் சொல்லி யானந்திப்பர். எந்நேரமும் திருநீலகண்டம் திருநீலகண்டம் என்று உச்சரித்துக்கொண்டே யிருப்பர். அதனால் அவருக்குத் திருநீலகண்டநாயனார் என்னுங் காரணத்திருநாமம் உண்டாயிற்று. அவர் மனைவியார் கற்பில் அருந்ததியையும் அழகில் இலக்குமியையும் நிகர்த்தவர். பத்தாவுக்கேற்ற பதிவிரதையாய், தன் கணவரைப்போலவே தம்மை மறந்திருந்தாலும் திருநீலகண்டநாம ஸ்மரணையை மறவாதிருந்தவர். அதனால் அவ்வம்மையார் எதைப் பேசத்தொடங்கினாலும் திருநீலகண்டத் திருநாமம் அவருக்கும் தெரியாமலே அவர் வாயிலிருந்து முந்தி வெளிவரும். இவ்வாறு, அவர்களிருவரும் திருநீலகண்டத்தியானமும் திருநீலகண்ட ஸ்மரணையுமே இம்மானிடப் பிறவியாலாய பயனென்றெண்ணி, பொய், குறளை, வன்சொல், பயனில் சொல், வஞ்சகம், முதலிய தீயகுணங்களின்றி, அறநெறிவழாமல் அரனெறியொழுகி இல்லறம் புரிந்துவருநாளில், நாயனார் ஒருநாள் சிற்றின்பப் பிரியராய் ஒருவேசியிடம் போய் வந்தனர். அதையவர் பத்தினியார் அறிந்து மனம் வருந்தி, அவர்மீட்டும் பரத்தையர் மோகத்தில் அழுந்தாதவண்ணம், அவரிடத்தில் ஊடல்கொண்டு, இல்வாழ்க்கைக்குரிய மற்றப்பணிகளெல்லா வற்றையுஞ்செய்து புணர்ச்சிக்கு மாத்திரம் இசையாமலிருந்தார். நாயனார் தம்முடைய மனைவியார் கொண்ட புலவியைத்தீர்க்கும்பொருட்டு அவர் சமீபத்திலேபோய் தாம்செய்த குற்றத்தைப் பொறுக்குமாறு வேண்டி அவரைத்தீண்டும்படி நெருங்கினார். அப்பொழுது மனைவியார் "நீர் எம்மைத்தீண்டுவீராயில் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டார். அவ்வாணையைக் கேட்ட



மாத்திரத்தில், நாயனார் தம் பத்தினியாரை அயல்மாதரைப் போல் எண்ணி, உடனே அவரை விட்டு அகலநின்று "நீ எம்மைத்தீண்டுவீராயில் திருநீலகண்டம் என்று பன்மையிற் கூறி ஆணையிட்டமையால், நான் இனி உன்னை மாத்திரமன்றி வேறு எந்த மாதரையும் என்காயத்தால் மாத்திரமன்றி மனத்தாலும் தீண்டமாட்டேன்" என்றனர். அதைக்கேட்டமாத்திரத்தில் அம்மையார் திடுக்கிட்டு, யாது செய்தோம் என்றெண்ணி, நாயனாரைப்பார்த்து "என் பிராண நாதரே, அடியேன் அறியாமையால் பதறி ஆணையிட்டேன். என் உடலும் உயிரும் தேவரீருடைய உடைமைகளாயிருக்க அடியேன் அவ்வாறு ஆணையிடுவதற்கும் உரியவளோ? அரசனிடம் ஏதேனுங்குறை கண்டால் அவனுக்கு அமைச்சர்கள் சமயோசிதமான யுத்திகளைக்கூறியும் உபாயங்களை யனுசரித்தும் அக்குறைகளை யகற்றல் கடமையாகும். இதனை யெண்ணியே அடியேன் தாங்கள் பரத்தையர் வலைபிற்சிக்காத வண்ணம் ஊடி ஆணையிட்டேன். அன்றியும், தேவரீர் என்னை இச்சமயத்தில் தீண்டவேண்டாமென்று ஆணையிட்டேனேயன்றி, என்னை எக்காலத்தும் தீண்டலாகாதென்றாவது, வேறெந்தமாதரையும் எக்காலத்திலும் எந்தக்காரணத்தினாலும் தீண்டலாகாதென்றாவது ஆணையிடவில்லை. ஆதலால் தேவரீர் அடியேன் அறியாமையால் இட்ட ஆணையையும் அவ்வாணையின் கருத்தையும் சீர்தூக்கிப்பார்த்தல் வேண்டும். குணங்குற்றங்களை வெறும் சொல்லளவாகவாவது செய்கையளவாகவாவது கிரகிக்கலாகாது; கருத்தளவாகக் கிரகித்தல்வேண்டும். யாகம் செய்தல் புண்ணியச்செயலேயாயிருந்தும் தக்கன் செய்த யாகமானது கருத்துவகையால் பாவச்செயலாயிற்று. பிதாவுக்குத் தீங்குசெய்தல் பாவச்செயலாயிருந்தும் சண்டேசுரநாயனார் தமது பிதாவின் காலைவெட்டியது கருத்துவகையால் புண்ணியச்செயலாயிற்று. ஆதலால் குணங்குற்றங்களை வெறுஞ்சொல்லளவாக வேனும் செய்கையளவாகவேனும் கிரகிக்காமல் எப்போதும் கருத்தளவாகக் கிரகித்தல் வேண்டும். சிலசமயங்களில் பொய்யும் பிறருடைய நன்மையை நாடிச்சொல்லப்படுமாயின் மெய்போல் மதிக்கப்படும். மெய்யும் பிறருடைய தீமையை விரும்பி வஞ்சகமாகச் சொல்லப்படுமாயின் பொய்யைப்போல் எள்ளப்படும். ஆதலால், தேவரீரிடத்தில் வைத்த அன்புகாரணமாக என் வாயினின்றும் என்னையும் அறியாமல் வந்த ஆணையையும் அவ்வாணையின் கருத்தையும் நன்றாய்ச் சீர்தூக்கிப்பார்த்தல் வேண்டும்" என்றனர். இவ்வாறு தமது பத்தினியார் கூறியதைக்

கேட்டு நாயனார் "உன் கருத்து எதுவாயிருந்தாலும் இருக்கட்டும். நீ இட்ட ஆணை ஆணையே. அவ்வாணையும் அற்பசொற்பமான ஆணையன்று; உயர்வொப்பில்லாத திருநீலகண்டத்தாணை. மிகவும் அற்பமாகிய பெண்போகத்தை விரும்பி, சொல்வேறு கருத்துவேறு என்று பாகுபாடுசெய்துகொண்டு, அரிய திருநீலகண்டத்தாணையைக் கடப்பது தகுதியாமோ?. முன்னொருகாலத்தில் பஞ்சபாண்டவரில் ஒருவனாகிய அருச்சுனன் தன் சகோதரர்களோடு பிராமண வேடம் பூண்டு பாஞ்சால நாட்டையடைந்து அந்நாட்டரசனது வில்லை வளைத்துத் திரௌபதியால் மாலையிடப்பெற்று, அவளுடன் தன் தாயாகிய குந்தியையடைந்து "அன்னாய், யான் ஒரு பிட்சை கொண்டுவந்தேன்" என்றான். அவன் திரௌபதியைப் பிக்ஷையென்று கூறினதையறியாமல், குந்திதேவியானவள் "அதை நீங்கள் ஐவரும் அருந்துங்கள்" என்றனள். அதனால் பாண்டவரைவரும் திரௌபதிக்குக் கணவன்மாராயினர். குந்தி சொல்லிய வார்த்தை அருச்சுனன் சொன்ன வார்த்தையின் கருத்தறியாமற் சொன்னதாயிருந்தும், அதைத்தாய்ச்சொல் என்று கடக்கமாட்டாமல் உலக வழக்குக்கு விரோதமாயிருந்தும், ஒருபெண்ணுக்குப் பாண்டவர்கள் ஐந்து பேரும் புருஷர்களாயிருந்தார்களென்றால், உன் கருத்துவேறு சொல்வேறு என்று எண்ணிக்கொண்டு மிகவும் அனுசிதமானபெண் போகத்தை யிச்சித்து ஒப்பற்ற திருநீலகண்டத்தாணையைக் கடக்கலாமோ? என் உயிர் துறக்கவரினும் அதைக் கடக்கமாட்டேன்" என்றனர். இவ்வாறு கணவனார் சொன்னதைத் தேவியார்கேட்டு மீட்டும் நாயனாரைப்பார்த்து "நாயகா, பிரமாதி தேவர்களும் முற்றத்துறந்த முனிவர்களும் காமத்தையடக்க மாட்டாமல்மிகவும் துன்புற்றார்கள். லோகரட்சகராகிய திருமாலே இலக்குமியைத் தமது மார்பில் வைத்துக்கொண்டிருந்தும் சலந்தராசுரனுடைய பத்தினியாகிய பிருந்தைபால் மோகங்கொண்டு படாதபாடுபட்டனர். சிருட்டிகர்த்தாவாகிய பிரமதேவரும் சரசுவதியைத்தமது நாவிலேவைத்துக்கொண்டிருந்தும் திலோத்தமையை விரும்பித் திகைத்து நின்றார். இந்திரன், இந்திராணி முதலிய பல தேவமாதர்களிருக்கவும், கௌதமமுனிவருடைய பத்தினியாகிய அகலிகையை வஞ்சவடிவங் கொண்டணைந்து உடம்பெல்லாம் பெண்குறியடைந்தான். சூரியன் தன்தேர்ப்பாகனாகிய அருணனைப் பெண் வடிவங்கொளச் சொல்லிப் புணர்ந்தான். சந்திரன் இருபத்தேழு மனைவியரை வைத்திருந்தும் குருபத்தினியைப் புணர்ந்தான். இவர்களன்றி முனிசிரேட்டர்க



ளான வசிட்டர், மரீசி, அகத்தியர், அத்ரி, கௌதமர், காசிபர் முதலியவர்களெல்லாம் மாதர்போகத்தை விட்டிருக்கவில்லை. இவர்களுள் காசிபர் மாயையென்பாளிடம் மோகங்கொண்டு பட்டபாடு அவ்வளவிவ்வளவல்ல. காமனை நெற்றிக்கண்ணினாலெரித்து நீறாக்கிய நின்மலராகிய திருநீலகண்டப்பெருமான் ஒருவர் தவிர காமத்தைக்கடந்தவர் யாருளர்? கள்ளானது உண்டபோது மாத்திரம் உணர்வையழிக்கும். காமமோ கண்டபோதே உணர்வை யழிக்கும். நெருப்பு தொட்டால் சுடும். காமமோ விட்டால் சுடும்.

### திருக்குறள்.

தொடிற்சுடி னல்லது காமநோய்போல்
விடிற்சுட லாற்றுமோ தீ.

### கந்தபுராணம்.

உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற்
கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினாற்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே.

ஆதலால் எவர்களாலும் விட்டிருப்பதற்குக்கூடாத காமவின்பத்தை இவ்விளமைப் பருவத்திலேயே தாங்கள் துறந்திருக்கும்படி இப்பேதையேன் ஆணையிட்டமைக்கு மிகவும் அஞ்சுகின்றேன்" என்றனர். அப்போது நாயனார் "நீ இதற்காக அஞ்சவேண்டாம். தேவர்களும் மனிதர்களும் மற்றுமுள்ள உயிர்களும் அனுபவிக்கும் காமவின்பமென்பது உண்மையான இன்பமன்று. கள்ளுண்போனுக்கு உண்டாகும் அறிவுமயக்கமே அவனுக்கு இன்பமாகத் தோன்றுகிறது. அதுபோல், பெண்களிடத்துண்டாகும் அறிவுமயக்கமாகிய காமவிகாரமே இன்பமாகத் தோன்றுகிறது. ஆதலால் அறிவு கெடுவதனால் உண்டாகும் இன்பம் உண்மையான இன்பமாகாது. ஐம்புலன்களினாலே அனுபவிக்கும் இன்பமெல்லாம் அஞ்ஞானத்தால் இன்பமாகத்தோன்றி முடிவில் துன்பத்தையே கொடுக்கும். மனதை ஐம்புலன்வழிச்செலுத்தாமல் அறிவுமாத்திரமா யிருந்து அனுபவிக்கும் இன்பமே பேரின்பமாகும். ஆதலால் ஐம்புலனை வென்றவர்களே உலகத்தில் யாவராலும் வணங்கப்படும் பெரியோர்களாவர்.

### திருக்குறள்.

சுவையொளியூ றோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

ஐம்புலன்களுக்கும் எட்டாத பேரின்பரூபியாகிய சிவபெருமானுடைய திருநீலகண்டத்தியானத்தாலுண்டாகும் இன்பமே நித்தியமானதும் உண்மையானதுமான இன்பமாம்.

தேவாரம் (திருக்குறுந்தொகை.)

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே.

ஆதலால், அற்பமும் அனுசிதமுமான காமநோய் என்னை இனி வருத்துமென்று நீ அஞ்சவேண்டாம். உன் ஆணையென வெளிப்பட்ட திருநீலகண்டத்திருமந்திரப் பிரயோகத்தால் என்னைப் பலகோடி பிறவிகள்தோறும் விடாதுதொடர்ந்து துன்பஞ் செய்துகொண்டிருந்த பெண்ணாசையென்னும் மாயப்பசாசம் இன்றோடே என்னைவிட்டுத் தொலைந்தது. பிரமாதிதேவர்களைப் பிடித்து வெருட்டிக்கொண்டிருக்கும் மன்மதனுக்கு இனி என்னிடத்தில் வேலையில்லை. இனி அவன் காசு நம்பாற் செல்லாது" என்றனர். இதைக் கேட்டுத் தேவியார் ஒருவாறு மனந்தேறி, அதுமுதல் தமது கணவனார்கொண்ட விரதத்திற்குப் பழுதுவாராவண்ணம் வெகு சாக்கிரதையாய் அவரைத் தீண்டாமலே அவருக்கு வேண்டிய எல்லாப்பணிகளையுங் குறைவற முன்போலவே அன்போடு செய்துகொண்டு வந்தனர்.

நாயனாரோ கட்டழகுடைய காளைவடிவா யிருந்தனர். அம்மையாரோ பெண்களும் விரும்பும் பேரழகுடையவரா யிருந்தனர். இவர்களிருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாமலும், ஒருவரையொருவர் நேசித்தும், ஒரேவீட்டில் வசித்துக்கொண்டும், பழையபடியே இல்லறம் புரிந்துகொண்டிருந்தும், திருநீலகண்டத்தில் வைத்த அன்பின்மிகுதியால், புணர்ச்சியைக் கனவிலும் நினையாதவர்களாய், தங்கள்விரதத்தைப் பாதுகாத்துவந்தார்கள். இவர்களல்லவோ செயற்கரியசெய்த பெரியோர்கள்! இவர்களல்லவோ புலப்பகையை வென்ற வீரர்கள்! இவர்களல்லவோ இல்லறத்திலிருந்தாலும் துறவிகளாலும் வணங்கப்படும் யதீந்திரர்கள்! இவர்கள்வீரத்தையளவிட யாவராலாகும்!

சிவஞானசித்தியார்.

"நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து
நாகமுழை புக்கிருந்துந் தாகமுத லவிர்த்து



நீடுபல காலங் கணித்தரா யிருந்து
நின்மலஞா னத்தையிலார் நிகழ்ந்திடுவர் பிறப்பி
னேடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
யெறிவிழியின் படுகடைக்கே கிடந்துமிறை ஞானங்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.

இவர்கள் தங்களுக்குள் புணர்ச்சியின்மையைப் பிறர் அறியாவண்ணம் எவ்வித வேற்றுமையுமின்றி பலவருடங்களாக இல்லறம் புரிந்துவருநாளில் யௌவனம்நீங்கி விருத்தாப்பியம் வந்து, சரீரம் மிகவும் தளர்ந்துவிட்டது. சரீரம்தளர்ந்தும் சிவபிரானிடம் வைத்த அன்புமாத்திரம் அணுவளவுந் தளரவில்லை. ஆதலால் கொடிய வயோதிகத்தால் இவர்கள் மிகவும் மெலிந்திருந்தபோதும், தங்கள் சரீர பாதுகாப்பின்பொருட்டேனும் ஒருவரையொருவர் தீண்டாமலிருந்தார்கள்.. இவ்வாறு இவர்களிருவரும் ஒப்பற்ற திருநீலகண்டத்தாணையைப் பாதுகாத்துவருதலும், "மடவாரோடும் பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க்கு என்றும் பெருந்துணை" யாகிய பெரும்பற்றப்புலியூரார் இவர்களை யாட்கொள்ளத் திருவுளங்கொண்டும், நாயனார் மகிமையையும் கற்பின் இலக்கணத்தையும் மாதராசைவிட்டவர்க்கே திருவருள் கைகூடும் என்பதையும் இவர்களால் உலகினர் அறிந்து உய்யவேண்டியும், வேதங்களாலும் அரிபிரமாதி தேவர்களாலும் மனோவாக்குக் காயங்களாலும் எட்டப்படாத தமது நிட்களத்தன்மையினின்றும் நீங்கி, நாயனாரின் அன்பையே வடிவமாகக்கொண்டு, அரையில் கோவணமும் கீளும் தரித்து, சரீரமெங்கும் திருநீற்றொளி விளங்க, நெற்றியில் திரிபுண்டரந் தரித்து, மார்பினில் பூணூல் அசைய, சடைமுடியை மறைத்து, நீண்ட மயிரைவிரித்து, புன்னகையரும்ப, கையினில் பிட்சாபாத்திரமேந்தி, கண்டோர்மனங் காதலித்துருகும் சிவயோகியைப்போல் நாயனார் வீட்டைநோக்கி நடந்து சென்றனர். நாயனார் சிவயோகியொருவர் தமது வீட்டைநோக்கி வருவதைக்கண்டு விரைந்து எதிர்கொண்டணைந்து, அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, வீட்டுக்குள் அழைத்துச்சென்று ஆசனமிட்டு எழுந்தருளப்பண்ணி, விதிப்படிப் பூசித்து ஆசைதீராதவராய் பலமுறையும் நமஸ்கரித்து நின்று "சுவாமி தேவரீர் இன்று இவ்விடம் எழுந்தருள அடியேன் என்னபுண்ணியம் செய்தேன்," என் தவமே தவம். என் பாக்கியமே பாக்கியம். அடியேன் செய்யவேண்

டிய பணிகளைக் கட்டளையிட் டருளல்வேண்டும்" என்றனர். இறைவனார் தமது திருக்கரத்திலிருந்த திருவோட்டை நாயனாருக்குக் காட்டி, "அப்பா, இந்த ஓட்டை பத்திரமாய் வைத்திருந்து நான் மறுபடியும் வந்து கேட்கும்போது கொடு" என்றனர். நாயனார் சிவயோகியாரை நமஸ்கரித்து, "சுவாமி, இதுமாத்திரமா, தேவரீர் இன்னும் என்ன கட்டளையிட்டாலும் தலையால் வணங்கிச்செய்வேன். இன்னும் எத்தனையோடுகள் தரினும்தருக. அத்தனையும் காப்பாற்றித் தருவேன்" என்றுசொல்லி அதனை வாங்க இருகரங்களையும் நீட்டினார். இறைவர் அதை அவ்வளவு இலேசாகக் கொடுத்துவிட மனமில்லாதவர்போல் நடித்து, மீட்டும் நாயனாரைப்பார்த்து "நீ எனக்கு இவ்வொரு உபகாரத்தைச் செய்தாற்போதும். இவ்வொரு உபகாரத்திற்கே வானகமும் வையகமு மாற்றலரிது. ஏனெனில், இந்தவோடு இங்கே நீ அடுக்கிவைத்திருக்கும் ஓடுகளைப்போல்வதன்று. இதற்கிணையான வோடு உலகத்திலில்லை. பொன்னையும் நவரத்தினங்களையும் இழந்தாலும் அவைகளுக்குச் சமமான பொன்னும் நவரத்தினங்களும் கிடைக்கும். இதையிழந்தால் இதற்குச் சமமான வோடு கிடைக்காது. இதில்இடும். எந்தப்பண்டமும் பரிசுத்தமாய்விடும். இது போனால் வராது. ஆதலால் இதைவாங்கிப் பொன்னையும் நவரத்தினங்களையுங் காட்டிலும் அதிக சாக்கிரதையாய்ப் பாதுகாத்து, நான் மறுபடியும் வந்து கேட்கும்போது உன் முகம் கோணாமலும் என்மனம் வாடாமலும் கொடு. இதை நான் இதுவரையில் வேறொருவரையும் நம்பிக் கொடுத்து வைத்ததில்லை. நீ சிவனடியார்களுக்கு உண்மையான அன்போடு திருவோடு கொடுத்துவருவதைப் பிறராற் கேட்டு, உன் சிவவேடத்தையும் நீ இப்போது என்னிடத்தில் காட்டிய அன்பையும் நம்பி, இதை உன்னிடம் கொடுத்துவைக்கிறேன்" என்றுசொல்லி அவ்வோட்டைக் கொடுத்தனர். நாயனார் அதனை வணங்கி வாங்கி, சிரசின்மேல் வைத்துக்கொண்டுபோய், மிகவும் பாதுகாப்புள்ள இடத்தில்வைத்து, திரும்பிச் சிவயோகியாரிடம் வந்து "சுவாமி, தேவரீர்கொடுத்த திருவோட்டை மிகவும் பத்திரமாய் வைத்திருக்கிறேன். அதற்கு ஏதேனும் கெடுதிவருமென்று அணுவளவும் ஐயுறவேண்டாம். அதை என் உயிரினும் அதிகமாகப் பாதுகாத்துத் தேவரீர் மறுபடியும் வந்து கேட்கும்போது கொடுக்கக்கடவேன்" என்றனர். சிவயோகியார் "மெத்த சந்தோஷம், மெத்த சந்தோஷம்" என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்தைவிட்டுத் திரும்புதலும், நாயனார்



அவரை விட்டுப்பிரிய மாட்டாதவராய் அவர்பின் நெடுந்தூரஞ் சென்று பிரியாவிடைபெற்றுத் திரும்பினர். சிவயோகியாயெழுந்தருளிய இறைவனார் திருவம்பலமடைந்தருளினார்.

(இன்னும் வரும்.)

---

## பதி பசு பாசம்.

### கன்மமலம்

உலகத்தில் அளவற்ற உயிர்களைக் காண்கிறோம். இவைகள், ஒன்றைப்போல் மற்றொன்றிராமல், ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாயிருக்கின்றன. இவைகள் எண்பத்துநான்கு லட்சயோனிபேதங்களாய் இருப்பதாக ஒருவாறு அளவிட்டுக்கூறப்படுகின்றன. இவைகள் பல ஓரறிவுடையன. பல ஈரறிவுடையன. பல மூவறிவுடையன. பல நாலறிவுடையன. பல ஐயறிவுடையன. பல ஆறறிவுடையன. ஆண் பல. பெண் பல. அலிசில. பல சிலகாலமே சீவிக்கின்றன. பல நெடுங்காலம் சீவிக்கின்றன. பல பிறந்தபோதே யிறக்கினறன. பல இளமையிலிறக்கின்றன. பல யௌவனத்திலிறக்கின்றன. பலமூப்பிலிறக்கின்றன. பல துன்பத்தை யதிகமாகவும் இன்பத்தைக் கொஞ்சமாகவும் அனுபவிக்கின்றன. சில இன்பத்தை யதிகமாகவும் துன்பத்தைக் கொஞ்சமாகவும் அனுபவிக்கின்றன. இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றன. உயிர்கள் எல்லாவற்றையும் படைக்கும் கடவுள் ஒருவரேயாயிருக்க அவர் ஏன் இவைகளை இத்தனைவிதங்களாகப்படைத்தல்வேண்டும்? அவ்வாறு படைப்பது அவர் விருப்பம் எனில், அவர் விருப்பு வெறுப்பும் பட்சபாதமுமுடையவரென்று சொல்லவரும். விருப்புவெறுப்பில்லாமையும், பேரருளுடைமையும் கடவுளின் இயற்கைக்குணங்களாதலினால், அவர் அவ்வாறு படைத்தற்கு அவர் விருப்பம் காரணமன்று. அதற்கு வேறு காரணமிருத்தல் வேண்டும். அதுவே கன்மம் என்று சொல்லப்படும். ஆன்மாக்கள் தாம்எடுக்கும் சரீரங்கள்தோறும்செய்யும் நல்வினை தீவினைகளாகும் கன்மங்களுக்கீடாகச் சிவபெருமான் அவைகளுக்குத் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்தருளுகின்றார் என்று நிச்சயிக்கப்படும். ஆனால், சரீரம்உண்டான பிறகு கன்மம் உண்டாயிற்றா, அல்லது கன்மம் உண்டான பிறகு சரீரமுண்டாயிற்றா என்னும் கேள்வி நிகழும். என்று நெல் உண்டோ அன்றே அதனோடுமுளையும் தவிடும் உமியும் உண்டு. என்று செம்பு உண்டோ அன்றே அதனோடுகளிம்

பும் உண்டு. என்று மரம் உண்டோ அன்றே வித்தும் உண்டு. வித்தின்றி மரமும் மரமின்றி வித்தும் உண்டாகாது. இவைபோல் என்று ஆன்மா உண்டோ அன்றே அதனோடு ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களும் உண்டு. ஆதலால் கன்மமின்றிச் சரீரமில்லை. சரீரமின்றிக்கன்மமில்லை. ஆதலால் சரீரம் முந்திஉண்டாயிற்றோ கன்மம் முந்தி உண்டாயிற்றோ என்னுஞ் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இரண்டும் என்றும் உள்ளன என்று நிச்சயிக்கப்படும்.

### பதி பசு பாச விளக்கம்.

ஊழ்வினை யாலு டம்பு முடம்பினா லூழு மாகித்
தாழ்வினை யிரண்டாய் மூன்றாய்ச் சதுர்வித மாகி யோங்கி
வாழ்வொடு வறுமை யாகி மன்னுயிர் தொறும் வதிந்து
காழ்மரம் விதையும் போலாங் கன்மநீ கண்டு கொள்ளே.

கன்மமலமானது மனம்வாக்குக் காயங்களாற் செய்யப்படுவதனால் கன்மம் என்றும், பண்ணின கன்மம் நசித்துப் பலமுண்டாகுமட்டும் புவனத்திலும் புத்தியிலும் தங்கிக்கண்ணுக்குக் காணப்படாதிருக்கையால் அதிட்டம் என்றும், தேகாதிகளைப் பலவகையாயுண்டாக்குவதனால் சனகம் என்றும், எல்லாவற்றையும் தரிக்கையால் தாரகம் என்றும், புசிக்கப்படுவதனால் போக்கியம் என்றும் சொல்லப்படும்.

### சிவப்பிரகாசம்.

நண்ணியிடு முருவதனுக் கேது வாகி
நானாபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரு மாதலா லனாதி யாகிப்
பலவாகி யணுக்கடொறும் படர்வ தாகி
யெண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்று
மியல்பினதாய் மதிகதமா யிருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர் காலை மாயைமேவிப்
பொருந்துமித கன்மமலம் புகலு மாறே.

இதன் பொருள்—கன்மமலமானது உயிர்கள் எடுக்குஞ்சரீரங்களுக்குக்காரணமாய், பலவிதமான புசிப்புகளாய், உயிர்தோறும் அனாதியாகவே தொடர்ந்து கலந்து, வடிவு, நிறம், சாதி, ஒழுக்கம், நெறி, உணவு, சுகம், துக்கம், ஆயுள்முதலியவற்றால் பலவகையாக விரிந்து, சனனமரணங்களை யுண்டாக்குவதாய், மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களாற் செய்யப்படுவதாய், உயிர்களின் புத்தியைச்செலுத்துவதாய், இன்ப துன்பங்களுக்கேதுவாகிய புண்ணிய பாவங்களாய், சர்வசங்கார காலத்திலே (உயிர்களோடு) மாயையிலே பொடுங்கியிருக்கும். (எ - று.)



### சிவப்பிரகாசம்.

கன்மநெறி திரிவிதநற் சாதியா யுட்போகக்
கடனதென வருமூன்று முயிரொன்றிற் கலத்த
றொன்மையதூ ழல்லதுணை வாகா தானுந்
தொடங்கடைவி னடையாதே தோன்று மாறித்
தன்மைதரு தெய்விகமுற் பவுதிகமான் மிகமாந்
தகையிலுறு மசேதனசே தனத்தாலுஞ் சாரு
நன்மையொடு தீமைதரு சேதனனுக் கிவனா
னாடிலத னூழ்வினையா நணுகுந் தானே.

இதன்பொருள்—கன்மமானது சாதி, ஆயுள், போகம் என மூன்று விதமாயிருக்கும். இவை (யெப்பொழுதுண்டாயின வெனில்) ஆன்மாவுள்ளவன்றே அனாதியாயதனோடு விரவியிருப்பனவாம். (சாதியும் ஆயுளும் முன்னையுள்ள ஊழின்படி யுண்டாகலாமாயினும், இப்போது அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் இப்போது செய்யும் முயற்சியால் உண்டாகாவோ வென்னில்) இப்போது செய்யும் முயற்சிகளுக்கும் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கும் முன்னுள்ள கன்மமே காரணமெனப்படும். கன்மமும் முன்செய்த கிரமத்தில் சென்று பொருந்தினாலும் பொருந்தும், அல்லது, கன்மத்தின் வன்மைமென்மைகளுக் கேற்றவாறு முன்பின்னாக மாறிச் சென்று அடைந்தாலும் அடையும். கன்மம் தெய்விகமாகவும் பௌதிகமாவும் ஆன்மிகமாகவும் ஆன்மாக்களையடைந்து அறிவுள்ளவற்றாலும் அறிவில்லனவற்றாலும் பலனை விளைவிக்கும். இவ்வாறு நன்மைதீமைகளைப் பொருந்திவருகிற ஆன்மாவுக்கு இவ்விடத்தில் புசிப்பு எப்படி யுண்டாயிற்றென வாராயில் முன் ஜனனத்தில் கன்மத்தைப்புசிக்கையில் ஏறின ஆகாமியமே இந்த ஜனனத்தில் புசிப்பாக வந்து பொருந்தும் (எ - று.)

சிவபெருமான் இச்சா ஞானக் கிரியா சொரூபராயிருந்து ஆன்மாக்கள் கன்மங்களைப் புசிக்கச் செய்வர். ஆன்மாக்களும் அவ்வாறே யிருந்து கன்மங்களைப் புசிக்கும். எப்படியெனில், ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்கவேண்டுமென்னும் கருணையே கடவுளின் இச்சையாகும். ஆன்மாக்கள் செய்த கன்மங்களை யறிதலே ஞானமாகும். அவைகளுக்குக் கன்மங்களைப் புசிப்பித்தலே கிரியையாம் என்க. ஆன்மாக்கள் பதார்த்தங்களில் பற்று வைத்தலே இச்சையும், அவைகளைப் பகுத்தாராய்வதே ஞானமும், அவைகளில் அழுந்தியிருத்தலே கிரியையுமாம்.

கன்மம் பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம் என மூன்று வகைப்படும். முற்சனனங்களிற் செய்த கன்மம் பிராரத்துவம் என

வும், பிராரத்துவத்தை யனுபவிக்கும் சனனங்களிற் செய்யுங்கன்மம் ஆகாமியம் எனவும், புசித்தவை போக இனிவரும் சனனங்களில் புசிக்க எஞ்சிநின்றவை சஞ்சிதம் எனவுஞ் சொல்லப்படும்.

கன்மம் ஆன்மாக்களுக்குப் புசிப்பாக வரும்போது, ஆதி தெய்வீகம், ஆதிபௌதீகம், ஆதியாத்மீகம் என்னும் தாபத்திரயங்களால் வருமென்று மேலே சொல்லப்பட்டது. இவற்றுள் தெய்வத்தால் வருவன ஆதிதெய்வீகமெனவும், பஞ்சபூதங்களால் உண்டாவன ஆதிபௌதீகம் எனவும், ஆன்மாக்களால் வருவன ஆதியாத்மீகமெனவும் சொல்லப்படும்.

கன்மம், காயிகமெனவும், வாசிகமெனவும், மானசமெனவும், மூன்றுவகைப்படும். காயிகமாவது சரீரத்தாற் செய்யப்படுவது. வாசிகமாவது வாக்காற் செய்யப்படுவது. மானசமாவது மனசாற் செய்யப்படுவது. கன்மம் புத்திபூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் உண்டாகும்.

கன்மமானது புசித்தாலன்றித் தொலையாது. ஆனால் ஞானாசிரியருடைய திருநோக்கால் சஞ்சித கன்மம் இல்லாமற் போய்விடும். ஆகாமியம் நின்மல ஞானத்தால் மேலைக்கு வாராமல் நீங்கிப்போய் விடும். பிராரத்துவம் எடுத்த சரீரத்திற் புசித்துத் தொலையும். அல்லாமலும், சிவ ஞானிகளைப் பூஜிப்பவர் அவர்கள் நல்வினைகளையும் அவர்களை நிந்திப்பவர்கள் அவர்கள் செய்த தீவினைகளையும் பங்கிட்டுக்கொள்வர்.

எல்லாம் சிவன்செயலாயிருக்க உயிர்களுக்கு எவ்வாறு கன்மம் வந்ததெனின்; எல்லாம் சிவன்செயலேயாயினும் ஆன்மாக்கள் அதனை மறந்து நாம் செய்தோம் பிறர் செய்தார் என்று விருப்பு வெறுப்பு கொண்டு மேலும் மேலும் வினைகளை யீட்டலால் ஓயாமல் கன்மமும் பிறப்பிறப்புகளும் உண்டாகின்றன. நமக்கொரு செயலுமில்லை, எல்லாஞ் சிவன்செயல் என்று உணரப்பெற்றால் விருப்பு வெறுப்பு நீங்கி விடும். இருவினையொப்புண்டாகும்; பிறப்பிறப்புகள் ஒழிந்துபோம்.

**பதி பசு பாச விளக்கம்.**

*சஞ்சிதந் திருநோக் காற்போம் பிராரத்தந் தனுவோ டேகும்*
*விஞ்சுமா காமியந்தான் விளங்குஞா னத்தி னாற்போம்*
*செஞ்சயான் செய்த தெல்லாஞ் சிவன்செய்த தென்றுணர்ந்தால்*
*மஞ்சனே வினைத்தி றங்கள் வந்தனைச் சந்தி யாவே.*

**ஸ்ரீ தாயுமானசுவாமிகள் பாடல்.**

*சிவன்செய லாலே யாதும் வருமெனத் தேறே னாஞ்*
*மவந்தரு நினைவை யெல்லா மகற்றிலே னாசை வெள்ளங்*



*கவர்ந்துகொண் டிழுப்ப வந்தக் கட்டிலே யகப்பட் டையோ*
*பவந்தனை யீட்டி யீட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே.*

**திருவுந்தியார்.**

*நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்னாதன்*
*றன்செய லாமேயென் றுந்தீபற*
*தன்னையே தந்தானென் றுந்தீபற.*

**பண்டார மும்மணிக்கோவை.**

*என்செய லாவொன்றும் யான்செய்த தில்லை யெனக்கவமே*
*புன்செய லாம்வினைப் போகமுண் டாவதென் போதமில்லேன்*
*றன்செய லாயவெல் லாமாசி லாமணிச் சம்பந்தநின்*
*னன்செய லாயினு மென்செய லாச்செய்யு நானென்பதே.*

**தேவாரம்.**

*அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்*
*உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே*
*கைவினை செய்தெம்பி ரான்கழல் போற்றுது நாமடியோஞ்*
*செய்வினை வந்தெமை தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.*

---

## ஊழ்

ஊழ் என்பது நல்வினைப்பயனாகிய இன்பமும், தீவினைப்பயனாகிய துன்பமும், அவ்வினைகளைச் செய்த உயிர்களைச் சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதியாம். ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி, கன்மம் என்பன ஒருபொருட் சொற்கள்.

ஊழ் என்பது அறத்தினுள்ளேனும் பொருளின்பங்களுள்ளேனும் அடங்காமையாலும், அறத்திற்கும் பொருளின்பங்களுக்குங் காரணமாயிருத்தலினாலும், இதனைத் திருவள்ளுவநாயனார் அறப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பாலுக்கும் வகுத்த அதிகாரங்களுக்குள் ஓர் அதிகாரமாக வகுத்துக்கூறாமல், அறப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் இடையில் வைத்துக்கூறினார்.

**திருக்குறள்.**

*ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்*
*போகூழாற் றோன்று மடி.*

(இ - ள்.) ஒருவனுக்குக் கைப்பொருள் உண்டாதற்குக்காரணமாகிய நல்ல ஊழ்வினையால் முயற்சியும் அதுபோதற்குக் காரணமாகிய தீய ஊழ்வினையால் சோம்பலும் உண்டாகும் (எ - று.)

இதனால், முயற்சியால் யாவும் கைகூடும் என்பாரை மறுத்து அம்முயற்சியும் ஊழினால் உண்டாகும் என்று கூறப்பட்டது.

முயற்சியால் யாவும் உண்டாவதும், முயற்சி ஊழினால் உண்டாவதுமானாலும், ஊழ் வந்துபொருந்திய போதன்றி வேறொருகாலத்தில் முயற்சியும் பயன்தராது. ஊழ்வந்து பொருந்திய காலத்தும் ஊழினால் வரையறுத்த அளவல்லது முயற்சியளவாகப் பலனுண்டாகாது.

வாக்குண்டாம்.

அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

நல்வழி.

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்.

பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை.

(இ - ள்.) ஒருவனுக்கு எல்லா அறிவும் உண்டாயிருந்தாலும், கைப்பொருளை இழத்தற்குக் காரணமாகிய தீயஊழ் பொருந்திய விடத்து, அது அவ்வறிவை அறியாமையாக்கிவிடும். அவன் அறிவு குறைந்திருப்பினும் கைப்பொருள் உண்டாதற்குக் காரணமாகிய நல்ல ஊழ் பொருந்தியவிடத்து அது அவ்வறிவை விசாலப்படுத்தும் (எ - று.)

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

(இ - ள்.) தீய ஊழுடையானொருவன் நுட்பமான பொருள்களையுடைய பல நூல்களையுங் கற்றானாயினும், அவனுக்கு, அவன் கல்வியாலாகிய அறிவு பயன்படாமல் கீழ்ப்பட்டு, ஊழினாலாகிய அறிவே மேற்படும் (எ - று.)

கல்வியானது "மடங்கொன்றறி வகற்றும்". என்றவாறு அறியாமையை நீக்கி அறிவை விசாலப்படுத்துவதாயிருப்பினும், தீய ஊழ்வந்து பொருந்தும்போது கல்வியறிவும் பயன்படாமற்போம்.

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

(இ - ள்.) உலகத்தில் ஊழினாலாகிய இயற்கை இரண்டு கூறாயிருக்கின்றது. ஆதலால், செல்வமுடையராதலும் வேறு; அறிவுடையராதலும் வேறு (எ - று.)



செல்வத்தைப்படைத்தலும், காப்பாற்றலும், பயன்கொள்ளுதலும் அறிவுடையார்க்கே கூடுமானாலும், உலகத்தில் அறிவுடையார் தரித்திரராகவும், மற்றவர்கள் செல்வராகவும் இருக்கிறார்கள். ஆதலால் ஒருவன் செல்வனாயிருத்தற்கு அவன் அறிவு காரணமன்று; அவன் ஊழே காரணமாகும் என்று நிச்சயிக்கப்படும்.

நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(இ - ள்.) செல்வத்தையழிக்கும் ஊழ் வந்த காலத்தில் அச்செல்வம் உண்டாதற்குரிய காலம் இடம் கருவி தொழில் முதலியனவெல்லாம் நல்லவையாயிருப்பினும் தீயவையாய் விடும். செல்வத்தை உண்டாக்கும் ஊழ்வந்த காலத்தில் அவை யெல்லாம் தீயனவாயிருந்தாலும் நல்லவையாய் விடும்.

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

(இ - ள்.) ஊழினால் தம்முடையவை யாகாதபொருள்கள் வருந்திக் காப்பாற்றினாலும் தம்மிடத்தில் நில்லாமல் நீங்கிவிடும். தம்முடையவாகிய பொருள்கள் புறத்தே கொண்டுபோய் எறிந்துவிட்டாலும் தம்மைவிட்டுப் போகா (எ - று.)

இதனால், பொருள்கள் நிலைத்தலும் நீங்குதலும் ஊழாலாவதல்லது அவற்றைக்காப்பாற்றுதலாலும் இகழ்தலாலும் ஆவதன்று என்பது பெறப்பட்டது.

வகுத்தான் வகுத்தவகை யல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

அனுபவிக்கப்படும் பொருள்களைக் கோடிகோடியாக வருந்திச் சேகரித்தவர்களுக்கும், சிவபெருமானால் அவரவர்கள் செய்த கன்மத்தின்படி வரையறுக்கப்பட்ட வகையாலல்லது அனுபவித்தல் உண்டாகாது (எ - று.)

பொருளைச் சேகரித்தற்கு மாத்திரம் அன்றி, சேகரித்தபொருளை யனுபவித்தற்கும் ஊழ்வேண்டும்.

வாக்குண்டாம்

ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலின்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

வறுமையினாலே அனுபவித்தல் இல்லாதவர், ஊழ் அடையும் பகுதியையுடைய துன்பங்களை அடைவிக்காமல் நீங்குமாயின், இல்வாழ்க்கையைத் துறக்குங் கருத்துடையராவர் (எ - று.)

வறுமையுடையோர், தம்மால் விடப்படும் பற்றுகளியாவும் தாமே விடப்பெற்றிருந்தும், ஊழின்வலியால் துறக்கமாட்டாமல், உலக வாழ்க்கையிலேயே உழன்று துன்பங்களை யனுபவிப்பர்.

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்.

(இ - ள்.) நல்வினை இன்பங்களைக் கொடுக்கும்போது, அவ்வின்பங்களை நீக்கும்விதம் தேடாமல், இவை நல்லவையென்றிசைந்து அனுபவிப்பவர் தீவினை துன்பங்களைக் கொடுக்கும்போது அத்துன்பங்களையும் அப்படி இசைந்து அனுபவியாமல் நீக்கும்விதம் தேடித் துன்பப்படுவது என்ன நினைத்து ? (எ - று.)

நல்வினை தீவினையிரண்டையும் தாமே முன்செய்துகொண்டமையாலும், அவை பயனைக் கொடாமல் கழியாமையாலும், அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களிரண்டும் இசைந்து அனுபவித்தற்கு உரியனவாம். ஆதலால் அவைகளிலே ஒன்றினுக்குமட்டும் இசைந்து அனுபவித்து மற்றதற்கு வருந்துதல் அறிவு அன்று என்பதாம்.

நல்வழி.

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமி னென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

கந்தபுராணம்.

திருவுறு கின்றுழி மகிழ்ந்துந் தீர்வுழி
பருவர லெய்தியும் பாசந் தன்னிடை
யரிதுணர் கேள்விய ராழுங்குவார் கொலோ
வருவது வருமது மறுக்க லாகுமோ.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

ஊழானது தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்கு மாறாகிய ஒரு உபாயத்தை யாராய்ந்தாலும் அது அவ்வுபாயத்தையேயாயினும் வேறொன்றையாயினும் வழியாகக் கொண்டுவந்து அவ்வாராய்ச்சிக்கு முற்பட்டு நிற்கும். அதனால் ஊழைப்போல் மிகுந்த வலியுடையவை யெவை யிருக்கின்றன ? எவையுமில்லை (எ - று).

—••••••—

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1? SEP 1915
MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 1.] | இராக்ஷஸஞு புரட்டாசிமீ 1915ஞு செப்டம்பர்மீ | [இதழ் 9.

### தேவாரம் - திருக்குறுந்தொகை.

மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந்தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே.

## திருநீலகண்ட நாயனார் புராணம்.

(145 - வது பக்கத்தொடர்ச்சி)

பிறகு நெடுநாள் கழிந்தபின்பு, சகல லோகங்களையுங் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் சிவபெருமானார், தாம் நாயனாரிடம் கொடுத்து வைத்த வோடு மறைந்துபோம்படிச் செய்து, முன்போலவே சிவயோகி வடிவங்கொண்டு, நாயனார் வீட்டுக்கெழுந்தருளினார். பூசுநீறுபோல் உள்ளும் புனிதராகிய நாயனார், முன்போலவே அவரைப் பேரன்போடு வணங்கி "சுவாமி, தேவரீர் இவ்வேழையேன் மீது கருணைகூர்ந்து மறுபடியும் இவ்விடம் எழுந்தருளப்பெற்ற என் தவமேதவம். உள்ளே யெழுந்தருளி அடியேன் செய்யும் பூசையை யேற்றருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். இறைவனார் "எனக்கு இப்போது நிற்க நேரமில்லை; என் உயிர் போலும் அருமையாகிய ஓட்டை நீ இதுவரையில் காப்பாற்றி இப்போது என்னிடங்கொடுப்பதே நீ யெனக்குச்செய்யும் சிறந்த பூசை; அவ்வோட்டைச் சீக்கிரங்கொண்டு வந்து கொடு" என்றனர்.

நாயனார் "சுவாமி, இதோ கொண்டுவந்து விட்டேன்" என்று விரைந்து உள்ளே போய் பார்க்க, ஓடு வைத்த விடத்தில் இல்லாமற் போகவே, அவர் மனம் திடுக்கிட்டுத் தமது மனைவியாரைக் கூப்பிட்

டுக்கேட்டனர். மனைவியாரும் தேடிப்பார்த்து மனங்கலங்கினார். இருவருமாகச்சேர்ந்து அங்கே வந்தவர்கள் போனவர்கள் எல்லாரையுங் கேட்டார்கள். யாருக்கும் ஒன்றுந் தெரியவில்லை. இவர்களிருவரும் பலமுறையும் பலவிடங்களிலும் தேடித்தேடிக் காணாமல் அலுத்து, திகிலடைந்து நிற்கும்போது, இறைவனார் "இதோ கொண்டு வந்துவிட்டேன் என்று சொல்லிப்போய், இவ்வளவு நேரமாக உள்ளேயிருந்துகொண்டு என்னசெய்கிறாய்? உன்னுடைய செய்கை சந்தேகத்திற்கிடமாயிருக்கிறது; சீக்கிரம் வா" என்றனர். அதைக்கேட்டு நாயனார் பயந்து ஓடி வந்து, சிவயோகியார் திருவடிகளில் அடியற்ற பனைபோல் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து நின்று "சுவாமி, தேவரீர் கொடுத்த வோட்டை அடியேன் என் உயிர்போல் மதித்து மிகவும் பாதுகாப்புள்ள விடத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தேன். அது, என்னமாயமோ தெரியவில்லை, இப்போது காணப்படவில்லை. வீடெங்கும் தேடிப்பார்த்து விட்டேன். எல்லாரையும் கேட்டும் ஆயிற்று. அது காணாமற்போனது மிகவும் அதிசயமாயிருக்கிறது. அதைத் தேடிக்கொண்டிருந்தமையால் இவ்வளவு தாமதமாயிற்று. அதற்குப் பதிலாக அதனினும் நல்ல புதியவோடு தருவேன்; அதைப் பெற்றுக்கொண்டு அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும்" என்றனர். சிவயோகியார் நாயனாரைக் கோபித்துப் பார்த்து, "நீ என்ன பேச்சு பேசுகிறாய், உன் பேச்சை நான் நம்பவே மாட்டேன். நீ பொன்னோடு கொடுத்தாலும் எனக்குவேண்டாம். என் மண்ணோடே எனக்கு வேண்டும். சிவனடியார்களுக்கு ஓடு கொடுப்பது உனக்கு ஒரு வாணிபம்போலும். இந்த வியாபாரம் என்னிடத்தில் பண்ணவேண்டாம்" என்றனர். நாயனார் "எம்பெருமானே, நான் பொய் சொல்லவில்லை. குணமென்னுங் குன்றேறி நிற்கும் பெரியோராகிய தாங்கள் வஞ்சகமற்ற அடியேன் மீது இவ்வாறு கோபித்துக் கூறும் சொற்கள் என் உயிரை வதைக்கின்றன" என்றார். இறைவர், "நீ இப்படி யெல்லாம் பாசாங்கு பண்ணினால் உன்னைச் சும்மா விட்டுப்போய் விடுவேன் என்றெண்ணாதே. உன்னைத் தப்பவொட்டாமல் யாவருங்காண மடக்கி என் ஒரு ஓட்டுக்குப் பதிலாக உன் உடல் பொருளாவி மூன்றையுங் கைக்கொள்வேன். மறுத்துப்பேசாமல் என் ஓட்டைக்கொண்டு வந்து கொடுத்து விடு" என்றார். தில்லை மன்றாடுங் கூத்தனார் இவ்வாறு நாயனாரிடம் வந்து மன்றாடுதலும், நாயனார் "அடியேன் உடல் பொருளாவியாவும் தேவரீருடைய உடைமைகளே. தேவரீர் என்னை நம்பாவிட்டால் என்னை



நம்புமாறு யாது செய்யச்சொன்னாலும் செய்வேன். நெருப்பைக் கையிலேந்தச்சொன்னாலும் ஏந்துவேன்" என்றார். இறைவர் "நீ மிகவும் கெட்டிக்காரன்; தந்திரசாலி; நெருப்பைக் கையில் மாத்திரமா எடுப்பாய்; விழுங்கியும் ஏப்பமிடுவாய். அந்த வித்தையை நீ எனக்குக் காட்டவேண்டாம். உன் ஆசைமகனைக் கைப்பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி என் ஓட்டை நீ அபகரிக்கவில்லையென்று சொல்லிச் சத்தியம் பண்ணிக்கொடு; உன்னை விட்டுவிடுகிறேன்" என்றார். நாயனார் "அவ்வாறு செய்ய எனக்குப் பிள்ளையில்லையே" என்றார். இறைவர் "தக்கார் தகவிலரென்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும். நீ பிள்ளையில்லாதவனென்று எனக்கு முன்னமே தெரியாமற் போய் விட்டது. உன் காதல் மனைவியைக் கைப்பிடித்தாவது குளத்தில் மூழ்கிச் சத்தியம் பண்ணித்தா" என்றனர். நாயனார், ஐயனே, எங்களுக்குள் ஒரு சபதம் உண்டு. அதனால் நான் அவ்வாறு செய்யவும் இயலாது" என்றார். இறைவர், பின்னும் கோபங்கொண்டவர்போல் நடித்து, "என்னோட்டைக் கொடாமலிருப்பதோடு, எதற்கும் ஒத்து வாராமல் மறுத்து மறுத்துப் பேசிக் கொண்டிருக்கிறாய். இனி நான் உன்னைச் சும்மாவிட்டுப் போவதில்லை. தில்லைவாழந்தணர்கள் கூடியிருக்கும் பெரிய சபையில் இவ்விஷயத்தைக் குறித்துப் பேசப்போகிறேன்" என்று சொல்லி அந்தச் சபையை நோக்கி நடந்தார். பரங்கருணைத் தடங்கடலாகிய இறைவனார் முன்னே செல்ல, அக்கடலை நோக்கி அன்பெனும் ஆறு கரையது புரண்டு சென்றதென, நாயனார் அவர்பின் சென்றனர். சிவயோகியார் சபையையடைந்து பிராமணர்களைப் பார்த்து "நடுவுநிலைமை நீங்காது, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்களே, நான் கிடைத்தற்கரிய ஓடு ஒன்று வைத்திருந்தேன். அதை இந்தக் குயவனுடைய சிவவேடத்தை நம்பியும், இவன் செய்த உபசாரங்களால் மயங்கியும், இவனிடத்தில் கொடுத்துவைத்தேன். அதை இப்போது கொடுக்கச்சொன்னால் இழந்துவிட்டேனென்கிறான். இழந்து விட்டதாகச்சொல்லி மனைவியின் கையைப்பிடித்துக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் பண்ணச்சொல்லிக் கேட்டேன். அதையும் செய்யமாட்டேனென்கிறான்" என்றனர். பிராமணர்கள் நாயனாரைநோக்கி "ஐயா, நீர் இதற்கென்ன சொல்லுகிறீர்" என்றார்கள். நாயனார், "சுவாமிகாள், இவர் என்னிடம் ஓடு கொடுத்து வைத்தது உண்மையே; அதை நான் பத்திரமாய் வைத்துப் பாதுகாத்துவந்தும் அது எப்படியோ மாயமாய்ப்போய்விட்டது. அதை நான் அபகரிக்கவேயில்லை"

என்றார். பிராமணர்கள் "இவர் தந்த வோட்டைநீர் இழந்தீராயில், இவர் இஷ்டப்படியே உம்முடைய மனைவியைக் கைப்பிடித்துக் குளத்திலே மூழ்கிச் சத்தியஞ்செய்து கொடுத்தலே நீதி" என்றார்கள். நாயனார் அதைக்கேட்டு, தாம் தமது மனைவியாரைத் தீண்டமாட்டாமையைக் குறித்துச் சொல்ல மாட்டாதவராய் "கூடுமானபடி குளத்திலே மூழ்கிச் சத்தியம் பண்ணித்தருகிறேன், வருக" என்று சொல்லி, தம்முடைய வீட்டுக்குப்போய் மனைவியாரை யழைத்துக் கொண்டு திருப்புலீச்சுரத்திற்கு முன்னுள்ள * திருக்குளத்தையடைந்து, ஒரு மூங்கிற்கோலை ஒருமுனையைத் தமது பத்தினியார் பிடிக்க மற்றொரு முனையைத் தாம் பிடித்துக்கொண்டு நீரிலிறங்கினார். அதைக்கண்ட சிவயோகியார், "நில், நில், உன் கபட நாடகத்தை யிங்கே காட்டாதே, இதற்கு நான் இசையேன். கோலை யெறிந்துவிட்டு உன் மனைவியின் கையைப்பிடித்துக்கொண்டு மூழ்கு" என்றார். திருநீலகண்ட நாயனார் அப்படிச் செய்யக்கூடாமையை உலகத்தார் அறியும்படி, முன்னாளிலே தாம் செய்த வேசிகமனமும், அதனாலுண்டாகிய சபதமும், அதனால் தாம் தமது மனைவி கையைப்பிடித்து மூழ்கமாட்டாமையும் சொல்லி நீரில் பத்தினியாருடன் மூழ்கினார். அவ்வாறு மூழ்கிக் கரையிலேறும்போது நாயனாரும் அவர் பத்தினியாரும் மூப்புப்பருவம் நீங்கி இளமைப்பருவம் உடையவர்களாய் காணப்பட்டார்கள். சிவயோகியார் மறைந்துவிட்டனர். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அங்கிருந்தாரியாவரும் அவ்வற்புதங்களைக் கண்டு அதிசயித்தார்கள். சிவபெருமான் உமாதேவியாரோடு இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினார். நாயனாரும் பத்தினியாரும் அம்மையப்பரைத் தரிசித்துக் கண்களில் ஆனந்த அருவி நீர்சொரிய பூமியில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து தோத்திரஞ் செய்தார்கள். சிவபெருமானார் அவர்களை நோக்கி, "ஐம்புலன்களை வென்ற மேலோர்களே, என்றும் இவ்விளமை நீங்காது நம்மிடத்திலிருங்கள்" என்று சொல்லி மறைந்தருளினார். அவ்விருவரும் அவ்வாறே சிவலோகத்தையடைந்து பேரின்பத்தை யனுபவித்து வாழ்ந்திருக்கப்பெற்றார்கள். இப்பெரியோர்கள் திவ்வியசரித்திரத்தை வாசித்து நாமும் இன்புறப்பெற்றோம்.

"வாளான் மகவரிந் தூட்டவல்லே னல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல ஞனினிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே."

---

*நாயனார் மூழ்கிய காரணத்தினால் இத்திருக்குளம் இளமை நாயனார் குளம் என இப்போதும் வழங்கப்படுகின்றது.

# ஒழுக்கம்.

## திருநேரிசை.

உடம்பெனு மனைய கத்து ளுள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கின்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.

மனிதர்கள் கடவுளையடைவதற்குப் பலவழிகள் உண்டாயிருக்கின்றன. இவ்வழிகளை ஒழுக்கங்களெனவும், மதங்களெனவும், சமயங்களெனவும், நெறிகளெனவும் சொல்லப்படும். ஒழுக்கம் பொதுவொழுக்கம் சிறப்பொழுக்கம் என இருவகைப்படும். இவற்றுள் பொதுவொழுக்கமாவது எல்லாச் சமயத்தாராலும் அநுட்டிக்கப்படும் அறநெறியாம். சிறப்பொழுக்கமாவது ஒவ்வொரு சமயத்தாரும் அவ்வச்சமய நூல்களிற் கூறியவாறு செய்யும் கடவுள் வழிபாடாம். வாய்மை, பொறை, அருள், அன்பு, ஐம்புலனடக்கல், அவாவறுத்தல், கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல், பிறர்பொருள் தாரம் என்பனவற்றை இச்சியாமை முதலியன பொதுவொழுக்கங்களாம். பஸ்மருத்திராக்கதாரணம், ஸ்ரீ பஞ்சாக்கர ஜெபம், சிவலிங்கார்ச்சனை, சிவனடியார் வழிபாடு, சிவாலயத்தொண்டு முதலியன சைவசமயிகளுக்குரிய சிறப்பொழுக்கங்களாம். கடவுளையடைவதற்கு இவ்விரண்டு ஒழுக்கங்களும் இன்றியமையாதனவாம். பொதுவொழுக்கமின்றி வெறுஞ்சிறப்பொழுக்கத்தாலேனும், சிறப்பொழுக்கமின்றி வெறும் பொதுவொழுக்கத்தாலேனும், கடவுளின் அருளைப்பெறலாகாது. இவையிரண்டும் ஒன்றுக்கொன்று காரணகாரியங்களா யிருக்கின்றன. பொதுவொழுக்கமுடையார்க்கே சிறப்பொழுக்கம் பயன் தரும். சிறப்பொழுக்கமுடையார்க்கே பொதுவொழுக்கமு முண்டாகும். இதனையறியாதார் சிலர் பொதுவொழுக்கமொன்றே யமையும், சிறப்பொழுக்கம் அநாவசியமாம் என்பர். நாம் நம்முடைய அறிவு ஆற்றல்களைக்கொண்டே, நம்மை யநாதியாகவே தொடர்ந்து மயக்கஞ்செய்யும் மாயையைக் கடக்க வல்லவர்களாயில்லை. பேரறிவும் பேராற்றலும் உள்ள பரமகருணாநிதியாகிய கடவுளின் அருளைக்கொண்டே அதனை வெல்லவேண்டும். அவனருளும் அவர் வழிபாடாகிய சிறப்பொழுக்கத்தாலன்றி யுண்டாகாது. அவனருள் உண்டாகாதபோது மாயை நம்மைவிட்டு நீங்காது; மாயை நீங்காதபோது தீயகுணங்கள் *நம்மைவிட்டகலா; உத்தமகுணங்கள் நம்மை வந்த

டையா. இது பற்றியே தமிழ் வேதம் "திருநாகேச்சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கட்சேராதாரே" எனவும், "திருவீழிமிழலை யானைச் சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே" எனவும் "வெண்ணீ றணிகிலாதவரைக் கண்டாலம்மநா மஞ்சுமாறே" எனவும் அருளிச்செய்தது.

**வள்ளலார் சாத்திரம்.**

விந்து மோகினி மானென விரிந்த
தத்துவக் காட்டிற் றனித்திடு முயிரை
ஆணவ வேங்கை யொருபா லடர்ப்ப
மாயைக் குடாவடி யொருபான் மயக்க
காமியக் கடமா வொருபாற் கறுவ
இருவினை மலைப்பாம் பொருபா லிழுக்க
ஆசையா மண்ணை யொருபா லறைய
குலமெனு ஞமலி யொருசார் குரைப்பக்
கல்விக் கானியா னொருசார் கவரச்
சமயச் சூறை யொருசார் தாக்க
அவாவெனும் படுதீ யறிவைக் கொளுவ
மாயா வாத வனசரர் வெருட்ட
இன்னண மாவி யிடருறுங் காலை
உயிரிடை யொளிபுக் கிருந்த வொருவராத்
தாயினுஞ் சாலத் தயாநிதி யிரங்கிக்
கட்கடை வாளாற் காடற மாற்றலும்
உட்கின யாவு முயிர்பிழைத் தன்றே.

இதனால் சிறப்பொழுக்கமாகிய சமய நெறிநின்று கடவுளின் அருளைப்பெற்றாலன்றி பொது வொழுக்கமுண்டாகா தென்பது விளங்கும். இதனைத் தாருகாவன முனிவர்களின் சரித்திரத்தாலும் உணரலாகும். சிவாலயங்களில் பிட்சாடனர் மகோற்சவம் கொண்டாடுவதும் இவ்வுண்மையை விளக்கும் பொருட்டேயாம். இனி, பொதுவொழுக்கமில்லாதபோது சிறப்பொழுக்கம் பயன்படாதென்பதை விளக்குவாம். கடவுள் பொதுவொழுக்கங்களாகிய அருள், அன்பு, வாய்மை முதலியவற்றையே தமது திருமேனியாக உடையவர். இவ்வொழுக்கங்களியாவரிடத்தில் இருக்கின்றனவோ, அவர்கள் மனமே அவர் கோயிலாகவும், அவர்கள் அன்பே அவர் வடிவமாகவும் இருக்கின்றன.

**திருமந்திரம்.**

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்



அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

**திருநேரிசை.**

என்பலாற் கலனு மில்லை யேறலா லூர்வ தில்லை
புன்புலா னாறு காட்டிற் பொடியலாற் சாந்து மில்லை
துன்பிலாத் தொண்டர் கூடித் தொழுதழு தாடிப்பாடும்
அன்பலாற் பொருளு மில்லை யையனை யாற னார்க்கே.

சகமலா தடிமை யில்லை தானலாற் றுணையு மில்லை
நகமெலாந் தேயக் கையா னாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்கிமுன் பணிந் தேத்து மன்பர்
அகமலாற் கோயி லில்லை யையனை யாற னார்க்கே.

உலகத்தில் ஒவ்வொரு சமயத்தாருள்ளும் எண்ணிறந்தோர் தங்கள் தங்கள் சமயாநுட்டானங்களை யநுட்டிப்பவர்களாகக் காணப்பட்டாலும், இவர்களுள் முற்கூறிய பொது வொழுக்கமுடையார் மிகச் சிலரேயாயிருப்பதனால், இவர்களுள் கடவுளின் அருளைப்பெறுவோரும் மிகச்சிலரேயாயிருக்கின்றனர். இவர்கள் தங்கள் மனத்தூய்மையை வேண்டிக் கடவுளை வழிபடாமல் பிறபயன்களை விரும்பி வழிபடுவதனால் இவர்களுக்கு மனத்தூய்மையும் உண்டாவதில்லை.

**திருக்குறுந்தொகை.**

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கொண்டு
நக்கு நிற்கு மவர்தமை நாணியே.

மனத்தூய்மையோடு, எதனையும் விரும்பாத மனத்தூய்மை யொன்றையே வேண்டி, கடவுளை வழிபடும் வழிபாடே தூய்மையான வழிபாடாகும்.

**திருக்குறள்.**

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

இதனால் பொதுவொழுக்க மில்லாவிடத்து, சிறப்பொழுக்கமாத்திரம் பயன்படாதென்பது விளங்கும்.

இதுவரையில் கடவுளின் அருளைப்பெறுதற்குச் சிறப்பும்பொதுவுமாகிய இருவகை யொழுக்கங்களும் இன்றியமையாதன வென்பது விளக்கப்பட்டது.

(இன்னும் வரும்.)

## நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமைவிளையும்.

நம்முடைய மனமானது நன்மைவிதைத்தால் நன்மையும், தீமை விதைத்தால் தீமையும் விளையும் நிலமாயிருக்கின்றது. பெரியோர்கள் தங்கள் மனமாகிய நிலத்தை மிகவும் பாடுபட்டுத் திருத்தி, அதி லுள்ள வஞ்சகமாகிய கட்டையை வேரோடு களைந்தகற்றி, அன்பு என்னும் பாத்தியைக்கோலி, மெய் என்னும் எருவையிட்டு, பத்தி என்னும் ஒப்பற்ற விதையை நட்டு, ஆர்வம் என்னும் நீரைப்பாய்ச்சி, சாந்தம் என்னும் வேலியிட்டு, ஐம்புலன்களாகிய பட்டிமாடுகள் பிரவேசியாதபடி தடுத்துப் பாதுகாப்பார்கள். அப்போது அப்பத்தி யாகிய விதையிலிருந்து ஞானம் என்னும் முளைதோன்றி, கருணை யென்னும் தளிர் உண்டாகும். பிறகு, காமம், குரோதம் முதலிய கிளை களைத்தோன்றுந் தோறுங் களைந்தெறிய, அது செழித்து வளர்ந்து, காணினுங் கேட்கினுங் கருதினுங் களிதரும் ஆராவின்ப வருங்கனி தரும். இக்கனியைப் பெரியோர்கள் உண்டு சுகித்து இருமாந்திருப் பார்கள். சிறியோர் முயற்சியின்றியும், நாளை நாளையென்று நாள் கழித்தும், தங்கள் மனமாகிய நிலத்தை முற்றிலும் பாழாக்கி, காமக் காடு மூடவிட்டு, ஐம்புலவேடர் வசப்படுத்தி, இச்சை யென்னும் விதையை விதைப்பார்கள். அதனால் அதில் எங்கும் நான் எனது என்னும் அகங்காரமமகாரங்களாகிய விஷம்பொருந்திய மரங்கள் அடர்ந்து முளைத்து வளர்ந்து, பொய்யாகிய கிளைகளைவிட்டு, பாவ மாகிய இலைகளைப்பரப்பி, கொடுமையென்னும் பூக்களைப்பூத்து, துன்பமாகிய காய்களைக் காய்த்து, மரணமாகிய பழத்தைத்தர, அதனையுண்டு நரகில் வீழ்ந்து, தங்களுக்கும் பிறர்க்கும் பயன்படா மல் அழிவார்கள். இதனை நன்கு விளக்கிப் பட்டணத்தடிகள் திரு வாய்மலர்ந்தருளிய

### நேரிசையாசிரியப்பா.

உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ
கழப்பின் வாராக் கையற வுளவோ, அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற வகழ்ந்து போக்கித் தூர்வைசெய்
தன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனு மெருவை விரித்தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலு
மார்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று



தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும்
பட்டி யஞ்சினுக் கஞ்சியுட் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை யிளந்தளிர் காட்ட வருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையி னோங்கி
மெய்ம்மயிர்ப் புளக முகிழ்த்திட் டம்மெனக்
கண்ணீ ரரும்பிக் கடிமலர் மலர்ந்து
புண்ணிய வஞ்செழுத் தருங்காய் தோன்றி, நஞ்சுபொதி
கால கண்டமுங் கண்ணொரு மூன்றுந்
தோளொரு நான்குஞ் சுடர்முக மைந்தும்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
யறுசுவை யதனினு மறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருஞ்
சேணுயர் மருதமா ணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
வெம்ம னோர்க ளினிதி னருந்திச்
செம்மாந் திருப்பச் சிலரிதின் வாராது
மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்
காமக் காடு மூடித் தீமைசெய்
யைம்புல வேட ராறலைத் தொழுக
வின்பப் பேய்த்தே ரெட்டா தோடக்
கல்லா வுணர்வெனும் புல்வா யலமர
விச்சைவித் தகுத்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமர ணனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பஃறழை பரப்பிப் பூவெனக்
கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கு முதவா
திமைப்பிற் கழியு மியற்கையோ ருடைத்தே.

(இன்னும் வரும்.)

---

## ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபை.

இச்சபையானது சென்னை இராயப்பேட்டையில் பற்பல அறிஞர் களால் தாபிக்கப்பட்டு 10 - வருடங்களாகச் செவ்வனே நடைபெற்று வருகிறது. இது பக்தஜனசபையென்ற பெயராலழைக்கப்படினும், இச்சபையார் பத்திவழி ஒன்றைமாத்திரம் மேற்கொண்டு ஒழுகாமல், அப்பத்திக்கு வித்தாயிருக்கின்ற கல்வியையோம்புதலும், தாம் கற்ற கல்வியைத் தம்மட்டும் பாராட்டிக்கொண்டிராமல் தெரிந்தவரை யில் எல்லா ஏழைச் சகோதரரிடத்துஞ்சென்று போதித்தலும், ஞான

சாத்திர ஆராய்ச்சி செய்தலும், இரவில் பள்ளிக்கூடம் வைத்துப் பிள்ளைகளுக்குத் தமிழ்க் கற்பித்தலும், புண்ணியகாலங்களில் கற்றவர்களைக்கொண்டு உபந்நியாசங்கள் செய்வித்தலுமாகிய அரும்பெருங்காரியங்களைப் புரிந்துவருகிறார்கள்.

இன்னும் உலகோபகாரமான அறச்செயல்கள் பல புரிய இச்சபையார் மனமுடையராயிருந்தும் சபைக்கென ஓர் கட்டிடம் இதுகாறும் இல்லாமைகருதி அவைகளை மேற்கொள்ளாதிருந்தனர். இப்போது பல உண்மை அன்பர்களின் உதவியால் சென்னை இராயப்பேட்டையிலேயே மோப்ரீஸ் ரோட்டில் ஓர் தோட்டத்தின்கண் விசாலமான இடத்தில் சொந்தமாக ஓர் கட்டிடம் கட்டி முடித்தார்கள். இங்கிலையத்தை 1915ஆ ஆகஸ்டுமீ 22உ ஆதிவாரம் காலை 9 - 30 - மணிக்கு டிவான்பஹதூர் ஹானரபில் ஜஸ்டிஸ் T. சதாசிவ ஐயர் B. A. M. L. அவர்களைக்கொண்டு, திருமறைக்காட்டில் திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கதவந் திறப்பித்த பதிகமாகிய "பண்ணினேர் மொழி யாளுமை பங்கரோ" என்னுந் தொடக்கத்ததாகிய திருப்பதிகத்தை யோதி, திறப்பித்தனர். பழைய இல்லத்தினின்றும் அடியார்கள் புடைசூழ தமிழ்வேத பாராயணத்துடன் திருவீதி வலம் வந்து சுப்பிரமணியப்பெருமான் திருவுருவப் படத்தைப் புதுநிலையத்தில் எழுந்தருளச்செய்தவுடன் ஆதிசைவ அந்தண குலதிலகராம் பிரம்மஸ்ரீ - திருமயிலை - விசுவநாத குருக்களவர்கள் ஆகமநெறி வழாது பூசை புரியத் தொடங்கினர். சண்முகப்பெருமான் மஹோற்சவக் காட்சியைக் கண்டும், அவரைச் சூழ இன்னிசையுடன் ஓதிவந்த தமிழ்வேதத்தைக் கேட்டுந் திருக்கதவந் திறந்த அந்தணகுலதிலகர் ஆனந்த சாகரத்தழுந்தி, கனிந்த மனத்தராய்ப் பரவசப்பட்டனர். அதுகாலை ஐயகோ! இவரது அன்பின் பெருக்கிருந்தவாறென்னே? என்னே? என்று அடியர் குழாங்கள் ஆர்ப்பரித்தனர். பின்னர் ஐயர் அவர்கள், சபையின் நன்னோக்கத்தை வியந்து பேசி, உலகத்திலே சர்வேஸ்வரனுக்கு அன்பர்கள் யாவராயினும் அவர்கள் மேம்பட்டவர்களென்றும், அவர்களே நட்பிற்குரியவர்களென்றும், ஏனையோரெல்லாங் கீழ்ப்பட்டவர்களென்றும், அவர்களே விரோதிகளென்றும், நாடகமாத்திரத்தானே நடிக்கும் தீச்செயல்களைக் களையவே பாடுபடவேண்டுமென்றும், எல்லோரும் பொதுவாய் அனுபவிக்கவேண்டிய வேதத்தினை மறைத்துவைத்து வஞ்சிக்கும் செய்கையாளர்களை எதிர்பாராது நம் தமிழ்வேதத்தை ஓதி அதன் பயனறிந்து ஒழுகுதலே சாலவும் சிறந்ததென்றுங் கூறி, இறுதியில் இத்தகைய உண்மைகளை ஆண்பாலர் மாத்திரமன்றிப் பெண்பாலர்களும் உணர்ந்து சுகமடையவேண்டுமென்றும் உபந்நியசித்தனர். பின்னர் சபையார் சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கி வந்தனோபசாரஞ் செய்தனர். 11 - மணிக்குமேல் மாகேஸ்வர பூசை நடந்தேறியது.



பிற்பகல் 3 - 30 - மணிக்கு ஹைகோர்ட்டு வக்கீல், பிரமஸ்ரீ - V. விஸ்வநாத சாஸ்திரியார் B.A. B,L. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் யாழ்ப்பாணத்து வித்துவசிரோமணி ஸ்ரீமத் - சுவாமிநாத பண்டிதர் அவர்கள், சின்னாட்குமுன் சைவசமயத்தின் உட்பொருள்களையெல்லாம் புத்தகவாயிலானும், பிரசங்கவாயிலானும் உணர்த்தியருளி, சைவர்கட்கு இக்காலத்துதேசிகாத்தினமாய்விளங்கியிருந்தஸ்ரீலஸ்ரீ - ஆறுமுக நாவலர் அவர்களின் அருஞ்செயல்களைப்பற்றி உபந்நியசித்து "ஆறுமுக நாவலர் புத்தகசாலை" என்ற பெயரானே ஓர் புத்தகசாலை சபையாரின் உள்ளக்கிடையின்படி திறந்தனர். ஸ்ரீமான் - வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A., அவர்கள் "அருணகிரிநாதர்" என்னும்விடயத்தைத் திருப்புகழ் ஆராய்ச்சியினாற் கிடைத்த அவரது வரலாற்றுடன் அனைவரும் களிபேருவகையெய்துமாறு உபந்நியசித்தனர். அக்கிராசனரவர்கள் உபந்நியாசகர்களின் உரைகளைத் தழுவி "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்" என்னும் உத்தியின்படி இத்தகையசபைகளிற் புத்தகசாலை யமைத்தல் இன்றியமையாததெனவும், இக்காலத்தில் இச்சன்மார்க்கங்களைவிட்டு யாவருக்கும் பொதுவாயிருக்கின்ற தமிழ்ப்பாஷையையும் கல்லாமலிருப்பது உசிதமாயில்லையெனவும் மிகவும் வற்புறுத்திக்கூறி முடித்தனர். இறுதியில் சில அன்பர்கள் அனுப்பிய வாழ்த்துப்பாக்கள் படிக்கப்பட்டு வந்தனோபசார மளிக்கப்பட்டது.

திரு. வி. உலகநாத முதலியார்.

---

## சைவாகமப்பிராமாண்யம்.

[குளித்தலை பிரமஸ்ரீ - அரங்கசுவாமி ஐயரவர்கள் இயற்றியது.]

இவ்வரியநூல், முதலில் ஆன்மாவின் இருப்பு, அதன் இலக்கணம், அநான்மப்பொருளின் தன்மை, சிருட்டி கர்த்தர் கடவுளேயாகும் உண்மை எனு மிவ்விடயங்களை விளக்குகின்றது. பின்பு இறைவன் இருப்பைப்பற்றிக் கூறத்தொடங்கி உணர்ச்சி ஊகம் என்பவற்றின் இயல்புகளை நன்கு புலப்படுத்தி ஐம்புலன்கள் கடவுளைக் காண்கிலாவாயினும், அவ்விறைவன் உள் பொருளே என்று நிலைநாட்டுகின்றது. இனி அவ்விறைவன் இலக்கணங்கள் பலவற்றுள்ளும்

இந்நூலிற் பெரிதும் பாராட்டப்பட்டது, அவன் 'நீதிபலவுந்தன்னவுருவாம்' எனக்கொண்டு ஒளிரும் தூய தன்மையாம். இதன் மேல் உண்மையான ஆகமப்பிரமாணம் இன்றியமையாதது என்பதும், அது யுக்தி அநுபவங்கட்கு ஒருநாளும் முரண்பட்டிராதென்பதும் செவ்வனே விளக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு பெரிய உண்மைகளைச் சிறிது மறந்தமையினாலன்றோ நம்மவரிற்பலர் புறமதத்தவர் நஞ்சமயத்தை இழித்துக்கூறுங்கால் நியாயவாயிலாய்த் தஞ்சமய மேன்மையை நிறுவமுடியாது தியங்கவேண்டியோராகின்றனர்!

இந்நூல் பின்னும் விவரிக்கும் பொருள்களாவன: கடவுளே சாஸ்திரகர்த்தாவாதல், சிருட்டிக்கிரமம், வேதங்களின் தோற்றம், அவைதம் பாகுபாடு, எழுத்துக்களின் பிறப்பு முதலியனவாம். வேதம் ஈஸ்வரவாக்கு எனல் எப்பொருளில் என்பதை விளக்கும் பகுதியும், சில சிவமூர்த்தங்களின் உட்கருத்தைவிளக்கும் பகுதியும் கவனிக்கத்தக்கன.

கடைசியாகத் தொடங்கப்பட்டுள்ள விடயம் சிவாகமங்கள் வேதசாரம் என்பதாம். இஃதொன்றை விரித்துக்காட்டிச் சிவாகமங்கள் உண்மைப்பிரமாண நூல்களேயாம் என்று நாட்டுவதே இந்நூலாசிரியரது கருத்தெனப்புலப்படுகின்றது. ஆயினும் இப்போது வெளிவந்துள்ள நூற்பகுதியில் இவ்விடயம் முற்றுப்பெறவில்லை. எஞ்சியபகுதியும் விரைவில் வெளிவரல் இன்றியமையாததாம். இப்புத்தகத்தை வாசிப்போர் அநேக ஐயங்களினின்றும் நீங்கிப், பல அரிய உண்மைகளை எளிதில் உணர்ந்து மகிழ்வர். இது ஆஸ்திகர்கட்கோர் பேர் அரணும்.

இந்நூலாசிரியர் தமது உயரிய கருத்தை நிறைவேற்றும் ஆற்றலுடையார் என்பது இந்நூலின் ஒட்பநுட்பங்களையும், இவர் முன்னமே சித்தாந்தம் என்னும் பத்திரிகையில் வெளியிட்டனவும், சைவசித்தாந்த மகாசமாஜக் கூட்டங்களில் வாசித்தனவுமான பலவியாஸங்களின் அருமையையும் உணர்ந்தார்க்கு எளிதில் விளங்கும். உண்மைச் சைவசமயத்தினிடத்து இவர் வைத்துள்ள பற்றுக்கு அளவில்லை. அன்றியும் இவர் என்ன இடுக்கண்வரினும், 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்னும் மொழிவழி நிற்கும் தீரராயுள்ளார். நூலின் முதற்பாகத்தைப் பலரும் பெற்று வாசித்து அவ்வழியாய் இரண்டாம் பாகத்தையும்விரைவில் வெளியிடும்படி இத்தகைய பெரியாரைத் தூண்டுதல், சிவாகமங்களின் பிராமாணியத்தை ஒத்துக்கொள்ளும் ஒவ்வொருவரையும் பொறுத்த கடமையாம்.

ச. சச்சிதானந்தன்.

---

## அகத்தியர் திரட்டியருளிய தேவாரத்திரட்டின் உண்மைச்சிறப்பு.

136 - வது பக்கத் தொடர்ச்சி.

அல்லதூஉம், குருவுருவும் என்றதனால் இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் கூடியபின்னரே பாலில் நெய்போல் தோன்றாதிருந்த தமது முதலாகிய பரசிவம் தயிரில்நெய்போல் குருவெனவெளிப்பட்டு அருளுநவன் என்பதும், வெண்ணீறு என்றதனால் வெளிப்பட்டுவந்த ஆசிரியன் மாயாமல சம்பந்தமாகிய தூலதேகம் சுத்தியாதற் பொருட்டு பஸ்மதாரணத்தைச் செய்வனென்பதும், எழுத்தஞ்சும் என்றதனால் தூலதேகவழியால் மாயாமல சுத்தியைச் செய்ததுபோல் கன்மமல சம்பந்தமாகிய காரணங்கள் சுத்தியாதற் பொருட்டு பஞ்சாக்ஷர உபதேசஞ்செய்வனென்பதும், கோயில் என்றதனால் உபதேசஞ்செய்த பின்னர் காரணவழியால் கன்மமல சுத்தியைச் செய்ததுபோல் ஆணவமல சம்பந்தமாகிய தற்போதம் சுத்தியாகும்பொருட்டு ஆலயவழிபாட்டில் செலுத்துவனென்பதும், அரனுருவம் என்றதனால் ஆலயவழிபாடாகிய சரியாமார்க்கத்தினால் ஆணவமல சுத்திக்கு ஓர் வழிகாட்டிச் செலுத்தியதுபோல் தற்போத வழியே பலபல வுருவங்களிற் சென்று சென்று அவ்வவ்வுருவங்களைப்பற்றி அவ்வவ்வண்ணமாகவே ஆதலாகிய ஆன்மாவின் சார்போதத்தன்மையை விலக்கும் பொருட்டு சிவனுருவத்தை ஓர் தாவர மூர்த்தியினிடத்தில் பாவித்து அப்பாவனாவழியே அவ்வுருவில் நீங்காது நிற்கச்செய்யவல்ல கிரியையில் ஈடுபடச்செய்வனென்பதும், என்தலைமேல் ஆக்குந்திருவடி என்றதனால் தற்போதசுத்தியைச் சரியாமார்க்கத்தினாலும் சார்போதப்போக்கைக் கிரியாமார்க்கத்தினாலும் செய்ததுபோல் தற்போதவழியே சார்ந்து நின்ற ஆன்மஅறிவு அருட்போத சம்பந்தத்தையடைய வேண்டுமாகலின் அது செய்யவல்ல யோகமார்க்கத்தில் பயிலச்செய்வனென்பதும், அர்ச்சனையென்றதனால் யோகப்பயிற்சியால் ஆன்ம அறிவுக்கு அருட்சம்பத்தத்தையுண்டாக்கியதுபோல் அவ்வான்ம அறிவுசெல்லும் இடம் அநுபவிக்கப்படும் பொருள்கள் இன்புறும் இன்பவேறுபாடுகள் யாவும் சிவாகாரமாகவே இருக்கவேண்டுமாகலின் அங்ஙனம் இருக்கச்செய்யவல்லநாமோச்சரணையாகிய ஞானமார்க்கத்தில் இருத்துவனென்பதும், தொண்டு என்றதனால் தேகசுத்தி காரணசுத்திபோதசுத்தியாகிய மூன்றும் முறையே சரியையாதி மூன்றான் முற்றுப்பெற்று

ஞானத்தால் ஆன்ம அறிவு சிவஞானமயமாய் விளங்கப்பெறினும் வேம்பினைத்தின்ற புழு அதனைநீக்கிக் கரும்பினைத்தின்னத் தலைப்பட்டு அதன் சுவையறியப்பெறினும் முன்பயின்றுவந்த பயிற்சி வயத்தால் அவ்வேம்பினையே நோக்குமாறு போல முன்னைப்போத வுணர்வும், அவ்வுணர்வுக்குரிய சிற்றின்ப நுகர்ச்சியும் சிறிதே தோன்றுமாகலின் அது தோன்றாவண்ணம் செய்ய அயரா அன்பினையுடைய அன்பர் நடுவுளிருந்து அவரது வழிபாட்டில் நீங்காதிருத்துவனென்பதும் தோன்ற உண்மை உபதேசமுறையை விளக்கியவாறும்.

இதனால் சைவதருமத்தை மேற்கொண்டாருக்கு அச்சிவதருமமென்னும் விருஷபமானது சரியையாதி நான்கு பாதங்களையுடைத்தாய், அன்பென்னும் மார்க்கமாகச்சென்று, தன்னையுடையானாகிய இறைவனையும் அவனையுடையாளாகிய இறைவியையும் தன்மாட்டு வீற்றிருக்கச் செய்து, அவர்கண்டு களிக்கும்படி பிரகாசிக்குமாகலின் ஆசிரியன் சத்திநிபாதமுடையாரைச் சிவதருமவழியே செல்லச்செய்து பாசவிடுதியையும் சிவப்பேற்றையும் எய்தும் வண்ணம் செய்வனென்றறிக.

இவற்றால் ஞானநோக்கத்தை யளிக்க வல்ல குருவுருவத்தைக் காணப்பெறாதவரும், பஸ்மதாரணத்தால் சைவரென்று அழைக்கப்படாதவரும், ஸ்ரீபஞ்சாக்கர ஜபத்தால் சிவசொரூபத்தை யுணராதவரும், மலவாசனையை யொழிக்கவல்ல சரியையால் ஆலயவழிபாட்டைச்செய்யாதவரும், எளிதில் திருவருளை எய்துவிக்கவல்ல கிரியையால் கரண வழிபாட்டைச் செய்யப் பெறாதவரும், தற்போதத்தினது சேட்டையை யடக்கி அதனை அருட்போத வழியிலே நிலைபெறுவித்துச் செலுத்த வல்ல சிவயோகத்தில் நிலைபெறாதவரும், சிவயோக முதிர்ச்சியால் அநாதி தொட்டு பல வுருவநாமங்களைக் கொண்டு தனக்கு வேண்டியவற்றை உபகரித்து வந்ததாகிய சிவஞானத்தைப் பெறாதவரும், அங்ஙனமான சிவஞானத்தைப்பெற்ற சிவானுபவச் செல்வவான்களது பணியின் திறத்தை எண்ணி யெண்ணி அவர்களது அன்பின்வழியே அன்புண்டாகப்பெற்று அவ்வன்பு மறவாவண்ணம் அவர்களது வழிபாட்டை மேற்கொள்ளாதவரும், சைவர்களென்று பெரியோர்களால் சொல்லப்படார் என்பதும், குருவுருவமுதலாகச் சொல்லப்பட்ட எட்டுமே சைவாங்கமென்பதும், புறத்தும் அகத்தும் காணப்படும் சைவ ஒழுக்கமென்பதும், வலியுறுத்தியுணர்த்தியவாறுமென்க.

இங்ஙனம் குருவுருவமுதல் தொண்டு ஈறாகச் சொல்லப்பட்ட எட்டும் புறத்தும் அகத்தும் காணப்படும் சைவ ஒழுக்கமாமென்க.



சிவஞானயோகச் செல்வராகிய அகத்திய பகவான் தவயோகச் செல்வராகிய சிவாலயமுனிவருக்கு தேவாரப் பெருங்கடலைத் திரட்டத் தொடங்கியகாலத்தில் அப்பெருங்கடற்குரியாராகிய சமயாசாரியர்களது திருவுள்ளக்குறிப்பை யுணர்ந்து, அதனை சைவராயுள்ள யாவரும் உணர்ந்து அந்நெறியே நன்னெறியாம் என்று ஒழுகுமாறு குருவுருவம் வெண்ணீறு எழுத்தஞ்சும் என்னுமூன்றால் சைவ பூஷணம் இனைத்தென்பதும், கோயில் ஆனுருவம் திருவடி அருச்சனை தொண்டு என்னும் ஐந்தால் முறையே பாச நீக்கமும், சிவப்பேறும் சிவபோகமும் சிவானுபவமும் சிவானந்தப் பெருக்கமும் உண்டாகும் வகை சரியைமுதலிய நான்கால் என்பதும் விளங்கத் திரட்டியருளினாரென்க.

இதனால் சரியை கிரியைகளை விட்டு யோகஞானங்களையே பரமாகக் கூறுவோர் சித்தாந்த வுணர்ச்சியைப் பெறாதவரென்பதும், அவரால் கூறப்படும் யோகம் சிவநிலையைக் காட்டாத அவயோகமென்றும், அஃதேபோல் அவராற் கூறப்படும் ஞானமும் சிவசொரூபமாக்க அறியாத அவஞானமென்றும், அறியச் செய்தது. அந்த அவயோக அவஞானங்களையுடையார் அருளைமறந்து தற்போதத்தையும், சிவனை மறந்து தன்னையும் மறவாத அவநிலையையுடையார் என்பதும், சிவயோக சிவஞானங்களையுடையார் தற்போதத்தையுந் தன்னையுமறந்து சிவனருளையும் சிவனையும் மறவாத தவ நிலையையுடையார் என்பதும் அறிவுறுத்தியதுமாம்.

இவ்வுண்மையைப் பசுநூல்களானும் பதிநூல்களானும் நன்றாக அறியலாம். எனவே சரியை கிரியா சம்பந்தமாக யோகஞானங்களைக் கூறு நூல்கள் எவையோ அவையே பதிநூல்களென்றும் சரியை கிரியைகளை மறந்து அவைகளையோர் பொருளாகவெண்ணாது, யோக ஞானங்களைக் கூறும் நூல்கள் எவையோ அவையே பசுநூல்களென்றுஞ் சொல்லப்படும்.

பாசவலியால் பசுநூல் உணர்ச்சியுடையாரெல்லாம் தற்போதத்தையும் தன்னையும் மறவாது வெண்ணீறு முதலியவற்றை மறந்து சரியை கிரியைகளின் மகிமையையும் மதிக்காது அவநெறிக்காளாகின்றனர். அருள் வலியால் பதிநூலுணர்ச்சியுடையாரெல்லாம் அருட்போதத்தையும் சிவனையும் மறவாது வெண்ணீறு முதலியவற்றைப் பெறுதற்கரிய பெரும்பொருளாக எண்ணி சரியை கிரியைகளின் மகிமையுணர்ந்து சிவநெறிக்காளாகின்றனர்.

சைவசமயிகளென்று சொல்லப்படுவோர்க்கெல்லாம் சித்தாந்த

சைவசமயாசாரியர்களும் சித்தாந்தபோத ஞானசந்தானுசாரியர்களும் ஆசாரியர்களை யன்றி வேறு எந்த ஆசாரியர்கள் உள்ளார். வேறு உடையோம் என்பாராயின் அவர்களை நல்லோர்கள், சைவர்கள் சைவசமயிகள் என்று சொல்லத்துணியார். ஏனெனில் சைவசமயாசாரியர்கள் முன்னர் தம்பால் சிவஞானசம்பந்த முடைமையை நன்குவிளக்கிப் பின்னர் அச்சம்பந்த முடைமைக்குரிய வழிபாடுகளைச்செய்ய சரியை கிரியைகளை உயிர்த்துணையாகப்பற்றி ஆலயங்கடோறும் சென்று சென்று ஆங்காங்கும் சிவபெருமானைப் பிரத்யக்ஷமாகக்கண்டு பாடிப்பாடி அப்போதுண்டாகும் அருள்வெள்ளம் எங்கும் பெருக்கெடுத்து வழியச்செய்தனர்.

சந்தானுசாரியர்கள் சமயாசாரியர்களால் நிலைபெறுவித்த சரியை கிரியைகளையே தவநெறியாகக் கொண்டு அவ்வழியே பாசநீக்கமும் சிவப்பேறும் எய்தப்பெற்று சத்தினிபாதர்க்கெல்லாம் யோகஞானங்களை யுணர்த்தி அங்நிலைகுன்றுவண்ணம் "செம்மலர் நோன்றாள்" என்னும் இறுதிச் சூத்திரத்தில் ஓதப்பட்டிருக்கும் "வேடமும் ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே" என்றதை தமது ஆணைமொழியாகக் கூறி, சரியைகிரியைகளின் வழியே சைவரெனப்படுவோரெல்லாம் சிவஞானம் எய்தப்பெற்று உய்யுமாறு அருள் செய்தவர் மெய்கண்டாரன்றி வேறுயாவருள்ளார்.

இதனால் சைவசமயாசாரியர்கள் சிவஞானத்தினால் சரியை கிரியைகளைப் பிரகாசப்படுத்தினார்களெனவும், சந்தானுசாரியர்கள் சரியை கிரியைகளால் ஞானத்தை நிலைபெறுவித்தார்களெனவும் சைவரெல்லாம் உண்மையாய் அறியத்தக்கதென்க.

இவ்வுண்மையை யுணரவல்ல சத்திநிபாதத் துண்மையாளர்கள் செய்யும் வழிபாடு சரியை கிரியைகளென்றும் அவர்கட்கு இறைவன் அநுக்கிரகஞ் செய்வது யோகஞானங்களென்றும் அறிதல் வேண்டும். ஏனெனில் யோகஞானங்கள் சிவனருளால் உண்டாகத்தக்கது. அச்சிவனருள் சரியை கிரியைகளால் உண்டாகத்தக்கது. இதனை நூல்முகத்தானும் அநுபவமுகத்தானுமுணரலாம். இவ்வுண்மையுணர்ந்த பெரியோரெல்லாம் இங்ஙனமே கூறியிருக்கின்றனர். கூறியவண்ணமே நின்று மிருக்கின்றனர்.

மெய்கண்டான் திருவடி வாழ்க.

வைதிக சைவசித்தாந்தப் பிரசங்க ரத்தினாகரம்
கா- ஏ. ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள்.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

| | | |
|---|---|---|
| மலர் 1.] | இராக்ஷசஞூ ஐப்பசிமீ 1915ஞூ அக்டோபர்மீ | [இதழ் 10. |

**கைலபாதி காளத்திபாதியந்தாதி.**

உலக மனைத்தினுக்கு மொண்ணுதன்மே லிட்ட
திலக மெனப்பெறினுஞ் சீசீ—யிலகியசீர்
ஈசா திருக்கயிலை யெம்பெருமா னென்றென்றே
பேசா திருப்பார் பிறப்பு.

## தாருகவனமுனிவர் சரித்திரம்.

முற்காலத்தில் இப்பாரதகண்டத்தில் தாருகவனம் என்னும் விசாலமான ஒருவனமிருந்தது. அதில் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கடவுள் ஒருவர் உண்டு என்பதில் நம்பிக்கையில்லை. அவரவர்கள் செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்றவாறு அவரவர்களுக்கு இன்பதுன்பங்கள் தாமே உண்டாகின்றன என்பதும், தவம் வேள்வி முதலிய சற்கருமங்களால் முத்தியுண்டாகும் என்பதும், உயிர்களுக்கு வினைப்பயன்களை ஊட்டுவித்தற்கு ஒரு கர்த்தா வேண்டுவதில்லை யென்பதும் அவர்களுடைய கொள்கைகளாயிருந்தன. ஆதலால், அவர்கள் கடவுள் வழிபாடின்றி மிகவும் அரிய விரதங்களை யநுஷ்டித்துக்கொண்டும் தவங்களையும் யாகங்களையுஞ் செய்துகொண்டும் தங்களினும் தவத்தினின் மிக்கார் வேறொருவருமில்லை யென்று இறுமாப்புற்றிருந்தார்கள். அவர்களுடைய மனைவிமார்களும் தங்கள் கணவரைப்போலவே கடவுள்வழிபாட்டைக் கைவிட்டு, தங்களினுங் கற்பிற் சிறந்தார் வேறெங்குமில்லை யென்று கர்வித்திருந்தார்கள். அகாமென வறிவாகி எங்கும் நிறைந்து நிற்கும் சிவபெருமானார் இதனை யுணர்ந்து, அவர்கள் கர்வத்தை யடக்குமாறும், செய்வினையும் செய்

வினையின் பயனும் ஜடப்பொருள்களாதலினால் அவை தாமே ஆன்மாக்களைச் சென்றடையா வென்பதையும், செய்விப்பானும் வினைப் போகங்களை உயிர்களுக்கு ஊட்டுவிப்பானும் தாமே யென்பதையும், தம்மிடத்தன்பிலார் செய்யும் புண்ணியச்செயல்களும் பாவச்செயல்களாய் முடியும் என்பதையும், அம்முனிவர்களே யன்றி யேனையோரும் உணர்ந்து தம்மை வழிபட்டு உச்சீவிக்குமாறும் திருவுள்ளங்கொண்டருளி, திருமால் தம்மிடம் வரும்படிச் சங்கற்பித்தருளினார். அதனையுணர்ந்த திருமால் திருக்கைலையை யடைந்து இறைவனாரை ஆராவன்புடன் அருச்சித்து நிற்றலும், இறைவனார் அவருக்குத் தாம் கொண்ட எண்ணத்தைத் தெரிவித்து, அவரை யழைத்துக்கொண்டு திருக்கைலையை விட்டு நீங்கி, அவரை அவருடைய இயற்கையான பூர்வபெண்ணுருவத்தைக் கொள்ளும்படிக் கட்டளையிட்டருளினார். திருமாலும் அவ்வண்ணமே இறைவனாரின் திருவருளால் இலக்குமியுங் காணில் காமுறும்படியான மோகினிப் பெண்ணுருவங்கொண்டனர்.

### திருநேரிசை.

எரியலா லுருவ மில்லை யேறலா லேற மில்லைக்
கரியலாற் போர்வை யில்லைக் காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா வமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை யையனை யாற னார்க்கே.

### மதுரைக்கலம்பகம்.

மேதகைய பலகலைபோர்த் தறம்வளருந் தமிழ்க்கூடல்
விகிர்த கேண்மோ
வேதமினின் றிருவுருவொன் றீருருவாய் நின்றதினு
மிறும்பூ தந்தோ
போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணத் தொருவனிரு
பூவை மார்க்குக்
காதலனாய் மற்றுனக்கோர் காதலியாய் நிற்பதொரு
காட்சி தானே.

சிவபெருமானார், சகலமாயையையும் தன்னிடத்தினின்றுந் தோற்றுவிக்கும் உமாதேவியாரும் காணில் காமுறும்படியாக அழகெல்லாந்திரண்டு ஓர் உருக்கொண்டாலென, ஒருகையில் சூலமும் மற்றொருகையில் பிட்சாபாத்திரமும் ஏந்தி நிருவாணமான காளைவடிவாய் எழுந்தருளினார். அவ்வாறெழுந்தருளிய இறைவனாரைக்கண்டு விஷ்ணுமூர்த்தியும் மாலாயினாரெனில் அவ்விறைவனார் கொண்ட



கோலத்தைக்கண்டு யார்மயங்காதிருப்பர்!. இறைவனாரும் திருமாலும் இவ்வாறு திருவுருக்கொண்டதும், இறைவனார் திருமாலை நோக்கி, “விண்டுவே, நீ தாருகவனத்தை யடைந்து அங்கே நம்மை வணங்காமல் அகங்கரித்திருக்கின்ற முனிவர்களையெல்லாம் மயக்கி அவர்களுடைய விரதங்களை யழித்துவிட்டுவா” என்றேவினார். மோகினிவடிவங்கொண்ட திருமால் அவ்வாறே அம்முனிவர்களின் இருக்கையை யடைந்து, நாற்பத்தெண்ணாயிரம் மன்மதர்கள் கூடி நாற்பத்தெண்ணாயிரம் பஞ்சபாணங்களைத் தொடுத்ததுபோல் தமது இருவிழிக்கணைகளைப் பரப்பி நின்றனர். முனிவர்களனைவரும் அவ்வம்பேருண் கண்ணுக்கழிந்த நெஞ்சினராய், தாங்கள் செய்து கொண்டிருந்த தவம் வேள்வி முதலியவற்றை யெல்லாம் விடுத்து விளக்கைக்கண்ட விட்டிற்பூச்சிகளைப்போல் மோகினியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

### கந்தபுராணம்.

ஆலமார் கண்டத் தெந்தை யருளினான் மாயோன் கொண்ட
கோலமார் வடிவ மெல்லாங் குறிப்புட னோக்கி நோக்கிச்
சீலமா மனத்தும் வீட்டிச் செழுஞ்சுடர் மலர்ச்சி கண்ட
வோலமார் வீட்டி லென்ன வொல்லென வந்து சூழ்ந்தார்.

அவ்வாறு சூழ்ந்துகொண்ட முனிவர்கள் ஒவ்வொருவரும் தங்களை முற்றிலும் மறந்து இமையாநாட்டம் பெற்றவர்களென இமைகொட்டாமல், மோகினியின் ஒவ்வொரு அவயவத்தின் அழகையும் உற்றுப்பார்த்துப் பார்த்துப் பலவாறாக எடுத்துப் புகழ்ந்து தோத்திரஞ் செய்வாராயினர். சிலர் மோகினியின் நறுமணங்கமழுங் கூந்தலைப் பார்த்து “இவள் சிரத்திலிருப்பது மேகமோ! அல்லது இருட்கூட்டமோ! அல்லது நெடியசைவலமோ!” என்றார்கள். சிலர் அவள் நெற்றியைப்பார்த்து “இளம்பிறையும் இந்திரதனுசும் இவள் நெற்றிக்கு ஒப்பாகாமையால் நாணமுற்று ஆகாயத்தில் மறைந்தும் வெளிப்பட்டுந் திரிகின்றனபோலும்!” என்றார்கள். சிலர் அவள் கண்களைப் பார்த்து, “அழகியமாவடு, அம்பு, நீலோற்பலம், வாள், வேல், கயல், சேல் என்னும் இவைகளுள் எதுவும் இவள் கண்களுக்கு ஒப்பாகாது. இவள் கண்கள் நமது உயிரை வாட்டுதலால் பாற்கடலிற்றோன்றிய ஆலகாலவிஷம் ஒருசிறிது ஒப்பானால் ஆகலாம்” என்றார்கள். சிலர் அவள் மூக்கைப்பார்த்து “இவள் நாசிக்கு எள்ளின்பூ, ஓந்தி, சண்பகவரும்பு, குமிழம்பூ ஆகிய இவைகளுள் எதுவும் ஒப்பாகாது,” என்றார்கள். அவளுடைய அதரத்தைப்

பார்த்த சிலர் "இவள் இதழுக்குக் கொவ்வைக்கனியை யொப்பாகச் சொல்லலாமெனில், இதில் பானம்பண்ணுவதற்கு அமிர்தம் இருக்கிறது. அக்கனியில் இவ்வமிர்தமில்லை. ஆதலால், கொவ்வைக்கனியும் இவள் இதழுக்கு ஒப்பாகாதெனில் இதனோடு உவமித்துக் கூறுவதற்கு வேறுபொருளில்லை" என்றார்கள். அவள் பற்களைக் கண்ட சிலர் "இவை முல்லையரும்போ! மயிலிறகினடியோ! குருந்தமலரோ! முத்தோ! நட்சத்திரங்களோ!" என்றார்கள். சிலர் "இவை யெவையுமன்று. நமக்குப் பார்க்கப்பார்க்கக் காமமும் இன்பமும் விளைத்தலால் இவை சந்திரகிரணங்களே யாகும்." என்றார்கள். சிலர் அவள் காதுகளைப்பார்த்து "இவள் காதுகளுக்குச் சிலர் அறியாமையால் கத்திரியையும், வள்ளைத்தண்டையும், மகரதோரணத்தையும், ஊசலசைவையும் ஒப்பாகச் சொல்லுவார்கள். அவைகளுள் ஒன்றும் ஒரு சிறிதும் ஒப்பாகாது. இவை பிரமதேவனாகிய கொல்லன்செய்த உயிரையழிக்குங் கருவிகளேயாகும்" என்றார்கள். சிலர் அவள் முகத்தைப்பார்த்து "சிலர் இவள் முகத்தைச் சந்திரனுக்கு ஒப்பாகச் சொல்லுவார்கள். அப்படிச்சொல்வது அறிவீனமாம். சந்திரன் இவள்முகத்தைப்போல் எப்போதும் ஒரேபடித்தாய் ஒளிவீசாமல் தேய்வதும் வளர்வதுமாயிருக்கிறது. ஆதலால் அது இவள் முகத்திற்கு ஒப்பாகாது. தாமரைமலரை ஒப்பாகக் கூறலாமோவென்று பார்த்தால், அதுவும் வாடிப்போம். அன்றியும், மலர்தலும் குவிதலுமாகிய இரண்டு குணங்களும் அதனிடத்தில் உண்டு. இவள் முகமோ அவ்வாறின்றி எக்காலத்தும் வாடாமல் இருப்பது. ஆதலால் தாமரையும் இவள்முகத்திற்கு ஒவ்வாது" என்றனர். சிலர் அவள் கழுத்தைப்பார்த்து "இவள் கழுத்தின் அழகைச் சங்கமுங் கமுகுங் கவர்ந்திருக்க அதனைப் புலவர்கள் இக்கழுத்துக்கொப்பாகக் கூறுவது வெறும் பொய், பொய். இப்படிப் பொய்பேசுவதனாலல்லவோ புலவர்கள் தரித்திரம்பிடித்துத் திரிகிறார்கள்" என்றனர். சிலர் அவள்கைகளைப்பார்த்து "இவள் கைகளுக்குக் காந்தள்மலரும் செந்தாமரை மலரும் ஒப்பாகா" என்றார்கள். சிலர் அவள் தனங்களைப்பார்த்து "இவள் கொங்கைகளுக்கு மலை, சொக்கட்டான்காய், கஞ்சமுகை, களிற்றானைக்கொம்பு என்னும் இவைகளுள் எதுவும் தனித்தனியாய் நிகராகாது. மலைபோலுயர்ந்து, சொக்கட்டான்காய் போல் அழகாய்த்திரண்டு, இளநீரைப்போற் குளிர்ந்து, அமுதத்தையுட்கொண்டு, யானைக்கோடுபோல்க் குவிந்து, மன்மதனது கிரீடத்தைப்போல் மிக்க அழகடைந்துள்ள ஒருபொருளிருக்குமாயின் அது



இவள் கொங்கைகளுக்கு ஒப்பாகும்" என்றார்கள். சிலர் அவள் நாபிக்குமேலுள்ள உரோமரேகையைப்பார்த்து "இது, பிரமதேவன் இப்பெண்ணின் வடிவத்தையமைத்து முலைக்கண்ணை யமைக்கும் பொருட்டுக் கிண்ணத்தினின்றும் நீலநிறம்பொருந்திய எழுதுகோலைக் கையிலெடுத்தபோது அதிலிருந்து சிதறிய துளியின் ஒழுக்கோ!" என்று வியந்தனர். அவள் வயிற்றைப்பார்த்த சிலர் "திருமால் பள்ளிகொள்ளும் ஆலிலையும் இவள் வயிற்றுக்கொப்பல்ல" என்றார்கள். சிலர் அவள் இடையைப்பார்த்து, "இவள் இடையை மின்னற்கொடியென்று சொல்லுவோமாயின், அது தோன்றியவுடன் அழியும். ஆகாயமென்று கூறுவோமாயின் அதற்கு உருவமில்லை. கொடியென்றும் உடுக்கையென்றும் கழறுவோமாயின் அவை சிறந்த உவமைகளன்று. உண்டென்றும் இல்லையென்றுஞ் சந்தேகிக்கநின்ற ஒருபொருளுக்கு உவமானப்பொருளுமுளதோ! இல்லை! இல்லை!!" என்றார்கள். சிலர் அவள் தொடையைப்பார்த்து "இது வாழைத்தண்டோ! அல்லது யானைத்துதிக்கையோ!" என்றதிசயித்தார்கள். சிலர் அவள் முகம், கொங்கை, கை, கால், இவைகளைப் பார்த்து "தாமரை அரும்பாயிருக்கும்போது இவள் கொங்கைகளுக்குத் தோற்று, மலர்ந்த பின்னும் இவள் முகத்திற்குங் கைகால்களுக்குந் தோற்று, இவ்வவயவங்களுக்கு ஒப்பாகவேண்டுமென்று விரும்பி நீரில் நின்று தவஞ்செய்தும் பிரயோசனப்படாமல் * பங்கமுற்றது போலும்" என்றார்கள். அவள் பாதத்தைப் பார்த்தவர்கள் "இப்பெண்ணினது பாதங்கள் செம்பஞ்சு, அனிச்சமலர், அன்னத்தூவி முதலிய மிருதுவான பொருள்கள் பட்டாலும் வருந்திச் சிவக்குந்தகையனவாம். இவை நாம் இதுவரையில் செய்த தவப்பயனால் நம் பொருட்டு இக்கடினமான தரையில் நடக்கின்றனபோலும்" என்றார்கள். சிலர் "இவள் பிரமனால் படைக்கப்பட்டவளல்லள். இவள் அவனால் படைக்கப்பட்ட திலோத்தமையைக்காட்டிலும் ஆயிரமடங்கு வனப்புவாய்ந்திருத்தலினால், அவன் இவளைப்படைத்திருந்தால், அவளைப்படைத்தபோது அவளைப்பார்க்க நான்கு தலைகளைக்கொண்டதுபோல், இவளைப்பார்க்க ஆயிரந்தலைகளைப்பெற்று இவள்பின்னே திரிவான்" என்றார்கள். இவ்வாறு முனிவர்களனைவரும் காமக்கடலில் வீழ்ந்து மோகினியின் மயக்கவலையிற் சிக்கி, அவளைப் பலவாறாகப் புகழ்ந்து, அறிவிழந்து, உயிர்கலங்கி, காந்தத்தினைத் தொடர்ந்து செல்லும் இரும்பென மோகினியைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

* பங்கம் என்பது அவமானம் எனவும் சேறு எனவும் பொருள்படும்.

பிட்சாடன கோலங்கொண்ட சிவபெருமானார், திருமாலை முனிவர்களிடம் ஏவியபின், அம்முனிவர் வீடுகளிருக்கும் வீதிகளிற் சென்று வேதகீதம்பாடிக்கொண்டே பிச்சையேற்கத்தொடங்கினார். பாடன் மறையுந்தெளியாப்பரமர் பாடியகீதத்தை முனிபன்னியர் கேட்டு அதிசயமடைந்து அவ்விசைவயப்பட்டு, இவ்வாறு பாடுபவர் யார்? என்று ஆச்சரியத்தோடுவீதியில் வந்து பார்க்க, இறைவனைக்கண்டு காமவெள்ளத்தில் மூழ்கி அவரையணைய ஆவல் கொண்டனர். சிலமாதர் "இத்தவசியின் உடலில் யாதொரு ஆபரணமும் இல்லாவிட்டாலும் இவருடைய இனிய பாடலே நம்மைக் காமக் கடலில் ஆழ்த்திவிட்டது. ஆதலால், இவர் வடிவம் மானிடவடிவமன்று, மாயவடிவமேயாகும்" என்றார்கள். சிலபெண்கள் "இவர் பிச்சையெடுக்க வந்தவரன்று, நம்மை மயக்கவந்தவர்" என்றார்கள். சில அரிவையர்" "இவரை ஆடையாபரணங்களணிவித்து அணைபவரில்லையோ" என்றனர். சில நங்கைமார் பிச்சையிடுவார் போல் வந்து, விரகதாபத்தால் மெலிந்து கைவளையல்களும் ஆடைகளும் சோர்ந்துவிழ அதனைக்கண்டு நாணமும் அச்சமுங்கொண்டு, கைந்நெரித்துக்கொண்டு உள்ளே யோடிப்போனார்கள். சில மடந்தையர் அவரைப்பார்த்த கண் வாங்காதவராய்ப் பார்த்துக்கொண்டே அவருக்குப் பிச்சையிடுவார்போல் வந்து தாங்கள் கொண்டுவந்த அன்னத்தை அவர் பாத்திரத்திலிடாமல் வெளியிற் சிந்திக்கலங்கினார்கள். சில காரிகைமார் அவரை நோக்கி "ஐயா, எம்மிடத்தில் தேவாமிர்தத்தினும் இனிய போசனம் இருக்கிறது. அதை இவ்விடம் வந்துபுசித்துச் சற்றுநேரம் இருந்துபோகலாம்" என்றார்கள். சில தெரிவைமார் ஐயா, உமக்கேன் இந்தச் சூலமும் மண்டையோடும். தினந்தோறும் எம்மிடம் வந்து நெய்யும்பாலுமாகச் சாப்பிட்டிரும்" என்றார்கள். சில வனிதையர் அவரை வணங்குவது போல் அவருடைய திருவடிகளைத்தீண்ட முயன்றார்கள். இவ்வாறு இவர்களியாவரும் நெருங்கி, காமத்தீயால் உடல் மெலிந்து, மனந்தளர்ந்து, ஆவிசோர்ந்து, ஆடையவிழவும், வளையல் சிந்தவும், ஆபரணங்கள் கழலவும் நாணமுதலிய நற்குணங்கள் நீங்கி உயிரொன்று மாத்திரம் தாங்கி வித்தின்றி விளைவுசெய்யவல்லவராகிய இறைவனைப் பின்றொடர்ந்து சென்று கருப்பமுற்று அப்போதே நாற்பத்தெண்ணாயிரம் பெண்களும் நாற்பத்தெண்ணாயிரம் புத்திரர்களை யீன்றார்கள். அப்புத்திரர்களனைவரும் சிவபிரானிடம் வந்து வணங்கி நிற்க, பிரானார் அவர்களைத் தம்மிடத்தன்புபூண்டு தவஞ்செய்து



கொண்டிருக்கும்படி கட்டளையிட்டு, காமவெள்ளத்தில் மூழ்கிய பெண்களாகிய கடல்வெள்ளம் தம்மைத்தொடர்ந்துவர அவர்களிருந்த நகரைவிட்டு, மோகினிவடிவங்கொண்ட திருமால் முனிவர்களோடு திரும்பிவரும் வழியை நோக்கிச்சென்றனர்.

(இன்னும் வரும்.)

---

# கடவுளுக்கும் இன்பதுன்பங்கள் உண்டா?

நம்முடைய சமய நூல்கள் சிலவிடங்களில் கடவுள் இன்பமே வடிவமாக இருக்கிறார் என்கின்றன. சிலவிடங்களில் அவருக்கு இன்பதுன்பங்களில்லை என்கின்றன. சிலவிடங்களில், அவருக்கு இன்பதுன்பங்கள் உண்டு, ஆதலால் அவரைப் பூசிப்பவர்களை அவர் நேசிக்கிறார் எனவும், பூசிக்காதவர்களை வெறுக்கிறார் எனவும் கூறுகின்றன. இவைகளை வாசிப்போர் சிலர் இவையொன்றோடொன்று முரணுவதாக மயங்காநிற்பர். சிலர் கடவுளுக்கு இன்பதுன்பங்கள் உண்டு என்பதும், அவரைப் பூசித்தால் அவருக்குப் பிரீதியும் பூசிக்காவிட்டால் வெறுப்பும் உண்டாகும் என்பதும் அறிவீனமாமெனக்கூறி, கடவுள் வழிபாட்டைக் கைவிடுவர். சித்தாந்தஞான நூல்களை ஆராய்ச்சிசெய்யாதவர்களே இவ்வாறு மயங்கி இடருறுவர். ஆராய்ச்சிசெய்வார்க்கு அவையனைத்தும் உடன்பாடேயாயிருக்கும்.

கடவுளுக்குச் சொரூபஇலக்கணம் தடத்த இலக்கணம் என இருவகையான இலக்கணங்களுண்டு. இவற்றுள் சொரூப இலக்கணமாவது அவர் குணங்குறிகளின்றி பேரறிவு, பேரின்பம், பேரருள் ஆகிய இவைகளேயாயிருக்கும் நிலையாகும். தடத்த இலக்கணமாவது அவர் உயிர்கள்மீது வைத்த இயற்கைத் திருவருளையே திருமேனியாகவும் குணங்களாகவும் தொழில்களாகவும் கொண்டுநின்ற நிலையாகும். சித்தாந்த நூல்கள் அவருடைய சொரூப இலக்கணத்தைக் கூறுமிடத்து அவர் இன்பமுந் துன்பமுமில்லாதவர் என்று கூறும். தடத்த இலக்கணத்தைக் கூறும்போது அவர் இன்பமுந் துன்பமுமுடையவர் என்று கூறும். இவ்விருவகை இலக்கணமும் அவருக்கு எக்காலத்திலும் இருப்பதனால் தமிழ்வேதம் அவரை "இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே" என்று தோத்திரஞ்செய்தது. ஆனால், அவருடைய சொரூப இலக்கணத்தைக் கூறும்போது அவர் குணம்குறியொன்றுமில்லாதவர் என்று சொல்லிவிட்டு, அதனோடு அவர் இன்பமயமாயிருப்பவர் என்பது ஒன்றோடொன்று

மாறுபடாதோவெனில், மாறுபடாது. அவருடைய இயற்கையுருவ மெனக் கூறப்படும் இன்பமானது உயிர்கள் வினைக்கீடாக அனுபவிக்கும் சடரூபமாகிய இன்பத்தைப்போல்வதன்று. அது இன்பமும் துன்பமும்அற்ற நிலையாகும். அது ஞானமயமாகவும் அருள்மயமாகவும் இருப்பது. அவ்வின்பம் வேறு அவர்வேறு என்று சொல்லப் படாமல் அவ்வின்பமே அவர், அவரே அவ்வின்பம் என்று சொல்லப்படுவது. அது எல்லையற்றது. தோற்றமும் ஈறும் இல்லாதது. சுட்டுணர்வுக்கெட்டாதது.

பட்டணத்தடிகள்.

அடிசார்ந்த வர்க்கு முடியா வின்ப
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ
மூலமு நடுவு முடிவு மிகந்து
கால மூன்றையுங் கடந்த கடவுள்
உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறும்புத் துளையி னிருசெவிக் கெட்டா
துறுப்பினின் றெழுதரு முள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேறல்
துண்டத் துளையிற் பண்டை வழியன்றி
யறிவி னுறு நறிய நாற்றம்.

*  *  *  *

நடந்த நிலையில் அவர் இன்பதுன்பங்களையுடையவராயிருத்தலும் அவர்பொருட்டன்றி ஆன்மாக்கள் பொருட்டேயாம். எல்லா உயிர்களும் அவருடைய சரீரங்களாயிருத்தலால், அவர் இயங்க எல்லாவுயிர்களும் இயங்கும். அவர் இன்புற எல்லாவுயிர்களும் இன்புறும். அவர் போகியாயிருக்க எல்லாவுயிர்களும் போகத்தைநுகரும். அவர் யோகியாயிருக்க உயிர்கள் போகமுத்திபெறும். ஆதலால் அவர் உமாதேவியாரை விட்டுப் பிரியாத போகரூபியா யிருப்பினுமிருப்பர். சின்முத்திரை தாங்கி யோகுசெய்திருப்பினும் இருப்பர். பிரமாதிதேவர்களுக்கு அவர்கள் பதவியைக்கொடுத்தும் நீக்கியும் அருள்புரியும் தேவதேவராய் அரசுவீற்றிருப்பினும் இருப்பர். மண்டையோட்டை மலர்க்கையிலேந்தி பிச்சையெடுத்துண்ணுங் கோலத்துடன் இருந்தாலும் இருப்பர். அவர் கற்பனைகடந்த தற்பரம்பொருளாகையால் அவர் எந்நிலையிலிருந்தாலும் " இந்திரசாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்குந் தந்திரத்திற் சாராது சார்வதுபோல்" சிறிதும் தாக்கற்றுநிற்பர்.



சிவஞானசித்தியார்.

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி லொருவ னென்பர்.

திருவாரூர் நான்மணிமாலை.

ஆமையோ டணிந்து தலையோ டேந்தி
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனு
மிந்தி ராதியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து முற்றவர்த் தாங்கியும்
பாசுநர் பாசப் பணிநர் பணிய
வாசுவீற் றிருப்பினு மிருக்கு முரைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி யிருப்புடை
யிடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலரும்
காமமீ தூரவே முற்றிருந்தவ
டாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு மீகெழு
தபனிய மாடத் தாமிய முற்றத்
தைங்கணைக் கிழவ னாசிய னடாத்தக்
கொங்கைமால் களிறுங் கொலைக்கண்வாட் படையுஞ்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியுந் தவக்குறும் பெறிந்து
நுணங்கிய நுசுப்பி னணங்கனூர் குழுமிக்
கைவகுத் திருந்து கழங்கெறிந் தாட
மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமால்
செம்மூசுத் தாமரைச் சிறையளிக் குலங்க
ளம்மென் காந்தளி னளிக்குல மார்த்தெழக்

கலந்துமன் றழீஇக் காமுற னிகர்க்கும்
பொலன்செய் வீதிப் பொன்மதிற் கமலை
யண்ணன் மாநகர்க் கண்ணுதற் கடவுள்
கற்பனை கடந்து நிற்றலி
னிற்பதிந் நிலையெனு நியமமோ வின்றே.

அன்றியும், அரசன் சிட்டர்களை விரும்பியாதரிப்பதும் துட்டர்களைவெறுத்துத் தண்டிப்பதும் செங்கோன்முறைமையாவது போலவும், பிதாதன்சொற்படி நடக்கும் பிள்ளைகளிடத்தில் அன்பு கூர்தலும், சொல்வழிவாராத பிள்ளைகளைத்தண்டித்தலும் கடமையாவது போலவும், சர்வான்மாக்களுக்கும் இறைவராகவும் பிதாமாதாக்களாகவும் இருக்கும் கடவுள் அவர்கள் உய்யும் பொருட்டுத்தாம் திருவாய்மலர்ந்தருளிய வேதாகமநெறியில் ஒழுகுவாரை விரும்பியருள் சுரத்தலும், அந்நெறியினின்றும் விலகித்தீநெறியில் ஒழுகுவாரை வெறுத்து நிரயங்களிற் செலுத்தித் தண்டனைபுரிதலும் முறைமையாகும். அவர் நல்லாரை யளித்தலும், தீயாரைத்தண்டித்தலும் ஆகிய இரண்டு தொழில்களும், ஒன்றுக்கொன்று மாறுபாடான விருப்பு வெறுப்பு என்னும் இருவேறு குணங்களால் உண்டாவனவாகக்காணப்படினும், அவ்விரண்டும் அவருடைய கருணையின்விளைவேயன்றி வேறன்று. ஆதலால் அவர் தம்மை நேசியாதவரை வெறுத்துத்தண்டித்தல் அவருடைய மறக்கருணையென்றும், அவரை நேசிப்பாரை நேசித்து அருள்புரிதல் அவர் அறக்கருணையென்றும் சொல்லப்படும். அவருடைய அருட்சத்தியொன்றே இவ்வாறு அறக்கருணை மறக்கருணையென இருவகைப்பட்டு ஆன்மாக்களைப் பரிபாகப்படுத்திக்கொண்டிருக்கும்.

### திருவாசகம்.

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ.

அவர் தம்மை வணங்காதாரைத் தண்டித்தலும் அவர்களை நல்வழிப்படுத்தற்கே யாதலினால் பெரியோர்கள் அவருடைய அறக்கருணையைப்போலவே மறக்கருணையையும் வேண்டித்துதித்தார்கள். நமது மாணிக்க வாசகப்பிரான் "உடையாய் கூவிப்பணிகொள்ளா தொறுத்தாலொன்றும் போதுமே" என்று மறக்கருணை கிடைத்தாற் போதும் என்றனர்.



### போற்றிப்பஃறொடை.

நஞ்சனைய சிந்தை நமன்றூதர்—வெஞ்சினத்தா
லல்ல லுறுத்து மருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணைமறம் போற்றி.

சூரியன் எல்லாப்பொருள்களிடத்திலும் ஒரே விதமாய் ஒளி வீசிக்கொண்டிருந்தாலும், அதனைச் சமீபித்துள்ள பொருள்களே தூரத்திலுள்ள பொருள்களைக்காட்டிலும் அதனொளியையும் வெப்பத்தையும் அதிகமாகப்பெறுகின்றன. வெயிலிலிருக்கும் பூண்டு செழித்து வளர்வதுபோல் இருட்டிலிருக்கும் பூண்டு வளர்வதில்லை. அதுபோல் வழிபாட்டின் திறத்தால் மனிதர்கள் கடவுளுக்கு எவ்வளவு சமீபத்திலிருக்கிறார்களோ அவ்வளவு அவரருளுக்குரியராகின்றார்கள். சரியையென்னும் மார்க்கத்தினும் பார்க்கக்கிரியாமார்க்கம் அவருக்குச் சமீபமாயுள்ளது. கிரியாமார்க்கத்தினும் யோகமார்க்கம் அவருக்கு அதிக சமீபமாயுள்ளது. ஞானமார்க்கம் அவர் இருப்பிடமாயுள்ளது. ஆதலால் சரியையாளரைக்காட்டிலும் கிரியையாளரும், கிரியையாளரைக்காட்டிலும் யோகிகளும், யோகிகளைப்பார்க்கிலும் ஞானிகளும் கடவுளின் அருளுக்கு அதிகமாக உரியராகின்றனர். இம்மார்க்கங்களெவற்றினும் ஒழுகாதவர்கள் கடவுளுக்கு வெகு தூரத்திலிருப்பவர்களாய் அவரருளைப்பெறுதற்குரியராகார்.

### தேவாரம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே.

ஆனால், சூரியன் சடப்பொருளாகையாலும், அதற்குச் சர்வவியாபகமின்மையாலும், அதைச்சமீபித்துள்ள பொருள்களே அதன் ஒளியையும் வெப்பத்தையும் தூரத்திலுள்ள பொருள்களைக்காட்டிலும் அதிகமாகப்பெறும். கடவுள் ஞான மூர்த்தியாகவும், சர்வவியாபகராகவுமிருக்க, அவர் தம்மை வழிபடுவார்க்கு மாத்திரம் அருள்செய்து வழிபடாதார்க்கு அருள்செய்யாதொழிவது அவர்விருப்பு வெறுப்புடையாரென்பதைக் காட்டாதோவெனில், காட்டாது. சூரியன் ஒரேவிதமாய் ஒளி வீசும் ஓரிடத்திலுள்ள பலபொருள்களுள் சிலபொருள்கள் அதன் ஒளியையும் வெப்பத்தையும் அதிகமாகவும் சிலபொருள்கள் குறைவாகவும் கிரகிக்கின்றன. வாழைத்

தண்டின் மீதும் சூரிய காந்தக் கல்லின்மீதும் ஒரே விதமாய்ச் சூரியன் காய்ந்தாலும் வாழைத்தண்டு நெடுங்காலம் குளிர்ந்தேயிருக்கும். சூரியகாந்தக்கல்லோ உடனே அக்கினியைக் கான்று அடுத்துள்ள பொருள்களையும் கொளுத்தும். அதுபோல் கடவுளுடைய திருவருள் எல்லா உயிர்களிடத்தும் ஒரே அளவாக வியாபித்திருந்தாலும் அது பக்குவப்பட்ட ஆன்மாக்களிடத்தில் மாத்திரம் விரைவில் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும். ஆதலால் பக்குவப்படாத ஆன்மாக்கள் அவரருள் வெள்ளத்தின் நடுவிலிருந்தும், ஆற்றுவெள்ளத்தின் நடுவிலிருந்தும் தாகத்தால் நாவறண்டு தபிப்பான்போல், அவரருளாரமுதைப் பருகமாட்டாமல் வருந்துவர். அங்ஙனம் வருந்துதல் கடவுளின் குற்றமன்று; ஆன்மாக்களிடத்தில் அநாதியாகவே பொருந்தியுள்ள குற்றமேயாம்.

### தேவாரம்.

*சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலா*
*னலமில னுடொறு நல்கு வானலன்*
*குலமில ராகிலுங் குலத்திற் கேற்பதோர்*
*நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.*

### திருவருட்பயன்.

*நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்*
*சலமிலன் பேர் சங்கரன்.*

### திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

*　　*　　*　　*　　*

பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வே
லமரர்த் தாங்குங் குமரன் றாதை
பொருதிடங் கொண்ட பொன்னி புரக்கு
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்ற முளதோ நின்னினைந்
தெண்ணருங் கோடி யிடர்ப்பகை கடந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
திறப்பையும் பிறப்பையு மிகந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிக டமதே பாவம் யாதெனின்
முறியாப் பெறுக்கன் முப்பழங் கலந்த
வறுசுவை யடிசி லட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துத
லயினியின் குற்ற மன்றுவெயி லின்வைத்



*தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப*
*மடாஅ தொருவன் விடாஅ வேட்கை*
*தெண்ணீர்க் குற்ற மன்றுகண் ணகன்று*
*தேந்துளி சிதறிப் பூந்துணர் துறுமி*
*வாலுகங் கிடந்த சோலை கிடப்ப*
*வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப*
*வடிபெயர்த் திடுவா னொருவ*
*னெடிது வருந்துத னிழற்றீங் கன்றே.*

கடவுள் கொண்டருளும் எவ்வகைத் திருமேனிகளும் செய்தருளும் எவ்வகைத்தொழில்களும் அருட்டிருமேனிகளும் ஆனந்த வடிவங்களுமாகவே யிருக்கும். இதுபற்றியே ஞானநூல்கள் அவரை சச்சிதானந்த ரூபியென்று கூறும்.

### சிவஞானசித்தியார்.

*உருவருள், குணங்க ளோடு முணர்வருள், உருவிற் றோன்றும்*
*கருமமு மருள், அரன்றன் கரசர ணாதி சாங்கம்*
*தருமருள், உபாங்க மெல்லாந் தானருள், தனக்கொன் றின்றி*
*யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னமல னன்றே.*

### சிற்றம்பலநாடிகள்.

*ஆனந்த மேசெவி யம்புயத் தாளிணை யங்கைகளும்*
*ஆனந்த மேதிருக் கண்ணுஞ்செவ் வாயருண் மேனியெல்லாம்*
*ஆனந்த மேதிருச் சிற்றம் பலவ ருட்பொருளும்*
*ஆனந்த மேயவன் றில்லையுங் காழியு மானந்தமே.*

---

## சைவர்கள் பெரும்பாக்கியம்.

### சிவஞானசித்தியார்.

*ஊர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்*
*விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தான் ஆகும்*
*தரையினின் கீழைவிட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து*
*பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே.*

இத்திருவிருத்தத்தால் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் யாதெனின், எழுவகைத் தோற்றத்துக்குள்ளான எண்பத்துநான்கு லக்ஷம் பேதங்களாயிருக்கின்ற பிறவிகளில் மானுடப்பிறவியே மேலானதென்று அப்பிறப்பின் சிறப்பையும், இந்த எண்பத்துநான்குலக்ஷம் பேதப்பட்ட பிறவிகளோடுகூடிய உயிர்கள் தனித்தனியாகவும் கூட்டங் கூட்டமாகவும் பிரிந்தும் சேர்ந்தும் வாழ்கின்ற எண்ணிறந்த

தேசங்களில் மாநுடப்பிறவியுடைய நரர்கள் வாழப்பெற்ற தேசமே மேன்மையுடையதென்று தேசத்தின் மேன்மையையும், பலபாஷா ரூபங்களாய்ப் பரவிக்கிடக்கும் பலநூல்கள் பயின்றுவருவதாகிய பல நாடுகளில் நான்கு வேதங்கள் வழங்கப்பெற்ற நாடே புகழுடையதென்று நாட்டின்புகழையும், புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் மனவாக்குக் காயங்களால் செய்யப்பட்ட பலவகையான புண்ணியங்களில் மேலே சொல்லிய வேதங்கள் வழங்கும் நாட்டில் பிறக்கவரும் புண்ணியமே நல்ல புண்ணியமென்று புண்ணியத்தின் மிகுதியையும், அந்தந்தவுயிர்கள் அடைதற்குரிய கதிக்குத்தக்க தவங்களைச் செய்தற்கு வருணபேதங்கள் பலவகையாக ஏற்பட்டிருக்கின்றபடியால் தாழ்ந்த தவத்தைச் செய்தற்குரிய தாழ்ந்த சாதிகளில்வந்து பிறத்தலைவிட்டு உயர்தவஞ் செய்தற்குரிய உயர்ந்த சாதியரில் பிறக்கவருதலே பிறந்ததாமென்று சாதியின் விசேடத்தையும், அப்பிறவி பூர்வபுண்ணிய விசேடத்தால் கிடைக்கப்பெறினும் அப்பிறவியைக் கொண்டு செய்யப்படும் மேலான தவத்திற்குரிய மேலானசமயம் வாய்க்கப்பெறுதலே பாக்கியத்திற் சிறந்த பாக்கியமென்று பாக்கியத்தின் தகுதியையும் நன்கு விளக்கியதாமென்க.

இதனால் எதிர்மறையாக மறுக்கவேண்டியவற்றை மறுக்கவும் உடன்பாடாகக் கொள்ளவேண்டியவற்றைக் கொள்ளவுங்கூறியதேயன்றி சைவசமயந்தான் பாக்கியமாகிய சமயமென்றும் இச்சிறப்பாகிய பாக்கியம் கிடைக்கப்பெறும் வகையைச் செய்துகொள்ளல் எவ்வகைப்பட்ட வன்மையாளர்க்கும் அரிதினும் அரிதே என்றும் மறுத்து சைவசமயமே சமயமென்று சித்தாந்த முகத்தால் சித்தாந்தப்படுத்தியதுமாமென்க.

எதிர்மறையாக மறுக்கவேண்டுவன, நரர்பயிலாத தேசங்களும் நான்மறைபயிலாத தேசங்களும் சைவமொழிந்த பரசமயங்களுமாமென்க.

உடன்பாடாகக்கொள்ள வேண்டுவன, நரர்பயில் தேசங்களும் நான்மறைபயிலும் நாடுகளும் இவைகளைக்கூட்டி வைக்கத்தக்க புண்ணிய விசேடங்களும் பரசமயங்களில் செல்லாப் பாக்கியமுமாம்.

ஈண்டு இத்திருபாசுரத்தை எடுத்துக் காட்டியது எற்றுக்கெனின், சைவசமயிகளாயுள்ள யாவரும் தமக்கு வாய்க்கப்பெற்ற சைவசமயமாகிய பாக்கியத்தைப் பாக்கியமாக எண்ணாது மறந்திருக்குந் தன்மையை நாடியேயாம்,



அஃதாவது சைவசமயம் விளங்கவேண்டுவது அச்சமயத்துக்குத் தெய்வமாயுள்ள சிவபெருமானால். அச்சிவபெருமான் விளங்கப்பெறுவது வேதாந்தத் தெளிவாகிய ஆகமசித்தாந்த சாஸ்திரங்களாலென்க. வேறு நூல்களைக் கூறாது ஆகமங்களைக் கூறுவானேனெனில், ஆகமம் முறையானே மூன்றுபதங்களைக் காட்டுகின்றமையாலென்க. அவை ஆ, க, ம, என்பனவேயாம். ஆ என்பது பாசம்; க என்பது பசு; ம என்பது பதி; ஆகவே முன்னே காணப்படுவது பிரபஞ்சம்; அதனைப்பாசமென்று அறிந்த பின்னர் ஜீவனுடைய விளக்கம் உண்டாகும். அவ்விளக்கத்தால் சீவனைப் பசுவென்றுணரவரும். அது வந்தபின்னர், இறைவன் ஒருவன் இருத்தல்வேண்டுமென்று யூகிக்கவரும். அந்தயூகத்தால் அவ்விறைவன்றான் நமக்கும் யாவர்க்கும் பதியென்று துணிவாய் நிச்சயிக்கவரும். அத்திரிபதார்த்த நிச்சயத்தால் முத்தியுண்டாம். அம்முத்தியுண்மையும் ஆகமமென்னும் பெயரானே அறியக்கிடக்கின்றது.

எங்ஙனமெனின், திரிபதார்த்த நிச்சயத்தால் முன்னே ஒருபொருளுந் தோன்றாதிருக்கச் செய்த பாசம் நீங்க, அப்பாசநீக்கத்தால் சிவஞானசித்தியுண்டாய் அச்சித்தியால் முத்தியின்பம் உண்டாம் என்னும் உண்மைதோன்ற ஆ - சிவஞானம் க - மோக்ஷம், ம - மலநாசம் என்றும் பொருள்படுத்தி யிருக்கின்றனர். இவ்வரிய பொருளெல்லாம் உணர்த்துவதாகிய ஆகமசாஸ்திரவிசாரம் சைவசமயிகளாகிய நமக்கெல்லாம் அவசியம். அவ்வாகமசாஸ்திரம் வடமொழி தென்மொழிகளில் காணக்கிடக்கின்றது. ஆகமம் என்னும் பெயர் வடமொழியிலுள்ள காமிகாதி வாதுளாந்தமான இருபத்தெட்டுக்கும், தென்மொழியிலுள்ள சித்தாந்தமென்னும் பெயர் திருவுந்தியார் ஆதியாக சங்கற்பநிராகரணம் ஈறாகவுள்ள பதினான்கு சாஸ்திரங்கட்கும் வழங்கிவருகின்றன.

இவ்வாறு இருவகைப்பெயரால் வழங்கிவரினும் திரிபதார்த்த இலக்கணமும் முத்திமுடிபும் இவையாமென உணர்த்துவது அந்த இருபத்தெட்டும் இந்த பதினான்குமே யாகலான் இவையிரண்டையும் ஆகமமெனினும் சித்தாந்தசாஸ்திர மெனினும் ஒக்கும்.

இச்சித்தாந்த சாஸ்திரங்கள் தமது அறிவினால் கற்றுணரும் எளியதன்மையை யுடைத்தானவைகளன்று. அவ்வகையாய் உணரத்தொடங்கின் அது "சாத்திரத்தையோதினர்க்குச் சற்குருவின் றன்வசன - மாத்திரத்தே வாய்த்தநலம் வந்துறுமே - ஆர்த்தகடல், தண்ணீர்குடித்தவர்க்குத் தாகந்தணிந்திடுமோ - தெண்ணீர்மையா யிதை

ளைச் செப்பு" என்பதுபோலாமன்றி அறிவடங்கி அவ்வழியே நிற்குஞ் செயலைச்செய்ய மாட்டாது. ஆகலான் சிவதீக்ஷையுடையவர்களாய் குருபூசை சிவபூசை மகேஹஸ்வரபூஜைகளை அன்புடன்செய்ய வல்லவர்களாயுள்ள நல்லோர்கள்பால் சென்று அவர்களை வழிபட்டு அவர்கள் வாயிலாய்க் கேட்டுச் சிந்திப்பதுவே ஆன்றோரது ஆட்சியாம்.

இவ்வருமையை யுணராதவர் குருபூஜையாதிகளைத் தாமும் விரும்பாமலும் சொல்வோராவது இவையுடையவராயிருக்கின்றனரா வென்று பாராமலும் ஏனைய நூல்களைப்போலவே இவற்றையும் மனம் போனவாறெல்லாம் கேட்டும் பிறர்க்குச் சொல்லியும் மகிழ்ந்து திரிந்துவருகின்றனர்.

ஆதலான் சைவசமயிகளாயிருக்கின்றவ ரெல்லாம் இந்நூல்களை ஓதாதவராயிருப்பாராயின் அவரெல்லாம் குருபூஜையாதி மூன்றினும் ஆசையுள்ளவராய் ஓதிவரவும், ஓதிவந்தவரெல்லாம் ஐயந்திர உணரும் வகையான் உணரவும், உணரவந்தவரெல்லாம் பிறர்க்குரையாது போதலொழிந்து பிறர்க்குரைக்கவும், பிறர்க்குறைக்கும் அவ்வளவிலொழியாது தாமும் அடங்கப்பெற்று ஒழுகவுமே ஒவ்வொரு திருக்கூட்டத்தவரும் முயற்சியுடையராயிருப்பின் வையகம் துயர்தீர்ந்து சிவபெருமானருளைப் பெற்றுய்யும்.

(இன்னும்வரும்.)

இங்ஙனம்:
ஸ்ரீமத் ஏகாம்பர சிவயோகிகள் அடித்தொண்டன்,
வைதிக சைவசித்தாந்தப் பிரசங்க ரத்னாகரம்
கா. ஆலாலசுந்தரம் பிள்ளை.

---

திருக்குறுந்தொகை.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர்த் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே.

சைவம் ஓங்குக — சிவனடியார் வாழ்க.

---

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
13 NOV 1915
MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 1.] || இராக்ஷசஞு கார்த்திகைமீ 1915ஞு நவம்பர்மீ || [இதழ் 11.

திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

## தாருகவன முனிவர் சரித்திரம்.

(175 - வது பக்கத்தொடர்ச்சி.)

சிவபெருமான் அவ்வாறு செல்லுதலும், மாதுருவங்கொண்ட மாயனுர், முனிவர்களியாவரும் காமவிகாரங்கொண்டு தம்மைத் தொடர்ந்துவர, அவரைச்சந்தித்தனர். இவ்வாறு சிவபெருமானும் திருமாலும் சந்தித்தமை கங்கையும் யமுனையும் கலந்ததுபோலிருந்தது. சிவபெருமானுடைய திருமேனியைத் தரிசிக்க அம்முனிவர்களுக்குப் புண்ணியமில்லாமையால், இறைவனுர் தாம்கொண்டிருந்த திருவுருவத்தை மறைத்து அவர்களுக்கு வேறொருவடிவத்துடன் தோன்றினுர். அவர்கள் அவ்வாறு தோன்றிய இறைவனுரையும் அவரைப் பின்தொடர்ந்துசென்ற தங்கள் மனைவிமார்களையுங்கண்டு, அடங்காதவதிசயமும் நாணமுங்கொண்டு, "ஐயையோ, இவர்களும் நம்மைப்போலவே காமவிகாரங்கொண்டு, நாணமும் கற்பு நிலையும் நீங்கி இவனைப் பின்தொடர்ந்து வந்தார்கள்போலும்" என்று சொல்லிக்கொண்டு, மோகினியால் வைத்த மையலைச் சற்றேயடக்கிக் கொண்டு, மானமீதூர வருந்தி ஏங்கி "இவள் யாரோ ஒருத்தி வந்து நம்மை, மயக்கித் தன்னிடத்தில் மோகமுண்டாகும்படிச்

செய்து, நாம் நெடுங்காலமாகச் செய்துகொண்டுவந்த அரியதவங்களையெல்லாம் அழித்துப் பாழாக்கினாள். இவன் யாரோ வொருவன்வந்து நம்முடைய மனைவியரின் சிறந்த கற்புநிலையையழித்தான். ஐயையோ, இதென்னமாயம்!" என்றுசொல்லிக்கொண்டு இவ்வாறுசெய்தவர்கள் யாவராயிருக்கலாமென்று யாவருங்கூடி யாலோசித்து "இம்மாதரின் கற்பினையழித்தவன் கைலையில்வசிக்குங் கங்காளனே யாவன். நம்முடைய தவத்தையழித்தவன் மண்ணைத்தின்ற மாயனே யாவன். இவ்விருவருள் மாயவன் தானே தன்னிச்சையின்படி நம்மிடம் வந்திருக்கமாட்டான். இவன் அந்தச் சிவன்பேச்சைக் கேட்டுக்கொண்டுவந்து இவ்வாறுசெய்தான். ஆனாலும், இவன்செய்தது நமக்கு ஒருபொருளல்ல. இவனால் நம்முடைய தவங்கள் அழிந்துபோனாலும் பெரிதல்ல. அதற்குப் பிராயச்சித்தஞ்செய்துகொண்டு, மறுபடியும் தவஞ்செய்யலாம். சிவன்செய்ததுதான் கொடிய அக்கிரமம். அவன் பிச்சையெடுப்பவன்போல் வந்து ஒன்றுந்தெரியாத பேதைகளாகிய நம்முடைய மனைவியரைக் கெடுத்துவிட்டான். ஒருமுறையழிந்தகற்பு மீண்டும் வரப்போவதில்லை. இதனால் நமக்கு எக்காலத்தும் நீங்காத அபகீர்த்தியுண்டாய்விட்டது," என்று சொல்லிக்கொண்டு, மானத்தால் உயிர்நீங்கினாரை யொத்துக் கோபாவேசங்கொண்டு, தங்கள் மனைவிமார்களைப்பார்த்து, "ஓ, ஓ, பேதைமார்களே, ஆடையவிழவும் ஆபரணங்கழலவும் காமவிகாரங்கொண்டு நாணமின்றிக் கற்பிழந்து எவன் பின்னே போகின்றீர்கள்? நீங்கள் இனி உயிர் வாழ்தலினும் சாதலேநன்று. திரும்பி உங்கள் வீடுகளுக்குப்போய்ச் சேருங்கள் என்றார்கள்". முனிபன்னியர்கள் தங்கள் கணவன்மார் இவ்வாறு கூறியதைக்கேட்டு "இவரைத்தரிசித்தவர்கள் இறவாத இன்பக்கடலில் மூழ்குவதன்றி இறந்துபோவதுமுண்டோ! இம்முனிவர்கள் பித்தர்கள்போலும்!" என்று சொல்லிக்கொண்டு பிச்சாடனமூர்த்தியின் திருவுருவம் பதிந்த மனத்தினராய், அப்பிரானார் திருவருளினால் திரும்பிப்போய் தங்கள் வீடுகளை யடைந்தார்கள். அப்போது மோகினிவடிவங்கொண்ட திருமால் சிவபெருமான் திருவருளால் அவ்வடிவத்தைமாற்றி ஆணுருக்கொண்டு நின்றனர். இத்திருவிளையாடலைக்கண்டு களித்துப்புமாறு பிரமாதிதேவர்களியாவரும் வந்து கூடினார்கள். அப்போது அம்முனிவர்கள் ஆதிமத்தியாந்த ரகிதராகிய அண்ணலாரை மிகவும் கோபித்துப்பார்த்து அவரைக்கொல்ல நிச்சயித்து ஒருகொடிய யாகத்தைச்செய்தார்கள். அப்போது அவ்வேள்வித் தீயினின்றும்



மிகவும் கோபாவேசத்தோடு ஒருபுலி தோன்றியது. முனிவர்கள் அப்புலியைப்பார்த்து "நீ சிவனைக்கொல்வாயாக" என்று வணங்கிவிடுப்ப அது விரைந்து இறைவனாரையடைதலும், இறைவனார் அதனைக்கொன்றுரித்து அதின்தோலை ஆடையாக உடுத்தனர்.

அதன்பின்னர் அம்முனிவர்கள் அவ்வேள்வித்தீயினின்றும் ஒன்றின்பின்னொன்றாகத் தோன்றிய மழு, மான், பாம்புகள், பூதகணங்கள், நகுவெண்டலை, மந்திரரூபமாகிய உடுக்கை, முயலகன், ஆகிய இவைகளையும் கடைசியாக அவ்வேள்வித் தீயையும் சிவபெருமானைக் கொல்ல ஏவினார்கள். இவைகள் ஒவ்வொன்றும் உலகடங்கலும் அழியும்படியான ஆரவாரங்களோடும் தனித்தனி ஒன்றின்பின்னொன்றாகச் சிவபிரானை யணுகியமாத்திரத்தில், பிரானார் மழுவைத் தமது ஆயுதமாக வோர் அங்கையிற்பற்றினர். மானையும் அவ்வாறே ஓர் மலர்க்கையிலேந்தினர். அரவங்களை ஆபரணமாகவணிந்தனர். பூதகணங்களைத் தமது புனிதசேனைகளாக்கிக் கொண்டனர். வெண்டலையைத் தமது வேணியிலணிந்தனர். மந்திரஉடுக்கையை யோர் மலர்க்கையிற் பற்றினர். வேள்வித்தீயைக் கையிலேந்தி முயலகனென்னும் பூதத்தினைத் தமது பாதபங்கயத்தாற் கீழே தள்ளி அவ்வடிக்கமலத்தினை அவன் முதுகில் ஊன்றிநின்றனர். தாங்கள் செய்தனவெல்லாம் பயனற்றழியவே அம்முனிவர்கள் சங்காரகர்த்தாவாகிய சங்கரனார் அழிந்துபோகும்படி அளவற்ற சாபங்கூறினர். அச்சாபமனைத்தும் யாதும் செய்யமாட்டாமல் ஊழித்தீமீது செல்லும்பஞ்சுபோல் உடனே பாழாயின. இறைவனார் தமது திருவடியால் ஊன்றிய முயலகன் மெல்ல மெல்ல உடலைத்தூக்கித்தூக்கி அசைதலும், சிதாகாசத்தின்கண்ணே என்றும் நீங்காமல் ஆனந்தநிருத்தஞ்செய்வதுபோல அவன்முதுகொடிய நடித்தருளினார். எல்லாம் தாமேயாயிருக்கும் இறைவனார் அவ்வாறு தாண்டவம்புரிதலும் சராசரங்களியாவும் நடுங்கின. வேள்விசெய்து பாவத்தைவிளைக்கும் அம்முனிவர்கள் நடுங்கிவிலகினார்கள். பிரமனும் திருமாலும்அந்நடனத்தைத் தரிசித்து மனமகிழ்ந்து தோத்திரஞ்செய்துகொண்டு அருகில் நின்றார்கள். இந்திரன் முதலிய தேவர்களும் பயந்துநின்றனர். உலகடங்கலும் தமது திருநடனத்தால் அயர்ந்து வீழ்ந்தமையை முதல்வனார் உணர்ந்து திருநடம்பற்றாது நிற்ப, தேவர்கள் முதலியோர் அன்போடு எழுந்துவணங்கினர். இறைவனார் அம்முனிவர்களுக்கு நல்லுணர்ச்சியைக் கொடுத்தலும் அவர்களும் விரைந்தெழுந்து பெருமானை வணங்கித் தாங்கள் செய்த பிழைகளைப்பொறுத்தருள

மாறு துதித்தனர். விருப்பு வெறுப்பில்லாத விமலனார் அவர்களைப் பார்த்து "நீங்கள் பாவச்செயல்களை விடுத்து யாம் கூறியுள்ளவேதாகமவிதிகளை யனுசரித்து, எம்மிடத்தில் அன்பு பூண்டு சிறந்த தவத்தினைச் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டருளி அவர்களையவ்வனத்திலிருக்கச்செய்து விஷ்ணுமுதலிய தேவர்களை அவரவரிடங்களுக்குச்செல்ல ஏவி திருக்கைலையை யடைந்து உமாதேவியாரோடு வீற்றிருந்தருளினார்.

இச்சரித்திரத்தால் சிவபெருமானை வணங்காதார் எவ்வளவு தவம் முதலிய சற்கருமங்களைச் செய்தாலும் அவற்றால் யாதொருபயனையுமடையமாட்டார்களென்பதும், அவர்கள் செய்யும் அறச்செயல்களும்பாவச்செயல்களாய்முடியும் என்பதும், உயிர்களுக்குவினைப்பயன்களையூட்டுவிப்பார் சிவபெருமானே யென்பதும், அவரன்றியோரணுவும் அசையாதென்பதும், அவரை வணங்குவார்க்கே ஆக்கமும் வணங்காதார்க்குக்கேடும் உண்டாகும் என்பதும், அவர்புலித்தோல், மழு, மான், அரவம், பூதசேனை, நகுவெண்டலை, உடுக்கை, முயலகன், அனல் ஆகிய இவைகளையுடையவராயிருத்தற்குக் காரணமும் உணரலாகும். இவைகளையறிவித்தற்கே சிவாலயங்கடோறும் பிட்சாடனர் மகோற்சவம் நடத்தப்படுகின்றது.

**தேவாரம்.**

படுவிப்பா யுனக்கேயாள் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன் றோலுடுத் துழல்வானே
கெடுவிப்பா யல்லாதார் கேடிலாப் பொன்னடிக்கே
விடுவிப்பாய் குறுகாவூர் வெள்ளடை நீயன்றே.

---

# மெய்யுணர்வு.

**திருவாசகம்.**

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாவுன் சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம்.

மெய், வாய்மை, உண்மை, சத்து என்பன ஒருபொருட் சொற்கள். உணர்வு, அறிவு, போதம், ஞானம், சித்து என்பன ஒருபொருட்சொற்கள். மெய்யுணர்வு என்னுஞ் சொற்றொடர் மெய்ப்பொருளை யறியும் அறிவு என்று பொருள்படும். மெய்ப்பொருளை யறி-



யும் அறிவு எனவே, மெய்ப்பொருள் ஒன்றும், பொய்ப்பொருள் ஒன்றும், இவைகளையறியும் அறிவுப்பொருள் ஒன்றும் ஆக மூன்று பொருள்கள் உண்டென்பது பெறப்படும். இவற்றுள் மெய்ப்பொருள் பதி அல்லது சிவம் எனவும், பொய்ப்பொருள் பாசம் எனவும், அறிவுப்பொருள் பசு அல்லது ஆன்மா எனவும் சொல்லப்படும். பதிப்பொருள் எக்காலத்தும் தோற்றக் கேடுகளின்றி நிர்விகாரமாயிருப்பதொன்றாகலின் அது வொன்றே மெய்ப்பொருள் எனவும், அதனையறியும் அறிவே மெய்யறிவு, அல்லது மெய்யுணர்வு, அல்லது சிவஞானம் எனவும் சொல்லப்படும். பாசமும் பசுவும் பதியைப்போலவே அனாதி நித்தியப்பொருள்களாயிருக்க, அவைகளும் ஏன் மெய்ப்பொருள்களாகாவெனில், பாசமானது சடப்பொருளாயிருத்தலானும், தனுகரணபுவனபோகங்களாகக் காரியப்பட்டு விகாரங்கள் மருவுதலானும், முத்தியிலும்ஆன்மபோத நீக்கத்திலும் தன்வலிகெட்டு நிற்றலானும், சர்வசங்காரகாலத்திற் சிவசத்தியில் ஒடுக்கமுறலானும், அது மெய்ப்பொருளாகாமல் கனவும்கானற்சலமும்போன்ற பொய்ப்பொருளேயாமென்க. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாயிருந்துகொண்டு, கேவலாவத்தையில் ஆணவம் வேறு தான் வேறு என்னாதபடி அவ்வாணவமலமேயாயிருத்தலானும், சகலாவத்தையில் பிறப்பிறப்புகளால் விகாரமெய்துதலானும், சுத்தாவத்தையில் ஆன்மபோதம் நசித்துச் சிவமேயாய் விடுதலானும், சர்வசங்காரகாலத்தில் சர்வான்மாக்களும் சிவத்திலொடுங்கச்சிவம் ஒன்றேசேட்டித்திருத்தலானும், ஆன்மாவும் மெய்ப்பொருளென்று சொல்லப்படாமல் சிவமொன்றே மெய்ப்பொருளென நாட்டப்படுமென்க. ஆதலால், இத்தகைய சிவபரம்பொருளையறியும் அறிவே மெய்யுணர்வு என்றுசொல்லப்படும். இதனைத் திருவள்ளுவதேவர் தாம் கூறியருளிய பொதுவேதமாகிய திருக்குறளில், மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்பதறிவு.

என விளங்க உரைத்தனர். இதில் "செம்பொருள்" என்றது சிவபரம்பொருளை. இதனைச் சிறப்புவேதமாகிய தமிழ்வேதம் "செம்பொருட்டுணிவே," "செம்மையேயாய சிவபதமளித்த செல்வமே," "செம்மைதருசத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே," "செம்மைபெறவெடுத்த திருத்தோடுடைய செவியனா, மெய்ம்மைமொழித் திருப்பதிகம்" என்றருளிச்செய்ததனால் உணர்க.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுள், பதியும் பசுவும்

(அறிவுடைய) சித்துப்பொருள்களாம். பாசம் (அறிவில்லாத) அசித்துப் பொருளாம். அறிவுடைப்பொருள்களாகிய சித்துப் பொருள்கள் இரண்டினுள் பதி அறிவிக்கும் சித்தும், பசு அறியுஞ் சித்துமாம். பதியறிவித்தாலன்றி பசு எதையும் தானே யறியமாட்டாது. இது பற்றியே தமிழ்வேதம் “காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே” என்றருளிச்செய்தது. ஆன்மா அறிவுப் பொருளாயிருக்க, அது ஏன் தானே எதையும் அறியாது என்னில், அது பதியைப் போல் பேரறிவாயிராமல், ஆணவமலத்தால் மறைப்புண்டு சிற்றறிவாயிருத்தலாலென்க. ஆன்ம அறிவு கண்ணொளியைப்போன்றது. பதியறிவு சூரியன் ஒளியைபோன்றது. கண்ணுக்கு இயற்கையாகவே ஒளியிருந்தும் அது சூரியனொளியின் உதவியின்றி எதையுங் காணாது. அதுபோல் ஆன்மா சிவம் அறிவித்தாலன்றி எதையும் தானே யறியாது. அன்றியும், படலத்தால் மறைப்புண்ட கண்ணானது சூரியனொளியிருந்தும் எதையுங் காணமாட்டாது. அதுபோல் ஆணவமென்னும் படலத்தால் மறைப்புண்டிருக்கும் ஆன்மா, தன்னுடன் சிவம் அத்துவிதமாகக் கலந்திருந்தாலும், தன்னையும் தன் தலைவராகிய சிவபெருமானையும் அறியமாட்டாமல், கனவையும் கானற்சலத்தையும் போன்ற பொய்ப்பொருள்களாகிய தனுகரண புவனபோகங்களைத் தானெனவுந் தனதெனவும், தலைவனார் செயலைத் தன் செயலெனவும் மயங்கி மதித்து, அவைகளையேபெரும் பற்றாகப் பற்றி, அப்பற்றுகாரணமாக வினைகளையீட்டி, அவ்வினை காரணமாகப் பிறந்து பிறந்துழலும்.

**திருவுந்தியார்.**

காயத்துண் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற.

ஆன்மகோடிகள் இவ்வாறு “பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப் பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம்” மேவிட்டுத் துயர்கூர்ந்திருத்தலை யுணர்ந்த பரம கருணாநிதியாகிய இறைவனார், அவைகள் மீது பெருங்கருணைகூர்ந்து அவ்வாணவ மலத்தின் வலியையடக்கி அவைகளைத் தமது பரமானந்தப் பதமலர் நீழலிற் சேர்க்கத் திருவுளங்கொண்டு, அழுக்கைக்கொண்டு அழுக்கையொழிப்பதுபோல், அவைகளின் வினைக்கீடாகப் பலவகைப்பட்ட பிறவிகளைக்கொடுத்து, வினைப்பயன்களை யுண்பித்து, இருவினை யொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் உண்டாகும் சமயம்



பார்த்து, ஞானாசிரியராயெழுந்தருளி, ஞானதீக்கைசெய்து, ஆணவமான படலத்தைப்போக்கி, மெய்ஞ்ஞானக்கண்ணைக் கொடுத்தருளுவர். அப்போது அதுவரையில் பொருளல்லவற்றைப் பொருளென்று மருண்டு துன்பக்கடலில் வீழ்ந்துகிடந்த ஆன்மாக்கள், அவைகளைப் பொய்யெனக் கண்டுநீங்கி, மெய்ப்பொருளாகிய சிவத்தை யுணர்ந்து அதனோடு இரண்டறக்கூடி இன்பமார்ந்திருக்கும்.

ஆணவமலம் சிவபெருமானார் ஞானாசிரியரா யெழுந்தருளி வந்து போக்கினாலன்றி, எக்காலத்தும் வேறெவ்வழியாலும்நீங்காது.

**திருவிளையாடற்புராணம்.**

கரவிலாதபே ரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவனாரு ளன்றியிக் கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கழிப்பது புணையினாலன்றி
யுரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவ தொக்கும்.

**திருக்களிற்றுப்படியார்.**

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்
தருள் வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

**திருவாசகம்.**

நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

சத்திநிபாதம் என்பதற்குச் சத்தியின் வீழ்ச்சி என்பது பொருள். “காகமானது கோடி கூடுகின்றாலு மொருகல்லின் முன்னெதிர் நிற்குமோ” என்றவாறு, பலகாக்கைகள் கூடியிருந்த விடத்தில் ஒரு கல் வந்து விழுமானால், அவ்வீழ்ச்சியானது அவ்விடத்திற் கூடியிருந்த காக்கைகளை யெல்லாம் அவ்விடத்தினின்றும் ஓட்டுவதுபோல், ஆன்மாவிடத்திற் சத்திநிபாதம் நிகழ்ந்தபோதே அதைப்பற்றிக்கொண்டிருந்த மனைவிமக்கள் மாடு வீடு என்பனவாதியாகிய பற்றுகளெல்லாம் பற்றறவொழிந்து, ஆன்மா பிரபஞ்சவாழ்க்கைக்குப் பயந்து மெய்யுணர்வை நாடி ஞானாசிரியனைத் தேடிச் செல்லும். அவ்வான்மாவுக்கு வினைப்பயன்களை மறைத்து நின்றாட்டிக்கொண்டு மறக்கருணை வடிவமாயிருந்த திரோதான சத்தியானது மலபரிபாகம் வரும்போது அறக்கருணை ரூபமாகிய

அருட்சத்தியாய் மாறிவிடும். அது அவ்வாறு மாறுதலே சத்திநிபாதமாகும். அவ்வருட்சத்தியையே சிவபெருமான் திருமேனியாகக் கொண்டு ஞானசிரியராயெழுந்தருளுவர். இச்சத்திநிபாதம் மலபரிபாகத்தால் உண்டாகும்.

மலபரிபாகம் என்பது மலம் தனது வலிகெடுதற்குரிய துணைக் காரணங்களெல்லாவற்றோடுங் கூடுதலாம். மலபரிபாகம் இருவினையொப்பால் உண்டாகும்.

இருவினையொப்பாவது நல்வினைப் பயனாகிய இன்பத்தில் விருப்பும், தீவினைப்பயனாகிய துன்பத்தில் வெறுப்புமின்றி, அவ்விரண்டையும் சிவனருளிச்செய்ததென்று சமமாகக்கண்டு அநுபவித்தலாம். இருவினையொப்பு வரப்பெற்றவர்கள் இன்பம் வந்தகாலத்தில் அவ்வின்பத்திலழுந்தி மகிழார். ஆதலால் அவர்கள் துன்பம் வந்தகாலத்தில் அத்துன்பத்தால் துயருறார்.

**திருக்குறள்.**

இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

இருவினையொப்பும் மலபரிபாகமும் இம்மை மறுமைப்பயன்களை யெதிர்நோக்காமல் வெறும் அன்புகாரணமாகச் செய்யும் சிவபத்தியால் உண்டாகும். சிவபத்தி, குருலிங்கசங்கமம் என்னும் மூன்றிடத்தும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வழியாற் செய்யப்படும்.

**பெரிய புராணம்.**

கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

சரியையின் முதிர்ச்சியில் கிரியையும், கிரியையின் முதிர்ச்சியில் யோகமும், யோகத்தின் முதிர்ச்சியில் ஞானமுமுண்டாம். சரியையில் கால்மலம் கழியும். கிரியையில் அரைமலம் அழியும். யோகத்தில் முக்கால்மலம்போம். ஞானத்தில் முழுமலம் போம்.

**பதி பசு பாச விளக்கம்.**

சரிதையி லாணவங் கால்ச ரிந்திடுங்
கிரியையி லரைமலங் கெடுதி யுற்றிடும்
மருவுயோ கத்தின்முக் கான்ம டிந்திடும்
விரிசிவ ஞானத்தில் முற்றும் வீயுமே.



சிவபத்தி புண்ணியமேலீட்டினால் உண்டாகும். பாவந்தேய்தலால் புண்ணியமேலிடும். ஆதலால் மெய்யுணர்வடையவேண்டுவோர் தீவினைகளைச் செய்யலாகாது. நல்வினைகளையே செய்தல்வேண்டும். இப்படி ஒழுகுவாராயின் அல்லனதேய அறம்பெருகும். அருளும் உண்டாகும்.

**தாயுமானசுவாமிகள் பாடல்.**

குற்றங் குறையக் குணமே லிடவருளை
யுற்றவரே யாவிக் குறவாம் பராபரமே.

இதுவரையிற் கூறியவாற்றால் பாவம் தேயப் புண்ணியம் வளரும் என்பதும், புண்ணியம் மேலிடச் சிவபத்தியுண்டாகும் என்பதும், உண்மைச்சிவபத்தியால் ஐம்புலனடங்கி அவாவொழிந்து இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாகும் என்பதும், மலபரிபாகத்தால் சத்திநிபாதம் உண்டாகும் என்பதும், சத்திநிபாதம் உண்டாகும்போது சிவபெருமான் ஞானசிரியராயெழுந்தருளிச் சீவபோதத்தை நீக்கிச் சிவஞானமாகிய மெய்யுணர்வைத்தந்து தன்னுடன் இரண்டறக்கூட்டி இன்பமார்ந்திருக்கச்செய்வர் என்பதும் விளங்கும்.

இத்தகைய மெய்யுணர்வு உண்டாதற்பொருட்டே, சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் பெறுதற்கரிய மானிடப்பிறவியைக் கொடுப்பதும், பஞ்சகிருத்தியம் செய்வதும், வேதாகமங்களை யருளிச்செய்ததும். ஆதலால் அவரை வழிபடப்பெற்றவரே மானிடப்பிறவியாலாய பயனைப்பெற்றவராவர். அவரை வழிபடாதவர்பெறுதற்கரிய வப்பேற்றையிழந்தவராவர்.

**திருமந்திரம்.**

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

**பதிபசுபாச விளக்கம்.**

மருவிய வுடல்வெ றுப்பும் வையக வெறுப்பும் வந்தால்
இருவினை யொப்பு மங்க ணெய்திடு மெய்துங் காலை
கருமல பாக முண்டாம் பாகத்தாற் கடிதிற் சேரும்
திருவருட் சத்தி பாதஞ் செறிந்திடுங் குருவு மன்றே.

காணுறு புலன்கள் போகிற் கரிசுறு மலம்போம் போனா
லாணவம் போகும் போனா லருயிர்ப் போதம் போகுஞ்

சேணுறு மொளிக்கு மேலாஞ் சிவப்பிர காசந் தோன்றும்
மாணவனே யிதுவே முத்தி நிலையென மதித்தி டாயே.

(இன்னும் வரும்.)

---

## திருக்குறள்.

### மெய்யுணர்தல்.

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு.

(இ - ள்.) பொய்ப்பொருள்களானவைகளை மெய்ப்பொருள்களெனவறியும் மயக்கவறிவாகிய அஞ்ஞானத்தால் துன்பத்துக்கேதுவாகிய பிறப்பு உண்டாகும் (எ - று.)

இதில் பொய்ப்பொருள்கள் என்றது தனுகரணபுவனபோகங்களை.

#### சிவஞானசித்தியார்.

மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வு
மெண்டரு பூத பேதயோனிக ளியாவு மெல்லாங்
கண்டவிந் திரமா சாலங் கனாக்கழு திரதங் காட்டி
யுண்டுபோ லின்றாம் பண்பி னுலகினை யசத்து மென்பர்.

#### திருநேரிசை.

பொருத்திய குரம்பை தன்னைப் பொருளெனக் கருத வேண்டாம்
இருத்தியெப் போது நெஞ்சு ளிறைவனை யேத்து மின்கள்
ஒருத்தியைப் பாகம் வைத்தங் கொருத்தியைச் சடையுள் வைத்த
துருத்தியஞ் சுடரி னானைத் தொண்டனேன் கண்ட வாறே.

இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(இ - ள்.) அம்மயக்கவறிவாகிய வஞ்ஞானத்தினின்றும் நீங்கிக் குற்றமற்ற மெய்யறிவை யுடையவராயினோர்க்கு, அம்மெய்யறிவானது நாகத்திற்கேதுவாகிய பிறவியைநீக்கி முத்தியின்பத்தைக் கொடுக்கும் (எ - று.)

#### தேவாரம்.

தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே
ஆனைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே
யூனைக்காவல்கைவிட்டுன்னையுகப்பாருணர்வாரே.



ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

(இ - ள்.) அஞ்ஞானமயமாகிய சந்தேகத்தினின்றும்நீங்கி மெய்யுணர்வடைந்தார்க்குத் தாம் அடைந்து நின்ற நிலவுலகத்தினும் அடையக்கடவதாகிய முத்தியுலகம் அடைந்ததாதல் உடைத்தாம். (எ - று.) சிவஞானிகள் பிரபஞ்சத்தைப் பொய்யெனக்கண்டு நீங்கலானும், அவர்கள் உள்ளத்தைச் சிவபெருமான் கோயிலாகக்கொண்டு வசித்தலானும், சிவஞானம் பெற்றவர்கள் இம்மையிலேயே முத்தியடைந்தவராவர் எனச்சீவன் முத்தர்களுடைய பெருமையை விளக்கியவாறும்.

#### திருக்குறுந்தொகை.

நாடி நாரண னான்முக னென்றிவர்
தேடியுந் திரிந்துங் காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே.

#### சிதம்பரச்செய்யுட் கோவை.

கூற்றங் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற் - சீற்றஞ்செய்
யேற்றினான் றில்லை யிடத்தினா னென்னினியாம்
போற்றினா னல்கும் பொருள்.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர் வில்லாத வர்க்கு.

(இ - ள்.) மெய்யுணர்வில்லாதவர்களுக்கு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தறிவும் அவ்வப்புலன்களை விட்டுத் தமக்கு வசப்பட்டவிடத்தும் அதனால் யாதொரு பயனுமின்றாம் (எ - று.)

மெய்யறிவுண்டாதற் பொருட்டே யைபறிவடக்குவதாகலான், அம்மெய்யறிவுண்டாகாதபோது ஐயறிவடக்குதலானும் பயனின்றாம் என்பதாம்.

#### வள்ளலார் சாத்திரம்.

ஐயெரி நாப்பணைந் தவித்தி ருப்பினு
மிருகா லடக்கி யொருகா னிற்பினுஞ்
சேயிழை மாதரைத் தீரத் தணப்பினு
முடையைத் துறக்கினு முணவை மறப்பினு
மம்மர் செய்மாயை மழுங்கா தம்ம
குருபர னோக்கிற் குழையு மன்றே.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) யாதொருபொருள் யாதோரியல்புடையதாய்த் தோன்றினும் அதைத்தோன்றிய விதமாகவே காணுமல் அப்பொருளிடத்திருந்தும் மெய்யாகிய பொருளைக்காண்பது மெய்யறிவாகும்.

இதனுல், பலவகைப்பட விரிந்து கிடக்கும் பிரபஞ்சமாகிய பொய்ப்பொருளை அவ்வவ்வகைப்பொருள்களாகக் காணுமல் அவையனைத்தையும் சிவமாகக்காணுதல் அறிவு என்பதும், இவ்வாறு காணுதவர்கள் எவ்வளவு அறிவுடையவராகக் காணப்பட்டாலும் அவர்களறிவு மெய்யறிவு அன்று என்பதும் பெறப்படும்.

### திருத்தாண்டகம்.

இருநிலனய்த் தீயாகி நீரு மாகி யியமானனு யெறியுங் காற்று மாகி
யருநிலைய திங்களாய் நாயி றாகி யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(இ - ள்.) இப்பிறவியிலே ஞானசிரியன்பால் ஞான நூல்களை ஓதி யுணர்ந்தவர்கள் திரும்பி இப்பிறவியினிடத்து வாராதவழியை யடைவார் (எ - று.)

தமிழ்வேதம் "கற்றவர்களுண்ணுங்கனி" யெனவும், "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை மற்றவராறியா மாணிக்கமலையை" எனவும், "கல்லாநெஞ்சில் நில்லானீசன்" எனவும், "கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல்கையாற் றொழுதேத்தப் பெற்ற மூர்ந்த பிரமாபுரமேவிய பெம்மான்" எனவுங் கூறுமாறு, மெய்யுணர்வு பெறவேண்டுவோர் ஞானசிரியன்பால் ஞானநூல்களை ஓதி அவன் உபதேசமொழிகளைக் கேட்டு அவ்வழி நிற்றல் வேண்டுமென்பதை விளக்கியவாறும்

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(இ - ள்.) ஆசிரியனிடம் கேட்ட உபதேசப்பொருள்களை ஒருவனது உள்ளமானது நிச்சயப்பட பிரமாணங்களாலும் யுத்தியினுலும் ஆராய்ந்து, உள்பொருளாகிய மெய்ப்பொருளை அறியுமாயின் அவனுக்கு மறுபடியும் பிறவியுண்டாகுமென்று எண்ணவேண்டுவதில்லை (எ - று.)



### திருவாசகம்.

காரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) பிறவிக்குக் காரண மெனப்படுகிற அஞ்ஞானமானது நீங்க மோக்ஷத்திற்குக் காரணமாகிய உண்மைப் பொருளைக் காண்பது மெய்யுணர்வாம் (எ - று.)

சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்மற் றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

(இ - ள்.) ஒருவன் எல்லாப் பொருள்களுக்குஞ் சார்பாகிய (சிவபரம்)பொருளை யுணர்ந்து இருவகைப் பற்றுகளுங்கெட வொழுகுவானுயின், முன் அவனைச் சேர்தற்குரியனவாயிருந்த துன்பங்கள் அவ்வுணர்வையும் ஒழுக்கத்தையும் அழித்துப்பின் சேரமாட்டாவாம் (எ - று.)

பிரபஞ்சம் பொய்யெனக்கண்டு இருவகைப்பற்றையும்விட்டு நீங்கிச் சிவனையுணர்ந்து மெய்ஞ்ஞான நிட்டைமேவும் சீவன் முத்தர்களுக்கு மறுபடியும் பிரபஞ்சப்பற்றும் உலோகாசாரமும் இவைகளாலுண்டாகும் துன்பமும் உண்டாகா வென்பதாம்.

### திருவாசகம்.

அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

(இ - ள்.) விருப்பு, வெறுப்பு, அஞ்ஞானம் எனப்படும் இம்மூன்று குற்றங்களின் பெயரும் கெடுதலால் அவைகளின் காரியங்களென்னும் வினைப்பயன்களாகிய துன்பங்கள் உண்டாதலில்லை (எ-று.)

சிவஞானிகளுக்கு விருப்பு வெறுப்பும் அஞ்ஞானமும் இல்லையாகையால் அவர்களுக்கு வினைப்பயனுகவரும் துன்பமும் இல்லையென்பதாம்.

### திருத்தாண்டகம்.

நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ
    நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
    மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
    சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
    கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

---

## திருக்குறள் முதற்பாவின்
# பரிமேலழகருரை விளக்கம்.

### திருக்குறள் முதற்பா.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

### பரிமேலழகருரை.

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலை யுடைத்து.

I. இது, தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை.

II. அகரத்திற்குத்தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத்தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க.

III. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி 'எழுத்தெல்லாம்' என்றார்.

IV. 'ஆதிபகவன்' என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு.

V. 'உலகு' என்றது, ஈண்டு உயிர்கண்மேனின்றது.

VI. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என உலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்குமுதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக்கொள்க.

VII. ஏகாரம், தேற்றத்தின்கண் வந்தது.

VIII. இப்பாட்டான், முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது.



### பரிமேலழகருரைவிளக்கம்.

I. "இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை."

ஈண்டுத் தலைமை என்றது காரணமாதற்றன்மையை. எடுத்துக்காட்டுவமையாவது, பிம்பப் பிரதிபிம்பத்தன்மையால் இரண்டு வாக்கியங்களாய் வரும் உவமையாம். இது, நிகரெடுத்துக்காட்டுவமை, முரணெடுத்துக்காட்டுவமை என இருவகைப்படும். அவற்றுள், இப்பாட்டு-அகரத்திற்கும் ஆதிபகவற்கும் உள்ள பிம்பப் பிரதிபிம்பத்தன்மையை உணர்த்தலால், நிகரெடுத்துக்காட்டுவமையென்க. ஈண்டுப் பிம்பப்பிரதிபிம்பத்தன்மையாவது: அகரம் ஏனைய எழுத்துக்களியங்குதற்குக் காரணமாகநிற்றலும், ஆதிபகவன் உலகமுணர்தற்குக் காரணமாகநிற்றலுமாகிய சாதிருசியதர்மமாம். அவ்வாறுதலின், அகரத்திற்கும் ஆதிபகவற்கும் உள்ள சுவாதந்திரியமும், ஏனைய எழுத்துக்கட்கும் உலகிற்கும் உள்ள பாரதந்திரியமும், சுதந்திரப் பாரதந்திரப் பொருள்களுக்குள்ள வியாபக வியாப்பிய சம்பந்தமும் இனிது விளங்காநிற்கும்.

II. "அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்று முணர்தலானுங் கொள்க."

அகரத்திற்குத் தலைமை முயற்சி முதலியவற்றான் விகாரமெய்தியவழியும் இயங்கப்பெறாத ஏனைய எழுத்துக்களோடு விரவிநின்று உபகரித்தன்மாத்திரத்தான் விகாரமெய்தாது நாதமாத்திரையான் இயல்பாற் பிறத்தலானும் என்பார் "அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலான்" என்றும், ஆதிபகவற்குத்தலைமை பொறிமுதலியவற்றோடு கூடியவழியும் உணரமாட்டாத உலகத்தோடு விரவிநின்று உபகரித்தன்மாத்திரத்தான் செயற்கையுணர்வெய்தாது இயற்கையுணர்வான் முழுதுமுணர்தலானும் என்பார் "ஆதிபகவற்குத்தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலான்" என்றுங் கூறினார். உம்மைகள்-எண்ணின்கண் வந்தன.

எழுத்துக்களெல்லாம் முயற்சிமுதலியவற்றான் விகாரமெய்தியவழியும் அகரமின்றி இயங்கப்பெறாமையை "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்" என்னுஞ் சூத்திரத்தானும், உலகம் பொறிமுதலியவற்றோடு கூடியவழியும் முதல்வனையின்றி யுணரமாட்டாமையை

“ மருவிய பொறியி லொன்று பாபூத மைந்தி லொன்றுங், கருவிகணான்கு நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி, யொருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத், தெரிவுறு தவனோ ழிந்தத் திரள்களுஞ்செயலி லாவே” என்னுந் திருவாக்கானும் அறிக. எழுத்துக்களோடு விரவிநிற்றலால் அகரத்திற்கு விகாரமின்மையை “மெய்யோடியையினு முயிரியறிரியா ” என்னுஞ் சூத்திரத்தானும், உலகத்தோடு விரவி நிற்றலால் முதல்வற்கு விகாரமின்மையை “ பரனுயிருணர்வொடுபாச பேதமும், விரவுறு தெங்கனு மேவு முண்மையே” என்னுந் திருவாக்கானும் அறிக.

விகாரத்தாற்பிறத்தலாவது,—விந்துவின் காரியமாகிய நாதம் பிராணவுதாநங்களின் தொழிற்பாட்டால் உரங்கண்டமுச்சிமூக்கென்னும் இடங்களை யுற்று இதழ்நாப்பல்அண்ணங்களிற் பட்டுச் சிதறுண்டு வெவ்வேறெழுத்தாகிய ஒலியாய்ப் பிறத்தலாம்.

இயல்பாற்பிறத்தலாவது,—விந்துவின் காரியமாகிய நாதம் பிராணவுதாநங்களின் தொழிற்பாட்டால் அங்காந்தமாத்திரத்தில் தன்னியல்பின் மாறுபடாது பிறத்தலாம்.

நாதம் = சுத்தமாயாவிருத்தியாகிய பரசரீரத்தினின்றுந் தோன்றிய வியஞ்சகவொலி.

செயற்கையுணர்வாவது,—அநாதிபெத்தசித்துத் தன்மையால் வியஞ்சகமுள்வழி அதுவதுவாய் ஏகதேசமாத்திரையின் உணருமுணர்வாம்.

இயற்கையுணர்வாவது,—அநாதி முத்தசித்துத் தன்மையால் எவற்றையும் ஒருங்கே ஓரியைபான் உணருமுணர்வாம்.

அகரம் கலப்பினு லெழுத்தெல்லாமாகவும், பொருண்மையால் வேறாகவும், ஏனையவெழுத்துக்கட்குயிராதற்றன்மையால் உடனாகவும் நிற்கும். இதனை “ அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறு யமர்ந்ததென ” என்னுந் திருவாக்கான் அறியலாம்.

முதல்வன் கலப்பினு லுலகெல்லாமாகவும், பொருண்மையால் வேறாகவும், உயிர்க்குயிராதற்றன்மையால் உடனாகவும் நிற்பன். இதனை, ‘ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம,’’ “ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம” என்னும் இத்தொடக்கத்தனவாகிய சுருதிகளானும், “ அவையேதானேயாய், ” “ உலகெலாமாகி வேறாயுடனுமாய், ” “ உடலுயிர்கண்ணருக்கனறிவொளிபோல் ” என்னும் இவைமுதலிய திருவாக்குக்களானும் அறியலாம்.

(இன்னும் வரும்.)

பா. தங்காதரதேவர்,
ஆயுர்வேதபண்டிதர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 MAY 1917 MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

2.] | இராக்ஷசஞு பங்குனிமீ 1916ஞு மார்ச்மீ | [இதழ் 3.

## திருத்தொண்டர் திருவந்தாதி.

மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியாற்
பிணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலிற்
பிணியன கன்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர் பிரான்ற னருந்தமிழே.

## அப்பூதியடிகணாயனார் புராணம்.

(25-வது பக்கத்தொடர்ச்சி.)

திருநாவுக்கரசுநாயனார் திருவமுது செய்தற்கிசைந்தருளுதலும், அப்பூதியடிகணாயனாருக்கும் அவர் பத்தினியாருக்கும் மக்களுக்கும் உண்டான மனமகிழ்ச்சிக்கு அளவில்லை. அப்பூதியடிகணாயனார் தேவியாரைப்பார்த்து “பெண்ணே, இன்று நமக்குச் சுபதினமாயிற்று. நாம் கும்பிட்டகுலதெய்வம் தானே நம்மைத்தேடிவந்தது. நம்முடைய தவமே தவம்” என்றனர். அம்மையார் கணவனாரை நோக்கி “நாயகரே, இவர் இங்கே எழுந்தருளுவது முன்னமே நமக்குத்தெரிந்திருந்தால், நாம் இவர் வந்தவழியெங்கும் பந்தரிட்டு, தோரணங்கணிரைத்து, பூமாலைகள்தூக்கி, கொடிகள்கட்டி, வாழைகள்நட்டு அலங்கரித்து, மங்கலவாத்தியங்களோடும் சிவனடியார்களோடும் சுற்றத்தவர்களோடும் எதிர்கொண்டுசென்று பணிந்து, இங்கே எழுந்தருளுவித்திருக்கலாமல்லவா; அவ்வாறுசெய்தற்கு நமக்குப் புண்ணியமில்லாமற்போயிற்றே” என்று சொல்லிக் கவலையுறுவாராயினர்.

அப்போது அவர்கள் புதல்வருள் ஒருவர் பிதாவைப்பார்த்து "அப்பா இவரைப் பார்க்கப்பார்க்க என்மனம் பரவசமாகிறது. நெஞ்சம் நெக்குநெக்குருகுகின்றது. இவரை எத்தனைமுறை வணங்கினாலும் ஆசை தீரவில்லை" என்றார். மற்றொரு புதல்வர் தாயைப் பார்த்து "அன்னாய் சாமியார் பசித்திருப்பார். அவருக்குவிரைந்து திருவமுதுபடைத்தல்வேண்டும்" என்றார். மற்றொரு புதல்வர் "அம்மா சாமியாருக்கு நல்ல நல்ல பலகாரம்பாயசம் முதலியவற்றோடு அமுது படைத்தல்வேண்டும்" என்றார். இவ்வாறு இவர்கள் யாவரும் எல்லையற்றகளிப்பினால் தம்மைம்மறந்து பல பல சொல்லிக்கொண்டு, பரிசனங்களையும் வேலைசெய்யவிடாமல், தாங்களே எல்லா வேலைகளையுஞ் செய்யத் தொடங்கித் திருவமுது சமைக்கலுற்றார்கள். திருநாவுக்கரசுநாயனார், அப்பூதியடிகளார்மாத்திரமன்றி அவர்பத்தினியாரும் புதல்வர்களுங் கூடச்சிவனடியார்களிடத்தில் வைத்திருந்த அன்பின் பெருக்கத்தைத் தமதுஅருட்கண்ணால்நோக்கி அகமகிழ்ந்திருந்தனர். திருவமுதுசமைத்து முடிந்தவுடன், நாயனாரும் அவர் பத்தினியாரும், தமக்கு எப்போது ஏவவிடுவார்களென்று ஆவலோடு எதிர்பார்த்திருந்த தங்கள் சேட்டபுத்திரரை நோக்கி "அப்பா, மூத்த திருநாவுக்கரசே காலந் தாழ்க்கின்றது; நாயனாருக்கு அமுதுபடைத்தற்கு நல்ல வாழைக்குருத்தொன்று விரைந்து அறுத்துக்கொண்டுவா" என்றேவினார்கள். அச்செல்வப்புதல்வர் தமது தாய் தந்தையர் அத்திருப்பணியைத்தமக்குக் கொடுத்ததற்காக மிகமகிழ்ந்து அவர்களைப்புகழ்ந்து வணங்கி, உடனே தோட்டத்திற்கு ஓடிச்சென்று அங்குள்ள வாழைகளை ஒவ்வொன்றாகச் சுற்றிப்பார்த்து ஒருவாழையில் மிகவும் நல்லகுருத்திருக்கக்கண்டார். அதில் ஒருசர்ப்பம் இருந்தது. அவர் மனமெல்லாம் திருநாவுக்கரசுநாயனார் திருவடிகளிடத்திலும் அவர் திருவமுது செய்தற்குவேண்டிய குருத்திலுமே இருந்தமையாலும், அப்பூதியடிகணாயனாரால் மெய்யன்பெனப்படுவது இத்தன்மைத்தென உலகினரறிந்து உச்சீவிக்கவேண்டிய நிமித்தத்தாலும், அவ்வரவம் அவர் கண்ணுக்குப்புலப்படவில்லை. ஆதலால், அவர் அதைப்பாராமல் விரைந்து அக்குருத்தையரிதலும் அந்நாகம் அவர் கையிற்கடித்துவிட்டது. அப்போது அச்செல்வப்புதல்வர் தம்மைப் பாம்புகடித்ததனால் உண்டான வருத்தத்தையும், அதனால் தமக்கு மரணம் நேரிடுமென்பதையும் சிறிதும் எண்ணாமல், திருநாவுக்கரசுநாயனார் திருவமுதுசெய்தருளுதற்குத் தம்மால் இடையூறு நேரிடுமென்று உள்ளம்பதைத்து, "நான் என்னைச் சர்ப்பந்தீண்டியதை ஒருவருக்குஞ் சொல்லாமல் இக்குருத்தைக் கொண்டுபோய்க் கொடுப்பேன்" என்று மனத்தில் நினைத்துக்கொண்டு விடவேகமும் பின்னிடும்படி ஓடிச்சென்று, அக்கதலிக்குருத்தைத்



தமது தாயார்கையிற்கொடுத்தார். உடனே விடவேகம் தலைக்கேறிவிட்டமையால் அவர் அறிவிழந்து தாயார்முன் நிலத்தில்வீழ்ந்து உயிர் துறந்தார். அதைத்தாய்தந்தையர்கண்டு, அவர் அவ்வாறு திடீரென வீழ்ந்திறந்தமைக்குக்காரணம் தெரியாமல் மனம் பதைத்து, பின்பு அவரிடத்தில் தோன்றிய குறிகளால் அவர் அரவம் தீண்டியிறந்தாரென்றறிந்து, தங்கள் பெறலரும்புதல்வர் இறந்தமையைக்குறித்து ஒருசிறிதும் வருத்தமுறாது "ஐயையோ! கைக்கெட்டிய தேவாமிர்தம் வாய்க்கெட்டாதவாறுபோல, நாயனார் நமது வீட்டுக்குத் தாமே வலிய எழுந்தருளியும், அவர் திருவமுதுசெய்தற்கு இவனால் இடையூறு விளைந்ததே" என்று இறந்த புதல்வரை நொந்துவருந்தினார்கள்.

பின்பு அம்மையார் தமதுகணவனாரைப்பார்த்து "நாயகரே இனி நாம் இதனை நினைந்து நினைந்து வருத்தப்படுவதிற் பிரயோசனமில்லை. நான் ஒரு உபாயஞ்சொல்லுகிறேன். அவ்வாறுசெய்தால், நம்முடைய மனவிருப்பம் நிறைவேறும்" என்றனர். நாயனார் "பெண்ணே அதென்ன உபாயம்" என்றார். அம்மையார் "இவன் இறந்தது வேறொருவருக்கும் தெரியாதபடி, இச்சவத்தை மறைத்துவைத்துச் சுவாமிகளுக்கு அமுதுபடைப்போம்" என்றனர். நாயனார் "ஆம் ஆம், இது நல்ல உபாயம், அப்படியே செய்வோம்" என்றனர். உடனே பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்களாகிய அவ்விருவரும், தம்பெறலரும் புதல்வரைப் பாயிற்சுருட்டி மூடிப் புறக்கடையிற்கொண்டுபோய் மறைத்துவைத்து, காலந்தாழ்க்கின்றதென்று வருந்தி, பரிசுத்தமாகிய கோமய நீரினால் தரையைமெழுகி, கோலமிட்டு, திருவிளக்கேற்றி, ஆசனமிட்டு, பலவகைப் பட்டசித்திரான்னங்கள், பலகாரங்கள், கறியமுது முதலானவைகளையெல்லாம், வெவ்வேறு பாத்திரங்களில் வரிசை வரிசையாகவைத்துத் திருநாவுக்கரசுநாயனாரிடம் முகமலர்ச்சியோடு சென்று, அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்து "எம்மூவேழ்சுற்ற முரணுறு நரகிடை யாழாமே யருளரசே காலந்தாழ்த்தமைக்கு மன்னித்துத் திருவமுதுசெய்ய எழுந்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

அவ்வேண்டுகோளின்படி வாகீசமுனிவர் எழுந்தருளுதலும் அவ்விருவரும் அவருடைய திருவடித்தாமரைகளை நீரினால் விளக்கித் திருவமுது செய்தற்கமைத்த ஆசனத்தில் அமர்வித்தார்கள். வாகீசமுனிவர் திருநீறுதரித்துக்கொண்டு, அவ்விருவருக்கும் திருநீறுகொடுத்தருளி, புதல்வர்களுக்கும் கொடுத்தருளும்போது மூத்தபுதல்வரைக்காணாமையால் அப்பூதியடிகணாயனாரைப்பார்த்து "ஐயரே, உமது மூத்தபுதல்வனையும் இங்கேயழையும். அவனுக்கும் திருநீறு அளிப்போம்" என்

றனர். அதைக்கேட்டமாத்திரத்தில் அப்பூதியடிகணாயனார் மனந்திடுக்கிட்டு இன்னது செய்வதென்றுதெரியாமல் தேவியார் முகத்தைப்பார்த்தனர். தேவியாரும் இன்னது சொல்வதென்றுதெரியாமலும் தமது கணவனார் முகவாட்டத்தைப்பார்த்தும் மனங்கலங்கிநின்றார். இவர்கள் பிறந்து பொய்சொல்லியறியாதவர்களாகையால் "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்னும் வேதவசனத்தின்படியேனும் வதேனும் ஒரு பொய் சொல்லவும் நாவெழவில்லை. நடந்ததைச்சொல்லவும் மனம்வரவில்லை. இதனால் அப்பூதியடிகணாயனார் மனந்தடுமாறி, "இறந்தபுதல்வன் நல்ல தருணத்தில் நமக்கு உதவுதலின்றி இடையூறு செய்தான்" என்று நினைத்து, அவனை நொந்து, திருநாவுக்கரசுநாயனாரைப்பார்த்து, "சுவாமீ அவன் இப்போது இங்கே உதவமாட்டான். அவனுக்காகக் காலந்தாழ்க்காது திருவமுது செய்தருளல்வேண்டும்" என்று இறைஞ்சி நின்றார்.

உலகெங்குந் தெய்வத்திருநீற்றுநெறி தழைத்தோங்கத் திருவவதாரஞ் செய்தருளிய திருநாவுக்கரசுநாயனார், அப்பூதியடிகணாயனாரின் உள்ளத்திலிருந்த தடுமாற்றத்தைத் திருவருட் குறிப்பாலுணர்ந்து, அவரைநோக்கி, "ஐயரே, தாம் இவ்வாறுசொல்வது நன்றாயில்லை. அவன் யாதுசெய்தான், அவனுக்குயாதுநேரிட்டது. உண்மையை மறைக்காமற் சொல்லும். கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம், எற்றுக்கோ அஞ்சுவது. என்றனர்.

முத்தமிழ்க்கரசராகிய திருநாவுக்கரசுநாயனார் இவ்வாறு அருளிச்செய்தலும், அவர் முத்தொழிற்கும் ஈசர் என்பதையுணர்ந்த அப்பூதியடிகணாயனார், அவரால் தமது புதல்வர் உயிர்பெற்றெழுவாரென்றெண்ணிச் சந்தோஷிப்பதைவிட்டு, திருநாவுக்கரசுநாயனார் திருவமுதுசெய்தருளுதற்கு இடையூறாயிற்றே என்று மனம் வருந்தி அவர் கட்டளையைமீறி நடக்கமாட்டாமல் தமது குமாரருக்குற்றதுரைத்தனர். அதைத் திருநாவுக்கரசுநாயனார்கேட்டு அப்பூதியடிகணாயனாருடைய உழுவலன்பை வியந்துநோக்கி "ஐயரே, தமது புதல்வர் திடீரென்று பாம்புகடித்திறந்துவிடவும், அதனால் மனங்கலங்காமல் அதை மறைத்து, அவன் உதவமாட்டான்' என்றுசொல்லி எமக்கு அமுது படைக்க ஆவல்கொண்டீரே! ஆ! ஆ! இது மிக நன்றாயிருக்கிறது! உலகில் உம்மைப்போல் இப்படிப் பத்தி செய்தவர் யாவர்! 'புத்திர சோகம் யாரே பொறுப்பவர் புவியிலம்மா'. 'கடந்தஞானிகளுங் கடப்பரோ மக்கண் மேற் காதல்'. ஆதலால் தாமே ஞானிகளும் வணங்கும் மகாஞானி" என்றுகூறியருளி, சவத்தைத் திருக்கோயிலின்



முன் கொணர்வித்து, "ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை" என்னும் முதலையுடைய திருப்பதிகத்தைப்பாடவாரம்பித்து, "பத்துக்கொ லாமடியார்செய்கை தானே" என்று முடித்து, தமது திருவுள்ளக்கருத்தை இறைவனாருக்கு விண்ணப்பித்தலும், அவரது திருவருளால் நித்திரைவிட்டெழுந்தவரைப்போல் அப்புதல்வர் உயிர்பெற்றெழுந்து திருநாவுக்கரசுநாயனார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். திருநாவுக்கரசுநாயனார் தாம் விரும்பியவாறே அவருக்குத் திருநீறு கொடுத்தருளினார். இவ்வற்புதத்தைக்கண்ட சிவனடியார்கள் கடலொலியும் பின்னிடும்படி ஹரத்வனி செய்தார்கள். சைவசமயமே சமயம், சைவசமயமே சமயம், என்றும் சிவனடியார் பெருமையே பெருமை, சிவனடியார் பெருமையே பெருமை என்றும் கூறி ஆகாயத்தில் உத்தரீயம்வீசி ஆனந்தக் கூத்தாடினார்கள்.

இறந்தபிள்ளை உயிர்பெற்றெழுந்தானென்று உலகினர்யாவரும் களிகூர்ந்துகொண்டாட, அதுகண்டும் அத்தாய்தந்தையர்கள் களிப்பிலராய் முகவாட்டத்தோடு தெரிவரும்பெருமைத் திருநாவுக்கரசுநாயனார் திருவமுது செய்தற்கு அப்பிள்ளை இடையூறுசெய்ததே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அதனைத் திருநாவுக்கரசுநாயனார் அறிந்து அவர்கள் திருமாளிகைக்கெழுந்தருளுதலும், அவ்விருவரும் மனக்களிப்பெய்தி உடன்போந்து மீண்டும் திருவமுதுசெய்யுமிடத்தைத் திருவலகிட்டுக்கோமயத்தால் மெழுகி, வெண்சுண்ணத்தாற்கோலமிட்டு, திருவிளக்கேற்றி, ஆசனமிட்டு, மூத்த திருநாவுக்கரசுகொண்டுவந்த பரிகலக்குருத்தைச் சுத்தஞ்செய்து விதிப்படியிட்டு, திருநாவுக்கரசுநாயனார் திருக்கரங்களைச் சுத்தஞ்செய்தற்கு மலர்மணங்கமழும் நீரைக்கொடுத்தார்கள். அப்போது திருநாவுக்கரசுநாயனார் அப்பூதியடிகணாயனாரைப் பார்த்து "ஐயரே, நீங்களனைவரும் பசித்திருக்க நாம்மாத்திரம் புசித்தற்கு நம்மனம் ஒருப்பட்டிலது; தாமும் தமது புத்திரர்களும் எம்முடன்கூடவே திருவமுது செய்தல்வேண்டும்" என்றருளிச்செய்தனர். வேதியர்பெருமான் "இப்பெரியோர் திருவமுதுசெய்து தெருக்கடையெறிந்த பரிகலமுண்ணுதற்கும் அருகனல்லாதனாயினேன் உடனிருந்து உண்ணுதற்கும் அருகனாவேனோ" என்று தமக்குள்ளே சிந்தித்துக்கொண்டு, அவர் கட்டளையைக் கடக்கமாட்டாதவராய்த் தாமும் தம்முடைய புத்திரர்களும் உடனிருந்து திருவமுது செய்யவும், அம்மையார் திருவமுதுபடைக்கவும் வாகீசமுனிவர் அடியார்களோடு திருவமுது செய்தருளினார். அன்றுமுதல் திருநாவுக்கரசுநாயனார் அவரைத்தமது அன்பிற்குரியாராகக்கொண்டு அவர் திருமாளிகையில் அவரோடு பலநாள் அளவளாவியிருந்தருளினார்.

பின்பு சமீபத்துள்ள திருப்பழனம் என்னும் சிவஸ்தலத்திற்கு எழுந்தருளி "சொன்மாலை பயில்கின்ற" என்னும் முதலையுடைய திருப்பதிகத்தைப்பாடும்போது, அதன் இறுதியில் "அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி, குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே" என்று அப்பூதியடிகணாயனாரின் திருத்தொண்டைச் சிறப்பித்தருளினார். அவ்வாறு தமிழ்வேதத்திலே திருநாவுக்கரசுநாயனாரால் சிறப்பித்துரைக்கப்பெற்ற அப்பூதியடிகணாயனார் நெடுங்காலம் திருநாவுக்கரசநாயனார் திருவடித்தியானத்தையே தெப்பமாகவும், அவர் திருநாமஸ்மரணையையே கோலாகவுங்கொண்டு பிறவிப்பெருங்கடலைக் கடந்து முத்தியங்கரையாம் தில்லைமன்றுடும் எல்லையிலின்பத் திறையடித் தலஞ்சேர்ந்தனர்.

## நால்வர்நான்மணிமாலை.

உற்றா னலன்றவந் தீயினின் றானல னூண்புனலா
அற்றா னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே.

---

## உலகெங்குஞ்சைவந்தழைத்தற்கு இலேசானவழி.

பலர் தனவான்களே சமயபரிபாலனஞ் செய்தற்குரியாரென்று எண்ணி அவர்கள் சமயபரிபாலனஞ்செய்ய முன்வரவில்லையென்று அவர்களைக் குறைகூறுகின்றார்கள். தனவான்கள் மாத்திரமன்றிப் பொருள் சிறிதுமில்லாதவர்களும் உலகெங்குஞ் சைவசமயந் தழைக்கச்செய்யலாம். எப்படியெனில், இதுபோன்றபத்திரிகையை வாசிக்கும் ஒவ்வொரு சிவநேயரும் மாதந்தோறும் இரண்டு மூன்று சிவநேயர்களை இதற்குச் சந்தாதாரராகச் சேர்த்துக்கொண்டுவந்தால் பதினாயிரக்கணக்காகச் சந்தாதாரர்கள் சேர்ந்துவிடுவார்கள். எண்ணிறந்தோர் இப்பத்திரிகையினால் சைவசமய உண்மைகளை எளிதில் உணர்ந்துகொள்வார்கள். அஃதன்றிப் பெருந்தொகைப்பொருள் சேர்ந்துவிடும். அது இப்பத்திரிகையைப் பல இடங்களிலும் விருத்திசெய்தற்கும், சைவசமயபரிபாலனத்திற்கு இன்றியமையாதனவாய வேறு பல காரியங்களைச்செய்தற்கும் ஏதுவாகும். ஒருகாசும் செலவில்லாமல் இவ்வளவு சுலபமாக ஒவ்வொருவரும் சமயபரிபாலனஞ் செய்யக்கூடியவர்களாயிருக்க, இவ்வாறு செய்யமுன்வராதுவர் பணக்காரர்களைமாத்திரம் ஏன் நோவவேண்டும்!



## சென்னைச்சிவனடியார்திருக்கூட்டத்தின் பதினேழாவதுவருட மகாஜனக்கூட்டம்.

சென்னைச் சிவனடியார்திருக்கூட்டத்தின் பதினேழாவது வருட மகாஜனக்கூட்டம் நிகழும் 1916ஸ்ரீ பிப்ரவரிமீ 20உ இதின் சபா மண்டபத்தில், ம-ா-ா-ஸ்ரீ சதுரை. இராஜாக்கண்ணுமுதலியார், பி. ஏ. அவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க்கூடியது.

அச்சமயத்தில் இச்சபையின் 1915ஸ்ரீ சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் வாசித்து அங்கீகரிக்கப்பட்டன.

இதனடியிற் குறித்த கனவான்கள் இச்சபையின் நிர்வாக சபையினராக நியமிக்கப்பெற்றார்கள்.

### சபைத்தலைவர்.

ம-ா-ா-ஸ்ரீ ச. இராஜாக்கண்ணுமுதலியாரவர்கள். பி. ஏ.

### உதவிச்சபைத்தலைவர்.

ம-ா-ா-ஸ்ரீ தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள். பி. ஏ.

### காரியதரிசி.

ம-ா-ா-ஸ்ரீ இ. ஆதிமூலமுதலியாரவர்கள்.

### உதவிக்காரியதரிசி (பொக்கிஷகாரர்).

ம-ா-ா-ஸ்ரீ பி. வி. சமரபுரிமுதலியாரவர்கள்.

### சைவப்பிரசங்கவிசாரணைக்கர்த்தர்.

ம-ா-ா-ஸ்ரீ மணிமங்கலம். திருநாவுக்கரசுமுதலியாரவர்கள்.

### அத்தியட்சர்.

ம-ா-ா-ஸ்ரீ எஸ். விநாயகமுதலியாரவர்கள், பி. ஏ.
,, திரு. சபாபதிமுதலியாரவர்கள்.
,, இ. சுப்பிரமணியமுதலியாரவர்கள்.
,, வா. தி. கோவிந்தராஜமுதலியாரவர்கள்.
,, ஆர். துரைசாமிமுதலியாரவர்கள்.
,, பி. வி. சமரபுரிமுதலியாரவர்கள்.
,, பா. கண்ணப்பமுதலியாரவர்கள்.

### கணிதபரிசோதகர்.

ம-ா-ா-ஸ்ரீ சு. சபாபதிமுதலியாரவர்கள்.

---

## சென்னைச்சிவனடியார்திருக்கூட்டத்தின் 17-வது (1915௵) வருடசபாக்கிரந்தம்.

இச்சபை 1898௵ டிசம்பர்௴ 25௳ தாபிக்கப்பெற்று, 1860-வது வருடத்து 21-வது சட்டத்தின்படி அரசாங்கத்தினால் ரிஜிஸ்ட்டர் செய்யப்பெற்றுள்ளது.

இதின் இருப்பிடம், சென்னை தங்கசாலைவீதியில் 180-வது எண்ணுள்ள ஸ்ரீகற்பகவிநாயகராலயத்தையடுத்த "சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சபாமண்டபம்." இது சுமார் 3000 ரூபாவரையில் செலவிட்டு இச்சபையாரால் 1905-ம்௵ கட்டப்பெற்றது.

இச்சபையின் நோக்கமாவது, சிவஸ்தலயாத்திரைசெய்தல், சைவப்பிரசங்கஞ் செய்தல், பாடசாலைகள்வைத்துச் சிறுவர்களுக்குச் சமய போதனைசெய்தல், பத்திரிகைவெளியிடுதல், புத்தகசாலைவைத்துப் புத்தகங்களைச் சேகரித்துப் பரிபாலித்தல், சிவாலயவழிபாடுசெய்தல் முதலியவற்றால் சைவசமய பரிபாலனஞ்செய்தலாம்.

இச்சபையார் இதுவரையில் சுமார் 200 சிவஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து சிவாலயவழிபாடு சைவப்பிரசங்கம் தமிழ்வேதபாராயணம் முதலியனசெய்தார்கள். சபாமண்டபத்தில் சிவஞானமுனிவர்பேரால் புத்தகசாலை வைத்திருக்கிறார்கள். அடிக்கடி துண்டுப்பத்திரிகைகளும் திருமுறைத்திரட்டுமுதலிய நூல்களும் வெளியிட்டார்கள். சைவசமயத்தின் தற்காலநிலைமையையும் அதைப்பரிபாலிக்கும் வழிகளையும் செவ்வனே விளக்கிச் "சைவசமயிகளின் கடமை" என்னும் நூலைவெளியிட்டார்கள். இன்னும் பல அரிய காரியங்களைச் செய்தார்கள். அவைகளை விரிக்கிற் பெருகும். அவை அவ்வப்போது வெளியிட்டுவந்த வருடாந்தச் சபாக்கிரந்தங்களில் விளக்கப்பட்டன.

### முன்வருடமகாஜனக்கூட்டம்.

இச்சபையின் 16-வது வருடாந்த மகாஜனக்கூட்டம், 1915-ம்௵ மார்ச்௴ 7௳ இதன் சபாமண்டபத்தில் கூடியது. அதன் விருத்தாந்தம் 1915-ம்௵ எப்ரல்௴ வெளிவந்த நமது "சைவம்" என்னும் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.



### அங்கத்தினர்.

| | |
|---|---|
| 1915-ம்௵ ஆரம்பத்தில் இருந்த அங்கத்தினர்கள் | 66 |
| ,, முடிவிலிருந்தவர்கள். | 60 |

இவர்கள் பெயர்முதலியன இதின் அனுபந்தத்திற்காண்க. இவர்களுள், இச்சபையின் போஷகருள் ஒருவராயிருந்து, நெடுங்காலமாக மாதந்தோறும் பேரன்போடு, அகமுமுகமும் மலர்ந்து இவ்விரண்டு ரூபா சந்தா உபகரித்துவந்த ஸ்ரீமான் மயிலை. கதிர்வேல்முதலியாரவர்களும், இதின் அங்கத்தினருள் ஒருவராயிருந்து அவ்வாறே எவ்வெட்டணா உபகரித்துவந்த ஜவளி பொடிவியாபாரம் ஸ்ரீமான் சீ. பா. சண்முகமுதலியாரவர்களும், வெளியூர் அங்கத்தினராயிருந்த ஸ்ரீமான் கோ. சங்கிலி மேஸ்திரியவர்களும் சிவபதமடைந்தமைக்கு நிர்வாகசபையார் மிகவும் விசனமடைவாராயினர்.

### சைவபாடசாலை.

| | | |
|---|---|---|
| இப்பாடசாலையில் 1915-ம்௵ ஆரம்பத்தில் வாசித்திருந்த சிறுவர்கள் | | 54 |
| ,, முடிவில் ,, | | 65 |
| இதற்கு 1914-ம்௵ கிடைத்த அரசாங்க உதவி | ரூபா. | 105 |
| ,, 1915-ம்௵ ,, ,, | | 158 |

இதனால் இப்பாடசாலை சென்றவருடத்தில் அதற்குமுன் வருடத்தைக்காட்டிலும் அபிவிருத்தியடைந்ததென்பது விளங்கும்.

### சைவப்பத்திரிகை.

இப்பத்திரிகை சென்ற 1915-ம்௵ ஜனவரி௴ முதல், மாத மாதம் கிரமமாய் முதல் வாரத்தில் வெளிவந்தது. இப்பத்திரிகையை மூன்று பாரமுள்ளதாக அச்சிடவிருப்பமிருந்தும் காகிதம் அதிகமாக விலையேறிவிட்டமையாலும், போதுமான சந்தா தாரர்கள் சேரவில்லையாகையாலும், அவ்விருப்பம் இன்னும் நிறைவேறவில்லை. சைவாபிமான சீலர்கள் யாரேனும் 7 ரூபா நன்கொடையளிப்பரேல் அவர்கள் உதவி புரியும் மாதத்தில் ஒருபாரம் அதிகமாக அச்சிடப்படுமென விளம்பரஞ் செய்திருந்தோம். அவ்விளம்பரத்தின்படி தஞ்சைஜில்லா ரெண்டாங் கட்டளைவாசியாகிய பிரமஸ்ரீ ஆர். எஸ். கங்காஜடேசசர்மா அவர்களும், திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ரோட்டில் மளிகைவர்த்தகஞ் செய்யும்

ஸ்ரீமான் குமாரசாமிச்செட்டியாரவர்களும் எவ்வேழுரூபா நன்கொடையளித்தார்கள். ஆதலால் 1915-ம் ஏப்ரல், ஜூன்மாதங்களில் இப்பத்திரிகை மும்மூன்றுபாரமாக வெளிவந்தது.

இப்பத்திரிகையைத் தமிழ்நாடெங்குமுள்ள அறிஞர் பலரும் பெரிதும் நன்குபாராட்டி, இது எங்கும் பரவுமாறுசெய்து வருகிறார்கள். இப்பத்திரிகையின் அபிவிருத்தியைநாடிச் சந்தாதாரர்களைச் சேர்த்து உபகரித்த பெரியோர்களின் பெயர் முதலியன இதின் அநுபந்தத்திற் காண்க. இவர்கள் வெறும் அன்புகாரணமாகச்செய்துவரும் இப்பேருபகாரத்திற்கு வையகமும் வானகமுமாற்றலரிது. இப்பத்திரிகை நடைபெற்றுவருவதற்கு இவர்கள் செய்யும் உபகாரங்களே காரணமெனத்தகும். இன்னும் இவர்கள் முயற்சிகளினாலே இப்பத்திரிகை மேலும் மேலும் அபிவிருத்தியடையுமென்பதும் திண்ணம். இவர்கள் செய்த முயற்சிகளால் சென்றவருடம் 520 சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள்.

சென்றவருடம் இப்பத்திரிகையின் பொருட்டுச்செலவான தொகை, தபாற்செலவு உட்பட. ரூபா 344

பத்திரிகை சந்தாவரவு (வி. பி. செலவுட்பட) ரூபா 378

விஷயங்களை எழுதுவதுமுதல் எல்லாவேலைகளையும் பத்திராசிரியரே செய்துவருவதனால் இவ்வளவு குறைந்தசெலவில் சென்றவருடம் இப்பத்திரிகை நடைபெற்றது.

## சிவஸ்தலயாத்திரைமுதலியன.

இச்சபையார் இராக்ஷச வைகாசிமீ பூசநட்சத்திரத்தில் திருக்குன்றத்தூரில் ஸ்ரீ சேக்கிழார்நாயனார் திருநட்சத்திர மகோற்சவதரிசனஞ்செய்து அடுத்ததினம் திருநாகேச்சரத்தில் அதிகாரநந்திமகோற்சவ தரிசனஞ்செய்தார்கள். அச்சமயத்தில் இவர்களுக்கு திருநாகேச்சரச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் மாகேசுரபூசை முதலிய உபசாரங்களைச் செய்தார்கள்.

ஐப்பசிமீ 14வ ஆதிவாரம், சென்னை முத்தியாலுப்பேட்டை உமாமகேசுவரர் தமிழ்வேதபாராயண பக்தஜனசபையாருடன்கூடி திருமுறைமகோற்சவம் நடாத்தி திருவண்ணாமலை ஞானதீபக்குடையாராதனை செய்தார்கள். அச்சமயத்தில் கௌணியன் அச்சுக்கூடத்தலைவர் ஸ்ரீமான் கா. முருகேசச்செட்டியாரவர்கள் சிவநேயர்களுக்கு மாகேசுரபூசை செய்வித்தார்கள்.



வழக்கப்படி சபாமண்டபத்தில் தமிழ்வேதபாராயணமும் சைவப்பிரசங்கமும் நடைபெற்றன.

ஸ்ரீலஸ்ரீ ம. தி. பாநுகவிசுவாமிகள் அவர்களால் திருஞானசம்பந்தப்பெருமானார் திருமுலைப்பாலுண்டருளிய திவ்விய சரித்திர மகோபந்யாசம் நடைபெற்றது.

சபாமண்டபத்தைச்சார்ந்த திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கற்பகவிநாயகக்கடவுளுக்கு விநாயக சதுர்த்திமகோற்சவதினத்தில் பத்து ரூபாவரையில் செலவிட்டு மகாபிஷேகஞ் செய்வித்தார்கள்.

## நிர்வாகசபை.

சென்றவருடத்தில் நிர்வாகசபையார் 9 முறைகூடினார்கள்.

## வரவுசெலவுக்கணக்கு.

1915-ம் வரவு செலவுக்கணக்கு, இச்சபையின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீமான் சு. சபாபதிமுதலியாரவர்களால் அவ்வப்போது பரிசோதிக்கப்பெற்றும், நிர்வாகசபையாரால் அங்கீகரிக்கப்பெற்றும் இதின் அநுபந்தத்தில் வெளியிடப்பட்டது.

## பொருள்நிலைமை.

இச்சபையார் மூலதனமின்றியே பலவருடங்களாகக் கடன்பட்டும் சைவசமயபரிபாலனஞ் செய்துவருகின்றார்கள். இதனால் இச்சபைக்குச்

| | | |
|---|---|---|
| சென்ற 1914-ம் முடிவிலிருந்தகடன் | ரூபா. | 537. |
| 1915-ம் முடிவிலிருந்தகடன் | ரூபா. | 404. |

இந்தக்கடன் இச்சபையார் சபாமண்டபத்தின் விஷயமாகவும் இதைச்சார்ந்த ஸ்ரீ கற்பகவிநாயகர்கோவில் விஷயமாகவும் ஹைகோர்ட்டில் நடத்திய வியாச்சியத்தால் நேரிட்டது.

இச்சபையும் இச்சபையை யாதரித்துவரும் புண்ணியவான்களும் நீடித்தவாயுளும் நோயற்றவாழ்வும் குறைவற்றசெல்வமும் பெற்றுவாழ்கவெனத் திருவருளைச்சிந்திக்கின்றோம்.

சென்னை
20-2-16.

இ. ஆதிமூலமுதலியார்,
காரியதரிசி.

## சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் 1915–ம்௵ வரவு செலவுக் கணக்கு.

### வரவு.

| வரவு. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1915–ம்௵ ஜனவரி௴ 1௳ இருப்பு. | 2 | 11 | 8 |
| சாமாசிகர் உபகரித்த மாதாந்தரச்சந்தா | 291 | 0 | 0 |
| சைவப்பத்திரிகை வருடாந்தச்சந்தா (வி. பி. செலவு உட்பட) | 377 | 14 | 3 |
| நன்கொடை | 28 | 4 | 0 |
| சைவபாடசாலைக்கு அரசாங்கத்தினர் செய்த உதவி | 158 | 0 | 0 |
| ஷை பாடசாலை மாணாக்கர்கள் சம்பளம் | 164 | 2 | 0 |
| சுப்பிரமணியம் பாடசாலையில் சமயபோதனை செய்ததற்கு வேதனம் | 12 | 0 | 0 |
| புத்தகவிற்பனையும் வட்டியும் | 1 | 2 | 9 |
| மொத்த வரவு— | 1035 | 2 | 8 |

### செலவு.

| செலவு. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| சைவபாடசாலை உபாத்தியாயர் சம்பளம் | 234 | 15 | 3 |
| ஷை குடிக்கூலி | 120 | 0 | 0 |
| ஷை வேலையாட்கள் ரிஜிஸ்டர் முதலியன | 16 | 12 | 3 |
| ஸ்ரீ கற்பகவிநாயகர் மகாசதுர்த்தி அபிஷேகம் | 10 | 0 | 0 |
| சைவப்பத்திரிகை (காகிதம் - அச்சுக்கூலி, தபால் முதலியன) | 344 | 1 | 7 |
| ஸ்ரீ கற்பகவிநாயகருக்கு குடிக்கூலி | 5 | 0 | 0 |
| சபையில் பாராயணம் முதலியன | 16 | 9 | 0 |
| கடன் | 133 | 0 | 0 |
| வட்டி | 26 | 10 | 4 |
| தண்டற்காரர் | 46 | 14 | 6 |
| காகிதம் வண்டிமுதலிய சில்லரைசெலவுகள் | 6 | 13 | 0 |
| ஆகமொத்த செலவு— | 960 | 11 | 11 |
| 1915–ம்௵ டிசம்பர்௴ 31௳ இருப்பு | 74 | 6 | 9 |
| | 1035 | 2 | 8 |

சு. சபாபதிமுதலியார்,
கணிதபரிசோதகர்.

இ. ஆதிமூலமுதலியார்,
காரியதரிசி.



## சந்தாதாரரைச்சேர்க்கின்ற கனவான்கள்.

சென்ற 1915–ம்௵ "சைவம்" என்னும் பத்திரிகைக்குப் பலர் சந்தாதாரர்களைச்சேர்த்து உபகரித்தார்கள். இவர்களுள் சிலரைச் சேர்த்தவர்கள் பலர். பலரைச்சேர்த்தவர்கள் சிலர். இவர்களெல்லோருக்கும் இச்சபையார் மிகவும் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றார்கள்.

இப்பத்திரிகையின் அபிவிருத்தியைக்கருதி அடிக்கடி பலரைச் சேர்த்து உதவிசெய்து வருங் கனவான்கள்.

1. தேவகோட்டை வைசியசிவானந்த சபையின் உதவி காரியதரிசியவர்கள் ஸ்ரீமான் பள. வெ. சு. இலட்சுமணன்செட்டியாரவர்கள்.
2. கூடலூர் தொண்டமாநத்தம் பு. ர. நடனசபாபதிப்பிள்ளையவர்கள்.
3. தஞ்சை ரெண்டாங்கட்டளை பிரமஸ்ரீ கங்காஜடேசசர்மா அவர்கள்.
4. பூவாளூர் சைவசித்தாந்தசபையின் காரியதரிசியவர்கள் முதலாயினோர்.
5. வாலாஜாபாத் பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் ம. தி. மாசிலாமணிமுதலியாரவர்கள்.
6. ரெட்டணை ஸ்ரீ ஏகாம்பரேச விலாச லைப்ரெரி அதிபர் ஸ்ரீமான் ஆர். வி. சுப்பாராயலுரெட்டியாரவர்கள்.
7. ராயவரம் ஸ்ரீமான் வெ. அ. சு. அழகப்பசெட்டியாரவர்கள்.
8. தூத்துக்குடி சைவசித்தாந்தசபை ஸ்ரீமான் ஏ. எஸ். தெய்வநாயகம்பிள்ளையவர்கள், மதுராகம்பெனி.
9. தூத்துக்குடி ஷை சபை ஸ்ரீமான் ஏ. ஆர். சிதம்பரம்பிள்ளையவர்கள். மதராஸ் பாங்க்.
10. ஷை சபை ஸ்ரீமான் தெ. ச. சுப்பிரமணியப்பிள்ளையவர்கள்.
11. ஷை சபை ஸ்ரீமான் யன். சிவகுருநாதப்பிள்ளையவர்கள்.
12. ஷை சபை தெ. சு. ச. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள்.
13. திருநெல்வேலி புதுக்குடி ஸ்ரீமான் எஸ். ஏ. காசிவிசுவநாதஞ் செட்டியாரவர்கள்.
14. முத்துப்பட்டணம் காரைக்குடி ஸ்ரீமான் ராம. அரு. ராம சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள்.
15. தே. பழ. சித. சதாசிவஞ்செட்டியாரவர்கள்.

16. ரங்கூன் பேப்பர்கரன்சி ஆபீஸ் ஸ்ரீமான் சோ. சிவஅருணகிரிமுதலியாரவர்கள்.

17. திருவோத்தூர் ஸ்ரீலஸ்ரீ ம. தி. பாநுகவிசுவாமிகள்.

18. சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை ஸ்ரீமான் திரு. வி. உலகநாதமுதலியாரவர்கள்.

---

## சென்னைச்சிவனடியார்திருக்கூட்டத்தில்

1915-ம்ஆு போஷகர்களாகவும் சாமாசிகர்களாகவும் இருந்த கனவான்கள்.

### போஷகர்கள்.

ஸ்ரீமான் ராவ்சாஹிப் பி. மாசிலாமணிமுதலியாரவர்கள்
இன்ஜினீரிங் கன்ட்ராக்டர்.

,, ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள்.
ப்ரெஸிடென்ஸி போஸ்ட்மாஸ்டர்.

,, எஸ். இரத்தினவேல்செட்டியாரவர்கள்
துவிபாஷி, மெஸ்ஸர்ஸ் பெஸ்ட் அண்டு கோ.

,, மயிலை. கதிர்வேல்முதலியாரவர்கள்
சிந்தாதிரிப்பேட்டை வர்த்தகர்.

,, சி. வெங்குபிள்ளையவர்கள், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்.

,, வி. முத்தையாபிள்ளையவர்கள்
வர்த்தகர், பெரியண்ணமுதலிவீதி சென்னை.

,, ஆர் காசிவிசுவநாதமுதலியாரவர்கள்
பொடி புகையிலை வர்த்தகர் சென்னை.

,, திரு. சபாபதிமுதலியாரவர்கள்
ரிடைர்ட் சப் இன்ஜினீர் தங்கசாலைவீதி.

### சாமாசிகர் (அங்கத்தினர்.)

,, ச. துரை. ராஜாகண்ணுமுதலியாரவர்கள் பி. ஏ.
ஸூபரிண்டென்டெண்டு அக்கவுண்டண்டு ஜெனரல் ஆபீஸ்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் பி. ஏ.
மதராஸ் கிரிஸ்டியன்காலேஜ் சுதேசபாஷை போதகாதிபர்.

,, வி. யென். சரவணமுதலியாரவர்கள் பி. ஏ.
கவர்ன்மெண்டு தமிழ் ட்ரான்ஸிலேட்டர் ஆபீஸ்.



ஸ்ரீமான், எஸ். விநாயகமுதலியாரவர்கள் பி. ஏ. ஸூபரிண்டெண்டெண்டு,
அக்கவுண்டண்டு ஜெனரல் ஆபீஸ்.

,, இ. ஆதிமூலமுதலியாரவர்கள் கவர்ன்மெண்டு பென்ஷனர்.

,, வே. மீனாட்சிசுந்தரமுதலியாரவர்கள்
ஸர்வேயர் அண்டு ட்ராப்ட்ஸ்மென் கார்பொரேஷன்.

,, பி. ஸி. சமரபுரிமுதலியாரவர்கள், கிளர்க்
யம். அண்டு யெஸ். யெம். ரெயில்வே இன்ஜினீர் ஆபீஸ்

,, வா. தி. கோவிந்தராஜமுதலியாரவர்கள், கிளர்க்,
கொ ஆபரேட்டிவ் க்ரெடிட் சொசைட்டி ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்.

,, த. அப்பாகண்ணுமுதலியாரவர்கள், கிளர்க்,
பேபர் கரென்ஸி ஆபீஸ்.

,, சி. கெ. பழனிவேல்முதலியாரவர்கள் கிளர்க்
பேபர் கரென்ஸி ஆபீஸ்.

,, ஏ. துரைசாமிமுதலியாரவர்கள், ஸ்டோர்கீப்பர்
யெம். அண்டு யெஸ். யெம். ரெயில்வே கோ ஆபரேட்டிவ் ஸ்டோர்ஸ்.

,, சு. சபாபதிமுதலியாரவர்கள், க்ளியரிங் ஏஜண்டு.

ஸ்ரீமதி, பெங்களூர். நாகரத்தினம் அம்மாள் அவர்கள், சங்கீதபண்டிதை.

,, ம. சி. மனோன்மணியம்மாள் அவர்கள், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் அத்தியட்சர்களுள் ஒருவராயிருந்தசைவாபிமானி ஸ்ரீ ம. சின்னையாபிள்ளையவர்களின் மனைவியார்.

ஸ்ரீமான், யெஸ். சமரபுரிசெட்டியாரவர்கள், மானேஜர்
பெஸ்டு அண்டுகோ ஆயில்மில்.

,, மி. பார்த்தசாரதிநாயுடு அவர்கள் ஜெயராமமுதலியாரவர்கள்
வாழைப்பழக்கிடங்கு.

,, கா. ரா. நமசிவாயமுதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர்.

,, ம. இரத்தினசபாபதிமுதலியாரவர்கள்.
கிளர்க் பெஸ்ட் அண்டுகோ.

,, தி. முருகேசமுதலியாரவர்கள், பென்ஷனர் மதராஸ் பாங்கு.

,, பி. லோகநாதமுதலியாரவர்கள், கண்ட்ராக்டர்.

,, பு. துளசிங்கமுதலியாரவர்கள்
ப்ரொப்ரைட்டர் பாலநாசு ரைஸ்பௌண்டரி.

ஸ்ரீமான் மயிலை முருகேசமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, பெ. சபாபதிமுதலியாரவர்கள், மணிலாகிடங்கு.
,, தொ. ஞானசம்பந்தமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, கே. சிவசங்கரமுதலியாரவர்கள், டெலிகிராப் ஆபீஸ்.
,, எஸ். டி. சமரபுரிமுதலியாரவர்கள், ஷிப்பிங் அண்டு க்ளியரிங் ஏஜெண்டு.
,, ஆர். விசுவநாதம்செட்டியாரவர்கள், வர்த்தகர்.
,, கு. அ. ற. சுப்பராயசெட்டியாரவர்கள், ஒற்றைவாடை அரிசிமண்டி.
,, கோ. சங்கிலிமேஸ்திரியவர்கள், நீலகிரி கோடப்பமந்து காப்பிவர்த்தகர்
,, கோ. ஆறுமுகமேஸ்திரியவர்கள், டை
,, கோ. சக்கிரபாணிமுதலியாரவர்கள், அப்பா அண்டு கோ.
,, க. தே. சபாபதிசெட்டியாரவர்கள்; ஒற்றைவாடை அரிசிமண்டி.
,, பொன்னேரி. அரங்கநாதமுதலியாரவர்கள், ஹெட்கிளார்க் ஹோ அண்டுகோ.
,, தி. சுப்பராயநாயகரவர்கள், வர்த்தகர் திருவல்லிக்கேணி.
,, அ. சிங்காரவேலுசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி அரிசிமண்டி.
,, ஆறுமுகநாயகரவர்கள், திருவல்லிக்கேணி அரிசிமண்டி.
,, அ. ப. கோவிந்தசாமிசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி ஷராப்.
,, சு. முருகேசச்செட்டியாரவர்கள், சிந்தாதிரிப்பேட்டை எண்ணெய்மண்டி.
,, ரா. குமாரசாமிசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி மளிகைவர்த்தகர்.
,, ம. மு. கோவிந்தராஜசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி அரிசிமண்டி.
,, வி. கிருஷ்ணசாமிப்பிள்ளையவர்கள், காஷியர் கிங் அண்டு பார்ட்ரிட்ஜ்.



ஸ்ரீமான் பி. சிங்காரமுதலியாரவர்கள், கிருஷ்ணப்பநாய்க்கன் குளத்துவீதி, சென்னை.
,, வி. எஸ். தெய்வசிகாமணிமுதலியாரவர்கள், கிளார்க், எம். அண்டு எஸ். எம். ரெயில்வே இராயபுரம்
,, பார்த்தசாரதிமுதலியாரவர்கள், வெற்றிலை வர்த்தகர்.
,, ஆர். பி. துரைச்சாமிமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, சி. பா. சண்முகமுதலியாரவர்கள், ஜவளி பொடிவியாபாரம்.
,, வி. சோமசுந்தரமுதலியாரவர்கள், விறகுத்தொட்டி.
,, பி. யெம். முருகேசமுதலியாரவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூடம்.
,, கூ. சிவவாசுதேவமுதலியாரவர்கள் அக்கவுண்டன்டு, யெம் அண்டு யெஸ் யெம் ரெயில்வே.
,, சி. கன்னையநாயுடுஅவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூட அதிபர்.
,, யெம். நடேசமுதலியாரவர்கள், கார்பொரேஷன் ஓவர்சியர்.
,, ஜி. முருகேசமுதலியாரவர்கள், கிளார்க், மெக்டாவல் கம்பெனி.
,, எம். இராமலிங்கமுதலியாரவர்கள் வர்த்தகர் கொண்டித்தோப்பு.
,, டி. வி. குப்புச்சாமிமுதலியாரவர்கள், ஷராப், தாலுக்கா ஆபீசு.
,, சி. சுப்பராயப்பிள்ளையவர்கள் கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, சி. அம்பலவாணமுதலியாரவர்கள், கிளார்க், க்ராம்டன் கம்பெனி.
,, சி. இராஜரத்தினமுதலியாரவர்கள், கிளார்க், அக்கவுண்டன்டு ஜெனரல் ஆபீஸ்.
,, ஏ. ஆர். சிங்காரமுதலியாரவர்கள், துவிபாஷிகர், கார்டன் உட்ராப் கம்பெனி.
,, இ. சுப்பிரமணியமுதலியாரவர்கள், தொண்டைமண்டலப் பாடசாலை உபாத்தியாயர்.
,, கே. லோகநாதமுதலியாரவர்கள், அச்சுக்கூடத்தலைவர் வைத்தியநாதமுதலிவீதி.
,, வி. கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள் கார்பொரேஷன் கணிதர்.
,, எம். எம். இராமலிங்கசெட்டியாரவர்கள் பி. ஏ. 249 லிங்க செட்டிவீதி சென்னை.
,, டி. எஸ். நீலகண்டமுதலியாரவர்கள், கிளார்க், மூர்த்திகம்பெனி.

---

2½

## சிவலிங்கவழிபாடு

(31-வது பக்கத்தொடர்ச்சி.)

இட்டலிங்கமாவது, ஆசாரியர் விசேஷதீக்ஷையைப்பண்ணிச் சீடனைப்பார்த்து "நீ உள்ளளவுங் கைவிடாது இவரை நாடோறும் பூசி" என்று அநுமதிசெய்து, "அடியேன் இச்சரீரம் உள்ளவரையுஞ் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உட்கொள்ளேன்" என்று பிரதிஞ்ஞை செய்வித்துக்கொண்டுகொடுக்க அவன்வாங்கிப் பூசிக்கும் இலிங்கமாம். இது ஆன்மார்த்தலிங்கம் எனவும் சலலிங்கம் எனவும் பெயர்பெற்று, வாணலிங்கம், படிகலிங்கம், இரத்தினலிங்கம், லோகஜலிங்கம். சைலலிங்கம், க்ஷணிகலிங்கம் எனப் பலவகைப்படும்.

பிராமணர்முதலிய நான்கு வருணத்தாரும் அநுலோமர் அறுவருமாகிய பத்துச்சாதியாருள்ளும், அங்கஹீனரல்லாதவர்கள் இட்டலிங்கபூசைக்கு அதிகாரிகளாவர்; இவர்களுள்ளும், பிணியில்லாதவராய், இடம்பொருளேவல்கள் உடையவராய், சிவபூசாவிதி பிராயச்சித்தவிதி மார்கழிமாசத்துக் கிருதாபிஷேகமுதலாகப் பன்னிரண்டுமாசமுஞ் செய்யப்படும் மாசபூசாவிதி, * சாம்வற்சரிகப்பிராயச்சித்தமாகச் சாத்தப்படும் பவித்திரவிதி முதலியவைகளை நன்றாயறிந்தவராய், அறிந்தபடியே அநுட்டிக்கவல்லவராய் உள்ளவர் மாத்திரமே வாணமுதலிய சிவலிங்கப்பிரதிட்டைசெய்வித்துக்கொண்டு பூசைபண்ணலாம். மற்றவரெல்லாரும் க்ஷணிகலிங்கபூசையே பண்ணக்கடவர். அவர், குளிக்கப்புகுந்து சேறு பூசிக்கொள்வதுபோலச் சிவலிங்கப்பிரதிட்டை செய்வித்துக்கொள்ளப் புகுந்து பாவந்தேடிக்கொள்வது புத்தியன்று.

சிவாகம விதிவிலக்குக்களை ஆராய்ந்து, சிவலிங்கங்களைப் பரீக்ஷை செய்து, யாதொரு குற்றமும் இல்லாததாய் நல்லிலக்கணங்கள் அமையப்பெற்றதாய் உள்ள சிவலிங்கத்தையே பிரதிட்டை செய்வித்துக் கொள்ளல்வேண்டும்.

க்ஷணிகலிங்கமாவது பூசித்தவுடன் விடப்படும் இலிங்கமாம். இது மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, சருக்கரை, மா எனப் பன்னிரண்டுவகைப்படும்.

* சாம்வற்சரிகம்-வருஷத்திற்செய்யப்படுவது.



மேலே சொல்லப்பட்ட பத்துச்சாதியாருள் அங்கஹீனரும், மற்றச் சாதியாரும் தங்கள் தங்கள் அதிகாரத்திற்கேற்ப ஆசாரியர்பண்ணிய தீக்ஷையைப்பெற்றுத் தூலலிங்கமாகிய தூபியையேனும் திருக்கோபுரத்தையேனும் பத்திரபுஷ்பங்களாலருச்சித்துத் தோத்திரஞ்செய்து நமஸ்கரிப்பதே அவர்களுக்குச் சிவபூசை; சூரியவிம்பத்தின் நடுவே சதாசிவமூர்த்தி அநவரதமும் எழுந்தருளியிருப்பர் என்று நினைந்து அவருக்கு எதிராகப் புட்பங்களைத் தூவித் தோத்திரஞ்செய்து நமஸ்கரிப்பதும் அவர்களுக்குச்சிவபூசையே.

சிவபூசையெழுந்தருளப்பண்ணிக்கொண்டு பூசைபண்ணாது புசிப்பது பெருங்கொடும்பாவம். அப்படிப்புசிக்கும் அன்னம் புழுவுக்கும், பிணத்துக்கும், மலத்துக்குஞ்சமம். அப்படிப்புசித்தவனைத் தீண்டல் காண்டல்களும் பாவம். ஆதலால், ஒரோவிடத்துப்பூசை பண்ணாது புசித்தவன் ஆசாரியரையடைந்து அதற்குப் பிராயச்சித்தஞ்செய்து கொள்ளல்வேண்டும்.

நித்திரை செய்வோர்கையிற்பொருள் அவர் அறியாமற்றானே நீங்குதல்போல், ஞானநிட்டையுடையவருக்குச் சிவபூசைமுதலிய நியமங்கள் தாமே நீங்கிற் குற்றமில்லை. அப்படியன்றி, அவர் தாமே அவைகளை நீக்குவாராயின் நரகத்தில் வீழ்தல் தப்பாது.

சிவபூசை எழுந்தருளப்பண்ணிக்கொண்டவர்கள் சனன மரணாசௌசங்களில் யாதுசெய்தல்வேண்டுமெனில், திடபத்தியுடையவர் ஸ்நானஞ்செய்து ஈரவஸ்திரத்தைத்தரித்துக்கொண்டு, தாமே சிவபூசை பண்ணலாம். ஸ்நானஞ்செய்தமைமுதல் பூசைமுடிவுவரையுந் தாமரையிலையில் நீர்போல் அவரை ஆசௌசம் சாராது. திடபத்தியில்லாதவர் ஆசௌசம் நீங்கும்வரையும் தம்முடைய ஆசாரியரைக்கொண்டாயினும் தம்மோடொத்தாரைக்கொண்டாயினும் தம்முடைய பூசையைச்செய்வித்துத் தாம் அந்தரியாகஞ்செய்துகொண்டு, அப்பூசைமுடிவிலே புறமண்டபத்தினின்று புட்பாஞ்சலித்திரயஞ்செய்து நமஸ்காரம்பண்ணல் வேண்டும்.

வியாதியினாலே தம் கைகால்கள் தம் வசமாகாதிருப்பவர் தம்முடைய ஆசாரியரைக்கொண்டாயினும் தம்மோடொத்தாரைக்கொண்டாயினும் தம் பூசையைச்செய்வித்துத் தாம் அந்தரியாகஞ் செய்தல்வேண்டும்.

சிவபூசை எழுந்தருளப்பண்ணிக்கொண்ட பெண்கள் பூப்புவந்தபோது, மூன்றுநாளும் பிறர்தண்ணீர்தர ஸ்நானஞ்செய்துகொண்டு, அந்தரியாகஞ்செய்தல்வேண்டும். நான்காநாள் ஸ்நானஞ்செய்து, பஞ்ச

கவ்வியமேனும் பாலேனும் உட்கொண்டு, மீட்டும் ஸ்நானஞ்செய்து, சிவபூசைசெய்தல்வேண்டும். அம்மூன்றுநாளும் அந்தரியாகஞ்செய்யாதொழியின், அக்குற்றம்போம்படி அகோரத்தை ஆயிரம் உருச்செபித்தல் வேண்டும். தாம் பிரசவித்தசூதகம், தமக்குரியார் இறந்த ஆசௌசம் வியாதி இவைகள் வரின், வருணத்தாலும் தீக்ஷையாலும் தம்மோடொத்தாரைக்கொண்டு பூசைசெய்வித்தல்வேண்டும்.

ஆசௌசம் வியாதிமுதலியவை வந்தபோது பிறரைக்கொண்டு பூசைசெய்வித்தவர் அவை நீங்கியபின், பிராயச்சித்தத்தின்பொருட்டு அகோரத்தை முந்நூறுருச்செபித்துத் தாம் பூசைசெய்தல்வேண்டும்.

தாம் பூசிக்கும் சிவலிங்கம் காணுவிடத்து அந்தரியாகபூசை செய்து பால் பழ முதலியவற்றை உண்டு, நாற்பதுநாள் இருத்தல்வேண்டும். அவ்விலிங்கம் வாராதொழியின் வேறோரிலிங்கத்தை ஆசாரியர் பிரதிட்டைசெய்யுதாக் கைக்கொண்டு பூசைசெய்தல்வேண்டும். அதன்பின் வந்ததாயின் அவ்விலிங்கத்தையும் விடாது பூசித்தல்வேண்டும்.

பஞ்சாக்ஷரவியலிலே சொல்லப்பட்டவைமுதலிய புண்ணியகாலங்களிலும், பிறந்தநட்சத்திரம், அதற்குப்பத்தாநட்சத்திரம் அதற்குப்பத்தாநட்சத்திரம் என்னும் சென்மத்திரயங்களிலும் விசேஷபூசை செய்தல்வேண்டும். இன்னும் மார்கழிமாசமுழுதினும் நாடோறும் நித்திய பூசையேயன்றி அதற்குமுன் உஷக்காலபூசையும் பண்ணல்வேண்டும். சிவராத்திரிதினத்திலே பகலில் நித்தியபூசையேயன்றி இராத்திரியில் நான்குயாமபூசையும் பண்ணல்வேண்டும்.

சென்மத்திரயந்தோறுஞ் சிவலிங்கப்பெருமானுக்குப் பதமந்திரங்கொண்டு பாலினாலுஞ் சர்க்கரையினாலும் விசேஷமாக அபிஷேகஞ்செய்து, சுகந்தத்திரவியங்கள்கலந்த சந்தனக்குழம்பு சாத்திப் பாயசமுதலியன நிவேதனஞ்செய்துகொண்டுவரின், உற்பாதங்களும், பயங்கரமாகிய கிரகபீடைகளும், சகல வியாதிகளும் நீங்கும்.

யா. ந. ஆறுமுகநாவலரவர்கள்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 MAY 1917
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 2.] | நளஞு சித்திரைமீ 1916ஞு எப்ரல்மீ | இதழ் 4]

## திருக்குறுந்தொகை.

அல்ல லென்செயு மருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொண்டன்ரு னென்செய்யும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனூர்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.

---

## தீவினையச்சம்.

தீவினையச்சமாவது பாவஞ்செய்ய அஞ்சுதலாம், பாவம் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் செய்யப்படும். மனத்தாற் செய்யப்படும் பாவங்கள் பொறாமை, வஞ்சகம், கோபம், பொச்சாப்பு (மறதி) செய்ந் நன்றிமறத்தல் முதலியனவாம். வாக்காற் செய்யப்படும் பாவங்கள் பொய், குறளை (கோள்), கடுஞ்சொல், பயனில் சொல் என்னும் நான்குமாம். காயத்தாற் செய்யப்படும் பாவங்கள் கொலை, புலை (மாமிசம்புசித்தல்), களவு, கள் முதலிய அறிவைமயக்கும் பொருள்களை யுண்ணுதல், வியபிசாரம், சூதாடல் முதலியனவாம்.

"தவமும் தவமுடையார்க் காகும்"

என்றபடி முற் சனனங்களில் புண்ணியஞ் செய்தவர்களுக்கே பிற் சனனங்களிலும் புண்ணியஞ் செய்தல்நேரிடும். இதுபற்றியே திருமூலநாயனாரும்

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ண லதுகண்டருள் புரியா நிற்கும்
எண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவுகின் றாரே.

என்றருளிச்செய்தனர்.

முற்பிறவிகளிற் பாவஞ் செய்தவர்கள் இப்பிறவியிலும் பாவஞ் செய்யப்பின்னிடார். ஆதலால் இப்பிறவியிற் புண்ணியஞ் செய்பவர்களை முற்பிறவியிலும் புண்ணியஞ்செய்தவர்களென்றும், இனிவரும் பிறவியிலும் புண்ணியஞ்செய்பவர்களென்றும் மதித்தல்வேண்டும். இப்பிறவியிற் பாவஞ்செய்பவர்களை முற்பிறவியிலும் பாவஞ்செய்தவர்களென்றும், இனிவரும் பிறவியிலும் பாவஞ்செய்பவர்களென்றும், இவர்கள் இவ்வாறே தொடர்ச்சியாகத் தீவினைகளைச் செய்பவர்களென்றும் எண்ணல்வேண்டும். இவர்களுக்கு உயிர்க்கு உறுதி பயப்பவைகளை எவ்வளவுதான் எடுத்துப்போதித்தாலும் அவை செவியில் ஏறு. இவர்களுக்குப் பெரியோரிணக்கமும், உண்மை ஞான நூல்களும், புண்ணிய சரித்திரங்களும், சிவபத்தி சிவனடியார்பத்தி முதலியனவும் அருவருப்பாயிருக்கும்.

## திருக்குறுந்தொகை.

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதிலும்
பொறி யிலீர்மன மேன்கொல் புகாததே.

ஆளாகா ராளானா ரையடைந் துய்யார்
மீளா வாட்செய்து மெய்ம்மையு ணிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே.

இறைவனாராணையால் நல்வினை செய்பவர்களுக்கு இன்பமும், தீவினைசெய்பவர்களுக்குத் துன்பமும் உண்டாதல் தப்பாது என்பதை மனிதர் யாவரும் உணர்ந்திருந்தும், மிகச்சிலரே தீவினைகளை நீக்கி நல்வினைகளைச்செய்து உய்புநெறி கடைப்பிடிப்பர். மற்றவர்களெல்லாம், கள்ளுண்டலால் அறிவுமயங்கி, பொருளுமிழந்து, அவமானமுண்டாதலை அனுபவவாயிலாயுணர்ந்தும், மீண்டு மீண்டும், அதைக்குடித்து மயங்கிக் கிடப்பார்போல், மண், பெண், பொன் என்னும் மூவாசையால் மதி மயங்கி, அம்மயக்கத்தையே இன்பமாகக்கொண்டு, அவ்வாசைகாரணமாகத் தீவினைகளைச்செய்து ஓயாது பிறந்து பிறந்துழல்வார்கள். இதனாலேயே அளவுபடாத ஆன்மாக்கள் சிவபெருமான் என்று உண்டோ அன்றே உள்ளனவாயிருந்தும் இது வரையில் முத்தியடையாமல் இன்னும் பிறந்துபிறந்துழல்கின்றன. இவ்வாறு நல்வினையினால் இன்பமும் தீவினையினால் துன்பமும் உண்டாதலையுணர்ந்தும் இறைவனார் திருவடிப் பற்றைப் பற்றாது உலகப்பற்றையே பற்றித் தீவினைகளைச்செய்து பிறவிக்



கடலில்வீழ்ந்து துயருறும் ஆன்மாக்களுக்காக இரங்கியே "கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளுந் திருஞான சம்பந்தர்"

"அவ்வினைக்கிவ்வினையாமென்று சொல்லுமஃதறிவீர், உய்வினை நாடாதிருப்பது முந்தமக் கூனமன்றே, கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றுது நாமடியோம், செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறு திருநீலகண்டம்" என்றருளிச்செய்தனர்.

பெரும்பாலும் நல்வினைசெய்தல் அரியதும் தீவினைசெய்தல் எளியதுமாம். ஆயினும், பெரியோர்கள் எவ்வளவு பாடுபட்டாயினும் செயற்கரிய நல்வினைகளைச்செய்வர். உயிர்துறக்கவரினும் செயற்கெளிய தீவினைகளைச்செய்ய அஞ்சி நடுங்குவார். சிறியோர் நல்வினைகளைச்செய்தல் அரிதென்று பயந்து செய்யாதொழிவர். எளிதென்று இன்பம் நுகர்வார்போல் தீவினைகளைச்செய்து நிரயத் துன்பமும் பிறவித் துன்பமும் அடைவார்கள்.

## தாயுமானசுவாமிகள் பாடல்.

மரவுரி யுடுத்துமலை வனநெற் கொறித்துமுதிர்
வனசருகு வாயில் வந்தால்
வன்பசி தவிர்த்துமனல் வெயிலாதி மழையால்
வருந்தியும் மூல வனலைச்
சிரமள வெழுப்பியு நீரினிடை மூழ்கியுந்
தேகநம தல்ல வென்று
சிற்சுக வபேக்ஷையாய் நின்னன்பர் யோகஞ்
செலுத்தினா ரியாம் பாவியேம்
விரவுமறு சுவையினேடு வேண்டுவ புசித்தரையில்
வேண்டுவ வெலாமு டுத்தி
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்த மின்றி
யிரவுபக லேழையர்கள் சையோக மாயினே
மெப்படி பிழைப்ப துரையா
யிகபரமி ரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

நாம்பாசவசப்பட்டவர்களாயிருத்தலினால் தீவினைகளை முற்றிலும் ஒழித்து நல்வினைகளையே செய்யவல்லவர்களல்லேம். ஆனாலும், நாம் அவ்

வாறிருக்கும் நம்முடைய நிலைமைக்கு ஏங்கி, அறவாழி யந்தணரும், அனாதிமலமுத்தரும், வினைக்கேடருமாகிய இறைவனாருடைய திருவடிகளிடத்தில் நிறைந்த அன்புவைத்து அவர்பணிசெய்து கிடப்போமானால் பாவம் நம்மை யணுகாது. இயமனுக்கும் நம்மிடத்தில் வேலையில்லை.

## தேவாரம்.

கற்றாங்கெரி யோம்பிக் கலியைவா ராமே
செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய
முற்றாவெண் டிங்கண் முதல்வன் பாதமே
பற்றாநின் றாரைப் பற்றா பாவமே.

## காலபாராயணம் (தேவாரம்.)

இறையெண் சொன்மற வேனமன் றூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்றமர்
நறவ நாறிய நன்னறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே.

உலகத்தில் தீவினைசெய்வார் சிலர் செல்வராய் வாழ்தலையும், நல்வினைசெய்வார் சிலர் தரித்திரராய் வருந்துதலையும் பார்த்துச் சிலர் நல்வினை தீவினைகளாற் புண்ணியபாவங்களும் இன்ப துன்பங்களும் உண்டாகின்றன என்பது வெறும் பொய் என்று சொல்லி அஞ்சாமல் தீவினைகளைச் செய்கின்றார்கள். உயிர்களைப்பற்றிநின்ற கன்மம் என்னும் மலத்தின் இலக்கணத்தை அறியாதவர்களே இவ்வாறுசொல்லி இடர்ப்படுவர். கன்மம் என்னும் மலமானது அனாதியாகவே ஆன்மாக்களோடு விரவியிருக்கின்றது. அது பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம், என மூவகைப்படும். இவற்றுள் பிராரத்துவம்முற்பிறவிகளிற் செய்தவினைகள். ஆகாமியம் இப்பிறவியிற் செய்பவை. சஞ்சிதம் முற்பிறவிகளிற் செய்து இனிவரும் பிறவியில் அனுபவிக்கவேண்டி எஞ்சிநிற்பவை. (இவைகளின் இலக்கணத்தை இப்பத்திரிகையின் முதன்மலர் எட்டாம் இதழிற் காண்க.) உயிர்களின் பிராரத்துவம் ஆகாமியங்களுக்கேற்றவாறு இன்பதுன்பங்களுண்டாகின்றன. ஆயின் கடவுள் அவரவர்கள் எவ்வெப்பிறவிகளிலே எவ்வெவ்வினைகளைச் செய்கின்றார்களோ, அவ்வப் பிறவிகளிலேயே அவ்வவ் வினைப்பயன்களை உண்பித்துத் தொலைத்து விடலாகாதோவெனில், கடவுளும் அவரவர்களைப் பற்றிநின்ற கன்மவேறுபாடுகளுக்கிணங்க வினைப்பயன்களை யுண்பிப்பதே அவருடைய அருட்டிறமாகும். எவ்வெவ்வுயிர்களை யெவ்வெவ்விதமாக ஆட்கொள்ளவேண்டுமென்பது பேரருளும் பேரறிவும் உடைய அவருக்கே தெரியும். அவர்



தீவினைக்கஞ்சித் தம்மைச் சரணமடைந்த அன்பர்களின் வினைகளை இப்பிறவியிலேயே தொலைத்துத் தமது திருவடி நீழலிற் சேர்த்தலும் உண்டு.

## நீதிநெறிவிளக்கம்.

தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வ
மிலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்.

## பதிபசுபாசவிளக்கம்.

சஞ்சிதந் திருநோக் காற்போம் பிராரத்தந் தனுவோ டேகும்
விஞ்சுமா காமியந்தான் விளங்குஞா னத்தினாற் போம்
செஞ்சயான் செய்த தெல்லாஞ் சிவன்செய்த தென்றுணர்ந்தால்
மஞ்சனே வினைத்திறங்கள் வந்துனைச் சந்தி யாவே.

சிலர் புண்ணியங்களைச்செய்தால் அதனால் தாங்கள் செய்யும் தீவினைகள் அடிப்பட்டுப்போம் என்றெண்ணிக்கொண்டு புண்ணியச்செயல்களோடு பாவச்செயல்களுஞ் செய்கின்றார்கள். இவர்கள் பிறரைவஞ்சித்துப் பொருள் சம்பாதித்துத் தருமங்களுஞ் செய்கிறார்கள். வியபிசாரம் புலை கொலை மதுபானம் முதலிய தீயவொழுக்கங்களை மேற்கொண்டு சைவப்பிரசாரகர்களெனவும் சந்நியாசிகளெனவும் ஞானாசாரியர்களெனவும் புண்ணியவான்களைப்போல் வெளிவருகிறார்கள். இவர்கள்செய்யும் செயல்கள் அறச்செயல்களாகக் காணப்பட்டாலும் அவை வஞ்சவொழுக்கங்களென மதிக்கப்படும்.

சிலர் ஒருவன்செய்யும் நல்வினையின் அளவும் தீவினையின் அளவும் சமமாயிருந்தால் அவ்விரண்டும் அடிப்பட்டுப்போய் முத்தியுண்டாகும் எனவும், இவ்வாறு இருவினைகளின் அளவும் ஒத்திருத்தலே இருவினையொப்பு எனவும் மயங்கிக் கூறுவர். இருவினையொப்பாவது நல்வினைப் பயனாகிய இன்பத்தில் விருப்பும் தீவினைப்பயனாகிய துன்பத்தில் வெறுப்புமின்றி இன்பதுன்பங்களிரண்டையும் சிவனருளிச்செய்ததென்று சமமாக எண்ணி அனுபவித்தலாம். இவ்விருவினையொப்புச் சிவபத்தியாலும், சிவபத்தி புண்ணியமேலீட்டாலும் உண்டாகும். இவ்வுண்மையை உணரப்பெறாத கிறிஸ்தவர்முதலாயினோர், ஒருவன் இப்பிறவியில் நூறு புண்ணியமும் நூற்றொருபாவமும் செய்தால், அவன் ஒருபாவம் அதிகமாய்ச் செய்துவிட்டதற்காக மீளா நரகத்தில் வீழ்வானென்றும், ஒருவன் நூறு பாவமும் நூற்றொரு புண்ணியமுஞ் செய்தால் நித்தியசுகமாகிய மோட்சத்தைப் பெறுவான் என்றும் கூறுவர்.

சிலர் நான் என்பதும், நீ என்பதும், அவன் அவள் என்பனவும் நான் செய்தேன் நீ செய்தாய் பிறர் செய்தார் என்பனவும் வெறும் மித்தை யென்று ஞானங்களைப்பேசிக்கொண்டு அஞ்சாமல் தீவினைகளைச் செய்கின் றார்கள். இவர்கள் உண்மை ஞானநூல்களை உணர்ந்த பெரியோரிடம் ஆராய்ச்சிசெய்யாமல் பிஞ்சிலேயே பழுத்தழுகும் போலி ஞானிகளா தலால் இவர்களுக்கும் இவர்களுடைய உபதேசத்தைக்கேட்டு அவ்வாறு ஒழுகுவார்க்கும் நிரயமுண்டாதல் தப்பாது, தப்பாது,

சிலர், எல்லாம் சிவன்செயல், நமக்கென யாதொரு செயலுமில்லை, எதையும் அவர் செய்விக்க நாம் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு தீவினைகளை அஞ்சாமற்செய்கின்றார்கள். எல்லாம் சிவன்செயல் என்ப தும், எதையும் அவர் செய்விக்க நாம் செய்கிறோமென்பதும் உண்மை யே. தாயுமானசுவாமிகளும் "எல்லாமுனடிமையே எல்லாமுனுடைமை யே எல்லாமுனுடையசெயலே" என்றருளிச்செய்தனர். தமிழ்வேதமும்

ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே
யடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
உருகுவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே.

என்றருளிச்செய்தது. ஆனால் தாயுமானசுவாமிகள் முதலிய பெரியோ ர்கள் தாங்கள் சொல்லியவண்ணமே ஒழுகினார்கள். எல்லாம் சிவன்செ யல் என்றுணர்ந்து தீவினையைக் கனவிலும் நினையாதவர்களாயிருந்தார் கள். எல்லாம் சிவமயமாகவும் எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகவும் இலங்குமுயிருடலனைத்தும் ஈசன் கோயிலாகவும் கண்டு, நிராசை அன்பு அருள் பொறை ஞானம் ஆகிய இவைகளின் மயமாய் விளங்கினார்கள். இன்பதுன்பங்களிரண்டையும் ஈசனருளாகக் கண்டு அனுபவித்தார்கள். அத்தகைய ஞானவொழுக்கம் ஒருசிறிதுமின்றி ஆசைவசப்பட்டுத் தீவி னைகளைச்செய்து, துன்பம் வந்தபோது துயரத்தில் மூழ்கியும், இன்பம் வந்தபோது இன்பத்திலழுந்தியும், மலத்தையுண்டு சேற்றிற்புரண்டு மகிழும் பன்றிகளைப்போல் உலகவாழ்க்கையிலுழன்றுகிடக்கும் எம் போலியர்கள் சிவன்செயல் என்று தீவினைகளைச்செய்தால் அத்தீவினை கள் எங்ஙனம் சிவன்செயலாகும்! இவர்கள் உண்மையாய்ச் சிவன்செ யலாலே யாதும் வருமெனத்தேறாமல் ஆசைவசப்பட்டுத் தீவினைசெய் யும் பாவிகளாதலினால் இவர்களுக்கும் நிரயத்துன்பமே உண்டாகும்.



## ஸ்ரீதாயுமானசுவாமிகள்பாடல்.

சிவன்செய லாலே யாதும் வருமெனத் தேறே னுளு
மவந்தரு நினைவை யெல்லா மகற்றிலே னுசை வெள்ளங்
கவர்ந்துகொண் டிழுப்ப வந்தக் கட்டிலே யகப்பட் டையோ
பவந்தனை யீட்டி யீட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே.

ஆன்மாக்களுக்கு "நான்" என்னும் அறிவு உண்டு. இது அநாதியாக வே ஆணவ மலத்தால் உண்டாயிருக்கும் அஞ்ஞான உணர்ச்சியாம். இது தற்போதம் என்றும் சொல்லப்படும். தற்போதமானது ஞானாசாரிய ரது திருநோக்காலன்றி வேறெவ்வழியாலும் நீங்காது. ஆதலால் தற் போதம் உள்ளவரையில் ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகள்யா வும் ஆன்மாக்களின் செயல்களேயாய்த் தத்தம்பயன்களாகிய இன்ப துன்பங்களை அவைகளுக்கு உண்பியாமற் கழியமாட்டா.

## பண்டாரமும்மணிக்கோவை.

என்செய லாவொன்றும் யான்செய்த தில்லை யெனக்கவமே
புன்செய லாம்வினைப் போகமுண் டாவதென் போதமில்லேன்
றன்செய லாயவெல் லாமாசி லாமணிச் சம்பந்தநின்
னன்செய லாயினு மென்செய லாச்செய்யு நானென்பதே.

சிலர், யாதேனும் ஒரு தீவினையைச்செய்பவன் அதைப் பாவ மென்று அறிந்து செய்தால் மாத்திரம் அது பாவமாகும் எனவும் அதைப்பாவம் என்று அறியாமற் செய்கிறவன் மனம் பரிசுத்தமாயிருக் கிறதென்றும், அதனால் அவனுக்குப் பாவம் உண்டாகாது என்றும் நினைக்கிறார்கள். நெருப்பைத் தெரிந்து தீண்டினாலும் தெரியாமல் தீண் டினாலும் அது சுடாமல் விடாது. அதுபோலத் தீவினையைப் பாவம் என்று தெரிந்துசெய்தாலும் தெரியாமற்செய்தாலும் அது பாவம், பாவ மே. அதனாலே துன்பம் உண்டாவது திண்ணம், திண்ணமே. ஓரறிவு யிர்களுக்கும் ஆகாமிய வினையேறுமென்பது ஞானநூல்களாலும் சரித்தி ரங்களாலும் அறியக்கிடக்கின்றது. உமாபதிசிவாசாரியசுவாமிகளின் திருமடத்தில் முளைத்த புண்ணியம்வாய்ந்த ஒரு முள்ளிச்செடிதானும் மலபரிபாகம்பெற்று முத்தியடைந்த சரித்திரத்தாலும் இது நன்குவிளங் கும். ஆதலால் மனிதர்கள் பாவம் என்று அறியாமற்செய்வதனாலேயே பாவம் பாவமாகாமற்போகாது. மனிதப்பிறவியெடுத்துப் புண்ணியபா வங்களைக் கல்லாமையும் ஒரு பாவமாம். இதுபற்றியே "கற்றிலேன் கலைகள் பலஞானம் கடியவாயின கொடுமைகள்செய்தேன்" எனவும் "கல்லார்நெஞ்சில் நில்லானீசன்" எனவும் தமிழ்மறையருளிச்செய்தது.

மனமானது ஐம்புலனடக்கல், அவாவின்மை, வாய்மை, பொறை, அருள், அன்பு ஆசாரம் முதலிய உயர்குணங்களாற் பரிசுத்தமடையும். கொலை புலை முதலிய தீய குணங்களால் அசுத்தமடையும். இவ்வாறிருக்கப் பாவம் என்று தெரியாமையால் அருள்ஆசாரம்முதலிய குணங்களின்றிக் கொலைமுதலிய குணங்களையுடையவன்மனம் எவ்வாறுபரிசுத்தமாயிருக்கும். வேறுசிலர், ஞானிகள் எத்தொழிலைச்செய்தாலும் செய்வார்களென்றும், அதனால் அவர்களுக்குப்பாவம் நேரிடாது என்றும் சொல்லி, சில ஞானிகள் மதுமாமிசம் விற்றதாகவும் உண்டதாகவும் கட்டுக்கதைகளைச் சொல்லுகிறார்கள். இக்கதைகள் சுருதியுத்தியநுபவங்களுக்குமாறாகத் தீயவொழுக்கமுடையார் பிறர் தங்களை ஞானிகளென மதித்தற்குக் கட்டிக்கூறும் பொய்க்கதைகளாம். பலர் இக்கதைகளைப்படித்துக் கஞ்சா அபின் மதுமாமிச முதலியனவுண்டு மயங்கிக் கிடப்பவர்களையெல்லாம் ஞானிகளென்றுநம்பி, அவர்களுக்கு இறைச்சி சாராயம் முதலியவற்றை அவர்கள் விரும்பியவாறெல்லாம் கொடுத்து உண்பித்துப் பூசிக்கிறார்கள். இவ்வாறு செய்வது பெருங்கொடும்பாவமாம். ஆனால் சித்தாந்த ஞானநூல்கள், ஞானிகள் பாலர் பேயர் பிசாசர்போலிருப்பரெனவும், அவர்கள் எந்நிலையிலிருந்தாலும் இருப்பரெனவுங் கூறுகின்றனவே அவை கூறுவது பொய்யோவெனில், சித்தாந்த ஞானநூல்கள் அவ்வாறு கூறுவது உண்மையே என்க. சிவஞானசித்தியாரிலும்,

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையோடு தீமையிலை நாடவே தோன்றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமில்லை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பசாசர் குணமருவிப்
பாடலினெ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்.

நாடேளிற் புக்குழன்றுங் காடேளிற் சரித்து
நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்த்து
நீடேல காலங்க ளித்தரா யிருந்து
நின்மலஞா னத்தையிலார் நிகழ்ந்திடேவர் பிறப்பி
னேடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
யெழிவிழியின் படைக்கடைக்கே கிடந்துமிறை ஞானங்
கூடுமேவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.

என அருளிச்செய்யப்பட்டது.

(இன்னும்வரும்.)



## விவாகவிதி.

விவாகம் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தர்வம் அசுரம் இராக்கதம் பைசாசம் என எட்டுவகைப்படும்.

இவற்றுள் முக்கியமாய் இப்போது நடந்துவருகிற விவாகம் பிரசாபத்தியம். அதாவது மணமகனுக்குரியவர்களும் மணமகளுக்குரியவர்களும் கலந்துபேசி, குலம் கோத்திரம் கொள்வன கொடுப்பன முதலியன விசாரித்துப் பொருத்த நிமித்தம் பார்த்துப் பெண்ணை நல்ல சுப முகூர்த்தத்தில் இஷ்ட பந்து ஜன சகிதமாக விநாயகர் அஷ்டதிக்குப்பாலகர் முதலிய தேவர்கள் முன் தத்தஞ் செய்துகொடுப்பது.

அஷ்டதிக்குப்பாலகர்.—நான்கு வேதங்களுக்குப் பிரதியாக நான்கு கால்கள் அமைக்கப்பட்ட விவாகமண்டபத்தில், பக்கத்துக்கு 24 சிற்பி அங்குலமாக 96 தத்துவமும் 96 அங்குலமாகவுள்ள மணவறைப் பந்தலின் தத்துவச்சதுக்கத்திற்குக் கிழக்கில், ஆயிரங்கண்ணுள்ள தேவேந்திரனுக்குப் பிரதியாக அனேக முக முள்ள கிளைவிளக்கையும், தென் கீழ்த்திசையில் அக்கினி தேவனுக்குப் பிரதியாகக் குடவிளக்கையும், தென்திசையில் இயம தருமராஜனுக்குப் பிரதியாகத் தர்ம கர்ம பாவபுண்ணியப் பகுப்புக்குரிய புரோகிதரையும், தென்மேற்றிசையில் நிருதி தேவனுக்குப் பிரதியாகத் தோழிப்பெண்ணையும், மேற்குத்திசையில் வருணதேவனுக்குப் பிரதியாக மணமகனையும், வடமேற்கில் வாயு தேவனுக்குப் பிரதியாகச் சிவிறிகொண்டு வீசும் மாப்பிள்ளைத்தோழனையும், வடதிசையில் குபேரனுக்குப் பிரதியாக பணப்பையைக் கையிற்றுங்கி பூரிகொடுக்கும் விவாக கர்த்தாவையும், வடகிழக்கு மூலையில் ஈசானமூர்த்திக்குப் பிரதியாக அம்மியையும் குழவியையும், ஆக அஷ்டதிக்கிலும் அஷ்டதிக்குப்பாலகரையும் அவ்வவர்க்குரிய மந்திரத்தால் ஆவாகனஞ்செய்து, சந்தனம் அட்சதை புஷ்பஞ்சாத்தி எடுத்தகாரியம் குறைவின்றி நிறைவேறும்படிச் சங்கல்பஞ் செய்துகொள்ளவும்.

நவக்கிரகங்கள்.—அஷ்டதிக்குப்பாலகரில் ஈசானமூர்த்தியாக அமைக்கப்பட்ட அம்மி குழவிகளுக்குத் தென்பாரிசத்தில் பச்சமுதைப் பரப்பி ஒன்பது வீடாகக்கீறி, நவக்கிரகங்களுக்குப் பிரதியாக முளை கட்டியிருக்கும் நவதானியங்களைப் பாலிகையிலிட்டு அந்தந்த ஸ்தானத்தில் அமைத்து, அவரவர்க்குரிய மந்திரத்தினால் ஆவாகனஞ்செய்து

* இது ஸ்ரீமத் ஏகாம்பரசிவயோகிகளின் மாணாக்கர் வைதிகசைவசித்தாந்தப் பிரசங்கரத்நாகரம், ஸ்ரீமான், கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள் வெளியிட்டு வந்த "ஞானபாநு" என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்து அச்சிடப்பட்டது.

கருப்பையினாலாவது முப்புரி நூலினாலாவது பட்டுமுதலியவஸ்திரத்தினாலாவது பந்தித்துத் தூபதீப நைவேத்தியங்காட்டிச் சிந்தித்துச் சங்கல்பம் பண்ணிக்கொள்ளவும்.

சப்த ரிஷிகள்.—நவக்கிரக பாலிகைகளுக்கும் அக்கினிதேவனுக்கும் பிரதியாக அமைக்கப்பட்ட குடவிளக்குக்கும் நடுவில் சப்தரிஷிகளுக்குப் பிரதியாக ஏழுகரகங்களுக்கு நூல் சுற்றி அவைகளில் ஜலம் பூரித்துவைத்து அவ்வவர் மந்திரத்தால் ஆவாகனஞ்செய்து கந்த புஷ்பாக்ஷதைகள் சாத்தி தூபதீப நைவேத்தியங்கொடுத்துச் சங்கல்பம் பண்ணிக்கொள்ளவும்.

சப்த தீர்த்தம்.—தேவேந்திரனுக்குப் பிரதியாக அமைக்கப்பட்ட கிளைவிளக்குக்கு முன் மணலைப்பரப்பி அதில் ஒரு குடத்தைவைத்து, அதில் கங்கை யமுனை சரஸ்வதி நர்மதா காவிரி கன்னியாகுமரி கோதாவிரி ஆகிய சப்ததீர்த்தங்களுக்குப் பிரதியாக, தேவாலயம் நந்தவனம் நதி முதலிய தீர்த்தங்களில் ஏதாவது அந்தந்த தீர்த்தங்களுக்குள்ள மந்திரங்களைச்சொல்லி அக்குடத்தில் விடுத்து ஆவாகனஞ்செய்து, விபூதி சந்தனாட்சதை குங்குமம் தரித்து, தூபதீப நைவேத்தியங்காட்டி, ஒரு காகத்தை அதன்மேல் மூடிவைத்துச் சங்கல்பம் பண்ணிக்கொள்ளவும்.

திரிமூர்த்தி சொரூபம்.— பிரமசொரூபமாகிய அரசின் கிளைக்குத் தேன் முதலியவற்றால் நீராட்டிவைத்துச் சந்தனபுஷ்பாக்ஷதை சாத்தி, வெண்பட்டு அல்லது வெண்ணூல் தரிக்கவும். விஷ்ணுசொரூபமாகிய ஆலிற்குச் சுத்தோதகம் கஸ்தூரி பனிநீர் வெட்டிவேர் வாசங்களினால் திருமஞ்சனமாட்டி நீலம் அல்லது மஞ்சள் வஸ்திரமாவது நூலாவது தரித்து துளசி துளசிமணி சாத்தவும். உருத்திர சொரூபமாகிய கலியாண முருக்குக்குச் சந்தனாதியபிஷேகஞ்செய்து திருநீறணிந்து கந்த புஷ்பாக்ஷதைகள் சாத்தி ருத்திராக்ஷம் வில்வம் புஷ்பமாலை யணியவும். இவ்வாறு பிரமன் விஷ்ணு உருத்திரன் ஆகிய மூவரையும் முறையே அரசு ஆல் கலியாணமுருக்கு மூன்றிலும் அவ்வவர் மந்திரத்தால் ஆவாகனஞ்செய்து கிளைவிளக்குக்கும் சப்ததீர்த்தம் விட்டிருக்கும் குடத்திற்கும் நடுவில் 12 அங்குலம் பள்ளந்தோண்டி, அதில் நீர் பால் தேன்விட்டு, நவரத்தினம் பொன் வெள்ளி தாம்பிரம் நவதானியம் ஆகிய இவற்றுள் ஏதாவதுபோட்டு, மூன்று முதிர்ந்த வயதுள்ள சுமங்கிலிகளைச் சரஸ்வதி இலக்குமி பார்வதியாகப் பாவித்து, அவர்களுக்குச் சந்தனம் புஷ்பம் அக்ஷதை கொடுத்து, அவர்களால் மும்மூர்த்திசொரூபமாகிய அரசாலிக் கால்களை அப்பள்ளத்தில் விடுத்துப் பூவாரம் பொன்னாரம் முத்தாரம் பூட்டித் தூபதீப நைவேத்தியங்கொடுத்து அப்பள்ளத்தை நெல்லினால்மூடி, நீர் பால் தேன்விட்டுப் பணிந்து சங்கற்பம் பண்ணிக்கொள்ளவும்.



ஓமம்.—மங்கலிய ஸ்திரீகளால் கொண்டுவரப்பட்ட அக்கினியை அரணிமதித்த அக்கினியாகப்பாவித்து அக்கினிதேவனுடைய மந்திரத்தினால் அதை விருத்திசெய்து சகல உபசாரத்துடன் பூசித்து அர்க்கியங் கொடுத்துத் தொழுது சங்கற்பித்துக்கொள்ளவும்.

கங்கணம்.—தொடங்கிய காரியம் முடிவாகிற வரையில் பயபக்தியாகவிருந்து நடத்துவதற்காகக் கணுவில்லாத முளைமஞ்சளுக்குக் கன்னிகை யிழைத்தநூலால் நவக்கிரக மந்திரஞ்சொல்லி ஒன்பதுமுடி போடப்பட்ட கங்கணத்தை மணமகனும் மணமகளும் கட்டிக்கொள்ள வேண்டும்.

மாங்கல்யம்.—ஆன்மதத்துவம் இருபத்திநாலென்ன, 24 இழையாகக் கன்னியரிழைத்தநூலை முறுக்கில்லாமல் * திருவடிக்குறிப்பாகிய மாங்கலியத்திலேற்றி, அதைத் தேங்காயிற்சுற்றி, முத்து இரத்தினம் அல்லது பச்சரிசி பரப்பிய தட்டில்வைத்து, மஞ்சள் குங்குமம் புஷ்பம் அக்ஷதைகளாற் பூசித்து, தூபதீப நைவேத்தியங் கொடுக்கவேண்டும்.

வேத மந்திரோச்சாரணையோடு வேதியர் பெரியோர் நல்லோர் பந்துக்கள் மித்திரர்கள் முதலியோரால் ஆசீர்வதிக்கப்பட்ட அத்திரு மாங்கல்யத்தை மணமகன், சங்கங்கள் ஓமெனும் பிரணவநாதத்தை யொலிக்க, மணமகள் கழுத்திற்சேர்த்துப் பிடரியில் பிரமமந்திரத்தினாலே முதல் முடியும், விஷ்ணுமந்திரத்தினாலே இரண்டாவது முடியும், உருத்திரமந்திரத்தினாலே மூன்றாவது முடியும், ஆக மூன்று முடியும் போட்டு, அம்முடியை இடதுகையிற் பற்றிக்கொண்டு இறைவரைத்துதித்து, வலதுகாத்தில் விபூதியெடுத்து அம்முடியின்மேல் வைத்து, துற்சோபம் துற்பயங்காம் துர்மரணம் துர்வியாதி நீங்கவும், சகல பாபரோக நிவாரணமாகவும், சம்பத் சாதுசங்கம் உண்டாகவும், ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் செபித்துத் தன் நெற்றியில் விபூதி தரித்துக்கொண்டு பெண்ணின் நெற்றியிலும் விபூதிதரித்துப் பெண்ணின் செவியில் நூலோடு கூடிய இம் மாங்கல்யம் நம்முடைய சுகஜீவனத்துக்கு ஏது வாகும் என்னும் பொருளமைந்த (மாங்கல்யந்தந்து நாநேநா மமஜீவநஹேதுநா) என்னும் மந்திரத்தையுபதேசிக்கவேண்டும்.

---

* மாங்கல்யம் பாதம்போல் இருபிரிவினதாகவாவது, பாதமலர் போல வட்டமாகவாவது இருக்கும்.

பின்பு நாயகியை நாயகனிடப் பாகத்திலமர்த்தி முறையே மற்றச் சடங்குகளை விதிப்படி நடத்தி ஓமாக்கினிக்குப் பூரணாகுதிகொடுத்து நீராஞ்சனமாகிய ஆலஞ்சுற்ற வேண்டும்.

அப்பால் இருவரும் அஷ்டமங்கலத்துடன் அரசாணிக்காலை மூன்றுதரம் பிரதட்சணஞ் செய்யவேண்டியது.

அஷ்டமங்கலமாவது கைவிளக்கு, பூரணகும்பம், கண்ணாடி, அங்குசம், வெண்சாமரம், இணைக்கயல், கொடி, முரசு, ஆகிய எட்டுமாம். அவற்றிற்குப் பிரதியாகக் கைவிளக்கு சொம்பு கண்ணாடி முதலியவற்றைப் பெதும்பைப் பருவமுடைய பெண்கள் எடுத்துக்கொண்டு முன்னதாகச் சுற்றி வரவேண்டுமேயல்லாமல் ஆவாகனஞ்செய்யப்பட்டிருக்கிற நவக்கிரக பாலிகைகளைத் தொடப்படாது.

அவ்வாறு அரசாணி சுற்றிவரும்போது முதற்சுற்றில் அம்மிமிதித்தல், இரண்டாவது சுற்றில் அருந்ததி துதித்தல், மூன்றாவது சுற்றில் அனுபவவிதியையறிதல் ஆக மூன்று சுற்றிலும் மூன்றுகாரியஞ் செய்யவேண்டும். அதாவது முதற்சுற்றில் மணமகன் ஈசானமூர்த்திக்குப் பிரதியாகவைக்கப்பட்டிருக்கிற அம்மியையும் குழவியையும் மணமகளுக்குக்காட்டிப் பெண்ணே இவ்விரண்டையும் சிவசத்தி சொரூபமாக மதிப்பாயாக, இவ்விருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத அர்த்தநாரீஸ்வரசொரூபமாயமைந்தது இத்தன்மைத்து எனச் சொல்லி, இவர்களைப்போல நாமிருவரும் உடலும் உயிரும்போல் ஒரேமனதாய்ப் பிரியாத பிரியத்துடன் வாழ்ந்திருப்போமாக எனப்போதித்து, நீ யிப்போது என்னிடப்பாகமாயினை எனவும், இடப்பாகத்தில் தங் இடதுகைச் சிறுவிரலைப்பற்றிநிற்கும் மணமகளின் வலதுகாற் பெருவிரலைத் தன் இடதுகைப் பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் பற்றி நீ எப்போதும் எவ்விடத்தும் இப்பெருவிரல் திருஷ்டியாகவே நடக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தவேண்டுமேயன்றி ஈசானமூர்த்தியாய் ஆவாகனஞ்செய்யப்பட்ட அம்மியையும் குழவியையும் மிதிக்கப்படாது.

இரண்டாவது சுற்றில் வடதிசையை நோக்கி அருந்ததி யிருக்குமிடத்தைச் சுட்டிக்காட்டி அவ்வருந்ததியும் அவர் பர்த்தாவாகிய வசிஷ்டரும் நடந்துகொண்ட இல்லறவொழுக்கத்தின் சரித்திரந் தெரியச் சொல்லிப் பெண்ணே நீயும் அவ்வருந்ததியைப்போல் இல்லறவொழுக்கந் தவறாது என்னுடன் இருந்துவாழ்வாயாயின் அவ்வித உன்னதபதம் அடையக்கூடும் என அறிவுறுத்தித் தூபதீப நைவேத்தியங்களுடன் தொழுது வணங்கவேண்டும்.

---

அம்மிமிதித்தல், கற்புநிலைதவறிய பெண்கள் அகலிகையைப்போல் யாவராலும் மிதிக்கப்படும் கல்லாய்ப்பிறந்து துயருறுவர் என்பதை யறிவுறுத்தற்பொருட்டெனக் கூறுவாரும் உளர். (ப-ர்.)



மூன்றாவது சுற்றில் மணவறையில் வந்து நின்று தென்திசையில் இயமதருமராஜனுக்குப் பிரதியாகவைக்கப்பட்டிருக்கிற புரோகிதரைப் பூஜித்து வணங்கவேண்டும். அப்போது அவர் அவ்விருவருக்கும் ஆசிகூறி உலகவநுவிதிகளையும், பாவபுண்ணியப் பகுப்பையும், தேவதாபூஜை பிதுர்ப்பூஜை தருமதானம் முதலியவற்றின் பயனையும் இதிகாசபுராணங்களால் எடுத்துக்காட்டிக் கற்புடைய மகளிரிலக்கணத்தையும் இல்லற வொழுக்கத்தையும் அதனாலடையத்தக்க அறம்பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களின் பயனையும் விரிவாயெடுத்துரைத்து அவர்கள் அவ்வண்ணம் நடந்தேறும்படி வாழ்த்தவேண்டும்.

மற்றச்சடங்குகளும் தானதருமபோஜனாதிகளும் முறையேநடந்து மூன்றுவேளை ஓமம் பண்ணி கங்கணவிசர்ஜனமானவுடன் முன்சொன்னமுறையே அந்தந்த தேவர்களை அவரோகண மந்திரங்களினால் அவரவர்கள் இருப்பிடஞ்சேர்த்துத் திரிமூர்த்திச் சொரூபமான அரசாணிக்காலை நந்தவனம் கோயிற்றோட்டம்முதலிய சுத்த ஸ்தானத்தில் தனித்தனி நாட்டிச் சாலியிலிருக்கின்ற சப்ததீர்த்த ஜலமும் சப்தரிஷிகளின் கலச ஜலமும் விட்டுப் பாதுகாத்து வந்தால் அவைகள் தளிர்விட்டுத் துளிர்த்துத் தழைத்துச் செழிக்கும்.

நம்முடைய விவாகச்சடங்குகளில் செல்வவானென்றும் ஏழையென்றும் இல்லாமல் எல்லோருக்கும் விவாகப்பந்தல், மாங்கல்யம், கூறைவேட்டி, முதலியவை யொரேபடித்தாயிருப்பதால் கிரமப்படி விதியையனுசரித்து மணஞ்செய்யும் மணமகனும் மணமகளும் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி முருக்கம் பூப்போல் சந்ததிவிருத்தியாய் மூங்கில்போல் கிளைத்து நோயற்றுத் தீர்க்காயுள்பெற்று வாழ்வார்கள்.

## சிவரகசியம்-கலியுகதரும கதனம்.

இது ஸ்ரீ கைலாயத்தில், சிவபெருமானார் உமாதேவியாரை நோக்கித் திருவாய்மலர்ந்தருளியது.

ஹேதேவி! தோஷகரமாகிய கலியின் சொரூபத்தைச்சொல்லுகிறேன் கேட்பாயாக. ஸ்ரீ கைலாயத்தில் தருமவிருஷபமானது கலியில் ஒருபாதத்தில்நிற்கும். அக்கலியில் இவ்வுலகில் முஞ்சன், போஜன் முதலிய பதினாறு சோழர்களும், பஸ்மருத்திராக்ஷதாரிகளாய் மகா பராக்கிரமசாலிகளாய் சிவபக்த சிரேஷ்டர்களாய் சோழநாடெங்கும் சிவாலயப் பிரதிஷ்டைசெய்பவர்களா யிருப்பர். காவேரி நதியினாற் சிறப்படைந்

தோங்கும் அச்சோழநாட்டிலுள்ளாரெல்லாந் தமிழ்ப்பாஷையில் வல்லவர்களாயிருப்பர். பாண்டிநாடாகிய மதுரையில் ஐந்நூறு பாண்டியர்கள் பிறப்பார்கள். அவர்களுள் மலையத்துவஜபாண்டியனுக்கு நீ மகளாய்ப் போவாய். அம்மதுரையில் மகாலிங்கமூர்த்தியாய் சுந்தரேசரென்னும் நாமத்தோடு நாமும், மீனாக்ஷியென்னும் நாமத்தோடு நீயுமிருந்து யாவருக்கும் அநுக்கிரகஞ்செய்து வருவோம். சோழபாண்டியர்களையல்லாமல் சேரராஜாக்களுமுண்டாவார்கள். சேர சோழ பாண்டியநாடென்று அவர்கள் பெயரானே அவர்நாடுகள் வழங்கும். அந்நாட்டிலுள்ளவர்களெல்லாம் சிவபக்தர்களாகவே யிருப்பார்கள். இவர்களில் பாண்டியர்கள் கலிபிறந்து சிலகாலஞ்சென்றபின்னர் ஆயிரவருஷம் யாவரையும் சைவநெறியிற் பிறழவொட்டாமலும் தாங்களும் பிறழாமலும் அரசாக்ஷி புரிந்து வருவார்கள். பின்னர் ஆயிரவருஷம் பாண்டியர்களும் சோழர்களும் அரசாக்ஷிபுரியுங்கால் பலிஷ்டராகிய விக்ரமன், சாலிவாகனனென்பவர்களால் அபஜெயப்பட்டுச் சைவநெறியினும் வருணாச்சிரமநெறியினுந் தவறுதலுடையராயுஞ் சூத்திரசங்கரங்களுடையராயுங் காலங்கழித்துவருவார்கள். பின்னர் தெலுங்கர்களுள் ஆறுபேரும் அரசாக்ஷி செலுத்தவுண்டாவார்கள். அதன்பின்னர் ஆரியாவர்த்தத்திலும், காசியிலும், குருக்ஷேத்திரத்திலும் அவிவேகிகளாகிய துலுக்கர்கள் விசேஷமாயுண்டாவார்கள். ஐந்நூறு வருடத்துக்குமேல் பிராமணர்கள் தரித்திரர்களாகவும், அல்பபுத்தியுடையவர்களாகவும், அரசர்கள் சூத்திரர்களைக் கலந்தவர்களாகவும், திருடர்களுக்குச் சமானமானவர்களாகவும், அதர்மிஷ்டர்களாகவுமாவார்கள். ஏனையோரெல்லாம் துலுக்காசாரத்தையுடையவர்களாவார்கள்.

இனிச் சிவபக்தர்களுடைய அவதாரங்களைச் சொல்லுகிறேன். அசைவநெறியை உடையாரைத் தண்டித்துச் சிவமே பரம்பொருளென்றுணர்த்தும் சைவநெறி முன்போலெங்குந் தழைத்தோங்க அரதத்தனென்னும் ஓர் சாம்பவனும், சாந்தோக்ய வம்சோத்பவனும், என்னுடைய அம்சபூதனும், பிராம்மணசிரேஷ்டனும், ஆசாரநிஷ்டனும், சோமயாஜியும், என்னுடைய சிறந்தபத்தனுமான அப்பையதீக்ஷிதனென்னும் ஓர்சாம்பவனும் அவதரித்துச் சேரசோழபாண்டிய நாடுகளில் மறைந்துபோயிருக்கும் சிவபாரம்யமான சைவசாஸ்திரங்களைப் பிரகாசப்படுத்துவர். பின்வரும் பக்தகோடிகளும் அந்தச் சைவசாஸ்திரங்களைக் கொண்டு சிவப்பிரகாசராய் அந்தச் சாஸ்திரங்களை விர்த்திசெய்துவருவார்கள்.

இங்ஙனங் கூறிவந்த இவர்களுக்கெல்லாந் தலைமையாயுள்ள அறுபத்துமூவரென்னும் எண்படைத்து என்னுடைய பக்திமார்க்கத்தை வெ



ளிப்படுத்தும் பக்தர்கள் பலசாதிகளிலும் அவதரித்துப் "பக்தி" என்பது இவ்வளவினையுடையதென்பது யாவருமறிய அதற்குப் பிரமாணமாயிருப்பார்கள். அவர்களில் ஸ்ரீ ஞானசம்பந்தனென்றும், வாகீசனென்றும், சுந்தரமூர்த்தியென்றும், பெயருள்ள மூவரும் எனக்கு முக்கியமானவர்கள். அவர்களுடைய சரித்திரங்களைப் பின்னால் கூறுகின்றேன்.

அகஸ்தியனென்கிற முனியும், அம்முனிபுங்கவனைப்போன்ற சைவருஷிகளும் தபோபலத்தினால் சிவபக்தர்களாய் மகிமையோடு விளங்குவார்கள். ஹே தேவி! அப்பெரியோர்கள் காவேரிதீர்த்தத்திலுள்ள லிங்கமூர்த்திகளுடைய அற்புதமாகிய மகிமையை அகஸ்தியபகவானாலுண்டாக்கப்பட்ட திராவிடபாஷையினால் தோத்திரஞ்செய்வார்கள். அந்தத் திராவிடஸ்தோத்திரம் எனக்கு மிகவும் பிரீதிகரமாயிருக்கும். இவர்கள் செய்தி யிங்ஙனமிருக்க, இப்பூமண்டலத்தில் சோரவம்சத்திற் சனிக்கும் பாபிஷ்டர்களாகிய அரசர்கள் பிராமணத்துரோகிகளாயும், சிவாலயங்களைக் கெடுக்கின்றவர்களாயும், பஸ்மருத்திராக்ஷதாரணம் சிவலிங்கார்ச்சன முதலியவைகளில்லாதவர்களாயும், தமோகுண நிஷ்டர்களாயும், என்னைத்தெரிந்துகொள்ளும் சிவஞானமில்லாதவர்களாயும், சிஷ்டாசாரமிருக்கின்றவர்போற்காட்டி துஷ்டாசாரத்திலே நிஷ்டர்களாயும், சிவநிந்தைசெய்வதிலும், சிவலிங்கார்ச்சனை செய்யாமலிருப்பதிலுஞ் சந்துஷ்டர்களாயுமுள்ள சிலதுஷ்டர்களுண்டாவார்கள். இந்தத் துஷ்டர்களேயன்றிச் சக்கிராங்கிதஞ் செய்துகொள்ளுகின்றவர்களாயும், நெற்றியில் ஊர்த்துவ புண்டரமுள்ளவர்களாயுஞ் சிலரிருப்பார்கள். சிலர் தர்மிஷ்டர்களாயிருந்தும் நெறியில்லாதவர்களாயும், நெறியில்லாதிருந்தும் சிவபூஜை நடத்துகின்றவர்களாயும், வேதாந்த விசாரமுடையவர்களாயும், சத்திபூஜை குருபூஜை முதலியவைகளில் ஆசக்தியுள்ளவர்களாயுமிருப்பார்கள். அவ்வாறிருந்தபோதிலும் வீடுகடோறும் போஜனஞ்செய்யவேண்டுமென்னும் பிரியமுள்ளவர்களாகப் பித்துப்பிடித்தவர்போலுலாவித்திரியுஞ் சிலபிராமணர்களும் சிஷ்டாசாரத்திற் பிரியமுள்ளவர்களைக் கெடுக்கின்ற துற்புத்தியும், அற்பமாகிய மிலேச்சாசாரத்திற் பிரியமும், சத்தியமார்க்கத்தில் அப்பிரமாணியமும், அசத்தியமார்க்கத்தில் பாஷண்டத்வமுமுடைய அநேகவரசர்களுமுண்டாவார்கள். இவர்களையன்றி ரக்தவர்ணமான முகமுடையவர்களாயும், நீலவர்ணமான பலவாபரணங்களைத் தரித்தவர்களாயும், வாத்தியமென்றெண்ணத்தக்க கண்டத்தொலியுடையவர்களாயும் கற்களைக் கையிலேந்தியிருப்பவர்களாயும், தேவர்களையுஞ் செயிக்கத்தக்க சரீரபலமுடையவர்களாயுமுள்ள ஊனசாதியருண்டாவார்கள். ஏனையரெல்லாம் பிரஷ்டர்களாகவும், ஒழுக்கமுடையோரை நிந்திக்

கின்றவர்களாகவும், பெரியோரை வணங்காதவர்களாகவும், தரித்திரத்தில் மூழ்கினவர்களாகவும், தெய்வசம்பந்தமான தவந் தியானம் ஒழுக்க முதலியவற்றாலுண்டாகும் முகவிலாசமாகிய தேஜசில்லாதவர்களாகவும், அசத்தியமுள்ளவர்களாகவும், பாபபுத்தியுடையவர்களாய் நித்தியகர்மானுஷ்டானத்திற் பிரியமற்றதூர்த்த நடையுடையவர்களாகவும், பரமேஸ்வருடைய பாதகமலப்பொகுட்டை நெருங்கி அதிலுள்ள மதுவையுண்ணும் அறிவில்லாமல் தூரத்திலிருந்து வட்டமிட்டலைவிச் செல்கின்ற வண்டுகளைப்போல் எதற்குங் குயுக்திகளையே சொல்லிக்கொண்டு சுகானுபவத்தை யிழந்துபோகத்தக்க புத்தியுடையவர்களாகவுமிருப்பர்.

அன்றியும், உடம்பைச் சுடுகின்ற முத்திரை யுடையவர்களாகவும், முகத்தில் முதலையைப்போலும் விசித்திரமான சின்னங்களைப் படைத்தவர்களாகவு மிருக்கத்தக்க மானுடர்களே மேன்மேலுமுண்டாவார்கள். இப்படிப்பட்டவர்களால் இவ்வுலகங்கெடும். இவர்களை இந்திரனுங் கண்டஞ்சுவான். இந்த மகாபாபிகள் கலியின் கொடுமையைப்பார்த்து வியாகூலமடைந்தவனாய் முகவிலாசமொழிந்து உக்கிரத்தோடிருக்கின்ற யமதருமனுடைய கோரப்பல்லடியி லகப்பட்டு அவனுக் காகாரமாயிருப்பவரேயன்றிக் காலகாலராய்ச், சூலபாணியராய், சந்திரசேகரராய் விளங்கும் பரமேஸ்வராகிய சங்கரருடைய திருவடிக்கு ஆளாயிருப்பவரல்லர். அரன்றிருவடிக்காளாகாத அரட்டர்களெல்லாம் அதிகரித்திருப்பாராதலால் பூமியும் வீரமில்லாமலிருக்கும். அதனால் பூமியிற்பிறக்கிற மானுடாதி சரீரங்களெல்லாம் பெருத்திருந்தாலும் சிறுத்திருந்தாலும் வீரியமில்லாதனவாகவே யிருக்குமன்றி வீரியத்தோ டிராவென்க.

---

## விஞ்ஞாபனம்.

அயலவர் வெளியிட்டுள்ள பத்திரிகைகள் முதலியவற்றினின்றும் எடுத்து வெளியிடப்படும் விஷயங்களில் தோன்றும் ஐயந்திரிபு முதலியவைகளுக்கு இப்பத்திரிகாசிரியர் உத்திரவாதியல்லர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 1917
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 2.] | நளஹு வைகாசிமீ 1916ஹு மேமீ | [இதழ் 5

## கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம்.

நண்ணிய தீவினை நாசஞ் செலுத்தி நமனுலகத்
தெண்ணினை நீக்கி யிமையோ ருலகத் திருக்கவுற்றீர்
பெண்ணினொர் பாகத்தன் சிற்றம் பலத்துப் பெருநடனைக்
கண்ணினை யார்தரக்கண்டுகை யாரத் தொழுமின்களே.

---

## தீவிஷயசக்சம்.

(60-வது பக்கத்தொடர்ச்சி.)

ஞானிகளின் உள்ளத்தில் சிவசூரியன் இடைவிடாது பிரகாசித்துக் கொண்டிருத்தலால் அவர்களுக்கு இரவு பகல் தோன்றாமையாலும், அவர்கள் யாவும் சிவமயமாகக்காண்டலாலும், அவர்கள் செய்யும் செயலெல்லாம் சிவச்செயலாயிருத்தலாலும் அவர்களுக்கு நன்மை தீமைகள் முதலியன இல்லையென்று ஞானநூல்கள் கூறியனவேயன்றி, அவர்கள் கஞ்சா அபின் மதுமாமிச முதலியன உண்டு மயங்கிக் காமமேலிட்டுக் கண்ட பெண்களைப் புணர்ந்து திரியலாம் என்று கூறவில்லை.

ஐரோப்பியர் முதலியவர்களுள் சிலர் தங்களிடம் உள்ளத்த குதிரை முதலியவிலங்குகளுக்கு மூப்பு அல்லது தீராநோய்வரின், அவைகள் இனி உலகில் உயிரோடிருந்தால் வருந்துமென்று இரக்கங்கொண்டவர்போல் அவைகளைத் துப்பாக்கியாற் சுட்டுக்கொன்று விடுகிறார்கள்.

இவ்வாறு கொல்வது கொலைப்பாவமேயன்றி ஒருகாலும் கருணையாக மாட்டாது. இவர்கள் தங்களுக்கும் தங்கள் மனைவிமக்களுக்கும் மூப்பு அல்லது தீராநோய்வரின் அவ்வாறே இறக்கத்துணிவரோ? ஒருபோதும் துணியார். இவர்கள் மூப்பு முதலியவற்றால் வருந்துவதற்காக இரங்கி இவர்களை எவனேனும் அவ்வாறு கொல்வானானால் அவனைக் கொலைப்பாதகனென்று தண்டித்துவிடுவார்களன்றோ? அதுபோலவே விலங்குகளைக்கொல்வோரையும் அறக்கடவுள் தண்டிக்குமே. இத்தேசத்தில் இந்துக்களுள்ளே சிலர் பிணிமுதலியவற்றால் மனிதர்களுக்கு உபயோகப்படாத குதிரை மாடு முதலியவைகளைக் கொலைசெய்யாதிருக்க வேண்டி அவைகளுக்கு மிருகாசயங்கள்வைத்து உணவுமருந்து முதலியன கொடுத்துக்காப்பாற்றுகிறார்கள். இவைகளுள் "பஞ்சரப்போல்" என்று சொல்லப்படும் மிருகாசயம் ஒன்று சென்னை டாக்கர் சத்திரத்திலிருக்கிறது. உபயோகப்படாத ஆடு மாடு குதிரை முதலிய மிருகங்களை வைத்திருப்போர் அவைகளைக் காப்பாற்றுவதற்குத் தங்களால் இயலாவிடின் அவைகளைக் கொல்லாமலும் கொலைசெய்பவர்களுக்கு விற்காமலும் இந்த மிருகாசயத்திற்கொண்டுபோய்ச் சேர்த்துவிடலாம்.

---

## திருக்குறள்-தீவினையச்சம்.

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. (க)

(இ-ள்.) தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை (முன்செய்த) தீவினையுடையோர் அஞ்சார். (அது இல்லாத) மேலோர் அஞ்சுவர். (எ-று.)

இதனால் முற்பிறவியிற் பாவஞ்செய்தவர்கள் பிற்பிறவியிலும் பாவஞ்செய்வார் என்பது விளங்குகின்றது.

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். (உ)

(இ-ள்.) (இன்பத்தின்பொருட்டுச் செய்யப்படும்) தீவினைகள் (அப்போது இன்பந்தருவனவாகக் காணப்பட்டாலும் பின்னே) துன்பங்களைத் தருதலால், (அப்படிப்பட்ட) தீவினைகள் தீயினும் அதிகமாக அஞ்சப்படும் (எ-று.)

தீயானது தீண்டினகாலத்திலும், தீண்டினஇடத்திலும், தீண்டின சரீரத்திலுமாத்திரம் சுடும். தீவினையோவெனில், எந்தக்காலத்திலும், எந்த இடத்திலும், எந்தப் பிறவியிலும், விடாது தொடர்ந்துபோய்த்



தன் பயனாகிய துன்பத்தை விளைக்கும். இவ்வாறிருக்க, மனிதர்கள் நெருப்புக்குமாத்திரம் அஞ்சித் தீவினைக்கு அஞ்சாதிருப்பது என்ன அறியாமை.!

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். (ங)

(இ-ள்.) (தம்மை) வருத்துவோரிடத்தும் தீவினைகளைச்செய்யாமல் விடுதலை (த்தமக்கு உறுதிநாடும்) அறிவுகளெல்லாவற்றிலும் முதலானவறிவாகும் என்று (நல்லோர்) சொல்லுவர் (எ-று.)

அறிவானுன்ற பெரியோர்கள் தங்களுக்குப் பிறர்துன்பஞ்செய்வாராயின், அவர்கள்மேற் கோபங்கொள்ளாமல், பொறுமையை வகிப்பதோடு, அவர்கள் தமக்குப்புரிந்த தீவினையால் நரகத்துன்பம் அடைய நேரிடுமே என்று எண்ணி அவர்கள் மீது இரக்கமுங்கொள்வார்கள்.

### நாலடியார்.

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர் கொலென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. (ச)

(இ-ள்.) (ஒருவன்) பிறனுக்குக் கேட்டைத்தரும் வினையை மறந்தும் எண்ணாதிருக்கக்கடவன். எண்ணுவானாயின் அவ்வெண்ணினவனுக்குக் கேட்டைத்தரும்வினையை அறக்கடவுள் எண்ணுவார் (எ-று.)

ஒருவன் பிறருக்குக் கேடுநினைக்கும்போதே, அவனுடன் கலந்து நிற்கும் அறக்கடவுள் அவனைவிட்டு நீங்குதலால், பின்னும் பின்னுங் கேடுசெய்து அவன் பெருந்துன்பமுறுதலொருதலை யாகலின், தனக்குச் சுகத்தை விரும்பினோன் பிறருக்குத் தீங்குசெய்யான் என்க. ஆதலால் பிறருக்குத் தீங்குசெய்தோம் என்று சந்தோஷிப்பது மடமையாகும்.

பழமொழி

கெடுவான் கேடு நினைப்பான்.

## நீதிநெறிவிளக்கம்.

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
வெங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
யங்கங் குலைவ தறிவு.

இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து. (ரு)

(இ-ள்.) வறுமையுடையேன் என்று நினைத்து (அது தீர்தற்பொருட்டுத்) தீவினைகளை (ஒருவன் பிறர்க்குச்) செய்யாதிருக்கக்கடவன். செய்வானாயின் பின்னும் வறுமையையுடையவனாவான். (எ-று.)

முன்செய்த தீவினையினால் இப்பிறவியில் வறுமை நேரிட்டிருக்க, அது தீர்தற்குச் சிவபுண்ணியஞ்செய்வதற்குப் பதிலாக, மேனுமேலும் தீவினைகளைச்செய்தல் பற்றியெரியும் நெருப்பையவிப்பதற்கு நீரை யூற்றுவதற்குப்பதிலாக எண்ணெயையூற்றுவதுபோலாம்.

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். (சு)

(இ-ள்.) துன்பஞ்செய்யுங் கூறுடைப்பாவங்கள் தன்னை (ப்பின் வந்து) வருத்துதலைவேண்டாதவன் தீமைக் கூறுடைய வினைகளைத் தான் பிறரிடத்தே செய்யாதிருக்கக்கடவன்.

தனக்குத் துன்பம் வாராமலிருத்தற்கு உபாயமாவது பிறர்க்குத் துன்பஞ் செய்யாதிருத்தலேயாம்.

எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். (எ)

(இ-ள்.) எவ்வளவு பெரிய பகையையுடையவரும் (அதனை ஒரு வழியினாலே) தப்புவர். (அவ்வாறின்றித்) தீவினையாகிய பகையானது நீங்காமற் போனவிடமெல்லாம் தானும்போய்க் கொல்லும் (எ-று.)

புறப்பகை எவ்வளவிருந்தாலும் அதனால் ஒரு சிறிதும் அஞ்சாத பெரியோர்கள் அகப்பகை சற்றிருந்தாலும் பெரிதும் அஞ்சுவர். அம்மட்டோ, அகப்பகையாகிய தீவினைக்கு அஞ்சிச் சிவபுண்ணியஞ் செய்யமாட்டாதவர்களுக்கும் அஞ்சுவர்.



## நீதிநெறிவிளக்கம்.

புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சா
ரகப்பகை யொன்றஞ்சிக் காப்ப—வனைத்துலகுஞ்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை.

## திருவாசகம்.

வாளுலா மெரியுமஞ்சேன் வரைபுரண் டிடினுமஞ்சேன்
றோளுலா நீற்றனேற்றன் சொற்பதங் கடந்தவப்பன்
றாளதா மரைகளேத்தித் தடமலர் புனைந்துநையு
மாளலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே.

தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று. (அ)

(இ-ள்.) தீவினைகளை (ப்பிறருக்கு) ச்செய்தவர் (தாம்) கெடுதல் (எத்தன்மைத்தென்றால்), (ஒருவனது) நிழலானது (நெடுந்தூரம்போயினும்) அவனைவிடாது வந்து அடியினிடத்தே தங்கிய தன்மைத்து (எ-று.)

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். (கூ)

(இ-ள்.) (ஒருவன்) தன்னைத்தான் விரும்புதலுடையவனாயிருந்தால் தீவினையாகிய பிரிவினுள் எவ்வளவு சிறியதொன்றையாயினும் (பிறரிடத்தே) செய்யாதிருக்கக்கடவன் (எ-று.)

அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். (ய)

(இ-ள்.) (ஒருவன் செவ்வையான வழியைவிட்டுக்) கோடியவழியிலேசென்று தீவினைகளை (ப்பிறரிடத்தே) செய்யானாயின், அவன் இல்லாத கேட்டையுடையவன் (அதாவது கேடில்லாதவன்) என்பதை அறியக்கடவர்.

---

# சிவரகசியம்.

## பிரம ருத்திர சிருஷ்டி.

ஸ்கந்தமூர்த்தி ஜைகிஷவ்ய முனிவரைநோக்கி ஓ முனிபுங்கவரே, எனது அம்மையாராகிய தேவியார் இறைவனாரைப் பணிந்து கைகூப்பி நின்று ஹே சிவா! பிரமனுடைய அந்தத்தில் வரும் கலியுகாந்தத்திற் காணப்படும் பிரமப்பிரளயத்தில் இவ்வுலகமெல்லாம் சலமயமாயிருப்பதாயும், அச்சமயத்தில் தேவரீர் பிரமதேவனை நீறாக்கித் திருமேனியிலணிகிறதாயும், அவ்வெள்ளத்தில் பாலனாய் மிதந்துகொண்டிருக்கிற நாராயணனை விழுங்குவதாயும் சொல்லியருளினீரன்றோ. பிரமனெப்படி நீறுவான்! மீண்டும் நீறாய்ப்போன பிரமனும், விழுங்கப்பட்ட விண்டுவும் சிருஷ்டிகாலந்தோறும் எப்படித் தோன்றுவார்கள். ஏனையவுலகங்களும் எவ்வாறு தோன்றும்?, ஹே ஜகதீசா!, இவ்விஷயத்தில் எனக்குச் சந்தேகந்தீரச் சொல்லியருளல்வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, இறைவனார் அத்தேவியைப்பார்த்துச் சொல்லியவாறு உமக்கு அந்த ஆதி ரகசியமாயுள்ள அற்புதவிஷயத்தை நன்றாய் விளங்குமாறு விரித்துச் சொல்லுகிறேன். சகலதாபங்களையும் போக்கவல்ல அதனைச் சாவதானமாய்க்கேளும். நான் உமக்குச்சொல்லுவதுபோல் நீர் பிறருக்குச் சொல்லலாகாது. இது உமக்குள்ளே ரகசியமாயிருக்கக்கடவது.

இனிப் பிரமன் நீறாய் இறைவன்திருமேனியிற்போய்ச்சேரும்வகையைக் கூறுகின்றேன். முன்கூறியபடி பிரமப்பிரளயம் வரும்பொழுது பிரமனால் சிருட்டிக்கப்பட்ட நவப்பிரமாக்களும், தேவாசுரர் கந்தர்வ கின்னரர்களும், மநு மாநுட நாகர்களும், அப்சரஸ்திரீகளும், கருடரும், சமுத்திரங்களும், த்வீபங்களும், நதிநதங்களும், வன பர்வதங்களும், புவனதேசங்களுமாகிய சராசரங்களெல்லாம் பிரமனுடைய கருப்பத்திலடங்கும். அப்பொழுதுசிருட்டித்தொழிலைவிட்டு இந்திரியங்களையடக்கித் தூவாத சாந்த நோக்கமுடையவனாய்த் தன்னைச் சிவத்தினிடத்தும், சிவத்தைத் தன்னிடத்துங் கண்டு அதுவாயிருத்தலாகிய சிவயோகத்தில் ஒரு கற்பமிருப்பான். அப்பொழுது பகலில்லை. இரவில்லை. ஒளியில்லை. இருளில்லை. பின்னர் அச்சிவயோக முதிர்ச்சியினால் தபாக்கினி வெளிப்பட்டு அவனை நீறாக்கிவிடுகின்றது. அது பிராமியமென்று சொல்லப்படும். அந்தச் சாம்பலைத்தான் ஈசானராகிய சிவபெருமானார் திருமேனியிலுத்தூளனமாகப் பூசி ஆனந்த நிர்த்தனஞ்செய்தருளுவர்.

ஓ முனிவரே! இவ்வாறு கற்பங்கடோறும் பிரமர்கள் பஸ்மமாய் என்னுடைய சரீரத்தில் உத்தூளனமாய்ப் பூசப்பட்டு ரோமசமூகங்களிற் படிந்திருப்பார்கள். புனருற்பவமாகிய சிருஷ்டிகாலந்தோறும் வே



தாங்கங்களாகிய சாஸ்திரங்களாறும் தோன்றும்போது அந்த ரோமத்தினின்றும் பிரமர்களுண்டாவார்கள். ஓ தவசீலரே! ஒரு கற்பத்தினடந்த சிருஷ்டிக்கிரமத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக.

ஆதி சிருஷ்டியிற்றோன்றிய பிரமனுக்குப் பூர்வத்தில் எவ்வாறு சிவனார் ஆக்ஞை செய்திருக்கின்றாரோ அவ்வாறே அந்த ஆக்ஞையைக்கடவாமல் சிருஷ்டி செய்யத்தொடங்குங்காலத்தில் லோகாலோகங்கள் பூதங்கள் மநுக்கள் ரிஷிவர்க்கங்கள் இந்திரன் உபப்பிரமாக்கள் பிரஜைகள் நதி நதங்கள் புரங்கள் வனங்கள் மலைகள் சாகரங்கள் வருணதருமங்கள் வருணாச்சிரமங்கள் தர்மாதர்மங்கள் தேவாசுரர்கள், அரசர்கள் முதலாகச்சொல்லப்பட்ட சராசராத்மகமாகிய சகலப் பிரபஞ்சங்களும் முன் யுகத்திலெப்படியுண்டாக்கப்பட்டிருந்தனவோ அவ்வாறேயுண்டாக்கும் வல்லபத்தையுடையவனாய் யாவையும் படைத்து அந்தச் சிருஷ்டித்தொழில் மென்மேல் வளரும்பொருட்டு உருத்திரரைத் தியானித்தனன். அப்போது காலாக்கினி ருத்திரர் அவனுடைய பிரமரந்திரத்தைப் பேதித்து அவனெதிரில் சூலஹஸ்தராய், திகம்பரராய், சந்திரசேகரராய், சர்ப்பபூணினராய், பஸ்மோத்தூளிதராய், திரிபுண்ட தாரணராய், வியாக்கிர சர்மதாரியாய் ஆனந்தக் கூத்தாடினர்.

இவ்வாறு தன்னெதிரிற் கூத்தாடுகின்ற சூலபாணியைத் தரிசித்து எழுந்திருந்து அவர் சமீபத்திற் சென்று நமஸ்கரித்து, ஓ காலாக்கினி ருத்திரரே! திரிநேத்திர முடையவரே! என்று பலவாறாகத்தோத்திரஞ் செய்து ஓ ருத்திர மூர்த்தியே! யான் பரமேஸ்வரருடைய ஆக்ஞையால் பிரேரிக்கப்பட்டவனாய் எல்லாவுலகங்களையும் சிருஷ்டிசெய்யும் பாரத்தை வகித்திருக்கின்றேன். ஓ பகவானே! நான் சிருஷ்டி செய்யும் வகையை நன்றாயறியாதவனாயிருக்கிறேன்; ஆகையால் என்பால் கருணைவைத்து அநேக சீவர்களைச் சிருஷ்டிக்கும் வகையைக் காட்டுவீராயின் பின்னர் அடியேன் படைக்கும் வகையை நன்றாயறிந்துகொள்வேனென்று பிரார்த்திக்கச் சிவபெருமானாருடைய நேத்திரோற்பவராகிய காலாக்கினிருத்திரர் அலக்ஷிய பாவத்தைக் காட்டும் புந்நகைசெய்து, நானாவிதமான அலங்காரத்தோடு கூடினவர்களாயும் கெம்பீரமான நேத்திரமுடையவர்களாயும், பாணம் கத்தி பாசமுதலிய ஆயுதங்களையுடையவர்களாயும், மேக கர்ச்சனைபோலும் தொனியுடையவர்களாயுமுள்ள அநேக ருத்திரர்களை ஓர் கணத்திற் சிருட்டித்தனர். அவர்களைப் பிரமன் பார்த்துப் பயந்தவனாய் உருத்திரரைநோக்கி ஓ காலாக்னிருத்திரரே உலகமெல்லாம் உருத்திரகோடிகள் மயமாயிற்றேயன்றி வேறொருவரையுங்

காணேன். இவ்விதமான சிருட்டிவேண்டாம். உருத்திர சொரூபங்களும்வேண்டாம். சனனமரணத்தோடுங் கூடிய பிராணிகளைச்சிருட்டி செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, காலாக்கினிருத்திரர் மூன்றுலகங்களிலேயு முள்ள அநேகவிடங்களிற்றன்னாற்படைக்கப்பட்ட உருத்திர கோடிகளைத்தாபித்துப் பிரமனைநோக்கி நான் மரணத்துக்குட்பட்ட பிராணிகளைச் சிருட்டிக்கமாட்டேன். நான் எந்தவிதமாய்ச் சிருட்டித்தபோதிலும் அவர்களுக்கு மரணமுண்டாகமாட்டாது: ஆகையால் ஓ பிரமனே! இனி நீயே குலாலனைப்போலச் சனன மரணத்தோடுங்கூடியபிராணிகளைச் சிருஷ்டித்து வருவாயென்றனுக்கிரகஞ்செய்து மறைந்தனர். அதுபோலப் பிரமன் தான் சிருஷ்டிசெய்யத்தக்க சனன மரணத்தோடுங் கூடிய ஆன்மகோடிகளைக் கற்பங்கடோறும் பரம்பரையாய்ச் சிருஷ்டித்து வந்தனன்.

இவ்வண்ணம் நடந்துவரும் கற்பங்களில் பிரமவிஷ்ணுருத்திரர்களாகிய மூவரும் ஒவ்வொரு காலவிசேடங்களில் ஒவ்வொரு காரணார்த்தமாக ஒருவரிடத்திலொருவர்தோன்றி இவருக்கு அவர்தந்தை அவருக்கு இவர் தந்தை என்று சொல்லும்படியான அன்னியோன்னிய சம்பந்தமுடையவர்களாயுலகத்தைப் பரிபாலித்து வந்து பின்னர் உருத்திர சாரூப்பியத்தையடைவார்கள். ஓர் கற்பத்தில் என்னுடைய வலப்பாகத்திற் பிரமனும், இடப்பாகத்தில் விஷ்ணுவும், நெற்றியில் உருத்திரமூர்த்தியுந் தோன்றுவர். இவ்வாறு மூவருந் தோன்றியபின்னர் பிரமனுக்கு வேதசாஸ்திரங்களெல்லாங் கற்பித்து அவைகளையும் அவன்பாலொப்புவித்து அவனுக்குச் சிருஷ்டியில் மயக்கமுண்டாகுந்தோறும் உருத்திரமூர்த்தி அவனுடைய நெற்றியிற்றோன்றி அம் மயக்கத்தைப் போக்கித் தெளிவுண்டாகும் வண்ணம் அனுக்கிரகஞ்செய்துவருமாறு கட்டளையிட்டிருக்கிறேன். அதுபோலப் பிரமன் வேதமுறை தவறினும் உருத்திர மூர்த்தியினுடைய அனுக்கிரகத்தைப் பெற்றும் உலகைப் படைத்து வருவானாயின் அவைகளை நான் அக்கினிநேத்திரத்தாற் சுட்டெரித்து மறுபடியுஞ் சிருட்டிக்கத் தொடங்குவேன். பின்னர் பிரமவிஷ்ணுருத்திரர்களை இந்த மூன்று சகத்தையும் முத்தொழில் செய்து வரும்படி ஆக்ஞைசெய்து வருவேனென்று சிவபெருமானார் தேவியாருக் கருளியதை ஸ்கந்தமூர்த்தி ஜைகிஷவ்ய முனிவருக்குக் கூறினார்.

பிரம ருத்திர சிருஷ்டி முற்றிற்று.

---



# சிவனடியார்பூசை.

மனம் வாக்குக் காயங்களுக் கெட்டாத கடவுளை மனிதர்கள் மனம் வாக்குக் காயங்களால் வழிபடும் இடங்கள் குரு லிங்கம் சங்கமம் என்னும் மூன்றுமாம். ஆசிரியனை மனிதனாக எண்ணாமல் கடவுளாகவே எண்ணிப் பூசித்தல் குருவழிபாடும், சிவலிங்கமுதலிய திருவுருவங்களைக் கல்முதலியனவாக மதிக்காமல் கடவுளாகவே மதித்து வணங்குதல் இலிங்கவழிபாடும், தந்தஞ் சமயானுட்டானங்களை அன்போடு அனுட்டிப்பவர்களை மனிதரெனக்கருதாது கடவுளேயெனக்கருதி வழிபடுதல் சங்கம வழிபாடுமாம்.

குரு லிங்க சங்கம வழிபாடு என்னுஞ் சொற்றொடர் சைவபரிபாஷையாயிருப்பதனால், இவ்வழிபாடு சைவர்களுக்கே யுரித்தெனச் சிலர் நினைக்கிறார்கள். இம்மூன்றிடங்களிலுங் கடவுளை வழிபடுதல் பெரும்பாலும் எல்லா மதத்தினருள்ளுங் காணப்படுதலாலும், கடவுளை மனம் வாக்குக்காயங்களைக்கொண்டு வழிபடும் வழிபாடுகளனைத்தும் இம்மூன்றிலடங்குமாதலாலும், குரு லிங்க சங்கம வழிபாடானது பல சமயத்தாருக்கும் பொதுவான அனுட்டானமென்றே நிச்சயிக்கப்படும். ஆனால் சைவசமயிகள் கடவுள்வேறு குருலிங்க சங்கமங்கள் வேறு என்றெண்ணாமல், மனோவாக்குக் காயங்களுக்கெட்டாத நிட்களப்பொருளாகிய கடவுளே தங்களை ஆட்கொள்ளக் கருணைகூர்ந்து அவ்வாறு சகளீகரித்தெழுந்தருளினாரென்று மதித்து வழிபடுகிறார்கள். மற்றவர்கள் அவ்வாறு வழிபடுதலின்றி, அவைகளைக் கடவுளின் பரிசுத்தமான இடங்களாக மாத்திரம் எண்ணி வழிபாடுசெய்கிறார்கள். இதனால், இவ்வழிபாடு சைவசமயிகட்குச் சிறப்பும், மற்றவர்களுக்குப் பொதுவுமாகும்.

## திருக்களிற்றுப்படியார்.

அகளமய மாய்நின்ற வம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகிற் றங்கி—நிகளமா
மாணவ மூல மலமகல வாண்டனன்காண்
மாணவக வென்னுடனாய் வந்து.

(இ—ள்.) மாணவகனே, ஒருநாம மோருருவ மொன்றுமின்றி அவாக்மனோ கோசரமாகவும் அகண்ட சச்சிதானந்த சொருபமாகவுமிருக்கும் எம்மிறைவன், உயிர்கள்மீது வைத்த காருணியமிகுதியால், அவை, தன்னை ஊனக்கண்ணினாலும் கண்டு வணங்கி உய்யுமாறு, திரு

வம்பலத்தின்கண்ணே ஞானனந்தநடனம் புரிவதுமன்றி, என்னுடைய பிறவித்துன்பத்தை யொழித்தற்பொருட்டு, மானைக்காட்டி மானைப்பிடிப்பார்போல், என்னுடன் வேறறநின்றும், என்னைப்போல் மானிடவுருவங் கொண்டெழுந்தருளிவந்து என்பிறவிக்கு வித்தாகிய ஆணவமலத்தைப் போக்கி ஆட்கொண்டருளினன். (எ-று.)

## சிவஞானசித்தியார்.

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யுருக்கோலி மந்திரத்தா லெநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன்
மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பர்க்கே.

"எல்லாமு னடிமையே யெல்லாமு னுடைமையே யெல்லாமு னுடைய செயலே" என்று ஸ்ரீ தாயுமானசுவாமிகள் அருளிச்செய்தவாறு, எல்லா உயிர்களும் கடவுளின் அடிமைகளே. ஆதலால் மனிதர்கள் யாவரும் அவருடைய அடியவர்களே. அவ்வாறிருந்தும், மனிதர் எல்லோருமே அவரைத் தங்கள் தலைவராகவும், தங்களை அவருக்கு அடிமைகளாகவும் எண்ணி அவருக்காட்படுவதில்லை. சிலர் கடவுளே யில்லையென்கிறார்கள். சிலர் கடவுள்வேறும் தாங்கள்வேறுமன்று; தாங்களே கடவுள் என்கிறார்கள். இவர்கள் இயற்கையாகவே கடவுளின் அடிமைகளாயிருந்தும்; அவருக்காட்பட்டு உய்யும் புண்ணியமில்லாமல் அவருடைய அடிமைத் திறத்தினின்றும் விலகிய பாவிகளாகையால் அவருடைய அடிமைகளாக மதிக்கப்படுதலில்லை. இவர்களொழிந்த வேனையோருள்ளும், பலர், சர்வலோகைகநாயகராகிய கடவுள் உண்டு, அவருக்கு உயிர்களியாவும் அடிமைகள் என்னும் உணர்ச்சியையுடையவராயிருந்தும், தங்கள் சமயாநுட்டானங்களைக் கைவிட்டிருப்பதனால், இவர்களும் தங்கள் சமயத்தினரால் அடியவர்களாக மதிக்கப்படுதலிலர். ஆதலால், தத்தஞ் சமயநூல்களில் விதித்த அநுட்டானங்களுடையவராய், கடவுளை அன்போடு வழிபடுவோரெவரும், அவ்வச்சமயத்தினரால் வணங்கப்படும் அடியவராவர்.

மதங்கடோறும் அநுட்டானங்கள் வெவ்வேறாயிருந்தாலும், அன்பு எனப்படும் அரும்பெரும்பொருள் எல்லோர்க்கும் பொதுவாயுள்ளது. இவ்வன்பே கடவுளின் உருவமாம்.



## திருமந்திரம்.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

கடவுளிடத்தில் அன்புண்டாதற்பொருட்டே மதங்கள்தோறும் பலவிதமான அநுட்டானங்களுண்டாயிருக்கின்றன. ஆதலால் அன்பில்லாதபோது வெறும் அநுட்டானத்தாற் பயனில்லை. இதுபற்றியே ஒவ்வொரு சமயத்திலும் அன்பில்லாதவர்களுடைய அநுட்டானங்கள் நன்கு மதிக்கப்படுதலில்லை.

## தேவாரம்.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீருங் கண்டு
நக்கு நிற்ப ரவர்தம்மை நாணியே.

## திருமந்திரம்.

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்த வொண்ணாதே.

இதனால் யார் எச்சமயாநுட்டானமுடையவராயிருந்தாலும் கடவுளிடத்து மெய்யன்புடையவராயிருந்தால், அவர் பத்தரெனப்படுவார் என்பது விளங்கும். ஆனால் கடவுளிடத்தில் அன்புடையவர்கள் எச்சமயத்தினராயிருந்தாலும் அவர்களைச் சமயபேதம் பாராட்டாமல் யாவரும் வணங்கலாமோ எனில், அப்படியன்று. சமயங்கடோறும் அன்புடையவர்கள் இல்லாமற்போகார். ஆதலால் அன்புடையவர்களென்று எல்லாச் சமயத்தாரையும் பூசிப்பது சுருதி யுத்தி அநுபவங்களுக்கு மாறான செய்கையாகும். கற்புடையமாதர்கள் வேறொருவன் கல்வி, செல்வம், அழகு, யௌவனம், வீரம், புகழ் முதலிய உத்தமகுணங்களால் தன் கணவனைக் காட்டிலும் மேம்பாடுடையவனாயிருந்தாலும், அவனைக் கண்ணெடுத்தும் பாராமல், தன் கணவனையே யாவரினும் மேம்பட்டவனாகக் கருதிப் பூசிப்பதுபோல், ஒவ்வொருவரும் தத்தஞ் சமயநெறியொழுகுவாரைமாத்திரம் வழிபடுதல் வேண்டும். இதனை வலியுறுத்தற்

பொருட்டே "சமயகோடிகளெலாந் தந்தெய்வமெந்தெய்வமென் றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது" என்று கூறியருளிய ஸ்ரீ தாயுமானசுவாமிகளும்

கற்புறு சிந்தை மாதர் கணவனை யன்றி வேறோ
ரிற்புறத் தவரை நாடார் யாங்களு மின்ப வாழ்வுந்
தற்பொறி யாக நல்குந் தலைவனின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணா னந்த வாழ்வே.

என்றும் அருளிச்செய்தனர். இவ்வுண்மையை யுணரப்பெறாதார் சிலர், கடவுளும் அன்பும் எல்லாச்சமயத்திற்கும் பொதுவாயிருப்பதனாலும், யாவருமே கடவுளின் அருளைப் பெறுதற்குரியவராதலாலும், யார் எந்தச் சமயத்தை அநுட்டித்தாலும் அநுட்டிக்கலாம் என்றுசொல்லிக்கொண்டும், சைவசமயாசாரியர்கள், வைணவ ஆழ்வாராதிகள், இயேசுகிறிஸ்து, மகம்மது, கௌதமபுத்தர் முதலியவர்களையெல்லாம் சமமாக எண்ணிக்கொண்டும், சமயாநுட்டானங்களுடையவர்களையெல்லாம் நிந்தித்துக்கொண்டும், தங்களுக்கென எச்சமயாநுட்டானமுமின்றி இடறி வீழ்கின்றார்கள். பிறசமயிகளிடம் மெய்யன்புமுதலிய நல்லொழுக்கங்கள் காணப்பட்டால் அவரை நாம் இகழலாகாது. அவர்கள் அவ்வொழுக்கத்தின்பலனாக நமது சுத்தாத்துவித சித்தாந்த சைவத்தை யனுட்டிக்கும் பாக்கியத்தை இனிவரும் பிறவியில் அடையும் பக்குவிகளென்று எண்ணிச் சந்தோஷித்தல் வேண்டும். அப்படிச் சந்தோஷித்தலன்றி அவர்களைச் சகல சமயாதீதாத்வைத சித்தாந்தசைவத் திருவாளர்களோடு சமமாயெண்ணிப் பூசித்தலாகாது.

## திருக்களிற்றுப்படியார்.

மன்னனரு ளெவ்வண்ண மானுடர்பான் மாணவக
வன்ன வகைய தானருளு—மென்னில்
அடியவரே யெல்லாரு மாங்கவர்தா மொப்பில்
அடியவரே யெல்லா மறி.

(இ - ள்.) மாணவகனே, தன்னுயிர்போல் மன்னுயிரைக் கருதி மானிலங்காக்கும் மன்னர்கள் தங்கோற்கீழ் வாழுங் குடிகளுக்கு அவரவர் தாரதம்மியங்களுக்கேற்ப அருள்செய்வதுபோல், வினைக்கேடராகிய இறைவனாரும் உயிர்களின்பக்குவங்களுக்கேற்ப அருள்சுரப்பர். எல்லோரும் அவரருளைப் பெறுதற்குரிய அடியவர்களே. ஆனால், முறையே



சரியை கிரியாயோகஞ் செலுத்தி ஞானத்தாற சிவனடியைச் சேரவல்ல பெரியோர்களே மற்றெல்லாரினும் மேலான ஒப்பற்ற அடியார்களாவர் என்று அறியக்கடவாய் (எ—று.)

கடவுளிடத்தில் அன்புண்டாதற்கே மதங்கடோறும் அநுட்டானங்கள் உண்டாயிருக்கின்றனவெனினும், ஆன்மாக்களின் கன்மவேறுபாட்டிற்கியையவும், பக்குவங்களுக்கேற்பவும், மதாநுட்டானங்கள் உண்டாயிருத்தலினால், அவையாவும் தம்முள் சமத்துவமுடையனவாய், கடவுளிடத்தில் ஒரே அளவான அன்பை யுண்டாக்குவன என்று எண்ண இடமில்லை. அன்புண்டாதற்கு இன்றியமையாது வேண்டப்படும் சீவகாருணியம் கொல்லாமை புலாலுண்ணாமை முதலிய பொதுவொழுக்கங்களையும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் அநுட்டானக்கிரமங்களையும் அங்கமாகவுடைய சமயாநுட்டானங்களைப்போல், அறத்தைவேரறுத்து அருநரகிற் சேர்க்கும் புலை கொலை மதுபானம் முதலிய தீய ஒழுக்கங்களையுடைய சமயாநுட்டானங்களும் எவ்வாறு அன்பைப் பெருக்கி இன்பந்தரும்?

சிவனடியார்களிடத்தில் பொதுவுஞ் சிறப்புமாகிய இரண்டிலக்கணங்களும் உண்மையால் சிவனடியார்களே மற்றெல்லாரினும் உயர்ந்தவர்களென்பது சொல்லாமே யமையும்.

சிவனடியார்களிடத்திற் காணப்படும்பொதுவிலக்கணங்களாவன, கொல்லாமை, புலாலுண்ணாமை, திருடாமை, கள்முதலிய அறிவைமயக்கும் பொருள்களை யுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின்மகளிர் (வேசையர்) விரும்பாமை, இரக்கம் வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தைமுதலிய பெரியோரை வழிபடுதல் முதலியனவாம்.

சிவனடியார்களிடத்திற் காணப்படும் சிறப்பிலக்கணங்கள் புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும். அவற்றுள் புறத்திலக்கணங்களாவன, விபூதி உருத்திராக்கம் என்னுஞ் சிவசின்னங்களைத்தரித்தல், குருவைவழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களை யுச்சரித்தல், சிவபெருமானைப் பூசை செய்தல், சிவதருமங்களைச்செய்தல், சிவபுராணங்களைக்கேட்டல், சிவாலயதரிசனஞ்செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம

பண்ணுமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம். உடலிலக்கணம் பத்தாவன சிவபெருமானுடைய பெருமையைச் சிந்திக்குந்தோறும் பேசுந்தோறும் கண்டம் விம்முதல், நாக்குத் துடித்தல், உதடு துடித்தல், சரீரநடுங்குதல், உரோமஞ்சிலிர்த்தல், குறுவேர்வை கொள்ளல், நாக்குத் தழுதழுத்தல், ஆனந்தக்கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த்தன்னைமறத்தல் என்பவைகளாம். அகத்திலக்கணம் மூன்றாவன, பஞ்சாட்சரத்தை மானதமாகச் செபித்தல், மானதபூசை, சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக்காண்டல் என்பவைகளாம்.

சிவனடியார்களைச் சிவனெனவேகண்டு பூசித்தற்கு அவர்களிடத்திற் காணப்படும் வேடம், பாவனை, செயல், தன்மை என்னும் நான்கினுள் ஒன்றேயமையும். இவற்றுள் வேடமாவது சிவபெருமான் வேறற அதிட்டித்து நிற்கப்பெறுவனவாய்க்கண்டவுடனே அவரை நினைப்பிப்பனவாயுள்ள திருவேடங்களுடைமை. பாவனையாவது, நாடோறும்ஸ்ரீகண்டநியாசம், பஞ்சப்பிரமஷடங்கநியாசம், அஷ்டத்திரிம்சத்கலாநியாசங்கள் வாயிலாகச்செய்யுஞ் சிவோகம்பாவனை. யோகமாவது, பிரசாதயோகம். தன்மையாவது, தம்மின் இரண்டற இயைந்த சிவத்தோடுகலந்துநிற்குந்தன்மை.

(இன்னும்வரும்.)

## ஓர்சந்தேகம்.

சைவசமயிகளும் பிறசமயிகளும் தங்கடங்கள் மதாசாரப்படி ஸ்நானத்தின் பிறகு அனுஷ்டானங்கள் செய்துவருவதானது யாவருமறிந்த விஷயமே. இவ்வனுஷ்டானத்தில், சிவார்க்கியம் தர்ப்பண முதலியன செய்துகொண்டிருக்கும்போது மத்தியில் பலதடவை ஆசமனம் செய்துகொள்ளுகிறார்கள். அவ்வித ஆசமனம் செய்து கழிந்துள்ளஜலத்தை சிவகாயத்திரியால் சிவார்ப்பிதமாக அர்க்கியமும், தேவர்கள் பிதுர்கள் ரிஷிகள் கணங்கள் முதலாயினோர்கள் திருப்தியாக தர்ப்பணமும் செய்கிறார்கள். இவ்விதம்செய்வதால் குற்றமன்றோ? தெரிந்தோர் எனக்கும் என்னைப்போலுள்ள சந்தேகிகளுக்கும் இப்பத்திரிகை வாயிலாகவே ஆதரவுடன் தெரிவிக்கவேண்டுகிறேன்.

இங்ஙனம்,
ஓர் சந்தேகி.

சிவமயம்.

மெய்கண்டதேசிகர்திருவடிவாழ்க.

திராவிடமகாபாஷியகர்த்தரும்

சித்தாந்தசைவப் பிரதிஷ்டாசாரியருமாகிய

ஸ்ரீமாதவச்

# சிவஞானயோகிகள் திருநக்ஷத்திரம்.

சிவபெருமானே முழுமுதற் கடவுளென்றும், ஆன்மாக்கள் அனைவரும் அவருக்கு மீளா அடிமைகளென்றும், உயிர்களைப் பந்தித்திருக்கிற ஆணவாதி மலங்கள் அவரது அநுக்கிரகத்தாலே நீங்கப்பெறுமென்றும், அம்மல நீக்கத்திற்கு வேண்டப்படும் சாதனங்கள் ஸ்ரீபஞ்சாக்ஷர ஜபமும், விபூதி ருத்திராக்ஷங்களாகிய சிவசின்ன தாரணமும், சிவோபாசனையுமே யாமென்றும், அவற்றைச் சிறப்பு வகையால் விதித்த நூல்கள் சிவாகமங்களே யென்றும் உணர்ந்து, சிவாகம விதிப்படி சைவாசாரியரிடத்தே தீக்ஷைபெற்று அவ்வழிநின்று சிவபெருமானை மனம் வாக்குக் காய மென்னும் மூன்றாலும் வழிபடும் சமயமே சைவசமயமெனப்படும்.

இச்சைவசமய உண்மைகளைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமிகளென்னும் சமயாசாரியர் நால்வரும் தோத்திரவாயிலாகவும், மெய்கண்ட சிவாசாரியர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர், என்னும் சந்தானாசாரியர் நால்வரும் சாத்திரவாயிலாகவும் வெளியிட்டு சமயஸ்தாபனம் செய்தருளினார்கள்.

இத்துணைப் பெருஞ்சிறப்பினதாகிய சைவசமய ஒழுக்கம் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்குமுன் அந்நிய மதத்தர்களாலே பேதிக்கப்பட்டுப் பெரிதும் க்ஷீண தசையையடைந்தது. அக்காலத்திலே பாண்டிய நாட்டில் தாம்பிரபன்னி நதியின் வடகரையிலே பாபவிநாசத்திற்குச் சமீபத்திலுள்ள விக்கிரம சிங்கபுரத்திலே சைவ வேளாளர் குலத்திலே அகத்திய மகாமுனிவர் வரப்பிரசாதத்தினாலே திருவவதாரஞ்செய்து, மெய்கண்ட சிவாசாரியர் சந்ததியிலே வந்த ஞானபாநுவாகிய திருவாவடுதுறை யாதீனத்துப் பிரதமாசாரியர் நமச்சிவாய தேசிக சுவாமிகள் மரபிலே அருளுபதேசம் பெற்ற **ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள்** புறமதக் களைகளையெல்லாம் நியாயவாயிலாகக்களைந்து சைவசமயத்தைப் பண்டைநிலையில் பிரதிஷ்டை செய்தருளினார்கள்.

ஸ்ரீசிவஞானயோகிகள் திருவவதாரஞ்செய்து, வேதசிவாகமாதி சாஸ்திரங்கட்கெல்லாம் சிரஸ்தானமானதும், ஸ்ரீமெய்கண்ட சிவாசாரிய சுவாமிகளாலே அருளிச்செய்யப்பட்டதுமான சிவஞான போதத்திற்குத் 'திராவிடமாபாஷியம்' என்னும் பேருரையும், பிறிதோர் சிற்றுரையும், சிவஞானபோதத்தின்வழி ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகளாலே அருளிச்செய்யப்பெற்ற சிவஞானசித்தியாருக்கு அருமருந்தன்ன பொழிப்புரையும் லோகோபகாரமாக அருளிச்செய்யாதொழியின் நமது சைவ சமய வொழுக்கத்தைக் காண்பார் யாவர்? இற்றைக்கு யாமெல்லாம் விபூதி ருத்திராக்ஷதாரணர்களாய் சிவோபாசனை விசிஷ்டர்களாய் இறுமாந்து வாழும் பெரும்பேறு ஸ்ரீ சிவஞானயோகிகளால் வந்த வாழ்வன்றோ?

ஆதலின்; சைவசமயிகள் ஒவ்வொருவரும், ஆங்காங்குள்ள சைவசபையார்களும் சுவாமிகள் அத்துவிதசித்தாந்த முத்தியடைந்த திருநக்ஷத்திரமாகிய சித்திரைமாதத்து ஆயிலிய நக்ஷத்திரத்தனறு விதிப்படி சிரத்தையோடு குருபூஜைசெய்தல் வேண்டும்.

## ஷ சுவாமிகளின் 132-வது குருபூஜை நிகழும் சித்திரைமீ 28உ புதவாரதினமாகும்.

### குருபூஜைக்கிரமம்.

சுவாமிகளது திருநக்ஷத்திரதினத்திலே திருக்கோயிலிலே சிவலிங்கப் பெருமானுக்கும், சுவாமிகளுடைய திருவுருவம் உள்ளதாயின் அதற்கும் விசேஷபூஜையும், வேதபாராயண தேவார பாராயணங்களோடு உற்சவமும் செய்வித்தல்வேண்டும். சிவாகமப்படி தீக்ஷைபெற்ற நான்குவகை மாகேசுரர்களையும் அன்போடழைத்து வந்து அவ்வடியார்களைச் சுவாமிகளாகப் பாவித்து விதிப்படி பூசித்து நமஸ்கரித்துத் திருவமு தூட்டல் வேண்டும். சுவாமிகளுடைய சரித்திரத்தையும் அவர்கள் அருளிச்செய்த சாஸ்திரங்கள், பாஷ்யங்கள் முதலியவற்றின் பொருள் நுட்பங்களையும் ஓதுதலும் ஓதுவித்தலும், கேட்டலும் வேண்டும்.

இவ்விதம் சுவாமிகளுடைய குருபூஜா மகோற்சவத்தைச் சைவர்கள் அனைவரும் நடத்தி ஸ்ரீ சிவபெருமானுடைய திருவருட் பேறடைவார்களாக.

சுவாமிகள் சரித்திரம் வேண்டுவோர் அரையணாத் தபால் முத்திரை அனுப்பி எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
சைவசித்தாந்தசபையார்,
தூத்துக்குடி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR 10 MAY 1917 MADRAS

# சைவம்.

மலர் 2.] || நளஹு ஆனிமீ 1916ஹு ஜூன்மீ || [இதழ் 6

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

---

## சென்னைச் சிவனடியார்திருக்கூட்டத்தின்

## சிறந்தவிண்ணப்பம்.

இதுசைவாபிமானசீலர்கள் ஒவ்வொருவராலும்
அத்தியாவசியமாய்க் கவனிக்கற்பாலது.

இச்சபை அரசாங்கத்தினால் ரிஜிஸ்டர் செய்யப்பெற்றிருப்பதும், 18 வருடங்களாக ஒழுங்காய் நடைபெற்றுவருவதும், அனேக சிவதலங்கட்கு யாத்திரைசெய்து சிவாலயவழிபாடு சைவப்பிரசங்கமுதலியன செய்ததும், சென்னையில் சுமார் 3000 ரூபாவரையில் செலவிட்டுச் சபாமண்டபங் கட்டிவைத்துக்கொண்டு அதில் புத்தகசாலைவைத்து, சைவப்பிரசங்கம் தமிழ்வேத பாராயணமுதலியன செய்துகொண்டிருப்பதும், திருமுறைத்திரட்டுமுதலிய நூல்களை வெளியிட்டு மிகவுங்குறைந்த விலைக்கு விற்றதும், இப்போது ஆங்கில பாடசாலைவைத்து அதில் சிறுவர்களுக்கு அரசாங்கச் சட்டங்களை யநுசரித்து ஆங்கிலம் தமிழ் இவற்றோடு சைவசமயபாடங்களையுங் கற்பித்துச் சிவாலயவழிபாடு செய்விப்பதும், "சைவம்" என்னும் இப்பத்திரிகையை வெளியிட்டு மிகவுங் குறைந்தசந்தாவிற்குக் கொடுத்து வருவதும், கிரமப்படி நிர்வாக சபைகளும் மகாஜனசபைகளுங் கூட்டி வருடந்தோறும் தவறாமல் வரவு

செலவு கணக்கும் சபாக்கிரந்தமும் அச்சிட்டு வெளியிடுவதும், இச்சபையார் இதுகாறும் வெளியிட்ட சபாக்கிரந்தங்களாலும், சைவம் என்னும் இப்பத்திரிகையாலும் யாவருக்கும் வெள்ளிடைமலைபோல் விளங்கித்தோன்றும்.

இத்தகைய சபைகளைக் கிறிஸ்தவர்கள் தங்கள் உயிர்த்துணையாக எண்ணி ஆதரிப்பதனால், கிறிஸ்துசபைகள் உலகெங்கும் அபிவிருத்தியெய்தி, எண்ணிறந்த பாடசாலைகள் வைத்துக் கிறிஸ்து சமயபோதனை செய்கின்றன. கிறிஸ்து சமயநூல்கள் வெளியிட்டு, நாம் இரண்டு ரூபாவுக்கு விற்கும் புத்தகங்களை இரண்டணாவுக்குக் கொடுக்கின்றன. சைவசமயிகள் சுயநலங்கருதாமல் பொதுநலமொன்றையே விழைந்து சைவசமய பரிபாலனஞ் செய்தற்கென சபைகள்வைத்து நடத்துவது அருமை. யாரேனும் சைவாபிமானிகள் துணிந்து முன்வந்து நடத்தப்புகுந்தாலும், சைவசமயிகள் சிலர் போலிச் சபைகளை வைத்துக்கொண்டு உலகோரை வஞ்சிப்பதனால், உண்மைச் சபைகளை யாதரிப்பாருமில்லை. இதனால் நமது சமயம் நாளுக்குநாள் சீரணமடைந்துகொண்டேவருகிறது. கிறிஸ்தவர்களுள்ளும் ஊரைவஞ்சிக்கும் போலிச்சபைகள் இல்லாமற்போகா. ஆயினும், அவர்களுள் தங்கள் சமய வளர்ச்சியின்பொருட்டு உண்மையாயுழைக்கும் சபைகள் எண்ணிறந்தனவாயிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் தங்கள் திரவியங்களை அவைகளுக்கு அர்ப்பணஞ் செய்துவிடுகிறார்கள். சந்ததியில்லாதவர்கள் தங்கள் திரவியங்களை அச்சபைகளிடம் சேர்த்துவிடுகிறார்கள். நம்மவர்கள் அவர்களைப்போல் சபைகளை வைத்துச் சமயபரிபாலனம் பண்ணும் வழக்கமில்லாமையால் சபைகளுக்குப் பொருளுதவிசெய்வதும் கடினமாயிருக்கிறது. கிறிஸ்து சமயத்திற்கு அரசாங்க பலமிருக்கிறது. கிறிஸ்து ஜனங்களும் உண்மையாய் ஒத்துழைக்கின்றார்கள். நமக்குச் சைவ அரசர் துணையே இல்லை. நம்முடைய சனங்களும் ஒத்து உழைக்கிறதில்லை. ஒத்து உழைத்தாலும் உதவிசெய்வாரில்லை. நம்முடைய நிலைமையிவ்வாறிருந்தும், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் சைவசமயத்திற்கு நல்லகாலம் உண்டாகுமென்று எதிர்பார்த்துக்கொண்டு "கொடிறும் பேதையும் கொண்டது விடாது" என்னும் பழமொழியின்படி இடையறாத ஊக்கத்தோடு தங்கள் சபையை வருடத்திற்கு வருடம் மேலுமேலும் அபிவிருத்திசெய்து கொண்டு வருகிறார்கள்.

இச்சபையார் இப்போது செய்துவரும் வேலைகளுள் மிகவும் சிறந்தவை யிரண்டு. அவை பாடசாலைவைத்திருத்தலும் பத்திரிகை வெளியிடுதலுமாம். இவையிரண்டும் அபிவிருத்தியடைவதற்கு அச்சுக்கூடம்



அத்தியாவசியமாய்வேண்டும். கிறிஸ்து சபைகள் பல அச்சுக்கூடங்களை வைத்துக்கொண்டே உலகுக்குப் பேருபகாரங்களைச் செய்கின்றன. அன்றியும், அயலவர் வைத்திருக்கும் அச்சுக்கூடங்களில் பத்திரிகை வெளியிடுவதனால் பலவிதமான கஷ்டநஷ்டங்களுண்டாகின்றன. ஆதலால் பத்திராதிபர்கள் பலர் சொந்தமாக அச்சுக்கூடம் வைத்துக்கொள்ளுகிறார்கள். இச்சபைக்கென ஒரு அச்சுக்கூடமிருந்தால் நமது பத்திரிகை பலவிதத்திலும் அபிவிருத்தியடைந்து உலகை உவப்பச்செய்யும். அன்றியும், அது "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்—பேரறி வாளன் திரு" என்னுந் திருக்குறளின்படி, இச்சபைக்கேயன்றி, பொதுவாய் சைவசமயத்திற்கே ஒரு அரணாகவு மிருக்கும்.

இப்போதைக்கு வேண்டிய அளவாக ஒரு அச்சுக்கூடம் வைப்பதற்குச் சுமார் 2500 ரூபா வேண்டும். 250 சைவத்திருவாளர்கள் சைவநலங்கருதி அன்புகூர்ந்து முன்வந்து நமது பத்திரிகைக்கு ஆயுள் சந்தாதாரர்களாகச்சேர்ந்து ஒவ்வொருவரும் மொத்தமாக பத்து ரூபா கொடுத்து உதவிபுரிந்தால் இத்தொகை மிகவும் இலேசாய்ச் சேர்ந்துவிடும். இவர்களுக்கு ஆயுள்வரையில் பத்திரிகை அனுப்பப்படுவதன்றி, இவர்கள் இம்மையிலும் அம்மையிலும் இவ்வரிய பதிபுண்ணியப் பிரதிஷ்டைக்குக் காரணகர்த்தர்களாகவும் எண்ணி ஏத்தப்பெறுவர். ஆயுள் சந்தா செலுத்த இயலாதவர்கள் பிறரை ஆயுள் சந்தாதாரர்களாகச்சேர்த்துபகரித்தலும், கூடுமானவர்கள் தங்கள் ஆயுள் சந்தாமாத்திரமன்றி இன்னும் கூடுமானபொருளுதவி செய்தலும் உத்தமோத்தமமாகும். இவ்வாறு உபகரிக்க முன்வரும் பெரியோர்கள் அன்புகூர்ந்து தங்கள் விருப்பத்தை உடனே தெரிவிக்கப் பிரார்த்திக்கின்றோம். நூறுகையொப்பஞ் சேர்ந்தபிறகே பொருள்சேகரித்து உடனே அச்சுக்கூடம் வைக்கப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் பெயர் முதலியன சந்தாபெற்றுக்கொண்டவுடன் இப்பத்திரிகைவாயிலாக வெளியிடப்பெறுவதன்றி, அச்சுக்கூடத்தின் வரவு செலவு கணக்கும் வருடாந்தச் சபாக்கிரந்தங்களோடு வெளியிடப்படும்.

சிவநேயச் செல்வர்களே, இச்சமயத்தில் ஒவ்வொருவரும் சிரமம் பாராது அன்புடன் முன்வந்து கைகொடுத்தேற்றுங்கள்.

இங்ஙனம்

சைவந்தழைத்தோங்கவேண்டிச் சிவநேயர்களின்
திருவருளை யெதிர்பார்க்கும் காரியதரிசி,

இ. ஆதிமூலமுதலியார்.

# சிவனடியார்பூசை.

(82-வது பக்கத்தொடர்ச்சி.)

## சிவஞானபோதம்.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றாம் பதி.

(இ-ள்.) உரையுணர்வுக்கெட்டாத பரம்பொருள் உயிர்கள் தன்னையறிந்து உய்தற்பொருட்டு, திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருமேனியைத் தன் அன்பர்க்குக் கொடுத்தலாலும், அவ்வன்பர் தன்னைச் சிவோகம் பாவனையால் அறியச்செய்தலாலும், அவ்வாறு ஒரு குறியின்கண் நின்றுணரும் அவரைத் தன் வியாபகத்துக்குள்ளாக இருத்துதலாலும், குறியும் இறந்து நின்று தன்னை உள்ளவாறு உணரும் அவ்வன்பரிடத்து தயிரினிடத்திலுள்ள நெய்போல் விளங்கித்தோன்றும். அவ்வியல்பில்லாத பாசக்கட்டுடையாரிடத்தில் பாலினிடத்திலுள்ள நெய்போல் விளங்காது நிற்கும் (எ-று.)

சிவபத்தர்களைச் சிவனெனவே கண்டுவழிபடுதற்கு அவர்களிடத்திற் காணப்படும் வேடம்முதலிய நான்கினுள் ஒன்றேயமையும் என்பது மெய்ப்பொருள் நாயனார் முதலிய உண்மை நாயன்மார்கள் தம்மைக் கொல்ல வந்தவர்களையும் அவர்களிடத்திற்கண்ட சிவவேடத்தாற் சிவமெனக்கருதி வழிபட்டுய்ந்த திவ்விய சரித்திரங்களால் இனிது விளங்கும்.

## திருத்தாண்டகம்.

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

சிவபூசைசெய்பவர் சிவபெருமானைமாத்திரம் பூசிப்பவராவர். சிவனடியார் பூசைசெய்பவர் சிவனடியாரை மாத்திரமன்றி அவர்களை வேறற அதிட்டித்துநின்றருளும் சிவபெருமானையும் பூசிப்பவராவர். ஆதலால் சிவனடியார்பூசை சிவபூசையினுஞ் சிரேட்டமென நூல்கள் கூறாநிற்கும்.



## திருமந்திரம்.

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயி
னடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

சரியையாளரினும் கிரியையாளர் சிவசாந்நித்தியம் மிக்குடையவர்கள். சிவயோகிகள் சிவசாந்நித்தியம் நிரம்பப்பெற்றிருப்பவர்கள். சிவஞானிகள் சிவமேயாய் விளங்குபவர்கள். ஆதலால் இவர்களுக்குச் செய்யும் பூசைகளும் ஒன்றினொன்று அதிக பலனைத்தரும்.

அரிபிரமாதி தேவர்களாலும் வேதங்களாலும் மனம் வாக்குக்காயங்களாலும் அறியப்படாத அதீதப்பொருளாயிருக்கும் சிவபெருமான் சிவனடியார்களின் அன்பின்வசப்பட்டு அவர்கள் உள்ளத்தையே கோயிலாய்க்கொண்டு வீற்றிருப்பதுமன்றி அவர்கள் விரும்பிய ஏவலையுஞ் செய்து மகிழ்வாரெனில், சிவனடியார்பெருமைகளை யாவர் அளவிட்டுரைக்கற்பாலர்!

## திருவாரூர்நான்மணிமாலை.

### நேரிசையாசிரியப்பா.

* * * * * *

மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா ளாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
வுண்டுமிழ் தீநீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே.

நிருவாணதீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், சமயதீக்ஷிதர் என்னும் மூத்திறத்தினரும் சிவனடியார்களென வழிபடற்குரியராவர். சமயதீக்ஷிதர் ஆசாரியரையும், நிருவாணதீக்ஷிதரையும் விசேஷதீக்ஷிதரையும், சமயதீக்ஷிதர்களுள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியவர். விசேஷதீக்ஷிதர் ஆசாரியரையும் நிருவாணதீக்ஷிதரையும், விசேஷதீக்ஷிதர்களுக்குள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியவர். நிருவாணதீக்ஷிதர் ஆசாரியரையும், நிருவாணதீக்ஷிதருள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியவர். ஆசாரியர் ஆசாரியர்களுள்ளே தம்மின் மூத்தோரை வணங்குதற்கு உரியவர்.

வருணாச்சிரமங்களால் தம்மினுந்தாழ்ந்தவர் தீக்ஷைமுதலியவற்றினாலே தம்மின் உயர்ந்தவராயின் அவரை அவமதித்தல் செய்யாமலும், புறத்துவணங்குதல் செய்யாமலும், மனத்தால் வணங்குதல்வேண்டும். அப்படிச்செய்யாது அவமதித்தவர் தப்பாது நரகத்தில்வீழ்வர். சிவஞானிகளேயாயின் அவரை வருணம் ஆச்சிரமம் முதலியவை சற்றுங்குறியாது, எல்லாரும் வணங்கல்வேண்டும். எல்லைகடந்து முருகி வளரும் மெய்யன்பினால் விழுங்கப்பட்ட மனத்தையுடையவர் திருவேடமாத்திரமுடையவரைக் காணினும், வருணம் ஆச்சிரமம் முதலியவற்றை நோக்காமல் உடனே அத்திருவேடத்தால் வசீகரப்பட்டு வணங்குவர்.

ஆசாரியர், நிருவாணதீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், சமயதீக்ஷிதர் என்னும் நால்வகை மாகேசுரர்களையும் விதிப்படிபூசித்துத் திருவமுதுசெய்வித்தல் மாகேசுரபூசையென்னப்படும். (மகேசுரனை வழிபடுவோர் மாகேசுரர் எனப்படுவர்). வைதிகப்பிராமணர் ஆயிரம்பேருக்கு அன்னதானஞ் செய்தபலமுஞ் சமயதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் பதினாயிரம்பேருக்கு அன்னதானஞ்செய்தபலமும் விசேஷதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்தபலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் கோடிபேருக்கு அன்னதானஞ்செய்தபலமும் சைவாசாரியர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும்.

## திருமந்திரம்.

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந் தானே.

ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதி
னீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனி லோர்பிடி பேறது வாமே.



சிவபூசையைக்காட்டிலும் சிவனடியார்பூசை சிரேட்டமாயிருந்தும், உலகவர் சிவபூசையை விரும்பிச்செய்வதுபோல் சிவனடியார்பூசை செய்வதில்லை. இவர்கள் பூசை நடவாமலும் மூர்த்திகரமில்லாமலும் இருக்கும் சிவலிங்கமுதலியவற்றிற்குப் பூசை திருவிழா முதலியன செய்தாலும் செய்கிறார்கள். சிவபத்தியும் சைவாநுட்டானமுமுடைய சிவனடியார்களைக் கையெடுத்துக் கும்பிடவுங் கூசுகிறார்கள். சிவலிங்க முதலியன எந்நிலையிலிருந்தாலும் அவைகளைச் சிவமாக எண்ணுகிறார்கள். சிவனடியார்கள் எவ்வளவு சிவபத்தியும் சைவாநுட்டானமுமுடையவர்களாயிருந்தாலும் அவர்களைத் தங்களைப்போன்ற மனிதராக எண்ணுகிறார்களேயன்றி, சிவமாக மதிப்பதில்லை. சிவலிங்கமுதலியவற்றின் குணங்களை யாராய்கிறதில்லை. சிவனடியார்களின் குணங்குற்றங்களைமாத்திரம் ஆராய்கிறார்கள். இவர்கள் தங்கள் யோக்கியதையை ஆராய்ந்தடங்குவதில்லை. சிவனடியார்களின் யோக்கியதையைமட்டும் ஆராய்கிறார்கள். இவர்களுக்குச் சிவனடியாரிடத்திலுள்ள வேடம் செயல் முதலியன தோன்றாது. அவர்களிடத்திலுள்ள குற்றமே முற்பட்டுப் பெரிதாகத் தோன்றும். உலகத்தில் குற்றமில்லாதவர்கள் ஒருவருமில்லை. கடவுள் ஒருவரே குற்றமில்லாதவர்.

## கந்தபுராணம்.

தண்டத் திறையைக் கடந்த தனியாற்றல்
கொண்டுற் றவர்க்கே குறைகண் டிலமேனை
யண்டத் தவர்க்கு மனைவர்க்கு மொவ்வொர்குறை
யுண்டத் தகைமை யெவரு முணர்ருவரால்.

உலகத்தில் ஒருவரினொருவர் குணங்குற்றங்களால் உயர்ந்தும் தாழ்ந்தும் இருப்பர். ஆதலால் குற்றங்களை யாராயப்புகின் ஒருவரை நோக்க மற்றொருவர் குற்றமுடையவராய்க் காணப்பட்டு, ஒருவரையும் குற்றமற்ற சிவனடியார் என்று பூசித்தற்கிடமில்லாமற் போம். ஆதலால், பெரியோர்கள் சிவனடியார்களிடத்தில் குற்றம் நோக்காமல் அவர்களுடைய வேடமாத்திரத்திலேயே அவர்களைச் சிவனெனவே வழிபட்டு உய்ந்தார்கள். அவ்வாறு வழிபட்டு உய்யும் புண்ணியமில்லாதவர்களே அவர்களைத் தங்களைப்போன்ற மனிதரென்றெண்ணிக் குற்றங்களை யாராய்ந்து சிவனடியார் பூசை செய்யாதொழிவர்.

## நன்னெறி.

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி.

சிலர் நாள்முழுவதும் சிவபூசை செய்கிறார்கள். விசேடபொருட் செலவிட்டுக் கோயில்திருப்பணி திருவிழா முதலியன செய்கிறார்கள். அறுபத்துமூன்றுநாயன்மார்களுக்குக் குருபூசைசெய்கிறார்கள். திருத்தொண்டர் புராணத்தை நெட்டுருப்பண்ணுகிறார்கள். இவர்கள் இவ்வளவு சிவதருமங்கள் செய்பவராயிருந்தும், சிவபத்தியுடையவர்களைச் சிறிதும் சட்டைசெய்வதேயில்லை. இவர்கள் தங்கள் சாதி, செல்வம், கல்வி முதலியவற்றையே பெரியனவாக மதித்துச் சிவனடியார்களை அவமதிக்கின்றார்கள். உண்மைச் சிவனடியார்கள் ஏழைகளாயிருந்துகொண்டும் சைவாபிமான மேலீட்டினாலும், சிவபத்தி மேலீட்டினாலும், சிவகைங்கரியஞ் செய்யவிரும்பி இவர்களிடம் பொருளுதவியை நாடிச்சென்றால் இவர்கள் அச்சிவனடியார்களைத் தங்களிடம் வயிறுவளர்க்கப்பிச்சைக்கு வந்தவர்களைப்போல் எண்ணி நடத்துகிறார்கள். இவ்வாறு சிவனடியார்களை யவமதித்துச் சிவலிங்கபூசைமுதலியன செய்வதினால் யாதுபயனுண்டாம்? சென்னையில் சிலநாட்களுக்குமுன் சிவபத்த சிரோமணியொருவர் இருந்தனர். இவர் மிகுந்த கல்வியறிவொழுக்கமுடையவராய் தமது செல்வத்தையெல்லாம் சிவாலயபூசை சீரணோத்தாரணமுதலிய பதிபுண்ணியங்களுக்கே செலவிட்டனர். இவர் தமது வயோதிகத்தில் தமது சீவனத்திற்கும் தாம் சீரணோத்தாரணஞ்செய்த திருக்கோயில் நித்தியபூசைக்கும் உதவுமாறு வைத்திருந்த பொருளெல்லாம் அர்பத்னெட் கம்பெனியாரும் புரசையில் இருந்த ஒருபண்டாபீசாரும் செய்த மோசத்தால் இழந்துவிட்டனர். கடைசியாக இவர் தமது மிகுந்த விருத்தாப்பியகாலத்தில் தமது சீவனத்திற்கே கஷ்டப்படும்படி நேரிட்டுவிட்டது; அவ்வாறிருந்தும் அவர் தமது மெய்வருத்தம் நோக்காமல் தினந்தோறும் தள்ளாடித்தள்ளாடி வெகுதூரம் நடந்துசென்று அக்கோயிலையடைந்து உழவாரத்திருப்பணி முதலியன செய்துகொண்டிருந்தனர். இவர் பிறரிடம் பசுவுக்கு ஒருபிடி புல்லும் கொடுக்கும்படி கேட்காத பெருந்தகையாரென்பதைப் பலரும் அறிவார்கள். இவர் தமது சீவனத்திற்கு நேரிட்ட இடையூற்றையும் நோக்காமல், உலோகோபகாரமாகவும் தமது ஆன்மார்த்தமாகவும் தாம் சீரணோத்தாரணஞ்செய்த சிவாலய நித்தியபூசையை இயன்றவரையில் முட்டுப்படாமல் நடத்துவித்தற்கு இவர் பட்டபாடு சொல்லத்தொலையாது. இவரையறிந்தசைவர்கள் பலர் சிவபூசை செய்வதிலும் திருவிழாக்கள் செய்வதிலும், சிவனடியார் பெருமைகளையும் சைவசமய உண்மைகளையும் சண்டப்பிரசண்டமாகப் பிரசங்கஞ்செய்வதிலும், எவ்வளவானாலும் செலவிட்டு மணவிமக்களைச் சந்தோஷிப்பதிலுமே தங்கள் கவனத்தைச் செலுத்தினார்களேயன்றி, இவர்பொருட்டு இரங்கியேனும் அக்கோயிலுக்கு



உபகரிக்க முன்வரவில்லை. சென்னைவாசியாகிய மற்றொரு சிவனடியார் தமக்குக் கிடைக்கும் அற்பவருமானத்தைக்கொண்டு இல்லறத்தை நடத்திக்கொண்டு, தினந்தோறும் தவறாமல் சிவாலயசேவைசெய்துகொண்டும், மிகவும் கஷ்டப்பட்டு சிவகைங்கரியங்கள் செய்துகொண்டும் இருக்கின்றனர். இவர் பிரதோஷ மகோற்சவகாலத்தில் சிவபெருமானுக்குப் பூமாலைகட்டிச் சாத்துவது வழக்கம். இவர் ஒரு பிரதோஷகாலத்தில் திருவொற்றியூரிலுள்ள ஸ்ரீ தியாகராஜப்பெருமானார்க்குச் சாத்துமாறு பூமாலைகள்கட்டி திருப்பூக்கூடையில்வைத்து எடுத்துக்கொண்டு சென்னையிலிருந்து சுமார் 4 மைல் தூரத்திலுள்ள திருவொற்றியூருக்குப்போகப் புறப்பட்டனர். அதேசமயத்தில் நாலுபேர் விபூதிருத்திராக்கங்களை அணிந்தவர்களாய் நாற்சக்கரவண்டியிலேறி அத்தலத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். அவர்களுள் இருவர் பூமாலைகொண்டு சென்ற இச்சிவனடியாரை நன்றாயறிந்தவர்கள். அவர்களைப்பார்த்து இவ்வடியவர் "ஐயன்மீர், அடியேன் திருவொற்றியூரில் பிரதோஷநாயகருக்குச் சாத்தவேண்டி. பூமாலைகள் கொண்டுபோகிறேன். இப்போது நெடுநேரமாய் விட்டமையால், அடியேன் நடந்துசென்றால், இம்மாலைகள் உற்சவத்திற்குப் பயன்படாமற் போகக்கூடும். வண்டி வைத்துச் செல்வதற்கும் என்னிடம் இச்சமயம் காசில்லை. தயைசெய்து தங்கள் வண்டியின் பின்பக்கத்தில் (குதிரைச்சேவகன் உட்காருமிடத்தில்) அடியேன் உட்கார்ந்துசெல்ல அனுமதி கொடுக்கவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டனர். அவர்கள் அதைக்கேட்டுச் சிறிதும் மனமிரங்காமல் "இந்தக்குதிரை முரட்டுக்குதிரை, ஆள் அதிகமாயேறினால் சண்டித்தனம்பண்ணும்" என்றுசொல்லி வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றார்கள். இத்தகைய உதாரணங்கள் அளவிறந்தன விருக்கின்றன. இவைகளை யாராயும்போது சிவனடியார்பூசை புத்தகத்திலும் பிரசங்கமேடையிலுமே யன்றி வேறெங்குமில்லையென்று எண்ணவரும்.

சென்னைச் சைவர்கள் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்குச் சென்ற 18 வருடங்களாகச் செய்துவந்த இடையூறுகளை நோக்கினால் சைவர்கள் சிவனடியார்களுக்கு உபத்திரவஞ் செய்யாதிருப்பதே சிறந்த சிவனடியார் பூசையென்று சொல்லவேண்டிவரும். இதுவரையில் கூறியவற்றால் சிவனடியார் பூசையென்பது இக்காலத்தில் அநுட்டானத்திலில்லை யென்பதுபோதரும். பின்வரும் நாயன்மார் சரித்திரங்களால் முற்காலத்திலும் சிவனடியார் பூசை செய்தவர்கள் ஏகதேசமாயிருந்தார்களென்றே தெரிகின்றது.

கணம்புல்லநாயனார் சரித்திரம்—இவர் இருக்குவேளூரில் செல்வத்திலும் சிவபத்தியிலும் சிறந்து வாழ்ந்திருந்தவர். இவர் "விளக்

கிட்டார் பேருசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்னும் வேத வசனத்தின்படி சிவஞானத்திற்கேதுவாகிய திருவிளக்கேற்றும் திருப்பணியை மேற்கொண்டு சிவாலயங்களில் நெடுங்காலமாகத் தமது ஆசைதீர திருவிளக்கேற்றிக்கொண்டிருந்தனர். இவர் திருவிளக்கேற்றி வந்த ஆலயங்கள் மிகவும் பொலிந்து தோன்றுதலும் சனங்கள் அவ்வாலயங்களுக்கு மிகுந்தகளிப்போடுஞ் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டிருந்தார்கள். நெடுங்காலஞ் சென்றபின், நினைந்துருகுமடியாரை நையவைக்கும் இறைவராருள் இவ்வன்பரிடத்தில் மேவிடுதலும், அதைக்கண்டு அஞ்சி நீங்கியதையொப்ப, அறிவினரை மயக்கும் பொருட்செல்வமுற்றிலும் இவரை விட்டகன்றது. இவர் மிகவும் வறுமையெய்தி, சிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரைத் தரிசனஞ் செய்துகொண்டு, தம்முடைய வீட்டிலுள்ள பொருள்களைவிற்று, அங்குள்ள திருப்புலீச்சரம் என்னும் ஆலயத்திலே திருவிளக்கேற்றி வந்தார். இப்படி யொழுகுநாளிலே, வீட்டுப்பொருள்களும் ஒழிந்துவிட, கணம்புல்லுக்களை அரிந்துகொண்டுவந்து விற்று நெய்வாங்கித் திருவிளக்கெரித்தார். அதனால் இவருக்குக் கணம்புல்லநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று. ஒருநாள் தாம் அரிந்துகொண்டுவந்த புல்லு விலைப்படாதொழியவும், தம்முடைய பணிதவறுமல் அப்புல்லையே மாட்டி விளக்கெரித்தார். முன்பு விளக்கெரிக்கும் யாமம் வரையும் எரித்தற்கு அப்புல்லும்போதாமையால், அடுத்தவிளக்கிலே என்பும் உருகும்படித் தமது திருமுடியை எரித்தார். அப்பொழுது சிவபெருமான் பெருங்கருணைசெய்தலும் கணம்புல்லநாயனார் சிவலோகமடைந்தனர்.

கலியநாயனார் சரித்திரம்—இவர் திருவொற்றியூரிலே, செக்கார் குலத்திலே திருவவதாரஞ் செய்தவர், இவர் பெருஞ்செல்வராகி, செல்வ நிலையாமையையும் யாக்கை நிலையாமையையும் உணர்ந்து, தாம்பெற்ற செல்வத்தாலும் சரீரத்தாலும் பெறவேண்டிய பயன் சிவபுண்ணியஞ் செய்தலே எனத் தெளிந்து, அந்தத் திருப்பதியிலுள்ள சிவாலயத்தின் உள்ளும் புறம்பும் அல்லும்பகலும் எண்ணிறந்த திருவிளக்கு ஏற்றுவாராயினர். நிரந்தரமாக நினையுமடியார் இரந்துண்டு தன்கழல் எட்டச்செய்யும் சிவபெருமான் நெடுங்காலம் இத்திருத்தொண்டைச் செய்துவரும் இவருடைய உழுவலன்பை உலகினரறிந்து உய்யும்பொருட்டு இவருடைய செல்வமெல்லாம் குன்றும்படி அருள்செய்தார். இவர் தாம் வறுமையெய்தியும், தமது மரபிலுள்ளோர் தரும் எண்ணெயை வாங்கிக் கூறிவிற்றுக்கொணர்ந்து, கூலிபெற்று, தாம்மேற்கொண்ட திருத்தொண்டை வழுவாது செய்தார். சிலநாளாயின்பின் அவர்கள்



கொடாதொழிய, இவர் மனம்தளர்ந்து, எண்ணெயாட்டும் இடத்திற் சென்று, தொழில்செய்து கூலிவாங்கி, திருவிளக்கிட்டார். ஒருநாள் இவரிடம் தொழில்செய்வித்துக்கொண்டு கூலிகொடுப்பாருங் கிடைக்காமையால் மிகவுங் கவலைகொண்டு, தம்முடைய கற்பிற்சிறந்த காதலியாரை விற்பதற்கு நகரெங்குஞ் சுற்றித்திரிந்து வாங்குவாரின்மையால் பின்னும் மனந்தளர்ந்து, ஆலயத்தையடைந்து. திருவிளக்கேற்றுஞ் சமயத்திலே, "திருவிளக்குப்பணி கெடுமாயின் உயிர்விடுவேன்" என்று துணிவுகொண்டு, திரியிட்ட அகல்களைப்பரப்பி, எண்ணெய்க்குப் பிரதியாகத் தமது உதிரத்தை நிறைக்கும்பொருட்டு ஆயுதத்தினாலே கழுத்தை அரிந்தார். அப்பொழுது கிருபாசமுத்திரமாகிய சிவபெருமானார் நேர்வந்து, இவருடைய திருக்கரத்தைப்பிடித்து, இவருக்கு முன்னே இடபாரூடராய்த்தோன்றியருள, இவர் தாம்பெற்ற ஊறு நீங்கி, சிரசின்மேல் அஞ்சலி செய்துகொண்டு நின்றார். சிவபெருமான் இவரைத் தமது சிவலோகத்தில் வீற்றிருக்குமாறு அருள்புரிந்தனர்.

கணம்புல்லநாயனார் கலியநாயனார்முதலிய நாயன்மார்களை இப்போது யாவரும் வணங்குகிறார்கள். அவர்கள் காலத்தில் அவர்களுக்கு ஒருவரும் உதவிசெய்வாறின்மையால், அவர்கள் திருவிளக்கேற்றவுஞ் சத்தியற்றவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சரித்திரங்கள் பெரியபுராணத்தில் வந்தமையால் இப்போது அவர்களை யாவரும் வணங்குகிறார்கள். அவர்கள் இப்போதும் இருப்பார்களானால் அவர்களை யாரும்மதிக்க மாட்டார்கள். பித்தம் பிடித்தவர்கள் என்றும் வேலையற்றவர்கள் என்றும் பிழைக்கமாட்டாதவர்களென்றும் சொல்லியிகழ்வார்கள். எவ்வளவு பத்தியுடையவர்களாயிருந்தாலும் உயிரோடிருக்கும் அளவில் அவர்களைச் சனங்கள் பூசிப்பதில்லை. ஒருவன் பாமதுட்டனாயிருந்தாலும் அவனுக்கொரு கோயில்கட்டி திருவிழாநடத்தினால் அவனைப் பலரும் வணங்குவார்கள். இதனை யுணர்ந்தே வஞ்சவொழுக்கமுடையாரும் தங்களைப் பிற்காலத்தவர் பூசிக்கவிரும்பித் தாம் உயிரோடிருக்கும்போதே தங்கள் சரித்திரங்களைப் புளுகி யெழுதிவைத்து, தாங்கள் இறந்த பிறகு சமாதி கட்டிப் பூசித்தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுகிறார்கள்.

சுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டத்தொகை திருவாய்மலர்ந்தருளியதும், சேக்கிழார்சுவாமிகள் திருத்தொண்டர்புராணஞ் செய்தருளியதும் முத்தியடைந்த நாயன்மார்களுக்கு தீவட்டி மத்தாப்பு வாணவேடிக்கைகளோடு திருவிழா செய்வித்தற்கன்று. அவர்கள் மாதிரியைப் பின்பற்றி சைவரெனப்படுவோரியாவரும் சிவனடியார்களைப் பூசித்தற்கேயாம். ஆதலால் சிவபத்தராயிருக்க விரும்பும் ஒவ்வொருவரும் சைவா

நுட்டானமுடைய சிவனடியார்களை மனிதரெனக்கருதாது சிவபெருமானெனவெண்ணி வழிபடுதல்வேண்டும். அப்படி வழிபாடுசெய்யாத போது அறுபத்துமூன்றுநாயன்மார் வழிபாடும் சிவவழிபாடும் யாதொருபயனையுஞ் செய்யாது. உயிரோடிருக்கும் சிவனடியார்களை வெறுத்து முத்தியடைந்த நாயன்மார்களைப் பூசித்தல் உயிரோடிருக்கும் தாய்தந்தையரைப் பூசியாது கைவிட்டுப் பிறகு பிதிர்களுக்குச் சிராத்தம்செய்வதுபோலாம்.

ஒருவன் சிவவேடமும் சைவானுட்டானமு முடையவனாகக்காணப்படுகிறான்; ஆனால் அவனிடத்தில் பல தீய வொழுக்கங்கள் நிரம்பியிருக்கின்றன; அவனை யெவ்வாறு சிவனடியார் என்று வணங்க மனம்வரும் என்னும் கடா நிகழும். வஞ்ச வொழுக்கமுடையவரை வணங்கும்படி எந்த நூலும் விதிக்கவில்லை. சிவவேடமுடையாரைக் கண்டமாத்திரத்திலேயே அவர் குணங் குற்றங்களை யாராயாமல் அவர்களைச் சிவனெனவே மதித்து வழிபடுவோருள்ளத்தைச் சிவபெருமான் கோயிலாக்கொண்டெழுந்தருளுவர் என்று நூல்கள் கூறுகின்றன. "எவரேனுந் தாமாக" என்னும் முதலையுடைய திருத்தாண்டகமும் இவ்வுண்மையையே போதிக்கும். இதனால் சிவபத்தி முதிர்ந்தவர்களுக்குச் சிவவேடம் ஒன்றே பொருளாகத் தோன்று மென்பதும், வஞ்சவொழுக்கங்கள் தோன்றாவென்பதும் விளக்கியவாறாம். மனிதர்கள் தங்கள் மனைவி மக்களிடத்தில் எவ்வளவு குற்றமிருந்தாலும், அவர்களால் தங்களுக்கு எவ்வளவு கஷ்டநஷ்டமுண்டானாலும், அவைகளால் சலிப்புண்டாகாமல், எவ்வளவுபாடுபட்டாயினும் அவர்களுக்குப் பொருள்தேடிவைத்துக் காப்பாற்றுகிறார்கள். இதற்குக் காரணம் இவர்கள் தங்கள் மனைவிமக்கள்மீதுவைத்த அன்பேயன்றோ? அதில் ஆயிரத்தொரு கூறேனும் சிவனடியார்களிடத்தில் இருந்தால் சைவர்களியாவரும் ஒருவரையொருவர் தெய்வமாக வணங்கி உய்யலாமே. சைவசமயம் தழைத்தோங்குமே. சிலர் அறுபத்துமூன்றுநாயன்மார்களைப்போல் சிவனடியார் பத்தி செய்ய எல்லார்க்கும் இயலுமா என்பார்கள். அவர்களைப்போலவே எல்லோருக்கும் பத்திமையுண்டாகாதென்பது உண்மையே. ஆதலால், அவர்களைப்போல் சிவனடியார்களுக்கு மனைவியைக்கொடுக்கவும், பிள்ளைக்கறி சமைத்து உண்பிக்கவும், இயலாமலிருந்தாலிருக்கலாம். அத்தகைய வன்றொண்டுகளைச் செய்யும்படி ஒருவரும் விரும்பார். அவரவர்கள் தங்கள் தங்களாலியன்றவரையில் சிவனடியார் பூசைசெய்யலாமே. அவர்களுக்குண்டானபத்தி தமக்கு உண்டாகவில்லையேயென்று உண்மையாய் ஏங்கியழலாமே!



### திருக்குறள்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரியரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

### திருவாசகம்.

யானேபொய் யென்னெஞ்சும்பொய் யென்னன்பும்பொய்
ஆனால்வினையே னழுதாலுன்னைப் பெறலாமே
தேனேயமுதே கரும்பின் றெளிவேதித்திக்கு
மானேயருளா யடியேனுனை வந்துறுமாறே.

சிவபத்தியுடையவர்கள் பிறரைப்போல் பொருள்சம்பாதிப்பதிலேயே காலஞ்செலுத்தாமல், சிவபூசை, சிவாலயவழிபாடு, சைவபரிபாலனம், சிவனடியார்பூசைமுதலிய சிவபுண்ணியங்களைச் செய்வதிலே காலங்கழித்தலால், அவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகவே யிருப்பார்கள். அவர்கள் ஏழைகளாயிருப்பினும், ஈசன் பல்கணத்தெண்ணப்பட்டு இறுமாந்திருக்கும் அருட்பெருஞ்செல்வர்களாகையால், சிவபத்தியில்லாதவர்கள் எவ்வளவு செல்வராயிருப்பினும் அவர்களை மதிப்பதில்லை.

### கைலைபாதி காளத்திபாதியந்தாதி.

உலகமனைத்தினுக்கு மொண்ணுதன்மேலிட்ட
திலகமெனப் பெறினுஞ்சீசீ—யிலகியசீ
ரீசாதிருக்கயிலை யெம்பெருமானென்றென்றே
பேசாதிருப்பார் பிறப்பு.

### திருத்தாண்டகம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
  தரணியொடு வானாளத் தருவ ரேனு
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
  மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோயரா
  யாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
சங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பரா கி லவர்கண்டீர்
  நாம்வணங்குங் கடவுளாரே.

சிவனடியார்கள் ஏழைகளாயிருத்தலாலும், அவர்களுக்கு உலகநடை வெறுப்பாயிருத்தலாலும், அவர்கள் சிவபத்தியில்லாதவர்களை மதியாமையாலும், உலகவர்க்கு அவர்கள் விரோதிகளாகக் காணப்படுவார்கள். ஆதலால் உலகவர் அவர்களை நிந்தித்து நிரயத்தில் வீழ்தலும் உண்டு.

## திருமந்திரம்.

ஆண்டானடியவ ரார்க்கும் விரோதிகள்
ஆண்டானடியவ ரையமேற் றுண்பவர்
ஆண்டானடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம்வீழ்வது தாழ்வா நரகமே.

சைவர்கள் வேதசிவாகமங்களில் இன்றியமையாது வேண்டப்படும் சர்வோத்கர்ஷமாகிய சிவனடியார் பூசையைக் கைவிட்டிருப்பதனால் சைவசமயம் நிலைகுலைந்துவிட்டது. நமது சைவராஜாங்கம் குன்றிவிட்டது. புறச்சமயங்களெல்லாம் நமது சைவநாட்டைச் சூழ்ந்து ஆரவாரஞ்செய்கின்றன. ஆதலால் சிவநேயச் செல்வர்களே, இனிவாளா விராதீர்கள். ஒருவரையொருவர் சிவமாகப்பாவித்துப் பூசித்து ஒற்றுமையோடு சைவராஜாங்கத்தை நிலைநிறுத்துங்கள்.

## திருப்படையெழுச்சி.

தொண்டர்கா டேசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீ
ரொண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்க
டிண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மி
னண்டர் நாடாள்வோநா மல்லற்படை வாராமே.

---

## அநுட்டானசந்தேக வினாவிற்கு விடை.

சைவம் 5-ம் இதழில் ஒரு "சந்தேகி" என்பார் நிகழ்த்திய வினாவை யான் கண்ணுற்றேன். ஆசமனம் தத்துவ சுத்திகாரணமாகச் செய்யப்பெறுவது. ஒரு பாத்திரத்திலே உள்ள தீர்த்தத்தைப் பஞ்சபாத்திரத்திற் பிரித்துவிட்டு உத்தரணியால் மொண்டு ஆசமித்தல் உத்தமம். பாத்திரம் கிடையாதவிடத்துப் பஞ்சபாத்திரத்திலே உள்ள ஜலத்தை உத்தரணியால் எடுத்து ஆசமனஞ்செய்யலாம். இவ்வாறன்றிப் பஞ்சபாத்திரமொன்றே யகப்படின் அதிலிருந்து சிறிது சிறிதாக எடுத்து ஆசமனஞ்செய்தபின், அப்பாத்திரத்துச் சேஷ நீரில் அற்பம் பூமியில் கொட்டினால் ஆசமனம் செய்ததோஷம் நீங்கும். ஆகவே, ஆசமனநீர் குற்றமடையாமை தெளிக. ஆசமனம் நின்றுகொண்டு செய்தல் கூடாது. இன்னும், ஆசமன சம்பந்தமானவைகளை வைத்யநாத தீக்ஷிதீயம் ஆசாரகாண்டத்துப் பாரக்கக்கண்டுங் கேட்டும் அன்பர் சந்தேகத்தை நிவிர்த்திசெய்துகொள்ளுவது நலம்.

இங்ஙனம்
ஒரு வித்தியார்த்தி
ஞானப்பிரகாசகலாசாலை
புதுவை.



## ஸ்ரீ தாயுமானசுவாமிகள்பாடல்.

தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயத்தின் மேவும்
நான்முகத் தேவே நின்னா லூட்டிய வகில மாயை
கான்முயற் கொம்பே யென்கோ கானலம் புனலே யென்கோ
வான்முக முளரி யென்கோ மற்றென்கோ விளம்பல்வேண்டும்.

(இ-ள்.) பசியநாளத்தையுடைய தேனைச்சொரியும் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்கு திருமுகங்களையுடைய கடவுளே, உம்மால் சிருட்டிக்கப்பட்ட இந்த மாயப்பிரபஞ்சத்தை, காட்டில் வாழ்கின்ற முயற்கொம்பு என்று சொல்வேனா? கானற்சலமென்று சொல்வேனா? ஆகாயத்தாமரையென்று சொல்வேனா? வேறென்னென்று சொல்வேன், இதனை நீர் எனக்கு விளங்கச்சொல்லவேண்டும். (எ-று.)

இப்பிரபஞ்சத்தை முயற்கோடு முதலியவைபோலப் பொய்யென்று சொல்வதா அல்லது மெய்யென்றுசொல்வதா எனில் பொய்யல்ல மெய்யாகுமென்பதாம். வேதாந்த மயக்குடையார் முயற்கொம்பு முதலியனபோல் பிரபஞ்சத்தைப் பொய்யென்று சொல்லுவதன்றி வேறென்சொல்வது என்று கூறுவர். அஃதுபொருந்தாது. முயற்கொம்பு இல்லாதது, அதுபோலும் பிரபஞ்சம் இல்லாததாயின் பிரம்மா சிருட்டித்தா ரென்றதும் திருமால் காத்தா ரென்றதும் என்னை? இல்லாததைப் படைத்தாரென்றால் முயலிடத்து இல்லாத கொம்பை ஒருவன் கண்டு பன்னிரண்டு முழமென்றான், மற்றொருவன் அதற்குப் பூண் கட்டினான் என்று கூறுவதோடொக்கும்.

வேறென்னை, யெனின் சங்கார கர்த்தாவால் சர்வசங்காரகாலத்து உலகம் சங்கரிக்கப்படுங்கால், சிலபொருளிருக்கும், சிலபொருளழியும், திருமால் பிரமனிருப்பர் ஏனையோரழிவர், என்பதின்றி முயற்கொம்பு முதலிய இல்பொருளுவமைபோல் யாவுஞ் சூனியமாய்ப் போமென்பதே அதன் கருத்தாகும்.

வேண்டுவ படைத்தாய் நுந்தை விதிப்படி புரந்தா னத்தைக்
காண்டக வழித்தான் முக்கட் கடவுடா னினைய வாற்றால்
ஆண்டவ னவனே யென்ன வறிகிலா தகில நீயே
ஈண்டிய வல்ல தீர வெம்மனோர்க் கியம்பு கண்டாய்.

(இ-ள்.) (பிரமதேவரே நீர்) ஆன்மாக்களிச்சையின்வழி வேண்டிய தனுகரண முதலியவற்றைச் சிருட்டித்தீர். (அவற்றை) உமது தந்தையாகிய திருமால் காத்தனர். (அவரால் காக்கப்பட்ட அப்பிரபஞ்சத்தை) முக்கண்களையுடைய இறைவர் யாவருங்காண அழித்தனர். இம்முறை

யால் (மூவரென்றெண்ணப்பட்டவருள்.) உலகிற்குக் கர்த்தாவாவார் யாவ ரென்று ஆன்மாக்களறியார்கள், (ஆகையால்) இப்பொழுதுண்டாகிய சந் தேகமொழிய எம்மை யொத்தவர்களுக்கு நீரே சொல்லவேண்டும்.(எ-று.)

கண்டன வல்ல வன்றே கழித்திடு மிறுதிக் கண்ணே
கொண்டது பரமா நந்தக் கோதிலா முத்தி யத்தாற்
பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன மாயையோடே
வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன்.

(இ-ள்.) (வேதம்) காணப்படுவனவாகிய பொருள்களெல்லாம் இன் பம் தருவனவல்லவென்று கழித்துவிடும். (அங்ஙனம் கழித்துச் சென்ற) முடிவிடத்தில் (வேதாந்தத்தில்) கொண்டது குற்றமற்ற பரமானந்த சொரூபமாகிய முத்தியாகும். அக்காரணத்தால் சங்காரகாலத்தில் சிரு ட்டியும் திதியும் (அத்தொழிலைச் செய்கின்ற பிரமவிஷ்ணுக்களோடு) மாயையோடொழிந்தன. இவ்விருவருமொழியநின்ற அக்காலத்தில் வெண்மையாகிய தலையும், விழியும், (முறையே) காத்திலும் பாதத்திலும் பிரகாசிக்கும்படி நின்றவன் யாவன். இவ்வுண்மையைக் கூறுவீர் பிரம தேவரே.

மேலைச் செய்யுளில் ஆண்டவனெவனோ வென்றதை இச்செய்யு ளில் சங்காரகருத்தாவேயென்று சித்தாந்தப்படுத்தியதாகும். எங்ஙன மெனின் வேதம் மாயாகாரியமாகிய பிரபஞ்ச பேதங்களெல்லாம் கூறி அவற்றைப் பந்தமென்று கழித்து, கொண்டது முத்தி. அக்காலத்தில் படைப்புங் காப்புமுண்டென்னில் சங்காரமென்பது யாது? ஆகையால் படைப்பும் காப்பும் பறந்தன எனவும், இவ்விருதொழிலையுமுடைய பிரபஞ்சத்திற்கு மூலம் மாயையாகலின் மாயையே பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துமென்று கூறப்படும். அம்மாயை சிவசத்தி இயக்க இயங்குதலும் அஃதில்வழி அச்சத்தியிலொடுங்கிச் செயலற்றிருப்பது மாதலால் படைப்பும் காப்பும் பறந்தன என்னுது மாயையோடே பறந் தன எனவும், படைத்தல் காத்தலைத் தனது சங்காரத்தொழிலிலும், மாயையைத் தனது சத்தியிலும் அடக்கிக்கொள்வதுபோல் பிரமனையும் திருமாலையும் தனது திருமேனியி லொடுக்கிக்கொள்வதும் இயல்பாத லால் வெண்டலைவிழிகைகாலில் விளங்கிட எனவும், பிரவஞ்சமும் மாயை யும் கடவுளரும் இவ்வாறொடுங்க ஒடுங்காதுநின்றவன் சங்காரகருத் தாவேயென் றுணர்த்தலால் நின்றான் யாவனெனவுங் கூறினர்.

வைதிகசைவசித்தாந்தப்பிரசங்கரத்நாகரம்
கா. ஆலாலசுந்தரம்பிள்ளை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

OFFICE OF THE REGISTRAR OF JOCKS
REGISTERED
10 MAY 1917
MADRAS.

மலர் 2.] || நள ௵ ஆடி ௴ —1916 ௵ ஜூலை ௴. || [இதழ் 7

அரியோடு நான்முகத்தோ னாதிசுரர்க் கெல்லாந்
தெரியாமை செந்தழலாய் நின்ற—வொருவன்சீர்
தன்றலையின் மேற்றரித்த சம்பந்தன் றாளிணைக
ளென்றலையின் மேலிருக்க வென்று.

## சிவஞானபோதம்.

சிவஞானபோதம் என்பது பதி பசு பாசங்களின் இலக்கணங்களை யெல்லாம், பெரியமலையின் உருவத்தை ஒரு சிறிய கண்ணாடியானது தன்னுள் அடக்கிக்காட்டுவதுபோல், பன்னிரண்டு சூத்திர ரூபமாயிருக் கும் தன்னிடத்தில் அடக்கிக்கூறுவதும், சகலவேதாகமசாரமாயிருப் பதும், எல்லாஞானநூல்களுக்கும் தாய்நூலாயிருப்பதுமான ஒப்பற்ற ஞானசாஸ்திரமாம்.

வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் றிறம்.

இந்நூல் வடமொழி தென்மொழி இரண்டிலும் உள்ளது. வட மொழிச் சிவஞானபோதம் சிவபெருமானால் ஆகமத்தில் அருளிச் செய்யப்பட்டது. தமிழ்ச் சிவஞானபோதம் உலகுய்ய பூர்வஞானத் தோடே திருவெண்ணெய் நல்லூரில் திருவவதாரஞ்செய்து, குழந் தைப்பருவத்திலேயே கைலாசவாசியாகிய பரஞ்சோதியாமுனிவரால் ஞானோபதேசஞ்செய்யப்பெற்று, அத்தலத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சுயம்பு மூர்த்தியாகிய பொல்லாப்பிள்ளையா

றென்னும் விநாயகக்கடவுளிடம் சகலவேதாகமங்களையுங்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடியிருந்த மெய்கண்டதேவரால் அருளிச்செய்யப்பட்டது.

அளவிடற்கரிய வேதாகம உண்மைகளை இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களில் அடக்கிக்கூறுமாயின் இதின்பெருமையையும், வடமொழி தென்மொழிகளின் பெருமையையும், இதைச்செய்தவர் பெருமையையும் அளவுபடுத்திக்கூற யாவராலாகும்!. சகலவேதாகம உண்மைகளையும், வடமொழியில் எல்லாம்வல்ல இறைவனார் பன்னிரண்டு சூத்திரங்களில் அடக்கியருளியதுபோலவே, தமிழ்மொழியில் நமது மெய்கண்டதேவரும் பன்னிரண்டு சூத்திரங்களில் அடக்கிக் கூறியருளினர் எனில், மெய்கண்டதேவரை அவ்விறைவரேயென்று கூறுவதன்றி வேறு யாரென்று கூறுவது?.

## திருக்களிற்றுப்படியார்.

துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான்—துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளு
மாக்கியிடு மன்பர்க் கவன்.

இந்நூலுக்குப் பெரியோர்கள் பலர் உரைசெய்தார்கள். மெய்கண்டதேவரே தமக்குப் பொல்லாப்பிள்ளையார் அருளிச்செய்த சூர்ணிகைக்கிணங்க வார்த்திகம் என்னும் பொழிப்புரை யருளிச்செய்தனர். (சூர்ணிகை என்பது சூத்திரமுதலியவற்றின் பொருளை இலேசாக சுருங்கிய வசனரூபமாயுரைப்பது.) சிவஞானமுனிவர் சூத்திர வார்த்திகங்கட்கும் உதாரணச்செய்யுட்களுக்கும் சிற்றுரையும், மாபாடியம் என்னும் பேருரையுஞ் செய்தருளினர். பாண்டிப்பெருமாள் என்பவர் பதவுரையும் விருத்தியுரையும் செய்துபகரித்தனர். நவீனமாக சாம்பவ ஸ்ரீ காசிவாசி செந்திநாதையரவர்கள் சிவஞானபோதவசனாலங்காரதீபம் என்னும் நூல்செய்தனர். இவையாவும் சிவஞானபோதத்திலுள்ள சித்தாந்த உண்மைகளைப் பலரும் எளிதில் உணரவேண்டி இயற்றப்பட்டனவெனினும், தமிழ்ப்பாஷையில் என்னினுங்குறைந்த ஆராய்ச்சியுடையார் இலேசாக அறிந்துகொள்ளக்கூடியனவாயில்லை. ஆதலால், சைவசமயத்திற் பிறந்தும் பலர், நெல்லைக்குற்றி யுண்ணாது உமியைக்குற்றிக் கைவருந்துவார்போல், தங்களுக்குப் பிதுரார்ஜிதமாகவுள்ள பரமஞான பொக்கிஷமாகிய இந்நூலைக் கற்காது, கற்பதற்கும் குதர்க்கஞ்செய்வதற்கும் எளியனவாகிய புறச்சமயநூல்களை ஞானநூல்



களென்று மயங்கிப் படித்து, தங்களை ஞானிகளென்றும் வேதாந்திகளென்றும் சொல்லிக்கொண்டு, உயிர்க்குறுதிபயக்கும் சிவபூசை, சிவனடியார்பூசை, பஸ்மருத்திராக்கதாரணம் முதலிய சைவதவவொழுக்கங்களைக் கைவிட்டு அவமே காலங்கழிக்கின்றார்கள். ஆதலால் சிவஞானபோதத்தைக் கையினாற்பரிசித்தற்கும் அருகனல்லாத யானும், உண்மைச்சிவனடியார்களின் திருவடிகளைத் தியானித்து, சாட்டையிற்பம்பரசாலம்போல் எல்லாவற்றையும் ஆட்டும் இறைவனாது திருவருளைச் சிந்தித்து, இதுவரையில் வெளிவந்துள்ள உரைகளை ஆதரவாக்கொண்டு, சிவஞானபோதம் என்னும் மகுடத்தின் கீழ் இந்நூலிற் பொதிந்துள்ள சித்தாந்த உண்மைகளை என்னாலியன்றவரையில் யாவரும் எளிதில் உணருமாறு விளக்குவான் தொடங்கலுற்றேன்.

## சிவஞானபோதம்

### முதற்சூத்திரம்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.

(இ—ள்.) அவன் அவள் அது எனும் அவை—அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் சுட்டியுணரப்படும் பிரபஞ்சத்தொகுதி—மூவினைமையின்—(தோற்றம் நிலை இறுதி என்னும்) முத்தொழிலையுடைமையால்—தோற்றிய திதியே—ஒருவனால் தோற்றப்பட்ட உள்பொருளேயாம்—ஒடுங்கி மலத்து உளதாம்—அது தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாய்நின்ற கடவுளினின்றும், சகசமலம் நீங்காமையால், அது நீங்கும்பொருட்டு மீளத்தோன்றுவதாம்—அந்தம் ஆதி—ஆதலால் சங்காரத்தொழில் செய்யுங்கடவுளே உலகத்திற்கு முதற்கடவுள்—என்மனார் புலவர்—என்று அளவை நூலுணர்ந்தோர் கூறுவர்.

பிரபஞ்சம் பலவகையாய்ச் சுட்டியுணரப்படுதலால் அதைப்படைத்துக்காத்தழித்தற்குச் சுட்டுணர்விறந்த கடவுள் ஒருவர் வேண்டும் என்பார் பிரபஞ்சத்தை "அவனவளதுவெனுமவை" என்றனர். பிரபஞ்சம் தோன்றி நின்று அழியுந்தன்மையுடையதாதலினால் அதைத்தோற்றி, நிறுத்தி, அழித்தற்கு, தோற்றமு மீறுமில்லாத கடவுள் ஒருவர் வேண்டும் என்பார் "மூவினைமையின்" என்றனர். உலகம் தானே தோன்றாமல் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டமையால் தோன்றிய என்னாது "தோற்றிய" என்றனர். பிரபஞ்சமானது சிலமதவாதிகள் கூறுவதுபோல், முயற்கொம்புபோன்ற இல்பொருளன்று, உள்பொருளே என்

பார் "திதியே" என்றனர். (திதிப்படும் உலகத்தை "திதி" என்றது உபசாரம்.) பிரபஞ்சம் மலபரிபாகம் உண்டாதற்பொருட்டுக் கடவுளிடம் ஒடுங்கி மீளவும் தோன்றவதனால் "ஒடுங்கி மலத்துளதாம்" என்றனர். (ஒடுங்கிமலத்துளதாம்=ஒடுங்கின மலத்தான் உளதாம்.) சங்காரகாரணனாகிய சிவபெருமானையே இவ்வுலகம் முதலாக உடையது என்பார் "அந்தமாதி" என்றனர். (அந்தம்=அந்தத்தைச் செய்யுங்கடவுள்=சங்காரகர்த்தா.)

இச்சூத்திரம் அநுமானப்பிரமாணமாகிய அளவையால் இவ்வுலகம் கடவுளை முதலாக உடையது என்பதை விளக்கவந்தமையால், "என்மனார் புலவர்" என்பதற்கு அளவை நூலுணர்ந்தோர் கூறுவர் என்று பொருளுரைக்கப்பட்டது.

## பிரமாணம்.

பிரமாணம், காண்டல் கருதல் உரை என, மூன்று வகைப்படும். இவற்றுள், காண்டல் பிரத்தியக்ஷப் பிரமாணமும், கருதல் அநுமானப் பிரமாணமும், உரை ஆகமப்பிரமாணமுமாம். மற்றெல்லாப்பிரமாணங்களும் இம் மூன்றினுள் அடங்கும்.

பிரத்தியக்ஷப்பிரமாணமாவது, கண், செவி, வாய், மூக்கு, மெய் இவ்வைந்திந்திரியங்களாலும் முறையே உருவம், சத்தம், இரதம், கந்தம், பரிசம், என்பவைகளை யறிதலாம். (பிரத்தியக்ஷம்=இந்திரிய விஷயம். அக்ஷம்=இந்திரியம். பிரதி=விஷயம். அக்ஷம் என்பது கண் எனவும், பிரதி என்பது அது காண்கிற ஒளி எனவும் பொருள்படும்.

அநுமானப்பிரமாணமாவது அநுமானத்தாலே தோன்றும் அநுமேயத்தையறிதல். உதாரணம்—காணப்பட்ட புகையைக்கொண்டு காணப்படாத (மறைந்துள்ள) நெருப்பையறிதல்.

ஆகமப்பிரமாணமாவது நூல்களைக்கொண்டறிதல்.

சித்துப்பொருளாகிய கடவுளை சடப்பொருள்களாகிய இந்திரியங்களால் அறிதல்கூடாது. அசித்துப்பொருள்களாகிய இந்திரியங்களால் அறியப்படுவனவெல்லாம் அசித்துப்பொருள்களாகவேயிருக்கும். ஆதலால் பிரத்தியக்ஷப்பிரமாணத்தால் சச்சிதானந்தப்பொருளாகிய கடவுளை அறியலாகாது. அவரை ஆகமப்பிரமாணத்தையும் அநுமானப்



பிரமாணத்தையுமேகொண்டு அறிதல்வேண்டும். ஆனால், நூல்கள் கடவுள் மனம் வாக்குக்காயங்களால் அறியப்படாதவர் என்கின்றனவே, இதன்கருத்தியாது எனில், கூறுவாம். கடவுள் மனம்வாக்குக்காயங்களால் எட்டப்படாதவர் என்பது உண்மையே. சிவஞானசித்தியாரிலும்,

மறையினா லயனான்மாலான் மனத்தினான் வாக்கான்மற்றுங்
குறைவிலா வளவினாலுங் கூறொணா தாகிநின்ற
விறைவனார் கமலபாத மின்றியா னியம்புமாசை
நிறையினார் குணத்தோர்க்கெல்லா நகையினை நிறுத்துமன்றே

என்னுஞ் செய்யுளில், கடவுள் மனம்வாக்குக்காயங்களால் மாத்திரமன்றி, வேதங்களாலும் பிரம விஷ்ணுக்களாலும் அளவைகளாலும் ஓதுதற்கரியவர் என்று அருளிச்செய்யப்பட்டது. ஆனால், அவர் எவராலும் எதனாலும் அறியப்படாதவராயிருந்தால், அவர் இல்பொருளாயிருக்கவேண்டும். அவரால் யாதொரு பிரயோசனமுமின்றாய் விடும். ஆதலால், கடவுள் எதனாலும் எவராலும் அறியப்படாதவர் என்றது, அவரருளைக்கொண்டன்றி ஆன்ம வறிவினால் சுட்டியறியப்படாதவர் என்று நூல்கள் கூறியவாறாம். இதுபற்றியே, அச்சித்தியாரிலேயே,

அருளினா லாகமத்தே யறியலா மளவினாலுந்
தெருளலாஞ் சிவனைஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே
மருளெலா நீங்கக்கண்டு வாழலாம் பிறவிமாயா
விருளெலா மிரிக்கலாகு மடியரோ டிருக்கலாமே.

என்றும் அருளிச்செய்யப்பட்டது. இவற்றால் அருளில்லாதவர்களுக்கு ஆகமப்பிரமாணங்களும் அநுமானப்பிரமாணங்களும் எவ்வளவுதான் எடுத்துக்காட்டினாலும் பயன்படா வென்பதும், அருளுடையார்க்கே அவைபயன்படும் என்பதும் விளக்கியவாறாம்.

## திருக்குறுந்தொகை.

குறிகளு மடையாளமுங் கோயிலும்
நெறிகளு மவர்நின்றதோர் நேர்மையும்
அறியவாயிர மாரண மோதினும்
பொறியிலீர் மனமென்கொல் புகாததே.

## திருத்தாண்டகம்.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சிமயானத்தான்
வார்சடையா னென்னினல்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்ல
னோரூரனல்ல னோருவமனில்லி
அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே
கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ
னென்றெழுதிக் காட்டொணாதே.

## கந்தரநுபூதி.

முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

கடவுளின் அருளிருந்தால் சகல ஞானங்களும் தாமே உண்டாகும். ஆதலால், அவரருளுடையோர்க்கு ஆகமப்பிரமாணங்களும் அளவைப்பிரமாணங்களும் எற்றுக்கு எனின், கூறுவாம். அவரருளைப்பெற்றால் சகல ஞானங்களும் தாமே உண்டாம் என்பதும் உண்மையே. இதனை,

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

என்னும் திருவருட்பயனாலும், அருட்சத்தியாகிய உமாதேவியாருடைய திருமுலைப்பாலை உண்டமாத்திரத்திலேயே ஆளுடைய பிள்ளையார் ஞானசம்பந்தராய் விளங்கின சரிதத்தாலும் உணரலாகும். ஆனால், ஆன்மாக்கள் பலவகைப்பட்ட பக்குவமுடையவர்களாயிருத்தலினால், அவரருளும் அவ்வவர்பக்குவத்திற்கேற்பப் பலபடியாக உபகரிக்குமேயன்றி எல்லாருக்கும் ஒரே அளவாகவும் ஒரே தன்மையாகவும் உபகரிக்காது. மனிதர்கள் சாமுசித்தர், வைநயிகர், ப்ராகிருதர் என முத்திறப்படுவர். இவர்களுள், சாமுசித்தராவார் முற்பிறவிகளில் சரியை கிரியை யோகங்களைச்செலுத்தி, அத் தவவிசேடத்தால் பூர்வஞானத்தோடே பிறந்து, மோட்சம் ஒன்றையே அபேட்சித்திருப்பவர்கள். இவர்களுக்குச் சிவபெருமான் தாமே நேரில் அநுக்கிரகஞ்செய்வர். ஆதலால் இவர்களுக்கு ஞானநூல்கள் வேண்டுவதின்றாம். வைநயிகர் எனப்படுவார் முற்போந்த சனனங்களில் புறச்சமயங்களை யநுட்டித்துப்பெற்ற புண்ணியபரிபாக விசேடத்தால் சைவசமயத்திற் பிறந்து வேதசிவாகமங்களாகிய முதனூல்களையும் அவற்றின் புடைநூல் சார்பு நூல்களையும் ஓதி, அவற்றில் விதித்தவாறொழுகி முத்திபெற முயலுவோர். ப்ராகிருதர் எனப்படுவோர் உலகவாழ்க்கையையே சாஸ்வதம் என்று மதித்து, மோட்சாபேட்சையின்றி, கடவுள் வழிபாட்டைக் கைவிட்டு, மிருகங்களைப்போல் உண்டு உறங்கிச் சுகித்திருப்பவர்கள். இம்மூவருள் உத்தமராகிய சாமுசித்தருக்கும் அதமராகிய பிராகிருதருக்கும் ஞானநூல்கள் வேண்டுவதில்லை. மத்திமராகிய வைநயிகருக்கே அவைவேண்டும்.



## சிவஞானசித்தியார்.

பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்திபண்ணும்
தொண்டரைத் தானேதூய கதியினிற் றொகுப்பன் மார்க்கர்
கண்டநூ லோதிவீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள்சேரும் பரிசினைப் புகல லுற்றாம்.

(இ—ள்.) பண்டை நல் தவத்தால்=முன்செய்த நல்ல சைவதவ விசேடத்தால்—தோன்றி=(சாம்சித்தராய்) பிறந்து—பரமனை=முதல்வனிடத்தில்—பத்திபண்ணும்=(முத்திவிரும்பி) பத்திசெய்கின்ற—தொண்டரை=சிவபத்தரை—தானே=(நூல்வழியாலன்றி அம்முதல்வன்) தானே—தூயகதியினில் தொகுப்பன்=பரிசுத்தமாகிய சிவகதியில் சேர்ப்பன். (ஆதலால் அவர்களுக்கு நூல்வேண்டுவதில்லை) மார்க்கர் கண்டநூல் ஓதி வீடு காதலிப்பவர்கட்கு=சிவஞானிகள் பிரமாணமென்றறிந்து கைக்கொண்ட நூல் ஓதி அதன்வழியாய் முத்திபெற விரும்பும் வைநயிகராயினோர்க்கு—ஈசன் புண்டரிகத் தாள்சேரும் பரிசினை புகலலுற்றாம்=சிவனுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளைக் கூடும் முறைமையினை வகுத்துக்கூறுகின்றோம். (எ—று.)

காணப்பட்ட பிரபஞ்சத்தைக்கொண்டு காணப்படாதகடவுள் ஒருவர் உண்டென்று அநுமானப்பிரமாணத்தாலும் ஆகமப்பிரமாணத்தாலும் நம்பி, அவரை மெய்யன்போடு வழிபடுவார்க்கே அவரருளுண்டாகும். அவ்வாறு வழிபடாதவர்க்கு அது உண்டாகாது. இதனை "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடுங் காலமே" என்னுந் திருவாசகத்தாலும் உணரலாம். ஆதலால் சிவஞானபோதத்தின் இம்முதற்சூத்திரமானது உலகிற்கு முதற்கடவுள் சிறப்புவகையால் உண்டென்னும் ஆகமப்பிரமாணத்தை அநுமானப்பிரமாணத்தால் வலியுறுத்துகின்றது.

(தொடரும்.)

## வரகுணதேவர்சரித்திரம்.

பாண்டிநாட்டிலே, மதுரைமாநகரத்திலே, வரகுணதேவர் என்னும் அரசர் ஒருவர் இருந்தனர். அவர் சிவபத்தி சிவனடியார் பத்திகளிற் சிறந்து, மன்னுயிர்களைத் தன்னுயிர்போற் பாதுகாத்து மநுநீதி வழாமல் செங்கோல்செலுத்திவருநாளில், ஒருநாள், துட்டமிருகங்களால் தன்குடிகளுக்குத் துன்பம் நேரிடாமலிருக்கவேண்டி, காட்டிற் சென்று வேட்டையாடிக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில், தற்செயலாய், அவர் ஏறிச்செலுத்திய குதிரை ஓர் ஆலமரநீழலில் அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்த அந்தணனொருவனை மிதித்ததனும், அவன் உடனே உயிர் நீங்கினன். வரகுணதேவர் அதையறியாமலே தானேறிய குதிரையோடு அக்கானகத்தைவிட்டு நீங்கித் தமது கடிமனைபுகுந்திருந்தனர். அம்மறையவனுறவினர் அதையறிந்து அக்கோமானிடம் சென்று முறையிடுதலும், அவர் மிகவும் மனம்வருந்தி, அவர்களுக்கு வேண்டும்பொருள் கொடுத்தனுப்பினர். பிராமணன் தன்னால் இறந்தமைக்கு மிகவும் துயர்கூர்ந்திருந்த அவ்வரசர் பெருமானைப் பிரமகத்திபற்றி வருத்தத்தொடங்கியது. அதனால் அவர் நாளுக்குநாள் பொலிவிழந்து, துன்பக்கடலில்மூழ்கி, அது தீர்தற்பொருட்டு எண்ணிறந்த பிராயச்சித்தங்களைச் செய்தனர். செய்தும், அது தீராமையால், கடைசியாக, சர்வபாவங்களையும் சாம்பராக்கவல்லது சிவவழிபாடே என்றுணர்ந்து, திருவாலவாயிலுள்ள பொற்றாமரைத் தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்து சோமசுந்தரக்கடவுளையும் அங்கயற்கண்ணம்மையாரையும் ஆயிரத்தெட்டுமுறை வலம்வந்து, வாயாரப்பாடி வணங்கி, "எம்பெருமானே, இந்திரன் விருத்திராசுரனைக்கொன்றதனாலடைந்த பிரமகத்தியையும், தாயைக்கூடித் தந்தையைக்கொன்ற மாபாவியின் பாதகத்தையும், அவர்களறிந்து செய்தும், போக்கியருளினீர். அடியேன் அபுத்திபூர்வமாகச்செய்த இந்த அத்தியையும் போக்கியருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அப்போது சோமசுந்தரக்கடவுளின் அருளால், "அரசனே, பொன்னிநாட்டரசனாகிய விக்கிரமச் சோழன் உன்னோடு போர்செய்யவருவான். அப்போது, நீ நமதருளால் அவனை வென்று துரத்திக்கொண்டு செல்லுகையில், நம்மை நாமே அருச்சித்து வழிபட்டுக்காட்டிய திருவிடைமருதூர் என்னுந் திருப்பதியை யடைவாய். அவ்விடத்தில் உன்னைப் பிடித்திருக்கும் பிரமகத்தி நீங்கிவிடும்" என்னும் அசரீரிவாக்கு உண்டாயிற்று. அதைக்கேட்டு, வரகுணதேவர் அளவிலா மகிழ்ச்சியடைந்து, சோமசுந்தரக் கடவுளைப் பலமுறை வீழ்ந்து வணங்கி மீண்டு தமதரண்மனையடைந்தனர். சிலநாளாயபின், விக்



கிரமச்சோழன் தம்மிடம் வந்து போர்செய்ய, வரகுணதேவர் அவனை வென்று துரத்திச்செல்லுகையில், திருவிடைமருதூரையடைதலும், இறைவர் திருவருளால், மருதவாணரை வணங்கும் விருப்பம்மேலிட, அவர் பகைவனைத் துரத்திச்செல்வதைமறந்து, காவிரிநதியில் ஸ்நானஞ்செய்து, மருதவிருக்ஷ நீழலில் வீற்றிருக்கும் இறைவனைத் தொழவேண்டி, கீழைக்கோபுரவாயிலைக்கடந்து, திருக்கோயிலுட்புகுந்தமாத்திரத்தில், பிரமகத்தி அவரோடு செல்லமாட்டாமல் புறத்தே நின்றது. அதையுணர்ந்து வரகுணதேவர் இன்பவாரிதியில் மூழ்கினவராய், என்புநெக்குருகவும், கண்கள் ஆனந்தவருவிசொரியவும், மருதப்பிரானை வலம்வந்து, தோத்திரம்செய்து பணிந்து, தம்மையிடர்தீர்த்தாட்கொண்டருளிய மருதிடங்கொண்ட மாணிக்கத்தை விட்டுப்பிரிய மனமிலாதவராய், திருவிடைமருதூரிலேயே வசித்துக்கொண்டு, அப்பெருமானை இடையறாத உழுவலன்போடு தினந்தோறும் வழிபட்டுக் கொண்டிருந்தனர்.

அவ்வழிபாட்டின் சிறப்பால் நாளுக்குநாள் அவருடைய கரணங்களெல்லாம் சிவகரணங்களாய் மாறுவனவாயின. காமுகனுக்கு அவனால் விரும்பப்பட்ட காமக்கிழத்தியின் ஆடையாபரணங்களும் அக்காமக்கிழத்தியின் வடிவமாகத் தோன்றுவதுபோல், வரகுணதேவருக்குச் சிவசம்பந்தமுடைய பொருள்களெல்லாம் சிவபெருமானுடைய அருட்டிருமேனியாகத்தோன்றின. ஆதலால், அவர் சிவவேடந்தரித்தவர் யாவராயிருப்பினும், அவர்களைச் சிவபெருமானாகவே மதித்தொழுகும் ஒழுக்கத்திற்சிறந்து விளங்குவாராயினர். அவர் அவ்வாறு அளவுகடந்த சிவபத்திசெய்து வரும்நாளில், ஒருநாள், ஒரு கள்வன் அவருடைய அரண்மனையிற்புகுந்து களவாடி வெளியேவருங்கால், காவலாளர்கள் அவனைப்பிடித்துக்கட்டி இழுத்துக்கொண்டுபோய் அவர்முன்விட்டார்கள். அவர் அக்கள்வன் சரீரத்தில் விபூதியிருக்கக்கண்டு, அவன் கள்வன் என்பதை முற்றிலும்மறந்து, "இச்சிவனடியார் சிவபுண்ணியஞ்செய்தற்பொருட்டுப் பொருள்வேண்டி இவ்விடம்வந்து களவாடியிருத்தல்வேண்டும்" என்றுசொல்லி உடனே அவன் கட்டவிழ்ப்பித்து, அவனுக்கு இன்னும் அதிகபொருளைக்கொடுத்து உபசரித்தனுப்பினர்.

ஒரு மழைக்காலத்தில் காட்டில் நரிகள் ஊளையிடுவது அவர்செவிக்கு அவைகள் "சம்போ, சம்போ" என்பதுபோலிருந்தது. அதனால் அவர், "இவைகள் எம்பெருமானைச் சம்போ சம்போ வென்று துதிப்பதனால் இவைகளுக்குச் சம்புவென்னும் பெயர் உண்டாயிற்று போலும். உயிர்களுக்குத் துக்கநிவர்த்திசெய்து சுகத்தைக்கொடுப்பவன் என்னும்

பொருளைத்தரும் சம்பு என்னும் திருநாமத்தால் இவைகள் எம்பெருமானை யழைப்பதைநோக்கின், இவைகள் குளிரினால் தங்கட்குண்டாகிய துன்பத்தைப்போக்கவேண்டி அவரை அத்திருநாமத்தால் தோத்திரஞ்செய்கின்றனபோலும்" என்றுசொல்லி அவைகள் குளிரினால் வருத்தமுறுவண்ணம் அவை வசிக்கும் கானகமெங்கும் கூடாரங்களடித்து வைத்தனர்.

மற்றொருதினம் தவளைகள் கத்திய சத்தமானது, அவர் செவிக்கு அர அர என்பதுபோலிருந்தது. அதனால், அவர் "இவை பசியால் வருந்தி உயிர்களின் துக்கத்தை அரித்தலால் அரன் என்னும் திருநாமத்தையுடைய நம்பெருமானை அர அர வென்று துதிக்கின்றனபோலும்" என்றுசொல்லி அவை வசிக்கும் நீர் நிலைகளையடைந்து அவற்றில் பொன் மணலையும், இரத்தினங்களையும் அரிசி முதலியவற்றோடு கலந்து சொரிந்தனர்.

மற்றொரு வைகல், சிவநேயரொருவர் மருதவாணருக்குத் திருமஞ்சனத்தின்பொருட்டு எண்ணெயாட்டவேண்டி, எள்ளை வெயிலிற் காயவைத்திருந்தனர். அவ்வழியே சென்றவனொருவன் அவ்வெள்ளில் ஒருபிடி யெடுத்துத் தன் வாயிலிட்டு உண்ணத்தொடங்கினான். அச்சிவனடியார் அதைக்கண்டு. அவனைப்பிடித்துக்கொண்டுபோய் வரகுணதேவர் முன்விட்டுப் பிரியாது செய்தனர். வரகுணதேவர் பிரதிவாதியைப்பார்த்து "நீ ஏன் எள்ளைத்தின்றாய்?" என்றனர். அவன் "மகாராசாவே, இச் சிவனடியார் சிவபெருமானுக்குத் திருமஞ்சனத்தின்பொருட்டு எள்ளைக்கொடுத்து அவருக் காட்படுகின்றார். அவரைப்போல் நானும் ஆட்படுவதற்கு இந்தச் சனனத்தில் எனக்குப் புண்ணியமில்லாமையால், இவ்வெள்ளைத் திருடித்தின்றால் மறுபிறப்பில் மாடாகப்பிறந்து இறைவருக்கு எண்ணெயாட்டும் செக்கையிழுத்து ஆட்படும் புண்ணியம் உண்டாகும் என்று நினைத்துத்தின்றேன்" என்றான். அதைக்கேட்ட அரசர் பெருமான் திடீரென்று சிங்காதனத்தினின்றும் கீழே இறங்கி, அவனை வணங்கி, சுவாமி, அச்செக்கையிழுப்பதற்கு ஒருமாடுபோதாது. இரண்டுமாடுகள்வேண்டும். தாங்கள் ஒருமாடானால் நான்மற்றொரு மாடாகும்வண்ணம் எனக்கும் அவ்வெள்ளில் ஒருசிறிது தாரும்" என்று சொல்லி அவன் எச்சிலோடுகூடிய எள்ளைவாங்கிப் புசித்தனர்.

மற்றொருநாள், வரகுணதேவர் மருதப்பருடைய சந்நிதியின் வெளிமாடவீதியில் பிரதக்ஷிணம் வருகையில், இறந்தமனிதனுடைய மாமிசமில்லாத தலையொன்றிருக்கக்கண்டு, அதைக்கையிலேந்தி, "சுவாமி, தேவரீர் எம்பெருமானுடைய திருக்கோயிலை வலம்வந்து வந்து, உடல்



முழுமையும் தேய்ந்தும், இன்னமும் உம்முடைய தலையானது எம்பெருமான் திருமாடவீதியிலிருக்கும் புண்ணியத்தைப்பெற்றீர். அடியேனுடைய தலையும் இவ்வாறே கிடக்க அடியேனை யாசீர்வதித்தருளும்" என்று கூறி அத்தலையைப் பலமுறைவணங்கிப் பிரார்த்தித்தனர்.

அவர் மற்றொருநாள் மருதப்பர் திருக்கோயிலை வலம்வரத்தொடங்கியபோது, கோயில்முற்றத்தில் நாய்மலம் இருக்கக்கண்டு மனம்வருந்தி, "நான் முதற்பிரதக்ஷிணஞ் செய்துவருவதற்குள் இம்மலத்தை யெடுப்பவர்க்கு என் நாட்டில் காற்கூறு தருவேன்" என்று சங்கற்பஞ்செய்துகொண்டு முதல்வலம் வந்தனர். அதை ஒருவரும் எடுக்காமையால் "நான் இரண்டாவது பிரதக்ஷிணம் வருவதற்குள் இதையெடுப்பவர்க்கு என் தேசத்தில் அரைக்கூறு அளிப்பேன்" என்று சங்கற்பித்துக்கொண்டு இரண்டாவது பிரதக்ஷிணஞ்செய்தனர். அப்போதும் அது எடாமலிருக்கக்கண்டு, "நான் மூன்றாவது பிரதக்ஷிணம் வருமுன் இதை எடுப்பவர்க்கு என் இராச்சியத்தில் முக்காற்கூறு தருவேன்" என்று சங்கற்பித்து மூன்றாவது பிரதக்ஷிணஞ்செய்தனர். அப்போதும் அம்மலத்தையாரும் எடுக்காமையால், "என்தேயத்தை நானேயுடையேன், இத்தொண்டு நானே செய்யப்பெற்றேன்" என்றுசொல்லி அதைத்தாமே தமது கையாலெடுத்து அகற்றினர்.

மற்றொருநாள் அவர் ஆலயத்திற்குச் செல்லும்வழியில் விழுந்துகிடந்த வேப்பங்கனியைக் கண்டபோது, அது அவருக்குச் சிவலிங்கத்தின் திருவுருவமாகத் தோன்றுதலும, அதை இருகரங்களாலும் எடுத்துக்கண்களிலும் மார்பிலும் சிரசிலும்வைத்து ஆனந்தக்கூத்தாடி திருவிடைமருதூரிலுள்ள வேப்பமரங்கள் வெயிலினால் வருந்தாதவண்ணம் பந்தரிடுவித்தனர்.

வரகுணதேவருக்குத் தோற்றோடிப்போன விக்கிரமச் சோழன், அவருடைய குணாதிசயங்களைக்கேட்டு, மிகவும் ஆச்சரியமும் பயமுமடைந்து, தேவமாதரும் மையல் கொள்ளும் பேரழகுவாய்ந்த தனது குமாரத்தியை அவருக்குத் திருமணஞ்செய்வித்தனன். வரகுணதேவர் விவாகமான அன்றிரவில் பள்ளியறையிற்சென்று சிவசிந்தனையோடு சயனித்திருந்தனர். மணமகளை தோழியர் வெண்மையான உயர்ந்த பட்டாடைகளாலும், நவரத்தினாபரணங்களாலும் அலங்கரித்து, களபகஸ்தூரி முதலிய வாசங்களைப்பூசி, பள்ளியறையுட் கொண்டுபோய் விடுத்தனர். வரகுணதேவர் அவருடைய சௌந்தரியத்தைக்கண்டு அதிசயங்கொண்டு, "இவள் எம்பெருமானுக்கே உரியவள்" என்று சிந்தித்து, வணங்கி, அவள் கரத்தைப்பற்றிக் காவலரறியாவண்ணம் வெளியிற்போய், மருத

ப்பர் சந்நிதியையடைந்து, திருக்கதவைத்தொட்டு, "மருதநாயக" என்றழைத்தனர். மருதவாணரும் "வரகுணா வருக" என்றழைத்துக் கதவைத்திறந்தனர். வரகுணதேவர் மருதப்பர் திருமுன்னர் நின்று, "எம்பெருமானே, இவள் தேவரீருக்கே உரியவள். ஆகையால் இவளைத் தேவரீர் அங்கீகரித்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்து அவளைச் சந்நிதியில் விட்டு, வெளியேவந்துவிட்டனர். உடனே திருக்கதவு முன்போலவே திருக்காப்புக்கொண்டது. இது யாருக்குந்தெரியாதபடி வரகுணதேவர் தமது அரண்மனையை யடைந்து பள்ளிகொண்டனர். சூரியோதயமாதலும், கோயில் அர்ச்சகர் திருப்பள்ளியெழுச்சிக்காக உட்சென்றபோது, சிவலிங்கப்பெருமானுக்கு ஓர் புறத்தினின்றும் ஒரு பெண்ணின் கை தொங்கக்கண்டு, பயந்து, வரகுணதேவருக்குத் தெரிவித்தனர். வரகுணதேவர் அதைக்கேட்டு, ஆலயத்திற்கோடி, இலிங்கத்தினின்றும் தொங்குகின்ற கரத்தைக்கண்டு, மிகவும் மனம் வருந்தி, தமது வலக்கரத்தைப்பார்த்து, "ஏ கரமே, எனதாண்டவருக்குப் பிரீதியாகிய பொருளை நீ முன்பின் யோசியாதபடி ஏன் தொட்டனை, நீதொட்டதனாலன்றோ, அவர் அதைமாத்திரம் வெளியில் வைத்திருக்கின்றார்" என்று கோபித்து, இடக்கரத்தில் வாளைவாங்கித் தன்வலக்கரத்தை வெட்டும்படி ஓச்சினர். அப்போது சிவபெருமான் அசரீரியாய், யாவரும் கேட்கும்படி, "அன்பனே, உன் அன்பை உலகினரறிந்து உய்யும் வண்ணம் இக்கரத்தை மாத்திரம் வெளியிற்காட்டினோம், நீ கவலையுறாதே" என்று கூறியருளி யாவருங்காண அக்கரத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டனர். அப்போது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். அந்தரதுந்துபிமுழங்கின. சிவனடியார்கள் கடலொலியும் பின்னிடும்படி அரவொலி செய்தார்கள். வரகுணதேவர் மெய்ம்மறந்து ஆனந்தக்கூத்தாடினார். சிவபெருமான் வரகுணதேவர் கேட்கும்படி "அரசனே சோழனுக்கு இவ்வளநாட்டைக் கொடுத்து, நீ நமது மதுரைக்குச்செல்வாய்" என்று கட்டளையிட்டனர். அவ்வாறே வரகுணதேவர் விக்கிரமச் சோழனுக்குக் காவிரிநாட்டை மீட்டுங்கொடுத்துத் திருவிடைமருதூரை விட்டுப்பிரிய மனம்வராமல் மருதவாணரைப் பலமுறை வணங்கி அரிதில் நீங்கி, பல சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு மதுரைமாநகரமடைந்து, சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற்கணம்மையாரையும் இடையறாமல் வணங்கிக்கொண்டு, அரசுபுரிந்துகொண்டிருந்தனர். அப்போது அவருக்குச் சிவலோகத்தில் சிவபெருமானும் உமாதேவியாரும் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைத் தரிசிக்கவேண்டும் என்னும் விருப்பம் உண்டாயிற்று. அவ்விருப்பத்தை அவர் சொக்கலிங்கப்பெருமானிடம் சொல்லிக் குறையிரத்தலும், பெருமானார் அவருக்கு அவ்விடத்திலேயே



சிவலோகக்காட்சிதந்தருளினர். வேதாகமங்கள் வடிவுகொண்டு இருபுடைநின்று வாழ்த்தவும், தும்புருநாரதர்கள் கைகளில் யாழேந்திப் பாடவும், அரம்பைமாதர் நடிக்கவும், தேவர்கள் இடங்கிடைக்காமல் ஒதுங்கியிருக்கவும், விநாயகக்கடவுளும், முருகக்கடவுளும் வீரபத்திரக்கடவுளும் வினைபணிசெய்து நிற்கவும், பிரமவிஷ்ணுக்கள் வாய்பொத்தி, தூசொடுக்கி, ஒருபுறம் ஒதுங்கிநின்று தங்கள் குறைகளைச் சாற்றவும், நந்திதேவரின் ஆக்கினையின்படி சிவகணத்தலைவர்கள் வாயில்கடோறுங் காவற்செய்யவும், சித்தர், கின்னரர், கிம்புருடர், விச்சாதரர் முதலிய தேவகணங்கள் பரவாநிற்கவும், முனிவர்கள் ஆனந்தக்கூத்தாடி வேதகீதம்பாடி வணங்கவும், அவரவர்கட்குவேண்டிய வரங்களை வழங்கி, உமாதேவியார் இடப்பாகத்திலமர்ந்து புன்முறுவல்செய்ய, ஆயிரஞ்சூரியர்களென ஒளிவீசும் சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்த வண்ணமாகச் சிவபரஞ்சுடரை வரகுணதேவர் தரிசித்து, உரைதடுமாறவும், உரோமஞ்சிலிர்ப்பவும், பரவசத்தராய் கண்கள் ஆனந்தபாஷ்பஞ்சிந்த, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி வணங்கி, பலவாறாகத் தோத்திரம் செய்து நிற்ப, சிவலோகக்காட்சிமறைந்து, முன்பிருந்தவாறு, பிராட்டியுந்தாமுமாகச் சொக்கலிங்கப்பெருமான் வீற்றிருந்தனர். வரகுணதேவர் தமக்குச் சிவலோகக் காட்சிதந்தருளிய இறைவனை மீட்டும் பலவாறாகப் பாடி வணங்கி, மீண்டு தமதரண்மனையையடைந்தனர். பின்னர், பலதிருப்பணிகள் செய்துகொண்டிருந்து சிவபெருமானுடைய திருவடி நீழலையடைந்தனர்.

## தேவாலயதரிசனம்.

யாவரும் நாடோறும் திருக்கோயிலிற் சென்று, சிரத்தையோடு விதிப்படி கடவுளைத் தரிசனஞ்செய்தல் வேண்டும். தேவாலயதரிசனம் நாடோறுஞ் செய்தற்கு இயலாதாயின், புண்ணியகாலங்களிலேனும் தவறாமற் செய்தல்வேண்டும்.

ஆலயதரிசனஞ் செய்ய விரும்புவோர் ஆலயத்துக்குச் சமீபத்தில் உள்ள புண்ணியதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, அநுஷ்டானம் முடித்துக்கொண்டு, ஆலயத்துக்குப் போதல் வேண்டும்.

ஆலயத்துக்குப் போம்பொழுது, ஒரு பாத்திரத்திலே தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை முதலியவை வைத்து, அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு, போதல்வேண்டும். இவைகளுக்குப் பொருளில்லாதவர் பத்திபுஷ்பங்களேனுங் கொண்டு போய்க் கொடுத்து வணங்கல்வேண்டும். அதுவுங் கூடாதவர் சந்நிதியிலுள்ள செத்தை முதலியவற்றைப் போக்கியேனும் வணங்கல்வேண்டும்.

திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே, திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டுகைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து, பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல்வேண்டும்.

ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்கநமஸ்காரமும், பண்ணல்வேண்டும். திரயாங்கநமஸ்காரம் இவ்விருவருக்கும்பொது.

அட்டாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். திரயாங்க நமஸ்காரமாவது சிரசிலே இரண்டுகைகளையும் குவித்தல்.

நமஸ்காரம், மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பன்னிரண்டுதரமாயினும், பண்ணல்வேண்டும். ஒருதரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

நமஸ்காரம் பண்ணுமிடத்து, மேற்கேயாயினும் தெற்கேயாயினும் கால் நீட்டல் வேண்டும். கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் கால் நீட்டலாகாது.

கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் சிரசைவைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையேமடக்கி வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலேபொருந்தும்படி கைகளை அரையை நோக்கநீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச்செய்து, நமஸ்காரம் பண்ணல்வேண்டும்.

நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, கடவுளை மறவாத சிந்தையோடு இரண்டுகைகளையும் இருதயத்திலே குவித்துக்கொண்டு, கால்களை மெல்லவைத்துப் பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும்.

சிவபெருமானை மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பதினைந்துதரமாயினும், இருபத்தொருதரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டுதரமும், பார்வதிதேவியாரையும் விட்டுணுவையும் நந்நான்குதரமும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

பிரதக்ஷிணம்பண்ணும் ஆவரணத்திலே தூபிநிழலேனும் துசத்தம்பநிழலேனும் இருந்தால், அந்த நிழலில் மூன்றுகூறு நீக்கி எஞ்சிய இரண்டுகூற்றினுள்ளே செல்லல்வேண்டும். கடவுள் உற்சவங்கொண்டருளும்பொழுது அந்தநிழல் இருப்பினும், நீக்காது செல்லலாம்.



அபிஷேககாலத்தில் உட்பிராகாரத்திலே பிரதக்ஷிணம் நமஸ்காரமுதலானவை பண்ணலாகாது.

பிரதக்ஷிணம்பண்ணிச் சந்நிதானத்திலே நமஸ்காரஞ்செய்து, எழுந்து கும்பிட்டுக்கொண்டு உள்ளேபோய், கடவுளைத் தரிசித்து, மனசிலே தியானித்து, சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து, மனங்கசிந்துருக, உரோமஞ்சிலிர்ப்ப, ஆனந்தவருவி சொரிய இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லல்வேண்டும்.

அருச்சகரைக்கொண்டு கடவுளுக்கு அருச்சனைசெய்வித்து, தேங்காய் பழமுதலியவற்றை நிவேதிப்பித்து, கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணுவித்து, அருச்சகருக்கு இயன்ற தக்ஷிணை கொடுத்தல் வேண்டும்.

கடவுளைத் தரிசனஞ்செய்துகொண்டு, அவருக்குப் புறங்காட்டாது பலிபீடத்துக்கு இப்பால் வந்து, மூன்றுதரம் நமஸ்கரித்து, எழுந்து, வடக்கு நோக்கி இருந்து, கடவுளைத் தியானித்துக்கொண்டு, அவருடைய மந்திரத்தில் இயன்ற உருச்செபித்து, எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

திருக்கோயிலிலே செய்யலாகாத குற்றங்களாவன—ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், சனனசௌச மரணசௌசத்தோடு போதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர்சிந்துதல், அபானவாயு விடுதல், பாக்குவெற்றிலையுண்டல், தம்பலமுமிழ்தல், போசனபானம்பண்ணுதல், நித்திரை செய்தல், மயிர்கோதிமுடித்தல், சூதாடல், சிரசிலே வேட்டி கட்டிக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயமிட்டுக்கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், சட்டையிட்டுக்கொள்ளுதல், வாகனமேறிச்செல்லுதல், குடைபிடித்துக்கொள்ளுதல், பாதரக்ஷையிட்டுக்கொள்ளுதல், உயர்ந்த தானத்திருத்தல், ஆசனத்திருத்தல், தூபி துசத்தம்பம் பலிபீடம் விக்கிரகம் என்னும் இவைகளின் சாயையை மிதித்தல், விக்கிரகத்தையும் நிர்மாலியத்தையும் தீண்டுதல், பெண்களைத் தீண்டல், பெண்களை இச்சித்துப் பார்த்தல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம் வருதல், ஓடி வலம் வருதல், கடவுளுக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கேபோதல், அகாலத்திலே தரிசித்தல், வீண்வார்த்தைபேசுதல், சிரித்தல், வீண்கீதம்பாடல், வீண்கீதம்கேட்டல், திருவிளக்கவியக்கண்டும் தூண்டாதொழிதல், திருவிளக்கில்லாதபோது வணங்குதல், உற்சவங்கொண்டருளும்பொழுது அங்கேயன்றி உள்ளேபோய் வணங்குதல் முதலானவைகளாம். இக்குற்றங்களுள் ஒன்றை அறியாது செய்தவர் கடவுளுடைய மந்திரத்தைச் செபிக்கின், அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்; அவருக்குப் பிராயச்சித்தமில்லை.

திருக்கோயிலினுள்ளே போதற்கு யோக்கியர்களல்லாத சாதியார்கள் திருக்கோயிற் புறத்திலே பிரதக்ஷிணம்பண்ணித் திருக்கோபுரத்தை நமஸ்கரித்துக் கடவுளைத் தோத்திரஞ் செய்யக்கடவர்கள்.

ஸ்ரீலஸ்ரீ யா. ந. ஆறுமுகநாவலிரவர்கள்.

## நாத்திகன்கர்வபங்கம்.

சிலநாட்களுக்குமுன் சென்னைமாநகரில் வசித்துக்கொண்டிருந்த நாத்திகன் (கடவுள் இல்லையென்பவன்) ஒருவன், கடவுள்பத்திசெய்வோர்களைக் காணும்போதெல்லாம் வலிய வாதுக்கிழுத்து, கடவுளைக் காட்டச்சொல்லிப் பரிகாசஞ்செய்துகொண்டிருந்தான். அவன்செய்துகொண்டிருந்த குதர்க்கத்திற்கும் தெய்வதூஷணைக்கும் அஞ்சி, கல்விமான்கள் பலர் அவனையணுகாமல், "வம்பு செறி தீங்கினர்தங் கண்ணிற்றெரியாத தூரத்தே நீங்குவது நல்லோர்நெறி" என்பதற்கிணங்க, மறைந்து செல்வாராயினர். அதனால் அவன் அவர்கள் தன்னுடன் வாது செய்யச் சத்தியற்று அவ்வாறு செல்வதாகத் தன்னுள் எண்ணிக்கொண்டு, மிகவும் இறுமாப்படைந்திருந்தான். ஒருநாள், நூலாராய்ச்சியொருசிறிதுமில்லாத ஆத்திகன் (கடவுள் உண்டு என்போன்) ஒருவன் கோயிலுக்குப் போவதைக் கண்டு, அவனை வழிமறித்து, கடவுளைக் காட்டச்சொல்லி வாதாடினான். அவ்வாத்திகன் அவனைப்பார்த்து "ஐயா, நீர் தயைசெய்து எனக்கு உம்முடைய வீட்டை முன்னே காட்டும். நான் பிறகு உமக்குக் கடவுளைக்காட்டுகின்றேன்" என்றான். நாத்திகன் "அப்படியா; மெத்தச்சந்தோஷம்; வாரும்," என்றுசொல்லி அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச்சென்று "இதுதான்என்வீடு" என்று காட்டினான். ஆத்திகன் அவ்வீட்டிலிருந்தவர்களைச்சுட்டி, "இவர்கள்யாவர்?" என்றான். நாத்திகன் அவர்களை ஒவ்வொருவராகச் சுட்டிக்காட்டி, இவர் என்பிதா, இவள் என்மனைவி, இவர்கள் என் குழந்தைகள்" என்றான். ஆத்திகன் "ஐயா, இவர் உம்முடைய பிதாவென்றும், இவர்கள் உம்முடைய குழந்தைகள் என்றும் எப்படியறிந்துகொண்டீர்? உம்முடைய தாய் இவருக்கே உம்மைப்பெற்றாள் என்றும், உம்முடைய மனைவி உமக்கே இக்குழந்தைகளை ஈன்றாள் எனவும் நீர் எப்படி அறிந்துகொண்டீர். இவ்விரகசியத்தை நீர் அறிந்துகொண்ட விதத்தை எனக்குத் தயைசெய்து தெரிவியும்" என்றான். நாத்திகன் யாதொருபதிலும் சொல்லமாட்டாமல், வெட்கமடைந்து மௌனமாய் நின்றான். அதை ஆத்திகன் அறிந்து, "ஐயா, இவ்வொருசனனத்தில் பெற்ற பிதாவையறியமாட்டாத நீர், பலசனனங்களில் பலகோடி உயிர்களுக்குத் தாயுந் தந்தையுமாயிருக்குங் கடவுளை எவ்வாறு அறிவீர்?" என்றான். அதுமுதல் நாத்திகன் குதர்க்கமும் தெய்வதூஷணமும் செய்வதை யொழித்துவிட்டான்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 MAY 1917
MADRAS.

# சைவம்.

மலர் 2.] || நளஞு ஆவணிமீ—1916ஞு ஆகஸ்டுமீ || [இதழ் 8

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுள்
மாநடஞ்செய் வரதர்பொற் றூடொழ.

## சிவஞானபோதம்.

### முதற்சூத்திரம் (107–வது பக்கத்தொடர்ச்சி.)

சிவஞானபோதச் சூத்திரம் ஒவ்வொன்றும் அதிற்கூறப்பட்ட விஷயங்களுக்கேற்ப அதிகரணங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது.

"தன்றாற்கூறப்படும்பொருள், அதன்கண் ஐயப்பாடு, அதற்குப் பிறர்கூறும்பக்கம், அதனைமறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு, இயைபு, ஆகிய இவ்வைந்தின் நிலைக்களம் ஈண்டு அதிகரணம் எனப்படும்." இவற்றுள் "தன்றாற்கூறப்படும் பொருள்" என்பது அதிகரணத்தில் சொல்லப்பட்ட விஷயம். "அதன்கண் ஐயப்பாடு" என்பது அவ்விஷயத்தில் தோன்றும் சந்தேகம். "அதற்குப் பிறர்கூறும்பக்கம்" என்பது அச்சந்தேகத்தால் பிறசமயிகள் கூறும் ஆட்சேபனைகள். "அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு" என்பது பிறசமயிகள் செய்யும் ஆட்சேபனைகளிலுள்ள குற்றங்களை யெடுத்துக்காட்டி அவைகளை மறுத்து சித்தாந்தப்படுத்திய துணிபு. "இயைபு" என்பது சித்தாந்தப்படுத்திக்காட்டிய துணிபுகளை பிரமாணங்களாலும் திட்டாந்தங்களாலும் வலியுறுத்துதல்.

அதிகரணம் ஒவ்வொன்றுக்கும், சூர்ணிகை என்னுங் கருத்துரையையும், வார்த்திகம் என்னும் பொழிப்புரையையும், உதாரண வெண்பாக்களையும் கொண்டு பொருள் உரைக்கப்படும்.

முதற்சூத்திரம் மூன்று அதிகரணங்களை யுடையது. அவை வருமாறு.—

க—வது.—அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்.

உ—வது.—தோற்றிய திதியே யொடுங்கி மலத் துளதாம்.

ங—வது.—அந்த மாதி யென்மனார் புலவர்.

இவை மூன்றும் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் வருதலால் ஒருசூத்திரத்தாற் கூறப்பட்டன.

---

## முதற்சூத்திரத்தின் சூர்ணிகை.

க—வது.—சகம் பிறப்பிருப்பிறப்பாகிய முத்தொழிலையுடையது.

உ—வது.—அது ஆஞ்ஞையுடையது.

ங—வது.—மற்றிருவரு முத்தொழிற்படுவர்.

---

## முதற்சூத்திரத்தின் வார்த்திகம்.

க—வது—ஈண்டுத் தோற்றமும் ஈறும் உள்ள தன்பாலே கிடத்தலின் உளதாய் ஒருவனொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி, திதி, நாசமுடைத்தென்றது.

உ—வது.—இனி இல்லதற்குத் தோற்றமின்மையின், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின், ஒடுங்கின சங்காரத்தின் வழியல்லது உற்பத்தியில்லை யென்றது.

ங—வது.—இனிச் சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்தரமின்றி நிற்றலான் சங்காரமே முதலென்றது.

---

இம்முதற் சூத்திரத்திற்குரிய உதாரண வெண்பாக்கள் ஐந்து.

இனி, முதற் சூத்திரத்தின் முதலதிகரணத்தின் பொருளை, அதற்குரிய சூர்ணிகை வார்த்திகங்களோடும் உதாரண வெண்பாவோடும் சேர்த்து விளக்குவாம்.

## முதலதிகரணம்.

அவனவளது வெனுமவை மூவினைமையின்.

(இ—ள்.) அவன் அவள் அது என்று சுட்டி யுணரப்படும் பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசம் என்னும் முத்தொழிலை உடையதாயிருந்தலினால்.



இவ் வதிகரணத்தில் "தன்னாற் கூறப்படும் பொருள்" முதலிய ஐந்தும் வருமாறு:—

க—வது—தன்னாற் கூறப்படும் பொருள்.—பிரவஞ்சம் பிறப்பு இருப்பு இறப்பு ஆகிய முத்தொழிலையுடையது.

உ—வது—ஐயப்பாடு—பிரபஞ்சம் முத்தொழிலையுடையதோ? அன்றோ?

ங—வது—பிறர்கூறும் பக்கம்—பிரத்தியட்சப் பிரமாணத்தால் அறியப்படாதனவெல்லாம் அங்கீகரிக்கப்படுவனவன்று. ஆதலால், இவ்வுலகம் ஒருகாலத்தில் தோன்றியதென்பதும், இனியொருகாலத்தில் அழியுமென்பதும் ஒப்புக்கொள்ளப்படுவனவன்று. பிரபஞ்சம் தோற்றமும் ஈறுமின்றி நித்தமாயிருப்பது என்பதே நிச்சயம். (இவ்வாறுகூறுவோர் காட்சிப்பிரமாணம் ஒன்றையே ஒப்புக்கொள்ளும் உலோகாயதரும் மீமாஞ்சகரும்.)

ச—வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு.—'தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின், (அதாவது உற்பத்தியும் நாசமும் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக்கிடத்தலின்) ஒருவன் ஒருத்தியென்று சுட்டப்பட்ட பிரவஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து.' அதாவது, காட்சிப் பிரமாண மொன்றையே ஒப்புக்கொள்ளும் உலோகாயதருக்கும், மீமாஞ்சகருக்கும், அப்பிரமாணத்தைக் கொண்டே பிரவஞ்சம் தோன்றிநின்றழிதலை விளக்கவேண்டி பிரவஞ்சம் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டுணரப்படும் பொருள்களின் தொகுதியாகையாலும், அவ்வாறு சுட்டி யறியப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் தோன்றிநின்று அழிதலைப் பிரத்தியட்சமாகக் காண்பதனாலும், அவற்றின் தொகுதியாகிய பிரவஞ்சமும் அவ்வாறே தோன்றிநின்று அழியும் தன்மைத்து என்று சித்தாந்தப்படுத்தியதாம்.

ரு—வது—இயைபு—உதாரண வெண்பா.

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னோதாரோ
வொன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து.

(இ—ள்.) பேதாய்=காட்சியளவையாலும் அறியமாட்டாதமட்வோனே—பூதாதி=பூதம் முதற்காரணமாகஉடைய பிரபஞ்சத்திற்கு—திதி=நீ அங்கீகரிக்கும் திதி—ஈறும் முதலும் துணை ஆக ஆகும்=நாசமும் உற்பத்தியுந் தனக்குத்துணைக்காரணமாகக்கொண்டே நிகழும்.

(அதாவது உற்பத்தியும் நாசமும் இன்றி வெறுந் திதிமாத்திரம் இராது. ஆனல் உலகத்திலுள்ள பொருள்கள் ஒன்று தோன்றவும் ஒன்று நிற்கவும் ஒன்று அழியவும் காண்கின்றோமேயன்றி எல்லாம் ஒருங்கேதோன்றி ஒருங்கேநின்று, ஒருங்கே அழியக்காண்கிலோம் எனில்.)—ஒன்று ஒன்றின்பெற்றிமையின் தோன்றி உளதாய் இறக்கண்டும்=ஒவ்வொரு கால விசேடத்திற் சாதிபற்றி ஒருங்கேதோன்றி, ஒருங்கேநின்று, ஒருங்கே அழிவதனைக்கண்டு வைத்தும், (அதாவது கால விசேஷத்தால், ஒவ்வோர் சாதிச்செந்துக்கள் செடிகள் முதலியன ஒருங்கேதோன்றி, ஒருங்கேநின்று, ஒருங்கேயழிதலாலும், பூகம்பம், எரிமலை, ஜலப்பிரவாகம் யுத்தம் முதலியவற்றால் பலபொருள்களும் ஒருங்கே யழிவது பிரத்தியட்சமாயிருத்தலாலும்)—என்றும் அன்று உண்டு என்ன ஆய்ந்தோதாரோ—என்றாயினும் அதற்குரிய காலம்வருமென்று உலகத்திற்கும் அவ்வாறுதல் உண்டென்று அக்காட்சிபற்றி ஆராய்ந்துசொல்லார்களோ, உன்னைப்போலும் மடமையில்லாதோர். (அதாவது, உலகத்திற்கும் அதற்குரிய காலம்வந்தால் அவ்வாறுதல் கூடுமென்று அக்காட்சிப் பிரமாணத்தைக்கொண்டே அறிவுடையோர் ஆராய்ந்து சொல்வர் என்பதாம்.)

(இன்னும்வரும்.)

## விநாயக சதுர்த்தி விரதம்.

மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பை யடிபோற்றத் துணிந்தா—னெருப்பை
யருந்த வெண்ணுகின்ற வெறும்பன்றே யவரை
வருந்த வெண்ணுகின்ற மலம்.

இவ்விரதம் வருடந்தோறும், ஆவணிமாதம், அமாவாசைகழிந்த வளர்பிறைச் சதுர்த்தி உச்சிப்போது வரையிலுள்ள தினத்தில் செய்யத்தக்கது.

இவ்விரதத்தை மலையரையன் திருமகளாயவதரித்த உமாதேவியார், முருகக்கடவுள், சோமகாந்தன், வேதவியாசர், விஷ்ணு, பிரமன், தக்கன், வல்லாளன், வீமன், உருக்குமாங்கதன், இந்திரன், இருச்சமதன், திரிபுரன், இந்திராதி தேவர்கள், நளன், சந்திராங்கதன், மன்மதன், உருக்குமணி, ஆதிசேடன், மாபலி, பரசிராமன், இராவணன், அகத்தியர், காசிபர்முதலிய பலர் அநுட்டித்து விரும்பியவரங்களைப் பெற்றதாக நூல்கள் கூறுகின்றன.



இவ்விரதம், இப்பாதகண்டத்தில் மாத்திரமன்றி ஆரியர்போய் வசிக்கும் பர்மாமுதலிய பிறதேயங்களிலும் அநுட்டிக்கப்படுகின்றது. பாதகண்டத்துள்ளும் பம்பாய் இராஜதானியில், மற்றெல்லாப்பண்டிகைகளுள்ளும் பெரும்பண்டிகையாகக் கொண்டாடப்படுகின்றது. பலவழியிலும் சமயவொழுக்கங்கள் குன்றிக் கிடக்கும் நம் தமிழ்நாட்டில் பலர் இப்பண்டிகையைக் கொண்டாடினும், அனேகர், இது சிறுபிள்ளைகளால் அநுட்டிக்கப்படுவதொன்றென எண்ணிக்கொண்டு அலட்சியஞ் செய்கிறார்கள். அவ்வாறு விநாயகபூசைசெய்வது பெரும்பாவம். ஆகலால் விநாயக சதுர்த்தி விரதம் அநுட்டிக்கவேண்டிய விதத்தை இதில் வெளியிடலாயிற்று.

இவ் விரதமநுட்டிப்போர் மிக்க களிப்புடன் நீராடி நித்திய கருமமுடித்து, நியமமுடையராய்ப் பரிசுத்தமான இடத்திற்சென்று, மிருத்திகை (மண்) எடுத்துவந்து அதில், வேர்கள், செல்முதலிய செந்துக்கள், கற்கள் முதலானவைகள் இல்லாத வண்ணம் சோதித்துப் பிசைந்து, பதப்படுத்திச் சிற்பசாத்திரத்திற் கூறியவாறு விநாயகமூர்த்தியின் திருவுருவம் அமைத்துப், பொன்னினாலும் இவ்வாறே ஓர் திருவுருவம் அமைத்து வைத்துக்கொண்டு, ஆதிசைவ வேதியர்களை வரவழைத்து வேதபாராயணம் செய்யச்செய்து, அவ்வாதிசைவர்கள் மத்தியில் சிவாகம முறைப்படி சிரசாதி பாதம்வரையில் நியாசம்=(தொடல்) செய்து ஆசமனம், பிராணாயாமம், பூதசுத்தி முதலானவைகளைநடாத்தி,

"ஏவங்குண விசேஷண, விசிஷ்டாயாம், சுபதிதௌ, அஸ்மாகம் சகுடும்பானாம், க்ஷேமஸ்தைர்ய, விஜய ஆயுராரோக்கிய, ஐஸ்வர்யாணாம், உத்தரோத்தராபி வ்ருத்யர்த்தம், தர்மார்த்தகாமமோக்ஷ சதுர்வித, பலபுருஷார்த்தஸித்யர்த்தம், கல்போக்த ப்ரகாரேணதியானவாஹனாதி, ஷோடசோபசார பூஜாங்கரிஷ்யே"

— என்று சங்கற்பங்கூறிச், சந்தன மாத்தாலாகிய ஓர் வேதிகை (பலகை)யைவைத்து அதன்மீது தண்டுலம் அரிசி பரப்பி, அதன்மீது சொர்னவஸ்திரம் ஒன்றைவிரித்து, அதன்மீது இழைசுற்றி நீர்நிரப்பி இருக்கின்ற பொற்கும்பத்தை ஸ்தாபித்து, அதில் அத்தி, ஆல், அரசு, மா, நாவல் என்னும் பஞ்சதளிர்களையும், சுகந்தி, பொன், மரகதம், மாணிக்கம், முத்து, என்னும் பஞ்சரத்தினங்களையும் பெய்து, அக்கும்பத்திற்குச் சந்தனம், புட்பம், அக்ஷதை முதலானவைகளைச் சாத்தி,

"கலசஸ்ய முகேவிஷ்ணு, கண்டேருத்ரஸமாஸ்ரித, மூலேதத்ரஸ்திதோப்ரம்ஹா, மத்யேமாத்ரகணாஸ்மிர்தா, குக்ஷௌது சாகராஸர்வே ஸப்தத்வீபாவஸுந்தரா, ருக்வேதோத யசுர்வேத சாமவேத அதர்வண,

அங்கைஸ் சஸஹிதாசர்வே கலஸாம் புஸமாஸ்ரித, ஆயேந்து கணேச பூஜார்த்தம் துரிதக்ஷய காரக, கங்கேச யமுனேசைவ, கோதாவரி ஸரஸ்வதி, நர்மதேசிந்து காவேரி, ஜலேஸ்மின் ஸன்னிதிங்குரு" என்று கும்பபூஜை செய்து,

அக்கும்பத்திற்கு மேற்றிசையில் யந்திரமிட்டு, முன்செய்து வைத்திருக்கும் பிருதிவு மூர்த்தியை எழுந்தருளச்செய்து, மற்றொருவேதிகையில் சொர்னமூர்த்தியை எழுந்தருளச்செய்து, முன்பு சேகரித்து வைத்திருக்கும் பூஜாதிரவியங்களிலுள்ள குங்குமம், பச்சைகற்பூரம், புட்பம், அறுகு முதலிய பற்பல சுகந்தவர்க்கங்களைக் கலந்து, முன்பு சுத்தப்படுத்திவைத்த மணிவட்டகைகளில் நிரப்பி, மற்ற வட்டகைகளில் கங்கை முதலிய சுத்ததீர்த்தம், அரிசி, பால், தருப்பைநுனி, மலர், வெண்கடுகு, நெல், எள்முதலிய திரவியங்களை விதிப்படி அமைத்து, அருக்கியம், பாத்தியம், ஆசமனம் முதலியவைகளை மந்திர பூர்வகமாகச்செய்து கரத்திற் புஷ்பமும் அக்ஷதையுங்கொண்டு,

"த்யாயேத் கஜானனம் தேவம், தப்தகாஞ்சனஸங்நிபம், சதுர்ப்புஜம் மஹாகாயம், ஸர்வாபரண பூஷிதம், தண்டாக்ஷமாலாபரசு, பூர்ணமோதகதாரிணம், பாசாங்குசதரம் தேவம், த்யாயேத்சித்திவிநாயகம், ஸ்ரீ சித்திவிநாயகாயநம தியானம் ஸமர்ப்பயாமி," என்று சிந்தித்து,

"விநாயக நமஸ்தேஸ்து, கௌரீமலஸமுத்பவ, இமாம் க்ருதாம் மயாம் பூஜாம், க்ருஹாணகணநாயக. ஸ்ரீ கணநாயகாயநம ஆவாஹனம் ஸமர்ப்பயாமி" என்று ஸ்தாபனஞ்செய்து,

"மௌக்திகை புஷ்யராகஸ்ச, நாநாரத்நவிராஜிதம், திவ்யஸிம்ஹாசனம் சாருப்ரீத்யர்த்தம் ப்ரதிக்ருய்ஹதாம், ஸ்ரீ விநாயகாயநம ஆஸனம் ஸமர்ப்பயாமி" என்று பீடமிட்டு,

"அர்க்யம் க்ருஹாணதேவேச, கணாதிபகஜானன, கந்ததூர்வாக்ஷதைர்யுக்தம், கங்காஜலமிதம் சுபம், ஸ்ரீ கஜானனாயநம அர்க்யம் ஸமர்ப்பயாமி" என்று அர்க்யம் கொடுத்து,

"கௌரீபுத்ரநமஸ்தேஸ்து, சங்கரப்ரியநந்தன, பக்த்யாபாத்யமயாதத்தம், க்ருஹாணசுரஸத்தம, ஸ்ரீகௌரீபுத்ராயநம பாத்யம் ஸமர்ப்பயாமி" என்று பாத்யம் கொடுத்து,

"அநாதநாதசர்வேச, கீர்வாண சுரபூஜித, நிர்மலம் கந்தஸம்யுக்தம், க்ருஹாணஸமனம்விபோ, ஸ்ரீ சர்வேசாயநம ஆசமனீயம் ஸமர்ப்பயாமி" என்று ஆசமனம் கொடுத்து,

"ததிக்ஷீரஸமாயுக்தம், மத்வாஜ்யேனஸமன்விதம், மதுபர்க்கம் க்ருஹாணேதம், கஜவக்த்ரநமோஸ்துதே, ஸ்ரீ கஜவக்த்ராயநம, மதுபர்க்கநைவேத்யம் ஸமர்ப்பயாமி" என்று தேன், பால், பழம் முதலியவைகளைச் சாமானியமாக நிவேதித்து,



"ஸ்நானம்பஞ்சாம்ருதேர்திவ்ய, குருஷ்வசுரஸத்தம, பக்த்யாதுப்யம் மயாதத்தம், விக்னராஜ நமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜாயநம, பஞ்சாமிர்த ஸ்நானம் ஸமர்ப்பயாமி" * என்று பஞ்சாமிர்த வபிடேகஞ் செய்து,

"கங்காதிஸர்வதீர்த்தேஸ்து, ஆனீத்யைர் நிர்மலேஸ்சுபை, வாஸிதைருதகைர்தேவ, ஸ்னபயாமிகஜானன, ஸ்ரீ கஜானனாயநம, சுத்தோதகஸ்நானம் சமர்ப்பயாமி" என்று கங்கைமுதலிய சுத்த சலத்தால் அபிடேகஞ்செய்து,

"ரக்தவஸ்த்ரம் த்வயம்தேவ, கௌரீபவ பவப்ரபோ, க்ருஹாணேதம் மயாதத்தம், விக்னராஜநமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜாயநம வஸ்திரயுக்மம் ஸமர்ப்பயாமி" என்று நல்ல இரண்டு பீதாம்பரங்களையுடுத்தி,

"உபவீதம் ப்ரம்மசூத்ரம், ப்ரம்ஹணாநிர்மிதம் புரா, நாகயக்ஞோபவீதேதம், க்ருஹாண கணநாயக - ஸ்ரீ கணநாயகாயநம யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி" என்று பூணூல் தரித்து,

"சந்தனா கருகற்பூர, ம்ருகநாபி ஸமன்விதம், க்ந்தம்தர்ஸ்யாமி விக்னேச, ஸர்வாபீஷ்டப்ரதாயக-ஸ்ரீ விக்னேசாயநம கந்தாந்தாரையாமி" என்று திருமேனிமுழுவதும் சந்தனத்தை அப்பி,

"அக்ஷதான் தவளாம் சுப்ரான், ஹரித்ராமிஸ்ரிதானபி, மயாஸமர்ப்பிதான்தேவ, க்ருஹாணத் விரதானன ஸ்ரீ ஸர்வாபீஷ்டப்ரதாயகாயநம அக்ஷதாம் ஸமர்ப்பயாமி" என்று அக்ஷதை = (மஞ்சள் - அரிசி) பொற்சுண்ணம், பூந்தாது முதலியவற்றைச் சாத்தி,

"சுகந்தீனி சுபுஷ்பாணி, ஜாஜீகுந்த முகானிச, ஏகவிம்சதிபுஷ்பாணி, க்ருஹாணத்வம் விநாயக, ஸ்ரீவிநாயகாயநம புஷ்பாணி பூஜையாமி" என்று உக மலர்களைச்சாத்தி,

ஓம் கணேசாயநம=பாதௌ பூஜையாமி=பாதம்
ஓம் விக்னராஜாயநம=ஜானுநீ பூஜையாமி=முழந்தாள்
ஓம் ஆகுவாஹனாயநம=ஊரும் பூஜையாமி=தொடை
ஓம் ஏரம்பாயநம=கடிம் பூஜையாமி=நிதம்பம்
ஓம் தேவதேவாயநம=நாபிம் பூஜையாமி=நாபி
ஓம் லம்போதராயநம=உதரம் பூஜையாமி=வயிறு
ஓம் கணநாயகாயநம=ஹ்ருதயம் பூஜையாமி=இருதயம்

---

* பஞ்சாமிர்தம்=தேன், பால், வாழைப்பழம், சருக்கரை, நெய் இவ்வைந்துங் கலந்தது.

ஓம் ஸ்தூலகண்டாயநம=கண்டம் பூஜையாமி=கண்டம்
ஓம் ஸ்கந்தாக்ரஜாயநம=ஸ்கந்தௌ பூஜையாமி=கழுத்தடி
ஓம் சதுர்ப்புஜாயநம=புஜௌ பூஜையாமி=தோள்
ஓம் பாசஹஸ்தாயநம=ஹஸ்தாம் பூஜையாமி=உள்ளங்கை
ஓம் கஜவக்திராயநம=வக்த்ரம் பூஜையாமி=நாசி அல்லது முகம்
ஓம் விக்னஹந்த்ரேநம=நேத்ரே பூஜையாமி=கண்
ஓம் சூர்ப்பகர்ணாயநம=கர்ணௌ பூஜையாமி=காது
ஓம் ஏகதந்தாயநம=தந்தம் பூஜையாமி=தந்தம்
ஓம் குமாரகுருவேநம=சிரம் பூஜையாமி=சிரம்
ஓம் சர்வேஸ்வராயநம=சர்வாங்காணி பூஜையாமி=சர்வாங்கம்

என்று அங்கபூஜைசெய்து.

ஓம் சுமுகாயநம=மாசிப்பத்திரம் பூஜையாமி=மாசிப்பத்திரம்
ஓம் கணாதிபதயேநம=பிருங்கராஜபத்ரம் பூஜையாமி=காசராங்கண்ணி
ஓம் உமாபுத்ராயநம=வில்வபத்ரம் பூஜையாமி=வில்வம்
ஓம் கஜானனாயநம=தூர்வபத்ரம் பூஜையாமி=அறுகு
ஓம் லம்போதராயநம=பதரீபத்ரம் பூஜையாமி=இலந்தை
ஓம் ஹரசூனவேநம=தத்தூரபத்ரம் பூஜையாமி=ஊமத்தை
ஓம் கஜகர்ணாயநம=துளசிபத்ரம் பூஜையாமி=துளபம்
ஓம் குகாக்கிரசாயநம=காமஞ்சரிபத்ரம் பூஜையாமி=நாயுருவி
ஓம் ஏகதந்தாயநம=புரஹூதிபத்ரம் பூஜையாமி=சிறுவழுதி
ஓம் கஜவக்திராயநம=சமிபத்ரம் பூஜையாமி=வன்னி
ஓம் சுராக்ரகண்யாயநம=தேவதாரபத்ரம் பூஜையாமி=மந்தாரை
ஓம் பாலசந்த்ராயநம=மருவபத்ரம் பூஜையாமி=மரு
ஓம் விகடாயநம=கரவீரபத்ரம் பூஜையாமி=அலரி
ஓம் விநாயகாயநம=துருமோற்பலபத்ரம் பூஜையாமி=கோங்கு
ஓம் கபிலாயநம=அர்க்கபத்ரம் பூஜையாமி=வெள்ளெருக்கு
ஓம் பின்னதந்தாயநம=அர்ச்சுனபத்ரம் பூஜையாமி=மருதம்
ஓம் பத்னிஹீனாயநம=விஷ்ணுகிராந்திபத்ரம் பூஜையாமி=விஷ்ணுகிராந்தி
ஓம் வடவேநம=தாடிமபத்ரம் பூஜையாமி=மாதுளை
ஓம் சூர்ப்பகர்ணாயநம=ஜாஜீபத்ரம் பூஜையாமி=ஜாதிமல்லி
ஓம் மூஷிகவாஹனாயநம=கண்டலேபத்ரம் பூஜையாமி=தாழை
ஓம் சித்திவிநாயகாயநம=சிந்துவாரபத்ரம் பூஜையாமி=வெண்ணொச்சி
ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம=ஏகவிம்சதிபத்ராணிம் பூஜையாமி=சகலமும் கலந்தது.

என்று இருபத்தொருமந்திரங்களால் அருச்சித்துப் பின்பு மல்லிகை, முல்லை, வெள்ளெருக்கு, சண்பகம், புன்னை, நந்தியாவட்டம், பாடலம், கடுக்காய், தும்பை, செம்பரத்தை, நீலோற்பலம், வெண்டாமரை, செந்தாமரை, நெய்தல் முதலிய பற்பல பூக்களைக்கொண்டருச்சித்து



ஓம் விநாயகாயநம
ஓம் விக்னராஜாயநம
ஓம் கணநாதாயநம
ஓம் கஜானநாயநம
ஓம் மஹோதராயநம
ஓம் மஹாதேவாயநம
ஓம் ஸனித்காஞ்சன ஸமத்துய்யேநம
ஓம் ஏகதம்ஷடோத்கடாயநம
ஓம் தேவாயநம
ஓம் கஜவக்த்ராயநம
ஓம் மஹாபலாயநம
ஓம் நாகயக்ஞோபவீதினேநம
ஓம் நாகாபரணபூஷிதாயநம
ஓம் ஸர்வார்த்தஸம்பதாதாராயநம
ஓம் கணத்யக்ஷாயநம
ஓம் வரப்ரதாயநம
ஓம் ருத்ரஸ்யதன்யாயநம
ஓம் உதாராயநம
ஓம் நாயகாயநம
ஓம் ப்ரமதாதிபாயநம
ஓம் பத்மராகத்வதயேநம
ஓம் ஸோமாயநம
ஓம் ரக்தமால்யானுலேபனாயநம
ஓம் அபலாயநம
ஓம் பாலரூபிணேநம
ஓம் சுமுகாயநம
ஓம் சுரப்ரியாயநம
ஓம் ப்ரபவேநம
ஓம் புண்யாயநம
ஓம் பூர்ணாயநம
ஓம் பூர்ணேதராயநம
ஓம் புண்யகீர்த்தயேநம
ஓம் புராதனாயநம
ஓம் பர்த்ரேநம
ஓம் சிவாயநம
ஓம் சாந்தாயநம
ஓம் ஜகன்நாதாயநம
ஓம் சாஸ்வதாயநம
ஓம் ஸ்வேதபரிதானாயநம

ஓம் த்ரயக்ஷாயநம
ஓம் கனகசுப்ரபாயநம
ஓம் சிவஸாம்யாயநம
ஓம் மஹாதேஜஸேநம
ஓம் மஹாபலபராக்ரமாயநம
ஓம் ஸாவக்ஞாயநம
ஓம் க்ஞானஸம்பன்னாயநம
ஓம் ஸர்வாபரணபூஷிதாயநம
ஓம் பாபாபஹேதனாயநம
ஓம் சண்டவிக்ரமாயநம
ஓம் அலக்ஷ்மீமலநாசனாயநம
ஓம் குமாராயநம
ஓம் காரணாயநம
ஓம் காரிதாயநம
ஓம் ஸர்வசித்திப்ரதாயகாயநம
ஓம் விபவேநம
ஓம் ஈசாயநம
ஓம் ஈசபுத்ராயநம
ஓம் ஈஸ்பிதார்த்தப்ரதாயகாயநம
ஓம் ஸ்ரீதாயநம
ஓம் சுபாயநம
ஓம் ஏகதந்தாயநம
ஓம் ஏகவீராயநம
ஓம் அநேகதாயநம
ஓம் ஏகஸ்மைநம
ஓம் ஏகப்ரதேநம
ஓம் விஸ்வப்ரதேநம
ஓம் விஸ்வபஜேநம
ஓம் விஸ்வஸமைநம
ஓம் விஸ்வக்ஞாயநம
ஓம் ஸர்வபாவனாயநம
ஓம் பாக்யதாயநம
ஓம் பவதாயநம
ஓம் பாகினேநம
ஓம் போகதாயநம
ஓம் போகபாவனாயநம
ஓம் கவயேநம
ஓம் கார்யாயநம
ஓம் கனீனாயநம

| | |
|---|---|
| ஓம் கர்த்ரேயநம | ஓம் விதுஷாம்புத்திதாயநம |
| ஓம் க்ரதவேநம | ஓம் புதாயநம |
| ஓம் க்ருதினேநம | ஓம் ஓங்காராயநம |
| ஓம் க்ருத்யவிதேநம | ஓம் ப்ரமஹவிதேநம |
| ஓம் அத்யுக்ராயநம | ஓம் ப்ராம்ஹணாயநம |
| ஓம் காந்ததர்சினேநம | ஓம் ப்ராம்ஹணேநம |
| ஓம் க்ருதாந்தகாயநம | ஓம் ப்ராம்ஹபராயநம |
| ஓம் ஸ்துத்யாயநம | ஓம் பராயநம |
| ஓம் ஸ்தோத்ரேநம | ஓம் ஸர்வக்ஞாயநம |
| ஓம் ஸ்தோகாயநம | ஓம் ஸக்ததயேநம |
| ஓம் ஸ்தோத்ராயநம | ஓம் ஸர்வலோகவேத்யாயநம |
| ஓம் த்ரயீமயாயநம | ஓம் ஸர்வதாயநம |
| ஓம் வேதாயநம | ஓம் சுபகாயநம |
| ஓம் வேதாந்தக்ருதேநம | ஓம் அவ்யயாயநம |
| ஓம் வேத்யாயநம | ஓம் சித்திவிநாயகாயநம |

என்று அஷ்டோத்தர சததிவ்யநாமபூஜை செய்து,

"தாசங்கம் குங்குளம்தூப, முத்தமம் கணநாயக, க்ருஹாணகண ராஜேந்த்ர, விக்னஹாரின்னமோஸ்துதே, ஸ்ரீ கணநாயகாயநம, தூபமாக் ராபயாமி" என்று தூபங்கொடுத்து,

"ஸர்வக்ஞசர்வலோகேச, ஸர்வபூதஹிதோத, க்ருஹாணமங்களம் தீபம், ருத்ரப்ரிய நமோஸ்துதே, ஸ்ரீ சர்வக்ஞாயநம தீபந்தர்சயாமி" என்று தீபங்காட்டி,

பின்பு மூர்த்திசந்நிதிக்கு எதிரே நிலத்தைச் சதுரமாக மெழுகி அக்ஷதை, புஷ்பம் சாத்தி, பரிகலபாத்திரம் வைத்து, சுத்தான்னம், சித்திரான்னம், மோதகமுதலிய (உக) பலகார வகைகள், தேங்காய், முக்கனி=(வாழை, பலா, மா) முதலிய இருபத்தொருகனிகள், கரும்பு, பாயசம், பானக்கம், நீர்மோர், முதலிய பானவர்க்கங்கள், ஆகிய இவை களைச் சுத்தம்செய்துவைத்து,

"ஓம் அஸ்திராயநம" என்று சலம் புரோக்ஷித்து, "ஓம் கவசாயநம" என்று நீர்வளையக்கட்டி,

நைவேத்தியம் ஷட்ரஸோபேதம்—பலலட்டு ஸம்யுதம், மோதகம் பரமான்யம்ச—நமஸ்தே விக்னநாசன. ஸ்ரீ விக்னநாசனாயநம, நைவேத்யம் சமர்ப்பயாமி" என்று நைவேதனம்செய்து,

"தாம்பூலமுத்தமந்தேவ க்ருஹாணசுரபூஜித, கற்பூரசூர்ணசம்யுக் தம். மயாதத்தமிதம்விபோ, ஸ்ரீ ருத்ரப்ரியாயநம, தாம்பூலம் ஸமர்ப்ப யாமி" என்று தாம்பூலம் உபசரித்து,



"ஸதாந்தனதவிக்னேச—புஷ்டலாகிதனுநிச, பூம்யாம்ஸ்திதானிபசு வன், ஸ்விகுருஷ்வவிநாயக, ஸ்ரீ விக்னேசாயநம, ஸ்வர்ணபுஷ்பம் சமர்ப் பயாமி" என்று தக்ஷிணைவழங்கி,

"விக்னராஜ நமஸ்துப்யம் பாபக்ஞானப்ராஞ்சன, புனரர்க்யம்ப்ர தாஸ்யாமி, க்ருஹாணசுரசத்தம, ஸ்ரீ விக்னராஜாயநம, புனரர்க்யம்ஸமர் ப்பயாமி" என்று அர்க்கியங்கொடுத்து,

| | |
|---|---|
| ஓம் கணாதிபாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் உமாபுத்ராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் அகநாசாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் விநாயகாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் ஈஸ்வரபுத்ராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் விக்னராஜாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் ஏகதந்தாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் இபவக்திராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் ஆகுவாஹனாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் குமாரகுருவேநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் சுமுகாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் சுராக்கிரகண்யாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் ஸ்தூலகண்டாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் குகாக்ரசாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் லம்போதராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் பின்னதந்தாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் விசாலாக்ஷினேநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் காமரூபியேநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் பாலசந்த்ராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் வக்ரதுண்டாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம | |

என்று சந்தனத்திற்றோய்த்த இரண்டிரண்டு அறுகினால் இந்த இருபத்தொரு திருநாமங்களையுஞ் சொல்லி அருச்சித்து,

"நமஸ்தே தேவதேவேச, நமஸ்தேகணநாயக, நீராஞ்சனம் ப்ரஸ் யாமி, ப்ரசன்னோபவமேப்ரபோ, ஸ்ரீ தேவதேவாயநம, நீராஞ்சனம் சமர்ப்பயாமி" என்று ஆலத்திசுற்றி,

"ஆகுவாஹனதேவேச, வில்வப்ரியின்கஜானன, ப்ரதக்ஷிணம் கரோமித்வாம், மமத்வம்ஸன்னிதிம்குரு, ஸ்ரீ ஆகுவாஹனாயநம, ப்ரதக்ஷி ணம் ஸமர்ப்பயாமி" என்று வலம்வந்து.

"நமஸ்தேகஜவக்த்ராய, நமஸ்தேகணநாயக, நமஸ்தேதேவதேவேச, கௌரீபுத்ரநமோஸ்துதே, ஸ்ரீ கௌரிபுத்ராயநம, நமஸ்காரம் ஸமர்ப்பயாமி" என்று தீர்க்கதண்டன் செய்து,

"தேவதானவகோடீர, மணிரஞ்சிதபாதக, க்ஷமஸ்வதேவதேவேச, புத்ராக்னீர்க்கிஞ்சதேஹிமே, ஸ்ரீ கஜவக்த்ராயநம, ப்ரார்த்தனம்ஸமர்ப்பயாமி" என்று பிரார்த்தித்து, தேவாரத்திருமுறைகளால் தோத்திரம் பண்ணி,

"க்ருதவர்த்தி ஸஹாஸ்த்ரேஸ்ச, கர்ப்பூரசகலை ஸ்ததா, நீராஞ்சனம்மயாதத்தம், க்ருஹாணவரதோபவ, ஸ்ரீ கணாதிபாயநம, நீராஞ்சனம் சமர்ப்பயாமி" என்று ஆலத்தி சுற்றி,

"தேவ தேவகணாத்யக்ஷ, சுராசுரவரார்ச்சிதா, அவிக்னம் குருமே தேவ, ஸர்வகார்யேஸ்துஸர்வதா, விநாயக நமஸ்தேஸ்து, ஸததம்மோதுகப்ரிய, அவிக்னம்குருமேதேவ, ஸர்வகார்யேஸ்துஸர்வதா" என்று க்ஷமாபணம் செய்து, முன்கூறிய சங்கற்பங்கூறி, சந்தன புட்பாட்சதைகளைக் கொண்டு வேதாத்தியயனம் செய்துகொண்டிருக்கும் ஆதிசைவப் பிராமணர்களைப் பூசித்து,

"கணேசபாதிக்ருண்ஹாதி, கணேசோவைததாதிச, கணேசஸ்தாரகோபாப்யாம் கணேசாயநமோநம" என்று வாயனதானம் செய்து,

சித்திரான்னம் முதலிய அன்னவகைகளும், பற்பல பலகாரவகைகளும், கனிவர்க்கங்களும், நீர்மோர் முதலிய பானவர்க்கங்களும், அடைக்காய்முதலியவும் அமைத்து, முன்சொன்ன மந்திரபூர்வகமாக நிவேதனம்செய்து நீர்விளவி தூபதீபங்கொடுத்து, வலம் வந்து திருவடிகளை வணங்கி, சோடசதானங்களை வழங்கி கணேசமூர்த்தியை இருதயகமலத்தில் இருத்திப் பின்னர் சொர்ணமூர்த்தியை அங்குள்ள புரோகிதருக்குத் தானமாகக்கொடுத்து விநாயக சதுர்த்தி விரதத்தைப் பூர்த்தி செய்தல்வேண்டும்.

வைய முய்யவே—நையு மன்பினிர்
சைவம் பரவவே—செய்து வாழ்மினே,



# கல்வி.

கல்வி என்னும் விஷயமாகப் பலர் பலபாஷைகளில் பலநூல்களில் விரித்து விளக்கியிருக்கின்றார்கள். இவ்விஷயமாக அடிக்கடி உபந்நியாசங்களும் செய்கிறார்கள். ஆதலால், இவ்விஷயமாகவே நாமும் இப்பத்திரிகையில் எடுத்து விளக்குவது அநாவசியமெனச் சிலர்க்குத் தோன்றக்கூடும். ஆனால், கல்வியானது சமய வளர்ச்சிக்கும் சமய வுணர்ச்சிக்கும் இன்றியமையாத கருவியாயிருத்தலானும், அது பிறசமயங்கட்கெல்லாம் பொதுவும், சைவசமயத்திற்குச் சிறப்புமாகிய கருவியாயிருத்தலானும், கடவுள் கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியாயிருத்தலானும், கல்வி சிவசொரூபமாயிருத்தலானும், சைவசமய உண்மைகளைப் பிரகாசப்படுத்தியுலவும் இப்பத்திரிகையின்கண், இவ்விஷயமாக எழுதுவது இன்றியமையாததாகும்.

உலகத்திலுள்ள நாத்திகர் முதலிய எல்லாச் சமயத்தாரும் கல்வியை அறிவை வளர்க்குங் கருவியாக மதித்தாலும், எல்லோருமே அதைக் கடவுளின் சொரூபமாகவும் எண்ணுகிறதில்லை. சைவசமயிகளாகிய நாம் அதை அறிவை வளர்க்குங் கருவியாகமாத்திரமன்றி சிவசொரூபமாகவும் மதிக்கின்றோம். நம்முடைய ஒப்பற்ற வேதமும் சர்வவித்தையும் சிவசொரூபம் என்னும் பொருள் தோன்ற "ஈசாநஸ் ஸர்வ வித்தியாநாம்" என்று முழக்குகின்றது. சைவாகமமும் "சர்வாநுக்கிராகிகையாயும், சர்வ சத்தார்த்த ரூபிணியாயு மிருக்கின்ற சிவசத்திக்கு வேறாகயாதொரு சத்தார்த்தப்பிரபஞ்சமுமில்லை. ஆதலால் அவ்வக்ஷரங்களியாவும் சர்வசித்திகளுக்கும் ஆலயமாயிருக்கும்" என்னும் பொருள்தோன்ற

ஸர்வாநுக்ராஹிகாஜ்ஞேயா ஸர்வசப்தார்த்த ரூபிணீ।
தைர்விநாதுபவேச்சப்தோ நார்த்தோநாபிவிதேர்கதிঃ
தேநதேஸர்வஸித்திநாமாலயঃ பரிகீர்த்திதாঃ.

என்று கூறுகின்றது.

கல்வி கடவுளின் சொரூபமாயிருப்பது பற்றியே, கற்றவர்களைக் கடவுளாக வழிபடுவதும், மற்றவர்கள் மறையவர்களை வழிபடுவதுமாகிய வழக்கம் நம்மவர்களுள் தொன்று தொட்டுண்டாயிருக்கிறது.

கல்வியினால் மனிதர்களுக்குண்டாகும் பலன்களை நோக்குவார்க்கு கல்வி சிவசொரூபமென்பது நன்கு விளங்கும். ஆதலால், சிவபெருமானைப் போலவே கல்வி உபகரித்து வருதலை ஈண்டு விளக்குவாம். ஆன்மாக்கள் அறிவுடைப் பொருள்களாயினும், ஆணவமலத்தாற் பிணிப்

புண்டு, அநுகாரணமாக அறிவுகுன்றி, துன்பக்கடலில் வீழ்ந்துகிடத்தலால், சிவபெருமான் அவைகளுக்குத் தநுகரணாதிகளைக் கொடுத்து அறிவைவிளக்கித் தமது திருவடி யின்பத்தைத் தந்தருளுகின்றார். அவ்வாறே கல்வியும் மனிதர்களின் அஞ்ஞானத்தைப் போக்கி அறிவைப் பெருக்கி இன்பம் பயக்கின்றது. சிவபெருமான் எல்லையற்ற இன்பக் கடலாயிருப்பதுபோல் கல்வியும் கரையற்ற இன்பக்கடலா யிருப்பது. சிவபெருமான் தம்மையடைந்தார்க்குப் புதிது புதிதாகப் போகங்கொடுப்பதுபோல் கல்வியும் கற்குந்தோறும் புதிது புதிதாகவும் தெவிட்டாத தெள்ளமிர்தமாகவுமிருப்பது. சிவபெருமான் உயிர்த்துணையாயிருந்து போக மோட்சங்களைக் கொடுப்பதுபோல் கல்வியும் உயிர்த்துணையாயிருந்து போகமோட்சங்களை யளிக்கவல்லது.

## நீதிநெறிவிளக்கம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

சிவபெருமான் உயிர்களுக்கு நால்வகையோனி யெழுவகைத் தோற்றத்தின்கண்ணும் உடனின்று உபகரிப்பதுபோல், ஒருபிறப்பிற் கற்ற கல்வியும் எழுவகைப் பிறவியிலும் உயிர்க்குதவிசெய்யவல்லது.

## திருக்குறள்.

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

சிவபெருமான் உயிர்களின் பக்குவங்கட்கீடாக உபகரிப்பதுபோல் கல்வியும் மனிதர்களின் பக்குவங்களுக்கீடாகப் பயனளிப்பது.

அறிவினுஞ் சிறந்த பொருள் வேறொன்றுமில்லை. அறிவே ஆன்மசொரூபமாம். அறிவே சிவ சொரூபமாம். அறிவே முத்தியின்பமுமாம். உயிர்களின் அறிவை விளக்குவதே சிவபரம்பொருளின் பஞ்சகிருத்தியமுமாம். சிவபெருமான் விலங்குமுதலிய உயிர்களுக்கு மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய கருவிகளைக்கொடுத்து, சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்னும் ஐந்தறிவை விளக்குகின்றார். மனிதர்களுக்கு அவ்வைந்தினோடு சித்தத்தாலறியும் அறிவைக்கொடுத்தும் கல்வியாகிய கருவியைக்கொடுத்தும் அறிவை மேலுமேலும் விளக்குகின்றார். சத்தமுதலியவற்றை விளக்குவதற்கு எப்படி மெய் முதலியன அவசியமோ, அப்படியே அறிவை விளக்குவதற்குக் கல்வி அவசியமாம்.



கண்ணில்லாதவன் குருடன் எனவும் காதில்லாதவன் செவிடன் எனவும் சொல்லப்படுவதுபோல் கல்வியில்லாதவன், அறிவிலி என்று சொல்லப்படுகிறான். அறிவின் தாரதம்மியங்களை நோக்கி மனிதர்கள் விலங்குகளைக்காட்டிலும் சிறந்தவர்களாக எண்ணப்படுதலினால், கல்வியறிவில்லாதவர்கள் விலங்குகளுக்குச் சமமாக எண்ணப்படுகிறார்கள்.

## திருக்குறள்.

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

அன்றியும், கண்ணானது புறப்பொருள்களைமாத்திரம் விளக்குவதும், கல்வி அகம் புறம் என்னும் இருபொருள்களையும் விளக்குவதுமாயிருத்தலினால், கல்வியில்லாதவன் கண்ணுடையவனாயிருந்தாலும், அதைக்கொண்டு அகப்பொருளை யறியமாட்டாதவனாயிருப்பதனாலும், அவன் காணும் புறப்பொருள்களையும் திரிவுபடக்கண்டு இடர்ப்படுத்திக்கொள்ளுதலாலும், அவனுடைய கண் கண்ணாக மதிக்கப்படாமல் புண்ணாக மதிக்கப்படும்.

## திருக்குறள்.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

கல்வியினாற் பெறற்பாலனவாகிய புருஷார்த்தங்கள் நான்கினுள் வீடு ஒன்றே என்றும் அழியாத வரம்பி லின்பந்தருவதாகிய பரமபுருஷார்த்தமாகையால், பெரியோர்கள் கல்வியைக்கொண்டு, தம் அறிவை வளர்த்து, சிவஞானச் செல்வர்களாய் வாழ்வர். சிறியோர் பொருளையே பெரிதாகமதித்து ஞானநூல்களைக் கற்காமல் உலக நூல்களையே கற்றுத் தம் வாணாளை வீணாளாக்குவர். முத்தி சாதனமாகிய ஞானநூல்களைக் கல்லாமல் உலகநூல்களையே கற்பவர்கள், இம்மானிடச்சரீரத்தாற் பெறற்பாலதாகிய முத்தியின்பத்தை யிழந்தவர்களாகையால், இவர்கள் கற்றகல்வி பயனற்ற கல்வியேயாய் முடியும்.

## திருக்குறள்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்.

சைவசமயிகளுள் பலர் சமயநூல்களைக் கற்காமலே சிவாலயவழிபாடு மாத்திரம் செய்கிறார்கள். இவர்கள் கற்றுப் பிறர்க்குரைத்தும் அவ்வொழுக்கமில்லாதவர்களைக் காட்டிலும் மிக மேலானவர்களேயா

யினும், குழந்தைகையிற் கிடைத்த மாணிக்கம்போல் இவர்கள்செய்யும் சிவவழிபாடும் இவர்களுக்கு அதிக பலன் தரமாட்டாது. "கல்லா நெஞ்சில் நில்லானீசன்" எனவும், கடவுள், "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி" எனவும், தமிழ்மறைமுறையிடுவதனால், கல்வியறிவில்லாதவர்கள் அவருடைய எண்ணுதற் கெட்டாவெழிலார் மகிமைகளை எங்ஙனம் அறிந்து இன்புறுவார்கள்? சிவாலயங்களின் அமைப்பும், அவற்றிற் பிரதிட்டிக்கப்படும் மூர்த்தங்களும் பற்பல அரிய தத்துவார்த்தங்களையும் புராண சரித்திரங்களையும் தம்முள் விளக்கிக்கொண்டிருக்கின்றன. ஆகமங்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் புராணங்களையும் நன்குணர்ந்தவர்களே அவற்றின் உண்மைகளை யுள்ளவாறுணர்ந்து வழிபடுதற்குரியாராவர். அவர்களுக்கே சிவாலய வழிபாடு அதிக இன்பந்தரும். அவர்கள் அம்மூர்த்தங்களை வணங்கும்போது தாங்கள் கற்ற நூல்களிற் கண்ட ஞானப் பொருள்களை இம்மையிலேயே அநுபவிக்கப் பெற்றவர்களெனச் சிவபரம்பொருளின் அருள் விளையாடல்கள் தங்கள் புலன்களுக்கும் விஷயமாய், என்புநைந்துருகி, அன்பெனுமாறு கரையதுபுரள' பரவசமாவர். சாத்திர உணர்ச்சி யில்லாதவர்கள், பூர்வபுண்ணியமேலீட்டினால் வெறும் அன்பு காரணமாக வழிபடுவார் நீங்க, மற்றையோரெல்லாம் அவ்வாறு அன்புநிகழப்பெறார். இவர்கள் சிவமூர்த்தங்களுக்குத் தங்கள் மனம்போனபடியெல்லாம் பொருளுரைத்து, சிவாலயவழிபாட்டை விபரீதப்படுத்தி விடுவார்கள். இதற்குச் சில உதாரணங் காட்டுவோம். சிதம்பரத்தையடைந்து நடராஜப்பெருமானை வணங்குவோர் பலர் "சாமி அம்மனுக்கு ஆட்டம் ஆடிக்காட்டுகிறார்" என்று சொல்லி அம்மட்டிற் சந்தோஷித்து வணங்குகிறார்கள். இதைக்கேட்கும் கிறிஸ்தவர்கள் முதலிய புறச்சமயிகளும், சமயக்குருடர்களாகிய ஆங்கிலம்கற்ற நாகரிகச் சைவர்களும், இதை மெய்யென நம்பி, "இதென்ன அறிவீனம். சாமிக்கு ஒருமனைவி இருக்கிறாளாம். அவளுக்கு அவர் கூத்தாடிக் காட்டுகிறாராம். இவையெல்லாம் பார்ப்பார் பணம் பறிக்கச்செய்யும் சூதுகளாம். இதையறியாமல் அளவற்ற மூடஜனங்கள் பணச்செலவு செய்துகொண்டு வேடிக்கை பார்க்கப் போகிறார்கள்" என்று பரிகாசஞ்செய்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

OFFICE OF THE REGISTRAR ... 10 MAY 1917 ... MADRAS

மலர் 2.] || நளஹு புரட்டாசிமீ-1916ஹு செப்டம்பர்மீ || [இதழ் 9

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி.

---

## சிவஞானபோதம்.

(120-வது பக்கத்தொடர்ச்சி.)

இனி முதற்சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணத்தை விளக்குவாம்.

### முதற்சூத்திரம்—இரண்டாம் அதிகரணம்.

"தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்"

(இ-ள்.) பிரபஞ்சம் ஒருவனால் தோற்றப்பட்டதாய உள்பொருளே யாம். அது தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும் சகசமலம் நீங்காமையால் அது நீங்கும்பொருட்டு மீளத் தோன்றுவதாம் (எ-று.)

இவ்வதிகரணத்தில் தன்னாற் கூறப்படும் பொருள்முதலிய ஐந்தும் வருமாறு:—

க-வது—தன்னாற்கூறப்படும்பொருள்—சகம் அரனாலேயுடையது.

உ-வது—ஐயப்பாடு—சகம் சார்பில் தோன்றுவதோ? அன்றி அரனால் தோற்றப்பட்டதோ?

௩-வது—பிறர் கூறும் பக்கம்—பிரபஞ்சம் இல்பொருளாய்ச் சார்பிலே தானேதோன்றியழியும். ஆதலால் அதைத் தோற்றியழிப்பவன் ஒருவன் வேண்டாம். (இது புத்தர் கொள்கை.)

பிரபஞ்சம் உள்பொருளாய் முதற்காரணத்தினின்றும் தானே தோன்றியழியும். ஆதலால் அதற்கு நிமித்தகாரணமாகிய கர்த்தா ஒருவன் வேண்டாம். (இது சாங்கியர் மதம்.)

பிரபஞ்சத்தைப் படைக்கும் பிரமன், அதைக்காக்கும் விஷ்ணு, ஆகிய இவ்விருவருள் ஒருவரே அதற்குக் கர்த்தாவாதல் அமையும். அழித்தற்றொழிலைச் செய்யும் அரன் கர்த்தாவன்று. (இது இரணிய கருப்பன், பாஞ்சராத்திரி என்பார் பட்சம்.)

௪-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு.

பிரபஞ்சம் முயற்கொம்புபோல் இல்பொருளாயின் அதற்கு முக்காலத்தும் உற்பத்தி யில்லாதிருத்தல்வேண்டும். பிரபஞ்சத்திற்கு உற்பத்திமுதலியன காணப்படுதலால் அது இல்பொருளன்று. உள்பொருளே. (இது புத்தரை மறுத்தது.)

உள் பொருளைச் செய்பவரின்றிச் செய்தொழில் மாத்திரம் இராதாகையால், உள்ளதாகிய பிரபஞ்சம் தோற்றுவிப்போனாகிய கர்த்தாவாலன்றி உண்டாகாது. (இது சாங்கியரை மறுத்தது.)

எது எதனில் ஒடுங்குமோ அது அதனின் உற்பத்தியாம் என்னும் ஏதுவினால், சங்கார கர்த்தாவாகிய அரனிடத்தில் ஒடுங்கிய பிரபஞ்சம் அரனிடத்திலிருந்தே மீளத்தோன்றும். (இது இரணியகருப்பனையும் பாஞ்சராத்திரியையும் மறுத்தது.)

௫-வது—இயைபு.—

## உதாரண வெண்பா.

இலயித்த தன்னிலிலை யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்—இலயித்த
தத்திதியி லென்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு. (௨)

(அன்வயம்) இலயித்தது இலயித்ததன்னில் மலத்தால் ஆம். இலயித்தவாறு உளதா வேண்டும். இலயித்தது அத்திதியில் என்னின், அவையழியாது. அத்திதியும் ஆதியுமாம் அங்கு அழிவது.



(இ-ள்.) இலயித்தது=ஒடுங்கியது—இலயித்ததன்னில்=ஒடுங்கிய பொருளினின்றும்—மலத்தால்=மலம் காரணமாக—ஆம்=மீள உண்டாம். (அது) இலயித்தவாறு=ஒடுங்கினபடியே—உளதாவேண்டும்=மீள உண்டாகவேண்டும். இலயித்தது அத்திதியில் என்னில்=ஒடுங்கினது திதிகருத்தாவாகிய விண்டுவிடம் என்பையேல்—அவை யழியாது=சர்வபிரபஞ்சமும் திதி கருத்தாவிடம் ஒடுங்காது. அத்திதியும்=அந்த திதிகருத்தாவாகிய விஷ்ணுவும்—ஆதியும்=சிருட்டி கருத்தாவாகிய பிரமனும்—அங்கு=யாவும் ஒடுங்குமிடமாகிய அரனிடத்தில்—அழிவதாம்=ஒடுங்கிவிடுவார்கள். (எ-று.)

(விருத்தியுரை.) இலயித்தது=முன்னே ஒடுங்கிய உலகம் (மீளத் தோன்றுங்கால்)—இலயித்ததன்னில் ஆம்=ஒடுங்கிய விடத்தினின்றும் தோன்றுவதாம். (ஒடுங்கிய உலகம் என் மீளத் தோன்றுமென்னில்)—மலத்தால்=உலகம் மலத்தோடுங் கூடியிருத்தலால், கருமமலம் பரிபாகமாகும்பொருட்டு ஒடுங்கி, ஆணவமலம் பரிபாகமாகும்பொருட்டு மீளவுந்தோன்றும். (ஆனால், முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக, வேறு பிரபஞ்சம் தோன்றும் என்னாமல், முன் ஒடுங்கின பிரபஞ்சமே மீளத் தோன்றும் என்பது எங்ஙனம் எனில்)—இலயித்தவாறு உளதாவேண்டும்=எது எவ்வாறு நின்று ஒடுங்கிற்றோ, அது அவ்வொடுங்கியவாறே மீளத்தோன்றியுளதாதல்வேண்டும். இலயித்தது அத்திதியில் என்னின்=உலகம் ஒடுங்கியது அதற்கு முதற்காரணமாகிய மூலப்பிரகிருதி வடிவாகிய வாசுதேவன் (என்னும்) திதி கர்த்தாவிடத்தில் என்னையாயின்,—அவை அழியாது=நீ அவ்வாறு கொள்ளினும் மாயாகாரியத் தொகுதி முழுமையும் திதி கர்த்தாவிடம் ஒடுங்காது. மூலப்பகுதிக்கு மேல் வாசுதேவனுக்கு வியாபகமில்லாமையால், அதற்குக் கீழுள்ள ஏகதேசத் தனவாகிய நிவர்த்தி பிரதிஷ்டாகலைகளைச் சார்ந்த தத்துவ புவனங்கள் மாத்திரம் அம்மூலப் பிரகிருதியில் ஒடுங்குமேயன்றி அதற்கு மேற்பட்ட வித்தியாகலையைச்சார்ந்த அசுத்தமாயாதத்துவ புவனங்களும், அதற்குமேற்பட்ட சாந்தி சாந்தியாதிதகலைகளைச் சார்ந்த சுத்தமாயாதத்துவ புவனங்களும் ஒடுங்காவாம். அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது=(ஆனால் மாயாகாரியத்தொகுதி முழுவதும் எங்கே ஒடுங்கும் என்னில்) அது திதி கருத்தாவாகிய நாராயணனோடும், சிருட்டி கர்த்தாவாகிய பிரமனோடும் தான் தோன்றுதற்குக் காரணமாயுள்ள அந்த மகாசங்காரகர்த்தாவிடத்தே ஒடுங்கும். (எ-று)

பல கிராமங்கள் ஒரு ஜில்லாவிலும், பலஜில்லாக்கள் ஒரு இராஜதானியிலும், பல இராஜதானிகள் ஒரு தேசத்திலும் பல தேசங்கள் ஒரு கண்டத்திலும், பல கண்டங்கள் ஒரு உலகத்திலும் அடங்கி நிற்றல் போல் தத்துவங்களும் ஒன்றினொன்று அடங்கியிருக்கும். தத்துவகர்த்தாக்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கு மேற்பட்ட, தத்துவக் கர்த்தாவினிடம் ஒடுங்கிவிடுவர். பிரமாவுக்குமேல் விஷ்ணு; அவருக்குமேல் உருத்திரர்; அவருக்குமேல் மகேசுரர்; அவருக்குமேல் சதாசிவர்; அவருக்குமேல் விந்து; அதற்குமேல் நாதம்; அதற்குமேல் சத்தி; அதற்குமேல் சிவம். தத்துவாதீதராகிய சிவபெருமானே பிரமா விஷ்ணு உருத்திரர் என்னும் மூவர்க்கும் மேலான முதல்வர் என்று கைவலியம் தைத்திரீய ஆரணியகமுதலிய சுருதிகள் முழங்குகின்றன. இதனைத் திருவாசகம் "தேவர்கோவறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை, மூவர்கோனாய் நின்றமுதல்வன்" என்றருளிச்செய்தது. துரீயமூர்த்தியாகிய சிவபெருமான் கொள்ளும் நவவடிவங்களாகிய சிவம், சத்தி, நாதம் விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் என்பவற்றுள், மகேசுரன்வரையில் அவருக்குச் சுதந்திரவடிவம். உருத்திரன், மால், அயன் ஆகிய இம்மூவரும் உயிர்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இம்மூவருள் மேற்பட்ட உருத்திரர் குணதத்துவத்திலிருந்து பிரகிருதி புவனாந்தம் சங்கரிப்பவர். இவரும் மகேசுர தத்துவத்தில் ஒடுங்கிவிடவேண்டியவர். இதனை யுணராது, சர்வசங்கார மூர்த்தியாகிய பரமசிவனை மூவருள் ஒருவராகிய உருத்திர மூர்த்தியாக எண்ணி, இடர்ப்படுவாரை நோக்கியே திருவாதவூரடிகள் "நம்மவரவரே—மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டு மண்மேல்தேவரென்றே யிறுமாந்தென்ன பாவந்திரிதவரே" என்று இரங்கிக் கூறியருளினர்.

## உதாரண வெண்பா.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்றா ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து.
(௯)

(இ - ள்.) மண்குளிர்ந்து=நிலம் குளிர்ந்தபோது—வித்து உண்டு ஆ=(அதில்) வித்து உளதாயிருக்க—மூலம் முளைத்தவா=அவ்வித்திலிருந்து முளைதோன்றியவாறுபோல்=தாரகமாம் அத்தன்றாள் நிற்றல்=(மாயையானது) தனக்காதாரமாய்நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியினிடத்தே உள்ளதாய் நிற்றலால்—அவர்வினையால் வித்தகமாம்=(அச்சத்தி சங்கற்பித்தவழி) அவரவர் வினைக்கீடாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமல் பயக்கும் சதுரப்பாடுடையதாம். வேட்டுவன் ஆம் அப்புழுபோல்=வேட்டைவாளி யெனப்படும் குளவியாதற்கு விரும்பும் புழுவிற்கு வேட்டைவாளியானது அப்புழுவிரும்பிய வடிவத்தைக் கொடுக்குமாறுபோல்—வேண்டு உருவைதான் கொடுத்து கூட்டானே=இறைவன் அவரவர்வேண்டும் உருவினைக்கொடுத்து அவ்வவ்வினைக்குத் தக்கபடி பயன்களைக்கூட்டுவன். (ஆதலால் அது கொண்டு அவன் சுதந்திரத்திற்கு இழுக்கென்னை?) (எ - று.)



"ஆதலால் அதுகொண்டு அவன் சுதந்திரத்திற் கிழுக்கென்னை" யென்பது குறிப்பெச்சம். போல் அசை. நிற்றலின் என்பது நிற்றல் என விகாரத்தாற் றொக்கது. ஏகாரம் எதிர்மறை.

சாங்கியர் "உலகம் தனக்கு முதற்காரணமாகிய மாயையில் ஒடுங்குமேயன்றி, நிமித்தகாரணமாகிய கர்த்தா ஒருவன் உண்டெனக்கொள்ளினும் அவனிடம் ஒடுங்காது. எது எங்கு ஒடுங்குமோ அது அங்கிருந்தே உண்டாம் என்னும் முறைப்படி, மாயையில் ஒடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும்; அதற்கு ஒருகர்த்தா வேண்டுவதின்று" என்பர். சாங்கியர் இவ்வாறு கூறுவது, மண்ணில் ஒடுங்கிய குடத்தை அம்மண்ணே மீளத்தோற்றுவிக்கும்; அதற்குக் குலாலன் ஒருவன்வேண்டாம் என்பதுபோலாம். குடம் உண்டானதற்கு மண் ஒருகாரணமும், தண்டசக்கரங்கள் ஒருகாரணமும், குலாலன் ஒருகாரணமுமாம். இம் மூன்றுகாரணங்களினால் குடம் உண்டாயிற்று. இவற்றுள், மண் முதற்காரணமும், தண்டசக்கரங்கள் துணைக்காரணமும், குலாலன் நிமித்தகாரணமுமாம். அதுபோலவே, உலகத்திற்கு மாயை முதற்காரணமும், சத்தி துணைக்காரணமும், சிவன் நிமித்தகாரணமுமாம். இம்மூன்று காரணங்களினால் உலகம் உண்டாயிற்று.

அன்றியும் முளைக்கு ஆதாரமாயிருப்பது வித்து. வித்துக்கு ஆதாரமாயிருப்பது நிலம். வித்தைப்போன்றது மாயை. முளையைப்போன்றது உலகம். நிலத்தைப்போன்றது சிவசத்தி. வித்திலிருந்தே முளை தோன்றினாலும், அவ்வித்துக்கு ஆதாரமாகிய நிலம் குளிர்ந்தாலன்றி முளைதோன்றாது. அதுபோல், மாயையிலிருந்து உலகம் உண்டாயினும், அம்மாயைக்கு ஆதாரமாகிய சிவசத்தி சங்கற்பித்தாலன்றி மாயை (சடமாகையால்) தானே உலகைத்தோற்றுவிக்காது. சத்தி சிவத்தினின்றும் வேறாகாமையாலும், சத்தி சிவத்தில் ஒடுக்கம் ஆதலாலும் சிவனே உலகத்திற்குக் கர்த்தாவென்று துணியப்படும்.

முதல்வன் உலகத்தை என் பலவேறு வகைப்படச் சங்கற்பித்துத் தோற்றுவித்தல்வேண்டும் என்னுஞ் சந்தேகம் நீங்குமாறு, வேட்டை வாளியுபமானம் கூறியவாறும்.

### உதாரண வெண்பா.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—னாக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி விற்றின்றாங் கட்டு. (௪)

(இ - ள்.) இறைவன்=முதல்வன்—காலத்தில் தாக்காது நின்று=(இறப்பு, நிகழ்வு, எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத் தொழிலுஞ் செய்தும் விகாரமின்றி நிற்பதாகிய) காலத்தைப்போல் விகாரப்படாது நின்று—ஆக்காதேகண்டு=பிரபஞ்சத்தைக் காணத்தாற் படையாது சங்கற்பமாத்திரத்தாலேயே படைத்து—நோக்காதே நோக்கி நொடித்து=அவ்வாறே காணத்தாற்காவது சங்கற்பமாத்திரத்தாற் காத்து, காணத்தால் அழிக்காது சங்கற்பமாத்திரத்தால் அழித்தலால்=இன்று ஆம்கட்டு=இவ்வமலனுக்குப் பந்தமின்றாதல்—உளத்தில்=உள்ளத்தைப்போலும்; (அதாவது கற்றநூற் சொல்லும் பொருளும் உள்ளத்தில் தோன்றுங்கால், உள்ளம் அவற்றில் தொடக்குண்ணாதவாறு போலும்). கனவுகண்ட=கனவில் கண்டவற்றை—கண்ட நனவு உணர்வில்=புறத்து விடயங்களை யறிந்துவந்த நனவுணர்வின்கண்ணே—உணரக்கண்டவனில்=விளங்கவறிந்தவன் அப்பொழுது அவற்றில் தொடக்குண்ணாதவாறுபோலும். இற்று=இத்தன்மைத்து. (எ - று.)

“உம்முடைய கர்த்தா குடத்தைக் குயவன் செய்வதுபோல் உலகத்தையுண்டாக்குவன் என்பையாயின், அவன் குயவனைப்போல் பந்தமடையானோ?” எனில், எமது கர்த்தா குயவனைப்போல் கைகால் முதலிய அவயவங்களைக்கொண்டும் மனமுதலிய காணங்களைக் கொண்டும் உலகைப் படைப்பானல்லன். அவன் சங்கற்பமாத்திரத்தாற் படைத்தலால், அவன் தான்செய்யும் படைப்பு முதலியவற்றில் தொடக்குறான். எதுபோலும் எனின், ஒருவன் கற்ற நூலிலே உள்ள சொல்லும் பொருளும் அவன் உள்ளத்தில் உதிக்குங்கால் அவன் உள்ளமானது அவற்றால் தொடக்குண்ணாத தன்மையினையும், சொப்பனத்தின்கண்ணே கண்டவைகளை சாக்கிரத்தின்கண்ணே அறிந்தவன் அக்கனவினிடத்தே தொடக்குண்ணாத தன்மையினையும் போலும் என்க.

அன்றே - அசை; அநாதியேயெனினும் அமையும். குயவன் முதல்வனுக்கு ஒருபுடையுவமையேயன்றி முற்றுவமையன்று.

# காரைக்காலம்மையார்புராணம்.

நம்பன் றிருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டு
மும்பர் மிசைத்தலை யானடந்தேற வுமைநகலுஞ்
செம்பொன் னுருவனென் னம்மை யெனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலினின் மேய குலதனமே.

சோழமண்டலத்திலே, காரைக்கால் என்னுந் திருப்பதியிலே, தனதத்தன் என்னும் வைசியகுலத்தலைவன் ஒருவன் இருந்தான். அவன் முன்செய்த தவத்தால் அவன்பால் திருமகளே வந்துதித்தாள் என்று சொல்லத்தகுந்த சர்வலட்சணங்களும் வாய்ந்த பெண் குழந்தை யொன்று பிறந்தது. அக்குழந்தை வைசிய குலத்தைமாத்திரமன்றி உலகனைத்தையும் மலமாசகற்றிப் புனிதமாக்கும் பெற்றித்தாய் விளங்கினமையால், அவன் அதற்குப் புனிதவதியார் என்று பேரிட்டு, அதை மிகவும் அருமையாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவந்தனன். அக்குழந்தை வளர வளர அதனுடன் சிவபத்தியும் சிவனடியார் பத்தியும் வளர்ந்துகொண்டேவந்தன. அதனால், அதுபேசிய மழலைமொழிகளெல்லாம் ஈசன் கழலைப்பரவுவனவாயிருந்தன. அது விளையாடிய வண்டல்களெல்லாம் சிவபெருமானுடைய தொண்டுகளாயிருந்தன. அக்குழவி செவிலித்தாய்மார்களின் மடிமீதிருந்து விளையாட்டயரும்போது சிவனடியார்களைக்காணில், உடனே தவழ்ந்தும் தளர்நடையிட்டும் விரைந்துசென்று, அவர்கள் திருவடிகளில் வீழ்ந்துவணங்கும். அவர்களுடைய திருவேடப்பொலிவைக் கண்ணாரக்கண்டு களிக்கும். அவர்கள் பேசுவதைக் காதாரக்கேட்டு மகிழும். புனிதவதியார் இவ்வாறு சிறுகுழந்தைப்பருவத்திலிருந்தே அன்பு செலுத்தினாரென்பது, அவர் பின்னே அருளிச்செய்த

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

என்னும் அற்புதத்திருவந்தாதியாலும் உணரப்படும். அவர் சிவபத்தியும் தாமுமாக வளர்ந்துவருநாளில், அவர்பால் சிவஞானமேலிடச் சீவ

போதம் சுருங்கியதையொப்ப, தனங்கள் பருத்து இடை சுருங்க மங்கைப்பருவம் சமீபித்தது. மங்கைப்பருவம் சமீபித்தலும், தனதத்தன் அவரை நாகபட்டணத்திலிருந்த நிதிபதியென்னும் ஓர் சீமானுடைய புத்திரனாகிய பரமதத்தன் என்பவனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து, தனக்கு வேறுபிள்ளையின்மையால் அவரைவிட்டுப்பிரியமனமின்றி, தன்வீட்டுக்கருகில் வேறொரு வீடுகட்டுவித்து, அளவிறந்த திரவியங்களையுங்கொடுத்து, பரமதத்தனையும் புனிதவதியாரையும் அதிலிருத்தினான். பரமதத்தன் பெறுதற்கரிய சிவஞானச் செல்வியாகிய அவ்வம்மையாரை மனைவியாகப்பெற்று இல்லறத்தை நடத்திக்கொண்டு "வைசியர்க்கழகு வளர்பொருளீட்டல்" என்னும் முதுரையின்படி செல்வத்தை மேலு மேலும் பெருக்கி, குபேரனையொத்து வாழ்ந்திருந்தான்.

## திருக்குறள்.

இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை.

புனிதவதியார் பிறந்தநாள்தொடங்கி இடையறாது திரண்ட செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்து சீதேவியொத்து வாழ்ந்திருந்தும், பொருட் செல்வத்தில் அவருக்குப்பற்றில்லாமலேயிருந்தது. அவர் பற்றிய பற்றெல்லாம் இறைவனது இணையடிப்பற்றாகவேயிருந்தது. அதனால் அவர் அச்செல்வத்தாற் சிறிதும் மயங்குதலின்றி, சிவனடியார்கள் யாவரேயாயினும் அவர்களைச் சிவபெருமானாகவே மதித்து வழிபடும் வழிபாட்டிற் சிறந்து, அவர்களுக்குப் பேரன்போடு திருவமுதுபடைப்பதும், வேண்டும் பொன்னும் ஆடையாபரணங்களும் கொடுப்பதுமாக இருந்தனர். இப்படியொழுகுநாளில் ஓர்நாள், பரமதத்தனை அவன் வர்த்தகசாலையிற் காணச்சென்ற சிலர் அவனிடம் இரண்டு மாங்கனிகளைக்கொடுத்தார்கள். அவைகளை யவன்வாங்கித் தனது வீட்டிற்கனுப்பினான். அவைகளைப் புனிதவதியார் பெற்றுத் தம்மிடம் வைத்திருந்தனர். அச்சமயத்தில், ஒரு சிவனடியார் மூப்பினாலும், மிகுந்த பசியாலும் தளர்ந்து வருந்தித் தள்ளாடித்தள்ளாடி அம்மையாருடைய வீட்டிற்குள் புகுந்தனர். அம்மையார் அவ்வடியவருடைய நிலைமையைப் பார்த்து, அவருக்குத் தாமதமின்றி விரைந்து திருவமுதுபடைக்க விரும்பி, உடனே அவர் திருவடிகளை விளக்கும்படி நீரைக்கொடுத்து, ஆசன



மிட்டெழுந்தருளச்செய்து, பரிகலந்திருத்திவைத்து, அன்னத்தைப் படைத்து, அச்சமயம் கறியமுது பாகம்பண்ணப்படாமையால், தமது கணவனனுப்பிய மாங்கனிகளில் ஒன்றைப்படைத்து, இடையிடையே இனிய உபசாரமொழிகளாகிய இன்னமுதத்தை அவர் செவியினூட்டிக் கொண்டே திருவமுது உண்பித்தனர். அவ்வடியவர் முகமலர்ச்சியோடும், இனிய உபசாரவார்த்தைகளோடும், கனிந்த அன்போடும் அம்மையார் உண்பித்த திருவமுதை தேவாமுதத்தினும் இனிதாக உண்டு, பசிதீர்ந்து, அவருடைய அன்பினுக்கு மகிழ்ந்து ஆசிகூறிச் சென்றனர்.

பரமதத்தன் வர்த்தகசாலையிலிருந்து காரியங்களைப்பார்த்துக்கொண்டு, நடுப்பகற்போதில் வீட்டுக்குவந்து நீராடிப் போசனஞ்செய்யத் தொடங்கினான். அப்போது அம்மையார் பரிகலந்திருத்தி அதிற் பலவகையான கறிவர்க்கங்களோடு எஞ்சிநின்ற மாங்கனியையும் இட்டு அவனுக்கு அமுதூட்டுவாராயினர். அவ்வணிகன் அம்மாங்கனியையுண்ணுதலும், அது அதிக மதுரமுடையதாயிருந்தமையால், அவ்வொருகனியோடு திருப்தியடையாமல் மற்றொருகனியையும் புசிக்க விரும்பி, அதையுங்கொண்டுவந்து கலத்திலிடும்படிகேட்டான். தமக்கென வொருசெயலுமில்லை, எல்லாம் சிவன்செயல் என்றுணர்ந்து, அருள்வழிநின்ற அம்மையார், அக்கனி தம்மிடத்திலில்லையென்பதையுணர்ந்திருந்தும், கணவன்சொல்லைக் கடக்கமாட்டாத கற்பினால் அவன் சொற்படியே மாங்கனிகொண்டுவருவார்போற்சென்று, கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியாகிய இறைவரை யிறைஞ்சுதலும், அவர் திருக்கரத்தில் அதிமதுரமாகிய மாங்கனியொன்று வந்தமர்ந்தது. பிரமாதி தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய இறைவர் திருவருள் தமக்கு எளிதில் கிடைத்தமைக்கு அம்மையார் மனமுருகி அப்பிரானாரின் திருவடிகளைத்தியானித்து, அக்கனியைக் கொண்டுசென்று கணவன் உண்கலத்தில் இட்டனர். அதை அவன் உண்ணுதலும், அது தேவாமிர்தத்தைக் காட்டிலும் அதிக மதுரமுள்ளதாயிருந்தமையால், சந்தேகங்கொண்டு, அம்மையாரைப்பார்த்து "பெண்ணே, இது நான் முன்கொடுத்தனுப்பிய பழமன்று. இது மூவுலகத்தினும் கிடைக்கமாட்டாது. இது உனக்கு எப்படி கிடைத்தது" என்று கேட்டான். அம்மையார் நிறைந்த சிவபத்தியும் சிவஞானமும் உடையவராயிருந்தும், தாம் அவ்வாறிருத்தலைப் பிறர் அறியாவண்ணம் ஒழுகி இல்லறம் புரிந்தனர். ஆதலால், அவர் பெருமை

கணவனுக்கும் தெரியாமலிருந்தது. அவருக்கு இருவினை யொப்புண்டாய்விட்டமையால், அவரை யாட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டும், உலகினர் அவர் தெரிவரும் பெருமையையுணர்ந்து அவரொழுக்கத்தைக் கடைப்பிடித்துய்யவேண்டியும், இறைவனார் அதிமதுரமாகிய மாங்கனியைத் தந்தருளியதுமன்றி கணவனுக்குச் சந்தேகத்தையும் உண்டாக்கியருளினர். அக்கனி எங்கிருந்து பெற்றதெனக் கணவன் கேட்டபோது, அது தமக்கு இறைவரால் அருளிச்செய்யப்பட்டதென்று சொல்ல அம்மையாருக்கு மனமெழவில்லை. கற்புடையபெண் தான் கணவனுடன் கூடியனுபவித்த இன்பத்தைப் பிறர்க்குச் சொல்வதுண்டோ? இல்லை. அதுபோல் பெரியோர் தாம்பெற்ற அருட்பேற்றைப்பிறர்க்கு வெளியிடார். இறைவன் அருளைப் பெறுதவர்களே பெற்றவர்களைப் போல் நடிப்பர்.

## நால்வர் நான்மணிமாலை

### அகவல்.

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலை தீர்ந்தேனே
யன்னமாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாதலாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மில ரெனுஞ்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே.

அம்மையார் திருவருள் கைவரப்பெற்ற சிவஞானச் செல்வியாயிருந்ததோடு, கற்பினுக்கோர்வைப்பாகவு மிருந்தமையால், கணவன் சொல்லைக்கடக்கவும் மனமெழவில்லை. ஆதலால் இன்னது செய்வதென்று விளங்காமல் அஞ்சிநின்று, பிறகு நடந்தபடி சொல்வதே கடனெனத் துணிந்து, அவ்வாறுசொல்ல நேர்ந்தமைக்குவருந்தி இறைவனாரிணையடிகளைத் தியானித்து, அவன்கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை ஒரு சிவனடியார்க்குண்பித்தமையையும், சிவனருளால் மற்றொரு மாங்கனியைப் பெற்றதையுஞ் சொல்லினர். அவன் அம்மையார் பெருமையையறியாதவனாகையால் அவர்சொன்னதை நம்பவில்லை. ஆதலால் அவன்



அம்மையாரைநோக்கி "பெண்ணே, நீ இப்போது சொன்னதை நான் நம்பமாட்டேன். உலகவாழ்க்கையைக் கான்ற சோறென வெறுத்து மனைவிமக்களைத் துறந்து, நாட்டைவிட்டுக் காட்டிற்சென்று, உடையைத் துறந்தும், உண்ணுதொழிந்தும், ஐம்புலன்களையடக்கி, பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவஞ்செய்யும் மகாமுனிவர்களுக்கும், பிரமாதி தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய சிவன் திருவருள், திரண்ட செல்வத்தையனுபவித்துக்கொண்டு, அறுசுவையோடு முப்போதும் உண்டு, ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு களப கஸ்தூரிகளைப் பூசி, என்னுடன் காமநூலின்படிகூடிக் கலவியின்பத்தை யனுபவித்துக்கொண்டு, நான் காலாலிடும் வேலைகளைத் தலையாற்செய்துகொண்டிருக்கும் உனக்கு எப்படி கிடைத்துவிடும். நீ சொல்வது வெகுவிந்தையாயிருக்கிறது. இக்கனி உனக்குச் சிவன் தந்ததாயின் அவ்வாறே இன்னுமொருகனி தருவி" என்றான். அம்மையார் தமது கணவன் அவ்வாறு கேட்டமையும் சிவன் செயலேயென்று சிந்தித்து, அவ்விடத்தினின்றும் நீங்கிப் போய், தமது வாக்குப் பொய்யாகாவண்ணம் மற்றுமோர் மாங்கனி தந்தருளல்வேண்டும் என்று அரவாபரணன் அடித்தாமரைகளைத் தியானித்தலும், முன்போலவே மற்றொரு கனிவந்து கரத்திற்சேர்ந்தது. அதனை அம்மையார் கொண்டுசென்று அவன்கையிற்கொடுக்க, அவன் அதிசயித்து வாங்கினான். அவன் வாங்கினவுடன், அன்பில்லாரகத்திற் றோன்றிய வருளைப்போல் அது மாயமாய் மறைந்துவிட்டது.

அதையறிந்த வணிகன் மிகவும் பயந்து, மனந்தடுமாறி, "இவர் மானிடப்பெண் அன்று, தெய்வப்பெண். இதிற் சந்தேகமில்லை. இதனை இதுவரையில் அறியாமல், என்மூடமதியால் இவரை என் மனைவி என்றெண்ணி நடந்தேன். இவரை நான் வணங்குதற்குரியவனாயிருக்க இவர் பாவியாகிய என்னை வணங்கி, அன்னையென நேசித்து அடிமையென ஊழியஞ் செய்கிறார். இதென்ன விபரீதம்! இன்னும் இவரை மனைவியாக மதித்து வாழ்வது தவறு. ஆதலால் இவரைவிட்டு நீங்குவதே உத்தமம்" என்று தனக்குள்ளே நிச்சயித்துக்கொண்டு, தன் எண்ணத்தை வெளியிடாமலும், அம்மையாருடன் முன்போல் மனைவியாக மதித்து உறவாடாமலும், அவரைவிட்டு நீங்குவதற்குரிய பிரயத்தனங்களைச் செய்துகொண்டிருந்து, கடலைக்கடந்து சென்று வர்த்தகஞ் செய்யவிரும்பியதாக உறவினருக்கறிவித்து, மாக்கலஞ்செய்து அதில் நிறையப்பலபண்டங்களையேற்றி, ஓர் நன்னாள் குறித்து அத்தினத்தில் கடற்கிறைவனாகிய வருணனைப் பூசித்து, கப்பலோட்டும் மாலுமிமுத

லானவர்களோடு தானும் ஏறிச்சென்று, இடையிடையே தான் உத்தே
சித்த ஊர்களோறும் இறங்கித்தங்கி வர்த்தகஞ்செய்து பெரும்பொருள்
சேகரித்துக்கொண்டுபோய், கடைசியாகப் பாண்டிநாட்டிலுள்ள ஓர் பட்
டினத்தின்கரையிலிறங்கி, அங்கு நீண்டகாலந்தங்கி, அளவற்ற திரவி
யம் சேகரித்து, அவ்வூரவரியாவரும் மதிக்கும்படி மேம்பாடடைந்து,
தான்புனிதவதியாரை மணம்புரிந்திருந்ததும் அவரைப்பிரிந்துவந்திருந்த
தும் ஒருவருக்கும் தெரியாதபடி மறைத்து; வேறொரு வைசியன் மகளை
மணஞ்செய்து இல்லறம் புரிந்துகொண்டிருந்தான். அவன் அவ்வாறு
புனிதவதியாரைத் தணந்து வேறொருபெண்ணை மணந்து வாழ்ந்திருந்தா
னாயினும், அவன் அவ்வெம்மம்மையாரை மறந்தானில்லை. அவரைத்
தனது பவத்தொடர்ச்சி நீக்கும் குலதெய்வமாக எண்ணி மானசிகமாக
வழிபட்டுக்கொண்டிருந்தான். அவ்வம்மையாருடைய திருவுருவமே
அவன்தியானிக்கும் மூர்த்தியாயிருந்தது. அவருடைய திருநாமமே
அவன் உச்சரிக்கும் திருமந்திரமாயிருந்தது. அதனால் அவன் தன்
இளையமனைவியிடம்பெற்ற பெண்குழந்தைக்குப் புனிதவதியார் என்று
பேரிட்டு அழைத்தனன். இவ்வாறு பரமதத்தன் பாண்டிநாட்டில் வசித்
துக்கொண்டிருக்க, கற்புக்கரசியாராகிய காரைக்காலம்மையார் தன் கண
வன் நிலைமை தெரியாமல் அவன் வருகையை எந்நேரமும் எதிர்பார்த்
துக்கொண்டே, இல்லறம் புரிந்துகொண்டிருந்தனர். இவர்களிருவரும்
இவ்வாறிருக்கையில், பரமதத்தன் பாண்டிவளநாட்டில் ஒருமாநகரில்
பெருஞ்சம்பத்துடையவனாய் வேறொருபெண்ணை விவாகஞ்செய்துகொ
ண்டு, ஒருபுத்திரியையும் பெற்று வாழ்ந்துகொண்டிருக்கின்றான் என்று
அம்மையார் உறவினர்கேள்வியுற்று, உடனே உறவினரையனுப்பியாராய்
தலும், அது உண்மையெனத்தெளிந்து, மனம்வருந்தி, இனி அம்மையா
ரைக்கொண்டுபோய் அவனிடத்தில் விடுவதே கடமையென்று நிச்சயி
த்து, அவரைப் பல்லக்கிலேற்றிக்கொண்டு சென்று, பாண்டி நாட்டை
யடைந்து, பரமதத்தனிருந்த நகரையடைந்து, தாங்கள் புனிதவதியா
ரைக்கொண்டுவந்ததை அவனுக்குத் தெரிவிக்கும்படி ஆட்களையனுப்பி
னார்கள். அவ்வாட்கள் அவனைக்கண்டு "ஐயா, உம்முடைய முதன்மனை
வியை அவருடைய சுற்றத்தார் இவ்விடத்தே அழைத்துக்கொண்டுவந்
திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அதைக்கேட்டுப் பரமதத்தன்
திடுக்கிட்டு, ஒன்றுந்தோன்றாமலிருந்து பிறகு தேறி, "அவர் என்னிடம்
வருமுன் நானேபோய் அவரை வணங்குதல்வேண்டும்" என்று தனக்
குள்ளே எண்ணிக்கொண்டு, தன் இளைய மனைவியையும் குழந்தையையும்
உடன்கொண்டு பயத்தோடும் பத்தியோடுஞ் சென்று, தான் அவ்வாறு



வருதலைப்பார்த்து மானிளம்பிணையென மருண்டுநின்ற அம்மையார் திரு
வடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி, "அடியேன் தேவரீர் திரு
வருளால் இவ்விடத்தில் சுகமாய் வாழ்கின்றேன். நான் இவ்விடம் வந்து
பெற்ற இக்குழந்தைக்கும் தேவரீருடைய திருப்பெயரையேயிட்டு
ளேன். என்றான். அதைக்கண்டு அம்மையார் அச்சமடைந்து, உடனே
ஒருபுறமாக ஒதுங்கி நின்றனர். அதைக்கண்ட உறவினர் பரமதத்த
னைக் கோபித்துப்பார்த்து, "ஐயா, நீர் புனிதவதியாரை வஞ்சித்து, இவ்
விடம்வந்து வேறொருபெண்ணை விவாகஞ்செய்துகொண்டது குற்றமே
யாயினும், அதற்காக இப்படியும் உன் மனைவிகாலில்வீழ்ந்து வணங்க
லாமா? உமது செய்கை ஒன்றும் நன்றாயில்லை. உமது நடவடிக்கையைக்
காண எங்களுக்கேவெட்கமுண்டாகிறது" என்றார்கள். பரமதத்தன்
அவர்களைநோக்கி, "ஐயன்மீர், இவர்மகிமையைநானறிவேன். இவர்
மானிடர் அன்று. நாமியாவரும் வழிபடவேண்டிய பரதெய்வமிவர்.
இதையுணர்ந்தே, இவரை மனைவியாகமதித்து வாழ்தல் குற்றம் என்று
நிச்சயித்து இவரை விட்டுநீங்கி இவ்விடம் வந்து வேறொரு பெண்ணை
விவாகஞ்செய்துகொண்டேன். இதில் உங்களுக்கு நம்பிக்கையில்லா
விட்டால்; இவ்விடம் வந்துபெற்ற இக்குழந்தைக்கும் இவர் திருநாமத்
தையே என் குலதெய்வப்பெயராக மதித்து இட்டிருப்பதைக்கொண்டு
நம்பிக்கையடையலாம்" என்று சொல்லி, அம்மையாரிடம் தான்கண்ட
அற்புதங்களையும் குண விசேடங்களையும் எடுத்துவிளக்கி, "இவரை நீங்
களும் வணங்கியுய்யுங்கள்" என்றான். அவன் கூறியதைக்கேட்டு அங்கி
ருந்த சுற்றத்தாரும் பிறரும் ஆச்சரியமடைந்தார்கள். சிலர் தாமும்
அம்மையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள்.

சீவன் முத்தர்கள் சிவஞானம் கைவரப்பெற்றும், ஆலயமும் வேட
மும் அரனெனத் தொழுவதுபோல், சிவஞானங் கைவரப்பெற்றும் கற்பு
நெறி கடவாமல் கணவனைத் தெய்வமாக வழிபட்டுக்கொண்டிருந்த வம்
மையார், பரமதத்தன் செயலைக்கண்டு, ஸ்ரீ கைலாயநாதரை ஏகாக்கிரசித்
தத்தோடு தியானித்து, "எம்பெருமானே, அடியவர் ஊனுயிர் வேறு
செய்யும் நொடித்தான்மலை யுத்தமனே, அடியேன் இதுவரையில் இவன்
பொருட்டு மாமிசப்பொதியாகிய இவ்வுடலைச் சுமந்து காலங்கழித்தேன்.
இவன் இப்போது என்னை விரும்பாமையால், இனி இப்பொதியைச் சும
க்கலாற்றேன். உலகத்தார் விரும்பும் அழகு பொருந்திய இச்சரீரம்
எனக்குவேண்டாம். கைலையின்கண் உம்மிடத்துநின்ற கணங்கள் போற்
றும் பேய்வடிவத்தை இவ்விடத்தே அடியேற்கருளிச்செய்தல் வேண்
டும்" என்றுபிரார்த்தித்தனர். உடனே வேண்டுவார் வேண்டுவதே

ஈயும் விமலனார் திருவருளால் அம்மையார் ஞானமயமாய் நின்று, தமது சரீரத்திலிருந்த மாமிச மனைத்தையும் உதறி என்பே உடம்பாக, திரிலோகமும் வணங்கும் பேய்வடிவடைந்தனர். அப்போது எங்கும் மலர் மழைபொழிந்தது, தேவதுந்துபியொலித்தது. தேவரும் முனிவரும் கொண்டாடினார்கள். பைசாசகணங்களெல்லாம் விராவேசத்தாற்கொக்கரித்தன. உறவினரியாவரும் பயந்து வணங்கி நீங்கிப்போனார்கள். இறைவர் தமக்குப்பேய்வடிவம் அருளிச்செய்தமைக்கு அம்மையார் ஆனந்தபரவசமாய், தாம்பெற்ற அருளும் ஞானமும் பொங்கித்ததும்பியதென்று சொல்லும்படி, சகல சித்தாந்த ஞானப்பொருள்களை விளக்கும் அதியற்புதமாகிய திருவந்தாதியொன்றை அப்பொழுதே யருளிச்செய்தனர். பிறகு திருவிரட்டைமணிமாலையொன்றை அந்தாதியாக வெடுத்துப்பாடியருளி, திருக்கைலாய மலைக்குச்செல்ல விரும்பி, தாம்பெற்ற திருவருள் தம்மை முன்னின்று நடத்திச்செல்ல வழிக்கொண்டு செல்வாராயினார். அவர்பேய்வடிவங்கொண்டு செல்லலும், அதைப் பார்த்தவர்யாவரும் அதிசயமும் அச்சமும் அடைந்து, அவரை யணுகாமலிருந்தார்கள். தாம்கொண்ட வேடத்தன்மையைப்பற்றிப் பலர் பலவாறுகக் கூறுதலும், அதை அம்மையார் அறிந்து, “சிவபிரான் என்னைத் தம் அடிமையென்றறிவரேல், அஃதே நான் பெறற்குரியபேறும். ஆதலால், அஞ்ஞானம் நிறைந்த உலகினர் என்னை அறியினுமென்? ‘அறியாதிருப்பினுமென்? என்னை இவர்கள் இகழினுமென்? புகழினுமென்? ஆதலால் நான் இவர்கள் முன் எவ்வுருக்கொண்டிருப்பினுமென்?” என்று கூறி, அதிவிரைவாகச் சென்று திருக்கைலாயமலையைச் சமீபித்தலும், காலால் நடத்தலைத் தவிர்ந்து, தலையால் நடந்துசென்றனர். திருக்கயிலாயமலையைத் தலையால் நடந்தேறுவதை இறைவர் பக்கலில் வீற்றிருந்த உமாதேவியார் கருணைபொழி விழியாற்கண்டு இறைவனாரைப்பார்த்து “எம்பெருமானே, இங்கே என்புருவந்தாங்கித் தலையால் நடந்தேறி இவ்வளவன்போடு வருகின்ற வடிவம் யாது? “என்று கேட்டனர். இறைவனார் அம்பிகையாரைநோக்கி “இங்கே வருகின்றவள் நம்மைப்பேணும் அம்மை. இவள் இப் பேய்வடிவத்தைத் தானே விரும்பி என்னைவேண்டிப் பெற்றுக்கொண்டனள்,” என்று அருளிச்செய்து, அம்மையார் தமதருகே சென்றதும் உலகெலாமுய்யுமாறு அவரை யருட்கண்ணால் நோக்கி “அம்மையே” என்றழைத்தனர். இறைவர் அம்மையே என்னும் செம்மைமொழியாலழைத்தலும் அம்மையார் “அப்பா”வென்று மெய்மை மொழியாலழைத்து, அவர் திருவடித்தாமரைகளில் வீழ்ந்து வணங்கினார். இறைவர் “நீ இங்குயாது விரும்பிவந்தனை” என்றருளிச் செய்ய அம்மையார்” என் இறைவரே, அறவாழியந்தணரே, அடியேனுக்குத்



தேவரீருடைய திருவடியைவிட்டு எக்காலத்தும் நீங்காத இன்பமயமாகிய பேரன்பு வேண்டும். நான் மறுபடியும் சனனம் எடாதிருத்தல்வேண்டும். மீண்டும் சனனமெடுத்தால் தேவரீரைத் தினைப்போதும் மறவாமல் அன்புசெய்தல்வேண்டும். தேவரீர் ஆனந்தநிருத்தஞ்செய்யும்போது அடியேன் தேவரீருடையதிருவடியின் கீழிருந்து மகிழ்ந்து பாடிக்கொண்டிருத்தல்வேண்டும்.” என்றனர்.

## பெரியபுராணம்.

இறவாத வின்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டுமீண்டும் பிறப்புண்டே லும்மையென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவாநீ யாடும்போதுன் னடியின்கீ ழிருக்கவென்றார்.

இறைவனார் “நீ தென்திசையை யடைந்து, பழையனூர் திருவாலங்காட்டில் நாம் ஆடியருளும் ஊர்த்ததாண்டவத்தைத் தரிசித்து ஆனந்தமடைந்து நம்மை யெப்பொழுதும் பாடிக்கொண்டிரு” என்றருளிச் செய்தனர்.

அம்மையார் கைலாசபதியை வணங்கி விடைபெற்று மீண்டு, தலையால் நடந்து திருவாலங்காட்டையடைந்து, அவ்விடத்தில் இறைவனார் அண்டமளவும் திருவடியைத் தூக்கி நிருத்தஞ்செய்கின்ற திருக்கோலத்தைக் கண்கள் ஆனந்தவருவிசொரிய தரிசித்து, “கொங்கைதிரங்கி” என்னும் முதலையுடைய மூத்ததிருப்பதிகம் பாடி தாண்டவேசுவரரைத் தரிசித்துக்கொண்டு “எட்டியிலவம்” என்னும் முதலையுடைய திருப்பதிகம்பாடி யருள்பெற்று, அன்றுமுதல் என்றும் அவ்விறைவனார் அருள் நடமாடும்போது அவர் திருவடியின் கீழிருந்து கீதம்பாடிக்கொண்டிருக்கும் பெறுதற்கரிய பெரும்பேறு பெற்றனர். இவருடைய பெருமையை எடுத்துப்பேச யாவராலாகும்!

## பெரியபுராணம்.

மடுத்தபுனல் வேணியினா ரம்மையென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்தினவ
ரெடுத்தருளுஞ் சேவடிக்கீ ழென்றுமிருக் கின்றாரை
யடுத்தபெருஞ் சீர்பரவ லாரளவா யினதம்மா.

இவர் காரைக்காலில் திருவவதாரஞ்செய்து, சிவபெருமானார் "இவள் நம்மைப்பேணும் அம்மை" என்று கூறி "அம்மையே" என்றழைக்கப்பெற்றதனால், காரைக்காலம்மையார் என்னுந் திருநாமமும், பேய்வடிவம்பெற்று இன்றும் அப்பேய்வடிவத்துடன் இருப்பதனால் பேயார் என்னுந் திருநாமமும் பெற்றனர். இவர் தாம் திருவாய்மலர்ந்தருளிய திருவந்தாதிமுதலியவற்றின் கடைக்காப்பில் தம்மைக் "காரைக்காற்பேய்" என்றருளிச்செய்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் "பேயார்க்கும் அடியேன்" என்றருளினர். இவர் செய்த தோத்திரங்களவ்வளவும் சைவசித்தாந்த ஞானப்பொருள்களை நன்கு விளக்குவனவாயிருக்கின்றன. இவர் சிவஞானச் செல்வராயிருந்தும் தன் கணவனைத் தெய்வமாக வழிபட்டுக் கற்புநெறியையும் கடைப்பிடித்தனர். இவர் அளவுபடாத சிவபத்தியும் சிவஞானமுமுடையவராயிருந்தும், தாம் அவ்வாறிருத்தலைப் பிறரறியாவண்ணம் ஒழுகினார். இவர் அவ்வாறொழுகினமையின் இவர் திருவருளைக்கொண்டு, மாங்கனிகளைப்பெற்று மணாளனுக்கீந்ததும், தமது மகிமையைக்கண்டபிறகு அவன் தம்மிடம் சில காலம் தொடர்வின்றி வாழ்ந்திருந்ததும் வேறொருவருக்கும் தெரியாமலிருந்தது. இவர் சரித்திரத்தால்,

> நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து
> நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்த்தும்
> நீடுபல காலங் கனித்தரா யிருந்து
> நின்மலஞா னத்தையிலார் நிகழ்ந்திடுவர் பிறப்பின்
> ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
> எறிவிழியின் படுகடைக்கே கிடந்துமிறை ஞானங்
> கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
> குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.

என்று சிவஞானச்சித்தியாரிற் கூறப்பட்டவாறு, சிவஞானங் கைவரப் பெறாதவர்கள், பூப்பிரதக்ஷிணஞ் செய்யினும், காட்டிலிருந்து கடுந்தவஞ் செய்யினும், மலைமுழைகளிலிருந்து அன்னபானாதிகளை யொழித்து அருந்தவஞ் செய்யினும், எண்ணிறந்த காலம் சீவித்திருப்பினும், அவற்றினால் வீடுபேறடையாமல் பிறந்துழல்வர். என்பதும், மனையறத்திலிருந்துகொண்டு, மாதர்போகத்தை யனுபவித்துக்கொண்டிருந்தாலும், சைவசித்தாந்த நெறிநின்று அருள் வழியொழுகி சிவஞானங் கைவரப் பெற்றவர்கள், வீடுபேற்றைப் பெற்று, இறைவனாது குஞ்சிதபாதத்தைக் கும்பிட்டுக்கொண்டேயிருக்கவும் பெறுவர் என்பதும் அறியக் கி..க்கின்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 1917
MADRAS

# சைவம்.

மலர் 2.] நள௵ ஐப்பசி௴-1916௵ அக்டோபர்௴ [இதழ் 10

## தேவாரம்.

> தூமென் மலர்க்கணை கோத்துத்தீ வேள்வித் தொழிற்படுத்த
> காமன் பொடிபடக் காய்ந்த கடனாகைக் காரோணநின்
> நாமம் பரவி நமச்சிவாய வென்னு மஞ்செழுத்துஞ்
> சாமன் றுரைக்கத் தருதிகண்டா யெங்கள் சங்கரனே.

---

## சிவஞானபோதம்.

(138-வது பக்கத்தொடர்ச்சி.)

இனி முதற்சூத்திரத்தின் மூன்றும் அதிகரணத்தை விளக்குவாம்.

### முதற்சூத்திரம்—மூன்றும் அதிகரணம்.

### "அந்தமாதி"

(இ-ள்.) சங்காரத்தொழில் செய்யுங்கடவுளே முதற்கடவுள் (எ-று.)

இவ்வதிகரணத்தில் தன்னாற் கூறப்படும் பொருள்முதலிய ஐந்தும் வருமாறு:—

௧-வது—தன்னாற்கூறப்படும்பொருள்—சங்காரகாரணனே முதற் கடவுளாகலான் மற்றிருவரும் முத்தொழிற்படுவர்.

௨-வது—ஐயப்பாடு—முதற்கடவுள் ஏகனோ? அனேகனோ?

௩-வது—பிறர் கூறும் பக்கம்—சங்காரகர்த்தா உலகிற்கு முதற் கடவுள் என்பது உண்மையாயினும் நேர்முதலாயின பலர்கூடிச் செய்வதனால், அவைகளைப் பார்க்கினும் அதிவிசித்திரமான உலகத்திற்கு

மற்றும் அத்தன்மையரான முதற்கடவுளர் பலர் உண்டெனக் கொள்ளல் வேண்டும். (இது அநேகேசுரவாதிகள் பக்ஷம்.)

ச-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு.

தேர்முதலாயின பலராற்செய்யப்படினும், அவரனைவரும் ஒருவன் ஏவல் வழிநின்றே செய்பவராகலானும், வேதத்தில் ஒவ்வோரிடங்களிற் காணப்படும் "நாராயணர் ஒருவரேயிருந்தார்," "பிரமாமுதற்கண்ணே இருந்தார்," "இந்திரனே உன்னில் மிக்கவனில்லை," "தேவர்களுக்கெல்லாம் முதன்மையாயுள்ளவன் அக்கினி," "இறந்ததும் நிகழ்வதுமாகிய உலகத்திற்கு ஆன்மாவாயுள்ளான் சூரியன்" என்பனவாதியாய வாக்கியங்களில் நாராயணன் முதலியோரைக் காரணமென்றது, ஒருவன் ஏவல் வழி நின்றுசெய்யும் குயவன் கம்மியன் முதலியோரைப்போல் அவர்க் காகாரணமாதல்பற்றியே யாகலான், அவையெல்லாம் (அரசனாற் கட்டிய கோயிலைச் சிற்பியாற்கட்டிய கோயில் என்பதுபோல்) ஆகுபெயராற் சங்காரகாரணனாகிய முதற்கடவுளையே யுணர்த்திநிற்குமாதலானும், செய்தும் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய் நிற்கும் முதற்கடவுள் சங்காரகர்த்தாவொருவனே.

நி-வது—இயைபு.

## உதாரண வெண்பா.

ஒன்றலா வொன்று ளுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறுத—லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு. (இ)

(இ-ள்.) அவை—அச் சேதனப் பிரபஞ்சத் தொகுதி—ஒன்று அலா ஒன்றுள்—(உருவும் அருவும் என்னும் இருவகைப் பிரபஞ்சத்துள்) ஒன்றல்லாத ஒப்பற்ற பரம்பொருளாலே—உளது ஆகி—சிருட்டிக்கப்பட்டு—நின்றவாறு—திதிப்பட்டவாறே—ஒன்று அலா ஒன்றில்—அந்தப் பரம்பொருளின்கண்ணே—ஈறுதல்—ஒடுங்குதலால்—ஒன்று அலா ஈறே முதல்—அச்சங்காரக்கடவுள் ஒருவனே உலகிற்கு முதற்கடவுள்.—(ஆனால், முத்தியடைந்த ஆன்மாக்கள் சுட்டுணர்வின்றிச் சிவத்தோடு சமமாயிருக்கும் என்று வேதாகமங்கள் கூறுவதனால் அவைகளும் முதற்கடவுளராகாவோ வெனில்) அதனின்—அப்பரம்பொருளைப்போலவே—ஈறிலா ஒன்று—அழிவின்றி நித்தமாயிருக்கும்சேதனப் பிரபஞ்சமானது (அதாவது உயிர்களானவை)—அங்கு—வீடுபேற்றின் கண்ணும் (அதாவது முத்தியினும்)—பலவாறே தொழும்பு ஆகும்—பல வழியாலும் பரம்பொருளுக்கு அடிமையாம் (முதற்கடவுளாகாது.) (எ-று.)



மாயையின் காரியமாகிய அசேதனப் பிரபஞ்சம் சடமாகையாலும், சேதனப் பிரபஞ்சமாகிய உயிர்கள் பாசத்தாற் பிணிப்புண்டு சுட்டியுணர் வதாயிருத்தலாலும், இவ்விருவகைப் பிரபஞ்சமாகிய உலகம் தானே தன் இச்சையின்படி தோன்றிநின் றழியமாட்டாது. ஆதலால், இவை களைத் தோற்றி நிறுத்தியழித்தற்கு இவைகளுக்கு வேறாய் ஒரு முதற் கடவுளுண்டென்பது பெறப்பட்டது. படவே, உலகம் விசித்திரமாய்க் காணப்படுதலினால், இவ்வாறு நடத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும், அளவிலாற்றலும், பேரருளும், சுதந்திரமும் முதலிய நிரதிசயகுணங்க ளுடையவன் என்பதும் பெறப்பட்டது. இத்தன்மையனாகிய கடவுள் ஒருவனே போதுமாயிருக்க பலர் உண்டெனக் கொள்வது குற்றமாம். "இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்வழி இலக்கியம் பலவா தல்செல்லாது." அதாவது, ஒருசிறிதும் வேற்றுமையின்றி எல்லா இலக் கணங்களினாலும் தம்முள் ஒத்திருக்கும் வெவ்வேறு பொருள்கள் ஒரு காலத்தும் இரா. ஆதலால் உயர்வொப்பில்லாத முற்றுணர்வு, அளவி லாற்றலுடைமைமுதலிய இறைமைக்குணங்களையுடைய கடவுளர் பலர் உண்டெனக்கொள்வது மடமையாகும். இக்கருத்தை விளக்கும் பொரு ட்டே முதற்கடவுளை "ஒன்றலா வொன்று" என்று கூறியருளினர்.

இருள்நீங்கியவிடத்தும் கண்ணானது சூரியனின்றிக் காணாதவாறு போல, மலம்நீங்கிய முத்திநிலையிலும் ஆன்மாவானது தன்னுடன் முதல் வன் வேறறக் கலந்து அறிவித்தாலன்றி யறியாது. ஆன்மாவானது எக்காலத்தும் ஸ்படிகம்போல் சார்ந்ததன் வண்ணமாயிருக்கும் இயல் பினதாதலால், அதுமுத்தியினும் சிவத்தைப்போல் தனித்துநிற்கும் இயல்புடையதன்று. அது முத்தியில் சிவத்தோடுகலந்து சிவாநந்தம் அநுபவித்தல் மாத்திரமன்றி, சிவத்தைப்போல் பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் உரிமையுடையதன்று. அன்றியும், ஆன்மா முத்திநிலையில் சிவத்தோடு சமவியாபகமடையப்பெறினும், விளக்கொளியுள் அடங் கிய கண்ணொளிபோல், சிவவியாபகத்திற்குள் வியாப்பியமாய் அடங்கி நிற்கும். இக்காரணங்களால் சேதனப்பிரபஞ்சம் பலவழியாலும் முத்தி யிலும் முதல்வனுக்கு அடிமையேயாம் என்றுணர்க. (இதனால் ஆன் மாக்கள் முத்தியில் பஞ்சகிருத்தியஞ்செய்யும் என்றுகூறும் சிவசமவாதி கள் மறுக்கப்பட்டவாறு காண்க.)

ஆன்மாக்கள் பெத்தநிலையில் மாத்திரமன்றி முத்திநிலையிலும் அடி மைகளென்பதை "நற்சங்க வெண்குழையோர் காதிற் கோமாற்கே நா மென்று மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே" "மீளாவடிமை யுமக்கே யாளாய்ப் பிறரைவேண்டாதே" என்னும் தமிழ் வேதப்பனுவல்களாலும் உணரலாகும்.

## முதற்சூத்திரத்தின்றோகைப்பொருள்.

இதனால் "உலகம் தோன்றிநின்று அழியுமென்பது காட்சிப் பிரமாணமுதலியவற்றால் அறியக்கூடாமையால் அது நித்தப்பொருளே" என்னும் மீமாஞ்சகர் உலோகாயதர்கள் கொள்கையையும், "உலகம் உள்பொருளாகாமல் இல்பொருளாய்த் தத்தஞ்சார்பிலே தோன்றி யழியும்" என்னும் புத்தர்கொள்கையையும், "உலகம் உள்பொருளாயின் அது வொன்றேயமையும்; இறைவன்வேண்டா" என்னும் சாங்கியர் கொள்கையையும், "காத்தற் றொழிலைச்செய்யும் விஷ்ணுவே முதற் கடவுளாதல்வேண்டும்" என்னும் பாஞ்சராத்திரர் கொள்கையையும், "அதிவிசித்திரமாகிய உலகம் ஒருவாற்செய்தல் கூடாமையால், அதைப் படைக்கப் பலகடவுளர்வேண்டும்" என்னும் அநேகேசுரவாதிகள்கொள்கையையும், "ஆன்மாக்கள் மலம் நீங்கிய முத்திநிலையில் பஞ்சகிருத்தியஞ் செய்வர்" என்னுஞ் சிவசமவாதிகள் கொள்கையையும் மறுத்துச் சித்தாந்தஞ்செய்து முதற்கடவுளின் உண்மை நிலைநாட்டப்பட்டது.

---

## சிவகீதை *

### பிண்டோற்பத்திகதனம்.

(கீழ்வருவன வடமொழிச்சுலோகங்களின் மொழிபெயர்ப்பு.)

### ஸ்ரீராமர் சிவபெருமானைநோக்கிக்கேட்டது.

பாஞ்சபௌதிகமாகிய ஸ்தூல தேஹத்திற்கு உற்பத்தி, ஸ்திதி, ஒடுக்கம், தேகத்தில் ஸ்வரூபம் இவை எப்படி? ஓ பகவானே நீர் சொல்லத்தக்கவராயுள்ளவர்.

* இந்நூல் சைவாபிமான மேலீட்டினால், பெருஞ்செலவிட்டும் பெருமுயற்சி செய்தும், சென்னப்பட்டணம், இருளப்பன் வீதி 36-வது எண்ணுள்ள வீட்டிலிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ, கா. ஐம்புலிங்கமுதலியாரவர்களால் வடமொழிவல்லுநரைக்கொண்டு, வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, வடமொழிச் சுலோகங்களோடும், வியாக்கியானங்களோடும், அச்சிடப்பட்டுள்ளது. இதில் சைவசமயிகளேயன்றிப் பிறரும் அத்தியாவசியமாயறிந்துகொள்ளவேண்டும் விஷயங்கள் பலவும் பொதிந்துகிடக்கின்றன. இதின் விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் மேற்படி முதலியாரிடம் பெற்றுக்கொள்க.



### ஸ்ரீபகவான்கூறியதாவது—

பாஞ்சபௌதிகமாகிய இத்தேஹமானது பஞ்சபூதங்களால் உண்டாகியது, இச்சரீரத்தில் உள்ள பூதங்களுள் பிருதிவியே முக்கியம். இதர பூதங்களுக்கு அமுக்கியத்துவமேயுள்ளது.

பாஞ்சபௌதிகமாகிய இப்பார்த்திவ தேஹமானது கருப்பையில் நின்றுண்டாவது, முட்டையில் நின்றுண்டாவது, புழுக்கத்தில் நின்றுண்டாவது, மேலே பேதித்துக்கொண்டு விதையில்நின்றுண்டாவது என்று இவ்விதம் நான்குவிதமாய்ச் சொல்லப்பட்டுள்ளது.

மனம் எண்ணுகிறபடி உண்டாவதாய் மற்றோர் சரீரம் உள்ளதென்று சொல்லப்பட்டது. அது தேவர்களுக்கே கருதப்பட்டது. அங்கு முக்கியமாயிருத்தலால் ஜராயுஜத்தையே முதலில் சொல்லுகின்றேன்.

சுக்லசோணிதங்களால் ஏற்பட்ட நிலைமையுடையதே ஜராயுஜம் எனப்படும். ருதுகாலத்தில் எப்போது ஸ்திரீகளின் கர்ப்பகோசத்தில் சுக்கிலம் பிரவேசிக்கின்றதோ,

ஸ்த்ரீயின் சோணிதத்தோடு கலந்ததாய்க்கொண்டு அச்சுக்லமே ஜராயுஜமாகின்றது. சோணிதம் விசேஷமாயிருந்தால் பெண்ணும், சுக்லம் விசேஷமாயிருந்தால் ஆணும் உண்டாகும்.

சுக்லசோணிதங்கள் சமமாயிருக்கின் ஆணும் பெண்ணுமற்றவனாய்த் தோன்றுகின்றான். ஸ்திரீ நான்காம்தினத்தில் ருது நீங்கிச் சுத்தையாவாள். பிறகு பதினாறுநாள்வரையில் ருதுகாலம் என்பது குறிக்கப்பட்டது.

ஆண்டு ஒற்றைப்படைதினத்தில் பெண்ணும், இரட்டைப்படைதினத்தில் ஆணும் தோன்றும். அழகுவாய்ந்த மங்கைக்குப் பதினாறுவது தினத்தில் கர்ப்பம் ஏற்படுமாயின் அந்தப்பிரஜை சக்கிரவர்த்தியாகவோ அல்லது அரசனாகவோ பிறக்கின்றான்.

ருதுநீங்கி ஸ்நாநம் செய்ததும் மங்கை எந்தப்புருஷனது முகத்தை விருப்புற்று நோக்குகின்றாளோ, அந்தப்புருஷனது உருப்போன்ற உருக்கொண்டதாய் கர்ப்பம் ஏற்படும். ஆதலால், அவள் தனதுகணவனது முகத்தையே பார்க்கவேண்டும்.

ஸ்த்ரீயின் தோலுருவமாகிய பையானது சிறிதாய் யாதொன்றுளதோ அது ஜராயு என்று சொல்லப்படுகின்றது. யாதொருகாரணத்தால் அதிலேயே சுக்லசோணிதங்களின் ஸம்பந்தம் ஏற்படுகின்றதோ,

அங்கு கர்ப்பம் உண்டாகின்றமையால் ஜராயுஜமென்று சொல்லப்பட்டது. அண்டஜங்கள் பறவை பாம்பு முதலியன. ஸ்வேதஜங்கள் கொசுகு முதலியன.

உத்பிஜ்ஜங்கள் மரம் செடி கொடிமுதலியன. மனதிற்றோன்றிய வண்ணம் எடுக்கும் உருவமுடையதேகம் தேவரிஷிகள். ஸ்திரீகளின் யோநிவாயில் சென்ற சுக்லமானது ஜன்மகர்மபலத்தால் சோணிதத்தோடுகூடிக் கலந்ததாகின்றது. அந்தத்ரவமானது முதலாவது மாசத்தில்,

நீர்க்குமிழிபோலாய் பின்னர் சற்று இறுகியதாய் பிறகு கருப்பை போன்ற வட்டமதாய் ஆகும். இரண்டாவது மாதத்தில் அந்தப் பை வடிவம் சற்றுக்கட்டிப்பட்டதாய்க் கொண்டு அந்த இறுகிய த்ரவமானது பிண்டமாகின்றது.

கை கால் தலைமுதலியன மூன்றாம்மாதத்தில் உண்டாகின்றன. நான்காம் மாதத்தில் ஜீவனுக்கு (அபிவ்யக்தி) தோற்றமேற்படுகின்றது.

அதற்குப்பிறகு அன்னையின் வயிற்றினில் கர்ப்பம் தானே சலிக்கின்றது. புத்திரனாயின் வலது பக்கத்திலும் புத்திரியாயின் இடதுபக்கத்திலும் இருக்கின்றது. நபும்ஸகனாயின் வயிற்றின் நடுப்பக்கத்தில் இருக்கின்றது.

ஆதலால் புத்திரனாயிருந்தால் கர்ப்பிணி வலப்பக்கம்கீழாய்ப் படுக்கின்றனள். அப்போது பிறந்த பிறகுண்டாகக்கூடிய மீசை பல்முதலியவை நீங்கலாகிய மற்ற அங்கப்பிரத்யங்கங்களும் ஏககாலத்தில் ஸூக்ஷ்மங்களாயுண்டாகும். அத்தன்மைகள் நாலாமாதத்தில் வியக்தமாய்த் தோன்றுகின்றன.

ஓ ராமா, புருஷர்களுக்கு நிச்சலமாயிருத்தல்முதலிய தன்மைகளும் ஸ்திரீகளுக்கு சலனமுறுதல் முதலிய தர்மங்களும் அலியினிடம் அவ்விருதன்மைகளும் கலந்தனவாயும் இருக்கின்றன.

கர்ப்பத்திலுள்ள பிரஜையினது ஹ்ருதயமானது அன்னையின் ஹ்ருதயத்தாலுண்டாவதாய்க் கொண்டு, விஷயங்களை விரும்புகின்றது. ஆதலால் கர்ப்பவிருத்தியின்பொருட்டு கர்ப்பிணியின் மனத்திருப்தியைச் செய்யவேண்டும்.

ஆதலால், கர்ப்பிணியாகிய இருதயமுள்ள அம்மங்கையை தௌஹ்ருதிநீ என்று சொல்லுகின்றனர். கர்ப்பிணிவிரும்பிய அன்னபானாதிகளைத் தராவிடில் கர்ப்பத்திற்கு அங்கஹீனத்துவமுதலியன ஏற்படும்.



அன்னைக்கு எவ்விஷயத்தில் விருப்பமுள்ளதோ அவ்விஷயம் புதல்வனாலும் விரும்பப்படுவதாம். ஐந்தாம் மாதத்தில் மனம் நன்றாயறியக்கூடியயோக்கியதை யுடையதாம். மாம்ஸரக்தம் இவைகளும் புஷ்டியடையும்.

ஆறாம்மாதத்தில் எலும்பு நகம் கேசரோமங்கள் தோன்றும். பலவர்ணங்களும் விருத்தியடையும். ஏழாம்மாதத்தில் அங்கங்கள் பரிபூர்த்தியாகும்.

அந்தக் கர்ப்பசிசுவானது கால்களுக்கிடையில்சென்ற கைகளால் காதோட்டைகளை மூடிக்கொண்டு கர்ப்பவாசத்தினால் மிக்க கிலேசமுற்றதாய்க் கொண்டு கர்ப்பவாஸ பயத்தினால் பீடிக்கப்பட்டதாய்க் கொண்டிருக்கின்றது.

அந்தச் சிசுவானது தோன்றிய நிஜஸ்வரூபத்தையுடையதாய் கர்ப்பதுக்கானுபவத்தோடு கூடியதாய்க் கொண்டு வைராக்கியமுடையதாய் அந்தோ கஷ்டமென்று தன்னைக்குறித்து மிக்கசோகமடைகின்றது.

மர்மங்களைச் சேதிப்பனவாகிய துன்பங்களையுடைய மிகவும் ஸகிக்கக்கூடாதனவாகிய எண்ணிறந்ததேஹங்களைப் பெற்று எவ்வளவோ துன்புற்றனம். வறுத்தமாவைப்போலுள்ள வறுக்கப்பட்ட மணல்களில் வறுக்கப்பட்டு மஹா துன்பத்தோடு தஹிக்கப்பெற்றனம்.

கர்ப்பகோசத்திலகப்பட்டுக் கொண்டவனாகிய என்னை ஜடராக்கினியால் கொதிக்கப்பெற்ற பித்தநீர்த்துளிகள் மிகவும் கடுமையாய்த் தஹிக்கின்றன.

விலாப்பக்கத்திலுள்ள ரம்பம்போன்ற எலும்புகளால் தொந்தரையடைந்தவனாகிய என்னை முள்ளிலவின் முள்ளுகளுக்கு நிகராயுள்ள வயிற்றுப்புழுக்களின் முகங்களும் ஹிம்ஸிக்கின்றன.

ஜடராக்கினியால் கொளுத்தப்பெற்றதும், கெட்டநாற்ற நிறைந்ததுமாகிய கர்ப்பத்தில் என்னால் எந்தத்துன்பம் அனுபவிக்கப்பட்டுளதோ அத்துன்பத்திலும் கும்பீபாகமெனும் நரகத்திலனுபவிக்கும் துன்பம் அற்பமேயாம்.

சீழ் ரத்தம் கபம் இவைகளைக் குடித்தல், வாந்தத்தைப் புசித்தல், மலத்தில் புழுப்போலாதல் ஆகிய இவைகளும் கர்ப்பவாஸம் செய்யும் என்னால் அனுபவிக்கப்பட்டுளது.

கர்ப்பகோசத்தையடைந்து என்னால் எத்தகைய துக்கம் அனுபவிக்கப்பட்டதோ அதனை ஸகல நரகங்களிலுமுள்ள பெருந்துக்கமும் மீறுகின்றதில்லை.

இவ்வாறு பூர்வம் அடையப்பட்ட ஜன்மங்களையும் துன்பங்களையும் நினைத்துக்கொண்டு மோக்ஷோபாயத்தைச் சிந்தித்துக்கொண்டு அப்பியாஸதத்பரனாய் இருக்கிறான்.

எட்டாமாதத்தில் தோலும் சலனமும் உண்டாகின்றது. இருதய கமலத்திலுண்டாகின்றதும், ஜிவதாரண ஏதுவும், வெண்ணிறமும், கொஞ்சம் மஞ்சள்கலந்த செந்நிறம் பெற்றதுமாகிய ஓஜஃ தேஜஃ எனும் தாது பரிணாமங்களும் ஏற்படுகின்றன.

கர்ப்பமானது சலிக்கின்றதாயினும் மீண்டும் அன்னையின் வயிற்றிலேயே இருக்கவேண்டியதவசியமாதலால் அவ்வாறு இருந்துகொண்டு விசேஷமாய்ச் சலிக்கின்றது. ஆதலால் எட்டாமாதத்தில் பிறந்தசிசு ஓஜஸ் என்பதாக பூர்வம் சொல்லப்பட்ட தாதுபரிணாமமில்லாததாய்க் கொண்டு ஜீவிக்கின்றதில்லை.

பீடையடைந்த தேஹமுடையவன்போல, அதன் அப்பியாஸவிசேஷத்தால் கொஞ்சகாலம் இருத்தல் ஏற்படுகின்றது. பிறகு ஒன்பதாவது முதலியமாதங்களில் பிரசவ சமயம் ஏற்படும்.

அன்னையின் ரக்தத்தை வஹிக்கின்றதாகிய நாடியைப்பற்றிக்கொண்டு, ஏற்பட்டுள்ள தொப்புளிலுள்ள நாடியானது கர்ப்பத்திற்கு அன்னையின் அன்னரசத்தைச் சேர்ப்பிக்கின்றதாயுள்ளது.

கர்ப்பசிசுவானது அந்தத்தொப்புள் நாடியால் அன்னையின் ஆகாரத்தினால் போஷிக்கப்பட்டதாய்க் கொண்டு ஜீவிக்கின்றது. எலும்பினால் சூழப்பட்டுள்ள கர்ப்பகோசத்தில் நெருக்குள்ளவனும் மேதஸ்ருதிரம் இவைகளால் பூசப்பெற்றவனுமாய் யோனிவழிவந்து கீழ்முகமுடையவனாய் மிகவும் துக்கத்தால் நொந்தவனுமாய் உரக்கக் கத்திக்கொண்டு வெளிப்படுகின்றான். இவ்விதம் கர்ப்பகோசத்திலிருந்து வெளிப்பட்டவனாய்க்கொண்டு மடிமீது வைக்கக்கூடியவனாய் விழுகின்றான்.

அப்போது யாதும்செய்ய இயலாதவனாய் மாம்ஸ பிண்டம் போன்றவனாய்த் தண்டத்தைக் கையிலுடையவர்களாகிய ஜனங்களால் நாய் பூனை முதலியவைகளால் கேடுவராதிருப்பதற்காகக் காக்கப்படுகின்றான். ராக்ஷஸனை தகப்பன்போலும் டாகினீதேவதையை தாய்போலும் எண்ணுகின்றான்.

(இன்னும் வரும்.)

# சைவசுராச்சியம்.

உலகத்தில் ஒருதேசத்தைப் பரிபாலிக்கற்கு எப்படி அரசாங்கம்
அவசியமோ, அப்படியே ஒரு சமயத்தைப் பரிபாலித்தற்கும் அரசாங்
கம் அவசியமாம். அரசனில்லாததேசம் அழிவதுபோல் அரசனில்லாத
சமயமும் அழியும். ஆதலால், ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் தேச
பரிபாலனத்தினிமித்தம் அரசாங்கம் உண்டாக்கிக் கொள்வதுபோல்,
ஒவ்வொருசமயத்தாரும் தங்கள் சமயபரிபாலனத்தினிமித்தம் அரசாங்
கம் உண்டாக்கிக்கொள்ளல்வேண்டும். சிலர் தேச வரசாட்சியில் சமய
வரசாட்சியும் அடங்கிநிற்றலால் தேசத்தை யரசுபுரியும் மன்னவனே
சமயத்தைப் பரிபாலித்தற்கும் உரியவன் என்று எண்ணுகிறார்கள். இப்
படி எண்ணுவது தவறு. அரசன் எச்சமயச் சார்புடையவனோ அச்ச
மயத்தை மாத்திரம் அவன் பரிபாலிப்பனேயன்றி, தன் தேசத்திலுள்ள
ஒவ்வொரு சமயத்தையும் பரிபாலிக்கமாட்டான். அன்றியும், அவனால்
செய்யப்படும் தேசபரிபாலனமும் சமயபரிபாலனமும் குடிகளின் உதவி
யின்றிச் செய்யப்படுதலில்லை. குடிகளின் உதவியைக்கொண்டே அர
சன் தேசத்தையும் சமயத்தையும் பரிபாலிப்பான். குடிகளின் உதவி
யின்றி அரசன்மாத்திரம் நடத்தும் இராச்சியபரிபாலனம ஒருபோதும்
சிறக்காது. ஆதலால் தேசபரிபாலனத்தைப்போலவே சமயபரிபாலன
மும் அரசனைமாத்திரம் பொறுத்ததாயிராமல் குடிகளையும் பொறுத்தரா
யிருக்கிறது. அரசனால் செய்யப்படும் பரிபாலனம் செம்மையாயிராவிடில்,
அவனைத்திருத்துவதும் குடிகளின் கடமையாயிருக்கிறது. முற்காலத்
தில் அரசர்கள் சுயாதீனம் பெற்றுத் தங்கள் இச்சையின்படி அரசுபுரி
யும் இராச்சியங்களை உலகில் அதிகரித்திருந்தன. இப்போது குடிகள்
தங்களுக்கு இராச்சிய பரிபாலனத்திலுள்ள சுதந்திரத்தையுணர்ந்தவர்க
ளாய், அரசனை அவன் இஷ்டப்படியெல்லாம் அரசுபுரிய விடாமல் தங்
கள் அபிப்பிராயப்படி அரசாளச் செய்கிறார்கள். இப்போது "மன்னவ
னெப்படி மன்னுயிரப்படி" என்று வழங்கிய பழமொழியானது "மன்னு
யிரெப்படி மன்னவனப்படி" என்று மாறி வழங்கக்கூடியதாயிருக்கிறது.
இப்போது பலவிடங்களிலும் உண்டாயிருக்கும் சுராச்சிய பரிபாலனங்
களே இதற்குச் சான்றாம்.

இத்தேசத்திலும் சிலகாலமாக சுயவரசாட்சியில் விருப்பம் அதிக
ரித்து வருகின்றது. ஆனால் சனங்கள் தங்களுக்குக் கிடைத்தற்கரிதாகிய
தேச சுராச்சியத்தை விரும்பித் தலையை யுடைத்துக்கொள்ளுகிறார்களே
யன்றி, மிகவும் எளிதாகிய சமய சுராச்சியம் வைத்து அரசுபுரிய முயல்வ
தில்லை. தேச சுராச்சியம் மிகவும் வியாபகமுடையது. சமய சுராச்சியம்

தேச சுராச்சியத்தில் வியாப்பியமாய் அடங்கிநிற்பது. குடிகள் சமயம், கைத்தொழில், வர்த்தகம், கல்விமுதலிய துறைகளில் அரசாங்கத்தை எதிர்பாராமல் தங்களுக்குத் தாங்களே எம்மட்டில் சுராச்சியம் உண்டாக்கி நடத்தலாமோ, அம்மட்டில் நடத்தி அபிவிருத்தியடையப்பெற்றால் அவ்வபிவிருத்தி தானே தேச சுராச்சியத்தைத் தந்துவிடும். இதற்கு ஐரோப்பியர்கள் பலதுறைகளிலும் வைத்து நடத்தும் அரசாட்சிகளே நிதர்சனமாம். கிறிஸ்து சமயபரிபாலனம் செய்யும் அரசாங்கங்கள் உலகெங்கும் இருந்தும் அவைகளை எதிர்பாராமலே போப் என்னும் தலைவரை வைத்துக்கொண்டு ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் உலகமெங்கும் சமயவரசாட்சிசெலுத்திவருவதும் இதற்குப் பெருஞ்சான்றாம்.

இவ்வாறு ஐரோப்பியர்கள் அரசாங்கத்தையும் எதிர்பாராமல் தாங்களே சமயவரசாட்சி செய்வதை நம்மவர்கள் அவர்களோடு நெடுங்காலமாகப் பழகிப்பார்த்துக்கொண்டிருந்தும் “நறுநெய்நிறை புழுக்கலுய்க்கினும் முறைபெறுமோ சுவையுணருமாறு” என்பதற்கிணங்க உணர்ச்சியின்றிச் சமயபரிபாலனத்தைக் கைவிட்டிருப்பது, அந்தோ எவ்வளவு பேதைமைத்து.!

பிரிட்டிஷ் அரசாட்சியின் கீழிருந்துகொண்டு நாம் நமது சமயபரிபாலனத்திற்கெனத் தனி அரசாங்கம் உண்டாக்கிக்கொள்வது இராஜநீதிக்கு விரோதமாயிருக்குமென்று நம்மவர்கள் சிலர் எண்ணுவார்கள். இப்படி எண்ணுவது முற்றிலும் தவறு. நமது காருணியமுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கீழ் குடிகள் தங்கள் சமயங்களைத் தாராளமாய்ப் பரிபாலனஞ்செய்யலாம். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இராஜதானியாயிருக்கும் லண்டன் மாநகரத்திலும் நாம் நமது சைவமதஸ்தாபனஞ் செய்யலாம். ஆதலால் நாம் நமது சமய சம்பந்தமான சுயவரசாட்சிபுரிவது ஒருபோதும் இராஜநீதிக்கு விரோதமாகாது. நாம் சைவ அரசாட்சி செய்வதற்குக் கத்திவேண்டாம். கட்டாரிவேண்டாம். துப்பாக்கிவேண்டாம். பீரங்கிவேண்டாம். வீரர்வேண்டாம். சூரர்வேண்டாம். அறிவுந் திருவுமிருந்தாற்போதும். சைவசமயத்தின் ஏற்றத்தையும் அதின் தற்காலநிலைமையையும், அதைப்பரிபாலிக்கும் முறையையும் அறியும் அறிவும், செல்வமும் உடையவர்கள் முற்பட்டுவருவரேல் இன்றைக்கே நமக்குச் சைவசுராச்சியம் உண்டாய்விடும். நம்மவர்களுள் பெரும்பாலும் அறிவுள்ளவரிடத்தில் திருவும் திருவுள்ளவரிடத்தில் அறிவுங் குறைந்திருப்பதனால் இதுவரையில் சைவ சுராச்சியம் உண்டாகவில்லை. சைவசமயிகளிடத்தில் உள்ள செல்வம் பெரும்பாலும்



நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

என்னுந் திருக்குறளின்படி வீணிலும் தீயவழிகளிலுமே செலவாகின்றன. சைவசுராச்சியத்தை நிலைநாட்டுவதற்குப் பலர் வேண்டாம். முதலில் அறிவும்திருவுமுடையார் இரண்டொருவர் முற்பட்டுவரினும் போதும். இப்போது உலகத்திலுள்ள மிகப்பெரிய இராச்சியங்களெல்லாம் ஆதியில் ஒவ்வொருவராலேயே தோன்றின. உலகெங்கும் பரவியிருக்கும் சமயங்களும் ஆதியில் ஒவ்வொருவராலேயே உண்டாக்கப்பட்டன. ஆதலால் சைவசமயிகளுக்குள்ளே அறிவாளியும் பொருளாளியுமாயுள்ள கொடையாளி ஒருவர் முற்பட்டு வருவரேல் நாம் இன்றைக்கே சைவ சுராச்சியம் ஏற்படுத்திக்கொண்டு, உலகெங்கும் சைவசமய பரிபாலனம் பண்ணலாம். கிறிஸ்தவர்களிடம் ஏராளமான செல்வமிருப்பதனால் அவர்கள் உலகெங்கும் கிறிஸ்து அரசாட்சிசெய்கிறார்களெனவும், நம்மவர்களிடத்தில் அவ்வளவு பொருளில்லாமையால் நாம் அவ்வாறுசெய்ய இயலாது என்றும் நினைக்கலாகாது. இப்போது உலகத்திலிருக்கும் மிகப்பெரிய இராச்சியங்கள் ஆரம்பத்திலேயே இவ்வளவு பெரியனவாயில்லை. முதற்கண் சிறியனவாகவேயிருந்தன. பிறகு நாளடைவில் அபிவிருத்தியெய்தின. நிலத்திலிட்ட வித்து முளைக்கும்போதே மாமாயிராது. சிறிது சிறிதாகவே வளர்ந்து பெரியமரமாகும். ஆதலால் நாம் முதலில் நமது சத்தியளவில் சுராச்சியம் அமைத்துச் சமயபரிபாலனம் பண்ணினால் பிறகு அது நம்மவர்களின் முயற்சி அளவாக நாளுக்கு நாள் அபிவிருத்தியடையும்.

(இன்னும் வரும்.)

---

## சோமவார விரதம்.

நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்கள் ஓர்காலத்துத் தம்மிடத்திற் கெழுந்தருளிய முனிசிரேஷ்டராகிய கௌதமருக்கு சோடசவுபசாரங்களைச்செய்து, சுவாமீ! அடியேங்கட்கு அனுக்கிரகஞ்செய்யவேண்டியதொன்றுளது, அது உலகத்தில் நடந்துவருகிற சோமவாரவிரத

மென்புகே யென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனர். அம்முனிசிரேட்டர், ஓ முனிவர்களே, கேளுங்கள் பூர்வத்தில் சந்திரனானவன் உமையா சகிதத்வா, சோமஃ என்னுந் திருநாமஸ்வரூபராகிய சிவபெருமானுக்குரிய சோமவாரத்தில் விரதமிருப்பதே தகுதியென்று நியமித்து அதில் விரதாரம்பஞ்செய்து முடிந்தவுடன் சிவபெருமான் அவன்தவத்திற்கிரங்கிப் பிரத்தியட்ச தரிசனந்தந்து, ஓ சந்திரனே, உனக்கு வேண்டிய வரங்கேளெனச் சந்திரன் மஹா சந்தோஷமுடையவனாய்ப் பலவாறு தோத்திரஞ்செய்து, சுவாமீ அடியேன் தேவரீரிடத்தே எப்போதும் வாசமாயிருக்கவும் அதற்குத்தக்க பெயரொன்றை யடையவுந் தேவரீர் அருள்புரியவேண்டுமென்ன, சிவபெருமான் சோமனென்னும் பெயர்தந்து தனது சடையிலச்சோமனைத் தரித்துக்கொண்டனர்.

பின்னரோர்காலத்தில் கைலையங்கிரியில் நவரத்தினகசிதமாகிய ஆசனத்தில் தேவர், கின்னரர், கிம்புருடர், சித்தவித்தியாதரர், இருடிகள் மற்றுமுள்ளோர்களும், தோத்திரஞ்செய்ய வீற்றிருந்த சிவபெருமானானவர் தன்சடைமுடியிலிருந்த சந்திரனை யாவருங்கண்டதிசயிக்கத் தோற்றுவித்தருளினர். அப்போது பார்வதியார் இச்சந்திரன் யார்க்குமரியதாகிய உமது முடியை யடைந்துவாழும் பெரும்பேறடைந்த காரணத்தை அடியேனுக் கருளவேண்டுமென்று பிரார்த்திக்கச் சிவபெருமான் அருள்செய்கின்றனர்.

ஓ பார்வதி, எனக்குரிய சோமவாரவிரதத்தை மஹா பத்தியுடன் விதிப்படிசெய்து முடித்ததனா லடைந்தனனென்றனர். உமாதேவியார் மிகமகிழ்ந்து சுவாமீ அடியேனுக்கு அவ்விரத முறைமையைக் கூறியருளவேண்டுமென்று துதிக்கச் சிவபெருமான் யாவருமுய்யும்பொருட்டு ஓ கௌரீ, சோமவாரதினத்திலிவ் விரதத்தையனுட்டித்துப் பெரும்பேறடைய வெண்ணுவோர் ஆரம்பத்தில் அஷ்டதிக்கிலும் அஷ்டகலசங்களையும், நடுவே பத்மாசனத்தில் பாணலிங்கத்தையும் நிறுத்தி ஆசிரியனைக் கிழக்குமுகமாக இருக்கச்செய்து வில்வம், அறுகு, வெள்ளெருக்கு, வெள்ளைப்பட்டு, வெள்ளையட்சதை, பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம், பால், சந்தனம், புனுகு, இளநீர் முதலிய சிவபூசா திரவியங்களையருகிருத்தி அபிஷேகஞ்செய்து,



ஓம் மகாதேவாய நமஃ
ஓம் மகேஸ்வராய நமஃ
ஓம் சங்கராய நமஃ
ஓம் இடபத்துவசாய நமஃ
ஓம் சூலபாணியே நமஃ
ஓம் காமாங்கநாசனாய நமஃ
ஓம் தேவதேவேசாய நமஃ
ஓம் ஸ்ரீகண்டாய நமஃ
ஓம் ஈஸ்வராய நமஃ
ஓம் பார்வதிப்பிரியாய நமஃ
ஓம் உருத்திராய நமஃ
ஓம் சிவாய நமஃ

என்னும் பன்னிரண்டு மந்திரபுட்பத்தாலருச்சித்து தூபதீப ஆராதனை சோடசோபசாரமு முடித்துப் பன்னிரண்டு பிரதட்சண நமஸ்காரஞ்செய்து ஒருகால் போசனமேனும் உபவாசமேனும் இருப்பதாக நியமித்துக்கொள்ளவேண்டும்.

உத்தமமாகிய உபவாசநியமஞ் செய்வோர் நித்திரையின்றிச் சிவபுராணங்களைக்கேட்டும், படித்தும் இரவைக்கழித்து மறுநாள் காலையில் பாரணைசெய்யவேண்டும். இவ்வாறு ௧, ௨, ௩, வருடம் இவ்விரதமனுஷ்டித்து முடிவிலும் இவ்வாறே நடத்திப் பன்னிரண்டு பிராமணர்களைச் சோடசோபசாரஞ்செய்து வணங்கி அர்த்தநாரீச வுருவமைந்த பொற்பிரதிமைக்கு மபிடேகமுதலியவற்றை நடத்தவேண்டும்.

இடைநின்ற சோமவாரங்களின் காலையில் சிவநாமத்தை யுச்சரித்தெழுந்து நதி, ஏரி, குளம், கால்முதலிய விடங்களிற் சென்று சிவபூசையை முடித்துக்கொண்டு வில்வம் ௫, அருகு ௧௦, வெள்ளையட்சதை ௧௦, இம்மூன்றையுங்கொண்டு பிரதோஷகாலத்திற் சிவாலயத்துட் கிரமப்படி பிரவேசித்து அவ் வில்வமுதலியவற்றால் அருச்சித்துச் சிவதரிசனஞ் செய்துவந்து உண்டு சிவபுராணங்களைப் படித்துங் கேட்டுந் தனித்துச் சயனிக்கவேண்டும். இவ்வாறு இவ்விரதங் கொள்வோர் வெள்ளைவத்திரத்தையே தரித்துக்கொண்டு சிவசின்னந்தாங்கி சிவசந்நிதானத்துட் பிரவேசித்தல் முறை. இவ்வாறு முற்றும் நடத்த முடியாதாயினும் அந்தந்தவருடங் கார்த்திகைமாதத்திலாவது இச்சோமவாரவிரத மனுஷ்டிப்பவர் பெறுதற்கரிய சாயுச்சியபதவியை யடைவர் என்பதற்குச் சந்தேகமில்லையெனச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர், என்று சொல்லிக் கௌதமர் விடைபெற்றுச் சென்றனர்.

சைவசித்தாந்தப் பிரசங்கரத்னாகரம்,
கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள்.

## காலப்பிரமாணம்.

நிமிஷம் பதினைந்துகொண்டது ஒருகாஷ்டை. காஷ்டை முப்பதுகொண்டது ஒரு கலை. கலை முப்பதுகொண்டது ஒரு முகூர்த்தம். முகூர்த்தமென்பது இரண்டுநாழிகை. முகூர்த்தம் முப்பதுகொண்டது பகலும் இரவுங்கூடிய ஒருநாள். நாள் பதினைந்துகொண்டது ஒரு பக்ஷம். பக்ஷம் இரண்டுகொண்டது ஒருமாசம். மாசம் ஆறுகொண்டது ஒரு அயனம். அயனம் இரண்டுகொண்டது ஒருவருஷம். இம்மநுஷவருஷம் ஒன்று தேவர்களுக்கு ஒருநாளாம். தேவர்களுக்கு உத்தராயணம் பகலும், தக்ஷிணாயனம் இராத்திரியுமாயிருக்கும். மனுஷவருஷம் முந்நூற்றறுபதுகொண்டது தேவர்களுக்கு ஒரு வருஷமாம். தேவவருஷம் பன்னீராயிரங்கொண்டது ஒரு சதுர்யுகமாம்.

| யுகம். | | தேவவருஷம். | மனுஷவருஷம். | | |
| --- | --- | --- | --- | --- | --- |
| கிருதயுகம் | — | ௪௲௮௱ | ௰௭ | லக்ஷத்து | ௨௰௮௲ |
| திரேதாயுகம் | — | ௩௲௬௱ | ௰௨ | ,, | ௯௰௬௲ |
| துவாபரயுகம் | — | ௨௲௪௱ | ௮ | ,, | ௬௰௪௲ |
| கலியுகம் | — | ௲௨௱ | ௪ | ,, | ௩௰௨௲ |
| சதுர்யுகம் | — | ௰௨௲ | ௪௩ | லக்ஷத்து | ௨௰௲ |

இப்படிச் சதுர்யுகம் ஆயிரந்திரும்பினால், பிரமாவுக்கு ஒரு பகலாகும்; பின்னும் ஆயிரந்திரும்பினால், பிரமாவுக்கு ஓரிராத்திரியாகும்; ஆகவே இரண்டாயிரஞ் சதுர்யுகங்கொண்டது பிரமாவுக்கு ஒருநாளெனப்படும். இந்நாள் முப்பதுகொண்டது ஒருமாசம். இந்தமாசம் பன்னிரண்டுகொண்டது ஒருவருஷம். இந்த வருஷம் நூறானால், பிரமாவுக்கு ஆயுசு முடியும். இவ்வியல்புடைய பிரமாக்கள் எண்ணில்லாதவர்கள் பிறந்திறந்தார்கள். பிரமாவினுடைய ஆயுசு பரமெனப் பெயர்பெறும். அதிற் பாதியாகிய ஐம்பது வருஷம் பரார்த்தமென்று சொல்லப்படும்.

பிரமாவினுடைய பகலாகிய ஆயிரஞ்சதுர்யுகத்திலே பதினான்கு மநுக்கள் அதிகாரம் பண்ணுவார்கள். அவர்கள் பெயர் சுவாயம்புவர், சுவாரோசிஷர், ஔத்தமர், தாமசர், ரைவதர், சாக்ஷுஷர், வைவஸ்வதர், சூரியசாவர்ணி, தக்ஷசாவர்ணி, பிரமசாவர்ணி, தருமசாவர்ணி, ருத்திரசாவர்ணி, ரோச்சியர், பாவியர் என்பவைகளாம். ஒவ்வொரு மநுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாகும். எழுபத்தொரு சதுர்



யுகம், தேவமானத்தினாலே எட்டுலக்ஷத் தைம்பத்தீராயிரம் வருஷங்களாம்; மனுஷியமானத்தினாலே முப்பதுகோடியே அறுபத்தேழுலக்ஷத்திருபதினாயிரம் வருஷங்களாம். ஒருமநுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாகப் பதினான்கு மநுவந்தரத்துக்குந் தொளாயிரத்துத் தொண்ணூற்றுநான்கு சதுர்யுகமாகும். பிரமாவின் பகலிலேமிஞ்சிய சதுர்யுகம் ஆறு.

இப்படிப் பதினான்கு மநுவந்தரங்களானால், பிரமாவுக்கு ஒருபகலாம். இதன்முடிவிலே தினப்பிரளயம் உண்டாகும். அப்பொழுது பிரமா அப்பகலளவினதாகிய இராத்திரியிலே யோகநித்திரை செய்வர். இப்படி ஆயிரஞ் சதுர்யுகவளவையையுடைய இராத்திரி கடந்த பின்பு பிரமாத்திரும்பியும் படைத்தற்றொழில் செய்வர். பிரமாவுக்கு ஒருபகல் ஒருகற்பமெனப்படும். கற்பமாவது சிருட்டிமுதற் பிரளயமிறுதியாகிய காலம். ஒருகற்பத்துக்கு மனுஷவருஷம் நானூற்றுமுப்பத்திரண்டுகோடி.

பிரமாவினுடைய ஒருபகலிலே பதினான்கிந்திரர்கள் இறப்பார்கள். ஒருமாசத்திலே நானூற்றிருபதிந்திரர்கள் இறப்பார்கள். ஒருவருஷத்திலே ஐயாயிரத்து நாற்பதிந்திரர்கள் இறப்பார்கள். பிரமாவுடைய ஆயுசுள்ளே ஐந்துலக்ஷத்து நாற்பதினாயிரம் இந்திரர்கள் இறப்பார்கள்.

தற்காலத்தில் இருக்கின்ற பிரமாவுக்கு முதற்பரார்த்தமாகிய ஐம்பது வயசுஞ் சென்றன. இப்போது நடப்பது இரண்டாம்பரார்த்தத்தில் முதல்வருஷத்து முதன்மாசத்து முதற்றினம். இது சுவேதவராககற்பமெனப்படும். பிரளயசலத்தில் முழுகியிருந்த பூமியை விஷ்ணு வெள்ளைப்பன்றியுருவங்கொண்டு மேலே எடுத்த கற்பமாதலிற் சுவேதவராககற்பமெனப்பட்டது. இத்தினத்திலே சுவாயம்புவமநு, சுவாரோசிஷமநு, ஔத்தமமநு, தாமசமநு, ரைவதமநு, சாக்ஷுஷமநு, என்னும் ஆறுமநுக்கள் இறந்துபோனார்கள். இப்போது ஏழாமநுவாகிய வைவஸ்வதமநுவினுடையகாலம் நடக்கின்றது. இவருடைய காலத்திலே இருபத்தேழு சதுர்யுகங்கள் சென்றன. இப்பொழுது இருபத்தெட்டாஞ் சதுர்யுகத்துக் கலியுகம் நடக்கின்றது.

மாசம் சௌரமாசமும், சாந்திரமாசமுமென இருவகைப்படும். சூரியன் ஒருராசியை அநுபவிக்குங்காலம் சௌரமாசம். ஒரு அமாவாசை கழித்த பிரதமை முதல் மற்றொரு அமாவாசைவரையும் உள்ள முப்பதுதிதிகொண்டகாலம் சாந்திரமாசம். சூரியன் பன்னிரண்டுராசிகளையுஞ் சுற்றிவருங்காலம் சௌரமானவருஷம். அது ஏறக்குறைய முந்நூற்றறுபத்தைந்து தினங்கொண்டது. சந்திரனுடைய சஞ்சாரத்தினால் உண்டாகிய பன்னிரண்டு அமாவாசைகொண்டகாலம் சாந்திர

மானவருஷம். நான்கு வருஷத்துக்கு ஒருதரம் சாந்திரவருஷத்திலே பதின்மூன்று அமாவாசை வரும். அதில் அதிகமாகிய ஒருமாசத்தை அதிகமாசமென்று வழங்குவர். சூரியன் மேடராசியிற் பிரவேசிக்குந் தினமே சௌரவருஷப்பிறப்பு. சூரியன் மீனராசியிற் பிரவேசித்த மாசமாகிய பங்குனிமாசத்துச் சுக்கிலபக்ஷத்துப் பிரதமையே சாந்திர வருஷப்பிறப்பு.

நாவலர் நான்காம்பாலபாடம்.

---

## சிவபெருமான் காலாதீதர்.

தத்துவங்களைக்கடந்த தற்பரம் பொருளாவார் சிவபெருமான் ஒருவரே. ஆதலால் அவரை வேதங்கள் "தத்துவாதீதன்" என்று கூறுகின்றன. பிரம விஷ்ணு உருத்திரர்களாகிய திரிமூர்த்திகளும் காலதத்துவத்திற்குட்பட்டவர்களாகையால் இம்மூவருக்குந் தோற்றமும் ஒடுக்கமும் உண்டு. ஒரு பிரமன் ஆயுளில் ஐந்துலக்ஷத்து நாற்பதினாயிரம் இந்திரர்கள் இறப்பார்கள். ஒரு விஷ்ணுவின் ஆயுளில் பலபிரமர்களும் ஒரு உருத்திரர் ஆயுளில் பல விஷ்ணுக்களும் இறப்பார்கள்.

## தமிழ்வேதம்.

நூறு கோடி பிரமர்க ணொங்கினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறில் லாதவ னீச னொருவனே.

எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமுன் னின்றதற்பி
னெண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்.

பையஞ் சுடர்விடு நாகப் பள்ளிகொள் வானுள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக் கால்விர லாலடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ்புரிந் தார்க்கருள் செய்யு
மையஞ்சி னப்புறத் தானு மாரூ ரமர்ந்தவம் மானே.

ஒன்றொன்றொ டொன்றுமொரு நான்கொடைந்து மிருமூன்றொ டேழுமுடனாய
அன்றின்றொ டொன்று மறிவானவர்க்கு மறியாமை நின்றவாரூர் [குழுமிச்
சூன்றொன்றொ டொன்று குலையொன்றொ டொன்று கொடியொன்றொடொன்று
சென்றொன்றொ டொன்று செறிவாய் நிறைந்த திருமூலவாயிலிதுவே.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 2.] || நளஞு கார்த்திகைமீ -1916ஞு நவம்பர்மீ || [இதழ் 11

## தேவாரம்.

நம்பொருணம் மக்களென்று நச்சியிச்சை செய்துநீ
ரம்பரம டைந்துசால வல்லலுய்ப் பதன்முன
மும்பர்நாத னுத்தமன் னொளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே.

## சைவநூல்களும் ஏகான்மவாதிகளும்.

ஒவ்வொரு சமய நூல்களும் அவ்வச்சமயக் கோட்பாடுகளையே நிலைநிறுத்துவனவாகவும், அக்கோட்பாடுகளுக்கு மாறான பிறசமயக் கொள்கைகளைப் பூர்வபக்கப்படுத்திப் பேசுவனவாகவும் இருக்கும். ஆதலால், ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் தங்கள் சமய நூல்களையே பாராட்டிப் போற்றி வாழ்வது கடமையாம். அவ்வாறன்றி, தங்கள் சமயக் கொள்கைகளுக்கு மாறான பிறசமய நூல்களையெல்லாம் தங்கள் சமய நூல்களென்று கொண்டாடி அவைகளுக்குத் தங்கள் சமய பக்ஷமாகப் பொருள்கூறி மகிழ்வது அறிவாளிகள் செய்கையாகாது. மகமதிய நூலாகிய கோரானைக் கிறிஸ்தவர்கள் தங்கள் சமய நூலென்று கொண்டாடுவதில்லை. கிறிஸ்து நூலாகிய விவிலியத்தை மகமதியர்கள் தங்கள் சமய நூலென்று கொண்டாடுவதில்லை. நாலாயிரப் பிரபந்தத்தைச் சைவர்களும், தேவாரத் திருமுறைகளை வைணவர்களும் தங்கள் தங்கள் சமயத் தோத்திர நூல்களென்று கொள்வதில்லை. உலகநடை இவ்வாறிருக்க, ஏகான்மவாதிகள் பலர் இதற்கு மாறாகத் தங்கள் ஏகான்மவாத நூல்களோடு மாத்திரம் அமைந்திராமல், சைவ வைணவ நூல்களிலும் நுழைந்து, அவைகளுக்கும் ஏகான்மவாத பரமாகப் பொருள்கூறி மகிழ்கின்றார்கள். எல்லாச் சமயங்கட்கும் பொது நூலாகிய வேதத்திற்குத் தங்கள் ஏகான்மவாத பரமாகவும் இவர்கள் பொருள் கூறலாம். அப்படியே தமிழிலும் பொது நூலாகிய திருக்குறளுக்குப் பொருள் கூறுவதனால் நமக்கிழுக்கின்று. இவர்கள் சைவத்திற்கே சிறப்பாகிய தேவார திருவாசகங்கட்கும் வைணவத்திற்கே சிறப்பாகிய நாலாயிரப் பிரபந்தத்திற்கும் அவ்வாறு பொருள்கூறி மகிழ்வது ஒரு சிறிதும் அடாது. இவர்கள் தேவாரமுதலிய திருமுறைகளையும் தாயுமானவர்பாடல் முத

லிய சைவ நூல்களையும் கொண்டாடி, சிவ சின்னங்களைத் தாங்கி, தங்களை வேதாந்திகள் என்றும் அத்வைதிகளென்றும் சொல்லிக் கொள்வதனால், சைவ சித்தாந்த உணர்ச்சியில்லாத சைவர்கள் பலர் ஏமாந்து, இவர்களைத் தங்கள் இனத்தவரென்றெண்ணி, இவர்கள் செய்யும் உபதேசங்களைக் கேட்டு, ஆரம்பத்திலேயே தங்களை வேதாந்த விசாரணை செய்பவர்களா யெண்ணிக்கொண்டு, சைவ நல்லொழுக்கங்களைக் கைவிட்டு ஏகான்மவாதிகளாய் மாறி வீணே கெட்டுப் போகிறார்கள்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு சமயமும் அவ்வச்சமய நூல்களையும் அச்சமய நூல்களைச் சீடர்களுக்கு உபதேசித்துச் சமய பரிபாலனம் பண்ணும் குருபரம்பரைகளையும் ஆதாரமாகக்கொண்டு நிலவும். சமய நூல்கள் முதல்நூல் எனவும் வழிநூல் எனவும் சார்புநூல் எனவும் மூவகைப்படும். இவற்றுள் முதனூலாவது அவ்வச் சமயத்தின் மூலபுருஷனால் செய்யப்பட்டது. வழிநூல் மூலபுருஷனுடைய சீட பரம்பரையினால் முதனூலுக்கு மாறுபாடின்றி அதன் கருத்தைத் தழுவிச் செய்யப்படுவது. சார்புநூல் முதனூலையும் வழிநூலையும் ஆதாரமாகக் கொண்டு செய்யப்படுவது.

## நன்னூல்.

5-ஆம் சூத்திரம்—முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

(இ-ள்.) முதல்நூல், வழிநூல், சார்புநூல் என நூலானது மூன்று பிரிவினை யுடையதாகும். (எ-று.)

6-ஆம் சூத்திரம்—அவற்றுள், வினையி னீங்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்டது முதனூ லாகும்.

(இ-ள்.) வினையினின்றும் நீங்கிப் பிரகாசித்த அறிவினையுடைய கடவுள் உயிர்களுக்கு முற்காலத்தில் அருளிச் செய்தது முதனூலாகும். (எ-று.)

7-ஆம் சூத்திரம்—முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி, யழியா மரபினது வழிநூ லாகும்.

(இ-ள்.) கடவுளும் அவரருள்வழிப்பட்டோருஞ் செய்த நூல்களினுடைய பொருள் முடிபுகள் முழுவதும் ஒப்பாகி, வழிநூல் செய்வோன் முதனூலிருக்கவும் தான் வழிநூல் வேறே செய்வதற்குக் காரணமாக வேண்டுகிற வேறுபாடுகளையும் உடன்சொல்லி, அழியாமல் உலகத்திலே நிலைபெற்று விளங்காநின்ற முறைமையுடையது வழிநூலாகும். (எ-று.)



8-ஆம் சூத்திரம்—இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித், திரிபுவே றுடையது புடைநூலாகும்.

(இ-ள்.) முதனூல் வழிநூல் என்னும் இருவகை நூல்களுக்கும் ஒரு பட்சம் பொருள் முடிபு ஒத்து மற்றவைகளெல்லாம் ஒவ்வாமையுடையது சார்பு நூலாகும். (எ-று.)

சைவ சமயத்திற்கு முதனூல்கள் வேதமும் சிவாகமுமாம். இவற்றுள் வேதம் பொதுநூலும் சிவாகமம் சிறப்பு நூலுமாம். வேதம் மூலமும் சிவாகமம் அதன் பாஷ்யமுமாம். வேதத்தின் பொருளைச் சிவாகமங்களைக்கொண்டும், புராணங்களைக்கொண்டும் அறியவேண்டும். வேதத்தின் பொருளை ஆகமங்களையும் புராணங்களையும் கொண்டு அறியமாட்டாதவர்கள் அதை இடர்ப்படுத்துகிறார்க ளென்பது வேத சம்மதம். வேத சிவாகமங்களிலும் புராணங்களிலும் உள்ள உண்மைப் பொருள்கள் தமிழில் தேவாரத் திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களுமாகிய முதனூல்களாகவும் வழிநூல் சார்பு நூல்களாகவும் சைவ சமய குரவர்கள் சைவசந்தான குரவர்கள் முதலிய பெரியோர்களால் அருளிச் செய்யப்பட்டன. இவைகளைப் போற்றிப் பயின்று சீடர்களுக்குப் போதித்துச் சைவசமயத்தை வளர்க்கும் குருபரம்பரைக்குத் திருக்கைலாசபரம்பரை யென்று பேர். இக்குருபரம்பரையின் முதற் குரவர் திருக்கைலாசமலையிலே, அருள்வடிவாகிய கல்லாலமரநிழலிலே, தக்ஷிணாமூர்த்தியாயெழுந்தருளிய ஸ்ரீகண்ட பரமேசுவரரே. இவருடைய சீடர்கள் திருமால், பிரமன், இந்திரன், உபமனியன், சூரியன், நந்திதேவர், முருகக் கடவுள் ஆதியாயவர்கள்,

## சிவ தத்துவ விவேக விருத்தி.

திருமாலிந் திரன்பிரம னுபமனியன் றபனனந்தி செவ்வேளாதித்
தருமமுது குரவருக்குந் தனதருளா லாசிரியத் தலைமை நல்கி
வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரைக்கைம் மலரும் வாய்ந்த
வருவழகுங் குறுநகையுங் காட்டியரு டருஞ்சிவனை யுளத்தில் வைப்பாம்.

இவருள் திருநந்திதேவர் தமக்குச் சீகண்ட பரமேசுவரர் உபதேசித்தருளிய வேதாகமசாரமாகிய சிவஞானபோதத்தைச் சனற்குமார முனிவருக்கு உபதேசித் தருளினர். சனற்குமாரமுனிவர் சத்திய ஞானதரிசனிகளுக்கும், சத்தியஞானதரிசனிகள் பரஞ்சோதிமுனிவருக்கும் அருளிச்செய்தார்கள். பரஞ்சோதிமுனிவர் கைலாசத்தினின்றும் தமிழ்நாட்டிற்குவந்து சாமுசித்தரா யெழுந்தருளியிருந்த மெய்

கண்ட தேவருக்கு உபதேசித்தருளினர். மெய்கண்டதேவர் தமிழில் சிவஞானபோதம் செய்தருளித் தமது மாணாக்கராகிய அருணந்திசிவாசாரியருக்கு உபதேசித்தருளினர். அருணந்தி சிவாசாரியர் தமிழ்ச் சிவஞான போதத்தை முதனூலாகக்கொண்டு சிவஞானசித்தியார் என்னும் வழிநூல் அருளிச்செய்ததுமன்றி, மெய்கண்டதேவர் சந்நிதியில் தாம் கேட்ட கேள்விகளுக்கு அவர் திருநோக்கால் தமக்கு விளக்கிய பொருள்களை "இருபாவிருபது" என்னும் நூலாகக் கூறியருளினர். மெய்கண்ட தேவருடைய மற்றொரு மாணாக்கராகிய திருவதிகை மனவாசகங்கடந்தார் "உண்மை விளக்கம்" என்னும் நூலை யருளிச்செய்தனர். அருணந்தி சிவாசாரியருடைய மாணாக்கராகிய மறைஞானசம்பந்தசிவாசாரியருடைய அநுக்கிரகம் பெற்றவரும் தில்லைவாழ்ந்தணர்களுள் ஒருவருமாகிய உமாபதிசிவாசாரியர் சார்பு நூல்களாகிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் எட்டுச் சைவ சித்தாந்த சாத்திரங்களைச் செய்தருளினர். இவ்வெட்டும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண்மை விளக்கம், திருவியலூர் ஆளவந்த தேவர் அருளிய திருவுந்தியார், திருக்கடவூர் உய்யவந்த தேவாருளிய திருக்களிற்றுப்படியார் என்னும் ஆறும் ஆக பதினான்கு நூல்களும் சைவ சித்தாந்த ஞான சாத்திரங்களாம்.

சித்தாந்தநூல்களின் திருநாமங்கள் "உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார், பிந்திருபா உண்மைப் பிரகாசம்—வந்தவருட், பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு, உண்மைநெறி சங்கற்ப முற்று."

உமாபதிசிவாசாரியர் அருணமச்சிவாயதேசிகர் முதலிய மாணாக்கர்களுக்கு உபதேசித்தருளினர். அருணமச்சிவாயதேசிகர் நவகோடிசித்தவர்சபுரமென்னும் திருநாமமுடைய திருவாவடுதுறையிலே சித்தமூர்த்தியாக எழுந்தருளியிருந்த சித்தர்சிவப்பிரகாசதேசிகருக்கு உபதேசித்தருளினார். இவ்வாறு சைவகுருபரம்பரை வாழையடிவாழையாகத் தொன்றுதொட்டு நாளதுவரையில் திருவாவடுதுறை யாதீனமடாலயத்தில் பிரசித்திபெற்று நிலவுகின்றது. சைவசமயிகள் யாவரும் இத்திருக்கயிலாய குருபரம்பரையின் சீடர்களாவர். இக்குருபரம்பரையில் முதல் முதல் தமிழ் நாட்டில் திருவவதாரஞ் செய்தவர் மெய்கண்டதேவர். ஆதலால் இப்பரம்பரை மெய்கண்டசந்தானம் என்றும் வழங்கப்படும். மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியர், மறை



ஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியர் ஆகிய நால்வரும் சைவசந்தானகுரவர் என்று சைவ சமயிகளால் பூசிக்கப்படுகின்றார்கள்.

சந்தானகுரவர்கள் சிவாகமங்களிலுள்ள சிவஞானபாதப்பொருள்களைச் சிவஞானபோத முதலிய ஞானசாத்திரங்களாகச் செய்தருளியது போல், சைவ சமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமிகள் ஆகிய நால்வரும் ஆரியவேதத்தைத் தேவார திருவாசகமாகிய தமிழ்வேதமாகப் பாடியருளினர். ஆதலால் தேவார திருவாசகமும் சித்தாந்த சாத்திரங்களும் சைவசமயகுரவராலும் சைவசந்தானகுரவராலும் அருளிச்செய்யப்பட்டு, ஒரே சைவசித்தாந்தப்பொருளை விளக்குவனவாய்ச் சைவகுருபரம்பரையால் தொன்றுதொட்டு அனுசந்தானம்செய்யப்பட்டுவருகின்றன. இதனை,

வேதம்பசு வதன்பால் மெய்யாகம நால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்.

என்னும் வெண்பாவினாலும் உணரலாகும்.

(இன்னும்வரும்.)

பத்திரிகாசிரியர்.

---

(132-வது பக்கத்தொடர்ச்சி.)

## கல்வி.

சென்னைமாநகரைச்சார்ந்த திருமயிலையில் வருடந்தோறும் பங்குனிமாதத்தில் அறுபத்துமூன்றுநாயன்மார் மகோற்சவம் நடைபெறுகின்றது. அதைத் தரிசிக்கச்செல்லும் ஜனங்களுள் அளவற்றபேர் அறுபத்துமூன்று நாயன்மார்கள் பெருங்கூட்டமாக எழுந்தருளுவதைப் பார்த்து "அம்மன் அறுபத்துமூன்று பிள்ளைகளைப்பெற்றும் ஆசை தீராமல் இன்னுமோர் பிள்ளையைப்பெறவேண்டி எலும்புந்தோலுமாக வற்றித் தவஞ்செய்கிறாள்" என்கிறார்கள். பிட்சாடனர் மகோற்சவத்தைத் தரிசிக்கும் ஜனங்கள் பலர் சிவபெருமான் திகம்பராயெழுந்தருளுவதையும், அவர் விமானத்திலிருக்கும் பிரதிமைகள் பெண்கள் ஆகி

ரைக்கண்டு காமவிகாரங்கொண்டு ஆடையவிழப் பின்தொடர்ந்து சென்றதை விளக்குவதையும் பார்த்து "சாமியின் அழகைப்பார்த்துப் பெண்களியாவரும் மோகித்தார்கள்" என்று சொல்லிச் சந்தோஷிக்கிறார்களே யன்றி, அம்மகோற்சவத்தால் விளக்கப்படும் சைவசித்தாந்த உண்மையை யறிந்து சந்தோஷிப்பதில்லை. இவர்கள் இவ்வாறு கூறுவதைக்கேட்கும் பிறசமயிகள் "பெண்களின் கற்பையழிப்பவனும் ஒரு கடவுளா" என்று பரிகசிக்கிறார்கள். (இவ்வுற்சவத்தின் கருத்து முதன் மலரில் வெளியிட்ட தாருகாவனமுனிவர்சரித்திரத்தால் நன்குவிளங்கும்). சுத்தாத்துவித சித்தாந்தசைவர்களால் மாத்திரமன்றி ஏனைச் சைவர்களாலும் எல்லாச் சிவமூர்த்தங்களினும் அதிகமாக வழிபடப்படும் சிவலிங்கத்தின் தத்துவார்த்தங்களை யறிந்த சைவர்கள் மிகச் சிலரே. (இவை இனி அடுத்துவரும் மூன்றாம் மலரில் விரிவாய் விளக்கப்படும்.) இத்தகைய உதாரணங்கள் எண்ணிறந்தன விருக்கின்றன. அவைகளை விரிக்கிற் பெருகும். இவற்றால் சைவநூல்களைக் கல்லாதவர்கள்" சிவாலயவழிபாட்டை விபரீதப்படுத்துகிறார்கள் என்பது விளங்கும்.

சைவநூல்களைக் கல்லாதவர்களுடைய சைவாநுட்டானங்கள் நிலைபெற்றிருத்தல் அரிது. பிறசமயிகள் அவர்களிடம் தங்கள் சமயத்தை யுயர்த்திச் சைவசமயத்தைத் தாழ்த்திப் பேசுவார்களானால் உடனே அவர்கள் மனம் தடுமாற்றமடையும். சைவசமயிகளாகப் பிறந்தவர்கள் எண்ணிறந்தோர் இவ்வாறு தடுமாறியே மாயாவாதிகளாகவும் உலோகாயதர்களாகவும் இருக்கிறார்கள். சைவசமய உண்மைகளை யறிதற்குப் போதிய கல்விகற்றிருத்தல்வேண்டும். சித்தாந்த ஞானசாத்திரங்களைக் கற்றல் வேண்டும். தேவாரமுதலிய திருமுறைகளை யோதல்வேண்டும். புராணங்களை வாசித்தல்வேண்டும். தருக்கம் இலக்கண முதலியன பயின்றிருத்தல்வேண்டும். பலபிறவிகளிற்செய்த புண்ணியப்பயனும் வந்து பொருந்துதல்வேண்டும்.

## சிவஞானசித்தியார்.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம, வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.



கல்வியானது சமய உணர்ச்சிக்குமாத்திரமன்றி எல்லாத் தொழில்களுக்கும் இன்றியமையாத கருவியாயிருக்கிறது. கல்வியறிவில்லாதவர்கள் செய்யும் கைத்தொழில்களும் வாணிகங்கள் முதலியனவும் கல்வியறிவுடையவன் செய்யுங் கைத்தொழில் வாணிகம் முதலியவற்றிற்கு நிகராகா. சிற்பநூல்கற்ற (இஞ்ஜினீர்) சிற்பி யொருவனுக்கும் அதைக் கல்லாத கொல்லனுக்குமுள்ள வித்தியாசத்தால் இதை யுணரலாகும். ஒவ்வொரு தொழிலினும் அவ்வத்தொழிற் கல்வியைக் கற்றவர்கள் அதைக் கல்லாத பலரை யடக்கியாளுந் திறமையுடையவர்களா யிருக்கிறார்கள். கல்வியில்லாதவன் எவ்வளவு நுட்ப அறிவும் தொழிற் பழக்கமுமுடையவனா யிருந்தாலும் அவன் கற்றவனுக்குச் சமானமாக மதிக்கப்படுதலில்லை.

## திருக்குறள்.

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

இதுவரையிற் கூறியவாற்றால் கல்வியினும் சிறந்த பொருள் இல்லையென்பதும் கல்வியுள்ளும், சமயக்கல்வியே சிறந்ததென்பதும் விளங்கும்.

சமயக்கல்வியின்பெருமை இவ்வாறிருத்தலையும், சமயக்கல்வி சமயவளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுதலையும், நம்மவர்கள் யோசியாமல், ஆலயங்கள்கட்டுவதிலும், அன்னதானஞ் செய்வதிலும் திருவிழாக்கள் செய்வதிலுமே தங்கள் காலத்தையும், கருத்தையும், பொருளையும் செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள். கல்வித் தானத்தினால் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கும் உண்டாதலால், கல்வித்தானஞ்செய்தவர் சொர்ணதானஞ் செய்தவருமாவர். சமயக்கல்வித் தானஞ்செய்தவர் சதுர்வித புருஷார்த்தங்களையும் தானஞ் செய்தவராவர். சமயக்கல்வி தானஞ் செய்யாமல் வெறும் அன்னதானமாத்திரம் செய்வது ஒருவன் பிள்ளைகளுக்குக் கல்விகற்பிக்காமல் சோறுங் கறியும் ஊட்டி வளர்த்தல்போலாம். சைவநூலுணர்ச்சியில்லாதவர்களுக்குச் சிவாலயங்களைக்கட்டி வைத்தல் நபுஞ்சகனுக்குப் பெண்ணைக்கட்டிக் கொடுத்தல்போலாம். சைவநூலுணர்ச்சி யில்லாதவர்கள் தேவாரமோதுதல் கிராமபோன் என்னும் கருவி இசைபாடுவதுபோலாம். ஆதலால், சிவநேயச்செல்வர்களே, சைவப்பிரபுக்களே, கல்வியைக்கொண்டு சமயபரிபாலனம் செய்யுங்கள். வெறுஞ்சமயக்கல்வியைமாத்திரம் எக்காலத்திலும்யாருமேகற்கமாட்டார்கள். இலௌகிகக்கல்வியோடு கலந்தே

எப்போதும் சமயக்கல்வியும் கற்பிக்கவேண்டும். இப்படியே கிறிஸ்தவர்கள் தங்கள் சமயக்கல்வியைக்கற்பித்து உலகமெங்கும் கிறிஸ்துசமய பரிபாலனஞ்செய்கிறார்கள். அவர்கள் மாதிரியை நீங்களும் பின்பற்றி எங்கும் ஆங்கிலபாடசாலைகள் வைத்து அதில் இலௌகிகக்கல்வியோடு சைவ சமயக்கல்வியும் கற்பியுங்கள். இது உங்களால் ஆகாததகாரியமென்றாவது தகாதகாரியமென்றாவது எண்ணாதீர்கள். எத்தனையோ பாடசாலைகள் பிள்ளைகள் கொடுக்கும் சம்பளத்தைக்கொண்டும் அரசாங்கத்தார் செய்யும் கிராண்டு என்னும் உதவியைக்கொண்டுமே நடத்தப்படுகின்றன. ஆதலால் சமயபரிபாலனஞ் செய்தற்குப் பாடசாலையைக்காட்டிலும் அநுகூலமான மார்க்கம்வேறொன்றுமில்லை.

சைவப்பிரபுக்கள் கல்வித்தானம் செய்யாமல் மற்றத் தானங்களையே அதிகமாகச் செய்துகொண்டிருப்பதுபோல் சைவப்பிரசாரகர்களும் சைவசமயத்தின் தற்காலநிலைமையையும் சைவசமயவளர்ச்சிக்குச் சைவசமயப் பாடசாலைகள் இன்றியமையாதன வென்பதையும்அதிகமாக எடுத்துப்போதிக்காமல் சைவசமயத்தின் ஏற்றத்தையே அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சைவசமயிகள் சமயக்கல்விகற்காமல், சைவசமயத்தின் ஏற்றத்தை யெடுத்துப்பேசி மகிழ்தல் கல்லாவொருவன் குலநலம்பேசுதலையொக்கும். ஆதலால் சைவப்பிரசாரகர்களே, சைவசபையார்களே, சைவச்சீமான்களே, நீங்கள் செய்யும் பிரசங்கங்கள் எல்லாவற்றுள்ளும் சைவசமயத்தின் தற்கால நிலைமையையும், சைவசமயவளர்ச்சிக்குச் சைவசமயப் பாடசாலைகள்இன்றியமையாதன வென்பதையும் எடுத்துவிளக்கும்பிரசங்கத்தையே முதற்பிரசங்கமாகவைத்துக்கொள்ளுங்கள்.சைவசமயபாடசாலைகள் வைத்து இலௌகிகக் கல்வியோடு சைவசமயக்கல்விகற்பிக்குமாறு செய்யுங்கள். இவ்வாறு செய்வீர்களானால் சைவம் வையமெங்கும் பரவும். உலகமெங்கும் உய்யும்.

## திருமந்திரம்.

தேவர் பிரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவ ரொருவ ரறிவா ரறிந்தபின்
ஓது மின்கேண்மி னுணர்மி னுணர்ந்தபின்
ஓதி யுணர்ந்தவ ரோங்கிநின் றாரே.

கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராங்
கல்லாத மூடர் கருத்தறி யாரே.

(பத்திராதிபர்.)

திரு அருணாசலக்
# கார்த்திகை விளக்கீடு*

இது சைவசமயிகட்கு அருமருந்தன்ன வித்வ ரத்னமாயிருந்த,
மஹா சைவாபிமானி
யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி
ஸ்ரீமந் - நா. கதிரைவேற்பிள்ளையவர்கள்
செய்த உபந்நியாசம்.

## திருவாசகம்.

பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையாற்
பரம மியாம்பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க
வாறு ரழலுருவா யங்கே யளவிறந்து
பாமா கிநின்றவா தோணோக்க மாடாமோ.

இந்த ஞானதீபக் காட்சியாகிய மகா விழாவானது இக்கார்த்திகை மாதத்தில் வரலால் அதுபற்றி நம் நண்பர்கள் பற்பலர் அறிதற்கு அவாவுறுவர். ஆதலால் அது குறித்துச் சிறிதுபேச வந்தாம். இத்தீபக் காட்சியைக்கண்டு ஆனந்தித்தவாது கண்களே கண்களெனப்படும். அல்லாத கண்களெல்லாம் புண்களெனெப்படும். அவை மரக்கண், பீலிக்கண், மட்பாண்டக்கண், நிலக்கண் எனப்பட்டு ஒருசிறிதும் பயனிலவாம் என்க. இது சிவபெருமான் உலக முழுதும் சோதிவடிவாய் விளங்கி நின்றமையால் அதற்கு அறிகுறியாக எவ்விடத்தும் தீபமிட்டுத் தரிசிக்கும் வழக்காம். வைணவர்க்கு ஐப்பசியில் தீபாவளி யிருத்தல்போலச் சைவராயுள்ள எமக்குரியதீபாவளி இக்கார்த்திகை மாதத்தில் வருமிதுவேயாம். இதனையே வைணவர்களும் ஏற்றுத் தங்கள் ஆலயங்களிலும் தீபம் ஏற்றிவைக்கின்றார்கள். புறச்சமயிகளாலும் இது புகழப்பட்டு அநுஷ்டிக்கப் படுகின்றது. புறச்சமய நூலென்னும் சீவக சிந்தாமணியினும்,

(நாமகளிலம்பகம் உஉஎ-செய்யுள்.)

தார்ப்பொலி தரும தத்தன் றக்கவா றுரைப்பக் குன்றிற், கார்த்திகை விளக்கிட் டன்ன கடிகமழ்குவளைப் பைந்தார், போர்த்ததன் னகலமெல்லாம் பொள்ளென வியர்த்துப் பொங்கி, நீர்க்கடன் மகரப் பேழ்வாய் மதனன்மற் றிதனைச் சொன்னான்.

---

* விளக்கிடுதல் என்பது விளக்கீடு எனத்திரிந்தது.

என்று பேசப்பட்டிருக்கிறது. உலகத்திலும் "மலையிலிட்ட விளக்கு" என்று வழங்கும் முதுமொழியானும் இதன் பெருமை புலப்படும். திருவருணாசலமே யிதற்குரிய விசேடதலமாகலின் அதனையும் பற்றி யுரைப்பாம். திரு அருணாசலம் என்பது தொண்டைநாட்டு முப்பத்திரண்டு சிவஸ்தலங்களுள் ஒன்று. "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று தெய்வப்புலமை ஔவைப் பிராட்டியாரால் சிறப்பிக்கப்பட்ட இத்தொண்டை நாட்டில், முப்பத்திரண்டு தலம் வந்ததற்குக் காரணம் என்னவென்று ஆராயுமிடத்து, இறைவி யுலக முய்வான் ஈண்டு வந்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தருளினள் என்று முந்து நூல்கள் முழங்கலான், அதற்கு அறிகுறியாகத் தலங்களும் முப்பத்திரண்டாயின வென்பர் பெரியோர். உலகத்திலே யுள்ள எல்லாத் தலங்களினும் ஆயிரகோடி சிவஸ்தலங்களே விசேடித்தன. அவற்றினும் ஆயிரத்தெட்டுத் தலங்களே விசேடம். அவற்றினும் நூற்றெட்டு சிவஸ்தலங்களும், அவற்றினுந் தெய்வத் தலங்களாகிய அறுபத்தெட்டும், அவற்றினும் அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னுஞ் சத்த முத்தித் தலங்களும் உயர்ந்தனவாம். அவற்றினும் ஆதாரஸ்தலங்களே விசேடித்தனவாம். அவற்றினும் பஞ்சபூதத்தலங்களே யுயர்ந்தன. அவற்றினும் பிறக்க முத்திதருந் தலமாகிய திருவாரூரும், இறக்க முத்திதருந் தலமாகிய காசியும், நினைக்க முத்திதருந் தலமாகிய திருவண்ணாமலையும் சிறந்தனவாம். பிறத்தலும் இறத்தலும் கிடைத்தல் ஒருவர்க்கு முற்புண்ணியம் இருந்தாலன்றி யாகாவாம். நினைத்தல் யாவர்க்கும் எளியதாகலின் அது செய்தமாத்திரத்தே சிவ சாயுச்சியத்தை யளிக்கும் இத்திருவருணாசலத்தின் மகிமை செப்புந் தரத்ததோ? தத்துவங் கடந்த தனிமுதற் பொருளாகிய பரசிவனே இத்தலமாக விளங்குவான் எனில், அதன் பெருமையை யாவரே யளக்க வல்லார். சிவனுருவாய் நின்றது எவ்வாறெனில்:—

முற்காலத்திலே ஸ்ரீமந் நாராயண மூர்த்தியும் அவர் குமாரரான பிரம தேவரும் நாம் பிரமம், நாம் பிரமம் என்று போர்புரிய, அதனாலுலகமும் அவரும் இறப்பார் என்று கருணை சுரந்த காளகண்டப்பெருமான், மாசிமாதத்திலே அபரபக்கச் சதுர்த்தசி திதியிலே, அர்த்த சாமத்தில் ஓர் சோதி வடிவாய் எழுந்தருளி யவர் நடுவில் நின்றார். அவ்வக்கினிப் பிழம்புத் தம்பத்தின் அடிமுடியை யறிந்தவரே பிரமமாவர் என்று அசரீரி கூறிற்று. அது கேட்ட அரி பிரமர் போரை விடுத்து முறையே பன்றியாகியும் அன்னப் பறவையாகியும் பூமியைத் தோண்டிச் சென்றும், அண்டங்கள் குலுங்கி யதிரப் பறந்தும் தேடி அறியாராயினர். இளைத்



தவராய அவ்விருவரும் சோர்வுற்று மனந்தெளிவுற்றுப் பெருமானைத் துதிப்ப, அவர் அக்கினிவடிவைச் சுருக்கி மலையாய் நின்றனர். அம்மலை உலக முழுவதும் சிவந்த நிறமுற்றுத் தோன்றினமையால் அருணகிரியெனத் திருப்பெயர் வாய்ந்தது. அருணம்—சிவப்பு. அசலம்—மலை. சிவந்த நிறத்தை யுடையமலை. சோணகிரி என்பதும் அதுவே. சோணம் - சிவப்பு. இனி அருணாசலம் என்பதில், அருணம் என்றதற்கு, ருணசம்பந்தங்களை யொழிப்பது என்று அருணகிரிபுராணஞ் சொல்லிற்று. எவ்வளவு மழைபெய்யினும் சலம் கீழிறங்காமல் அம்மலையிலேயே அடங்கிவிடலால் அக்கினிமலை யென்பதற்கு அதுவுமோர் திருஷ்டாந்தமே.

இச்சிவசோதிமலை, கிருதயுகத்தில் அக்கினிமலையாகவும், திரேதயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபரயுகத்திற் பொன்மலையாகவும், இக்கலிகாலமாகிய பாவயுகத்தில் அவ்வடிவு மாறிக் கல்மலையாகவும் விளங்கும் என்று பிரமாண்ட புராணமும், சிவரகசியமும், உருத்திர சங்கிதையும், அருணைமான்மியமும் அறைகின்றன. சில வைணவ நண்பர்கள் சிவனது அடியை யெங்கள் நாராயணமூர்த்தி தேடுவாரா என்றும், அது சைவர்களது கட்டுக்கதைகளா மென்றும் கூறுகின்றதைக் கேட்டிருக்கின்றேம். வைணவசகோதரர்களே! வேதம் நமக்கும் சைவர்க்கும் பொதுவான தொன்றன்றோ? உபநிடதமும் அப்படி யுள்ளதே. அவற்றிற் கூறப்பட்ட பிரமாணங்களை யிங்குக் காட்டுகின்றோமன்றி, சைவர் நூற் சரிதமாவது, கட்டுக்கதைகளாவது காட்டுவே மல்லேம். வேதோபநிடதப் பிரமாணங்களை நீவிர் ஒப்பாது விட்டால் பாஷண்டர் ஆவீர்களே. அந்தப் பிரமாணங்கள் வருமாறு:—

## இருக்கு வேதம்.

விஷ்ணுர்வை வாராகம் ரூபமாஸ்தாய பூமின் விதாரயன் சகஸ்ரம் ஸமா ஆசன்-பாதாந்விஷ்ண பரோ பூத்வா, த்வமேவ மாதாஜி, த்வமேவ ப்தாஸி, த்வமேவ ஜியேஷ்டோஸி, த்வமேவசிரோஷ்டோஸி, யயேவம் மகிமாநம், வேதாத் திருஷ்டாபவதி, விக்ஞாதாபவதி, கர்த்தாபவதி, காரயதாபவதி, யயேவம்வேதா, சிவஸாயுஜ்யமாப்நோதி, சிவஸாயுஜ்யமாப்நோதி.

## பாஸ்கர சங்கிதை யெனும் வேதபாகம்.

ப்ரஹ்மா விஷ்ணு ரஜஜாபத்த-எனத் தொடங்கி, வாராஹோ விஷ்ணு, நிமமஜ்ஜ பூமௌப்ரம் ஹோதப் பாத பூமேர்திவமா ஸ்ருக்ருத்திரஃ என்று முடியுமது.

## அதர்வண வேதச் சரப உபநிடதம்.

யத்பாதாம் போருஹத் த்வம்த்வம் மிருக்யதே விஷ்ணு நாஹநாஸ்ஹ, த்வாஸ்துத்தியம் மஹேசா நமவாம்மாந ஸகோசரம், பக்திபாநமிர் தமே விஷ்ணௌ ப்ரசாத்மக ரோத்விபு.

## வில்லிபுத்தூரர் பாரதம்.

"ஓரேனந் தனைத் தேடவொளித்தருளு மிருபாதந் தொருவனந் தப்-போரேனந்தனைத் தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்"

"புள்ளுடைக் கொடியோ னிருவருங்காணுப் புண்ணியன்"

என்ற பிரமாணங்களாலும் இன்னும் அநேக பிரமாணங்களாலும் வெள்ளிடைமலைபோற் றெள்ளிதின் அறியக்கிடக்கின்றது. இங்ஙனம் வேதாதி பிரமாணங்கள் முழுங்கியதை யெடுத்துக்கூறின் விஷ்ணு தூஷணஞ் செய்கின்று மென்பீர். அதற்கு வேதங்களும் அவையிற்றை யருளிச்செய்த பரப்பிரமமுமே விடைகூறவேண்டும். நிற்க. அக்கினி மலையாக நின்றருளிய பெருமான் பிரம விட்டுணுக்கள் செய்த பூசையினுள மகிழ்ந்து இலிங்கோற்பவகாலமாகிய மகாநிசியிலே அடியையும் முடியையுங் காட்டாது இலிங்கோற்பவ மூர்த்தியாய் ஒரு முகூர்த்த காலங் காட்சி கொடுத்தருளினர். கொடுத்தருளியது மன்றிக் "கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்திலே இதுபோல ஓர் சோதி காட்டுவோம். அதனைத் தரிசிப்பவர் யாவராயினும் அவர் பாவங்களாகிய இருட் படலத்தினின்று நீங்கிச் சிவஞான வொளியையடைந்து எம்கழலடியுறுவர்" என்றும் பரமர் கூறினமையால் அந்த ஐதிகப்படியே இக்காலத்தும் திருவண்ணுமலையிற் கார்த்திகைக் கார்த்திகையிற் றீபம் மலையினுச்சியில் ஏற்றித் திருவிழாக் கொண்டாடப்படும். அதற்காகப் பலதேசங்களினு மிருந்து இலக்ஷக் கணக்காகச் சனங்கள் வந்துசேர்ந்து தரிசிப்பர். அரிக்கும் பிரமனுக்கும் நடுவிற் சோதியுருவாகத் தோன்றியது மாசிமாதச் சிவராத்திரிக் காலத்திலன்றி, கார்த்திகையி லிடுவது எங்ஙனமெனின், அதனைக் கூறுவாம்.

சோதியுருவாக முதலிற் றோன்றியது மாசிச் சிவராத்திரியிலேயே. இலிங்கோற்பவ மூர்த்தியாய்ப் பின்னர்க் காட்சி கொடுத்தது மகா நிசிக்காலமாகிய இரவு இருபத்தேழு நாழிகைக்குள்ளாம். அக்காலந் தேவநாளாதலின் அக்கணக்கின்படி பார்க்கின் மானுடதினக் கார்த்திகைமாதமே தேவர்க்கு மகாநிசிக் காலமாகும். அதுபற்றியே கார்த்திகையில் விளக்கு விழாச் செய்யப்படுமென்றறிக. இதுவன்றி, வரன் என்னு



மொரு சித்தன், முனிவர் சாபத்தால் மகிடாசுரனாய்ப் பிறந்திருக்க, சங்கரி அவனைக் கொன்று அவன் கழுத்திற் சிவலிங்கந் தோன்றியெடுக்க, அது கையினின்றும் நீங்காதுறைய, அப்பாவத்தை விலக்கிக் கொள்ளற்காக, அம்மையார் இத் திருவருணாசலத்தை யடைந்து ஐப்பசி மாதத்துக் கேட்டை நட்சத்திரத்திற் பூசித்துக் கட்க தீர்த்தத்தின் முழுகியருச்சித்தமையாற் சிவலிங்கம் கையினின்றும் நீங்கப்பெற்றனர். கார்த்திகைக் கார்த்திகையிலே சிவாகம விதிப்படி யுற்சவம் நடத்துவித்துத் தீபங்களையு மெவ்விடத்தும் ஏற்றுவித்துத் தாம் நினைந்தனவெல்லாம் பெற்றார் என்று அருணகிரிபுராணம் கூறுதலால், அவ்விதிப்படி யிக்காலத்துந் தீபமேற்றுதலுமாம். இத்தீப தரிசனஞ் செய்தோர் சிவபெருமானைத் தரிசித்தவராவர். சிவபெருமான் ஒளிவடிவாயிருக்கின்றார் என்பது தோன்றத் திருநெறித் தமிழ்வேதமும் "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்று கோஷிக்கின்றது. இம்மலை சிவனே யாதலால் இதன்கண் கால்வைத் தேறுதல் மகா பாதகமாம். இம்மலையை வலம் வந்தோர் தம் பாவங்களெல்லாம் நீங்கி முத்தி பெறுவர். வலம் வருவோர் பாதரட்சை, தொடுதோல் இட்டும், குடைபிடித்தும், வாகனத்தேறியும் செல்லலாகாது. முன்னர் மாகிதன் என்னும் அரசன் குதிரையிலேறி வலஞ்செய்தான். அதனால் அவன் நரகத்தில் வீழ்ந்தான். குதிரை சிவலோகஞ் சென்று சிவகணத்தலைவனாய் வாழ்ந்ததென்று உண்மை நூல்கள் கூறின. ஆதலால் நமராங்காள்! குளிக்கப் போய்ச் சேறு பூசுவார் போலப் பாவந் தேடிக்கொள்ளாது விதிப்படி தீப தரிசனமும், பிரதக்ஷிணமும் செய்து பேரின்பு உறுவீராக.

---

## (2) தீப இயலும் அதன் உண்மையும்.

ஆயயம் முதலிய சிவசந்நிதானங்களிலும், பூசையினும், யாகாதிகளினும் விளக்கிடுதல் மகா புண்ணியமாம். சோடச உபசாரங்களுள் விளக்கிடுதலும் ஒன்றாம். விளக்கிடுதல் சரியைத் தொழில்களுள் விசேடித்ததாகச் சொல்லப்பட்டது. சிவபெருமானுக்கு முப்பத்திரண்டு உபசாரங்களோடு பூசை செய்க. அவை யியலாதாயிற் சோடசத்திற் பூசிக்க. அதுவுங் கூடாதவர் சந்தனம், புட்பம், தூபம், தீபம், நைவேத்தியம் என்னும் பஞ்சோபசாரங்களோடு பணிதல் விதி. அதுவுஞ்செய்ய இயலாதார் முடிவிற் செய்யப்படும் தீபமாத்திரம் ஏற்றித் தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடிச் சங்கராசயபோற்றி யென்னக் கடவர் என்று காமிக ஆகமம் இலளிதாகமம் முதலிய முதனூல்க

ளுரைக்கின்றன. இதனாற் தீபத்தின் பெருமை யித்துணைத்து என்பது தெற்றெனப் புலப்படுகின்றது. புவனங்கள் யாவற்றையும் பெ.. ருவறப்புரந்த மாவலிச் சக்கிரவர்த்தி யென்பான் யாவன்? அவன் முற்பிறப்பி லெலியாகப் பிறந்து சிவாலயத்துள்ள விளக்கிலிட்டப்பட்ட நெய்யை யுண்ணுதற்குச் சென்றான். போயுண்ணுங் காலத்து மங்கியிருந்த தீபச்சுடர் தன்முகத்திற்சுட வுதறியதனால் அது ஓங்கி யெரிந்தது. அதனால் தத்துவாதீத தனிப்பரம்பொருளாகிய தற்பர சிவனார் மூவுலகுமேவல் கேட்ப ஆளும் பெரும் பேற்றையும், அட்ட ஐசுவரியம் அஷ்டபோக்கியசம்பன்னம், சப்த சந்தானம், சதுர்விதோபாயம், சட்குணசமேதம், பஞ்சதந்திரப் பிரவீணம், வர்க்கத் திரய விசிட்டம், சதுரங்கபலம், சகல நியோக சகிதமாக வமரும் வாழ்வையும் அருளினார் என்று புராணங்கள் கூறுகின்றன. சிவத்திரவியத்தைத் தன் பசிக்காக வுண்டபடியினாலும், மங்கும் விளக்கைத் தூண்டவேண்டுமென்று நினைத்துச் செய்யாமையாலும், சிறிது குற்ற முற்றவனானபடியால், திருமாலது வஞ்சச் செய்கையால் அவை மாற்றப் பட்டான். இங்ஙனமாயின் மெய்யன்புடன் தீபமிடுவோர் அடையும் பலம் இவ்வளவினதென்று உலக மறிக.

தீபமாலை, தீபங்கள் என்னு மிவற்றாற் பிரகாசிப்பித்தல் சிவவழிபாட்டிற்கு இன்றி யமையாததாகும். தீபமாலையாவது கபிலநிறப் பசுவின் நெய்யினால் நிறைக்கப்பட்டது. கர்ப்பூரம் அகில் என்னுமிவற்றோடு சம்பந்தமாகத் திரிக்கப்பட்ட இழைகளை யுடையதும், அவியாததும், வட்டவடிவாகிய தோரணம் முன்னர்த் தூங்கப்பெற்றதும், திரிசூல வடிவாகச் செய்யப்பட்டதுமா யுள்ளது. தீபங்கள் ஒரு முகம், இருமுகம், மும்முகம், நான்குமுகம், பஞ்சமுகம் என்பனவும், புருடதீபம், நட்சத்திரதீபம், மயூரதீபம், இடபதீபம், நந்திதீபம், கும்பதீபம் என்பனவு மாம். பூசையின் மூவகையுள், தீபம்வரையிலும் அர்ச்சனை யெனவும், நைவேத்தியம் வரையிலும் பூசையெனவும், பலியிடுதலளவும் சாந்தி கருமம் என்றும் சொல்லப்படும். ஆலயங்களில் தீபமிடுங்கால் ஒன்று முதல் பத்துவரையில் இடுதல் அதமாதமமாம். பத்துமுதல் நூறுவரையில் இடுதல் அதமம். நூறுமுதல் பதினாயிரம் வரையில் இடுதல் மத்திமம். பதினாயிரம்முதல் இலக்ஷம் இறுதியாக இடுதல் உத்தமமாகும். அதற்கு மேலிடுவது உத்தமோத்தமம் எனப்படும்.

பகலில் இடுந்தீபங்களில் இரட்டிப்பாக இரவினிடுக. முதற் சாமம் கடைச்சாமங்களில் இடுவனவற்றிலும் இரட்டிப்பாக இடைச் சாமங்களிலிடுக. குற்றமில்லாத நற்பசுக்களின் நெய்கொண்டு இடுவது சாத்துவிக



தீபமாகும். வெள்ளாட்டு நெய், நல்லெண்ணெய் இவைகளா லிடப்படுவது இராசத தீபமாகும். எருமை நெய்யாலிடுவது தாமச தீபமாம். விருக்ஷங்களின் விதைகளில் உற்பத்தியான ஆமணக்குநெய் இருப்பைநெய், கடலைநெய் முதலியன கொண்டு இடுவது பைசாசதீபமாகும். தாமத தீபத்தைப் பார்க்கிலும் பைசாசதீபம் இழிந்ததும் யோக்கியமில்லாததும் என்று சிவாகமங்களால் இகழப்பட்டன. வர்த்திகள் தாமரை நூல், பருத்திநூல் கொண்டு செய்யப்படல்வேண்டும். இவ்வாறு பரசிவனால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட சிவாகமங்கள் முறையிடவும் எம்மவர் அதை எட்டுணையேனும் பார்க்கின்றாரல்லர். குளிக்கப்போய்ச் சேறு பூசுவார்போல, துர்நாற்றமுள்ள மண் எண்ணெய் கொண்டும், மெழுகுவர்த்தி யென்னும் அநாசாரப் பொருள்கொண்டும் விளக்கிடுகின்றனர். உற்சவ காலங்களிலே எண்ணெய்ச் செலவிற்கு அஞ்சிச் சாணவரட்டியிலே (எருமுட்டைகளிலே) மண்ணெண்ணெயைத் தோய்த்துக் கொளுத்திப் பிடிக்கின்றனர். தருமகர்த்தாக்களும் அதனைக் கண்டித்தல் கிடையாது. குருக்கள்மாருட் சிலரும் அவர் போன வழியே விடுகின்றனர். இதனால் நரகப் பிராப்தியன்றி எட்டுணையும் பலன்கிடையாது. தீபச்சுடர் ஓரங்குலம் அதமம். இரண்டு மூன்று அங்குல அளவு மத்திமம். அவற்றிற்கு மேற்பட்ட அளவின உத்தமம் என்க.

காலை, உச்சி, மாலை, யென்னு முக்காலங்களில் தீபங்கள் நான்குடன் பூசிப்பது அதமத்தி னதமம். காலை உச்சிகளில் நான்கு தீபங்களும், மாலை காலத்தில் எட்டுமாகப் பூசிப்பது அதமமாகும். முக்காலங்களினும் பன்னிரண்டு இடுவது மத்திமத்தி லதமம். முக்காலங்களினும் இருபத்து நான்கு கொள்வது மத்திமத்தின் மத்திமம். சங்க காகளத்தொனிகளோடும், அர்க்கிய புட்பங்களோடும் முப்பத்தாறு தீபங்களிடுவது மத்திமத்தி லுத்தமமாம். எழுபது தீபங்களேற்றிப் பூசித்தல் உத்தமத்தி லதமம். முக்காலங்களிலும் இரண்டு மாக்கால் அரிசிகொண்டு செய்யப்பட்ட அவிசு, பாயசம், சித்திர இலட்டுகங்களையும், அன்னங்களையும், அவ்வளவு சுத்தான்னத்தையும் படைத்து அர்த்த சாமத்தும் அவ்வாறு நைவேதித்து முப்பத்து நான்கு வாத்தியாதிகளோடு இறுநூறு தீபமுங்கொண்டு பூசிப்பது உத்தமத்தில் மத்திமமாம். நைவேத்தியங்கள் பத்து மரக்கால் அரிசியாற்செய்து, ஐம்பது வாத்தியங்களோடு முப்பத்திரண்டு உபசாரமும், ஐம்பது உருத்திர கணிகையர் நிருத்தங்களு மமைய முக்காலத்தும் ஐந்நூறு, ஆயிரம், பதினாயிரம், தீபங்கள் கொண்டு பூசிப்பது உத்தமோத்தமம் ஆகும். இத்தீபமிடுதல்

தேகம் என்னும் ஆலயத்திலேயுள்ள மனம் என்னுந் தகழியில் அறிவாகிய நெய்யை நிறைத்து, உயிர் என்னுந் திரியிலே பிராணன் என்னுங் காற்றை நிறுத்தி, ஆணவமலம் என்னும் இருணீங்கச் சிவஞானம் என்னுந் தூண்டாவிளக்கை யேற்றினோர் சிவபெருமானது திருவடிப் பேறாகிய பேரின்ப அத்துவித முத்தியை யடைவார் என்னும் உண்மையை விளங்கவைத்த குறியுமாம்.

## தேவாரம்.

உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்துநோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

விளக்கினார் பெற்றவின்ப மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகடா மருளுமாறே.

---

## சிவகீதை.

(156-வது பக்கத்தொடர்ச்சி.)

சீழைப்பாலைப்போல அறியாமையால் எண்ணப்பட்டது சிசுப்பருவமானது பெருங்கஷ்டமேயன்றோ, எவ்வளவுகாலம் ஸுஷும்னையெனும் நாடியானது கபத்தினால் சூழப்பட்டு உள்ளதோ அத்தனைகாலம் வரையில் அக்ஷராஸ்பஷ்டமாய் வார்த்தை சொல்ல இயலாதன்றோ.

இக்காரணத்தாலேயே கர்ப்பத்திலும் அழுவதற்கியலுவதேயில்லை. பின்னர் யௌவனப்பருவம் வந்ததும் யாதும் தெரியாதவனாய் மதித்தும் ஸ்திரீபோக மொன்றிலேயே ஆவலுற்றுச் சற்றுநேரம் பாடுவதும் சற்றுநேரம் ஓடுவதும் இவை முதலிய செய்கைகளைச் செய்கின்றான்.

வேகமாய் மரத்தினிலேறுகிறான். பெரியோர்களைத் துன்புறுத்துகின்றான். காமக்குரோதமதத்தால் யாதும் தெரியாதவனாய் எவர்களையும் லக்ஷியம் செய்கின்றதில்லை.

எலும்பு மாம்ஸம் நரம்பு இவைகளின் சேர்க்கைவடிவாகிய ஸ்திரீயின் விகாரமாய் காணப்படுவதும் கெட்ட நாற்றமுள்ளதுமாகிய தவளையின் பிளப்பு அடிவயிற்றுக்கு (ஆஸனத்துவாரத்திற்கு) நிகராகிய நிதம்பத்தில் ஆவலுடையவனாய் ஸ்திரீபோக இச்சையால் நொந்தமனதினால் மிக்க தவிக்கப்படுகின்றான்.

(இன்னும் வரும்.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 MAY 1917 MADRAS

# சைவம்.

மலர் 2.] நள௵ மார்கழி௴—1916௵ டிசம்பர்௴ [இதழ் 12

ஊன டைந்த வுடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமாற்
றேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மாந டஞ்செய் வரதர்பொற் றாடொழ.

## சிதம்பர தத்துவார்த்தம்.

சிதம்பரதத்துவார்த்தமானது அநுபூதிமான்களாகிய சிவஞானிகளுக்கேயன்றி மற்றவர்களுக்கு உணர்வரியது. அதைப்பலநூல்கள் விரித்துக்கூறுகின்றனவெனினும் அநுபவஞானம் ஒருசிறிதும் இல்லாத எம்போலிகட்கு அது பெரும்பாலும் வெறுஞ்சொன் மாத்திரமாய் அறிவுக்கெட்டாமலிருக்கும். ஆதலால் அதனை விரித்துக்கூறமாட்டாமல் என் சிற்றறிவுக்கெட்டியவரையில் இங்குச் சுருக்கிவரைதலுற்றேன்.

சிதம்பரதத்துவார்த்தத்தின் பெருமையும் அது குற்றமற்ற அநுபூதிமான்களுக்கே உணரவரும் என்பதும்,

தற்பரமாய்ப் பரபதமாய்த் தாவிலநு பூதியதா
யற்புதமா யாரமுதா யானந்த நிலயவொளிப்
பொற்பினதாய்ப் பிறிவிலதாய்ப் பொருளாகி யருளாகுஞ்
சிற்பரமா மம்பரமாந் திருச்சிற்றம் பலம்போற்றி.

என்னுங் கோயிற்புராணச் செய்யுளால் உணரலாகும்.

இச்செய்யுளின் பொருள்:—

தற்பரமாய்=ஆன்மாவுக்கு மேலானதாய்—பரபதமாய்=மேலாகிய பொருளாய்—தாவு இல் அநுபூதியதாய்=குற்றமில்லாத அநுபவத்தாலறியப்படுவதாய்—அற்புதமாய்=ஆச்சரியத்தை விளைவிப்பதாய்—ஆர் அமுதாய்=அரிய அமிர்தமயமாய்—ஆனந்தநிலய ஒளிப்பொற்பின

தாய்=ஆனந்தநிருத்தப் பிரகாசத்தினது மிகுதியையுடையதாய்—பிறிவு இலதாய்=(சிவத்தோடு) நீக்கமில்லாததாய்—பொருளாகி=உண்மையாய்—அருளாகும்=சத்திரூபமாயுள்ள—சிற்பரம் ஆம் அம்பரம் ஆம் திருச்சிற்றம்பலம்போற்றி = சிதம்பரமாகிய திருச்சிற்றம்பலம் துதிக்கப்படுவது (எ—று).

சிதம்பரம் என்னுஞ்சொல் சித் அம்பரம் எனப்பிரிந்து ஞானகாசம் என்றுபொருள்படும். சிவபெருமானுக்கு ஞானமே திருமேனியாதலினாலும், அவர் ஞானிகளின் உள்ளத்தில் பிரகாசிக்கும் பேரொளியாயிருத்தலாலும், சிதம்பரம் அவர் திருமேனியெனவும், அவர் நடிக்கும் இடம் எனவும் சொல்லப்படும். சிதம்பரம் என்பது சிற்றம்பலம் என்று மருவியது.

சிதம்பரத்திற்கு எண்ணிறந்தபெயர்களிருக்கின்றன. அப்பெயர்களாலேயே அதின் தத்துவார்த்தம் நன்குவிளங்கும். அவற்றுள் சில வருமாறு:—

## கோயிற்புராணம்.

அத்தன் பாதத் துவனித் தநடத் தமரும் பொதுவின் பெயர்மன் றமலஞ்
சத்தும் பாரின் மயகோ சமகத் தனிபுண் டரிகங் குகைவண் ககனஞ்
சுத்தம் பரமற் புதமெய்ப் பதமச் சுழுனு வழிஞா னசுகோ தயநற்
சித்தம் பரமுத் திபரப் பிரமந் திகழுஞ் சபைசத் திசிவா லயமே.

(இ—ள்) அத்தன் பாதத்துவன்=உலகத்துக்குப் பிதாவும் தத்துவங்களைக் கடந்தவருமாகிய சிவபெருமான்—நித்தநடத்து அமரும் பொதுவின்பெயர்=அனவரததாண்டவத்திலே (திருவுளம்) பொருந்தப்பெற்ற அம்பலத்தின் பெயர்களாவன—மன்று=மன்றும்—அமலம்=அமலமும்—சத்து=சத்தும்—உம்பர்=உம்பரும்—இரண்மயகோசம்=இரண்மயகோசமும்—மகத்=மகத்தும் — தனி = தனியும் — புண்டரிகம்=புண்டரீகமும்—குகை=குகையும் — வண்ககனம் = வளவியககனமும்—சுத்தம்=சுத்தமும்—பரம்=பரமும்—அற்புதம்=அற்புதமும்—மெய்ப்பதம்=மெய்ப்பதமும்—அச்சுழுனுவழி ஞானசுகோதயம்=அந்தச் சுழுனுவழிஞான சுகோதயமும்—நற்சித்தம்பரம் = நல்லசிதம்பரமும்—முத்தி = முத்தியும் — பரப்பிரமம் = பரப்பிரமமும் — திகழும் சபை=விளங்காநின்றசபையும்—சத்தி= சத்தியும்—சிவாலயம்=சிவாலயமுமாம்.



சர்வான்மாக்களுக்கும் பொதுவாய்ச் சம்சாரவழக்கறுக்கும் அம்பலமாதலின் மன்று எனவும், இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கியிருத்தலின் அமலம் எனவும், காலத்தால் வரையறுக்கப்படாமல் உள்ளதாதலின் சத்து எனவும், மேலாகிய பொருளாதலின் உம்பர் எனவும், பொன்மயமாகிய *சபையாதலின் இரண்மயகோசம் எனவும், எவற்றினும் பெரிதாதலின் மகத் எனவும், சுத்தகேவலமாதலின் தனியெனவும், பூமிக்கு இருதய கமலமாதலின் புண்டரீகம் எனவும், யாவர்க்கும் புகவிடமாதலின் குகையெனவும், நித்தமும் வியாபகமுஞ் சுத்தமுமாகிய பரமாகாசமாதலிற் ககனம் எனவும், தூய்தாதலிற் சுத்தமெனவும், எல்லாப்பொருட்கும் மேலாதலிற் பரம் எனவும், காணுந்தோறும் காணுந்தோறும் புதிது புதிதாயிருத்தலின் அற்புதம் எனவும், சத்தியத்துக்கு இடமாயிருத்தலின் மெய்ப்பதம் எனவும், சுழுமுனுமார்க்கத்திலே ஞானானந்தம் உதிக்குமிடமாதலின் சுழுனுவழி ஞான சுகோதயம் எனவும், பூதாகாசம்போலச் சடமாகாது சித்தேயாதலிற் சிதம்பரம் எனவும், பாசநீக்கத்தானமாதலின் முத்தி எனவும், மகாமாயைக்கு மேலாதலின் பரப்பிரமம் எனவும், எக்காலத்தும் எல்லாப்பொருளினும் விளங்குதலிற் சபை எனவும், சிவசத்திவடிவாதலின் சத்தி எனவும், சிவத்துக்கு ஆலயமாதலிற் சிவாலயம் எனவும் பெயர் பெற்றதென்றறிக.

சிவபெருமான் ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலாத ஞானப்பெருவெளியாயிருப்பதுமன்றி, நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆன்மா, சூரியன், சந்திரன் என்னும் இவ்வெட்டுப்பொருள்களோடு, உடலுயிர்போலவும், கண்ணொளியுங்கதிரொளியும்போலவும், பிரிவறுமத்துவிதமாய்க்கலந்து, அவைவேறு தாம்வேறு என்னுதபடி அவைகளைத் தமது திருமேனியாகக் கொண்டிருக்கிறார். அதனால் அவரை அட்டமூர்த்தியென்று மறைகள் முழக்கும்.

## திருவாசகம்.

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகேழெ னத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

## தேவாரம்.

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி யியமான னாயெறியுங் காற்று மாகி
யருநிலைய திங்களாய் ஞாயி றாகி யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளை யாகி நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே.

"ப்ரிதிவ்யேபவ, ஆபஸ்சர்வ, அக்னேருத்ரோ, வாயுர்பீம, ஆகாசஸ்யமஹாதேவ, ஆத்மாநஃ பசுபதிஃ, சூர்யஸ்யோக்ரஃ, சந்த்ரஸ்ய ஸோமஃ" என்னும் வேதவசனத்தால், சிவபெருமான் பிருதிவி என்னுந் தநுவுக்குப் பவன் என்னும் நாமத்தாலும், அப்பு என்னுந்தநுவுக்கு ஸர்வன் என்னும் நாமத்தாலும், அக்கினி என்னுந்தநுவுக்கு உருத்திரன் என்னும் நாமத்தாலும், வாயு என்னுந்தநுவுக்குப் பீமன் என்னும் நாமத்தாலும், ஆகாசம் என்னுந்தநுவுக்கு மகாதேவன் என்னும் நாமத்தாலும், ஆத்மா என்னுந்தநுவுக்குப் பசுபதி என்னும் நாமத்தாலும், சூரியன் என்னுந்தநுவுக்கு உக்கிரன் என்னும் நாமந்தாலும், சந்திரன் என்னுந்தநுவுக்குச் சோமன் என்னும் நாமத்தாலும் அதிஷ்டானமும் சைதன்யமுமாயிருக்கிறார் என்பது பெறப்படும்.

பிருதிவிமுதலிய எட்டுப்பொருள்களும் அவருக்குச் சரீரமாயிருத்தலினால் அவை அவரைவணங்கும் இடங்களாயிருக்கின்றன. ஆதலினால், அவர் காஞ்சி, திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் என்னும் தலங்களில் பிருதிவிமுதலிய பஞ்சபூதரூபமாக வணங்கப்படுகின்றனர். இத்தலங்களுள் அவரைப் பரமாகாசரூபமாக வணங்குமிடம் சிதம்பரத்தலமாம்.

பிருதிவி தத்துவம் கோடியோசனை நீளமும் அகலமும் உடையதாய் ஆயிரகோடி யண்டங்களையுடையதாம். பிருதிவி தத்துவத்திற் பத்துமடங்கு அப்புதத்துவமும், இதிற் பத்துமடங்கு தேயுதத்துவமும், இதிற் பத்துமடங்கு வாயுதத்துவமும், இதிற் பத்துமடங்கு ஆகாசதத்துவமுமிருக்கும். வாயுமுதலிய நான்கு பூதங்களும் ஆகாயத்தினின்றும் தோன்றிநின்று ஆகாயத்தில் ஒடுங்குவதுபோல் பிரபஞ்சம் யாவும் எப்பொருளிடத்தினின்றும் தோன்றி யொடுங்குமோ அப்பொருள் சிதம்பரம் என்று சொல்லப்படும். "சமஸ்த அண்டங்களின் தொகுதியாகிய குமிழிக்கூட்டங்கள் தோன்றப்பெறும் இரத்தினாகரமாகிய பரப்பிரகிருதிரூபபராசத்தியே சிதம்பரம் எனப்படும். இந்தப் பிரகாச ரூபத்தையுடைய பிரமம் "ஆகாசசரீரம்" என்று சைவபாஷ்யக்காரர் கூறியிருக்கின்றனர். "இந்தச்சேதனாசேதனப் பிரபஞ்சமெல்லாம் சிதம்பரசத்தியினின்றும் உண்டாயின; அச்சிதம்பரசத்தியைப்போய் அடைகின்றன" என்று சாந்தோக்கிய உபநிடதங்கூறுகின்றது.

அன்றியும், இப்பாரதகண்டத்துச் சிவாலயங்களிலுள்ள சிவமூர்த்தங்களின் கலைகளெல்லாம் அர்த்தராத்திரியில் சிதம்பரத்திற்போய் ஒடுங்கும். ஆதலால் சிதம்பரம் ஒன்றே கோயில் என்று வழங்கப்படுகின்றது. ஏனைய சிவாலயங்களெல்லாம் அருணாசலேசுரர்கோயில், ஏகாம்பரநாதர்கோயில் என்பன வாதியாக அடைச்சொற்களோடுங்கூடியே வழங்கப்பெறுகின்றன.



பலகோடி சனனங்களை யெடுத்தெடுத்துக் களைத்திருக்கும் ஆன்மாக்களுக்கு இளைப்பாறுதலைத்தரவேண்டி சிவபெருமான் சர்வசங்கார காலத்தில் பிரபஞ்சமனைத்தையும் தம்மிடம் ஒடுக்கிக்கொண்டு உமாதேவியாரோடு தன்னந்தனியாய்நின்று ஆனந்தநிருத்தஞ்செய்வர். அவர் அவ்வாறு நிருத்தஞ்செய்யுமிடம் ஞானாகாசம் எனவும், அக்காலம் நள்ளிருட்காலம் என்றும் சொல்லப்படும்.

## திருவாசகம்.

நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே.

## இரட்டையர் தைவிகஉலா.

"அல்லினுமை கைத்தாளங் கொட்டநடங் காண்பவரார்"

சிவபெருமானுக்குச் சொரூபநிலையெனவும் தடத்தநிலையெனவும் இருவேறு நிலைகளுண்டு. அவர் குணம் குறி செயல் ஒன்றுமின்றி வெறும் ஞானமயமாய் இருக்கும்நிலை சொரூபநிலையும், ஆன்மாக்களுக்கிரங்கி நவந்தருவடிவங்கொண்டு பஞ்சகிருத்தியஞ் செய்யும்நிலை தடத்தநிலையுமாம். இவற்றுள் சொரூபநிலையே சிதம்பரமாம். இது சிதம்பர இரகசியம் என்றும் சொல்லப்படும். தடத்தநிலை நடராஜவடிவமாம். ஆதலால் சிதம்பரமானது அவருடைய இருநிலைகளையும் விளக்கிக் கொண்டிருக்கும் இடமாம்.

ஸ்ரீ நடராஜப் பெருமான் திருமுன்னர் இருக்கும் திருவாயிற்படி ஸ்ரீ பஞ்சாக்கரப்படி என்று சொல்லப்படும். அது ஸ்ரீ பஞ்சாக்கரத்தியான வாயிலாகவே அவரை யடைதல்வேண்டும் என்பதை விளக்கும்.

(இன்னும்வரும்.)

பத்திராசிரியர்.

# முத்திசோபானம்.

## சிவஞானசித்தியார்.

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
　　தாதமார்க்க மென்றுஞ் சங்கரனை யடையு
நன்மார்க்க நாலவைதா ஞான யோக
　　நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
　　சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமா
முன்மார்க்க ஞானத்தா லெய்து முத்தி
　　முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபத மென்பர்.

அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம் என்னும் நால்வகை நெறியிற் பிறப்பவையாவை? அவையெல்லாம் பசுக்கள்; அவ்வாறு பிறத்தலில்லாதது யாது? அது பதிப்பொருள்; என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்குந் தம்முள் வேற்றுமை அறியும்வண்ணம் நிற்பது. ஆதலால் வேதாகம புராணேதிகாசமுதலிய நூல்களிலே மற்றைத்தேவர்களெல்லாம் அவ்வாறு பிறந்திறத்தல்சொல்லப்படுதலாலும், சிவபெருமானுக்கு அது உண்டென்பது சொல்லப்படாமையாலும் அவரே முழு முதற்கடவுளெனத் துணியப்படும். அத்தகைய சருவஞ்ஞதை, திருத்தி, அநாதிபோதம், சுவதந்திரதை, அலுப்தசத்தி அனந்தசத்தி என்னும் அறுகுணங்களையும்; சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களையும் இயல்பாகவேயுடைய அநாதிமல முத்தபதியாகிய சிவபெருமான் அநாதிமலபெத்த பசுக்களாகிய ஆன்மாக்களின் மேல்வைத்த பெருங்கருணையினாலே அவைகளுக்குப் பசுத்துவநீக்கமும் சிவத்துவவிளக்கமும் சித்தித்தற்பொருட்டு தமது ஊர்த்துவமுகமாகிய ஈசான முகத்தினின்றும் காமிகாதி இருபத்தெட்டாகமங்களையும்; ஏனை தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் நான்கு முகங்களினின்றும் இருக்காதி நான்கு வேதங்களையும் முதனூலாக அருளிச்செய்தனரென்று காமிகாகமாதிகளிலும் கந்தபுராண ஈசசங்கிதையின்கண்ணுள்ள *ஆலாசியமான்மியம் முதலியவைகளிலும் கூறப்பட்டுள்ளன. இம்முதனூலினின்றும் உருத்திரமூர்த்திகளாலும், மகரிஷிகளாலும், இருநூற்றேழுபாகமங்களும், பதினெண்சுபபுராணங்களும், பதினெண்ணுபபுராணங்களும், மூன்றிதிகாசங்களும் வழிநூலாக அருளிச்செய்யப்பட்டன. ஏனை அட்டப்பிரகரணங்

*திருவிளையாடற்புராணம் வேதத்துக்குப் பொருளருளிச்செய்தபடலம் ௩௪, ௩௫,



களும், சடங்கங்களும் பிற்காலத்துள்ள ஆப்தர்களால் சார்பு நூலாக அருளிச்செய்யப்பட்டன. இம்முதல் வழி சார்பு நூல்களினின்றே சர்வ சாஸ்திரங்களுந் தோன்றின.

இவ்வேதாகம முதலிய சகலகலைகளும் சிவபெருமானது அந்தரங்க பகிரங்க வழிபாட்டைக் கூறுநிற்கும். இவ்வழிபாடாகிய சிவபுண்ணியப்பணி ஒரு ஜென்மத்திற்கிடைப்பதன்று; அது பூர்வஜென்மங்களில் புறச்சமயநெறியினின்று கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனைநயவாமை, வரைவின்மகளிர் நயவாமை முதலிய குற்றங்களினீங்கி, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தந்தை தாய் முதலிய பெரியோர்களை வழிபடுதல் முதலிய குணங்களினின்றொழுகிய புண்ணியமேலீட்டால், பிற்சென்மங்களில் அகச்சமயங்களிற்பிறந்து அந்நெறிபற்றியொழுகிய பெரும் புண்ணியத்தால் கிடைத்தல்வேண்டும்.

சமயங்கள்—புறப்புறச்சமயமும், புறச்சமயமும், அகப்புறச்சமயமும்,; அகச்சமயமுமென *நான்குவகைப்படும்; அவற்றுள் புறப்புறச்சமயம்—உலோகாயதம், மாத்திமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம் என அறுவகைப்படும். புறச்சமயம்—தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என அறுவகைப்படும். அகப்புறச்சமயம்—பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், அயிக்கவாதம் என அறுவகைப்படும். அகச்சமயம்—பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுரவவிகாரவாதம், சிவாத்துவிதவாதம் என அறுவகைப்படும். இவையெல்லாம் அகம், புறம் என்றிரண்டாயடங்கும். இவ்வாறு இரண்டாயடக்கியும் அவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி நான்காக வகுத்துக் கூறுதலுமமையுமென்பது; தொல்காப்பியத்தில் அகம், புறம் என்றிரண்டாய் அடக்கிக்கூறிய பொருளைத் தம்முள் வேறுபாடுநோக்கி பன்னிரு படலத்தில் அகம்-அகப்புறம்—புறம்-புறப்புறம் என நான்காகப் பகுத்தோதியவாற்றானுமுணர்க.

ஈண்டுகூறிய சமயத்தாருள் புறப்புறச்சமயத்தாரறுவரும் வேதசிவாகமங்களை நிந்திக்கும் நாத்திகராயினும் ஒரு நூலென்றும் பிரமாணமென்றுங்கொண்டு நெறிக்கண்ணே நிற்றலால் அவர்சமயம் புறப்புறச்சமயமென வேறு வைத்தெண்ணப்பட்டது. புறச்சமயத்தாரறுவரும் வேதத்தைப் பிரமாணமெனப் பொதுவகையாற் கொள்ளினும் அவருள் தார்க்கிகர்வேதத்தைச் †சுவதப்பிரமாணமென்று கொள்ளாமையோடு

* இந்நாற்கூற் றறுவகைப்பேதமும் சிவஞானபாடியத்துட்காண்க. † சுவதப்பிரமாணமென்பது—தானே பிரமாணமாவது. பரதப்பிரமாணமென்பது—ஈசுரனாற் சொல்லப்பட்டமையிற் பிரமாணமாவது.

வேதப்பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும், மீமாஞ்சகர் கருமகாண்டத்தைப் பிரமாணமெனக் கொண்டு ஞானகாண்டத்தை இகழ்தலானும், ஏகான்மவாதிகள் ஞானகாண்டமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும், ஏனைமூவரும் வேதவாக்கியங்களில் தத்தம் மதத்திற்குப் பொருந்துமாத்திரையே எடுத்துக் கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங்கொள்ளாமையானும், வேதநிந்தகர்களாகிய இவ்வறுவரும் புறச்சமயிகளென்று வேறு வைத்தெண்ணப்பட்டனர். அகப்புறச்சமயத்தாராறுவருள் பாசுபதர் முதலிய ஐவரும் வேதாகமமிரண்டிற்கும் பொதுவகையாற் பிரமாணங்கொள்ளினும் அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபத முதலிய உபாகமாதிகட்குச் சிறப்புவகையாற் பிரமாணங் கோடலானும், வேதாகமங்களில் ஆகாவென விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும், அயிக்கவாத சைவர் வேதம் சிவாகமம் இரண்டிற்கும் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு அவற்றில் விதித்த வழி ஒழுகுவாராயினும் ஆணவமலத்துண்மை கொள்ளாமையோடு அதனுண்மை சாதிக்கும் சிவாகமங்களை இகழ்தலானும், இவ்வறுவரும் அகப்புறச்சமயிகளென வேறு வைத்தெண்ணப்பட்டனர். ஏனை அகச்சமயத்தாராறுவரும் பொருளுண்மையெல்லாம் சித்தாந்த சைவரோடொப்பக்கொள்ளும் அந்தரங்க உரிமையுடையாராயினும் அவ்வப்பொருள்கட்குக் கூறும் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் இவர்சமயம் அகச்சமயமென வேறு வைத்தெண்ணப்பட்டது.

இனிப் * புண்ணியமானது பசுபுண்ணியமென்றும் பதிபுண்ணியமென்றும் இருவகைப்படும்—அவற்றுள் தண்ணீர்ப்பந்தல், சத்திரமமைத்தல் முதலிய முப்பத்திரண்டு தருமங்களைச் செய்தல் பசுபுண்ணியமெனப்படும். சரியை கிரியையாதிகள் செய்தல் பதிபுண்ணியமெனப்படும். அது அபுத்திபூர்வம், புத்திபூர்வமென்று இருவகைப்படும். அவற்றுள் அபுத்திபூர்வமாவது—வேள்விமுதலியவற்றுட்போல ஏனைத்தெய்வங்களினின்று பொதுநீக்கி அறியுமாறின்றிச் சிவபிரானைநோக்கிச் செய்வதென்றும், அந்நோக்கமுமின்றி மாவலிச்சக்கரவர்த்தி முற்பிறப்பிற்செய்ததுபோலச் செய்தவினை யாதானுமோராற்றால் சிவபிரானுக்குரிய பணியாய் முடிவதுமென இருவகைப்படும்.

இனிப் பொதுநீக்கிச் செய்வதாகிய சிவபுண்ணியமும் பொதுவென்றும் சிறப்பென்றும் இருவகைப்படும்; அவற்றுள் பொதுவாவது—சிவ

* சிவபுண்ணியப் பாகுபாடுகளும், சரியையாதி பேதங்களுந் திராவிடமாபாடியத்திற் கூறப்பட்டவை.



புண்ணியத்துக்கு அங்கமாகிய சிவதீக்ஷையின்றிச் சிவபுண்ணியஞ்செய்தல். சிறப்பாவது—அங்கமாகிய சிவதீக்ஷையுடையராய்ச் சிவபணி செய்தல். இவையிரண்டும் பத்திகாரணமாக உண்மையாற் செய்வதும், புகழ் பொருள் முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்வதுமென வெவ்வேறாக இருவகைப்படும். அச்சிறப்புச் சிவபுண்ணியமிரண்டும் சரியை, கிரியை, யோகம், அவற்றால் நிகழும் ஞானம் என ஒவ்வொன்று நந்நான்காய் விரியும். அந்நான்கினுள்ளும் சரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம், கிரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம்; யோகத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம்; ஞானத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் என ஓரோவொன்று நந்நான்காய் முப்பத்திரண்டு வகைப்பட்டு, விரிவால் இன்னும் பல திறப்படும்.

அவற்றுள் திருக்கோயில் அலகிடல், மெழுகல் முதலியன சரியையிற்சரியை. இருபத்தைந்து மகேசுர மூர்த்திகள் முதலிய பரிவாரமூர்த்திகளில் ஒருவரை வழிபடல் சரியையிற் கிரியை. சங்கார உருத்திரரைத் தியானித்தல் சரியையில் யோகம். அத்தியான பாவனையின் உறைப்பினாற்றோன்றும் அநுபவம் சரியையில் ஞானம். சிவபூசைக்கு வேண்டுவனவாகிய உபகரணங்களைச் சேகரித்தல் கிரியையிற் சரியை. அந்தப் பஞ்சசுத்திமுன்னாகச் சிவபூசை செய்தல் கிரியையிற் கிரியை. இவ்வந் பூசையை அகத்தே கற்பித்துச்செய்தல் கிரியையில்யோகம். இயமம், நியமம், தரியாகத்திற்றோன்றும் அனுபவம் கிரியையில் ஞானம். இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரம் தாரணை என்னும் இரண்டும் யோகத்திற்கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதியோகத்தில் ஞானம். ஞானநூற்பொருளை நல்லாசிரியன் மாட்டுக்கேட்டல் ஞானத்திற் சரியை. அந்நூற்பொருளைச் சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. அதனைத் தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டை கூடுதல் ஞானத்தில் ஞானம்.

இவற்றுள் புகழ், பொருள் முதலிய உலகப்பயனை நோக்கிச்செய்யும் உபாயச் சரியையிற் சரியைமுதல் உபாயஞானத்தில் ஞானமீறாகிய பதினாறு வகையினின்றும் பல்வேறுவகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வப்புண்ணியங்களுக் கேற்பக் காலாக்கினி உருத்திரபுவனமுதல் பிரகிருதிதத்துவ மத்தகத்தில் சிகண்டருத்திர புவனமீறாகிய அவ்வப்புவனபதிகளுலகத்தில் சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களைப் பெறுதலாம்.

பத்திகாரணமாக உண்மையாற்செய்யும் உண்மைச்சரியையிற் சரியை முதல் உண்மையோகத்தில் ஞானமீறாகிய பன்னிரண்டு வகையி

னின்றும் பலவேறுவகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வப்புண்ணியங்களுக் கேற்ப சீகண்டருத்திர புவனமுதல் சுத்தவித்தியா தத்துவத்திற்குக் கீழுள்ள அவ்வப் புவனபதிக ளுலகத்தில் சாலோக சாமீப சாரூப சாயுச்சியமென்னும் பதமுத்திகளைப் பெறுதலாம்.

உண்மைஞானத்திற் சரியை கிரியை யோகங்களில் நின்றும் பலவேறுவகைப்பட்டுவிரியும் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வப் புண்ணியங்களுக் கேற்ப சுத்தவித்தியாதத்துவ முதலிய அதிகாரதத்துவ போகதத்துவங்களில் வைகும் அஷ்ட வித்தியேசுரர் சப்தகோடி மகாமந்திரர் முதலிய புவனபதிக ளுலகத்தில் சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியமென்னும் அபர முத்திகளைப் பெறுதலாம்.

உண்மைஞானத்தினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியும் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்தைவிட்டு ஏனை ஞானங்களுக்கெல்லாம் பயன் இலயதத்துவத்தில் பலவேறுவகைப்பட்ட சாலோக சாமீப சாரூப சாயுச்சிய மென்னும் பராபர முத்திகளைப் பெறுதலாம்.

இனிஇல்லை யெனத்தக்க முடிவாகிய ஞானத்திற்குப் பயன் வைதிக சைவ சுத்தாத்துவித சித்தாந்த பரபோக முத்தியாகிய பரமுத்தியைப் பெறுதலாம்.

முற்கூறிய சரியை முதலியவற்றின் இயல்பாவது யாதெனின்—அநாதி மலமுத்த பதியாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் தம்மைச் சோபான முறையான் உணர்ந்துய்தற்பொருட்டு அதிசூக்குமமாகவும், சூக்குமமாகவும், தூலமாகவும் மூவகை வடிவங்கொண்டருளுவர். அவ் வடிவங்களுள் வேதாகமங்களில் விதித்தவாறு தூலத்திருமேனியாகிய சகளவடிவ மாத்திரத்தைப் பொருளெனக்கொண்டு காயத்தொழிலாகிய புறத்தொழின் மாத்திரையானே வழிபடுவது சரியை. சூக்கும வடிவாகிய சகளநிட்களத் திருமேனிமாத்திரத்தைப் பொருளெனக்கொண்டு புறத்தொழில், அகத்தொழில் என்னுமிரண்டானும் அவ்வாறு வழிபடுவது கிரியை. அதிசூக்கும வடிவாகிய நிட்களத் திருமேனிமாத்திரத்தைப் பொருளெனக்கொண்டு அகத்தொழின் மாத்திரையானே அவ்வாறு வழிபடுவது யோகம். இவ்வாறு முறையே அநுட்டித்து வரவரநிகழும் பக்குவ முதிர்ச்சியால் உண்மையுணர்வு விளங்கி அகண்டாகாரநித்த வியாபகச் சச்சிதானந்தப் பழம்பொருளிடத்தே அம்மூன்று திருமேனியையும் அம்மூன்று வழிபாட்டுத் தொழில்களையும் விட்டு அறிவுத்தொழின் மாத்திரையானே வழிபடுவது ஞானம்.



இச்சரியையாதிகளிற் றலைப்படுவதற்கு சத்திநிபாதமே இன்றியமையாத கருவியாம். இது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்குவகையாய் அவற்றுள் ஒவ்வொன்றும் நன்னான்காய்ப் பதினாறுவகைப்பட்டு விரிவாற் பல திறப்படும். இவற்றை முறையிற் பற்றியொழுகுதலே *சரியையிற் சரியையாதி ஞானத்தில் ஞானமீறாகிய சோபானக்கிரமமாம். இச்சத்திநிபாதம் மலபரிபாகம் எய்தப்பெற்றாலன்றிப் பெறுதலரிது. மலபரிபாகமாவது—மலம் தனது சத்தி தேய்தற்குரிய துணைக்காரணங்களோடு கூடுதலாம். இம்மலபரிபாகமும் இருவினையொப்பு எய்தப்பெற்றாலன்றிப் பெறுதலரிதாகலின் அவ்விருவினையொப்பும் ஒரு தலையான் வேண்டப்படும். அவ்விருவினையொப்பாவது புண்ணியபாவமிரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்புப் பிறத்தலேயாம்.

இச்சரியையாதிகள் *அரும்பு மலர் காய் கனிகள்போல ஒன்றுக்கொன்று காரணகாரியமாய் நிகழவுள்ளன. எங்ஙனம் அரும்பின்றேல் மலரும், மலரின்றேற்காயும், காயின்றேற் கனியும் இல்லையோ அங்ஙனம் சரியையின்றேற் கிரியையும், கிரியையின்றேல் யோகமும், யோகமின்றேல் ஞானமும், எய்துவதின்று. இஞ்ஞானம் தத்துவவாயிலாக ஆன்மாவின்க ணிகழும் பாசஞானத்தாலும் யானே பிரமமெனத் தருக்குற்றெழும் பசுஞானத்தாலும் அறியப்படுமாறின்றி †"காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" ‡"அவனருளாலே யவன்றாள் வணங்கி" எனவும் வரும் திராவிடவேதப் பனுவற்படி பதிஞான மொன்றானே அறியுந்தாத்தது.

இப்பதிஞானமாவது காலாக்கினியுருத்திர புவனமுதல் அநாசிருத புவனமீறாகிய இருநூற்றிருபத்து நான்கு புவன போகங்களும் இதற்கு முன் அநுபவித்துக் கழித்தமையால் அவற்றைக் கான்ற சோறென அருவருத்துவிட்டு மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா, புவனாத்துவா என்னும் அறுவகையத்துவாவுட்பட்ட அசுத்தப்பிரபஞ்சம், சுத்தாசுத்தப்பிரபஞ்சம், சுத்தப்பிரபஞ்சம் என்னும் மூவகைக் காரியப்பிரபஞ்சமும் காரணரூபத்தில் சிறிதும் காணப்படாமையால் அவற்றை, "இந்திரசாலங் கனவுகானலினீர்" என முழுப்பொய்யெனக்கண்டு அவ்வாறு கண்ட காட்சி சலியாதிருக்கப்பெறின் அப்பிரபஞ்சத்திற்கு விலக்ஷணமான ஞானசொரூபம் ஆண்டினிது விளங்கித் தோன்றும். அது தோன்றவே அதன்கட்பெருங்

* தாயுமானவர் பராபரக்கண்ணி, † திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், ‡ திருவாசகம்.

காதல்மீதூரும். அது மீதூரவே அவ்வன்பின்வழித்தாய்ப் பேரின்பமாய் ஆன்மவறிவின்கண்ணே விளங்கித்தோன்றும் அந்த ஞானத்திற்கு முதலாகிய ஞேயப்பொருள்.

அஞ்ஞேயத்தைக் கண்டகாட்சி சலியாததாகப்படுதலே நிட்டையெனப்படும். அக்காட்சி ஒரோவழி வாதனைவயத்தால் பெரும்பான்மையுஞ் சலிக்கப்பெறுதல் இயல்பேயாம். அங்ஙனம் சலியாதிருத்தற்பொருட்டு ஒரு தலையான் வேண்டப்படுவது சிவோகம்பாவனையும், திருவஞ்செழுத்து மந்திரமும், அந்தரியாகக்கிரியையுமாம். அவற்றுள் சிவோகம்பாவனையாவது உடம்பே நானென்றும் அது நீங்கியவழிப் பிரமம் நானென்றும், இங்ஙனம் விபரீதமாக அறிகின்ற ஆன்மாவானது சுட்டுணர் வுட்பட்ட அப்பாசமுமன்று, சுட்டுணர் விறந்து நின்ற அப்பதிப்பொருளுமன்று, இரண்டிற்கும் வேறெனக்கண்டு அனைப் பதிப்பொருள் வேறாயினும் கண்ணொளியும் கதிரொளியும்போல வியாப்பிய வியாபகபாவத்தால் வேற்றுமை சிறிதுந் தோன்றாதவாறு ஒற்றித்து நிற்றல். அஞ்செழுத்து மந்திரமாவது அங்ஙனம் சிவமும் ஆன்மாவும் உடையானும் உடைமையுமாய் நிற்கும் பரிசை அஞ்செழுத்தைக் கணிக்குமுறைமையின் வைத்துச் சிகர வகர யகரங்கள் முறையே தற்பதப்பொருளும் தொம்பதப்பொருளும் அசிபதப்பொருளுமா முறைமைநோக்கித் தன்னறிவு அதன் வயத்தாம்படி யுறைத்துநிற்றல். அந்தரியாகமாவது—இதயம், உந்தி, புருவநடு என்னும் இவற்றை முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தானமாகக் கருதிக்கொண்டு அம்முதல்வனை ஐம்பொறியடக்கல், கொல்லாமை, பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அத்திருமந்திரத்தாலர்ச்சித்தலாம். இங்ஙனம் அந்தரியாக முதலிய மூன்றும் ஒருவழிப்பட நின்றுகொண்டு அவ்வஞ்செழுத்தை ஆசிரியனறிவுறுத்த ஒருமொழிப்படி நெஞ்சழுத்திக்கணித்தல் செய்யற்பாற்று. இக்கருத்துப்பற்றியன்றே ஞானசாதனங் கூறும் ஒன்பதாஞ் சூத்திரத்துள் "தியாயேத்" என்று கோஷித்து நின்றது வடமொழிச் சிவஞானபோதம். இங்ஙனம் அவனே தானேயாகிய வந்நெறி ஏகனாகி யிறைபணி நின்று அயராவன்புசெய்து அரன்கழலைத் தலைப்பட்டுக் கடைப்பிடிப்பதே வேதாகமங்களின் முடிபெனக் கூறுவர் பெரியார்.

இவ்வயராத அன்புசெய்து அரன் கழலடைந்த அன்பர்க்குச் சிவன்முத்தி நிலைக்கண் தேகம் நிற்குமளவும் பிராரத்த வினை அத்தேகத்தைப்பற்றி நிற்றலான் அஃது அவருக்கு ஒரோவழி வாசனை வயத்தால் குலாலன் வினைகளாயும் சக்கரஞ் சுழலுமாறுபோல வந்து தாக்



கும்: தாக்கவே, அது சார்பாக விருப்பு, வெறுப்புக்கள் நிகழாநிற்கும். நிகழவே, பார்த்தவிடமெல்லாம் பரமே பார்த்திருப்பார்க்குப் பாராதி பூதகாரியவிடயப் பொருள்கள் காட்சிப்படும். படவே அவற்றைச்சுட்டி யுணர்வதாகிய விபரீதவுணர்வு மேம்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்தும். இங்ஙனம் கீழ்ப்படுத்த எழும் ஆன்மஞானசத்தியை முற்கூறியபடி மும்மலங்களைக் களையும் நிட்டையினும், ஆன்ம இச்சாசத்தியை அந்நிட்டையை நிலைபெறுத்துவதாய பத்தியினால் மறவாதேத்தி முதல்வனது சீபாதத்தை யணைந்த சிவபக்தர்களோடிணங்குவதினும், ஆன்ம கிரியா சத்தியை அம்மருவுதலை நிலைபெறுத்துவதாய அப்பத்தரது திருவேடத்தையும், சிவாலயத்தையும் சிவனெனவே தேறி வழிபடுதலினும் செலுத்தி நிற்றல் ஒருதலையாமென்க.

## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கட னடியேனையுந் தாங்குத
லென்கடன் பணிசெய்து கிடப்பதே.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீலஸ்ரீ ஆநந்த ஷண்முக சரணாலய சுவாமிகள்,
தில்லைவளாக மடாலயவாசி,
திருச்செந்தூர்.

---

## சிவகீதை.

(180-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸ்திரீகளின் தேஹமானது எலும்பு மாம்ஸம் நரம்பு தோல் இவைகளைக் காட்டிலும் வேறாய் யாதுளது. அஞ்ஞானத்தால் மோஹித்தவனாய்க்கொண்டு ஜகத்தைச் சிறிதும் விவேகித்துப் பார்க்கின்றதில்லை.

ப்ராணவாயுவானது வெளிப்போய்விடின் ஸ்திரீயின்தேகமானது ஐந்தாறுதினங்களில் எவ்வாறாகுமோ அந்தோ அதனை ஆலோசித்துப் பார்க்கின்றதில்லை.

பெரும் அவமதிப்பிற்கிடமாகிய கிழத்தன்மையை அடைந்து மிக்கத்துன்புறுகின்றான். கபத்தினால் கட்டப்பட்ட மார்புடையவனாகின்றான். உண்ட உணவுசெரிப்பதில்லை. பற்களுதிர்ந்து பார்வையுங் குன்றிப்போன நிலைமையுடையவனாய்க் கசப்பு துவர்ப்பு முதலியவைகளைப் புசிப்பவனாகின்றான்.

வாயுவின் பீடையால் கோணிப்போன இடை கழுத்து கை தொடை கால் இவைகளையுடையவனும், பலமற்றவனும் எண்ணிறந்த ரோகங்களையுடையவனும், தனது பந்துக்களால் அவமதிக்கப்பட்டவனுமாகின்றான்.

சுத்தியில்லாதவனும் மலம்பூசப்பெற்ற தேகமுடையவனும் தேஹம் கொடுமையாய் எரிக்கப்பெற்றவனுமாய் எளிதில் கிடைக்காதனவாகிய போகங்களையே சிந்தித்துக்கொண்டு இருக்குமிடம் சிட்டசையாம லிருக்கின்றான்.

எவ்விந்திரியமும் வேலைசெய்வதற்கில்லாமற் போனமையால் சிறு பாலர்களும் பரிகஸிக்கின்றார்கள். அதன் பிறகு மரணகாலத் துக்கத்திற்கு நிகரில்லை.

பெரும்பிணிகளையுடைய பிராணிகளும் எவனிடம் பயப்படுகின்றனவோ, அந்த எமனால், பந்துக்களால் தழுவப்பட்டிருக்கினும் சமுத்திர நடுவிலுள்ள ஸர்ப்பம் கருடனாலேபோல, கொண்டுபோகப்படுகின்றான்.

ஹா பத்நீ, ஹா தனமே, புத்திரர்களே என்று மிக்கபயங்கரமாய் அழுகின்றவனாயினும், தவளையானது ஸர்ப்பத்தினாலே போல எமனால் கைப்பற்றப்படுகின்றான்.

மர்மஸ்தானங்கள் ஹிம்ஸைப்படும்போதும், ஸந்திபந்தங்கள் துடிக்கும்போதும், மரணாவஸ்தையிலுள்ளவனுக்கு எந்த துக்கம் நேருமோ அந்த துக்கம் மோக்ஷத்தில் விருப்புற்றவர்களால் சிந்தித்துப் பார்க்க வேண்டியது.

கண் விழிக்கமுடியாது செருகப்படும்போதும் நினைவும் தவிரவே, ம்ருத்யு பாசத்தால் கட்டப்பட்டவனுக்கு ரக்ஷகன் காணப்படுகின்றதில்லை யன்றோ.

அஞ்ஞானத்தால் தகையப்பட்டுவனாய் சரியாய் உள்ளசித்தமுடையவன்போலக் கூப்பிடப்பட்டு ஞாதிகளை தீனத்தன்மையுடன் கூடிய விழியால் பார்க்கின்றான்.

காலனால் இருப்புச்சங்கிலியாலும் பந்துக்களால் ஸ்நேஹபாசத்தாலும் தான் இருபக்கங்களிலும் இழுக்கப்படுகின்றதாகக் காண்கின்றான்.

ஹிக்கையென்னும் இருமலால் தொந்தரையுற்று ஸ்வாஸத்தால் வறண்டும் காலபாசத்தால் இழுக்கப்படுகின்றவனுமாகிய மனிதனுக்கு ரக்ஷகன் இல்லையன்றோ.

ஸம்ஸாரமாகிய யந்த்ரத்திலேறினவனாய் யமதூதர்க்கு வசங்கதனும் யமபாசத்தினால் கட்டப்பட்டவனுமாய்க் கொண்டு எங்கு செல்லுவேன் என்று வருத்தமுறுகின்றான்.



என்னசெய்வேன் எங்குசெல்லுவேன் எதைப்பற்றுவேன் எதை விடுவேன் என்று இவ்விதம் செய்வது யாதென்று அறியாமல் மிகவும் தொந்தரை யடைந்து தேஹத்திலிருந்து பிராணனோடு வெளிப்படுகின்றான்.

யாதனா தேஹத்தைப்பற்றிக்கொண்டு யமதூதருக்குட்பட்டு இங்கிருந்துசென்று யமயாதனைகளெல்லாவற்றையும் அனுபவிக்கின்றான்.

அந்நரகயாதனைகளுள் அனுபவிக்கும் துக்கத்தைச் சொல்ல எங்ஙனம் இயலும்.

யாதொரு தேஹமானது கர்ப்பூரசந்தனாதிகளால் எப்போதும் பூசப்பெறுகின்றதோ, அழகிய ஆபரணங்களாலும் சிறந்தவஸ்திரங்களினாலும் அலங்கரிக்கப்படுகின்றதோ அத்தேஹமே ஜீவனால் பிரிக்கப்பட்டதாயின் தொடத்தகாததும் பார்க்கத்தகாததுமாகின்றது.

இல்லத்தினின்றும் வெளிக்கொண்டுபோகின்றார்கள். க்ஷணப்போதும் வைத்திருக்கின்றதில்லை.

அதன் பிறகு கட்டைகளோடு கொளுத்தப்படுகின்றது. அதுவும் க்ஷணத்தில் சாம்பலாக்கப்படுகின்றது. அல்லது நரி கழுகு நாய் காக்கை முதலியவைகளால் தின்னப்படுகின்றது. நூறுகோடி ஜந்மமெடுக்கினும் அதே தேஹம் மீண்டும் காணப்படுகிறதில்லை.

இந்திரஜாலப்பொருள்களுக்கு நிகராயுள்ள இவ்வுலகவாழ்க்கையில் எனது தாய்தந்தை எனது குரு ஜனம் எனது பந்து என்று நிச்சயிப்பது எப்படிக்கூடும். ஏனெனின் கர்மத்தோடுகூட தான் ஒருவனே போகும்படி ஆகின்றமையால் இம்மனிதலோகமானது களைப்பாறுதற்குச் சற்றுத் தங்குமிடமாகிய மரத்திற்கு ஸமானமே யன்றோ.

எப்படி மாலைதோறும் வசிக்கும் மரத்தை யடைந்து ஒன்றுகூடிய பறவைகள் பிறகு காலைதோறும் அம்மரத்தை விட்டு ஒன்றுக்கொன்று பிரிந்து அது வது வந்தவழியோடேசென்றுவிடுகின்றதோ அதுபோலவே ஜ்ஞாதிகளும் அஜ்ஞாதிகளும் என்றறியத்தக்கது.

ஜந்மம் மரணஹேதுவும், மரணம் ஜந்மஹேதுவும் ஆகின்றது. ஜீவன் ஏற்றமரம்போல் ஓய்வின்றி எப்போதும் சுற்றிக்கொண்டேயிருக்கின்றான்.

ஜீவனுக்குக் கர்ப்பத்தில் சுக்கிலம்சேர்ந்தது முதல் மரணம் வரையில் யாதொன்று சொல்லப்பட்டதோ அவ்விந்த பெரும் பிணிக்கு மருந்து என்னிலும் அந்நியன் இல்லை.

## சுப சமாசாரங்கள்.

இவ்வருடப் பத்திரிகையாகிய இரண்டாமலர் இவ்விதழோடு இனிது முடிவதனால், இதனைச் சைவ உலகம் சந்தோஷிக்கும் சுபசமாசாரங்களோடு முடிக்கின்றோம்.

இப்போதுண்டாயிருக்கும் காகிதப்பஞ்சத்தால் பத்திரிகைகளாகிய பாதவங்கள் பல பட்டொழிந்தும், சைவம் எனப்பெயரிய இத்தெய்வத் தரு சிறிதும் வாட்டமின்றி பல உண்மைச் சிவநேயர்களின் மெய்யன்பெனும் தண்ணீரினாலும், உழைப்பென்னும் எருவினாலும், செம்மையினோங்கிச் செவ்விதின் வளர்ந்து, இவ்வருடத்திலும் பருவந்தவறாது பன்னிரண்டிதழ்களையும் விரித்து, வையமெங்கும் சைவமணம் வீசியது.

## ஆயுள் சந்தா ஆயிரம் ரூபா.

இத்தருவுக்கு எப்போதும் எவ்விதமான தீங்கும் நேரிடாதபடி அச்சுக்கூடமாகிய வேலிகோல்வதற்கு, இரங்கூனிலிருக்கும் வைசிய சைவப் பிரபுக்களாகிய ஸ்ரீமான் மே-சு-மே-மே-இராமநாதன் செட்டியாரவர்களும், சேவு-சித-சோக்கலிங்கச் செட்டியாரவர்களும், 100ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து, 1000–ரூபா சேகரித்தனுப்பினார்கள்.

இத்தருவை வளர்க்கும் சைவ உழவர்குலம் தாரணியெங்கும் தழைக்குமாறு, இச்சபையார்வைத்து நடத்தும் சைவ பாடசாலையை, இச்சபையின் போஷகரும், சைவசித்தாந்த மகா சமாஜக் கூட்டத்தைத் தமது சொந்த செலவில் சென்னையிற்கூட்டி யுபகரித்தவரும், மெஸ்ஸர்ஸ் பெஸ்டு அண்டு கம்பெனி அதிபாஷிகருமாகிய ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் பார்வையிட்டு மிகவும் களிகூர்ந்து தமது சொந்த செலவில் இப்பாடசாலைக்கென விசாலமானக் கட்டிடம் கட்டிக்கொடுத்து அதை அபிவிருத்திசெய்ய முன் வந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் பாடசாலைகளின் உதவி பரிசோதகர் ஸ்ரீமான் யஸ். கந்தையாபிள்ளையவர்கள் நிகழும் நவம்பர்மீ இருபது சந்தாதாரர்களைச் சேர்த்து முதலிரண்டு மலர்களையும் பெற்று வாசிக்குமாறு செய்ததுமன்றி, இன்னும் பலரைச் சந்தாதாரர்களாக்கிவர மிகுந்த முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள்.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

திருச்சிற்றம்பலம்.

பத்திரிகாசிரியர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்.

எனப் பெயரிய

## சைவ மஹாசபையின்

மாதாந்தப் பத்திரிகை.

---

## 1917ஞ.

## மூன்றாவது மலர்.

---

இது

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயம்.

ஸ்ரீலஸ்ரீ - சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்குச்

சமர்ப்பிக்கப்பெற்றது.

---

பத்திரிகாசிரியர்

இருக்கம் - ஆதிமூல முதலியார்.

(Retired Accountant, Military Accts., Department.)

நெ. 43, பாளையப்பன்வீதி, எழுகிணறு, சென்னை.

---

சென்னை:

வைதிக சைவ அச்சுக்கூடம்.

1917

விலை ரூபா 1.

(தபாற்செலவுட்பட.)

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

### அக்கிராசனர்.

ஸ்ரீமான், சதுரை, ராஜாகண்ணு முதலியாரவர்கள் B. A.
Supdt. Accountant Genreal's Office.

### போஷகர்கள்.

ஸ்ரீமான் யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்,
Dubash, Messrs. Best & Co.

,, வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், B. A., B. L.
Official Referee, High Court.

,, ராவ்சாஹிப் - பி. மாசிலாமணி முதலியாரவர்கள்,
Engineering Contractor.

,, ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்,
Presidency Post Master.

,, வி. முத்தையா பிள்ளையவர்கள்,
Merchant, Periyanna Mudaly Street, Madras.

,, ஆர். காசிவிசுவநாத முதலியாரவர்கள்,
Snuff & Tobacco Merchant, Madras.

,, திரு. சபாபதி முதலியாரவர்கள்,
Retired Sub-Engineer, Mint Street, Madras.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| உள்ளுறை. | |
| அகத்தியர் தேவாரத்திரட்டின் வரலாறு | 111 |
| அக்கரங்களின்றும் அகரவுயிரின்றேல் | 25-211 |
| அருச்சுனன் பாசுபதம்பெற்ற சரித்திரம் | 143-170-195-222-230 |
| | 109-135-160-184 |
| ஆயுள் சந்தா | 226 |
| ஆருத்திராதரிசனம் | 183 |
| இந்துசன்மார்க்கசபை—தென் ஆப்பிரிக்கா | 20 |
| இராவணன் கணேசமூர்த்தியைப் பூசித்த சரித்திரம் | 36 |
| உருத்திராக்க மகிமை | 212 |
| ஏகான்மவாதமும் வைதிகசைவமும் | 101 |
| கங்காதாரணம் | 212 |
| கச்சியப்ப சிவாசாரியருக் கொருகோயில் | 217 |
| கடவுள் உண்டா, இல்லையா? | 202 |
| கந்தசஷ்டி விரதம் | 41-71-80 |
| குமரகுருபரசுவாமிகள் சரித்திரம் | 119-141-163 |
| கூர்மபுராணத்து விநாயககாப்பு | 14 |
| சந்தான குரவர் | 129 |
| சந்திரன் விநாயகக்கடவுளைப் பூசித்த சரித்திரம் | 147 |
| சந்நியாசி | 92 |
| சாக்கியநாயனார் புராணம் | 30-76 |
| சிதம்பர தத்துவார்த்தம் | |
| சிவஞானபோதம் | 6-17-33-49-73-89-113-137-161-185-209 |
| சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் | 11-53 |
| | 232 |
| சுபசமாசாரங்கள் | 1 |
| சைவம் | 230 |
| சைவ சித்தாந்த மகாசமாஜம் | 125 |
| சைவ சுராச்சியம் | 154-179 |
| சைவ பத்திரிகாசிரியர் சரித்திரச் சுருக்கம் | 205-208 |
| சைவப்பத்திரிகை | 108 |
| சைவ பாடசாலை | 86 |
| தத்துவார்த்த வாராய்ச்சி | 187 |
| தாயுமானசுவாமிகள் மதம் | 166 |
| திரிபதார்த்த விளக்கம் | 93-121 |
| திருநந்திதேவர் சரித்திரம் | 157 |
| திருமூலநாயனார் புராணம் | 227 |
| திருவெம்பாவை | 201 |
| தீபாவளிபண்டிகை. | |

உள்ளுறை.


| உள்ளுறை. | பக்கம். |
|---|---|
| நாம் என் கடவுளை வழிபடவேண்டும்? | 175-205 |
| பஞ்சாக்கர மகிமை | 100-132-151 |
| மஹோபகாரம் | 82 |
| மாயாவிளக்கம் | 139 |
| முப்பொருளுண்மை | 191 |
| விருஷபதேவர் சரித்திரம் | 134 |
| வைதிக சிவஞானபோதம் அவைதிக சிவஞான போதமாக ஆக்கப்பட்டது | 28 |
| வைதிக சைவ அர்ச்சகக்கூடம் | 98 |


---

## சைவசமயிகளுக்கு எச்சரிப்பு!

ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் பைபில் என்னும் ஒரு சிறு புத்தகத்தை வைத்துக்கொண்டு உலகடங்கலும் கிறிஸ்து சமயத்தைப் பரப்பிவருகின்றார்கள். கிறிஸ்து பாடசாலையில்லாத ஊர் இல்லை. கிறிஸ்து கோயில் இல்லாத தேசமில்லை. கிறிஸ்து சமயத்தினர் இல்லாத இடம் இல்லை. ஞானஸ்நானம் என்னும் கிரியையால் சமயப் பிரவேசம் பண்ணாத கிறிஸ்தவரில்லை. பைபில் படிக்காத கிறிஸ்தவரில்லை. சைவ சமயிகளாகிய நமக்கோ ஆரியவேதங்களும், தமிழ்வேதங்களும், ஆகமங்களும், புராணங்களும், இதிகாசங்களும், ஞான சாஸ்திரங்களும் அளவற்றன விருக்கின்றன. இருந்தும், நம்முடைய தமிழ்நாட்டிலுங் கூட நம்முடைய சைவசமயம் பரவியில்லை. சைவபாடசாலைகளை வைத்து நம்முடைய சிறுவர்களுக்குச் சைவசமய வொழுக்கங்களைக் கற்பிப்பாரில்லை. சமயதீக்கை பெற்றிருப்போர் பதினாயிரம் பேர்களுள் ஒருவரைக் காண்பதும் அரிதாயிருக்கிறது. சைவநூலுணர்ந்தோர் இலட்சம் பேர்களுள் ஒருவர் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. நம்முடைய சிறுவர்கள் இலட்சக்கணக்காக கிறிஸ்து பாடசாலைகளிலோ, நாத்திகப் பாடசாலைகளிலோ படித்துக் காலங்கழிந்து, சமயக்குருடராய் சைவ வொழுக்கங்களைக் கைவிட்டிருப்பதுடன், உத்தியோகங்களில் அமர்ந்த பிறகு தங்களை மிக மேதாவிகளென்று மதித்து சைவானுட்டானமுடையவர்களை மூடர்களென்று நிந்திக்கிறார்கள்; சாதிபேதத்தை யொழித்துவிட வேண்டுமென்கிறார்கள். இவர்களுள் சிலர் பிராமணர்களுடைய அறிவின் விசாலத்தையும் ஆக்கத்தையும் கண்டு, பொறாமை கொண்டு, அப்பொறாமை காரணமாக பிராமணதூஷணை செய்யத் தொடங்கி சமய வொழுக்கங்களைப் பழித்துக்கொண்டு ஆரவாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆதலால் மெய்யன்பர்களே, உண்மைச் சைவாபிமான சீலர்களே, பல சிவ தருமங்களைச் செய்யும் நாட்டுக்கோட்டை நகரத்து உத்தம வைசியப் பிரபுக்களே, கூடுமானவரையில் ஐரோப்பியர் வழிகளைப் பின்பற்றி சமயபரிபாலனஞ் செய்யுங்கள். எங்கும் ஆங்கில பாடசாலைகள் வைத்துச் சிறுவர்களுக்குச் சைவசமய போதனை செய்யும் உபாயத்தைக் கைப்பற்றுங்கள். இதுதான் மிக மேலான சிவபுண்ணியம். இது செய்யாவிட்டால் மோசம் வரும். புறப்படுங்கள். இவ்வாறு செய்ய உடனே புறப்படுங்கள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

THE REGISTRAR OF ... 10 MAY 1917 ... MADRAS

# சைவம்.

மலர் 3.] நள ௵ தை ௴—1917 ௵ ஜனவரி ௴ [இதழ் 1

## சைவம்.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு
மாதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

சைவம் எனப்பெயரிய இத்தெய்வத் தமிழ்ப்பயிர், பாதகண்டமென்னும் புண்ணியபூமியில், நற்றொண்டை நாடென்னும் நன்செய்நிலத்தில், சென்னையம்பதியென்னும் செழுநீர்வயலில், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் என்னும் செம்மைமனத்துச் சைவ உழவர்களின் செய்நல்வினையும் கைவினைத்திறமும் பொய் தீரொழுக்கமும் பொலிந்து விளைந்தாங்கு, ஆனந்தப் பெயரிய வாண்டு சிறக்க, உலகினர் பரசிவானந்தப் பரபோகம் உண்டு சுகிக்குமாறு விளையத்தொடங்கி, பருவந்தவாது பன்னிருகதிர் விரித்து, இதுகாறும் இருபோகம் விளைந்து, இப்போது மூன்றும் போகம் விளையத்தொடங்கியது.

இப்பயிர் முதலில் விளையத்தொடங்கிய காலையில், பொறாமைமனத்துப் போலிப்பங்காளிச் சைவர்கள் சிலர் இது காகிதப்பஞ்சத்திற் காய்ந்துபோமென்றார்கள். சிலர் இதுவறுமையென்னுங் கோடையால் வாடிப்போம் என்றார்கள். சிலர் இது சைவ சமயிகளின் அபிமானக்குறைவென்னும் வெள்ளத்தால் அழிவுறும் என்றார்கள். சிலர் இவ்வுழவர் திருக்கூட்டத்தைநோக்கி, "ஐயன்மீர், இது சைவப்பயிர்செய்யுங் காலமன்று. இப்பயிருக்கு அநுகூலமாயிருந்த சேர சோழ பாண்டியர்களாகிய சீவநதிகள் முற்றிலும் வறண்டு மறைந்தன. மடங்களும் பணக்காரர்களுமாகிய ஏரிகள் குளம் கூவல்முதலிய நீர்நிலைகளும் பெரும்பாலும் விழலுக்கே பாய்கின்றன. தமிழ் வித்வான்களாகிய சகோதர உழவர்களும் சோறுங் கூறையும் இம்மையேதரும் சைவப்பயிர்செய்

வதைமறந்து, சாற்றுக் கவியும் சாமகவியும் பாடிப் பொய்மையாளரைப் போற்றிப் பொருள்செய்வதையே பெரிதென மதித்து, அவமே காலங் கழிக்கின்றார்கள். உங்கள் பங்காளிச் சைவ உழவர்களோ உங்களுக்கு இடையூறுசெய்த வண்ணமாகவே இருக்கிறார்கள். நல்ல சைவப்பயிர் விளையும் நன்செய் நிலங்களெல்லாம் புறச்சமயப் பயிர்கள் விளையும் புன்செய் நிலங்களாய் மாறிக் கிடக்கின்றன. ஆதலால் இக்காலத்தில் சைவப் பயிர்செய்வது உங்களால் இயல்வதன்று. இத்தொழிலைச் செய்ய முயல்வீரேல் உங்களுக்குவீண்பிரயாசையும் நட்டமுமுண்டாம். ஆதலால் இதைக் கனவிலும் நினைக்கவேண்டாம்" என்றார்கள். சிலர் "சைவ உழவர்காள், இக்காலத்தவர் பெரும்பாலார் நறுவிய வாயினவேனு முமிழ்ந்து கடுத்தின்னும் தீய விலங்கினங்களை யொத்திருக்கின்றனர். இவர்கள் கனியிருக்கக் காய்தின்பார்கள். கரும்பிருக்க இரும்பை மெல்வார்கள். விளக்கிருக்க மின்மினியைத் தேடிச்செல்வார்கள். நீங்கள் மிகவும் பாடுபட்டுப் பயிரிட்டு வலிந்து சிவபோகம் ஊட்டினாலும் உண்பாரல்லர். மாதந்தோறும் பதினாறு பக்கங்களாகிய படிகள் கொண்டதொரு பத்திரிகையாகிய அளவையால் பன்னிரண்டுமாதங்களும் விடாமல் அளந்து கொட்டினாலும், நாளொன்றுக்கு அரைக்காசுக்கும் குறைவாயிருப்பினும், வருடம் ஒன்றுக்குப் பன்னிரண்டணாகொடுத்து வாங்கிப் புசித்து இன்புறுவாரில்லை. பிறர் தாட்சணியத்தின்பொருட்டு வாங்கினும் அதின் இனிப்பைச் சுவைப்பாரில்லை. அதில் குற்றமே தேடிக்காண்பர். அது பார்வைக்குப் பகட்டாயில்லை என்பர். கையிலெடுக்கக்கனமாயில்லை யென்பர். அதில் சொற்குற்றமும் பொருட்குற்றமுமாகிய உமியும் தவிடுமிருக்கின்றன வென்பர். சிலர் அது தங்களுக்கு ஒத்துக்கொள்ளாதென்பர். இவ்வாறு பலர் பலவாறாகக் குறைகூறுவார்கள். ஆதலால் சைவப்பயிர்செய்வதைவிட்டுத் தென்னைவைத்து வளர்த்தால் அது கள்ளைத்தரும். அதை மொந்தைகளால் அளந்து விற்றால், பலர் குறைகூறாமல் வலிந்து வந்து பொருள்கொடுத்து வாங்கிப்புசித்து ஆனந்தக் கூத்தாடுவார்கள்; தங்களை மறந்து பாடுவார்கள்" என்றார்கள். வேறு சிலர் "சீ, சீ, இது அவ்வளவு நல்ல தொழிலன்று. கள்ளுண்பவர்கள் பெரும்பாலும் ஏழைகளே. ஆதலால் அத்தொழிலால் அதிக பொருள் சேராது. ஐரோப்பாவிலிருந்து உயர்ந்த சாராயங்களை வருவித்து விற்றால், இக்காலத்துச் சீமான்கள் பலரும் வைப்பாட்டிகளோடும் வாகனங்களேறிவந்து வாங்கிப்புசிப்பார்கள், அதனால் உங்களுக்கு நல்ல ஊதியம் உண்டாம்" என்றார்கள். மற்றுஞ் சிலர் "சீ, சீ இதுவும் அவ்வளவு நல்ல தொழிலன்று. நீங்கள் வைதிகர்களென்று பேர்வைத்துக்கொண்டு கள்



ளுஞ் சாராயமும் விற்றலாகாது. நாடகசாலைவைத்துப் பெண்வேடம் பூண்டு புடைவை கட்டிக்கொண்டு கூத்தாடுவீர்களானால், உங்கள் பெயர் பிரசித்தமாய்ச் சுவரெங்கும் காணப்படும். உங்கள் குலுக்கு மினுக்கு தளுக்குகளைப் பார்த்து உள்ளம்பூரித்து, பணக்காரர்கள் பலரும் மெச்சி விருதுகள் கொடுத்து வெகுமதிகள் செய்வார்கள். நீங்கள் பகலெல்லாம் படுத்துத்தூங்கலாம். உங்களுள் பலர் சைவாபிமானிகளைப்போலவும் சாமியார்களைப்போலவும் நடிக்க வல்லவர்களாயிருப்பதனாலும், படித்துப் பாடக்கற்றிருத்தலாலும், முகத்தில் மீசையில்லாதவர்களாயிருத்தலாலும், இது செய்ய உங்களுக்கு மிகவும் எளிதாகவும் இருக்கும்" என்றார்கள். இவ்வாறு பலர் பலவாறாகக் கூறுதலும், அதைக்கேட்டுச் சென்னைச்சிவனடியார் திருக்கூட்டம்எனப்பெயரிய உழவர்கள் நகைத்து, அவர்களைநோக்கி "சகோதரர்களே, இக்காலத்தில் சைவப்பயிர் செய்வது அரியவற்றுளெல்லாம் அரியதென்பது நாங்கள் உணராததன்று. ஆனால், ஆறிடுமேடு மடுவும்போலாம் செல்வத்தையே பொருளெனமதித்துச் செயற்கெளிய தீயகாரியங்களை நாங்கள் கனவிலும் செய்யோம். செய்தற்கரியனவாயினும், அவற்றால் எவ்வளவு கெடுதிகள் விளையினும், செயற்கரிய உத்தமகாரியங்களைச் செய்யப்பின்னிடோம்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

என்று பொய்யாமொழிப்புலவ ரருள்செய்தனர்.

புலிபசித்தாற் புல்லைத்தின்னுமோ!. எமது குமரகுருபரசுவாமிகளும்,

நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்து
மல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

என்றருளிச்செய்தனர்.

உலகத்தில் உழவுதொழிலினுஞ் சிறந்ததொழில் வேறொன்று மில்லை. அதுபற்றியே மேலோர்கள் "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்றும் "மேழிச்செல்வங் கோழைப்படாது" என்றும், "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டுவேறோர்பணிக்கு" என்றும் கூறினார்கள். உழவுதொழிலில்லாவிடில் உலகத்தில் எந்தக்காரியமும் நடைபெறமாட்டாது. எல்லாத்தருமங்களும் உழவு தொழிலாலேயே நடைபெறும். சர்வலோகமாதாவாகிய உமாதேவியாரும் இறைவனிடம் ஈராழி நெல்லைப்பெற்று உழவுதொழிலாற்பெருக்கி முப்பத்திரண்டறங்களையும் வளர்த்தாரெனில், உழவு தொழிலின் பெருமையாவரால் அளவிட்டுரைக்கலாகும்.

## சேக்கிழார்சுவாமிகள் புராணம்.

இமயமலை யரையன்மக டழுவக் கச்சி
யேகம்பர் திருமேனி குழைத்த ஞான்று
சமயமவை யாறினுக்குந் தலைவிக் கீசர்
தந்தபடி யெட்டுழக்கி னாழி நெல்லு
மும்மைதிருச்சு டகக்கையாற் கொடுக்க வாங்கி
யுழவுதொழி லாற்பெருக்கி யுலக மெல்லாந்
தமதுகொழு மிகுதிகொடு வளர்க்கும் வேளாண்
டலைவர்பெரும் புகழுலகிற் றழைத்த தன்றே.

அன்றியும் நாங்கள் செய்யப்புகுந்த பயிரோ தெய்வச் சைவப்பயிர். இது கள்ளியும் முள்ளியும்போல் காடுமேடெல்லாம் விளையாது. இப்பயிர் விளையும் இடம்மாத்திரமன்றி இதை விளைப்போர் மனமும் பரிசுத்தமாயிருத்தல்வேண்டும். ஆதலால் இதை விளைப்போரும், இது தரும் சிவபோகத்தை உண்போரும் உலகிற் சிலரேயாவர். பொறுமை, உலோபம், வஞ்சகம், சுயநலப்பிரியம்முதலிய துர்க்குணங்களாகிய கற்களும் முட்களும் உள்ளவிடத்தில் இப்பயிர் விளையாது. கொல்லாமை, கள்ளாமை, கருணை, வாய்மைமுதலிய குணநதிகள் பாயுமிடத்தில் மாத்திரம் இது விளையும். மெய்யன்பர்களின் செம்மைமனமாகிய நன்செய்நிலத்தில், விடாமுயற்சி என்னும் ஏர் கொண்டுழுது, சுயநலப் பரித்தியாகம், உண்மைச்சமயாபிமானம், உழைப்பு, ஈகை என்னும் தழைகளாகிய எருவையிட்டு, அன்பென்னும் வித்தைவிதைத்து, ஆர்வத்தெண்ணீர் பாய்ச்சி, சுயநலம் பாராட்டல், புகழ்ச்சிவிரும்பல், என்னும் களைகளைக் களைந்து, சோம்பலும் செருக்குமாகிய பட்டிமாடுகளாற் கெடுதிவாராமற் காத்துப் பயிர்செய்தால், இப்பயிர் செழித்தோங்கி வளர்ந்து சிவானந்தச் செழுங்கதிர்விடும். ஆதலால் எவ்வளவு பாடுபட்டாயினும் செப்பரும் பெருமைவாய்ந்த சைவப்பயிர் செய்யப்பின்னிடோம்.

இன்சொல் விளைநிலனா யீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

என்று பெரியோரும் பணித்துள்ளார். என்றுகூறி இச்சைவப் பயிரைத் தங்களுயிரென மதித்துப்போற்றிப் பாராட்டி வளர்ப்பாராயினர். அதற்கேற்றபடி இப்பயிர் முளைக்கும்போதே செழித்துவளர்ந்து சிவமயமாய்த் தோன்றுதலும், அதைக்கண்ணுற்ற உண்மைச் சைவாபிமானசீலர்களாகிய சகோதர உழவர்கள் பலரும், உடல் பூரித்து, உள்ளங்



குளிர்ந்து, உறவினரை விளித்து, "வாருங்கள், வாருங்கள். வந்து நம் சைவப்பயிரைப் பாருங்கள், பாருங்கள். இதனால் விளையும் சிவபோகாமுதமுண்டு பிறவிப்பசிநோய் தீருங்கள், தீருங்கள். இப்பைங்கூழ் "பண்ணியபயிரிற் புண்ணியம்தெரியும்" என்றபடி முளையிலேயே வேர் முதல் நுனிவரையில் சைவமணம் வீசுகின்றது. இது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் பலவருடங்களாகச் செய்துவந்த சிவபுண்ணியத்தின் விளைவுபோலும்" என்றுகூறி, அளவளாவி, அன்புவித்திடுவாரும், ஆர்வநீர்பாய்ச்சுவாரும், இடுக்கண் களைகளைவாரும், ஈகையெருவிடுவாருமாய், இப்பைங்கூழைப்போற்றி வளர்ப்பாராயினர். அதனால் இத்தெய்வப்பயிர் நாளுக்குநாள் ஓங்கிவளர்ந்து உலகுக்கு உவட்டாத சிவபோகாமுதம் ஊட்டுவதாயிற்று. இதற்கு அச்சுக்கூடமாகிய வேலிகோல்வதற்கு இரங்கோனிலிருக்கும் சகோதர உழவர்களாகிய ஸ்ரீமான் செவு-சித-சொக்கலிங்கச் செட்டியாரவர்களும், ஸ்ரீமான் மெ-சு-மெ-மெ-இராமநாதன் செட்டியாரவர்களும், மிகுந்த பிரயாசையெடுத்துக்கொண்டு இதுவரையில் நூற்றெட்டு ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து, ஆயிரம் ரூபாவரையில் சேகரித்தனுப்பி உபகரித்ததுமன்றி, இன்னும் வேண்டிய உதவிகள் பலவுஞ் செய்யவேண்டி விடாமுயற்சிசெய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு "என்று முகமனியம்பா தவர்கண்ணும், சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்" என்பதற்கிணங்க, ஒரு பிரதிபலனையும் எதிர்பாராமல், வெறும் அன்பு காரணமாக இவர்கள் பலரும் செய்துவரும் பேருபகாரங்களுக்குச் சைவ உலகம் செயற்பாலதாகிய கைம்மாறும் உளதோ!. "மாரிமாட் டென்னாற்றுங்கொல்லோ வுலகு!" இவ்வாறு இச்சைவப்பயிரை உடனிருந்து வளர்த்துவரும் சிவநேயச் செல்வர்களின் சீர்பாதகமலங்களைச் சிரத்தினும், செய்வினையும் செய்வானும், செய்விப்போனும் தாமேயாய சிவபெருமான் அருட்டிருவடிகளைச் சிந்தையினும்வைத்து, இம்மூன்றும் மலரை எழுதத்தொடங்கினேன்.

பத்திரிகாசிரியன்.

## சிவஞானபோதம்.

(இரண்டாஞ் சூத்திரம்,)

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

(இ-ள்.) முதற் சூத்திரத்தினுற் சித்தாந்தஞ்செய்யப்பட்ட சங்கார காரணனுகிய சிவபெருமான்—அவையே ஆய்—அவ்வுயிர்களேயாய்—தானே ஆய்—அவைகளுக்கு வேறுமாய்—அவையே தானே ஆய்—உடனுமாய் (நின்று)—ஆணையின்—தமது ஆணையினுல், (அதாவது, ஆணையென்னும் பரியாயப்பெயருடைய சிற்சத்தியால் வரும்)—இருவினையின்—(நல்வினை தீவினைகள் என்னும்) இருவினைகளால்—போக்குவரவு புரிய—அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம்—ஆணையின்—அவ்வாணையினின்றும்—நீக்கமின்றி—பிரிப்பின்றி—நிற்கும்=(சமவேதமாய்) நிற்பன் (எ-று.)

"அவையே தானேயாய்" என்பதனை அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என்று இரட்டுறமொழிந்துகொள்க. "ஆய்–புரிய நிற்கும்" எனவே, சிவபெருமான் உயிர்களைப்போற் காணத்தாற் செய்யாமல் சங்கற்பமாத்திரத்தாற் செய்வர் என்பது பெறப்பட்டது. "ஆணையின்" என்பதனைச் சிங்கநோக்காய் "இருவினை" என்பதன் முன்னும் வைத்துப்பொருளுரைக்க. "அன்றே" என்பது அசை; இதற்கு அனுதியே இவ்வாறு நிற்கும் என்று பொருள் கூறினும் அமையும். "அவை" எனச்சுட்டியது முதற் சூத்திரத்திற்கூறிய சேதனப் பிரபஞ்சத்தை (அதாவது உயிர்களை).

சிவபெருமான் கலப்பினுல் உடலின் உயிர்போலிருத்தலால் உயிர்களேயாயிருக்கின்றுர் என்றும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன்போலிருத்தலால் உயிர்களுக்கு வேருயிருக்கின்றுரென்றும், உயிருக்கு உயிராயிருக்குந் தன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய் இருக்கின்றுர் என்றும் சொல்லப்பட்டது. இவை பின்வருவனவற்றுல் இன்னும் தெளிவாய் விளங்கும்.

இச்சூத்திரம் நான்கு அதிகாரணங்களையுடையது. அவை வருமாறு:—

க-வது—அவையே தானேயாய்
உ-வது—ஆணையினிருவினையின்
ங-வது—போக்குவரவு புரிய
ச-வது—ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே.



### இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

க-வது—அரன் உயிர்களிலிரண்டற நிற்பன்.
உ-வது—உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.
ங-வது—உயிர்கள் அச்சுமாறியே பிறக்கும்.
ச-வது—அரன் சர்வ வியாபகன்.

### இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

க-வது. ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றுனேயாய் நிற்கும் என்றது, அத்துவிதமென்ற சொல்லானே யேகமென்னில், ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு.

உ-வது. இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனுணையின் வருமென்றது, ஒருநகரியைக்காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவன தாக்கினையாகலான்.

ங-வது. இனி இவ்வான்மாக்கள் மாறிப்பிறந்து வருமென்றது, தோற்றமுமீறு முள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.

ச-வது. இனி நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது, அவன் ஏகாநேக மிரண்டுமின்றிச் சர்வவியாபியாய் நிற்றலான்.

### இச்சூத்திரத்தின் உதாரண வெண்பாக்கள் பத்து.

இனி இச்சூத்திரத்தின்பொருளை ஒவ்வொரு அதிகாரணமாக, அவ்வவற்றின் சூர்ணிகை வார்த்திகங்களோடும் உதாரணவெண்பாக்களோடும் சேர்த்து விளக்குவாம்.

### முதலதிகாரணம்.—அவையே தானேயாய்.

(இ-ள்.) முதல்வன் உயிர்களேயாயும், அவைகளுக்கு வேருயும், உடனுயும் இரண்டற நின்று. (எ-று.)

இவ்வதிகாரணத்தில் "தன்னுற் கூறப்படும் பொருள்" முதலிய ஐந்தும் வருமாறு:—

க-வது. தன்னுற் கூறப்படும் பொருள்.—
அரன் உயிர்களில் இரண்டற நிற்பன்.

உ-வது. ஐயப்பாடு.—
முதல்வனும் உயிர்களும், அபேதமோ, பேதமோ, பேதாபேதமோ.

௩-வது. பிறர்கூறும் பக்கம்.—

(1) முதல்வனும் உயிர்களும், பொன்னும் பொன்னாலாகிய அணியும் போல், அபேதமாம். (இவ்வாறு கூறுவோர் மாயாவாதிகள்.)

(2) முதல்வனும் உயிர்களும், ஒளியும் இருளும்போல், பேதமாம். (இவ்வாறு கூறுவோர் மத்துவர்.)

(3) முதல்வனும் உயிர்களும், சொல்லும் பொருளும்போல், பேதாபேதமாம். (இவ்வாறு கூறுவோர் பாஞ்சராத்திரிகள்.)

௪-வது. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு.—

முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாய், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறுமாய், உயிர்க்குயிராதற்றன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம் போல் உடனுமாய் நிற்பன். இவ்வாறு அவன் நிற்கும் நிலையே அத்துவிதநிலையென்று வேதம் கூறும்.

௫-வது, இயைபு—உதாரண வெண்பா.

கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்—கொட்டி
யவனுளமா இல்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு. (௪)

(இ-ள்.) உள்ளம்=உயிரானது—கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு=நரம்புமுதலியவற்றுற் கட்டப்படும் உடம்பினையும், ஐம்பொறி முதலிய கருவிகளையுங் கைக்கொண்டுநின்று—இட்டது ஒருபேர் அழைக்க=உடம்புக்கு இட்டபெயரால் பிறர் அழைக்க—என் என்றும்=என் என்பதுபோல்—ஒட்டி=முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும்.—அங்கு=அதுபோல்—அவன் உளம் ஆகில்லான்=அம் முதல்வன் உயிராகமாட்டான்.—உளம் அவனுமாட்டாது=உயிர் முதல்வனாகமாட்டாது.—அவன் உளமாய் அல்லனும் ஆம்=(அவ்வாறாயினும்) முதல்வன் உயிராயும் அதின் வேறாயும் நிற்பன் (எ-று.)

ஒட்டி என்பது பெயர்-வினையெச்சமாகக் கொள்ளின் சிறப்புமின்மை விரித்துரைக்க-ஒட்டுதல்=பொருந்துதல்.

உயிரானது உடம்போடுகூடி உடம்புவேறு தான்வேறு என்னுதபடி (அத்துவிதமாய்) கலந்து, உடம்புக்குண்டாகும் ஆக்கக் கேடுகளைத் தனக்குண்டானவாக அநுபவித்து, உடம்புக்கிட்டபெயரால் பிறர் அழைக்கத்தான் ஏன் என்று வருவதனாலும், பலர் கூடியிருக்குமிடத்தில் உடம்புக்கிட்டபெயரால் ஒருவனையழைக்கின், அழைக்கப்பட்டவன் ஒருவனே ஏன் என்று வருதலினாலும், அவன் அவ்வாறு வருதற்கு வேறொருகாரணம் காணப்படாமையாலும், அருத்தாபத்தியளவையால், அவ்வுயிர் உடம்பென்றும் தானென்றும் வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் பெறப்பட்டது. அப்படி நிற்பினும் உயிர் உடம்பாகாது. உடம்பு உயிராகாது. உயிர் உயிரே. உடம்பு உடம்பே. அதுபோல், முதல்வன் உயிரோடு கலப்பினால் அவைவேறு தான்வேறு என்னுதபடி அபேதமாய் நின்றும் அவ்வுயிராகமாட்டான். உயிர் முதல்வனாகமாட்டாது. முதல்வன் முதல்வனே. உயிர் உயிரே. அவ்வாறாயினும் முதல்வன் உயிராயும் அதன் வேறாயும் நிற்பன். உயிர் அங்ஙனம் நில்லாது.



ஒரு பொருளே அபேதம், பேதம், பேதாபேதம் என்னும் மூவகை இயல்பையும் உடைத்தாதல் எங்ஙனம் கூடும் என்னும் சந்தேகம் உண்டாகாதவாறு இவ்வெண்பா உடலுயிர் உவமையால் முதல்வனின் அபேதநிலை இத்தன்மைத்தென விளக்குகின்றது.

உதாரணவெண்பா.

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா—ணொன்றின்றா
லக்கரங்க ளின்றா மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு. (உ)

இவ்வெண்பா, வேதமானது அத்துவிதம் என்றும் ஏகம் என்றும் கூறவும், அதற்குமாறாக பேதபடக்கூறலாமோ என்பார்க்கு, வேதம் அவ்வாறு கூறுவதின்கருத்து இத்தன்மைத்தென விளக்கி, இறைவன் உயிர்களோடு (தானேயாய்) அபேதமாய் நிற்கும் இயல்பை உதாரணத்தால் வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) இருக்கு ஒன்று என்றது ஒன்றேகாண்=வேதம் ஒன்று என்பதற்குப்பொருள் ஒன்றென்பதேயாம்.—பதி ஒன்றே=(அதற்குத் தாற்பரியம்) பதிப்பொருள் ஒன்றே (இரண்டில்லை என்பதாம்). ஒன்று என்ற நீ பசு ஆம் காண்=(இதனையறியாது) ஒன்றென்று சொல்லுகிற நீ (அப்பதிப்பொருளின்வேறாய) பசுவென்றறிவாயாக. (பதியும் சேதனம், யானும் சேதனமாக என்னைப் பசுவென்பதென்னையெனில்)—பாசத்தோடுளை=நீ மலத்தோடு கட்டுண்டிருக்கின்றாய் (ஆதலால் நீ பசு எனப்பட்டாய்). (யானும் பதியும் வெவ்வேறுபொருள்களானால், வேதம் "பிரமம் இல்லையாயின் ஒருபொருளும் இல்லை" என்று கூறுவதேன்? என்னில்)—அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்று ஆம்=அகர உயிரில்லையாயின் எழுத்துகள் இல்லையாம்—(என்னும்=என்று சொல்லு

கிற)—இக்கிரமத்து=இம்முறைமைபற்றி—ஒன்று இன்று என்னும்—(வேதம் பிரமப்பொருள் இல்லையாயின்) ஒருபொருளும் இல்லை யென்றேனும் (எ—று).

வேதம் ஏகம் என்றும் அத்துவிதம் என்றும் கூறுவதனை "ஏக வை ருத்ரோ நத்விதீயாயதஸ்தே" என்னும் யசுர்வேத வசனத்தாலும், "ஏகோஹி ருத்ரோ நத்விதீயாயதஸ்தே" என்னும் ஸ்வேதாஸ் உபநிஷத்தாலும், "ஏகமே வாத்விதீயம்" என்னும் சாந்தோக்கிய உபநிஷத்தாலும், "சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம்" என்னும் மாண்டூக்ய உபநிஷத்தாலும் உணர்க.

"நத்விதீயாய" என்னும் வடமொழியின் முதலிலுள்ள நகரமெய் நீங்கிவிட அது "அத்விதீயாய" என நிற்கும். நகரமும் அகரமும் ஒரு பொருளுடையனவாம். நகரம் நீங்கிவிடலும், அம்மெய்யின்மேல் நின்ற அகரம் இன்மை, அன்மை, மறுதலை என்னும் முப்பொருளையும் உணர்த்தும். இவற்றுள் மாயாவாதிகள் இன்மைப்பொருள் ஒன்று மாத்திரம் உரைத்து அத்துவிதம் என்னுஞ் சொல்லுக்கு "இரண்டில்லை, ஒன்றே" என்று பொருளுரைப்பர். அவ்வாறு பொருளுரைப்பது குற்றமாம் என்பதனை விளக்கவேண்டி நமது மெய்கண்டநாதர்.

"அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில், ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு" என்று சூர்ணிகையுரை யருளிச்செய்தனர்.

இச்சூர்ணிகையுரையின் பொருள் வருமாறு:—அத்துவிதம் என்ற சொல்லின் நகரமானது இன்மை அன்மை மறுதலை என்னும் முப்பொருளுணர்த்தும். அவற்றுள் இன்மைப் பொருளைக்கொண்டு, அத்துவிதமென்ற சொல்மாத்திரத்தாலேயே ஒருபொருள் என்பது பொருத்தமாம் என்றுசொல்லில், ஒருபொருள் தானேதன்னை ஒன்று என்று சொல்லவேண்டுவதில்லை. ஆதலால் அவ்வாறு சொல்லும் பொருள் வேறுண்டென்பது பெறப்படும். அன்றியும், என்னும்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருளையே யுணர்த்திப் பொதுமையில் நிற்பதன்றி, ஏனைச்சொற்களின்மேல் வந்த நகரம்போல் இன்மை மறுதலைப் பொருள்களை யுணர்த்தாமையினால் அத்துவிதம் என்ற சொல்லே வேறு காரணம் வேண்டாது வேறன்மையையுணர்த்தும். இதனால் ஆன்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்குமென்பது கொள்ளற்பாற்று (எ—ம்.)



இறைவனும் உயிரும் வெவ்வேறு பொருள்கள் என்பதனை யுணராது, ஒரு பொருளே என்றுமயங்கி "நான் ப்ரஹ்மம்" எனப்பொருள் படுக்கும் "அஹம் ப்ரஹ்மம்" என்றுகூறி இடர்ப்படுவோர்க்கிரங்கியே, யசுர்வேதமுடிவு "அஹம் பரஹ்மம்" என்று கூறுது "நான் ப்ரஹ்மம் ஆகின்றேன்" என்னும் பொருள்தரும் "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என்று கூறும். வேதங்களிற் சிறந்த சாமவேதத்தின் முடிவு "அது நீ என்று பொருள்தரும் "தத்வம்" எனக்கூறுது, "அது நீயாகின்றாய்" என்று பொருள்தரும் "தத்வமஸி" என்று கோஷிக்கும். சிவம் ஆத்துமாவின் அறிவினுள் அறிவாய் விளங்கும் ஒற்றுமையை நோக்கி ருக்கு வேதத்தினந்தம் "ப்ரக்ஞானம் ப்ரஹ்மம்" என்றும், ஆத்மா சிவசக்தியாத்மகமா யிருத்தலைப்பற்றி அதர்வணசிரசு "அயமாத்மா ப்ரஹ்மம்" என்றும் வழங்கா நிற்கும். அந்நான்கு மகாவாக்கியங்களும் சிவஜீவர்கள் ஒன்றேயென்றும், இரண்டேயென்றும் பொருள்பயத்தலின்றி, ஒன்றுமிரண்டுமென்றி நிற்கும் நிலையின வென்று கூறுநிற்கும்.

(இன்னும்வரும்.)

பத்திரிகாசிரியன்.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்.

உலகத்தில் ஒவ்வொரு சமயத்தாருள்ளும், ஒவ்வொரு தேசத்தாருள்ளும், ஒவ்வொரு சாதியாருள்ளும், சுயநலப்பரித்தியாகஞ் செய்துகொண்டு பொதுஜன நன்மையின்பொருட்டு உழைப்பவர்கள் மிகச் சிலரே. அவ்வாறு உழைப்பவர்களை உயர்வாகமதித்து உற்சாகப்படுத்தி அவர்களுக்குவேண்டிய உதவிகளைச்செய்தல் அவ்வச் சனசமூகத்தாருடைய கடமையாம். ஆதலால் கிறிஸ்தவர்கள் தங்கள் சமயாபிவிருத்தியின்பொருட்டு உழைப்பவர்கள், வேதனம்பெற்று உழைப்பவர்களாயினும், அவர்களால் உண்டாகும் சமயாபிவிருத்தியை நோக்கி அவர்களைக் கௌரவித்து, உயர்ந்த பதவிகளில் அமர்வித்து, வேண்டும் பொருள்முதலியன கொடுத்துப்பூசிக்கிறார்கள். அன்றியும், அவ்வாறு உழைப்போர்க்கு மாத்திரமன்றி அவர்களுக்குப்பின் அவர்களுடைய சந்ததியார்களுக்கும்தௌரவப்பட்டங்களும் உபகாரச்சம்பளமும் கொடுக்கிறார்கள். இதனால் அச்சமயமானது உலகெங்கும் விரைந்து பரவுகின்றது. பிறசமயிகளின் செய்கை இவ்வாறாக இக்காலத்துச் சைவசமயிகளின் செய்கை இதற்கு மாறாயிருக்கிறது. இவர்கள் சுணங்கனும் சேவலும் சுசாதியைப் பகைப்பதுபோல் தம்மினத்தவரைப் பகைப்பார்கள். தமிழ்

வித்வான்கள் தமிழ் வித்வான்களைப்பகைப்பார்கள். தங்களைச் சைவாபிமானிகளென்போர் சைவாபிமானிகளைப் பகைத்திடுவர். இது புகழேந்தி ஒட்டக்கூத்தர்முதலிய புலவர்களின் சரித்திரங்களாலும், ஸ்ரீலஸ்ரீ யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் முதலியவர்களின் சரித்திரங்களாலும் விளங்கும். ஒட்டக்கூத்தர் புகழேந்திப்புலவரைப் பகைத்துப் படாதபாடுபடுத்தினர். பாரதம்பாடிய வில்லிபுத்தூரார் தேசங்கடோறுஞ்சென்று வித்வான்களை வாதில்வென்று அவர்களின் காதுகளை அறுத்துக் கர்னபங்கஞ்செய்து கொண்டிருந்து, கடைசியாக ஸ்ரீஅருணாசலத்தி லெழுந்தருளியிருந்த அருணகிரிசுவாமிகளிடம் வாதஞ்செய்து அவரை வெல்லமாட்டாமல் அவரிடம் கர்னதானம் பெற்றனர். இவைபோன்ற சரித்திரங்களால் இக்காலத்துப்புலவர்கள் மாத்திரமன்றி முற்காலத்துப்புலவர்களும் ஒருவரையொருவர் பகைத்தனர் என்பது விளங்கும்.

காலதேசவர்த்தமானங்களை நோக்கி, சபைதாபித்தும், நூல்கள் இயற்றியும் அச்சிட்டும், பாடசாலைகள்வைத்தும், பிறர்செய்த இடையூறுகளாற் சலிக்காமலும், போலிநாவலர்களைப்போல் பொருளீட்டுவதையே பெரிதெனக் கருதாமலும், தாட்சிணியமின்றி சைவசமயத்தைப் பாதுகாக்கமுற்பட்டவர் ஸ்ரீலஸ்ரீ ந-ஆறுமுகநாவலர் ஒருவரே. அப்பெரியாரியற்றிய பாலபாடங்களும், சைவ வினாவிடைகளும், பிற நூல்களும், அவர் நிறுவிய பாடசாலையும், அச்சுக்கூடமும், அச்சிட்ட நூல்களும், அவர் உழைப்பையும், உண்மைச் சைவாபிமானத்தையும் அறிவின் நுட்பத்தையும், குன்றிலிட்டவிளக்கென என்றைக்கும் விளக்காநிற்கும். அவர்பெருமை யிவ்வாறிருக்கவும், அவருக்குச் சைவ சமயிகள் செய்த இடையூறுகளுக்கு அளவில்லை. அவர், "நமக்குப்பகைவராயிருந்து நாம் தொடங்கிய சைவசமய பரிபாலனத்திற்கு இடையூறு விளைப்பவர்கள் சைவசமயிகளே, ஏனைச்சமயிகளல்லர். முற்காலத்தில் சமணர்முதலியோர் சைவர்களுக்கு விரோதிகளாயிருந்தார்கள். இக்காலத்தில் சைவாபிமானிகளுக்குச் சைவரே விரோதிகளாயிருக்கின்றனர். ஐயோ, என்செய்வது" என்று வருந்திமொழிந்தனர். அவர் காலத்தில் அவருக்கு இடையூறுசெய்ததுபோலவே இக்காலத்திலும் சைவசமயிகளே சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்கு இடையூறு செய்கின்றார்கள். தமிழ்நாட்டில் சென்னைமாநகரானது தலைநகரமாயிருத்தலினால் இங்குள்ள சைவர்கள் பலர் உண்மையாய் ஒத்து உழைப்பார்களானால் எளிதில் பலவழிகளில் சைவ சமயபரிபாலனஞ் செய்யலாம். இவர்கள் உடனிருந்து ஒத்து உழைக்காவிட்டாலும், உழைப்ப



வர்களுக்கு இடையூறு செய்யாமல் வாளாவிருப்பினும்போதுமே. மூங்கில்கள் ஒன்றோடொன் றுராய்ந்து தீப்பற்றிப் புதரைக்கொளுத்தி நாசமாவதுபோல், இவர்கள் தங்களைச் சைவாபிமானிகளென்று சொல்லிக் கொண்டு ஒருவரையொருவர் பகைத்துத் தாங்களே சைவசமயத்தை யழிக்கின்றார்கள். பிறசமயிகள் சமயாபிமானமுள்ளவர்களுக்கு வேதனம் கொடுத்து ஊக்கம் உண்டாக்கினால், இவர்கள் வேதனைகொடுத்து வெறுப்புண்டாக்குகின்றார்கள்.

இவர்கள் செய்துவந்த இடையூறுகளையும், இச்சபையின் அருமை பெருமைகளையும் இப்பத்திரிகையில் வெளியிடுவதைப்பலமுறையும் உத்தேசித்தேன். ஆனால் இப்பத்திரிகை உருவிற் சிறிதாயிருப்பதனால் அவைகளைப் பிரசுரிக்க இடமின்மையைக் கருதியும், "யதார்த்தவாதி வெகுஜனவிரோதி" என்பதற்கிணங்கப் பல்லோர் பகையுண்டாம் என்பதைநினைந்தும், தற்புகழ்ச்சியென்னும் குற்றமுண்டாகலாமென வஞ்சியும்,

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற்—றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்.

என்னும் நீதிநெறியைக் கடைப்பிடித்து அவ்வாறு செய்தலைத் தவிர்த்தேன்.

ஆயினும், இச்சபையார் இப்போது தொடங்கியிருக்கும் மிக அரிய பொதுக்காரியங்கள், பொதுஜன உதவியால் நடைபெற வேண்டியிருத்தலாலும், பொதுஜனங்கள் இச்சபையின் உண்மையினையும் உழைப்பையும் உணர்ந்தாலன்றி உதவிசெய்வது கூடாமையாலும், இடுக்கண் விளைத்தலும், புறங்கூறலுமாகிய களைகளைக் களைந்தெறியின்றி நாம் செய்யப்புகுந்த சைவப்பயிர் செழித்துவளர்வது கூடாமையாலும்,

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழ காண் பரிது.

என்னும் குமரகுருபர ருபதேசத்தைக் கடைப்பிடித்து, இப்பத்திரிகையில் இனிநான்குபக்கங்களை யதிகமாய்ச்சேர்த்தேனும், இச்சபையின் அரு

மைபெருமைகளையும், இதற்கு நேர்ந்த இடையூறுகளையும், எவ்விதமான இடையூறுகளையும் பொருள்செய்யாமல் இச்சபையார் தாங்கள் தொடங்கிய எந்தக்காரியங்களையும் நிறைவேற்றிச் சைவசமய பரிபாலனஞ் செய்து வருதலையும், உண்மைச் சைவாபிமானிகள் உள்ளங்களிக்குமாறு, இனி வெளியிடத் தொடங்கினேன்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் என்பது இடபேதமும் சாதிபேதமும் பாராட்டாமல், சைவசமயிகளியாவரும் ஒன்றுகூடிச் சைவ சமயபரிபாலனம்பண்ணவேண்டி, சென்னையில் தாபித்து நடைபெற்று வரும் மகாசபையாம். ஆதலால் இது சென்னைவாசிகளுக்கு மாத்திரமன்றி, சைவசமயிகள் யாவருக்கும் உரிமையுடைய மகாசபையாம். சைவசமயிகள் எவர்களும் இதின் அங்கத்தினராய் அக்கியட்சர்களாகவும், போஷகர்களாகவும், அபிமானிகளாகவும், காரியதரிசிகளாகவும், சபைத் தலைவர்களாகவும் இருந்து சைவ சமயபரிபாலனஞ்செய்யவும், செய்விக்கவும் உரிமையுடையவர்களே. இவ்வுரிமை எல்லோருக்கும் உண்டாயிருக்கும்வண்ணமாக இச்சபை அரசாங்கசட்டத்தின்படி ரிஜிஸ்ட்டர்செய்யப்பெற்றுள்ளது. (இன்னும்வரும்)

பத்திரிகாசிரியன்.

---

## சந்தான குரவர்.

---

சைவப்பத்திராசிரியரவர்களுக்கு.

ஐயா,

சைவசமயத்தில் சந்தான குரவர்களெனப்படுவார் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவரும், திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியரும், திருப்பெண்ணாகடத்து மறைஞானசம்பந்த சிவாசாரியரும், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியருமன்றோ? இவர்க்கு முன்னும் பின்னும் ஆசாரியர் பலர் இருப்பினும் உலகத்தில் சந்தானாசாரியரென்று பலராலுங்கொண்டாடப்படுபவர் இந்நால்வருமேயாவர். இதற்கு வேறு சாட்சிவேண்டியதில்லையாயினும் சில கூறுவேன். திருவாரூர்ச் சுவாமிநாததேசிகரென்பவரியற்றிய சந்தானாசாரிய புராண சங்கிரகத்தில் கூறப்படுவது இந்நால்வருடைய சரிதமேயாகும். காஞ்சிப்புராணத்தின் முகத்தில் சிவஞானயோகிகள் வரலாறு எழுதிய இராமநாதபுரம் இராமசுவாமிப்பிள்ளையும் திருக்கைலாசபரம்பரை ஆசாரியர்களாக இந்நால்வரையுமே முதலிலெடுத்துக் கூறுகின்றனர். இந்நால்வருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரும் தாமியற்றிய சிவப்பிரகாசத்துள்.—



"தேவர்பிரான் வளர்கயிலைக் காவல்பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர்பாரிற்
பாவிய சத்தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாம்வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலான்மாறு
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்தரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மையோரே"

என்று தமக்கு முன்னிருந்த மெய்கண்ட தேவர்முதலிய மூவரையும் சந்தான குரவரென்றனர்.

இங்ஙனமாகவும் சிற்றம்பலநாடிகள் மாணாக்கராகிய தத்துவப்பிரகாசசுவாமிகளென்பவர் தாமியற்றிய தத்துவப்பிரகாசத்தில் சந்தான குரவர் வணக்கம் கூறுமிடத்து,

"நந்தி சனற்குமரன் சத்திய ஞானியடிசேர்
நாதனும் பரஞ்சோதி மெய்கண்டதேவன்
மூந்து சண்பையர்தலைவன் கொற்றவன்குடியே
முதுபதியா முமாபதியிம்முறைமை யிலேயாண்ட
செந்திருவின்பயன் சிற்றம்பல நாடிஞன்மெய்ச்
சிவஞான வடிவான திருமேனியடைவாய்த்
தந்தவிவர் சந்தானகுரவரிவர் மலர்த்தாள்
தப்பாம லென்மனத்தி லொப்பாகவைப்பாம்"

என்று உமாபதி சிவாசாரியருக்குக் குருவாகிய திருப்பெண்ணாகடத்து மறைஞானசம்பந்த சிவாசாரியரை நீக்கியும் உமாபதிசிவாசாரியருக்குப் பின்வந்தவரும் தமக்குக் குருவுமாகிய சிற்றம்பலநாடிகளைச் சேர்த்தும் துதி சொல்லினர். சிற்றம்பலநாடிகள் மெய்கண்டதேவர் சந்தானத்தில் வந்தவராதலால் அவரைச்சேர்த்ததில் குற்றமுளதாகக் காணவில்லை; மறைஞான சம்பந்தசிவாசாரியரை நீக்கினது யாது காரணத்தால் என்பது விளங்கவில்லை. பத்திராசிரியரே, நீங்களாவது உங்கள் பத்திரிகையை வாசிக்கும் மற்றைய சித்தாந்திகளாவது அன்புகூர்ந்து எனக்கு நிகழ்ந்த இந்தச் சந்தேகத்தைத் தீர்ப்பீர்களென்று உங்கள் இருதிறத்தாரையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த விஷயத்தில் இன்னுமொரு சந்தேகமெனக்குண்டு. அஃதென்னெனில், கூறுவேன். மேலெடுத்துக்காட்டிய 'நந்தி சனற்குமரன் என்றற்றொடக்கத்துச் செய்யுளில் தத்துவப்பிரகாசர் அருணந்திசிவாசாரியரைச் 'சண்பையர் தலைவர்' என்கின்றனர். இப்பாட்டில் மாத்திரமன்று,

"நற்பொருளாம் பரன்பாலி னந்தியருணூலும்
நல்வழியா மெய்கண்டான் சண்பையர்நாதன்
அற்புதமா முமாபதிதா மிவருரைத்த நூலும்
ஆகமத்தி னுட்பொருளு மனைப்பில் பரசமயப்
புற்புதமா நிலையில் பொருளனைத்தும் பார்த்துப்
பொருண்மைப் பாலறியாத மருண்மைப்பரிவுடையேன்
சொற்பொருளாற்றத் தவப்பிரகாசமெனச் சொன்னேன்
சொல்லிரவி யொளியைமின் மினிதொடரு நெறியே"

என்று தமது நூல் வந்தவழியும் நூற்பெயரும் கூறுமிடத்தும் அருணந்திசிவாசாரியரைச் "சண்பையர்நாதன்" என்கின்றனர். சண்பையர் நாதன் என்பது சண்பை நகரத்தார்க்குத் தலைவன் என்று பொருள்படும். சண்பைநகரமென்பது சீகாழி. அருணந்திசிவாசாரியார் சீகாழியிற் பிறந்தவரென்றாவது சீகாழியைச் சார்ந்தவரென்றாவது வேறெங்கும் சொல்லப்படவில்லையே. அவருடைய ஊர் திருத்துறையூரன்றோ? பின்னர் அவரைச் சண்பைநாதர் என்பது எங்ஙனம்?

இன்னுமொன்று. சிற்றம்பலநாடிகளைப் பலரும் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் மாணாக்கரென்பர். மேற்கூறிய சந்தானாசாரிய புராண சங்கிரகமுடையாரும் மெய்கண்டதேவர் புராணத்தில்,—

"மெய்யுணர்ந்தார் புகழு மருணந்தியோடு
மேவதிகை மனவாசகங் கடந்தார்
பொய்யகல் சிற்றம்பலநாடி கண்முன்னாகப்
புகழுறு மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மர்
மையகலும் பரிபாக நன்குணர்ந்து
மன்னு சிவதீக்கைமுறை மருவச்செய்து
தெய்வவருண் மேவிடமுப் பொருளுணர்த்திச்
சின்மயராந் தன்மையினைச் செய்துபின்னர்"

எனச் சிற்றம்பலநாடிகளை மெய்கண்டதேவருக்கு மாணாக்கராக்குவர். ஆயினும் மேலெடுத்துக்காட்டிய "நந்திசனற்குமரன்" என்றற்றொடக்கத்துத் தத்துவப்பிரகாசச் செய்யுள் சிற்றம்பலநாடிகள் நேரே மெய்கண்டதேவர் மாணாக்கரல்லரென்றும், அம்மெய்கண்டதேவர் சந்தானத்தில் உமாபதி சிவாசாரியருக்குப் பின் பலதலைமுறை கழிந்துவந்தவரென்றும் நன்கு தெரிக்கும். இவ்விருகூற்றில் சிற்றம்பலநாடிகளோடொருகாலத்திருந்தவராகிய தத்துவப்பிரகாசர் கூற்றன்றிப் பலநூற்றாண்டுகளுக்குப்பின் வந்த சந்தானாசாரிய புராணசங்கிரக முடையார் கூற்றுக்கொள்ளத் தக்கதன்று.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

REGISTRAR OF ... 17 MAY 1917 MADRAS

# சைவம்.

மலர் 3.] நள௵ மாசி௴—1917௵ பிப்ரவரி௴ [இதழ் 2

## சைவம்.

திருவி னாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னாயுல கத்தினுயிர்க் கெலாம்
கருவ னாகி முளைத்தவன் கானூரில்
பரம னாய பரஞ்சுடர் காண்மினே.

---

## சிவஞானபோதம்.

ஒன்றாஞ்சூத்திரம்—முதலதிகரணம்.

(11-வது பக்கத்தொடர்ச்சி.)

### உதாரண வெண்பா.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணறா
ளத்துவித மாதலருமறைக ளொன்றென்னா
தத்துவித மென்றறையு மாங்கு. (௫)

இவ்வெண்பா வேதத்திற்கூறப்பட்டுள்ள அத்துவிதம் என்னும் சொல்லின் உண்மைப்பொருளை உதாரணவாயிலாக விளக்கி, இறைவன் உயிர்களோடு "அவையே தானேயாய்" (அதாவது பேதாபேதமாய்) நிற்கும் முறைமையை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) பண்ணையும் ஓசையும்போல=பண்ணும் அதனின் வேறன்றியெண்ணப்படும் இசையும்போலவும்—பழமதுவும் எண்ணும் சுவையும்போல=பழமும் அதனின் வேறன்றியெண்ணப்படும் சுவையும்போலவும்—எங்கும் ஆம் அண்ணல் தாள்=எங்கும் வியாபகமாயிருக்கும் முதல்வன் திருவருள்—அத்துவிதம் ஆதல்=உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான்—அருமறைகள் ஒன்று என்னாது=அரிய வேதங்கள் ஏகம் என்று கூறுவதோடொழியாது—அத்துவிதம்

என்று ஆங்கு அறையும்—அத்துவிதம் என்றும் அவ்விடங்களிற் கூறும். (எ-று.)

அதாவது, வேதமானது பதிப்பொருள் ஒன்றே என்பதனை ஏகம் என்னுஞ் சொல்லாலும், அது உயிர்களோடு இரண்டறக்கலந்து நிற்றலை அத்துவிதம் என்னும் சொல்லாலும் விளக்கிற்றென்பதாம். இதனால் வேதத்திற் கூறப்பட்ட "ஏகம், அத்துவிதம்" என்னுஞ் சொற்களுக்குப் பொருள் "பிரமப்பொருள் ஒன்றேயுளது, இரண்டாவது பொருளில்லை" என்று கூறும் மாயாவாதக்கொள்கை மறுக்கப்பட்டது. (இதனை வேறோரிடத்தில் விரித்துக்கூறுவோம்.)

உதாரண வெண்பா.

அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றி
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று. (௪)

இச்சூத்திரத்தின் முதன் மூன்று உதாரண வெண்பாக்களுள் முதல் வெண்பாவினால் முதல்வன் உயிர்களோடு "அவையேயாய்" (அபேதமாய்) நிற்றலையும், இரண்டாவது வெண்பாவினால் "தானேயாய்" (பேதமாய்) நிற்றலையும், மூன்றாவது வெண்பாவினால் "அவையே தானேயாய்" (பேதாபேதமாய்) நிற்றலையும், வெவ்வேறு உவமைகளால் விளக்கி, இப்போது நான்காவது வெண்பாவினால் முதல்வன் அம்மூவகை யியல்பையும் ஒருங்கே யுடையவனாயிருத்தலை ஒரு உவமையால் விளக்குகின்றார்.

(இ-ள்.) உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல்—அரக்கை யுருக்கி அதனோடுசேர்த்து அணைத்த கற்பொடியானது அவ்வரக்கினோடு வேறறக்கலந்து நீக்கமின்றி நிற்றல்போல்—உடங்கு இயைந்து பிரிப்பு இன்றி நின்று=(முதல்வன் உயிர்களோடு) ஒருங்குகூடி நீக்கமின்றி உடனாய் நிற்றலால்—தானே உலகாம்=தானேயாம், உலகேயாம் தானேயுலகேயாம். (அதாவது பேதமும், அபேதமும் பேதாபேதமுமாம்). (ஆனால் "யானே யெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன்" என்று உயிர்களும் தாம் உணர்ந்த அநுபவத்தைக் கூறுமென வேதாகமங்கள் முழங்குகின்றனவே; அதனால் உயிர்களும் முதல்வன்போலவே அபேதமாயும், பேதமாயும், உடனாயும் நிற்கும் இயல்பையுடையனவோ என்னில் அப்படியன்று.) தமியேன் உளம்புகுதல்=அம்முதல்வன் பாசக்கூட்டத்தினின்றுந் நீங்கித் தனியாய் நின்ற என் உள்ளத்தில் சோகம் பாவனையாற்புகுந்து, வேற்றுமையின்றித்



தோன்றலால்—யானே உலகு என்பன் இன்று=யானே உலகெல்லாம் என்பேனாயினேன் இம்முத்திகாலத்து (ஆகையால் உயிர்களும் அவ்வாறு நிற்கும் இயல்புடையன வன்றாம்.) (எ-று.)

கலப்பாய் நிற்றலால் உலகேயாம் என்பார் "உடங்கியைந்து" எனவும், பொருட்டன்மையால் வேறு நிற்றலால் தானேயாம் என்பார் "நின்று" எனவும், உயிர்க்குயிராய் நிற்றலால் தானேயுலகாம் என்பார் பிரிப்பின்றி எனவுங்கூறினார்.

சிவபெருமான் உலகுயிர்களோடு தானேயாயும் வேறேயாயும் உடனாயும் நிற்றலைத் தமிழ்வேதம்

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண் குணமூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
யாறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானிடம் வீழிம் மிழலையே

என்று முழங்குகின்றது.

"அரக்கினோடுசேர்ந்த கற்சூரணமானது அரக்கினியல்பை யடைந்தவாறுபோல, எனது ஆன்மாவிற் சிவபெருமானைக்கண்டு இவரை உலகமேயாயுள்ளார் என்று கூறுகின்றேன்" என்று ஞானாவரண பாஷ்யத்திற் கூறப்பட்டது.

நான் மனுவாயினேன், சூரியனுமாயினேன் என்றும் நான் பிரமமாயிருக்கின்றேன் என்று எவன் அறிகின்றானோ அவன் இவையெல்லாம் ஆகின்றான் என்றும் வாமதேவரிஷி கூறினார் என்று பிருகதாரணியம் கூறுகின்றது. காணப்படுவதும் காணப்படாததுமாகிய ஈதெல்லாம் என்னால் வியாபிக்கப்பட்டன; நானே உலகத்துக்குநாதன்; என்னிலிருந்தே அனைத்தும் பிரவர்த்திக்கின்றன; நானே பிரமம்; நானே அநக்ஷரமாக அறியற்பாலன் என்று சர்வ ஞானோத்தரம் உயிர்கள்மேல்வைத்துக் கூறுகின்றது. இவ்வாறு வேதாகமங்கள் பலவிடங்களில் கூறுவதனால் ஆன்மாக்களும் சிவபெருமானைப்போலவே அபேதமாயும் உடனாயும் நிற்கும் இயல்பினையுடையனவோவெனில், அப்படியன்று. பாசக்கூட்டத்தினின்றும் நீங்கித் தனியாய்நின்ற ஆன்மாக்களின் அகத்தில் சோகம் பாவனையெனப்படும் சிவோகம் பாவனையால் சிவபெருமான் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றுதலால் அவ்வாறு கூறநேர்ந்ததென்க.

ஆனால், வேதாகமங்களில் "பிரமாகம்" (அதாவது பிரமம் நான்) என்றும், "சிவோகம்" (அதாவது சிவன் நான்) என்றும் அத்துவித பாவனை செய்யும்படி விதிக்கப்பட்டிருத்தல் யாது காரணத்தாலெனின்

கருடனும் மாந்திரிகனும் வெவ்வேறாயிருந்தும் கருடோகம் என்னும் அத்துவித பாவனையானது விடநிவர்த்தியின்பொருட்டு வேண்டப்படுதல்போல், பிரமப்பொருளாகிய சிவபெருமானும் ஆன்மாவும் வெவ்வேறு பொருள்களாயிருந்தும் ஆன்மாக்கள் மலநிவர்த்தியடைந்து பரசிவத்துவம் எய்துமாறு வேதாகமங்களில் அத்துவிதபாவனை விதிக்கப்பட்டதென்க.

இவ்வதிகாரணத்தால், முதல்வனும் உயிர்களும் "பொற்பணிபோல் அபேதம்" என்று ஏகான்மவாதிகளும், "இருளும் ஒளியும்போல் பேதம்" என்று மத்துவரும் "சொல்லும் பொருளும்போல் பேதாபேதம்" என்று வைணவர்களும் பிணங்கிக்கூறுவதைமறுத்து, முதல்வனும் உயிர்களும் "உடல் உயிர்போல் அபேதமும்" "கண்ணும் கதிரவன்போல்பேதமும்" "அறிவும் கண்ணொளியும்போல் பேதாபேதமும்" ஆகிய இம்மூவகை இயல்போடும் நிற்றலாகிய அத்துவித உண்மை சித்தாந்தஞ் செய்யப்பட்டது. இதனை உமாபதிசிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த சிவப்பிரகாசத்துள்ளும்

புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப் புகழளவைக் களவாகிப்
பொற்பணிபோ லபேதப், பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொ
ருள்போற் பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன, வறத்திறனால் விளைவதா
யுடலுயிர்கண் ணருக்கனறி வொளிபோற் பிரிவருமத் துவித மாகுஞ், சிறப்பின
தாய் வேதாந்தத் தெளிவாஞ்சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றும்.

என்று கூறியிருத்தலாலும் தெளிக.

(இன்னும்வரும்.)

## இராவணன்கணேசமூர்த்தியைப்பூசித்த சரித்திரம்.

முன்னொருகாலத்தில் இலங்கைக் கோமானாகிய இராவணன் ஊழிதோறூழியுயர்ந்து வளரும் திருக்கைலைமலையின் சாரலையடைந்து, சிவபெருமானை நோக்கி மிகவும் அரியதவமிழைத்தனன். சிவபெருமான் அவன் தவத்திற்கிரங்கி அவன்முன் தோன்றியருளினர். இராவணன் அவரைத்தரிசித்து, தன் தவம் பலித்ததென்று அளவுகடந்த மகிழ்ச்சியடைந்து, ஆனந்தக்கூத்தாடி, பலமுறையும் சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி கண்கள் ஆனந்தவருவிசொரியவும் உரோமம் சிலிர்ப்பவும், உடல்புளகங்கொள்ளவும் வேதாகமங்களால் தோத்திரம் செய்து நின்றான். சிவபெருமான் அவனை நோக்கி, "இராவணா, நாம் உன் தவத்திற்கு மகிழ்ந்தோம். நீ விரும்பும் வரம் யாது?" என்றனர். பரமானந்தப் பரம்பொருளாகிய இறைவனார் அவ்வாறு வினவுதலும்,



இராவணன் என்றும் இறவாத இன்ப அன்புவேண்டுவதைவிட்டு, மின்னலைப்போல் நிலையற்று மாயாகாரியமாய்த்தோன்றி யழிவதாகிய உலகவாழ்க்கையைப் பெரிதென நினைந்து, தான் எப்போதும் இன்புற்றுவாழவும் தேவர்களுக்கு இடுக்கண் விளைக்கவும் விரும்பி, சிவபெருமானை நோக்கி "என்னிறைவனே, சொர்க்காதி தேவலோகங்கள் அழியினும் என் இலங்காபுரியழியாமல் என்றும் நிலைபெற்றிருக்க வரந்தருளல் வேண்டும்" என்றனன். அவன் தமது திருவடிகளில் பத்திசெய்பவனாயிருந்தும் மாயையால் மயங்கி அவ்வரத்தைக் கேட்டானாகையால், சிவபெருமான் புன்னகைசெய்து, அவனிடத்தில் ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்து, "இராவணா, நீ இச் சிவலிங்கத்தைத் தரையில் வைக்காமலும், வாகனமேறிச் செல்லாமலும் சுத்தியாகவும் பத்தியாகவும் கொண்டுபோய் உன் இலங்காபுரியில் பிரதிட்டைசெய்வையேல் உன்விருப்பத்தின்படி இலங்கைமாநகர் என்றும் அழியாமல் நிலையுற்று நிலவும்" என்றுகூறி மறைந்தருளினர்.

இராவணன் தன் எண்ணம்பலித்ததென்று மிக மகிழ்ச்சியடைந்தவனாய், அச்சிவலிங்கத்தைக் கரத்திலேந்தி மிகவிரைவாய் இலங்கையை நோக்கிச்செல்வானாயினன். அதனைத் தேவேந்திரன் அறிந்து, அச்சிவலிங்கப் பிரதிட்டையால் இலங்கை யழிவின்றி நிலைபெறுமாயின் சொர்க்கம்முதலிய தேவலோகங்கள் இன்பமனுபவிக்கும் போகபூமிகளாயிருக்கும் நிலைமாறி அசுரர்களின் கொடுமையால் துன்பம் அனுபவிக்கும் நரகபூமிகளாய் விடுமென்று பயந்து, முப்பத்து முக்கோடி தேவர்கள் தன்னைப் புடைசூழச்சென்று திருக்கயிலையையடைந்து முதற்கோபுரவாயிலில் சிவகணத்தலைவராய் வீற்றிருந்தருளிய விநாயகக்கடவுளின் திருவடிகளில்வீழ்ந்து வணங்கித் தனது குறையைச்சொல்லி முறையிட்டனன். யார் எக்கடவுளை வணங்கினும் முதலில் விநாயகக்கடவுளை வணங்கவேண்டுமென்பது வேதாகமவிதி யாகையாலும், விநாயகக்கடவுள் அவ்விதிவழி யொழுகுவோர்களின் இடையூறுகளை நீக்குதலும், ஒழுகாதவர்களுக்கு இடையூறு விளைத்தலும் நியதியாதலினாலும், இராவணன் இவ்வேதவிதியை மறந்து விநாயகபூசை செய்யாமல் இலங்கைக்குத் திரும்பிப் பிரயாணமாயினனாதலாலும், அவன் தேவர்களுக்கு இடுக்கண் விளைப்பது கருதிச் சிவபெருமானிடம் வரம்பெற்றுச் சென்றானாதலினாலும், துஷ்டநிக்கிரமும் சிட்டபரிபாலனமும் செய்தல் அருண்முறையாகையாலும், விநாயகக்கடவுள் இராவணனுக்கு இடையூறு விளைவித்துத் தேவர்களை இரட்சிக்கவிரும்பி, அவன் வயிற்றில் சிறுநீர் அதிகமாய்ச் சுரக்கும்படிச் சங்கற்பித்தனர். அதனால் இரா

வணன் சலோபாதைமேலிட்டு கையிற் சிவலிங்கம் வைத்திருந்ததனால் அதைக் கீழேவைக்கமாட்டாமலும், அதைக் கையில்வைத்துக்கொண்டு ஜலஸ்பரிசம் செய்யமாட்டாமலும் இலங்கையை நோக்கி அதிவிரைவாய்ச்செல்ல யத்தனித்தான். வயிற்றில் சிறுநீர் பின்னும் அதிகமாகப்பெருகிவிடவே அடிபெயர்த்து வைக்கவும் இயலாதவனாய் பரிதபித்து, ஐயோ, கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற்போவதுபோல், மிகவும் தவஞ்செய்து அரிதிற் பெற்றவரம் அழிந்துவிடும்போற் காணப்படுகின்றதே, என்செய்வேன் என்று சொல்லி வருந்தினான். அச்சமயத்தில் விநாயகக்கடவுள் ஒரு பிராமணப் பிள்ளையைப்போல் திருமேனிகொண்டு அவன் முன் தோன்றினார்.

இராவணன் அவரைப்பார்த்துச் சந்தோஷங்கொண்டு மிக இனிய உபசாரமொழிகளைக்கூறி "ஐயா, பிராமணப்பிள்ளையாரே, எனக்குச் சலோபாதை மேலிட்டிருக்கிறது. அதையடக்க என்னாலியலவில்லை. என்கையில் சிவலிங்கம் இருப்பதனால் இதை வைத்துக்கொண்டு ஜலஸ்பரிசம் செய்யலாகாது. இதைத்தரையிலும் வைக்கலாகாது. ஆதலால் நான் ஜலஸ்பரிசம் செய்து திரும்பிவருமளவும் கருணைகூர்ந்து இதை உமது கையில்வைத்திரும்" என்றான். விநாயகக்கடவுள் அவனை நோக்கி "ஐயா நீர் யார்?" என்றார். அவன் "நான்தான் இலங்காதிபதி; தேவர்களும் வந்துவணங்கும் இராவணேசுவரன்" என்றான். விநாயகக்கடவுள் "அப்படியானால் இச்சிவலிங்கம் உனக்கு எப்படி கிடைத்தது. இதை எங்கே கொண்டுபோகிறீர்? இதின் மகிமையாது?. இவைகளை விஸ்தாரமாக எனக்கெடுத்துச்சொல்லும்" என்றனர். இராவணன் "ஐயா, நான் சலோபாதையைப் பொறுக்கமாட்டாமல் சற்றுநேரம் இதைவைத்திருக்கும்படி வேண்டிக்கொண்டால் பல கேள்விகளைக்கேட்டுக் காலம்போக்குகிறீர். இச்சிவலிங்கத்தின் பெருமை அளவிடற்கரியது. அதை இப்போது சொல்ல நேரமில்லை. ஜலஸ்பரிசம் செய்துவந்த பிறகு அவைகளைச்சொல்வேன்" என்றான். விநாயகக்கடவுள் "ஐயா தேவர்களும் வந்து வணங்கும் இராவணேசுவரராகிய நீரே உமது இருபது கரங்களாலும் வைத்திருக்கமாட்டாத மகிமைவாய்ந்த இச்சிவலிங்கத்தைச்சிறுவனாகிய யான் என் இருகரங்களில் எப்படி வைத்திருப்பேன்" என்றனர். இராவணன், "ஐயா, நீர் இன்னும் தாமதஞ்செய்யின், நான் உமது கண்முன் வயிறுவெடித்துச் சாவேன், ஆதலால் தயைசெய்து சற்றுநேரம் இதை வைத்திரும். நான் விரைவில் வந்து வாங்கிக்கொள்வேன். நீர் அஞ்சவேண்டாம்" என்று தனது பத்துவாயிலுமிருந்த பற்களையெல்லாம் திறந்துகாட்டிக் கெஞ்சினான். கணேசப்



பெருமான் "இராவணேசுவரரே, நீரோ வலிந்து இச்சிவலிங்கத்தைக் கொண்டுவந்து கொடுக்கிறீர். எனக்கோ இதின் பெருமை தெரியாது. ஆதலால் நான் இதை எவ்வளவுகாலம் வைத்திருக்கக்கூடுமோ அவ்வளவுகாலம் வைத்திருப்பேன். பிறகு உம்மை ஒருமுறைக்கு மும்முறைகூப்பிட்டும் பார்ப்பேன். அதற்குள் நீர்வந்து இதைவாங்கிக் கொள்ளாவிட்டால் தரையில் வைத்துவிடுவேன். அப்பால் என்மீது குறைசொல்லவேண்டாம்" என்றனர்.

இராவணன் "ஐயரே, நீர் இவ்வளவு உபகாரம்செய்தாற் போதும் இதற்காக உமக்கு நான் மிகவும் நன்றிபாராட்டுவேன்" என்றுகூறி அவர் கையில் சிவலிங்கத்தைக் கொடுத்துவிட்டுப்போய் ஜலஸ்பரிசம் செய்யவாரம்பித்தான். அவன் வயிற்றினின்றும் நீரானது கடல்மடைதிறந்தாற்போல் வெளிவரத் தலைப்பட்டு ஓயாமல்பெருகிக் கொண்டிருந்தது. அதைக்கண்டு இராவணன் பிரமைகொண்டு நீர்ப்பெருக்கு ஒரு சிறிதும் குறையவில்லையே, இதென்னவிபரீதம் என்று வருந்தி நிற்கையில் பிள்ளையார் "இராவணேசுவரரே" என்றழைத்தனர். அதைக்கேட்டமாத்திரத்தில் அவன் வயிற்றிலிருந்த நீரோடு நெருப்பும் விழுந்ததுபோல் கலங்கினான். "ஐயோ, என்வயிற்றிலிருந்த நீரில் ஒரு சிறிதும் குறைந்ததாகக்காணப்படவில்லையே, இதற்குள் இப்பார்ப்பாரப் பையன் என்னைக் கூப்பிடுகிறானே" என்றுசொல்லி "ஐயா அவசரப்படவேண்டாம், சற்றே பொறுத்திரும். இதோ வந்துவிடுகிறேன்" என்றான். விநாயகக்கடவுள் மறுபடியும், "ஐயா, இலங்காதிபதீ, ஓடிவாரும்" என்றார். இரர்வணன் "ஐயையோ, என்செய்வேன். இவன் இதற்குள் இரண்டுமுறை அழைத்துவிட்டான். பார்ப்பார்களுக்கு இரக்கமென்பதே இல்லைபோலும்" என்று சொல்லிக்கொண்டு அவர் கூப்பிட்டதைக் கேளாதவன்போல் மௌனமாயிருந்தான். விநாயகர் மறுபடியும் "இராவணேசுவரரே, உம்மை இதோடு மூன்றுமுறை கூப்பிட்டாயிற்று. இச்சிவலிங்கத்தைத் தாங்க இனி என்னாலாகாது. இது என்னைப் பாதலத்திலழுத்திவிடும்போற் காணப்படுகிறது. இக்கணமே வந்து இதை வாங்கிக்கொள்ளும்" என்றனர். இராவணன் அப்போதும் வரமாட்டாமையால் மனங்கலங்கி நிற்கையில், விநாயகக்கடவுள் சிவலிங்கத்தை நிலத்தில் வைத்தனர். உடனே அச்சிவலிங்கமானது "பாதமிரண்டும் வினவிற் பாதாளமேழினுக்கப்பால்" என்னும் வேதவசனத்தின்படியாகவும் முற்காலத்தில் "பிரமனரி யென் றிருவருந்தம் பேதமை ப்ரமமியாம் பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க—அரனா ரழலுருவா யங்கே யளவிறந்து—பரமாகிநின்ற"துபோலவும் கீழேழுலகங்களையும் ஊடுருவிநின்றது. அச்சமயத்தில் இராவணனுக்கிருந்த சிறுநீர்ப்பெருக்கும்

நின்றுவிட்டது. இராவணன் சிவலிகம் தரையில் வைக்கப்பட்டிருந்ததைப்பார்த்து என்று வருந்தி உடனே ஓடிச்சென்று அதைத் தன் ஒரு கரத்தால் எடுக்கமுயன்றான். அது அவன் கைக்கு வரவில்லை. பிறகு இரு கைகளால் எடுக்கமுயன்றான். அப்போதும் அது வரவில்லை. பிறகு தனது இருபது கரங்களாலும் தன் பலமெல்லாங் காட்டிப் பெயர்க்கமுயன்றான். அப்போது அச்சிவலிங்கம் பசுவின் காதுபோல் குழைந்து நின்றதேயன்றி ஒரு சிறிதும் பெயரவில்லை. அதனால் அச்சிவலிங்கம் மாபலலிங்கம் என்றும், அது இருக்கும் தலம் கோகர்னம் என்றும் சொல்லப்படுகிறது. சிவலிங்கம் இவ்வாறானமையைக்கண்டு, இராவணன் கோபங்கொண்டு "இந்தப் பார்ப்பாரப்பையன் இவ்வளவு மகிமைவாய்ந்த இச்சிவலிங்கத்தை இன்னும் சற்றுநேரமாவது வைத்திராமல் தரையில்வைத்து விட்டானல்லவா!, இவன் மிகவும் கன்னெஞ்சன், இரக்கம் சற்றுமில்லாதவன், கொடியவன் இவனைச் சும்மாவிடலாகாது" என்றுசொல்லி ஓடிச்சென்று, அவர் சிரத்தில் ஓங்கி ஒரு குட்டுகுட்டினான்.

விநாயகக்கடவுள் உடனே பிராமணப்பிள்ளை உருவத்தைமறைத்து, யானைமுகம்தோன்ற நின்று அவனோடு போர்புரிந்து அவன் இறுமாப்பை யடக்கத் திருவுளங்கொண்டு, பந்தாடுவதுபோல் அவனைத் தூக்கி எறிந்து விளையாடினர். அதனால் அவன் வலியிழந்து மிகவும் நொந்து "அபயம், அபயம், அடியேன்செய்த அபராதத்தைப் பொறுத்தருளல்வேண்டும்" என்று அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தான். விநாயகக்கடவுள் அவனோடு போர்புரிவதை நிறுத்தி, கருணைக்கண் வைத்தலும், அவன் அவ்வாறு தன்னைத்தண்டித்தவர் தனக்குச் சிவலிங்கம் தந்தருளிய சிவபெருமானின் வேறாகாத விநாயகக்கடவுளே யென்பதையும், தன் வல்லமையால் சிவலிங்கம் குழைந்ததென்று தான் தருக்கிநின்றமையால் தன்வலி இத்துணைத்தெனக்காட்டித் தன் தருக்கை நீக்குமாறு விநாயகக்கடவுள் அவ்வாறு ஆடல் புரிந்தனர் என்றும் உணர்ந்து, அவரைப் பன்முறையும் வீழ்ந்து நமஸ்கரித்து வேதவசனங்களால் துதித்தனன். தம்மை வணங்குவார்க்கு அறக்கருணையும் வணங்காதவர்க்கு மறக்கருணையும் செய்து ஆட்கொள்ளும் விநாயகக்கடவுள் அவனுக்கு அறக்கருணைசெய்து வேண்டிய வரங்களைக் கொடுத்தனர் இராவணன் இறுமாப்புநீங்கி, தன்வலியையும், குற்றத்தையும் நொந்து விநாயகர் திருவடிகளைத் தியானித்துக்கொண்டேபோய் இலங்காபுரியையடைந்தான்.

## அக்கரங்க ளின்று மகர வுயிரின்றேல்.

நமதுமெய்கண்டநாதர், வேதத்தில் முதல்வனும் உயிர்களும் ஏகம் என்று கூறியிருக்கவும், முதல்வனும் உயிர்களும் வெவ்வேறு பொருள்களென்று கூறுதல் அதற்கு முரணன்றோ வென்பார்க்கு, வேதம் ஏகம் என்று கூறுவதின் கருத்து இத்தன்மைத்தென விளக்கவேண்டி

"அக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு"

என்றருளிச் செய்தனர். இவ்வுண்மையை விளக்கவேண்டியே அருணந்திசிவாசாரியசுவாமிகளும் தமது சிவஞானசித்தியாரில்

ஒன்றென மறைக ளெல்லா முரைத்திட வுயிர்களொன்றி
நின்றன னென்றுபன்மை நிகழ்த்தவ தென்னை யென்னி
லன்றவை பதிதா னொன்றென் றறையுமக் கரங்கடோறுஞ்
சென்றிடு மகரம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே

என்றருளிச் செய்தனர். உமாபதிசிவாசாரியசுவாமிகளும் தமது திருவருட் பயனில்,

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து

என்றருளிச்செய்தனர். திருவதிகை மனவாசகங்கடந்தாரும் தமது உண்மைவிளக்கத்தில்

அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினோ—மெய்க்கண்ணு
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லா கமமோது நாடு.

என்றருளிச்செய்தனர்.

சைவசந்தான குரவர்களாகிய இவர்கள் மாத்திரமன்றி, பலசமயத்தாரும் பொதுநூலெனக் கொண்டாடும் திருக்குறள் செய்தருளிய திருவள்ளுவ நாயனாரும்

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்றருளிச் செய்தனர். இவர்களெல்லோரும் அகரவுயிரைக் கடவுளுக்கு உவமையாக வெடுத்துக்கூறினார்கள். ஆதலால், அகரவுயிரின் இலக்கணங்களியாவை, அவ்விலக்கணங்கள் கடவுளின் இலக்கணங்களோடு எவ்வாறு பொருந்துவன என்பவற்றை யாராய்வோம்.

உலகத்திலுள்ள பாஷைகள் பலவற்றிலும், அகாரமானது எழுத்துகளின் வரிசைக்கிரமத்தில் முதற்கண் வைக்கப்பட்டிருத்தலால், அது பொதுவாய் முதலெழுத்தென்று சொல்லப்படும். ஆனால், தமிழ்ப்பாஷையில் அது முதலில் வைக்கப்பட்ட ஒருகாரணத்தான் மாத்திரமன்றி, கடவுள் சேதனம் அசேதனம் என்னும் இருவகைப் பிரபஞ்சத்தின் கண்ணும் அத்துவிதமாய்க்கலந்து நிற்றல்போல், மற்ற உயிர்களோடும் மெய்களோடும் அத்துவிதமாய்க் கலந்து நிற்றலானும், முதலெழுத்தென்னப்பட்டது. முதல் என்னுஞ் சொல்லுக்குக் கடவுள் என்பதொரு பொருள். ஆதலால் முதலெழுத்தென்பது கடவுளெழுத்து என்றும் பொருள்படும்.

எழுத்துகள் முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் இருவகைப்படும். உயிரும் மெய்யும் முதலெழுத்தும், உயிர்மெய் முதலியன சார்பெழுத்துமாம். உயிரும் மெய்யும் கூடுவதனாலும், இவற்றின் விகாரத்தாலும் சார்பெழுத்துண்டாவதனால், உயிர்மெய் முதலிய சார்பெழுத்துகளை நோக்க, உயிரும் மெய்யும் முதலெழுத்துகள் எனப்படும். அவ்வாறே அகரத்தை முதலாகக்கொண்டு மற்ற உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும் பிறப்பதனால் அகர உயிரானது மற்றெல்லா வெழுத்துகளுக்கும் முதலெழுத்தென்று சொல்லப்படும்.

இனி அகரத்தை முதலாகக்கொண்டு மற்றவெழுத்துகள் உண்டாவதை விளக்குவாம். பரிமேலழகர் தாம்செய்த திருக்குறள் முதற்பா உரையில் "அகரத்திற்குத்தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க" என்றருளிச்செய்தனர். இதனால் அகரமானது நாதமாத்திரையாகிய இயல்பாற்பிறத்தலும், மற்றவெழுத்துகள் விகாரத்தாற் பிறத்தலும் பெறப்பட்டது. நாதம் என்பது சுத்தமாயா விருத்தியாகிய பரசரீரத்தினின்றும் தோன்றும் வியஞ்சகவொலியாம். அது உயிர்களின் அகத்தே அகாரமயமாய்நின்று ஒலிக்கும் இயல்புடையது. சந்திரகிரணம் கூடும்போது சமுத்திரம் உப்பி அதனால் ஒலியுண்டாவதுபோல், சிவபரம்பொருள் சத்தியுடன் கூடி, ஞானக்கிரியா சொரூபமாய் நின்று பிரபஞ்ச சிருட்டி செய்யத்தொடங்கி, சுத்தமாயையை யதிட்டிக்குஞ் சமயத்தில் ஆன்மாக்களின் ஞானப்பிரகாசத்திற் கேதுவாயிருக்கும் நாதமானது தோன்றும். அதிலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்னும் நான்கு வாக்குகளும் அகரமுதலாகிய அக்கரங்களும் விந்து முதலாகிய



தத்துவங்களும் தோன்றி பிரபஞ்சமுண்டாம். அவ்வியஞ்சக வொலியே பிரணவமும், பஞ்சாக்கர மகாமந்திரமுமாம். அதனால் அகரத்தைக்கொண்டே எல்லாவெழுத்துகளும் தோன்றி யியங்கும் என்பது பெறப்பட்டது. ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியாரும் "மெய்யினியக்க மகரமொடு சிவணும்" என்னுஞ் சூத்திர உரையில் "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லா மொப்பமுடிந்தது" எனக் கூறியதும் இக்கருத்துப்பற்றியே யாம்.

பிற எழுத்துக்களெல்லாம் முயற்சி முதலியவற்றால் விகாரமெய்திய வழியும், அகரமின்றி இயங்கப்பெறாமையைத் தொல்காப்பியத்தாலும் நன்குணரலாம். அதனை விளக்கும் தொல்காப்பியச் சூத்திரங்களுள் சிலவருமாறு:—

1. அ ஆ ஆயிரண்டங்காந்தியலும்

இவை அங்காத்தலையுடையன வாய்ப்பிறக்கு மென்பதாம்.

2. இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பாலைந்தும் அவற்றோரன்ன—அவைதாம்
அண்பல் முதனா விளிம் புறலுடைய

இவை வாய்திறத்தலுடனே அண்பல்லை நாக்கடியினது ஓரமானது பொருந்தப் பிறக்குமென்பதாம்.

3. உ ஊ ஒ ஓ ஔ வென விசைக்கும்
அப்பாலைந்து மிதழ்குவிந்தியலும்

இவை வாய்திறத்தலுடனே உதடுகளின் குவிதலாற் பிறக்குமென்பதாம்.

4. ககார ஙகாரம் முதனாவண்ணம்

இவை நாக்கினடி மேல்வாயடியைப் பொருந்தப் பிறக்குமென்பதாம்.

இப்படியே பிறவெழுத்துகளும் வரும். இவற்றால் அகரமானது வாயைத்திறத்தல் மாத்திரையாய்ப் பிறக்குமென்பதும், ஏனையவெழுத்துகளெல்லாம் வாயைத்திறத்தலோடு குவித்தல் முதலிய முயற்சிகளால் பிறக்கும் என்பதும் பெறப்படும்.

(இன்னும் வரும்.)

# வைதிகசிவஞானபோதம்

## அவைதிக சிவஞானபோதமாக ஆக்கப்பட்டமை.

தூத்துக்குடி எனப்படும் திருமந்திரநகரத்து மெஸ்ஸர்ஸ. ரா. மா. கம்பெனியார் வேண்டுகோட்பிரகாரம் தஞ்சை ம-ா-ா-ஸ்ரீ வி. குப்பு ஸ்வாமிராஜுஅவர்களாற் றமிழுரையேறப்பெற்ற வடமொழிச்சிவ ஞானபோதம் எங்ஙனம் அவைதிகமாக ஆக்கப்பட்டதென்பதை ஆராய்குதும்.

ராஜுஅவர்கள் தமது புஸ்தகத்து முகவுரையின் மூன்றும் பக்கத்தில்,

𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍋𑌽𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑍋𑌽𑌶𑍍𑌰𑍌𑌤𑌶𑍍𑌚 𑌸𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑌃|
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑌯𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑌃 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰 𑌇𑌤𑌰𑍋 𑌮𑌤𑌃|
𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍋 𑌦𑌶𑌧𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑌥𑌾𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌧𑌾 𑌪𑍁𑌨𑌃|
𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑌿𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌭𑌿𑌸𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃|
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑌯𑍋 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌶𑌤𑌕𑍋𑌟𑌿𑌪𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃||

சைவாகமோபி த்விவிதஃ ச்ரௌதோச்ரௌதச்ச ஸஸ்ம்ருதஃ|
ச்ருதிசாரமயஃ ச்ரௌதஃ ஸ்வதந்த்ர இதரோ மதஃ|
ச்வதந்த்ரோ தசதா பூர்வம் ததாஷ்டாதசதா புநஃ|
காமிகாதிசமாக்யாபிஸ் சித்தஸ் சித்தாந்தசம்ஞிதஃ|
ச்ருதிசார மயோயஸ்து சதகோடி ப்ரவிஸ்தரஃ||

"சைவாகமமும் சிரௌதம் அசிரௌதம் என இருவகையாய்க் கருதப் படுகின்றது; சுருதிசாரமயமானது சிரௌதமாம்; சுவதந்திரமானது அசிரௌதமாம்; சுவதந்திரம் பூருவம் பத்துவகையாகவும், சித்தாந்தப் பெயரினது மறுபடியும் பதினெண்வகையாகவும், காமிகமுதலிய பெயர் களாற் சித்தித்துள்ளதாம்; சுருதிசாரமயம் எதுவோ, அது நூறுகோடி விஸ்தாரமுள்ளதாம்" என்று சிவபுராண வாயுசம்ஹிதா பூருவபாகத்து ௨௮-ம் அத்தியாய சுலோகங்களை மொழிபெயர்த்தார்கள்.

1. இங்கே அவர்கள் விடுத்த மொழிபெயர்ப்பினுற் சுருதிசாரமா யுள்ள ஆகமமானது நூறுகோடி விரிவினையுடையதாம் என்பதும், அது சிரௌதமாம் என்பதும், எனவே, வைதிகமாம் என்பதும், இந்த நூறு கோடி விரிவினுள்ளே காமிகமுதலிய இருபத்தெட்டு ஆகமங்கள் சேர..தன என்பதும் பெறப்பட்டன.



2. இந்த இருபத்தெட்டு ஆகமங்களும் சிவபேதம் உருத்திரபேதம் என இருவகைப்படும். சிவபேதம் காமிகமுதற் சுப்பிரபேதம் இறுதி யாகிய பத்துமாம்; உருத்திரபேதம் விஜயமுதல் வாதுளம் இறுதியாகிய பதினெட்டுமாம். ஆகலின், வாயுசம்ஹிதை சித்தாந்தம் எனப் பெயரிய இருபத்தெட்டு ஆகமங்களையும் முன்னர்ப் பத்தும், பின்னர்ப் பதி னெட்டுமென்று வகுத்துக் கூறியதாம் என்க.

3. ராஜுஅவர்கள் மொழிபெயர்ப்புப் பிரகாரம் காமிகமுதல் வாதுளம் இறுதியாகிய சுவதந்திரம் இருபத்தெட்டும் அசிரௌதமாய் முடிந்தன.

4. முடியவே, இருபத்தெட்டு ஆகமங்களுள்ளே பதினுறுவதாயும், உருத்திரபேதம் பதினெட்டனுள்ளே ஆறுவதாயுமுள்ள இரௌரவாக மம் அசிரௌதமாய், எனவே, அவைதிகமாய் முற்றியது. முற்றவே, அந்த இரௌர வாகமத்துள் அடங்கிய சிவஞானபோதமும் அவைதிக மாய், எனவே, க்ஷமணர் பௌத்தர் முதலாயினோர்களுடைய நூல்கள் போல வேதபாஹ்யமாயன்றோ முடிந்தது.

5. அவர்கள் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களை வேதசார மென்று கூறி, அதனை நிரூபித்தற்கு 3,4,5,6-ம் பக்கங்களிலே விடுத்த காமிகாகம சுலோகமேனும், சூதசம்ஹிதா சுலோகமேனும், நீலகண்ட சைவபாஷ்யவசனமேனும், காலமாதவீயவசனமேனும் அவர்களது வாயு சம்ஹிதாத் தமிழுரையினுல் அவைதிகம் எனப் பெறப்பட்ட காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும்(அவைதிகமன்றென்று கண்டித்து) வைதி கம் என்று ஸ்தாபித்ததா? இல்லை! இல்லை!!

6. இந்நூலுக்கு உரைசெய்தற்கு முன் முகவுரையிலேயே இத் துணை அநர்த்தஞ் செய்தார்களாயின், இவர்கள் நூலகத்து எத்துணை அநர்த்தஞ் செய்திருப்பார்கள் என்பதை அன்பர்கள் யோசித்துணர் வார்களாக.

7. இவர்களைத்தாமா ஒருவர் ஆங்கிலேய முகவுரையிலே சிவஞான சுவாமிகளினுஞ் சிறந்த மகாபாண்டித்தியமுடையவர்கள் என்றும்,

மற்றொருவர்,

நன்று விளங்கு நல்சிவ ஞான
போத மதற்குப் பொருளறி யாமல்
ஏத நிறைய வியற்றினர் பலருரை
அவ்வுரை மக்கட் காணு காது
வெவ்விய தீமை விளைத்து..........
..................................நெறிபெற
விழைவோர் தமக்கு விருந்து போல்வதாம்.

"சிவஞானபோதத்தின் பொருளறியாமல், அதற்குக் குற்றம் நிறையச் (சிவஞானசுவாமிகள்முதலிய) பலர் உரைகள் இயற்றினார்கள், அவ்வுரைகள் மனிதர்க்கு அருணாகாமற் கொடுந் தீமைகளை விளைத்து (வருவனவாக), (ராஜு-அவர்கள் செய்த உரையோ) நன்னெறி பெற விரும்புவோர்க்கு விருந்துபோல்வதாம்" என்றும் வரைந்தார்கள்.

8. ராஜு-அவர்களேனும், முகவுரை கொடுத்த இவருள் எவரேனும் அந்த ராஜு-அவர்கள் விடுத்த வாயுசம்ஹிதாத் தமிழுரையினாற் சிவஞானபோதம் அவைதிகமன்றென்று ஸ்தாபிப்பார்களா?

ஆகவே, திருமந்திரநகரத்துக் கம்பெனியார்க்கு ராஜு-அவர்கள் வாயிலாகவாய்த்த இலாபம் அவைதிகசிவஞானபோதமாமன்றி, வைதிகசிவஞானபோதமன்றும் என்க.

திருப்பரங்குன்றம், இங்ஙனம்,
21—1—1917, ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையர்.

---

## சிதம்பர தத்துவார்த்தம்.

(185-வது பக்கத்தொடர்ச்சி.)

சிதம்பரதத்துவார்த்தமானது அனுபூதிமான்களாகிய சிவஞானிகளுக்கேயன்றி ஏனையோர்க்கு உணர்வரியதென்பதும், சிதம்பரம் என்னும் சொல்லின் பொருளும், அதின் வேறு பெயர்களும், அப்பெயர்களின் காரணங்களும், சிதம்பரம் சிவபெருமானுருடைய அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகிய ஆகாசமாமென்பதும், சர்வபிரபஞ்சமும் சிதம்பரத்தில் தோன்றியொடுங்கும் என்பதும், சிதம்பர இரகசியம் என்பது சிவபெருமானுடைய சொரூபநிலையையும், நடராஜவடிவம் அவருடைய நடத்தநிலையையும் விளக்குமென்பதும், பஞ்சாக்கரப்படியின் உண்மையும், இச்சைவத்தருவின் இரண்டாமலரின் பன்னிரண்டாமிதழில் ஒருசிறிது விளக்கப்பட்டன. இனி, சிவபெருமானுடைய நடத்தநிலையையுணர்த்தும் ஸ்ரீ நடராஜவடிவமானது சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களை யுணர்த்தி நிற்றலை விளக்குவாம்.

### உண்மைவிளக்கம்.

தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார—மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.



### சிதம்பர மும்மணிக்கோவை.

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பு
நாமநீர் வரைப்பி னிலவ ளாகமு
மேனைய புவனமு மெண்ணீங் குயிருந்
தானே வகுத்ததுன் றமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
யனைத்தையுங் காப்பதுன் னமைத்தகைத் தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலு
மாற்றுவ தாரழ லமைத்ததோர் கரமே
யீட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றூட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
யடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே.

ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய ஒரு திருக்கரத்திலிருக்கும் தமருகமானது சிருட்டித்தொழிலையும், அபயகரமானது காத்தற்றொழிலையும், வேறொரு திருக்கரத்திலிருக்கும் அக்கினியானது சங்காரத்தொழிலையும், ஊன்றிய திருவடியானது திரோபவத்தையும், தூக்கியதிருவடி அனுக்கிரகத்தையும் உணர்த்தும்.

இவற்றுள், சிருட்டியென்பது ஆன்மாக்களுக்கு மாயையைக் கொண்டு தனுகரண புவனபோகங்களை யுண்டாக்குதலாம். சிவபெருமான் தமது அருட்சத்தியோடுங்கூடி பிரபஞ்ச சிருட்டி செய்யத் தொடங்கி சுத்தமாயையை யதிட்டிக்குஞ் சமயத்தில் அதினின்றும் முதலில் உண்டாகும் தத்துவம் நாததத்துவம் என்னப்படும். அது அகார உகார மகாரங்களாலாகிய ஓம் என்னும் பிரணவரூபமாயிருக்கும் ஞானவொலியாம். அவ்வொலிவடிவாகிய நாததத்துவத்திலிருந்தேனைய தத்துவங்களும், அத்தத்துவரூபமாகிய சகல பிரபஞ்சமும் உண்டாம். அவ்வொலி (உடுக்கு என்னும்) தமருகத்தில் கேட்கப்படுவதனால் சிருட்டித்தொழிலைத் தமருகம் உணர்த்தும்.

அபயகரமானது ஆணவமலப் பகையால் விழுங்கப்பட்டு அறிவும் ஆற்றலுங்குன்றி வருந்திக்கிடக்கும் ஆன்மாக்களுக்கு அபயம் தந்து, தேகாதிகளைக்கொடுத்து அறிவாற்றல்களை விளக்கி, வினைப்போகங்களை யுண்பித்து, ஆணவமலப் பகையின் வலியையடக்கி இரட்சித்தலையறிவுறுத்தும்.

அக்கினியேந்திய திருக்கரம் சர்வசங்காரகாலத்தில் சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றும் ஒரு சிறு நெருப்புப் பொறியால் சர்வலோகங்களையுஞ்சுட்டு நீறாக்குதலாகிய சங்காரத் தொழிலை யுணர்த்தும். எண்ணிறந்தகாலம் எண்ணிறந்த பிறவிகளெடுத்துழன்று களைத்திருக்கும் ஆன்மாக்களுக்கு இளைப்பாறு

தலைத் தரவேண்டி, சிருட்டிகாலத்தில மாயையிலிருந்து தோற்றுவித்த பிரபஞ்சத்தை மீளவும் அம்மாயையில் ஒடுக்குதல் சங்காரம் எனப்படும். காரிய ரூபமாகிய பொருள்களைமீண்டும் முன்போல் காரணரூபமாக மாற்றுதற்கு நெருப்புவேண்டும் பொன்னாகிய காரணத்திலிருந்து உண்டாகிய ஆபரணமாகிய காரியத்தை நெருப்பிலிட்டால் முன்போல் காரணமாகிய பொன்னாகிறது. அதுபோலவே காரியரூபமாகிய எப்பொருளும் நெருப்பிலிடப்பட்டால் காரணரூபமாய் மாறிவிடும். நீரை நெருப்பிலிட்டெரித்தால் அது நீரின் தன்மைவிட்டு ஆவியின் தன்மையையடைகிறது. அந்த ஆவியானது குளிர்ந்தவிடத்து மீண்டும் நீராய் மாறுகிறது. அவ்வாறே "வித்துண்டாமூலமுளைத்தவா" என்னும் சிவஞானபோத முதற்சூத்திரத்தின் மூன்றாவது உதாரணவெண்பாவிற் கூறியபடி குளிர்ச்சியால் வித்தினின்றும் முளைதோன்றுவதுபோல் சிவசத்தி சங்கற்பத்தால் மாயையினின்றும் பிரபஞ்சம் தோன்றும். குளிர்ச்சியால் தோன்றிய முளை மீண்டும் வெப்பத்தால் அழிவதுபோல் சிவசத்திசங்கற்பத்தால் அழியும். ஆதலால் நடராஜப்பெருமான் திருக்கரத்திலிருக்கும் அக்கினி சங்காரத்தொழிலை விளக்குமெனப.

ஊன்றிய திருவடியானது ஆன்மாக்களுக்குக் கன்மநாசம் உண்டாகவேண்டி அவைகளைப் போகத்திலழுத்துதலாகிய திரோபவம் என்னும் தொழிலையுணர்த்தும். ஆன்மாக்களுக்குக் கன்மமலம் இருக்கும் வரையில் முத்திசித்திக்காது. அன்றியும், ஆன்மாக்கள் தாம்செய்த வினைப்பயன்களை யனுபவித்தாலன்றி கன்மநாசம் உண்டாகாது. ஆதலால் சிவபெருமான் அவைகளுக்குக் கன்மநாசம் உண்டாகவேண்டி மறைப்பைக்கொடுத்து, இன்பதுன்பங்களில் அழுந்தி யநுபவிக்கச்செய்கிறார். இதனை "ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின் றூட்டுவதாகு நின்றூன்றிய பதமே" என்பதனாலுணர்க.

தூக்கிய திருவடியானது தமது அடியவர்களை யணுகும் யமனை உதைத்து அவர்களைத் தமது திருவடி நீழலில் வைத்தருளச் சித்தமாயிருப்பதைக் காட்டும். அத்திருவடியிலுள்ள குஞ்சிதமானது (வளைவு) அடியவர்களின் சிரசிற் பொருந்தா மாறிருத்தல் "தாள்," "தலை" என்னும் சொற்களிரண்டும் புணர்ந்தபோது "தாடலை' யென்று இரண்டறக்கூடி நிற்றல்போல், அத்திருவடியைச் சேர்ந்தவர்கள் அதனோடு அத்துவிதமாய்க் கலந்துவிடுவர் என்பதையுணர்த்துகின்றது.

(இன்னும்வரும்.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 MAY 1917 MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3.] நளஸு பங்குனிமீ —1917ஸு மார்ச்மீ [இதழ் 3

நீமதித்துன்னி நினையேன் மடநெஞ்சமே
காமதிக்கார் பொழிற்காழி
நாமதிக்கும் புகழ்ஞான சம்பந்தனெண்
பூமதிக்குங் கழல்போற்றே,

---

சிவஞானபோதம்—இரண்டாஞ்சூத்திரம்.

(20-வது பக்கத்தொடர்ச்சி.)

இரண்டாமதிகரணம்.

## ஆணையினிருவினையின்.

(இ-ள்.) உயிர்களுக்கு இருவினை முதல்வனாணையினால் வரும். (எ-ம்)

இதில், க-வது—தன்னாற் கூறப்படும் பொருள்:—

உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.

உ-வது—ஐயப்பாடு:—

புனருற்பவஞ்செய்யுங்கால் முதல்வனுக்குத் துணைக்காரண முதலியன வேண்டப்படுமோ? வேண்டப்படாவோ?

ந-வது—பிறர்கூறும் பக்கம்:—

துணைக்காரணம் வேண்டப்படின் முதல்வனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றலுக்கும் இழுக்காய் முடியுமாகலான், முதல்வனுக்குத் துணைக்காரணம் வேண்டப்படா. (இவ்வாறு கூறுவோர் பரிணமவாதிகள்.)

௪-வது—மறுத்துரைக்குஞ்சித்தாந்தத்துணிபு:—

ஒரு பட்டணத்தைக்காக்கும் அரசன் தனது தண்டத்தொழிலை ஓர் அதிகாரியிடம்வைத்து உலகியலை நடத்தல்போல், ஆன்மாக்கள் புண்ணிய பாவங்களை யனுபவிக்க முதல்வன் தனதாணையை இருவினைகள் மாட்டுவைத்து நடாத்துவன். அதனால் இருவினை முதல்வனாணையினாலே வருமென்னப்பட்டது. படவே, முதல்வன் சுதந்திரத்திறகும் அளவிலாற்றலுக்கும் இழுக்கில்லையென்பது பெறப்பட்டது.

௫-வது இயைபு:—உதாரணவெண்பா.

உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையாசென்று.

இது, வினை ஒன்று உண்டு என்பதற்கும், அதுவே உயிர்க்குப் பயனாய்வரும் என்பதற்கும், மறுசெனனத்தில் வினை ஏறும் என்பதற்கும், அது முதல்வனையின்றி யமையாது என்பதற்கும் பிரமாணம் கூறுகின்றது.

(இ-ள்.) உள்ளதேதோற்ற=(முதற்சூத்திரத்தினால் இல்லது தோன்றாது என்பது பெறப்பட்டமையின்) முன் உள்ளதாகிய புண்ணியபாவம் என்னும் இருவகையான சஞ்சிதவினையே தன்பயனாகிய இன்பதுன்பங்களையும், அவைகளையநுபவித்தற்குரிய இடமாகிய உடம்பையுந்தோற்றுவிக்க—உயிர் அவ்வுடலின் அணையும்=உயிரே அவ்வுடம்பிற் பொருந்தி இருவினைகளை யனுபவிக்கும். (உடல் சடப்பொருளாகையால் அவைகளையனுபவிப்பதில்லை.) ஆனால், முன் வினையானது அனுபவிக்கப் பட்டொழிந்தால் மறுபிறவியாகிய மேலைக்கு வினை எவ்வாறு உண்டாகும் எனில்—முன்செய்வினை உள் அடைவே உள்ளதாம்=முன்செய்த வினை அநுபவித்தற்கேதுவான முறைமையிலே மேலைக்கு வினையுளதாம். (அதாவது, முன்செய்த வினையை அநுபவிக்கும்போது அதற்குத் துணைக்காரணமாய் உண்டாகும் விருப்பு வெறுப்புக்களே மறுபிறப்புக்கு வினையாய் ஏறும் என்பதாம்.) அப்படியானால், அந்தவினை ஒன்றேபோதுமாயிருக்க, முதல்வன் எதன்பொருட்டோ வெனில்,—செய்பவர் செய்திபயன் விளைக்கும் செய்யேபோல்=உழவர் செய்யுந்தொழிலுக்குத் தக்கபயனை விளைவிக்கும் விளைநிலம்போல் (அதாவது, விளைநிலம் விளைவிப்பதன்றி அத்தொழில் தானே விளைவிக்கமாட்டாததுபோல்)—வள்ளலவன் செய்வன்=(உணவும் வித்துமாய் ஆதிதொடுத்து முறையே வரும் பிராரத்தவினை ஆகாமியவினை யென்பவற்றை) முதல்வனே



அவ்வுயிர்களுக்குக்கூட்டுவன்—செயல் சென்று அணையா=(அவ்வாறன்றி) வினைகள் தாமேபோய் உயிர்களுக்குப் பயன்களாக அடையா. (எ-று.)

தற்பயன் குறியாது வேண்டுவார் வேண்டியவாறே ஈயும் அருளுடையவனாதலால் முதல்வனை "வள்ளல்" என்றனர். உள் அடைவு=உள்ளுதற்கு ஏதுவாகிய அடைவு (அதாவது அநுபவித்தற்கேதுவாகிய முறைமை.)

உதாரண வெண்பா.

அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தான்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போ—லவ்வினையைப்
பேராம லூட்டும் பிரானி னுகராரே
லார்தா மறிந்தணைப்பா ராங்கு. (௬)

இது, இருவினை சடமாகையால் ஆன்மாக்களைத் தாமே சென்றடையமாட்டாவாயினும், ஆன்மாக்கள் சேதனமாதலால் அவையே அவற்றின் பயனையறிந்து எடுத்து அநுபவிக்கும். ஆதலால், அதற்கொரு கர்த்தா வேண்டுமோ, என்னும் சந்தேகத்தை நீக்குகின்றது.

(இ-ள்.) காந்தபசாசம்போல்=ஒருவன் இரும்பினையெடுத்து நேரே பிடித்தால் காந்தமானது அதனை வலித்துக்கொள்வதுபோல்—அவ்வினையைப்பேராமல் ஊட்டும் பிரானின்=அவ்வினைப்பயன்களைப் பிறழாமல் ஊட்டுவிக்கும் முதல்வனால்—அவ்வினைஞர்தாம்=அவ்வினைகளைச் செய்யும் ஆன்மாக்கள்தாம்—அவ்வினையைச் செய்வதனில் சென்று அவ்வினையை நுகராரேல்=அவ்வினைகளைச் செய்தற்குரிய இடமாகிய உடம்பிற்பொருந்தி அவற்றின்பயனை யனுபவிப்பர். அவ்வாறு அநுபவியாராயின்—ஆங்கு=(அறிவுஞ் சுதந்திரமுமின்றி மலத்தின் மறைப்புண்டு கிடக்கும்) அப்பெத்தகாலத்தில்—ஆர்தாம் அறிந்து அணைப்பார்=வேறே எவர்தாம் அவற்றையறிந்து கூட்டுவார். (ஒருவருமில்லை.) (எ-று.)

உதாரணவெண்பா.

நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் செய்கமலத் தாம். எ

இது, அவ்வினை ஆதியோ? அனாதியோ? ஆதியாயின் முன் இல்லாதது இடையே தோன்றாது. அனாதியாயின், ஒருவர் கூட்டவேண்டுவ

தில்லை என்பார்க்கு, முதல்வன் உயிர்களுக்கு வினைப்பயன்களைக் கூட்டு முறைமை இத்தன்மைத்தென விளக்குகின்றது.

(இ-ள்.) நெல்லிற்கு உமியும், நிகழ்செம்பினில் களிம்பும், சொல்லின்தொன்மையே, புதிது அன்று—நெல்லினிடத்து உமியும் செம்பினிடத்துக் களிம்பும் எப்போது உண்டாயின என்று ஆராய்ந்து சொல்லுங்கால், அந்நெல்லுஞ் செம்பும் உண்டாயினபோதே உண்டாயினவாம். இடையே வந்தனவன்று. (அதுபோல்)—வல்லி மல கன்மம் அன்று உளவாம்—மாயை, மலம், கன்மம் என்னும் மும்மலங்களும் அநாதியே(ஆன்மா உள்ளவன்றே) உள்ளனவாம்—கமலத்து அலர் சோகம் பொன் வாள் செய் வள்ளலால் ஆம்—முன்னே உண்டான தாமரைப்பூ அலர்தலும் கூம்புதலும் சூரியனால் செய்யப்படுவதுபோல, சிவபெருமானது திரோதான சத்தியினால் மும்மலங்களும் தத்தங்காரியங்களைச்செய்யும். (எ-று.)

மாயை இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியாதலின் 'வல்லி' என்றார்.

(இன்னும் வரும்.)

---

## *உருத்திராக்ஷமகிமை.

### உருத்திராக்ஷதாரணத்தால் வானரமும் சேவலும் போகமோக்ஷங்களையனுபவித்தமை.

நந்திகிராமமென்னு மோர்கிராமத்தில் நந்தையென்னும் பெயருடைய ஓர் தாசியிருந்தாள். அவள் சேவலொன்று, வானரமொன்று, ஆகிய இவ்விரண்டையும் வளர்த்துவந்தாள். அந்தத் தாசியானவள் சிவபக்த சிரோமணி யாகையால், பஸ்மதாரணம் உருத்திராக்ஷதாரணமில்லாதவரைப் பார்ப்பதற்கும் பரிசிப்பதற்கும் அஞ்சிக்கூசி அப்புறஞ்செல்லும் நியமமுடையவளாய் தன்னால் வளர்க்கப்பட்ட சேவலுக்கும் வானரத்துக்கும் காது கழுத்துமுதலிய ஸ்தானங்களில் உருத்திராக்ஷதாரணஞ்செய்து, அவைகளுக்குத் தன்னுடைய நாட்டியத்தையுங் கற்பித்துக்கொடுத்து, அதிகசிறப்புடன் வளர்த்துவந்தனள். இவ்வாறு நெடுநாள் சென்றபின்னர் அவ்விரண்டும் இறந்துவிட்டன.

*இது ஸ்ரீமத் ஏகாம்பர சிவயோகிகளின் மாணாக்கர் வைதிக சைவசித்தாந்தப் பிரசங்கரத்நாகரம், ஸ்ரீமான் கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள் வெளியிட்டுவந்த "ஞானபாநு" என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்து அச்சிடப்பட்டது.



இறந்துபோன அவ்விரண்டும் உருத்திராக்ஷதாரணத்தோடு கூடியிருந்த புண்ணியவிசேடத்தால், கோழியானது காஸ்மீரதேசத்துக் கரசனாகிய பத்திரசேனனுடைய மகனாகப்பிறந்தது. வானரம் அவ்வரசனுடைய மந்திரியின் மகனாய்ப்பிறந்தது. அரசன் தன்மகனுக்கு சுதன்மாவென்று பெயரிட்டான். மந்திரி தன்மகனுக்குத் தாரகனென்று பெயரிட்டான். இவ்விரண்டுபேரும் உடலும் உயிரும்போற் கூடிவாழ்ந்து, அரசுரிமைக்குரிய பொன்மணிமுதலிய செல்வங்களை யெல்லாம் வெறுத்து, முத்திசாதனத்துக்குரிய உருத்திராக்கமணிகளையே கிடைத்தற்கரிய சிறந்த ஆபரணங்களென மதித்து அவற்றை விதிப்படி சிரமுதலிய அங்கங்களிலணிந்து, நெடுங்காலம் தங்கள் ராச்சியத்தை யாண்டு, இம்மையி லனுபவிக்கவேண்டிய போகங்களையெல்லாங் குறைவின்றி யனுபவித்துத் தங்கள் குடைநிழலின்கண் வாழ்வாரையும் உருத்திராக்கமணியில் அன்புவைத்து, அணியச்செய்து சிவசம்பந்திகளாக்கி, இவ்வுலக வாழ்வைவிட்டு சிவலோகஞ்சென்று அங்கு சிவகணங்களோடு வாழ்ந்திருந்தார்கள்.

இழிந்த பிறப்பினையுடைய சேவலும் வானரமும், இழிந்த பிறப்பொழிந்து அரசச்செல்வத்தை யனுபவித்து மறுமையில் சிவலோகமடைந்தது தவங்களைச்செய்தமையாலோ, தானங்களைச்செய்தமையாலோ, ஞானவிசாரஞ்செய்தமையாலோ. இவைகளிலொன்றுமன்று. உருத்திராக்கந்தரிக்கப்பெற்ற தொன்றாலேயாம். ஆகலான் இம்மை மறுமைப் பயன்களை யடையவிரும்புவோர் உருத்திராக்கமணிகளையே சிறந்த ஆபரணமாகக்கொண்டு கூசாது அணியவேண்டுமென்க.

---

### உருத்திராக்ஷதாரணத்தால் (தன்னைவென்ற) பகைவனைவென்றது.

புட்கரதேயத்தையாண்ட சவுமியனென்பவனொருவன் அழகிலே சிறந்த தன் மனையாளுடைய, இன்பநலத்தை வெறுத்து, பிறர்மனை நலனையே பெரிதென விரும்பியும், புல்லொழுக்கங்களையே நல்லொழுக்கங்களெனக் கடைப்பிடித்தும், அநீதியெல்லாம் நீதியென்றெண்ணியும், தன்கீழ்வாழ்வோரை ஒருகணமேனும் நீங்காது வருத்துவதே தொழிலாகக்கொண்டு அரசுபுரிந்தான்.

அவன் மனையாள் தன்னைக் கணவன்விரும்பாதொழியலே காமத்தீயால் மிகவும் வெதும்பிச் சகிக்கலாற்றாது, தன்னரசனுக்குரிய புரோகிதனுடைய மனையாளாகிய சத்தியவிரதை யென்பவளிடத்திற் சென்று தனக்குநேர்ந்த குறைபாடுகளெல்லாம் ஒன்றொழியாதுகூறி, என்கணவன் எனக்கின்பத்தைத்தந்து என்னைவிட்டுப் பிரியாது எப்பொழுதிருப்பான் என்றனள். சத்தியவிரதையானவள் கணவனாசையால் படுகின்ற

துன்பத்தைப்பார்த்து மனமிரங்கி, “ஓ பெண்ணே, நீயேன் கவலைப்படுகின்றாய், சிவபெருமானுடைய கண்மணி (உருத்திராக்கமணி) யிருக்கின்றது; அதனைத்தருகின்றேன்; நீ யணிந்துகொள்; உன்கணவன் உனக்குக் கண்ணாயிருப்பான்; இதனை நம்பு; வேறொருமந்திரமும் தந்திரமும் வேண்டாம்” என்றனள். அவ்வரசன்மனைவி அப்பார்ப்பனியினுடைய பாதத்தில் வீழ்ந்து வணங்கி “நானுய்ந்தேன், உய்ந்தேன்” என்று ஆனந்த பரவசத்தளாய் “அம்மணி! அக்கண்மணியைத்தாரும், அணிந்துகொள்ளுகின்றேன்” என்ன, அப்பார்ப்பனி ஓர் அக்கமணியை யெடுத்து “உனக்குப் புத்திரப்பேறுண்டாகக்கடவது” என்றாசீர்வதித்துக் கொடுக்க, அம்மணியை அன்போடேற்று அன்றுதான் மங்கிலியத்தைத் தரித்தவள்போல் தரித்துக்கொண்டு அப்பார்ப்பனியிடத்து விடைபெற்றுச் சென்றனள். சென்றவன்றே இவளை என்றும் நினையாத கணவன் அவள்பால்வந்தனன். உருத்திராக்ஷதாரணியாகிய அக்கற்புடையவளதிசயித்து முன்னே நிற்க, அவன் அவளைப்பார்த்து அவளுக்கப்போதுள்ள அப்பேரழகு எப்போது வந்தது என்றுகூறி மகிழ்ந்து களித்து இருவரும் மன்மதனும் ரதியும் போன்றவர்களாய் அயலார்மனையை வெறுத்து இன்புற்றிருந்தார்கள்.

இவ்வாறிருக்கு நாள்களிலோர்நாள் அவ்வரசன் அயலூருக்குச் செல்ல, அங்குதன் சைனியங்களைக் காவாமையால் திக்குகளிலெல்லாம் அச்சைனியங்கள் ஓடிப்போய்விட்டன. அவ்வாறோடிப்போனதை யுணர்ந்த மாற்றரசர் அவ்வரசனைத் தோற்றோடிப்போகும்படிச்செய்தார்கள். அரசனும் அரண்மனைக்குட் சென்று மனைவியிடத்தில் தோல்வியுற்றதைக்கூற, அவ்வசுமதி அரசனைப்பார்த்து “நீர் பயப்படவேண்டாம், சிவபெருமானது உருத்திராக்கமிருக்கின்றது. அதை ஆபரணம்போல் தரித்துக்கொண்டால் பகையொழிவீர்; பெருந்திரவியஞ்சேர்ப்பீர்; இடையூறுகணீங்குவீர் உம்மைத் தேவரும் வணங்குவார்கள்; இடபக்கொடியேந்திய சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் பெறுவீர்; ஆகையால், முறைமைப்படி அம்மணியைத்தரித்துக்கொள்ளும்” என்று கூறினள். அவ்வாறே புரோகிதரைக்கொண்டு ஆயிரம் உருத்திராக்க மணியை யணிந்து பகையை வென்று, அப்பகைவருடைய தேசங்களையுங் கைப்பற்றி, தன்குடிகளனைவரையும் அவ்வுருத்திராக்கமணியைத் தரித்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டான்.



## சுவரில் சித்திரரூபமாயிருந்த திருமால் உருத்திராக்ஷமகிமை கூறியது.

இவ்வாறு உலகத்திலுள்ளவர்களெல்லாம் உருத்திராக்க மணியை யணியச்செய்த அரசனுக்கு இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பிறந்தார்கள். அவன் அவர்களும் உருத்திராக்கமாலையை ஆபரணமாகத் தரிக்கச்செய்தான். அவ்வாறே அவர்களும் தரித்துக்கொண்டு வந்தார்கள். பின்பு கமலாக்கனென்னு மோரரசன் அப்பெண்களில் காலஞானி என்பவளை மணந்து கலவியின்பத்தை விரும்ப, அவள் “உருத்திராக்கமில்லாதவர்களைப் பரிசிக்கமாட்டேன்” என்று கூறினள். அவ்வரசன் புன்சிரிப்புகொண்டு “அரசர்களணியவேண்டிய ஆபரணங்கள் அநேகமிருக்க நீ அணிந்திருக்கின்ற உருத்திராக்கமணி அவ்வாபரணங்களிலொன்றல்லவே” என்று தடுத்துக்கூறினன். அப்போது காலஞானி உருத்திராக்கமணி யணிவதினாலுண்டாகும் பயன்களை யெடுத்துக்கூறி “இவற்றை ஆகமவிதிகளுணர்ந்த பெரியோர்களைக்கேட்டு உனக்குச் சம்மதப்படின் தரித்துக்கொள்” என்று கூறினள். அதற்கு அரசன் “யாராயிருந்தாலும் நானெடுத்துச் சொல்பவர்களைக்கொண்டு அவ்வுருத்திராக்க மணியின் மகிமையைச்சொல்லச் செய்தால் நானே உனக்கு மனைவி நீயே எனக்குக் கணவனாவாய்” என்று ஊழ்வினையின் வலிமையால் அறிவில்லாமற் கூறினன். காலஞானியும் அதற்குடன்பட்டாள். இராக்காலமும் ஒழிந்தது. அரசன் கொலுமண்டபத்தையடைந்து சதுர்வேதமுணர்ந்த வேதியர்களோடும் வீற்றிருந்தான். அப்போது காலஞானி இன்னார் கூறின் அதனைத் தெளிவேனென்று நீ குறிப்பித்த அவரைக் காட்டுவாயென்று வினவ, அவன் சுவரில் எழுதியிருந்த திருமாலைக் காட்டி “இவரைக்கொண்டு நீ சொல்லுவிப்பாய்” என்று கூறினன். அப்போது அப்பெண்மணி சிறிது மஞ்சாது சொல்லுவிப்பதற்குச் சம்மதித்து நின்று, பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கின்ற திருமாலை உருத்திராக்கமணியின் மகிமையைக் கூறும்படி கட்டளையிட்டருளவேண்டுமென்று சிவபெருமானைநோக்கி,

வெண்ணீ றணிந்த விமலா விரிசடைமேற்
றெண்ணீர் பொறுத்த சிவானந்த வெள்ளமே
பண்ணீர் மொழியொருத்தி பங்கா கடுவொடுக்கு
மொண்ணீல கண்டா வுயிர்க்குதவ வேண்டுமால்.

ஏனைப் பொருப்பா யனமா யிருநிலனும்
வானத் தளவு மருண்டார்க்கும் வந்திலா
யூனெக்க வன்பார்க் குடனிற்பா யென்பதெலாங்
கானக் குழல்பங்கா வித்தலையிற் காண்பேனல்.

மையார் களத்தாய் மறியாய் மழுப்படையாய்
பையா டரவணைய பாய்விடையா யன்பிலர்க்குப்
பொய்யாய் பிறந்திறவாப் புண்ணியாவென் போல்வார்
மெய்யாய் நினைத்தேன் முடித்தருள வேண்டுமால்.

என்று பிரார்த்தித்தனள். அப்போது அச்சுவரில் எழுதியிருந்த அறி
துயில் கூர்பவராகிய திருமால் எழுந்துநின்று கண்களை இமைத்தனர்.
அவ்வாறு கண்களிமைத்தலைக் கண்டகாலஞானி தோத்திரங்களைப் பாடி
னாள். தன்மனதில் அதுவரையிலிருந்த நடுக்க நீங்கினாள். கரங்களைச்
சிரசிற் சூட்டினாள். திருமாலைச் சமீபித்தாள். சமீபித்த அக்கால ஞானி
திருமாலை வணங்கி, "ஓ சுவாமி! எனதுயிர் போன்றவர்க்கு உருத்திராக்க
மணியின் சிறப்பைக்கூறி யருளவேண்டும்" என்று பிரார்த்தித்தலும்,
திருமால் சௌமியனென்பவனது பெருந்தவமே, சொல்லுகின்றேனெ
ன்று கூறுகின்றனர்.

"சிவபெருமானது உருத்திராக்ஷ மணியின் சிறப்பை யானோ கூற
வல்லேன்? எனக்கும் எளிமையாய் விட்டதோ? என்னாற் கூறவேலாது!
அவ்வுருத்திராக்க மணியைத் தரித்தவர்களைத் தரிசித்தவர்கள் கைலாய
பதியின் திருவுருவமைந்து தேவர்கள் வணங்க வீற்றிருப்பார்கள். பிறந்த
நாள் முதலாகத் துன்மார்க்கத்தில் நடந்து கடினசித்தமுடையவர்களாய்
கொலைகளவு முதலியவற்றில் பயின்றவர்களும் ஓர் உருத்திராக்க மணி
யைத் தரித்தால் அவர்கள் பெரும்பேறு என்போன்றவர்கட்குக் கிட்டு
வது அரிது. உருத்திராக்கமணியை யணியாமல் எத்தவம் புரியினும் அத்
தவம்பொய்யே. அத்தகைய உருத்திராக்கமணியின் மகிமை என்னா
லளவிட்டுரைப்பதற் கரிதாம். அம்மணியின் மகிமைகள் உன்னைப்போல்
யாரறிந்தவர்கள்?" என்று திருமால் பலவும் எடுத்துக்கூறி சேஷசயனத்
தின்மீது அறிதுயில் கூர்ந்தனர். அப்போது வேதியர்களும் மன்னவர்
களும் திருமகளையொத்த காலஞானியைத் துதித்தார்கள்.

---

# குமரகுருபரசுவாமிகள்.

## சரித்திரச்சுருக்கம்.

பாண்டிநாட்டிலே, தாமிரபர்ணிநதிதீரத்திலே, ஸ்ரீவைகுண்டமென்று வழங்குகின்ற கைலாசபுரத்திலே, வேளாளர்குலத்திலே ஏறக்குறைய இருநூற்றெண்பது வருடங்கட்குமுன்னே சிவபக்தியிற் சிறந்தவரும், இல்லறவொழுக்கத்திலே வழுவாதவருமாகிய சண்முகசிகாமணிக் கவிராயரென்பவர் ஒருவரிருந்தார். அவர் தமக்குப் புத்திரப்பேறின்மையால் தமது மனைவியாராகிய கற்பிற்சிறந்த சிவகாமசுந்தரியாரோடு மிகக்கவலையடைந்து, அதுகாரணமாகத் திருச்செந்தூர் முருகக்கடவுளை உபாசித்துவந்தனர். அக்கடவுளுடைய திருவருளினாலே ஒருபுத்திரர் அவதரிக்க; பிதாமாதாக்களிருவரும் பேருவகையுற்று, அவருக்குச் சாதகன்மமுதலியவற்றை உரியபருவங்களிலே மிகுந்த சிறப்போடு செய்வித்து, அருமைபாராட்டி வளர்த்துவருநாளில், ஐந்துவயதாகியும் அவர் பேசாமைகண்டு, ஊமையெனத்தெளிந்து, புத்திரப்பேறின்மையினும் மிகவருந்தி, முருகக்கடவுளைக்குறித்துப் பல அரியவிரதங்களை அநுட்டித்துவந்தார்கள்.

அந்நாளிலே, ஒருநாள் சண்முகசிகாமணிக்கவிராயர் மனைவியாரோடு புத்திரரையும் உடன்கொண்டு, திருச்செந்தூரையடைந்து, முருகக்கடவுளைத் தரிசித்துத் துதித்து, "எம்பெருமானே! இப்புத்திரனை ஊமைதீர்த்து ஆட்கொண்டருளவேண்டும்." எனப் பிரார்த்தித்து, சண்முகவிலாசத்திற்முனே வசித்துக்கொண்டு இப்புத்திரனுக்கு ஒருமண்டலத்தித்திற்குள் ஊமைத்தன்மை நீங்காதொழியுமேல் மனைவியோடு பிராணத்தியாகஞ் செய்துக்கொள்ளக்கடவேனென உறுதிகொண்டு, நியமாகத் தினந்தோறும் *வதனாரம்பத்திலே ஸ்நாஞ்செய்து, முருகக்கடவுளைத் திரிகாலங்களிலும் தரிசித்து, வழிபட்டுவந்தனர். தயாநிதியாகிய முருகக்கடவுள், அவர் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளும்படி குறித்துள்ள அந்நாளிலே, சூரியனுதிக்க ஒரு ஜாமமிருக்குமளவில் அருச்சகர் வடிவங்கொண்டு, சண்முகவிலாசத்திலே நித்திரைசெய்கின்ற அவர் புத்திரரிடத்திலெழுந்தருளி, "†குமரகுருபரா" என்று தட்டியெழுப்பி, அவருடைய நாவிலே தம்முடைய சடாக்ஷரத்தையெழுதி, அவரை நோக்கி, "குழந்தாய் விரைவிலே நமது விசுவரூபதரிசனத்திற்கு வருவாயாக." என்று ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினர். உடனே குமரகுருபர

* வதனாரம்பம் - சமுத்திரத்திலே அங்குள்ளதோர் ஸ்நானகட்டம். † அன்று முதல் குமரகுருபரரென்னும் திருநாமமுண்டாயிற்று.

சுவாமிகள் தமது மாதாபிதாக்களை "அம்மே, அப்பா" என்று தட்டியெழுப்பி, நடந்தவிடயங்களை யறிவிக்க; அதுகேட்ட மாதாபிதாக்களிருவரும் முருகக்கடவுள் தங்கள் புத்திரருக்கருளிய பெருங்கருணைத்திறத்தை வியந்து புகழ்ந்து, அப்புத்திரரோடு வதனாரம்பத்திலே ஸ்நானஞ்செய்து நியதிமுடித்து, சந்நிதியையடைந்து, விசுவரூபதரிசனஞ்செய்துகொண்டு நின்றார்கள். அப்பொழுது குமாரகுருபரசுவாமிகள் முருகக்கடவுளுடைய திருவருளினாலே தமிழ்ச்செய்யுள்பாடுஞ் சத்தியுண்டாகப்பெற்று, "கந்தர்கலிவெண்பா" என்னும் ஓர் பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

மற்றைநாட் பிராதக்காலத்திலே, குமாரகுருபரசுவாமிகள் சிவசின்னமாகிய விபூதி ருத்திராக்ஷங்களைத்தரித்துத் திருக்கோயிலையடைந்து, சுவாமியைத்தரிசித்து, இனி ஞானாசாரியரைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தோடு முருகக்கடவுளுடைய திருவடிகளைத்தியானித்துக்கொண்டு பிரதக்ஷிணஞ்செய்யும்போது, அக்கடவுளுடைய திருவருளினால் ஆகாயத்திலே, "அன்பனே, நீ இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு உத்தரயாத்திரைசெய்யுங்கால் எவ்விடத்திலே உன்வாக்குத் தடைப்படுமோ அவ்விடத்திலே ஞானோபதேசம் பெறக்கடவை." என்று ஓரசரீரிவாக்கு அநேக சமஸ்தருங்கேட்க எழுந்தது. அதுகேட்டுக் குமாரகுருபரசுவாமிகள் திருவுளமகிழ்ந்து, திருவருளைப்புகழ்ந்து, நிலத்திலேவிழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, தம்மை ஆண்டருளிய அக்கடவுளிடத்தில் அநுமதிபெற்றுக்கொண்டு, திருச்செந்தூரை அரிதினகன்று; மாதாபிதாக்களோடு தமது ஜன்மஸ்தலமாகிய கைலாசபுரத்திற்சென்று, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு சிலகாலம் வசித்திருந்தார்.* பின்பு, ஒருநாள் மதுரைக்குப்போகவிரும்பி, தமது தாய்தந்தையர்களுடைய பிரிவாற்றாமையைத்தேற்றி, விடைபெற்றுக்கொண்டு, தம்பியாராகிய குமாரகவிகளும் உடன்வரப் புறப்பட்டுவரும்போது, வழியிலே "மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்" என்னும் ஒரு அருமைப்பிரபந்தத்தைப் பாடிமுடித்துக்கொண்டு, திருப்பரங்குன்றத்தையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டிருந்தார்.

அன்றிரவு மீனாக்ஷியம்மையார், மதுரையையாளும் அரசராகிய திருமலைநாயகர் சொப்பனத்திலே தோன்றி, "நமது குமாரனாகிய சுப்பிரமணியனுடைய கிருபையைப்பெற்றவொருவன் நம்மைக்குறித்து ஓர் பிள்ளைத்தமிழ்பாடிமுடித்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் வந்திருக்

* இங்குவசிக்குநாளிலே இத்தலத்தைச்சுட்டி "லைகலைக்கலம்பகம்" என ஒரு பிரபந்தம் அருளிச்செய்ததாகவும் சரித்திரமுண்டு; அப்பிரபந்தம் கிடைக்கவில்லை.



கின்றான்; நீ பரிவாரங்களோடுசென்று அழைத்துக்கொண்டுவந்து அப்பிள்ளைத்தமிழை நமது சந்நிதியில் அரங்கேற்றக்கடவாய்." என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். உடனே திருமலைநாயகர் விழித்தெழுந்து, குதூகலமடைந்து, தாங்கண்டசொப்பனத்தைச் சமஸ்தருக்கும் மற்றைநாட்காலையிலறிவித்து, மிகுந்தமனமகிழ்ச்சியோடும் கைகளைச் சிரசிலேயஞ்சலிசெய்துகொண்டு, தமது பரிவாரங்களோடு திருப்பரங்குன்றத்திற்சென்று, சுவாமிகளைத்தரிசித்துவணங்கி, "யாவராலும் பெறுதற்கரிய திருவருளைப்பெற்ற சுவாமீ! தேவரீரை அடியேன பூர்வத்திலே புரிந்த புண்ணியத்தினால் தரிசிக்கப்பெற்றேன்." என்று முகமன்கூறி மீனாக்ஷியம்மையாருடைய ஆஞ்ஞையைத்தெரிவித்து, அவரையும் அவர் அருளிச்செய்த பிள்ளைத்தமிழையும் யானைமீதேற்றிக்கொண்டு, மதுரையையடைந்து நகர்வலஞ்செய்வித்தார். பின்பு குமாரகுருபரசுவாமிகள் திருக்கோயிலையடைந்து, சித்திவிநாயகக்கடவுளையும், சோமசுந்தரக்கடவுளையும் தரிசித்து, துதித்து வணங்கிக்கொண்டு, மீனாக்ஷியம்மையாருடைய சந்நிதியையடைந்து, நமஸ்கரித்து, எழுந்துநின்றார். அப்பொழுது, சர்வலோகங்களையும் பெற்றும் குமரியாகவே விளங்காநின்ற மீனாக்ஷியம்மையார், தெய்வத்தன்மைபொருந்திய தமது இளந்திருக்கோலத்தைக்காட்டியருள; சுவாமிகள் தரிசித்து, அடியேன்செய்த பிள்ளைத்தமிழுக்கு இது பரிசுபோலுமென்றுநினைந்து, அத்தியந்த ஆச்சரியமடைந்து, தாமியற்றிய பிள்ளைத்தமிழைச் சந்நிதானத்திலே அரங்கேற்றுவாராயினர்.

அப்பொழுது, அங்குள்ள சிவனடியார்களிலொருவர் பிள்ளைத்தமிழ்த் திருமுறையைப் பீடத்திலெழுந்தருளுவித்து விதிப்படிபூசித்து வணங்கித்துதிக்க, குமாரகவிகள் அரசருடைய வேண்டுகோளின்படியே அதனைவாசிக்க, சுவாமிகள் அதன்பொருளை யாவருங்கேட்டு இன்புறும்படி விரித்துப் பிரசங்கித்தார். அத்தினத்திலே காப்புப்பருவம் ஒன்றே நடந்தது. சுவாமிகள் இவ்வாறே, தினமும் ஒவ்வொருபருவமாகப் பிரசங்கித்துக்கொண்டுவரும்போது, வருகைப்பருவத்தில், மீனாக்ஷியம்மையார் அருச்சகரது பெண்குழந்தைபோன்று இளந்திருக்கோலத்தோடு, திருமலைநாயகர் மடியின்மீது எழுந்தருளியிருந்து, தொடுக்குங் கடவுட் பழம்பாடற்றொடையின் பயனே நறைபழுத்த, துறைத்தீந் தமிழினொழுகுநறுஞ் சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்,—தெடுக்குந் தொழும்பருளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமைய, விமையப்பொருப்பில் விளையாடு மிளமென் பிடியே யெறிதரங்க,—முடுக்கும் புவனங் கடந்துநின்றவொருவன் றிருவுள் ளத்திலழ, கொழுகவெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே மதுகரம்வாய்,—மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்

சிக்கோடியே வருகவே, மலயத்துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே." என்னும் ஒன்பதாவது செய்யுளை வாசித்துப் பொருளுரைக்குந்தருணத்தில், "இன்னுமொருமுறை இச்செய்யுளைவாசித்துப் பொருளுரைக்க." என யாவருமகிழவினவி, கேட்டுவியந்து, இறுதிச்செய்யுளை வாசித்து நிறுத்துந்தருணத்தில் *மறைந்தருளினர். அப்பொழுது, திருமலைநாயகர் அருச்சகரது பெண்குழந்தை யென்று அதுகாறும் தாம் எண்ணிக்கொண்டிருந்த எண்ணத்தையொழித்து, இங்ஙனமெழுந்தருளியிருந்தவர் சர்வஜீவதயாபரராகிய மீனாக்ஷியம்மையாரேயென்று தெளிந்து, சுவாமிகளுக்கு அம்மையாரருளிய திருவருளின்திறத்தைப் புகழ்ந்துகொண்டாடினர். சபையாரும் அளவிறந்த ஆச்சரியமடைந்தார்கள். இவ்வண்ணமே பிள்ளைத்தமிழை அரங்கேற்றியபின்பு, திருமலைநாயகர் சுவாமிகளைச் சிங்காதனத்திலெழுந்தருளுவித்து, திருவடிகளில் வீரகண்டாமணியைத்தரித்து, பொன்னினாலும் அரதனத்தினாலும் அபிஷேகஞ்செய்து, யானை, குதிரை, சிவிகைகளையும், குடைகொடிமுதலிய விருதுகளையுங்கொடுத்தார்.

அதன்பின்னரும் சுவாமிகள், திருமலைநாயகர்முதலியோர் வேண்டுகோளின்படி "மீனாக்ஷியம்மைகுறம்," "மீனாட்சியம்மையிரட்டைமணிமாலை என்னும் இரண்டுபிரபந்தங்களையும், சோமசுந்தரக்கடவுளைத்துதித்து "மதுரைக்கலம்பகம்" என்னும் ஒருபிரபந்தத்தையும் அருளிச்செய்தனர். பின்பு ஒருநாள், திருமலைநாயகர் வெகுநேரம்வரையில் போசனஞ்செய்யாதிருந்தமைகண்டு, சுவாமிகள், "†வகுத்தான் வகுத்தவகையல்லாற் கோடி - தொகுத்தாற்குந் துய்த்த லறிது." என்னுந்திருக்குறளையெடுத்தோத; அரசருவந்து, "அரிய திருக்குறளெனப்படும் தமிழ்வேதத்தை முற்றும் ஆராய்ந்து தெளிதற்குக் காலமில்லை

* வருகைப்பருவத்திலன்றி முத்தப்பருவத்திலே, "காலத் தொடுகற்பனைகடந்த கருவூலத்துப் பழம்பாடற், கலைமாச்செல்வர் தேடிவைத்த கடவுண் மணியே யுயிரால,—வாலத் துணர்வென் னீர்பாய்ச்சி வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த மலர்க்கற் பகமே யெழுதாச்சொன் மழலை ததும்பு பசுங்குதலைச்,—சோலைக்கிளியே யுயிர்த்துணையாந் தோன்றாத் துணைக்கோர் துணையாகித், துவாதசாந்தப் பெருவெளியிற் றுரியங் கடந்த பரநாத,—மூலத் தலத்து முளைத்தமுழு முதலே முத்தந் தருகவே, முக்கட்சுடர்க்கு விருந்திடும் மூலையாய் முத்தந் தருகவே." என்னும் முதற்செய்யுளை வாசித்துப் பொருளுரைக்குங்கால் மீனாக்ஷியம்மையார் இளந்திருக்கோலமாகக் காக்ஷியளித்து, ஒரு முத்துவடம் சுவாமிகள் கழுத்தி லணிந்து மறைந்தருளியதாகவும் சரித்திரம் உண்டு.

† திருக்குறள் ௩௮ - ம் அதிகாரம்; ஊழ். ௭.



யாதலால் அதிலுள்ள நீதிகளைவிளக்கிச் சுருக்கமாக அடியேன் பொருட்டு ஒருநீதிநூல் செய்துதரவேண்டும்." என்றுபிரார்த்தித்தனர். சுவாமிகள் அவ்வாறே "நீதிநெறிவிளக்கம்" என்னும் ஒருநூலை அருளிச்செய்துதந்து, அவ்வரசர்வேண்டுகோளின்படியே மீனாட்சியம்மையையும் சோமசுந்தரக்கடவுளையும் தரிசித்துக்கொண்டு, அத்தலத்திலே வசித்தருளினர்.

சிலநாட்சென்றபின்பு தமதுசகோதரனாகிய குமாரகவிகளையழைத்து, மாதாபிதாக்களனுமதியின்படியே, தாமவதரித்த கைலாசபுரத்திலே இல்லறதருமத்தில்வழுவாது நிற்கும்படிபணித்து, விடையளித்தனுப்பிவிட்டு, தாம் நானாவிதவாத்தியங்கள் முழங்க, விருதுகள்புடைசூழ, தமக்கபிஷேகித்த திரவியங்களை அரசர்வேண்டுகோளின்படியே ஒட்டகங்களின்மீதேற்றிக்கொண்டு, மதுரையையகன்று, தம்மைப்பிரிவாற்றாது தொடர்ந்துவரும் அரசரையும், மந்திரிமார்களையும், பிறரையும் மீண்டுசெல்லும்படி வற்புறுத்தி, தாம் சிவிகைமேற்கொண்டு, பாண்டிநாட்டைக்கடந்து, சோழநாட்டையடைந்து அங்குள்ள திரிசிராப்பள்ளி, திருவானைக்காமுதலிய தலங்களிலுள்ள அடியார்கள் எதிர்கொண்டுபணிய சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, அவ்வத்தலங்களிலே சிலநாள்வசித்து, திருவாரூரையடைந்து, தியாகேசப்பெருமானைத் தரிசித்து, "திருவாரூர்நான்மணிமாலை" என்னும் ஒருபிரபந்தத்தை அருளிச்செய்தனர். அங்குவசிக்குநாளில், திருக்கைலாசபரம்பரையாகிய *தருமபுரவாதீனத்திலே நான்காவது குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணித்தேசிகசுவாமிகளுடைய திருவருட்சிறப்பைக் கேள்வியுற்று, அவரைக்காணவிரும்பிப் புறப்பட்டு, இடையிலுள்ள பலதலங்களையும் வணங்கிக்கொண்டு தருமபுரத்தையடைந்தார்.

அத்தினத்திலே, சைவசித்தாந்தசாத்திரங்களையும், அவற்றிற்குரிய அங்கங்களாயுள்ள நூல்களையும், ஐயந்திரிபற ஓதியுணர்ந்து, அவற்றிற்கூறப்படும் சரியை, கிரியை, யோக ஞானானுசந்தானங்களை மேற்கொண்டு, குருபத்தியிற் சிறந்துவிளங்கும் அடியவர் திருக்கூட்டங்களும், வேதசிவாகமவிற்பன்னர்களும், சைவாசாரியர்களும், இலக்கணவிலக்கியங்களில்வல்ல வித்துவான்களும் புடைசூழும்படி, ஞானசூரியனைப்போல, ஸ்ரீமாசிலாமணித்தேசிகர் தக்ஷிணாபிமுகமாய் எழுந்தருளி

* இத்தருமபுரவாதீனத்தின் பிரதமகுருமூர்த்திகள் ஸ்ரீஞானசம்பந்ததேசிகர், இரண்டாவது குருமூர்த்திக்ள் ஸ்ரீஆனந்தபரவசதேசிகர்; மூன்றாவது குருமூர்த்திகள் ஸ்ரீசச்சிதானந்ததேசிகர்.

யிருந்தார். அச்சமயத்திலே, சுவாமிகள் பரிசனங்கள் பின்னேவர, விருதுகளோடும் அத்திருமடத்தினுள்ளேசென்று, அவருடையசந்நிதியிலே உத்தரீயத்தோடு ஆசனத்தின்மீதிருந்துகொண்டு, மாசிலாமணித்தேசிகரால் வினவப்பட்ட வினாக்கள் பலவற்றிற்கும் உத்தரஞ்சொல்லிக்கொண்டுவந்தார். மாசிலாமணித்தேசிகர், திருப்புன்முறுவல்கொண்டு, இறுதியிலே திருத்தொண்டர்பெரியபுராணத்தில், † "ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ணான்குஞ் - சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக - விந்துவாழ் சடையா னாடுமா னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின் - வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்." என்னுந்திருவிருத்தத்தின் அனுபவப்பயனைவினாவ; வாக்குத்தடைப்பட்டது. உடனே சுவாமிகள் இருக்கைவிட்டெழுந்து, முருகக்கடவுளுடைய ஆஞ்ஞையைநினைந்து, மனங்கலங்கி, ஆசனத்தையெடுத்தெறிந்துவிட்டு, உத்தரீயத்தை இடையிலேகட்டிக்கொண்டு, சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்துநின்று, அஞ்சலியஸ்தராகி, "எம்பெருமானே! ஆணவமலத்தினாலே மறைக்கப்பட்ட தமியேன் அறியாமையாற் செய்த பெருங்குற்றத்தைமன்னித்து, அடிமைகொண்டருளவேண்டும்" என்று பிரார்த்தித்து வணங்கினார். அப்பொழுது ஞானசாரியராகிய மாசிலாமணித்தேசிகர் அவரைநோக்கி, "நீ, காசியாத்திரைசெய்துகொண்டு மீள்வாயேல், அநுக்கிரகம்புரிவோம்." என்று வலியுறுத்த; சுவாமிகள் பின்னும் பலமுறை வணங்கி, கருணாநிதியே! சிறியேன் தேவரீருடைய கட்டளையின்படி, பசியினாலும், பிணிமுதலியவற்றினாலும் வருந்திக் காசியாத்திரையைமுடித்துக்கொண்டு வருமளவும் தேகநிற்பதோ நிலையில்லை; அன்றி இறக்கினும், பின்னரும் இம்மானுடப்பிறவியேவாய்த்துத் தேவரீர் திருவருட்பேற்றிற்குப் பாத்திரனாதலும் நிச்சயமில்லை: ஆதலால், அடியேனுடைய குற்றத்தைச் சிறிதும் திருவுள்ளத்திற்கொள்ளாது, திருவருள்பாலித்தல்வேண்டும்." என்று பிரார்த்தித்தார். பரங்கருணைத் தடங்கடலாகிய மாசிலாமணித்தேசிகர் திருவுளமிரங்கி, "அன்பனே! அது இயலாதாயின், சிதம்பரஸ்தலத்தையடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு ஒருமண்டலம் வசித்துவருவாயாக." என்று ஆஞ்ஞாபித்தருளினார்.

சுவாமிகள் அவ்வாஞ்ஞையைச் சிரமேல்வகித்து, அநுமதிபெற்று, சிவிகைமேற்கொண்டு, திருப்புள்ளிருக்குவேளூரையடைந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து, வைத்தியநாதசுவாமியையும், தையல்

* தடுத்தாட்கொண்டபுராணம். (௪0௬)



நாயகியம்மையையும், முத்துக்குமாரசுவாமியையுந் தரிசித்து வணங்கித் துதித்துக்கொண்டு, அத்தலத்தின் எல்லையைக் கடந்து புறத்திற் செல்லும்போது; முத்துக்குமாரசுவாமியானவர், சுவாமிகளிடத்தில் அருச்சகர்வடிவமாக எழுந்தருளி விபூதிகொடுத்து, "நம்மைக்குறித்தும் ஒருபிள்ளைத்தமிழ்பாடுவாயாக." என்று கட்டளையிட்டு, அந்தர்த்தானமாயினார். உடனே சுவாமிகள் இங்ஙனம் எழுந்தருளினவர் நம்மையாண்டருளிய முருகக்கடவுளேயென்று தெளிந்து, நிலத்திலேவிழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, மீண்டும் அத்திருப்பதியை அடைந்து, எவ்வாறுபாடுவேனென்று திகைக்கும்போது, அக்கடவுளுடைய திருவருளினால் "பொன்பூத்தகுடுமி" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. சுவாமிகள் அதனையே முதலாகக்கொண்டு, "முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்" என்னும் பிரபந்தத்தைப் பாட ஆரம்பித்து, செங்கீரைப்பருவம் பாடும்போது, செத்துப்பிறக்கின்ற தெய்வங்கண் மணவாளன் எனவும், தேனாறுகிளவிக்கு என்றுதொடங்குங்கால் வாயூறிநின்றவன் எனவும் இன்னவைவாகத் தெய்வகதியாய்ப் பிறர்பானிகழ்ந்த சொற்களையும், இவையும் திருவருட்டிறம்போலும் என்று விடாதமைத்து, பாடிமுடித்து, அக்கடவுளுடைய சந்நிதியிலே பலருந்துதிக்கும்படி அரங்கேற்றிச் சிலநாள் அவ்விடத்திலேவசித்தார்.

பின்பு, சீர்காழியைத் தரிசித்துக்கொண்டு, சிதம்பரத்தையடைந்து திரிகாலங்களிலும் வழுவாமல் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு வசிக்குநாளில். "சிதம்பரமும்மணிக்கோவை" என்னும் ஓர் பிரபந்தமியற்றியருளினார். அந்நாளிலே, சுவாமிதரிசனத்துக்குப் பரிசனங்களோடு செல்லும்பொழுது, வழியிலே தினந்தோறும் புராணப்பிரசங்கஞ்செய்துகொண்டிருந்த சைவாசாரியரொருவர்தவிர, அதுகேட்பவர் யாவரும் எழுந்து, மரியாதைசெய்வார்கள். அவர்களுள்ளே ஒருவர் ஒருநாள் புராணிகரைநோக்கி, "ஐயா! புலவர்திலகராயும், சிவாநுபூதிப் பெருவாழ்வாயும்விளங்காநின்ற சுவாமிகளைக்கண்டு தாங்கள்மாத்திரம் மரியாதைசெய்யாதது என்னை?" என்று வினவ; அதுகேட்ட புராணிகர் "அவர் இலக்கணகவியா? வரகவிதானே!" என்றார். அது பொறாத ஒருவர் சுவாமிகளுக்குத் திருச்செவிசாத்த; சுவாமிகள் திருப்புன்முறுவல்செய்து, "மிகமுயன்று அரிதிற்பெறுவது இலக்கணகவியும், அவ்வாறன்றி எளிதிற்பெறுவது வரகவியுமன்றோ? இதையுணராதுரைப்பினும், அவர் சொல்லளவில் நம்மைத்துதித்தவரேயாயினர்: ஆயினும், அவர்சந்தேகத்தையும் நிவர்த்திசெய்வோம்." என்று "சிதம்பரச்செய்யுட்கோவை" என்னும் ஓர் சிறந்த பிரபந்தத்தை அருளிச்செய்தனர். புராணிகர்

அந்நூலிலமைந்துள்ள அரிய இலக்கணங்களையும், சொற்சுவை பொருட்சுவைகளையும் நோக்கி, சுவாமிகளையடைந்து வணங்கி வேண்டிக்கொள்ள சுவாமிகள் திருவுளமகிழ்ந்து, அளவளாவிய பின்பு, "சிவகாமியம்மையிரட்டைமணிமாலை என்னும் ஓர்பிரபந்தத்தையும் செய்தருளினார்.

இவ்வாறு நியதிபூண்டு ஒருமண்டலம்வசித்து, அத்தலத்தை அருமையாகநீங்கி, தருமபுரத்தையடைந்து, ஞானாசாரியரைத்தரிசித்து, வணங்கி, அவரைத்துதித்தியற்றிய "பண்டாரமும்மணிக்கோவை" என்னும் பிரபந்தத்தை அவர் சந்நிதானத்திலே அரங்கேற்றினார். உடனே ஞானாசாரியர் திருவுளமிகமகிழ்ந்து, சுவாமிகளைநோக்கி, "நீ இயல்பாகவே துறவியாயினும் நமது வரன்முறைப்படியே அத்துறவிற்குரிய காஷாய வஸ்திரமுதலிய சின்னங்களையும் தரித்துக்கொள்ளக்கடவாய்." எனப்பணித்து, அவரையடிமைகொண்டு, அச்சின்னங்களையளித்து, ஞானோபதேசமுஞ்செய்தருளினார். சுவாமிகள் * அணுக்கத்தொண்டராகி அங்குவசிக்குநாளிலே ஒருநாள், தமக்கு முன்னே பரிசாகக்கிடைத்த திரவியங்களை அந்த ஞானாசாரியர்சந்நிதியில்வைத்து ஏற்றருளும்படி பிரார்த்திக்க; அவர் முன்னர்ப்பணித்தவாறே "நீ, காசியையடைந்து இவற்றைக்கொண்டு தருமமியற்றுக." என்று திருவாய்மலர்ந்தருளினார்.

சுவாமிகள், அவ்வரியபணியைச் சிரமேற்கொண்டு, அநுமதிபெற்று அத்திரவியங்களை ஒட்டகங்களின்மீதேற்றிக்கொண்டு, பரிசனங்களோடு தருமபுரத்தினெல்லையைக்கடந்து, சிவிகையில் ஆரோகணித்துச்சென்று, சிதம்பரமுதலாகிய ஸ்தலங்களைவணங்கிக் காஞ்சீபுரத்தையடைந்து; சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு வசிக்குநாளிலே, தம்மிடத்தில் அநேகவைஷ்ணவர்களோடுவந்து சமயக்கோட்பாட்டைப்பற்றி வாதித்த பிள்ளைப்பெருமாளையங்கார்முதலியோரைப் பல பிரபல நியாங்கொண்டு, வாதித்து, அவர்களைவென்று, அவ்விடத்தினின்றும் நீங்கி, இடையிலுள்ள திருக்காளத்திமுதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, காசியென்னுந் திவ்யதலத்தையடைந்தார். அவ்வெல்லையையடைந்தவுடன்

(இன்னும்வரும்.)

* அணுக்கத்தொண்டராகி வசிக்குநாளிலே அவ்வவ்வமயங்களில், "பூதங்கடந்த புகழ்க்கூடற் சம்பந்தன் போதித்தசொல், வாதங் கடந்து மனோலய மாயிருந்து மண்டலம்போய், நாதங் கடந்து நடுவெளி தாண்டி நலஞ்சிறந்த, போதங் கடந்தின்ப பூரணமாகிப் பொலிந்ததுவே. என்னும் இச்செய்யுள்முதலிய சில செய்யுளருளியதாகவும் கூறுவதுண்டு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS 10 MAY 1917

மலர் 3.] || பிங்களஹு சித்திரைமீ -1917ஹு ஏப்ரல்மீ || [இதழ் 4

பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.

## சிவஞானபோதம்—இரண்டாஞ்சூத்திரம்.

(36-வது பக்கத்தொடர்ச்சி.)

### மூன்றும் அதிகரணம்.

### போக்கு வரவு புரிய.

(இ-ள்.) ஆன்மாக்கள் மாறிப்பிறந்துவரும் (எ-று.)

மாறிப்பிறத்தல்—இறந்துபிறத்தல்.

இதில், க-வது—தன்றுற் கூறப்படும் பொருள்:—உயிர்கள் அச்சுமாறியே பிறக்கும்.

உ-வது—ஐயப்பாடு—புனருற்பவம் சடத்துக்கேயல்லாமல் சித்துக்கும் உண்டோ?

ஙு-வது—பிறர் கூறும் பக்கம்—வேதத்தில், குடமுடைந்தபோது அக்குடத்தில் அடங்கியிருந்த ஆகாயம் (குடாகாயம்) வெளியிலிருக்கும் ஆகாயத்தோடு கூடுமாறுபோல், உடம்பு நீங்கிய காலையில் உயிரானது பிரமப்பொருளோடு கூடுமென்று கூறியிருத்தலால், இறந்த உயிர், மீளப் பிறப்பதில்லை. (இது கிரீடாப் பிரமவாதிகள் பக்ஷம்.)

கிரீடாப் பிரமவாதமாவது ஏகான்மவாதத்தின் பிரிவுகளுள் ஒன்று. இச்சமயத்தினர் "பிரமப்பொருளே நான். நான் ஒருபடித்தாயன்றிப் பல வேறுவகைப்பட்ட விகாரப்பொருள்களோடுகூடிப் பலவகையாய் விளையாடுகின்றேன் என்று அறிவதே முத்தி" என்பார்கள்.

இவ்வதிகரணத்தால் குடாகாய உவமையே கூறி, புனருற்பவம் உயிரின்பொருட்டுச் சிவத்துக்கேயாம் என்று கூறும் சிவாத்துவித சைவர்களும், மூலப்பகுதியில் தோன்றும் புத்திதத்துவத்திற்கே அது என்று கூறும் சாங்கியர்களும் மறுக்கப்படுகின்றனர்.

ச-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு:—உற்பத்தியும் நாசமும் தொடர்ச்சியாயுள்ள பொருளுக்கன்றி ஏனைப்பொருட்கு உற்பத்தி கூடாமையின், ஆன்மாக்கள் மாறிப்பிறந்துவரும்.

ரு-வது—இயைபு—உதாரணவெண்பா.

கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினாற்—கண்செவிகெட்
டுள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான். (அ)

அன்வயம்—கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற, உளம் அத்தூடு விண்படர்ந்து, கண்ட நனவைக் கனவு உணர்வின் மறந்து, மனம் தள்ள, வினையினால் அணுவாய்ச்சென்று கருவில் விழும்.

(இ—ள்.) கண் செவி கெட்டு—கண் செவி முதலிய உறுப்புகளையுடைய இவ்வுடம்பு கெட்டவழி—உள்ளதே தோற்ற—(தனக்கு அழிவின்றிச் சிருட்டிகாலந்தொடங்கி சங்காரகாலம்வரையில்) நிலைத்திருப்பதாகிய சூக்குமதேகமானது பூதசாரஉடம்பு முதலியனவாய்க் காரியப்பட—உளம்—உயிரானது—அத்தூடு விண்படர்ந்து—அப்பூதசாரமுதலிய உடம்பினிடமாகப் பொருந்தி, சொர்க்க நரகங்களிற்சென்று (அனுபவித்துப் பின்னர்)—கண்டநனவைக் கனவுஉணர்வின் மறந்து—நனவிற் கண்டவைகளை கனுக்காணும்போது மறந்து அறிவு வேறுபட்டாற்போல (முன்னை உடம்புகெட்டமையும், பூதசாரஉடம்பு முதலியவற்றோடுகூடி சொர்க்க நரகங்களை யனுபவித்தமையும், பிறவற்றையும்) மறந்து அறிவு வேறுபட்டு—மனம் தள்ள—(முன்னுடம்பு நீங்கும்போது அடுத்தவினையினாற் காட்டப்படும் தெய்வப்பிறப்பு, மக்கட்பிறப்பு, விலங்கின்பிறப்பு, நரகர்ப்பிறப்பு என்னும் நால்வகைப் பிறப்பைப்பற்றி ஆன்மாவிருப்புமாறு) மனஞ்செலுத்துதலால்—வினையினால்—(அந்தப்பிறவியை எடுத்தற்கேதுவாகிய) புண்ணிய பாவ விசேஷத்தால்—அணுவாய்ச்சென்று—சூக்குமதேக மாத்திரையாய்ச்சென்று—கருவில் விழும்—(அம்மனம் தள்ளிய பிறவிக்கு வாய்ந்த) கருவின்கண் விழும் (எ-று.)



உடம்பு நீங்கும்போது முதலில் கெடுவன கண்ணும் செவியுமாகையால் அச்சிறப்புநோக்கி "கண் செவி கெட்டு" என்றனர். பஞ்சபூதங்களின் காரியம் எனப்படும் தூல உடம்பானது எங்ஙனம் சூக்கும உடம்பின் காரியமாகும் என்னும் ஐயம் நீக்குதற்கு "உள்ளதே தோற்ற" என்றனர். அணு என்றது சூக்கும உடம்பை.

"உள்ளதே தோற்ற" என்றதனால் ஆன்மாவானது தூலசரீரம் கெட்டுப்போக சூக்குமதேகத்தோடு பூதசாரமாகிய தேவசரீரமுதலியவற்றை எடுத்தலாகிய உடல்மாறுதல் கூறப்பட்டது. "விண்படர்ந்து" என்றதனால் சொர்க்கலோக முதலியவற்றிற் செல்லுதலாகிய இடம் மாறுதல் கூறப்பட்டது. "கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து" என்றதனால் முன்னுடம்பு கெட்டமை, சுவர்க்கமுதலிய உலகங்களையடைந்தமை, அவ்விடங்களில் அனுபவித்தமை என்பவைகளை மறத்தலாகிய அறிவு மாறுபடுதல் கூறப்பட்டது. இவற்றால் ஆன்மாக்களுக்கு மறுபிறப்பு உண்டு என்பது உண்மையாயின் முற்பிறவிகளில் அனுபவித்தவைகளை அவைகள் இப்பிறவியில் ஏன் அறியவில்லை" என்னும் ஐயமும் நீக்கப்பட்டது.

சூக்கும உடம்பாவது சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் காரண தன்மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றும் ஆகிய எட்டினாலும் ஆக்கப்பட்ட அருஉடம்பு.

இவ் வெண்பாவினால் வேதத்திற் கூறிய பஞ்சாக்கினி வித்தையும் பெறப்பட்டது. பஞ்சாக்கினிவித்தையின் இயல்பாவது:— நல்வினைச் செய்த உயிர்கள் அந்நல்வினைப்பயனை யனுபவித்தற்பொருட்டு, அவ்வுடம்பினைவிட்டு நீங்கிச் சூக்குமதேகம்பெற்று, சொர்க்கலோகஞ்சென்று அவ்விடத்தில் இன்பம் அனுபவித்தற்குரிய பூதசார உடம்பெடுத்து அவ்விடத்திலுள்ள தேவர்களோடு வாழ்ந்து, போகங்களை யனுபவித்துத் தொலைத்து, எஞ்சிய வினையினால் அத்தேவ சரீரத்தைவிட்டு நீங்கி, சூக்குமதேகத்தோடு மேகமண்டலத்தினை யடைந்து, மழைத்துளிகளோடுகூடி நிலத்தினையடைந்து, நெல் முதலிய பயிர்களோடு கலந்து உணவு ரூபமாய் புருஷசரீரத்தையடைந்து அதில் சுக்கிலமாய்ப் பரிணமிக்கிறது. பிறகு அச்சுக்கிலரூபத்தோடு தாய்வயிற்றையடைந்து கருவாய்ப் பரிணமித்துத் தூலதேகத்தோடு நிலத்தில் தோன்றுகிறது. இவ்

வாறு ஆன்மாவானது தூலவுடம்பைவிட்டு நீங்கிய பிறகு, சொர்க்கமும், மேகமண்டலமும், நிலமும், தந்தையும், தாயும் என்னும் ஐந்திடத்தும் தங்கிப் பிறத்தலினால் இவ்வைந்திடமும் அக்கினியாகவும், இவைகளை யடைந்த ஆன்மா அவ்வக்கினியிலிட்ட ஆகுதியாகவும் தியானித்தல் வேதத்திற் கூறப்பட்டதொரு சாதகமாதலின் இது பஞ்சாக்கினிவித்தை யென்னப்பட்டது.

உதாரணவெண்பா.

அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது. (கூ)

இது, வேதத்திற் கூறப்பட்டுள்ள குடாகாய உவமையை ஆன்மா தூலஉடம்பைவிட்டு நீங்குவதற்குக் கூறி மயங்குவார்க்கு, குடாகாய உவமையின் உண்மைப்பொருள் இத்தன்மைத்தென விளக்குகின்றது.

(இ-ள்.) இத்தூல உடம்பு கெட்டவழி ஆன்மாவானது சூக்குமதேகம் பூதசாரஉடம்பு முதலியன பெறுதற்கு வேதத்தின்கண்ணே—அரவுதன் தோல்உரிவு=பாம்பு தோலுரித்துப் புதிதொரு தோலைப்போர்த்துச் செல்லுதலும்—அக்கனவும்=புருஷன் றன வுடம்பினின்றும் நீங்கிக் கனு உடம்பிற்செல்லுதலும்—பரகாயம் போய்வரும் அப்பண்பும்=யோகிகள் தங்கள் உடம்பைவிட்டு மற்றோர் சரீரத்திற்போய் மீளுதலும்—பரவில்வேறு=ஆகிய இவ்வுவமைகள் மிகவும் வழங்கவும் இவற்றிற்கு மாறாக—குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது அடாது=குடாகாயமானது குடமுடைந்தால் ஆகாயத்தோடு கூடுவதுபோன்றதோர் கூத்தாட்டாகும் என்பது பொருந்தாது. (ஆனால் வேதத்தில் குடாகாய உவமை ஏன் கூறப்பட்டதெனில்) உளம் போம் ஆறு அது=ஆன்மா (மகாசங்காரகாலத்தில்) சூக்கும உடம்பு விட்டுப்போதற்கே அவ்வுவமை வேதத்திற் கூறப்பட்டது.

குடவாகாயம் என்பது குடாகாயம் எனமருவியது. பரவுதல்=எல்லோரும் அறிய மிகவும் நிகழ்தல்.

ஆன்மா உடலைவிட்டுப் போதற்கு இவ்விருவகை யுவமைகளையும் வேதாகமங்கள் கூறுதலால், அவைதம்முள் முரணுதவாறு பொருள் கூறுதலே பொருத்தமுடைத்தாம். ஆதலால், பாம்பு தோலுரித்தல் முதலிய உவமானங்கள் ஆன்மா தூல உடல் விட்டுப்போதற்கும், குடாகாய



உவமானம் சூக்கும உடம்பு விட்டுப்போதற்கும் பொருத்தமுடையனவாம். இவ்வேறுபாடுணராது தூலஉடம்பை விட்டுப்போதற்கு குடாகாய உவமை கூறுதல் குற்றமாம்.

(இன்னும் வரும்.)

---

## சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் 18-வது வருடாந்த மகாஜனக்கூட்டத்து விருத்தாந்தம்.

1. சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 18-வது (1916ளூ) வருடாந்த மகாஜனக் கூட்டம், இதின் சபாமண்டபத்தில், நிகழும் 1917ளூ மார்ச்மீ 4உ கூடிற்று. அச்சமயத்தில் ஸ்ரீமான் திவான் பஹதூர் பி. இராஜரத்தினமுதலியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

2. திருக்கூட்டத்தின் 1916ளூ சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் வாசித்து அங்கீகரிக்கப்பட்டன.

3. இதனடியிற்குறித்த கனவான்கள் இவ்வருடம் இச்சபைக்கு அத்தியக்ஷர்களாயிருக்குமாறு தீர்மானஞ் செய்யப்பட்டது.

### சபைத்தலைவர்.

ஸ்ரீமான், ச. இராஜாகண்ணுமுதலியாரவர்கள் பி. ஏ.
சூபரிண்டெண்டெண்டு, அக்கவுண்டாண்டு ஜனரல் ஆபீஸ்.

### உதவிசபைத்தலைவர்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் பி. ஏ.
சூபரிண்டெண்டெண்டு, வர்னகுலர் ஸ்டடீஸ்,
மதராஸ் கிறிஸ்டியன் காலேஜ்.

### காரியதரிசி.

,, இ. ஆதிமூலமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.

### உதவிகாரியதரிசி.

,, பி. வி. சமாபுரிமுதலியாரவர்கள்
கிளார்க்கு, ரெயில்வே ஆடிட் ஆபீஸ்.

### பாடசாலை காரியதரிசி (கரேஸ்பாண்டெண்டு.)

,, மணி. திருஞானசம்பந்த முதலியாரவர்கள்
கிளார்க்கு, ரெயில்வே ஆடிட் ஆபீஸ்.

அத்தியட்சர்கள்.

ஸ்ரீமான். திரு. சபாபதி முதலியாரவர்கள்
ரிடையர்ட் ஸப் இஞ்ஜினீர்.

,, யஸ். விநாயக முதலியாரவர்கள் பி. ஏ.
சூபரிண்டெண்டெண்டு, அக்கவுடண்டாண்டு ஜெனரல் ஆபீஸ்.

,, மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்த்
தலைமைப் பண்டிதர்.

,, பா. கண்ணப்ப முதலியாரவர்கள்
கிளார்க்கு, ரிவினியு போர்டு ஆபீஸ்.

,, ஆர். துரைசாமி முதலியாரவர்கள்
கிளார்க்கு, மதராஸ் ரெயில்வே கோ ஆபரேடிவ் ஸ்டோர்ஸ்.

,, ஆர். பி. துரைசாமி முதலியாரவர்கள்
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

,, வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள்
கிளார்க்கு, ரிஜிஸ்ட்ரார் ஆப் கோஆபரேடிவ்க்ரெடிட்
ஸொஸைட்டீஸ் ஆபீஸ்.

4. ஸ்ரீமான் திவான் பஹதூர் பி. இராஜரத்தின முதலியாரவர்கள் பிரேரேபிக்கவும், ஸ்ரீமான் யஸ். இராஜகண்ணு முதலியாரவர்கள் பி. ஏ. ஆமோதிக்கவும், ஸ்ரீமான் யம். மாசிலாமணிப் பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல். (அப்பிஷியல் ரெப்ரீ, ஹைகோர்ட்டு) இத்திருக் கூட்டத்தின் போஷகருள் ஒருவராயிருக்கக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

5. அச்சுக்கூடம் வைத்துக்கொள்ளலாம் என்று யாவரும் ஏகோபித்துச் சம்மதித்தார்கள்.

6. பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

7. திருவாவடுதுறை யாதீனச் சைவப் பிரசாரகர் ஸ்ரீமான் தூத்துக்குடி பொ. முத்தையா பிள்ளையவர்கள் பஞ்சாக்ஷரம் என்னும் விஷயமாகச் சிறந்ததொரு மகோபந்யாசம் செய்தார்கள்.



காரியதரிசியவர்கள் அக்கிராசனர், சைவப் பிரசாரகர் முதலியவர்களுக்கு வந்தனமளித்த பிறகு சபை கலைந்தது,

இ. ஆதிமூலமுதலியார்.
காரியதரிசி.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் பதினெட்டாவது வருட (1916ஞு) சபாக்கிரந்தம்.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
றுதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

---

### முன்வருடத்து மகாஜனக் கூட்டம்.

இத்திருக்கூட்டத்தின் முன் வருடத்து மகாஜனக்கூட்டம் 1916ஞு பிப்ரவரிமீ 20உ நடைபெற்றது. அப்போது ஸ்ரீமான் சதுரை இராஜாகண்ணு முதலியாரவர்கள் பி. ஏ. அக்கிராசனம் வகித்தார்கள். அதின் விருத்தாந்தம் 1916ஞு மார்ச்மீ வெளிவந்த சைவம் இரண்டாமலர் மூன்றுமிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

### திருக்கூட்டத் தொகை.

| | |
|---|---|
| இத்திருக்கூட்டத்தில் 1916ஞு ஜனவரிமீ முதல்தேதியிலிருந்தவர்கள். | 60 |
| அவ்வருடத்திற் சேர்ந்தவர்கள். | 0 |
| ஷை நீங்கினவர்கள். | 9 |
| 1916ஞு டிசம்பர்மீ 31-தேதியிலிருந்தவர்கள். | 51 |

இவர்கள் பெயர்முதலியன இதின் முதல் அநுபந்தத்திற் காட்டப்பட்டுள்ளன. இவர்களுள் மேற்குறித்த காலத்தில திருவல்லிக்கேணி மளிகை வர்த்தகர் ஸ்ரீமான் ரா. குமாரசாமிச் செட்டியாரவர்களும் மதராஸ் பாங்க் பென்ஷனர் ஸ்ரீமான் தி. முருகேச முலியாரவர்களும் சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தார்கள்.

### சைவ பாடசாலை.

இப்பாடசாலையில் பாலர் வகுப்புமுதல் நான்காம் வகுப்பு வரையில் 5 வகுப்புகளிருக்கின்றன. மூன்று உபாத்தியாயர்களால் தமிழும் ஆங்

கிலேயும் சைவநூல்களும் ஒழுங்காகக் கற்பிக்கப்படுகின்றன. இப்பாடசாலையின் பொருட்டுச் சென்ற 1916ஆம் செலவான தொகை ரூபா 478—14—0.

| | |
|---|---|
| இப்பாடசாலையில் 1916ஆம் ஜனவரிமீ 1உ இருந்தசிறுவர்கள். | 65 |
| 1916ஆம் சேர்ந்தவர்கள். | 48 |
| ,, விட்டவர்கள். | 39 |
| 1916ஆம் டிசம்பர்மீ 31உ இருந்தவர்கள். | 74 |

இப்பாடசாலையை இராஜாங்கப் பாடசாலைப் பரிசோதகராகிய ஸ்ரீமான் ஜெ. சுவாமிநாத ஐயர் பி. ஏ., எல். டி. அவர்கள், 1916ஆம் சூலைமீ 29உ பரீட்சைசெய்து, பாடசாலை பலவழிகளிலும் அபிவிருத்தியடைந்து வருவதாகத் தமது அபிப்பிராயத்தை எழுதியுள்ளார்கள்.

இத்திருக் கூட்டத்தின் போஷகரும் மெஸ்ஸர்ஸ் பெஸ்டு அண்டு கம்பெனி துவிபாஷிகருமாகிய ஸ்ரீமான், யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் 1916ஆம் சூலைமீ 19உ இப் பாடசாலையை நேரில் வந்து பார்த்து மகிழ்ந்து சிறுவர்களுக்கு இனிய தின் பண்டங்கள் வழங்கினதுமன்றி சென்னைச் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் தாம் நடத்துவித்த மகா கும்பாபிஷேகத்திற்கும், புரசையில் நடத்துவித்த தெப்போற்சவத்திற்கும் சிறுவர்களை யழைத்துச் சென்று, தமிழ்வேத பாராயணஞ் செய்வித்து உபசரித்தார்கள். இப்பாடசாலைக்குச் சொந்தமாக விசாலமான கட்டிடம் ஒன்று கட்டிக் கொடுப்பதாக வாக்களித்துள்ளார்கள். இவர்களின் வள்ளற்றன்மையும் பரோபகார சிந்தையும் மிகவும் பாராட்டற் பாலன.

இப்பாடசாலைச் சிறுவர்களைத் திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் தங்கள் சபையின் வருடோற்சவத்திற்கும், வாலாஜாபாத் பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் வா. தி. மாசிலாமணி முதலியாரவர்கள் காஞ்சி மாநகரை யடுத்த பாலூரில் நடைபெற்ற திருவூறல் மகோற்சவத்திற்கும் அழைத்துச் சென்று தமிழ்வேத பாராயணஞ் செய்வித்தார்கள்.

### "சைவம்."

| | |
|---|---|
| 1916ஆம் ஜனவரிமீ 1உ இப்பத்திரிகைக்குச் சேர்ந்திருந்த சந்தாதாரர்கள். | 520 |
| 1916ஆம் டிசம்பர்மீ 31உ இருந்தவர்கள். (ஆயுள் சந்தாதாரர்கள் 118பேர் நீங்கலாக) | 780 |



| | | |
|---|---|---|
| இப்பத்திரிகைக்கு | 1915ஆம் சந்தா வரவு ரூபா. | 378 |
| ௸ | 1916ஆம் ௸ | 590 |
| இப்பத்திரிகைக்கு | 1915ஆம் செலவான தொகை | 344 |
| ௸ | 1916ஆம் ௸ | 521 |

இவற்றால் இப்பத்திரிகை முதல் வருடத்தைக் காட்டிலும் இரண்டாம் வருடத்தில் மிகவும் அபிவிருத்தி யெய்தப் பெற்ற தென்பது விளங்கும். ஆயினும், இப்போது நேரிட்டுள்ள காகிதப் பஞ்சத்தால் முதல் வருடத்தில் அச்சிட்டது போல் இரண்டாம் வருடத்தில் உயர்ந்த காகிதத்தில் அச்சிட இயலாமற் போயிற்று. அதுவுமன்றி அதிக பொருட் செலவும் நேர்ந்தது. ஆதலால் முதல் வருடத்திற் போலவே இரண்டாம் வருடத்திலும் சம்பளம் கொடுத்து லிகிதர் முதலிய உதவிகள் வைத்துப் பத்திரிகையை நடத்த இயலவில்லை. வியாசங்கள் எழுதுவது முதல் எல்லாக் காரியங்களையும் பத்திராசிரியரே மிகவும் பிரயாசைப்பட்டுச் செய்து வந்தனர். ஆயினும் பத்திரிகை மாதந்தோறும் தவறாமல் வெளிவந்ததுமன்றி நியமந் தவறாமல் முதல்வாரத்திலேயே வெளிவந்து கொண்டிருந்தது. அரசாங்கத்தில் ஊழியஞ் செய்து களைத்து இளைப்பாற உபகாரச் சம்பளம்பெற்று வாழும் இவர் பொதுநலங்கருதித் தமதுசரீர சுகத்தைப் பாராட்டாது கஷ்டப்பட்டு உழைத்து வருவதைச் சைவாபிமான சிலர்கள் சீர்தூக்கி வேண்டிய உதவிகளைக் கொடுத்துப் பத்திரிகையை அபிவிருத்தி செய்வார்க ளென்று திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சென்ற வருடத்தில் பல விடங்களிலும் பல சைவாபிமான சிலர்கள் அன்பு கூர்ந்து பத்திரிகைக்குப் பல சந்தா தாரர்களைச் சேர்த்து உபகரித்தார்கள். யாழ்ப்பாணம் உதவிபாடசாலைப் பரிசோதகர் ஸ்ரீமான் யஸ். கந்தையா பிள்ளையவர்கள் முயற்சியால் இலங்கைத் தீவில் பலவிடங்களிலும் இப்பத்திரிகை பரவியது. இவர் முயற்சியால் நவம்பர் டிசம்பர் மாதங்களில் சுமார் 70 சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். முதன்மலர் பல செலவாயின.

### ஆயுள் சந்தாதாரர்கள்.

இப்பத்திரிகைக்கு இதுவரையில் 118 ஆயுள் சந்தாதாரர்கள் சேர்ந்துளார். இவர்களிட மிருந்து வந்த ஆயுள் சந்தா ரூபா 1100. இவர்கள் பெயர் முதலியன இதின் அநுபந்தத்திற் காட்டப் பட்டுள்ளன. இவர்களுள் 108 சந்தாதாரர்கள் ஸ்ரீமான் இரங்கோன் மெ. செ. மெ. மெ. (தேவகோட்டை வ-கா-க-ரும) இராமநாதன் செட்டியா ரவர்களாலும்,

ஸ்ரீமான் ரங்கோன் செவு. சித. (கடாரசபுரம் ஆ-த-ஆ) சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களாலும் சேர்க்கப்பட்டனர். இவர்கள் செய்த பேருபகாரத்தால் விரைவில் இப் பத்திரிகைக்கென்று பிரத்தியேகமாக ஓர் அச்சுக்கூடம் தாபிக்கப்படும்.

## அச்சுக் கூடம்.

இத்திருக் கூட்டத்தாரின் சபா மண்டபத்தின் கீழ்க்கட்டிடம் அச்சுக்கூடம்வைத்தற்கு வாய்ப்பான இடமாயிருப்பதனால் அதிலேயே அச்சுக்கூடத்தை வைத்தற்கு வேண்டியமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இது விரைவில் நிறைவேற வேண்டித் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

## சபாமண்டபம்.

சபாமண்டபத்தில் ஏறிச் செல்வதற்கு இப்போதுள்ள வழி கோயிலினுள் இருத்தலினாலும், மிகவும் வசதிக் குறைவாயிருத்தலினாலும், வேறு வழி யொன்று வைக்கப் பலநாளாய் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. இதற்கு இச்சபையின் போஷகருள் ஒருவராகிய (இஞ்ஜினீரிங் கன்ட்ராக்டர்) ராவ் சாஹிப் ஸ்ரீமான். பி. மாசிலாமணி முதலியாரவர்கள் மிகநல்ல மரப்படி சித்தப்படுத்தி யுள்ளார். சபையிலிருந்து 35ரூபாவரையில் செலவிட்டு வாசற்காலும் கதவும் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வேலையும் விரைவில் முற்றுப் பெறுமென்று எண்ணுகின்றோம்.

## சிவஞானமுனிவர் புத்தகசாலை.

இப்புத்தகசாலையில் இப்போது சுமார் 600–புத்தகங்கள் வரையில் இருக்கின்றன. இப்புத்தகசாலைக்குச் சென்றவருடத்தில் ஸ்ரீமத் யாழ்ப்பாணம் வண்ணைநகர்ச் சுவாமிநாத பண்டிதரவர்கள் சிவாக்கிரயோகிகள் இயற்றியருளிய வடமொழிச் சிவஞானபோதத்து முதற்சூத்திர வியாக்கியானமும், ஸ்ரீமான் சி-ஏகாம்பர முதலியாரவர்கள் சிவஞானபோத வசனாலங்காரதீபமும், ஸ்ரீமான் மாகறல் கார்த்திகேய முதலியாரவர்கள் மொழிநூலும், திருச்செங்கோட்டு சாம்பவஸ்ரீ சதாசிவபண்டித சிவாசாரிய சுவாமிகள் மகா உக்கிரவீர பத்திராஸ்திரமும், திருவாரூர் சுவாமிநாத தேசிகரவர்கள் தசகாரியமும் கொடுத்துபகரித்தார்கள்.

## நன்கொடை.

நெட்டால் டர்பான்-ஸ்ரீமான்-வி-லம். நாயகரவர்கள்—இவர் வெகு நாளாகவிருந்தும் ஆப்பிரிக்கா கண்டத்தில் வசிப்பவராயிருந்தும், தமது ஜனன தேசாபிமானத்தாலும், தமிழ்ப் பாஷாபிமானத்தாலும், சைவ சமயாபிமானத்தாலும் தூண்டப்பட்டவராய், "திருவண்ணாமலை நேஷனல் மெர்க்கண்டைல் அண்டு இண்டஸ்ட்ரியல் கம்பெனி" யில் தாம்



15–ரூபா கொடுத்து வாங்கி வைத்திருந்த மூன்று பங்குகளை இச்சபைக்குத் தானஞ் செய்துவிட்டார். அதற்கிணங்க அக்கம்பெனியார் அவருக்குக் கொடுத்திருந்த பாலிஸி இப்போது இச்சபையின் பேரால் மாற்றப்பட்டுவிட்டது. அவ்வாறு மாற்றினதினால் கம்பெனியார் தங்கட்குச் சேரவேண்டிய தொகையை இலாபத்திற் கழித்துக்கொண்டு எஞ்சிய இலாபம் ரூபா 2-3-0 இச்சபைக்கு அனுப்பினார்கள்.

## கடன்.

சபாமண்டபத்தைச் சார்ந்த ஸ்ரீகற்பக விநாயகராலயத்தின் பொருட்டு இச்சபையார் ஹைகோர்ட்டில் நடத்திய வியாச்சியத்தால் நேரிட்ட கடனுக்குச் சென்ற வருடத்தில் கொடுத்ததொகை ரூபா–365. இன்னும் பாக்கியாயிருக்கும் தொகை ரூபா–39.

## நிர்வாக சபை.

சென்ற வருடத்தில் நிர்வாகசபை 9-முறை கூடியது.

## வரவுசெலவுக் கணக்கு.

சென்ற 1916-௵ வரவு செலவுக் கணக்கு இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

## உற்சவங்கள்.

வருடந்தோறும் செய்துவரும் நியமத்தின்படி, இத்திருக்கூட்டத்தாரும், முத்தியாலுப்பேட்டை உமாமகேசுவரர் தமிழ்வேத பாராயண சபையாருங்கூடி, சென்ற டிசம்பர்௴ 3௳ திருமுறை மகோற்சவம் கொண்டாடப்பட்டது. தரிசனார்த்தமாகச் சென்ற சிவனடியார்களுக்கு கவுணியன் அச்சுக்கூடத்தலைவர் ஸ்ரீமான் கா-முருகேசச் செட்டியாரவர்கள் மாகேசுரபூசை செய்வித்தார்கள்.

ஸ்ரீகற்பக விநாயகராலய சதுர்த்தி மகோற்சவத்திற்குப் பத்துரூபா உதவி செய்யப்பட்டது.

இத்திருக்கூட்டத்தின் போஷகர்களும், அங்கத்தினரும், அபிமானிகளும் ஸ்ரீதியாகராஜப்பெருமானார் திருவருளால் சகலைசுவரிய சம்பன்னராய் நீடூழிவாழுமாறு அவ்விறைவனார் திருவடிகளைத் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்,
உத்திரவின்படி,
இ. ஆதிமூலமுதலியார்.
காரியதரிசி.

சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின்
1916ஆ வரவு செலவுக் கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. அ. ப. | செலவு. | தொகை. ரூ. அ. ப. |
|---|---|---|---|
| 1916ஆ ஜனவரிமீ 1உ இருப்பு | 74 6 9 | சைவப்பத்திரிகை காகிதம் ரூபா. 174 9 6 | |
| மாதசந்தா | 299 0 0 | ,, தபால் 201 11 3 | 521 9 9 |
| சைவப்பத்திரிகை 1916ஆ சந்தா ரூ. 590-0-0 | - | ,, அச்சுக்கூலி 129 8 0 | |
| ,, 1915ஆ பத்திரிகை விற்பனை 107-0-0 | 717 7 6 | ,, சில்லரை செலவு 15 13 0 | |
| ,, விளம்பர வரவு 20-7-6 | | பாடசாலை உபாத்தியாயர்கள் சம்பளம் 313-6-4 | |
| ,, ஆயுள்சந்தா | 1080 0 0 | ,, குடிக்கூலி 120-0-0 | 478 14 0 |
| | | ,, இதர செலவு 45-7-8 | |
| பாடசாலை—பிள்ளைகள் சம்பளம் 179 15 0 | | கடனும் வட்டியும் | 370 1 5 |
| ,, அரசாங்கத்தின் உதவி 172 0 0 | 358 7 3 | தண்டற்காரர் | 48 0 0 |
| ,, இதர வரவு 6 8 3 | | சபாமண்டபத்திற்கு வாசற்காலும் கதவும் | 35 12 6 |
| நன்கொடை | 11 0 0 | உபாத்தியாயரிடம் கொடுத்த முன்பணம் | 4 0 0 |
| தபாலாபீசு சேவிங்ஸ் பாங்கு வட்டி | 0 11 1 | ஸ்ரீகற்பகவிநாயகர் சதுர்த்தி மகோற்சவம் | 10 0 0 |
| சுப்பிரமணியம் பாடசாலையில் சைவசமயபோதனை செய்தமைக்கு | | ஷை குடிக்கூலி | 7 0 0 |
| | 51 7 9 | ரசீது அச்சிடுதல் காகிதம் முதலியன | 12 2 3 |
| திருமுறைத்திரட்டு விற்பனை | 6 1 0 | ஞானதீபக் குடையாராதனை சபையில்பூசை முதலியன | 13 2 9 |
| மொத்த வரவு.... | 2598 9 4 | மொத்த செலவு.... | 1500 10 8 |
| | | 1916ஆ டிசம்பர்மீ 31உ இருப்பு ரூ. 1097-14-8 | |

ச. சபாபதிமுதலியார்
கணிதபரிசோதகர்.

இ. ஆதிமூலமுதலியார்
காரியதரிசி.



சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தில்

1916-ஆ போஷகர்களாகவும் சமாசிகர்களாகவும் இருந்த கனவான்கள்.

போஷகர்கள்.

ஸ்ரீமான் ராவ்சாஹிப் பி. மாசிலாமணிமுதலியாரவர்கள்
இன்ஜினீரிங் கண்ட்ராக்டர்.

,, ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள்
ப்ரெவிடென்ஸி போஸ்ட்மாஸ்டர்.

,, எஸ். இரத்தினவேல்செட்டியாரவர்கள்
துவிபாஷிகர், மெஸ்ஸர்ஸ் பெஸ்ட் அண்டு கோ.

,, மயிலை. கதிர்வேல்முதலியாரவர்கள்
சிந்தாதிரிப்பேட்டை, வர்த்தகர்.

,, சி. வெங்குபிள்ளையவர்கள், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்.

,, வி. முத்தையாபிள்ளையவர்கள்
வர்த்தகர், பெரியண்ணமுதலிவீதி சென்னை.

,, ஆர். காசிவிசுவநாதமுதலியாரவர்கள்
பொடி புகையிலை வர்த்தகர் சென்னை.

,, திரு. சபாபதிமுதலியாரவர்கள்
ரிடைர்ட் சப் இன்ஜினீர் தங்கசாலைவீதி சென்னை.

---

நிர்வாகசபையார்.

சபைத்தலைவர்.

ஸ்ரீமான் ச. இராஜாக்கண்ணுமுதலியாரவர்கள், பி. ஏ.

உதவிச்சபைத்தலைவர்.

,, இ. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், பி. ஏ.

காரியதரிசி. (பொக்கிஷகாரர்.)

,, இ. ஆதிமூலமுதலியாரவர்கள்.

உதவிக்காரியதரிசி.

,, பி. வி. சமாபுரிமுதலியாரவர்கள்.

## அத்தியட்சர்கள்.

ஸ்ரீமான் எஸ். விநாயகமுதலியாரவர்கள், பி. ஏ.
,, திரு. சபாபதிமுதலியாரவர்கள்.
,, வா. தி. கோவிந்தராஜமுதலியாரவர்கள்.
,, ஆர். துரைசாமிமுதலியாரவர்கள்.
,, மணிமங்கலம். திருநாவுக்கரசுமுதலியாரவர்கள்.
,, டா. கண்ணப்பமுதலியாரவர்கள்.
,, எஸ். டி. சமரபுரிமுதலியாரவர்கள்.
,, இ. சுப்பிரமணியமுதலியாரவர்கள்.

## கணிதபரிசோதகர்.

ஸ்ரீமான் சு. சபாபதிமுதலியாரவர்கள்.

---

## சாமாசிகர் (அங்கத்தினர்.)

ஸ்ரீமதி, பெங்களூர் நாகரத்தினம் அம்மாள் அவர்கள், சங்கீதபண்டிதை.
,, ம. சி. மனோன்மணி அம்மாள் அவர்கள்.
ஸ்ரீமான், எஸ். சமரபுரிச்செட்டியாரவர்கள், மானேஜர் பெஸ்டு அண்டுகோ ஆயில்மில்.
,, மி. பார்த்தசாரதிநாயுடு அவர்கள் ஜெயராமமுதலியாரவர்கள் வாழைப்பழக்கிடங்கு.
,, கா. ரா. நமசிவாயமுதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர்.
,, தி. முருகேசமுதலியாரவர்கள், பென்ஷனர் மதராஸ் பாங்கு.
,, பி. லோகநாதமுதலியாரவர்கள், கண்ட்ராக்டர்.
,, பு. துளசிங்கமுதலியாரவர்கள் ப்ரொப்ரைட்டர் பாலநாகு டைப்பௌண்டரி.
,, மயிலை முருகேசமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்
,, பெ. சபாபதிமுதலியாரவர்கள், மளிகைகிடங்கு.
,, கே. சிவசங்காமுதலியாரவர்கள், டெலிகிராப் ஆபீஸ்.
,, எஸ். டி. சமரபுரிமுதலியாரவர்கள், ஷிப்பிங் அண்டு க்ளியரிங் ஏஜெண்டு.
,, ஆர். விசுவநாதம்செட்டியாரவர்கள், வர்த்தகர்.
,, கு. அ. ர. சுப்பராயசெட்டியாரவர்கள், ஒற்றைவாடை அரிசிமண்டி.
,, கோ. கந்தசாமி, [illegible] கோட்டையமந்து காப்பிவர்த்தகர்.
,, கோ. ஆறுமுக[illegible]அவர்கள், [illegible]



ஸ்ரீமான் கோ. சக்கிரபாணி முதலியாரவர்கள், அப்பா அண்டு கோ.
,, க. தே. சபாபதிசெட்டியாரவர்கள், ஒற்றைவாடை அரிசிமண்டி.
,, பொ. அரங்கநாதமுதலியாரவர்கள், ஹோ அண்டு கோ.
,, தி. சுப்பராயநாயகரவர்கள், வர்த்தகர் திருவல்லிக்கேணி.
,, அ. சிங்காரவேலுசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி
,, ஆறுமுகநாயகரவர்கள், திருவல்லிக்கேணி அரிசிமண்டி.
,, அ. ப. கோவிந்தசாமிசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி ஷராப்.
,, ரா. குமாரசாமிச்செட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி மளிகைவர்த்தகர்.
,, ம. மு. கோவிந்தராஜசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி அரிசிமண்டி.
,, வி. கிருஷ்ணசாமிப்பிள்ளையவர்கள், காஷியர் கிங் அண்டு பார்ட்ரிட்ஜ்.
,, வி. எஸ். தெய்வசிகாமணிமுதலியாரவர்கள், கிளார்க் எம். அண்டு எஸ். எம். ரெயில்வே இராயபுரம்.
,, பார்த்தசாரதிமுதலியாரவர்கள், வெற்றிலை வர்த்தகர்.
,, ஆர். பி. துரைசாமிமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, சி. பா. சண்முகமுதலியாரவர்கள், ஜவளி பொடிவியாபாரம்.
,, பி. எம். முருகேசமுதலியாரவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூடம்.
,, சு. சிவவாசுதேவமுதலியாரவர்கள் அக்கவுண்டண்டு, யெம் அண்டு யெஸ் யெம் ரெயில்வே.
,, சி. கன்னையநாயுடுஅவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூட அதிபர்.
,, எம். நடேசமுதலியாரவர்கள், கார்பரேஷன் ஓவர்சியர்.
,, ஜி. முருகேசமுதலியாரவர்கள், கிளார்க், மெக்டாவல் கம்பெனி.
,, எம். இராமலிங்கமுதலியாரவர்கள், வர்த்தகர் கொண்டித்தோப்பு.
,, டி. வி. குப்புசாமிமுதலியாரவர்கள், ஷராப், தாலுக்கா ஆபீசு.
,, இ. சுப்பிரமணியமுதலியாரவர்கள், உபாத்தியாயர்.
,, வி. எஸ். பவானந்தம்பிள்ளையவர்கள், 5 ரெயில்ரோட் பெங்களூர்.
,, கே. லோகநாதமுதலியாரவர்கள், அச்சுக்கூடத்தலைவர், வைத்தியநாதமுதலி வீதி.
,, வி. கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள், கார்போரேஷன், கணிதர்.

---

## சைவப்பத்திரிகைக்கு நிகழும் 1917ஹு பிப்ரவரியீ௴ வரையிற் சேர்ந்த ஆயுள் சந்தாதாரர்கள்.

1. ஸ்ரீமான் தி-ம-உ-உலகப்பனம்பலம் அவர்கள், கொத்தமங்கலம்.
2. ,, வெ-கண-வெ-ஆதினமிளகிசெட்டியார் அவர்கள், 85 மொகல் வீதி ரங்கோன். (நா-சுப-நாட்டரசங்கோட்டை)
3. ,, கு-ஆலங்காட்டுமுதலியார் அவர்கள், தக்கோலம்.
4. ,, சி-வ-நா-ராம-உலகப்பசெட்டியார் அவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன். (உல-கண-உல-சக்கந்தி)
5. ,, சி-கரு-சி-கரு-அழகப்பச்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு, ரங்கோன். (கரு-உ-அள-கல்லல்)
6. ,, மு-தெ-அ - அளகப்பச்செட்டியார் அவர்கள், 10 மொகல் தெரு, ரங்கோன். (உ-ருமை-ஆ-கோட்டையூர்)
7. ,, ஆ-வீர-வீ-ஆறுமுகஞ்செட்டியார் அவர்கள், 6 மொகல்தெரு, ரங்கோன். (ஆ-வீர-வீ-ஆரு-நாட்டரசங்கோட்டை)
8. ,, கண-மெ-மெ-நா-அருணாசலம்செட்டியார் அவர்கள், 6 மொகல் தெரு ரங்கோன். (உல-கண-அரு-சக்கந்தி)
9. ,, ஆ-சு-ப-சு-அடைக்கலப்பச்செட்டியார் அவர்கள், 4 மொகல் தெரு, ரங்கோன். (ஆ-சு-ப-சு-நாட்டரசங்கோட்டை)
10. ,, செ-அ-ராம-அருணாசலம்செட்டியார் அவர்கள், 4 மொகல் தெரு, ரங்கோன். (செ-அ-ராம-கா-காரைக்குடி)
11. ,, சா-அ-ராம-மு-சித-மு-அ-அழகப்பசெட்டியார், அவர்கள் தாட்டன் பர்மா. (வீர-அள-தேவகோட்டை)
12. ,, பழ-தெ-அ-அருணாசலஞ்செட்டியார் அவர்கள், பெகு, பர்மா (பழ-தெ-அ-காரைக்குடி)
13. ,, யெ-நா-மு-க-அழகப்பச்செட்டியார் அவர்கள், பெகு. பர்மா. (ஆரு-அ-கீளச்சிவல்பட்டி)
14. ,, சித-பெரி-சித-அழகப்பச்செட்டியார் அவர்கள், கெய்க்லாட் பர்மா. (தெ-மு-நா-கீழச்சிவல்பட்டி)
15. ,, அரு-ராம-மெ-அருணாசலம்செட்டியார் அவர்கள், பர்மா. கும்பியோ) ள-ள-அ-தேவகோட்டை)
16. ,, சொ-மா-அண்ணாமலைசெட்டியார் அவர்கள், 13 மொகல்தெரு, ரங்கோன். (சொ-மா-பள்ளத்தூர்)
17. ,, அண்ணாமலைசெட்டியார் அவர்கள், மானேஜர் மலையாசியம்மன் பீடிங்ஸ்ரூம், சிறுகூடல்பட்டி இராமநாதபுரம்.



18. ஸ்ரீமான் கண-க-லெ-கண்ணப்பச்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன் (கண-க-லெ-நாட்டரசன்கோட்டை)
19. ,, கூ-கண-வயி-கண்ணப்பச்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன் (குப-கண-கயி-நாட்டரசங்கோட்டை)
20. ,, கு-ப-அ-நா-ச-கண-கண்ணப்பச்செட்டியார் அவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (கு-ப-அ-ந-கண-நாட்டரசங்கோட்டை)
21. ,, மெ-அரு-நா-கருப்பஞ்செட்டியார் அவர்கள், கு-அரு-அள-கரு, தேவகோட்டை
22. ,, கும-அரு-குமாப்பச்செட்டியார் அவர்கள், 6 மொகல்தெரு, ரங்கோன் (கும-அரு-செப்பனூர்)
23. ,, உ-ராம-மெ-சு-ப-சேவு-காசிவிசுவநாதஞ்செட்டியார் அவர்கள், 12 மொகல்தெரு, ரங்கோன் (செ-உ-உ-அரமனைசிறுவயல்)
24. ,, சி-ராம-சி-குட்டயஞ்செட்டியார் அவர்கள், 13 மொகல் தெரு ரங்கோன். (சி-ராம-சி-கொத்தமங்கலம்)
25. ,, வீர-பெரி-கதி-கதிரேசச்செட்டியார் அவர்கள், கீழச்சிவல்பட்டி
26. ,, ராம-சு-லெ-ராம-காடப்பசெட்டியார் அவர்கள், பெகு பர்மா, (ராம-கா-வேகுப்பட்டி)
27. ,, சுப-க-அ-குமாப்பச்செட்டியார் அவர்கள், ஓன் பர்மா. (சுப-கும-சக்கந்தி)
28. ,, அரு-ராம-குப்புச்சாமிபிள்ளை அவர்கள், கேய்க்லாட் பர்மா, (சொ-பொ-கு-தேவகோட்டை).
29. ,, செவு-சித-சொக்கலிங்கம்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன் (ஆ-த-ஆ-நடராசபுரம்)
30. ,, சு-மெ-உ-நா-ராம.சு-சிவராமன்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன். (சுப-சிவ-அளகாபுரி)
31. ,, ராம-அரு-அரு-ராம-சொக்கலிங்கம்செட்டியார் அவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (மது-வீ-பூலாங்குறிச்சி)
32. ,, மெ-அரு-அரு-சொக்கலிங்கம்செட்டியார் அவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (சி-ராம-அ-செ-காரைக்குடி)

33. ,, நா-பெ-அ-த-சிதம்பரஞ்செட்டியார் அவர்கள், 10 மொகல் தெரு ரங்கோன் (சி-த-சொ-சி-த-கோட்டையூர்)

34. ,, ராம-பெ-சி-த-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், 10 மொகல் தெரு ரங்கோன் (க-ஆ-கொத்தமங்கலம்.)

35. ,, பெ-செ-ச-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், 10 மொகல் தெரு ரங்கோன் (அரு-சோ-வெற்றியூர்)

36. ,, அள-அரு-சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள், 6 மொகல் தெரு ரங்கோன் (சுப-அ-சுப-நாட்டரசங்கோட்டை)

37. ,, முரு-ராம-முரு-சிவசுப்பிரமணியம்செட்டியாரவர்கள், 6 மொகல்தெரு ரங்கோன் (நா-கரு-நாட்டரசங்கோட்டை)

38. ,, பள-உ-செட்டியப்பசெட்டியாரவர்கள், 6 மொகல்தெரு ரங்கோன் (ஆரு-செ-பாகநேரி)

39. ,, ஆ-மு-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், 6 மொகல்தெரு ரங்கோன் (குப-நா-த-ராம-கல்லல்)

40. ,, முத்து-கரு-வெ-சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள், தேவகோட்டை (கு-அரு-அள-அரு)

41. ,, ராம-லெ-சொ-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், 6 மொகல் தெரு ரங்கோன் (லெ-ராம-கல்லுப்பட்டி)

42. ,, சுப-ராம-சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள், 4 மொகல்தெரு ரங்கோன் (சுப-பெ-சுப-நாட்டரசங்கோட்டை)

43. ,, கண-கரு-அ-தெ-சோமசுந்தரம்செட்டியாரவர்கள், 4 மொகல் தெரு ரங்கோன் (உ-அரு-கரு-சோம-பாகநேரி)

44. ,, வெ. வெ. கரு. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள் 4 மொகல் தெரு ரங்கோன் (வெ-வெ-கரு-பாகநேரி)

45. ,, ப-மு-லெ-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், 4 மொகல்தெரு ரங்கோன் (தி-கரு-கரு-பாகநேரி.)

46. ,, கண-லெ-சிதம்பரஞ்செட்டியாரவர்கள், 4 மொகல்தெரு ரங்கோன் (மு-பெ-சொக்கலிங்கபுரம்.)

47. ,, வெ-தெ-அ-லெ-சாமிநாதஞ்செட்டியாரவர்கள், 12 மொகல் தெரு ரங்கோன் (மொ-சுப-சொ-தேவகோட்டை)

48. ,, உ-அ-உ-க-சுப்பிரமணியம்செட்டியாரவர்கள். 12 மொகல் தெரு ரங்கோன் (க-அ-அ-அளகாபுரி)



49. ,, பி-கு-நா-சித-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், 12-மொகல் தெரு ரங்கோன் (லெ-கு-சோம-தேவகோட்டை)

50. ,, சோ-மு-அ-சிதம்பரஞ்செட்டியாரவர்கள், 12-மொகல் தெரு ரங்கோன் (சி-மு-நா-ராம-பள்ளத்தூர்)

51. ,, ராம-பெ-சொக்கலிங்கம்செட்டியாரவர்கள், 13-மொகல் தெரு ரங்கோன் (சு-கி-கரு-கல்லல்)

52. ,, சித-அ-செ-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், மின்லா, பர்மா (வயி-கரு-சிதசோம-தேவகோட்டை)

53 ,, சி-கரு-சி-கரு-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், ஒன் பர்மா (செ-மு-செ-கண-உக்கூர்)

54. ,, ராம-மு-சிவராமன்செட்டியாரவர்கள், ஒன் பர்மா (ராம-ஆ-தெக்கூர்)

55. ,, அரு-அரு-சோம-சுப்பிரமண்ணியம்செட்டியாரவர்கள், மாபின் பர்மா (கண-மு-மு-சுப-வெற்றியூர்)

56. ,, ப-சு-பழ-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், மாபின் பர்மா (மு-மு-ராம-காண்டவராயன்பட்டி)

57. ,, மெ-லெ-மெ-ராம-சாமிநாதன்செட்டியாரவர்கள், ஒன் பர்மா (அரு-முரு-சொ-தேவகோட்டை)

58. ,, அ-முரு-அ-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், லெகு பர்மா (அ-முரு-அ-காரைக்குடி)

59. ,, சிர-சித-ராம-அ-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், லெகு பர்மா (ஆ-வீர-மு-காரைக்குடி)

60. ,, அரு-கண-சிதம்பரஞ்செட்டியாரவர்கள், 6-மொகல்தெரு ரங்கோன் (அரு-கண-கீளப்பூங்குடி)

61. ,, தெ-பழ-சித-சதாசிவம்செட்டியாரவர்கள், கொத்தமங்கலம் (கானாடு காத்தான்)

62. ,, ஸ்ரீ-சிவசுப்பிரமணியப்பண்டிதரவர்கள், ஔஷதசாலை நாயன் மார்க்கட்டு யாழ்ப்பாணம்

63. ,, குப-மு-ராம-நாராயணன்செட்டியாரவர்கள், மோல்மீன் (கி-ப-நா-கி-கீளச்சிவல்பட்டி)

64. கரு-வெ-நா-நாராயணன்செட்டியாரவர்கள், பென்விகான் பர்மா (கரு-வே-நா-ஓசிறுவயல்)

65. ,, பழ-முரு-பழ-பழனியப்பச்செட்டியாரவர்கள், 88-மொகல் தெரு ரங்கோன் (பழ-முரு-பழ-புதுப்பட்டி)

66. ,, சி-கரு-சி-லெ-பஞ்சாட்சராஞ்செட்டியாரவர்கள், ஓன் பர்மா (வீரபசுப-நாட்டரசன் கோட்டை)

67. ,, ப-ராம-அ-பழனியப்பச்செட்டியாரவர்கள், ஓசான் பர்மா (ப-ராம-அ-புதுப்பட்டி)

68. ,, ராம-அ-பெரியகருப்பன்செட்டியாரவர்கள், ஓயிம் பர்மா (மெ-நா-க-லெ-காரைக்குடி)

69. ,, பழ-பிச-பிச்சகுட்டிசெட்டியாரவர்கள்,(சிக-மு-ரா-சிதம்பரஞ் செட்டியாரவர்கள்) தேவகோட்டை

70. ,, சி-கரு-சி-லெ-முத்தய்யாசெட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (நா-மு-சொக்கநாதபுரம்)

71. ,, பழ-ராம-மெய்யப்பச்செட்டியாரவர்கள், 88-மொகல் தெரு ரங்கோன் (பழ-அ-கொப்பனாப்பட்டி)

72. ,, சா-மு-ராம-முத்தய்யாசெட்டியாரவர்கள், 88-மொகல் தெரு ரங்கோன் (சித-சுப-வேந்தம்பட்டி)

73. ராம-ப-வ-மு-முத்துராமன்செட்டியாரவர்கள், 4-மொகல் தெரு ரங்கோன் (கரு-செமு-செவ்வூர்)

74. ,, வெ-பெரி-பழ-முத்தய்யாசெட்டியாரவர்கள், 4-மொகல் தெரு ரங்கோன் (வெ-பெரி-பழ-பாகனேரி)

75. ,, சொ-மு-அ-வஜண்டாயிருக்கும் மெய்யப்பச்செட்டியாரவர்கள், (கரு-செ) ராயவரம்

76. ,, பழ-ராம-முருகப்பச்செட்டியாரவர்கள், ஆக்ட்வின் பர்மா (பழ-முரு-அ-காரைக்குடி)

77. ,, பழ-ராம-மெய்யப்பச் செட்டியாரவர்கள், ஆக்ட்வின் பர்மா (அ-முரு-மெ-காரைக்குடி)

78. ,, கரு-வெ-அழ-முத்தய்யாசெட்டியாரவர்கள், பென்விகான் பர்மா (அ-க-மு-கீளச்சிவல்பட்டி)

79. ,, மு-குழ-முத்தய்யாசெட்டியாரவர்கள், லெசெய் பர்மா (மு-குழ-கண்டமாவலிக்கம்)

80. ,, சி-கரு-சி-சித-முத்தய்யாபிள்ளையவர்கள், டேகு பர்மா (ஆ-மு-உறங்காம்பட்டி)



81. ,, க-மெ-உ-நா-ராம-க-முத்துப்பிள்ளையவர்கள், வபியா பர்மா (ந-வீ-மு-வனுபுரம்)

82. ,, கும-நா-நா-சா-முத்துராமன்செட்டியாரவர்கள், கடப்பானு பர்மா (வடு-மு-கல்லல்)

83. ,, யஸ்-முருகப்பிள்ளையவர்கள், ஸப்கோர்ட், தெற்குப் புது தெரு தூத்துக்குடி

84. ,, உல-க-கண-ராமநாதன்செட்டியாரவர்கள், 85-மொகல்தெரு ரங்கோன் (உல-க-கண-சக்கந்தி)

85. ,, சி-கரு-சி-சித-ராமநாதன்செட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (உ-உ-மு-அளகாபுரி)

86. ,, பி-அரு-பி-ராமநாதன்செட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (ந-ராம-கண-ராம-அலவாக்கோட்டை)

87. ,, உல-க-கண-ராமன்செட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (கரு-சு-ப-சொக்கலிங்கபுரம்)

88. ,, பி-கு-பி-சு-ராமன்செட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (ராம-ப-ராம-வலையப்பட்டி)

89. ,, மெ-செ-மெ-மெ-ராமநாதன்செட்டியாரவர்கள், 10-மொகல் தெரு ரங்கோன் (வ-நா-க-ராம-தேவகோட்டை)

90. ,, லெ-ராம-அ-ராமன் செட்டியாரவர்கள் 88-மொகல் தெரு ரங்கோன் (சித-ராம-கோட்டையூர்)

91. ,, அ-ராம-சு-ராமநாதன்செட்டியாரவர்கள், 81-மொகல் தெரு ரங்கோன் (வீர-கரு-தேவகோட்டை)

92. ,, வீர-ராம-அ-ராம-ராமநாதன்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (வீர-ராம-ராம-உக்கூர்)

93. ,, சிக-அரு-சித-ராமநாதன்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (வீர-ராம-நா-உக்கூர்)

94. ,, சி-அரு-ராமநாதன்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (கண-வி-ராம-காளையார் மங்கலம்)

95. ,, பி-நா-பி-ராம-ராமசாமிசெட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (பி-நா-பி-ராம-அலவாக்கோட்டை)

96. ,, சா-த-சிவ-ராமநாதன் செட்டியாரவர்கள் 4-மொகல் தெரு ரங்கோன் (அண-வீர-ராம-நடராசபுரம்)

97. ,, கு-முத்-து-ராமசாமிச்செட்டியாரவர்கள்; பெகு பர்மா (பழ-உ-ப-தேவகோட்டை)

98. ,, சா-ராம-அரு-ராமஞ்செட்டியாரவர்கள், கெய்க்லாட் பர்மா (வெ-ராம-வேகுப்பட்டி)

99. ,, ஆரு-ஆ-ராமஞ்செட்டியாரவர்கள், கெய்க்லாட் பர்மா (அ-ராம-சு-ஒசிறுவயல்)

100. ,, ப-கு-பழ-ராமநாதன்செட்டியாரவர்கள், யோல்மீங்கியன் பர்மா (ப-ராம-லெ-செ-வெ-காரைக்குடி)

101. ,, வே-இரத்தினவேல்முதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர் திருவடிசூலம் செங்கல்பட்டு

102. ,, அரு-அரு-சோம-இலட்சுமணச்செட்டியாரவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (மா-லெ-லெ-வெற்றியூர்)

103. ,, சுப-கண-கா-லெ-இலட்சுமணச்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (குள-கர்-லெ-நடராஜபுரம்)

104. ,, உல-க-க-இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (ந-ராம-கண-சுப-அலவாக்கோட்டை)

105. ,, உ-சு-உ-க-இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், 12-மொகல் தெரு ரங்கோன் (சிவ-நா-தேவகோட்டை)

106. ,, அ-ராம-அ-மு-வீர-இலட்சுமணன்செட்டியாரவர்கள், (அ-ராம-அ-மு-வீர தேவகோட்டை)

107. ,, சொ-மு-ராம-இலட்சுமணன்செட்டியாரவர்கள், பெகு பர்மா (பெ-ராம-லெ-ராம-காரைக்குடி)

108. ,, வீ-லெ-க-லெ-இலட்சுமணன்செட்டியாரவர்கள், ஒன் பர்மா (ராம-கண-லெ-நாட்டரசன்கோட்டை)

109. ,, சி-கரு-ஆ-கண இலட்சுமணன்செட்டியாரவர்கள், ஒன் பர்மா (கண-சி-லெ-காளையார்மங்கலம்)

110. ,, உ-அ-உ-க-இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், மின்லா பர்மா, (முரு-லெ-காரைக்குடி)

111. ,, சி-ராம-அ-இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், (கொத்தமங்கலம்)

112. ,, வி-ஆர்-எம்-எம்-இலக்குமணச்செட்டியாரவர்கள், (கொத்தமங்கலம்)



113. கூ-கண-க-வெள்ளையப்பச்செட்டியாரவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன் (முரு-லெ-வெ-அரமனை சிறுவயல்)

114. ,, கண-க-லெ-வீரப்பச்செட்டியாரவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (சு-பகு-ப-வீர-நாட்டரசன்கோட்டை)

115. ,, வ-ராம-லெ-வீரப்பச்செட்டியாரவர்கள், புதுவயல் (ராமநாதபுர ஜில்லா)

116. ,, கூ-கண-க-அரு-வீரப்பச்செட்டியாரவர்கள், லாகுவா பர்மா (வீர-பழ-காளையார்மங்கலம்)

117. ,, செ-கு-லெ-மு-வைரவன்செட்டியாரவர்கள், கடப்பறு பர்மா (மு-வீர-வயி-நச்சாந்துப்பட்டி)

118. ,, மு-சா-வள்ளியப்பசெட்டியாரவர்கள், டாங்கூ பர்மா (வ-அ-வ-பாகனேரி)

---

## குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.

(48-வது பக்கத்தொடர்ச்சி)

சிவிகையினின்றுமிறங்கிக் கங்கையைவணங்கி, அதிலே ஸ்நானஞ்செய்து தமது நியதிகளை முடித்துக்கொண்டு, அக்கங்கையின் இருபுறத்திலுங் காடுகளடர்ந்து, துருக்கர்களுடைய பள்ளியும் சமாதியுமே நிறைந்திருப் பதைக்கண்டு, மனநொந்து, அன்றிரவு நித்திரைசெய்தார். அப்போது அந்தக்காடுகளால் மறைக்கப்பட்டிருந்த கேதாரத்திலெழுந்தருளிய சிவ பெருமான் அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, "நம்மைப் பூசிப்பா யாக" என்று ஆஞ்ஞாபிக்க, சுவாமிகள் அவ்வாறே மற்றைநாட் பிராம முகூர்த்தத்திலே கேதாரத்தை யடைந்து. காடுகளையெல்லாம் அழிப் பித்து, அதனடுவே எழுந்தருளிய சிவபெருமானைப் பூசித்துத்துதித்து பின்னர் விசுவநாதரை விசாலாக்ஷியம்மையாரோடும் அருச்சித்து வண ங்கி, "காசிக்கலம்பகம்" என்னும் ஓர் பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

அத்தலத்தில் வசிக்குநாளிலே, அந்நகரத்தையாண்டுகொண்டு அங் கிருந்த டில்லிபாக்ஷாவைக் கண்டு வசனித்துத் தருமம்பெறுவதற்கு வேண் டும் இடம்பெறவிரும்பி, அவனுக்குரிய இந்துஸ்தானிபாஷையைத் தெரி வித்தருளும்படி சகலபாஷைகளிலும் வல்ல சரஸ்வதியைப் பிரார்த்தித்து "சகலகலாவல்லி மாலை" என்னும் பிரபந்தத்திலே ஒன்பது பாடலருளி யும், திருவருள் செய்யாதிருந்தமைகண்டு, "மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்-பண்கண்டளவிற் பணியச் செய் வாய்" என்னும் பத்தாவதுபாட்டை அருளிச்செய்தார். உடனே சரஸ்வ

டியார் திருவருள்சுரந்து அப்பாஷையை விளக்கியருள; சுவாமிகள் களிகூர்ந்து, அவ்வரசன்சமுகத்திற் கெழுந்தருளினார். அவன் சுவாமிகளுடைய அருமைபெருமைகளைச்சிறிதும் அறியாதவனாகையால்சிங்காதனத்திலிருந்துகொண்டே வரலாற்றைவினவ; சுவாமிகள் அதனாலே தமக்கு யாதொருகுறைவும் இல்லையாயினும், அவனுக்கு நேரிடும் கெடுதியை யோசித்து, கருணைகூர்ந்து, "மஹாராஜாவே, உமக்கு ஆசீர்வதிக்க வந்த நம்மை இப்படி நிறுத்திக்கொண்டு வினவுவது தருமமல்ல," என்று உரைத்தருளினார், அதுகேட்ட அரசன் "உம்மிடத்திலே தெய்வீகங் கண்டாலன்றி உமது சரீரத்தோற்றத்திற்கு நான்மரியாதை செய்யேன்" என்று சொல்ல; சுவாமிகள் "அப்படியாயின் அதனை நாளைக்குக்காட்டுவோம்" என்றுசொல்லி மீண்டு, மற்றைநாள் காளியினுடைய அநுக்கிரகத்தால் வந்த ஒருசிங்கத்தின் மேலேறிக்கொண்டு, யாவரும் அஞ்சும்படி சபையையடைந்து, அரசனைநோக்கி, "நீர் இருப்பது உயிரற்றசிங்கம் நாம் இருப்பது உயிருற்ற சிங்கம்; ஆயினும் நீர் அஞ்சவேண்டுவதில்லை, உமக்கு மாத்திரம் இது பசுவாகத்தோன்றும்." என்றுசொல்லி, அதிலிருந்தபடியே அவன்வினாக்களுக்கு உத்தரங்கொடுத்து அவன் வணங்கும்படி செய்து அங்கே வீற்றிருந்தருளினார்.

அக்காலத்திலே அரசனையும் பிறரையும் சந்தோஷிப்பிக்கும்படி நடாத்திய பிரசங்கங்களுள்ளே சிற்றின்பத்தைக் குறித்துச்செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, துறவிகளாய் விருத்தப்பருவ மடைந்துள்ள அரசனுடைய குருமுதலியோர்களும் விரகத்தினாலே மயங்கிப் பூமியிலே விழுவார்கள். யுத்தவிஷயமாகச் செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு வயோதிகர்களும் கண்சிவந்து பற்களைக்கடித்து, ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஆரவாரிப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு விஷயங்களையும் பற்றிப் பிரசங்கிக்கும் பிரசங்கங்களினும் தாங்கள் அந்தந்த மயமாதலையடைந்தும், சில துருக்கர்கள் மற்றவைகளைப்பற்றிச் சந்தேகியாமல் சிற்றின்பத்தைக்குறித்துச் செய்த பிரசங்கத்தில்மாத்திரம் சந்தேகம்பிறந்து, இவருக்கு அநுபவமில்லாமலே சாஸ்திரத்தால் இவ்விஷயத்தில் இவ்வளவு பேசமுடியுமா வென்று சுவாமிகளைநோக்கி, "இவர் பகற்சந்நியாசிபோலும்" என்பதுமுதலாகப் பலவாறு பிதற்றுவாராயினார்கள். அதுகண்டு சுவாமிகள் மிகவும் களிம்பேறிய ஒரு செப்புப் பாத்திரத்தை அழைப்பித்து, அவ்வாறுபிதற்றிய துருக்கர்களை நோக்கி, "நாளைக்கு இதை மருந்தில்லாமலே பொன்னாக்குதலாகிய ஒரு இரசவாதம் செய்வோம்" என்றுசொல்லி, அப்பாத்திரத்தை அவர்கள் காணும்படி மலத்திலே புதைப்பித்தார்.

(இன்னும் வரும்.)

OFFICE OF THE REGISTRAR OF ... 10 MAY 1917 MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3.] || பிங்கள௵ வைகாசி௴—1917௵ மே௴ || [இதழ் 5

பண்ணி லோசை பழத்தினி லின்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவுவே றாயவன்
கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே.

---

## சிவஞானபோதம்—இரண்டாஞ்சூத்திரம்.

(53-வது பக்கத்தொடர்ச்சி)

### நான்காம் அதிகரணம்.

ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே.

(இ-ள்.) முதல்வன் தன தாணையாகிய சிற்சத்தியோடு நீக்கமின்றி நிற்பன். (எ-று.)

இதில், 1-வது—தன்னாற்கூறப்படும் பொருள்:—முதல்வன் சர்வவியாபகன்.

2-வது-ஐயப்பாடு:—ஆணை யெனப்படுஞ் சத்தி முதல்வனின் வேறோ, அன்றோ?

3-வது-பிறர்கூறும் பக்கம்:—(1)சத்தி முதல்வனின் வேறு. (இது மீமாஞ்சகர் முதலியோர் பக்ஷம்)

(2) சத்தி முதல்வனின் வேறன்று. (இது நையாயிகர் முதலியோர் பக்ஷம்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு:—முதல்வன் ஏகானேக மிரண்டுமின்றி (அதாவது ஒன்று, வேறு என்னும் இருதன்மையுமின்றி,) அவ்விரண்டினுக்கும் பொதுவாய் தனது சிற்சத்தியோடு சமவேதமாய் (அதாவது நீக்கமின்றி) சர்வவியாபியாய் நிற்பன்.

சமவேதம்—சமவாயத்தோடு கூடியது. சமவாயம் என்னும் வடமொழி தமிழில் நீக்கமின்றி நிற்றல் என்று மொழிபெயர்க்கப்படும். இவ்விடத்தில் சமவாயம் என்பது தாதான்மிய சம்பந்தத்தை: தாதான்மியமாவது உடலிலுள்ள கையானது உடலோடு ஒன்றாயும், ஒருவாறு உடலிற்கு வேறாயும் இருப்பதுபோல், பொருளால் ஒன்றேயாயும் ஒருவாறு வேறாயும் இருத்தல்.

5-வது இயைபு—உதாரண வெண்பா.

எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டென்னி
லெங்கு முளனன் றெவற்றெவனு—மங்க
ணவையவ னன்றில்லைப் பொன்னொளி போலீச
னவையுடைமை யாளாநா மங்கு. (ம)

(இ-ள்.) எங்கும் உளன் என்று அளவை ஒன்று அன்று—முதல்வன் "அவையே தானேயாய்" நிற்பன் என்று மேலேகூறிய பிரமாணத்தினால் ஒருபொருளாதல் கூடாது. (ஏனெனில், ஒருபொருளாயின் அது ஓரிடத்தி லிருப்பதன்றி எங்கும் வியாபித்து நிற்கமாட்டாது. எதுபோலெனில், கங்காநதிக் கரையில் நிற்கும் ஒருவனே அதேகாலத்தில் காவிரிநதிக்கரையினும் நிற்கமாட்டாமை போலெனக)—இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று—முதல்வன் இருபொருளாய் (அதாவது வேறாய்) நிற்கும் என்னில், அவன் எங்கும் அவையே தானேயாய் வியாபித்து நிற்றல் கூடாது. (ஏனெனில், தன்னிடத்திலே வேற்றுமை யுடையவன் பிற பொருள்களிடத்தில் வேற்றுமையின்றி வியாபித்து நிற்க இயலாதாகையா லெனக.) ஆனால் (அவன் எங்கும் உளன் அல்லன் என்னலாமோவென்னில்)—எவற்று எவனும், அங்கண் அவை, அவன் அன்று இல்லை—எவ்வெவ்விடத்து எவ்வெப் பொருள்களுண்டோ, அவ்வவ்விடத்து அவ்வப் பொருள்களெல்லாம், (அகர உயிரின்றேல் அக்கரங்களில்லையாமாறுபோல்) அம்முதல்வனை யின்றியமையா. (ஆதலால் அவன் எங்கும் உளன் அல்லன் என்றலும் பொருந்தாது. (ஆனால் முதல்வன் சிற்சத்தியோடு ஏகானேகமின்றி நீக்கமற நிறைந்திருப்பன் என்பதற்குப் பொருள் யாதோவென்னில்,)—ஈசன் பொன் ஒளிபோல்—முதல்வன், சூரியனும் ஒளியும்போல் (ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தால் சிவமுஞ் சத்தியுமென்று) இயைந்து நிற்கும். (அதாவது, சூரியன் ஒன்றே தன்னைநோக்கச் சுடரோன் எனவும், விஷயங்களை நோக்கக் கதிர் எனவும் தாதான்மியத்தால் இருவகையாய் இயைந்து நிற்றல்போல சுத்தசைதன்னியமாகிய சிவம் ஒன்றே, புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய்த் தன்னியல்பில் நிற்கும் அவசரத்தில்



சிவம் எனவும், புறப்பொருளை நோக்கி நின்று உணர்த்தும் அவசரத்தில் சத்தியெனவும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு இயைந்து நிற்கும்). (ஆனால் பசு பாசங்களுக்கும் வியாபகமிருத்தலால் அவைகளும் சிவபெருமானைப் போலவே தத்தஞ் சத்திகளோடு நீக்கமறக்கலந்து நிற்கும் எனப் பெறப்பட்டுச் சிவத்திற்குச் சமமாக எண்ணப்படுமோவெனில், அப்படி யெண்ணப்படா)—அவை உடைமை ஆம், நாம் ஆள் அங்கு—(அவை யவ்வாறாயிருப்பினும் சிவத்தின் வியாபகத்தை நோக்க வியாப்பியமாதலினால்) அப் பாசங்கள் உடைமையாம், பசுக்களாகிய நாம் அடிமை ஆவோம் அம்முதல்வனிடத்தில் (எ-று.)

வியாபகம் என்பது மேலிடு நிறைவும், வியாப்பியமென்பது வியாபகத்தில் அடங்கிய நிறைவுமாம். இவைகட்குச் சமுத்திரமும் சமுத்திரத்திலுள்ள நீரும் உவரும் உவமானங்களாம்.

வியாபகமேலிடு நிறைவாமென்ப
வியாபகமாதி விரிக்குங்காலே—வியாப்பியமொன்றின் யிடைந்தநிறைவே.
வியாத்திசமநிறை வாகும்விளம்பின்—வியாப்பியமுவமொன விளக்கியநூலே.
வியாபகங்கடலே வியாத்தியங்நீரே—

இவ்வதிகாரணத்தால் முதல்வன் வியாபகனுகையால் வியாப்பியப் பொருளுக்கு ஒன்றாய் நிற்றல் கூடாதென்பதும், அது கூடாமையால் இரண்டாய் நிற்பன் என்னில் அவன் வியாபகனுதல் கூடாதென்பதும், அவன் வியாபியல்லன் எனின் பசுபாசங்கள் அவனை யின்றி யமைதல் கூடாது என்பதும் பெறப்பட்டு, முதல்வன் ஒருவனே ஞாயிறும் ஒளியும்போலச் சிவமுஞ் சத்தியுமெனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுப் பொதுமையில் நிற்பன் என்பதும், புறப்பொருளொடுச் சர்வவியாபியாய்ப் புறப்பொருளை நோக்காது ஒன்றிலும் தோய்வின்றிச் சுயம்பிரகாசமாய் அறிவு மாத்திரமாய் நிற்கும் நிலையில் சிவம் எனவும், புறப்பொருளை நோக்கி உலகெலாமாயும் வேறாயும் உடனுமாயும் நின்று ஆன்மாக்களுக்கு உணர்த்தி நிற்கும்நிலையில் சத்தியெனவும் பெயர்பெறும் என்பதும் விளக்கப்பட்டன.

தீயின் சத்தியொன்றே சுடுதல் அடுதல் முதலிய தொழில்களுக்கேற்றவாறு சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி என்பனவாதியாகப் பெயர்பெறுமாறு, சிவசத்தியொன்றே காரியவேறுபாட்டால், பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப் பஞ்ச சத்திகளாகவும், இவற்றினின்றும் தோன்றிய எண்ணிறந்த சத்திகளாகவும் விரிந்து எண்ணிறந்த பேர்களைப் பெறும். இச்சத்திகளோடு கூடிய சத்திமானாகிய சிவபெருமானும் எண்ணிறந்த பேர்களைப் பெறுவர். இவைகளைச் சிவாகமம் விரித்துரைக்கும்.

## சிவஞானசித்தியார்.

சத்தியாய் விந்துச்சத்தி யாய்மனோன் மனிதா னாகி
யொத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகு
மெத்திற நின்றா னீச னத்திற மவளு நிற்பள்.

சத்திதா னாத மாதி தானாகுஞ் சிவமு மந்தச்
சத்திதா னாதி யாகுந் தரும்வடி வான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமு மாகுஞ் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்தி தானே.

## இரண்டாஞ் சூத்திரத்தின் தொகைப்பொருள்.

இச்சூத்திரமானது, சிவபெருமானும் உயிர்களும் பொன்னும் பணியும்போல் அபேதமாம் என்று மாயாவாதிகளும், இருளும் ஒளியும் போல் பேதமாம் என்று மத்துவரும், சொல்லும் பொருளும்போல் பேதாபேதமாம் என்று பாஞ்சராத்திரிகளும் கூறுவதை மறுத்து, உடலும் உயிரும்போல் அபேதமும், கண்ணும் ஒளியும்போல் பேதமும், ஆன்மபோதமும் கண்ணொளியும்போல் பேதாபேதமுமாம் என்றும், உயிர்கள் பிறந்து இறத்தற்குக் காரணமாகத் தமது ஆணையாகிய சத்திவாயிலாக அவைகளுக்குக் கன்மபலனைச் சிவபெருமானே கொடுப்பரென்றும், உயிர்கள் தூல உடம்பைவிட்டுச் சூக்குமதேகத்தோடு பூதசார சரீர முதலியவற்றை யடைந்து சொர்க்கமுதலியவற்றிற் போய் இன்பம் அனுபவித்து, எஞ்சிய கன்மத்தினாற் சூக்கும தேகத்தைக்கொண்டு, மக்கள் விலங்குமுதலிய பிறவிகளுள் தம்மனம் செலுத்திய பிறவிக்கேற்ற கருவில் விழும் என்றும், சிவபெருமான் ஒருவரே சிவமும் சத்தியுமாய் நிற்பர் என்றும் அறிவுறுத்துகின்றது.

---

## சிதம்பரதத்துவார்த்தம்.

(32-வது பக்கத்தொடர்ச்சி.)

இனி ஸ்ரீநடராஜப்பெருமான் செய்தருளும் திருநடனத்தின் தத்துவார்த்தத்தைச்சிறிது விளக்குவாம். நம்மிறைவனார் செய்தருளும் நடனமானது சிவானந்தக்கூத்து எனவும், சுந்தரக்கூத்து எனவும், பொற்பதிக்கூத்து எனவும், பொற்றில்லைக்கூத்து எனவும், அற்புதக்கூத்து எனவும் ஐவகைப்படும். இவைகளின் இலக்கணங்களை திருமந்திரமுதலிய நூல்கள் விரித்துக்கூறுகின்றனவெனினும், அவைகள் அநுபூதிமான்களாகிய சிவஞானிகட்கே உணரவரும். எம்போலிகட்கு வெறுஞ் சொன்மாத்திரமாயிருக்கும்.



### திருமந்திரம்.

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனை
சொற்பத மாமந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
யற்புதக் கூத்தனை யாரறி வாரே.

### திருவள்ளுவநாயனார்.

பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவி
விழைநக்கி நூனெருடு மேழையறி வேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

சிவபெருமான் சேதனம் அசேதனம் என்னும் இருவகைப் பிரபஞ்சத்தின்கண்ணும் அவை வேறு தாம் வேறு என்னாதபடி இரண்டறக் கலந்திருத்தலினால் எல்லாம் அவருடைய திருமேனியாகும். ஆதலால் அவரன்றி யோரணுவும் அசையாது. அவரசைய எல்லாம் அசைகின்றது. அவர்காண உயிர்கள் காண்கின்றன. அவர் கேட்க உயிர்கள் கேட்கின்றன. எல்லாம் அவருடையசெயலே. சிருட்டிப்பவரும் அவரே; காப்பவரும் அவரே; சங்கரிப்பவருமவரே. அவர் தமது திருக்கரத்தில் தமருகம் தாங்காவிடில் பிரமனால் சிருட்டித்தொழில் செய்ய இயலாது. அவர் அபயகரம் கொள்ளாவிட்டால் விஷ்ணுவால் காத்தற்றொழில் செய்ய இயலாது. அவர் திருக்கரத்தில் அனலேந்தாவிட்டால் உருத்திரரால் சங்காரத்தொழில் செய்ய இயலாது. ஆதலால் அவர் செய்யும் திருநடனமானது அவர் சொரூபநிலையினின்றும் நீங்கித் தடத்தநிலையையடைந்து, இடைவிடாமல் பஞ்சகிருத்தியம் செய்தருளுகின்றார் என்பதையும், அவரே திரிமூர்த்தி பரன் என்பதையும், அவர் அசைய எல்லாம் அசைகின்றது என்பதையும் விளக்குகின்றது.

### திருமந்திரம்.

தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்க ளாதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமையஞ் சராசரம்
யாவையு மாடிடு மெய்மிறை யாடவே.

இனி நடராஜப்பெருமான் சிவகாமியம்மையார் கண்டுகளிக்க ஆடுகின்றார் என்பதை விளக்குவாம்.

### தமிழ்வேதம்.

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே.

### சிதம்பரமும்மணிக்கோவை.

ஆட்டுகின்றா ணின்றிமன்று ளாடுமா னந்தத்தேன்
காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று—வேட்டதனை
யுற்றநெடு நாளாக வுண்ணுமோர் மால்யானை
பெற்றதொரு கூந்தற் பிடி.

### சிதம்பரமும்மணிக்கோவை.

பொன்மன்றம் பொற்றா மரையொக்கு மம்மன்றிற்
செம்ம றிருமேனி தேனொக்கு—மத்தேனை
யுண்டு களிக்குங் களிவண்டை யொக்குமே
யெம்பெரு மாட்டி விழி.

இச்செய்யுட்கள் இறைவனார் அம்மையார் கண்டுகளிக்க ஆடுகின்றார் என்பதை மிகவும் அழகுபெற வெடுத்துக் காட்டுகின்றன. இவற்றின் உண்மையை யுணராமலே எண்ணிறந்தோர் சாமி அம்மனுக்கு ஆட்டம் ஆடிக் காட்டுகின்றார் என்று சொல்லி பத்திசெய்து வணங்குகின்றார்கள். அன்பில்லார் பலர் "கடவுளுக்கு ஒரு பெண்டாட்டி யுண்டு என்பதும், அவள் கண்டுகளிக்க அவர் ஆடுகின்றா ரென்பதும் மதியீனமாம்" என்கிறார்கள். மேலே விளக்கிய சிவஞானபோதம் இரண்டாஞ் சூத்திரம் நான்காம் அதிகரணத்தால் சிவகாமி யம்மையாருக்கும் நடராஜப் பெருமானார்க்கும் உள்ள சம்பந்தம் இத்தன்மைத்தென இனிது விளங்கும். அதில் சிவகாமியம்மையார் சிவபெருமானின் வேறாகாத அருட்சத்தியே என்பது விளக்கப்பட்டது. உலகத்தில் குணத்தோடு பொருந்தியிராத பொருள் ஒன்றும் இல்லை. எவ்வகைப் பொருள்களும் குணகுணிகளாகவே யிருக்கின்றன. அவ்வாறே சிவபெருமானும் குணத்தோடு கூடினவராகவே யிருக்கின்றார். ஆனால், அவர் உயிர்களைப்போல் முக்குணவயத்தான் று; அருளாகிய குணத்தையுடையவர்; சர்வசுதந்திரர். ஆதலால், அவரை வேதாகமங்கள் குணநிதன் என்று தோத்திரஞ் செய்யும். நெருப்பினிடத்தில் வெப்பமும் நீரினிடத்தில் குளிர்ச்சியும் முறையே நெருப்பினின்றும் நீரினின்றும் வெவ்வேறாகப் பிரிக்கப்படாமலிருப்பதுபோல், அருட்சத்தியானது சிவத்தினின்றும் வேறாகப் பிரிக்கப்படாமல் தாதான்மியமாய் இயைந்து நிற்கும். இதுபற்றியே



பரஞ்சோதிமாமுனிவரும் "நீரின்தண்மை யனல்வெம்மையெனத் தனையகலாதிருந்து சராசரங்களீன்ற, பெண்மையுருவாகிய தன்னுணந்தக்கொடி மகிழ்ச்சிபெருக யார்க்கும், அண்மையதா யம்பலத்து ளாடியருள் பேரொளியை யகத்துள் வைப்பாம்" என்றருளிச்செய்தனர். நெருப்பில் வெப்பமாகிய குணமிருத்தலினால் அது சுடுதல் அடுதல்முதலிய தொழில்களைச் செய்கின்றது. அப்படியே ஒவ்வொரு பொருளும் அதனதனிடத்திலுள்ள குணத்திற்கேற்ற தொழிலைச்செய்யும். அவ்வண்ணமே சிவபெருமான் தம்மிடத்துள்ள அருளாகிய குணத்தினால் சிருட்டியாதி தொழில்களைச் செய்கிறார். அருளென்னும் சத்தியில்லாவிட்டால் அவர் உயிர்களுக்கிரங்குதலும் இல்லை. அவர் எத்தொழிலையுஞ் செய்பவல்லவராகார். அவருக்குக் கடவுட்டன்மையுங் கூற விடமிராது. இதுபற்றியே சிவானந்தலகரியில் "சிவமெனும் பொருளுமாதி சத்தியொடுசேரி னெத்தொழிலும் வல்லதாம்—இவள் பிரிந்திடினியங்குதற்குமரி தரிதெனுமறை யிரைக்குமால்" என்னப்பட்டது.

### திருவாசகம்.

நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

### திருக்களிற்றுப்படியார்.

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

சிவபெருமான் அருளே திருமேனியாகவும் அவ்வருட்சத்தியே சிவகாமியம்மையாராகவும் சகளீகரித்து, உயிர்களுக்கு அம்மையப்பரா யெழுந்தருளி, அவ்வருட்சத்தி வசப்பட்டுப் பஞ்சகிருத்தியஞ் செய்தருளுகின்றார் என்பதே அவர் சிவகாமியம்மையார் கண்டுகளிக்க நடனஞ் செய்கின்றார் என்பதின் றாற்பரியமாகும்.

## குமாரகுருபரசுவாமிகள் சரித்திரம்.

(72-வது பக்கத்தொடர்ச்சி.)

மறுநாள் அரசன்முதலிய பலரும்வந்து கூடியபின்பு, அப்பாத்தி
ரத்தை யெடுப்பித்துச் சுத்திசெய்வித்து பொன்னென, எதிரேவைக்கக்
கண்டு, முதனாள் ஆக்ஷேபித்த துருக்கர்களுட்சிலர் "இது இரசவா
தத்தாலன்று; மலம்புளிப்பாதலால் இப்படிப்பிரகாசிக்கின்றது." என்ன
உடனே சுவாமிகள் அவர்களை நோக்கி, "நீவிர், மலம்புளிப்பென்றீர்
களே, அதையும் புசித்து அநுபவித்தீர்கள்போலும்" என்றார். அவர்
கள் அதுகேட்டு மிகவுங் கோபங்கொண்டுசூழ சுவாமிகள் அவர்களை
நோக்கி, "நேற்றைக்கு இப்படிப்பட்ட கோபம் நமக்கும் உண்டாயிருக்
குமே?" என்றுசொல்லினார். அப்பொழுது விவேகிகளாகிய அரசன்
முதலாயினோர் அவர்களையடக்கி, சுவாமிகளுடைய புத்தியைவியந்து
புகழ்ந்தார்கள். மூடர்களாகிய அத்துருக்கர்கள் முன்னையினும் மிக்க
பொறாமையுடையவர்களாய் ஒருநாள் அரசனிடத்திலேவந்து, "உமது
நண்பராகிய குமாரகுருபரசுவாமிகள் சாஸ்திரங்களில் வல்லவரேனும்
அவர் கைக்கொண்டதெய்வமோ பொய்." என்றார்கள். அதுகேட்ட
அரசன் அதனைச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ்செய்ய, சுவாமிகள் உண்
மையை யாவருக்கும் வெளிப்படுத்த விரும்பி, அத்துருக்கர்களுடைய
உத்தேசப்படியே காய்ச்சப்பட்ட இரும்பைக்கொணர்வித்து, சைவ
சமயமே மெய்ச்சமயமானால், அச்சமயத்திற்குரிய சிவபெருமானுக்குப்
பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா
என்னும் எட்டுமே திருவுருவமானால், அவ்வெட்டனுள்ளும் அக்கினியே
பிரதானமானால் இது சுடமாட்டாதென்னுங் கருத்தோடு அவ்விரும்
பைத் தமது திருக்கரத்திலே வாங்கியருளினார். அதுகண்ட யாவரும்
அதியற்புதமடைந்து சிவபெருமானே பரம்பொருளென்று தெளிந்து,
சுவாமிகளைத் துதித்தார்கள். பொறாமை யதிகரித்துள்ள துருக்கர்களோ
தங்கள்கருத்து முற்றாமையால் முகம்புலர்ந்து, தலைகவிழ்ந்து நிற்க,
சுவாமிகள் யாதொரு சலனமுமின்றி அரசனுடைய வேண்டுகோளின்
படியே அந்த இரும்பை எறிந்துவிட்டுச் சபையிலே வீற்றிருந்தருளினார்.

பின்னொருநாள் அத்துருக்கர்கள் அரசனையடைந்து, "துறவிகளுக்
குச் சாதிபேதங்கூடாது" என்று சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருத்
தலால் துறவியாகிய குமாரகுருபரசுவாமிகளுக்கு நமது கிருகத்திலே
போசனஞ்செய்விக்கவேண்டும்." எனக்கூறக்கேட்டு, அரசனும் அதற்
குடன்பட்டவனாய்ச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ்செய்ய, அதற்கு



மிசைந்து, தமது வேலைக்காரனொருவனை ஒருதட்டிலே சில செவ்வரத்
தம்பூவைவைத்து ஒரு வெள்ளைப்பரிவட்டத்தினாலே மறைத்துக்
கொண்டுவரும்படி நியமித்துவிட்டு, தாம் முற்சென்று அங்கே தமக்கா
கப் படைக்கப்பட்டிருந்த மாமிசங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே
வினவி, "பன்றிமாமிசம் ஒன்றுமாத்திரம் தவறியதுபோலும்; ஆனால்
அது என்னிடத்திலிருக்கின்றது." என்று சொல்லி, வேலைக்காரன்
கொண்டுவந்த தட்டைவாங்கும்படி கைநீட்ட, அம்மிருகத்தின் பெயரை
யுஞ் சொல்லாத துருக்கர்களோடு அரசனும் வெட்கப்பட்டு அதனைத்
தடுத்தான். சுவாமிகள் அரசனைத் தம்வயமாக்கவிரும்பி, அங்கே படைத்
துள்ள மாமிசங்களனைத்தையும் உற்றுநோக்க; அவைகளெல்லாம், காய்,
கனி, முதலிய பல அரிய தின்பண்டங்களாயின. அதுகண்ட அரசன்
சுவாமிகளை வணங்கித் தனது குறையையிரந்து, "இனி அடியேன்செய்ய
வேண்டிய பணியாது?" என்றுவினவ; சுவாமிகள், "உமது ஆளுகையி
லுள்ள இக்காசிமாநகரத்தில் நாம் எண்ணிவந்த தருமத்தை நடாத்து
தற்கு ஓரிடம்வேண்டும்." என்றார். அரசனும் "தேவரீருக்குப் பிரீதி
யான இடந்தருவேன்."என்று உடன்பட்டான். அன்றிரவு நித்திரைசெய்
யும்பொழுது கேதாரேஸ்வரர் சுவாமிகளுடைய சொப்பனத்திலேதோ
ன்றி, "அன்பனே நீ அரசனிடத்திலே உபயகருடன் வட்டமிடுமிடத்
தைக் கேள்." என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். சுவாமிகள் விழித்
தெழுந்து திருவருளைத்துதித்து, மற்றைநாள் உஷஸ்காலத்திலே கேதா
ரேஸ்வரரைத் தரிசித்துக்கொண்டு வெளியிலேவந்தபோது, அந்தக்
கேதாரகட்டத்தின் அருகில் அரசனுடைய பள்ளிவாசலில் சிவாஞ்ஞைப்
படி உபயகருடன் வட்டமிடக்கண்டு, திருவுளமகிழ்ந்து, அரசனிடத்திற்
சென்று தெரிவித்தார். உடனே அரசன் யாதொருதடையுஞ்சொல்லா
மல், அந்த இடத்தில் ஒரு பெரியமடங்கட்டி, அதிலே தனதுமுகரும்
வைத்து, தத்தஞ்செய்து, அவருக்குவேண்டிய சிறப்புக்களையும் கொடுத்
தான். இதுவே குமாரசாமிமடம் என்று சொல்லப்படுகின்றது.

சுவாமிகள் அத்திருமடத்திலே எழுந்தருளியிருந்துகொண்டு, திரு
மலைநாயகர்கொடுத்த திரவியங்களைக்கொண்டு அவர்பெயரினால் ஒரு சத்
திரங்கட்டுவித்து, தருமபரிபாலனஞ் செய்தமையேயன்றி, கேதாரநாத
ருக்கும் ஆலயமமைத்து, விதிப்படி நித்தியநைமித்திகங்களை ஏற்படுத்தி,
காலந்தோறும் தரிசனஞ்செய்துகொண்டு அத்தலத்திலேயே வசித்திருந்
தனர். ஒருநாள் தமது ஞானாசாரியரைத் தரிசிக்கவேண்டுமென்னும்
அன்பு அதிகரித்தலால் கேதாரநாதரையும் விசுவநாதரையும் தரிசித்துக்
கொண்டு பிரஸ்தானமாகி, இடையிலுள்ள தலங்களைத்தரிசித்து, தரும

புரத்தின் எல்லையையடைந்து, சிவிகையினின்றுமிறங்கி, திருமடத்தினுள்ளேசென்று, ஞானாசாரியரைத்தரிசித்து, வணங்கித்துதித்து, திருவருள்பெற்றுச் சிலநாள் உடன்வசித்து, காசியையடைந்தனர். இங்ஙனம் மூன்றுமுறைவந்து தரிசித்துச்சென்றபின்பு நாலாவதுமுறையிலே ஞானாசாரியருடைய சந்நிதியிலேநின்று, "இனி அடியேனுக்கு எம்பெருமானுடைய தரிசனத்தைவிட்டு நீங்கிக் காசியிலிருக்க மனமில்லை." என்று விண்ணப்பஞ்செய்தனர். அப்போது ஞானாசாரியர் பிரிவாற்றாமையால் வருந்தும் சுவாமிகளை நோக்கி,

"காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலு நமக்கென்ன காணல்ல தோர்கமலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே."

என்னும் கட்டளைக்கலித்துறை யருளிச்செய்து, சொக்கலிங்கமூர்த்தியையும் மீனாட்சியம்மையையும் கிரியாபூசையாக எழுந்தருளப்பண்ணிக் கொடுத்து, திருவருள்பாலித்து விடையளித்தனர். சுவாமிகள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டுவணங்கி விடைபெற்று, அங்கே எழுந்தருளிவிளங்கும் சொக்கலிங்கமூர்த்தியின் சந்நிதியிலே நமஸ்கரித்தெழுந்து, அரிதினீங்கி, காசியையடைந்து, அரிய சிவதருமங்களை யியற்றிக்கொண்டு சிவாநுபூதிச்செல்வராய்ச் சிலகாலம் வீற்றிருந்து வைகாசி மாதத்திலே, கிருஷ்ணபக்ஷ திருதியையிலே, சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்தருளினார்.

குமரகுருபரசுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

இது குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டின் முகவுரையிலிருந்து எடுத்து இங்குவெளியிடப்பெற்றது.

---

## மஹோபகாரம்.

அஃதாவது பெரிய உதவி இஃதென விளக்குதல். இவ்விஷய ஆராய்ச்சியாற் பெறப்படும் பயன் யாதென்னில், தன்னையுணர்ந்து தலைவராகிய சிவபெருமானின் அருட்பிரஸாதம் பெற்றுப் பிறவியொழித்தல் கைகூடப் பெறுதலாகு மென்க. மஹா—உபகாரம்—மஹோபகாரம் என வரும். மஹா—பெரிய; உபகாரம்—உதவி, நன்றி. நிற்க;

### க. உதவிகளின் பிரிவு.

உதவியாவது ஒருதொழிலை முழுதையும் தாமே செய்யும் வல்லமை யில்லார்க்கு வேண்டுஞ் சகாயமாம். [illegible], மேலுலகி



னுள்ளார்க்கும் துணையின்றி ஒரு கர்மமும்முற்றுமை வெளிப்படையாகும். மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் செய்யும் உதவிகள் செய்யாமற் செய்த வுதவியும், காலத்தினாற் செய்த வுதவியும், பயன்றூக்காதுசெய்த வுதவியும் என மூவகையுடையன.

செய்யாமற்செய்த உதவியாவது:—ஒருவன் தனக்கு முன்னொருபகாரமுஞ் செய்யாதிருப்பச் செய்யுமுதவி.

காலத்தினாற் செய்த உதவியாவது:—ஒருவருக்கு ஒருவர் இறுதி வந்தகாலத்திற் செய்யும் அரிய நன்மை.

பயன்றூக்காது செய்த உதவியாவது:—இது செய்தால் இன்னது பின் செய்வான் என்று கருதாது ஒருவன் செய்யுமுதவி.

இம்மூவகையுதவிகளேயன்றி இன்னும் பற்பல பிரிவுகளைக்கொண்ட உதவிகளுமுள்ளன. அவற்றுள், ஒருவர் இது செய்யவேண்டும் என்று கூறுமுன் செய்யுமுதவியும், சொன்னகாலத்தில் மறுக்காது செய்யுமுதவியும், சொன்னகாலத்திற் புரியாது பன்னாட்போக்கிச் செய்யுமுதவியும் முறையே உத்தம உதவி, மத்திம உதவி, அதம உதவி என முன்னோர் நூல்களிற் காணப்படுகின்றன.

உதவிகள் வேண்டப்படுதற்குக் காரணஞ் சர்வவல்லமையின்மையேயாம். இந்த உலகத்திலேயுள்ள சராசரங்களில் விசிட்டமுடைய மானுடர்கள் சிற்றறிவுஞ் சிறு தொழிலுமுடையாராக இருத்தலின், தாந்தாமே எல்லாக்காரியங்களையும் நன்கு செய்யுமாற்றலில்லாதவர்களாக இருக்கின்றார்கள். பிறப்பு இறப்பு இல்லாதவர் கடவுள். பிறப்பும், இறப்பும் என்ற இவைகளால் வருந்துபவர்கள் சீவர்கள். சிவசீவ வேற்றுமை அறிவுடையாரகத்ததாகும்.

### தைத்திரீய உபநிஷதத்தில்.

யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே யேந
ஜாதாநி ஜீவந்தி யத்பிரயந்த்யபி ஸம்விசந்தி।

என்று கூறப்பெறுகின்றது. இச்சுலோகக்கருத்து:—எதனிடத்திலிருந்து (சிதசித்) பொருள்கள் தோன்றினவோ, எதனால் உண்டான பொருள்கள் ஸ்திரம் பெறுகின்றனவோ, எதையாவும் பின்புசென்றடைகின்றனவோ அதையே அறியவிரும்புங்கள்; அஃதே 'பிரமம்' என்பதாம். இதனாலே உலகத்துக்காணப்படுமவைகள் அழியுந்தன்மையுடையன எ

பதும், அழியாதவர் வேதோபபிருங்கணங்களில் "பிரம" சப்தத்தாற் பிரதிபாதிக்கப்படும் சிவபெருமானோ யென்பதும் சூசகமாம். ஆகவே, சிவன் அழிவிலாமையால் அறிவின்னிறைந்த பரம்பொருளைப் பிரார்த்தித்து, அவராற்கிடைக்கும் உதவியைப் பெறவேண்டியது மிக்க ஆவஸ்யகமாகும். தேகத்துடன் வாழும் நாட்களில் நமக்குக் கிடைக்கும் நம்மனோருதவிகள் அவ்விறைவன் திவ்யாநுக்ரஹத்தாலெய்தியனவே! அன்றி, அவ்வுதவிகள் அழிதற்பான்மையனவுமாம். இதனாற் சிறிய உதவிகள் நிலைமையுணர்க.

## உ. பெரிய உதவி.

இனிப்பெரிய உதவி யெதுவெனச் சிந்திக்கற்பாற்று. மேலே கூறிய உதவிகள் போலாது நியந்தாவாகிய ஒருவராற் கிடைப்பதாய், என்றுமுள்ள ஆத்மாக்களின் ஈடேற்றத்திற்கு இன்றியமையாததாய் உள்ள உதவியே பேருதவியாகும். எனவே, கடவுள் இம்மகா வுத்கிருஷ்டமான மாநுஷ்ய ஜன்மத்தைத் தந்ததும், இத்தேகத்தோடு பொருந்தி வாழும் எத்தனை வருஷங்களுண்டோ, அத்தனை வருஷங்களிலும், ஆத்மாவுக்குச் சுகதுக்கங்களைக் கொடுத்துப் புசிப்பிப்பதும், மஹோபகாரமேயாம். துக்கம் மகோபகாரமாகுமா? அறியாது கூறினீர், எனத்தடை நிகழுங்கால்; அவ்விறைவர் ஆன்மாக்களுக்கு நல்வினை தீவினைகளின் பயன்களை அநுபவிப்பித்துச் சிவாநந்தப் பெரும் பேற்றைக்கொடுத்தற்குத் திருவுள்ளமுடைய காருண்யராகலின், அது பொருந்ாதெனமறுக்க. என்னை? தமக்கெனக் கொள்ளாது ஆன்மாக்கள் பொருட்டுக் கொண்ட திருவருளுருவினராகலானென்க.

உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமுமருள் அரன்றன் கரசரணாதி சாங்கந்
தருமரு ளுபாங்கமெல்லாம் தானருள் தனக்கொன்றின்றி
அருளுரு உயிருக்கென்றே யாக்குவன் சித்த னன்றே.

என்பது இவ்வுண்மை விளக்கு முதாரணமாகும்.

இங்ஙனம், அருட்டிருமேனியுடைய ஈசுவரன் பேதங்களாகத் தேகங்களை வகுத்தது வைஷம்யமாகுமே என்னில், அன்று. "சாந்தமுபாஸீத" என்றும், "சாந்தம்பத்மாஸநஸ்திதம்" என்றும் அப்பெருமானை உயர்த்திச் சமஸ்த சாஸ்திரங்களும் உத்கோஷித்தலாலும், தேகத்தொடர்பாளர்களாகிய தந்தைதாயர் முதலினோர் மக்களுக்குக் குற்றந்திற்கேற்ற தண்டஞ்செய்து சீர்திருத்துதல் கண்கூடாக யாவருங் [illegible]ணாக்கூடியதாக விருத்தலாலும், ஆக்மநாதராகிய இறைவர் வஞ்சனை



மையின்றி அநுக்ரஹமாத்திரை யானே பலவித தேகங்களையும், போகங்களையுங் கொடுத்தருளுவாரென்பது இனிது தெளிவாகும். இன்னும், வைத்யர்கள் செய்யுந் தேகசிகிச்சைபோல ஆத்ம "வைத்யநாதராகிய" சிவபெருமானும் மலநோய் நீக்கத் திருவுள்ளங்கொண்டு, இத்தேகத்தையுதவி மகோபகாரம் புரிந்து பெரிய வைத்யநாதராய்த் திகழுகின்றார்.

### பிரமாணம்.

அருளினாலுரைத்த நூலின் வழிவாராதன்மஞ் செய்யின்
இருளுலா நிரயத்திட் டிரும்பவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புண்ணியந்தீர்ப்பன்
மருளுலா மலங்கடீர்க்கு மருந்திவை வயித்தியநாதன்."

## ௩. மகோபகாரரை யடையும் வழி.

இத்தகுதியுடைய மகோபகாரராகிய தூயசிவ பரம்பொருளை யடையும் வழிகள் பலவுள்ளன. அவையிற்றை ஈண்டு விரிப்பிற் பெருகும். சுருக்கிக்கூறுகின்றேன். உயிர் என்பது எல்லாத் தேகங்களிலுமுண்டு என்றும், அவ்வவ்வுயிர்களுடன் ஈசுவரன் வியாபித்து நிற்கின்றார் என்றும், யாவரிடத்தும் அன்பு பாராட்டின் ஈசுவரார்ப்பணமாகும் என்றும், பிறவுயிர்களை வருத்துவது கொடும்பாவமென்றும், ஆன்மா இறைவனுக்கு எப்பொழுதும் அடிமை என்றும் உணர்ந்து தினந்தோறும் பக்தி கொண்டு, புறவழிபாட்டுடன் அகவழிபாடுஞ் செய்தால் மகோபகாரராகிய சிவபெருமானை யடைதல் இலகுவாகும். சிவபரம்பொருளை யடையாதவர்கள் பிறவிப் பயனினையடையாதவர்கள் என்பதுந்தேர்க.

௩. சிவபரம்பொருளை அடைவது ஆவஸ்யகமா? ஆம். என்னை? சர்வசுதந்தரம் ஆத்மாக்களுக்கின்று. ஆனால், ஒவ்வொரு ஆத்மாவும் சர்வசுதந்தர முதல்வனையடையுந் தன்மையுடைய "சித்துப்" பொருளே! ஆகலின், ஆத்மா தன்னை யுணர்ந்து தலைவனைச் சேரவேண்டியதுதான் கடமையாகும். தேகமில்வழி ஆன்மாவென்று தன்னை யறிந்து பரமாத்துமாவை யடையமுடியாது. அதனாலே தேகங்கொடுத்தமை காருண்யமாமாறு தெளிக. இவைகளை யுணர்ந்து மனிதப் பிறப்பிலே புண்ணியங்களைச் செய்து கடவுளைப் பிரார்த்தித்துப் பதிஞானத்தினாலே நாடி அத்வைதமாகவேண்டும். இதுவே பரமோக்ஷமாகும்,

## ௪. பரமசாதனம் பெற்றோர்.

மாநுஷ்ய ஜன்மங்கைவரப் பெற்று விதித்தனபுரிந்த சிவதொண்டர்கள் பரமோக்ஷத்திற்குரியரே. அப்படியானாலும், பண்டைக்[illegible]த

தில், சந்தான குரவர்களும், சமயாசாரிய மூர்த்திகளும், புறப்பூஜையும், இடையீடின்றித் தியானிக்கும் அகவழிபாடும் அதி தீவிரபக்தியோடுஞ் செய்து இறைவனரு நித்யானந்தத்தைப் பெற்றார்கள். சரிதங்களை நூல்களிற் பரக்கக்காணலாம். கண்டு அமைக.

## முடிபுரை.

சில வாக்கியங்களினாலே இதுவரையுங் கூறப்பெற்ற விஷயத்தின் முக்யசாராம்சம் வருமாறு:—மனிதர்கள் செய்யுமுபகாரத்திலும்பெருப காரங் கடவுளாற் செய்யப்படும் உபகாரம் என்பதும், கடவுளருளில்லா விட்டால் நாம் யாதுஞ் செய்யமுடியாதென்பதும், மகோபகாரத்தைச் சிந்தித்து வந்தித்து அவரநுக்ரஹ சதானந்தத்தைப்பெற முயற்சிப்பது முக்கிய தர்மமாகும் என்பதும் பிறவுமாம். சுபமஸ்து.

குறிப்பு:—இவ்வியாஸம்; யாழ்ப்பாணம் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் வருஷ நிறைவு விழாக் கொண்டாட்டகாலத்தில், மாத்தளை விவேகானந்தசபைப் பிரசாரகரும், ஹிந்துபாடசாலை ஆசிரியரும் ஆகிய யாழ்ப்பாணம் தமிழ்ப்பண்டிதர் பிர்மஸ்ரீ வ-மு-இரத்தினேசுவரையரவர்களால் சுருக்கி எழுதிப் படிக்கப்பெற்றதாகும்.

இவரால் ஷை பாடசாலையில் "சமயஉண்மை" என்னும் விஷயமும் சமீபகாலத்தில் மிகவிரிவாய், இருநூற்பிரமாணங்களோடு பிரசங்கஞ் செய்யப்பட்டது.

கண்டுகளித்தேன்.

## தத்துவார்த்த ஆராய்ச்சி.

இக்காலத்தவர் பலர் தங்களுக்குக் கல்வியறிவொழுக்கங்க ளில்லாவிட்டாலும் தத்துவார்த்தவாராய்ச்சியில் தேர்ந்தவர்களைப்போல் பேசுகிறார்கள். இவர்கள் தங்களைப் பேரறிவாளரென மதித்துச் சரியைகிரியைகளும் புராணங்களும் கோயில்களும் மந்தமதியினர் பொருட்டு உண்டாக்கப்பட்டன வென்கின்றார்கள். இவைகளுக்குத் தங்கள் மனஞ் சென்றவாறெல்லாம் தத்துவார்த்தங்களைக் கற்பித்துக் கூறுகிறார்கள். இவர்கள் அவ்வாறு கூறுவனவற்றுள் ஒன்றை இப்போது எடுத்துக் காட்டுவோம். தம்மை வேதாந்தியென்று சொல்லிக்கொண்ட ஒரு மாயாவாதியார், அறுமுகக்கடவுள் ஒருவர் உண்டு என்பதும், அவர் சரவணப் பொய்கையில் அவதரித்தார் என்பதும், அவருக்கு ஆறுமுகங்களும், இரண்டு தேவிமார்களும், வேலாயுதமும், மயில்வாகனமும், சேவற்கொடியும் உண்டு என்பதும், அவர் வேலாயுதத்தால் சூரபத்மன் சிங்கமுகன் தாரகன் என்னும் அசுரர் மூவரைச் சங்கரித்தார் என்பதும்,



ஆகிய இவையெல்லாம் தத்துவஞானம் அறியமாட்டாத மூடர்கள் பொருட்டுக் கந்தபுராணத்திற் கட்டிக்கூறிய கதையாம் என்றும். கடவுள் ஷாட்குணியர், அதாவது முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கை யுணர்வு, தன்வயம், பேரருள் வரம்பிலாற்றல் என்னும் ஆறுகுணங்களையுடையவர் என்பதற்குப் பதிலாக அவர் ஆறுமுகங்களையுடையவரெனவும், அவர் ஞானிகளின் நீர்மையுடைய உள்ளத்தில் வசிப்பவர் என்பதற்குப்பதிலாக நீரையுடைய சரவணப்பொய்கையில் அவதரித்தனரெனவும், அவரிடத்தில் இச்சையும் கிரியையுமாகிய இரண்டு சத்திகளுண்டு என்பதற்குப் பதிலாக வள்ளியம்மை தெய்வயானை யென்னும் இரண்டு மனைவிமார்கள் அவருக்குண்டு எனவும், அவர் மாயையடக்கி ஆள்பவர் என்பதற்குப்பதிலாக அவர் மயில் ஊர்பவர் எனவும், அவரையடைபவர் ஞானத்தால் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்கள் நீங்கி முத்தியடைவர் என்பதற்குப்பதிலாக, அவரைத் தேவர்கள் சரணடைய அவர் சூரபத்மாளுதி மூவரைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்தருளினார் எனவும் கந்தபுராணத்தில் புனைந்து கூறப்பட்டது என்று பிரசங்கித்தனர். இப்பிரசங்கத்தைக்கேட்ட சைவர்கள் சிலரும் அதனால் மயங்கி அவரைத் தலைகீழாய்த் தத்துவ வாராய்ச்சி செய்தவர் என்று கொண்டாடினார்கள். இவ்விதப் பிரசங்கங்களைச் சனங்கள் பலர் மிகவும் அருமைபாராட்டிக் கேட்பதனால் சைவப்பிரசங்கிகளுள்ளும் சிலர் இவ்விதமான ஆபாசப்பிரசங்கங்களைச் செய்கிறார்கள். சைவப்பிரசாரகர் என்று வெளிவந்த ஒருவர்,

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கண்
முப்புரமாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறிவாரே.

என்னும் திருமந்திரத்தை யெடுத்துக்கூறி, திருபுரதகன சரித்திரம் ஒரு காலத்திலும் நடைபெற்றதன்று என்று பிரசங்கித்தனர். இவ்வாறு பலர் இக்காலத்தில் எவற்றிற்கும் தத்துவார்த்தங்களைச் சொல்வதனாலும், அவைகளைக் கேட்டுப் பலர் மயங்குவதனாலும், நாம் இப்போது வெளியிட்டு வரும் சிதம்பரதத்துவார்த்தம் என்னும் விஷயத்தைப் படித்து யாரேனும் எல்லாவழிபாட்டிலும் சிறந்த சிதம்பர வழிபாட்டைக் கைவிடக் கூடுமென்று அஞ்சி, தத்துவார்த்த வாராய்ச்சியென்னும் இவ்விஷயத்தைத் தொடங்கினேன்.

நம்முடைய தேவாலயங்களும், அவைகளிற் பிரதிட்டிக்கப்படும் மூர்த்தங்களும், அநுட்டானங்களும், பற்பல தத்துவார்த்தங்களை விளக்கிக்கொண்டிருப்பது உண்மையே. அவைகளில் தத்துவார்த்தங்கள் பொதிந்திருப்பதை ஒருவன் அறிந்த மாத்திரத்திலேயே ஆலயவழிபாடாதிகள் கைவிடப்படுவனவன்று. நம்முன்னோர்கள் ஆலயங்கள் முதலாயினவற்றைத் தங்கள் மனம்போனபடியெல்லாம் உண்டாக்கவில்லை. அன்றி

னுள்ளது பிண்டத்திலும் இருத்தல்போல், அண்டபிண்டம் இரண்டிலும் உள்ளனவற்றை ஆலயங்கள் வாயிலாக விளங்குமாறு ஆலயங்களையமைத்தார்கள். புராணங்களிலுள்ள திருவிளையாடல்களும், சித்தாந்த ஞான நூற்பொருள்களும் விளங்குமாறு விக்கிரகங்களை யமைத்தார்கள். அவைகள் அவ்வாறு அமைக்கப்பட்டமையால் ஆலயவழிபாடாதிகளை யநுசிதமென ஒதுக்குதல் விவேகிகளின் செய்கையாகாது. பஸ்மதாரணத்தால் பரமுத்தியுண்டாகும் என்று வேதாகமங்கள் கூறுகின்றன. அதை விசுவசித்துப் பெரியோர்கள் தொன்றுதொட்டுப் பஸ்மதாரணஞ் செய்து போகமோட்சங்களைப் பெறுகிறார்கள். பஸ்மதாரணத்தினாலறியப்படும் ஞானார்த்தங்களும் உண்டு. அந்த ஞானார்த்தங்களை ஒருவன் அறிந்து கொள்ளுவானாயின் அவனுக்குப் பஸ்மதாரணம் அநாவசியமாகுமா? ஒருபோதும் ஆகாது. ஒருவன் பஸ்மதாரணத்தின் தத்துவார்த்தங்களை யறிந்துகொள்வானாயின் அவனுக்குப் பஸ்மதாரணத்தில் அன்புமேலிடுமேயன்றிக் குறைவுபடாது. அவ்வாறே சிவாலய முதலியவைகளில் பொதிந்திருக்கும் தத்துவார்த்தங்களை ஒருவன் உண்மையாய் உணரப் பெறுவானேல் அவனுக்கு அச்சிவாலய முதலியவைகளில் அன்பு முறுகி வளருமேயன்றி ஒரு சிறிதும் குறைவுறாது. அதுபற்றியே, சர்வ சங்கபரித்தியாகஞ் செய்த பெரியோர்களும் பஸ்மதாரணம் சிவாலய சேவையாதிகளை மறந்துங் கைவிட்டாரல்லர்.

(இன்னும் வரும்.)

---

## சிறந்த விண்ணப்பம்.

### வைதிக சைவ அச்சுக்கூடம்.

இவ்வச்சுக்கூடம் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் நிகழும் மே௴ தாபிக்கப்பெறும். இரங்கூனிலிருந்து ஸ்ரீமான் செவு-சித-சொக்கலிங்கம் செட்டியாரவர்களும், ஸ்ரீமான் மெ-செ-மெ-மெ-இராமநாதன் செட்டியாரவர்களும் செய்த பேருபகாரத்தால் சைவ சமயம் தழைத்தற்கெனச் சைவ சமயிகளுக்கெல்லாம் உரிமையுடைய இவ்வச்சுக்கூடம் நிலைபேறடையும். இதுவரையில் இதற்காகச் சேர்ந்திருக்கும் ஆயுள் சந்தா ரூபா 1100. இப்போது வேண்டிய அளவுக்குத்தக்க அச்சுக்கூடம் வைத்துக் கொள்வதற்குக் குறைந்தபட்சம் 2000-ரூபா வேண்டும்; ஆகலால் மெய்யன்பர்கள் உரிமைபாராட்டி உடனே கூடுமான உதவிகளைச் செய்யப் பிரார்த்திக்கின்றேன். அடுத்த ஜூன்மாதப்பத்திரிகை வெளிவரச் சிறிதுதாமதமாகக்கூடும்.

இ. ஆதிமூல முதலியார்,
(ப-ர்.)

---

பிழைதிருத்தம்:— இவ்விதழில் 78-வது பக்கத்தில், 11-வது வரியில் "சிதம்பர மும்மணிக்கோவை" என்பதை "சிதம்பரச் செய்யுட்கோவை" என்று திருத்துக.

THE REGISTRAR OF ... REGISTERED 20 AUG 1917 ... MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3.] | பிங்கல௵ ஆனி, ஆடி௴-ஜூன், ஜூலை௴ | [இதழ் 6-7.

மதிவளர்சடைமுடிமன்றுளாரைமுன்
துதிசெயுநாயன்மார்தூயசொன்மலர்
பொதிநலனுகர்தருபுனிதர்பேரவை
விதிமுறையுலகினில்விளங்கிவெல்கவே.

---

## சிவஞானபோதம்.

### மூன்றாஞ்சூத்திரம்.

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா.

உலகத்திற்கு நிமித்தகாரணமாகிய பதிப்பொருளுண்டென்பதை முதற் சூத்திரத்தினால் விளக்கி, அருட்சத்தியும் மாயையுமாகிய துணைக்காரண முதற்காரணங்களதுண்மையையும், அவற்றால் உலகங் காரியப்படுமாறும் இரண்டாஞ் சூத்திரத்தால் விளக்கி, அவற்றாலாயபயனை யடைதற்குரிய ஆன்மாக்களின் உண்மையை இம் மூன்றாஞ் சூத்திரத்தால் விளக்குகின்றார்.

(இ-ள்) இலது என்றலின் ஆன்மா உளது—இல்லை என்று சொல்லுதலால் (அவ்வாறு சொல்லும்) ஆன்மா உளது.— எனது உடல் என்றலின் உளது=எனது உடம்பு என்று கூறுதலால் (உடம்புக்கு வேறாக) ஆன்மாவுளது.—ஐம்புலன் அறிதலின் உளது=ஐம்புலன்களை (வேறாக) அறிதலால் (அவற்றிற்கு வேறாக) ஆன்மா உளது.—ஒடுக்கம் அறிதலின் உளது=ஐம்புலன்களும் ஒடுங்கின சொப்பனத்தானத்தில் நிகழ்ந்தவற்றை யறிதலினால் ஆன்மா

வேறுண்டு.—கண்படில் உண்டி வினையின்மையின் உளது=நித்திரையில் (இன்பத்துன்ப) அநுபவமும், (உடம்பின்) சேட்டையும் (பிராணவாயுவுக்கு இல்லாமையால் (அதற்கு வேறாக) ஆன்மா உளது.—உணர்த்த உணர்தலின் உளது=அறிவிக்க அறிதலால் (மறந்து மறந்து அறிதலின்றி அறிந்தவாறே அறிந்து நிற்கும் பிரமத்திற்கு வேறாக) ஆன்மா உளது.—மாயா இயந்திர தனுவினுள் உளது—மாயாகாரியங்களால் ஆக்கப்பட்ட சூத்திரப்பாவைபோலும் உடம்பின்கண்ணே (எல்லாம் கூடிய சமுதாயத்திற்கு வேறாக) ஆன்மா வுளது (எ-று.)

## மூன்றாஞ்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

க-வது—இலதென்றலின் ஆன்மாவுளது.
உ-வது—எனதுடலென்றலின் ஆன்மாவுளது.
ங-வது—ஐம்புலனறிதலின் ஆன்மாவுளது.
ச-வது—ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளது.
ரு-வது—கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மா உளது.
சா-வது—உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது.
எ-வது—மாயா வியந்திர தநுவினுள் ஆன்மாவுளது.

இவ்வேழு அதிகரணங்களால் சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமுகான்மவாதி என்னும் எழுவர் மதங்களையும் முறையே மறுத்து உயிருண்மை சாதிக்கப்படுகின்றது.

## மூன்றாஞ்சூத்திரத்தின் சூர்ணிகை.

க-வது—இல்லையென்கின்ற அறிவுடனே சொல்லுகையினாலே யுயிருண்டு.

உ-வது—எனதுடல் என்று பொருட் பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே யுயிருண்டு.

ங-வது—ஐந்தையும் ஒருவனே யறிதலின் ஒவ்வொன்றை மாத்திரமறிகின்ற ஐந்திற்கும் வேறாய் உயிருண்டு.

ச-வது—கனவுடலைவிட்டு நனவுடலிலே வருகையினாலே அக்கனவுடற்கு வேறாய் உயிருண்டு.

ரு-வது—நித்திரையிலும் பிராணவாயு தொழில் பண்ணவும், சரீரத்திற்குப் புசிப்பும் தொழிலுமில்லாதபடியினாலே பிராணவாயுவுக்கு வேறாயுயிருண்டு.



சா-வது—மறந்து மறந்து நினைக்கின்றபடியினாலே மறவாமலிருக்கிற வரனுக்கு வேறாயுயிருண்டு.

எ-வது—எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்தத் தத்துவங்களுக்கு வேறாயுயிருண்டு.

## மூன்றாஞ்சூத்திரத்தின் வார்த்திகம்.

க-வது—உண்டு இலதென்றலின் ஆன்மா வுளதென்றது. எவற்றையும் அன்றன்றெனவிட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாதலின் அதுவே அவ்வான்மாவா மென்றது.

உ-வது—இனி எனதுடலென்றலின் ஆன்மா வுளதென்றது. என்பதி என்மனை என்றாற்போல என்கை என்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது.

ங-வது—இனி ஐம்புலனறிதலின் ஆன்மாவுளதென்றது. ஐம்புலனாகிய சத்தப்பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின், இவ்வைந்தினாலும் ஐம்புலனுமறிவதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

ச-வது—இனி ஒடுக்கமறிதலின் ஆன்மா வுளதென்றது. நனவின்கட் கனவுகண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது.

ரு-வது.—இனிக் கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா வுளதென்றது. ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியா நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது.

சா-வது—இனி உணர்த்த வுணர்தலின் ஆன்மாவுளது என்றது. அவன் அறிந்தாங்கறிவனென் றறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது.

எ-வது—இனி மாயாவியந்திர தநுவினுள் ஆன்மாவுளதென்றது. அவை தாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

---

இச்சூத்திரத்தின் அதிகரணவெண்பாக்கள் ஏழு.

## சாக்கியநாயனார் புராணம்.

தகடன வாடையன் சாக்கியன் மாக்கற் றடவரையின்
மகடனந் தாக்கக் குழைந்ததிண் டோளர்வண் கம்பர்செம்பொன்
நிகழ்தரு மேனியிற் செங்க லெறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவ னூர்சங்க மங்கை புவனியிலே.

திருச்சங்கமங்கையிலே, வேளாளர் குலத்திலே உதித்த ஒருவர் சனனமரணத்துன்பங்களை நினைந்து நினைந்து கவலைகொண்டு, அவைகளினின்று நீங்குநெறி யாது என்று ஆராய்வாராயினார். அந்நாளிலே காஞ்சிபுரத்தை அடைந்து, பௌத்தர்களை அணுகி, அவர்கள் அநுட்டிக்கும் பௌத்தசமயத்திலே பிரவேசித்து, அச்சமய நூல்களை ஓதி, அவற்றின் பொருள்களை ஆராய்ந்தார். ஆராய்ந்தபொழுது, அச்சமயம் சற்சமயமன்றென்பது அவருக்குத்தெள்ளிதிற்புலப்பட்டது. அதுபோல மற்றைச் சமயநூல்களும் ஆராய்ந்து அவைகளும் மெய்யல்லவெனத் தெளிந்து, பரமசிவனது திருவருள் கூடுதலால், அறிவிக்க அறியும் சித்தாகிய ஆன்மாக்களும் அவ்வான்மாக்களினாலே செய்யப்படுஞ் சடமாகிய புண்ணியம் பாவம் என்னுங் கர்மங்களும் அக்கர்மங்களாலே பெறப்படுஞ் சுகம் துக்கம் என்னும் பலங்களும் அப்பலங்களைக்கொடுக்கின்ற தானே அறியுஞ் சித்தாகிய பதியும் எனப் பொருள்கள் நான்கு என்றும், அவைகளைப் பூர்வோத்தரவிரோதமின்றி யதார்த்தமாக உணர்த்தும் நூல் சைவசமயநூலே என்றும், அந்நூல் உணர்த்தும் பதி பரமசிவனே என்றும், அறிந்துகொண்டார். எந்தநிலையிலே நின்றாலும் எந்த வேஷத்தை எடுத்தாலும் பரமசிவனுடைய திருவடிகளை மறவாமையே பொருள் என்று கருதி, தாம் எடுத்த பௌத்தவேஷத்தைத் துறவாமல், சிவபெருமானை மிகுந்த அன்பினோடு இடைவிடாது தியானஞ்செய்வாராயினார்.

சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கர்மசாதாக்கியம் என்னும் பஞ்சசாதாக்கியங்களுள், கர்மசாதாக்கிய சிவலிங்கத்தின் மகிமையை உணர்ந்து, தினந்தோறும் சிவலிங்கதரிசனஞ் செய்துகொண்டே போசனம் பண்ணல்வேண்டும் என்று விரும்பி, சமீபத்தில் ஓர்வெள்ளிடையிலிருக்கின்ற சிவலிங்கத்தைத் தரிசித்து, பேரானந்த[illegible]ள்ளவராகி தாஞ்செய்யுஞ் செயல் இதுவென அறியாது, அரு[illegible]டந்த ஒரு



செங்கல்லைக் கண்டு, அதைப்பதைப்பினுடனே எடுத்து, அச்சிவலிங்கத்தின்மேல் எறிந்தார். சிறுபிள்ளைகள் செய்யும் இகழ்வாகிய செய்கைகளும் தாய் தந்தையர்களுக்குப் பிரீதியாமாறுபோல, அந்தச் சாக்கியநாயனாருடைய செய்கையும் பரமசிவனுக்குப் பிரீதியாயிற்று. அந்நாயனார் அன்றுபோய் மற்றைநாள் அந்நியமத்தை முடித்தற்கு அணைந்தபொழுது, முதனாளிலே தாஞ்சிவலிங்கத்தின்மேற் கல்லெறிந்த குறிப்பை நின்று ஆலோசித்து, "நேற்று எனக்கு இவ்வெண்ணம் வந்தது பரமசிவனது திருவருளே" என்று துணிந்து, அதனையே திருத்தொண்டாக நினைந்து, எப்பொழுதும் அப்படியே செய்யக் கருதினார். எல்லாச்செயல்களுஞ் சிவன்செயல் என்றே தெளிந்தமையால், அந்நியதியைத் தினந்தோறும் வழுவாமல் அன்பினுடன் செய்ய, அது ஆன்மாக்களோடும் வியாபித்திருந்து எல்லாவற்றையும் உணருஞ் சிவபெருமானுக்கு மிகச்சிறந்த திருத்தொண்டாகி முடிந்தது. ஒருநாள் அந்நாயனார் திருவருளினாலே மறந்து போசனஞ்செய்யப் புகும்பொழுது, "இன்றைக்கு எம்பெருமானை எறியாமல் மறந்துவிட்டேன்" என்று எழுந்து, அத்தியந்த ஆசையுடன் மிகவிரைந்து புறப்பட்டு, சிவலிங்கத்தை அணைந்து, ஒரு கல்லை எடுத்து அதன்மேல் எறிய, பத்திவலையிற்படுவாராகிய சிவபெருமானார் உமாதேவியாரோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றி அவரைத் தமது திருவடியிலே சேர்த்தருளினார்.

சாக்கியநாயனார்புராணம் முற்றிற்று.

## திருநந்திதேவர் சரித்திரம்.

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

முற்காலத்தில், இப்பரதகண்டத்தில், மாஹேஸ்வரம் என்னுமோர் பர்வதத்தில், மா, பலா, முதலிய பல்விருக்ஷங்களாலும், நறுமணங்கமழும் அழகிய நாண்மலர்களின் இனிய மகரந்தங்கள் சிதறவீசும் மந்தமாருதத்தாலும், இருடிகள், முனிவர், சித்தர் முதலாயி

ஞேர்சென்று தீர்த்தமாடும் திவ்விய தடாகங்களினுலும் மிகச்சிறந்து
விளங்கிய வனமொன்றினில், சிலாதர் என்னும் முனிபுங்கவரொரு
வர், தமது பணியிற்றவறாத பத்தினியோடு வசித்திருந்தனர். அவர்
காய், கனி, சருகு முதலிய சாத்துவிக உணவையே யருந்தி, நாடோ
றும் தமக்குரிய நித்திய நியமங்களையும், அக்கினிஹோத்திரம்,
அதிதிபூசை முதலியனவுகளை வழுவின்றி இயற்றியும்; பஸ்மருத்தி
ராக்கங்களை இடையறாது தரித்து உழுவலன்போடு சிவலிங்கார்ச்
சனை செய்தும், வைதிகநெறி சைவநெறி இரண்டினையும் கடைப்
பிடித் தொழுகுவாராயினர்.

அவர் அவ்வாறொழுகுநாளில், ஓர் நாள் சித்திரவதியார் எனப்
பெயரிய அவர் பத்தினியார் நெடுங்காலமாகத் தமக்குப் புத்திரப்
பேறில்லாக் குறையை நினைந்து வருந்தி, தமது கணவனையர வணர
ங்கிப் பின்வருமாறு கழறுவாராயினர். "என் பிராணநாதரே,
என்மனதில் நெடுநாளாகக் குடிகொண்டிருக்குமொரு விருப்பத்தை
இப்போது தேவரீரிடம் விண்ணப்பஞ் செய்கின்றேன். அசட்டை
செய்யாமல் அங்கீகரித்தருளவேண்டும். அது யாதெனில், நமக்குப்
புத்திரப்பேறில்லாக் குறையை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டு
மென்பதே. புத்திரரில்லாதவர்களின் வாழ்க்கை உலக நிந்தனைக்
கிடமாயிருக்கிறது. கோடி கோடியாகப் பொருட்செல்வமிருந்தா
லும் புத்திரச்செல்வம் ஒன்றில்லா தமனை பாழ்மனையேயாம்."

பொன்னுடையரேனும் புகழுடையரேனு மற்
றென்னுடையரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ்செய்யவாய்
மக்களையிங்கில்லாதவர்.

"சற்புத்திரரில்லாதவர்களுக்கு நற்கதியில்லை யென்று நூல்கள்
கூறுகின்றன. ஆதலால் இக்குறை நீங்குமாறு நாம் வேண்டுவார்
வேண்டுவதே யீயும் விமலனை நோக்கித் தவஞ்செய்தல் வேண்
டும்" என்றனர். அவ்வாறு மொழிந்த தமது மனைவியாரின் வேத
னாவிந்தத்தை நோக்கிச் சிலாதமுனிவர், "பாவாய், உலகத்தில்
மக்கட்பேற்றிற் பெரும்பேறில்லை யென்பதும், புத்திரரில்லாருக்குக்
கதியில்லை யென்று நூல்கள் நவிலுவதும் உண்மையே. உத்தம
புத்திரரால் உயர்கதியும் புகழும் உண்டாவதுபோல் அதமபுத்திர
ரால் அதோகதியும் அபகீர்த்தியும் உண்டாவது நிச்சயமேயா



லும்" என்றனர். அதைக்கேட்டுச் சித்திரவதியார் சற்று நிதானி
த்து, மீண்டும் தமது பர்த்தாவைப்பார்த்து, "சுவாமி, இடையில்
எனக்கொரு சந்தேகம் தோன்றுகிறது. தாம் தாம் செய்த வினை
தாமே யனுபவிப்பர் என்று நூல்கள் கூறுகின்றனவே. அவ்வா
றிருக்கவும், புத்திரபௌத்திரர்கள் செய்யும் வினைகள் தாய்தந்தை
பாட்டன் முதலியோர்களை யெங்ஙனம்சென்றடையும்" என்றனர்.
முனிவர், "பெண்ணே, குடும்பச்சேற்றிலழுந்தி, மனைவிமக்களிடத்
தில் பற்றுவைத்து இறப்பவர்களுக்கே மக்கட்பேற்றால் இம்மை
யில் மாத்திரமன்றி மறுமையிலும் இன்பத் துன்பங்களுண்டாம்.
இருவகைப்பற்றும் விட்டு இறைவன் இணையடிப் பற்றையே பெரும்
பற்றாகப் பற்றி நிற்பவர்களை புத்திரபௌத்திரர் முதலாயினோர்
செய்யும் இருவினைகள் சென்றடையா. உலகத்தில் புத்திரர்களை
நன்னெறியிற் செலுத்துதல் பிதா மாதாவின் கடமையாகவும், மனை
வியைக் கற்புநெறியில் நிறுத்துதல் கணவனின் கடமையாகவும்,
குடிகளை நல்வழியில் நடத்துதல் அரசன் கடமையாகவும் இருத்த
லால் இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்யாதொ
ழியின் பாவத்திற் காளாவர். இதுபற்றியே பிள்ளைகள் செய்யும்
புண்ணிய பாவங்களால் பெற்றோர்களுக்கு இன்பத்துன்ப முண்
டாம் என்று நூல்கள் கூறுகின்றன" என்றனர். சித்திரவதியார்
பின்னும் தமது கணவனரைப் பார்த்து "சுவாமி, தேவரீர் அருளிச்
செய்தவாறே, ஐம்புலன்களாரவுண்டு, காமவிகாரங்கொண்டு, பெண்
களைக்கூடி, புதல்வரையீன்று, சமுசாரசாகரத்தில் வீழ்ந்து கரை
யேறாமல் மடிகின்றவர்களுக்கல்லவோ தீயபுத்திரர்கள் பிறப்பதும்
அதனால் துன்பம் விளைவதும். இருவகைப்பற்றும்விட்டு இறைவன
ரிணையடிப்பற்றை இறுகப்பற்றி உலகத்தோடொட்டி வாழ்ந்தும்
தாமரையிலைநீர்போல் தொடக்கின்றியிருந்து, அன்பும் அரு
ளும் தாங்கி, முகமலர்ந்து இன்சொற் கூறி விருந்தோம்பி, விதிப்
படி பிரமயாகம், தேவயாகம், பிதுர்யாகம், மானுடயாகம், பூத
யாகம் என்னும் ஐவகைவேள்விகளையுமாற்றி, பிறன்மனை நயவா
மல், மங்கலமாகிய மனையறத்திற்கு நன்கலமாகிய நன்மகப்பேறு
வேண்டி, நூல்கள் வரையறுத்த நன்னாளதனில், நற்குணம் நிறைந்த
கற்புடை மனைவியைக்கூடி வாழ்பவர்களுக்குத் தீயபுத்திரர் பிறப்
பதும் அதனால் துன்பம் விளைவதும் உண்டோ, இல்லை. இல்லை.
ஆதலால் தேவரீர் உலகம் அஞ்ஞானத்தினின்றும் நீங்கி உய்யுமாறு

ஓர் சற்புத்திரனை வேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தல் வேண்டும். தவத்தாற் கிடைக்காத பொருள் ஒன்றுமில்லை. தவத்தால் நினைத்தவெல்லாம் பெறலாம். சற்புத்திரப்பேற்றைநோக்கி நாம் செய்யும் தவமானது நமக்குமாத்திரமன்றி சகலான்மகோடிகளுக்கும் பிரயோசனகரமாயிருக்கும்'' என்றனர். சிலாதர் "பெண்ணே, உன் உள்ளத்திலெழுந்த விருப்பம் லோகோபகாரமானது. ஆதலால் உலக உச்சீவனார்த்தமாக நான் கடுந்தவஞ்செய்து உயர்வொப்பில்லாததோர் புத்திரனைப் பெறுவேன்; நீ கிலேசப்படவேண்டாம்'' எனறுகூறி, தவஞ்செய்யத் தொடங்கி பஸ்மோத்தூளித விக்கிரகராய், உருத்திராக்கமணிபூண்டு, ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உச்சரித்தும், உருத்திரத்தை ஆவர்த்திசெய்தும், சிவலிங்க பூசைசெய்தும், கனி கிழங்கு சலமுதலியவற்றை முறையே ஓரோர் வருடம் புசித்து மனவாக்குக் காயங்களை யடக்கிச் சிவபெருமான் திருவடிகளில் சித்தத்தை இலயிக்கச்செய்தும், பின்னர் காய் கனியாதிகளையும் விட்டுக் கல்லையே பத்துவருடம் புசித்தும், அருந்தவஞ்செய்தனர். சிவபெருமான் அவரது தவத்திற்குமெச்சி, உமாசகாயராய், அரிபிரமாதி தேவர்கள் தம்மைச்சூழ்ந்து வணங்கிவர, அவர்முன் தோன்றியருளினர். அம்முனிவர் பெருமான் சிவபெருமானைத் தரிசித்து, பேரானந்தமடைந்தவராய், வேதவசனங்களால் வாயாரத்துதித்து நிற்க, இறைவனார் களிகூர்ந்து, அம்முனிபுங்கவரை நோக்கி, "ஓ தவசிரேஷ்டனே, நீவிரும்பிய வரத்தைக்கேள்'' எனலும், அவர் "எம்பெருமானே, மனோவாக்குக் காயங்களாலும் வேதங்களாலும் எட்டப்படாத தேவரீரைத் தரிசித்தமாத்திரத்திலேயே அடியேன் சகலமும் பெற்றவனானேன். அடியேனுக்குத் தேவரீருடைய பாததாமரைகளையன்றி வேறொன்றையும் விரும்பாத உழுவலன்புவேண்டும். உலகத்திலுள்ள அஞ்ஞானமாகிய இருளையகற்றிச் சிவஞானமென்னும் ஒளியைப் பரப்பி அடியேனுடைய மனையறத்தைப் புனிதமாக்கும் ஓர் புத்திரன் வேண்டும்,'' என்றனர். சிவபெருமான் புன்முறுவல் செய்து, "முனிவனே நீ சர்வ தேவஸ்வரூபனும் வேள்விநாயகனும் வேதநாயகனு மாகிய என்னைக்குறித்து யாகஞ்செய்யத் தொடங்குவாய். நீ அந்த யாகசாலையினிமித்தம் பூமியை உழும்பொழுது அவ்விடத்தில் அயோநிஜனாகிய ஓர் சத்புத்திரன் கிடைப்பான். அவன் எனக்குச் சமானமானவன். ஓ தவசிரேஷ்டனே நீ கல்லைப்புசித்துத் தவஞ்செய்த



மையால் மகாயோகியாய் சிலாதனென்னும் பெயரோடு வாழ்ந்து சிலநாட்சென்று நம்முலகில் கணாதிபனாயிருக்கக்கடவாய்'' என்றருளி மறைந்தனர். முனிவர் தமக்குக் காட்சிதந்தருளிய இறைவனாருடைய திருவுருவத்தை நினைந்து பரவசமுற்று திக்குநோக்கிப் பலமுறை பூமியில்வீழ்ந்து வணங்கித் தமதிருப்பிடஞ்சென்று, யாகத்திற்குவேண்டிய சம்பாரங்களைச் சேகரிக்கத் தொடங்கி அறவோர்களாகிய அந்தணர்களுடன் ஆலோசித்து, வைநசவாலகில்யர்களை ருத்விக்குகளாகவும், குணி என்பவரைப் பிரமாவாகவும், பார்க்கவரை ஹோதாவாகவும், தும்புருவை உத்காதாவாகவும், அநமித்ரரைச் சதசியராகவும் கொண்டு, அன்னதானம் சொன்னதானம் முதலிய தானமாரி பொழிந்து, நான்கு நாள் தீக்ஷா நியமத்துடனிருந்து, பின்னர் சுபமுகூர்த்தத்தில் யாகஞ்செய்தற்குரிய பூமியைக் கலப்பையால் உழும்பொழுது, அக் கலப்பைவாயினிடம் பொன்மயமாகிய வோர்பெட்டி கிடைத்தது. அதனை யளவற்றகளிப்போடெடுத்துச் சதசியரிடங் கொண்டுபோய்த் திறந்தனர். திறக்கவும், அதனுள் திவ்வியாபரணங்கள் விளங்க, கோடி சூரியரைப்போல் பிரகாசிக்கும் ஓர்குழந்தை யிருக்கக்கண்டு பரமாச்சரியமும் பரமானந்தமுமடைந்து, தமது பத்தினியாருக்கும் அங்கு நிறைந்திருந்த ருத்விக்குகளாகிய முனிசிரேட்டர்களுக்குங் காட்டினர். முனிசிரேஷ்டர்கள் அவரைப்பார்த்து "ஓமுனிபுங்கவரே, இக்குழந்தை உங்களுக்குச் சிவபெருமானால் கொடுத்தருளப்பெற்றதாகும். உங்களுடைய பாக்கியமே பாக்கியம். உங்களுடைய தவமே தவம்'' என்று புகழ்ந்தார்கள். அரிபிரமாதிதேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள். தேவதுந்துபி முழங்கிற்று. இவ்வைபவங்களைச் சிலாதமுனிவர்கண்டு உடல் பூரித்து, அக்குழந்தையை யிருகைகளாலுமெடுத்து மார்போடணைத்து, பத்தினியாரிடம்கொடுத்து ஸ்தன்யபானஞ்செய்வித்து, பின்னர் சாதகர்மமுதலிய சடங்குகளை முறையே நடத்தி, கோதானம் பூதானம் சுவர்ணதானமுதலிய தானங்களைச்செய்து, அங்கு வீற்றிருந்த பிரமன் இந்திரன் முதலிய சகலதேவர்களையும் முறைப்படி பூசித்து நின்றனர். அப்பொழுது பிரமதேவர் இந்திரனைப்பார்த்து "இப்புதல்வன் யாவருக்கும் ஆனந்தமளிப்பவனாகையால் நந்தீசன் என்று அழைக்கப்பெறுவான்'' என்றனர். முனிவர்கள் இக்குழந்தை சிலையையருந்தித் தவஞ்செய்தவரின் புதல்வனாகையால் சைலாதி

உ

யென்றும் அழைக்கப்படுவான் என்றார்கள். இவ்வாறு யாவரும் அக்குழந்தைக்கு நந்தீசன் என்றும் சைலாதி என்றும் நாமகரணஞ் செய்தபின்னர் சிலாதமுனிவர் அவர்களனைவரையும் உபசரித்து யாகத்தை நிறைவேற்றித் தமதாச்சிரமமடைந்தனர்.

(இன்னும் வரும்.)

---

## வைதிக சைவ அச்சுக்கூடம்.

ஐரோப்பியர்கள் தங்கள் சமயப் பாதுகாப்பின்பொருட்டு உலகடங்கலும் அளவற்ற சபைகளையும், பாடசாலைகளையும், மடங்கள் முதலியவற்றையும் தாபித்து வைத்திருப்பதுபோலவே, அளவற்ற அச்சுக்கூடங்களும் வைத்து அளவற்ற பத்திரிகைகள் வெளியிடுகின்றார்கள். தங்கள் சமயநூல்களை உலகத்திலுள்ள பாஷைகள் பலவற்றிலும் அச்சிட்டு மிகவும் குறைந்தவிலைக்கு விற்பதன்றி, இலவசமாகவுங் கொடுக்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு சமயபரிபாலனஞ் செய்தலைப் பலவருடங்களாகப் பார்த்துக்கொண்டிருந்தும், சைவசமயிகளாகிய நம்மவர்கள் தங்கள் சமயப்பாதுகாப்பினிமித்தம் கவலையற்றவர்களாய், அறிவும் ஆற்றலும் அபிமானமும் இல்லாதவர்களைப்போல் வாளாவிருந்துகொண்டு, ஐரோப்பியர் செய்வதில் பதினாயிரத்தில் ஒருகூறும் செய்யாமலே தங்கள் சமயத்தின் ஏற்றத்தை மாத்திரம் எடுத்துப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இதனையுணர்ந்து ஏழைச் சைவாபிமான சிலர்கள் சிலர் அஞ்சி நிற்க, அஞ்சுமுகந்தோன்றில் ஆறுமுகந்தோன்றுவதுபோல், நமது ஸ்ரீமத் நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் முன்வந்து வித்தியாநுபாலன அச்சியந்திரசாலையை நிறுவினார்கள். அவ்வச்சுக்கூடத்தினால் பல அரிய நூல்கள் வெளிவந்து, சைவ உலகம் பெருநலமடைந்திருப்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால், அதில் அச்சிடும் புத்தகங்கள் அதிக விலைக்கு விற்கப்படுவதனால் அவையெங்கும் இலேசாய்ப் பரவுதற்கிடமில்லை. அன்றியும், அவ்வச்சுக்கூடம் பொதுஜன ஆட்சியிலில்லாமல் நம்முடைய கோயில்கள் மடங்கள் முதலியவைகளைப்போலவே ஒவ்வொருவர் வசத்திலிருந்து வருகிறது. ஆதலால், அதுவும் நம்முடைய ஆலயங்கள் மடங்கள் முதலியவை அடைந்துவரும் நிலைமையை அடையக் கூடுமென அஞ்சுகின்றோம். நம்முடைய நல்லூர் ஆறுமுகநாவலரவர்களுக்



குப் பின் சைவாபிமானிகளென்று புறப்பட்ட பிறர் சிலரும் பொதுஜன உதவியைக்கொண்டு அச்சுக்கூடங்கள் வைத்துக்கொண்டார்களாயினும், அவை பொதுஜனங்களுக்குரியனவாயிராமல், அவ்வாறு வைத்துக்கொண்டவர்களுக்கும் அவர்களுக்குப் பின் அவர்கள் சந்ததியார்களுக்குமே சுயார்ஜிதமும் பிதுரார்ஜிதமுமாயிருக்கின்றன. ஆதலால் சைவசமயிகளியாவருக்கும் பொதுவாய் ஒரு அச்சுக்கூடமேனும் இல்லாக்குறையைச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் பலகாலும் சிந்தித்தும், தாங்கள் வெளியிட்டுவரும் இப்பத்திரிகையை மேலுமேலும் அபிவிருத்தி செய்துவர விரும்பியும், இப்பத்திரிகைக்கு 250 சைவாபிமானிகள் ஆயுள்சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து, ஒவ்வொருவரும் பத்துரூபா கொடுத்தால், 2500 ரூபா சேகரித்து அச்சுக்கூடம் தாபிக்கத் தீர்மானித்திருக்கிறார்களென்று, சென்ற நளவருஷ ஆனிமாதப் பத்திரிகையில் விளம்பரஞ்செய்யப்பட்டது. அவ்விளம்பரத்தின்படி இதுவரையில் 147 ஆயுள்சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். அதனால் சென்ற ஜூன் மாதத்தில் வைதிக சைவ அச்சுக்கூடம் எனப்பெயரிய அச்சுக்கூடம் இச்சபையினரால் தாபிக்கப்பெற்றது. இச்சபை சைவசமயிகளுக்கெல்லாம் உரித்தாதலின், சைவசமயிகள் ஒவ்வொருவரும் சொந்தம்பாராட்டி, பத்திரிகையின் சந்தாதாரர்களாகவும் ஆயுள் சந்தாதாரர்களாகவும் போஷகர்களாகவும் இருந்தும், தாங்கள் வெளியிடும் நூல்களை இவ் வைதிகசைவ அச்சுக்கூடத்தில் அச்சிடுவித்தும், இவ்வச்சுக்கூடம் நாளுக்குநாள் வளர்பிறைபோல் அபிவிருத்தியடையச்செய்யுமாறு பிரார்த்திக்கின்றோம்.

இதன்பொருட்டு இதுவரையில் ஆயுள்சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தவர்களுள் 135 பேர் இரங்கோனில் வசிக்கும் ஸ்ரீமான்-செவு-சித-சொக்கலிங்கம்செட்டியாரவர்களாலும், ஸ்ரீமான்-மெ-செ-மெ-மெ-இராமநாதன்செட்டியாரவர்களாலுமே சேர்க்கப்பெற்றவர்கள். இவ்விரண்டுகனவான்களும் இச்சபையை முன்னர் அறியாதவர்களாயிருந்தும், பின்னர் இதின் அருமைபெருமைகளையுணர்ந்து, அளவற்ற பிரயாசையெடுத்துக்கொண்டு இடைவிடாமல் ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து உபகரிப்பதனால் இச்சபையார் தாங்கள் விரும்பியவாறே அச்சுக்கூடம் தாபிக்கப்பெற்றார்கள். ஆதலால் வைதிகசைவ அச்சுக்கூடத்தைத் தாபித்தவர்கள் இவர்களே யாவர். இவர்கள் செய்யும் உபகாரமானது இச் சபையாரால் மாத்திரமன்றி

சைவ உலகினரியாவராலும் கொண்டாடற்பாலதாம். இவர்கள் அம்மையப்பர் திருவருளால் சகலைசுவரிய சம்பன்னராய் நீடூழிச்சுகித்து வாழ்க. இவர்கள் யாதொரு பிரதிபலனும் எதிர்பாராமல் வெறும் சைவாபிமானங் காரணமாகத் தாபிப்பித்த வைதிகசைவ அச்சுக்கூடம் நீடூழி நிலைத்தோங்குக.

---

## ஸ்ரீபஞ்சாக்ஷர மகிமை.

சிவபெருமானுக்குரிய திருமந்திரமாகவும் மந்திரங்களுக்கெல்லாம் நாயகமாகவுமிருப்பது நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து. இது சிவத்தையறிதற்கு ஆதாரமாயிருத்தலினால் சிவமூலமந்திரம் எனப்படும். மந்திரம் என்னும் பதம் நினைப்பவனைக் காத்தல் என்று பொருள்படும். (மன் = நினைப்பவன். திரம் = காத்தல்). யாவனொருவன் யாதொருமந்திரத்தைக் கிரமமாய் நினைப்பானோ அவனை அம்மந்திரம் காக்குமென்பது மந்திரம் என்னும் சொல்லால் அறியக் கிடக்கின்றது.

மந்திரமானது சடமாயிருத்தலால் சித்துப்பொருள்களாகிய உயிர்களை அது எவ்வாறு காக்குமெனில், மந்திரங்களெல்லாம் உயிர்களின் நன்மையைநாடி, பலவகையான அக்ஷரங்களால் நாதரூபமாய்ப் பிரதம சிருட்டியிலேயே உண்டாக்கப்பட்டிருத்தலானும், அவ்வக்ஷரங்களெல்லாம் சிவசத்திசொரூபமென்று வேதாகமங்களிலே சொல்லப்படுகின்றமையானும், அவ்வக்ஷரசொரூபியாகிய சிவசத்தியே அம் மந்திரங்களை யதிட்டித்து உயிர்களைக் காக்குமென்க.

மந்திரம் வாசக மந்திரமென்றும் வாச்சிய மந்திரமென்றும் இருவகையாகச் சொல்லப்படும். இவற்றுள் வாசகமந்திரமாவது அக்கரங்களாகிய உறுப்புகளோடுங்கூடி உயிர்கள் உச்சரிக்குமாறு நாதாகாரமாய் விளங்குவது. அதில் அதிட்டானமாய் நின்று பலன் கொடுக்கும் அருட்சத்தியே வாச்சியமந்திரம் எனப்படும்.

கரியினைத் துருத்தியினால் இடைவிடாது ஊதிவர அக்கினியானது அக்கரியினிடத்தே பிரகாசித்தல் போல், வாசக மந்திரத்தை அறிவைக்கொண்டு இடைவிடாது தியானித்துவர வாச்சியமந்திரமாகிய திருவருட்சத்திதோன்றியருள்செய்யும். இதனைக் கருடோகம் பாவனையினாலும் உணரலாகும். கருடனானது ஆதிபௌதிகக்



கருடன் எனவும், ஆதிதெய்விகக்கருடன் எனவும், ஆதியாத்மிகக்கருடன் எனவும் மூவகையாயிருக்கும். ஆகாயத்திற்பறக்கும் பறவையாகிய கருடன் ஆதிபௌதிகக் கருடன் எனவும், அக்கருடனை யுணர்த்தும் அக்கரரூபமாகிய மந்திரம் ஆதிதெய்விகக்கருடன் எனவும், அம்மந்திரத்தை அதிட்டித்துநின்று மாந்திரிகனுக்குப் பலன்கொடுக்கும் அருட்சத்தி ஆதியாத்மிகக்கருடன் எனவும் சொல்லப்படும்.

கருடமந்திரம் கைவரப்பெற்றவன், தான் வேறு அக்கருடன் வேறு என்னும் பாவனையை யறவேயொழித்து, அக்கருடனே தானாகி அனன்னிய பாவனைசெய்துவந்த பயிற்சி விசேடத்தால், தன்னிடத்தில் ஆதியாத்மிகசத்தி பதியப்பெற்றவனாகின்றான். அதனால் அவன் உலகத்தில் விஷ நிவர்த்திசெய்ய வல்லவனாகின்றான். இவ்வாறே கருடனுக்குமாத்திரமன்றி எல்லாப் பௌதிகப்பொருளுக்கும் மந்திரங்கள் உண்டு என்றும், அவற்றை யதிட்டித்துப் பலன் தருவது சிவசத்தியேயாமென்றும் உண்மை நூல்கள் உணர்த்துகின்றன.

ஒருவன் தன்னைக் கருடனாகப் பாவித்துக் கருடமந்திரத்தைத் தியானித்துவர அவனிடத்தில் ஆதியாத்மிக சத்தி பதிவதுபோல், சிவோகம்பாவனைசெய்து சிவமூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தைத் தியானித்தலால் திருவருட்சத்தி பதிந்து மும்மலவிடம் நீங்கும்.

(இன்னும்வரும்.)

---

## கங்காதாரணம்.

கடல்சூழ்ந்த நெடிய வுலகத்தில் மிகவும் சிறப்புற்றது கோசலதேசம். அந்தக் கோசலதேசத்தில் அயோத்தியாபுரி யென்றொரு நகரமுண்டு. அந்த நகரத்தில் சூரியகுல திலகனான சகரமஹாராஜன் ஏகசக்கிராதிபதியாயிருந்து மநுநீதிகோடாமல் அரசுசெலுத்திவருகிறகாலத்தில் அவ்வரசனுக்குப் புத்திரபாக்கியமொன்று தவிர மற்றபாக்கியமெல்லாம் அதிகரித்திருந்தன. புத்திரபாக்கிய மில்லாதிருப்பதைக் கண்டு அரசன் கனவருத்தமுற்றுத் தன்னரசாட்சியை மந்திரிகளிடத்தொப்புவித்து தானும் தன் மனைவியரிருவருமாகக் காட்டிற்சென்று பரமனை நினைந்து அருமையிலும் அருமையாகிய

கொடியதவத்தை நெடுநாள் செய்துவந்தனன். சாம்பமூர்த்தி மகிழ்ந்து அவன்முன் தோன்றியருளினர். சகரன் நமஸ்காரஞ்செய்து பலவாறு புகழ்ந்து "எம்பெருமானே அடியேன் மனக்களிப்புறப் புத்திரபாக்கியத்தைக் கொடுத்தருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க, சாம்பமூர்த்தி மகிழ்ந்து, ஒருபுத்திரப்பேற்றைப் பாலித்தனர். சகரன் மறுபடியும் வணங்கி "எம்பெருமானே, அடியேனுக்கு இரண்டு மனைவியர் உளர். ஒருமனைவிக்குப் புத்திரனளித்தால் மற்றொருத்திக்கு மனவருத்தமுண்டாகும். அவளுக்கும் புத்திரபாக்கியத்தைக் கொடுக்கவேண்டும்" என்று வினவ, சாம்பமூர்த்தி திருவாய்மலர்ந்தருளுவார்.

"ஓ சகரமஹாராஜனே, மற்றொரு மனைவிக்கும் புத்திரபாக்கியத்தைக் கொடுத்தனம். அந்த மனைவிக்கு அறுபதினாயிரம் புத்திரர் உண்டாவார்கள். அப்புத்திரர்கள் துர்மார்க்கராய்த் தேவர்களுக்கு இடுக்கண்செய்து முடிவில் ஒருமுனிவனுடைய கோபத்தினால் ஏககாலத்தில் மடிந்துவிடுவார்கள். முதல்கொடுத்த பிள்ளையின் வழியிலொரு புத்திரன் பிறப்பான். அவனால் உமது குலத்துக்குப் பெருங்கீர்த்தி வருவதுமன்றி வறண்டுக்கிடக்கிற கடல்நிறையப் புண்ணியதீர்த்தமாகிய கங்காநதி வரும்" என்றுகூறி மறைந்துவிட்டனர். சகரன் சிவபெருமானிடத்து வரம்பெற்றுத் தன் நகரத்துக்குப் போய் முன்போல் அரசாண்டு, சாம்பமூர்த்தி வரப்பிரசாதத்தின்படி மூத்தமனைவியிடத்து ஒருபுத்திரனையும், இளையாளிடத்து அறுபதினாயிரம் புத்திரர்களையும் பெற்று மகிழ்ந்து அப்புத்திரர்களைப் பாதுகாத்து வளர்த்துவந்தான். அவர்கள் சகலகலாவல்லவராகி வில்முதலிய ஆயுதப் பயிற்சியிலும் சிறந்து, வாலிபப்பருவ மடைந்த காலத்தில்; அறுபதினாயிரவருஷம் துர்விஷயத்தில் கருத்தைச் செலுத்தி, தேவர்களுக்கு இடுக்கண் செய்துவந்தார்கள். மற்றொரு புத்திரனோவென்றால், நற்குணமுடையவனாய் யாவர்க்கும் நலத்தையுண்டாக்கி வந்தான். சகரமஹாராஜன் தன் புத்திரர்களுக்கு விவாகம் செய்து இளவரசபட்டத்தை மூத்தாள்பெற்ற சுகுணபுத்திரனுக்குக் கட்டி மகிழ்வுடன் அரசுசெலுத்திவந்தான்.

சுகுணமுள்ள புத்திரன் தந்தையைவிட எண்மடங்கு சிறக்கக் குடிகளைப் பாதுகாத்து இளவரசப் பட்டத்துக்குரிய செய்கையை நடத்தி தன் மனைவியோடு கூடி ஒரு சுகுண புத்திரனைப் பெற்றான்.



அதைச் சக்கிரவர்த்திக்கண்டு சந்ததி உண்டாயிற்றென்று மகிழ்ந்து அஸ்வமேத யாகத்தைச் செய்யவேண்டுமென்று கருதி யாகத்துக்குத் தகுந்த குதிரையை யழைப்பித்து, வேதவேதியர்கள் சூழாம் நெருங்க யாககுண்டம் புதுக்கி, யாகதீக்ஷை வகித்து, குதிரையைப் பூசித்து, பூமிவலம்வர வேண்டி, தன்புத்திரர்களனைவரையும் அஸ்வத்தின் பின்னனுப்பினன். புத்திரர்கள் பூமிபிரதக்ஷிணமாக அஸ்வத்தை நடத்திக்கொண்டு வருகிறபோது தேவதூதர்கள் சகரசக்கிரவர்த்தி அஸ்வமேதயாகஞ் செய்யக் கருதி அஸ்வத்தை பூமிபிரதக்ஷிணஞ்செய்ய அனுப்புவித்ததை இந்திரனுக்குத் தெரிவித்தனர். இந்திரன் அந்தச் சகரருடனே போர்செய்வதற்கஞ்சி மாயையால் வெற்றியடையவேண்டுமென்று கருதி அந்த அஸ்வம் ஈசானதிசைக் கடலருகில் வந்திருந்தபோது அதைஅத்திசையின் பாதலத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த கபிலமுனிவர் வனத்தில் ஒருமாயையால் கொண்டுவந்து விட்டுப்போயினன். சகரர் அறுபதினாயிரம் பேர்களும், அஸ்வத்தைக்காணாமல் ஈசானதிசையின் பாதலத்தில் செல்ல விரும்பி பூமியைத் தோண்டிச் சென்றபோது கபிலமுனிவனம் தோன்றிற்று. சகரர் அறுபதினாயிரவரும் அட்டகாசஞ்செய்து அம்முனிவரை யெதிர்த்தார்கள். அம்முனிவர் அதைக்கண்டு "நாம் ஒருகுற்றமும் செய்யாதிருக்க இவர்கள் நம்மேல் பெருங்கூட்டமாகப் போர்க்கெழுந்தார்கள், இவர்கள் யாராயிருந்தபோதிலும் நமக்கென்ன" வென்று கோபத்தீசொலிக்க கண்ணினால் நோக்கினர். அதனால் பரமன் கண்ணெதிர்ப்பட்ட காமனைப்போல் அறுபதினாயிரம் பேரும் மூத்தாள் குமாரனும் வெந்து சாம்பராயினர். அதைச் சகரசக்கிரவர்த்தி அறிந்து, யாகதீக்ஷை வகித்தபடி ஓடோடிச் சென்று கபிலரை வணங்கித் துதித்து நிற்க, கபிலர் மகிழ்ந்து சொல்லுகிறார்.

"ஓ சக்கிரவர்த்தி, உமது குதிரை நமது வனத்தில் வந்திருந்தமை தெரியாமல் உமது புத்திரரைக்கொன்றுவிட்டோம். மிஞ்சிப்போனதற்கு வருத்தப்படுவதிற் பயனில்லை. உமது அஸ்வத்தைக் கொண்டுபோய் யாகத்தை நிறைவேற்றிக்கொள்ளும்" என்று விடைகொடுத்தனர். சக்கிரவர்த்தியாகிய சகரன் அஸ்வத்தைக் கொண்டுவந்து யாகத்தைக் கிரமப்படி நிறைவேற்றித் தானதருமங்களைச்செய்து முன்போல் அரசுசெலுத்தி, தன் மூத்தமனைவியினிடமாகப் பெற்ற குமாரனுக்குப் பிறந்த வங்கிஷமைந்தனுக்குப் பட்டத்தைக்கட்டி

அவனுக்குச் சகரர் அறுபதினாயிரவர் மடிந்ததை எடுத்துரைத்து அவர்கள் நற்கதி அடையும்படி ஒழுகுமாறு கூறித் தான் சொர்க்க லோகமடைந்தான். எங்கிஷுமைந்தன் மகுடாபிஷேகனாகி ஒரு கன்னியை மணந்து திலீபன் என்னும் புத்திரனைப் பெற்று அரசு செய்து பிதுரர்களை நல்லகதியி லேற்றுவிக்கும்பொருட்டுத் தான் நல்வழியில் நடந்து, தன் கால முடிவாவதைக் கண்டு தன்புத்திரனாகிய திலீபனுக்குப் பட்டங்கட்டி பிதுரர் புண்ணியலோக மடையாதிருப்பதையுரைத்து வனத்துக்குச்சென்று தவஞ்செய்து சொர்க்கலோகமடைந்தான்.

திலீபன் மகுடாபிஷேகனாகி ஒருகன்னியைமணந்து ஒருகுமாரனைப்பெற்று அரசுசெய்து பிதுரர்களுக்கு நன்மையுண்டாகத் தன்னால் கூடியமட்டும் நன்முயற்சிசெய்து தன் ஆயுள் முடிவாவதைக் கண்டு தன்புத்திரனுக்குப் பட்டங்கட்டி பிதுரருடைய வரலாற்றைக்கூறி அவர்கள் சுகமடையச்செய்யுமாறு கட்டளையிட்டுத் தான், சொர்க்கலோகம் சென்றான். அந்த ராஜகுமாரன் மகுடாபிஷேகனாகி ஒருகன்னிகையை மணந்து பகீரதனைப்பெற்றுத் தன் பட்டத்தை அப்புத்திரனுக்குக் கட்டி பிதுரர் வரலாற்றைக் கூறிச்சொர்க்கலோகமடைந்தான். பகீரதன் தந்தைவாக்கியத்தைச் சிரமேற்கொண்டு தன்னரசை மந்திரிகளிடத்தொப்புவித்து வசிஷ்டமஹாமுனிவரை வணங்கிப் பிரமனைநோக்கித் தவஞ்செய்வதற்கு மந்திரோபதேசம் பெற்றுக்கொண்டு, தவவேடங்கொண்டு வனத்திற்சென்று பதினாயிரம் வருஷம் தவஞ்செய்தனன். பிரமதேவர் பிரசன்னமாய்த் தவஞ்செய்யுங் காரணமென்னென்று பகீரதனை வினவினர். பகீரதன் வணங்கி "ஸ்வாமி எங்கள் மூதாதைகள் கபிலருடைய கோபத் தீயினால் வெந்து சாம்பராயினர். அவர்கள் புண்ணியலோகமடையும்படி கிருபைகூர வேண்டும்" என்று வேண்ட, பிரமதேவர் அவனை நோக்கி "ஓ பகீரதா, உங்கள் மூதாதைகள் நல்லகதியடையவேண்டுமென்றால், ஆகாயத்திலிருக்கிற கங்கை பூமியில் வருதல்வேண்டும். அப்போது அக்கங்கையில் உங்கள் முன்னோர்களின் அஸ்தி நனையும். அஸ்தி நனைந்தமாத்திரத்தில் உங்கள் முன்னோர்கள் புண்ணியலோகமடைவர். அக்கங்கை பூமியில்வந்தால் பூமிபொறுக்காது. அதனைச் சாம்பமூர்த்தி யல்லது மற்றொருவர் பொறுக்கமாட்டார்கள். நீ அந்தச் சாம்பமூர்த்தியை நினைந்து வேண்டினாய்" என்று கூறி மறைந்துவிட்டனர். பகீரதன் பிரம



சாம்பமூர்த்தியை நோக்கிப் பதினாயிரம்
தேவர் கட்டளைப்படி
வருஷம் தவஞ்செய்தான். சிவபெருமான் அவன் தவத்திற்கிரங்கி
உமாசகிதராய்க் காட்சிகொடுத்தருளினர். பகீரதன் அவரைப்
பணிந்து வாயாரத் தோத்திரஞ்செய்து, கங்கையைப் பூமியில் வரு
விக்குமாறு வேண்டினன். சிவபெருமான் கங்கையை நோக்கித்
தவஞ்செய்யுமாறு கட்டளையிட்டு மறைந்தனர். பகீரதன் ஐயாயிர
வருடம் கங்கையைநோக்கித் தவஞ்செய்தான். கங்காதேவியான
வள் ஒரு கன்னியுருக்கொண்டு அவன்முன்தோன்றி "ஓ பகீரதா,
நான் பூமியில்வரின் என்வேகத்தைப் பொறுப்பவர் சர்வவல்லமை
யுடைய சிவபெருமானொருவரேயன்றி வேறொருவருமிலர். அவர்
என்னைத்தாங்காவிடில் உலகம் பாதலமடைந்து பாழாய்விடும். ஆத
லால் என்னைத் தாங்குமாறு அவ்விறைவனைநோக்கித் தவஞ்செய்
என்றுகூறி மறைந்தனள். பகீரதன் மறுபடியும் பலவருடம்வரை
யில் சர்வேசுவரனை நோக்கித் தவஞ்செய்தனன். மறுபடியும் சிவ
பெருமான் அரிபிரமாதிதேவர்கள் புடைசூழப் பார்வதிசமேதராய்
காட்சிதந்தருளி, கங்கையை நினைந்தமாத்திரத்தில் அவள் அண்டங்
களைப் பிளந்துகொண்டு அதிவேகமாய்ப் பூமியைநோக்கி வந்தனள்.
வரும்போது அக்கங்கை தனது உக்கிரத்தைச் சிவபெருமானுக்
கறிவிக்க வருவாள்போல் செருக்குற்று வருதலும், இறைவனார் அவ
ளைச் செருக்கடங்குமாறு ஒருசிறு துளியளவாகச்செய்து, புல்லின்
நுனியில் தங்கியிருக்கும் ஒருசிறு பனித்திவலைபோல், தமது சடா
மகுடத்தில் தங்கியிருக்கச்செய்தனர். கங்கை மிகவும் பிரயாசை
யோடு வெளிவர யத்தனித்தும் முடியாமல் பலவருடங்களாக அச்
சடாமண்டலத்தில் மோகமடைந்து கிடந்தனள். மறுபடியும் பகீ
ரதன் சர்வேசுவரனை நோக்கித் தவஞ்செய்தனன். சிவபெருமான்
மறுபடியும் அவனுக்கிரங்கி அவன் முன்தோன்றி "ஓ தவசிரேஷ்ட
னே, பிதுரர் நற்கதியடையவேண்டி உன்னைப்போல் அரிய தவஞ்
செய்தார் வேறொருவருமிலர். உன்னால் உன்முன்னோர்மாத்திரமன்றி
உலகடங்கலும் இன்புறும். கங்கை உன்னைத் தொடர்ந்து வருமாறு
செய்வேன். நீ உன் மூதாதையர் கபில்முனிவனால் வெந்து நீறா
யிருக்குமிடத்திற்குப் போகக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்
தருளி, இமயமலையிலிருக்கும் பிந்துசரசு என்னுமிடத்தில் கங்கா
நதியைவிட்டனர். அந்நதி ஹ்லாதினி, பாவனி, நளினி, என்னும்
மூன்று நதிகளாக கிழக்குநோக்கியும், சுசக்ஷு, சீதை, சிந்து என்

னும் மூன்று நதிகளாக மேற்குநோக்கியும், மற்றொருநதியாக பகீரதன் முன்னே இரதத்திலேறிச்செல்ல அவன் பின்னும் சென்றது. அதுசென்ற வழியில் தவஞ்செய்துகொண்டிருந்த சன்னுமுனிவரின் ஆசிரமம் அழிந்துவிடுதலும் அம்முனிவர் கோபங்கொண்டு அதனைப் பானஞ்செய்துவிட்டனர். பகீரதன் அதனால் கனவருத்தமுற்று அம்முனிவரை வணங்க, அம்முனிவர் அக்கங்கையைத் தமது காதின்வழியாய் வெளியில்விட்டனர். பிறகு அக்கங்காநதியானது கபிலவனத்தையடைந்து தனது புனிதநீரால் சகரர் அறுபதினாயிரவருடைய அஸ்திகளின் மேற்பாய்ந்தது. உடனே அவர்களியாவரும் பாபவிமோசன மடைந்து புண்ணியலோகங்களைப் பெற்றார்கள். பிறகு கங்கையானவள் அதற்குமுன் அகத்தியமுனிவர் உண்டதனால் வறண்டுகிடந்த சமுத்திரத்தைத் தனது நீரினால் நிரப்பி நதியுருவத்தோடு உலகமுய்ய வீற்றிருப்பாளாயினள்.

தனது மூதாதைகள் நற்கதியடையவேண்டிப் பகீரதன் செய்த முயற்சிகளும் அவற்றால் அவனுக்கு நேர்ந்த இடையூறுகளும் அளவில. அதனால் உலகில் "பகீரதப் பிரயத்தினம்" என்று வழங்கலாயிற்று.

கங்கை பகீரதன் பொருட்டு இந்நிலவுலகுக்கு வந்தமையால் பாகீரதி எனவும், சன்னுமுனிவர் உண்டு வெளிப்படுத்தியதனால் சானவி யெனவும் பேர் பெற்றனள். இவையன்றியும் அமுதோதகை, அச்சுதை, அனகை, அதுலை, அநந்தை, அபிராமை, கமலை, கவுரி, கந்தவதி, கரந்தை, கலியாணி, உமை, யாமளை, ஆனந்தவல்லி, ஏகை, உதாரை, ஓங்காரை, விமலை, தாரை, பரானந்தை, விபூதி, தேசை, ஆசாரை, அகோரை, பராசத்தி, காந்தி, துர்க்கை, நிராலம்பை, வரதை, காமரூபை, திரிபதகை, அபையை, வசுதாரை, பரை, ஈசுரை, வல்லபை, சொரூபை, பானுமதி, சூலினி, விசையை, பிரதை, அனுதனைதை, தவரூபை, மாதா, விபாவரி, சந்தி, வினதை, சீலவதி, ஞானசாரை, குணநிதை, சித்திரரூபை, இரதி, வாமதேவி, மந்தாகினி, வாணி, பத்திரை, லீலாவதி, சாந்தை, பவானி, நிமலை, மாலினி, வேதமுதல்வி, ஆரியை, காயத்திரி, வேகவதி, அம்பிகை, இந்திரஸ்துதி, சந்தினி, போகவதி, கலாவதி, யோகினி, மாதவி, புண்ணியை முதலியனவாக எண்ணிறந்த திருநாமங்களிருக்கின்றன.

கிருதயுகத்தில் யோகசாதனத்தாலும், திரேதாயுகத்தில் தவஞ்செய்தலாலும், த்வாபரயுகத்தில் ஞானத்தாலும், கலியுகத்தில்



கங்காஸ்நானத்தாலும் முத்தியுண்டாம் என்று காசிகண்டத்திற் கூறப்பட்டது.

கங்கை ஹிமவானுடைய புத்திரியாய் மேனை யென்னுந் தாய் வயிற்றிலுதித்து, உமாதேவியாருக்கு மூத்த சகோதரியாய் குடிலை யென்னு நாமத்தோடு வளர்ந்துவருநாளில் துவாதசாதித்தர், ஏகாதசருத்திரர், அஷ்டவசுக்கள் முதலாகிய தேவகணங்களெல்லாம் வந்து பிரமலோகத்திற்கு அழைத்துக் கொண்டுபோனார்கள். அவ்விடத்திலிருந்த தேவர்கள் பிரமாவை நோக்கிக் "குமாரஸ்வாமியையுண்டாக்க விருப்பவள் இவள்தானோ?" என்று கேட்க, பிரமா "சிவபெருமானுடைய உக்கிரதேஜஸைத் தரிக்க இவள் வல்லவளல்லள். ஆதலால் இவளை விட்டுவிடுங்கள்" என்றனர். அதைக்கேட்ட குடிலையானவள் கோபங்கொண்டு பிரமாவைநோக்கி "சிவபெருமானுடைய உக்கிரவீரியத்தைத் தாங்கும்படியான சத்தியை நான் தவஞ்செய்து பெறுவேன், இதோ பாரும்" என்றனள். அதனால் பிரமதேவர் கோபங்கொண்டு "நீயென்வார்த்தையைக் கடந்தாயாகையின் ஜலரூபமாகக்கடவாய்" என்று சபித்தனர். அவ்வாறு சாபக்கிரஸ்தையாய்ச் சலரூபத்தையடைந்த குடிலையானவள் உக்கிரவேகத்தோடு பிரமலோகமுழுவதும் ஆவரித்தனள். அவ்வாறு ஆவரித்தலும், பிரமதேவர் இருக்கு யசுர் சாமம் அதர்வணங்களாகிய நான்குவேத மந்திரங்களால் அதிக்கிரமியாவண்ணம் கட்டிவைத்தனர். பிறகு பகீரதன் தவத்தால் நிலவுலகத்திற்குவந்தனள். இச்சரித்திரம் வாமனமுதலிய புராணங்களிலும் இராமாயணம் பாரதமுதலிய நூல்களிலும், விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டுள்ளது.

திருவாசகம்.

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற்பாயுமதுவென்னேடீ
சலமுகத்தாலவன்சடையிற்பாய்ந்திலளேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ.

திருத்தாண்டகம்.

அறுத்தானையயன்றலைக ளஞ்சிலொன்றை யஞ்சாதே வரையெடுத்த வரக்கன் றோள்க—ளிறுத்தானை யெழுநரம்பினிசை கேட்டானை யிந்து வினைத்தேய்த்தானை யிரவிதன்பற்—பறித்தானைப் பகீரதற்கா வானோர் வேண்டப் பரந்திழியும் புனற்கங்கை பனிபோலாகச்—செறுத்தானைத் திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே.

இச்சரித்திரத்தினை யறியாமல் பலர் சிவபெருமானுக்கு மனைவிமார் இருவர் உளர் எனவும், அவர்களுள் ஒருத்தியைத் தலைமேல் சுமந்துகொண்டிருக்கிறார் எனவும், இன்னும் பலவாறாகவும் உளறுவர்.

## நமது பத்திரிகையின் தாமதம்.

இச்சபையார் அச்சுக்கூடம் வைத்துக்கொள்ளுமுன் மாஜிஸ்ட்ரேட் அவர்களின் அனுமதிபெறவேண்டியிருந்தமையாலும், அது பெற்றபிறகு அச்சுக்கூடச் சாமான்களை ஒவ்வொன்றாய்ச் சேகரிக்க வேண்டியிருந்தமையாலும், அச்சுகளையெல்லாம்புதியனவாய் வார்ப்பித்தமையாலும், தற்கால யுத்தத்தால் அச்சுக்கூடச் சாமான்கள் எளிதாய்க்கிடைக்காமையாலும், மாஜிஸ்ட்ரேட் அவர்களிடம் நமது வைதிக சைவ அச்சுக்கூடத்தில் பத்திரிகையை அச்சிடுவதற்கு அநுமதிபெற்றிருந்தமையால் வேறு அச்சுக்கூடத்தில் அச்சிட இயலாமையாலும், எதிர்பாராமல் நேரிட்ட வேறு சில இடையூறுகளாலும், சென்ற ஜூன்மீ பத்திரிகையை அம்மாதமே வெளியிடவியலாமல் நிகழும் ஜூலைமாதப் பத்திரிகையோடு சேர்த்து மூன்று பாரத்தில்வெளியிடநேர்ந்தது. அடுத்த ஆகஸ்டுமாதப்பத்திரிகையும் மூன்று பாரங்கொண்டதாக மாதாரம்பத்தில் வெளிவரும். அதன் பின்னும் நம்முடைய வைதிக சைவ அச்சுக்கூடத்தின் பயனாக ஒவ்வொரு மாதப் பத்திரிகையையும் அவ்வம்மாதாரம்பத்தில் மூன்று பாரமாக வெளியிடவர உத்தேசித்திருக்கிறோம். இவ்வுத்தேசம் நிறைவேறுமாறு சிவநேயச்செல்வர்களின் உதவியையும், சிவபெருமான் திருவருளையும் பிரார்த்தித்து, இச்சமயம் நேரிட்ட பெருந் தாமதத்தால் எம்மை வெறுத்தலின்றிப் பொறுத்துக்கொள்ளுமாறு அன்பர்களனைவருக்கும் வந்தனமளிக்கின்றோம்.

ப-ர்.

---

## சைவபாடசாலை.

### ஸ்ரீமான்-யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் தருமம்.

இச்சபையார் இதுகாறும் தங்கள் பாடசாலையை ஒரு வாடகைவீட்டில் வைத்து நடத்தி, மாதமாதம் பத்துரூபா குடிக்கூலி கொடுத்துக்கொண்டிருந்தார்கள். சென்ற ஜூன்மாதத்தில், இச்சபையின் போஷகராகிய ஸ்ரீமான்-யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் (Dubash, Messrs. Best & Co,) அவ்வீட்டை 1500 ரூபா கொடுத்து வாங்கிப் பாடசாலைக்குக் கொடுத்திருப்பதுமன்றி பிள்ளைகள் விளையாடுவதற்கு அவ்வீட்டிற்கடுத்த நிலத்தையும் [illegible] வாடகைக்கு வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள். அன்றியும்



அதில் விசாலமான கட்டடம் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். இது மூன்றுமாதத்திற்குள் நிறைவேறி விடக்கூடும்.

இப்பாடசாலை இதுவரையில் மூன்றாந்தரத்ததாயிருந்தது. இப்போது (Second Grade) இரண்டாந்தரத்துப் பாடசாலையாக்கப் பெற்றது. இனி இப் பாடசாலை "ஸ்ரீமான்-யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் சைவபாடசாலை" யென்று வழங்கப்பெறும்.

இராஜாங்கப்பாடசாலைப் பரீசோதகர் பிரமஸ்ரீ T. சாமிநாத அய்யரவர்கள் B. A, L. T. நிகழும் 1917ஆம் ஜூலைமீ இப்பாடசாலையைப் பரிசோதித்து, பிள்ளைகள் செய்து காட்டிய கண்ணப்ப நாயனார் நாடகத்தையும், பிள்ளைகளின் கல்வித்திறத்தையும், பாடசாலை நடைபெறும் முறைமையையும் கண்டு மிகவும் களிகூர்ந்தனர்.

தாம் செய்துவரும் பலவிதமான தருமங்களின் இடையில், நமது பாடசாலையை யாதரித்துச் சைவசமயபரிபாலனஞ் செய்விக்கும் புண்ணியமும் புகழும் வாய்ந்த நமது செட்டியாரவர்கள் அம்மையப்பர் திருவருளால் அளவிலா வாயுளும் குறைவிலாச் செல்வமும் பெற்று இனிது வாழ்க.

ப-ர்.

---

## ஆயுள் சந்தா.

இரங்கோனிலிருக்கும் ஸ்ரீமான் செவு-சித-சொக்கலிங்கம்செட்டியாரவர்களும், ஸ்ரீமான் மெ-செ-மெ-மெ-இராமநாதன்செட்டியாரவர்களும், முன்னே 108 ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்ததுமன்றி மறுபடியும் 27 ஆயுள்சந்தாதாரர்களைச் சேர்த்துபகரித்தார்கள்.

கொத்தமங்கலத்திலிருந்து சமீபத்தில் இரங்கோனுக்குப்போயிருக்கும் ஸ்ரீமான் தெ-பழ-சித-சதாசிவம்செட்டியாரவர்கள் 10 ஆயுள்சந்தாதாரர்களைச் சேர்த்துபகரித்தார்கள். இவர்கள் நமது வைதிக சைவ அச்சுக்கூடத்தில் முதல்முதலாக மெய்கண்டசாத்திரம் பதினான்கும் அச்சிடுமாறு வருகின்றார்கள்.

1917ஞ் எப்பிரல்மீ பத்திரிகையில் காட்டிய ஆயுள்சந்தாதாரர்களுக்குப்பின் சேர்ந்தவர்களின் விலாசங்கள் வருமாறு:—

300 ஸ்ரீமான், ப-கா-அ-சுப்பிரமணியம் செட்டியாரவர்கள்
11, Mogul Street, Rangoon.

301 ,, வி-சா-சோமசுந்தரம் செட்டியாரவர்கள்
Dedaye (Pyapon Dist.) Burma.

741 ,, சா-ராம-அரு-பஞ்சநதஞ் செட்டியாரவர்கள்
Dedaye (Pyapon Dist.) Burma.

117 ,, மெ-மு-பழ-குழந்தைவேலன் செட்டியாரவர்கள்
Dedaye (Pyapon Dist,) Burma.

850 ,, அள-மெ-க-முத்துராமஞ் செட்டியாரவர்கள்
Pyapon, Burma.

302 ,, சா-லெ-ராம-செல்லப் பிள்ளையவர்கள்
Thongwa (Hanthawaddy Dist.) Burma.

303 ,, ப-அரு-சிதம்பரம் செட்டியாரவர்கள்
Zigon (Prome Dist,) Burma.

984 ,, சா-ராம-அரு-ராமநாதஞ் செட்டியாரவர்கள்
Kungyagone (Hanthawaddy Dist.) Burma.

658 ,, சு-பழ-கரு-கருப்பன் செட்டியாரவர்கள்
Kungyagone (Hanthawaddy Dist.) Burma.

1132 ,, சொ-மு-க-வேலாயுதம் செட்டியாரவர்கள்
Kungyagone (Hanthawaddy Dist,) Burma.

118 ,, அ-மு-க-காசிவிஸ்வநாதம் செட்டியாரவர்கள்
Kungyagone (Hanthawaddy Dist,) Burma.

1097 ,, வ-லெ-இலக்ஷ்மணன் செட்டியாரவர்கள்
Kungyagone (Hanthawaddy Dist,) Burma.

742 ,, ரா-ம-பெ-பெரியண்ணபிள்ளையவர்கள்
Kungyagone (Hanthawady Dist.) Burma.

304 ,, கண-க-சொ-சொக்கலிங்கம் செட்டியாரவர்கள்
85, Mogul Street, Rangoon.

305 ,, ராம-பி-சு-சுப்பிரமணியம் செட்டியாரவர்கள்
Nachandupatti (Via Trichy.)

306 ,, வ-அ-சு-ப-சுப்பிரமணியம் செட்டியாரவர்கள்
Viraichilai (Via Trichy.)



307 ஸ்ரீமான், மு-பழ-சித-சிதம்பரம் செட்டியாரவர்கள்
Kothamangalam-Via, Trichy.

308 ,, அரு-ராம-அ-சிதம்பரம் செட்டியாரவர்கள்
Myaungmya-Via, Rangoon.

851 ,, சி-ராம-அ-மெய்யப்ப செட்டியாரவர்கள்
Thegon-Via, Rangoon.

852 ,, சி-ராம-அ-மெய்யப்ப செட்டியாரவர்கள்
Deiku, Via, Rangoon.

309 ,, அரு-பெ-ராம-ப-சோமசுந்தரம் செட்டியாரவர்கள்
Thegon, Via, Rangoon.

1098 ,, சு-சொ-லட்சுமணஞ் செட்டியாரவர்கள்
Nathalin, Via, Rangoon.

18 ,, வெ-ராம-அருணாசலம் செட்டியாரவர்கள்
Paungde, Via, Rangoon.

119 ,, சி-ராம-சி-கருப்பஞ் செட்டியாரவர்கள்
Mandalay.

659 ,, கே-நீலகண்டச் செட்டியாரவர்கள்
நாகூர் ஷாப், Nagore.

சமீபத்திற் சேர்ந்த 13 ஆயுள்சந்தாதாரர்களின் விலாசங்கள் மற்றொரு பத்திரிகையில் வெளிவரப்பெறும்.

சைவம் 3-வது மலர் 70-வது பக்கத்தில் 98-வது இலக்கம், "வெ-ராம-வேகுப்பட்டி" என்பதை "லெ-ராம வேகுப்பட்டி" என்று திருத்திக்கொள்க.

சைவம் 3-வது மலர் 85-வது பக்கத்தில் "அருளிறைஞ்சித்த" என்னும் தொடக்கத்துச் செய்யுளில் "இருளுலாநிரயத் திட்டிரும் பவந் தீர்ப்பன்" என்பதை "இருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்" என்று திருத்திக்கொள்க.

---

## அகத்தியர் தேவாரத்திரட்டின் வரலாறு.

அநாதி முத்த சித்ரூபராகியும் சகல புவன கர்த்தராகியும் எழுந்தருளியிருக்கின்ற முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும்பொருட்டுப் பல

அற்புதங்களினாலே சைவசமயத்தைத் தாபித்தருளிய திருஞான சம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், என்னும் சமயாசாரியர்கள் மூவரால் திருவாய்மலர்ந்தருளிய தமிழ் வேதமாகிய தேவாரம் லட்சத்திரண்டாயிரம் திருப்பதிகமுடையது. அவைகளுள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகம் நிற்க மற்றவை மறைந்துபோயின. அவ்வெழுநூற்றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும், திருவாரூர்த் தியாகராஜப்பெருமான் திருவருளால் செங்கோல் நடாத்திய அபய குலசேகரசோழ மகாராசாவுடைய வேண்டுகோளின்படி திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார் நம்பி ஏழு திருமுறைகளாக வகுத்தருளினார். அவ்வேழும் அடங்கிய திருமுறை அடங்கன்முறை எனப்படும்.

கல்வியறிவொழுக்கங்களால் சிறப்புற்று விளங்கிய சிவாலய முனிவர் அவ்வடங்கன்முறையினது மகிமையையும் அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ்செய்யின் முத்திசித்திக்குமென்பதனையும் அறிந்து, தாம் அப்படிப் பாராயணஞ்செய்ய ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை யடைந்து, கனகசபையின்கண்ணே ஆனந்த தாண்டவஞ் செய்தருளிய சபாநாதரை வணங்கி, தமது கருத்து நிறைவேறும்பொருட்டு அனேககாலம் அருந்தவஞ்செய்தனர். அப்பொழுது சபாநாயகர் திருவருளினாலே, "சிவாலயமுனிவனே, நீ பொதியமலையிலிருக்கிற அகத்தியமுனிவனிடத்தே செல்வாயாயின் உன் கருத்து நிறைவேறும்" என்று ஒரசரீரிவாக்குத் தோன்றிற்று. அதுகேட்ட சிவாலயமுனிவர் மனமகிழ்ந்து, சிற்சபாநாதரைவணங்கி, விடைபெற்றுக்கொண்டு சென்று, பொதியமலையை யடைந்து அகத்தியமகாமுனிவரைச் சிந்தித்து, மூன்றுவருஷகாலம் அருந்தவஞ்செய்தார். அகத்தியமகாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறை முழுவதையும் அவருக்குபதேசித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத் திரட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ்செய்பவர்கள் அடங்கன்முறை முழுவதையும் பாராயணஞ்செய்பவர்களாவர்கள்" என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினார். சிவாலயமுனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ்செய்து சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3. | பிங்களஸ்ரீ ஆவணிமீ —1917ஸ்ரீ ஆகஸ்டுமீ | இதழ் 8.

## திருக்குறுந்தொகை.

என்னிலாரு மெனக்கினியாரில்லை
என்னிலுமினியா னொருவனுள்ளன்
என்னுளேயுயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்
கென்னுளே நிற்குமின்னம்பரீசனே.

## சிவஞானபோதம்.

(91-வது பக்கத்தொடர்ச்சி.)

மூன்றுஞ்சூத்திரம் — முதல் அதிகரணம்.

### இலதென்றலின் ஆன்மாவுளது.

(இ-ள்.) இல்லையென்று சொல்லுதலால் (அவ்வாறு சொல்லும்) ஆன்மா உள்ளது (எ-று.)

இதில், 1-வது—தன்றாற் கூறப்படும் பொருள்:— இல்லையென்று சொல்லுதலால் அவ்வாறு சொல்லும் ஆன்மா உளது.

2-வது—ஐயப்பாடு—ஆன்மா உடல் முதலியன போலக் காணப்படுதலில்லையாகையால் உளதோ, இலதோ?

3-வது— பிறர்கூறும் பக்கம்— ஆன்மா என்பதொன்றில்லை. உண்டு என்று சொல்லுதல் முயற்கொம்பு இல்லையெனில் அது உண்டு என்று சொல்வதை யொக்கும். (இது மாத்துமீகர்கொள்கை. இவர்கள் ஆன்மா சூனியப்பொருள் என்பர். ஆதலால் இவர்கள் சூனியான்மவாதிகள் எனப்படுவர். சூனியமாவது உள்ளதுமன்று, இல்லதுமன்று, இரண்டுமாவதுமன்று, வேறுமன்று எனப்படும் பாழ்).

4-வது— மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு:— ஆன்மா வென்பதொன்றில்லை யென்னுஞ் சூனியான்மவாதிகளும் இல்லை யென்றுவாளாகூறாது, உடல் பொறி விடயங்களெல்லாவற்றையும் முறையே "இது ஆன்மாவன்று," "இது ஆன்மாவன்று," என்று ஒவ்வொன்றாகக் கழித்து "இவையெல்லாம் ஆன்மாவல்லவென்று கழிக்கப்படுதலினால் ஆன்மாவென்பது சூனியமாம்" என்பராதலினால், இவைகளை யவ்வாறு ஒவ்வொன்றாய்க் கழித்து நிற்பதோர் அறிவு உளதாதலால் அவ்வறிவே ஆன்மாவாம்.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றொன் றுளததுவே நீயனைத்து—நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

அன்வயம்—அனைத்தும் நின்று, அன்று அன்று என விட்டு, அஞ்சு எழுத்தாய் ஒன்று நின்றுளது; அதுவே நீ. சார்மாயை அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலால் நீயல்லை; தற்பரமும் அல்லை; தனி.

(இ-ள்.) அனைத்தும் நின்று=(உடல், பொறி, விடயமுதலிய) எல்லாவற்றினும் (அதுவதுவேயாக) நின்று—அன்று அன்று என விட்டு=(ஆன்மவாராய்ச்சிசெய்யத்தொடங்கி அவைகளை முறையே ஒவ்வொன்றாக) இது நானன்று, இது நானன்று என்று கழித்த வழி—அஞ்சு எழுத்தாய் ஒன்று நின்றுளது=(அவ்விடத்து) பஞ்சாக்கர ரூபமாய் அறிந்துவந்ததோரறிவு நிலைபெற்றுள்ளதல்லவா—அதுவே நீ=அவ்வறிவே நீயென்றறிவாயாக.—சார்மாயை=உன்னாற் சாரப்பட்ட மாயையானது—அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலால் நீயல்லை=(அதின் காரியமாகிய) நிலமுதலிய வனைத்துமாய் உன்னோடு கலந்துநின்று இப்பெத்தகாலத்தில் கண்ணுக்குக் கண்ணாடிபோல் உன் அறிவை விளக்கிநிற்றல் மாத்திரமேயன்றி அறிவதன்று; (ஆதலால் அறியும்பொருளாகிய) நீ அம்மாயையல்லை—தற்பரமுமல்லை=அதற்கு அதீதமாகிய சிவமுமல்லை.—தனி=அவ்விரண்டிலும் வேறு. (எ-று.)

அதுவதுவாய்நிற்றலாவது=சார்ந்ததன் வண்ணமாயிருத்தல். அஃதாவது ஆன்மா உடம்போடு கூடியிருக்கும் பெத்தகாலத்தில்



அஞ்ஞானத்தால் அவ்வுடம்பு பொறிமுதலியவற்றையே தானாக மதித்து அவைவேறு தான்வேறு என்னாதபடி அழுந்திக்கிடத்தல்.

இவ்விடத்தில் பஞ்சாக்கரமென்பது அகாரம், உகாரம் மகாரம் விந்து நாதம் ஆகிய சூக்கும பஞ்சாக்கரத்தை.

உடல்முதலியவற்றை இது நானன்று, இதுநானன்று என்று ஒவ்வொன்றாய்க் கழித்த அறிவையும், மற்றோரறிவு அவ்வாறு கழித்தலாகாதோவெனின், அவ்வாறு கழித்த உணர்வையும் கழிக்கும் உணர்வு வேறுண்டெனப்பட்டு மேலுமேலும் வரம்பின்றி யோடிக்கொண்டேயிருக்கும். ஆதலால், "அஞ்செழுத்தாய் நின்று ஒன்றுளது. அதுவே நீ" என்றார்.

முதலிரண்டு சூத்திரங்களால் சிவமும் மாயையும் உண்டு என்பது பெறப்பட்டமையால், அவ்விரண்டுமே அவ்வறிவினையும் அறிந்து நீக்கும். ஆதலால் வரம்பின்றி யோடுமாறில்லை எனில், மாயையானது ஆணவமலத்தால் விழுங்கப்பட்டு அறிவு இச்சை செயல்களை யிழந்து கிடக்கும் ஆன்மாக்களின் இச்சாஞானக்கிரியைகளை விளக்கும் கருவிமாத்திரமாயிருப்பதன்றி அறியும் பொருளன்று; ஆதலால் அறியும்பொருளாகிய நீ அம்மாயையல்லை என்பார் "தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை" என்றார். மாயையால் விளங்கி யறியும் நீ மாயாதீதமாகிய சிவமுமல்லை என்பார் "தற்பரமுமல்லை" என்றார்.

---

## மூன்றாஞ்சூத்திரம் — இரண்டாம் அதிகரணம்.

## எனதுடல் என்றலின் ஆன்மாவுளது.

(இ-ள்.) எனதுடல் என்று பிறிதின் கிழமைப் பொருள்படக் கூறுதலால் உடம்புக்கு வேறாக ஆன்மாவுளது: (எ-று.)

இதில் 1-வது— தன்னாற் கூறப்படும்பொருள் :— எனதுடல் என்று பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே, உடம்புக்கு வேறாயிருண்டு.

2-வது— ஐயப்பாடு— ஆன்மா உடம்பேயோ, உடம்பின் வேறோ?

3-வது—பிறர்கூறும் பக்கம்—ஆன்மா உடம்பினிடத்தேயன்றித் தனியே காணப்படாமையாலும், நான் பருத்தேன், நான் சிறுத்தேன் என உடம்பையே நான் என்று வழங்கிவருதலாலும் உடம்பே ஆன்மாவாம். (இது தேகான்மவாதிகள் பக்ஷம். இவர்கள் உலோகாயதருள் ஒருசாரார்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—நான் பருத்தேன், சிறுத்தேன், கரியேன், மனிதன், பார்ப்பான் என உடம்பின் குண விசேடங்களை உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும் யான் உடம்பு, யான் கை, யான் கால் என வழங்குதலின்றி எனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்குதலினால் உடம்பிற்கு வேறாய் உயிர் உண்டு.

5-வது—ஐயபு—உதாரண வெண்பா.

எனதென்ற மாட்டி னெனதலா தென்னு
துனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேறா முணர்.

அன்வயம்—எனது அலாது என்னுது எனது என்றமாட்டின், உனது அலாது உன்கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண். உன்னில், அவை வேறாம். உணர்.

(இ-ள்.) எனது அலாது என்னுது எனது என்றமாட்டின் = (உலோகாயதனே, நீ உலோகாயதநூல் கேட்குமுன்னெல்லாம் பதி மனைவி முதலிய புறப்பொருளையே உயிரெனக்கொண்டு மயங்கிக் கிடந்தாயல்லவா? அப்படி மயங்கி நின்ற காலத்தில், அவைகளை) எனதன்றென வேறாகக் காணுமல் தனித்தனி எனதென்றே தற்கிழமைப் பொருளாகக் கூறிக்கொண்டு நின்றாற்போல—உனது அலாது உன்கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண் = உனதல்லாத உன்கை கால் யாக்கைகளைத் தனித்தனி எனதென்றும், அவ்வாறறிந்த பாசவறிவை என்னறிவதென்றும் தற்கிழமைப் பொருளாகக்கூறிக்கொண்டு நீ வேறுபொருள் வேறு நிற்கின்றாய் காண்—உன்னில் = (உலோகாயத நூல் ஆராய்ந்த பின்னர்ப் பதி மனைவி முதலிய பொருள்கள் உனக்கு வேறாயிருத்தலை யறிந்தாற்போல, கை கால் முதலியவற்றின் இயல்புகளையும் ஏதுக்கள் முதலியவற்றால்) ஆராய்ந்துபார்ப்பாயானால் - அவை வேறாம் உணர் = அக் கைகால் முதலியன. உனக்கு அன்னியமாம்; அதனை யறிவாயாக. (எ-று.)



தற்கிழமைப்பொருளும் பிறிதின் கிழமைப்பொருளும் ஆறும் வேற்றுமைப்பொருள்களாம். தற்கிழமையாவது சாத்தனது கருமை என்பதுபோல் - தன்னேடொற்றுமையுடையது. பிறிதின் கிழமைப்பொருளாவது சாத்தனது வீடு என்பதுபோல் தன்னின் வேறாயது.

---

## மூன்றுஞ்சூத்திரம் — மூன்றும் அதிகரணம்.

OFFICE OF THE REGISTRAR DEPARTMENT 9 AUG 1917 MADRAS

## ஐம்புலனறிதலின் ஆன்மாவுளது.

(இ-ள்.) (சத்தமுதலிய) ஐம்புலன்களை (வேறாக) அறிதலால் (அவற்றுக்கு வேறாக) ஆன்மா உளது. (எ-று.)

இதில், 1-வது—தன்னாற்கூறப்படும்பொருள்:—சத்தப் பரிச ரூப ரச கந்தங்களையறியும் அறிவே ஆன்மாவாம்.

2-வது—ஐயப்பாடு—ஆன்மா ஐம்புலனே, அவற்றின் வேறே.

3-வது—பிறர்கூறும் பக்கம்—சுரோத்திரமுதலிய வைம்பொறிகள் சத்தமுதலிய ஐம்புலன்களை யறியுமென்பது சர்வசம்மதமாம். ஆதலால் அவை உடல்போல் சடமன்று. அன்றியும், உடம்பை எனதுடல் என்று பிறிதின்கிழமைப் பொருள்பட வழங்குவதுபோலன்றி, நான்கேட்டேன், நான்பார்த்தேன் என்று தற்கிழமைப் பொருளாகவே வழங்குதலால் ஐம்புலன்களே உயிராதலமையும். (இது இந்திரியான்மவாதிகள் பக்ஷம். இவர்களும் உலோகாயதருள் ஒரு சாரார்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களுள் ஒவ்வொன்றையே ஒவ்வொரு இந்திரியம் அறியும். ஒரு இந்திரியம் அறிவந்த மற்றோரிந்திரியம் அறியாது. ஆதலால், இவ்வைந்திந்திரியங்களாலும் ஐந்து பயன்களையும் அறிவதெதுவோ அதுவே ஆன்மாவாம்.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

ஒன்றறிந்த தொன்றறியா தாகியுடன் மன்னி
யன்றும் புலனாயவ் வஞ்செழுத்தை—யொன்றறித
லுள்ளதே யாகி லதுநீ தனித்தனிகண்
டுள்ளலவை யொன்றல்லை யோர்.

அன்வயம்—உடல்மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி, அன்றும் புலன் ஆய் அவ்வஞ்செழுத்தை அறிதல் ஒன்று உளதேயாகில், அது நீ. அவை தனித்தனி கண்டு உள்ளல் ஒன்று அல்லை. ஓர்.

(இ-ள்.) உடல் மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி = உடம்பின்கண் நிலைபெற்று ஒருவிடயத்தை யறிந்த இந்திரியம் மற்றொரு விடயத்தை யறியாதாய்— அன்றும் புலன் ஆய் அவ்வஞ்செழுத்தை = அவ்வாறு மாறுபடும் சத்தம் முதலிய புலன்களைச் சூக்கும பஞ்சாக்கரத்தாற் செலுத்தப்பட்டு ஆராய்ந்தறிகின்ற அவ்வைம்பொறிகளின் தொழிற்பாட்டை— அறிதல் ஒன்று உளதேயாகில் = (இவ் விவ்விந்திரியம் இவ்விப் புலன்களை யறியுமென்பதை) உணர்தலையுடையதோர் பொருள் (இல்லதென்றால் அவ்வறிவு நிகழாது. ஆதலால்) உள்ளதேயாம் எனின்,— அது நீ = அவ்வாறு உணரும்பொருளே நீயாகிய ஆன்மா. (அவ்வாறு உணர்வனவும் அவ்விந்திரியங்களே யென்றாலாகாதோ வென்னில்)—அவை தனித்தனி கண்டு உள்ளல் = அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை வேறு வேறு கண்டறிவது மாத்திரமன்றி தாம் அவ்வாறு அறிதலை யறியமாட்டா வாகையாலும்—ஒன்று அல்லை ஓர் = (இன்னது இன்னதையறியும் என்று, அவ்வைந்தின் தொழிற்பாட்டையும் அறிந்து, அவற்றால் வரும்பயனை யனுபவிக்கும் நீ) அவற்றின் வேறாவை. அதனை யாராய்ந்தறிவாயாக. (எ-று.)

அன்றும் புலன் = மாறுபடும் புலன். புலன் ஆய் = புலனை ஆராய்கின்ற. உள்ளல் = உள்ளலான். அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறியை அஞ்செழுத்தென்றது ஆகுபெயர். இம்மூன்றதிகரணங்களாலும் சாக்கிரத்தின் உண்டாகும் இயல்புகொண்டு ஆன்மாவின் உண்மை சாதிக்கப்பட்டது.

---

## கூர்மபுராணத்து விநாயக காப்பு.

வெண்ணிலாக் கற்றை கான்று விளங்குமோர் பிறைக்கோ டின்றி
யெண்ணிலோர் பாகங் கூந்தற் பிடியென விருந்த வாற்றாற்
பெண்ணொரு பாகம் வைத்த பிஞ்ஞக னுருவு காட்டு
மண்ணலங் களிநல் யானை யடிமலர் சென்னி வைப்பாம்.

---

இதற்கு மகாசைவாபிமானியும் வித்வரத்தினமுமாய் விளங்கிய யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி, நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் செய்த உரை.

---

வேதாகம உபநிடத சித்தாந்த சாரங்களையெல்லாம் உள்ளடக்கி, உலகத்தின் றோற்றமொடுக்கம், மனுவந்தரம், முனிவராற்றல் அரசபாரம்பரியம், அவர்கள் சரிதம் என்னும் புராணவிலக்கணமைந்தும் வாய்ந்து, வடமொழிக் கட்கண் விளங்கும் கூர்மபுராணப்பொருளைத் தண்டமிழ்த் தென்மொழியார்க்கு நன்கறிவுறுக்கப் பொருட்டொடர் நிலைச் செய்யுளென்னும் பெருங்காப்பியத்திற் பெயர்த்து யாப்பான்புக்க ஆசிரியன், எடுத்துக்கொண்ட வஃது ஆதிதைவிகம், ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம் என்னு மிவையிற் றன்வரு மிடையூறியாவுந் தீர்ந்து இனிது முடிதற்பொருட்டும், முடிந்தது நின்று நிலவுதற்பொருட்டும் எண்குணமமைந்த விறைவற் காத்தலை வேண்டியதாம்.

(இ-ள்.) எண்இல் ஓர்பாகம் = ஒன்றானும் அளவுபடுத்தற்கரிய திருமேனியி னொருபகுதி—வெண்ணிலா கற்றை கான்று விளங்கும் = வெள்ளிய சந்திரிகைத்தொகுதியைப் பொழிந்து பிரகாசிக்கின்ற, —பிறை ஓர் கோடு இன்றி = பிறைச் சந்திரனைப்போன்ற ஒப்பற்ற கொம்பொன்றனையில்லாமல்—கூந்தல்பிடி என இருந்த ஆறால் = பிடர்க்க ணுரோமங்கள் செறிதலையுடைய பிடியானைபோல் விளங்கிய தன்மையானும்—ஓர்பாகம் = மற்றை யொரு பகுதி—கோடு இருந்தஆறால் = களிற்றி யானைபோலக் கொம்பொன்றனை யுடைத்தாந் தன்மையானும்—பெண் ஒருபாகம் வைத்த பிஞ்ஞகன் உருவு காட்டும்—உமாதேவியாரைத் திருவுருவி னோர்கூறாகக் கொண்ட சிவபிரானது திருவடிவத்தை யித்தன்மைத்தென்று காட்டியருளா நிற்கும்—அண்ணல் அம் களி நல்யானை = பெருமைத்தன்மையும்

அழகும் மதக்களிப்புமுள்ள நல்லயானையாகிய விநாயகக்கடவுளது, —அடிமலர் சென்னி வைப்பாம் = திருவடிகளாகிய செந்தாமரை மலர்களைச் சிரமீது யாம் சூடுவாம் என்க.

கருமந்தொடங்குவோர் யாவராயினும் முதலில் விக்கினகர்த்தாவாகிய விநாயகக் கடவுளையே காப்பாக வைக்கவேண்டுமென்றும், வைக்கின் அஃது முட்டின்றி யாமென்றும், அன்றேலாகாதென்றும் வரம்பெற்ற தலைமையராகலின் இவனும் விநாயககாப்பை வேண்டினான் என்க. உதாரணம் வருமாறு:—

பார்க்கவபுராணம் - திருவவதாரப்படலம்.

முராரி யாதிய தேவர்கண் முதலுறு முழுதல கினிலுள்ளோர்
விராவி யாதொரு காரிய மாயினும் விளங்குறச் செயவென்றே
பராவி யுன்னருச் சனைசெய்வோர் மனத்துறு பான்மைதந் தருளுன்னன்
பிராது செய்பவர் காரிய மூறுசெய் திடுதியென் றிவைசொல்வான்.

சத்தி யொருகூறாகவும், சிவம் ஒருகூறாகவு மமைந்துள்ள அர்த்தநாரீசுர வடிவம்போல, ஒருபாகங் கொம்பின்றிப் பிடியுருவாகவும், மற்றோர்பாகங் கொம்பிருந்து களிற்றுருவாகவுங் காட்டும் வடிவமைந்த யானையாகிய விநாயகக் கடவுளது திருவடிப்போதுகளை யாம் சிரமேற் றரிப்பாம் என்பது கருத்து.

வெண்ணிலா - என்பது இனமின்மையின் விசேடிக்கப் படாதாயினும் செய்யுட்கு அணியாய் நிற்றலால் வழீஇ யமைதன் மரபாம். என்னை? "இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை வழக்காறல்ல செய்யுளாறே" என்றார் தொல்காப்பியனாராகலின். இதுபோல் வருவனவற்றை யினமின்றிச் செய்யுளில் வரூஉங் கருமதாரயன் என்பர் பிரயோக விவேகநூலாரும். பிறை என்பது கலை நிரம்பா மதியாகவும், கற்றைகான்று என்றது வளர்ந்துறுந்துணிபினென்க. இன்றி - உகர மிகரமாத் திரிந்த வினையெச்சக்குறிப்பு. எண்ணின் - எனப்பாடங்கொண்டு, நினையுங்கால் என வினையெச்சப் பொருட்டாகவும், வலம் இடமாகிய எண்ணத்தில் என ஐந்தனுருபேற்ற பெயர்ப்பொருட்டாகவும், உரைப்பாரு முளர். இறைவன் றிருவுரு பசுபாசஞானங்களா னறிவருந் தகைத்தாகலானும், ஓர்பாகம் எனவே "எடுத்தமொழியினஞ் செப்பலுமுரித்தே" என்னுந் தொல்காப்பிய விதிப்படி இனமாகிய மற்றையபாகமுங் குறிப்பா னுணரப்படு முரித்தாயு மவைசிறப்பன்றாம். "பிடியென்



பெண்பெயர் யானைமேற்றே" என்பது விதியாகலிற் பிடி - என்பதற்கு யானையென்றும். என என்னு முவம உருபிடைச்சொல் ஈண்டுப் பண்புணர்த்தும் பொருட்டாய், இருந்த வென்பதன் முதனிலை வினைகொண்டது.

"ஒண்பாலெல்லாம் பெண்ணெனற்குரிய" என்றபடி பெண் என்னுஞ்சொல் இருதிணைப் பெண்மைக்கும் பொதுவாயினும், அடைகொடுத்துரைக்கி னஃறிணைப் பொருளாமென்றும் வாளா கூறின் உயர்திணைப்பொருளாமென்றும் நச்சினார்க்கினியருரைத்தமையானும், "பெண்ணும் பிணாவும் மக்கட்குரிய" என்று தொல்காப்பியனாரும் பின்விதந்தோதுப வாகலானும், அஃதுயர்திணைப் பெண்மை மேற்றாய்க் கட்புலனாயதோர் அமைதித்தன்மைப் பொருட்டாகாமே பெண்பாலாய தன்மைப் பொருட்டாய்ப் பராசத்தியாகிய உமையம்மையாரை யுணர்த்துகின்றது. பிஞ்ஞகன் - தலைக்கோலத்தை யுடையவன். யானை - ஆகுபெயர். யாம் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது.

(இன்னும் வரும்.)

---

## திருநந்திதேவர் சரித்திரம்.

(98-வது பக்கத்தொடர்ச்சி.)

நந்தீசர் நாலொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து, வாலப்பருவத்தை யடைந்து, உபநயனச் சடங்கு முற்றி, சிவபெருமானைப் பூசிக்கவேண்டிப் பிதாவினிடம் பஞ்சாட்சரோபதேசம் செய்யப்பெற்று, தாய்தந்தையரிடம் விடைபெற்றுக்கொண்டு, பன்னிரண்டுவருடம் குருகுலவாசஞ்செய்து, வேதாகம முதலிய சகலகலைகளையும் கசடற வோதியுணர்ந்து, குருவின் கருத்துக்கிசைய தட்சணை கொடுத்து வணங்கி விடைபெற்று, தமது வீட்டிற்குச் சென்று பிதாமாதாக்களை நமஸ்கரித்து நின்றார். அவ்விருவரும் தங்கள் பெறலரும் புதல்வனைப்பார்த்து மனமகிழ்ந்து, "ஓ, நந்தீசா, இனி உனக்கிசைந்த ஒரு பெண்ணை நாங்கள் விவாகஞ் செய்விக்க விரும்புகிறோம்" என்றார்கள். அதைக்கேட்டு நந்தீசர் "என் அருமருந்தன்ன இருமுதுகுரவர்காள், எனக்குச் சமுசார சாகரம் வேண்டாம். நான் பிறவிப்பெருங்கடலைக் கடக்குமாறு சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தல் வேண்டும்" என்றனர்.

பிதாமாதாக்கள் அதைக்கேட்டுச் சந்தோஷித்தனராயினும், தங்கள் பெறலருஞ் செல்வப்புதல்வரை விட்டுப் பிரியமனமில்லாதவர்களாய் "எங்கள் அரும்பெருஞ் செல்வமே", நீ இப்போது தவஞ்செய்யத் தலைப்படின், நாங்கள் மிகவும் பாடுபட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்த உன் சரீரம் வெயில் மழையாதிகளால் வருந்துமே. நீ இப்போது யௌவனப்பருவத்தையுற்றிருத்தலால் உன்னை மாறன்மலர்க்கணை மயக்குமே. இந்திராதி தேவர்கள் உன் தவத்திற்கு இடையூறு விளைப்பரே. குழந்தாய், இப்போது அவ்வெண்ணத்தை விட்டுவிடு. முன்னே இல்லறத்திலிருந்து உலகவாழ்க்கையில் வெறுப்பு வந்த பிறகு எளிதாய்த் தவஞ்செய்யக்கூடும். இல்லறமல்லது நல்லறமன்று என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இல்லறதருமத்தை வழுவறச்செய்தால் துறவறத்தாலடையும் பயனை இங்கிருந்தேயடையலாம்" என்றார்கள். அவ்வாறுகூறிய பிதாமாதாக்களை நோக்கி நந்தீசர் "என் அருமைத் தாய்தந்தையரே, உலகில் நீங்கள் அறியாததொன்றுளதோ! உங்களுக்கு என்னால் அறிவிக்கவேண்டுவதும் உண்டோ? இல்லை. இல்லை. ஆயினும் என் விண்ணப்பத்தை இன்னுமோர் முறை கேட்டருளல் வேண்டும். இச்சரீரமோ, நீரிற் குமிழிபோன்றது. வருகணம் வரையில் இது இருக்கும் என்று எண்ணவும் இடமில்லை. அன்றியும், தவஞ்செய்து இறைவனருளைப்பெறுதற்கு இப்பருவமே உரித்தாய பருவம். இப்பருவம் நீங்கினால் மூப்புவந்துவிடும். சரீரம் தளர்ந்து பொறி புலன்கள் சோர்ந்துபோம். அப்போது தவஞ்செய்து அருளைப் பெறவெண்ணுவது முடவன் கொம்புத்தேனுக்கிச்சைவைத்தபடியாகும்."

க்ஷேத்திரத் திருவெண்பா.

குந்திநடந்து குனிந் தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி—வந்துந்தி
யையாறு வாயாறு பாயாமு னெஞ்சமே
யையாறு வாயாலழை.

"நான் இந்திரபதவிமுதலிய தேவலோக பதவிகளை ஒரு பொருளாக மதித்துத் தவஞ்செய்யேன். காமனையெரித்த கண்ணுதற்பெருமான் திருவடியன்பு ஒன்றே வேண்டித் தவம் செய்வேன். ஆதலால் தேவர்கள் என்தவத்திற்கு இடையூறுசெய்ய வேறுவில்லை. காமனும் என்னை வருத்தத்துணியான். சிவபெருமான் திருவருளைப்பெற்றால் சாத்தியமாகாதது யாதுளது? அவனருளைக்கொண்டன்றோ திரிமூர்த்திகள் முத்தொழிலைச்செய்வது. அரும்பையுஞ் சுரும்பையுங் கரும்பையும் ஆயுதங்களாகக் கொண்ட மன்மதன் சகல சீவராசிகளையும் மயக்குதல் அவ் விறைவனருளைக்கொண்டல்லவா?"



சிதம்பரச் செய்யுட்கோவை.

கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர்வில்வே
ளிரும்புங் கரைந்துரு கச்செய்யு மாலிறும் பூதிதன்றே
விரும்பும் பெரும்புலி யூரெம்பி ரானருண் மேவிலொரு
துரும்பும் படைத்தழிக் கும்மகி லாண்டத் தொகுதியையே.

ஆனந்தலகரி.

தொடுகை ரச்சிலை தொடப்பொ ருமலர் சுரும்பு நாணிடு வைந்துகோ
லடுப டைத்தலைவ னுர்வ சந்தமலை தென்ற றேருருவ மருவமா
முடுகு கொற்றமத னொருவ னிப்புவன முற்றும் வெற்றிகொள முடிவிலா
நெடும லர்க்கணருள் சிறித ளித்தனைகொ னீலியே கரக பாலியே.

"ஆதலால், யான் இப்போதே தவஞ்செய்து இறைவனருளைப் பெறல்வேண்டும். பெற்ற பின்னர் உங்கள் கருத்தின்படியே விவாகஞ்செய்துகொள்வேன். இது நிச்சயம்" என்று அவர்களைத் தேற்றி விடைபெற்றுத்தவவேடம்பூண்டு அன்னபானாதிகளை யறவொழித்து பஞ்சாக்கினி மத்தியிலிருந்து, சிவபெருமானுடைய திருவடிகளில் மனதை யழுத்தி நூறுவருடம் தவமியற்றினார். சிவபெருமான் அவர்செய்த தவத்தினால் மகிழ்ந்து காட்சிகொடுத்தருளி "ஓ நந்தீ, உன் தவத்திற்கு மிகமகிழ்ந்தோம், உனக்கு வேண்டிய வரம்யாது?" என்றனர். நந்தீசர் ஆனந்தபரவசராய் நமஸ்காரஞ்செய்து அஞ்சலித்துநின்று, "என்னிறைவனே, கருணைக்கடலே, அந்தகாசுர சம்ஹாரா, திரிபுராந்தகா, காலகாலா, காமதகனா, அரவாபரணா, ஆனந்தத்தாண்டவா, பார்வதிமணாளா, சந்திரசேகரா, நீலகண்டா அபயம், அபயம். அடியேனுக்குத் தேவரீருடைய பாதாரவிந்தத்தில் நீங்காதபத்திவேண்டும். சிவலிங்கார்ச்சனம் உருத்திரசெபம், பஸ்மதாரணம், ஆகிய இவைகளில் உறுதியான அன்புவேண்டும்" என்றனர். சிவபெருமான் அதற்கு அகமகிழ்ந்து இசைந்து "அவ்வாறே யாகுக" என்று திருவாய்மலர்ந்தருளி திருவுருக்கரந்தனர். நந்தீசர் பின்னரும் நூறுவருடம் தவஞ்செய்தனர். சிவபெருமான் மறுபடியும் பிரத்தியக்ஷமாய் "ஓ நந்தீ, உன்னுடைய மிக வரிய

தவத்திற்கு மிகவும் மகிழ்ந்தோம். உனக்குக் கணேந்திரத்துவத்
தையும், என்னுடைய ஆணை எங்கும் நடப்பதுபோல் உன் ஆணை
யும் நடக்குமாறு ஓரதிகாரசத்தியையும் அநுக்கிரகஞ் செய்தோம்''
என்றருளிச்செய்தனர். நந்தீசர் இறைவனை நமஸ்கரித்து "எம்
பெருமானே, ஆன்மாக்களுடைய இருவினையின் வழி யாண்டுஞ்
செல்கின்ற உமதாணையிருக்கவும் அவ்வாணையினுஞ் சிறந்ததோ
என்னால் செலுத்தப்படும் ஆணை!. ஆயினும், அடியேன்பால் தேவ
ரீர் வைத்திருக்கும் கருணையை யாவருமறிய இவ்வண்ணம் அரு
ளிச்செய்தமையால், அடியேனுக்களித்த வாணையானது சிவலிங்
கார்ச்சனம், உருத்திர ஜபம், பஸ்மருத்திராக்கதாரணம், ஆகிய
இவைகளுக்கு அன்னியமான அர்ச்சனையும், ஜபமும், தாரணமும்,
எவராயினுஞ் செய்வாராயின், அவர்கள்பாற் சென்று அவர்களை
யழிக்கவும், சிவலிங்கார்ச்சனை செய்வார்பாற்சென்று அவர்களைக்
காக்கவும் ஆற்றலுடைத்தா யிருத்தல்வேண்டும்'' என்று பிரார்த்
தித்தனர். இறைவர் "அவ்வாறேயாகுக'' என்று அருளிச்செய்து
மறைந்துபோயினர். சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தலையே
யன்றி அத்தவத்தால் வரும் பலனையும் கருதாத நந்தியெம்பெரு
மான் மறுபடியும் சிவபிரானை நோக்கி நூறுவருடந் தவஞ்செய்த
னர். சிவபெருமான் மறுபடியும் இடபாரூடராய்க் காட்சிகொடுத்
தருள, நந்திதேவர் சாஷ்டாங்கமாய்ப் பூமியில் வீழ்ந்து நமஸ்கரித்
துக் கைகூப்பிநின்று "மகாவிஷ்ணுவின் கண்மலரால் அர்ச்சிக்கப்
பட்ட சரணாம்புஜமுடையவரே, உமக்கு நமஸ்காரம். நீலகண்ட
ரும் சந்திரசேகரரும் சூரியசந்திராக்கினித் திரிநேத்திரரும் மங்கை
பாகருமாகிய மகேசுரரே நமஸ்காரம். பொங்கிப் புரண்டு அகில
லோகங்களையும் அழிப்பதாக ஆர்ப்பரித்து வந்த கங்காப்பிரவாகத்
தை ஓர் சிறிய பனித்துளிபோல் சடைமுடியில் அடக்கியருளினவரே
நமஸ்காரம், அரவாபரணமணிந்து அற்புதநடஞ்செய்பவரே நமஸ்
காரம் நமஸ்காரம்'' என்று இறைவனுடைய அளவுகடந்த பிரபா
வங்களையெடுத்துச் சொல்லிச்சொல்லி வாயாரத் துதிசெய்தனர். சிவ
பெருமான் அவரை நோக்கி "நந்தி, இதுவரையில் உன்னைப்போல்
வெறும் அன்பையே வேண்டி இவ்வாறு தவஞ்செய்தார் வேறொரு
வருமில்லை. நீ எம்மைப்போலும் நித்தியனாயிருந்து யாவராலும்
வணங்கப்பெறுவாய். உனக்குத் திவ்ய தேகமும், சடைமுடியும்,
சந்திரகலையும், நீலகண்டமும், திரிநேத்திரமும், சதுர்ப்புஜமும்,
மான் முதலியனவும், யானைத்தோலும், அளித்தோம்'' என்று



திருவாய்மலர்ந்தருளி, விஷ்ணுமுதலிய தேவர்களைப் பார்த்து "ஓ
தேவர்காள், யாம் இவனைச் சகல கணாதிபர்களுக்கும் அதிபனாகச்
செய்தோம். விநாயகன் ஸ்கந்தன் முதலியோரைப்போல் எமக்கும்
அம்பிகைக்கும் இவனொரு மகன். சகல தேவராலும் எம்மைப்
போல் பூசிக்கத்தக்கவன். இனிச் சிவஞானத்தைப் போதிப்பதற்கு
இவனே ஆசிரியன். எமக்கு இவனே சரீரம்'' என்று திருவாய்
மலர்ந்து, பின்னர், அரம்பையர் நடிக்கவும், தேவதுந்துபி முழங்க
வும், சகலதேவரும் புஷ்பவருஷம் வருஷிக்கவும், பிதுர்த்தேவரது
மனதில் உற்பவித்த சுயஜ்ஞை என்னும் கன்னிகையைக் கலியாணஞ்
செய்வித்தனர். உடனே சிவபெருமானும் உமாதேவியாரும் தங்கள்
மகனும் மருமகனுமாகிய நந்தியெம்பெருமானையும் சுயஜ்ஞாதேவி
யையும் அழைத்துக்கொண்டு கைலாயகிரியைச் சேர்ந்தார்கள்.

அங்கணன் கயிலைக்கு மகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற்கெல்லா முதற்குரு நாதனாகிப்
பங்கயன் றுளவனாறும் வேத்திரப் படைபொறுத்த
செங்கையெம் பெருமானந்தி சீரடிக் கமலம்போற்றி.

---

## சைவ சுராச்சியம்.

(இரண்டாம் மலர், 159-வது பக்கத்தொடர்ச்சி.)

உலகத்திலுள்ள ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்களெல்லோ
ரும் இத்தாலி தேசத்திலுள்ள ரோம் என்னும் நகரத்திலிருக்கும்,
போப் என்பவரைப் பிரதம குருவாக வைத்துக்கொண்டு கிறிஸ்து
சமய அரசாட்சி செய்கிறார்கள். உலகத்திலுள்ள மகம்மதியரெல்
லாம் அருக்கிதேசத் தரசராகிய சுல்தானைத் தங்கள் தலைவராக
வைத்துக்கொண்டு மகம்மது சமயவரசாட்சி செய்கிறார்கள். உல
கத்திலுள்ள புத்தர்களெல்லாம் திபேத்து தேசத்திலுள்ள கிராண்டு
லாமா வென்னும் பிரதம குருவைக்கொண்டு புத்தசமயச் செங்
கோல் செலுத்துகிறார்கள். இவ்வாறு கிறிஸ்தவர்கள் முதலாயி
னோர் உலகெங்கும் தங்கள் சமயவரசாட்சி செய்துகொண்டிருக்க
வும், நாம் நமது மிகச் சிறிய தமிழ்நாட்டிலுங்கூட சைவசமயவர
சாட்சி செய்யமாட்டாதவர்களா யிருந்துகொண்டு, கிறிஸ்தவர்கள்

முதலாயினோரை மிலேச்சர்களென்றும் அவர்கள் சமயங்களைப்
புறச்சமயங்களென்றும் இழித்துப்பேசி, நம்மைச் சத்தினிபாதத்
துத்தமர்களென்று உயர்த்திப் பேசிக்கொண்டிருக்கிறோம். சைவ
சமயமே சமயம் என்று ஆரவாரஞ்செய்கிறோம். உண்மைச் சமயா
பிமானம், சுயநலப் பரித்தியாகம், விடாமுயற்சி, உதாரத்துவம்,
பொதுநலப்பிரியம், கல்வியறிவு முதலிய உயர்குணங்களை யணிகல
மாகக்கொண்டு, உலகமெல்லாம் சுகமடையவேண்டும் என்னும்
கருணை மிகுதியால் சமயபரிபாலனஞ் செய்பவர்கள் மிலேச்சர்க
ளும், உலோபம், சுயநலம்பாராட்டல், கூடாவொழுக்கம், வஞ்ச
வேடம், சமயாபிமானமின்மை, ஒற்றுமையின்மை, அழுக்காறு
முதலிய தீயகுணங்கள் மேலிட்டுச் சமயபரிபாலனத்தைக் கைவிட்
டிருப்பவர்கள் சத்தினிபாதத் துத்தமர்களும்போலும்!

சைவசமயமானது நடுக்கடலில் பெருங்காற்றிலகப்பட்ட மீகா
மனில்லா மரக்கலம்போல் நிலைதடுமாறியிருத்தல் குன்றிலிட்ட
விளக்கெனத்தெரிந்தும், சிலர் சைவ அரசாங்கமானது அநாதியா
கவே எவராலும் அசைக்கமாட்டாத மகமேருவைப்போல் நிலை
நாட்டப்பட்டிருக்கிறதென்றும், அதனால் நாம் புதிதாகச் சமயவர
சாட்சி உண்டாக்கவேண்டியதில்லையென்றும், நம்முடைய சபை
மற்றவர்கள் சபைகளைப்போல் கற்சபையாயிராமல், பொற்சபை
யும் சிற்சபையுமாயிருக்கிறதென்றும், உலகடங்கலும் அழியினும்
இச்சபை யழியாதென்றும், சித்தாந்த வீதியிற் பவனிவரும் ஸ்ரீநட
ராஜப்பிரபுவே நமக்குச் சபாநாயகர் என்றும், தாயுமானசுவாமி
கள் "மௌனமோலியயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தி
லமர்ந்தது வைதிக சைவ மழகிதந்தோ" என்றருளிச் செய்தன
ரென்றும், சனங்கள் கேட்டுச் சந்தோஷிக்குமாறு எட்டுச் சுரைக்
காய்ப் பிரசங்கஞ்செய்கிறார்கள். இவர்கள் இவ்வாறு பிரசங்கித்து
மகிழ்தல், ஒருவன் தன்வீடு தீப்பற்றி யெரியும்போது நீரைக்கொ
ண்டு அதை யவிக்க வழிதேடாமல் அளவுகோல்கொண்டு அவ்வீட்
டின் அகல நீளங்களை யளந்துகாட்டி மகிழ்தல்போலாம்.

சமயவரசாட்சிக்குச் சபைகளும், பாடசாலைகளும், மடங்க
ளும், கோயில்களும், பத்திரிகைகளும் இன்றியமையாத அங்கங்
களாம். இவை யவிடங்களிலும் நிலைபெற்று நடைபெறச் செய்தலே
சமயவரசாட்சிபுரிதலாம். இவைகளைத் தன் ஆட்சியின் கீழ்வைத்து



நடைபெறச்செய்யும் இடமே சமய ராசாங்கத்தானமாம். இவ்வாறு
நடைபெறச் செய்பவரே சமயத்தலைவருமாவர்.

நமக்கு எண்ணிறந்த கோவில்களிருக்கின்றன. பல சபைகள்
இருக்கின்றன. சில மடங்களும் இருக்கின்றன. சிற்சில பாடசாலை
களும் பத்திரிகைகளும் இருக்கின்றன. இருந்தாலும், இவை யனைத்
தும் தங்களுக்குப் பொதுவானதொரு சமய வரசாட்சித் தானத்
தின் கீழ் அடங்கி நடைபெறுவனவாயிராமல் ஒவ்வொன்றும் ஒவ்
வொருவர் வசப்பட்டு அவரவர்கள் இச்சையின்படி நடைபெறுவன
வாயிருக்கின்றன. பொதுஜன நன்மையின்பொருட்டு உண்டாக்
கப்படும் கோயில்கள் சபைகள் மடங்கள் முதலிய பொதுஸ்தாபன
ங்கள் எப்போதும் பொதுஜன ஆட்சியின்கீழிருந்தே நடைபெறல்
வேண்டும். பொது ஜனங்களால் நடத்தப்படுதலின்றி ஒவ்வொரு
வர் வசத்திலிருந்து நடைபெறும் பொதுஸ்தாபனங்கள் பெயரள
வாகப் பொதுஸ்தாபனங்களாயிருக்குமேயன்றி, செய்கையில் பொ
துஸ்தாபனங்களாகா. அவை சிலகாலம் நன்றாய் நடைபெறுவன
வாயிருந்தாலும் நீடித்து நடைபெறுமாறில்லை. இதுவரையில் அள
வற்ற பொதுஸ்தாபனங்கள் ஒவ்வொருவர் வசப்பட்டே அழிந்தன.
இன்னும் பல அழிகின்றன. அன்றியும், நம்மவர்களுள் பொதுஜன
நன்மையின்பொருட்டுப்பொதுஸ்தாபனங்களையுண்டாக்குவோரும்
அவைகளைப் பொதுஜனங்களிடத்தில் ஒப்புவிக்கிறதில்லை. தாங்க
ளும் தங்களுக்குப் பின் தங்கள் உறவினர் முதலாயினோருமே அவற்
றை நடத்த விரும்புகிறார்கள். இதனாலேயே இவர்கள் உண்டாக்
கும் பொதுஸ்தாபனங்கள் விரைவில் அழிந்துவிடுகின்றன. பொ
துஸ்தாபனங்களுக்கு அதிகாரிகளாய் வருபவர்களும், தங்கள்
பொறுப்பையும், தாங்கள் பொதுஜனங்களின் பிரதிநிதிகளென்ப
தையும் உணர்ந்து நடப்பதில்லை. அவைகளைத் தங்கள் பிதுரார்ஜித
மென எண்ணி நடத்துகிறார்கள். அன்றியும், சைவ சமயிகளுக்
கென பொதுவானதொரு அரசாங்கத்தான மின்மையால், பொது
தருமஸ்தாபனங்களை யுண்டாக்குவோரும் அவைகளை ஒப்புவித்தற்
குரிய இடம் காணாமல் கண்டவர்களிடம் ஒப்புவித்து விடுகி
றார்கள். சிலர் பொதுஸ்தாபனங்களை யுண்டாக்க விருப்பமும் சத்
தியும் உடையவர்களா யிருந்தும், தங்களுக்குப் பின் அவற்றை
நடத்தக்கூடிய பொது அரசாங்கத்தானமின்மையால் அவைகளை
யுண்டாக்கத் துணிவதுமில்லை. ஐரோப்பியர்களுள் பொதுஜனங்

கள் ஒன்றுகூடி நடத்தும் பொதுஸ்தாபனங்கள் பலவுள. தரும சிந்தையுடையவர்களும் சந்ததியற்றவர்களும் தங்கள் திரவியங்களை அவைகளிடம் சேர்த்து அவைகளைக் கொண்டு பொது தர்மங்களை நடத்துவிக்கிறார்கள். அதனால் அவர்கள் ஒவ்வொரு துறையிலும் அபிவிருத்தி யடைகிறார்கள்.

நம்முடைய இந்தியாதேசமானது முற்காலத்தில் எண்ணிறந்த அரசாங்கங்களாகப் பிரிந்திருந்தது. அரசர்கள் ஒருவரோடொருவர் சேராமல் சுயாதீனம்பெற்று அரசாண்டிருந்தார்கள். அதனால் இந்தியர் அரசாட்சியை யிழந்துவிட்டார்கள். இதனைக்கண்கூடாக அறிந்தும் சைவசமயிகளாகிய நாம் ஒன்றுகூடிச் சைவசமய வரசாட்சி செய்துகொள்ளமாட்டாதவர்களாய் சைவ ராஜாங்கத்தைப் பாழாக்கி வைத்திருக்கிறோம். ஆதலால் இச்சமயத்தில் அறிவுந்திருவுமுடைய சிவநேயச்செல்வர்கள் முற்பட்டுவந்து சைவசுராச்சியம் தாபித்து நடத்தவேண்டும். பலவிடங்களில் தலைகர்த்தனில்லாச் சேனைசமூகம்போல் சிதறுண்டு கிடக்கும் சைவாபிமானிகளையும் சபைகளையும் ஒன்றுசேர்த்தல்வேண்டும.

சைவசமயிகள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு சைவசபையிலாவது சேர்ந்து சைவசமயபரிபாலனம் செய்வித்தல்வேண்டும். பிரதம பாடசாலை முதல் உயர்தரப் பாடசாலை வரையில் எங்கும் பாடசாலைகள் வைத்து ஆங்கிலம் கற்கும் நம்முடைய சிறுவர்களுக்குச் சைவநூல்களையும் ஒழுக்கங்களையும் கற்பித்தல்வேண்டும். பத்திரிகைகளை வெளியிட்டு எங்கும் எளிதாய்ப் பரவச்செய்தல்வேண்டும். சைவசமயத்தின் தற்காலநிலைமையை ஒவ்வொருகூட்டத்திலும், பத்திரிகையிலும் எடுத்துக்காட்டி எங்கும் சைவாபிமானக் கிளர்ச்சியை யுண்டாக்கல்வேண்டும்.

(இன்னும் வரும்.)

---

சிவநேயர்செல்வர்களே, நீங்கள் அன்புகூர்ந்து சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற் சேர்ந்து சைவ சமய பரிபாலனஞ் செய்யின் இச்சபையே நாளடைவில் சைவ சமய ராஜாங்கத்தானமாய் நிலவும்.

## சந்திரன் விநாயகக்கடவுளைப் பூசித்த சரித்திரம்.

முன்னொருகாலத்தில் சிவபெருமானைத் தரிசிக்குமாறு பிரமதேவர் கைலைக்குச் சென்றனர். அப்போது சிவபெருமான் விநாயகப் பிரானோடும் ஷண்முகக் கடவுளோடுந் திருவோலக்கத்தி லெழுந்தருளியிருந்தனர். அச்சமயத்தில் நாரதமுனிவர்வந்து ஓர் மாங்கனியை சிவபெருமானெதிரில் வைத்து, திருவடிகளிற் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, யாழினை மீட்டி, தேனுண்டு பெய்யு மேகம் போல இசையாகிய அமுதத்தைப் பொழிவாராயினர். அவ்விசையமுதத்தைச் சிவபெருமான் செவிமடுத்து அம்முனிவருள்ளங் களிகூரக் கருணைசெய்து, அவர் கையுறையாகக் கொண்டுவந்து வைத்த கனியை யெடுத்து பிரமதேவர் முகத்தை நோக்கி, பிரமனே, இப்பொழுது நம்மிருபக்கலும்விநாயகனும் சுப்பிரமணியனு மிருக்கின்ற மையால், இவர்கட்குள் இக்கனி யாவர்க்குத் தரத்தக்கதென்று வினவியருளினர். பிரமதேவர் முருகக்கடவுள் இளையவராதலால் அவருக்கே கொடுக்கத் தக்கதென்று சொன்னார். அவ்வாறே சிவபெருமான் சண்முகப்பெருமானுக்குக் கொடுத்தனர். அதைக் கணேசமூர்த்திகண்டு கோபித்தவர்போல் பிரமதேவரைநோக்கலும், அவர்முன் சிவபிரானால் தமது சிரமறுபட்டபோதுகொண்ட பயத்திலும் அதிகபயத்தையடைந்து தம்முடனிருந்த கணங்களோடும் அவர் சமீபத்திற்சென்று திருவடிகளிற்றீர்க்கதெண்டஞ்செய்து பலமுறை வேதவாக்கியங்களாற் றுதித்து, "சுவாமீ, அடியேன்செய்தகுற்றத்தை மன்னித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டனர். அதற்குக் கணேசமூர்த்தி மனமிரங்கிக் கிருபைபுரியுஞ் சமயத்தில், சந்திரன் ஊழ்வலியால் தன்னுள்ளத்தின்கண் அவமதிப்புக்கொண்டவனாய்ச் சிறிது பல்லைக் காட்டி நகைத்தனன். அதைக் கணேசமூர்த்தி நோக்கி மிக்க கோபங்கொண்டு, "நீ இப்பொழுது என் சந்நிதியில் சிறிதேனும் பயமில்லாமல் நகைத்தனையாதலால் இனி நீ உலகத்தில் பிரகாசமின்றி மறைந்துபோகக்கடவாய். உன் உருவத்தைக் கண்டவர்களும் துன்பமடையக்கடவர்" என்று சபித்தனர். இச்சாபங்களைப் பெற்றவுடனே சந்திரன் ஆகாயமார்க்கமாய்த் திரிதலற்றுத் தன்னொளியுங்குன்றி மிக்கமனவருத்தத்தோடு தனதிருக்கையிற்றானே யிருந்துவிட்டனன். இவ்வாறு சந்திரன் ஒளிமழுங்கி மறைந்துபோதலும், தேவர்கள் அமுதபானங் கிடைக்

காமல் வருந்தி இந்திரனிடத்திற்சென்று முறையிட்டனர். இந்திரன்
அதிக துயரங்கொண்டு, இவ்விபத்தைக் கணேசமூர்த்தியே தீர்க்கத்
தக்கவரென்று நிச்சயித்து, எல்லாத் தேவர்களோடும் அவர் சந்நி
தானத்திற்சென்று, அவரது பாதபத்மங்களைத் தொழுது, "ஓ தீன
சரண்யமூர்த்தியே, விண்ணுலகத்தார்க்கு அமுதஞ் சுரப்பித்தலும்
மண்ணுலகத்தார்க்குப் பயிரைவளர்ப்பித்தலுஞ், சந்திரனுக்குரிய
தர்மமாகுமென்று விதித்தது தேவரீரது கருணையேயன்றி வேறன்று.
அச்சந்திரன் இப்போதில்லாமையால் விண்ணுலகும் மண்ணுலகும்
மாழ்கிக்கிடக்கின்றன. சிறியோர்செய்த சிறுபிழையைப் பெரியோர்
பொறுப்பது கடனாதலால் அறிவீனனாகிய சந்திரன்செய்த குற்றத்
தைத் தேவரீரே பொறுத்தருளாதொழியின் மற்றையாவர் பொ
றுத்தருளவல்லவர். ஆக்கவும் அழிக்கவும்வல்ல ஓ பரம்பொருளே,
மிக்க துயரத்தில் மூழ்கியிருக்கின்ற சந்திரனுக்கிட்ட சாபத்தை
கிருபைகூர்ந்து நிவிர்த்திசெய்தருளவேண்டும்" என்று பலமுறை
துதித்து இரந்தனன். அவ்விண்ணப்பத்திற்கு விநாயகமூர்த்தி திருச்
செவிகொடுத்து, "இந்திரனே, நெருப்புச் சுடாமற் குளிர்ந்தாலும்
இருள் சூரியனை விழுங்கினாலும் பூமிக்குப் பொறுமை யற்றாலும்
நமது வாக்கியம் எக்காலத்தும் மாறுந்திறமன்று. நம்மை நன்
போடுவந்து நயந்து போற்றினபேர்க்கு இன்மையென்னுந் துன்ப
மெய்துதலில்லை. ஆகையால் சந்திரனுக்கு வந்த சாபத்தை நீக்கும்
பொருட்டு நீங்கள் யாவரும் பணிந்து அன்போடு கேட்டுக்கொள்வ
தனால் அவனைச் சாபத்தினின்று விடுவித்து முன்போல் உலாவ
அருள்செய்தனம். ஆயினும் ஆவணிமாதம் பூர்வபக்ஷத்தில் வரு
கின்ற சதுர்த்தியில் மாத்திரம் அவனை யாவரும் பார்க்காதிருக்கக்
கடவர். மறந்தேனும் பார்ப்பார்களாயின் அவர்கள் பலவகைப்
பாவங்கட்கும் பாத்திரர்களாகி இடும்பைக் கடலினின்று மெழுந்தி
ரார்கள். மற்றைய நாள்களிலெல்லா முன்போலவே அவனுருவினை
யாவரும் ஆகாயத்தின்கண் காணலாம்" என்று திருவாய்மலர்ந்தரு
ளினார். அத்திருவாக்கினைக் கேட்ட தேவர்களெல்லாம் உய்ந்தோம்
உய்ந்தோமென்று துள்ளி ஆனந்தக் கூத்தாடி விடைபெற்றுச் சந்
திரனிடத்திற் சென்று விநாயகக்கடவு ளனுக்கிரகித்த முறைமை
யைக் கூறி அக்கடவுளது ஏகாக்ஷர மந்திரத்தை யுபதேசித்து, "ஓ
குமுத நண்பனே! நீ உன்மனத்தில் கணேசமூர்த்தியை யிருத்தி
அவர்மனுவாகிய இவ்வேகாக்ஷர மந்திரத்தை இடைவிடாது செபி



த்து, அவர் பெருங்கருணையைப் பெற்றுக்கொள்ளக்கடவாய்" என்
று சொல்லி எல்லாத் தேவர்களோடும் இந்திரன் தனது சொர்க்க
லோகத்தை யடைந்தனன். பின்னர் சந்திரன் அவ்விடத்தினின்று
நீங்கி கங்காநதியின் தக்ஷிண தீரத்திற் சென்று சர்வசித்திகளையுங்
கொடுக்கும் சர்வசித்தி நகரத்திலிருந்து மனோதிடத்துடன் ஏகா
க்ஷரமந்திரத்தை இருபத்திரண்டு வருடங்கணித்தனன். அதற்குக்
கணேசமூர்த்தி மனதிரங்கி ஒற்றைக்கோட்டினையுடைய யானை முக
த்தோடும் அவனுக்கெதிரிற் பிரத்தியட்சமாயினர். உடனே சந்தி
ரன் விரைந்தெழுந்து நமஸ்கரித்து விழிகளில் ஆனந்த நீரைச்
சொரிந்து "சுவாமி! அறிவிலியாகிய அடியேன் அறியாமையினாற்
செய்த பிழையனைத்தையும் பொறுத்து என்னை நீங்காது வருத்து
கின்ற கொடுந்துன்ப நோயையு நீக்கியருளி தேவரீரது மெய்யரு
ளையுந் தந்து ரக்ஷிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தனன். அதற்கு
விநாயகக் கடவுள் கிருபைகூர்ந்து, "சந்திரனே, உனக்கு வேண்
டிய வரமெல்லாம் முன்னமே கொடுத்திருக்கின்றோம். இன்னுமோர்
வரமுந் தருவோம்; கொள்ளக்கடவாயாக. அஃதாவது சங்கடங்
களை நீக்கிக்கொள்ளவேண்டினோர் அங்காரக சதுர்த்திதோறும் நீ
உதயமாகின்ற சமயத்தில் நம்மைப் பூசைசெய்து உன்னையும் அருச்
சித்து துதிசெய்யக் கடவர். உன்னையாவருந் தொழும்படியாக
உனது கலைகளுள் ஒருகலை நமது முடியின்மீதிருக்கக் கடவது"
என்று அனுக்கிரகஞ் செய்து அவனை ஆகாயத்திற் செல்ல விடை
கொடுத்து தமது திருவுருவைக் கரந்தருளினர்.

இப்பால் சந்திரன் தனது முகத்திலுள்ள மலினமெல்லா மொ
ழியப் பெற்றதுபோல் அகத்திலுள்ள அஞ்ஞான விருளுங்கடிந்த
வனாய் வெண்ணிறந்த கிரணங்களோடுகூடி முன்னினும் அதிகப் பிர
காசத்தை யடைந்து, அழகு பொருந்திய வோர் கோயிலைச் சமை
த்து அதில் கணேசமூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து பாலசந்திர
விநாயகரென்று திருநாமங்கூறி, சிறந்த பூசனைகளியற்றி பழையபடி
ஆகாயமார்க்கத்திற் சென்றனன். பின்னர் கணேசமூர்த்தியினு
டைய திருமுடிக்கு ஓரணியாக விருக்கப்பெற்ற சந்திரனாற் றாபித்
திருக்கும் அப் பாலசந்திரமூர்த்தியை அன்றுதொட்டு தேவர் முனி
வர் முதலாயினோர் வந்து பூசைசெய்து வருகின்றனர். மேலும்
பூசிக்கின்றோர்கள் உடனே சகல சித்திகளும் பெறுந் தன்மையினால்

அத்தலம் சகல சித்தத்தலமென்னும் பெயரையடைந்து எல்லாத் தலங்கட்கும் தலைமை பெற்றிருக்கின்றது. ஆதலால் சங்கட சதுர்த்தி விரதத்திற்கு சந்திரோதய காலம் முக்கியமாகச் சொல்லப்பட்டது.

---

## ஸ்ரீபஞ்சாக்ஷர மகிமை.

(101-வது பக்கத் தொடர்ச்சி.)

இம்மந்திரங்களெல்லாம் எங்கே கூறப்பட்டுள்ளன வெனில், அநாதிமலமுத்த சித்துருவாகிய சிவபெருமானால் அநாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்களின் உச்சீவனார்த்தமாகப் பொதுவும் சிறப்புமா யருளிச்செய்யப்பட்ட நூல்களாகிய வேதாகமங்களிலேயே கூறப்பட்டுள்ளனவென்க. வேதம் சிவாகமம் என்னும் இவ்விரண்டினுள் சிறப்பு நூலாகிய சிவாகமமானது முற்றிலும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தையே தனக்காதாரமாகக்கொண்டு விளங்குவதுபோல், பொது நூலாகிய வேதமும் அத்திருவைந்தெழுத்தையே தனக்கு நாயகமும் தாயகமுமாகக்கொண்டு பிரகாசிக்கும். எவ்வாறெனில், வேதமானது இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என நான்காம். அவற்றுள், நாலாவதாகிய அதர்வணம் முதல் மூன்றனுள்ளே யடங்கிக் கிடக்கும் எனவும், அவ்வாறு அடங்கியிருத்தலால், முதல் மூன்றுமே தனித்தனி விளங்குவனவாமென்றும், அதுபற்றியே வேதம் "த்ரயீ" என்னப்பட்டது எனவும் சொல்லப்படும். யசுர் வேதமானது அம்மூன்றினுக்கு நடுவில் இருப்பதோடு மற்ற விரண்டினும் பலவாற்றானும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. அந்த யசுர்வேதம் பன்னிரண்டு காண்டங்களாகப் பிரிந்து, எண்பத்திரண்டு பிரசினங்களையுடையதாய், மாந்திரமெனவும் பிராமணமெனவும் இருவகைப் பகுதிபெற்று நிலவும். அப்பன்னிரண்டு காண்டங்களுள் மாந்திரம் என்னும் சம்ஹிதாபாகமாகிய ஏழு காண்டங்களே மற்றெல்லாவற்றினுஞ் சிறந்தனவாம். அவ்வேழனுள்ளும், நடுக்காண்டமே மிகச்சிறந்தது. அந்நடுக்காண்டம் ஏழுசம்ஹிதைகளையுடையது. நான்காவதாகிய நடுச்சம்ஹிதையின் மத்தியில் ஸ்ரீ ருத்திராத்தியாயமென்னும் சதருத்திரீய மந்திரம் பொலிவுபெற்று நிலவும். அந்தச் சதருத்திரீயத்தின் இருதயத்தில் நாயகரத்தினமாக நமசிவாய



என்னும் ஸ்ரீ பஞ்சாக்கரம் பிரகாசித்துக்கொண்டிருக்கு மென்றுணர்க. இவ்வுண்மையை

மும்மறையு ணடுமறையின் முனிவிலெழு காண்டத்துட்
செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையி
லம்மனடுச் சங்கிதையி னதியீ ரொழித்து நடு
பொம்மலுற வுயர்மனுவின் பொருளாவா னெவனமைந்த்

என்றதனானும் உணரலாகும்.

இதனால் வேதவாயுவினாகிய சிவபெருமானுக்கு யசுர்வேதம் சிரமாகவும், அவ்வேதத்தின் மத்தியிலுள்ள ஸ்ரீ ருத்திரம் முகமாகவும், ஸ்ரீ ருத்திரத்தின் மத்தியிலுள்ள ஸ்ரீ பஞ்சாக்கரம் நேத்திரமாகவும், ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் இடையிலுள்ள சிவ என்னும் அக்ஷரங்களிரண்டும் கண்மணியாகவும் இருத்தல் அறியப்படும். இதுபற்றியே சிவ நாமத்தால் ஸ்ரீ பஞ்சாக்கரமும், ஸ்ரீ பஞ்சாக்கரத்தால் ஸ்ரீ ருத்திரமும், ஸ்ரீ ருத்திரத்தால் யசுர்வேதமும், யசுர்வேதத்தால் ஏனையவேதங்களும் விளக்கமுறும் என்பது பெறப்பட்டது. வேதோப பிருங்கணமாகிய புராணமும் "வித்தைகளெல்லாவற்றுள்ளும் வேதமே உத்கிருஷ்டமானது; அதனுள்ளும் உருத்திரைகாதசினியே உத்கிருஷ்டமானது; அதனுள்ளும் பஞ்சாக்ஷரமே உத்கிருஷ்டமானது; அதனுள்ளும் சிவ என்னும் த்வயாக்ஷரங்களே உத்கிருஷ்டமானவை" என்று முறையிடுகின்றது.

பிருதிவிமுதல் சிவதத்துவமீறாகவுள்ள தத்துவங்கள் முப்பத்தாறின் இறுதியில் நிற்பது சிவதத்துவமாம். சிவதத்துவத்திற்கு மேல் தத்துவமில்லை. அச்சிவதத்துவத்திலிருந்து மற்றெல்லாத் தத்துவங்களும் விரிந்து அதிலேயே ஒடுங்கும். ஆதலால் அச்சிவதத்துவத்திற்குக் கர்த்தாவாயிருக்கும் பரசிவப்பொருளின் மூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்திற்கு மேற்பட்ட மந்திரம் இல்லையென்பது துணியப்படும். இதனை

மொய்த்த வொண்சிவ தத்துவமதனினு மேலாத்
தத்துவாந்தர மின்மைபோன் மறைகளின்றலையாய்
வைத்தவைந் தெழுத்தாகிய மந்திரந்தனி
லுத்தரம் பெறுமந்திர மிலையென வுணர்வாய்

என்னுஞ் சித்தாந்த சிகாமணியானும் அறிக.

இம்மகா மந்திரத்திலுள்ள ஐந்து எழுத்துகளும் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களையும், சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்கிராணம் என்னும் பஞ்ச ஞானேந்திரியங்களையும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்னும் பஞ்ச கன்மேந்திரியங்களையும், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பஞ்சதன்மாத்திரைகளையும், நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலைகளையும், கன்மசாதாக்கியம், கர்த்துருசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், சிவசாதாக்கியம் என்னும் பஞ்சசாதாக்கியங்களையும், கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி, பராசத்தி என்னும் பஞ்சசத்திகளையும், சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம் என்னும் பஞ்சப்பிரமங்களையும், பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்னும் பஞ்சகர்த்தாக்களையும், சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிர்த்தியங்களையும், அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்னும் பஞ்சவர்ணங்களையும், வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்னும் பஞ்சபட்சிகளையும், தம்முள் அந்தர்ப்பவமாய்க் குறிப்பித்து விளக்கிக்கொண்டு சத்தார்த்தப்பிரபஞ்சங்களுக்கெல்லாம் பிரேரகநிலையாதாரமாயிருக்கும்.

(இன்னும் வரும்.)

---

## விருஷபதேவர் சரித்திரம்.

முன்னொருகாலத்தில் விருஷபரூபத்தையுடைய தருமதேவர் கோமுக்தீஸ்வரரைப் பூசித்துக்கொண்டு பதினாயிரவருடம் தவஞ்செய்துகொண்டிருந்தனர். இறைவனார் பிரத்தியட்சமாகாமையால் அவர் சோர்வடையாமல் பின்னும் பேராவலுடன் சிவலிங்கமூர்த்தியையே யுற்றுநோக்கிய வண்ணமாக வெகுகாலம் எதிரிலிருந்து தவஞ்செய்தனர். அவ்வாறு பலகாலமிருந்தும் இறைவனார் பிரத்தியட்ச மாகாமையால் "இனியாம் இவ்விடத்தைவிட் டகல்வதில்லை. இவ்விலிங்கமூர்த்தியை யன்றி நமக்கு வேறு புகலிடமில்லை. வேறெவற்றிலும் மனதைச் செலுத்துவதில்லை. இதே நமக்குப் பெருங்கடமை" யென்று நினைத்து மூன்றுகால்களால் நின்று, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக்கொண்டு பல்லாயிரவருடமிருந்தனர்.



அவ்வாறிருந்தும் சிவபெருமான் பிரசன்னமாகாமையால், பல்காலம் இரண்டுகால்களால்நின்று தவஞ்செய்தனர். அப்போதும் இறைவர் பிரத்தியட்சமாகாமையால் ஒருகாலால் நின்று பலகாலம் தவஞ்செய்தனர். அப்போது சிவபெருமான் அச்சிவலிங்க மூர்த்தியினின்றும் மான் மழு சதுர்ப்புஜ காளகண்ட திரிநேத்திர தாரியாய், உமாதேவியாருடன் தோன்றியருளினர். விருஷபதேவர் பரமானந்த மெய்தி ஆனந்தக் கண்ணீர் பெருக அஞ்சலித்துநின்று பலவாறுகத் தோத்திரஞ்செய்தனர். அம்பிகாநாதர் தமது திருக்கரங்களால் அவரைத் தடவிக்கொடுத்தலும், பலகாலம் தவஞ்செய்து மெலிந்திருந்த அவர் சரீரம் பூரணசந்திரோதயத்தால் பொங்குங்கடல் போல் பூரித்துப் பொலிவெய்தியது. சிவபெருமான் அவரை நோக்கி ஓ விருஷபதேவனே, உனக்கென்னவேண்டும்" என்றுகேட்க, அவர் "எம்பெருமானே, மிகவும் இழிந்த இவ்வுலகவாழ்க்கை யெனக்குவேண்டாம். சச்சிதானந்த மயராகிய தேவரீருக் கெதிரில் எக்காலமுமிருந்து தரிசித்துக்கொண்டேயிருக்கும் பெரும்பேற்றையும், சர்வலோகாதாரனாகிய தேவரீருக்கு வாகனமாயிருக்கும் பேராற்றலையுந் தந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். சிவபெருமான் அவ்வாறே அருள்புரிந்து "உனது விருஷணத்தைப் பரிசித்துக்கொண்டே கொம்பிரண்டினடுவில் எம்மைத் தரிசிப்போர்க்குச்சகலபாவங்களையும்போக்கிப் பரமானந்தமளிப்போம்" என்றுகூறி, நந்தை, ஸுபத்திரை, காமை, ஸுரபி, ஸுனந்தையென்னும் ஐந்து கோக்களை மணம்புரிவித்துத் தம்முடன் அழைத்துச்சென்று தம்மெதிரிலிருக்கும் ஒப்பற்ற பதவியைத் தந்தருளினர்.

---

## நாதன் ஆயுள் சந்தாதாரர்கள்.

பிரமஸ்ரீ ஆர். எஸ். கங்கா ஜடேச சர்மா அவர்கள்,
121 Essayest, Rendankattalai.

இரங்கோன் வாசிகளாகிய ஸ்ரீமான் மெ-செ-மெ-மெ-இராமநாதன் செட்டியாரவர்களும், ஸ்ரீமான் செவு-சித-சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களும் பின்னும் சேர்த்துபசரித்த ஆயுள் சந்தாதாரர்கள் :

660 ம-ா-ா-ஸ்ரீ அ. க. அ. நாச்சியப்ப செட்டியாரவர்கள்,
Kyaiklat, Burma.

661 ,, சர். ராம. மு. ராம. நாராயணஞ் செட்டியாரவர்கள்,
Kyaiklat, Burma.

120 மஹா-௱-ஸ்ரீ அ. அ. வி. திருமலைச் செட்டியாரவர்கள்,
Kyaiklat, Burma.

1099 ,, பழ. பெரி. வி. அ. கட்டயானைச் செட்டியாரவர்கள்,
Kyaiklat, Burma.

985 ,, வெ. வீர. ராமன் செட்டியாரவர்கள்,
Pyapon, Burma.

743 ,, சி. சு. மு. பெரியகருப்பன் செட்டியாரவர்கள்,
Pyapon, Burma.

310 ,, சி. க. மு. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள்,
Pyapon, Burma.

986 ,, க. ராம. ராம. ராமன் செட்டியாரவர்கள்,
Dedaye, Burma.

662 ,, அ. கு. அ. நாராயணன் செட்டியாரவர்கள்,
Kyonmangai, Burma.

311 ,, கு. மு. சு. ப. சுக. சித. சிதம்பரஞ் செட்டியாரவர்கள்,
Sagain, Kyawzan, P. O., Burma,

744 ,, ஆ. சி. பள. பழனியாண்டி பிள்ளையவர்கள்,
Apbyauk Post, Henzada Dt., Burma

312 ,, அ. ந. மு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள்,
Maubin, Burma.

1133 ,, சி. ராம. மு. ராம. வெங்கடாசலஞ் செட்டியாரவர்கள், Kyonsok, Bassein Dt.

663 ,, ராம. பழ. நாகப்ப செட்டியாரவர்கள்,
Sagain, Kyawzan P. O. Pyapon Dt., Burma.

987 ,, பெரி. சுப. மெ. ராமநாதன் செட்டியாரவர்கள்.
Kyaiklat, Pyapon Dt., Burma.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF ... 15 SEP 1917 MADRAS.

# சைவம்.

மலர் 3. | பிங்களஞு புரட்டாசிமீ 1917ஞு செப்டம்பர்மீ | இதழ் 9.

கடலன்ன பொய்மைகள் செய்யினும் வெய்யகடுநரகத்
திடநம னேவுதற் கெவ்விடத் தானிருஞ் செந்தமிழாற்
றிடமன்னு மாமதிற் சண்பைத்தலைவன் செந்தாமரையின்
வடமன்னு நீண்முடி யானடிப் போதனை வாழ்த்தினமே.

## சிவஞானபோதம்.

### மூன்றுஞ் சூத்திரம்—நான்காம் அதிகரணம்.

### ஒடுக்கமறிதலின் ஆன்மா வுளது.

(இ-ள்.) ஐம்புலன்களும் ஒடுங்கின சொப்பனத்தானத்தில் நிகழ்ந்தனவற்றை நனவின்கண் அறிதலினால் அவ்வாறறியும் அறிவாகிய ஆன்மா உண்டு (எ-று.)

இதில், க-வது—தன்னுற் கூறப்படும் பொருள் :— கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே அக்கனவுடற்கு வேறாய் உயிருண்டு.

2-வது—ஐயப்பாடு—ஆன்மா கனவுடலோ, அதனின்வேறோ?

3-வது—பிறர் கூறும் பக்கம்—இந்திரியங்களின் வேறாயவது சூக்கும வுடம்பே யாகும். அது புறத்து நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தி யறியும். ஆதலால் அவ்வாறறியும் சூக்கும வுடம்பே ஆன்மாவாம். (இது சூக்கும தேகான்மவாதிகள் பக்ஷம். இவர்களும் உலோகாயதருள் ஒருசாரார்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு— கனவின்கணிகழும் சூக்கும வுடம்பே ஆன்மாவாயின், கனவொழிந்து நனவின்கண் வந்தபோது அக்கனவு நிலையைக் கண்டபடியே கூறவேண்டும். அங்ஙனங்கூற வறியாது மயங்கி மயங்கிக் கூறுதலால், தூல வுடம்பால் சாக்கிராவத்தையையும் சூக்குமவுடம்பால் சொப்பனாவத்தையையும் அனுபவிப்பதும், சாக்கிரத்தில் அனுபவித்தவை சொப்பனத்தில் தோன்றாமற் போதலையும், சொப்பனத்தில் அநுபவித்தனவற்றுள் சில சாக்கிரத்தில் தோன்றுதலையும் சில தோன்றாமற் போதலையும் அறிவதும் ஆகிய அறிவே ஆன்மாவாம்.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்வி தினவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுட னீயல்லை மற்று.

அன்வயம்— அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் கிடப்ப, அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று, அவ்வுடலின் வேறு ஒன்றுகொண்டு விளையாடி, மீண்டு அதனை மாறல் நீ உடல் அல்லை.

(இ-ள்.) அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் = அத்தூல உடம்பினின்று உயிர்ப்பனவாகிய ஐம்பொறிகள்—கிடப்ப = (அவ்வுடம்பிலேயே தொழிலற்றுக்) கிடப்பனவாக—அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று = (அவை அவ்வாறு கிடந்தபோது, புறத்து நிகழும் தொழிற்பாடெல்லாம்) அடங்கி அவ்வுடலினுள்ளே வருந்தமில்லாமற்போய்—அவ்வுடலின் = அத்தூல உடம்புபோல்—வேறு ஒன்று கொண்டு விளையாடி = அதற்கு வேறாகியதோர் உடம்பை யெடுத்துக்கொண்டு (வேறொரு விதமாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று) விளையாடி—மீண்டு அதனை மாறல் = மீளவும் அதனை மாறி மேற்செல்லுதலால் (அஃதாவது, சொப்பனாவத்தையை விட்டு நீங்கி அதற்கு மேலுள்ள சாக்கிராவத்தைக்குரிய தூல தேகத்தை யடைதலால்)— நீ உடல் அல்லை = நீ அச்சூக்கும தேகமல்லை; அதனின் வேறானை. (எ-று.)

* உயிர்ப்ப = உயிர்ப்பன. மீண்டு = மீள. மாறல் = மாறுதலால்.



அவ்வுடம்பு என்று சுட்டியது முன் தேகான்மவாதிகளை மறுத்த விடத்து உயிரன்றெனச் சாதித்த தூல உடம்பை.

சூக்கும தேகமாவது சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் காரண தன்மாத்திரைகளைந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் மூன்றும் ஆகிய எட்டினாலும் உண்டாகும் அரு உடம்பு.

---

## மாயா விளக்கம்.

மா என்பது ஒடுங்குதல். யா என்பது வருதல். ஆதலின் எல்லாக் காரியங்களும் தன்னிடம் வந்து ஒடுங்குதற்கும் தன்கணின்று தோன்றுதற்கும் காரணமாய் நிற்பது யாது? அது மாயை என்று சொல்லப்படும். அம்மாயை ஒன்றற்கொன்று நுட்பமாய்ச் சென்றடங்கும் சூக்குமப் பொருளெவற்றினுக்கும் முடிவிடமாய் நிற்கும் அதிஷ்டானமாதலால் அதி சூக்குமப் பொருளாம்.

மாயை சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றுவகைப்படும். இவையே பரப்பிரகிருதி எனவும், அபரப் பிரகிருதி எனவும், மூலப் பிரகிருதி எனவும் சொல்லப்படும். இவற்றுள் சுத்தமாயையிலிருந்து அசுத்தமாயை தோன்றிற்று என்பர் சிலர். இது பொருத்தமன்று. சுத்தமாயை வேறு. அசுத்தமாயை வேறு. இவ்விரண்டும் தனித்தனி முதற்பொருள்களாம். பிரகிருதி மாயை மாத்திரம் அசுத்தமாயையின் காரியமாயுள்ளது. இம் மூவகைமாயையிலிருந்தே சைவசமயத்தில் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களுந் தோன்றின. சுத்தமாயையில் தோன்றிய தத்துவங்கள் ஐந்து. அசுத்தமாயையில் தோன்றிய தத்துவங்கள் ஏழு. பிரகிருதி மாயையில் தோன்றிய தத்துவங்கள் இருபத்து நான்கு. இந்த ஐந்து, ஏழு, இருபத்து நான்கு ஆகிய முப்பத்தாறு தத்துவங்களும் மாயாகாரியங்களாம்.

சுத்தமாயையின் காரியமைந்தும் சிவதத்துவம் எனப்படும். அசுத்தமாயையின் காரியமேழும் வித்தியாதத்துவம் எனப்படும். பிரகிருதி மாயையின் காரியமிருபத்து நான்கும் ஆன்ம தத்துவம் எனப்படும். இவற்றுள் சுத்தமாயா தத்துவங்களினது தோற்றம் விருத்திகாரியமாகும். அதாவது ஆடையிலிருந்து கூடாரந் தோன்-

றும்போது ஆடைக்கு யாதொரு நாசமுமின்றி விருத்தியாய்த் தோன்றுவது போலாம். அசுத்தமாயா தத்துவங்களினது தோற்றம் ஏகதேச பரிணாமமாகும். அதாவது நெய்யின் ஏகதேசத்தில் புழு உண்டாதல்போலாம். இப்படிக்கன்றி இந்த அசுத்தமாயா தத்துவங்கள் பிரமத்தின் விவர்த்தன காரியமென்றல் பொருந்தாது. (விவர்த்தனம் ஒன்று மற்றொன்றாக மாறுபடக்காண்டல்; கானலில் நீர்த்தோற்றம்போல்.) என்னை? பிரமம் எல்லாவுயிர்களுக்கும் பிரகாசத்தைத் தந்து ஞானச்சுடராய் நிற்குமல்லது இப்பியில் வெள்ளி போலத் தோற்றமாத்திரமாய்க் காணப்பட்டு ஜீவர்களை மயக்கும் பொருளல்ல. அன்றியும் பிரமம், எப்பொருள்களையும் தன் சந்நிதியில் காரியப்படுத்துவதன்றி விருத்தி, பரிணாமம், விவர்த்தனம் ஆகிய மூவிதகாரியப் பாட்டினுள் ஒன்றினும் உட்படுவதன்று. இவ்வுண்மையறியாத சிலர் இப்பியில் வெள்ளித்தோற்றமுண்டாகிக் காண்பாரை மயக்குதல் போல பிரமமே மாயா தத்துவகாரிய வுலகமாய் விவர்த்தனப்பட்டு உயிர்களை மயக்குமென்று கூறுவர். இவ்வாறு பிரமம் மயக்கும் பொருளாயின் அதனில் வேறாக ஆன்மாக்களைத் தெருட்டும்பொருள் யாதோ?. விடைபகர இயலாதாகலின் ஆன்மாவினுடைய மயக்க வுணர்வினை முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துநின்ற பிரமத்தின் தலையிலேற்றிப் பிணங்கும்படிச் செய்தல் சால்புடைத்தன்று. ஆயின்,

மண்ணோடைந்தும் வழங்குயிர்யாவுமே
அண்ணலேயுன்னருள் வடிவாகும்மே.......என்று

ஸ்ரீ தாயுமானசுவாமிகள் வெளிப்படையாக ஓதியுள்ளதின் கருத்து யாதெனில் கடவுள் எல்லாப் பொருள்களிலிடத்தும் அத்துவிதமாய் வேறற நின்ற இயல்பை விளக்கியதேயன்றி மயங்கக் கூறியதன்று. அவ்வுண்மையினை அடியில் காட்டிய சில பிரமாணங்களால் உணர்த்துவார்.

வாறுதி நீயெனவே வைத்தமறை என்னையு நீ
தானாகச் சொல்லாதோ சாற்றாய் பராபரமே......

பாராதி நீயாய்ப் பகர்ந்தால் அகமெனவும்
ஆராயுஞ் சீவனு நீ யாங்காண் பராபரமே......

விளக்குந் தகளியையும் வேறென்னார் நின்னைத்
துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே......



அருளுடைய பரமென்றோ அன்றுதானே
யானுளனென்றும் எனக்கே ஆணவாதி
பெருகுவினைக்கட்டென்றும் என்றற்கட்டிப்
பேசியதன்றே அருளால் பேசிற்றன்றே.

இப்பிரமாணங்களும் ஸ்ரீ தாயுமானசுவாமிகளுடையனவே. இன்னும் அநந்தமுள. விரிக்கிற் பெருகும்.

சோ. சிவ அருணகிரிமுதலியார், சோளங்கிபுரம்.

---

## கூர்ம புராணம்.

(121 - வது பக்கத்தொடர்ச்சி.)

முக்குணத்தூலாய மூவர்களுள் முதலிருவர்க்குஞ் சத்துவ ராசதங்களை ஒரோவழி யுபசரித்து, இறுதியினிற்கும் எம்பிரானை உருத்திரர்க்குத் தாமதகுணத்தைச் சாற்றினும் அவர்செயலியாவும் கருவிகொண்டறுத்துக் காயப்புண்ணாற்றுந் தருமவைத்தியன் றன்மைபோலவும், புதல்வர் தஞ்சொல்லைப் போற்றுவிடத்து வளாரிலடித்தூக்கிப் பந்தமிடுந் தந்தைதாயர் தண்டம்போலவும், அழுக்கெடுக்கும் வண்ணான் வெள்ளாவியிலே வைத்துக் கல்லின் மழுக்கும் வன்மைபோலவும் புறத்துக் காணப்படினும், அகத் தவையெல்லாம் ஆன்மாக்கட்குக் கன்மத்தையூட்டி மலமுங்கழீஇ யந்தமிலின்பத் தழிவில் வீட்டை யளிப்பான்செய்யும் பெருங்கருணைத் திறனாய்ப் பிறங்கலான், வெண்ணிற விளக்கம் வாய்ந்த சத்துவகுணரூபசுதந்தரன் சங்கரனேயென்றும், அவனியல்பினையும், அடையுமுபாயங்களையும் உண்மையிற்கூறுஞ் சிவபுராணங்களே சத்துவகுண புராணமாம் என்றும், இப்புராணமும் அவற்றொன்றாய்ச் சத்துவகுணத்ததாமென்று முணர்த்துவான் "வெண்மை" என்ற வண்ணப் பண்புமொழியை முதலில்வரித்தும், அப்புராண மென்பெயர்த்தோ வென்பார்க்கு, வெண்ணிறமுள்ள திருப்பாற்கடலி லமுதங் கடைந்தகாலத்துக், கூர்மரூபமாகிய விட்டுணுவினால் தாமரைமலரில்வாழு மிலக்குமிக்குக் கற்பவிருத்தாந்தங்கள் எடுத்துரைக்கப்பட்டமையாற் கூர்மபுராணம் என்னும் பெயர்த்தெனக் குறிப்புரைப்பான், பால், தவள முதலிய வெண்மைப் பண்புக்குரியவாய பரி

ளாயச் சொற்களை யெடுக்காது, நீருக்குரிய எழுத்தாகிய வகரத்தை முதலாகவுள்ள மொழியையே வைத்துங் கூறினன் என்க. என்னை? வகரவெழுத்தால் நீரும், அதனால் அதனது நிறமாகிய வெண்மையும், குறியாகிய தாமரையும், அதிதேவதையாகிய விட்டுணுவும், தோற்றமும் உண்மைவிளக்கத்தாற் பெறப்படுவ வாகலின்.

இறைவன் பொங்கியெழுந்து முரணொடுமுடுகிய கங்கையைக் குறைத்தடக்கிய திருமுடியிற்றானே, மங்கியிழிந்து சரணெனச் சார்ந்த சந்திரனை நிறைத்தடக்குந் தன்மைபோல, அவனது மெய்ம்மைப் புகழ்மிக்க விப்புராணப் பொருளை மேற்கொண் டடைவார் மேலாவிளங்குவார் என்றும், "அலர்மதியு மென்கனியுங் களங்குறையுங் கலைகுறையுமானக் காலும்-புலவரெலா மிகமகிழ்ந்தே யமுதெனவே பயனுகர்ந்து புகழா நிற்பர்-நிலவுமிழுமதி கரவு புரிபவர்க்கும் விரகியர்க்கு நெருப்பாத் தோன்று-முலகினிலென் கனியருங்கா லுடையவர்க்கும் பேதையர்க்கு முவப்பெய்தாதே" என்றும், "மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலுந், தேய்தலுமுடைமையைத் திங்கள் செப்புமால்" என்று சிந்தாமணியிற் கூறியாங்கு, இப் புராணமும் உலகத்தோற்றமொடுக்கமுதலிய பஞ்சலக்கணங்களையும் உணர்த்து மென்றுங் குறிப்பா லுணர்த்துவான் "நிலாக் கற்றை கான்று விளங்கும் பிறை" எனவும், பிறைச்சந்திரன் வெள்ளியதாய் வளர்ந்து, இருளைப்போழ்ந்து, அமுதவொளியை யளித்து, உடுக்களைத் தலைமைபூண்டு, அசுவினிமுதலிய நட்சத்திரங்களுள் கிரமந்தப்பாமே கலந்து அவைகளை யளிக்கச் சுழன்று, அருவுமுருவும் அருவுருவுமுடைத்தாய், இரவினும், பகலினும், இராப்பகலினு நின்று, உலகத்தானும், பதினெண் கணங்களானும் பரவப்படுந்தன்மைத்தாய், வானிலியங்குங்கும் நவக்கிரகங்களுள் ஏனைய கிரகங்கள் போலக் காணப்படாத (இராகு கேதுக்களாகிய) பொருள்களைத் தன்கட்காட்டி, முகத்திற் சிறந்து விளங்கி யொளிரும் பொருளைத் தாகலின் அவ் வொப்புமைகொண்ட கோடென்பான் "பிறைக் கோடு" எனவுங் கூறினன்.

(இன்னும் வரும்.)

# பாரதம்.

## அருச்சுனன் பாசுபதம் பெற்ற சரித்திரம்.

### தேவாரம்.

அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாய
மெடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.

தனது சிறிய தந்தையாகிய விதுரன் தன் பிதாவாகிய திருதராட்டிரனை வெறுத்து, பஞ்சபாண்டவர் வசித்திருந்த காமியவனஞ் சென்று திரும்பியதைத் துரியோதனனறிந்து கடுங்கோபங்கொண்டு, பீஷ்மர் கிருபர் முதலிய பெரியோர்களை வருவித்துச் சபைகூட்டி, விதுரன் தன் பிதாவை விரோதித்துப் பாண்டவரிடம் சென்று திரும்பி வந்ததை யுரைத்து "நம்முடைய ஆஸ்தானத்தின் செல்வங்களை யனுபவித்துக்கொண்டே நமக்குப் பகைவராகிய ஐவர் பட்சமாயிருக்கும் விதுரர் செய்கையைப் பற்றி நீங்கள் சொல்லும் தீர்ப்பு யாது?" என்று கேட்டான். அதைக்கேட்ட சபையார் இன்னது சொல்வதென்று தெரியாமல் மயங்கிக் கிடந்தார்கள். அச்சமயத்தில் தவசிரேஷ்டராகிய அயித்திரியமுனிவர் தமது யாத்திரையின் வழியில் ஐவர் வனவாசம் புகுந்ததையும், அதற்குக் காரணமாயிருந்தவன் துரியோதனனே என்பதையும் அறிந்து, அவனுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்திப் பாண்டவர்களும் கௌரவர்களாகிய துரியோதனாதியரும் ஒருவரை யொருவர் நேசித்து வாழுமாறு செய்ய விரும்பி, துரியோதனன் சபைக்குத் தற்செயலா யெழுந்தருளினர். துரியோதனன் அவரை யுபசரித்து அவர் வந்த காரியத்தை வினவினன். அவர் துரியோதனனுக்கு ஆசிகூறி அவனை நோக்கி, "ஓ, துரியோதன மகாராசனே, யான் திவ்விய தேசங்கள் தோறும் யாத்திரை செய்து வரும் வழியில் காமியவனத்தில் உன் சிறிய தகப்பன் பிள்ளைகள் பஞ்சைகளாய் வனவாசஞ் செய்வதையும், அதற்கு நீயே காரணமென்பதையும் அறிந்து இவ்விடம் வந்தேன். நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். இவ்வுலக வாழ்க்கையே, அனித்தியமானது. அதனினும் இந்தாயமோ நீர்மேற்குமிழிபோன்றது. செல்வமோ நீரில் தோன்

றும் நெடுந்திரையைப்போன்றது. ஆதலால் இவ்வுலக வாழ்க்கை யை மதித்து நீ தருமராசன் முதலியவர்களுக்குத் தீங்கு புரிதல் நீதியன்று. அவர்கள் உனக்குச் சகோதரர்கள், பகைவரன்று. அவர்கள் ஒழுக்கத்திலும் வல்லமையிலும் குறைந்தவர்களல்ல. அவ் வாறிருந்தும் சத்தியத்திற்கு மாறுபடாமல் பெரியோர் கட்டளை யின்படி காட்டிலுறைகின்றனர். அவர்களை நீ பகைத்தால் அவர்க ளுடைய நல்லொழுக்கமே உனக்குப் பகையாய் உன்னை யழித்து விடும். அவர்கள் மானிடராயிருப்பினும் தேவாமிசமுடையவர்கள். நீ இனி அவர்களை வஞ்சியாமல் இங்கு வரவழைத்து அவர்களுக் குரிய சொத்துகளைக் கொடுத்துவிட்டு உனக்குரிய இராச்சியத்திற் செங்கோல் செலுத்திச் சுகமாய் வாழ்ந்திரு'' என்று கூறிப் பின் னும் பலவாறாக இதோபதேசஞ்செய்தனர்.

இவைகளைத் துரியோதனன் கேட்டுக் கோபமடைந்து, சபை யாரை நோக்கி, "பெரியோர்களே, இம் முற்றத்துறந்த பெரிய வர் உலகத்தார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன வென்றிராமல் இவரையும் என்னையும் உறவுசெய்விக்கப் பார்க்கிறார். நாங்களிருவ ரும் ஒத்துவாழ்ந்தால் இவரடையும் பயனியாது? இவர் சொல்லி யதை யோசித்தால் விதுரன் பாண்டவர்களிடம் சென்று ஏதோ ஒரு சூழ்ச்சிசெய்து வைத்திருப்பதுபோற் காணப்படுகிறது. அதை நம்பிப் பாண்டவர் இம்முனிவரைத் தூதனுப்பினார்கள். மகுட மன்னர்கள் சொல்லையுங் கேளாத நான் இம் முனிவாக்கியத்திற்கு உடன்படுவேனோ;'' என்று கூறி, முனிவரைப்பார்த்து "ஐயா, தண்டுகமண்டலத்தைக் கண்டு மரியாதை செய்து உம்மை இம்மகா சபையில் உட்காரவைத்தேன். நீர் ஐவர் தூதுவரென்பதை யறிந் திருந்தால் நான் உம்மை இம்மகா சபையில் உட்காரவிட்டிருக்க மாட்டேன். சீக்கிரத்தில் இதை விட்டெழுந்திரும்'' என்றான். அயித் திரியமுனிவர் துரியோதனன் அவ்வாறு கூறியதைக் கேட்டுச் சினங் கொண்டு அவனைநோக்கி "அடா, பாவி, கல்விச்செல்வமும் பொருட் செல்வமும் உடையவனுக்கு அடக்கமிருத்தல்வேண்டும். எல்லா ரிடத்திலும் அன்பிருத்தல்வேண்டும். நீ உனக்கு இடம் பொருள் ஏவல் மிகுந்திருக்கின்றனவென்றெண்ணி இறுமாப்படைந்திருக்கி றாய். அன்பும் அடக்கமுமில்லாதவனுக்கு இடம் பொருள் ஏவல் எல்லாம் இருந்தும் என்ன பயன் செய்யும்? உன் செல்வமே உன்



உயிருக்கு வாளாய் முடியும். நான் வாந்திபண்ணினசோறென அருவருத்துத் தள்ளிய செல்வத்தருக்கினால் நீ யென்னை யொரு துரும்பாகப் பாவித்தாய். நீ பிழைக்கவேண்டி உனக்குப் புத்தி புகட்டவந்த என்னை இகழ்ந்து கூறினை. நீ சிங்காதனத்தில் உட் கார்ந்திருக்கும் இறுமாப்பினால் என்னை உட்காரவேண்டாமென்று உதாசீனமாய்க் கூறினாய். இனி நடக்கப்போகும் யுத்தத்தில் நீ பஞ்சைகள் என்று மதித்திருக்கும் பாண்டவருள் ஒருவனாகிய வீம னால் உன் தொடைமுறிந்து சாவக்கடவாய்'' என்று சபித்துத் தக்ஷணம் சபையைவிட்டகன்றார்.

துரியோதனன் குணமென்னுங் குன்றேறி நின்ற அம்முனிவ ரிட்ட சாபத்திற்கும் அஞ்சாதவனாய், சபையாரைப்பார்த்து "பாண் டவர்கள் பஞ்சைகளாய் வனவாசஞ் செய்துகொண்டிருந்தும் தங் கள் துர்க்குணங்களை விட்டொழிக்காமல் இம்முனிவனை இங்கே யனுப்பி என்னைச் சாபத்திற்குள்ளாக்கினர். அவர்களை இனி உயி ரோடிருக்கவிடேன். நீங்கள் என்னைத் தடுத்தலாகாது'' என்று கூறி துச்சாதனன், கர்னன், சகுனி என்னும் இம் மூவரைப் படைத் துணையாக்கொண்டு, யுத்தசன்னத்தனாய்ப் பாண்டவர் இருக்கும் காமிய வனத்தை நோக்கிச் சென்றான். செல்லும் வழியில், வேதங் களைச் சிக்கறுத்த வியாசமுனிவர் தற்செயலாய் எதிரே எழுந்தருளி னர். துரியோதனன் அவரைக்கண்டு உடனே இரதத்தைவிட்டி றங்கி நமஸ்கரித்து நின்றான். வியாச முனிவர் அவனை யாசீர்வதித் து, அவன் பாண்டவர் மீது படையெடுத்துச் சென்றதை யறிந்து, அவனைப்பார்த்து "துரியோதன மகாராசனே, நீ சகலகலாவல்ல வனாயிருந்தும் ஏழைகள் மேல் கோபங்கொண்டு காலமல்லாக்கால த்தில் போர்க்கெழுதல் உன் வீரபராக்கிரமத்திற்கு அழகாகுமா?, அப்படிச் செய்தால் உன்னை மற்ற அரசர்கள் மதிப்பார்களா?, இதை நீயே யோசித்துப்பார். கோபவசப்பட்டு எதையும் பதறிச் செய்துவிடலாகாது. துரோணாச்சாரி தீர்ப்பின்படி பாண்டவர்கள் வனவாசஞ் செய்து பதின்மூன்று வருடங்களையும் கழித்து வரட் டும். அதன்பின் உன் கருத்தின்படி நடந்துகொள்ளலாம்'' என்ற னர். அவ்வாறு தனது வமிச கர்த்தாவும் குலகுருவுமாகிய வியாச பகவான் கூறியதைத் துரியோதனன் கேட்டு, அயித்திரியமுனிவ ரால் நேரிட்ட சாபத்தை நினைந்து, இவர் சொல்லையுங் கடந்தால் இவராலும் சாபம் நேரிடுமென்றஞ்சி, சேனைகளைத் திருப்பிக்கொ

ண்டு அத்தினபுரத்தை யடைந்தான். பின்பு வியாசர் காமியவனத்திற்குச்சென்று ஐவராலும் திரௌபதியாலும் பூசிக்கப்பெற்று அவர்களுக்குப் பல ஆசிகள் கூறி நின்றார். அப்படி நின்றவரை நோக்கித் தருமராசன் "என்னையனே, துரியோதனாதியர் இந்திரப்பிரஸ்தத்திலிருந்த எங்களை அத்தினபுரத்திற் கழைப்பித்து சகுனியோடு சூதாடச்செய்து, பின்பு இவ்வனத்தில் வந்து வாசஞ்செய்யும்படி செய்துவிட்டனர். என்னால் என் சகோதரர்களும் பாஞ்சாலியும் துன்பத்தை யனுபவிக்கிறார்கள்" என்று கூறினான். வியாத முனிவர் "ஓ தருமநந்தனா, சென்றதை நினைந்து வருந்துவதிற் பயனில்லை. சென்றதை நினைந்து வருந்துவோரும் இனி வருவதைக் கருதி மகிழ்வோரும் மனிதருட் பதராவர். ஆதலால் ஊக்கத்தைக் கைவிடாமல் இனிச் செயற்பாலது யாதோ அதையே முயன்று செய்தல் வேண்டும்" என்றனர். தருமராசன் "வேதங்களைச் சிக்கறுத்த வேதியர் பெரும, இனி நாங்கள் செய்யவேண்டியது யாது?; அதனைத் தேவரீரே கட்டளையிட்டருளல் வேண்டும்" என்றனன். வியாதர் "துரியோதனனோ அசத்தியன். பதின்மூன்று வருடங்கழிந்த பின்னும் உங்கள் நாட்டை உங்களுக்குக்கொடான். போர்செய்து தன்னுயிரை யிழப்பான். அவனுக்குச் சுயபலமிருப்பதோடு சேர்க்கைப் பலமுமிருக்கிறது. என்சொலினும் கைத்துடையான் காற்கீழொதுங்குங் கடன் ஞாலம். அவனைச் சாமானியன் என்று எண்ணிவிடலாகாது, நீங்கள் அவனை வெற்றிகொள்ளவேண்டினால், மலையைச் சிலையாகவளைத்த மகேசுவரனுடைய திருக்கரத்திலிருக்கும் பாசுபதாஸ்திரத்தைப் பெறல்வேண்டும். அதைப் பெற்றால் துரியோதனாதியரை இலேசாய்வென்றுவிடலாம். அதைப் பெறத்தக்கவன் அருச்சுனன் ஒருவனே. அவன் அதைப் பெற வேண்டித் தவஞ்செய்தல்வேண்டும்" என்றருளினர். அருகிலிருந்த அருச்சுனன் அதைக்கேட்டு, அவரை வணங்கி, "சுவாமீ, தேவரீருடைய உண்மைத் திருவாக்கால் தவத்திற்கு அருகன் என்று சொல்லப்பெற்ற என் பாக்கியமே ஒப்பற்ற பாக்கியம்" என்று தோத்திரித்து நின்றான். வியாதர் அருச்சுனனை நீராடிவரச்செய்து ஒருமந்திரத்தை யுபதேசித்து "வெள்ளிமலைச் சாரலில் தேவதேவனாகிய சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெறக்கடவாய்" என்றுகூறி தருமராசன் முதலியோருக்கும் ஆசி கூறிச் சென்றனர்.

(இன்னும் வரும்.)

## சந்நியாசி.

### ஆறுமுக நாவலரவர்கள் நான்காம் பாலபாடம்.

சந்நியாசியானவன் எல்லாப்பற்றுக்களையும் முற்றத்துறந்தவன். சந்நியாசி காஷாயவஸ்திரமேயன்றி வேறுவஸ்திரந்தரிக்கலாகாது. அவனுக்குத் தண்டகமண்டலங்களும் இருத்தல்வேண்டும். பிதா மாதாப் பெண்டிர் பிள்ளை முதலானோரிடத்தும் பொருண்முதலானவைகளிடத்தும் பற்றில்லாதவனே காஷாயந்தரித்தல் வேண்டும். பற்றுள்ளவன் காஷாயந்தரித்தால், ரௌரவ நரகத்திலே கிடந்தழுந்துவன். இல்லறத்தின் வழுவினால், அவ்வழுப் பிராயச்சித்தத்தினாலே நீங்கும். துறவறத்தின் வழுவினால், அவ்வழு அவனை நரகத்திற் செலுத்துவதன்றிப் பிராயச்சித்தத்தினாலே நீங்காது. துறவறத்தின் வழுவுதல் மலைச்சிகரத்தினின்று தவறி விழுதல் போலும்.

சந்நியாசி சற்குருவை வழிபட்டு, ஞானசாத்திரங்களை ஓதி, அவற்றின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, நிட்டைகூடல்வேண்டும். தன்னை அடைந்த பரிபக்குவர்களுக்கு அவைகளை ஓதுவித்து, அவைகளின் பொருளைப் போதித்தல்வேண்டும்.

சந்நியாசி ஒருவரையும் பகைக்கலாகாது. அநித்தியமாயும் உரோகத்துக்கு இருப்பிடமாயும் உள்ள சரீரத்தின்பொருட்டு ஒருவரோடும் கோபிக்கலாகாது. தம்மவரென்றும் பிறரென்றும் விருப்பும் வெறுப்பும் வைக்கலாகாது. எல்லாவுயிர்களிடத்தும் கருணையுடையவனாய் இருத்தல்வேண்டும். நடக்கும்போது தரையிலே யாதொரு ஜந்துவும் இல்லாதிருக்கப்பார்த்து அடிவைத்தல்வேண்டும். தண்ணீரை நன்றாக வஸ்திரத்தினாலே வடித்துச் சுத்திசெய்து குடித்தல்வேண்டும். தன்னை ஒருவன் வைதாலும், அடித்தாலும், மற்றை எவ்வகைத் துன்பஞ்செய்தாலும், அவன்மேல் வெறுப்புக் கொள்ளாமல், இனிய வார்த்தைகளையே பேசல்வேண்டும். தனக்குப் பிறர் செய்யும் அவமானத்தை அமிர்தமாகவும், வழிபாட்டை விஷமாகவும் கொள்ளல்வேண்டும். வெய்யில் காற்று முதலானவைகளுக்கும், சரீரத்தில் வரும் துன்பங்களுக்கும், சிறிதும் அஞ்சாமல், அவைகளைச் சகித்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் இருத்தல்வேண்டும். உயிரோடிருத்தலையும் இறத்தலையும் சமமாகவே எண்ணல்வேண்டும்.

சந்நியாசி தாம்பூலம் சந்தனம் பூமாலை ஆபரணம் முதலிய
போக்கியப் பொருள்களை அநுபவித்தலும், கீதங்கேட்டலும், கூத்
துப்பார்த்தலும், பெண்களை இச்சித்தலும், அவர்களோடு பேசுத
லும், அவர்கள் கூட்டத்திற்போதலும், கோயிலதிகாரஞ்செய்தலும்,
அரசர்வாயிலிற்செல்லலும், கழுத்தின்மேலன்றிக் கழுத்தின் கீழே
க்ஷௌரஞ்செய்து கொள்ளலும், காஷாயவஸ்திரத்தை முழங்கால்
களின்மேலன்றி முழங்கால்களின்கீழே தொங்கும்படி உடுத்தலும்
ஆகாவாம்.

சந்நியாசி வலக்கையிலே பிக்ஷாபாத்திரத்தையும் இடக்கையி
லே தண்டத்தையும் தரித்துக்கொண்டு, நற்குடிப்பிறப்பும் நல்லறி
வும் நல்லொழுக்கமும் ஈசுரபத்தியுமுடைய கிருகத்தர்கள் வீட்டிலே
மௌனத்தோடு போய், பிக்ஷை வாங்கி, ஒருபொழுது உண்ணல்
வேண்டும். தரித்திரரிடத்தே செல்லலாகாது. பிக்ஷையின் பொரு
ட்டு யாரையேனும் நெருக்கலாகாது. பிக்ஷைக்குப் போனால்,
முற்றத்திலே தன்னிரண்டு கண்களையும் வலக்காற் பெருவிரலில்
வைத்துக்கொண்டு நின்று, பிக்ஷையேற்றல்வேண்டும். பிக்ஷையின்
பொருட்டு ஒரு பசுக்கறக்கு நேரமட்டும் நிற்றல்வேண்டும். அவ்வ
ளவும் பிக்ஷை வாராதொழியின், மற்றை வீட்டுக்குச் செல்லல்வே
ண்டும்; செல்லும்பொழுது, பிக்ஷையிடக் கொண்டுவந்தவர் அழைக்
கின், அவ்விடத்திற்றானே நின்றுகொண்டு வாங்கல்வேண்டும்; திரும்
பிப்போய் வாங்கலாகாது. பிக்ஷை கிடைத்தபோது சந்தோஷித்
தலும், கிடையாதபோது துக்கித்தலும் ஆகாவாம். விஷயங்களால்
இழுக்கப்படுகின்ற இந்திரியங்களை, அற்ப போசனத்தினாலும், ஏகா
ந்தத்தில் வசித்தலினாலும், நல்வழியிற் நிறுப்பல்வேண்டும். குறி
சொல்லல், வைத்தியம், சோதிடம், மந்திரவாதம் முதலியவைகளி
னாலே பிக்ஷை சம்பாதிக்கலாகாது.

பிக்ஷை சாந்தானிக பிக்ஷையும், கண பிக்ஷையும், மாதுகரி
பிக்ஷையும், அயாசித பிக்ஷையுமென நான்குவகைப்படும். ஆசிரி
யர் முதலாயினோர், பத்தர்களாயினும், சீடர்களாயினும், அன்பி
னோடு தாமே தரும் மடம் விளைநில முதலியவைகளைச் சந்தானபரம்
பரையாக அநுபவிக்கும்படி வாங்குவது சாந்தானிகபிக்ஷை. இல்
வாழ்வாருடைய தெருவிலே புறப்பட்டு வீடுதோறும் அரிசிவாங்கு
வது கணபிக்ஷை. வண்டானது ஒரு பூவிலிருந்து அதனை வாதியா
மல், பலபூக்களிலுஞ் சென்று சிறுகச் சிறுகத் தேனைக் கிரகித்தல்



போல, விரத்தனானவன் ஒருவரை வாதியாமல் பலரிடத்தும் செ
ன்று சிறுகச் சிறுக அன்னம் வாங்குவது மாதுகரி பிக்ஷை. தனக்
கென்று காசையும் பணத்தையும் தானியத்தையும் தீண்டாதவனுக்
கே இந்த மாதுகரிபிக்ஷை பண்ணுதல் தகும். மத்தியானமாதற்கு
முன்னே மாதுகரி பிக்ஷைக்குப் புறப்படலாகாது. விரதத்தின்
முதிர்ச்சியினாலே 'நமக்குள்ள பிராரத்தத்தை நாம் எங்கே இருப்
பினும் கடவுள் புசிப்பிப்பர்' என்று துணிந்து, இருந்தவிடத்திலே
தானே ஒருவன் தானாகக்கொண்டுவந்து தந்ததை வாங்கிப் புசிப்
பது அயாசித பிக்ஷை.

ஈசுரநிந்தகர், குருநிந்தகர், வேதநிந்தகர், ஆகமநிந்தகர், தேவ
த்திரவியங்கவர்வோர், சமயாசாரமில்லாதவர், கொலைஞர், கள்வர்,
கள்ளுண்போர், புலாலுண்போர், பிறன்மனை நயப்போர், பொய்ச்
சான்று சொல்வோர், பொய்வழக்குப் பேசுவோர், கன்னிகையை
விற்போர், இழிந்த வருணத்தார் முதலாயினோரிடத்துப் பிக்ஷை
வாங்கலாகாது. இவர்களுடைய அன்னத்தைப் புசித்தவர்களுக்கு
ஒருபோதும் சித்தசுத்தி பிறவாது. அதனால் அவர்கள் மேன்மே
லும் பாவங்களையே செய்து நரகத்துன்பத்தை அநுபவிப்பர்கள்.
அழுக்குப் புடவையுடுத்தவள், கருப்பிணி, வெள்ளாட்டி, நற்குண
மில்லாதவள், எண்ணெயிட்டுக்கொண்டவள், தாம்பூலந்தின்றவள்,
கணவனுக்கு முன்னுண்பவள், அருவருப்பானவள், உறுப்புக்
குறைந்தவள், கருங்குட்ட முதலிய நோயுடையவள், விதிப்படி
சௌசமுதலியன செய்யாதவள், சனனமரணசௌசமுடையவள்
முதலியோர்கள் இடும் அன்னம் வாங்கலாகாது. தீக்ஷையில்லாதவ
ருடைய அன்னம் தீக்ஷையுடையவர் புசிக்கலாகாது.

சந்நியாசவேடந் தரித்துக்கொண்டு மண் பொன் பெண்களில்
இச்சைவைப்பவர்களும், கோயிலதிகாரஞ்செய்யப் புகுந்து தேவத்
திரவியங்களை உபயோகிப்பவர்களும் பதிதராவர்கள். அவர்கள்
இருபத்தெட்டுக்கோடி நரகங்களிலுங் கற்பகாலங் கிடந்தழுந்துவர்
கள். அவர்கள் அநுபவிக்கும் நரகத்துன்பங்களைச்சொல்லமுடியாது.
அவர்கள் எண்ணில்லாததரம் மலப்புழுவாய்ப் பிறந்து பிறந்து,
மலத்தை உண்டிறப்பர்கள். இப்பிறவியினும், மேல் வரும் பிறவி
களிலும், சுகசன்னி, பிரமேகம், கிரந்தி, பகந்தரம், அரையாப்பு,
நீரடைப்பு, கிரகணி, நீரிழிவு, மூலரோகம், பிளவை, பெருவியாதி,

குட்டம், க்ஷயம், மகாக்ஷவாசம், குன்மம் முதலிய எண்ணில்லாத வியாதிகளினாலே வருந்துவர்கள். அப்பதிதர்களை வணங்குதலும், அவர்களோடு கூடுதலும், அவர்களோடு பந்தியிலிருந்து புசித்தலும் அவர்களைத் தீண்டலும், பிறவும் பெரும்பாதகங்களாம். ஆதலினாலே, நரகத்துன்பத்துக்கும் பிறவித்துன்பத்துக்கும் அஞ்சினவர்கள், அப்பதிதர்களைக் கண்டால், தூரத்திலே நீங்கிவிடக்கடவர்கள்.

பிரமசரியமுதலிய நான்காச்சிரமங்களும் கிருகஸ்தாச்சிரமத்தினாலேயே நிலைபெறுகின்றன. சாத்திர விதிப்படியே அதனதன் கருமங்களை நடத்திவந்தால், இந்த நான்காச்சிரமங்களும் தனித்தனியே மோக்ஷத்தைக் கொடுக்க வல்லனவாம். நான்காச்சிரமிகளுள்ளும், வேதாகமங்களின் விதிப்படி ஒழுகும் கிருகஸ்தன், மற்றை மூன்றாச்சிரமிகளையும் பிக்ஷைகொடுத்துப் பாதுகாத்தலினாலே உயர்ந்தவனென்று சொல்லப்படுகின்றான். நதியும் நதமும் சமுத்திரத்தைச் சேர்தல்போலவே, பிரமசாரியும் வானப்பிரஸ்தனும் சந்நியாசியும் கிருகஸ்தனையே பிக்ஷையின்பொருட்டுச் சேர்கின்றார்கள். நதியென்பது கிழக்குமுகமாக ஓடும் ஆறு. நதமென்பது மேற்கும்கமாக ஓடும் ஆறு.

தேவர்கடனை யஞ்ஞத்தினாலும், முனிவர்கடனை வேதாத்தியயனத்தினாலும், பிதிர்கடனைப் புதல்வரைப் பெறுதலினாலும் தீர்த்துக்கொண்டே, சந்நியாசத்திற் பிரவேசித்தல்வேண்டும். பிரமசரியத்திலிருந்து கிருகஸ்தாச்சிரமத்தையும், அதிலிருந்து வானப்பிரஸ்தாச்சிரமத்தையும், அதிலிருந்து சந்நியாசாச்சிரமத்தையும் அடைவதே தகுதி. ஆயினும் கிருகஸ்தாச்சிரமத்திற்கு உரிய சத்தியில்லாதவரும், பிரபஞ்சத்திலே மிக்கவைராக்கியமுடையவரும், விரும்பியபோது சந்நியாசம்பெறலாம்.

சந்நியாசம் பெற்றவர், குளிக்கப்போய்ச் சேறுபூசிக்கொள்ளுதல்போலக் கூடாவொழுக்கம் பூண்டு பழிபாவங்களை அடையாமல், தங்கள் காலமெல்லாம், செபம், தியானம், பூசை, ஞானநூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்பவைகளிலே, போக்கல்வேண்டும். இவை செய்யாதவருடைய சந்நியாசவேடம் சிறிதும் பயன்படாது.



திருமந்திரம்.

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடமெய் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே.

திருவள்ளுவர்.

வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

---

## ஸ்ரீ பஞ்சாக்கர மகிமை.

(131 - வது பக்கத் தொடர்ச்சி.)

மோக்ஷசாதனத்திற்கு மூலமாயிருப்பது
பஞ்சாட்சரமானது தம்பனம், மோகனம், வசியம்,
மன்றி, அவ்வவர் விருப்பத்தின்படி பேதனம், மாரணம்
ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், சித்திகளையுங் கொடுக்கும்.
என்னும் அஷ்ட கருமவித்தை முதலிய அதிகாரிகளின் பக்குவ தார

இத்திருவைந்தெழுத்து சாதக முறையே தூலம் சூக்கு
தம்மியத்தின்படி சோபானக்கிரமத்தில் ஐந்துவகையாய் விள
மம் காரணம் மகாகாரணம் முத்தி என்னும் தூலத்திற் சூக்கு
ங்கும். அன்றியும், முறையே தூலத்திற்றூலம், தூலத்தில்
மம், தூலத்திற் காரணம், தூலத்தில் மகாகாரணம், சூக்குமம்,
முத்தி எனவும், சூக்குமத்திற் றூலம், சூக்குமத்திற் சூக்குமத்
சூக்குமத்திற் காரணம், சூக்குமத்தில் மகாகாரணம், சூக்குமம்,
தில் முத்தியெனவும், காரணத்தில் தூலம் காரணத்திற் காரணத்தின்
காரணத்திற் காரணம், காரணத்தின் மகாகாரணம், இவை அவரவர்
முத்தியெனவும் பதினைந்து வகையாகவுமிருக்கும். கிய்ய ஆசிரியர்
கள் தத்தம் அநுசந்தான வவசரசந்தர்ப்பங்களுக்
மூலமாய் அறிந்துகொள்ளற் பாலனவாம்.

ஸ்ரீ பஞ்சாக்கரமானது நகரத்தை முதலினும் யகரத்தை யிறுதி
யினும் வைத்து செபிக்கும்போது தூலபஞ்சாக்கர மெனப்படும்.
இது அவரவர்களின் சமயாசார கன்மாநுட்டானங்களுக்கு இன்றி
யமையாததாய்ச் சமயாசாரியராகிய காரிய குருவினாலே யாவர்க்
கும் முதலில் உபதேசிக்கப்படுவதாம். நகார மகாரங்களை இறுதி

யினும் சிகார வகாரங்களை முதலினும் யகாரத்தை யிடையினும் கொண்டிருப்பது சூக்கும பஞ்சாக்கரம் என்னப்படும். இது தூல பஞ்சாக்கரத்தை நியமமாக வநுட்டித்துப் பக்குவ மடைந்தவர்கட்கே மோக்ஷசாதனையின்பொருட்டு ஞானாசாரியராகிய காரண குருவினால் உபதேசிக்கப்படுவதாம். சிகார வகாரங்களிரண்டையும் முறையே எதிர் நிரனிறையாக நிறுத்தி யகாரமானது நடுவேநிற்குமாறு "விகடகவி" என்பதுபோலத் தொடுத்து நிற்பதே காரண பஞ்சாக்ஷரம் எனப்படும். இதனை விகடகவி என்னுஞ் சொல்லில் ட நிற்குமிடத்தில் யகாரத்தையும், க நிற்குமிடத்தில் வகாரத்தையும், வி நிற்குமிடத்தில் சிகாரத்தையும் வைத்தெழுதி யறிந்துகொள்க. இக்காரண பஞ்சாட்சரத்தைப் பெரியோர்கள் இருதலைக் கொள்ளியெனவும் இருதலைமாணிக்கம் எனவும் குறியீடுசெய்து வழங்குவர். இது சாமானியர்க்குபதேசிக்கப்படுவதன்று.

இக்காரண பஞ்சாக்கரமாகிய சிகார வகார யகாரங்களுள்ளே யகாரமாகிய வான்மாவானது சிகாரமாகிய சிவத்தினால் வகாரமாகிய அருளிலே இலயப்பட்டுநிற்க, அருளும் சிவமுமாகிய வகாரம் சிகாரம் என்னும் இரண்டுமாத்திரமாய் நின்று விளங்குவதே மகாகாரண பஞ்சாட்சரமெனப்படும். இது சுவேதாச்சுவதரம், பிருகதாரணியம் கடகவல்லி முதலிய உபநிடதங்களில் தூரீய பிரமத்தின் திருநாமமாகத் தொனிக்கப்பெற்று விளங்குகின்றது. இது தமிழ் மறையில் முதனீண்டு "வாசி" எனவும், வடமொழிச் சுருதியில் இறுதிநீண்டு "வசீ" எனவும் ஓசை பயப்பநிற்கும். இதனை "வாசியருளியதை வாழ்விக்கு மற்றதுவே-யாசி லுருவமுமா மங்கு" என்னும் திருவருட்பயனாலும், "வாசிவாவென்று வாசியைவைத்து, வாசியோடொன்ற வகையறிவாரில்லை, வாசியோடொன்ற வகையறிவாளர்க்கு, வாசியோடீசன் மகிழ்ந்திருந்தானே" என்னுந் திருமந்திரத்தாலும் அறிக.

இம்மகாகாரண பஞ்சாட்சரமாகிய தூரியமந்திரமே சிவன் சிவை சிவம் என்னும் முப்பாற்பொருளும் பெறப்படுமாறு அதீதப் பொருளாய்நின்ற பரப்பிரமத்திற்கு யோகவிசேடநாமமாய் அமைந்து சிவ என விளங்கி நிற்பதாம். இதுபற்றியே கொடிய சண்டாளனாயினும் சிவ என்னும் நாமத்தை உச்சரிப்பானாயின் அவனோடு பேசுக, அவனோடு வசிக்க, அவனோடிருந்துண்ணுக என்று முண்டகோப நிடதம் முறையிடுகின்றது.



இம்மகாகாரண பஞ்சாட்சரமாகிய சிகார வகாரங்களிரண்டினுள், வகாரமாகிய அருளையும் தன்னிடத்து லயப்படுமாறு அடக்கிக்கொண்டு சிகாரமாகிய பதியெழுத்து மாத்திரமாய் தனித்து நிற்பதே முத்திபஞ்சாட்சரமெனப்படும். இதனைப் பெரியோர்கள் நாயோட்டுமந்திரமெனவும், மகாமனுவெனவும், இறையெழுத்தெனவும், பெருவெழுத்தெனவும், பிரம பீஜமெனவும் பரிபாஷையாக வழங்குவர். இதின்பெருமை மகாசிவஞானிகளாலேயே அநுபவவாயிலாய் உணரப்படுவதாம்.

திருமந்திரம்.

நாயோட்டுமந்திர நான்மறைவேத
நாயோட்டுமந்திர நாதனிருப்பிட
நாயோட்டுமந்திர நாதாந்தசோதி
நாயோட்டுமந்திர நாமறியோமே.

ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் பெருமை யளவிடற்கரியது. அநுபவ ஞானம் அணுத்துணையும் இல்லாத எம்போலிகள் அதின் பெருமையைமுற்றிலும் எடுத்து விரிக்கவிரும்புவது ஒரு சுணங்கன் சமுத்திரத்தை முற்றிலும் பானம்பண்ண விரும்புவதுபோலாம். ஆதலால் இவ்வியாசத்தை இம்மட்டோடே நிறுத்தி இடம் வந்துழி ஆங்காங்கு இயன்றவாறு விளக்கிவருவோம்.

தமிழ்வேதம்.

நமச்சிவாயவே ஞானமுங்கல்வியு
நமச்சிவாயவே நானறிவிச்சையு
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே.

திருமந்திரம்.

ஐம்பதெழுத்தே யனைத்துவேதங்களு
மைம்பதெழுத்தே யனைத்தாகமங்களு
மைம்பதெழுத்தி னடைவையறிந்தபி
னைம்பதெழுத்தே யஞ்செழுத்தாமே.

பிரமோத்தரகாண்டம்.

முத்திநன்னெறிக் கொருதுணை மோகவாரிதிக்கு
வைத்தசெஞ்சிகை வடவனல் வினைவனத்திற்குப்
பொத்திநுங்குவெங் கதழெரி புனைமதிக்கண்ணி
யத்தனோர்தை யஞ்செழுத்திது கடைப்பிடித்தறிமீர்.

௩

## சைவப் பத்திரிகாசிரியர் சரித்திரச் சுருக்கம்.

பத்திரிகாசிரியராகவும் கிரந்தகர்த்தராகவுமிருந்து உலகத்திற்கு உபகரித்து வருவோர்களின் சரித்திரங்களை யறியவிரும்புவது உலக இயற்கை. ஆதலால் ஐரோப்பியர் முதலாயினோர் தம்மினத்தவர்களுள் அவ்வக்காலத்தில் தோன்றும் பத்திரிகாசிரியர் முதலாயினோருடைய சரித்திரங்களை யெழுதி யச்சிட்டு உலகத்திற்குப் பயன்படுத்துவது வழக்கமாயிருந்து வருகிறது. நம்மவர்கள் அவ்வாறு செய்யாமையால் பல தமிழ் நூலாசிரியர்களின் சரித்திரங்கள் வெளிவராமல் மறைந்துபோயின. அவர்களுக்குப் பிற்காலத்தில் எழுதப்பெற்ற சரித்திரங்களுள்ளும் பல குன்றக்கூறல், மிகைபடக்கூறல், மாறுபடக்கூறல் முதலிய குற்றங்களுக்கு இலக்காயிருக்கின்றன. ஆதலால் யான் நமது சைவப்பத்திரிகாசிரியரின் சரித்திரத்தை இப்போதே இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடுவதைப் பலமுறை உத்தேசித்தேன். உத்தேசித்தும் இவர் வெளியிட்டுவரும் பத்திரிகையிலேயே இவர் சரித்திரத்தை யெடுத்துக்கூறுவது இவரைத் தற்புகழ்ச்சி யென்னுங் குற்றத்தின் பாற்படுத்துமென வஞ்சி என் விருப்பத்திற்கு மாருக இதுவரையில் வெளியிடவில்லை. ஆயினும் இவர் சரித்திரத்தை இப்பத்திரிகையிலேயே வெளியிடுவதனால் இப்பத்திரிகை விருத்தியடைந்து சைவ உலகத்திற்கு பலநலங்கள் உண்டாகக்கூடுமென்று தீர்மானித்து இப்போது அதனை மிகவும் சுருக்கி வெளியிடலானேன்.

நமது சைவப் பத்திரிகாசிரியர் தமது இளமைப்பருவத்திலிருந்தே சைவசமயாபிமானமும் சிவபுண்ணியஞ் செய்தலில் பெருவிருப்பமும் உழைப்பும் உடையவராயிருந்து வருகிறார். இவர் ஆங்கில பாடசாலைகளில் கல்விபயின்றுகொண்டிருந்தபோதே வைணவ உபாத்தியாயர்கள் யாரேனும் சைவநிந்தனை செய்வாராயின் அதைத் தாட்சிணியமின்றிக் கண்டித்து சைவ சமயத்தின் ஏற்றத்தை நிலைநிறுத்துவர். தம்முடன் கல்விகற்றுக்கொண்டிருந்த சிறுவர்களைக்கூட்டி பால ஞானபோதினி சபை என்ற சபையொன்று வைத்து அவர்களுக்குக் கடவுட் பத்தியையும் சைவஉண்மைகளையும் போதிப்பித்து வந்தனர். பாடசாலையில் கல்விகற்பதைவிட்ட பிறகு ஹிந்து மதாபிமானசபை யென்னுமோர் சபையிலைந்து மகாஜனக்கூட்டங்கள் கூட்டியும், விரிப்பிரசங்கங்கள் செய்தும், கிறிஸ்து



சமயத்தின் கோட்பாடுகளையும் வைதிக சமயங்களின் ஏற்றத்
தையும், கிறிஸ்தவர்கள் செய்யும் முயற்சிகளையும் அம்முயற்சிக
ளால் இத்தேசத்தவர் எண்ணிறந்தோர் தனித்தனியாகவும், கூட்
டங் கூட்டமாகவும், கிராமங்கிராமமாகவும் கிறிஸ்தவர்களாதலையும்,
அதைப்பார்த்துக்கொண்டு இத்தேசத்து வைதிகசமயிகள் வாளா
விருத்தலையும் எந்நேரமும் எடுத்தெடுத்து விளக்கிக்கொண்டிருந்
தனர்.

இவர் உத்தியோகத்தில் அமர்ந்தவுடன் திருமயிலையில் வருடந்
தோறும் பங்குனிமாதத்தில் நடைபெற்றுவரும் பிரமோற்சவ
காலத்தில் அறுபத்துமூவர் மகோற்சவம் என வழங்கும் எட்டா
நாள் திருவிழாவைத் தரிசிக்கச்சென்றபோது, நமது சைவ மகா
சமய உண்மைகளைத் தங்கள் ஒழுக்கத்தால் விளக்கி உலகை வாழ்
விக்கத் திருவவதாரஞ் செய்தருளிய உண்மை நாயன்மார்களின்
மகோற்சவம் அவர்களின் தெரிவரும் பெருமைக்கேற்றவாறு சிறப்
பாக நடைபெறும விருந்ததைக் கண்ணுற்று வருந்தி, அதனைச்
சிறப்பிக்க விரும்பி, அத்தேவஸ்தான தருமகர்த்தரோடு யோசித்து,
நாயன்மார்கள் எழுந்தருளுவதற்கென பதினாறு திவ்விய விமானங்
களும், அவைகளுக்குவேண்டிய ஆயக் கால்கள் தண்டுக்கோல்
கள் முதலியனவும் செய்து கொடுத்தனர். இக்கைங்கரியத்தை
இவர் தொடங்கியபோது இவருக்கு வருவாய் மிகவும் குறைவாயி
ருந்தமையால் காலைமாலைகளில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்து
அதனால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு மிகவும் பிரயாசையோடு
அச் சிவகைங்கரியத்தைச் செய்துவருவாராயினர். இவர் அவ்வாறு
செய்துவந்தமையை ஸ்ரீமான் எழும்பூர் மதுரைநாயக முதலியார்
என்னும் சிவநேய ரொருவர் அறிந்து, இவரைச் சில தனவான்க
ளிடம் அழைத்துச்சென்று பொருள் சேகரித்துக்கொடுத்தனர்.
அச்சமயத்தில் ஒட்டகமண்ட் என வழங்கும் உதகமண்டலத்தில்
சங்கிலிமேஸ்திரி யென்னும் சிவநேயரொருவர் தமக்கு நெடுங்கால
மாகப் புத்திரப்பேறின்றி வருந்தி, அது பெறவேண்டி விநாயகப்
பிரதிட்டை செய்தும், பல பிரார்த்தனைகள் செய்து கொண்டும்,
விரதங்களை யநுட்டித்துக்கொண்டும் இருந்தனர். அவர் பத்திரிகா
சிரியரை யறிந்திருந்தமையால் அவருக்கு இவர் கடிதம் எழுதி
நாயன்மார்களின் விமானங்களைச் செய்தற்குப் பொருளுதவி
செய்யும்படி கேட்டனர். உடனே அச்சிவநேயர் இவருக்கொரு

கடிதம் எழுதி அதில் "எனக்கு வெகுகாலம் புத்திரசந்தானமில்லாமலிருப்பதால் பலவிதமான வைத்தியம் விரதம் பிரார்த்தனைகள் எவ்வளவோ செய்தும் பிரயோசனப்படவில்லை. ஆகையால் இவ்வருஷம் புத்திரசந்தானம் உதித்தால் வருகிற பங்குனிமாதத்தில் பாக்கியாயிருக்கிற விமானங்களை முழுவதும் நானே செய்துவைக்கிறதாக தங்களைக்கொண்டு பிரார்த்தித்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணியிருந்தேன். மறுபடி எப்படியாயினும் ஆகட்டும், இவ்வருஷத்திலேயே முடிக்கலாமென்று யோசித்திருக்கின்றேன். * * * * * * என்னுடைய சந்தான குறைவைப் பற்றி தங்கள் ஆசீர்வாதமும் 63 நாயன்மார்கள் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவருளும் உண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்தார். பத்திரிகாசிரியர் அக்கடிதம் கிடைத்ததும் தமது மனோரதம் நிறைவேறிற்றென்று களிகூர்ந்து உடனே அவருக்குப் பதிலெழுதி, அறுபான்மும்மை நாயன்மார்களிடம் பத்திபூண்டொழுகுவோர்க்குப் புத்திரசந்தானத்தோடு சகல போகபாக்கியங்களும் உண்டாவது திண்ணமாதலால் அவர் விரும்பியவாறே புத்திரப்பேறுண்டாவது திண்ணமாமென்று தெரிவித்தனர். இவர் எழுதியதை விசுவசித்து அவர் உடனே பெருந்தொகை யனுப்பியும், தமது பந்துசனங்களைக்கொண்டு பொருளுதவிசெய்வித்தும் அவ்வருடத்திலேயே விமான கைங்கரியத்தைப் பூர்த்திசெய்வித்தனர். நாயன்மார் திருவருளால் அவ்வருடமுதலாக அவருக்குப் புத்திரப்பேறுண்டாகத் தலைப்பட்டது. அவர் அதனால்களிகூர்ந்து பந்துக்கள் சகிதமாய் சென்னைக்கு வந்து தமக்குப் புத்திரப்பேறருளிய நாயன்மார்களின் மகோற்சவத்தைத் தரிசித்து அதுமுதல் இவரை பின்னும் அதிகமாக விசுவசித்து சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினருள் ஒருவராயிருந்தனர். இக்கைங்கரியம் (1894-95-96) விஜய ஜய, மன்மத என்னும் மூன்று வருடங்களில் நடைபெற்றன. இதன்பொருட்டு நேரிட்டசெலவு ரூபா 682. இதற்கு வரவு செலவுக் கணக்கு அச்சிட்டு வெளியிடப்பட்டதன்றி பொருளுதவி செய்தவர்களின் பெயர்கள் விமானங்களில் செதுக்கி எழுதப்பட்டுள்ளன. அதுமுதல் பத்திரிகாசிரியர் இம்மகோற்சவகாலத்தில் தண்ணீர்ப்பந்தர்வைத்து வருகிறார். இந்த மகோற்சவம் முன்னினும் மிகவும் சிறப்பாய் நடைபெற்று வருகின்றது. திருமயிலையில் அறுபத்துமூவர் மகோற்சவத்தில் ஸ்ரீ கபாலீச்சுர மமர்ந்தார் கற்பகவல்லி யம்மையார்சமேதராய் ஸ்கந்த கணேச சண்டேசர்களோடும் நாயன்மார்களோடும் எழுந்தருளுங்காட்சி திருக்கைலாயக் காட்சியே யென்று சொல்லவேண்டும்.



இவர் மூர்க்கநாயனார் வாசஸ்தானமாகிய திருவேற்காட்டில் வருடந்தோறும் சித்திரை மாதத்தில் நடைபெற்றுவரும் திருவூறல் மகோற்சவகாலத்தில் சென்று கூடும் சிவ நேயர்களுக்குத் தண்ணீர்ப்பந்தர் முதலிய வசதிகள் இல்லாக்குறைவை யறிந்து 1897-வது வருட முதல் அவ்விடத்தில் தண்ணீர்ப்பந்தர் வைத்து நீரும் மோரும் சித்திரான்ன முதலியனவும் வழங்குவாராயினர்.

(தொடரும்.)

மா. தங்கவேற் பிள்ளை,
திருமறைத்திருவன்.

---

## திருமூலநாயனார் புராணம்.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
யடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற வங்கணனே.

திருக்கைலாசத்திலே, சிவபெருமானது ஆலயத்துக்கு முதற் பெருநாயகராகிய திருநந்திதேவருடைய திருவருளைப்பெற்ற மாணாக்கர்களாகிய சிவயோகிகளுள் ஒருவர், அகத்திய மகாமுனிவரிடத்தே பொருந்திய நண்பினாலே அவருடன் சிலநாள் இருத்தற்கு அவர் எழுந்தருளியிருக்கும் பொதியமலையை அடைதற்பொருட்டு, திருக்கைலாசத்தை அகன்று வழிக்கொண்டு, திருக்கேதாரம் பசுபதிநேபாளம், காசி, ஸ்ரீ சைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சீபுரம், திருவதிகை, சிதம்பரம் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாவடுதுறையை அடைந்து, அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

ஒருநாள் அந்தத்தலத்தை அகன்று செல்லும்பொழுது, காவிரி ஆற்றங்கரையிலுள்ள வனத்திலே பசுக்கூட்டங்கள் அழுதலை எதிரே கண்டார். சாத்தனூரில் இருக்கின்ற இடையனாகிய மூலனென்பவன் ஒருவன் அவைகளை மேய்க்கின்றவன். அவன் அத்தினத்திலே அவ்விடத்தில் இறந்துகிடந்தான். அப்பசுக்கூட்டங்கள் அவ

னுடைய சரீரத்தை வந்தணைந்து, சுற்றி மிகக் கதறிச் சுழன்று மோப்பனவாக; சிவயோகியார் கண்டு, "பரமசிவனது திருவருளினாலே இப்பசுக்களுடைய துயரத்தை நீக்கல்வேண்டும்" என்று ஆலோசித்து, "இவ்விடையன் உயிர்பெற்றெழுந்தாலன்றிப் பசுக்கள் துயரநீங்கா" என்று திருவுளங்கொண்டு, தம்முடைய திருமேனிக்குக் காவல்செய்து, தாம் அவ்விடையனுடைய சரீரத்தினுள்ளே பிரவேசித்து, திருமூலராய் எழுந்தார். எழுதலும், பசுக்களெல்லாம் நாத்தழும்ப நக்கி மோந்து, கனைத்து, மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளி, பின்பு போய் மேய்ந்தன. திருமூலநாயனார் அது கண்டு திருவுள மகிழ்ந்து, அவைகள் மேயுமிடத்திற் சென்று, அவைகளை நன்றாக மேய்த்தார். சூரியன் அஸ்தமயனமாக; பசுக்கள் தத்தங் கன்றுகளை நினைந்து, தாமே முன் ஐய நடந்து, சாத்தனூரை அடைந்தன, சிவயோகியார் அப்பசுக்களுக்குப் பின் சென்று, அவைகளெல்லாம் வீடுகடோறும் போகத் தாம் வெளியிலே நின்றார்.

மூலனுடைய மனைவி "நாயகர் இன்றைக்கு மிகத்தாழ்த்தார்" என்று பயங்கொண்டு சென்று, சிவயோகியார் நின்ற இடத்தை அடைந்து, "இவருக்கு ஈனம் அடுத்ததுபோலும்" என்று, அவருடைய திருமேனியைத் தீண்ட; அவர் அதற்கு இசையாராயினார். அவள் அச்சுற்று மயங்கி, "என்செய்தீர்" என்று தளர; திருமூலநாயனார் "உனக்கு என்னோடு யாதொரு சம்பந்தமும் இல்லை" என்று மறுத்து, ஒரு பொதுமடத்தினுள்ளே புகுந்து, சிவயோகத்தில் இருந்தார். மனைவி அவ்விரவு முழுதிலும் நித்திரைசெய்யாது கவலைகொண்டிருந்து, மற்றநாள் அதனை விவேகிகள் பலருக்குந் தெரிவிக்க; அவர்கள் வந்துபார்த்து, அவளை நோக்கி, "இது பைத்தியமன்று. வேறு சார்புள்ளதுமன்று. இவர் கருத்துச் சிவயோகத்தினிடத்ததேயாம். இனி இவர் உங்கள் சுற்றவியல்போடு கூடார்" என்றார்கள். அவள் அதுகேட்டுத் துயரம் எய்தி மயங்க; அவர்கள் அவளைக் கொண்டுபோய்விட்டார்கள்.

சிவயோகத்தில் இருந்த திருமூலநாயனார் எழுந்து, முதனாளிலே பசுக்கள் வந்த வழியே சென்று, தாஞ்சேமித்த சரீரத்தைக் காணாது, மெய்ஞ்ஞானத்தையுடைய சிந்தையினால் ஆராய்ந்து, "சிவபெருமான் ஆதிகாலத்திலே தம்முடைய பஞ்சவத்திரத்தினின்றும் தோற்றுவித்த காமிக முதலிய சைவாகமங்களிலே பேசப்பட்ட



மெய்ப்பொருளைத் தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டுத் தமியேனைக்கொண்டு தமிழிலே ஒரு நூல் செய்வித்தற்பொருட்டு அச்சரீரத்தை மறைத்தருளினார்" என்று தெளிந்து, திருவருளைத் துதித்து, திருவாவடுதுறையை அடைந்து, அங்குள்ள சிவாலயத்திலே பிரவேசித்து, சிவபெருமானை வணங்கி, அதற்கு மேற்குப் பக்கத்தில் இருக்கின்ற அரசின்கீழேபோய், சிவயோகத்தில் இருந்தார். அவர் மூவாயிரம் வருஷமளவு அங்ஙனம் இருந்து, ஒவ்வொரு வருஷத்திற்கு ஒவ்வொரு திருப்பாட்டாக மூவாயிரந் திருப்பாட்டினால் சைவாகமங்களில் உணர்த்தப்பட்ட ஞானம் யோகம் கிரியை சரியை என்னு நான்கு பாதங்களையும் பேசுகின்ற திருமந்திரமென்னுந் தமிழ்நூலைப் பாடியருளி, பின் திருக்கைலாசத்தை அடைந்தார்.

---

## ஓர் வேண்டுகோள்.

சைவ சமயத்தைப் பரிபாலிப்பாரின்றி உலகில் சைவ நல்லொழுக்கங்கள் மிகவுங் குன்றியிருக்கும் இக் கலிகாலத்தில் நாம் சைவாபிமானத்தின் வசப்பட்டு இப் பத்திரிகையை வெளியிட்டு மிகவும் குறைந்த சந்தாவுக்குக் கொடுத்துவரத் தலைப்பட்டோம். தலைப்படலும் கலிபுருடன் எம்மைச் சோதிப்பதுபோல் காகிதப் பஞ்சம் உண்டாய்விட்டது. இப்பஞ்சத்தையும் பொருள் செய்யாமல் யாம் பத்திரிகையை வெளியிட்டு வருவதுமன்றி, 16 பக்கங்களாக வெளியிட்டுவந்ததை, 24 பக்கங்களாக அச்சிடத் தொடங்கினேம். தொடங்கலும், காகிதப்பஞ்சம் பின்னும் அதிகரித்துவிட்டது. ஆரம்பத்தில் 2½ அணா கொடுத்து வாங்கிய காகிதத்தை இப்போது 8½ அணா கொடுத்து வாங்கவேண்டியதாய் விட்டது. இனி போதுமான துணைவலியின்றி 24 பக்கங்களாகவே வெளியிட்டு வருவது இயல்வதன்று.

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

ஆதலால், எவ்வளவு இடையூறுகளெய்தினும் இறைபணியில் இறையளவும் வழுவாது நின்ற வீரம் வாய்ந்த உண்மை நாயன்மார்கள் செய்து காட்டிய செந்நெறியொழுகும் சிவநேயச்செல்வர்காள், மாதந்தோறும் உங்கள் கரங்களில் வந்து தங்கி விளையாடித் தனது மழலை மொழிகளால் இறைவன் கழலிணைச் சீர்பரவும் இத்தெய்வச் செந்தமிழ்ச் சிறுகுழந்தையை நீங்கள் பெற்று வளர்க்குங் குழந்தைகளுள் ஒருகுழந்தையெனப் பாராட்டி இயன்றபொருளுதவிசெய்து, இவள் உருவம் பஞ்சத்தால் வாடா வண்ணம் பாதுகாக்குமாறு உங்களைப் பன்முறை பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் தினைத்துணை நன்றிசெயினும் அதனையாம் பனைத்துணை யாக்கொண்டு உலகத்திற்குப் பயன்படுத்தி இவளைக் கொண்டே நன்றிபாராட்டுவோம்.

திருக்குறள்.

அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு.

பத்திரிகாசிரியர்.

---

## ஆயுள் சந்தாதாரர்கள்.

இரங்கோன் ஸ்ரீமான் செவு. சித. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் மூலமாய்ச் சேர்ந்தவர்கள்.

313 ஸ்ரீமான் P. V. P. R. V. A. சோமசுந்தரம் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

1134 ,, L. M. L. வெள்ளையப்பச் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

19 ,, S. V. M. L. உலகப்பச் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

853 ,, P. R. M. P. R. முத்தையா செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

664 ,, V. E. R. M. V. நாராயணஞ் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

665 ,, L. A. R. நாராயணன் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

314 ,, M. சுவாமிநாதப்பிள்ளையவர்கள், Sub-Asst., Surgeon, Kyaiklat, Burma.

ஸ்ரீமான், K. P. M. R. M. நாராயணன் செட்டியாரவர்கள் மூலமாய்ச் சேர்ந்தவர்,

122 ஸ்ரீமான் M. S. கண்ணப்பச் செட்டியாரவர்கள், Kywegyan, B. Ry. Paung Post, Thaton Dist, Burma.

---

## பிழைதிருத்தம்.

சைவம், 3-வது மலர், 8-வது இதழ், 136-வது பக்கத்தின் இறுதியில் காட்டிய 663, 987 இலக்கத்து வருடாந்தச் சந்தாதாரர்களை ஆயுள் சந்தாதாரர்களாகக் காட்டியது பிழை.

OFFICE OF THE REGISTRAR OF ... 5 - OCT 1917 MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3. || பிங்களஹு ஐப்பசிமீ -1917ஹு அக்டோபர்மீ || இதழ் 10

கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக் குயிரன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவியவி நாசியை வேடர்சுற்றம்
படுத்தான் திருமுரு கன்பூண் டியினிற் பராபரத் தேன்
மடுத்தா னவனென்பர் வன்றொண்ட னாகின்ற மாதவனே.

---

## சிவஞானபோதம்.

### மூன்றாஞ் சூத்திரம்—ஐந்தாம் அதிகரணம்.

### கண்படின் உண்டி வினையின்மையின் ஆன்மா வுளது.

(இ-ள்.) நித்திரையில் (பிராணவாயு இயங்கிக்கொண்டிருந்தும்) உண்டி (இன்பத்துன்பமும்) வினை (சேட்டித்தலும்) இல்லாதபடியினால் (பிராணவாயுவுக்கு வேறாக) ஆன்மா உளது.

இதில், 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்— நித்திரையிலும் பிராணவாயுத் தொழிற்பண்ணவும் சரீரத்திற்குப் புசிப்புந் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்கு வேறு உயிருண்டு.

2-வது— ஐயப்பாடு— ஆன்மா பிராணவாயுவோ, அதனின் வேறோ?

3-வது—பிறர் கூறும் பக்கம்—சொப்பனத்தான மாத்திரையினன்றித் தொழிற்படாத சூக்குமதேகம் போலன்றிச் சுழுத்தி தூரியங்களினுந் தொழிற்படுவதாய பிராணவாயுவே அடங்குதல் விடுதல் செய்கின்றமையால் அப்பிராணவாயுவே ஆன்மாவாகும். (இது பிராணான்மவாதிகள் பக்ஷம், இவர்களும் உலோகாயதருள் ஒருசாரார்.)

4-வது— மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு— விழித்த போது இன்பத்துன்பங்களை யறிதல்போல உறங்கும்போது தனித்தியங்கும் பிராணவாயு அறிதலின்றாகலின் அது ஆன்மாவன்று. துயிலின்கண் நிகழ்ந்த உண்டி வினைகளை நனவின்கண் உணர்ந்து நான் சுகமாகத் துயின்றேன் என்றறிந்து கூறும் அறிவே ஆன்மாவாம்.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

கண்டறியு மிவ்வுடலே காட்டொடுங்கக் காணாதே
யுண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
முள்ளம்வே றுண்டா யொடுங்கா துடனண்ணி
லுள்ளதா முண்டிவினை யூன்.

(இ-ள்.) கண்டு அறியும் இவ்வுடலே=கண்டறிதற்கு நிலைக்களமான இவ்வுடம்பின் கண்ணே—காட்டு=காட்டாய கருவிகள்—காணாதே ஒடுங்க=தொழிற்படாமல் ஒடுங்கவும்—உண்டி வினை இன்றி=(அவையொடுங்கியவழி) உண்டியும் வினையும் (உடம்புக்கு) இல்லையாகவும்—உயிர்த்தலான்=(பிராணவாயு) நிலை பெற்று இயங்குதலால்—கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு=கண்டறியு முரிமையையுடைய உயிர் (அப்பிராண வாயுவின்) வேறாய் உண்டு.—ஒடுங்காது உடல் நண்ணில்=(அவ்வுயிர்) ஒடுங்காமல் உடலினிடத்தே பொருந்தியிருக்குமாயின்—ஊன் உண்டிவினை யுள்ளதாம்=அவ்வுடம்பு உண்டியும் வினையும் உடைத்தாம். ஆய்=(அதனை நீ யாராய்ந்தறிவாயாக.(எ-று.)

உண்டி என்றது இன்பத்துன்ப நுகர்ச்சியை. வினையென்றது உடம்பின் தொழிற்பாட்டை "கண்டு, அறிதல்" ஒருபொருட் பன்மொழி. ஊன் என்றது உடம்புக்கு ஆகுபெயர்.

பிராணான்மவாதி யெனப்படுவோன் "பிராணவாயு இயங்குதலாலேயே அறிவு நிகழ்வதனால் அப்பிராணவாயுவே ஐம்பொறிகளையுங் கொண்டு அறியும். நித்திரையில் உடம்பினிடத்திலே அப்பிராணவாயு இயங்கினாலும். ஐம்பொறிகளாகிய கருவிகள் இல்லாமையால் அது அறியவில்லை. ஆதலால் பிராணவாயுவே அறியும் பொருளாகிய ஆன்மாவாம். ஆதலால் அதற்கு வேறாய் உயிருண்டு என்பது பொருந்தாது" என்று கூற, அவனை மறுத்து "பிராணவாயுவே அறியும் தன்மையுடைய பொருளாயின் உறக்கத்தில் அப்பிராணவாயு இருக்கவும் கருவிகள் நீங்கியிருத்தல் கூடாவாம்.



ஆதலால் கருவிகளை அடக்கியும் விட்டும் பிராணவாயுவையுங் கொண்டு அறிவதாகிய உயிர் வேறுண்டு" என்று உயிருண்மை சாதித்தலும், அவன் மீளவும் 'சுழுத்தியில் உயிரிருக்கவும் கருவிகள் ஒடுங்கியிருக்குமென்று கூறுவதுபோல், பிராணவாயுவே கருவிகளை ஒடுக்கியும் விட்டும் அறியும் எனல் ஏன் பொருந்தாது" என்று கேட்க அதற்குத்தரமாக "பிராணவாயு சுழுத்தியிலும் நனவிலும் ஒரு தன்மையான போக்குவரவுடையதாய் இயங்குகின்றது. ஆனால் அறிவு ஒருதன்மையாயின்றி நனவில் அறிந்தும் சுழுத்தியில் அறியாமலும் இருத்தலால் பிராணவாயுவின் வேறாய் அவ்வேறுபாடுடைய பொருள் ஒன்று உண்டென்பது பெறப்படும். அப்பொருளே இந்திரியங்களை ஒடுக்கியும் விட்டும் பிராணவாயுவைத் துணையாகக்கொண்டும் அறிவதாகிய உயிர் எனப்படும்" என்று உயிருண்மை சாதித்தவாறாயிற்று.

இவ்வதிகரணத்தால் சுழுத்தி துரியங்களில் நிகழும் இயல்பைக் கொண்டு உயிர் உண்டு என்பது சாதிக்கப்பட்டது.

இதுவரையில் இச்சூத்திரம் முதலதிகரணம் முதல் வெண்பாவில் "சார்மாயை நீயல்லை" என்றதனை வலியுறுத்தியவாறும்.

(இன்னும் வரும்.)

---

## கூர்மபுராணத்து விநாயக காப்பு.

(142-வது பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம் அடைமொழி புணர்த்திச் சந்திரனை முதலில் விசேடித்தமை ஆசிரியன் தன் குலமுறை போற்றியதன்றி, சந்திரன் சத்தியம்ச மாகலானும், சத்தியே தொடப்படும் பொருளாகவும், ஒலியாகவும், கேட்கப்படுவனவாகவும், அவற்றின் சுவையாகவும், வித்தையாகவும், அவற்றிற் கிறைவியாகவும் நின்றமை நோக்கியாம்.

இலிங்கபுராணம்-அட்டமூர்த்த முரைத்த வத்தியாயம்.

மாயிரு ஞால மீன்றருள் வல்லி கூறதாம் வயங்கு வெண்மதிய
மேய தண்கலையால் விண்ணவர் தம்மை விழைந்துறை தென்புலத்தோரை
யெய்வுற நிறைய வூட்டி நன்காய விருந்தவப் பயிர்கண் மற்றெவையுந்
தேய்வுறா வாரி நாடொறு மிகுந்து தீதற வளர்ந்திடச் செய்யும்.

ஷ. சிவன்விபூதியுந் தேவிவிபூதியு முரைத்த வத்தியாயம்.

ஒலியெ லாமொளி ரொண்ணுத லிறைவியவ் வொலியை
மலைவின் றாகவே கேட்பவன் மதிமுகி ழணிந்தோன்
சொலவு றைந்திடு சுவையெலாந் தேவியச் சுவையை
யுலைவின் றாகவே யறிபவ ஞெளிர்மழுப் படையோன்.

சைவபுராணம்-சிவஞ்சத்தி யுருவிபூதி யுரைத்த வத்தியாயம்.

ஆணெலா மிறைவன் பெண்ணெலாந் தேவி யாகுமா லறிந்தா முரைக்கிற்
பேணுறு விடய முமையவ ளவற்றை நுகர்பவன் பிஞ்ஞக னுமாற்
பாணியா தியாவுங் கேட்பவன் சிவனாந் தேவியே கேட்டிடப் படுவ
வேணுறத் தொடுவோன் சிவன்றொடப் படுவ யாவையு மிறைவியா மியம்பின்

ஓர்கூறு கொம்புண்மையால் ஆண்போலவும், மற்றோர்கூறு
கொம்பின்மையால் பெண்போலவும், இரண்டுங் கூடியமையால்
அலிபோலவும் விளங்கலின் அவன், அவள், அதுவென்னும் ஆண்
பெண் ணலியாகிச், சராசரங்களாகி, சத்தசத்தாய், சதசத்தாய்,
எல்லாமா யல்லவுமாய், யார்க்குங் கிளர்த்தற்கரிதாய் விளங்குந்
தற்பரசிவத்தி னிலக்கணத்தையும், அதுகொண்ட கேவலவடிவங்
களுளொன்றாய அர்த்தநாரீசுர மூர்த்தத்தின் றன்மையையுந் தன்
வடிவாற்காட்டும் யானையென்பான் "கோடின்றி யெண்ணிலோர்
பாகங் கூந்தற்பிடியென விருந்தவாற்றாற்-பெண்ணொருபாகம் வை
த்த பிஞ்ஞகனுருவுகாட்டும் யானை" என்றான். அர்த்தநாரீசுர மூர்
த்தமாவது - முன்னோர்காலத்துப் பிருங்கிமுனிவர் சிவபிரானைமாத்
திரம் வணங்கிவர, இடப்பாகத்திலிருந்தருளு மிறைவி யாற்றாளாய்
வேறாயிருந்தமையா லன்றோ விதுநேர்ந்ததென்று தவங்கிடந்து, ஓர்
கூறாய் இறைவன் றிருமேனியின் அமரப்பெற்ற வடிவாம். அதனை
"உமையுந் தானுந் வேறன்மை யுருவினிடத்துத் தெளிப்பான்போ-
லிமைய மயிலை யொருபாதி வடிவி னிறுவி நாற்கரத்து - மமைய
வனசந் திரிசூல மபய வரத மிவை தாங்கி - நமையு முய்யக் கொண்
டருளு நாரி பாகன் றிருவுருவம்" என்னுங் காஞ்சிப் புராணச் செய்
யுளானறிக. களி - என்றது மும்மதத்தாலுண்டாகிய களிப்பு.
மும்மதமாவன:—கன்னமதம், கரமதம், பீசமதம் என்பனவாம்.
யானையுறுப்புக் கழுத்தின்மேலன்றி யின்மையான் மும்மதத்தனுதல்
யாங்ஙனமென்பார்க்கு, மும்மதம் யானைக்கு அடையென்பாரும்,
ஒருகோட்டன் முதலியனபோல விநாயகப்பிரானுக்கு அடையாய்
நிற்றலின் யானைக்கன்றென மறுத்து, இச்சாஞானக் கிரியைகளே
மும்மதமென்றுருவகிக்கப் பட்டனவென்பாரும், அங்ஙனாயிற் குமர



வேளாதியோரையு மக்கருத்துநோக்கி மும்மதத்தினர் என மொழி
யப்படாமையான் அஃது மன்றென மறுப்பாரும், பஞ்சாக்கர
பேதமாகிய எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து முதலியன
வும், பஞ்சாக்கரமென வழங்கப்படுமாறுபோல மும்மதத்தின்வகை
யான ஒருமதமிருமதமும் மும்மதமென வழங்கப்படும் என்பா
ரும் உளராகலின், இவ்வாசிரிய னவையிற்றை யெல்லாமறுத்துக்
களிற்றுருக் கொண்டமையான் மும்மதத்தன் என்பான், "களிநல்
யானைமுகன்" எனாது, "களிநல்யானை" என்றான். இக்கருத்தைப்
பற்றியன்றோ தணிகைப்புராணத்தாரும், "மும்ம தத்தனென்றொரு
பெயர் தனக்கு மொய்கூந்தற்-கொம்மைவெம்முலைக் கொற்றொடிக்
கொடிச்சியை யிலைவேற் - கைம்ம லர்த்தனி யிளவற்குங் கஃறெனுங்
கானத் - தம்ம முந்துபுக் குறுத்தவ னடிமலர் பணிவாம்" என்று
பகர்ந்தாரென்க. நல்லுயிர்களையும் பேணினாரையும் நலிந்து, தா
மும் நலியப்பட்டுநிற்கும் இருகோட்டு மண்ணிடத்து யானைகளையும்
நாற்கோட்டு விண்ணிடத்து வேழத்தையும் போலாது, ஒருகோடு
மறுகோடு முடைத்தாய், எண்ணிடத்துள்ள விக்கரியோ "சொல்
லாரும், பாதாள மூடுருவிப் பாரேழும் விண்ணேழு - மாதார மாகி
யகண்டநிறைந் - தோத, வரிதா யெளிதா யருமறையா றங்கத் -
துருவா யுயிரா யுணர்வாய்ப் - பெரிதாய, வெய்யதுயர்ப் பாசமறு
வீசியே வெம்பிறவித்-துய்ய கடலைத் துகளெழுப்பி-யையமுறுங்,—
காமக் குரோதமத மாச்சரியங் காய்ந்தடர்த்துச் - சாமத் தொழி
லின் றலைமிதித்துக் - காமத்தாற், கத்துஞ் சமயக் கணக்கின்விறற்
கட்டழித்துத் - தத்தம் பயங்கொலைக ளாங்கழித்தே - தத்திவரும்.
பாசக் குழாத்தைப் படவடித்துப் பாவையர்தம் - மாசைக் கருத்
தையறவீசி-நேசத்தா, லானவே கங்கொண் டருண் மும்மதத்தினு—
ஊனையார் தத்துவங்க ளுள்புகுந்து - தேனைப், பருகிக் களித்துயர்
ந்த பன்மறைநாற் கோட்டான் மருவித் திகழ்ஞான வானையாய்"
அன்பரகத் தறியிற் கட்டுப்பட்டு, சிவபோதக் கவளமுண்டு, புலப்
பகைகடிந்து, அருண்மதம்பொழிந்து ஒருபெரும்பொருளளிக்கும்
உவாவென்பான் "நல்யானை" என்றும் "பூவினதியல்பே பொருந்
தக்கூறின் - மங்கல மாதலு நாற்றமுடைமையுங் - காலத்தின் மலர்
தலும் வண்டிற்கு நெகிழ்தலுங் - கண்டோ ருவத்தலும் விழையப்
படுதலும்" என்றபடி அவ்யானையாகிய இறைவனடியும் பூவின்
குணத்தைப் பொருந்தி விளங்கலுண்மையானும், "அடிச்சந்த மால்
கண் டிலாதன காட்டிவந் தாண்டுகொண்டென் - முடிச்சந்த மாமல

நாக்குமுன்னோன்" எனத் திருக்கோவையாரிற் றிருவாய்மலர்ந்தருளியாங்கு, சென்னிக்கண் யாவரானுஞ் சூடற்குத் தகுதியானது பூவாதலானும், அவற்றை மலர் என்றுங் கூறினான் என்க. அன்றியுமவன் றிருவடி கிரியாசத்தி, ஞானசத்தியாக விரிதலின் மலர் எனப்படுமென்பாருமுளர்.

வைப்பாம் - என்றது, ஆசிரியன்றன்னை யுயர்த்துரைத்த வுபசாரமன்று. மன்னுயிரெல்லா மண்ணாள் வேந்தன் றன்னுயி ரென்னுந் தகுதிய தாகலானும், ஆசிரியரு மன்பதை புரக்கு மாண்பினராகலானும், இவனும் தன்னொடு மற்றையுயிர்களும் பயனடைவான் சேர்த்துரைத்த பன்மையைக் குறிக்குந் தன்மைச் சொல்லாம். அதனை, "அவைதாம், அம்மா மெம்மே மென்னுங் கிளவியு - மும்மொடு வரூஉங் கடதற வென்று - மந்நாற் கிளவியோ டாயெண் கிளவியும் - பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக. வைப்பாம் என்ற காயத்தொண்டானே மற்றைய வாக்கின்றொண்டு மனத்தின்றொண்டும் பெறப்படும்.

யானையாகிய விநாயகக்கடவுளது திருவுருவம், பிஞ்ஞகனது திருவுருவத்தை நினைப்பிக்குமென்றலால், இச்செய்யுள் மிருதிமதாலங்காரம் என்னும் நினைப்பணியாம். இது புறப்பொருளிற் கைக்கிளைப்புறனாய பாடாண்டிணைப் பகுதியிற் கடவுள்வாழ்த்து என்னுந் துறை.

## திரிபதார்த்த விளக்கம்.

திரிபதார்த்தம் என்பதற்கு மூன்றுபொருள் என்று அர்த்தம். மூன்றுபொருள்களாவன பதி, பசு, பாசம் என்பனவாம். அவற்றுள் பதி - கடவுள் (அவர் ஒருவரே). பசு - ஆன்மா. (ஆன்மாக்கள் அளவிலாதன). பாசம் - மலம். (அது ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என மூவகைப்படும்). ஆணவமலம் ஒன்றேயாயினும் அதன் சத்திகள் அநந்தபேதம். கன்மமலம் நல்வினை தீவினை என இருவகைப்படும். அன்றியும் ஆகாமியவினை, சஞ்சிதவினை, பிராரத்தவினை என மூன்று திறப்படும். ஆகாமியமாவது எடுத்த சரீரத்தில் ஒருவனாற் செய்யப்படும் நல்வினை தீவினைகள். சஞ்சிதமாவது அந்நல்வினை தீவினைப்பயனாகிய புண்ணிய பாவங்கள். பிராரத்துவமாவது அப்புண்ணிய பாவப் பயனாகிய இன்பதுன்பங்கள்.



மாயை சுத்தமாயை அசுத்தமாயை என இருவகைப்படும். சுத்தமாயை மலகன்மங்களோடு விரவாது சுத்தமாயிருப்பது. அசுத்தமாயை மலகன்மங்களோடு விரவி அசுத்தமாயிருப்பது. இந்த மாயை யிரண்டும் காரண ரூபமாயுள்ளன. காரண ரூபம் தோற்ற நாசமில்லாமல் நித்தியமாயிருப்பது. இம்மாயையினின்றே காரிய ரூபமான பிரபஞ்சமும் அதிலுள்ள எல்லாப்பொருள்களும் தோன்றின.

ஈண்டு எடுத்துக்கொண்ட மூன்று பொருள்களுள் நமது கண்ணுக்குப் புலப்படும் பிரபஞ்சமானது தோன்றி நின்று அழியுங் காரியமாயும், ஜடமாயும், பலவேறு அவயவப்பகுப்புடைய சுட்டுப்பொருளாயும் இருத்தலினாலும், ஆன்மாவானது ஆணவமலத்தினாலே மறைப்புண்டு கண்ணில்லாத குழவியைப்போல் ஒன்றையும் உணராது கட்டுண்டு கிடந்தும், பின் மாயாகாரியமாகிய தனுகரணங்களைப் பெற்று ஏகதேசமாய் அறிவு விளங்கியும் இவ்வாறு கேவல சகலப் படுதலினாலும், இவ்விரண்டினையும் இணைத்துக்காரியப்படுத்த ஒருமுதல்வன் இவற்றிற்கு வேறாக அவசியம் வேண்டப்படுவன் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க துணிபாம். அத்தகைய முதல்வன் மலம், கன்மம், மாயை என்னும் மூன்றையும் அடையாதவனாய், எவ்வித உபாதியினும் சாராதவனாய் ஞானானந்த வஸ்துவாய் விளங்குவன். அவனே யாவரும் வணங்கத்தக்க பதிப் பொருள் என்னுங் கடவுளாம்.

இனி மலம், கன்மம், மாயை என்பவற்றொடுகூடி அவஸ்தைப் படுதலும், வினைகாரணமாக இம்மை மறுமைகளில் புக்கு உபாதியுறுதலும் ஆகிய பொருள் அம்முதல்வனின் வேறாக ஒன்றுண்டென்பது பெறப்படும். படவே ஐந்தவஸ்தைப்படுதல், உணர்த்த உணர்தல், சுகதுக்கமோகங்களிலே அழுந்துதல், கண் ஸ்படிகம் ஆகாயம் போல சார்ந்ததன்வண்ணமாய் நிற்றல் முதலியன அதன் இலக்கணங்களாம். அதுவே ஆன்மாவாம். ஞானானந்தவஸ்துவாய் விளங்கும் முதல்வனை அக்குற்றங்கள் சாராதாதலின், நின்மலப் பொருளாகிய முதல்வன் அக்குற்றங்களை யுடைய ஆன்மாவைப் பார்க்கினும் வேறவன். அன்றியும் முதல்வனும் ஆன்மாவும் சித்துப் பொருளாயினும் முதல்வனைச், சூக்கும சித்தாகவும், ஆன்மாவைத் தூலசித்தாகவும் வேதாகமங்கள் அறுதியிட்டுக் கூறும். இக்கருத்துப்பற்றியே தாயுமானசுவாமிகள்

(1) "என்றுநீ அன்றுநான் உன்னடிமை யல்லவோ" என்றும்

(2) அருளுண்டைய பரமென்றே அன்றுதானே
யானுளனென்றும் எனக்கே யாணவாதி
பெருகு வினைக்கட் டென்றும்........ என்றும்.

திருவாய்மலர்ந்தருளினர்.

உண்மை யிங்ஙனமிருக்க பதார்த்த உண்மையை உள்ளவாறறியாத சிலர் ஒரு மாங்கனி யிருக்குமிடத்தில் மற்றொருமாங்கனி இருக்க இடம் பெறுதவாறுபோல முதல்வனும் ஆன்மாவும் ஆகிய இரண்டு பொருள்களுள் ஒன்றிருக்கு மிடத்தில் மற்றொன்றிருக்க இடம்பெறுதென மனம்போனவாறு கூறுவர். அல்லாமலும் பிரமம் ஒன்றே யன்றி ஏனைய பசு பாசங்களின் இருப்பு கூறுதல் அமையாதெனவும் ஆட்சேபிப்பர். அந்தோ! இவர்களது வெள்ளறிவு என்னை? மாங்கனிகளிரண்டும் சமமான தூலப்பொருள்கள். இவை ஒன்றிருக்குமிடத்து மற்றொன்றிருக்க இடம் பெறுவென்பது உண்மையே. இதை மறுப்பார் ஒருவருமில்லை. ஆனால் இந்த நியாயம் இரண்டு தூலப்பொருள்களுக்கே யன்றி தூலமும் சூக்குமமான இருவேறுபொருள்களிடத்துச் சொல்லுதல் சிறிதுங்கூடாமை, முதல்வனும் ஆன்மாவும் உருவுடைய தூலப்பொருள்களல்ல, இரண்டும் அருவமாயும் சூக்குமமாயுமுள்ள வெவ்வேறு பொருள்கள். மேலும் முதல்வன் உயிரைப்பார்க்கிலும் அதி சூக்குமமாயும் உயிர்க்குயிராயும் இருக்கின்றனன். ஆதல்பற்றி அவை ஒன்றினொன்று இருக்க இடம் பெறுதற்கு யாதொரு ஆசங்கையுமில்லை. அவ்வாறு இருக்கும் நிலை அடியில் வரும் பிரமாணங்களால் அறிக.

(1) "இகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
எங்குநிறைகின்ற பொருளே" ...............தாயுமானவர்,

(2) "உடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற்
பிரிவறு மத்துவிதம்"........... சிவப்பிரகாசம்

(3) விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்......... தமிழ்வேதம்.

(4) இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரதம்
எள்ளின்க ணெண்ணெயும்போலெங்குமுள னிறைவன்.
சிவஞானசித்தி.

இன்னும் அளவற்ற பிரமாணங்கள் தென்மொழியினும் வடமொழியினும் உள்ளன. விரிக்கிற் பெருகும்.



இனி ஆன்மா சேதனமாயினும் அதன் அறிவு தடைப்பட்டு ஒன்றினும் வியாபரியாது நிற்றற்கு ஒரேது வேண்டப்படும். அவ்வாறு செய்வது ஆணவமலமாம். அவ்வாணவ மறைப்பையே அஞ்ஞானம் எனவும், அவித்தை எனவும் சுருதிகள் கூறுநிற்கும். காரிருளினிடத்து அகப்பட்ட கண் எவ்வாறு ஒன்றையுஞ் செய்யாமல் அடங்கியிருக்கிறதோ, அதுபோல காரிட்ட ஆணவக்கருவறையில் அகப்பட்ட ஆன்மா யாதொரு செயலுமில்லாமல் கட்டுப்பட்டுக் கிடத்தல் ஆணவமலத்தால் நேர்ந்த தீங்காம். இவ்வுண்மை யுணர்வார்க்கு கடவுள், ஆன்மா என்னும் இவ்விரண்டிற்கு வேறாக ஆணவமலம் என்பதொன்று அநாதியே யுண்டென்று எளிதிற்புலப்படும்.

இனி ஆன்மா சேதனப் பொருளாயும், இச்சாஞானக் கிரியா சொரூபியாயும் இருத்தல்பற்றி, இருளிலகப்பட்ட கண் தன் ஒளி விளங்குவதற் கேதுவாகிய வேறோர் ஒளியை விரும்புவது போல், மலத்தினாலே மறைப்புண்டு கிடந்த ஆன்மா தன்னறிவு வெளிப்படுவதற்கு வியஞ்சகமாகிய தனுகரண புவன போகங்களை விரும்பியது. அப்போது ஆன்மாவினது மலத்தின் மறைப்பையும், உபாதியையும் அறிந்த பெருங்கருணைத் தடங்கடலாகிய முதல்வன் இரக்க மிகுதியினாலே ஆன்மா விரும்பியவண்ணம் மாயாகாரியமாகிய தனுவாதிகளைக் கொடுத்தனன். ஆன்மா அவைகளைப் பெற்று தனது இச்சா ஞானக்கிரியைகள் வியாபரிக்கப்பெற்றது. இச்சையாவது ஒன்றை விரும்புந் தன்மை. ஞானமாவது ஒன்றை அறியுந்தன்மை. கிரியையாவது ஒன்றைச்செய்யுந்தன்மை. இம்மூன்றும் மாயாதனுகரணங்களால் விளக்கமுற்றது. இவ்வாறு மலங்காரணமாக ஆன்மாவினிடத்து வெளிப்பட்ட விருப்பத்தின் எழுச்சியே கன்மமலம் எனப்படும். இவ்விருப்பம் ஆன்மாவில் அநாதியேயுள்ளதாதலால் நித்தியமென்று சொல்லப்படும். இக்கன்மம் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் என மூன்றாய் நிலையுறும்போது காரிய கன்மமெனவும், இவ்வேறுபாடு நோக்காது பொதுவகையாய் நிற்கும்பொழுது காரண கன்மம் எனவும் கூறப்படும். படவே ஆதியந்தமுடைத்தாய், தோற்ற நாசங்களுக்கு இடனாய் நிற்பது காரிய கன்மமும், அநாதி யென்னும் வழக்கிற்கு இடனாய் நிற்பது மூல கன்மமும் ஆம்.

இனி ஆணவமல மறைப்பினால் வருந்திய ஆன்மா அம்மறைப்பினின்று நீங்கும்படி மாயா தனுகரணாதிகளை இச்சித்தபடியால்

முதல்வன் அத்தனுகரண புவன போகங்களுக்குக் காரணமாகிய மாயையைக் கலக்கி அதினின்றும் கலையாதி பிருதிவி அந்தமான தத்துவங்களையும், அவற்றின் காரியமாகிய தனு கரண புவன போகங்களையும் ஆன்மாவுக்குக் கொடுத்தனன். இதனால் ஆணவ மலம், கன்மமலம் என்னும் இவ்விரண்டிற்கும் வேறாக மாயாமலம் ஒன்று உண்டென்று அறிதற்பாற்றும். இம்மூன்று மலமும் பாசம் என்று சொல்லப்படும்.

இதுகாறும் கூறிப்போந்த வற்றால் கடவுள், ஆன்மா, மலம் ஆகிய பதி, பசு, பாச மூன்றும் அநாதி நித்தியமென்று நிர்ணயிக்கப்பட்டு விளக்கிக் காட்டப்பட்டது.

சோளங்கிபுரம். சிவஅருணகிரி முதலியார்.

---

## பாரதம்.

# அருச்சுனன் பாசுபதம்பெற்ற சரித்திரம்.

(146 - வது பக்கத் தொடர்ச்சி.)

வேதவியாசர் உபதேசித்த வண்ணம், அருச்சுனன் தவஞ்செய்யவிரும்பி, சடைமுடி தரித்து, மரவுரியுடுத்து, சரீரமெங்கும் திருநீறு பூசி, அக்கவடம் பூண்டு, காண்டீபம் என்னும் வில்லைக் கரத்திலேந்தி, அம்புப்புட்டிலை முதுகிற்றாங்கி, தமயன்மார்களை வணங்கி அவர்கள் கூறிய ஆசியை யேற்று, தம்பிமார்களைத் தழுவி, பாஞ்சாலிக்கு இனிய வசனங்கள் கூறி, நல்ல சுபமுகூர்த்தத்தில் விடைபெற்று, காமியவனத்தினின்றும் புறப்பட்டு, எண்ணிறந்த கானகங்களையும் காட்டாறுகளையும் மலைகளையுங் கடந்து, இமய மலைச் சாரலையடைந்து, அதின் வளப்பத்தையும் அதில் தவஞ்செய்யும் பெரியோர்களையுங்கண்டு மகிழ்ந்து, ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உச்சரித்துச் சித்தத்தைச் சிவபெருமானிடம் வைத்தவண்ணமாக அவ்விடத்தினின்றும் வழிக்கொண்டு, சிவபெருமான் உமாதேவியாரோடு வீற்றிருக்கும் புண்ணிய சொரூபமாகிய ஸ்ரீ கைலாயமலைச் சாரலை யடைந்தனன். அடைந்து, அவ்விடத்தில் சிலர் நீரில் நின்றும், சிலர் ஒருகாலில் நின்றும், சிலர் பஞ்சாக்கினி மத்தியிலிருந்தும், சிலர் பதுமாசனத்திலிருந்தும், சிலர் தலைகீழாயிருந்தும், சிலர்



இரண்டு முழந்தாள்களையும் இரண்டு கரங்களையும் பூமியிலூன்றித் தலையெடுத்து ஆகாயத்தை நோக்கியிருந்தும், சிலர் திகம்பரராயிருந்தும், தவஞ்செய்துகொண்டிருத்தலையும், சிவபெருமானைச் சிந்தித்தும் வந்தித்தும் வழிபடும் மெய்யன்பர்களின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் சொரிவதுபோல் எங்கும் அருவிகள் பாய்தலையும், சிவபெருமான் தம்மையடைந்தவரைத் தம்வண்ணமாக்கியாட்கொள்வதுபோல் அவ் வெள்ளியங்கிரி தன்னையடைந்தவர்களைத் தன்னைப்போல் வெண்ணிறமாக்கி யொளிர்வதையும் கண்டு பரமானந்தப் பெருங்கடலிற்றிளைத்தவராய், அவ்வெள்ளியங் குன்றின் தென்றிசையில் தவநிலையொன்றியற்றி, அங்குள்ள திவ்விய தடாகங்களுள் ஒன்றில் ஸ்நானஞ்செய்து வேதவிதிப்படி திருநீறு தரித்து, பஞ்சாக்கினி வளர்த்து, அதன்மத்தியில் ஒருதாளைப் பூமியில் ஊன்றி, மற்றொரு தாளை ஊன்றின தொடையில் மடித்து, தாமரை மலர்கள் சூரியனைத் தாவுவது போல் தன்னிரண்டு கரங்களையும் ஆகாயத்திலேந்தி நின்று, இரண்டு விழிகளையும் ஆதித்தனைப் பருகுவதுபோல் விழித்து நோக்கி, பவளக்கொடிகள்போல் பிரகாசிக்கும் சடைகள் நாற்றிசையும் புரள காண்டீபமும் அம்புப்புட்டிலும் தோளில் பிரகாசிக்க, சர்வலோக சரணியராகிய சிவபெருமானை இதயகமலத்தில் நிறுத்தி ஏகாக்கிரசித்தனாய் சித்திரப்பதுமை போல் அசைவற விருந்து தவஞ்செய் வானாயினான். அவன் தவத்தின் பெருமையையும் ஏகாக்கிரசித்தத்தின் அருமையையும் யாவரால் அளவிடக்கூடும். அவன் தவத்தைக் கண்டு முனிவரெல்லாம் அதிசயித்தனர். தேவர்கள் மருளுற்றனர்.

அருச்சுனன் அவ்வாறு தவஞ்செய்தலை இந்திரன் அறிந்து அவன் தவவன்மையைச் சோதிக்க விரும்பி, தன்சபையிலிருக்கும் மேனகை, ஊர்வசி, அரம்பை, திலோத்தமை யென்னும் நான்கு மாதரையும் அழைத்து, "ஓ, மாதர்களே, நீங்கள் இதுவரையில் அளவற்ற தவசிரேஷ்டர்களைச் சோதித்து மயக்கி அவர்கள் தவநிலையை யழித்து எங்கும் புகழ்படைத் திருக்கின்றீர்கள். இப்போது சந்திரகுலத்தரசனாகிய அருச்சுனன் என்போன் வெள்ளியங்கிரியின் தென்றிசைச் சாரலில் தவஞ்செய்கின்றான். அவன் தவத்தை யழிப்பீராயின் உங்களுக்கு இன்னும் பெருங்கீர்த்தியுண்டாம்" என்றான். அதை அத்தேவமாதர்கள் கேட்டு குறுநகையோடு ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு இந்திரனை

நோக்கி "அண்ணலே, இளமையிலேயே துறவறத்தை மேற்கொண்டு காடுகளில் வசித்துக் காய் கனி சருகு முதலியனவுண்டு வாயுவை யடக்கியும், மனதினை யடக்கியும் மௌனத்திலே யிருந்தும் பலகாலம் அரிய தவங்கிடந்து சிறப்புற்றுச் சபாநுக்கிரக சாமர்த்தியம் பெற்று விளங்கும் மகாமுனிவர்களை எங்களுள் ஒவ்வொருத்தியே மயக்கித் தன் வசமாக்கி விட்டாள் என்றால், அரசச்செல்வத்தை யனுபவித்துக்கொண்டு, காமவலையிற்சிக்கி சித்திராங்கதையையும் சுபத்திரையையும் களவிற் புணர்ந்து பின்பு மணம் புரிந்த ஓர் சாமானிய மனிதனை நாங்கள் மயக்குவது எங்களுக்குப் பெருமையைத் தருமோ?, எங்களுள் ஒருத்தியே அருச்சுனன் தவத்தை இமை நேரத்தில் அழித்து விடக்கூடும். ஆயினும், உம்முடைய கட்டளையின்படியே நாங்கள் நால்வருஞ் சென்று அவன் தவத்தை யழித்துவிட்டு வருவோம்" என்று கூறி விடைபெற்று, ஆகாய நதியில் ஸ்நானஞ்செய்து பூசைமுடித்துக் கண்களைக்கவரும் ஆடையாபரணங்களைத் தரித்து, நீர்கொண்ட மேகத்தையும் நெடிய சைவலத்தையும் வென்று நெருங்கிய கரிய கூந்தலை வாரிமுடித்து, பரிமள மிகுந்த நறுமலர் மாலைகளையும் பாரிசாத புஷ்பங்களையும் புனைந்து, நெற்றியில் திலதமிட்டு, கண்ணுக்கு மையெழுதி, சந்தனம், புழுகு, கஸ்தூரி, கர்ப்பூரம், சவ்வாது, குங்குமமென்னும் சுகந்த திரவியங்களைச் சரீரமெங்கும் பூசி பயோதரமாகிய சக்கிரவாகப் புள் பறந்துபோகாவண்ணம் வலையிட்டதுபோல் நவரத்தின மாலைகளை மார்பில் தரித்து, கைக்கடகங்களை யணிந்து, இவர்களைக் கண்டவர்கள் காமவெறிகொண்டு ஓலமிடுவதுபோல் ஒலிக்கும் நூபுரங்களைக் காலிலணிந்து, தங்களுக்குத் துணையாய்வரும்படி மன்மதனைப் பிரார்த்தித்துக் கைலைமலையை யடைந்து அருச்சுனன் தவஞ்செய்யும் இடத்தைச் சமீபித்து தங்கள் சரீரத்திலணிந்த வாசனையானது யோசனைதூரம் வீச நான்கு மாதர்களும் நான்கு சந்தனமரத்தடியில் நின்றனர். மாரனும் அழகில் யாவரையும் வென்ற அருச்சுனனை வெல்லுங்காலம் இதுவே யென்று கருதி வெளிப்பட்டவன்போல் புறப்பட்டு அம்மாதர்கள் தங்கியவிடத்தையடைந்து அருச்சுனன் மீது தன் மலர் வாளிகளை யெய்தான். அவ்வாளிகளால் அங்கு தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர் முதலாயினோரும், விலங்கு புள்முதலியனவும் மயங்கினார்களேயன்றி அருச்சுனன் சிறிதும் மனங்கலங்கவில்லை. அதை அத்தேவமாதர்கள் கண்டு ஆச்சரிய முற்று, அவன் எதிரே சென்று சுனைநீரில்



ஸ்நானம் செய்பவர்கள்போல் அபிநயித்து ஆடைகளை யவிழ்த்து அவயவங்கள் தோன்ற நின்றார்கள். பின் சிறிது நேரம் நிருவாணிகளாயிருந்தார்கள். அதனாலும் அவன் சித்தம் சலிக்கவில்லை. அது கண்டு அதிசயித்து அவனருகே சென்று பந்துவிளையாடியும் பூமாலைகளையும், புஷ்பங்களையும் அவன்மீதெரிந்தும் விளையாடினார்கள். அப்போதும் அருச்சுனன் சித்தம் மாறுபடாமலிருக்க அம் மாதர்கள் எதற்கும் உருகாதவன் இசைக்கு உருகுவான் என்று சொல்லிக்கொண்டு, அருச்சுனனை இசையால் வெல்லக் கருதினார்கள். அரம்பையும் திலோத்தமையும் மகரயாழ்களை யெடுத்து இசைகூட்டிப் பாடினார்கள். மேனகையும் ஊர்வசியும் அவ்விசைக் கேற்றவாறு அபிநயரசத்தோடு நிர்த்தனஞ் செய்தனர். அவ்விசையைக் கேட்ட விலங்குகளும், பறவைகளும் பரவசமாகி நின்றன. அப்போதும் அருச்சுனன் சிறிதும் சித்தம் கலங்கினானில்லை. அவ்வாறு நான்கு மாதர்களும் தங்கள் வல்லபத்தை யெல்லாம் காட்டி. பலவினோதங்களைச் செய்தும் பயன்படவில்லை. கடைசியாக அம்மாதர்களே அருச்சுனன் பேரழகைக்கண்டு மோகங்கொண்டு மயங்கினார்கள். பிறகு அவர்கள் ஒருவாறு தேறி, அருச்சுனனை மயங்கச்செய்தல் தங்களாலாகாத காரியமென்று தீர்மானித்து நாணமடைந்து திருக்கைலாச கிரியைவிட்டு நீங்கினர். மன்மதனும் அவர்களைப்போலவே நாணமுற்று "இனிமேலும் இவன் மீது கணைகளைத் தொடுப்போமாயின் முன் சிவபெருமான் மீது கணைதொடுத்து அடைந்த கதியை யடைவோம்" என்று பயந்து மறைந்தனன். கைலையைவிட்டு நீங்கின தேவமாதர்கள் இந்திரலோகஞ்சென்று இந்திரனை வணங்கி ஒன்றும் சொல்லமாட்டாமல் முகம்வாடி நின்று, பிறகு தாங்கள் மாத்திரமன்றி மன்மதனும் அருச்சுனன் மனவன்மையை யசைக்கமாட்டாமல் தோல்வியடைந்தமையைத் தெரிவித்தார்கள்.

இந்திரன் தன்குமாரனாகிய அருச்சுனனுடைய தவவுறுதியை யறிந்து மகிழ்ச்சியடைந்து தானே உருமாறிச்சென்று அவனைச் சோதிக்க விரும்பி, உடனே திருக்கைலைக்குச்சென்று பிராமண சந்நியாசிவேடம்பூண்டு, காவிகாம்பர தண்டுகமண்டல தாரியாய், அருச்சுனன் தவநிலையைச்சேர்ந்து, அவன் செய்யுந் தவத்தையும் திடச்சித்தத்தையுங் கண்டு வியந்து, அவனருகிற்சென்றான். அருச்சுனன் தவக்கோலத்தோடு எதிர்ப்பட்ட இந்திரனைப் பெருந்தவசியென்று மதித்து, சித்தத்தைச் சிவபெருமான் திருவடியில் அழுந்

தனைத்து, அத்தவசிக்கு மனமகிழ்ந்து வந்தனை செய்தான். இந்திரன் அருச்சுனனைப்பார்த்து, "ஓ தவசி, நீ நெடுநாளாக இவ்விடத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கிறாய். நீ எதை விரும்பி இவ்வாறு தவஞ்செய்கிறாய்" என்றான். அருச்சுனன் "சுவாமி, நான் ஸ்ரீ கைலாயபதியை என் கண்களாரக் காணவேண்டித் தவஞ்செய்கிறேன்" என்றான். இந்திரன் நகைத்து "ஓ தவசி, நீ உடல் வருந்தி வீணாய்த் தவஞ்செய்வதைப் பார்க்க என்மனம் பதைக்கின்றது. உன் வடிவத்தைப் பார்த்தால் இராசவடிவம்போலிருக்கிறது. மகாமாதவச் சிரேஷ்டர்களாகிய முற்றத் துறந்த முனிவர்களுக்கும் பிரம விஷ்ணுக்களுக்கும் காணவரிய கைலாசபதியை நீ எப்படி காணப் போகிறாய். ஐயையோ, வீணில் உடலை வருந்திக் கெடுத்துக்கொள்ளுகிறாய். கிட்டாதாயின் வெட்டென மற வென்னும் வாக்கியத்தின்படி நான்சொல்வதை குருவாக்கியமாகக்கொண்டு உன் எண்ணத்தைமறந்து விடு" என்றான். அருச்சுனன்; "ஓ சுவாமி, சிவபெருமான் பிரமாதி தேவர்களுக்கும் அரியவராயினும் தம்மை நேசிப்பவரை நேசிப்பவர். தம்மை வேண்டுவார் வேண்டுவதே யீபவர். ஆதலால் என்காயம் அழிவதாயிருப்பினும் என் எண்ணம் நிறைவேறும்வரையில் தவஞ்செய்தலைத் தவிரேன்" என்றான். இந்திரன் மனமகிழ்ந்து தன் சுயரூபத்தைக்காட்டி, மைந்தனைப் பலவாறு புகழ்ந்து "அப்பா, அருச்சுனா, நீசாம்பமூர்த்தியைத் தரிசித்துக் கருதியபடியே பாசுபதாஸ்திரம் பெறக்கடவாய்." என்று சொல்லி பல ஆசிகள் கூறிச் சென்றனன். அருச்சுனன் முன்போலவே கங்கையும் பிறையும் கவின் பெற வணிந்த முடியையும், மாரனை யெரித்த விழியையும், திரிபுரந்தீயெழ நகைத்த புன்முறுவலையும், ஆலகால விஷத்தை யடக்கிய திருநீலகண்டத்தையும், மேருவை வில்லாக வளைத்த புயங்களையும், புலித்தோல் வரித்துக்கட்டிய இடையையும், உமாதேவியார் எழுந்தருளிய வாமபாகத்தையும் மனதில் இருத்தி கன்மலைபோல் அசைவறவிருந்து ஐந்து வருடம் தவஞ் செய்தான்.

(இன்னும் வரும்.)

## நாம் ஏன் கடவுளை வழிபடவேண்டும்?.

கடவுள் இல்லை யென்று வாதிக்கும் நாத்திகர், கடவுளை வழிபடும் ஆத்திகர்களை நோக்கி "ஓ, ஆத்திகர்களே, "நீங்கள் ஏன் கடவுளை வணங்கவேண்டும்?. நீங்கள் சீவகாருணியம், கொல்லாமை, பிறர் பொருளை இச்சியாமை, சாந்தம், ஈகை, வாய்மை முதலிய நற்குணங்களால் தூய்மை யடைந்திருந்தாற்போதாதா?. ஏன் பெருஞ் செலவிட்டுக் கோயில்களைக்கட்டிப் 'பூசை உற்சவாதிகள் செய்ய வேண்டும்?. ஏன் பட்டினி கிடந்து, விரதங்களை யநுட்டித்துத் தேகத்தைவாட்டவேண்டும்?. ஊர் ஊராய் சுற்றித்திரிந்து தலயாத்திரையும் தீர்த்தயாத்திரையுஞ் செய்தல்வேண்டும்?. நீங்கள் கோயில் கட்டாவிட்டால் உங்கள் கடவுள் இருக்க இடமில்லாமல் மழைவெயில் பனி காற்றுகளால் வருந்துவரோ?. நீங்கள் பொங்கல் புளியோரை ததியோதனம் வடை பாயசம் முதலிய அறுசுவையுணவை அவருக்கு நிவேதிக்காவிட்டால் அவர் பட்டினிகிடந்து உடலிளைத்து வாடுவரோ?. அவரை நீங்கள் அவ்வாறு பூசிப்பதனால்அவருக்கு உங்கள் மீது விருப்பும் பூசியாதொழியின் வெறுப்பும் உண்டாகுமோ?. அவை உண்டாயின் அவர் விருப்பும் வெறுப்பும் உடைய சீவராசிகளுள் ஒன்றுவரன்றோ?." என்பன வாதியாய கேள்விகளைக் கேட்டுப் பரிகாசஞ்செய்கிறார்கள். இப்போது சில தினங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் "திராவிடன்" என்னும் பத்திரிகைக்கு வியாசம் எழுதும் பெருமை வாய்ந்த ஒருவர் "நான் ஓர் கட்டப்பாறையினால் (லிங்கம்) தலைமீது ஓங்கி அடிக்கிறேன். அதனைத் தடுக்க அக்கல்லுக்குச் சக்தி யேற்பட்டாலல்லவோ சரி" என்று தமது கல்வியறிவின் விசாலம் விளங்குமாறு அப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்தனர். நம்முடைய முன்னோர்கள் பலகாலமாகப் பலநூல்களை யாராய்ச்சிசெய்தும், அநுபூதி ஞானம் பெற்றும், தாம்பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெறவேண்டுமென்னும் கருணை மிகுதியால் சுருதி யுத்தி யநுபவவாயிலாய் கடவுள் இலக்கணம், ஆன்மவிலக்கணம் கடவுளை வழிபடும் மார்க்கம் ஆகிய இவைகளை விளக்கி ஞான சாத்திரங்களை யியற்றியது மன்றி, அவைகளிற் கூறியாங்கு ஒழுகியும் காட்டியிருக்க இவர்கள் வெகு இலேசாக ஒரு வாய்ச் சொல்லால் அவர்கள் செய்து காட்டிய சமய வொழுக்கங்களைப் பழிக்கிறார்கள். இவர்கள் இவ்வாறு பழித்தலைக் கேட்டுச் சைவ நூல்களைக் கல்லாதவர்கள் பலர் இவர்களுக்குப் பதில் சொல்ல

மாட்டாதவர்களா யிருக்கிறார்கள். உலகத்தில் கடவுள் ஒருவர் உண்டு என்று நம்பி அவரை வழிபடும் சமயங்கள் எண்ணிறந்தனவாயிருப்பினும், சைவசமயம் நீங்கலாக ஏனைய சமயங்கள் கூறும் கடவுள் இலக்கணம் ஆன்மவிலக்கணம் முத்தியிலக்கண முதலியவற்றைக் கொண்டு நாத்திகர் கேட்கும் வினாக்களுக்கு விடை பகர இயலாமையாலும், சைவசாத்திரங்களைக்கொண்டு அக்கடாக்களுக்கு விடையளிப்பது எளிதாயிருந்தும் சைவசமயிகளுள் சமயநூலறிந்தவர்கள் மிகச் சிலரேயாயிருத்தலாலும், நாத்திகச் சமயமானது பிறதேயங்களில் மாத்திரமன்றி நமது தமிழ்நாட்டிலும் தலைவிரித்தாடுகின்றது. ஆதலால் "நாம் என் கடவுளை வழிபட வேண்டும்" என்னும் இவ்வினாவுக்கு சுருதி யுத்தி யநுபவவாயிலாய் இப்போது விடையளிக்கத் தொடங்கினோம்.

"நாம் என் கடவுளை வழிபடவேண்டும்" என்னும் கேள்வியில் உள்ள நாம்" என்பது யாது?, அதின் இலக்கணங்களியாவை?, கடவுள் எனப்படும் பொருள் யாது?, அதின் இலக்கணங்களியாவை?, வழிபாடாவதியாது?, வழிபாட்டின் கிரமம் எத்தன்மைத்து?, என்பவற்றை ஒருவன் உணரப்பெறின் அவன் "நாம் என் கடவுளை வழிபடவேண்டும் என்னும் கேள்விக்குத் தக்க சமாதானத்தை தானே உணரப்பெற்றவனாவான். இவைகளை யாராய்ந் துணராதவனே அக்கேள்வியைக் கேட்டு இடர்ப்பட்டு பிறரையும் இடர்ப்படுத்துவான்.

உலகத்தில் உண்மை அறிவு இன்பம் என்னும் இம்மூன்றும் உண்டு என்பதை மறுப்பார் ஒருவருமில்லை. இம்மூன்றின் நிலைக்களமே கடவுள் அல்லது சிவம் எனப்படும். எப்பொருள் எக்காலத்தும் இல்பொருளாகாமல் உள்பொருளாய், அழிவின்றி நிலைபெற்று மற்றெல்லாப் பொருள்களும் தன்னிடத்தினின்றும் தோன்றி தன்னிடத்திலேயே ஒடுக்கப்பெறுமோ அப்பொருளே சைவநூல்கள் கூறும் சிவபரம்பொருளாம். எப்பொருள் அறிவு மயமாயிருந்து எல்லா உயிர்களின் அறிவை விளங்குமோ அப்பொருளே சைவ சாத்திரங்கள் முறையிடும் தனிமுதற் கடவுளாம். எப்பொருள் வரம்பிலின்பமுடையதாய் எல்லா உயிர்களும் அனுபவிக்கும் இன்பத்திற் கிடனாய் நிற்குமோ அப்பரம்பொருளே சைவத் திருவாளர்கள் வழிபடும் முழுமுதற் பொருளாம். ஆதலால் கடவுள் அல்லது சிவம் எனப்படுவது நாத்திகர்முதல் எல்லாச் சமயத்தினராலும்



ஒப்புக்கொள்ளப்படும் உண்மை அறிவு இன்பம் என்னும் இவைகளின் நிலைக்களமேயன்றிப் பிறிதொரு பொருளன்று. சைவ நூல்கள் சிவபரம்பொருளைச் சச்சிதானந்தம் என்று உரைப்பதனாலும் இவ்வுண்மை விளங்கும். சச்சிதானந்தம் என்பது சத்து சித்து ஆனந்தம் எனப்பிரிந்து உண்மை அறிவு இன்பம் என்று பொருள் பயக்கும். இவற்றுள் உண்மையாவது எக்காலத்தும் இல்பொருளாகாமல் உள்பொருளாய், தோற்றக்கேடுகளின்றி யிருத்தல். அறிவாவது சர்வஞ்ஞத்துவம்; அதாவது முற்றுணர்வு. இன்பமாவது வரம்பிலின்பம்.

இனி உயிர்களின் தன்மையை நோக்குவோமாயின் இவை வரையறுக்கப்பட்ட ஆயுளையும் அறிவையும் இன்பத்தையும் உடையனவாகவும், தாம்பெற்றவற்றினும் மேம்பட்ட ஆயுளையும் அறிவையும் இன்பத்தையும் விரும்புவனவாகவும், அவ்விருப்பம் முற்றுறுதல் வேண்டி முயல்வனவாகவும் இருக்கின்றன. இதுபற்றியே உயிர்கள் இச்சா ஞானக் கிரியைகளையுடையன என்று சைவநூல்கள் கூறுகின்றன. இதையும் எவரும் மறுக்கமுடியாது. உயிர்கள் மேம்பட்ட ஆயுளையும் அறிவையும் இன்பத்தையும் நாடிச்செல்லச் செல்ல அவை அளவுகடந்து மேன்மேலும் சென்றுகொண்டேயிருத்தலால், தாம் பலகாலும் செய்துகொண்டிருந்த முயற்சிகளால் மிகவும் இளைத்துக் கடைசியாக அவை யெல்லையற்று உயர்வொப்பின்றி நிற்கும் நிலைக்களம் எதுவோ அதனைப்பெற முயல்கின்றன. அவ்வொப்புயர்வற்ற நிலைக்களமே கடவுளின் உருவமாதலால், அந்நிலைக்களத்தை யடைய அநுசரிக்கும் மார்க்கமே கடவுள் வழிபாடு என்று சொல்லப்படும். அதை யடைதற்குரிய வழிகள் எண்ணிறந்தனவாம். அவையெல்லாம் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கினுள் அடங்கும். இவற்றுள் ஞானமார்க்கமாவது அந்நிலைக்களமாகவே விளங்குவது. யோகமார்க்கமாவது அந்நிலைக்களத்திற்கு மிகச் சமீபத்திலிருப்பது. சரியா மார்க்கத்தைக் கடந்தே கிரியா மார்க்கத்தை அடைதல்கூடும். கிரியாமார்க்கத்தைத் தாண்டியே யோகமார்க்கத்தை யடைதல்கூடும். யோகமார்க்கத்தைக் கடந்தே ஞானமார்க்கத்தை யடையு இயலும். சரியையிலே ஐம்புலச்சேட்டையும் அஞ்ஞானமும் காற்கூறு நீங்கிச் சாலோகம் என்னும் இன்பம் உண்டாம். கிரியையிலே அவை அரைக்கூறு நீங்கிச் சாமீபம் என்னும் பெரிய இன்பம் உண்டாம். யோகத்தில் அவை முக்காற்கூறு நீங்கிச் சாரூபம் என்னும் மிகப்பெரிய இன்பம் உண்டாம்.

ஞானமாவது அஞ்ஞானமும் ஐம்புலச்சேட்டையும் முற்றிலும் நீங்கி, இன்பமயமாயிருக்கும் சாயுச்சியம் என்னும் நிலையாம். அஞ்ஞானமானது செம்பினிற் களிம்புபோல் உயிர்களின் அறிவை மறைக்கும் ஆணவமலத்தின் காரியமாயிருப்பதனால் அது ஆணவமலமென்றும் சொல்லப்படும்.

சரிதையி லாணவங் கால்சரிந் திடுங்
கிரியையி லரைமலங் கெடுதியுற் றிடு
மருவுயோகத்தின் முக்கான் மடிந்திடும்
விரிசிவஞானத்தின் முற்றும்வீயுமே.

ஆதலால் உயிர்கள் தாம்பெற விரும்பும் பேரின்பத்தை யடைவதற்கு முதலில் அநுட்டிக்கவேண்டிய மார்க்கங்கள் சரியை கிரியைகளாம். ஆலயவழிபாடு தலயாத்திரை தீர்த்தயாத்திரை முதலியனவெல்லாம் சரியை கிரியைகளுள் அடங்கும். ஆதலால் ஆலயங்கள் கட்டுதலும், நித்தியபூசை நைமித்திகபூசை திருவிழா முதலியன நடத்தலும் கடவுள் பொருட்டன்றி மனிதர்கள் தாம் ஐம்புலச்சேட்டை யடங்கப்பெற்று அஞ்ஞானத்தினின்றும் நீங்கி இன்பநிலையை யடையும் பொருட்டேயாம் என்பது விளங்கும்.

உயிர்கள் இம்மையில் அநுபவிக்கும் இன்பமெல்லாம் மனதை ஐம்புலன் வழிச்செல்ல விடுவதனால் உண்டாகும் மயக்க அறிவினால் விளைவதாம். இவ்வின்பம் உண்மையான இன்பமன்று. கானற்சலம்போல் வெறுந்தோற்றமாத்திர மாயிருந்து துன்பமாய் மாறுவது. மனதை ஐம்புலன்வழிச் செலுத்தாமல் அறிவுமாத்திரமாயிருந்து அநுபவிக்கும் இன்பமே என்றும் அழியாததும் உண்மையுமான இன்பமாம்.

திருவாசகம்.

மாறிநின்றென்னை மயக்கிடும்வஞ்சப் புலனைந்தின்வழியடைத் தமுதே
யூறிநின்றென்னு ளெழுபரஞ் சோதி.

ஆதலால் புலி சிங்கம் முதலிய துட்டமிருகங்களுக்கும், பிணி மூப்புச் சாக்காடுகளுக்கும் கற்பாந்த வெள்ளங்களுக்கும் அஞ்சா வீரர்களாகிய பெரியோர்கள் புலப்பகைக்கு மிக அஞ்சுவர்.

புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப—அனைத்துலகுஞ்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பலே
பல்காலுங் காமப் பகை.



தாயுமானசுவாமிகள்.

வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர் வந்தெனை யீர்த்துவெங் காமத்
தீயிலே வெதுப்பி யுயிரொடுந் தின்னச் சிந்தைநைந் துருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போ லலைந்தலைப் பட்டேன் றாயினுங் கருணை யாமன்று
ளுயக்மாகி யொளிவிடு மணியே நாதனே ஞானவா ரிதியே.

சிறியோர் ஐம்புலப்பகைக்கு விருந்தூட்டி அது இழுத்துச் செல்லுமிடமெல்லாம் அதன் பின்னேயோடிச் சென்று பிறவியென்னும் துன்பக் கடலில் வீழ்ந்துவருந்துவர். பெரியோர் ஐம்புலன் வழிச்செல்லாமல் பத்தியென்னும் சிவிகையூர்ந்து, சரியை கிரியா யோகங்களாகிய வழிகளைக் கடந்துசென்று, ஞானம் என்னுங் குன்றேறிநின்று, திருவருளாகிய வாளைக்கைப்பற்றி ஐம்புலப் பகையை யடியோடு மாய்த்து, காணினுங் கேட்கினும் கருதினுங் களிதரும் சிவானந்தச் செழுந்தேறலை யருந்திச் செம்மாந்திருப்பர்.

(இன்னும் வரும்.)

---

## சைவப் பத்திரிகாசிரியர் சரித்திரச் சுருக்கம்.

(157-வது பக்கத்தொடர்ச்சி.)

இவர் கலியுகம் ஐயாயிரத்தில் விளம்பி௵ கார்த்திகை௴ அமாவாசை திதியில் தமது வாசஸ்தானமாகிய சென்னையினின்றும் புறப்பட்டுத் திருவொற்றியூரை யடைந்து ஸ்ரீ தியாகராஜப் பெருமானுருடைய பவனி மகோற்சவத்தைத் தரிசித்தபோது, அத்தலத்து மேலண்டை மாடவீதி யெங்கும் பூண்டுகள் நெருங்கி முளைத்து, அடியவர்களின் திருவடிகளிற் சிக்குண்டு, வழிபாட்டிற்கு இடையூறு விளைத்தன்மையைக் கண்டனர். கண்டதும் "இப் பூண்டுகள் முற்பிறவியில் சிவனடியார்களின் தெய்வ வழிபாட்டிற்கும், சைவாபிமானிகளின் சைவசமய பரிபாலனத்திற்கும் இடையூறு செய்த பாவிகளே போலும்; ஓரறிவுயிர்களாய்ப் பிறந்தும் இவை அப்பாவத் தொழிலைச் செய்துகொண்டிருக்கின்றன, இவைகளை உழவாரத் திருப்பணியாற் களைதல்வேண்டும்" என்னும் எண்ணம் இவர் உள்ளத்தில் உதித்தது. உதித்தலும், அவ்வெண்ணத்தோடு இறைவனார் திருநடனத்தைத் தரிசித்து மீண்டும் சென்னைமாநகரை யடைந்து, தமது கருத்தைத் தமதுதோழர்களாகிய சிவனடியார்கள்

சிலர்க்கு அறிவித்து, அச்சிவனடியார்களுந் தாமுமாக உழவாரத் திருப்படை மண்வெட்டி கட்டப்பாறை முதலிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு அடுத்த மார்கழி மீ 11உ (24-12-98) சனிவார மாலை திருவொற்றியூரை யடைந்து, திருக்கோயில் வழிபாடு செய்தனர். மறுநாளாகிய ஆதிவாரத்தன்று இவர்களியாவரும் அநுட்டானபரராய், திருவீதி மகோற்சவங் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளுக்குப்பின் திருவெம்பாவை பாராயணஞ்செய்த வண்ணம் திருவீதி வலம் வந்து திருக்கோயிலுட் புகுந்து சிவதரிசனம் செய்து, பிறகு உழவாரத்திருப்பணி செய்யத்தொடங்கி, ஒருசாரார் திருமதில் திருக்கோபுர முதலியவைகளில் முளைத்திருந்த மரங்களையுங் கொடிகளையும் பூண்டுகளையும் களைந்தார்கள். வேறொருசாரார் பிராகாரம் திருவாயில் திருவீதி முதலிய விடங்களிற் கிடந்த கல் முள் புல் பூண்டுகளை யகற்றினார்கள். இன்னொருசாரார் திருநந்தனவனத்தைத் திருத்தினார்கள். மற்றொரு சாரார் திருவலகிட்டார்கள். பிறிதொருசாரார் திருப்பள்ளித் தாமந்தொடுத்தார்கள். இவ்வாறு இவர்களியாவரும் உச்சிப்போது வரையில் திருப்பணி செய்தார்கள். மண்வெட்டி முதலிய ஆயுதங்களைக் கையிலெடுத்துப் பழகியறியாத இவ்வடியவர்கள் செய்யப் புகுந்த உழவாரத் திருப்பணிக்கு மனமுருகி உதவிபுரிவான் போல், வருணனும் அதற்கு முன்னிரவில் மழை பெய்வித்து நிலத்தைச் செப்பனிட்டு வைத்ததுமன்றி அன்று பகலெல்லாம் மேகங்களைக் கொண்டு பந்தரிட்டு இறைவனாரது திருவருளேயெனக் குளிர்ந்திருக்குமாறும் செய்தனன். பின்பு அடியவரியாவரும் அத்தலத்திலுள்ள திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப்பந்தரில் திருவமுது செய்து, பகல் 3 மணியானதும் ஸ்ரீ தியாகராஜப்பெருமான் சந்நிதியை யடைந்து சிவபுராண படனஞ் செய்து, இச்சபைக்குச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் என்று பெயரிட்டு, அவ்வாறே மாதந்தோறும் தொண்டைநாட்டில் தேவாரம் பெற்ற தலங்கடோறும் சென்று வழிபடவேண்டும் என்று பிரேரேபித்தார்கள். அதற்குள் பிரதோஷகாலம் சமீபித்தது. சமீபித்ததும், அடியவர்களியாவரும் மீண்டும் அநுட்டான முடித்துக்கொண்டு திருக்கோயிலை யடைந்து தேவாரபாராயணம்செய்து எழுத்தறியும் பெருமானை இறைஞ்சி யேத்துவாரானார்கள். அச்சமயத்தில் இவர்களுள் ஒருவரும் அறிந்திராத வேதியரொருவர் இவர்களோடு ஒத்தவயதினராகவும் கண்டோர் மனம் காதலித்துருகுமாறு செய்யும் சிவவேடப் பொலிவினராகவும், இவர் இறைவனார் திருவருளுருவமேயோ என்று ஐயுறத்தோன்றி, தம்மைத் திருவையாற்றுச் சாமிநாத ஐயர் எனக்கூறி, இவர்களுடன் சிறிதும் வேற்றுமையின்றிப் பன்னெடுநாட் பழகினவர்போல் அளவளாவிச் சிவாலயவழிபாடு செய்து, பண்ணோடு தேவார பாராயணஞ் செய்து இவர்களை இன்பவாரியினால் மூழ்குவித்தனர். அடியவர்களியாவரும் அவர் வசப்பட்டு அவரை மண்டபத்தில் எழுந்தருளுவித்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். அவ்வேதியர் உடனே எழுந்து "எவரேனுந் தாமாக" என்னும் முதலையுடைய ஒப்பற்ற திருத்தாண்டகத்தைத் திருவாய்மலர்ந்தருளி அடியார் கூட்டத்தைத் தரையில் வீழ்ந்து வணங்கினர். பின்னர் அவ்வேதியரும் அடியார் குழாமும் ஒருவரை யொருவர் விட்டு நீங்கமாட்டாதவராய் திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப்பந்தரையடைந்து அன்றிரவு முழுவதும் நித்திரையை மறந்து தேவாரமோதிய வண்ணமா யிருந்து இன்புற்றார்கள். பொழுது விடிந்ததும் அவ்வேதியர் தாம் (ரெயில்) புகைரதமூர்ந்து தம்மூருக்குப் போகவேண்டுமெனக் கூறி விடைபெற்றுச் சென்றனர். அடியவர்களும் அவரிடம் பிரியா விடைபெற்றுத் தத்தம் இல்லங்கட் கேகினார்கள்.



பத்திரிகாசிரியர் திருவொற்றியூரில் தாம் கண்ட அற்புதங்களாலும், அநுபவித்த இன்பத்தாலும் தாம் ஸ்ரீ தியாகராஜப்பெருமானார் சந்நிதியில் பிரேரேபிக்கப்பட்டவாறே மாதந்தோறும் சிவனடியார்களோடு தொண்டைநாட்டில் தேவாரம்பெற்ற தலங்களை யடைந்து வழிபடல்வேண்டும் என்னும் ஆசை வசப்பட்டு அடுத்த தைமாத முதலாகச் சிவதலயாத்திரைகள் செய்யத் தொடங்கி மாதந்தோறும் தப்பாமல் நூற்றுக்கணக்கான சிவனடியார்களோடு சிவதலயாத்திரைசெய்து அவ்வண்ணமே வழிபாடு செய்து சார்வரி வருடத்திற்குள் தொண்டைநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற தலங்கள் முப்பத்திரண்டையும் தரிசித்து வழிபட்டனர். இத்திருக்கூட்டம் சென்ற தலங்கடோறும் சிவனடியார்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் கூடிச் சர்வோபசாரத்தோடும் எதிர்கொண்டழைத்துச் சென்று உற்சவங்கள் செய்தும், மாகேசுர பூசை செய்வித்தும் திருவிழாக்கொண்டாடி இவர்களோடு ஆராவன்பின் அளவளாவி வழிபடுவாராயினார். இவ்யாத்திரைக் காலங்களில் பல அற்புதங்கள் உண்டாயின. பத்திரிகாசிரியர் ஸ்ரீ தியாகராஜப் பெருமானைச்

சபாநாயகராகச் சிந்தித்து, தாம் காரியதரிசியாயிருந்து தொண்டை
நாட்டுத் தலயாத்திரையைப் பூர்த்திசெய்தமையால், யாவருக்கும்
அநுகூலமாகிய ஓர் ஆதிவாரத்தில் அப்பெருமானுருக்கு மகாபிடே
காதி யுபசாரங்கள் செய்து தொண்டைநாட்டுத் தலயாத்திரைப்
பூர்த்தி விழாவைக் கொண்டாட விரும்பினார். விரும்புதலும், சோம
வாரத்திலும் விசேட புண்ணியகாலங்களிலுமன்றி ஆதிவாரத்தில்
அப்பெருமானுருக்கு அபிஷேகஞ்செய்யும் நியதியில்லாமையால்
இவர் தமது எண்ணம் முற்றுறுமல் வருந்திநின்றனர். காரியதரிசி
யும் மற்றுமுள்ள சபையார்களும் அவ்வாறு வருந்தி நின்றபோது
சபாநாயகர் வாளாவிருப்பரோ?. ஸ்ரீ தியாகராஜப்பெருமான் தாம்
எழுந்தருளியிருக்கும் மண்டபத்தின் ஸ்தூபிகலசத்தைக் கள்வர்கள்
அபகரிக்கச் செய்தனர். அதனை அத்தலத்து ஆதிசைவரறிந்து இது
சிவனடியார் திருக்கூட்டத்தின் பெருமையை விளக்கும் சம்பவமாம்
என்றுணர்ந்து, காரியதரிசியாகிய பத்திரிகாசிரியரிடம் சென்று, கல
சம் களவாடப்பட்டமையையறிவித்து, இவர்கள் விரும்பியவாறே ஸ்ரீ
தியாகராஜப் பெருமானுருக்கு ஆதிவாரத்திலேயே கும்பாபிஷேக
மகோற்சவம் செய்யலாம் என்று தெரிவித்தனர். பத்திரிகாசிரியர்
இதைத் திருக்கூட்டத்திற்கு அறிவித்து சார்வரி௵ தைமீ 22உ
(3-2-1901) ஆதிவாரம் பௌர்ணிமை பூசநட்சத்திரங் கூடிய சுப
தினத்தில் ஸ்ரீ தியாகராஜப்பெருமானுருக்குக் கும்பாபிஷேகமும்
திருவீதி மகோற்சவமும் ஸ்ரீபட்டம் பக்கநாதராதிப் பஞ்சமூர்த்திக
ளுக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் மகாபிஷேகாதியுப
சாரங்களும், பிராமண சந்தர்ப்பணை மாகேசுர பூசை அன்னதான
முதலியவைகளும் சர்வாடம்பரங்களோடும் சிறப்பாய் நடத்தி
தொண்டை நாட்டுத் தலயாத்திரைப் பூர்த்தி விழாக்கொண்டாடி
னார். அதன் பிறகு அவ்வண்ணமாகவே மாதந்தோறும் தப்பாமல்
யாத்திரை செய்து சோழநாட்டிலும்கொங்குநாட்டிலும் நடுநாட்டி
லும் உள்ள பல தலங்களைத் தரிசித்தார்.

பத்திரிகாசிரியர் அவ்வாறு திருக்கூட்டத்தோடு சிவதலயாத்
திரைகள் செய்து வந்தபோது, சென்னைமாநகரில் சைவசமயிகட்
கெனப் பொதுவானதொரு சபாமண்டபம் இல்லாமையையெண்ணி
அக்குறைவை நீக்குமாறு திருக்கூட்டத்தைக்கொண்டு பொருள்
சேகரித்தும், தமது கைப்பொருளைக் கொண்டும் மிகவும் பிரயாசை
யெடுத்துக்கொண்டு 2,500 ரூபா வரையில் செலவிட்டுச் சபாமண்ட
பங் கட்டினார். அதைத் தொடங்கியபிறகு இவருடைய உத்தியோ



கஸ்தானமானது சென்னைமாநகரிலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றப்
பட்டது. மாற்றப்படவே அரசாங்கத்தினர் இவரை கல்கத்தாவுக்
குப் போகும்படி ஆஞ்ஞாபித்தனர். அதனால் இவரும் திருக்கூட்
டத்தார்களும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியமாட்டாமல் மனம்
வருந்த, திருக்கூட்டத்தினர் இவர் பிரிவாற்றுமையை விளக்கி இவர்
மீது வாழ்த்துப் பாக்களைப்பாடி ரெயில்வே ஸ்டேஷன்முற்றும் பெ
ருங் கூட்டமாகக்கூடி கண்ணீர்விட்டு வழிவிட்டார்கள். இவர் கல்கத்
தாவுக்குச் சென்றனரேனும் இவர் மனமெல்லாம் திருக்கூட்டத்தி
னிடத்திலேயே பதிந்திருந்தது. சபாமண்டபம் பூர்த்தியாகாமை
யை எண்ணி வருந்துவாராயினார். கல்கத்தாவுக்குச் சென்ற
ஒருமாதத்திற்குள் திருவருட்செயலாக இவர் சரீரம் மிகவாடி உண
வேற்றுக்கொள்ளாமல் இருந்தனர். அதை அரசாங்கத்தினரறிந்து
உடனே இவருக்கு முழுச்சம்பளத்தோடு மூன்றுமாதம் விடுமுறை
கொடுத்து சென்னைக்குத் திரும்பிச் செல்லுமாறு செய்தார்கள்.
இவர் இத்திருவருட் செயலை யுன்னி வியந்து திருக்கூட்டத்தினர்
மகிழ சென்னைக்கு வந்து கொங்குநாட்டிலுள்ள சிவதலங்கட்கு
திருக்கூட்டத்துடன் யாத்திரைசெய்தனர். அச்சமயத்தில் ஸ்ரீமான்
ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளையவர்கள் B. A. B. L. சேலமாநகரில்
டிஸ்ட்ரிக்ட் முனிசீப்பாய் இருந்தனர். அவர் திருக்கூட்டத்தை அவ்
விடம் வருவித்து அவ்வூர் பிரமுகர்கள் பலரும் சிவனடியார்கள்
எண்ணிறந்தோறும்கூடி எதிர்கொண்டு சர்வோபசாரங்கள் செய்து
வர நகர்வலஞ் செய்வித்து விழாக்கொண்டாடுவித்தனர்.

(தொடரும்.)

## ஓர் நன்கொடை.

தென் ஆப்பிரிக்கா புலாவேயோவிலிருக்கும் நம்மவர்கள் வெகு
தூரத்திலிருக்கும் வேறு கண்டத்திற்போய் வசிப்பவர்களாயிருந்தும்
சமயப்பற்றை விடாதவர்களாய் அவ்விடத்தில் இந்து சன்மார்க்க
சபை யெனப் பெயரிய ஒரு சபையைத் தாபித்து அதை நமது திருக்
கூட்டத்திற்குக் கிளைச் சபையாக்கி, அவ்விடத்தில் நம்முடைய
வைதிக சமயத்தை வளர்த்து வருவதோடு, நம்முடைய வைதிக
சைவ அச்சுக்கூடத்திற்கும் 25 ரூபா நன்கொடை யளித்தார்கள்.
இவர்களுக்கு இத்தாய்ச்சபை எந்நாளும் நன்றி பாராட்டுங் கடப்பா
டுடையதாம்.

இ. ஆதிமூலமுதலியார்.

## ஆயுள் சந்தாதாரர்கள்.

ரங்கோன் ஸ்ரீமான் S. R. M. S. சதாசிவம் செட்டியாரவர்கள் முன்னொரு முறை 10 ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து 100 ரூபா அனுப்பினதுமன்றி, மீண்டும் கீழ்குறித்த பத்து ஆயுள்சந்தாதாரர்களைச் சேர்த்து 100 ரூபா அனுப்பி யுபகரித்தார்கள்.

315 ஸ்ரீமான் க. செ. ராம. சிதம்பரம் செட்டியாரவர்கள்,
Shwebo, via Rangoon.

854 ,, சி. ராம. சி. மெய்யப்பச் செட்டியாரவர்கள்,
Pyapon, via Rangoon.

316 ,, ப.வ. பெ. ரி. வீ. அ. சொக்கலிங்கஞ் செட்டியார்,
அவர்கள், Rangoon.

123 ,, ந. குழ. ப. குழந்தைவேலன் செட்டியாரவர்கள்,
Othegon, via Rangoon.

20 ,, அரு. சி. அருணாசலஞ் செட்டியாரவர்கள்,
Kothamangalam, via Trichy.

987 ,, ராம. சி. ராம. ராமசாமிச் செட்டியாரவர்கள்,
Henzada, via Rangoon.

21 ,, சு. மு. ப. அ. அழகப்பச் செட்டியாரவர்கள்,
Henzada, via Rangoon.

1135 ,, முத்து. கரு. ராம. வேலாயுதஞ் செட்டியாரவர்கள்,
Neikban, near Henzada, via Rangoon.

124 ,, ராம. ராம. கதிரேசன் செட்டியாரவர்கள்,
Mandalay, via Rangoon.

988 ,, சி. அ. சி. ராமசாமிச் செட்டியாரவர்கள்,
Prome, via Rangoon.

வைதிக சைவ அச்சுக்கூடம்.

இவ்வச்சுக்கூடத்தில் சிட்டா புத்தகம், நினைக்குறிப்புப் புத்தகம், பேரேட்டு புத்தகமுதலிய பலவித புத்தகங்கள் அச்சிட்டு, பயிண்டுசெய்து கொடுக்கப்படும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3. || பிங்கள௵ கார்த்திகை௴ 1917௵ நவம்பர்௴ || இதழ் 11

## கோயிற்புராணம்.

தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளு
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நட்மாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர்கற் பகம்போற்றி.

—

## சிவஞானபோதம்.

### மூன்றாஞ் சூத்திரம்—ஆறாம் அதிகரணம்.

### உணர்த்த உணர்தலின் ஆன்மா வுளது.

(இ-ள்.) அறிவிக்க அறிதலால் (மறந்து மறந்து அறிதலின்றி அறிந்தவாறே அறிந்து நிற்கும் பிரமத்திற்கு வேறாக) ஆன்மா உளது. (எ-று.)

இதில் க-வது—தன்னாற் கூறப்படும் பொருள்— பிரமத்திற்கு வேறாய் உயிர் உண்டு.

2-வது—ஐயப்பாடு— ஆன்மா பிரமப் பொருளேயோ, அதனின் வேறோ?.

3-வது—பிறர் கூறும் பக்கம்—பிரமப்பொருள் மேலே கூறிய சடப்பொருள்கள் போலன்றிச் சித்துப்பொருளாகையால் அதுவே உயிராம். (இவ்வாறு கூறுவோர் விஞ்ஞானான்மவாதிகள் எனப் படும் மாயாவாதிகள்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு.

தொழிற்படுங் கருவிகள் ஒன்றுமின்றிக் கேவலமாய் அதீதாவத்தையி லிருக்கும்போது அறியமாட்டாமல், பின்னே கலைமுதலிய கருவிகளால் அறிவிக்க அறிவதனால், எக்காலத்தும் மாறுபாடின்றி அறிந்த வண்ணமே அறிந்து நிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கு வேறாய் உணர்த்த உணர்வதாகிய ஆன்மா உண்டு.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிந்தையும் விட்டங் கடங்கி—யறிந்த
தெதுவறிவு மன்றாகு மெய்கண்டா னொன்றி
னதுவதுதா னென்னு மகம்.

(இ-ள்.) அறிந்தும் அறிவது ஆயும் அறியாது=(கருவிகளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்தானத்தினின்று விடயங்களை யறியுமிடத்தும் ஒருங்கே யறியமாட்டாது) ஒன்றினையே யறிந்தும், ஒன்றினையறியப் புகுவதாயும், முன் அறிந்த தொன்றினை அறியாதொழிந்தும்— அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி=இவ்வாறு ஒவ்வொன்றாக அறிந்த விஷயத்தையும் விடாதறியமாட்டாது விட்டுவிட்டு ஐந்தவத்தைப்பட்டு அடங்கி— அறிந்தது எது=(மீள அறிந்து வருதல் பிரத்தியக்ஷமாகக் காணப்படுதலான் அவ்வாறு) அறிந்துவந்த பொருள் யாது. (அது சடமன்று என்பது முன்னமே காட்டப்பட்டது)—அறிவும் அன்று=இயல்பாக உணரும் பேரறிவுமன்று. மெய்கண்டான் ஒன்றின்=இனி மெய்யாகிய சித்தாந்த நெறியினை யுணர்ந்தோன் பின் யாதென்று மனமொருங்கி யாராயின்— அது அது தான் என்னும் அகம் ஆகும்=(காட்டும் ஒளிக்கு வேறாகிய கண்ணொளிபோல அவ்வறிவிற்கு வேறாய்) அது வதுவே தானெனச் (சார்ந்த வண்ணமாய் நின்று அறியும் இயல்பையுடைய) உயிராம். (எ-று.)

அறிந்தும் அறிவதேயாயும் என்னும் உம்மைகள் எச்சவும்மைகள், அறியாது என்பதில் எஞ்ஞான்றும்மை விகாரத்தாற் றொக்கது.

## ஸ்ரீ தாயுமானசுவாமிகள் மதம்.

இப்பத்திரிகையின் இரண்டாமலர் பதினொராவது இதழில் "சைவநூல்களும் ஏகான்மவாதிகளும்" என்னும் மகுடத்தின் கீழ் யாம் வெளியிட்டுள்ள வியாசத்தில், தாயுமானசுவாமிகள் பாடலை ஏகான்மவாதிகள் தங்கள் சமயநூலெனக் கொண்டாடுகிறார்கள் என்று கூறினோம். அவர்கள் அவ்வாறு கொண்டாடுவது- அறியாமையின் பாலதாம் என்பதையும், அந்நூல் சுத்தாத்துவித சித்தாந்த சைவ நூலாம் என்பதையும் இப்போது விளக்கத் தொடங்கினோம்.

தாயுமானசுவாமிகள் பாடலை ஏகான்மவாதிகள் தங்கள் சமய நூலெனக் கருதுவது மாத்திரமன்றி, வைணவர் முதலாயினோருள்ளும் பலர் அதை எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவாகிய சமரச சன்மார்க்கநூல் என்று கருதி யோதுகிறார்கள். சைவப்பிள்ளைகளும் வைணவப்பிள்ளைகளுங் கலந்து வாசிக்கும் பாடசாலைகளில், தேவாரத்திருமுறைகளைச் சைவர்களுக்கே யுரிய நூல்களெனவும், நாலாயிரப் பிரபந்தத்தை வைணவர்களுக்கே யுரிய நூலெனவும், அவைகளை யோதுவிக்காதவர்களும் தாயுமானசுவாமிகள் பாடலைக் கற்பிக்கிறார்கள். சைவசமயிகளுள்ளும் பலர் வேதாந்தத்தெளிவே சைவசித்தாந்தம் என்பதனை உணராமல் "அது வேதாந்த நூல்; சைவநூல் அன்று" என்று குளறுகிறார்கள்.

தாயுமானசுவாமிகள் பாடல் சமரச சன்மார்க்கநூல் என்பது உண்மையே. சமரச சன்மார்க்கம் என்பது சித்தாந்த சைவத்தின் பரியாய நாமமாம். இது மற்றோரிடத்தில் தனியாயெடுத்து விளக்கப்படும். இதனை யுணராமல் அந்நூலில் ஆரம்பத்தில் ஏனைய சைவ நூல்களிற் காணப்படுவதுபோல், விநாயக காப்பு, பார்வதி வணக்கம், ஸ்கந்தர் வணக்கம், சைவசமய குரவர் வணக்கம் முதலிய வணக்கங்கள் காணப்படாமையாலும், அந்நூலில் "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே" யென்று சித்தர்களைத் தோத்திரஞ்செய்திருத்தலாலும், சிவபெருமானுடைய தடத்த நிலையை யுணர்த்தும் திருநாமங்கள் அதிகமாய்க் காணப்படாமல், சொரூப நிலையை யுணர்த்துவனவாகிய பரிபூரணானந்தம், எங்கு நிறைகின்றபொருள், சிற்சுகோதயவிலாசம், தேசோமயானந்தம், என்பன வாதியாய திருநாமங்களே அதிகமாய்ச் செய்யுட்களின்

ஈற்றில் காணப்படுதலானும், முதற்செய்யுளில் "சமயகோடிகளெலாந் தன்றெய்வமெந்தெய்வமென் றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது" என்று கூறியிருத்தலானும், அந்நூலை யிவர்களியாவரும் எல்லாச்சமயங்கட்கும் பொதுவானதொரு சமயநூல் என்று கருதுகிறார்கள். இவ்வாறு சைவநூலொன்றைப் பிறசமயிகளும் தங்கள் சமயநூலெனக் கொண்டாடுவது சைவசமயத்தின் ஏற்றத்தையும், சைவசமயமே சமரச சன்மார்க்கம் என்பதையும் அறிவுறுத்தி, அந்நூல் செய்தவருடைய பெருமையைபுலப்படுத்தும். இவ்வுண்மைகளை விளக்கவேண்டியே தாயுமானசுவாமிகள் அந்நூலை அவ்வாறியற்றினார் எனினும் பொருந்தும். பற்பல சனங்களின் பற்பல அபிப்பிராய பேதங்களே பற்பல சமயங்களாய் விரிந்திருத்தலால் எல்லாச்சமயங்கட்கும் பொதுவானதொரு சமயமும் சமயநூலும் இருக்குமெனக் கோடல் அறியாமையின்பாலதாம். இதனை இரண்டாவது மலர் முதலாவதிதழில் "சமயம்" என்னும் வியாசத்தால் அறியலாம்.

தாயுமான சுவாமிகள் பாடலை நன்குணர்ந்த நுண்ணறிவாளர்க்கு அவர் சைவசந்தான குரவர் பரம்பரையில் அவதரித்த சைவசித்தாந்தப் பிரவர்த்தகாசாரியர் என்பதும், பரமத திமிரபாநு என்பதும் தெள்ளிதின் விளங்கும். அவர்,

வேண்டுவ படைத்தாய் நுந்தை விதிப்படி புரந்தா னத்தைக்
காண்டக வழித்தான் முக்கட் கடவுட்டா னிவனைய வாற்று
லாண்டவ னெவனோ வென்ன வறிகிலா தகில நீயே
யீண்டிய வல்லறீர வெம்மனோர்க் கியம்பு கண்டாய்.

கண்டன வல்ல வென்றே கழித்திடு மிறுதிக் கண்ணே
கொண்டது பரமா னந்தக் கோதிலா முத்தி யத்தாற்
பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன மாயையோடே
வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன்.

என்னும் இச்செய்யுட்களால் பிரம விட்டுணுக்கள் செய்யும் படைத்தற் றொழிலும் காத்தற் றொழிலும் மாயா காரியமாய் இந்திரசாலம்போல் அழிவெய்துவனவென்றும், சங்காரகர்த்தாவாகிய சிவபெருமான் ஒருவரே மாயாரகிதமாகிய பேரின்பமுத்தியைக் கொடுப்பவர் என்றும், அவரே பிரம விஷ்ணுக்களும் உய்யுமாறு வழிபடும் திரிமூர்த்தி பரன் என்றும், அதை எல்லா உயிர்களும் உணர்ந்து தம்மை வழிபட்டு உய்யவேண்டுமென்னும் பரம காரு



ணியத்தினால் அவர் பிரமனுடைய அகந்தை நீக்குமாறு கிள்ளிய அவன் சிரங்களில் ஒன்றைத் தமது திருக்கரத்திலும், திருமால் ஆழிவேண்டி யருச்சித்த கண்ணைத் தமது திருவடியிலும் தாங்கி வீற்றிருக்கின்றார் என்றுங் கூறி சிவபரத்வ நிரூபணம்செய்தருளினர்.

"பன்முகச் சமயநெறி படைத்தவருமி யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்னும் செய்யுளில் தங்களை வேதாந்திகள் என்று சொல்லிக்கொள்ளும் ஏகான்மவாதிகள் பாதகத்தவர் என்றும், சிவம் வேறு ஆன்மாவேறு என்பது தோன்ற சிவபெருமான் கல்லாலினீழலில் தட்சிணாமூர்த்தியா யெழுந்தருளி ஒருதிருக்கரத்திலே சிவஞானபோதமும் இன்னொரு திருக்கரத்தில் சின்முத்திரையுந்தாங்கி, முப்பொருளுண்மையை விளக்கி யருளினார் என்றும் அருளிச்செய்தனர். இவ்வாறே "பூதலயமாகின்ற மாயை முதலென்பர் சிலர்" என்னும் முதலையுடைய செய்யுளிலும் பலசமயங்களை நிராகரித்தனர்.

நமது சுவாமிகள் நூலின் ஆரம்பத்திலே கணேசாதி மூர்த்தங்களைத் தோத்திரஞ்செய்யாவிட்டாலும், இடையிலே, தெய்வவணக்கம் என்னும் இயலில், ஸ்ரீநடராஜப்பெருமானையும், சிவகாமியம்மையாரையும், விநாயகக்கடவுளையும், அறுமுகக்கடவுளையும், சண்டேசரையும் சைவசம்பிரதாய முறைப்படி தோத்திரம்செய்தனர்.

அவர் இவ்வாறு சிவாகமங்களிற் கூறியாங்கு சிவபரஞ்சுடராதிப் பஞ்சமூர்த்திகளை வழிபட்டனரேயன்றி பிறதேவர்களை எங்கும் வணங்கினாரல்லர். இதனை

கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோ
ரிற்புறத் தவரை நாடா ரியாங்களு மின்ப வாழ்வுந்
தற்பொறி யாக நல்குந் தலைவநின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணா னந்த வாழ்வே.

என்னுஞ் செய்யுளாலுணரலாகும்.

அவர் சைவாகம சம்பிரதாயங்களை யநுசரித்துச் சிவபெருமானாதிப் பஞ்சமூர்த்திகளைத் தோத்திரஞ்செய்த பின்னர், தமது குருமரபைத் தோத்திரஞ்செய்தனர். அதில் அவர் சங்கராசாரியார் முதலிய ஏகான்மவாதாசாரியர்களுள் எவரையும் தோத்திரம் செய்தாரல்லர். நமது திருக்கைலாய பரம்பரை யாசிரியர்களையே முறையாகத் தோத்திரஞ் செய்தனர். இத்தோத்திரங்களுள் மெய்கண்டநாதர் முதலிய சைவசந்தான குரவர் தோத்திரங்களாவன:—

### மெய்கண்டதேவர்.

பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ.

### அருணந்தி சிவாசாரியசுவாமிகள்.

பாதிவிருத் தத்தாலிந்தப் பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ

### மறைஞானசம்பந்த தேசிகசுவாமிகள்

சிற்றம்பலமன்னுஞ் சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநா ளெந்நாளோ.

### உமாபதிசிவாசாரியசுவாமிகள்.

குறைவிலருண் ஞானமுதல் கொற்றங் குடியடிக
ணிறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ.

இத்தோத்திரங்களில் ஒன்றில் நமது மெய்கண்டநாதரே புனிதமென்னும் அத்துவிதமெய்யை, அதாவது சுத்தாத்துவிதமென்னும் சைவசித்தாந்த மெய்யைக் கண்டவரென்றும், மற்றசமயிகளெல்லாம் "பொய்கண்டார்" என்றும் கூறியருளினர். மற்றொன்றில் நமது அருணந்திசிவாசாரியசுவாமிகள் தாம்திருவாய்மலர்ந்தருளிய சிவஞானசித்தியாரின் எட்டாவது சூத்திரத்து, முப்பதாவது செய்யுளின் முதல் இரண்டடியிலே இவ்வுலகம் அப்பிரயோசனமென உணருமாறு சுத்தாத்துவித உண்மையைச் சாதித்தருளினர் என்றனர்.

இவர் மௌனகுரு வணக்கத்தில்

எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழவரு ளியநந்தி மரபு வாழ்க
என்றடியர் மனமகிழ வேதாக மத்துணி பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி மௌனோப தேச குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரு மௌன குருவே.

என்றதனாலும் இவர் சைவ குருபரம்பரையினர் என்பதும், இவர் ஆசிரியராகிய மௌனகுரு அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய திருமூலநாயனார் பரம்பரையினரென்பதும் விளங்கும்.

(இன்னும் வரும்.)

---

## முப்பொருளுண்மை.

இக்காலத்தில் எகான்மவாதிகளிற் சிலர் பிரமப்பொருள் ஒன்றேயன்றி பிரமமும், உயிரும், பாசமும் என மூன்று பொருள்கள் கொள்ளுதல் வழுவாமென்று வாதிக்கின்றார்கள். அன்றியும் அவ்வாறு கொள்வாரையும் அவமதித்துப் பேசுகின்றார்கள். இவை எள்ளளவும் யோசனையின்றிக் கூறும் வெறும் வார்த்தைகளாம். சைவசமயமரபிற் பிறந்த சிலர் அவர் வாய்மொழிகளை மெய்யென நம்பி கண்ணைமூடிக்கொண்டு வழிநடப்பதுபோல் "எல்லாம் ஒன்றுதான். அதீதமார்க்கம் அதுவே. பிரமம் எல்லாவற்றையுங் கடந்தது" என்று தாமே நிச்சயம் பண்ணிக்கொண்டு, அத்வைதி என்று போலிப்பெயர் பூண்டு, எங்கும் உலாவுகின்றனர். அவர்கள் நமது சுத்தாத்துவைத வைதிக சைவக் கொள்கைகளை நுனித்தமதி கொண்டு யூகிப்பார்களாயின் உண்மைவிளங்கத்தட்டில்லை,

சித்தாந்த சைவர்களாகிய நாம் முக்காலத்தும் இல்லாதபொருளை இல்பொருளென்றே கூறுகின்றோம். உள்ளபொருளை உள்பொருளென்றே சொல்லுகின்றோம். இது யுக்திக்குப்பொருத்தம். பிரமம் மாத்திரம் உள்பொருளாயும், உயிரும் உடலும் இல்பொருளாயும் இருப்பின் பிரமம் ஒன்றே உள்பொருளென்று ஸ்திரமாய் சாதித்துவிடலாம். அப்படியின்றி உயிரும் உடலும் தோற்றமாத்திரமாயில்லாமல் பொருள்மயமா யிருக்கின்றமையால் இருக்கின்ற அந்தப்பொருள்களை முக்காலத்தும் இல்லையென்று சாதிப்பது எங்ஙனம் பொருந்தும். பிரமம் ஞானானந்த சொரூபம். ஞானமாவது சத்தும் சித்துமாய இருதன்மையாம். ஆனந்தமாவது சர்வஞ்ஞத்துவ முதலிய எண்குணங்களாம். பிரமத்துக்குப் போக்கும், வரவும், புணர்வும், விகாரமும், சலனமும், மற்றெதுவும் இல்லை. அது எப்பொழுதும் ஆனந்தமாகவே விளங்கிக்கொண்டிருக்கும். அப்படிப்பட்ட பொருள் ஒன்றே உள்பொருளானால் நமக்கு முன்னிலைச் சுட்டுப்பொருளாயுள்ள இந்தப் பிரபஞ்சமும், நாம் தாங்கிக்கொண்டிருக்கின்ற நம்முடைய உடலும், நாமாகிய ஆத்மாவும் காட்சிப்பட ஓர் நியாயமுமில்லை. அன்றியும் இந்தப் பிரபஞ்சமும் உடலும் அந்தப் பிரமத்தின் வேறாய், அஞ்ஞான கரமும், துக்ககரமுமான பொருள்களாய், விளங்குதல் பிரத்தியட்சாநுபவம். ஞானானந்த சொரூபமாயுள்ள பிரமத்தையும், அஞ்ஞானதுக்ககர

மான பிரபஞ்சத்தையும், உடலையும், சிற்றறிவும் சிறுதொழிலு முடைய ஆத்மாவையும் ஒன்றென்று சொல்லுதல் கேவலம் அசங்கதமன்றோ. ஒன்றோடொன் றொவ்வாமல் கேவலம் எதிர்மறையான இயல்புள்ள மூன்று பொருள்களை ஒன்றென்று கூறி மயங்க வைத்தல் அசுர மோகனார்த்தஞ் செய்த அஞ்ஞான நூலைப்பழகின வூழின் பயனென்று பதிநூலுணர்ந்தோர் கண்டிரங்குவர்.

நிற்க, நாம் தாங்கிக்கொண்டிருக்கும் உடலும், இந்த உடலோடுகூடிய கருவி கரணங்களும், இந்த உடலுக் கிருப்பிடமாகிய உலகமும், இவ்வுலகில் நம்மால் அனுபவிக்கப்படும் போகப் பொருள்களும் ஆகிய தனுகரணபுவன போகங்களென்னும் நான்கும், மாயையிலிருந்து தோன்றிய பொருள்களாமென்று சகல வேதாகம சாஸ்திரங்களும் ஒருமித்து ஏகவசனமாய்க் கூறுகின்றன. அந்தமாயை இப்படிக் காரியப்படுதல் உயிராகிய ஆத்மாவின் பொருட்டேயாம். ஆத்மா மாயையினாலே பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பந்தமும் கன்மவசத்தா லுண்டாயிற்று. கன்மமும் ஆணவமலங்காரணமாய் நேர்ந்தது.

ஆத்மாவுக்கு அறியாமையில்லையானால் ஆணவமலம் இல்லையென்று சொல்லலாம். இன்பதுன்பாநுபவம் இல்லையானால் கன்மமலம் இல்லையென்று கூறலாம். அவ்வின்ப துன்பங்களை யநுபவிப்பதற்கு இடமான தநுகரணபுவன போகங்கள் இல்லையானால் மாயையும் இல்லை யென்று இயம்பலாம். இவை யெல்லாம் பிரத்தியட்சமாயிருக்கும்போது இவற்றைக் காலத்திரயத்திலும் இல்லையென்று புரட்டுதல் எங்ஙனமாகும். ஆனால் தநுகரணபுவன போகங்கள் மாயாகாரியங்களாதலானும், உண்டுபோலின்றும் பண்பினையுடைமையானும், அவையாவும் இந்திரசாலம்போலவும், கனவுபோலவும், கானலின் நீர்போலவும் உள்பொருளாகத் தோன்றிப்பின் இல்லாதாகு முறைமைபற்றி அசத்தென்றும் பொய் யென்றும், சொல்லப்பட்டன. இவ்வுவமைகளால் மாயாகாரியங்களனைத்தும் இல்பொருளென்று சாதித்தல் கூடாமை. இவ்வுவமைகளே தசோபநிஷத்துகளில் கூறியிருக்கின்றன. ஏகான்மவாதிகள் சொல்லும் இப்பியில் வெள்ளித்தோற்றம், கயிற்றரவு, மலடிமகன் முதலிய உவமைகள் அவற்றில்யாண்டும் சொல்லப்படவில்லை. அவற்றிற்கு ஆஸ்பதம் ஏகான்மவாத சுருதிகளே. ஸ்ரீ தாயுமானஸ்வாமிகளும்



இந்திரசாலங்கனவு கானலினீரெனவுலகம்
எமக்குத் தோன்றச்
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க்..........

என்று சைவக்கொள்கைகளையே எடுத்து வற்புறுத்தினார்.

ஈண்டு இந்திரசாலமானது தோன்றும் பொழுதே இல்லையாய் வேறுவனவற்றிற்கும், கனாக்காட்சியானது கடைபோதலின்றி இடையே யழிவனவற்றிற்கும், கானலின் நீர்த்தோற்றமானது ஒரு காரணங்காட்டி அழிவெய்துவனவற்றிற்கும் உவமையாயின. உண்மை இவ்வாறிருத்தலால் "சைவஞ் சிவத்தொடு சம்பந்த மென்றுணர் சைவம் வளர்க்கும் சம்பந்த மூர்த்தி" என்னும் பிரமாணப்படி, சைவமாகிய முத்திநெறியில் நிற்கின்ற நஞ்சித்தாந்த சைவர்கள் இருவினைகளை யீட்டிப் பிறந்திறந்து இன்பதுன்ப நுகர்ந்து உழலும் உயிராகிய ஆத்மாவையும், தோன்றி நின்று அழிவதாய், அறிவற்றதாய் துக்ககரமாயுள்ள இந்தப் பிரபஞ்சத்தையும், சச்சிதானந்த சொரூபமான பிரமம் அல்லது சிவத்தையும், சுருதி யுக்தி அநுபவங்கட் கிணங்க வெவ்வேறு பொருள்களாகக் கொள்வார்களேயன்றி ஏகான்மவாதிகளைப்போல யோசனையில்லாமல் தம்மதத்திலுள்ள மோகத்தால் அபேதமாயும் பிடிவாதமாயும் பேசார்கள்.

இதுகாறும் கூறிப்போந்தவற்றால் நாம் அறியக்கிடக்கின்ற உண்மை யாதெனில், பிரமம் அல்லது சிவம் என்னும் பொருள் ஞானானந்த வஸ்துவெனவும், அப்பரம்பொருளுக்குப் பந்தமுமில்லை மோட்சமுமில்லை யெனவும், அவர் அநாதிமலமுத்த சித்துருவெனவும் சித்தாந்தமாயிற்று. ஆத்மாவாகிய நாமோ பந்த மோட்சங்களை யடையும் இயல்புடையோ மெனவும், அதனால் அவரும் நாமும் வெவ்வேறு இயல்புடைய பொருள்களெனவும், ஆத்மாவாகிய நம்மைப் பிரமம் அல்லது கடவுள் என்று ஒருபோதும் கருதப்படாதெனவும் பெறப்படுகிறது. படவே, அவ்வாறு கருதுதல் அதிக பாதகமாம். ஆகையினாலன்றோ ஸ்ரீ தாயுமானசுவாமிகள் "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்று ஏகான்மவாதிகளை இழித்துக்கூறினார். மற்றொரு பெரியாரும்

பரமதனே யுலகுயிர்கள் கற்பனையே யெல்லாம்
பகர்சிவமே யெனவுணர்ந்தோ மாதலினால் நாமே
பிரமமெனப் பிறர்க்குரைத்துப் பொங்கிவழிந் தாங்கே
பேசுகின்ற பெரியவர்தம் பெரியமதம் பிடியேல்

"உரமிகுபே ருலகுயிர்கள் பரமிவைகா ரியத்தால்
உள்ளனவே காரணத்தால் உள்ளன இல்லனவே
தரமிகுபே ரருளொளியாற் சிவமயமே யெல்லாம்
தாமெனவே யுணர்வதுசன் மார்க்கநெறி பிடியே"

என்று உபதேசித்துள்ளார்.

ஆதலால் சைவத்தனியரசின் கீழிருந்து வாழும் சித்தாந்த சைவர்காள்!

கடவுள்வேறு நாம்வேறு என்னும் உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் திடமாயிருத்தல் வேண்டும். அவரே நமது பந்தத்தை நீக்கவல்லவரென்னுந் திடபத்தி நம்மைவிட்டு ஒருபோதும் அகலக்கூடாது. எவ்வளவு ஞானம் வந்தாலும் அந்தப்பக்தியில் சிறிதுங் குன்றலாகாது. அல்லாமலும் ஆத்மாவாகிய நாம் சேதனப்பொருளேயாயினும் அஞ்ஞானவசப்பட்டிருக்கின்றோம். அந்த அஞ்ஞானத்தை விளைவிக்க ஒருபொருள் அவசியமாதலால் அதுவே ஆணவமலம் என்றறிதல்வேண்டும். அந்த அஞ்ஞான வசத்தினாலே சுகதுக்கம் அநுபவித்தலால் அதைத்தருவது கன்மமலம் என்றறிதல் வேண்டும். அந்தச் சுகதுக்கங்களை ஆத்மா சரீரம் பெற்றே அறிதலால் அச்சரீரத்துக்குக் காரணமாயுள்ளது மாயையென்றறிதல்வேண்டும். இத்தகைய சரீரத்தொடர்ந்தமும், இன்பதுன்பநுகர்வும், அஞ்ஞானமும் ஆகிய இவைகளும், இவற்றின் காரணங்களாகிய மாயை, கன்மம், ஆணவம் என்னும் முக்கூற்றாகிய பாசமும் ஒழிந்தாலன்றி சுகப்பேறுகிடைக்காது. ஆதலால் அவைகளின் சொருபமறியாதவரும், ஆத்மவிலக்கண மறியாதவரும், கடவுளிலக்கண மறிந்து அவரை வணங்காதவரும், கடவுளருளால் மலமாயை கன்மங்களை நீக்கிக்கொள்ளமாட்டாதவரும், ஒருபோதும் முத்தியடையமாட்டார். இது சத்தியம். முக்காலும் சத்தியம். ஏகான்மவாதத்தில் இவ்வரியபெரிய பேறு இல்லாமையால் இம்மதத்தைப் பற்றிநின்று முத்தியடைய ஒருவருக்கும் இயலாது. விவேகிகள் இவற்றையுணர்ந்து தேரக்கடவர்.

கடவுள், ஆத்மா, பாசம் என்னும் மூன்று பொருள்களும் உடல்பொருளொன்று கொண்டால் அவை காலதேச வஸ்துக்களால் பரிச்சின்னப்படாவோவெனில், படாதவாறு புகல்வாம். கடவுள், ஆத்மா, பாசம் ஆகிய மூன்றுபொருள்களும் நிற்கும் முறையாவது ஒன்றிலொன்றடங்கியிருக்கும். அதாவது எங்கும் நிறைந்த பரிபூ



ரணமான சிவமாகிய கடவுளில் சத்தியடங்கியிருக்கும். சத்தியில் ஆத்மாவும் மலமும் அடங்கியிருக்கும். ஆத்ம சக்தியும் ஆத்மாவிலேயே அடங்கியிருக்கும். மலசத்தியும் மலத்திலடங்கியிருக்கும். ஆத்மசத்தியில் மாயை அடக்கமானது. மாயாகாரியங்கள் மாயையிலடங்கியிருக்கும். இவ்வாறு மாயையும், மலமும், ஆத்மாவும், கடவுளும் ஸ்தூல சூக்குமமுறைபற்றி ஒன்றிலொன்றடங்கி, வியாபக வியாப்பியத் தன்மைபெற்றிருத்தலால் முப்பொருள்களும் காலதேச வஸ்துக்களால் பரிச்சின்னப்படா. இந்த ஸ்தூலசூக்கும முறைமை ஸ்தூலபுத்தியுடைய நவீன ஏகான்மவாதிகளுக்குத் தோன்றாது. சுபம். மெய்கண்டநாதன் திருவடி வாழ்க.

சோளங்கிபுரம். சிவஅருணகிரி முதலியார்.

---

பாரதம்.

## அருச்சுனன் பாசுபதம்பெற்ற சரித்திரம்.

(171-வது பக்கத் தொடர்ச்சி.)

அருச்சுனன் அவ்வாறு தவஞ்செய்தலை நாரதமுனிவர் துரியோதனனுக்குத் தெரிவித்தனர். துரியோதனன் பயந்து, தன் தோழனாகிய முகாசுரன் என்னும் இராக்கதனை யழைத்து, அருச்சுனன் தன்னைக்கொல்லவேண்டிப் பாசுபதாஸ்திரம் பெறுவது விரும்பித் தவஞ்செய்தலைக் கூறி, வராகவடிவங்கொண்டு அவனைக் கொல்லுமாறு ஏவினன். முகாசுரன் அதற்கிசைந்து யமன் ஏறும் எருமைக்கடாவும் அஞ்சும்படியான பன்றியுருவங்கொண்டு, அருச்சுனன் தவஞ்செய்யும் இடத்தை யடைந்து அவனைக்கொல்லுவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். அதனைச் சர்வவியாபகராகிய சிவபிரான் உணர்ந்து, ஒரு திருவிளையாடலைச் செய்து அருச்சுனனுக்கு அருள் புரிவதுகருதி, தமது வாமபாகத்தில் வீற்றிருக்கும்உமாதேவியாரை நோக்கி வேடப்பெண்ணுருவங் கொள்ளுமாறு கட்டளையிட்டு, நந்திதேவரை நோக்கி, "ஓ நந்தி, நாம் வேடரூபங்கொண்டு, பன்றிவேட்டையாடிப் பார்த்திபனுக்குத் தரிசனங்கொடுக்க விருப்பங்கொண்டோம். நீயும் வேடரூபங்கொண்டு நமதுகணங்களையும் வேடுவராக்கி எம்முடன் போதுவாய்" என்றருளினர். உடனே நந்திதேவர் வேதங்களை நாய்களாக்கி ஆறுசாஸ்திரங்களைச் சங்கிலி

களாக்கி அவற்றின் கழுத்திற்கட்டி கரத்திற் பிடித்துக்கொண்டு, சிவகணங்கள் வேடர்களாய் வில், வேல், கதை, வாள் முதலிய ஆயுதங்களை யேந்தித் தம்மைத் தொடர்ந்துவர சிவபெருமான் முன்சென்றனர். சிவபெருமான் பொன்போற் பொலிந்து விளங்கும் புரிசடையைப் பின்னலாக்கி முதுகில் தொங்கவிட்டு, மயில் முதலிய அழகிய பட்சிகளின் இறகுகளாலும் பலகறைகளாலும் செய்யப்பட்டகிரீடத்தை, அன்னமாய் அயன் பறந்து சென்றுங் காணாத அணிமுடியில் தரித்து, தோடுங் குழையும் தொங்கியசையும் திருச்செவிகளில் பூங்கொத்துகளைச்சொருகி, நீலமணிபோற் பிரகாசிக்கும் கண்டமானது நித்திலம்போற் பிரகாசிக்குமாறு பலகறை மாலைகளை கண்டத்தில் நிறைய வணிந்து, அக்கண்டத்தில் தாம் அணிந்திருக்கும் பன்றியின் கொம்பு தெரியாதபடிமறைத்து, சிரமாலையணிந்த மார்பில் பாலைமணி மாலை யணிந்து, இமாசலத்தை வில்லாக வளைத்த புயாசலங்களில் வாகுவலைய மணிந்து, அரவக் கங்கணத்தை மறைத்து தந்தக்கடகமணிந்து, இடையில் புலித்தோற்கச்சை யிறுக்கிக்கட்டி வேதமணிந்த திருவடிகளில் செருப்பை யணிந்து, கையில் வில்லேந்தி, முதுகில் அம்புப்புட்டிலைத் தாங்கி பால்போன்ற திருநீறணிந்த தமது திருமேனியானது செஞ்சிலை சுமந்த கருமுகிலையொத்து விளங்கப் புறப்பட்டருளினர். உமாதேவியாரும் அதற்கிசைய வேடச்சிறுமி யுருக்கொண்டு, சுப்பிரமணியப் பெருமானைப் பாலுண்ணும் பச்சை பசுங்குழவியாக்கிக் கரத்திலேந்தியவண்ணமாய் உடன் சென்றருளினர். பூதகணங்களாகிய வேடர்கள் கைகொட்டி யார்ப்பரித்து, காளம் எக்காளம் துடி தம்பட்டம் முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, சிவபெருமான், திருமாலானவர் பல்கோடி காலம் பன்றியுருவங் கொண்டு தேடியுங் காணமாட்டாத தமது திருவடிகள் பூமியிற் பொருந்த, விரைந்து நடந்து, மூகாசுரனாகிய பன்றியிருக்கும் இடத்தைநோக்கிச் செல்வாராயினர். இவர்களோடு செம்பஞ்சை யழுத்தினும் வாடும் மிருதுவான திருவடிகளையுடைய உமாதேவியாரும் இடுப்பில் குழந்தையைத் தாங்கி விரைந்து சென்றனர். இந்திராதி தேவர்களும் பிரமவிஷ்ணுக்கள் முதலியோரும் தம்மைத் தரையில்வீழ்ந்து தண்டாகாரமாய் வணங்கிக் கிடக்குஞ் சமயத்தில், தமது நாயகராகிய சிவபெருமான் தம்மிடம் வருவதைக் காண்பரேல் அம்மையார் தம் இருக்கையை விட்டெழுந்து துரிதமாய் இறைவனை எதிர்கொண்டு செல்வர். அச்சமயத்தில் அனிந்



திதை கமலினி முதலிய சேடிமார்கள் அம்மையாரைப்பார்த்து "அம்மணி, விண்டுசிரம் இங்கே கிடக்கிறது; பிரமன் தலை இதோவிருக்கிறது; இந்திரன் முடி வழியில் இருக்கிறது. விலகிச்செல்க, விலகிச்செல்க," என்று பிரார்த்திப்பார்கள். அவ்வாறு தமது பணிப்பெண்களால் போற்றிப் பாதுகாக்கப்படும் மெல்லிய நம் அம்மை திருவடிகள் கல்லும் முள்ளும் அடர்ந்த கானகத்தில் இறைவரைத் தொடர்ந்து ஓடிச்சென்றது அருச்சுனன் தவப்பயனால் என்போமா!, நமதன்னையின் அருட்டிறத்தால் என்போமா!! சிவமின்றிச் சத்தியும் சத்தியின்றிச் சிவமுமில்லாத தன்மையாலென்போமா!!!

**கந்தபுராணம்.**

பஞ்சிதனின் மெல்லடி பனிப்பவரை யின்பாற்
குஞ்சரிந டந்தசெயல் கூறுபுது மைத்தோ
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி நீயே
னெஞ்சக வடுக்கலினு நின்றுலவு மென்றால்.

**ஆனந்தலகரி.**

முதுமறைசொ லிளவனிதை யயனொடரி குலிசனுனை
முறைபணியு நெறியினிடையே
பதறியுன தருகுவரு மரனையெதிர் கொளவுனது
பரிசனமு னடிவளமையா
லிதுபிரமன் மகுடமரி மகுடமிது குலிசன்முடி
யிதுகடின மிடறுமிருதாள்
கதியமர வமரவழி விலகிவர வரவெமது
கடவுளெனு மொழிதழைகவே.

சிவபெருமான் மூகனாகிய பன்றியிருந்தவிடத்தைச் சமீபித்தலும், வேடர்களும் அப்பன்றியை நெருங்கினர். நாய்கள் அப்பன்றியிருந்த புதலைச் சூழ்ந்துகொண்டன. பன்றி அதனைக்கண்டு பெரும்பயமடைந்து "ஓ, ஓ, நாம் துரியோதனன் மகிழ அருச்சுனனைக் கொன்று வருவோமென்றுசொல்லி இங்கேவந்து வேடுவர்களாலும் நாய்களாலும் மடிய நேரிட்டிருக்கிறது. நாம் இவ்வாறு மடிந்தால் துரியோதன மகாராஜனுக்கு வருத்தமுண்டாவது மாத்திரமன்றி அசுரரெல்லாம் இவன் வேடுவரால் மடிந்தானென்று ஏசாநிற்பர். இனி ஒருகணப்போதும் தாழ்க்கலாகாது. அருச்சுனனைக்கென்ற

பிறகு நாமிறந்தாலும் அவ்வளவு வசையிராது" என்று கருதி மேகம் கர்ச்சிப்பதுபோல் உறுமி வேடுவரும் நாய்களும் பிரமை கொண்டு விலகிச்செல்ல வாயுவேகம் போல் அதிவேகமாக அருச்சுனன்மேற் பாய்ந்துசென்றது.

பராக்கிரம வியாக்கிரமமாகிய அருச்சுனன் அதைக்கண்டு தவத்திற்கு இடையூறு வருமென்றஞ்சி, தவநிலையை விடாதுநின்று நோக்கி, தன் காண்டீபத்தை யெடுத்து நிறுத்தி வளைத்து, வச்சிராயுதத்திற் கொப்பாகிய ஒரு கணையை யெடுத்துத் தொடுத்துவிட்டான். அடியார்க்கெளியவராகிய சிவபெருமான் தமது வேடர் கூட்டமும் நாய்களும் மாத்திரமன்றி மனோவேகமும் பின்னிட முன்சென்று வாயுவேகத்தோடு சென்ற அப்பன்றியின் மீது தமது கார்முகத்தில் ஒரு திவ்விய கணையைத் தொடுத்து விட்டனர். அருச்சுனன் விட்ட பாணம் அதின் நெற்றியில் தைத்துப் பின்புறத்துருவிப்போயிற்று. சிவபெருமான் தொட்டபாணம் அதின் பின்புறத்திற்பட்டு முகத்தைப் பிளந்தெறிந்தது. பன்றி உலகம் குலுங்க வோலமிட்டுப் பூமியில் வீழ்ந்திறந்தது. இறத்தலும் அருச்சுனன் முன்போல்வே தவநிலையுற்றான். அதனைக்கண்ட்வேடர்கள் கைகொட்டி ஆவலித்து அருச்சுனனைச் சூழ்ந்து, "ஆர்காணும் தவசி, எங்கள் தலைவன் குறிவைத்தெய்தபன்றியை, நீயெப்படி யெய்தாய். வில்லாளிகள் ஏதேனும் ஒன்றைக் குறிவைத்து எய்யும்போது அதனை யெய்தவர் உலகிலுண்டா. தவசியாயிருக்கும் உனக்கு இப்படிச்செய்வது சற்றேனும் அடுக்குமா?" என்று கூறி நாற்றிசையிலும் நின்று ஏசுவாராயினார்கள்.

அருச்சுனன் அவர்களை நோக்கி, ஓ வேடர்களே, என் தவநிலையில் வந்துறுமி என்னைக் கொல்லவந்த பன்றியை நான்கொன்றேன். நீங்கள் அதனை யுணராது கண்டபடி யுளறுகிறீர்கள். உங்கள் தலைவன் எய்தது உண்மையாகில் அவன் பாணம்பட்ட இடத்தில் தானே வீழாதா? போம், போம், பைத்தியம்பிடித்த வேடர்களே. உங்களை யார்கண்டார்? உங்கள் தலைவனை யார்கண்டார்?" என்று கூறினான். இவ்வண்ணத்தன் இவ்வடிவன் என்று கூறமாட்டாமல் வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளியாகிய வேடர்தலைவர் "ஓ தவசி, இந்தப் பன்றியை நான் நெடுந்தூரத்தில் கண்டு துரத்திக்கொண்டு கடைசியாக இங்குவந்து அதின்மேல் என் கணையைவிட்டேன். அக்கணை பின்புறத்திற் பட்டு முகப்புறத்தி லுருவிப்போயிற்று. நீ விட்டகணை பன்றியின் சிரசிற்பட்டுப் பின்புறத்தில் உருவிற்று. இதோ உன் பாணக்குறி; இதோ என் பாணக்குறி; திருஷ்டாந்தமாகக் குறிகளிருக்க வேடுவர் அதைக் குறித்து வினவினால் நீ முன் பின் யோசிக்காமல் தவத்திற்கு உருவாகிய உற்றநோய் நோன்றல், உயிர்க் குறுகண் செய்யாமை, சீவகாருணியம், சாந்தம் முதலிய உத்தம குணங்கள் ஒருசிறிதுமின்றி அப்பன்றியை நாமெய்ததோ மென்ற அகங்காரத்தினால், மதிக்காமல் வசனிக்கிறாய்" என்று கூற, அர்ச்சுனன்கேட்டு "ஓ! ஓ! வேடுவத்தலைவா, சபாசு, நன்றாகச் சொன்னாய். கிராதனென்ற சொல்லே இரக்கமில்லாதவனென்று பொருள்கொடுக்கும்.. இரக்கமில்லாதவனுக்கு விவேகமில்லை. நீ கிராதருக்கெல்லாம் தலைவனாக இருக்கிறவன். உனக்கு விவேகமிருக்குமா? இப்பன்றியை நெடுந்தூரத்திற் கண்டு துரத்திக்கொண்டு வந்தேனென்றாய். இதனால் நீ வில்லாளி யல்லவென்று விளங்குகின்றது. வில்லாளியாக இருக்கிறவன் தனக்கு லட்சியப்பட்டது மிஞ்சிச் செல்லுமாயின் அது பத்துயோசனைதூரம் சென்றாலும் இருந்தவிடத்தில் தானே இருந்து பத்து யோசனையிற் செல்வதைச் செல்லாதிருக்கும்படி உடனே சரக்கூடிட்டு நெருங்கி லட்சியப்பட்டதைக் கொல்வான். அல்லது பத்துயோசனையிற் செல்வதை நின்றவிடத்திற்றானே இருந்து அதனைக் கொல்வான். இந்த இரண்டு விதத்தில் ஒருவிதமுஞ் செய்யாமல் பன்றியுடனே பின்சென்றோடி வந்து பாணந் தொட்டேனென்று நாணமில்லாமல் என்னுடன் சொன்னது மன்றிப் பன்றியின்மேல் என் பாணம் பட்டதென்று வழக்கிட்டு என்னை இழிவுகூறினை. நான் தவநிலையி லிருந்தமையால் இந்த வசனஞ்சொல்லி இன்னமுயிரோடிருக்கின்றாய். தவநிலை யுற்றிராமலிருந்தால், பன்றி யடைந்த கதியை உன்சேனை யடைவது மன்றி உன்னுயிர்க்கும் சேதம்வரும். இனி அரைமாத்திரைப் போதாவது இந்த விடத்தில் நிற்காமல் தெய்வங் கூட்டிவைத்ததென்று கருதி இறந்த பன்றியைச் சுமந்துகொண்டு துலைவிற்சென்று நீயும் உன்னினத்தவரும் புசியுங்கள். தபசியானவர்கள் சரகை யருந்துவரென்று சொல்லுவார்கள். நான் அந்தச் சரகையும் நீக்கி யிருக்கிறவனாதலால் இப்பன்றி எனக்குணவாகாது எடுத்துச் செல்" என்று கூற, சாம்பமூர்த்தி யாகிய வேடுவர் கைகொட்டிச் சிரித்துச் சொல்லுகிறார்.

"ஓ தவசி, சபாசு, சபாசு, உன் தைரியமும் உன் வீரியமும் நன்றாயிருக்கின்றன. ருத்திராக்ஷப் பூனை கதையென்னும் ஒரு கதையுண்டு. அக்கதை உன்னளவில் திருஷ்டாந்த மாயிற்று. எவ்வாறெனில், நாட்டிலிருந்து சீவனம்செய்யச் சக்தியில்லாமல், காட்டில் வந்து சுயரூபத்தோடு சஞ்சரித்தால் எங்களை யொத்த வேடுவரால் இடையூறு வருமென்றஞ்சித் தவரூபங்கொண்டு, பஞ்சாக்கினி மத்தியில் தவஞ்செய்கிறதுபோல் அபிநயித்து, எங்கள் காட்டிலுள்ள மாதுரியமான தசையையுடைய மிருகங்களை வதைத்துச் சீவனஞ்செய்கிற நீ, எங்களைப் பார்த்தவுடனே அச்சமுற்று, ஏதோ ஒரு சாக்குச்சொல்லிச் சுத்த வீரர்களாகியும் வில்லாளிகளாயுமிருக்கிற எங்களுக்குச் சில குற்றங் கற்பித்து, முடிவில் சாகும் புசிக்காத எனக்குப் பன்றியுதவுமாவென்று கூறிப் பன்றியை யெடுத்துக்கொண்டு துலைவிற் செல்லென்று கூறினை; இது உனக்கு நன்றாயிருக்கிறதா?. பலநாள் திருடன் ஒருநாளி லகப்பட்டுக் கொள்வானென்கிற பழமொழிபோல் நீ இன்றெங்கள் கையிலகப்பட்டுக்கொண்டனை. நீ உண்மையான தபசியாயிருந்தால் உன்மனம் நீ நாடிய கடவுளின்கண் சென்றிருக்கவேண்டும். உனக்கொரு அழிவுவராமல் அக்கடவுள் காக்கவேண்டும். நீ கபட சன்னியாசியாகையால் கடவுள்பால் கருத்தைச் செலுத்தாமல் எங்கே நல்ல மிருகம் வருமோவென்று கண்விழித்துப் பார்த்துக்கொண்டு எங்களுக்குப் பயந்து இந்த வழியாகவரும் மிருகங்களைக்கொன்று தின்கிறாய். உன்னை விடுகிறதில்லை" யென்று கடுகடுத்துக் கூற, அர்ச்சுனன் சிந்தையைச் சிவனிடத்தில் செலுத்தினவனாக இருந்தாலும், வேடுவத் தலைவன்கூறிய வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் கலகலவென்று நகைத்து "அடா வேடுவத் தலைவா, நான் இங்குள்ள வேடுவர்க்குப் பயந்து சன்யாசி வேடங்கொண்டு மிருகஜெந்துக்களைக்கொன்று சீவனஞ் செய்கிறவனென்றும் கபடசன்னியாசியென்றும் உரைத்தவாயி லுதிரங் கக்கும்படி உன்னுயிரை வாங்குவேன். நான் உண்மையான தபசியாதலால் மனம்பொறுத்தேன். இப்போதும் நீ இந்தப் பன்றியைச் சுமந்துக்கொண்டு யாதொன்றும் வசனியாமலும் உன்சேனையோடு விரைவிற்செல்லாமலும் முன்போல் ஏதாவது வசனிக்க வருவாயாயின் உன்றன் சேனைகளின் தலைகள் செடிக்கொன்றாய்ச் சிதறக் கணை தொடுப்பதுமன்றி உன்னுயிர்க்குக் கெடுதிவர வயிரவாளிகளை விடுவேன். நிற்காமல் செல்" என்றுகூற, வேட வேடத்தர் புன்சிரிப்புக்கொண்டு சொல்லுகின்றார்.



"அடா தவசி! உன்பேச்சும் கைவீச்சும் கண்டால் நீ வில்லாளி அல்லவென்று கண்ணாடியிற் றோன்றும் பொருள்போலத் தோன்றுகின்றது. நல்லது; உன்மனதின்படி என்னையும் என்சேனையையும் வெற்றிபெறுவாய். உன்னுடன் எதிர்த்துப் போர்செய்வதற்கு எனக்கொரு சந்தேகம் நேரிட்டிருக்கின்றது. உன் குலத்தையும் வரன்முறையையும் அறிந்து பின்பு என் கைத்திறத்தைக் காட்டவேண்டு மாதலால், நீ தேவர்களி லொருவனோ, அல்லது அரசனோ, உத்தமபிராமணனோ, க்ஷத்திரியனோ, வைசியனோ, சூத்திரனோ, சொல்" என்று கூற, அர்ச்சுனன் "அடா வேடா, கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன். காட்டில் கிடந்து மிருகங்களை வதைத்துக்கொண்டிருக்கும் நீயா, சந்திரகுலதிலகனாகிய பாண்டு மகாராஜாவின் புத்திரனாகிய விஜயன் என்று புகழ்பெற்ற என்வரன் முறையை விசாரிப்பவன்" என்றான். அதைச் சிவபெருமான் கேட்டு கைகொட்டி நகைத்து "சபாசு, சபாசு" என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

(இன்னும்வரும்.)

---

## தீபாவளி பண்டிகை.

பிராக்ஜியோதிடபுரமென்னும் பட்டணத்தில் நரகாசுரனென்னுமசுரன் அரசு செலுத்திவருநாளில் அவன் பிரமதேவனைநோக்கி அருந்தவம் புரிந்து பெறுதற்கரிய பேறுகளைப் பெற்றுப் பூலோக பாதாளலோகங்களை யதம்பண்ணிச் சுவர்க்கலோகாதி பதியாகிய தேவேந்திரனோடு போர்செய்து அவன் காதிலணிந்த குண்டலங்களுடன் மற்றுந்தனக்குவேண்டிய பொருள்களையெல்லா மெடுத்துக் கொண்டுபோய்த் தன்பதியை யடைந்தான்.

உடனே தேவேந்திரன் முன் அவ்வரக்கனால் வருத்தமுற்ற பதரிவனவாசிகளாகிய முனிவர்களோடு துவாரகாபுரிக்குச்சென்று கிருஷ்ண தேவ ரடிபணிந்து தங்குறைகளைச் சொல்லித் துதிக்க, அவர் யுத்தகோலங்கொண்டு கருடாரூடராய்ப் புறப்பட்டு பிராக்ஜியோதிடபுரஞ் சேர்ந்து போர்க்குறிகாட்டினர். உடனே அயக்கிரீவன் அகோரபாலன் முதலிய சேனாதிபதிகள் பெருஞ் சேனையோடு அதிக வக்கிரங்கொண்டு வந்து போர்செய்யக் கண்ணபிரான் தனது சாரங்கத்தை யேந்திச் சேனைகளோடு சேனாபதிகளையு மதஞ்செய்து சிங்கநாதஞ் செய்தனர்.

பின்னர் நரகாசுரன் திரண்டசேனைகள் சூழவந்து அதிக வுக்கிரத்தோடு பெரும்போர்செய்யக் கண்ணபிரான் தன் சக்கிராயுதத்தைப் பிரயோகித்து அவனுடலிரண்டுகூறுகி விழும்படிச்செய்தனர்.

அப்போது அவ்வசுரன் அடியற்ற மரம்போல் நிலத்தில் விழுந்து ஞானமுற்றவனாய் விண்டுவை நோக்கிக் கடவுளே அடியேன் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்து யான் வதைபட்ட இத்திதியில் என்னை நினைந்து அப்பியங்கனஞ்செய்து பல திவ்விய போசனங்களை (தீபாராதனை-அல்லது தீபவரிசை யெனப் பொருள்தரும்) தீபாவளியுடன் உமக்கு நிவேதனஞ் செய்வோர்க்கு அஸ்வமேத யாகஞ் செய்த பலன் கிடைக்கும்படி யருளவேண்டுமென்னக் கண்ணபிரான் அப்படியே யருளி அவனைப் பரமபதஞ்சேர்த்துப் பின்னர் நகரத்துட் பிரவேசித்துத் தேவேந்திரனுக்குக் குண்டலத்தைக் கொடுத்தனுப்பிவிட்டு அவ்வசுரனது புத்திரனாகிய பகதத்தனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வித்து அந்நரகாசுர னதிகாரஞ்செய்திருந்த காலத்தில் மணிபர்வதத்தில் சிறைவைத்திருந்த பல தேசத்தரசர்களின் புத்திரிகளாகிய (௰௬௲) கன்னிகைகளைச் சிறைவிடுவித்து அவர்களுடன் துவாரகையை யடைந்தருளினர். இந்நரகாசுர சதுர்த்தசி ஸ்நானம் ஐப்பசி மாதங் கிருஷ்ணபட்சத் திரயோதசி யிரவில் பொழுதுவிடியுங்காலத்தில் வருஞ் சதுர்த்தசியில் செய்யவேண்டும். இவ்விருத்தாந்தத்தைப் பாண்டவர்கள் வனவாசஞ் செய்துகொண்டிருந்தபோது பீஷ்மரால் அறிந்து அவ்வாறே செய்து முன்னிழந்தவற்றையெல்லா மடைந்து களிப்புடன் வாழ்ந்திருந்தனர்.

வித்துவான் - கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள்.

---

## ஸ்கந்தசஷ்டி விரதம்.

முன்னொரு காலத்தில் சிவசுப்பிரமணியர் கயிலாயத்துக்குப் போய் அதன் சாரலில் தம்முடைய வாகனமும் கொடியுமாகிய மயிலையும் சேவலையும் விடுத்து உள்ளே சென்று, பரமசிவனையும் பார்வதி தேவியையும் அன்புடன் திருவுளமுருக வணங்கித் துதித்து நின்றனர். அதைக்கண்ட பரமசிவன் சந்தோஷப் பெருக்கால் திருநடனஞ் செய்தருளினர். அப்போது மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் வந்து தங்கள் வாகனங்களாகிய கருடனையும் அன்னத்



தையும் அம்மலையின் ஒருபக்கத்தில் விட்டு உள்ளே தரிசனத்துக்குப் போயினர். அச்சமயத்தில் அங்கே சாபத்தால் பூதகணத்தலைவர்களாயிருந்த சூரன், பதுமன், சிங்கன், தாருகன் ஆகிய நால்வரும் மயிலுக்கும் சேவலுக்கும் அருகிற்சென்று அவற்றை நோக்கி முருகக்கடவுளுக்கு வாகனமும் வெற்றிக் கொடியுமாகிய வுங்களுடைய பராக்கிரமத்தைச் சொல்ல வல்லவர்கள் யார்!. அப்படியிருந்தும் கருடனும் அன்னமும் தங்களுக்கு மிஞ்சி வல்லவர்கள் இல்லையென்று உங்களை யவமதிக்கின்றனர். அவர்கள் உங்களுடன் போர்செய்ய வருவாரானால் நாங்கள் உங்களுக்குச் சகாயமாயிருக்கிறோமென்று கலகஞ் செய்தனர். அதைக்கேட்ட மயிலும் சேவலும் அவர்களைச் சேர்த்துக்கொண்டு கோபத்துடன் சீறிக் கருடனையும் அன்னத்தையும் விஷ்ணுலோகம் பிரமலோகம் வரையில் அடித்துத்துரத்தி அவ்வுலகங்களையும் நாசம் செய்து திரும்பிக் கயிலைமலைச் சாரலில் வந்து சேர்ந்தன. தேவர்களிதைச் சகிக்கமாட்டாது கயிலாயத்துக்கு வந்து திருநடன தரிசனஞ்செய்து வெளியே வந்த சுப்பிரமணியரோடு முறையிட்டார்கள். அவரதற்கிரங்கி அந்தப் பூதகணத்தோர் நால்வரையு மழைப்பித்து "நீங்கள் செய்த குற்றத்திற்காக உலகத்தில் பாவமுள்ள அசுரகுலத்திற் பிறந்து அங்கும் தேவர்களுக்குத் துன்பஞ்செய்வீர்கள்.' அக்காரணத்தால் நம்முடைய வேலாயுதத்தாலிறந்து கதியடையக் கடவீர்கள்" என்று சாபானுக்கிரகங்கள் செய்தருளினர். அப்போது சூரனும் பதுமனும் அவரைவணங்கித் துதித்து அவர்கள் அவ்வாறு பிறந்தபின் செய்யுந் தவத்தால் அவர் வேலாயுதத்தினாலிறந்து மயிலாகித் திருவடியைத் தாங்கவும், சேவலாகிக் கொடியாயிருக்கவும் வரம்பெற்றுக்கொண்டு, அவ்விருவரும் ஒருருவமாய் மாயையின் வயிற்றில் சூரபன்மனெனவும், மற்றிருவரும் சிங்கமுகனெனவும் தாருகனெனவும் இவ்வுலகில் அசுரர்களாய்ப் பிறந்தார்கள்.

அவர்கள் பின்பு வீரயாகம் முதலிய தவங்களைச்செய்து பரமேஸ்வரரிடத்தில் பிரபல வரங்களைப்பெற்று அதிக கர்வத்தினால் தேவர்களுக்கு மிக்க துன்பத்தைக் கொடுத்து ஆயிரத்தெட்டண்டங்களை யாண்டிருந்தார்கள். அவர்கள் செய்யும் கொடுமைகளைச் சகிக்கமுடியாதவர்களாய்த் தேவர்கள் பரமசிவனிடத்து விண்ணப்பம் பண்ண, இறைவர் அவர்கள் துன்பத்தை நீக்கும் பொருட்டு ஆறுமுகங்களோடு கூடி பார்வதி தேவியாருடைய திருமுகத்தை

நோக்கும்போது, அப்பரம்சிவன் திருமேனியினிடமாய் அநந்தகோடி சூரியப்பிரகாசம் பொருந்திய மஹாவீரியம் உண்டாய், ஐப்பசிமீ பூர்வபட்சத்துப் பிரதமை திதியில் ஆறுநெற்றிக்கண்கள் வழியாய் ஆறு பொறிகளாக வெளிப்பட்டது. பின் துதியை திதியில் பரமேசுவரி கர்ப்பஸ்தகமாகவிருந்து, திரிதியை திதியில் அக்கினி பகவானிடத்திற் கொடுக்கப்பெற்று, அவன் சதுர்த்தி திதியில் கங்கையில்விட, கங்கை சகியாமல் சரவணத்திற்சேர்க்க, ஆறு குழந்தைகளா யவதரித்து பஞ்சமிதிதியில் கிருத்திகா தேவிகளாற் பாலூட்டப் பெற்று, சஷ்டிதிதியில் பார்வதிதேவியார் பரமேஸ்வரருடன் எழுந்தருளிவந்து குழந்தைகளையெடுக்க ஒரே திருவுருவமாய் ஆறுமுகமும் பன்னிரண்டு கரமு முள்ள திவ்விய ஸ்வரூபத்தைத் தரித்துத் தேவர்களை யனுக்கிரகித்ததினால் இந்த ஆறு தினங்களும் குமாரசுவாமியினுடைய உற்பவ தினங்களாகவே குமார தந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

உபாசிக்கவேண்டிய இந்த ஆறுதினங்களிலும் அனேக மகரிஷிகளும் சக்கிரவர்த்திகளும் இந்த விரதத்தை யனுஷ்டித்து அடைந்த பலனையும் அதன் மகிமைகளையும் ஸ்காந்தபுராணம் கந்த விரதப் படலத்தில் விவரமாய்க் காணலாம். இவ்விரதத்தை யனுஷ்டிப்பவர்களுக்குச் சகல பாபங்களும் வியாதிகளும் ஒழியும். அஷ்டைஸ்வரியமும் சகல சம்பத்தும் உண்டாகும். எண்ணிய கோரிக்கைகளெல்லாம் சித்தமாய் நிறைவேறும். இந்தக்காரணத்தால் வருடந்தோறும் ஐப்பசிமாத பூர்வபட்சப் பிரதமை தொடங்கி சஷ்டிவரையில் இந்த கந்த சஷ்டிவிரதத்தை யனுஷ்டிப்பவர்கள் அந்த ஆறு தினமும் இரண்டுகாலங்களிலும் நித்தியானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கும்பத்திலும் பிம்பத்திலும் யந்திரத்திலும் பூசிக்கவேண்டும். அது கூடாமற்போனால் இவற்றிலொன்றிலாவது சுவாமியை யாவாகித்துப் பூசித்து ஜபம் சந்தர்ப்பணை முதலியவற்றை விதிப்படி நடத்தவேண்டும். இந்த விரதத்திற்கு உபவாசமாயிருக்கவேண்டும். அல்லது அவிசு முதலியவைகளைச் சொற்பமாய்ப் புசிக்கவேண்டும்.

வித்துவான் - கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள்.

---



## நமது பத்திரிகையின் சந்தா.

நமது சைவத் தருவின் மூன்றும் மலர் அடுத்த டிசம்பர் மாதத்தில் முற்றிலும் மலர்ந்து, அதற்கடுத்த ஜனவரி மாதத்தில் நான்காமலர் மலரத் தொடங்கும். நமது பத்திரிகாபிமானிகளாகிய பெரியோர்கள் பாய்ச்சுகின்ற உதவியாகிய நீரினால், இம்மகா கொடிய காகிதப்பஞ்சத்திலும், இத்தரு சற்றும் வாடுதலின்றிச் செழித்து வளர்ந்து எங்குஞ் சிவமணம் வீசி வருவதோடு பதினாறு பக்கங்களோடு விரிந்த இதழ்கள் இருபத்து நான்கு பக்கங்களோடு விரிவனவாயின. இவ்வாறு இச்சைவத் தரு செழித்து வளர்வதைச் சிந்திக்கச் சிந்திக்கச் சைவாபிமானிகளின் உள்ளங் பூரிக்கும் என்பதில் ஐயமில்லை.

இதுவரையில் நமது பத்திரிகையின் சந்தா 12 அணாவாயிருந்தது. வி. பி. தபால் மூலமாய்ப் பெற்றவர்கள் 13 அணா செலுத்தினார்கள். அடுத்த வருடமுதல் இதின் சந்தா வி. பி. செலவு உட்பட ரூபா ஒன்றாகும். இதனால் நமது நேயர்கள் வருடம் ஒன்றுக்கு 3 அணா, அதாவது மாதம் ஒன்றுக்குக் கால் அணா, நமது சைவத்திற்குக் காகிதப்பஞ்சம் முதலியவற்றை நோக்கி அதிகமாகக் கொடுக்க நேரிடும்.

இ. ஆதிமூல முதலியார்.
ப - ர்.

---

## நாம் என் கடவுளை வழிபடவேண்டும்?.

(179 - வது பக்கத் தொடர்ச்சி.)

---

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்னும் இத்திருக்குறளானது, நாம் என் கடவுளை வழிபடவேண்டுமென்பதை நன்கு புலப்படுத்துகின்றது. இத்திருக்குறளால் பற்று என்பதொரு பொருளும், பற்றோடுகூடியதொரு பொருளும், பற்றற்றதொருபொருளும் ஆக மூன்று பொருள்கள் உண்டு என்பதும், பற்றோடுகூடிய பொருள் அப்பற்றினின்றும் நீங்குவதவசிய

மென்பதும், அப்பொருள் தான் பற்றிய பற்றினின்றும் நீங்குவதற்குப் பற்றில்லாதபொருளைப் பற்றவேண்டுமென்பதும் பெறப்பட்டன. முற்கூறிய மூன்றுபொருள்களும் முறையே பாசம் எனவும் பசு எனவும் பதி யெனவும் சொல்லப்படும். ஆன்மாக்கள் பாசமாகிய பற்றையுடையனவாயிருப்பதனால் பசுக்கள் என்னப்படும். பாசமாகிய பற்றானது அனாதிதொட்டு ஆன்மாக்களை விடாது தொடர்ந்து பலபிறவிகளெடுக்கச்செய்து துன்பப்படுத்திக்கொண் டிருக்கும். ஆன்மாக்களும் அப்பாச வசப்பட்டு அறிவும் ஆற்றலுங் குன்றி அப்பாசகாரியமாகிய தேகாதி பிரபஞ்சத்தை மெய்யெனக் கருதி அதனிடத்தில் பற்றுவைத்துப் பிறந்து பிறந்து உழலும். இவ்வாறு ஆன்மாக்கள் துன்பப்படுதலையுணர்ந்த பரம கருணாநிதியாகிய இறைவர், அழுக்கைக்கொண்டு அழுக்கைப் போக்குவதுபோல், அப்பாசத்தைக்கொண்டே ஆன்மாக்களுக்குத் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்து அவைகளின் அறிவையும் ஆற்றலையும் விளக்கி, பாசப்பற்றினின்றும் விடுவித்துத் தமது திருவடி யின்பத்தைத் தந்தருளவேண்டி ஓயாது உபகரித்து வருகிறார். ஆதலினால் உயிர்கள் பாசப்பற்றினின்றும் நீங்கி உய்ய வேண்டுமாயின் வினைகேடரும் பரமகருணாநிதியுமாகிய இறைவர் திருவடிகளை யிறுகப்பற்றவேண்டும். பேரறிவும் பேராற்றலும் படைத்த இறைவர் திருவருளைக் கொண்டன்றி, பல்லூழிகாலம் விடாது தொடர்ந்து தம்மை வருத்தும் பாசப்பற்றைச் சிற்றறிவும் சிறுதொழிலும் உள்ள உயிர்கள் தாமே நீக்கிக்கொள்ளமுடியாது. அன்றியும், ஆன்மாவானது எக்காலத்தும் தனித்திருக்கும் பொருளன்று. அது பெத்தகாலத்தில் பாசத்தோடுகூடிப் பசுவாயிருக்கும். முத்திகாலத்தில் சிவத்தோடுகூடிச் சிவமாயிருக்கும். ஆதலால், ஒரு பச்சிலையைப்பற்றியிருக்கு மோர்புழு அப் பச்சிலையை விட்டு நீங்குவதற்கு வேறொரு பச்சிலையைப் பற்றவேண்டுவது போல், என்றும் ஒன்றைப்பற்றி வர்த்தித்தலையே இயற்கையாகவுடைய உயிர்கள், தாம்பற்றிய பாசப்பற்றைவிட்டு நீங்கவேண்டுமானால் இறைவர் இணையடிப் பற்றைப் பற்றவேண்டும். அன்றியும் உயிர்கள் பற்றியிருக்கும் பாசப் பற்றானது மிகக்கொடிய பேரந்தகாரமாயிருப்பது. இறைவர் இணையடியோ பரமானந்தப் பரஞானப் பேரொளியா யிருப்பது. ஆதலால் கொடிய இருள்மயமாகிய பாசப்பற்றினின்றும் நீங்குதற்கு பரஞானப் பேரொளியாகிய இறைவரைப்பற்றி நிற்றல் வேண்டும்.



உலகத்தில் எண்ணிறந்தோர் கடவுள் வழிபாடு செய்தாலும் இவ்வுண்மைகளை யறிந்து பாசப்பற்றினின்றும் நீங்கி உய்யுமாறு கடவுளை வழிபடுவோர் சிலரிற் சிலரே. மற்றவர்களெல்லாம் பிரபஞ்சவாழ்வையே பெரிதாக மதித்து அவ்வாழ்க்கையையேவிரும்பி அவரை வழிபடுவார்கள்.

திருவாசகம்.

வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

பெரியோர் கடவுளோடு ஒத்து அவரருள்வழியே சென்று பாசப்பற்றை யறுப்பார்கள். சிறியோர் அவ்வருள்வழியினின்றும் விலகி பிரபஞ்சப்பற்றையே பற்றிநின்று வருந்துவார்கள். அவ்வாறிருந்தும் இறைவர் பரமகாருணியத்தால் அவ்வான்மாக்களை விட்டு விலகாமல் உடனிருந்து அவைகளுக்கு ஓயாமல் உபகரித்துவருவது அதிசயத்தினும் அதிசயம்.

திருவாசகம்.

பித்தனென்றெனை யுலகவர்பகர்வதோர் காரணமிதுகேளீ
ரொத்துச்சென்று தன்றிருவருட் கூடிடுமுபாயமதறியாமே
செத்துப்போயரு நரகிடைவீழ்வதற் கொருப்படுகின்றேனை
யத்தனாண்டுதன் னடியரிற்கூட்டிய வதிசயங்கண்டாமே.

மனிதர்கள் பெரும்பாலார் கடவுளோடு ஒத்துச்சென்று பாசப்பற்றை யறுக்கும் விருப்பமின்றி, பிரபஞ்சவாழ்க்கையில் ஆசைவைத்து கடவுள் வழிபாடு செய்வதனால், அவ்வாசைகாரணமாகப் பாவங்களையும் செய்கிறார்கள். ஆதலால் இவர்கள் செய்யும் வழிபாடு பொய்வழிபாடாய் முடிகிறது. இவர்கள் செய்யும் பத்தியே மூடபத்தி யென்று சொல்லப்படல்வேண்டும். எத்தனை நூல்களை யாராய்ந்தவர்களா யிருப்பினும் பாசப்பற்றை யறுக்கும் ஆவலின்றி பிரபஞ்சப் பற்றையே பெரும்பற்றாகப் பற்றி நிற்பவர்கள் செய்யும் பத்தியெல்லாம் மூடபத்தியே யாகும். இதனை யுணராதவர்கள் நமது கண்ணப்பநாயனார் முதலிய உண்மை நாயன்மார்கள் செய்த பத்தியை மூடபத்தியென்று உளறுவர்.

### தாயுமானசுவாமிகள் பாடல்.

ஆசையெனும் பெருங்காற்றூடிலவம்பஞ்செனவுமனதலையுங் கால
மோசம்வரு மிதனாலே கற்றதுங்கேட்ட துந்தூர்ந்து முத்திக்கான
நேசமுநல் வாசமும்போய்ப் புலனாயிற் கொடுமைபற்றி நிற்பரந்தோ
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே நிராசையின்றேற் றெய்வமுண்டோ.

கடவுள் 'அறவாழியந்தணராயிருப்பவர். அறநெறி யொழுகுவார்க்கே அவரருள் உண்டாகும். அறநெறி நிற்றற்குப் பிரபஞ்சப்பற்று நீங்கவேண்டும்.' பிரபஞ்சப்பற்று குறையக் குறையப் பாவந் தேய்ந்து புண்ணியம் வளர்ந்து திருவருள் கைவரும். கடவுள் சர்வான்மாக்களோடும் இரண்டறக் கலந்து நின்று அவற்றின் பாசப்பற்றை யறுக்கும் அருந்துணையாயிருப்பினும், அவர் தம்மோடு ஒத்துச் சென்று அப்பற்றை யறுத்துத் தம்மை வழிபடுவார்க்கேபெருந்துணையாயிருப்பர்.

### திருத்தாண்டகம்.

அருந்துணையை யடியார்த மல்லறீர்க்கு மருமருந்தை யகன் ஞாலத்தகத்துட் டோன்றி, வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு வான்புலன்க ளகத்தடக்கி மடவாரோடும், பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க் கென்றும், பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவா நாளே.

---

## அடுத்த வருடப் பத்திரிகை.

இதுவரையில் வருடந்தோறும் ஜனவரி மாதப் பத்திரிகை வி. பி. தபாலில் 13 அணாவுக்கு அனுப்பப்பட்டது. அடுத்த 1918௵ ஜனவரி மாதப் பத்திரிகை ஒரு ரூபாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப்படும். அதைப் பெற்றுக்கொள்ள விருப்பமில்லாதவர்கள் அன்புகூர்ந்து உடனே எமக்குத் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறோம்.

இ. ஆதிமூல முதலியார்.
ப - ர்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3. ‖ பிங்கள௵ மார்கழி௴-1917௵ டிசம்பர்௴ ‖ இதழ் 12

### பெரியபுராணம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

---

## சிவஞானபோதம்.

### மூன்றுஞ் சூத்திரம்—ஏழாம் அதிகரணம்.

### மாயாவியந்திரதனுவினுள் ஆன்மா வுளது.

(இ - ள்.) மாயாகாரியங்களால் ஆக்கப்பட்டுச் சூத்திரப்பாவைபோலுள்ள வுடம்பின்கண்ணே அம்மாயா காரியங்களியாவும் கூடிய சமுதாயத்திற்கு வேறாய் உயிருண்டு. (எ-று.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்—மாயாகாரியங்களனைத்துங் கூடிய சமுதாயத்திற்கு வேறாய் உயிருண்டு.

2-வது—ஐயப்பாடு—ஆன்மா அனைத்துங்கூடிய சமுதாயமோ, அதனின் வேறோ.

3-வது—பிறர்கூறும் பக்கம்—(முற்கூறியவாறு) உடம்பு முதலியவற்றுள் ஒவ்வொன்றே ஆன்மாவன்று என்பது ஒக்கும். அவற்றுள் ஒன்று குறைந்தாலும் அறிவு நிகழாமையாலும், அவையெல்லாங் கூடியபோது அறிவு நிகழ்தலாலும், அவையாவும் கூடிய சமுதாயமே உயிராகும். (இது சமூகான்மவாதிகளாகிய சௌத்

திராந்திகர், வைபாடிகர் என்பார் பக்ஷம். இவர்கள் சகம் முழுதும் புறச்சமுதாயம் அகச்சமுதாயம் என்னும் இவ்விரண்டினுள் அடங்கும் என்பர். புறச்சமுதாயம் நிலம் முதலாயின. இவற்றின் காரணம் பரமாணுக்கள். அவை நிலவணு, நீரணு, தீயணு, வளியணு, என நால்வகைப்படும். அவைபல ஒன்றுகூடியபோது புறச்சமுதாயம் தோன்றும். அகச்சமுதாயம் சித்தமும் சித்தப்பகுதியுமாம். அவற்றிற்குக்காரணம். உருவம் வேதனை ஞானம் குறி வாசனை என்னும் ஐவகைப்பட்ட கந்தம் அதாவது சமுதாயமாம்.)

4-வது— மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு— உருவ கந்தம், வேதனைகந்தம், ஞானகந்தம், குறிக்கந்தம், வாசனைகந்தம் என்னும் ஐந்து கந்தமெனக் கொண்ட மாயாகாரியங்கள் ஆன்மா எனப்பெயர்பெறாது வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலால், கலை முதல் பிருதிவியீறாக விரிந்திருக்கும் தத்துவங்களாகிய மாயாகாரியங்களால் ஆக்கப்பட்டுச் சூத்திரப் பாவைபோலுள்ள உடம்பின் கண்ணே அவ்வுருவகந்த முதலியவற்றின் சமுதாயத்திற்கு வேறுயுயிருண்டு.

6-வது—இயைபு—உதாரண வெண்பா.

கலையாதி மண்ணந்தங் காணிலவை மாயை
நிலையாவாந் தீபமே போல—வலையாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லதுதனுவாந்
தானத்தின் வேறாகுந் தான்.

(இ-ள்.) காணின், கலை ஆதி மண் அந்தம் ஆம் = சமுதாயமென்பவை யாவையென்று ஆராய்ந்துபார்க்கில், அவை கலைமுதல் நிலம் ஈறாகிய தத்துவங்களேயாம்.—அவை மாயை, நிலையாவாம் = அவையெல்லாம் மாயையின் காரியங்களாதலால் நிலைத்தலின்றிச் சிலகாலம் நின்று அழிவனவாம்.— ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில் = அவையாவும் கூடிய சமுதாயத்தின் விளங்கித் தோன்றும் ஞானத்தின் இயல்பை அசையாமற் கருத்தை யொருக்கி முன் உணர்ந்து பின் அச்சமுதாயத்தை யாதென்றாராயின்— அது தீபமேபோலத் தனுவாம் = அச்சமுதாயம் கண்ணுக்கு விளக்குப்போல் உயிர்க்குத் தூல சூக்கும பரங்களாகிய உடம்பாம்— தான் அத்தின் வேறு ஆகும் = (ஆதலால் கண் விளக்கின் வேறாயினாற்போல) உயிர் அவ்வுடம்பின் வேறாம். (எ-று.)

அதனின் என்பது அத்தின் என மருவியது.



மூன்றுஞ் சூத்திரத் தொகைப்பொருள்.

சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமுதாயான்மவாதி என்னும் எழுவரும் முறையே சூனியம், தேகம், இந்திரியம், சூக்குமதேகம், பிராணன், விஞ்ஞானம், சமுதாயம் என்பவற்றை ஆன்மா என்று கூறிய கூற்றுகளை மறுத்து ஆன்மா அவைகளுக்கு வேறாம் என்று சாதிக்கப்பட்டது.

இச்சூத்திரப்பொருளை விளக்கவே நமது தாயுமானசுவாமிகள்

பாராதிபூதநீயல்லை—உன்னிப் பாரிந்திரியங்கரணநீயல்லை, யாராயுணர்வுநீயென்றான்—ஐய, னன்பாயுரைத்தசொல் ஆனந்தந்தோழி—சங்கர சங்கர சம்பு.

என்றருளிச் செய்தனர்.

---

## அக்கரங்களின்று மகரவுயிரின்றேல்.

(27-வது பக்கத் தொடர்ச்சி.)

சிவபெருமான் முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாயிருப்பதுபோல், அகர உயிரானது மற்றெல்லாவெழுத்துகளுக்கும் முன்னே தோன்றிய காரணத்தாலும், சிவபெருமான் சேதனம் அசேதனம் என்னும் இருவகைப் பொருள்களினும் இரண்டறக்கலந்து அவைகளை இயக்குதல்போல் அகரவுயிரானது மற்ற உயிர்களோடும் மெய்களோடும் விரவிநின்று அவைகளையொலிப்பித்தலாலும், சிவபிரான் சர்வ பிரபஞ்சத்திற்கும் பிறப்பிடமாயிருப்பதுபோல் அகரவுயிர் மற்ற வெழுத்துகட்கெல்லாம் பிறப்பிடமா யிருத்தலாலும், அவ்வெழுத்துச் சிவபரம் பொருளோடு எல்லா நூல்களிலும் உவமையாக வெடுத்தாளப்பட்டது.

இதுவரையில் அகர உயிரின் ஒலிவடிவைக்கொண்டு அது சிவத்தோடு ஒத்திருத்தலை விளக்கினோம். இனி அது வரிவடிவிலும் சிவத்தை யொத்திருத்தலைக் காட்டுவாம். பிரணவம் என்பது சிவபெருமானுடைய திருமேனியாமென நூல்கள் கூறுகின்றன. அது சமஷ்டிப் பிரணவமும் வியஷ்டிப் பிரணவமுமென இருவகைப்படும். இவற்றுள் வியஷ்டிப் பிரணவமாவது அகார உகார மகாரரூபமாய் விரிந்திருப்பதென்வும், சமஷ்டிப் பிரணவமாவது

அகார உகார மகாரங்கள் சேர்ந்து ஓம் எனப்படுவது எனவும் கூறுவர், வியட்டிப் பிரணவமாகிய அகார உகார மகாரங்கள் சமஷ்டிப் பிரணவ்மாகிய ஓம் என்பதின் ஒலிவடிவத்தில் அடங்கியிருத்தல் போல், தமிழில் எழுதப்படும் அகர உயிரின் வரிவடிவத்தில் உகார மகாரங்களும் அமைந்திருக்கின்றன. அகரத்தின் மேற்புறத்து வலப் பக்கத்தில் உகரத்தையும் அதின் அடிப்புறத்தில் மகரத்தையும் பார்க்கலாம்., இதனால் அகர உயிரானது வரிவடிவில் பிரணவ ரூபமாயிருப்பது விளங்கும். இம்மட்டோ, எல்லா மந்திரங்களும் பிரணவத்தில் அடங்கியிருப்பதுபோல் எல்லா மந்திரங்களின் வரிவடிவங்களும் அகர உயிரின் வரிவடிவத்தில் அடங்கியிருக்கின்றன. ஐந்து காகிதத்துண்டுகளால் ஐந்து அகர உருவத்தைச் செய்து அவைகளைத் தக்கவாறு கத்தரித்துத் தக்கவாறு அமைத்துப் பார்த்தால் அவையாவுங்கூடி ஒருபஞ்சாக்கரமாகிறது. அவ்வாறே முறையே ஆறு, எட்டு அகர உருக்களைச்செய்து கத்தரித்துப் பொருத்தமாக அமைத்தால் முறையே சடாட்சரமும் அஷ்டாக்ஷரமு முண்டாகின்றன. இதனை இஞ்சினீயர் ஸ்ரீமான், மாணிக்க நாயகரவர்கள் B. A. பல மகாசபைகளில் காட்டக் கண்டிருக்கிறோம். இக்காரணங்களால் பெரியோர்கள் அகர உயிரைச் சிவத்திற்கு உபமானமாக எடுத்தாண்டார்கள்.

இவ்வுண்மைகளை யறியாதார், "தமிழர்கள் முதல் முதல் சிறுவர்கள் கற்று எழுதப்புகும் எழுத்தாகிய அகரத்தின் வரிவடிவத்தைப் பகர டகரங்களின் வரிவடிவங்களைப்போல் எழுதுவதற்கு எளிதாயிருக்குமாறு இரண்டொரு நேர்கோடுகளாலமைக்காமல், கடினமாயிருக்குமாறு அமைத்தார்கள்" என்று குறை கூறுவர். மேலே கூறியவற்றால் தமிழர்கள் எழுத்துகளின் வரிசைக்கிரமத்தையும் வரிவடிவங்களையும் உண்டாக்கியபோதே மகா நுண்ணறிவோடு பல தத்துவார்த்தங்களை விளக்குமாறு அவைகளை யமைத்தார்கள் என்பதும், ஆதலால் தமிழ்ப்பாஷையானது தெய்விகத் தன்மையையுடைய தென்பதும் நன்கு விளங்கும்.

---

## ஏகான்ம வாதமும் வைதிக சைவமும்.

இந்தக்காலத்திலே இந்தியாவில் அதிகமாய்ப் பரவிக்கொண்டு வருஞ்சமயம் ஏகான்மவாதம் ஒன்றே. இது இவ்வாறு பரவுதற்



குக் காரணம் யாதெனில் பிராம்மணருள் பெரும்பாலர் சங்கர
மதத்தைச் சார்ந்தவர்களாயிருத்தலால் பிராம்மண விசுவாசிகளா
கிய ஏனைய வருணத்தாரிற் பலர் அவர்களுடைய சமயபோதனைக்கு
உட்பட்டு, உண்மையை யறியாமல் மனம் போனவாறு சென்று,
பெறவேண்டிய பேறுகளைப் பெறாமல் திரிகின்றார்கள். அன்றியும்
அவர்களுள் சிலர் வேதபடிதமாயும், ஞானத்துக்குப் பரமாந்த
ரங்க சாதனங்களாயும், ஸர்வ ஐசுவரியங்களுக்குங் காரணமாயு
முள்ள சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராட்சங்களைத் தரித்திருப்
பதால் சைவமரபிற் பிறந்த சிலர் அவர்களை உண்மைச் சைவர்க
ளென்று வேடமாத்திரத்தால் மதித்து, மயங்கி, அவர்கள் வலையி
லகப்பட்டுக் கொண்டு மோசம் போகின்றார்கள். அல்லாமலும்
துவிஜரல்லாத மற்றையருக்கு அம்மதத்தில் கர்மாதிகாரம் விதிக்க
வில்லை யாதலால் நான்காவது வருணத்தாருள் பெரும்பாலர் அம்
மதத்தை அவலம்பிப்பதற்கு இலேசாயுமிருக்கின்றது. இவ்வாறு
ஏகான்மவாதம் எங்கும் பரவுதலால் வைதிகசைவர்களாகிய நம்
மனோருக்கு உண்டாகுந் தீங்குகள் சொல்லமுடியவில்லை. வேத
சிவாகமங்களின் முடிந்த முடிபாயுள்ள வைதிகசைவத்தையே நம்
மனோர் அநுஷ்டிக்கவேண்டியவர்களாயிருக்க அஃதுணராமலும்,
வைதிக சைவநூல்களை யோத முயற்சிசெய்யாமலும் ஏகான்ம
வாதம் பேணிச் சீர்குலைதலையே நாம் இங்கு நிராகரிக்க முயன்றாம்.

பிராம்மண வருணத்தாருள்ளே சிலர் சங்கராசாரியருடைய
போதனைக்கு உட்பட்டு, அதனையே ஏற்றுக்கொண்டு, ஏகான்ம
வாதத்தைப் பற்றி, அதையே தம்மதமாகப் பாரம்பரியமாகவழங்கி
வருகின்றார்கள். அவர்களுடைய பழையமதம் ஸ்மார்த்தமாகும்.
ஸ்மார்த்தமாவது ஸ்மிருதியின் சம்பந்தமாம். அதாவது ஸ்மிருதி
களில் விதிக்கப்பட்ட கர்மங்களை ரிஷிகளாற் செய்யப்பட்ட கற்ப
சூத்திரங்களின் வழி அநுஷ்டித்து, அக்கர்மங்களே முக்கியமெனக்
கொண்டு ஒழுகுவது. அதனாலே அவர்கள் ஸ்மார்த்தர் எனப்
பட்டார். ஸ்மிருதிகளாவன வேதத்திலுள்ள கர்மகாண்டப் பகுதி
யைப் புகழ்ந்து விதிவிலக்குகளை நிர்ணயஞ்செய்ய எழுந்தவை.
அவை, அவ்வளவுக்கே பயன்படுவனவன்றி ஞானகாண்டப்பகுதி
யை நிர்ணயஞ்செய்வதற்கு உபயோகமாகா. அதனால் அந்த
ஸ்மார்த்தர் தமக்கென ஞானபோதம் இல்லாமையினாலே சங்கரா
சாரியரது ஞானபோதனையை அவலம்பிப்பாராயினர்.

வேதத்திலே அனேகபேறுகளையும் அவற்றிற்குச் சாதனங்க
ளான அனேக கர்மங்களையும் விதித்துள்ளன. அவ்வாறு விதித்தற்
குக் காரணம் பரமேசுவரரது திருவருளே யன்றி வேறல்ல. ஏனெ
னில் உலகத்திலே ஆத்மாக்களுடைய புத்தி, சக்தி, குணம், தேக
பலம், மனோவுறுதி முதலியவை ஒருபடித்தாயிராமல் பலவிதமா
யிருக்கின்றன. ஒரேவிதமாயிருக்குமாகில் அவர்கள் அறிந்து
அநுஷ்டிக்கவேண்டிய வேதமும் ஒரே மார்க்கத்தையே சொல்லி
யிருக்கும். அவ்வாறில்லாமல் பலபடச்சொல்லியிருத்தலால் அவை
யாவும் ஒவ்வோர் பரிபாகியின் பொருட்டென்று யாவருக்கும்
நன்குபுலப்படும். அதுபோல முத்திப்பேறுகளாகிய மோட்ச
பலன்களும் பலவகைப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கேற்ப மோட்ச
சாதனங்களின் ஞானங்களும் பலவகையாயுள்ளன. அந்தஞானப்
பகுதிகளை ஒவ்வோர்பரிபாகியும் தன் தன் சக்திக்கும், புத்திக்கும்
குணமுதலியவற்றிற்கும் ஏற்பக்கொண்டொழுகுவன். அவ்வாறு
ஒழுகவே அவனவன் முயற்சிக்குத் தக்கவாறு இந்தப்பிறவியிலே
யாவது இனிவரும்பிறவிகளிலாவது ஞானத்தை யடைந்து மோட்ச
மடையச் சந்தேகமில்லை. இதனால் எல்லா ஒழுக்கமும் காலாந்தரத்
தில் பயன்றருதலால் அவற்றுள் ஒன்றேனுங் குற்றமுடையதாகாது.
ஸ்மார்த்த வகுப்பினர் கொள்ளுங் கர்மவகையிலாவது ஞானவகை
யிலாவது குறைகூற எமக்குக்கருத்தில்லை. அவர்கள், தங்கள்
ஸ்மிருதி ஆசாரங்களையும் ஏகான்மவாதத்தையும் தழுவி யொழுகு
தல் சைவர்கள் யாவருக்கும் உடன்பாடாம். ஆனால் நான்காவது
வருணத்தில் பிறந்த சைவர்களுள் சிலர் வைதிக சைவத்தை அநுஷ்
டியாது ஏகான்மவாதத்தில் இழிந்து மதப்பிரஷ்டராதல் சிறிதும்
முறையன்று. இவர்கள் நல்வழிப்பட முயலுதல் சிவபுண்ணிய
மாதலின் ஈண்டு இதனை வரையப்புகுந்தாம்.

இவர்கள் வேதாந்தம் படிக்கின்றோமென்று ஏகான்மவாதத்
தைப் பயின்று, அதினும் விபரீத சிந்தைசெய்து, வேதாந்தஞானம்
கர்மகாண்டத்தை மறுப்பதாக வெண்ணி, இறுமாந்து, விபூதி
ருத்ராட்சதாரணம் விதிப்படி செய்யாமலும், சிவதீக்ஷை பெறாம
லும், சந்தியாவந்தன முதலிய கிரியைகள் செய்யாமலும், சிவபூசை,
சிவாலய தரிசனம், சிவனடியார் சேவை, சிவபுராண படனம்,
மெய்கண்டசாத்திர விசாரம், (ஞானபூசை) முதலிய ஒன்றையுங்
கருதாமல் வீணே வாய்ஞானம்பேசி அலைந்து கெட்டுப்போகின்



றார்கள். அந்தோ இவர்களது ஊழின்வலி அறக்கொடிது. ஸ்மார்த்
தப் பிராம்மணர்கள் எவ்வளவு வேதாந்தம் படிக்கினும் தமது சம
யாசாரமாகிய கர்மாநுஷ்டானங்களை ஒருபோதும் விடுவதில்லை.
ஞானம் வாயளவில் மாத்திரமிருக்க கர்மாநுஷ்டானங்களே அவ
ரால் தழுவப்படுகின்றன. நூதன விவேகிகளாகிய நான்காவது
வருணத்து ஏகான்மவாதிகளோ கைவல்லிய நவநீதம், விசாரசாக
ரம், பிரபோதசந்திரோதயம் முதலிய நூல்களைக் கையிலெடுத்து
ஞானம்பேசத்தொடங்கியவுடனே தங்கள் முதலாவது வேலையாகக்
கர்மத்தை யொழித்துவிடுகிறார்கள். கர்மத்தை விட்டுவிடும்படி
அந்த ஏகான்மவாத நூல்கள் எவ்விடத்துஞ் சொன்னதில்லை. அந்த
நூல்களின் ஹிருதயம் கர்மபலத் தியாஜ்ஜியமேயன்றி கர்மத்தியாஜ்
ஜியமன்று; கர்மத்தினாலே போகமுண்டாகுமென்றும் ஞானத்தினா
லே மோக்ஷமுண்டாகுமென்றும், முமூட்சுவானவன் ஞானத்தை
அநுஷ்டிக்கவேண்டுமென்றும் ஞானானுபூதிவருமளவும் கர்மானுஷ்
டானத்தை விடக்கூடாதென்றுமே அந்நூல்கள் போதிக்கின்றன.
அவ்வாறு போதித்தலால் ஞானம் அநுபவத்துக்கு வருமுன்னே
ஞானங் கைவந்துவிட்டதாகத் தாமே மதித்துக்கொண்டு தற்போத
முனைப்பால் கர்மத்தை விட்டொழித்தபடியினாலே அது பெரும்
பாதகமாய்நின்று நரகத்துன்பத்தை யளித்தற்கு நேர்வாயிலாகின்
றது. இவர்கள் மதிகெட்டு அவலம்பித்த விபரீதஞானம் கேடுபயப்ப
தாய் முடிகின்றதேயன்றி நன்மை பயப்பதாக இல்லை. இவர்கள்
கர்மமுமின்றி ஞானமுமின்றி கெட்டொழிதலால் இவர்களை நல்
வழிப்படுத்துதல் வைதிக சைவர்கள் ஒவ்வொருவருக்கும் இன்றி
யமையாத கடனாகின்றது. இவர்களுட் சிலர் சைவசமயச் சார்பாற்
சைவக் கிரியைகளை அநுஷ்டித்தாராயினும் அக்கிரியைகளுக்குரிய
ஞானம் ஏகான்மவாத நூல்களில் அகப்படாது. எக்காலத்தும்
சைவக்கிரியைகள் மற்றைய கிரியைகள்போலில்லாமல் ஞானத்
துக்குச் சாதனமாயும், அங்கமாயும், கருத்தாயும் அமைந்துள்
ளன. அவற்றினது அநுஷ்டானமும் பாவனையும் ஞானமயமாய்
விளங்கும். அக்கிரியைகள் அநுஷ்டிப்போர் கொள்ளவேண்டிய
ஞானநூல்கள் மெய்கண்டசாஸ்திரங்களேயாம். எந்தசாஸ்திரத்தி
லும் கர்மகாண்டமும் ஞானகாண்டமும் ஒன்றோடொன்று
தொடர்புபட்டனவாகவே யிருக்கும். சிவாகமங்களிலே கூறப்
பட்ட கிரியைகளை அநுஷ்டிப்போர் ஞானத்திலே அவாக்கொள்
ளும்போது சிவாகமங்களின் ஞான பாதத்துள்ள சைவ

சித்தாந்தத்தைத் தழுவவேண்டுமேயன்றி ஏகான்மவாதஞானநூற்களைத் தழுவலாகாது. அப்பொழுதுதான் இவரது கர்மமும் ஞானமுமாகிய இரண்டும் பிரயோசனப்படும். செய்வது சைவக்கிரியையும், கொள்வது ஏகான்மவாத ஞானமுமாயிருந்தால் அதுசிறிதும் பயனைத் தராது. இக்கருத்தை யுணர்த்தவே ஸ்ரீ தாயுமானசுவாமிகள்:—

வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
  வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
  விரிவா வெடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
  யுண்டுபண்ணு ஞானமாகும்
ஊகமனு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
  துபயவா திகள்சம்மதம்;
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போது
  மியாதொன்று பாவிக்கநான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
  னத்துவித மார்க்க முறலாம்
ஏதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செ
  யெந்தைநீ குறையுமுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
  யெங்குநிறைகின்ற பொருளே — என்று

திருவாய் மலர்ந்தருளினர். இங்கு அத்வைதமென்றது சுத்தாத்வைதத்தையேயன்றி கேவலாத்வைதத்தையன்று.

இனி ஸ்மார்த்த பிராம்மணர் ஸ்மிருதிகளிற் கூறிய கர்மங்களை அநுஷ்டிப்பதுபோல் நான்காவது வருணத்து ஏகான்மவாதிகளும் அக்கர்மங்களையே ஞானத்துக்கு அங்கமாக அநுஷ்டிக்கவேண்டும். அப்படிச் செய்யவோ ஸ்மிருதிகள் இடந்தரவில்லை. அவை நான்காவது வருணத்தாருக்கு கர்மாதிகாரமும், ஞானாதிகாரமும் இல்லையென்று ஸ்பஷ்டமாய் விதிக்கின்றன. அன்றியும் பிராம்மணருக்கு ஊழியஞ்செய்தலையே தருமமாகக் கூறியுள்ளன. இதனைப் பின்பற்ற இயலாதாதலால் இவர்கள் கர்மங்கள் செய்யாதிருப்பதற்கு இதுவே காரணமாகின்றது. ஆதலாற்றான் நான்காவது வருணத்து ஏகான்மவாதிகளிற் சிலர் சைவகர்மங்களையும், வேறு சிலர் வைணவகருமங்களையும் அநுஷ்டித்துவருகின்றனர். இவர்கள்



ங்காலமுழுமையும் ஏகான்மவாத நூல்களிற் செலுத்தி மன
நைக் கூராக்கிவிட்டபடியால் தஞ்சமய நூலாராய்ச்சியேனும், சம்ய
நூலாராய்ச்சியுடையார் சகவாசமேனும் இலராய் ஏகான்மவாத
நூல்களையே அப்பியசித்து அந்நூலுடையார் சகவாசம் பெரிது
டையராய், ஏகான்மவாதமே மோட்சத்துக்கு நன்னெறி என்னுங்
கோட்பாடுடையராய், தம் வாழ்நாளை வீணாகக் கழிக்கின்றனர்.
அந்தோ! இவர்கள் கர்மமுமின்றி ஞானமுமின்றி நட்டாற்றில்
கைவிடப்பட்டவரா யிருக்கின்றமையின் இவ்வாறு வைதிக சைவ
உண்மைகளை விளக்கி உயிர்க்கு உறுதிபயக்கும் சிவ புண்ணியத்
தைத் தேடிக்கொண்டாம். சுபம். மெய்கண்டநாதன்றாணை.

சோளங்கிபுரம். சிவஅருணகிரி முதலியார்.

---

## கடவுள் உண்டா, இல்லையா?

உலகத்திற்குக் கர்த்தாவாகிய கடவுள் ஒருவர் உண்டா, இல்
லையா, என்னும் இக்கேள்விக்கு ஆத்திகர் பலர்உண்டு என்கிறார்கள்.
நாத்திகர் இல்லை யென்கிறார்கள். ஆத்திகரும் நாத்திகருமல்லாத
சந்தேகவாதிகள் உண்டு என்பாரை நோக்கி "கடவுள் இருந்தால்
காட்டுங்கள்" என்கிறார்கள். ஆத்திகர் பலர் மற்ற இருதிறத்தார்
க்கும் கடவுளைக் காட்டவேண்டி மிகவும் பிரயாசைப்படுகிறார்கள்.
ஆனால், ஆத்திகர்களுள் சைவர்களாகிய நாம் அக்கேள்விக்கு உண்டு
என்றே யாவது இல்லையென்றேயாவது சொல்வதில்லை. பின் என்
செய்வோமென்றால் மௌனமா யிருந்துவிடுவோம். அல்லது,
"உண்டு என்பவர்களுக்கு உண்டு, இல்லை யென்பவர்களுக்கு இல்லை"
என்று சொல்வோம். நாம் மௌனமாயிருப்பதே அவர்கள் கேட்
கும் கேள்விக்கு முதலில் அளிக்கும் விடையாகும். அவ்விடையின்
கருத்தையறியாமலே அவர்கள் தாம் கேட்ட கேள்விக்குப் பதில்
சொல்லமாட்டாமல் சும்மாவிருப்பதாக எண்ணிக்கொள்ளக்கூடும்.
நாம் "கடவுள் உண்டு என்பவர்க்கு உண்டு, இல்லை யென்பவர்க்கு
இல்லை" என்று சொன்னால், அவர்கள் கைகொட்டி நகைத்து,
"இது கோமுட்டி சாக்ஷி சொன்னதுபோலாம். ஏககாலத்தில்
உள்ளதாகவும் இல்லதாகவும் இருக்கும் ஒருபொருளை நாம் எங்கும்
கண்டதில்லை. அவ்வாறான பொருள் ஒன்றிருக்கும் என்பது மலடி

மக்களைப் பெற்றாள், குருடன் கண்ணாரக்கண்டான், செவிடன் காதாரக்கேட்டான், முயலின் கொம்பு மூன்றுமுழ நீளமிருக்கும், என்பனபோல் பொருளில்லாதனவாகிய வெறுஞ் சொற்களாம்." என்பார்கள். ஆதலால் நாம் அவர்களுக் களிக்கும் விடைகள் இரண்டனுள் முன்னே முதலில் அளிக்கும் மௌன விடையின் கருத்தை விளக்குவோம்.

நாம் எதையும் மனம் வாக்குக் காயங்களாகிய திரிகரணங்களைக்கொண்டு அறிகிறோம். திரிகரணங்கள் சடப்பொருள்கள். சடப்பொருள்களைக்கொண்டு சடப்பொருள்களை யறியக்கூடுமே யன்றி சித்துப்பொருளாகிய கடவுளையறிய முடியாது. திரிகரணங்களால் கடவுளை அறியக்கூடுமாயின் கடவுள் என்பது சடப்பொருள்களுள் ஒன்றாய் விடும். அன்றியும், கடவுள் என்னுஞ் சொல்லுக்குக் "கடந்து நிற்றலையுடையது" என்பது பொருள். எதைக்கடந்து நிற்றலையுடையதெனில் தத்துவங்களைக் கடந்து நிற்றலையுடையதென்போம். எனவே, தத்துவாதீதமாயிருக்கும் பொருள் எதுவோ அது கடவுள் என்பது பெறப்பட்டது. மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றும் திரிகரணங்கள் என்ப்படும் தத்துவங்களாம். ஆதலினால் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் அறியப்படாத பொருள் எதுவோ அது கடவுள் என்பது பெறப்பட்டது. அத்தகைய பொருளை நாத்திகர் காட்டச் சொல்வது அவர்கள் "மனம் வாக்குக் காயங்களால் அறியக்கூடாத பொருளை, நாங்கள் எங்கள் மனம் வாக்குக் காயங்களால் அறியுமாறு, நீங்கள் உங்கள் மனம் வாக்குக் காயங்களைக்கொண்டு காட்டுங்கள்" என்று கேட்பதுபோலாம். இக்கேள்வி மூடக்கேள்வி யாகையால், அவ்வாறு கேட்கும் மூடர்களைத் தெருட்டுவது எவ்வாற்றானும் கூடாதென்பதை யுன்னியே நாம் முதலில் அவர்களுடன் உரையாடாமல் மௌனமாயிருப்பது.

உரையுணர்விறந்த ஒருபெரும்பொருளே கடவுள் ஆதலால் அப்பொருளை உரையும் உணர்வும் அற்ற நிலையினரே அறிதற்பாலார். (இவ்விடத்தில் உணர்வு என்பது சடப்பொருளாகிய கரணங்களாற் சுட்டியறியும் அறிவை.) உரையுணர்வற்ற நிலையே மனமும் வாக்கும் இறந்த நிலையெனவும், பரமஞான நிலையெனவும், மோன நிலையெனவும் சொல்லப்படும். இது "மோனமென்பது ஞான வரம்பு" என்பதனால் உணரப்படும். அந்நிலை கடவுளோடு அது



வனாவாய் (அத்துவிதமாய்) இருந்து இன்பம் நுகர்வதாகிய அநுபவ மாத்திரமா யிருப்பதன்றி, வாயினாலெடுத்துரைக்கப்படுவதன்று. இதுபற்றியே மேலோர் "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்பர். நமது காரைக்காலம்மையாரும் திருமூலநாயனாரும் முறையே,

அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டே
னின்றுந் திருவுருவங் காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோ னும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கே
னெவ்வுருவோ நின்னுருவ மேது. எனவும்,

உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே.

எனவும் அருளிச் செய்தார்கள்.

ஒருவன் மரணாவஸ்தைபடும்போது அவனுடைய சுற்றத்தவர்கள் அவனைநோக்கி "அப்பா நீபடும் வேதனையை நாங்கள் அறியச் சொல்" என்று கேட்டால் அவன் "ஐயோ, நான்படும் வேதனையை உங்களுக்கு எவ்வாறு தெரிவிப்பேன்" என்றான். இப்படியே ஸ்திரீ புருஷர்கள் ஒருவரை யொருவர் மருவி அனுபவிக்குங் கலவி யின்பத்தைப் பிறர்க்குச் சொல்ல இயல்வதில்லை. இச்சிற்றின்பமும் அனுபவமாத்திரமாயிருப்பது மாத்திரமன்றி, அதற்குரிய பருவம் வந்தபிறகே அனுபவத்திற்கு வருகிறது. இதனை "கன்னிகை யொருத்தி சிற்றின்பம் வேம்பெனினுங் கைக்கொள்வள் பக்குவத்தில், கணவனருள் பெறின் முனே சொன்னவாறென்னெனக் கருதி நகையாவள்" என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கும் உணர்த்தும். அதுபோல் பேரின்பமயமாயிருக்கும் கடவுளை மலபரிபாகம் பெற்ற ஞானிகளும் இரண்டறக்கூடி இன்பமார்ந்திருப்பரே யன்றி பிறர்க்கெடுத்துரையார். ஆதலால், நாமும் நாத்திகர்கேட்கும் கேள்விக்கு விடை வாயினாற் சொல்லப்படுவதன்று என்பதைக் குறிப்பாய் உணர்த்தவேண்டி மௌனமாயிருந்து விடுவோம்.

இனி "கடவுள் உண்டு என்பவர்க்கு உண்டு, இல்லை யென்பவர்க்கு இல்லை" என்பதை விளக்குவாம். ஒருவன் தன் குழந்தை

யின் மீது வைத்த (பற்று எனப்படும்) அன்பினால் அக்குழந்தை யைக் காணும்போதும், அதின் சொற்களைக் கேட்கும்போதும், அதைத் தீண்டும்போதும் இன்பம் அடைகின்றான். அவ்வாறே மனைவி மாடு வீடு முதலியவற்றினிடத்தும் வைத்த அன்பினால் இன்பம் அடைகின்றான். இதனால் பிரபஞ்சத்தில் உயிர்களுக்கு உண்டாகும் இன்பத்திற்குக் காரணம் பிரபஞ்சப்பொருள்களிடத் தில் வைத்த அன்பே என்பதும், அன்பு எங்கு உண்டோ அங்கு இன்பம் உண்டு என்பதும் விளங்கும். சிறியபொருளாகிய பிரபஞ் சத்தில் வைத்த அன்பினால் சிற்றின்பம் உண்டாவதுபோல் பெரிய பொருளாகிய கடவுளிடத்தில் வைத்த அன்பினால் பேரின்பம் தோன்றும். இதனை "அன்பினில் விளைந்தவாரமுதே" என்னுந் திருவாசகத்தாலுணர்க. இன்பம் கடவுளின் உருவமாதலாலும், அவ்வின்பம் அன்பினால் உண்டாவதனாலும், அன்பிலார்க்கு இன்ப முமில்லையாகையாலும், கடவுளை விசுவசித்து அன்புசெய்வார்க்கு அவர் உளராகவும், அன்பு செய்யாதவர்க்கு இலராகவுமிருக்கிறார்,

அன்றியும் "குழந்தையுந் தெய்வமுங் கொண்டாடுமிடத்தில்" என்னும் பழமொழியின்படி, குழந்தையானது தன்னை ஆசையோடு செல்வமே கண்ணே கண்மணியே யெனப் பலகூறி கையிலேந்தி யும், மார்போடணைத்தும் முத்தமிட்டும், பாலூட்டியும், தாலாட் டியும், வளர்ப்பவர்களிடம் தானும் ஆசையோடு சென்று அவர்கள் மடிமீதிருந்து விளையாடுவதுபோல், கடவுளும் தம்மைநேசித்து அபிஷேகித்தும், அலங்கரித்தும், அருச்சித்தும், தோத்திரங்கள் பாடியும் திருவிழாக்கொண்டாடியும், வணங்குவார்க்கு எளியராய் அவர் சிந்தையைக் கோயிலாகக்கொண்டு வெளிப்பட்டருளுவர், மற்றவர்களுக்கு அவ்வாறு வெளிப்பட்டருளுவதில்லை,

தமிழ்வேதம்,

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லால் சென்றுகைகூடுவதன்றால்
கந்தமாமலருந்திக்கடும்புன னிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே,

வைத்தநிதியே மணியே யென்றுவருந்தித்தஞ்
சித்தநைந்துசிவனே யென்பார் சிந்தையார்
கொத்தார்சந்துங்குரவும் வாரிக்கொணர்ந்துந்தி
முத்தாறுடையமுதல்வர் கோயின்முதுகுன்றே.



உலகத்தில் கடவுள் உண்டு என்று நம்பி அவரை வழிபடுவோ ருள்ளும் தம்முடைய அன்பெல்லாம் மனைவிமக்களிடத்திலும் செல்வ முதலியவற்றிலுமே அழுந்தவைத்திருப்பவர்களுக்கும் கடவுள் இலராகவேயிருக்கின்றார். இவ்வாறு சிற்றின்பப் பிரியராய்ப்பிரபஞ்ச வாழ்க்கையையே பெரிதாக மதித்துக் கடவுளையும் அவராலுண்டா கும் பேரின்பத்தையும் இழப்பார்க்கு இரங்கியே நமது மாணிக்க வாசகசுவாமிகள்,

தினைத்தனையுள்ளதோர் பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும் பேசுந்தோறுமெப்போதும்
அனைத்தெலும்புண்ணெக வானந்தத்தேன்சொரியும்
குனிப்புடையானுக்கேசென்றூதாய்க் கோத்தும்பீ.

என்றருளிச்செய்தனர்.

கடவுளை அவரருளையே கண்ணாகக் கொண்டுகாணவேண்டுமே யன்றி ஆணவமலத்தால் மழுங்கிக் கிடக்கும் சுட்டுணர்வைக் கொண்டு காணலாகாது.

அருளைக் கண்ணாகக்கொண்டு காணும் ஞானிகளுக்குப் பேரொளி யாகிய பரசிவம் தோன்றும்; பிரபஞ்சந் தோன்றாது. சுட்டி யறி யும் அறிவைக்கொண்டு காணும் ஏனையோர்க்கு அந்தகாரமாகிய பிரபஞ்சந்தோன்றும்; சிவம் தோன்றாது.

தாயுமானசுவாமிகள் பாடல்.

அருளா லெவையும் பாரென்றான்—அத்தை, யறியாதே சுட்டி யென் அறிவாலே பார்த்தேன்— இருளான பொருள் கண்ட தல்லால்—கண்ட வென்னையுங் கண்டில னென்னேடி தோழி—சங்கர சங்கர சம்பு,

திருத்தாண்டகம்,

மைப்படிந்த கண்ணாளுந்தானுங் கச்சிமயானத்தான் வார்சடையா னென்னினல்லா, னொப்புடையனல்ல னொருவனல்ல னோரூரனல்ல னோ ருவமனில்லி, யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லா, லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென் றெழுதிக் காட்டொணாதே,

இவ்வாறு, சுத்தாத்வைத சித்தாந்த சைவநெறியைக் கடைப் பிடித்துச் சரியை கிரியா மார்க்கங்களிலிருந்து தம்மை வழிபடு வார்க்குச் சிவபெருமான் படர்க்கையாகவும், சிவயோகிகளுக்கு

முன்னிலையாகவும், சிவஞானிகளுக்குத் தன்மையாகவும் இருந்து, அருள்செய்வதனாலும், அவரை வழிபடாதவர்க்கு அவர் அவ்வாறிருந்து அருள்செய்தலில்லாமையாலும், நாம் "கடவுள் உண்டு என்பவர்க்கு உண்டு, இல்லை யென்பவர்க்கு இல்லை" என்பது.

திருவாசகம்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி உண்மையுமா யின்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

---

## பாரதம்.

## அருச்சுனன் பாசுபதம்பெற்ற சரித்திரம்.

(200 - வது பக்கத்தொடர்ச்சி.)

நீ பாண்டுபுத்திரனாகிய அர்ச்சுனனே! சபாசு, சபாசு; இதுவரைக்கும் நீ வழங்கிய வாக்கியங்களை வயிராக்கிய வாக்கியமென்றும், வாக்கியத்துக் கொப்பாகச் செய்கையினு மிருப்பாயென்றும் நினைத்திருந்தேன். உன்மரபையும் பெயரையுங் கேட்டமாத்திரத்தில் உன்பெருமை வெளிப்பட்டது. நீ வில்வித்தையைக் கிஞ்சித்தேனு மறிந்தவனல்ல. துரியோதனன் தன் தம்பியாகிய துச்சாதனனைவிட்டு உங்களைவர்க்குப் பெண்டாகிய துரௌபதியை இழுத்துச்சென்று சபையில் மானபங்கஞ்செய்தபோது நீ வில்லாளியாக இருந்தால் அந்தத்துரியோதனனையும் மற்றுமுள்ள துராத்துமாக்களையும் நீ செய்ததென்ன? வில்லாளிகளல்லாத சில எளிய அரசரை வெற்றிபெற்று இறுமாப்படைந்து விஜயனென்று பெயர் வகித்துக்கொண்டாய். உன் குலத்தின் திறத்தை நோக்குங்கால் எனக்கதிக நகைப்புண்டாகின்றது. ஏனென்றால், உன்பிதா மனைவியைச்சேர்ந்தால் தலைபிளந்திறக்கக்கடவனென்று ஒருமுனி சாபமிட்டிருந்தான். அந்தச்சாபத்தை நினைத்து அரசுரிமையை நீக்கித் தன்னிரண்டு மனைவியரும் பணிவிடைசெய்யத் தபசியாகி எங்களுக்குரிய காட்டில் சஞ்சரித்திருந்தனன். அவனுக்கு ஐந்து புத்திரர் பிறந்தாரென்று சொல்வது அபத்தம். ஒருவன் பலமாதரைப் புணரலாம். நீங்களைவரும் ஒருமாதினைப் புணர்ந்து வருகிறீர்கள். உங்கள் குலமும் உங்கள் நடக்கையும் உங்களுக்கே சரி



யல்லாமல் காட்டில் திரிகிற எங்களையொத்த வேடருக்குஞ் சரிப்படாது. இழிகுலமும் இழிவான நடத்தையுமுள்ள உன்னை எதிர்த்துக் கொல்வது தகுதியல்லாததாக இருந்தாலும் உன்னைக்கொல்ல வேண்டுமென்று நெடுநாளாக நானினைத்திருந்தேன். அதற்குக் காரணமென்னவென்றால், தன்னைப் பங்கப்படுத்தின பாஞ்சாலனைக் கட்டித் தன்சமுகத்துக்குக் கொண்டுபோகக்கருதிய துரோணர் உனக்கும் உன் சகோதரர்களுக்கும் வில்வித்தை கற்றுக்கொடுத்திருந்த காலத்தில் எங்கள் குலத்திலகனான ஏகலைவனென்ற வேடன் அவரையடுத்து வில்வித்தை கற்பிக்கச்சொல்லி வேண்டிக்கொண்டான். அப்போது, துரோணர் தமக்கு ஒழிவில்லையென்றுசொல்ல, அதனைக்கேட்ட ஏகலைவன் தன்னிருப்பிடத்துக்குச் சென்று துரோணரைப்போலொரு உருவத்தைச் சமைத்து அந்த உருவ மூலமாக வில்வித்தை யனைத்தையும் கற்றுக்கொண்டான். அக்காலத்தில் நீ வேட்டைக்குச் சென்றாய். உன்னுடன்வந்த நாய் ஏகலைவன் செய்துவைத்திருந்த துரோணர் திருவுருவத்தின் மேடையில் நீர்விட்டது. அதுகண்டு ஏகலைவன் தன்வில்லில் ஒருபாணத்தைத் தொடுத்தான். அது விநோதத்தால் நாலுபாணமாய் நாயின் நெற்றியில் நாற்புறத்தும் தைத்துருவிற்று. நாய் ஓலமிட்டு உன்னிடத்தில்வர, நீ அந்த ஏகலைவன் சிலம்பக்கூட்டத்தை நாயாற்கண்டு அங்குசெல்லும்போது ஏகலைவன்வந்து வணங்கி, உபசாரஞ்செய்ய, நீ அவனைப்பார்த்து, ஓ ஏகலைவா! இந்த நாயை எய்தவர் யாரென்று வினவினை; நான்தானென்று ஏகலைவன்கூற, உனக்கு வில்லாசிரியன் யாரென்று நீ வினவினை; எனக்கு வில்லாசிரியன் துரோணரென்று ஏகலைவன்கூற, அதனைக்கேட்ட நீ துரோணரை அழைத்துவந்து ஏகலைவன் வில்திறத்தை அறிந்துகொண்டு அவனை வில்லாளியென்று மதித்து, அவன் வில்வித்தை பயன்படாதிருக்க மனதில் பலவாறு யோசித்திருக்கும்போது, துரோணர் ஏகலைவனை அழைத்து தமக்குத் தக்ஷிணையாக அவன்கைப் பெருவிரலைக் கேட்டார். ஏகலைவன் அவ்விரலை உடனே அறுத்துக் கொடுத்துவிட்டுச் சிலநாளிலிறந்தான். எங்கள் குலத்திலகனான ஏகலைவனிறந்ததற்குக் காரணம் நீதான். இஃதன்றி நீ ஒரு பிராமணனுக்காக அநேகம் வேடர்களைக் கொன்றாய். காண்டவ வனத்தைத் தகனஞ்செய்தபோது அவ்வனத்திலிருந்த வேடர்களைக் குஞ்சுகுட்டிகளோடு நாசஞ்செய்தாய். ஆகையால் நீ எனக்குத் தெண்டப்பகையாளி. உன்னைவிடேன்" என்று கூறித் தன்கையிலிருக்கும் வில்லைவளைத்து நாணேற்றி

டங்கார ஓசை யெழுப்பித் திவ்விய கணைகளிலொன்றை நாணியிற்
சேர்த்துக்கொண்டு பின்னுஞ் சொல்லுகிறார். "அடா அர்ச்சுனா!
நீ பராக்கிரம வியாக்கிரமமாகிய பாஞ்சாலனைப் பிடித்துத் தேர்க்கா
லில் கட்டியவன். அக்கினிபகவானிடத்தில் அழியாத தேரும் ஒடி
யாத வில்லும் அறுதநாணியும் பெற்றவன். உன் வீரத்தை என்னி
டம் காட்டு பார்ப்போம்" என்றார். வேடன் வழங்கிய சொற்களைக்
கேட்ட அர்ச்சுனன் அனலிடு மெழுகுபோல் மனதுருகிக் கடுஞ்
சினமடைந்தாலும் சித்தத்தைச் சிவன்பால் நிறுத்தி எதிர்நின்று
வழக்கிடும் வேடுவனோடெதிர்த்து "அடா வேடா, சற்று நில்,
ஓடிப்போகாதே. அரைமாத்திரையில் உன்னைக் கொல்லுகிறேன்"
என்றுகூறித் தன்வில்லை எடுத்து நிறுத்தி வளைத்து டங்கார ஓசை
யெழுப்பி வச்சிராயுதத்துக் கொப்பாகிய ஒரு திவ்விய கணையைத்
தொடுத்து இறைவர் மார்புக்கு இலக்காக விடுத்தான். இறைவர்
தன்கைக்கணையி லொன்றை விடுத்து வரும்பாணத்தை நடுப்பாதியி
லறுத்து உடனே இரண்டு கணைகளைத் தொடுத்துவிட்டார். அக்
கணையிரண்டும் அர்ச்சுனன் மார்பிற்பட்டுப் பின்புறத்தி லுருவிப்
போயின. அப்போது அர்ச்சுனன் சிந்தைகலங்காமல் சித்தத்
தைச் சிவன்பால் நிறுத்தி மார்பில்பட்ட காயத்துக்குச் சற்றேனு
மஞ்சாமல் அர்த்தசந்திர பாணத்தில் மூன்று பாணத்தை
யெடுத்து நாணியில் வைத்து இறைவர் தோளுக்கும் மார்புக்கும்
பீலிமுடிக்கும் இலக்காக எய்தான். முதல்வனார் அந்த மூன்று பா
ணத்தையும் கண்டித்து கணைகளைத் தூண்டி அர்ச்சுனனை நோவச்
செய்தார். அர்ச்சுனன் மேலுமேலும் கணைகளைத் தொடுத்துவிட்
டான். பிரனார் அக்கணைகளைக் கண்டித்துவந்தனர். அர்ச்சுனன் கடுஞ்
சினமடைந்து, ஓ! ஓ! இந்தவேடன் வில்லில் சிறிது திறமுடையவன்.
நாம் இலக்குவைத்து எய்கிற கணைகளைக் கண்டிக்கிறான். இவனை
ஏமாற்றி நாம் நினைத்த லக்ஷியத்தைச் சாதிக்க வேண்டுமென்று
கருதி, இரண்டு மூன்று பாணம் தொடுப்பவன்போலச் சிலபாணத்
தைத் தொடுத்துத் தன்விநோத வித்தையால் மூன்று பாணத்தைத்
தொடுத்துவிட்டான். அடியார்க்கெளியவர் அவன் முன்னம்விட்ட
கணைகளைமாத்திரம் கண்டித்துவிட்டு வேறுபாண மில்லையென்று
அர்ச்சுனனைப் பார்த்திருப்பவர்போல் அபினயிக்க அவன் விட்ட
மூன்று பாணத்தில் இரண்டு பாணம் மார்பிலும் தோளிலும் பட்டு
மற்றொருகணை பீலிமுடியைப் பிளந்தெறிந்துவிட்டது. அதைக்கண்டு



சிவபெருமான் மிகவுங் கோபாவேசம் கொண்டவர்போல் ஆர்ப்ப
ரித்து, ஒரு கணையைத்தூண்டி அருச்சுனன் வில்நாணியை அறுத்த
னர். அருச்சுனன் தேவர்களாலும் அறுக்கப்படாத தன் வில்லின்
நாண் அறுக்கப்பட்டமையைக்கண்டு ஆச்சரியமும்மானமுமடைந்து,
வீராவேசத்துடன் தோள்தட்டி யார்த்து மல்லயுத்தஞ் செய்யத்
தொடங்கி, நிமிர்ந்த வில்லைக் கதாயுதமாகக் கரத்திற்பற்றி, ஓடிச்
சென்று இறைவர் திருமுடியில் ஓங்கி யடித்தான். அந்த அடியா
னது சொர்க்க மத்திய பாதலமென்னும் முப்புவனங்களிலுமுள்ள
எல்லா வுயிர்கள் மேலும் பட்டது. பிரம விஷ்ணு இந்திரன் முத
லான சகல தேவர்கள்மேலும் பட்டது. அருச்சுனன்மேலும் பட்
டது. சிவபெருமான் தம்மோடு மல்லயுத்தம் செய்யவந்த அருச்
சுனனோடு தாமும் மல்லயுத்தஞ் செய்பவர்போல் அவனை யாகாயத்
திற் றூக்கியெறிந்து அவன் கீழேவிழுமுன் தமது பரிவாரங்களோடு
மறைந்தருளினர். அருச்சுனன் கீழேயிறங்கி நாற்றிசையினுஞ் சுற்
றிப்பார்த்து ஒருவரையுங் காணாமல் திகைத்து நின்றான். அப்
போது அந்தரத்தில் தேவதுந்துபி முழங்கவும், மந்தார பாரிசாத
மலர்கள் சொரியவும், அப்ஸரஸ்திரீகளும் தேவர்களும் ஜயா
விஜயபவா என்று வாழ்த்தி ஆசிகள் கூறவும், அன்னவாகனத்தில்
பிரமதேவனும், கருடவாகனத்தில் திருமாலும், ஐராவதத்தில் இந்
திரனும், திக்குப்பாலகர்களும், கருடகாந்தர்வ சித்தவித்தியாதரர்
முதலாயினோரும் புடைசூழ மழவிடைமேல் சிவபெருமான் பார்
வதிசமேதராய்த் தோன்றியருளினர். அருச்சுனன் அவரைத் தரி
சித்து இரண்டு கண்களிலும் ஆனந்தவருவி தாரைதாரையாகச்
சொரிய இரண்டு கரங்களைச் சிரமேற்குவித்துத் தொழுதான்; ஆடி
னான்; பாடினான்; அவசமுற்றுத் தரையில் விழுந்தான்; எழுந்தான்;
சிவபெருமானை யிகழ்ந்துபேசி அவருடன் போர்புரிந்தமையை எண்
ணியெண்ணி மனங்கரைந்து ஓவென்றலறி அழுதான்; துடித்
தான். அச்சமயம் அருச்சுனன் உள்ளமும் சரீரமுமடைந்த நிலையை
அந்நிலையில் நின்றார் அறிவதன்றி வாயினால் எடுத்துரைக்கவுங்
கூடுமோ! சிவபெருமான் அருச்சுனனை நோக்கி "அப்பா, என்
அன்பனே, உன்தவத்திற்கு மிகவும் மெச்சினேன். நீ என்னுடன்
புரிந்தபோர் எனக்கு அன்போடுசெய்த பூசனையாகும். நீ வழங்
கிய தூஷணைகளெல்லாம் எனக்குச் சாமவேதமாம். நீ விட்ட
பாணங்களெல்லாம் என்னை அருச்சித்த மலர்களாம், நீ என் தலை
யில் மோதிய வில் என்சிரசிற் சூட்டிய வில்வமாலையாம். ஆதலால்

நீ மனவருத்தமுறவேண்டாம்,” என்று திருவாய் மலர்ந்தருளி ஒருபோதும் ஒடியாத வில்லும், அறாத நாணியும், மாளாத அம்புப் புட்டிலும், கவசமும், வச்சிரமுடியும் பாசுபதாஸ்திரமுங் கொடுத்தருளி மறைந்தருளினர். இச்சரித்திரத்தால் ஐம்புலன்களை யடக்கித் தம்மை வழிபடும் அன்பர்க்குச் சிவபெருமான் எளியரா யிருப்பவரென்பதும், அவர் சர்வ வியாபகரென்பதும், ஸ்ரீ மகா பாரதத்தாலும் சிவபரத்வமும் விளக்கப்பட்டிருக்கிற தென்பதும் விளங்கும்.

### திருவாரூர் நான்மணிமாலை.

மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா ளாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
வுண்டமிழ் தீநீ ருவந்தன ராடியும்
விருப்படி கொண்ட மிச்சிலூண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நல்லிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே.

---

## ஆருத்ராதரிசனம்,

### நடேசர்தரிசனம்.

“சித்திரையி லோணமுதற் சீரானி யுத்திரமாம், சத்ததனு வாதிரையுஞ் சார்வாகும்—பத்திவளர், மாசி யரிகன்னி மருவு சதுர்த் தசிமன், றீசரபி ஷேகதின மாம்.”

சித்திரைமீ திருவோணம், ஆனிமீ உத்திரம், மார்கழிமீ திருவாதிரை, மாசிமீ, ஆவணிமீ, புரட்டாசிமீ பூர்வபட்ச சதுர்த்தசிகள் ஆகிய இவ்வாறும் நடராஜமூர்த்தியின் அபிஷேக தினங்களாம்.



நமக்கொருவருடம் தேவர்களுக்கு ஒரு நாளாகின்றபடியால், இவ்வாறபிஷேக நாட்களும் சிவபெருமானுக்குத் தேவர்களால் பிரதிதினம் செய்யப்படுகின்ற ஆறுகால பூஜைகளாகும். எப்படியென்றால், மார்கழிமீ பிராதக்காலம் 25 நாழிகை முதல் 30 நாழிகைக்குள் செய்யும் பூஜை பஞ்ச பஞ்ச வுஷத்கால பூஜை யாகும். மாசிமீ உதயாதி 10 நாழிகைக்குள் செய்யும் பூஜை காலைசந்தி பூஜையாகும். சித்திரைமீ மத்தியானம் 20 நாழிகைக்குள் செய்யும் பூஜை உச்சிகால பூஜையாம். ஆனிமீ சாயங்காலம் 30 நாழிகைக்குள் செய்யும் பூஜை பிரதோஷ பூஜையாம். ஆவணிமீ இராத்திரி 7½ நாழிகைக்குள் செய்யும் பூஜை மாலைசந்திபூஜையாம். புரட்டாசிமீ இராத்திரி 11¼ நாழிகைக்குள் செய்யும் பூஜை அர்த்தஜாம பூஜையாம். ஆகலான் மார்கழிமீ திருவாதிரை யபிஷேகம் பஞ்ச பஞ்ச வுஷத்கால திருமஞ்சனமாகின்றது.

நடராஜமூர்த்திக்குச் செய்யும் அபிஷேகாதிகள், ஆன்மாக்கள் நாடோறும் ஈடேறும்பொருட்டுச், செய்யாமற் செய்துகொண்டிருக்கும் பஞ்சகிருத்தியங்களுக் கறிகுறியே யாகின்றன. எப்படியெனின்,—நடராஜமூர்த்தி சிற்சபையை விட்டெழுந்தருளுவது சிருஷ்டி; இரக்ஷாபந்தனந் தரிப்பது ஸ்திதி; கிருஷ்ணகந்தந் தரிப்பது சங்காரம்; வெள்ளை சாத்துவது திரோபவம்; தரிசனங்கொடுப்பது அனுக்கிரகம் எ-ம். சுவாமி அசுரரைச் சங்கரித்தபோது அவர்களுடைய சரீரம் கரியபஸ்பமானதால் அதைத் திலதமாக்கித் தரித்துக்கொண்டது கிருஷ்ணகந்தம் (கறுப்புசாந்து) சாத்தல் என்றும், அச்சங்காரகாலத்தில் திருமேனி அதிக உக்கிரமா யிருந்தமையால் அது தணியும்பொருட்டுத் தேவர்கள் திருமேனியைச் சந்தனம், வெள்ளைப்புஷ்பம், வெள்ளை வஸ்திர முதலியவைகளால் மறைத்தார்கள் என்றுஞ் சொல்லுவர்.

### திருவெம்பாவை.

திருநெறித் தலைவராகிய ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் தமக்கு ஆசாரிய மூர்த்தமா யெழுந்தருளிய பரமசிவம் அருளிச் செய்தபடி திருவுத்தரகோச மங்கையிற் சேர்ந்து சிவாலயத்துட் சென்று பணிந்து, சுவாமி குருமூர்த்தமாகத் தரிசனங்கொடுக்கத் தரிசித்து விடைபெற்றுக்கொண்டு, திருவிடைமருதூர் முதலிய ஸ்தலங்களுக்குப்போய் ஆங்காங்கு சிவதரிசனஞ் செய்துகொண்டு திருவண்ணாமலைக் கெழுந்தருளி ஸ்ரீ அருணசலேஸ்வரர் ஆசாரிய மூர்த்தமாகத் தரிசனங்கொடுக்கத் தரிசித்து அங்கு வசித்துக்கொண்டிருக்கும்

போது, மார்கழிமீ திருவாதிரைக்கு முன் பதினொருநாளளவும் விடியற்காலத்தில் அங்கிருக்கும் மாதர்களெல்லோரும் ஒருவர்வீட்டுக்கொருவர் போய்த் தோழியே, நமதாண்டவனாகிய பரமசிவனைத் தோத்திரஞ்செய்யக் கேட்டும் இன்னமும் நீ நித்திரை செய்யலாமா? உன்காது வலியகாதா? எழுந்திரு, அருணாசலேஸ்வரரைத் தரிசிக்கலாமென்றுசொல்லியெழுப்பி, ஸ்நானாதி நியமங்களை முடித்துக்கொண்டு சந்நிதானத்துக்கு வரும் அன்பினைக்கண்டு உள்ளத்தில் ஆனந்தஞ்ஜெனிக்க அவர்கள் பேசிக்கொண்டதுபோல், பிரவஞ்சவநுக்கிரககாரியமாகச் சதாசிவமூர்த்தி திருவருளால் மகேஸ்வர தத்துவத்திலே சத்தி மண்டலத்திலிருந்த மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரவுத்திரி, சேட்டை, வாமை, ஆகிய நவசத்திகளும் ஒருவரையொருவர் முறையே பிரேரேபிக்க, அதனால் விசுவகாரியம் நடந்து வருவதையே திருவெம்பாவையாக வோதியருளினார்.

ஆதலால் மார்கழிமீ ஆருத்ராவுக்கு முன்னதாகச் சிவாலயங்களிலெல்லாம் மாணிக்கவாசகசுவாமிகளுக்கு உற்சவம் நடப்பதும் திருவெம்பாவை யோதுவதுமாக முன்னோரால் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கி வருகின்றது.

வித்துவான் - கா. ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள்.

---

## ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியசுவாமிகளுக்கு ஒருகோயில்.

கலியுகவரதராகிய சுப்பிரமணியக் கடவுளுடைய பிரபாவத்தைத் தமிழுலகம் அறிந்தீடேறும்படி அவருடைய திவ்விய சரித்திரத்தைப் பத்திமயங் கனிந்தொழுகும் செந்தமிழ்ப்பாவால் மொழிபெயர்த்துத் தந்தருளிய ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுக்கு நாம் எல்லாம் என்றும் பெருங்கடப்பாடுடையேம். செந்தமிழ் நிலத்திற் கந்தபுராணம் வந்திலதாயின், சண்முகப்பெருமானுடைய திருவருட்டிறத்தை நாம் அறிவதும், அறிந்தவழி அப்பெருமானுக்கு அன்புபூண்டு அவருடைய திருவருளுக்குப் பாத்திரராவதுமுண்டாமோ? கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் மொழிபெயர்த்துச் செய்தருளிய கந்தபுராணம் எமக்குச் சுப்பிரமணியப் பெருமானுடைய மான்மியத்தை விரிவாக வெடுத்துவிளக்குதன் மாத்திரத்தோ டமையாது, அவருடைய திருவடிகளுக்கு நாம் எல்லாம்



மெய்யன்பு பூண்டொழுகுமாறு பத்திச்சுவை பழுத்தொழுகுகின்றது. அதுமட்டோ!, அதன் கண்ணே அளவில்லாத வேதவேதாந்தப் பொருள்களும், சுத்த சைவ சித்தாந்தக் கருத்துகளும், புராணேதிகாச ஸ்மிருதித் துணிபுகளும், பிறவும் தேங்கிவழிகின்றன. "காந்தத்துற்றிடாப் பொருளில்லை" என்று சுவாமிகளே தமது புராணத்திற் சொல்லியருளியபடி, கந்தபுராணத்திலே சொல்லப்படாதது யாதொன்றுமில்லை என்று நாம் துணிவோடு சொல்லலாம்.

இங்ஙனம் சிறந்த இந்தப்புராணத்தால் இப்போது தமிழுலகம் பெறும்பயன் இத்துணைத்தென்று நாம்சொல்லத் தக்கதல்ல. இது அன்பாளர்க்கு அருட்பாவாகவும், வித்துவான்களுக்குச் சிறந்த இலக்கியமாகவும், படனம் செய்வார்க்கு இட்டசித்திகளைத் தப்பாது கொடுக்கும் மந்திரமாகவும், வைதிகர்களுக்கு வேதமாகவும், சித்தாந்திகளுக்குச் சிறந்த ஆகமமாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இத்துணைப் பெருமாட்சிவாய்ந்த புராணத்தை எமக்குத் தந்தருளிய கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளுக்கு, அவர் கலியுக வரதராகிய முருகப்பெருமானை அருச்சித்துக்கொண்டிருந்த தலமாகிய குமரகோட்டத்தில் ஒருகோயில் அமைத்து, அங்கே அவரைப் பிரதிட்டைசெய்து நித்திய நைமித்திகங்கள் நடப்பித்தல் பெரும் புண்ணியமாகும். இந்தப் புண்ணியத்தைச் சுப்பிரமணிய பத்தியிற் சிறந்த தேவகோட்டை நகரத்தார் போல்வார் விரைவிற் செய்து முடித்தற்கு முந்திநிற்பார்கள் என்பதில் தடையில்லை. குமரகோட்டத் திருப்பணியைப் புதுக்குவிக்கும் புண்ணியசீலர்களே இந்தத்திருப்பணியையும் செய்துமுடித்துப் புகழோடு புண்ணியத்தையும் தமக்கும் தமிழ்நாட்டுக்கும் ஈட்டிவைப்பார்களாக.

திருத்தொண்டர்புராணம் செய்தருளிய சேக்கிழார் சுவாமிகளுக்குச் சைவசிகாமணியாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் விரும்பிய வண்ணம் சிதம்பரத்திலே கோயில் அமைந்தாற்போல, கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளுக்கும் குமரகோட்டத்தில் ஒரு கோயில் அமையுமாயின் அது தமிழ்நாடு செய்த தவப்பேறென்றே சொல்லத்தக்கது.

ச. சபாரத்தின முதலியார்.

## நமது பத்திரிகையின் சந்தா.

நமது சைவத் தருவின் நான்காம் மலர் அடுத்த ஜனவரிமாதம் மலரத் தொடங்கும். நமது பத்திரிகாபிமானிகளாகிய பெரியோர்கள் பாய்ச்சுகின்ற உதவியாகிய நீரினால், இம்மகா கொடிய காகிதப் பஞ்சத்திலும், இத்தரு சற்றும் வாடுதலின்றிச் செழித்து வளர்ந்து எங்குஞ் சிவமணம் வீசி வருவதோடு பதினாறு பக்கங்களோடு விரிந்த இதழ்கள் இருபத்து நான்கு பக்கங்களோடு விரிவனவாயின. இவ்வாறு இச்சைவைத் தரு செழித்து வளர்வதைச் சிந்திக்கச் சிந்திக்கச் சைவாபிமானிகளின் உள்ளம் பூரிக்கும் என்பதில் ஐயமில்லை.

இதுவரையில் நமது பத்திரிகையின் சந்தா 12 அணாவாயிருந்தது. வி. பி. தபால் மூலமாய்ப் பெற்றவர்கள் 13 அணா செலுத்தினார்கள். அடுத்த வருடமுதல் இதின் சந்தா வி. பி. செலவு உட்பட ரூபா ஒன்று ஆகும். இதனால் நமது நேயர்கள் வருடம் ஒன்றுக்கு 3 அணா, அதாவது மாதம் ஒன்றுக்குக் கால் அணா, நமது சைவத்திற்குக் காகிதப்பஞ்சம் முதலியவற்றை நோக்கி அதிகமாகக் கொடுக்க நேரிடும்.

இ. ஆதிமூல முதலியார்,
ப - ர்.

---

## ஆயுள் சந்தாதாரர்கள்.

சென்ற அக்டோபர்மீ இரங்கோனிலிருக்கும் ஸ்ரீமான் S. R. M. S. சதாசிவம் செட்டியாரவர்கள் அடுத்த பக்கத்திற் குறித்த 5 ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து 50 ரூபா அனுப்பி உபகரித்தார்கள். இதுவரையில் ஸ்ரீமான் S. V. S. T. சொக்கலிங்கம் செட்டியாரவர்களும் M. S. M. M. இராமநாதன் செட்டியாரவர்களும் சேர்த்துபகரித்த ஆயுள் சந்தா ரூபா 1420. ஸ்ரீமான் S. R. M. S. சதாசிவம் செட்டியாரவர்கள் சேர்ந்து உபகரித்த ரூபா 250.



22 ஸ்ரீமான் சி. ராம. சி. அழகப்பச் செட்டியாரவர்கள்,
Prome, Via, Rangoon.

23 ,, அ. அரு. அண்ணாமலைச் செட்டியாரவர்கள்,
Maubin, Via, Rangoon.

1136 ,, கி. வெ. லெ. வெங்கடாசலஞ் செட்டியாரவர்கள்,
Okpo Via, Rangoon.

125 ,, கு. தெ. குஞ்சாஞ் செட்டியாரவர்கள்,
மிதுலைப்பட்டி Rangiem Post, Via, Trichy.

745 ,, ராம. மெ. மு. பழ. பழநியப்பச் செட்டியாரவர்கள்,
நப்பேட்டு, Danbi P. O. Via, Rangoon.

நிகழும் 1917ஆம் நவம்பர்மீ ஸ்ரீமான் (ஆயுள்சந்தா நெ. 24) O. A. O. K. அழகப்பச் செட்டியாரவர்கள், 12 Mogul Street, Rangoon, தமது ஆயுள் சந்தா ரூபா பத்து அனுப்பப்பெற்றோம்.

---

## அடுத்த வருடப் பத்திரிகை.

இதுவரையில் வருடந்தோறும் ஜனவரி மாதப் பத்திரிகை வி. பி. தபாலில் 13 அணாவுக்கு அனுப்பப் பட்டது. அடுத்த 1918ஆம் ஜனவரிமாதப் பத்திரிகை ஒரு ரூபாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப்படும். அதைப் பெற்றுக்கொள்ள விருப்பமில்லாதவர்கள் அன்புகூர்ந்து உடனே எமக்குத் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறோம்.

இ. ஆதிமூல முதலியார், ப - ர்.

## தூத்துக்குடிச்

சைவசித்தாந்த சபையில் நிகழ்ந்த ஸ்ரீ மெய்கண்ட சிவாசாரிய
சுவாமிகள் குருபூஜை:—சைவசித்தாந்த சந்தான குருமூர்த்தி நால்
வருள் பிரதம குருமூர்த்தியாகிய ஸ்ரீ மெய்கண்டசிவாசாரிய சுவாமி
களின் குருபூஜா தினமாகிய ஐப்பசிமீ 28உ (13-11-1917.) செவ்
வாய்க்கிழமை யன்று காலை 9.மணிக்கு ஸ்ரீ சங்கரராமேசர் ஆலயத்
தில் சந்தான குருமூர்த்திகட்கு அபிஷேக அலங்காராதி விசேட
பூசைநடத்தப்பெற்றது. அன்றிரவு தபசு மண்டபத்தில் வக்கீல்
ஸ்ரீமாந் ப. சூரிய மூர்த்தியாபிள்ளை அவர்கள் B. A. தலைமையின்
கீழ் ஸ்ரீமாந் S.குமாரசாமிபிள்ளை அவர்கள் B. A. சுவாமிகளுடைய
திவ்ய சரித்திரத்தையும், மேற்படி சபையின் சாத்திர போதகா
சிரியர் ஸ்ரீமான் N. சிவகுருநாதபிள்ளை அவர்கள் சிவஞான
போதம் என்னும் விஷயத்தையும் உபந்நியசித்தார்கள்.

ஆ. ரா. சிதம்பரம்பிள்ளை, காரியதரிசி.

## சுப சமாசாரங்கள்.

இவ்வருடப் பத்திரிகையாகிய மூன்றும் மலர் இவ்விதழோடு முற்றிலும் மலர்வதாவதனால், இதனைச் சைவ உலகம் சந்தோஷிக்குமாறு சுபசமாசாரங்களோடு மலரச் செய்கின்றோம்.

இப்போது நடந்துவரும் மகாயுத்தத்தால் காகிதப்பஞ்சம் அளவுகடந்து அதிகரித்துக்கொண்டிருந்தும், இப்பத்திரிகை யெங்கும் பரவவேண்டிச் சிவநேயர்கள் பலரும் செய்துவரும் முயற்சிகளால், இது காலந் தவறாது வெளிவந்துகொண்டிருந்ததோடு, பதினாறு பக்கங்கள் மாத்திரமாய் வெளிவந்திருந்தது இருபத்துநான்கு பக்கங்களாக வெளிவரத்தொடங்கியது. ஸ்ரீமான் சோளங்கிபுரம் சிவஅருணகிரி முதலியாரவர்கள் தமது அருமையான வியாசங்களால் இப்பத்திரிகையைச் சிறப்பிக்கின்றார்கள்.

இரங்கோனிலிருந்து ஸ்ரீமான் செவு. சித. சொக்கலிங்கம் செட்டியாரவர்களும், ஸ்ரீமான் மெ. செ. மெ. மெ. இராமநாதன் செட்டியாரவர்களும், ஸ்ரீமான் S. R. M. S. சதாசிவம் செட்டியாரவர்களும் செய்துகொண்டுவரும் பேருபகாரங்களால் இச்சபையார் வைதிக சைவ அச்சுக்கூடம் எனப் பெயரிய அச்சுக்கூடம் வைத்துக்கொண்டார்கள்.

ஸ்ரீமான் யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள், (Dubash, Messrs. Best & Co.) இச்சபையின் சைவபாடசாலைக்கெனக் கட்டடம் வாங்கிக் கொடுத்தார்கள்.

அடுத்த வருடமுதல் இச்சபை சைவமஹாசபை யென்னப்பெற்று இன்னும் பலவழிகளில் அபிவிருத்தி யடைந்து நிலவுறும்.

இச்சபை இவ்வாறு அபிவிருத்தியடைந்து உலகுக்கு நன்மை பயக்கவேண்டி உதவிபுரிந்து வரும் பெரியோர்களுக்குத் தலையார வணக்கம் செய்கின்றோம்.

### திருப்பல்லாண்டு.

மிண்டுமனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசற் காட்செய்மின் குழாம்புகுந்து
அண்டங்கடந்தபொரு ளளவில்லதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டுகூறுதுமே.

சி[illegible]யார்களும் சேர்ந்து வாழ்க.

JL